# திருவாசக ஆராய்ச்சியுரை.

முதலாம் பாகம்

உரையாசிரியர் :

'சங்கநூற் செல்வர்'

[illegible]டிதமணி க. அருணம்பலவனார்

# திருவாசக ஆராய்ச்சியுரை

## முதலாம் பாகம்

உரையாசிரியர் :

'சங்கநூற் செல்வர்'

**பண்டிதமணி சு. அருளம்பலவனார்**

யாழ்ப்பாணத்துக் காரைநகர்

**அ. சிவானந்தநாதன் அவர்களால்**

வெளியிடப்பட்டது.

கிடைக்குமிடம் :

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை,**

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

NATARAJA

# திருவாசக ஆராய்ச்சியுரைச் சிறப்புப்பாயிரம்

## ஸ்ரீமத் சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் எழுதியது

தெய்வத் தண்டமிழ்த் திருவருட்பாக்கள் பன்னிருதிருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் எட்டாந் திருமுறையில் திருவாசகமும் திருக்கோவையாரும் அமைந்துள்ளன. பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் திருவாதவூரடிகள் எடுத்துக் கூற, தில்லைத்திருச்சிற்றம்பலமுடையார் தமது அருமைத் திருக்கரத்தால் எழுதிக்கொண்டு சென்று திருச்சிற்றம்பலத்துள் வைக்கப்பெற்ற பெருமையுடையன. தில்லைவாழந்தணர் முதலாயினோர் அதனைக் கண்டெடுத்து வழிபாடாற்றி ஓதியபோது அது திருவாதவூரன் மொழி திருச்சிற்றம்பலமுடையார் கையெழுத்தென இருக்கக்கண்டு பெரிதும் வியப்படைந்து, அடிகள் எழுந்தருளியிருந்த பர்ணசாலையை யடைந்து, அத்திருவேடு வந்த வரலாற்றினை எடுத்துக்கூறி அதிலுள்ள திருவாசகம் திருக்கோவையார் என்பவற்றின் பொருள்களைக் கூறவேண்டுமென வேண்டிக்கொண்டனராக, அடிகள் அவற்றின் பொருளைத் திருச்சிற்றம்பலத்தில் சென்று கூறுகிறோமென்று அவர்களுடன் திருச்சிற்றம்பலத்தையடைந்து அங்கே எழுந்தருளியிருக்கும் கூத்தப்பிரானைச் சுட்டிக்காட்டி இவரே அவற்றின் பொருளாவார் எனக்கூறித் தம்முருவைக் காட்டாது இறைவன் திருவடிட்பேற்றினைப் பெற்றனராக, அவை சுத்தாத்துவித சைவசித்தாந்த வீட்டுநெறிக்குச் சிறந்த சிவநூலாகப் போற்றப்படும் பெருமையுமுடையனவாயின.

அடிகள் அவற்றின் பொருள்களை எடுத்துக்கூறாது கூத்தப்பிரானையே சுட்டிக்காட்டினராயினும் திருவடிக்கீழ் – சொல்லிய பாட்டின் பொருளறிந்து சொல்லுதல் சிறப்பாகுமெனப் பொருளறிதற்கு அநுமதியுந் தந்துள்ளனர் ஆயினும் திருவருட் செல்வர்க்கன்றி மற்றையோர்க்கு முழுவதும் உண்மையுரைகாண்டல் முடியாதாகும். அது பற்றியே திருவருட்பாக்களுக்கு உரை கூறுதிருப்பது நன்று என்பது ஒரு மரபாயிற்று.

அங்ஙனமாயினும் அடிகள் அருளிய அநுமதியை மேற்கொண்டு திருவாசகத்துக்குப் பெரியார் அநேகர் உரைகாண்பாராயினர். அவர்கள் சில பகுதிக்கு உண்மை உரைகாண முடியாது இடர்ப்பட்டதுமுண்டு.

திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியுரை, பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியுரை, பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை என்னும் உரைநூல்களைச் செய்தவரும் 'சங்கநூற் செல்வர்' எனச் சிறப்புப்பெயர் பெற்றவரும் ஆகிய

பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் திருவாசகத்துக்கும் ஒரு ஆராய்ச்சியுரை செய்ய வேண்டுமெனப் பெருவிருப்புடையராய் முயன்று வந்தனர். முன்னைய பெரியார்களநேகர் செய்த உரைகளையெல்லாம் நன்கு ஆராய்ந்து அவற்றுள் ஒப்பவைகளைக்கொண்டும் சில இடங்களில் தக்க ஆதாரங் காட்டிப் புத்துரை கண்டும் ஆராய்ச்சியுரையொன்றினை எழுதி முடித்தனர்.

அவர்கள் தாமெழுதும் ஆராய்ச்சியுரைகளையெல்லாம் என்னுடன் அளவளாவி ஒருமுறைக்கிருமுறை பரிசோதித்தே அவைகளை அச்சிடத் தொடங்குவார். என்னைப்பேணுபவராகவும் அன்பும் அருமையுமுடைய மாணவராகவும் இருந்த அருளம்பலவனார் தாமெழுதிய திருவாசக ஆராய்ச்சியினை அச்சிடத்தொடங்கி நடத்திவரும்போது உடல்வலிமை குறையப் பெற்றமையால் அரசினர் வைத்தியசாலையில் சென்று தங்கியிருந்து வைத்தியம் செய்வித்தனர். அப்போதும் அச்சுவேலையைவிடாது மேற்கொண்டே வந்தனர். திருச்சதகம் அரைவாசிவரை அச்சுவேலை நடக்கையில் ஒரு நாள் அச்சுப்பிரதியை மூலப்பிரதியோடு ஒப்பிட்டுப் பார்த்துத் திருத்தி அச்சுக்கு அனுப்பிவிட்டு ஓய்வுற்றுக் களைப்படைந்திருக்கையில் உயிர் நீக்கப்பெற்றார். திருவாசகமும் அதன் ஆராய்ச்சியுரையுமே அவர் சிந்தையில் நிறைந்திருந்தமையால் அவர் மேலாகிய சிவகதியடைவாரென்பது துணிபாகும்.

அன்னவரெழுதிய ஆராய்ச்சியுரையில் நீத்தல் விண்ணப்பம்வரை அச்சிட்டு முடித்து முதற்பாகமாக வெளியிட வேண்டுமென அவர் மக்களாகிய மகேசுவரநாதனும் சிவானந்தநாதனும் விரும்பித் தொடங்கியுள்ளார்கள். அவர்கள் வெளியிடும் முதற்பாகத்தைச் சைவநன்மக்கள் வாங்கிப் படித்தும், பல்கலைக் கழகத்தினர் பாடநூலாக அமைத்தும் ஊக்கமளிப்பார்களாயின் அருளம்பலவனாரின் ஆராய்ச்சியுரை இரண்டாம் பாகமும் வெளிவருவதற்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

எல்லாம் வல்ல முழுமுதலிறைவன் திருவருள் துணைபுரிவதாக.

ஒரு குறிப்பு: அச்சிட்ட பகுதியில் சிவபுராணத்தும் போற்றித்திருவகவலினும் கோகழி என்னும் தலம் ஒவ்வோரிடத்தும் வந்துள்ளது. கோகழித்தலத்தைப் பற்றிய ஆராய்ச்சி நன்கு கிடைக்கப்பெறாமையால் மற்றையுரையாசிரியர்கள் சிலர் போலக் கோகழி திருவாவடுதுறையென்றே எழுதியுள்ளார். கோகழியென்பது கன்னட நாட்டில் பெல்லாரி மாவட்டத்தில் ஹடகன்னி உட்பிரிவில் உள்ள ஒரு சிவத்தலமென்றும் அத்தலமுள்ள இடம் கோகழிநாடென இப்போதும் வழங்கப்படுகின்றதென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இதனைக்கொண்டு கோகழியாது என்பதனைத் தீர்மானித்துக் கொள்க. ஆராய்ச்சியாளரின் கூற்றினையறிந்தோ

அறியாமலோ கோகழியென்பது திருவாவடுதுறையென்றும், சீர்காழியென்றும், திருப்பெருந்துறையென்றும், திருப்பெருந்துறைக்கோயிலென்றும் உரைகாரரும் ஆராய்ச்சியாளரும் கூறுகின்றனர். திருவாசகத்தைக்கொண்டு ஆராயின் அடிகளின் கருத்து கோகழி இவைகளின் வேருன ஒருதலமென்பதே தெளிவாகும். சிவபுராணத்துக் கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க என்றவர் அதேபாட்டில் சீரார் பெருந்துறை நந்தேவனடி போற்றி என்கின்ருர். போற்றித் திருவகவலில் அருபரத்தொருவன் அவனியில் (திருப்பெருந்துறையில்) வந்து குருபரனுகியருளினன் என்றவர் அதே பாட்டில் கோகழிமேவிய கோவே போற்றி என்கின்ருர். பண்டாய நான் மறையில், நண்ணிப்பெருந்துறையை நம்மிடர்கள் போயகல. எண்ணியெழு கோகழிக்கரசை – பண்ணின் – மொழியாளோத்தர கோசமங்கை மன்னிக் - கழியா திருந்தானைக் காண், என உத்தரகோசமங்கையைச் சேர்த்து மூன்று தலங்களைப் பாடுகின்ருர். திருப்பள்ளி எழுச்சியில், திருப்பெருந்துறையுறை கோயிலுங் காட்டி என்றவர் திருப்பெருந்துறையுறை கோகழி காட்டியும் எனப்பாடிற்றிலர். திருவாவடுதுறையையும் சீர்காழியையும் அவற்றுக்கு வழங்கும் பெயர்களை விட்டுக் கோகழியெனப் புதியதொரு பெயரிட்டுப் பாடவேண்டிய ஏது யாதுமில்லை.

சி. சு. தேசிகர்.

---

உ
சிவமயம்
திருவம்பலம் உடையார் துணை
காஞ்சிபுரம் தொண்டை மண்டலாதீனம்
ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலய
குருமஹா சந்நிதானம்

# சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

அவர்கள்

## அருள் உரை

சைவத்திருவாளர் அருள் சிவானந்தநாதன் அவர்கள் தம் தந்தையார் சங்கநூற் செல்வர் பண்டிதமணி சு. அருளம்பலவனார் எழுதிய ஆராய்ச்சியுரையின் முதற் பகுதியை நம் நோக்கிற்கு உய்த்தார்கள். அவ்வுரை திருவாசகத்தைப் பலயாண்டாகப் பெரிது முயன்று கற்றதன் பயனாகும். முற்றும் எழுதியும் அவ்வுரை அச்சிடப்பெற்று முழுவடிவிற் கண்டுவக்கும் பேறின்றிக் கடிதின் படி வாழ்வை நொடிவாழ்வென வெறுத்து நீத்துச் சிவனடிநீழலடைந்தார் அப்புலவர். அவர் ஈராண்டின் முன்னர் இம்மடாலயத்தில் வந்து பன்னாள் தங்கிப் பாடல் பெற்ற சிவதலங்களை வழிபட்டனர். திருவாசகவுரையெழுதும் முயற்சியும் மாணிக்கவாசகப் பெருமகனார் மலரடிக்கன்புடைமையும், வழிவழியாக வளர்ந்துவரப்பெறும் சிவ பத்தியும் செலுத்தியதால் புயற்காற்றுப் பெருக்காலுற்ற நெருக்கடி மிக்க காலத்திலும் திருப்பெருந்துறையிற் சென்று வழிபட்டு மீண்டும் இவணுற்று எங்கள்பால் அவர்கள் சொல்லிய அத்தலக்காட்சிப் பேறு குறித்த ஆராத அன்புரை இன்னமும் இன்புறுத்துகின்றன. அவர்கள் திருவம்பலமுடையார் திருவருளால் மீண்டு சென்று யாழ்ப்பாணம் அடைந்து சேர்ந்த நலத்தையும் தெரிவித்தார்கள். பின்னர்ச் சிறிது காலத்தில், அப்பெரும்புலவர் மறைவும் அது குறித்து அன்பர் பலர் எழுதிய பிரிவாற்றாமையுரைகளும் தமிழகத்திற் பரவித் தமிழ்ச் சான்றோர் பலரைத் துயர்க்கடலுள் ஆழ்த்தின.

இப்பொழுது இவ்வெளியீடு எய்திற்று. இதுவும் முழுதும் வந்திலது. 'நீத்தல் விண்ணப்பம்' வரையில் வந்துள்ளது. அவரை நீத்த தமிழர்க்குக் கிடைத்த அவருரைப் பகுதியும் நீத்தலோடு அச்சிட்டு முடிந்தது. மற்றைய உரைப் பகுதியும் நீத்தலின்றி அச்சிடச் செய்து பெறுவது தமிழர்க்குத் தலையாய கடனாகும். உலகர் கடன்மையைத் தம் முதற்கடன்மையாகக் கொண்டு இத்திருவாசகப் பேராராய்ச்சியுரையை வெளியிடத் தொடங்கி முற்பகுதியாக இதனை அச்சிடுவித்து

வழங்கும் நிறைநாட் செல்வர் அருள் சிவானந்தநாதனுர் திருவருளால் எல்லா நலங்களும் செல்வங்களும் எய்தி நீடூழி இனிது வாழ்க, வாழ்க, வாழ்க.

இவ்வுரை ஒவ்வொரு திருவாசகத்தின் பொருளையும் செவ்விதின் விளக்கியும், சொற்பொருட் காரணமும் உயரிய பலமேற் கோள்களுங் காட்டியும் இத்திருமுறையுள் முன்பின் உள்ள ஒற்றுமைகளைப் பல் வேறு திறத்தில் உணர்த்தியும் முன்னர் வந்த உரைகளைக் காட்டிலும் நல்லவாறமைந்தும் விளங்குகின்றது. 'பதிற்றுப் பத்து'ரைச் சிறப்பினும் இவ்வுரை சாலச் சிறப்புற்றுள்ளது. ஆசிரியரது தமிழ்ப் புலமைக்கு அச்சங்க நூலுரையும் சைவஞானத்துக்கு இத்தங்க நூலுரையும் துங்கச் சான்ருகும்.

மாணிக்கவாசகர் நமச்சிவாய வாழ்க என்னுது வருஞ்சீர் முதலிசை நேராதலை நோக்கி அளபெடையாக்கி **நமச்சிவாஅழ்க நாதன்ருள் வாழ்க** என்ற உண்மையை உணர்வோர் யாப்பறிபுலவராயிருப்பின் 18ஆவது திருவடியின் ஈற்றிலும் 59ஆவது திருவடியின் முடிவிலும் முறையே இறையே **வணங்கிச்** என்ருெற்றளபெடையும் 'காஅட்டி' என்றுயிரளபெடையும் அமைத்துக் கொள்ளல் வேண்டும். 88வது திருவடியில் 'குரம்பைக் கட்டு' என்று ஒரு சொன்னீர்மைத் தாயிருத்தல் வேண்டும். இன்னேரன்ன பற்பல பிழைகள் பலர் பதிப்பிலுமுள்ளன. போற்றித்திருவகலில் 99ஆவது திருவடியில் 'ஆ ஆ என்று எனக்கு அருளாய் போற்றி' என்னும் பொருட்டாய், 'ஆவாவென்றெனக்கருளாய் போற்றி' என்றிருத்தற்குரியது. 'ஆவாவென்னப்பட்டு அன்பாய் ஆட்பட்டீர்' (யாத்திரைபத்து 1) 'ஆவவென்றருளாயே' (எண்ணப் பதிகம் 6) 'ஆவா என்ருவிடில் என்னை அஞ்சேல் என்பார் ஆரோதான்' (ஆனந்தமாலை 6) 'ஆவாவென்றருளிச் செடிசேருடலைச் சிதையாத தெத்துக்கு' (குழைத்தபத்து 2) என்னை ஆட்கொண்டு ஆவா வென்ற நீர்மையெல்லாம் புகழப் பெறுவதென்று கொல்லோ' (புணர்ச்சிப்பத்து) 'ஆவாவரியயன்' (திருத்தெள்ளேணம் 7) 'ஆவவெந்தாய்' (திருச்சதகம் 4) என்னுமிடங்களில் இரக்கக்குறிப்பாக வந்தமை நோக்கி ஈங்கும் பொருள் கோடல் வேண்டும்.

'கோகழி'யைக் குறித்துப் பலர் 'சித்தாந்தம்' (1930 மலர் மூன்று) என்னும் சைவத்பத்திரிகையில் எழுதியவற்றை நோக்கி, இவ்வுரையிலும் (பக்கம் 415) ஆசிரியர் அருளம்பலவனுர் எழுதியிருக்கும் படியை நோக்குதல் நன்ருகும். இங்கும் புலவர் பலவரும் சிறிதூன்றி நின்றுணர்வாராக. மாணிக்கவாசகப்பிரானுர் முதன்முதற் பாடியருளியது சிவபுராணம் என்பர். அதில் முதல் வாழ்த்து அவர்க்குப

தேசித்த பொருளைக்கொண்ட திருமந்திரவாழ்த்து. இரண்டாவது வாழ்த்து அவ்வுபதேசம் அருளிய திருவடி வாழ்த்து. திருவருள் வாழ்த்தும் அதுவே அடுத்த வாழ்த்து அத்திருவருளுருவாய் அவ்வாசிரியர் திருவுள்ளத்து நீங்காதிருக்கும் அகக்குருவின் வாழ்த்து. அடுத்த வாழ்த்து அவ்வகக் குருவே புறக்குருவாகி வந்து சிவஞான போதம் செய்தருளி ஆட்கொண்ட மெய்ப்பொருளை வாழ்த்தியதாகும். ஆகவே அது மூன்றுவது திருவடியாக அமைந்திருக்கின்றது. அறுகுணங்களைத் திருவுள்ளத்தடைத்து அறுமுறை வாழ்க என்றது அறிஞர்க்குத் தெரியும். இங்கே கோகழியாண்ட குருமணி என்றது, அகத்துறு நோய்க்குள்ளினர் அன்றி அதனைச் சகத்தவருங் காண்பரோ தான்' என்னும் திருவருட்பயனை நோக்கிப் பொருள் கொள்ளத்தக்கது. தகவே, அகத்தே இமைப்பொழுதும் நீங்காதானே குருமணியானவுண்மை யாவர்க்கும் இசைந்ததேயாகும்.

ஆகவே அக்குருமணி நாம் வணங்கும் இக்குருமணியை (மாணிக்க வாசகரை) ஆண்ட இடம் எது? திருப்பெருந்துறையா? வேறு? திருப்பெருந்துறையாயின் அதனைத் தலைக்கண் வழிபடாது வேறு தலத்தை முதலில் ஆசிரியர் வழிபடுவாரா? இச்சிவபுராணம் திருப்பெருந்துறையில் அருளப்பட்டது என்பதும் பிரசித்தம். சிவபுரமும் தில்லையும் தென்பாண்டி நாடும் இதிற் குறிக்கப்படினும் அங்குப் பாடியதாக எவரும் கருதார். சீரார்பெருந்துறையே இது பாடிய இடம் என்று உறுதியாயிற்று. ஆகவே அப்பெருந்துறையில், நம் குருமணியை அவர் குருமணி ஆண்ட இடம் கோகழி ஆவதும், அது திருப்பெருந்துறையிலன்றி வேறெங்கும் இராததும், அவ்விடமே ஆண்டதற்குரிய இடம் ஆவதும் ஐயத்துக்குரியன ஆமோ? ஆகாது. ஒருகாலும் ஆகாது. கோகழியில் ஆண்ட குருமணி என்றே கொள்ளல் வேண்டும். ஏழனுருபன்றி வேறெவ்வுருபும் ஆண்டும் பொருந்தாது. கோ-குரு. கழி-உபதேசம் செய்து மறைந்த (கழிந்த) இடம். அவ்விடமே ஆசிரியர் திருவுள்ளத்தில் முதலில் எய்துதற்குரியது, அஃதெய்த அதனை வாழ்த்தியதே அவ்வாழ்த்து.

'கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க'

இத்திருவாசகவுரை (முதற் பகுதி) நாடெங்கும் உலவி நல்லோர் பல்லோர்க்கும் நற்பொருளை விளக்கி நாளும் நிலவுக. அருளம்பலவனார் மெய்ப்பொருளடி நீழலில் இன்புறுக. அவர் மனைவி மக்கள் அனைவரும் எல்லாச் செல்வங்களும் நலங்களும் பெற்று நீடுழி இனிது வாழ்க வாழ்க வாழ்க.

சிவம்

# மதிப்புரைகள்

யாழ்ப்பாணத்துச் சைவாசிரிய கலாசாலை
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்

## பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

எழுதியது

திருவாசகப் பாட்டனைத்தும் சிவபுராணம் எனப்படும்; சிவ புராணமாகிய திருவாசகம் முன்னமே சொல்லிய பாட்டாம்: அஃதாவது உள்நின்று உணர்த்துவதொன்றாற் சொல்லப்பட்ட பாட்டாம். பாட்டின் பொருள் 'நமச்சிவாய' என்பது.

நமச்சிவாயப் பொருள் சாதகர்களின் இருதயத்தில் இடையீடின்றி வாழுதற்கும், முந்தைவினை முழுதும் ஓயத் திருவாசகத்தை ஓதும் பரிபக்குவர்களுக்கு அப்பொருள் சித்தித்தற்கும் உபகரிக்கும் உரையே திருவாசகத்துக்கு உரையாம். அவ்வாறாய உரை நம்மனோர்க் கெட்டாதது.

''செய்காட்டுங் கமுகடலித் தில்லையுளார் பொருள் கேட்ப''ச் சொல்லிய பாட்டின் பொருளாவர் கூத்தப்பெருமானே யென்று சுட்டிக்காட்டி மற்றொன்றும் உரையாமே மறைந்தருளினர் மணிவாசகப் பெருமானார்.

'அருள் அநுபவக் கனிவாகிய திருவாசகத்துக்கு உரை எழுதல் இயலாது; உரையெழுதவெண்ணாது; அதன் பொருள் குரு பரம்பரையில் உபதேசக் கிரமத்திற் கிடைக்கற்பாலது' என்ற கருத்தும் உண்டு.

இங்ஙனமாய போதும் மொழித்திறத்தின் முட்டறுப்பதன் மூலம் தூலப்பொருளைத் தெளிவுபடுத்துவதனால் மெய்ப்பொருள் சித்திக்குமென்கின்றதொரு முறையில், வித்துவான்கள் பலர் ஒருங்குகூடியும் தனித்துங் காலந்தோறும் பல வேறு உரைகள் திருவாசகத்துக்குச் செய்திருக்கின்றார்கள். அவை பதவுரை பொழிப்புரை பொழிப்புரையும் விரிவுரையும் எனப் பல திறத்தன.

அவ்வுரைகளை ஆராய்ந்து அன்பர் திரு. அருளம்பலவனார் அவர்கள் இவ்வுரையை உதவியிருக்கின்றார்கள். உரை தெளிவானது பதவுரை பொழிப்புரைகள் கருத்துக்களைத் திரட்டியுதவுவன. ஆராய்ச்சியோடு கூடிய விரிவுரை புடைபட ஆராய்வார்க்கின்றியமையாதது.

இவர்கள் முன்னமே பதிற்றுப்பத்துக்குச் சொல்லாராய்ச்சி முற்றியதொரு பேருரை செய்து சொற்பொருள் உணர்த்துஞ் சொல்வன்மை வாய்க்கப் பெற்றவர்கள்; மகாவித்துவான்.

வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும் என்கின்ற தொல்காப்பியப் பொதுப்பாயிரத்திற் சொற்பொருளுணர்த்துஞ் சொல்வன்மை நல்லாசிரியலக்கணங்களில் ஒன்றாகச் சொல்லப்பட்டது.

சித்தாந்த கலைச் செல்வரும்
தருமபுர ஆதீனப் புலவருமாகிய

# உயர்திரு. க. வச்சிரவேலு முதலியார் B. A., L. T.

## எழுதியது

திருவருட் செல்வர் அருளம்பலவனார் இயற்றியுள்ள திருவாசக ஆராய்ச்சி உரை முன்பகுதியை ஓரளவு ஆழ்ந்து பல இடங்களில் படித்துப் பார்த்தேன். அஃது உரையாசிரியருடைய சைவசித்தாந்த நுட்ப உணர்வையும் திருமுறைகள், சங்க இலக்கியங்கள் என்பவற்றில் பயின்றுள்ள பயிற்சியையும் புலப்படுத்துகின்றது. உரைக்கப்படும் பாட்டில் வரும் சொற்பொருள் அமைதிகளுக்கு ஒத்த அமைப்புள்ள பகுதிகளைத் திருவாசகத்தினின்றும் திருக்கோவையாரினின்றும் தேவாரம் முதலிய பிற திருமுறைகளிலிருந்தும் பற்பலவற்றை ஆங்காங்கு ஒருங்கே திரட்டிக் காட்டுதல் உரையைக் கற்போர்க்கு நல்விருந்தாக அமைகிறது. நூல் ஆசிரியருடைய அநுபவத்தையும் திருக்குறிப்பையும் ஆங்காங்கு இனிது எடுத்துக்காட்டுவதாக உள்ளது. சிற்சில இடங்களில் அச்சுப் பிழைகள் இருந்திருப்பினும் உரையினுடைய அருமை பெருமைகள் அதனால் பாதிக்கப்படமாட்டா என்பது துணிபு. திருவாசகத்தின் உரைகளாகப் பல வெளிவந்திருப்பினும் இவ்வாராய்ச்சியுரை தனக்கே உரியமுறையில் தன்னைக் கற்போர்க்குத் தனிப்பட்ட உணர்வு நலனைப் பயக்கும் என்பதில் ஐயமில்லை.

---

தமிழகச்சேலம் அம்மாப்பேட்டை,

# புலவர் சு. கு. அருணாசலனார் M. A., B. O. L.

## பாடிய வாழ்த்து

அரிய திருவா சகவுரைக்கா வலைந்த வூர்க ளெத்தனையோ
உரிய பொருளை விளக்கவென வுழந்த பாடு மெத்தனையோ
தெரியப் பதிற்றுப் பத்துமுதலாத் தெள்ளுரை வரைந்தன எத்தனையோ
பெரிய அருளம் பலவக்குயின் பெரும்புகழ் பேசுவார் எத்தனையோ.

# "உரை நெறியில் ஓர் ஒளி விளக்கு"

தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்
செஞ்சொற் கொண்டல்
வித்துவான் சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling. அவர்கள்
எழுதியது

'ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குவதே' உயர் ஞான நூல்களின் குறிக்கோள். அத்தகு ஞானநூல்களும், ஏனைநூல்களும் இக் குறிக்கோளில் வேறுபடுபவை. அதனாலேயே சிறிய உள்ளம் உடையவர்களால் ஞானப் பனுவல்களை அணுக முடிவதில்லை. ஞான அநுபவம் என்ற உயர்குறிக்கோளை அடையும் நோக்குடையவர் மட்டுமே அவ்வுயர் நூல்களை அணுக முடிகின்றது. "அருள் இல்லாதவன் செய்யும் அறம், தெருளாதான் மெய்ப்பொருள் கண்டாற் போல்வது" என்பர் திருவள்ளுவர். தெளிவில்லாதவன் மெய்ப்பொருள் காண முற்படுவானாயின், தன் தெருளாமையால் மெய்ப்பொருள் காண இயலாதவன் ஆவன்.

திருமுறை ஆகிய உயர் பனுவல்களுக்கு உரைகாணும் நிலையை நோக்கினால் இவ்வுண்மை இனிது புலப்படும். திருமுறை யாசிரியர்கள் இறைவனோடு ஒன்றுபட்டுக் கூடி இவ்வுலகிடை வாழ்ந்து தவம் பெருக்கியவர்கள். அறவர்களாய், — அறிவர்களாய், — அருளர்களாய் வாழ்ந்த அச்சான்றோர்கள் 'எனதுரை தனதுரையே' என்ற உறுதியுடன் அருள்மொழி அருளியவர்கள். அவர்கள் அருள்வாக்குகள் இறைமொழிகளேயாமென்பதை அவர்கள் திருமொழிகளாலேயே இனிது தெளியலாம். எனவே, அவற்றுக்கு விளக்கம் எழுதுவது என்பது "செயற்கருஞ்செயல்" ஆக மதிக்கத்தக்கது ஆகும். சுருங்கக் கூறினால், இத்தெய்வத் தமிழ்ப்பணி இறைபணி எனலாம். "ஏகன் ஆகி இறை பணி நிற்றல்" எனும் உயர்நிலையோடொத்த ஒளி நிலையே இது.

திருவாசகத்திற்குப் பல உரைகள் பல ஆண்டுகளாக வெளிவந்திருக்கின்றன. அவரவர் அநுபவத்திற்கேற்ப அவ்வுரைகள் மலர்ந்திருக்கின்றன. பெரும்புலவரும், சங்கநூற் செல்வரும், உரையெழுதுவதில் பழைய உரைகாரர்களை ஒத்த ஒட்பமும் நுட்பமும் உடையவரும், நல்லாசிரியரும் ஆகிய, பண்டித அருளம்பலவனார் அவர்களது உரை இப்போது வெளிவருகின்றது. இதன் முதற் பாகத்தை (நீத்தல் விண்ணப்பம் வரை) நான் கண்டின்புற்றேன்,

இவ்வுரை 'ஆராய்ச்சியுரை' என்ற அமைப்புடன் வெளிவருகின்றது. இந்நூல் முற்றும் வெளிவரும்வரை, ஆசிரியரவர்களை உலகிடை இருத்தலின் கருணையின்றி, தன் சேவடிக்கீழ் வருகவென்று பணித்தனன் இறைவன் என்பது இங்கு எண்ணுதற்குரியது. திருவாசகத் தலங்களை நேரிற்கண்டு வணங்குதற்காக இவ்வாசிரியர் 1964-ல் தமிழகம் போந்து வழிபட்டு மிக்க அன்புடன் இதனை எழுதியுள்ளார். உரை அகலவுரையாக அமைந்துள்ளது. முதற்கண் சொற்பொருளும் அதன் பின்னே ஆராய்ச்சிப்பகுதியுமாக உள்ளது.

பொதுவாக இவ்வுரை, மூவர் தேவாரத்தோடும் திருவாசகத்தை இணைத்து நோக்கிச் செல்கின்றது எனலாம். தேவார ஆசிரியர் வற்புறுத்தருளிய திருநெறிக் கொள்கைகளுடன் திருவாசகக் கருத்துக்கள் எவ்வாறு ஒரு நெறிப்பட்டுச் செல்கின்றன என்பதை ஆசிரியர் ஆங்காங்கு எடுத்துக் காட்டியிருக்கின்ற திறம் பாராட்டிற்குரியது. சுருங்கக் கூறின் 'திருவாசக—தேவார' இணைப்புரையாக இதிற் பெரும் பகுதிகள் விளங்குகின்றன.

தொல்காப்பியச் சூத்திர அமைதிக்கேற்ப மணிவாசகர் திருவாக்குச் சொன்னடை ஒத்தியல்வதை ஆங்காங்குக் குறித்து விளக்கியிருக்கின்றனர். இவ்வாறே சங்கநூற் கருத்துக்களும் ஏற்ற விடங்களில் எடுத்துக் காட்டப் பெறுகின்றன.

குறிப்பிட்ட பகுதிகட்கு விளக்கம் எழுதுகின்றபொழுது, அவற்றோடொத்த திருவாசகப் பகுதிகளை மிகத் தெளிவாகக் காட்டி விளக்குகின்றனர். இதனால் மணிவாசகர் திருவுளத்தைத் தெளிவாகக் கற்போர் உணர்வது எளிதாகின்றது என்று கூறவேண்டுவதில்லை.

சைவ சித்தாந்தச் சாத்திரக் கருத்துக்களை அவ்வவ் விடங்களில் எடுத்துக் காட்டி விளக்கியுள்ளனர். (பக். 151, 154, 188, 193, 201, 237, 238, 276, 425, 437 முதலியன). ஐந்து மலங்கள் பற்றி ஆசிரியர் தரும் விளக்கம் (பக். 435) எட்டினோடிரண்டும் அறியேனையே பக். 287, 288 என்பதற்கு எழுதும் விளக்கம், 'இருகையானை' என்பதன் விரிவுரை (பக். 273-274) முதலிய பகுதிகள் நுட்பமான பேரறிவை விளக்கி நிற்கும் சான்றுகளாம்.

''இரண்டுமிலித் தனியனேற்கே'' எனுந் தொடரில் வரும் ''இரண்டுமிலி'' என்ற தொடரின் பொருண்மை பற்றிய ஆராய்ச்சி கருத்துக்கு விருந்து. இருவினைகள், ஆக்கக் கேடுகள், நூல் அறிவு, அநுபவ அறிவு என்ற மூவிரண்டு கருத்துக்களைக் காட்டி அவை பொருந்தாமையை விளக்குகின்றனர். 'உயிர் இறையை நோக்க அசத்தாதலும், உலகினை நோக்கச் சத்தாதலும் உடைமையின் சதசத்து என்று குறிக்

கப்படும் சாத்திர நிலையைக் காட்டி, சத்தாதற்றன்மையும், அசுத் தாதற்றன்மையுமாகிய **இரண்டுமின்றிச் சதசத்தாயுள்ள** உயிராம்' என்ற கருத்தொடு இணைத்து இங்கு விளக்கப்பட்டது இவ்வியல்பே என்று நிறுவுகின்றார். (பக். 237—238)

''அமுதக் கடல் வாயாற் பருகப்படுவதாக, இறைவன் அறிவுக் கண்ணால் அறிந்தனுபவிக்கப்படும் அமுதக் கடலாய் இருத்தலின் 'கண் ணாரமுதக் கடலே' என்றார்''. (பக். 163)

''கூத்தாட்டும் பாவை தோலினாலும் மரத்தினாலும் செய்யப் பட்டு ஆட்டுவாரால் ஆட்டப்படும்; தான் அவை போலன்றி ஒரு செயலுமற்றுக் கிடந்தமையின் இரும்பின்பாவை அனையநான்'' என்றார். (பக். 228)

இத்தகைய தெளிவுரைகள் பலவும் இவ்வுரை நூலில் ஆங்காங்கு உள்ளன. அருள் அம்பலவனாக விளங்கும் 'தில்லையுட் கூத்தன்' திருவடி களில், மணிவாசகர் சார்த்தியருளிய. 'திருவாசகம் என்னும் திரு வளர் தாமரை'யின் நறுமணத்தை, இந்த அருளம்பலவர் வழியே உல கில் வெளிப்படுத்த உளங்கொண்ட திருவருள் வலத்தை வியப்ப தன்றி வேறென் செயவல்லேன்! 'ஐய, ஐயோ எம்பெருமான் திருக்கருணையிருந்தவாறே'—என்று அடிகள் வியந்தருளியது போல், இறைவன் திருக்கருணை எவ்வெக் காலத்து எவ்வெவர் வழியே எவ் வெந் நலங்களை விளக்குகின்றது என்று எண்ணி அமைவேன். திரு வாசகத்தைச் 'சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்ல' விழைவோர்க்கு இந்த ஆராய்ச்சியுரையும் ஒரு புதிய துணை; தமி ழுலகிற்கு ஓர் இனிய படையல்; உரைப்பனுவல்கட்கு ஓர் ஒளி விளக்கு. இதனை இயற்றிய பண்டித அருளம்பலவனாரை, எப்போ தும் நினைவிற் கொண்டு போற்றுவது தமிழர் கடன்.

அமரர்

‘ சங்கநூற் செல்வர் ’

**பண்டிதமணி சு. அருளம்பலவனார்**

தோற்றம் : 1910 மறைவு : 1966

உ

சிவமயம்

# பதிப்புரை

எழுதரு மறைகடேறு விறைவனை யெல்லிற்கங்குல்
பொழுதறு காலத்தென்றும் பூசனை விடாதுசெய்து
தொழுதகை தலைமேலேறத் துளும்புகண் ணீருள்மூழ்கி
அழுதடி யடைந்தவன்ப னடியவர்க் கடிமைசெய்வாம்.

மணிவாசகரால் அருளிச்செய்யப்பட்ட திருவாசகம் அனைவருக்கும் தோன்றாத் துணையாய் - பிறவிப்பிணிதீர்க்கும் அரிய மருந்தாய் - இறைவன் அடிசேர்க்கும் இனிய ஆற்றுப்படையாய் நிலவி வருகின்றது. கருங்கல் மனத்தையும் கனிவித்துக் கடவுளின்பால் அதனை ஈடுபடுத்தும் பெரும்புணையாக உள்ளது. ஆரா இன்பப் பனுவலாகிய இதற்கு பொருள் அறிய விரும்பிய அன்பர்களுக்கு மணிவாசகப் பெருமான் தில்லையம்பதியில் எல்லையிலா இன்பநடம்புரியும் நடராசப் பெருமானையே காட்டினாரென்று அவர் புராணங்கூறும்.

எனது அருமைத் தந்தையார் அவர்கள் நூல் முழுவதிற்கும் உரையை எழுதிமுடித்து, அச்சிடத் தொடங்கி திருச்சதகம் அநுபோக சுத்தி அச்சாகும் காலத்தில் இவ்வுலக வாழ்வை நீத்தார்கள். அதனால் தாமதமாகி நீத்தல் விண்ணப்பம் வரையுள்ளன, இப்போது நூலின் முதற்பகுதியாக வெளிவருகின்றது. தந்தையார் உரையெழுதுங் காலத்தில் உடனிருந்து உயரிய திருத்தங்கள் பல செய்து உரைநூலின் நோக்கம் நிறைவேற உதவிகள் புரிந்த பெரியார் தந்தையாரின் குருமூர்த்தியும் சைவாசாரியரும் ஆகிய ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர் ஆவர். அவர்கள் இந்நூலுக்கு ஆராய்ச்சி முன்னுரையும் எழுதியுதவியுள்ளார்கள். அவர்களுக்கு யான் என்றும் கடப்பாடுடையேன்.

தந்தையாருக்குப் பின் இந்நூல் அச்சுக்குப்போகுமுன் கையெழுத்துப் பிரதிகளைப் படித்தும், அச்சாகுங்கால் அச்சுப்பிரதிகளை ஒப்பு நோக்கியும் உதவிய இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் வித்துவான் பொன். முத்துக்குமாரன் B. O. L. அவர்கள் காலத்தினாற் செய்த நன்றி ஞாலத்தின் மாணப் பெரிது. இந்நூல் வெளிவருதல் வேண்டி பல உதவிகள் செய்து முன்னின்று ஊக்கிய சாவகச்சேரி இந்துக் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர், வித்துவான் மு. சபாரத்தினம் அவர்களுக்கு எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

தொண்டை மண்டலாதீன குரு மகாசந்நிதானம் சீலஸ்ரீ ஞானப் பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் இந்நூலுக்கு அருளுரை நல்கிச் சிறப்பித்திருக்கின்றார்கள். மகா சந்நிதானத்தின் சீலமிகு பெருமையைப் போற்றி வணங்குவதல்லாது பிறிதென்செய வல்லேன். இந்நூலுக்கு மதிப்புரைகள் வழங்கிச் சிறப்புச் செய்த பெரியோர்க ளாகிய தருமபுர ஆதீன வித்துவான் சிந்தாந்தக் கலைச்செல்வர், உயர்திரு. க. வச்சிரவேலு முதலியார் B. A., L. T. அவர்களுக்கும், பண்டிதமணி ஸ்ரீமத். சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும், செஞ்சொற் கொண்டல், வித்துவான் சொ. சிங்காரவேலன் M. A., M. Ling. அவர் களுக்கும், புலவர் சு. கு. அருணாசலம் M. A., B. O. L. அவர்களுக்கும் உளங்கனிந்த நன்றியுரித்தாகுக. பொருளுதவி புரிந்த பெருந்தகை யாளர்க்கும் இதனை வெளியிடுவதில் தந்தையாருடன் ஒத்துழைத்த நண்பர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

மாணிக்கவாசக சுவாமிகள் தரிசித்த திருத்தலங்களின் புகைப் படங்கள் எடுப்பதற்கு உதவிய அன்பர்களுக்கும் திருவுத்தரகோச மங்கைத் தலப்படத்தை நூலில் சேர்க்க அநுமதியளித்த இந்திய பழம்பொருளாராய்ச்சிப் பகுதியார்க்கும், இப்புத்தகத்தை அச்சிட்ட சண்முகநாத அச்சகத்தாருக்கும் உளங்கனிந்த நன்றியுரித்தாகுக.

இவ்வாராய்ச்சியுரையை எழுதி முடிப்பதில் எனது தந்தையாருக் குத் தோன்றாத் துணையாய் இருந்து இன்னருள் புரிந்த ஆலவாய் அவிர்சடைக் கடவுளின் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்தி வணங்கு கின்றேன்.

அ. சிவானந்தநாதன்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | சிவபுராணம் ... ... | 1 |
| 2. | கீர்த்தித் திருவகவல் ... ... | 30 |
| 3. | திருவண்டப் பகுதி ... ... | 74 |
| 4. | போற்றித் திருவகவல் ... | 122 |
| 5. | திருச்சதகம் .... .... | 184 |
| 6. | நீத்தல் விண்ணப்பம் | 381—480 |
| | பாட்டு முதற்குறிப்பு அகராதி | i |
| | அரும்பத ஆராய்ச்சி அகராதி | iii |
| | மேற்கோள் நூற்பெயர்கள் | viii |
| | பிழை திருத்தம் | ix |

உ
சிவமயம்

# திருவாசகம்

## நூற் சிறப்பு

### வெண்பா

அருள்வாத வூரர்சொல அம்பலவர் தாமெழுதும்
திருவா சகத்தைத் தெளிந்தால் — கருவாம்
பவகதியும் நீங்கிப் பரமரரு ளாலே
சிவகதியும் உண்டாம் சிவம்.

கற்பாந்த காலங் கடவாக் கடல்கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே — அப்பன்
உருவா சகங்கொண் டுரைத்த தமிழ்மாலைத்
திருவா சகம்என்னும் தேன்.

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே — எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

போதலர்ந்து தேன்சொரியும் பொன்னம் பலத்திலுறை
வாதவூர் எங்கோமான் வாசகத்தை — ஓதிப்
பிறவிப் பிணிநீக்கிப் பேரின்ப வெள்ளச்
செறிவுக்குள் செல்வர் சிறந்து.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருவாசக ஆராய்ச்சியுரை

## சிவபுராணம்

சிவனது அநாதி முறைமையான பழமை.

திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டது.

கலிவெண்பா

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
ஏக னனேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசனடி போற்றி யெந்தை யடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத வின்ப மருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையு ணின்ற வதனால்
அவனரு ளாலே யவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய வுரைப்பனியான்

கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்து ளோங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லா யனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய்ச் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி

நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச வருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்த நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட வெந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
*ஆற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

**பதவுரை : 1—5.** நமச்சிவாய வாழ்க - நமச்சிவாயவென்னும் திருவைந்தெழுத்து வாழ்வதாக; நாதன் தாள் வாழ்க - எப்பொருட்கும் தலைவனாகிய இறைவனது திருவடி வாழ்வதாக; இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க - கண் இமைக்கும் நுண்ணிய கால அளவிற்றானும் என் மனத்தினின்றும் நீங்காதவனது திருவடி வாழ்வதாக; கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க - திருவாவடுதுறை என்னும் தலத்தினை அரசாட்சி செய்த இறைவனாகிய பரமாசாரியனது திருவடி வாழ்வதாக; ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க - வீட்டுநெறி கூறும் ஆகமப் பொருளாகி நின்று உயிர்களைத் தன்பால் அணுகச் செய்து அருள் புரிபவனாகிய இறைவனது திருவடி வாழ்வதாக; ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க - ஒருருவானவனும் ஒன்றல்லாத பலவுருவானவனுமாகிய எப்பொருளிலுந் தங்குகின்றவனது திருவடி வாழ்வதாக.

**ஆ-ரை.** நமச்சிவாய என்பது இறைவனது ஐந்தெழுத்து மகாமந்திரமாகும். இது தூலபஞ்சாட்சரம் எனப்படும். நம : சிவாய என்பது வடமொழி விதிப்படி நமச்சிவாய எனப் புணர்ந்தது. வணக்கம் சிவனுக்கு என்பது பொருள். சைவசித்தாந்த நூலார் இந்த ஐந்தெழுத்து மகாமந்திரத்தின் ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு பொருளை உணர்த்துவனவாகக் கொள்வர். இது ''பதமஞ்சும்'' (நாவு 230 : 7) என அப்பரடிகளும் ''அந்தியு நண்பகலு மஞ்சுபதஞ் சொல்லி'' (தேவாரம் 83 : 1) என ஆளுடைய நம்பிகளும் அருளியமையால் விளங்கும். நமச்சிவாய என்பதில் நகரம் திரோதான சத்தியையும், மகரம் மலத்தினையும், சிகரம் இறைவனையும், வகரம் திருவருட் சத்தியையும், யகரம் உயிரையும் குறிக்கும். இது பந்த நிலையிலுள்ள உயிர்களைப் பிறவிக்கணுய்த்து இருவினைப்படுத்தி மல நீங்கும் நிலை வருவித்து அருள்வாயிலாக வீடடைதலை உணர்த்துவது; இதுவும் இறைவனது கைம்மாறு கருதாத பேரருளையே குறித்தலால் திருவடி வாழ்த்தாகவே அமையும்.

நாதன் - எப்பொருட்குந் தலைவன்; நாத தத்துவத்தால் வெளிப்படுவோன் எனினுமாம். தாள் என்றது திருவருளை. இமைத்தல் - கண்ணிமைகள் சேர்தல்; இமைப்பொழுதும் நீங்காதான் எனவே ஒருபொழுதும் நீங்காதவன் என்பது பொருள். ''திருப்பெருந்துறையுறைவான், நிச்சம்என நெஞ்சில் மன்னியானாகி நின்றானே'' (திருவா : உயிருண்ணி 9) என அடிகள் அருளியமையுங் காண்க.

கோகழி - திருவாவடுதுறை. திருப்பெருந்துறையாகாதோவெனின் ஆகாது; என்னை? பண்டாயநான்மறை என்னும் திருப்பதிகத்தில்,

''நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணி எழுகோகழிக் கரசை'' (5)

என அடிகள் அருளிச் செய்தலாற் கோகழியும் பெருந்துறையும் வேறு தலங்கள் என்பது போதருதலின் 'கோகழியாண்ட' என அருளியது

'கோகழிக்கரசை' என்பதனோடு இயைபுடைத்தாதல் காண்க. குருமணி - ஆசாரியருள் மேம்பட்டவன்.

ஆகமம் - இறைவனிடத்தினின்றும் வந்தது. இப்பொருளில் வேதமும் ஆகமம் எனப்படும். அன்றியும் 'பதினெண்வித்தைகளுக்கும் நேரே கர்த்தா சூலபாணியாகிய இறைவன்' எனக் கூறப்படுதலால் அவைகளும் இறைவனிடத்திலிருந்து வந்தமையால் ஆகமம் எனப்படும். ஆயினும் ஈண்டு ஆகமம் என்றது வீட்டு நெறியைக் கூறும் சிவாகமங்களேயாகும். 'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீ ரொழுக்க நெறி' (குறள்) என்றதும் ஆகம நூலையேயாம். அண்ணித்தல் - அண்ணுவித்தல்; என்றது உயிர்கள் தன்னை அடையும்படி செய்தல்.

ஏகன் - ஓருருவானவன்; அநேகன் - ஒன்றல்லாத பலவுருவானவன். ஓருருவான இறைவன் உயிர்களுக்கு அருள்செய்யவேண்டிச் சிவம் சத்தி என ஈருருவாயும், பின்னர் அச்சிவமும் சத்தியும் சேர்ந்து ஐவகைச் சாதாக்கிய வடிவங்களாயும், அச்சாதாக்கியத்திலிருந்து ஈசுவரவடிவங்கள் இருபத்தைந்தாயும், காரணேசுர வடிவங்கள் ஐந்தாயும் பிறவாயும் ஆனமை பற்றி 'அநேகன்' என்றார்.

6—10. வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க - ஆணவ மலத்தின் வெம்மையைக் கெடுத்து அடியேனை ஆண்டருளிய இறைவனது திருவடிகள் வெற்றி பெறுக; பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய் கழல்கள் வெல்க - பிறவியாகிய மரத்தை வேரோடறுக்கும் சடைமுடியாகிய தலைக்கோலத்தையுடைய இறைவனது இடப்பட்ட வீரக்கழல்களையுடைய திருவடிகள் வெற்றி பெறுக; புறத்தார்க்கு சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க - தன்பால் அன்பரல்லாதார்க்குத் தூரத்தேயுள்ளவனான இறைவனது பூப்போன்ற திருவடிகள் வெற்றி பெறுக; கரம் குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க - கைகள் குவிய வணங்கும் அன்பர்களது மனமகிழ்தற்கேதுவாகிய இறைவனது திருவடிகள் வெற்றி பெறுக; சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க - தலைகள் தன் தாளில் ஒடுங்கப் பெறுவாரை உயர்வடையச் செய்யும் சிறப்பையுடைய இறைவனது திருவடிகள் வெற்றிபெறுக.

ஆ—ரை. வேகம் - வெம்மை. ஈண்டு ஆணவ மலத்தின் வெம்மையை. வேகம் என்பதற்குப் 'பிறவிவெப்பம்' என்றும், 'மனவேகம்' என்றும் உரைப்பாருமுளர். வேந்தன் - இறைவன். "மாண்டார் சுடலைப் பொடி பூசி மயானத், தீண்டா நடமாடிய வேந்தன்" எனத் தேவாரத்தும் (சம்பந் 30 : 9) வருதல் காண்க. வெல்க என்பது வெற்றிபெறுக என ஒரு வகை வாழ்த்துப் பொருளில் வந்தது. இது ஜெய என்பதன் தமிழாக்கம். இறைவன் பிறவியை அறுத்தலின் 'பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்' என்றார். "பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்" (சிவபுரா 48) "பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்" (வெண்பா 4) என வருவன காண்க. அறுக்

கும் என்ற வினையினால் பிறவியாகிய மரத்தை வேரோடறுக்கும் என உரைக்கப்பட்டது.

"பிறவியை வேரொடுங் களைந் தாண்டு கொள்" நீத் 19.

"என் பிறவிக் கருவேர றுத்தபின் யாவரையுங் கண்டதில்லை" தெள் 2.

"பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட பிஞ்ஞகா" பிடித் 6.

"என்பிறவியை வேரறுத்துப் பெரும்பிச்சுத் தரும்பெருமான்" அடைக் 3 என அடிகள் அருளியமை காண்க. அறுத்தல் திருவருளால் எண்க. "நின் திருவருளால் என்பிறவியை வேரறுப்பவனே" (அடைக் 2) என வருதல் காண்க. பிஞ்ஞகம் - சடைமுடியாகிய தலைக்கோலம். பெய்கழல் - இட்ட வீரக்கழல். பெய்தல் - செறித்தல் எனினுமாம். "அளித்தலும் பெய்தலும் செறித்தலாகும்" எனப் பிங்கலந்தையில் வருதலும் காண்க. கழல், திருவடிக்கு ஆகுபெயர்.

இறைவன் பிரமன் தலையையும், அந்தகாசுரனையும் முப்புரங்களையும், தக்கனையும், சலந்தரனையும், கஜன் என்னும் யானையையும், காமனையும் யமனையும் அழித்து வெற்றி கொண்ட பெருவீரனாதலின் வீரக்கழலணிந்த திருவடியையுடையனாயினான். இவ்வெட்டு வீரங்களையும் அட்ட வீரம் என்பர். கழல் - மலவாற்றல் தவிர்க்கும் வெற்றிப்பாடு குறித்தது எனினும மையும்.

தன்னிடத்து அன்பு கொண்டு சார்தலின்றி உலகப் பொருள்களைச் சார்ந்து நிற்பார்க்கு உணரப்படானாகலின் 'புறத்தார்க்குச் சேயோன்' என்றார். "யாவராயினு மன்பரன்றி யறியொணா மலர்ச் சோதியான்" (சென்னிப் 1) என அடிகள் அருளியமை ஈண்டறியற்பாலது. பூங்கழல் என்பதற்குப் பொலிவு பெற்ற கழல் எனினுமாம். கழல் திருவடிக்கு ஆகுபெயர்.

இறைவனிடத்து அன்புடையார் கைகுவித்து வணங்குதலும், கண்ணீர் வார்தலும், மெய்ம்மயிர் சிலிர்த்தலும் உடையராதலின், சிறப்புப் பற்றிக் கரங்குவிதலை எடுத்துக் கூறினார். இறைவனை நினைக்குந்தோறும் அடியார்க்கு மனத்தின்கண் பெருமகிழ்ச்சி தோன்றுதலின் 'உண்மகிழும்' என்றார். மகிழும்கோன் - மகிழ்தற்கேதுவாகிய கோன்.

சிரம்குவிதல் - இறைவன் திருவடிகளிற் சிரசு ஒடுங்குதல். தாள் + தலை என்பது தாடலை என இயைந்து நிற்பது போல அத்துவித பாவனையினால் இறைவன் திருவருளிற் கலந்து நிற்றல். குவிதல் - ஒடுங்குதல். "குவிதலுடன் விரிதலற்று" (தாயுமா. சின்மயா 8) என்புழியும் இப் பொருட்டாதல் காண்க. சிரம் குவியும் அன்பரை இறைவன் உயர்வடையச் செய்தலின் 'ஓங்குவிக்கும்' என்றார். சீர் என்னுஞ் சொல், புகழ் அழகு செல்வம் முதலிய பொருள்கள் தருதலின் சீரோன் அவையெல்லாம் நிறைந்தவன் எனினுமாம்.

11—16. ஈசன் அடி போற்றி - ஐசுவரியத்தையுடையவனது திருவடிக்கு வணக்கம்; எந்தை அடி போற்றி - எமது தந்தையினது திருவடிக்கு வணக்கம்; தேசன் அடி போற்றி - ஞான ஒளிவடிவையுடைய பரமாசாரியனது திருவடிக்கு வணக்கம்; சிவன் சே அடி போற்றி - சிவபெருமானது சிவந்த திருவடிக்கு வணக்கம்; நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி - அன்பரது அன்பின்கண் அன்புருவாய் நின்ற மாசற்றவனது திருவடிக்கு வணக்கம், மாயம் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி - மாயையினுலுண்டாகும் பிறவியை வேரோடறுக்கும் அரசனது திருவடிக்கு வணக்கம்; சீர் ஆர் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி - சிறப்புப் பொருந்திய திருப்பெருந்துறையின்கண் பரமாசாரியராய் எழுந்தருளிய நமது கடவுளது திருவடிக்கு வணக்கம்; ஆராத இன்பம் அருளும் மலை போற்றி - தெவிட்டாத இன்ப அருவியை ஈந்தருளும் மலையை ஒப்பவனுக்கு வணக்கம்.

ஈசன் - ஐசுவரியத்தையுடையவன். ஈண்டு ஐசுவரியம் என்றது வீடுபேருகிய உயர்திருவினை. இத்திருவினை 'உத்கிருட்ட லக்ஷ்மி' என உபநிடதம் கூறும். தேசு - ஒளி. தேசன் - ஒளிவடிவினன். தேசன் என்பது ஈண்டு பரமாசாரியத் திருவுருவை யுணர்த்தியது.

சிவன் - செம்பொருளாதலின் அவன் திருவடி சேவடியாயிற்று. சேவடி - சிவந்த திருவடி. மாயம் - மாயை. மாயையினுலேயே தனு கரண புவன போகமாகிய பிரிவுகளையுடைய பிறப்பு உண்டாகின்றது. அதனுல் மாயப் பிறப்பு என்ருர். அறுக்கும் என்ற வினையினுல் பிறவியை மரமாகக் கொள்க. 'சீரார்' என்னும் அடை தேவனுச்காய்ப் பின்னர் அவன் எழுந்தருளியிருக்கும் பெருந்துறையாயிற்று. இறைவன் திருப்பெருந்துறையில் குருந்தமர நீழலிற் பரமாசாரியனுக அமர்ந்து தம்மை ஆட்கொண்டமையின் 'நம் தேவன்' என்ருர்.

உலகியல் இன்பங்கள் அனுபவித்த அளவில் தெவிட்டுந்தன்மையன. இறைவன் அருளாற்பெறும் இன்பமோ என்றும் தெவிட்டாவியல்பிற்றுதலின் அதனை 'ஆராத இன்பம்' என்ருர். இறைவனை மலையென ஏகதேசவுருவகஞ் செய்தமையால், என்றும் வற்ருது இறைவனருளால் உண்டாகும் இன்பம் அருவிநீராகக் கொள்ளப்பட்டது.

17—22. கண் நுதலான் - அழற்கண் அமைந்த நெற்றியையுடைய இறைவன், எண்ணுதற்கு எட்டாத எழில் ஆர் கழல் இறைஞ்சி - நினைத்தற்கும் எட்டா அழகுபொருந்திய வீரக்கழல் அமைந்த திருவடிகள் அருமையில் எளியவாய்ப் பூமியில் தாழ்ந்து, வந்து எய்தி - திருப்பெருந்துறையின்கண் பரமாசாரியனுய் வலிய எழுந்தருளிவந்து, தன் கருணை கண் காட்ட - தனது அருட்பார்வையாகிய நயனதிக்கையினைச் செய்து ஞானேபதேசஞ் செய்தலால், அவன் சிவன் என் சிந்தையுள் நின்ற அதனுல் - அக்கண்ணுதலானுகிய சிவபெருமான் என் மனத்தில் நீங்காது நிலை

பெற்ற அத்தன்மையினல், அவன் அருளாலே அவன் தாள் வணங்கி - அவனது திருவருளினுலே அவனது திருவடிகளை வணங்கி, முந்தை வினை முழுதும் ஓய - முற்பிறப்பிற் செய்த வினைமுழுவதும் வலிகுன்றிப் போகவும், சிந்தை மகிழ - மனம் மகிழ்ச்சியடையவும், சிவபுராணம் தன்னை யான் உரைப்பன் - சிவனது பழமையான முறைமையினை அடியேன் கூறுவேனுயினேன்.

கண் நுதலான் - கண்ணமைந்த நெற்றியையுடைய இறைவன். "கண் சுமந்த நெற்றிக் கடவுள்" (திருவா. அம்மானை 8) "கண்ணுதலான் ஒரு காதலின் நிற்கவும்" (திருமந். 11) எனப் பிறண்டும் வருவன காண்க. கண்ணுதலான் என்பதற்கு நெற்றிக்கண்ணையுடைய இறைவன் எனினுமாம்.

எண்ணுதற்கும் என உம்மை விரிக்க. எண்ணுதற்கு என்றமையால் சொல்லுதற்கும் காண்டற்கும் எட்டாமையும் கொள்ளப்படும். எழில் என்பதற்கு எழுச்சியெனினுமமையும். கழல் ஆகுபெயராய்த் திருவடியை உணர்த்தியது. இறைஞ்சி - தாழ்ந்து. "எல்லை செல்ல வேழூர் பிறைஞ்சி" (குறிஞ்சி 215) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. கழல் இறைஞ்சி என்பதற்குத் திருவடிகளை வணங்கி எனப் பொருளுரைக்கின், "அவனருளாலே யவன்றாள் வணங்கி" (18) எனக் கூறப்படுதலிற் கூறியது கூறலாம்; ஆதலால் திருவடிகள் அருமையில் எளியனவாய்ப் பூமியிற்றாழ்ந்து எனப் பொருள் உரைக்கப்பட்டது. இறைஞ்சி என்னும் சினைவினை வந்தெய்தி என்னும் முதல் வினையொடு முடிந்தது. இனி, கழலிறைஞ்ச வந்தெய்தி எனச் செயவெனெச்சமாக்கி முடிப்பினுமமையும். 'கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி, எண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி, விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய், எண்ணிறந்தெல்லை யிலாதானே' எனக் கிடந்தவாறே கூட்டிப் பொருளுரைக்கின் 'கண்ணுதலான்' என்னும் படர்க்கையும் 'மிக்காய்' 'விளங்கொளியாய்' 'எண்ணிறந்தெல்லை யிலாதானே' என்னும் முன்னிலைகளும் தம்முளியையாமையின், கண்ணுதலான் (21) எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி (22) வந்தெய்தி தன்கருணைக்கண் காட்ட (21) என மாறிக் கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது.

கருணைக் கண்காட்டல் - நயனதிக்கை செய்து உபதேசஞ் செய்தல். காட்ட என்னும் செயவெனெச்சம் ஏதுப்பொருளில் வந்தது. காட்ட(21) நின்றவதனல் (17) என இயையும்.

அவன் சிவன் என மாறிக்கூட்டி அவன் என்றது கண்ணுதலானைச் சுட்டியதாகக் கொள்க. தன்கருணைக் கண்காட்டலின் பேருக இறைவன் சிந்தையுள் நின்றமையின் 'சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனல்" என்ருர். அவனருளாலே அவன்றாள் வணங்கி என்றது சிவனது திருவருளினுலே அவனது திருவடிகளை வணங்கி என்றவாறு. "சித்தனருள் பெற்று

அவர் பாதம்கினைக்கும் நியமத் தலைநின்றார்'' எனப் பெரியபுராணத்தும் (பெருமிழலைக் குறும்பனார் செய். 4) வருதல் காண்க.

உயிர்க்குயிராய் இறைவன் உண்ணின்று இயக்குகின்றமையால் தம் செயலெல்லாம் அவன் அருள்வழிச்செய்யும் செயல்களாதலின் 'அருளால் வணங்கி மகிழ ஓய யான் புராணந்தன்னை உரைப்பன்' என்றார். சிவபுராணத்தை உரைப்பதன் பயன் முந்தை வினைமுழுதும் ஓய்தலும் சிந்தை மகிழ்தலுமாகும். முந்தை - முன். முந்தை வினையென்றது முற்பிறப்பில் செய்த சஞ்சிதகன்மங்களை. வினைமுழுதும் ஓய என்றது சஞ்சித கன்மங்கள் முழுவதும் நுகர்வுக்கு வாராமல் வலிகுன்றிப்போக என்றவாறு. ஓய- நுணுக; என்றது வலிகுன்ற என்றபடி. ஓய்தல் என்பது நுணுக்கமாகிய குறிப்புணர்த்தும் என்பது, ''ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய், ஆவயி னான்கு முள்ளத நுணுக்கம்'' (தொல். உரி 34) என்பனாலுமறிக.

இதுவரையுங் கூறிய இருபத்திரண்டு அடிகளில் முதற்பத்து அடிகளால் வாழ்த்தும், பின்னர் ஆறு அடிகளால் வணக்கமும், அதன் பின்னர் ஆறு அடிகளால் வருபொருளுரைத்தலுமாகிய தற்சிறப்புப்பாயிரம் கூறியருளினார். ஆறுமுதல் பத்து அடிவரை 'வெல்க' என மற்றொரு பொருள் கூறியது என்னையெனின், 'வெற்றி பெறுக' என்பதும் வாழ்த்தாகவே அமைதலினென்க.

23—5. விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் - விண்ணுலகம் முழுவதும் நிறைந்தும் மண்ணுலகம் முழுவதும் நிறைந்தும் அவற்றிற்கு அப்பாலுமாய் நிறைந்தவனே, விளங்கு ஒளியாய் - விளங்குகின்ற ஒளிவடிவினனே, எண் இறந்து எல்லை இலாதானே - சுட்டியுணரப்படும் தன்மையினைக் கடந்து வரம்பின்றி விரிந்தவனே, நின் பெருஞ்சீர் - நின்னுடைய பெரிய புகழினை, பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்று அறியேன்— தீயவினையையுடையேனாகிய யான் நின்னருளாலன்றிப் புகழ்ந்துரைக்கும் நெறி ஒன்றனையும் அறிகிலேன்.

இறைவன் விண்ணுலகம் மண்ணுலகம் முதலாகிய எல்லாவுலகங்களும் தன்னுள் அடங்கத் தான் அவற்றிற்கு அப்பாலுமாய் நிறைந்து ஒளிவடிவினனாய் உள்ளான் என்பது ''விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்'' என்பதனாற் கூறப்பட்டது. ''உலகெலாஞ் சோதியாய் நிறைந்தான்'' எனத் தேவாரத்தும் (ஞான 142:7) வருதல் காண்க. இறைவன் விண்ணும் மண்ணும் நிறைந்த ஒளிவடிவினன் என்பது,

> ''அண்டமா ரிருளூடு கடந்தும்பர்
> உண்டுபோலு மோரொண்சுடர்'' தே. நாவு. 211 : 2.

என அப்பரடிகள் அருளியவாற்றானுமறியப்படும்.

மனத்தினுல் எண்ணி உணர்ந்து சுட்டியறியப்படும் தன்மைக்கு அப்பாற்பட்டவன் இறைவன் என்பது 'எண்ணிறந்து' என்பதனுற் கூறப்பட்டது.

"இன்லவுரு வின்னநிற மென்றறிவதே லரிது" (தே. 330 : 4) எனத் திருஞானசம்பந்த சுவாமிகளும்,

"அப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே கண்ணுகக் காணினல்லால்
இப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத் தனிவனிறைவனென்றெழுதிக்
[காட்டொணுதே" 311 : 10.

எனத் திருநாவுக்கரசு சுவாமிகளும் அருளிய திருவாக்குகளும் இதனை உணர்த்தும். இனி 'எண்ணிறந்து' என்பதற்கு மனவுணர்வுக்கும் எட்டாது எனப் பொருள் உரைத்து வாக்குக்கும் எட்டாது எனவும் உரைக்கலாம்.

பெருஞ்சீர் - அளவில்லாத உண்மைப் புகழ். "இறைவன் பொருள் சேர்புகழ்" (குறள் 5) என்றுர் திருவள்ளுவரும். பொல்லா என்பது வினைக்கு விசேடணம். வினையேன் என்றது தன்னைத் தாழ்த்திக் கூறிய வாறு.

அவனருளாலே அவன்தாள் வணங்கிச் (18) சிவபுராணந் தன்னை (19) உரைப்பனியான் (20) என்று சொல்லத் தொடங்கிய அடிகள் இம்மூன்று (23-5) அடிகளாலும் அவையடக்கம் கூறுகின்றுராதலின், 'நின்சீர் புகழுமாறொன் றறியேன்' என்றுர். இறைவனை முன்னிலைப் படுத்தி இவ் வவையடக்கத்தினைக் கூறியது, அவ்விறைவனருள் முன்னின்று உதவுமாயினும் தற்போதங்கெட வேண்டியாகும். ஒன்று என்பதற்குச் சிறிது எனினுமமையும். "இடனின்றி யிரந்தோர்க்கொன் றீயாமை யிழிவென" (கலி 2 : 19) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

26—31. புல் ஆகி - புல்லாகியும், பூடுஆய் - பல்வகைப் பூண்டுகளாகியும், புழுஆய் - புழுவாகியும், மரம் ஆகி - மரமாகியும், பல் விருகம் ஆகி - பலவகைப்பட்ட மிருகங்களாகியும், பறவை ஆய் - பலவகைப் பறவைகளாகியும், பாம்பு ஆகி - பாம்புகளாகியும், கல்ஆய் - கல்லாகியும், மனிதர் ஆய் - மனிதராகியும், பேய் ஆய் - பேய்களாகியும், கணங்கள் ஆய் - கணங்களாகியும், வல் அசுரர் ஆகி - வலிய அசுரராகியும், முனிவர் ஆய் - முனிவராகியும், தேவர் ஆய் - தேவராகியும், செல்லா நின்ற இ தாவர சங்கமத்துள் - நிகழா நின்ற இந்த நிலையியற்பொருள் இயங்கியற் பொருள் என்னும் இருவகைப் பொருள்களுள்ளே, எம்பெருமான் எல்லா பிறப்பும் பிறந்து இளைத்தேன் - எம்பெருமானே யான் எல்லாப் பிறவிகளிலும் பிறந்து இளைப்படைந்தேன்.

இங்கு கூறப்பட்ட உயிர்களின் தோற்றமுறைமை, செய்யுளாதலின் பிறழவைத்துரைத்தாராயினும் அவை தோன்று முறைமையில் வைத்து உரைகொள்ளற்பாற்று. எல்லா உயிர்ப்பொருள்களும், நிலையியற்பொரு

ளாகிய தாவரமும் இயங்கியற் பொருளாகிய சங்கமமும் என இருகூற்றுள் அடங்கும். தாவர வகையுள் கல் புல் பூண்டு மரம் என்னும் நான்கும், சங்கம வகையுள் புழு பாம்பு பறவை பல்விருகம் மனிதர் அசுரர் முனிவர் பேய் கணங்கள் தேவர் என்னும் பத்தும் கூறப்பட்டனவாகும்.

தாவரவகையுள் முதற்கண் கொள்ளத்தக்க கல் அல்லது மலை ஒரு வகை அறிவுவிளக்கமுமின்றிக் கிடந்த உயிர்களின் நிலையேயாகும். அந்நிலையினின்று ஏற்ற தகுதி வந்தபோது ஓரறிவுயிர்களாகிய புல் பூடு மரம் ஆகிய தோற்றத்தையடையும்; அவற்றினின்றும் அறிவு சிறிது சிறிதாக மேற்படும்போது சங்கமவகையுள் அவற்றிற்றேற்ற உடம்பினைப்பெற்று ஈரறிவுயிர்களாகிய புழுக்களாகியும், மூவறிவுயிர்களாகிய கறையான் எறும்புகளாகியும், நாலறிவுயிர்களாகிய நண்டு தும்பிகளாகியும், ஐந்தறிவுயிர்களாகிய பாம்பு பறவை பல்விருகமாகியும், ஆறறிவுயிர்களாகிய மனிதர் அசுரராகியும், ஆறறிவின் மேற்பட்ட முனிவர் பேய் கணங்கள் தேவர்களாகியும் பிறவி எடுக்கும் என உரை கூறிக்கொள்க.

பூமியினுட் கிடக்கும் கல் வளர்ச்சியடையக் காண்கின்றோமாதலின் அதுவும் ஒருவகை உயிர்த்தோற்றத்தின்பாற்பட்டதாகும். ஆயினும் அது உணர்ச்சியுடைத்தன்று; கௌதமர் சாபத்தாற் கல்லாய்க்கிடந்த அகலிகை இராமரது பாதந் தீண்டுதலால் தொல்லுருப் பெற்றனள் என வரலாறு கூறுதலின் உயிருக்குக் கல்லும் ஒருவகைப் பிறப்பாதல் உணரப்படும். இனிச் சர்வசங்காரகாலத்து உயிர் ஒருவகை உணர்ச்சியுமின்றி ஆணவ மலத்துள் பாஷாணம் (கல்) போல் அசைவற்றுக் கிடத்தலின் ‘கல்லாய்’ எனக் கூறினர் எனக் கொள்ளுதலும் ஒன்று.

விருகம் - மிருகம்; பல் என்ற அடையைப் பூடு முதலியவற்றோடும் கூட்டுக. பேய் - நிழல்போல் நுண்ணுடம்பினையுடைய ஒருவகை உயிர். “நிழல்போ னுடங்கிப் பேயாட” (சீவக 309) எனப் பிறரும் கூறுதல் காண்க. இது கண்டார்க்கு அச்சத்தைச் செய்தலின் ‘பேய்’ எனப்பட்டது. பேந்தரும் பேய்” (சீவக 1181) என வருதலும் காண்க. பேம்- அச்சம். “பேநா முருமென வரூஉங் கிளவி, யாமுறை மூன்று மச்சப் பொருள” (உரி 69) என்றார் தொல்காப்பியனாரும்.

ஈண்டு கணங்கள் என்றது பதினெண்கணங்களுள் இங்கே விதந்து கூறப்பட்ட அசுரர் பேய் தேவர் ஒழிந்த ஏனையோரை. பதினெண் கணங்களாவார்; தேவரும் அசுரரும் தைத்தியரும் கருடரும் கின்னரரும் கிம்புருடரும் இயக்கரும் விஞ்சையரும் இராக்கதரும் கந்தருவரும் சித்தரும் சாரணரும் பூதரும் பைசாசகணமும் தாரகாகணமும் நாகரும் ஆகாய வாசிகளும் போகபூமியோருமெனவிவர். இதற்குப் ‡பிறவாறு முரைப்பர்.

அசுரர் - சுரர்க்கு மாறானவர். தாவரம் - நிற்பன. ஸ்தாவரம் என்னும் வட சொற்றிரிபு. சங்கமம்— அசைவன. ஜங்கமம் என்னும் வடசொற்றிரிபு.

‡ புறநானூறு 1 : 10 உரை. பிங்கலந்தை 92.

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் - நிலையியற்பொருள் இயங்கியற் பொருள் என்னும் இருவகைப் பொருள்களுள்ளே யான் எல்லாப் பிறவி களிலும் பிறந்து இளைப்படைந்தேன்.

"ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப்பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை" அம்மானை 14

என அடிகள் மீண்டும் கூறியிருத்தலுங் காண்க.

32—5. மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன் - உண்மையாகவே உன் அழகிய திருவடிகளைக் கண்டு இப்பொழுது அப் பிறவித் துன்பங்களினின்றும் விடுபட்டேன்; உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா - அடியேன் உய்யும் பொருட்டு என் மனத்துள் 'ஓம்' என்னும் பிரணவவுருவாய் நின்ற மெய்யனே, விமலா - மாசற்ற வனே, விடைப்பாகா - தருமவடிவாகிய ஏறு ஊர்ந்தவனே, வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே - வேதங்கள் ஐயனே என்று அழைக்கவும் அவற்றிற்கெல்லாம் எட்டாது மேல் உயர்ந்தும் கீழ் சூழ்ந்தும் புடைபரந்தும் அமைந்த நுட்பமான பொருளாய் உள்ளவனே.

மெய்யே கண்டு எனக்கூட்டிக் காட்சியளவையானே நேரில் கண்டு எனவுரைக்க. "திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை, உருநா மறியவோ ரந்தணனாய் ஆண்டுகொண்டான்" (தெள்ளேணம் 1) "கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன் கண்கள் களிகூர" (குழைத் 9) "நீவாவென்னக், கண்ணார உய்ந்தவா றன்றேயுன் கழல்கண்டே" (திரு வேசறவு 2) என அடிகள் அருளியவாறுங் காண்க.

பொன்னடி - அழகிய அடி. பொன் - அழகு பு. வெ. மா. 128 உரை. பொன்னடி என்பதற்கு பொன்போலும் அருமையும் தூய்மையும் ஒளியு முடைய திருவடியெனினுமாம், 'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்' என்றமையால் வீடுற்றேன் என்றது எல்லாப் பிறப்புகளின் துன்பங்களி னின்றும் விடுதலையடைதலைக் குறித்தது.

உய்ய நின்ற எனஇயையும். ஓங்காரம் - பிரணவம். அது அகர உகர மகரமாகிய பகுப்பினையும் விந்து நாதமாகிய முதலினையுமுடையது. அகர உகர மகர விந்து நாதமாகிய ஐந்தும் இறைவனது ஐந்தொழிலைக் குறிக் கும். அதனால் ஓம் என்பது இறைவனுக்குரிய சிறந்ததொரு மறைமொழி யாகும். அம்மறைமொழி வடிவாய் உயிர்க்குயிராய் நின்று இறைவன் உயிர்களை இயக்குதலின் 'என்னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற' என்றார். அங்ஙனம் இறைவன் உள்ளத்துள் ஓங்காரமாய் நிற்பினும் உண்மை இயல்பில் திரிவடையானாதலின் 'மெய்யா' என்றார். விமலன் - மாசற்ற வன். மலம் - மாசு; அழுக்கு. வி. இன்மைப்பொருளுணர்த்தும் உபசர்க்கம்.

வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே என்பத னால் நான்மறைகளால் இறைவன் இயல்புமுழுவதும் அறியப்படாமையின்

பொதுவகையால் இறைவனை அழைக்கவும் அவற்றிற்கு எட்டாது மேலு யர்ந்தும் கீழ் சூழ்ந்தும் புடைபட விரிந்தும் நுண்ணியனாய் உள்ளான் என் பதும், அவன் அருள் செய்யும் சிவஞானமொன்றனேயே அறியப்படுபவனு வான் என்பதும் கொள்ளப்படும்.

"வேதக்காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரிந்த
போதக் காட்சிக்கும் காணலன்" சூரன் அமைச் 127.

எனக் கந்தபுராணத்தும்,

"அல்லையீ தல்லயீதென மறைகளு மன்மைச்
சொல்லினாற் றுதித்திளைக்குமிச் சுந்தரன்" கடவுள் 29.

எனப் பரஞ்சோதி திருவிளையாடற்புராணத்தும் வருவன காண்க.

இறைவனருளிய வேதங்கள் இறைவன் இயல்பினை முழுவதும் உரைக்க மாட்டாமையின் அவற்றாற்பெறும் பயன் என்னையெனின்? இறைவனுக் குரிய பொதுவியல்பு சிறப்பியல்பு என்னும் ஈரியல்புகளுள் பொதுவியல்பு வேதமுதலிய நூல்களாற் கூறப்படும். சிறப்பியல்பும் நூல்களாற் கூறப் படினும் அனுபவவுணர்வு உண்டாதற்கு அவனருளாற் பெறும் சிவஞானம் வேண்டும். ஆதலின் இறைவனருளிய வேதம்முதலிய நூல்களும் பயன்றரு வனவாமென்க.

36—40. வெய்யாய் தணியாய் - ஞாயிற்றின் வெம்மையையும் திங்க ளின் தண்மையையும் உடையவனே, இயமானன் ஆம் விமலா - உயிரை உருவாகக்கொண்டு உண்ணின்று இயக்குதலின் உயிராக விளங்கும் தூயவனே, பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி - பொய் யான நினைவு சொல் செயல்களெல்லாம் விட்டு நீங்கும்படி குருவடிவில் வந்து அருள் செய்து, மெய் ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய் சுடரே - மெய் அறிவாகி விளங்குகின்ற உண்மை ஒளியே, எஞ்ஞானம் இல்லாதேன் இன்ப பெருமானே - எவ்வகையான அறிவும் இல்லாதேனுக்கு இன்பத்தைத் தரு கின்ற பெருமானே. அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே - அறியாமையாகிய இருளை நீங்கச் செய்யும் நல்ல அறிவுருவானவனே.

இறைவன் அட்டமூர்த்தங்களுள் ஞாயிற்றின் உருவாக நின்று வெம் மையைத் தந்து உலகினை உய்வித்தலின் 'வெய்யாய்' என்றும், திங்களின் உருவாய் நின்று தண்மையினைத் தந்து உலகினை உய்வித்தலின் 'தணியாய்' என்றும் கூறினர். "தண்ணியான் வெய்யோன்" (தே. ஞான 61-26) 'வெய் யாய் தணியாய் அணியாய் போற்றி" (தே. திருநாவு 271: 3) என வருவன காண்க. இங்கு வெம்மையும் தண்மையும் இறைவனையும் அவன் அருட் சத்தியையும் குறிப்பனவாகும். விந்து வெப்பமுடையது; நாதம் தட்ப முடையது. விந்து நாதங்கள் சிவனையும் சத்தியையும் குறிக்கும். ஆண்மை யும் பெண்மையுமாகிய ஈரியல்புகளையுடைய இறைவன் எல்லாவுயிர்களி டத்தும் உயிர்க்குயிராய் நின்று அவற்றினை ஆண் பெண்ணாகப் படைத்து

இயக்குதலின் 'இயமானனும் விமலா' என்றார். இயமானன் - உயிர். இறைவனது அட்டமூர்த்தங்களுள் உயிரும் ஒன்றாதலின் அவ்வுயிரை உடலாகக் கொண்டு இறைவன் உயிர்கள் எல்லாவற்றையும் இயக்குபவன் என்பதும் இதனாற் போதரும். உயிர்க்குயிராய் உண்ணின்று இயக்கினும் தன் தூய தன்மையில் திரியாதவன் என்பார் 'விமலா' என்றார்.

பொய் - பயனில்லாத நினைவும் சொல்லும் செயலும். வந்தருளி என்றது பரமாசாரியத் திருவுருவாய் வந்து அருளுபதேசம் செய்தமையைக் குறித்தது.

ஞானம் - பாசஞானம், பசுஞானம், பதிஞானம் என மூவகைப்படும். பாசஞானம் வேதம் முதலிய நூல்களாலும் சூட்சுமை பைசந்தி மத்தியமை வைகரி என்னும் நான்கு வாக்குகளாலும் அறியப்படும் நாதமுடிவான ஞானமாகும். பசுஞானம்: நான் பிரமம் என உணரும் உணர்வாகும். பதிஞானம்: உயிர் உடலின்கட்டோன்றி ஓதி ஒவ்வொன்றாக உணர்ந்திடுதலாற் பசுவாகிய தன்னினும் மேம்பட்ட பதியினையுணர்தல். இது மெய்ஞ்ஞானம் எனப்பட்டது.

"வேதசாத் திரமிருதி புராணகலை ஞானம்
விரும்பசபை வைகரியா தித்திறங்கள் மேலாம்
நாதமுடி வானவெல்லாம் பாசஞானம்
நணுகி ஆன் மாஇவைகீழ் நாடலாலே
காதலினான் நான்பிரமம் என்னும் ஞானங்
கருதுபசு ஞானம்இவ னுடலிற் கட்டுண்
டோதியுணர்ந் தொன்றொன்றா யுணர்ந்திடலாற் பசுவாம்
ஒன்றாகச் சிவனியல்பின் உணர்ந்திடுவன் காணே" (சூத் 9 அதி 1)

எனச் சிவஞானசித்தியாரில் வருதல் காண்க.

மிளிர்தல் – விளங்குதல். மெய்ச்சுடர் - உண்மை ஒளி. "பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே" (கோயிற் 3) என அடிகள் பிறண்டும் கூறியது காண்க. சுடர் - ஒளி. இப்பொருட்டாதல் "தெறுசுட ரொண்கதிர் ஞாயிறு" (புற 6 : 27-8) என்புழிக் காண்க.

எ + ஞானம் = எஞ்ஞானம். எஞ்ஞானமும் என்னும் உம்மை தொக்கது. இன்பப்பெருமான - இன்பத்தைத் தந்தருளிய பெருமான்.

"யாவர்க்கும் கீழாம் அடியேனை—யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கு" திருவெண்பா 8.

"இன்பம் பெருக்கி" திருவெண்பா 11.

"இகபரமாய தோர் இன்ப மெய்த" திருவார்த்தை 10.

எனத் திருவாசகத்து வருவன காண்க.

அஞ்ஞானம் - அறியாமை. அஞ்ஞானம் என்பதில் ந மறுதலைப் பொருளில் வந்தது. அறியாமை: பொருள்களின் இயல்பினை அறியாமை, அதுவோ இதுவோ என ஐயுற்றுணர்தல், ஒன்றை மற்றொன்றாக உணர்தல் என மூன்று வகைப்படும். அவ்வறியாமை ஆணவ மலத்தால் உயிர்க்குளதாவதாகும். அதனை நீக்கும்பொருட்டு இறைவன் தனு கரண புவன போகங்களை உயிர்களுக்குக் கொடுத்தலால் ஆணவ வலியாகிய அறியாமை மெல்ல மெல்ல நீங்கும். அந்த நன்மையினை இறைவனது அறிவின்மேலேற்றி 'அஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே' என அருளிச் செய்தார்.

41—8. ஆக்கம் அளவு இறுதி இல்லாய் - தோற்றமும் நிலைபேற்றின் அளவும் முடிவும் இல்லாதவனே, அனைத்து உலகும் ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய் - எல்லா உலகங்களையும் நீயே படைப்பாய் பாதுகாப்பாய், அவைகளை ஒடுக்குவாய் முடிவில் உயிர்கட்கு அருளையும் தருகுவாய்; என்னை போக்குவாய் - என்னை அப்பல்வகைப் பிறவிகளிற் செலுத்திப் போகங்களில் முழுகச் செய்வாய்; நின் தொழும்பில் புகுவிப்பாய் - பின்னர் அப்போகங்களில் உவர்ப்புண்டாயவிடத்து என்னை நினது திருவடித்தொண்டில் புகும்படி அருள்செய்வாய்; நாற்றத்தின் நேரியாய் - பூவில் மணம்போல அன்பருள்ளத்தில் இசைந்திருப்பவனே; சேயாய் - அன்பரல்லாதவர் உணராமையின் தூரத்திலிருப்பவனே; நணியானே - அன்பராயினோர் உணருதலின் அணுகி இருப்பவனே; மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே - சொல்லும் நினைவும் அளவிடமுடியாது நீங்க அப்பாற்பட்டுள்ள மறைபொருளாயுள்ளவனே; கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற்போல - பசுவிற் கறந்த புதியபால் சர்க்கரையும் தேனும் கலந்தூழி மிக்க இனிமை தந்தாற்போல, அடியார் சிந்தனையுள் சிறந்து தேன் ஊறி நின்று - அடியவர்களது உள்ளத்திலே மிகுந்து தேன்போல இனிமை ஊற்றெடுக்குமாறு நிலைபெற்றுத் தங்கி, பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான் - அவ்வடியவரது எடுத்த பிறவியை நீக்கும் எங்கள் பெருமானே,

ஆக்கம் அளவு இறுதி இல்லாதவனே அனைத்துலகங்களையும் ஆக்குதல் காத்தல் அழித்தல் செய்ய வல்லவனுவான் என்பது போதர 'ஆக்கமளவிறுதி யில்லாய்' என்றார்.

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் போக்குவாய் நின்தொழும்பில் புகுவிப்பாய் அருள்தருவாய் என இயைத்து எல்லாத் தனுகரணபுவன போகங்களையும் நீயே படைத்து அவற்றில் என்னைச் சேர்ப்பாய்; பாதுகாப்பாய்; அழிப்பாய்; போகங்களில் முழுகச்செய்து மறைப்பாய்; போகங்களில் உவர்ப்புண்டாயவிடத்து நினது திருத்தொண்டில் புகும்படி செய்து பக்குவமுண்டாயபோது மலக்கட்டினைக் கெடுத்து நித்திய இன்ப நிலையை அருளுவாய் எனக் கொள்க.

அனைத்துலகும் ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய் எனப் படைத்தல் காத்தல் அழித்தல் அருளல் என்னும் நான்கு தொழில்கள்

கூறப்படினும் இவற்றிடையே நிகழும் மறைத்தற்றொழில் காத்தற்றொழிற் கண் அடங்கும். ஆகவே படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களையும் செய்பவன் இறைவன் என்க. ஐந்தொழிலும் இறைவன் அருட்செயல்களேயாதல்,

"அழிப்பிளைப்பு ஆற்றல் ஆக்கம் அவ்வவர் கன்ம மெல்லாங்
கழித்திடல் நுகரச் செய்தல் காப்பது கன்ம ஒப்பில்
தெழித்திடல் மலங்கள் எல்லாம் மறைப்பருள் செய்தி தானும்
பழிப்பொழி பந்தம்வீடு பார்த்திடின் அருளே யெல்லாம்" சூ. 1 : 37.

என்னும் சிவஞானசித்தியார் திருவிருத்தத்தானுமறிக.

ஆக்குதல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்பதே ஐந்தொழில் முறைமையாயினும் போக்குவாய் என உலகபோகங்களில் அமிழ்ந்துமாறு பிறவிக்கண் போகச்செய்தலைப் பின்னர்க் கூறியது அப்பிறவிகளிற் புக்குப் போகங்களில் உவர்ப்புண்டாயவிடத்து இறைவன் தொழும்பில் புகுவிக்கும் இயையுபற்றியாகும்.

என்னை என்பது மத்திப தீபமாக நின்று என்னைப் போக்குவாய் எனவும், என்னைப் புகுவிப்பாய் எனவும் இயையும். போக்குதல் - பக்குவமுண்டாகும் பொருட்டுப் பலவகைப் பிறவிகளிலும் போகச் செய்தல்.

தொழும்பில் புகுவித்தல் - அப்பிறவிகளினூற் பக்குவமுண்டாயவிடத்து என்னைத் தனது திருவடித்தொண்டில் புகுமாறு அணுகச் செய்தல்.
தொழும்பு - தொண்டு.

நாற்றம் தான்பற்றிய பொருள்களில் எங்கும் நிறைந்து அதற்கப்பாலும் நுட்பமாய் இருப்பதுபோல. இறைவன் உலகு உயிர் எங்கும் நிறைந்து அதற்கப்பாலுமாய் நுட்பமாயுள்ளான என்பது 'நாற்றத்தின் நேரியாய்' என்பதனற் போந்தபொருள். அங்ஙனமாயின் நாற்றம் புலப்படுவதுபோல இறைவன் புலப்படவேண்டுமேயெனின் அவன் அன்பாகிய பொறியில்லாதவர்க்குச் சேயனாய்ப் புலப்படாமலும், அதனையுடையார்க்கு அணியனாய்ப் புலப்படுதலுமுடையனாகலின் 'சேயாய் நணியானே' என்றார்.

"மெய்யடிவர்கட் கண்மையனே யென்றுஞ் சேயாய் பிறர்க்கு" நீத். 22.

"ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்
சேயானை" அம் 7.

"அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக வொப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலை" அம் 11.

என அடிகள் அருளியமை காண்க.

வாக்கும் மனமும் அளவிட முடியாது நீங்கிப்போக அப்பாற்பட்டு நிற்றலின் 'மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே' என்றார். 'வாக்கு முனாதீதன்' என்பதும் இப்பொருள் பற்றியாகும். "சொற்பதங் கடந்த

தொல்லோன்'' (அண்ட 111) ''சொற்பதங் கடந்த அப்பன்'' (அச்சப் 6) என வருவனவும் ஈண்டறியற்பாலன. இறைநூல்கள் இறைவன் இயல்பினைக் 'குஹ்யாதிகுஹ்யம்' எனக்கூறுதலின் 'மறையோனே' என்றார்.

கறந்தபால் - பசுவிற் கறந்த புதியபால். கன்னல் - சருக்கரை. ''கட்டியும் விசயமும் குளமும் கன்னலும், ஒட்டிய பாகும் அக்காரமும் சருக்கரை'' என்பது திவாகரம். நெய் - தேனெய். ''தேனெய்யொடு கிழங்கு மாறியோர்'' (பொருந 214) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. தானே இனிமை தருவதாய பால், கன்னலும் தேனும் கலந்தவழி மிக்க இனிமை தருதலிற் 'கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல' என்றார். சிறந்து - மிகுந்து. சிறந்து நின்று என இயையும். தேன் - இனிமை. நின்று எனக்கூறினும் இறைவன் புலப்படுதலும் புலப்படாதிருத்தலுமாகிய நிலைமையினின்றும் நீங்கி, என்றும் புலப்பட்டு நின்று என்பது பொருளாகக் கொள்க. பிறந்த பிறப்பு அறுத்தல் - அவ்வடியவர் எடுத்த பிறப்பை நீக்குதல்.

49 61. நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் - ஒப்பற்ற ஐந்து நிறங்களையுடையவனே, விண்ணோர்கள் ஏத்த மறைந்து இருந்தாய் - தேவர்கள் உன்னைத் துதிக்கவும் அவர்களுக்கு வெளிப்படாமல் மறைந்திருந்தவனே, எம்பெருமான் - எம்பெருமானே, வல்வினையேன் தன்னை மறைந்திட மூடிய மாய இருளை - வலிய வினையையுடைய என்னை அறிவு மறையும்படி மூடிய வஞ்சனையையுடைய ஆணவ மலமாகிய இருளை, அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி - நல்வினை தீவினை என்னும் அரிய கயிறுகளாற் கட்டி, புறம் தோல் போர்த்து - வெளியே தோலைப் போர்வையாக இட்டு, எங்கும் புழு அழுக்கு மூடி - அதனுள் உடம்பில் எங்குமுள்ள புழுக்களையும் அழுக்குகளையும் மறைத்துச் செய்த, மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை - அழுக்குகள் கழிகின்ற ஒன்பது வழிகளையுடைய உடம்பாகிய குடிசையை, மலங்க புலன் ஐந்தும் வஞ்சனையை செய்ய - யான் கலங்கும்படி ஐம்புலன்களும் மாயத்தைச் செய்ய, விமலா - மாசற்றவனே, விலங்கு மனத்தால் - இடையே நின்று தடுக்கும் மனத்தையுடைமையால், உனக்கு கலந்த அன்பு ஆகி கசிந்து உள் உருகும் நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி - உன்னிடத்துக் கலந்த அன்புடையேனாகி நெகிழ்ந்து உள்ளே உருகும் நன்மை இல்லாத சிறியேனுக்கு அக்குடிசையினைத் தந்து அதனுள் ஆற்றலைக்கெடுத்து இருவினையொப்பு மலபரிபாகமாகிய பக்குவ நிலையை வரச்செய்து, நிலம்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி - இந்நிலவுலகத்தே குருவடிவில் எழுந்தருளிவந்து எல்லைகாண்டற்கரிய நீண்ட திருவடிகளை எனக்குக் காட்டியருளி, நாயின் கடையாய் கிடந்த அடியேற்கு - நாயினும் கீழ்ப்பட்டவனாய்க் கிடந்த அடியேனுக்கு, தாயின் சிறந்த தயாவான தத்துவனே - தாயினும் சிறந்த கருணைவடிவான உண்மைப் பொருளாயுள்ளவனே.

இறைவனது அட்டமூர்த்தங்களுள் நிலம் நீர் தீ வளி வான் என்னும் பூதங்கள் ஐந்தும் அடங்குதலினாலும், அவை முறையே பொன்மை வெண்மை செம்மை கருமை புகைமை என்னும் ஐந்து நிறங்களும் உண்மையானும் 'நிறங்களோ ரைந்துடையாய்' என்றார்.

"மண்புனல் அனல்கால் வான்.........

................. . .................

வண்பொன்மை வெண்மை செம்மை கறுப்பொடு தூமவண்ணம்"

எனச் சிவஞானசித்தியாரினும், (சூத் 2. செய் 67)

"பொன்பார் புனல் வெண்மை பொங்குமனல் சிவப்பு
வன்கால் கருமைவளர் வான்தூமம் — என்பர்,"

என உண்மைவிளக்கத்தும் வருவனவும் காண்க.

தேவர்கள் தமக்குரிய சில ஆற்றல்களினாற் றம்மை முதல்வராகக் கருதிச் செருக்குறுவராதலின் அவர் செருக்கினை அறுத்தற்பொருட்டு இறைவன் மறைந்திருப்பானாதலின் 'விண்ணோர்களேத்த மறைந்திருந்தாய்' என்றார். இறைவன் தேவர்களின் உதவியின்றித் திரிபுரங்களைச் சிரித்து எரிசெய்யவும் அதனை உணராத தேவர், தாமும் அவ்வென்றிக்குரியராகக் கருதி இறுமாந்தமையும் அஃதுணர்ந்த இறைவன் இயக்கவடிவங்கொண்டு எதிரில் நின்றகாலை அவர்கள் அவனை அறியாதிருந்தமையையும் கேநோபநிடதத்துட் காண்க.

இயல்பாகவே ஆணவ மலத்தாற் பிணிக்கப்பட்டிருத்தலின் தம்மை 'வல்வினையேன்' என்றார், "வல்வினையேன், ஆழியப்பா வுடையாய்" (அடைக்கலப் 6) என அடிகள் பிறிதோரிடத்தும் கூறுதல் காண்க. மறைந்திட மூடிய மாய இருளை என்றது அறிவு சிறிதும் விளங்காது தம்மை மூடிக்கொண்டு உடனிருக்கின்ற வஞ்சகத்தையுடைய ஆணவ இருளை என்றவாறு, மாயம் - வஞ்சனை. "மடங்கல்போற் சினைஇ மாயஞ்செ யவுணரை" (கலி 2 : 3) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

உயிர்களை அநாதிசம்பந்தமாகப் பற்றியிருக்கின்ற ஆணவ இருளை வலிகெடச் செய்தற்பொருட்டு நல்வினை தீவினையென்னும் தொழில்களைச் செய்யும்படி பிரவாக அநாதிசம்பந்தமாகிய கன்மமலத்தோடு சேர்ப்பன். அறம் பாவம் என்னும் கன்மம் நிகழ்தற்கு உடம்பு இன்றியமையாது இருத்தலின் பிரவாக அநாதிசம்பந்தமான மாயையோடு சேர்ப்பன்; இம்முறைமையே, 'என்னை மூடிய மாய இருளை அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி, ஒன்பது வாயிற்குடிலைச் சிறியேற்கு நல்கி' என அருளிச் செய்யப்பட்டது.

புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடியென்றது புறத்தே தோலைப் போர்வையாக இட்டு அதனால் உடம்பில் எங்குமுள்ள புழுக்களையும் அழுக்குகளையும் மறைத்து என்றவாறு.

"மொய்ப்பால் நரம்பு கயிறுக மூளை என்பு தோல்போர்த்த, குப்பாயம்"
ஆசை 2.

"அளிபுண் ணகத்துப் புறந்தோல்மூடி யடியேனுடைய யாக்கை"
ஆசை 5.

என வருவன காண்க. மூடி என்பதற்கு மூடிச்செய்த என ஒரு சொல் வருவித்துரைக்க. இதனால் ஒன்பது வாயிற்குடிலின் அமைப்புக் கூறிய வாறு. மலஞ்சோரு மொன்பது வாயிற்குடில் - மலம் சலம் தாது பீழை குறும்பி சளி என்னும் அழுக்குகள் சோருகின்ற ஒன்பது வாயில்களை யுடைய உடம்பாகிய குடிசை.

"கால்கொடுத் திருகை யேற்றிக் கழிநிரைத் திறைச்சி மேய்ந்து
தோல்படுத் துதிர நீராற் சுவரெடுத் திரண்டு வாசல்
ஏல்வுடைத் தாவ மைத்தங் கேழுசா லேகம் பண்ணி
மால்கொடுத் தாவி வைத்தார் மாமறைக் காட னாரே" நாவு 33 : 4.

"புழுப்பெய்த பண்டி தன்னைப் புறமொரு தோலான் மூடி
ஒழுக்கறு வொன்பதுவா யொற்றுமை யொன்று மில்லை" நாவு 52 - 2.

எனத் தேவாரத்தும் வருவன காண்க.

மலங்குதல் - கலங்குதல். இப்பொருட்டாதல் "கதுவே கலுழல் கலங்குதல் மலங்குதல்" என்னும் பிங்கலந்தையானும் (7 : 162) அறிக. புலனைந்தும் வஞ்சனையைச் செய்தல் - ஐம்புலன்களும் தம்மைக் கவருமாறு ஐம்பொறிகளையும் மயக்கித் தம்பால் இழுத்தல். அங்ஙனம் பொறிகள் புலன்களாலே மயக்கப்படுதலால் மாறுபட்டு விடுகின்றது. அதனால் அம் மனம் அன்பாகிக் கசிந்துள்ளுருகும் நலம் அற்றதாகின்றது. விலங்கும் என்பதற்கு எதிரில் நின்று தடுக்கும் எனினுமாம். உனக்கு - உன்னிடத்து. வேற்றுமை மயக்கம். "எம்பிரான் தில்லைச் சூழ்பொழிற்கே" (திருக் கோவை 167) என்புழிப்போல. கசிந்துள்ளுருகுதல் - மனம் கசிந்து உள்ளே யுருகுதல்.

மாயஇருளை (51) அருங்கயிற்றுற் கட்டி (52) புழுவழுக்கு மூடிச் செய்த (53) குடிலை (54) நல்கி (58) என முடிக்க.

நிலந்தன்மேல் வந்தருளியென்றது இறைவன் இந்நிலவுலகத்தே குரு வடிவில் எழுந்தருளிவந்து என்றவாறு.

"செங்கண் நெடுமாலும் சென்றிடந்துங் காண்பரிய
பொங்குமலர்ப் பாதம் பூதலத்தே போந்தருளி" அம்மானை 1.

"பெருந்துறையெம் புண்ணியன் மண்ணிடை வந்து தோன்றி"
வார்த் 7.

என வருவன காண்க. நீள்கழல்கள் காட்டியென்றது எல்லைகாண்டற்கரிய நீண்ட திருவடியைக் காணுமாறு செய்து என்றலைமேற் சூட்டி அருள் செய்து என்றவாறு.

"கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட அண்ணாமலையானை"
அம் 10.

எனவும்,

"இணையார் திருவடி யென்றலைமேல் வைத்தலுமே" பூவல் 1.

எனவும் அடிகள் அருளியமை காண்க.

"சென்னி யின்மிசை மேவிய பாதந்
திருந்து கண்ணிணை சேர்த்திரு கரத்தா
லுன்னல் செய்திடு மிதயமே லணைவித்
துவகை கூர்ந்துமெய் யுணர்ச்சியி னெழுந்தார்" (திருப்பெருந் 58)

எனத் திருவாதவூரடிகள் புராணத்து வருதலும் காண்க.

கடை - இறுதி. மக்களுக்குத் தயைசெய்தலில் தாய் சிறந்தவளாதலின் 'தாயிற் சிறந்த தயாவான' என்றார்.

"தாயி லாகிய இன்னருள் புரிந்த என்தலைவனை" சதகம் 39.

"தாயான ஈசற்கே" கோத் 12.

"தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்" பூவல் 3.

"பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து" பிடித்த 9.

என வருவனவுங் காண்க.

"பெற்றிருந்த தாயவளின் நல்லாய் நீயே" (நாவு 252 : 6)

எனத் தேவாரத்தும் வருதல் காண்க.

தத்துவம் - வடமொழி. அதன் தன்மை என்பது பொருள். அதன் தன்மையென்றது எப்பொருள் எத்தன்மையுடைத்தோ அப்பொருளை அத் தன்மையுடையதாக உண்மையுணர்தல்.

62—9. மாசு அற்ற சோதி மலர்ந்த மலர் சுடரே - களங்கம் இல்லாத ஒளிவிரிந்த மலரின் ஒளிபோன்றவனே, தேசனே - குருமுதல்வனே தேன் ஆர் அமுதே - இனிமை நிறைந்த அமுதம் போன்றவனே, சிவபுரனே - சிவபுரத்தையுடையவனே, பாசம் ஆம் பற்று அறுத்து பாரிக்கும் ஆரியனே - ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களின் பிடிப்பினைக்கெடுத்து மெய்யறிவினை வளர்க்கும் மேலோனே, நேச அருள் புரிந்து - நின்பால் அன்பு செய்தற்கேதுவாகிய திருவருளைச் செய்து, நெஞ்சில் வஞ்சம் கெட - என் மனத்தின்கணுள்ள பொய்ம்மையாகிய குற்றம்கெட, பேராது நின்ற பெருங் கருணை பேர் ஆறே - என் மனத்தின்கண் நீங்காமல் நிலைபெற்ற பெருங்கருணையாகிய பெரிய யாறுகவுள்ளவனே, ஆரா அமுதே - தெவிட்டாத அமுதம் போன்றவனே, அளவு இலா பெம்மானே - எல்லையில்லாத இயல்பினையுடைய பெருமானே, ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே - நின்னை ஆராயாதவர் உள்ளத்தின்கண் வெளிப்

படாது மறையும் ஒளிப்பொருளாயுள்ளவனே, நீராய் உருக்கி என் ஆர் உயிராய் நின்றானே - என் மனத்தை நீர் போல உருகச் செய்து என் அரிய உயிர்க்கு உயிராய் நின்றவனே.

உலகத்து ஒளிகள் போலாது களங்கமின்றி என்றும் ஒருபடித்தாக இருக்கும் ஒளிவிரிந்த மலரொன்று உளதாயின் அம்மலரின் ஒளிபோலும் ஒளியையுடையான் இறைவனாதலின் 'மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே' என்றார். "யாவராயினு மன்பரன்றி யறியொணு மலர்ச்சோதியான்" (அருட் 1) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க.

தேசு - ஒளியாயினும், 'சோதிமலர்ந்த மலர்ச்சுடரே' (62) என இறைவன் ஒளிவடிவு கூறப்பட்டமையின் தேசன் என்பதற்கு ஈண்டு ஞான ஒளியையுடைய குரு என்பது பொருளாயிற்று.

சிவபுரம் - சிவலோகம். மேலேழுலகங்களின் மேலேயுள்ள சத்திய லோகம் பிரமாவுடையதாக, அதற்குமேலே வைகுண்டலோகம் விஷ்ணுவுடையதாக, அதற்குமேலே சிவலோகம் சிவனுடையதாக நூல்கள் கூறும். அச்சிவலோகமே ஈண்டுச் 'சிவபுரம்' எனப்பட்டது.

பாசம் - ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்கள். "பசுக் களைக் கட்டிய பாச மூன் றுண்டு" என்றார் திருமந்திரத்தும் (2367). இறைவன் பாசமாம் பற்றறுத்தமையை,

"பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசமறுத்தெனை யாண்ட" குயில் 9.

"பாசமானவை பற்றறுத் துயர்ந்ததன் பரம்பெருங் கருணையால்
ஆசைதீர்த் தடியாரிடைக் கூட்டிய வற்புத மறியேனே" அற்புத 8

என அடிகள் அருளியவாற்றானுமறிக. பாரிக்கும் - வளர்க்கும். "பக லென்னும் பண்பின்மை பாரிக்கு நோய்" (குறள் 851) என்புழி, பாரிக்கும் என்பதற்கு வளர்க்கும் எனப் பரிமேலழகர் பொருளுரைத்தமையுங் காண்க. மும்மலங்களின் பற்றைக் கெடுத்து உயிர்கட்கு மெய்யறிவினை வளரச் செய்தலாற் 'பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியன்' என்று அருளிச்செய்தார். ஆரியன் - மேலோன்; வடசொல்.

நேசம் - அன்பு. நேசஅருள் - உயிர்கள் தன்பால் நேசம் செய்வதற் கேதுவாகிய திருவருள். "அவனரு ளாலே யவன்றாள் வணங்கி" (சிவ புரா 18) என வருதலுங் காண்க. வஞ்சம் - பொய். "நின்வாய்மைக்கட் பெரியதோர் வஞ்சமாய்க் கிடவாதோ" (கலி 135 : 10-11) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

பெயராது என்பது பேராது எனத் திரிந்தது. "பேராவிடும்பை தரும்" (குறள் 892) என்புழியும் இவ்வாறு வருதல் காண்க. ஆராவமுதே - தெவிட்டாத அமுதுபோன்றவனே.

"ஆராவமுதமுமானார்தாமே (தே. நாவு 250 ; 5)

எனவும்,

"அப்பனை நந்தியை ஆரா வமுதினை" (திருமந் 36)

எனவும் வருவன காண்க.

இறைவன் இயல்புகள் அளவுபடாதனவாதலின் 'அளவிலாப் பெம்மான்' என்றார். பெருமான் என்பது பெம்மான் என நின்றது.

ஓர்தல் - ஆராய்ந்தறிதல். ஓராதார் - தம்மியல்பினையும் நம்மையுடைய தலைவன் இயல்பினையும் ஆராய்ந்து அறியாதவர். ஓராதார் உள்ளம் அறியாமையாற் பற்றப்பட்டு இருண்டு கிடத்தலின், எங்குமுள்ள இறைவன் அவருள்ளத்து இருப்பினும் விறகிற்றீப்போல் மறைந்திருப்பானாகலின், 'ஓராதாருள்ளத் தொளிக்குமொளியானே" என்றார் "ஓராதார் உள்ளத் தில்லார் தாமே, உள்ளூறு மன்பர்தம் மனத்தார் தாமே" (திருநாவு 250 : 8) எனத் தேவாரத்தும் வருதல் காண்க.

ஆருயிராய் நின்றானே என்றது எனது உயிர்க்குயிராய் நின்று இயக்குபவனே என்றவாறு. "உயிர்க்குயிரா யங்கங்கே நின்றான்" "எல்லாவுயிர்கட்கும் உயிரா யுளன்" (ஞான 132 : 4; 377 : 3) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

70—4. இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே - இன்பமும் துன்பமுமாகிய இரண்டும் இல்லாதவனே, அவையிரண்டும் உள்ளவனே; அன்பருக்கு அன்பனே - அன்பு செய்வார்க்கு அவர்கருதும் அன்புருவாய் அருள் செய்பவனே, யாவையும் ஆய் அல்லையும் ஆம் சோதியனே - எல்லாப்பொருள்களுமாகி அவையல்லாத வேறுமாகியும் உள்ள ஒளியையுடையவனே, துன் இருளே - நெருங்கிய இருளையுடையவனே, தோன்றாப் பெருமையனே - புலனாகாத பெருமையையுடையவனே, ஆதியனே - எல்லாவற்றிற்கும் முதலாயிருப்பவனே, அந்தம் நடு ஆகி அல்லானே - முடிவும் நடுவும் ஆகி, ஆதியும் அந்தமும் நடுவும் அல்லாதவனுமாய் இருப்பவனே, ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே - என்னை வலியவந்து இழுத்து அடிமை கொண்டருளிய எமது தந்தையாகிய பெருமானே.

உலகத்து இன்ப துன்பங்கள் மாறிமாறி வந்து அழியுந்தன்மையுடையன. இறைவன் நித்திய நிரதிசய ஆனந்தமுடையனாதலின் 'இன்பமும் துன்பமும் இல்லானே' என்று அருளிச்செய்தார். இனி, தம்மைத் தலைக்கூடிய அடியார்க்கு உலகத்தாலும் உலகத்துப் பொருள்களாலும் உயிர்களாலும் வரும் இன்பதுன்பங்கள் அவ்வடியாரைத் தாக்காமல் முதல்வனே ஏன்று கொள்வானாதலின் 'இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே' என்றார் எனினுமாம். "துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்கு" (திருப்பொற் 20) என அடிகள் அருளியமையுங்காண்க.

"இவன் உலகில் இதம்அகிதஞ் செய்த எல்லாம்
இதம் அகிதம் இவனுக்குச் செய்தார்பால் இசையும்
அவன் இவனாய் நின்றமுறை ஏக னாகி
அரன்பணியின் நின்றிடவும் அகலுங் குற்றங்

> சிவன் இவன் செய்தியெல்லாம் என்செய்தி யென்றுஞ்
> செய்ததெனக் கிவனுக்குச் செய்த தென்றும்
> பவம் அகல உடனாகி நின்றுகொள்வன் பரிவாற்
> பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே" (சூத் 10)

எனச் சிவஞானசித்தியாரில் வருதலும் ஈண்டு அறியற்பாலது.

அன்பருக்கு அன்பனே என்பதற்கு அன்பராயினார்க்குத் தானும் அன்பனாயுள்ளான் எனின் அன்பரும் இறைவனும் ஒத்த இயல்பினராவர். அதனால் அன்பனே என்பதற்கு அன்பர்க்கு அன்புருவாய் அருள் செய்பவனே என உரைக்கப்பட்டது. 'அன்பானினைவாரது உள்ளக் கமலத்தின் கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறல் இறையியல்பு' எனப் பரிமேலழகர் கூறுதலும், (குறள் 3 உரை) "யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே, மாதொரு பாகனார்தாம் வருவர்" எனச் சிவஞானசித்தியாரில் வருதலும் (சூத் 2. செய் 25) காண்க.

இறைவன் வியாபகத்துள் உலகம் முழுவதும் அடங்குதலின் 'யாவையுமாய்' என்றும், அவனது வியாபகம் உலகப்பொருள்களுக்கு அப்பாலுமாய் இருத்தலாலும், தன்னுள் வியாப்பியமான உலகப்பொருள்களால் இறைவன் தாக்குண்ணாது வேறாய் நிற்றலினாலும் 'அல்லையுமாய்' என்றும் அருளிச் செய்தார். இறைவன் ஒளியுடையவனாதலின் 'சோதியனே' என்றார்.

எல்லாவுயிர்களையும் மறைக்கும் ஆணவ வல்லிருளால் தான் மறைக்கப்படாது தான் அதனுள்ளும் மறைந்து நிறைந்திருத்தலின் 'துன்னிருளே' என்றார். துன்னுதல் - நெருங்குதல். "துன்னிருங் காதலர் துறந்தேகு மாறிடை" (கலி : 6) என்புழிப்போல, செறிதலுமாம். இறைவன் சோதியனாயும் துன்னிருளாயும் உள்ளான் என்பது "சோதியுமா யிருளாயினார்க்கு" (திருப்பொற் 20) என்பதனாலுமறியப்படும்.

இறைவன் பெருமை எத்துணைக் காலமிருந்தும் அறியப்புகினும் வரையறைவின்றி விரிதலின் அது புலனாகாது என்பர் 'தோன்றாப் பெருமையனே' என்றார்.

> "ஞானந் தானுரு வாகிய நாயக னியல்பை
> யானும் நீயுமாய் இசைத்துமென் றாலஃ தெளிதோ
> மோனந் தீர்கலா முனிவருந் தேற்றிலர் முழுதுந்
> தானுங் காண்கிலன் இன்னமுந் தன்பெருந் தலைமை" (சூரமைச் 128)

எனக் கந்தபுராணத்து வருதலுங் காண்க.

இறைவன் ஆதியும் அந்தமும் நடுவுமாகியும் அவையின்றியும் உள்ளாதலின் 'ஆதியனே யந்த நடுவாகி யல்லானே' என்றார்.

> "ஆதியே நடுவே யந்தமே" கோயில் 9.

எனவும்,

"முன் ஈறும் ஆதியும் இல்லான்" திருப்பொற் 3.

எனவும் அடிகள் அருளியமையுங் காண்க. இறைவன் ஆதியும் அந்தமும் நடுவும் உடையனும் எனின் அவனது இறைமைக் குணத்திற்கு குற்றமாகாதோவெனின் ஆகாது; என்னை? இறைவன் அன்பராயினோர்க்கருள் செய்யும் பொருட்டு அருளுருக்கொண்டு தோற்றி நின்று மறைதல்பற்றி அவையுடையனாகத் தோன்றினும், உண்மையில் இலனுமாகலின். இது பற்றியே,

"ஆட்பாலவர்க் கருளு வண்ணமுமாதி மாண்பும்
கேட்பான் புகிலளவில்லைகிளக்க வேண்டா" (தே. 312 : 4)

என ஆளுடையபிள்ளையாரும் அருளிச் செய்வாராயினர்.

ஈர்த்தென்னை யாட்கொண்ட என்றது என்னை வலியவந்து இழுத்து அடிமைகொண்ட என்றவாறு.

"நிச்சலும் ஈர்த்தாட் கொள்வோன் வாழ்க" திருவண்ட 99.
"கள்ளேன் ஒழியுங் கண்டுகொண் டாண்டதெக் காரணமே" நீத் 2.

எனவும் அடிகள் பிறுண்டும் கூறுவன காண்க. எந்தை பெருமான் - எமது தந்தையாகிய பெருமான். "எந்தாய் எந்தை பெருமானே" ஈசனே யென்னெம்மானே எந்தைபெருமான்" (சத 24; 51) என வருவன காண்க.

75—85. கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம் கருத்தில் நோக்கு அரிய நோக்கே - கூரிய மெய்யறிவினால் உளங்கொண்டு உணர்வாருடைய கருத்தினாலும் அறிதற்கு அரிய கருத்துப்பொருளே, நுணுக்கு அரிய நுண் உணர்வே - நுணுகி உணர்தற்கும் அரிய நுண்ணிய உணர்வுப் பொருளே, போக்கும் வரவும் புணர்வும் இலா புண்ணியனே - போதலும் வருதலும் பொருந்தியிருத்தலும் இல்லாத தூய்மையுடையோனே, காக்கும் எம் காவலனே - எல்லாவற்றையும் காக்கும் எம் அரசனே, காண்பு அரிய பேர் ஒளியே - எல்லைகாண்டற்கரிய பேரொளி வடிவினனே, ஆற்று இன்ப வெள்ளமே - ஆற்றின் வெள்ளம் போன்ற இன்ப வெள்ளத்தையுடையவனே, அத்தா - அப்பனே, மிக்காய் நின்ற தோற்ற சுடர் ஒளியாய் - எல்லாவற்றினும் மேலாய் நிலைபெற்ற தோற்றத்தினையுடைய விளங்குகின்ற ஒளியாகியும், சொல்லாத நுண் உணர்வாய் - சொல்லுதற்கியலாத நுண்ணிய உணர்வாகியும், மாற்றமாம் ஆம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவு ஆம் தேற்றனே - மாறுபாட்டினையுடைய இந்நிலவுலகத்தின்கண் உயிர்களுக்கு வெவ்வேறு நிலைமையில் வந்து அருள் செய்தலால் அறியப்படும் தெளிபொருளாகியுமுள்ளவனே, தேற்ற தெளிவே - தெளிவினிற் றெளிவே, என் சிந்தனையுள் ஊற்று ஆன உண் ஆர் அமுதே - என் மனத்தினுள்ளே ஊற்றாய்ச் சுரக்கின்ற உண்டற்கினிய அரிய அமுதமே, உடையானே - எப்பொருளையும் எவ்வுயிரையும் உடையவனே.

கூர்த்த - கூரிய; சிறந்த. "கூர்ப்புங் கழிவு முள்ளது சிறக்கும்" என்பது தொல்காப்பியம். கூர்த்த மெய்ஞ்ஞானமுடையார் இறைவனொடு இயைந்து நிற்கப்பெறுதலானும் அவர் செயலெல்லாம் அவன் செயல்வழியே நடைபெறுதலானும் அவர்தம் உயிர்க்குயிராய் விளங்க அறியப்படுவானல்லது சுட்டுணர்விற்குப் புலனாகான் என்பது தெரித்தற்குக் 'கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின், நோக்கரிய நோக்கே' என்று அருளுவாராயினர்.

நுணுக்கு - நுண்மை. நுண்ணுணர்வு - நுண்ணிய உணர்வுப்பொருள். "உணர்வாய் நின்ற திருவனே" "உணர்வவன் காண்" "உணர்வெலாமானானை" (தே. 126 : 5; 285 : 5; 299 : 1) என அப்பரடிகள் அருளியயமையும் காண்க.

இறைவன் சர்வவியாபகனாதலின் 'போக்கும் வரவும் இலன்' எனவும், உலகமும் உயிரும் தன் வியாபகத்துள் அடங்கினும் அவற்றொடு தான் இயைபின்றியிருத்தலிற் 'புணர்வுமிலன்' எனவும் கூறினார்.

"போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுத லாடுத லல்லால்" (திருப்பள்ளி 5)

என வருதல் காண்க. இனி, 'போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியன்' என்பதற்கு இறத்தலும் பிறத்தலும் பொருந்தியிருத்தலும் இல்லாத தூய்மையுடையோனே எனினுமாம். "இறப்பொடு பிறப்பிலானை" எனத் தேவாரத்து (நாவு 74 : 3) வருதலுங் காண்க. புண்ணியன் - சிவபெருமான். "அடியார் வினைபோக்க வல்ல புரிசடைப் புண்ணியன்" (தே. நாவு 180 : 7) என வருதலுங் காண்க. காவலன் - அரசன். 'அயன் திருமாலனானை யனலோன் போற்றுங் காவலனை" (தே. 304 : 1) என அப்பரடிகள் அருளியமை காண்க.

காண்பரிய பேரொளியே என்பதற்கு மிக்க பேரொளியுடைமையாற் கண்களாற் காண்டற்கரிய பேரொளி வடிவினனே எனினுமாம். "காண் பரிதாகி நின்ற சுடர்தனை" "காண்பரிய செழுஞ்சுடரை" (அப் 42 : 5; 247 : 1) எனத் தேவாரத்து வருவனவுங்காண்க.

இறைவன் சுடரொளியாயும் நுண்ணுணர்வாயும் இருப்பினும் நில வுலகத்திலுள்ள மக்களுயிரின் அறிவுநிலைக்கேற்ப வேறுவேறாக வந்து அருளுதலால் அறியப்படுதலின் 'வெவ்வேறே வந்தறிவாந் தேற்றனே' என்றார். என்றது உலகின்கண் பல்வேறு வகைப்பட்ட மக்கள் தத்தம் அறிவுக்கேற்றவாறு பல்வேறு தன்மைகளையுடைய தெய்வங்களை வழி பட்டுப் பின்னர் அறிவு வளருந்தோறும் முன்னைய தெய்வம் வழிபாட்டிற் குரியதன்றென விடுத்து அதனின் மிக்கதனை வழிபாடாற்றிப் பின்னர் அதனிற் சிறந்ததொன்றனை வழிபட்டு இறுதியாக எல்லாவற்றையும் விடுத்து அறிவுருவாய் எஞ்சிநின்ற முழுமுதலிறைவனைத் தெளிந்து வழிபாடாற்றி

வீடு பேறடைவராதலின் 'மாற்றமாம் வையகத்தின் வந்தறிவாந் தேற் றனே' என்றார்.

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும் பிறக்கும்மேல் வினையுஞ் செய்யும்
ஆதலான் இவையி லாதான் அறிந்தருள் செய்வன் அன்றே"
(சூத் 2. செய் 25)

என்னும் சிவஞானசித்தியார் திருவிருத்தம் இங்கே சிந்திக்கத்தக்கது.

தேற்றத்தெளிவு - தெளிந்தார்க்கும் உயிர்க்குயிராய் நின்று நுகரப் படும் தெளிவு. ஊற்றான அமுது - என் மனத்தினுள் ஊற்றாகச் சுரக் கின்ற அமுது. "ஊற்றிருந் துள்ளங் களிப்போன்" (அண்ட 121) என அடிகள் அருளியமையுங்காண்க. ஆர் அமுது - அரிய அமுது. "கின்னாளா னார்க் குண்ணார்ந்த ஆரமுதே" (ஏசறவு 2) என வருதல் காண்க. உடை யானே - என்னை ஆளாக உடையானே எனினுமாம்.

84—88. வேற்று விகார விடக்கு உடம்பின் உள் கிடப்ப ஆற்றேன் - வெவ்வேறு மாறுபாடுகளையுடைய ஊன் உடம்பினுள்ளே கிடக்க அதனு லாகிய துன்பத்தினைப்பொறேன்; எம் ஐயா - எமது தலைவனே, அரனேயோ என்று என்று - பாசங்களை நீக்குவோனேயோ என்று பலகால் ஓலமிட்டு அழைத்து, போற்றி புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார் - வணங் கிப் புகழ்ந்து பாடிக் கொண்டிருந்து பொய்யாகிய நினைவு சொற் செயல்க ளெல்லாம் கெட்டு மெய்யாகிய நினைவு சொற் செயல்களை உடையராயி னார், மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே - திரும்பவும் இந்நில வுலகத்தில் வந்து இருவினைக்கீடானதும் இருவினைக்கு விளைவானதுமாகிய பிறப்பினை அடையாமே, கள்ளம் புலம் குரம்பை கட்டு அழிக்க வல்லானே - வஞ்சகத்தையுடைய புலன்களின் வழிச்செல்லும் ஐம்பொறிகளின் குடிசை யாகிய எடுத்த உடம்பின் பந்தத்தினை அழிக்க வல்லவனே.

வேறு விகாரம் - வேறாகிய விகாரம். இருபெயரொட்டுப் பண்புத் தொகை. வேறாகிய விகாரங்கள்: பாலியம் யவ்வனம் கௌமாரம் வயோதி கம் நரை திரை நோய் மூப்பு சாக்காடு என்பன. விடக்கு - ஊன்.

"புலி தனக்கிடு விடக்கை நின்றதொரு பூனைதின்னுமது போல்"
(பாரதம்)

என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

இறைவன் திருவடியைத் தலைக்கூடும் நிலையை எய்தினார்க்கு இவ்வூ னுடம்பு ஒரு பொறையாயும் சிறையாயுமிருத்தலின் 'ஊனுடம்பி னுட் கிடப்ப ஆற்றேன்' என்றார். "ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்" (அண்ட 123) "தினைத் துணையேனும் பொறேன் துயராக்கையின் திண் வலையே" (நீத் 39) என அடிகள் அருளியமையுங் காண்க.

அரன் - வடமொழி. உயிர்களின் மாசுகளை அழிப்பவன் என்பது இதன் பொருள். புகழ்ந்திருத்தல் - புகழ்ந்து பாடிக்கொண்டிருத்தல். பொய் என்றது உயிரியல்பான நினைவு சொற்செயல்களை - அவை உள்ளீடின்மையின் பொய்யெனப்பட்டன. மெய் - இறையருள் வழி நிற்றலினால் உளவாகும் நினைவு சொற்செயல்கள். அவை உயிரின் ஈடேற்றமாகிய உள்ளீடுடைமையின் மெய்யெனப்பட்டன. இங்கு என்னும் சுட்டு நிலவுலகைக் குறித்தது.

வினைப்பிறவி - வினைப்பயனால் உண்டாகும் பிறவி எனவும், வினையைத் தேடுதற்குரிய பிறவி எனவும் கொள்ளப்படும். "வினையின் வந்தது வினைக்கு விளைவாயது" (மணிமேகலை) எனப் பிறரும் கூறுதல் காண்க. பிறவி துன்பத்திற்கேதுவாதலின் 'பிறவிசாரமே' என்றார்.

"வினைப்பிறவி யென்கின்ற வேதனையி லகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை" கண்ட 2.

என அடிகள் அருளியமையுங் காண்க. சாராமே, மே ஈற்று வினையெச்சம். "வாராமே" (திருப்படையெழுச்சி 2) என்பது போல. கள்ளம் - வஞ்சகம். "உள்ளுவன் மன்யா னுரைப் பதவர்திறமாற், கள்ளம் பிறவோ பசப்பு" (குறள் 1184) என்புழிப்போல. புலம் என்றது ஈண்டு ஐம்புல அவாக்களுக்கிடமான பொறிகளை. அவைகளுக்கு இருப்பிடமாகலின் 'புலக் குரம்பை' என்றார். சிறுமனைபோறலின் உடம்பு குரம்பை எனப்பட்டது.

எடுத்த உடம்பின் தொடர்பு உளதாங்காறும், நீக்கப்பட்ட புலன்களின் அவா பண்டைப் பயிற்சி வயத்தால் ஓரோவழி உளவாகலின் இவ்வுடம்பின் தொடர்பு நீக்கப்படவேண்டியதென்பதும் அதனைச் செய்ய வல்லான் முழுமுதலிறைவன் ஒருவனே என்பதும் உணர்த்துவார் 'கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே' என்றார்.

89—95. நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே - செறிந்த இருளிலே திருக்கூத்தினைப் பலகாலும் ஆடுகின்ற தலைவனே, தில்லையுள் கூத்தனே - தில்லைத் திருச்சிற்றம்பலத்தின் கண்ணே கூத்து இயற்றுவோனே, தென் பாண்டி நாட்டானே - தெற்கேயுள்ள பாண்டி நாட்டையுடையவனே, அல்லல் பிறவி அறுப்பானேயோ என்று - துன்பத்திற்கிடமான பிறப்பினை நீக்குவோனேயோ என்று அழைத்து முறையிட்டு, சொல்லற்கு அரியானை சொல்லி - சொல்லிப் பாராட்டுதற்கு முடியாத அருமைப்பாடுடையவனை இயன்றமட்டும் பாராட்டி, திருஅடி கீழ் சொல்லிய - அவன் திருவடியாகிய திருவருளின் கீழ்பட்டு நின்று பாடிய, பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் - பாடல்களின் பொருள்களை அறிந்து ஓதவல்லவர்கள், சிவபுராணத்தின் உள்ளார் பல்லோரும் பணிந்து ஏத்த - சிவபுரத்திலுள்ள சிவகணத்தவர் பலரும் வணங்கித் துதிக்க, சிவன் அடி கீழ் செல்வர் - சிவன் திருவடிக்கீழ்ச் சென்று இன்புற்றிருப்பர்.

நள்ளிருள் - செறிந்த இருள். நளி என்பது செறிவுப் பொருளுணர்த்துதல் "நளியென் கிளவி செறிவு மாகும்" (தொல். உரி 5) என்பதனானு மறிக. நட்டம் - கூத்து. பயின்றாடுதல் - எல்லையின்றிப் பலகாலுமாடுதல். பயின்று என்பதற்குப் பழகி எனப் பொருள் உளதாயினும் இங்கு இறைவன் எண்ணிறந்த காலமாக ஆடுதலின் அதற்குப் பலகால் என்பதே பொருளாகக் கொள்ளப்படும். எல்லாவுயிர்களும் உணர்வு செயலற்று அறியாமையாகிய வல்லிருளில் மூழ்கிக் கிடக்கும் பேரூழிக்காலத்தும் இறைவன் தான் வாழா இருத்தலின்றி அவற்றின்பொருட்டு ஆடுதலின் 'நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே' என்றார்.

"நள்ளிரு ணட்டம தாடுவார்" ஞான 360 : 7.

"நட்ட மாடுவர் நள்ளிரு ளேமமும்" நாவு 144 : 3.

"நள்ளிருள் நட்டமதாடல் நவின்றோர்" சுந் 11 : 3.

எனத் தேவாரத்தும் வருவன காண்க.

இறைவன் நள்ளிருளில் ஆடும் திருக்கூத்தினைப் புறத்தே குறிப்பது தில்லைத் திருச்சிற்றம்பலக்கூத்தாகலின் 'தில்லையுட் கூத்தனே' என்றார். இறைவன் தமிழின் பொருட்டும் தமிழுணர்ந்த அன்பர் பொருட்டும் பலவகைத் திருவிளையாடல்களும் செய்தற்கு இடமானமைபற்றித் "தென் பாண்டி நாட்டானே" என்றார். "பாண்டி நாடே பழம்பதி யாகவும் (கீர்த்தி 118) என வருதலும் காண்க.

அல்லல் - துன்பம். பிறவி அறுப்பான் - பிறவி நீக்குபவன். "மாயப் பிறப்பறுக்கும் மன்னன்" "பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமான்" (சிவபுரா 14. 48) "பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்" (திருவண்ட 2) என அடிகள் பிறண்டும் அருளியமை காண்க. அறுப்பானேயோ - நீக்குவோனேயோ. 'மணியேயோ' "கோவேயோ" 'அமுதேயோ' (ஆசைப் 1. 2, 5) "பிஞ்ஞகனேயோ" (செத் 7) எனப் பிறவிடங்களிலும் முறையீட்டுப் பொருளில் இங்ஙனம் அருளிச்செய்யுமாறு காண்க.

சொல்லற்கரியானை - சொல்லிப் பாராட்டுதற்கு முடியாத அருமைப் பாடுடையவனை. "சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற சொலற் கரிய சூழலாய்" (அப் 309 : 4) எனத் தேவாரத்தும் வருதல் காண்க.

திருவடிக்கீழ்ச் சொல்லிய பாட்டென்றது இறைவன் திருவடியாகிய திருவருளின் கீழ்ப்பட்டு நின்று பாடிய பாட்டு என்றவாறு. பாட்டென்றது ஈண்டுத் திருவாசகத்தை. பாட்டின் பொருளுணர்ந்து சொல்லவேண்டு மென்பது "சொற்பாவும் பொருடெரிந்து தூய்மை நோக்கித் தூங்காதார் மனத்திருளை வாங்காதானை" (திருநாவு 281 : 2) எனத் தேவாரத்து வருதலானுமறிக.

சொல்லுவார் (93) சிவபுரத்திலுள்ளார் (94) பல்லோரும் பணிந்து ஏத்த (95) சிவனடிக்கீழ்ச் செல்வர் (94) என இயைத்துப் பொருள்கொள்க.

இறைவனைப் படர்க்கைக்கண் வைத்து வாழ்க (1-5) வெல்க (6-10) என வாழ்த்தும், போற்றி (11-6) என வணக்கமும், அதன் பயனாகக் கண்ணுதலான் (21) கழல் இறைஞ்சி (22) வந்தெய்திக் கண்காட்ட (21) அவன் என் சிந்தையுள் நின்ற அதனால் (17) தாள் வணங்கி (18) மகிழ (19) ஓயச் (20) சிவபுராணந்தன்னை (19) உரைப்பனியான் (20) என வரு பொருளுமுரைத்து நுதலிப் புகுந்தவர், மிக்காய் விளங்கொளியாய் (23) எல்லையிலாதானே (24) என இறைவனை முன்னிலைப்படுத்தி நின்பெருஞ் சீர் (24) புகழுமாறொன்றறியேன் (25) என அவையடக்கம் கூறி மேலே திருப்பாடலைத் தொடங்குகின்றார். மேல் ஆகி ஆய் (26-29) எனப் பல காலும் வந்த எச்சங்கள் பிறந்து (31) என்னும் வினையொடு முடிய அது இளைத்தேன் (31) என்னும் முற்றுவினை கொண்டது.

இளைத்தேனாஇய யான் எம்பெருமான் (31) மெய்யா விமலா விடைப் பாகா (34) நுண்ணியனே (35) வெய்யாய் தணியாய் விமலா (36) மெய்ச் சுடரே (38) இன்பப் பெருமானே (39) நல்லறிவே (40) இல்லாய் (41) ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய் (42) போக்குவாய் புகுவிப்பாய் (43) நேரியாய் சேயாய் நணியானே (44) மறையோனே (45) எங்கள் பெருமான் (48) ஐந்துடையாய் (49) மறைந்திருந்தாய் எம்பெருமான் (50) விமலா (56) தத்துவனே (61) மலர்ச்சுடரே (62) தேசனே அமுதே சிவபுரனே (63) ஆரியனே (64) பேராறே (66) அமுதே பெம்மானே (67) ஒளியானே (68) ஆருயிராய் நின்றானே (69) இல்லானே உள்ளானே (70) அன்பனே (71) சோதியனே துன்னிருளே பெருமையனே (72) ஆதியனே அல்லானே (73) எந்தை பெருமானே (74) நோக்கே நுண்ணுணர்வே (76) புண்ணியனே (77) காவலனே பேரொளியே (78) வெள்ளமே அத்தா (79) தேற்றனே தெளிவே (82) அமுதே உடையானே (83) வல்லானே (88) நட்டம் பயின்றாடும் நாதனே (89) தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே (90) பிறவி அறுப்பானே என்று (91) திருவடிக்கீழ்ச் (92) சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் (93) சிவபுரத்தினுள்ளார் (94) பல்லோரும் பணிந்து ஏத்தச் (95) சிவனடிக் கீழ்ச் செல்வர் என வினை முடிபு செய்க.

இது கடவுட் பராய முன்னிலைக்கண் வந்த பாடாண்பாட்டு.

# கீர்த்தித் திருவகவல்

## சிவனது திருவருட் புகழ்ச்சி முறைமை

தில்லையிலருளிச் செய்யப்பட்டது

நிலைமண்டிலவாசிரியப்பா

திருச்சிற்றம்பலம்

தில்லை மூதூ ராடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
எண்ணில் பல்குண மெழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகுந்
துன்னிய கல்வி தோற்றியு மழித்தும்
என்னுடை யிருளை யேறத் துரந்தும்
அடியா ருள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பு
மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியுங்
கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும்
பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடும்
எஞ்சா தீண்டு மின்னருள் விளைத்துங்
கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்
விராவு கொங்கை நற்றடம் படிந்துங்
கேவே டராகிக் கெளிறது படுத்து
மாவேட் டாகிய வாகமம் வாங்கியு
மற்றவை தம்மை மகேந்திரத் திருந்து
உற்றவைம் முகங்க ளாற்பணித் தருளியு
நந்தம் பாடியி னான்மறை யோனாய்
அந்தமி லாரிய னாயமர்ந் தருளியும்
வேறுவே றுருவும் வேறுவே றியற்கையு
நூறுநூ றாயிர மியல்பின தாகி
ஏறுடை யீசனிப் புவனியை யுய்யக்
கூறுடை மங்கையுந் தானும்வந் தருளிக்
குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டே றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையுந்

தர்ப்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விளைவு
மொக்கணி யருளிய முழுத்தழன் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்
அரியொடு பிரமற் களவறி யொண்ணான்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள வழகுறு திருவடி
பாண்டி யன்றனக் குப்பரி மாவிற்று
ஈண்டு கனக மிசையப் பெறாஅது
ஆண்டா னெங்கோ னருள்வழி யிருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்
அந்தண னாகி யாண்டுகொண் டருளி
இந்திர ஞாலங் காட்டிய வியல்பு
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்
ஆங்கது தன்னி லடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்
உத்தர கோச மங்கையு ளிருந்து
வித்தக வேடங் காட்டிய வியல்பும்
பூவண மதனிற் பொலிந்திருந் தருளித்
தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்புந்
திருவார் பெருந்துறைச் செல்வ னாகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்
பூவல மதனிற் பொலிந்தினி தருளிப்
பாவ நாச மாக்கிய பரிசுந்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவக னாகிய நன்மையும்
விருந்தின னாகி வெண்கா டதனிற்
குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்
பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்கு
அட்டமா சித்தி யருளிய வதுவும்
வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கரந்த கள்ளமு
மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவ னாகிய தன்மையும்
ஓரி யூரி னுகந்தினி தருளிப்
பாரிரும் பாலக னாகிய பரிசும்
பாண்டூர் தன்னி லீண்ட விருந்துந்

தேவூர்த் தென்பாற் றிகழ்தரு தீவிற்
கோவார் கோலங் கொண்ட கொள்கையுந்
தேனமர் சோலைத் திருவா ரூரின்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்
இடைமரு ததனி லீண்ட விருந்து
படிமப் பாதம் வைத்தவப் பரிசும்
ஏகம் பத்தி னியல்பா யிருந்து
பாகம் பெண்ணோ டாயின பரிசுந்
திருவாஞ் சியத்திற் சீர்பெற விருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமுஞ்
சேவக னாகித் திண்சிலை யேந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசுங்
கடம்பூர் தன்னி லிடம்பெற விருந்தும்
ஈங்கோய் மலையி லெழிவது காட்டியும்
ஐயா றதனிற் சைவ னாகியுந்
துருத்தி தன்னி லருத்தியோ டிருந்துந்
திருப்பனை யூரில் விருப்ப னாகியுங்
கழுமல மதனிற் காட்சி கொடுத்துங்
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்பய மதனி லறம்பல வருளியுங்
குற்றா லத்துக் குறியா யிருந்தும்
அந்தமில் பெருமை யழலுருக் கரந்து
சுந்தர வேடத் தொருமுத லுருவுகொண்டு
இந்திர ஞாலம் போலவந் தருளி
எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்
தானே யாகிய தயாபர வெம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
அந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுட்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியு
மந்திர மாமலை மகேந்திர வெற்பன்
அந்தமில் பெருமை யருளுடை யண்ணல்
எந்தமை யாண்ட பரிசது பகரின்
ஆற்ற லதுவுடை யழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்
ஊனந் தன்னை யொருங்குட னறுக்கும்
ஆனந் தம்மே யாறா வருளியு
மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்
அழுக்கடை யாம லாண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியும்

மூல மாகிய மும்மல மறுக்குந்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல னாகிக் கழுநீர் மாலை
ஏலுடைத் தாக வெழில்பெற வணிந்தும்
அரியொடு பிரமற் களவறி யாதவன்
பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமு
மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் யடியரைப் பரம்பரத் துய்ப்பவன்
உத்தர கோச மங்கையூ ராகவும்
ஆதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய
தேவ தேவன் றிருப்பெய ராகவும்
இருள்கடிந் தருளிய வின்ப வூர்தி
அருளிய பெருமை யருண்மலை யாகவும்
எப்பெருந் தன்மையு மெவ்வெவர் திறமும்
அப்பரி சதனா லாண்டுகொண் டருளி
நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல வென்னை யீங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற வருள்வேறு மடியவர்
ஒன்ற வொன்ற வுடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதா ரெரியிற் பாயவு
மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியுங்
கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி
நாத நாத வென்றழு தரற்றிப்
பாத மெய்தினர் பாத மெய்தவும்
பதஞ்சலிக் கருளிய பரமநா டகவென்று
இதஞ்சலிப் பெய்தநின் றேங்கின ரேங்கவும்
எழில்பெறு மிமயத் தியல்புடை யம்பொற்
பொலிதரு புலியூர்ப் பொதுவினி னடம்நவில்
கனிதரு செவ்வா யுமையொடு காளிக்கு
அருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
இறைவ னீண்டிய வடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்
ஒலிதரு கைலை யுயர்கிழ வோனே.

திருச்சிற்றம்பலம்

1—8. தில்லை மூதூர் ஆடிய திருவடி - தில்லையென்னும் பழமையாகிய ஊரின்கணுள்ள திருச்சிற்றம்பலத்தில் ஐந்தொழில் நடனஞ் செய்கின்ற அழகிய திருவடிகள், பல் உயிர் எல்லாம் பயின்றனன் ஆகி - பலவகைப்பட்ட உயிர்கள் எல்லாவற்றுள்ளும் பொருந்தப்பெற்றவனாகி, எண் இல் பல் குணம் எழில் பெற விளங்கி - அளவில்லாத பல அருட்பண்புகளும் எழுச்சிபெற விளங்கப்பெற்று, மண்ணும் விண்ணும் வானோர் உலகும் - மண்ணுலகிலும் விண்ணுலகிலும் அதற்கு மேற்பட்ட நான்முகன் முதலிய தேவத்தலைவர்களது உலகங்களிலும், துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும் - செறிந்த கலையறிவினைத் தோற்றுவித்தும் பின்னர் அதனை அழித்தும், என்னுடை இருளை ஏற துரந்தும் - என்னுடைய ஆணவ இருளை முழுவதும் போக்கியும், அடியார் உள்ளத்து அன்பு மீதூர - அடியவர்களது உள்ளத்திலே அன்பு மேம்படுதலால், குடியா கொண்ட கொள்கையும் சிறப்பும் - அவர் உள்ளத்தையே தமது இருக்கையாகக் கொண்ட கோட்பாடும் தலைமையும்.

மூதூர் - பழமையாகிய ஊர். பண்டுதொட்டுத் தில்லை மூதூரின்கண் இறைவன் திருக்கூத்து இயற்றுதலின் 'தில்லைமூதூ ராடிய திருவடி' என்றார். எல்லாவுயிர்களுள்ளும் இறைவன் பொருந்தியிருந்து அவற்றை இயக்குதலின் 'பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி' என்றார். பயிலுதல் - பொருந்துதல். இறைவன் உயிர்களுக்கு அருளும் அருட்பண்பு அளவற்றதாகலின் 'எண்ணில் பல்குணம்' என்றார்.

"ஆட்பாலவர்க் கருளும் வண்ணமு மாதிமாண்பும்
கேட்பான்புகி லளவில்லை கிளக்க வேண்டா" (தே. 312 : 4)

எனத் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியவாறுங் காண்க. இனி, எண்ணில் பல்குணம் என்பதற்கு, அளவைகளுக்கு அடங்காத தன்வயத்தனாதல் தூயவுடம்பினனாதல் இயற்கையுணர்வினனாதல் முற்றுமுணர்தல் இயல்பாகவே பாசங்களினீங்குதல் பேரருளுடைமை முடிவிலாற்றலுடைமை வரம்பிலின்பமுடைமை என்னும் எண்வகைப்பட்ட குணங்கள் எனினுமாம். "எல்லையிலாதன எண்குண மானவை" (திருவாசகம், திருப்படை 7) என வருதலுங் காண்க.

விண்-தேவருலகு. மண்ணுலகமும் விண்ணுலகமும் கூறப்பட்ட பின்னர் வானோருலகு என்று கூறியது நான்முகன் திருமால் உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் ஆகிய கடவுளர்கள் பொருந்தும் உலகங்களைக் குறித்தது.

கல்வி யென்றது கலையறிவினை. கலைகள்: நிவிர்த்திகலை, பிரதிட்டா கலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியதீதகலை என்னும் ஐந்துமாம். இவ்வைந்து கலைகளிலும் பதினொரு மந்திரங்களுள்ளும் எண்பத்தொரு பதங்களுள்ளும் ஐம்பத்தொரு அக்கரங்களுள்ளும் இருநூற்றிருபத்து நான்கு புவனங்களுள்ளும் முப்பத்தாறு தத்துவங்களுள்ளும் எவ்வெவை எவ்வெக் கலைகளுக்கு உரியனவோ அவ்வவற்றை அவ்வக்கலைகளில் உள்ளனவாகச்

சோதித்தறிதல் கலாசோதனை எனப்படும். இதனையே 'துன்னிய கல்வி தோற்றியும்' என அடிகள் அருளிச் செய்தனர். பின்னர் அக்கலைகளில் உயிர்களுக்குப் போகங்களை ஊட்டி அதன்பின் அக்கலைகளைச் சங்கார கிரமத்தில் ஒடுக்கி அருளுவதனை 'அழித்தும்' என அடிகள் அருளிச் செய்தனர். இது கலாசுத்தி எனப்படும். இங்ஙனம் கலைகளைத் தோற்றுவித்தலும் அழித்தலும் உயிர்கள் வீடுபேறு அடைதற்கு ஏதுவாகும்.

என்னுடை இருள் என்றது என்னுடைய அறிவை மயக்குகின்ற ஆணவ வல்லிருளை. இறைவன், அருளுபதேசத்தினால் ஆணவ இருளின் வலியை முழுவதும் கெடுப்பானாதலின் 'இருளை ஏறத் துரந்தும்' என்றார். ஏற - முழுவதும்.

உயிர்கள் எல்லாவற்றுள்ளும் இறைவன் உளனாயினும் தன்பால் அன்பு மீதூர்ந்த அடியாருள்ளத்தில் இடையறாது வெளிப்பட்டு அருளுவானாதலின் 'அடியா ருள்ளத் தன்பு மீதூரக், குடியாக் கொண்ட கொள்கையும்' என்றார். மீதூர்தல் - மேன்மேல் வளருதல். "துன்பமே மீதூரக் கண்டும்" (நாலடி 60) என்புழிப்போல. மீதூரும் அன்பு என்றது சிவப்பேற்றிற்குரிய அயரா அன்பை. "அயரா வன்பி னரன்கழல் செலுமே" என்றார் சிவஞானபோதத்தும். குடி - குடியிருப்பு. கொள்கை - கோட்பாடு. சிறப்பு - தலைமை. "துணையுநர் விழைதக்க சிறப்புப் போல்" (கலி 141 : 1) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

9—10. மன்னு மாமலை மகேந்திரம் அதனில் - நிலைபெற்ற பெரிய மலையாகிய மகேந்திரத்திலிருந்து, சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும் - முன்னொருகால் உமைக்குச் சொன்ன ஆகம நூலை மீட்டும் உலகினர் பொருட்டு வெளிப்படுத்தியருளியும்.

மகேந்திரமலை பொதிகைமலைக்கு தெற்கேயுள்ளது எனச் சிவதருமோத்தரம் கூறும். மகேந்திரமதனிற் றோற்றுவித்தருளியும் என இயையும். சொன்ன ஆகமம் என்றது இறைவன் உமாபிராட்டிக்கு உபதேசஞ்செய்த அறிவு நூலாகிய ஆகமத்தினைக் குறிப்பதாகும். தோற்றுவித்தருளியுமென்றது முன்னொருகால் இறைவன் ஆகம நூற்பொருளை உமையம்மையார் கேட்ப உபதேசஞ் செய்யும்போது அவற்றைக் கருத்தூன்றிக் கேளாமையால் இறைவன் வெகுண்டு எம்மையகன்று வலைஞன் மகளாகப் பிறந்திடுதி என உமையம்மையாரைச் சபித்தனர். அதனை அறிந்த மூத்த பிள்ளையார் இறைவன் கையிலிருந்த ஆகமத்தினை எடுத்துக் கடன்மீது எறிந்தனர். இளையபிள்ளையாரும் அவ்வாகமங்களிற் சிலவற்றைப் பறித்துக் கிழித்தனர். அதனைக் கண்ட இறைவன் இளையபிள்ளையாரை மதுரை மன்னும் உயர்குல வணிகனுக்கு ஒரு மூங்கைப் புதல்வனாகப் பிறத்தியெனவும், பிள்ளையார்கள் இருவரையும் உள்ளேபுக விடுத்த நந்திதேவரை நீ கடலிற் சுறவுமீனாகத்தோன்றி அவ்வாகமநூலைத் தாங்கி உலவுதி எனவும் சாபமிட்டனர். சாபம் எய்திய மூவரும் நடுங்கி இறைவனை வணங்கிச்

சாபவிடுதி வேண்டி நின்றனர். இறைவன் அவர்களுக்குச் சாபம் நீங்கும் ஆற்றினையும் கூறியருளினர். கூறியவாறே இறைவன் வலைஞன் வேடத்திற்றோன்றி, வலைஞர்களுக்கு அலக்கண் செய்த சுறவினைப் பிடித்து மடுத்து வலைஞர் மகளான உமாபிராட்டியை மணஞ்செய்தருளினன். அப்போது சுறவினிடத்து எடுத்த ஆகமநூலை மீட்டும் மகேந்திரமலையில் எழுந்தருளியிருந்து உலகினர்க்குதவுமாறு வெளிப்படுத்தியருளியமையைச் 'சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்' என்பது குறிப்பதாகும்.

*11—12.* கல்லாடத்து கலந்து இனிது அருளி - கல்லாடம் என்னும் திருப்பதியிலே அம்மை வழிபட்ட திருவுருவிற் கலந்து இனிது எழுந்தருளி, நல்லாளோடு நயப்பு உறவு எய்தியும் - அவ்வுமையம்மையாரோடு பேரின்ப நட்புக் கொண்டும்.

கல்லாடம் - ஒரு சிவதலம். நயப்பு - இன்பம். உறவு - நட்பு.

*13—14.* பஞ்சப்பள்ளியில் - பஞ்சப்பள்ளியென்னும் ஊரில், பால் மொழி தன்னொடு - பால்போல் இனிய சொற்களையுடைய உமையம்மையாரோடும் சேர்ந்து, எஞ்சாது ஈண்டும் இன் அருள் விளைத்தும் - குறையாது மிகுகின்ற இனிய அருளை விளைவித்தும்.

பான்மொழி - பால்போலுமினிய மொழி. "இன்பான் மொழிக்கிள்ளாய்" (தசாங் 8) என அடிகள் அருளியவாறுங் காண்க. பான்மொழி என்றது ஈண்டு உவமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாய் உமையம்மையைக் குறித்தது. "பான்மொழியோடுங் கூர்கொள் வலனேந்திக் கொச்சை வயமமர்ந்தாரே" (திருஞான 225 : 9) எனத் தேவாரத்து வருதலும் காண்க. எஞ்சாது - குறையாது. "மன்னுயிர்க் கெஞ்சா தீத்து" (பதிற் 15 : 35-6) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. ஈண்டுதல்-மிகுதல். "ஈண்டு நீர்" (கலி 143 : 44 உரை) என்பதற்கு மிகுகின்ற நீர் என நச்சினார்க்கினியர் பொருளுரைத்தமையுங் காண்க.

*15—16.* கிராத வேடமொடு - வேடவடிவத்தோடு, கிஞ்சுக வாயவள் - முருக்கு மலர்போன்ற சிவந்த வாயினையுடைய உமையம்மையின், விராவு கொங்கை நல் தடம் படிந்தும் - ஒன்றோடொன்று கலந்த தனங்களாகிய நல்ல தடாகத்தில் முழுகியும்.

இறைவனது மகேசுவர வடிவம் இருபத்தைந்தனுள் கிராதமூர்த்தியும் ஒருவராதலின், அவர் உமையம்மையாருடன் எழுந்தருளியிருந்த முறைமையினைக் 'கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள், விராவு கொங்கை நற்றடம் படிந்தும்' என அடிகள் அருளிச் செய்தனர். கிராத மூர்த்தியை விதந்தெடுத்து ஓதியது அவர் மற்றைய மூர்த்திகளில் வேறுபட்டு மறைத்தற்றொழில் புரியும் இயையுபற்றியாகும். இனி, தவங்கிடந்த அருச்சுனனுக்கு இறைவன் வேடவடிவில் வந்து அருள் செய்தமைபற்றிக் கூறிய

தெனினுமமையும். அருச்சுனனுக்கு அருள் செய்யும் பொருட்டு இறைவன் வேடவடிவங் கொண்டமை,

"வேட னாகி விசையற் கருளியே" (ஞான 373 : 5)

"விசயனுக்கு வேடுவனாய் நின்றான் றன்னை" (நாவு 247 : 2)

"வேடனாய் விசயற் கருள்புரிந்த, இந்துசேகரனே" (சுந் 70 : 5)

எனத் தேவாரத்தும்,

"புராத னாகமவேத கீதபு ராண ரூபமொ ழித்துவெங்
கிராத னாகிய வடிவு கொண்டகி ரீசனோடு" (அருச்சுனன் தவ 92)

எனப் பாரதத்தும் வருவனவற்றாலுமறிக.

கிராதன் - வேடன். திவாகரம். கிஞ்சுகம் - முருக்கு. "கவிரே கிஞ்சுகம் முருக்கெனக் கருதுவர்" எனத் திவாகரத்தும் வருதல் காண்க. ஈண்டு அதன் மலரை உணர்த்தியது. கிஞ்சுகவாய் - முருக்கு மலர் போன்ற சிவந்த வாய். "கேட்குமென் மழலைச் சொல்லோர் கிஞ்சுகங் கிடந்த வாயாள்" (கம்ப. உண்டாட்டு 13) எனப் பிறரும் கூறுதல் காண்க. விராவுதல் - கலத்தல். "நரைவிரா வுற்ற செம்முகச் செவிலியர்" (நெடுநல் 152 - 3) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. நெருங்குதலுமாம். தடம் - பெருமை. "தடவுங் கயவு நளியும் பெருமை" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும். ஈண்டுத் தடாகம் என்னும் பொருளில் வந்தது. 'கிஞ்சுக வாயவள் விராவு கொங்கை, நற்றடம் படிந்தும்' என்பதனைக் கிராதவடிவமொடு வேட்டையாடிய இறைவன் தன் வெம்மை நீங்கும் வண்ணம் ஒரு தடாகத்திற் படிந்தனன் எனக் கவிநயந் தோன்றக் கூறியதாகக் கொள்க.

17—20. கேவேடர் ஆகி கெளிறது படுத்தும் - வலைஞர் வடிவங்கொண்டு வலைவீசிக் கெளிற்றுமீனை அகப்படுத்தியும், மா ஏட்டு ஆகிய ஆகமம் வாங்கியும் - பெரிய ஏட்டின்கண் அமைந்த ஆகமநூலை அக்கெளிற்றினின்றும் எடுத்தும், அவை தம்மை - அங்ஙனம் வாங்கிய அவ்வாகமங்கள் இருபத்தெட்டினையும், மகேந்திரத்து இருந்து - மகேந்திர மலையின்கண் வீற்றிருந்து, உற்ற ஐம்முகங்களால் பணித்தருளியும் - பொருந்திய தன் ஐந்து திருமுகங்களால் உபதேசித்தருளியும்.

கேவேடன் - வலைஞன். கேவர்த்த: என்னும் வடசொல் கேவேடர் எனத்திரிந்தது. இறைவன் கேவேடனாய்ச் சென்று படுத்தது சுறவுமீன் என்று திருவிளையாடற்புராணம் கூறுமாயினும், அடிகள் 'கெளிறது படுத்தும்' எனக் கூறுதலின் அடிகள் கூற்றே கொள்ளற்பாலதாம் என்க.

மா ஏட்டு ஆகமம் - பெரிய ஏட்டின்கண் அமைந்த ஆகமம். இனி மா வேட்டு ஆகிய ஆகமம் எனக்கொண்டு பெரிய விருப்பத்தினைத் தருவனவாகிய ஆகமநூல் எனப் பொருளுரைப்பாருமுளர். அவர் கூற்று, இறைவன் உமையம்மைக்கு ஆகமநூற் பொருளை எடுத்து அறிவுறுப்ப

அவ்வம்மையார் மனம்பொருந்தக் கேளாதொழிய அதனால் இறைவன் வலைஞனுக்கு மகளாகெனச் சபித்தனர் எனவும், மூத்தபிள்ளையாரும் இறைவன் கையிலிருந்த ஆகமத்தினைப் பறித்தெடுத்துக் கடலுள் வீசினர் எனவும் கூறும் திருவிளையாடற்புராணத்துக்கு முரணாகும் என்க

ஐம்முகங்கள் : ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்பன. "சத்தியோசாதம் வாமம் அகோரம், தற்புருடம் ஈசானமென ஈசர்க் கைம்முகம்" எனத் திவாகரத்தும் வருதல் காண்க.

21—22. நந்தம் பாடியில் நான்மறையோனாய் - நந்தம்பாடி என்னும் ஊரிலே நான்கு வேதங்களையும் உணர்ந்தோனாய், அந்தம் இல் ஆரியனாய் அமர்ந்தருளியும் - முடிவில்லாத ஆசிரியனாய் வீற்றிருந்து நான்கு வேதங்களையும் சொல்லிய முறைமையும்.

நந்தம்பாடி என்பது ஒரு சிவதலம். நான்மறையோன் - நான்கு வேதங்களையும் உணர்ந்தோன். ஆரியன் - ஆசிரியன்; மேலோன். இறைவன் நான்கு வேதங்களையும் உணர்ந்த ஆசிரியனாய் அமர்ந்திருந்து பக்குவான்மாக்களுக்கு அவற்றை உபதேசித்தருளினமையின் 'நான்மறையோனாய் ஆரியனாய் அமர்ந்தருளியும்' என்றார். இனி, நம் தம் பாடி எனப்பிரித்து நம்முடைய ஊராகிய மதுரையில் எனப் பொருளுரைத்து இறைவன் வேதத்திற்குப் பொருளுணர்த்திய திருவிளையாடலைக் குறிப்பதாகும் எனவும் கொள்ளலாம்

23—28. வேறு வேறு உருவும் - வெவ்வேறு திருவுருவங்களும், வேறு வேறு இயற்கையும் - வெவ்வேறு தன்மைகளும், நூறு நூறு ஆயிரம் இயல்பினது ஆகி - நூறு இலட்சம் இயல்பினையுடையவாக, ஏறு உடை ஈசன் - எருதினை ஊர்தியாகவுடைய சிவபெருமான், இப்புவனியை உய்ய - இந்நிலவுலகிலுள்ள பக்குவான்மாக்களை உய்விக்கும் பொருட்டு, கூறு உடை மங்கையும் தானும் வந்து அருளி - தன்னுடைய திருமேனியில் ஒரு கூற்றையுடைய உமாதேவியும் தானும் ஒருங்கு எழுந்தருளி வந்து, குதிரையை கொண்டு குட நாடு அதன் மிசை - குதிரையை நடாத்திக் கொண்டு திருப்பெருந்துறைக்கு மேற்கேயுள்ள பாண்டி நாட்டில், சதுர்பட சாத்தாய் தான் எழுந்தருளியும் - திறமை பொருந்த வணிகர் திரளோடு தான் எழுந்தருளியும்.

வேறு வேறுருவும் நூறுநூறாயிரம் இயல்பினதாகி எனவும், வேறு வேறு இயற்கையும் நூறுநூறாயிரம் இயல்பினதாகி எனவும் தனித்தனி கூட்டுக. இறைவன் தன்னை வழிபடும் அடியவர்களுக்கு அருள் செய்யும் வண்ணம் அவர்களின் பக்குவ வேறுபாட்டிற்கு ஏற்ப எடுக்கும் திருவுருவங்களுக்கும், அத்திருவுருவங்களுக்குரிய இயல்புகளுக்கும் ஓரளவில்லை என்பார், 'வேறுவே றுருவும் வேறுவே றியற்கையும், நூறுநூ றாயிரமியல்பின தாகி' என்று அருளிச் செய்தார். இறைவன் வேறுவேறுருவும் வேறுவேறியற்கையும் உடையனாவது அன்பர் பொருட்டென்பது,

"உருமேனி தரித்துக் கொண்ட தென்றலு முருவி றந்த
அருமேனி யதுவுங் கண்டோம் அருவுரு வான போது
திருமேனி யுபயம் பெற்றோம் செப்பிய மூன்று நந்தங்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே" (சூத் 1. செய் 55)

எனச் சிவஞானசித்தியாரில் வருதலானும் உணரப்படும்.

நூறுநூறாயிரம் - நூறு இலட்சம் எனப் பொருள்படுமாயினும் அது ஈண்டு அளவின்மைப் பொருளில் வந்தது. "நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன" (திருவண்ட 4) என வருதலுங் காண்க. இயல்பினது என்ற ஒருமை பன்மைப் பொருளில் வந்த வழுவமைதி. இயல்பினதாகி என்பதை இயல்பினதாக எனத் திரிக்க.

புவனியென்பது இடவாகுபெயராய் இவ்வுலகிலுள்ள பக்குவான்மாக்களை உணர்த்திற்று. உய்விக்க என்னும் பிறவினைச் செயவெனெச்சம் விவ்விகுதி தொக்கு 'உய்ய' என நின்றது. "குடிபொன்றிக் குற்றமு மாங்கே தரும்" (குறள் 171) என்புழிப்போல.

கூறுடை மங்கை - தன்திருமேனியில் ஒரு கூற்றையுடைய உமையம்மை. "குரவுவார் குழன்மடவாள் கூறுடையா ளொருபாகம்" எனத் திருச்சதகத்து (17) வருதலுங் காண்க. மங்கையும் தானும் எனத் திருவருட்சத்தியும் தானும் ஒருங்கு வருதலைக் கூறியது, திருவருட்சத்தி பதிந்த சத்திநிபாதர்களுக்கு இறைவன் வெளிப்பட்டருளும் முறைமைபற்றியாகும்.

"கருவா யுலகினுக் கப்புறமா யிப்புறத்தே
மருவார் மலர்க்குழன் மாதினொடும் வந்தருளி
அருவாய் மறைபயி லந்தணனா யாண்டுகொண்ட
திருவான தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ" (கோத் 14)

என அடிகள் அருளியவாறுங் காண்க.

குடநாடு என்று மதுரையைக் கூறியது இறைவன் திருப்பெருந்துறைக்கு நேர் மேற்கேயுள்ள மதுரையை நோக்கிக் குதிரை கொண்டு போந்தமைபற்றியாகும். இறைவன் திருப்பெருந்துறையிலிருந்து குதிரைகொண்டு எழுந்தருளியமை,

"பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளி" அம்மானை 20

"பரிமிசை வந்த வள்ளல், பெருந்துறைமேய தென்னவன்" குயிற் 7

"அடியோங்க ளுய்ய, ஆடல் அமர்ந்த பரிமாவேறி" திருவார்த் 4

"பரியின்மேல் வந்த-வள்ளல், மருவும் பெருந்துறையை" பண்டாய 2

"நாட்டிற் பரிபாகன் நம்வினையை—வீட்டி
அருளும் பெருந்துறையான்" பண்டாய 3

"நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லா நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும் பெருந்துறை
யான்" ஆனந்த 7

என வருவனவற்றாலுமறியப்படும்.

சதுர் - திறமை. இது சதுர என்னும் வடமொழிச் சிதைவு. சாத்து - வணிகர் திரள். இப்பொருட்டாதலே, 'கழுதைச் சாத்தொடு' என்பதற்குக் 'கழுதையிலே மிளகெடுத்துக் கொண்டு போகின்ற திரளோடே' என நச்சினார்க்கினியரும் (பெரும்பாண் 80-1 உரை) 'சாத்தொடு போந்து' என்பதற்கு 'வாணிகச் சாத்தொடு போந்து' என அடியார்க்கு நல்லாரும் (சிலப் 11 : 190 உரை) பொருளுரைத்தமையானும் தெளிக.

29—30. வேலம் புத்தூர் விட்டேறு அருளி - வேலம்புந்தூரிலே உக்கிரகுமாரற்கு வேற்படையினைக் கொடுத்தருளி, கோலம் பொலிவு காட்டிய கொள்கையும் - தனது திருக்கோலச் சிறப்பினைக் காட்டியருளிய கோட்பாடும்.

இறைவன் உக்கிரகுமாரற்கு வேற்படை நல்கிய இடமாதல் பற்றி அவ்வூர் வேலம்புத்தூர் எனப் பெயர்பெறுவதாயிற்று. விட்டேறு - வேற்படை. இதனை, "சத்தி யெஃகம் உடம்பிடி குந்தம், விட்டே றரணம் ஞாங்க ரயில்வேல்" எனத் திவாகரத்து (செயற்கை) வருதலானுமறிக. இறைவன் உக்கிரகுமாரற்கு வேற்படை அருளியமையை.

"அறமலி தனது புதல்வனுக் கிரனுக் கருள்சுரந் தரும்புக ழோங்க
மறுவிலோர் வளையை யிந்திரன் பெரிய மவுலியி லறைகென வளித்துச்
செறிகடல் வலியை யறவெறி யென்று சிறந்ததோர் வேலினை நல்கி
யறிவட கிரியைப் பந்துபோற் சுழல வடியெனச் செண்டையுங்
கொடுத்தான்" (வளைவேல் 2)

என நம்பிதிருவிளையாடற்புராணத்து வருதலானுமறிக.

கோலப்பொலிவு என நிற்கற்பாலது எதுகைநோக்கி மெலிந்தது. பொலிவு - சிறப்பு. இப்பொருட்டாதல், "பொருகளத்துப் பொலிவெய்தின்று" (பு. வெ. மா. 148) என்பதனுரையானுமறிக. தோற்றப் பொலிவு எனினுமாம்.

31—2. சாந்தம் புத்தூர் - சாந்தர்புத்தூர் என்னும் திருப்பதியில், தர்ப்பணம் அதனில் - கண்ணாடியில் வழிபட, வில் பொரு வேடற்கு - வில்லினாற் பொருகின்ற வேடன் ஒருவனுக்கு, ஈந்த விளைவும் - அத்தர்ப்பணத்தினின்றும் வெளிப்பட்டு அவன் வேண்டியதொன்றைக் கொடுத்தருளிய பயனும்.

தர்ப்பணம் - கண்ணாடி. இதனை, "புளக மத்த மாடி படி மக்கல, மொளிவட்டங் கஞ்சனை தருப்பணங் கண்ணாடி" என்னும் பிங்கலந்தையானுமறிக. சாந்தம் புத்தூர் என்னும் இடத்திலே வேடனொருவன் கண்

ணுடியில் இறைவன் திருவுருவமைத்து வழிபாடாற்ற அவ்வழிபாட்டினை இறைவன் ஏற்று அக்கண்ணுடியினின்றும் வெளிப்பட்டு அவன் விரும்பிய வரத்தைக் கொடுத்தருளினன் என ஒரு வரலாறு ஈண்டுக் கூறப்பட்டுள் ளது. இதனை ஒப்ப, ஏகலைவன் என்னும் வேடன் துரோணுச்சாரியரின் வடிவத்தினைத் தான் இருக்கும் இடத்தில் அமைத்து வழிபட்டு அவ்வடி வின் முன்னின்று விற்றொழில் பயின்று அருச்சுனனிலும் சிறந்த வில் வீரனாக விளங்கினன் என்னும் பாரத சரித்திரம் ஈண்டு நினைவு கூரத் தக்கது.

விளைவு - பயன். "விளைவின்கண், வீயா விழுமந் தரும்" (குறள் 282) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. ஈந்த விளைவும் என்பதை விளைவு ஈந்ததும் என மாற்றிக்கூட்டி வழிபாட்டின் பயனை ஈந்தருளியதுவும் என வும் உரைக்கலாம்.

33—4. மொக்கணி அருளிய - கொள்ளுப் பையைக் குதிரைவாயிற் கட்டியருளிய, முழு தழல் மேனி - முழுமையாகிய நெருப்பையொத்த திரு மேனியை, சொக்கதாக காட்டிய தொன்மையும் - அழகியதாகப் பாண்டி யற்குக் காட்டிய பழைய தன்மையும்.

மொக்கணி - குதிரைக்குக் கொள்ளு முதலிய உணவுகளை இட்டு வாயிற் கட்டும் பை. "கழுவிய பயறுங் கொள்ளுங் கடலையுந் துவரையோடு, முழுவதுஞ் சிறக்க விட்டே மொக்கணி முட்டக் கட்டி" (நம்பி திருவிளை. குதிரை நரியான 6) என வருதலும் காண்க. முழுத் தழன்மேனி - முழுமை யாகிய தழலையொத்த மேனி. "முழுத்தழல் மேனி முதல்வன் கண்டாய்" எனத் தேவாரத்து (நாவு 237 : 5) வருதலும் காண்க. குதிரை வாயிற் கொள்ளுப்பை கட்டும்போது முழுத்தழல் போலுந் தன் அருட்டிருமேனி யைப் பாண்டியன் காணுமாறு காட்டியமையின் 'மொக்கணி யருளிய முழுத்தழன் மேனி, சொக்கதாகக் காட்டிய தொன்மையும்' என்றார். சொக்கு - அழகு. "சொக்கனைந்த சுடரொளி வண்ணனை" (தேவாரம்) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

35—41. அரியொடு பிரமற்கு அளவு அறி ஒண்ணுன் - திருமாலுக் கும் பிரமனுக்கும் எல்லை அறியப்படாதவனாகிய சிவபெருமான், நரியை குதிரை ஆக்கிய நன்மையும் - நரிகளைக் குதிரைகளாக்கிய நன்மையும், ஆண்டு கொண்டு அழகு உறு திருவடி அருள - அடிமைகொண்டு அழகு பொருந்திய திருவடியை அருளும் பொருட்டு, பாண்டின் தனக்கு பரிமா விற்று - பாண்டிய மன்னனுக்குக் குதிரையாகிய மாவினை விற்று, ஈண்டு கனகம் இசைய பெருது - அதற்கு விலையான திரண்ட பொன்னைப் பெறு தற்கு உடன்பாடுருமல், ஆண்டான் எங்கோன் அருள்வழி இருப்ப - என்னை அடிமை கொண்டவனாகிய இறைவன் தன் திருவருள்வழி யான் இருத்தற்பொருட்டு, தூண்டு சோதி தோற்றிய தொன்மையும் - அருள் நெறியை விரும்புமாறு தூண்டுகின்ற ஒளிவடிவினை அடியேனுக்குத் தோன்றச் செய்த தன்மையும்.

அரியொடு என்புழி ஒடு எண்ணுப்பொருட்டு. அளவு - எல்லை. "பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டில்" (நெடுநல் 123) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிய ஞான்று இறைவன் எல்லையறியப்படாதவாறு நின்றருளுதலின், 'அரியொடு பிரமற் களவறி யொண்ணான்' என்றார். "வளைக்கை யானொடு மலரவ னறியா வானவா" (செத்திலாப் 10) "திருப்பெருந்துறையுறை சிவனே, எல்லாமு வுலகு முருவியன் றிருவர் காணும்நாள் ஆதியீ றின்மை வல்லை யாய் வளர்ந்தாய்" (வாழாப் 4) என அடிகள் அருளியமை காண்க. அரியும் பிரமனும் தாம் தாமே பெரியரெனத் தம்முள் தருக்குதலான் இறைவன் அளவறியொண்ணுனாயினன். "இருவரால் மாறுகாணு வெம் பிரான்" (அச்சப் 2) என அடிகள் அருளியமையுங் காண்க.

நரியைக் குதிரையாக்கியமை "நரிக ளெல்லாம் பெருங்குதிரை யாக் கியவா றன்றே யுன்பேரருளே" (ஏசற 1) "நரியைக் குதிரைப் பரியாக்கி" (ஆனந்த 7) என வருவனவற்றானுமறியப்படும். இழிவுடைய நரியை உயர்வுடைய குதிரையாக்கியமை இறைவனது ஆற்றலைக் குறிப்பது. அத னால் அது நன்மையாயிற்று. இறைவன் நரிகளைப் பரிகளாக்கிக் கொணர்ந் தது அடிகள் பொருட்டென்பது, "ஞாலமிகப் பரிமேற் கொண்டு நமை யாண்டான்" (பொன்னூசல் 8) என அடிகள் அருளியமையானுமறியப் படும்.

ஆண்டுகொண்டு அழகுறு திருவடி யருள எனக் கூட்டுக. தேவர்களா லும் காண்டற்கரிய இறைவனுடைய திருவடிகளை அவன் குதிரைச் சேவக னாய்க் குதிரைமீதிவர்ந்து வந்தஞான்று பாண்டியனும் கண்டு களித்து அத்திருவடியைப் பெறுதற்கு ஏதுவானமையின் 'ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி' என்றார். பரிமா - குதிரையாகிய மா. "அரிமாவும் பரிமாவுங் களிறுங் கராமும்" (கலி 103 : 18) என்புழி பரிமா என்பதற் குக் 'குதிரையாகிய மா' என நச்சினார்க்கினியர் உரைத்தமையுங் காண்க.

ஈண்டு கனகம் - திரண்ட பொன். ஈண்டுதல் - திரளுதல். இப்பொருட் டாதல் "ஈண்டு பெருந் தானையொடு" (முல்லை 90) என்புழியுங் காண்க. இறைவன் பாண்டியனிடத்துக் குதிரைகொண்டு சென்றது பொன்பெறு தற்பொருட்டாகவன்றி அடிகளை ஆண்டுகொள்ளுதற் பொருட்டாகவென் பார் 'பாண்டியன் றனக்குப் பரிமா விற்று, ஈண்டு கனக மிசையப் பெறாது ஆண்டான்' என்றார். திருவடியருள (37) விற்று (38) பெறாஅது (39) ஆண்டான் (40) என முடிக்க.

இறைவன் குதிரைகளைக் கொண்டு பாண்டியன்பாற்போந்து அவன் தம்மை வருத்திய வருத்தத்தினின்றும் நீக்கிக் காத்தருளியமை, தம்மை அருள்வழி யிருக்கச் செய்தமையின் 'எங்கோன் அருள்வழி யிருப்ப' என்றும், அவ்வருள்வழியை விரும்புமாறு தூண்டுவது அவ்விறைவன் ஒளி வடிவென்பார் 'தூண்டு சோதி' என்றும் அருளிச் செய்தார். தூண்டு

தல் - செலுத்துதல். "எந்தை நீ யிரத மின்னே தூண்டினை மீற (கம்ப. தைல 19) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

42—3. அந்தணன் ஆகி ஆண்டு கொண்டு அருளி - அழகிய தண்ணளியையுடைய பார்ப்பன வடிவினனாகி எழுந்தருளி வந்து என்னை அடிமைகொண்டு அருள்செய்து, இந்திர ஞாலம் காட்டிய இயல்பும் - மாயவித்தை போன்ற திருவிளையாடல்களைக் காட்டிய தன்மையும்.

அந்தணன் என்பது அழகிய தட்பத்தினையுடையான் என ஏதுப் பெயர் இறைவன் அந்தணனாகி ஆண்டுகொண்டருளியமை, "அருவாய் மறைபயில் அந்தணனாய் ஆண்டுகொண்ட, திருவான தேவற்கே" (கோத்தும்பி 14) என்பதனானுமறிக. இந்திரஜாலம் என்பது இந்திரசாலம் என மருவிற்று. இந்திசாலம் என்பது இந்திரன் தனக்குப் பகைவரான அசுரரை அழிக்கும் பொருட்டுச் செய்த தந்திரங்கள். அவை சிறந்தனவாதல் பற்றி அவை போன்ற மாய வித்தைகளும் இந்திரசாலம் எனப்பட்டன. இறைவன் குருந்தமர நீழலில் அடியார்கள் சூழ மக்கள் வடிவிற்றோன்றி தம்மை ஆட்கொண்டு மறைந்தருளிய தன்மை அடிகட்குப் பெரியதொரு மாயமாய்த் தோன்றியமையின் அதனை 'இந்திசாலம்' என்றுரைத்தார்.

44—7. மதுரை பெரு நல் மா நகர் இருந்து - மதுரையாகிய பெரிய சிறந்த நகரத்தில் எழுந்தருளியிருந்து, குதிரை சேவகன் ஆகிய கொள்கையும் - குதிரை வீரனாய் வந்த கோட்பாடும், ஆங்கது தன்னில் அடியவட்கு ஆக - அம்மதுரைமா நகரத்தில் அடியவளான செம்மனச்செல்வி யென்னும் பிட்டு வாணிச்சியின் பொருட்டு, பாங்காய் மண் சுமந்து அருளிய பரிசும் - முன்னர்க் கூலிபெற்ற உரிமையோடு மண்சுமந்து அருளிய பண்பும்.

மதுரை மாநகர், பெருமாநகர், நல்மாநகர் எனத் தனித்தனி இயையும். சேவகன் - வீரன். ஆங்கது என்பது அது என்னும் பொருளில் வந்தது. இனி ஆங்கு அது எனப் பிரித்துக் குதிரைச் சேவகனாகியது போல அம்மதுரை மாநகரில் என்றுரைப்பினுமமையும். அடியவள் என்றது செம்மனச் செல்வியை. பாங்கு - உரிமை. இப்பொருட்டாதல் "பாங்கு பால் கிழமை தாய மாட்சி, ஈங்கிவை யைந்து முரிமையாகும்" என்னுந் திவாகரத்தானுமறிக. முன்னர்ப் பிட்டினைக் கூலியாகப் பெற்றமையின் கூலியாகும் உரிமை பெற்றமையால் 'பாங்காய்' என்றார்.

"கூற்றடுங் கமல பாதர் குறுந்துணிக் கரிய சீரை
யேற்றிடும் பிட்டு வாங்கி யின்புற வமுது செய்து
மாற்றரும் பசியை யன்னே மாற்றினை யினிப்போய் வைகை
யாற்றினின் கூற்றி லுண்டா மருங்கரை யடைப்ப னென்றான்"
(மண்சுமந் 34)

எனத் திருவாதவூரடிகள் புராணத்து வருதல் காண்க.

48—9. உத்தரகோச மங்கையுள் இருந்து - உத்தரகோச மங்கை என்னும் ஊரில் இருந்து, வித்தக வேடம் காட்டிய இயல்பும் - ஞானசாரிய வடிவைக் காட்டிய தன்மையும்.

உத்தரகோசமங்கைக்கண் அடிகள் சென்றபோது குருவடிவினைத் தரிசிக்கப் பெறாமையின் நீத்தல்விண்ணப்பம் என்னும் திருப்பதிகத்தினைப் பாடியருள இறைவன் ஞானசாரிய வடிவத்தினைக் காட்டியமைபற்றி 'உத்தரகோச மங்கையு ளிருந்து வித்தக வேடம் காட்டிய வியல்பும்' என்றார்.

50—1. பூவணம் அதனில் பொலிந்திருந்து அருளி - திருப்பூவணம் என்னும் நகரில் தனக்கு அடியவளாகிய பொன்னனையாள் மனையில் சித்தர் வடிவத்தோடு விளங்கியிருந்து அருள்செய்து, தூ வண மேனி காட்டிய தொன்மையும் - தூய அழகினையுடைய திருமேனியைக் காட்டிய பழமையும்.

முன்னொரு காலத்திலே திருப்பூவணம் என்னும் நகரில் வசித்துவந்த பொன்னனையாள் என்னும் தாசி தன்குலத்தொழிலால் வரும் வருவாயைச் சிவனடியார்களுக்கு அமுதூட்டச் செலவுசெய்து வந்தனள். அங்ஙனம் செய்து வருநாளில் சிவபெருமானுக்கு அழகிய திருவுருவம் அமைத்து வழிபட எண்ணினள். தன் வருவாய் அடியார் பூசனையிற் செலவாகின்றமையின் திருவுருவமைக்கும் எண்ணத்தினை நிறைவேற்றமுடியாது வருந்தி இருக்கையில் அவளது வருத்தத்தினை அறிந்த இறைவன் சித்தர் வேடத்தொடு அவள் இல்லத்திற் புகுந்து உனது மனக்கவலையை யறிந்து யாம் இங்கு வந்தோம்; உன்னிடத்துள்ள இரும்புப் பண்டங்களை இங்கு கொணர்தி யெனப் பணிக்க, அவளும் தன்னிடத்துள்ள இரும்புப் பண்டங்களைக் கொணர்ந்து வைத்தனள். சித்தர் அவற்றில் மருந்தினைப் பூசிப் பரிசித்து இவற்றை அழலிலிட்டு வைக்குதி; நாளை இவைகள் மாற்றுயர்ந்த பொன்னாகும். அதனைக் கொண்டு நீ விரும்பிய திருவுருவத்தை அமைப்பித்து வழிபாடாற்றுதியென அருளிச்செய்து மறைந்தனர். பொன்னனையாள் அவ்வாறே திருவுருவமைத்து வழிபட்டுச் சிவலோகத்தை அடைந்தனள். இவ்வரலாற்றினை நம்பி திருவிளையாடற்புராணத்துப் பொன்னனையாளுக்கு அருள்புரிந்த திருவிளையாடலிற் காண்க.

பூவணம் - திருப்பூவணம். இது இறைவன் பதியாதல் "பொற்பந்தியன்ன சடையவன் பூவணம்" "எரியொடு மிறைதிகழும் பொன்மாப் புரிசைப் பொழிற் றிருப்பூவணம்" எனத் திருக்கோவையாரினும் (305 : 398) "நான்மறையோன் கழலே சென்று பேணி யேத்த நின்ற தேவர்பிரானிடமாம்...திருப்பூவணமே" (திருஞான 64-6) "பண்ணிசையார் மொழியார் பலர்பாடப் புண்ணியனுறை பூவணம்" (சுந் 11 : 2) எனத் தேவாரத்தும் வருவனவற்றாலுமறிக.

பொலிதல் - விளங்குதல். "சேணிற்பொலி செம்பொன் மாளிகைத் தில்லைச்சிற்றம்பலத்து" (திருக்கோவை 23) என்புழியும் இப்பொருட்டா

தல் காண்க. வண்ணம் என்பது வணம் என நின்றது. வண்ணம் - அழகு. "வனப்புஞ் சாந்தமும் குணமும் வண்ணம்" எனப் பிங்கலந்தையில் (10 : 993) வருதல் காண்க.

52—3. வாத ஊரினில் வந்து இனிது அருளி - திருவாதவூரில் தானே எழுந்தருளி வந்து இனிதாக அருள்செய்து; பாத சிலம்பு ஒலி காட்டிய பண்பும் - திருவடியிற் றரித்த சிலம்பின் ஓசையை அடியேனுக்குக் கேட்பித்த தன்மையும்.

திருவாதவூரடிகள் குறிப்பிட்ட நாளிலே குதிரை வரும் என்று எதிர் நோக்கியிருந்த பாண்டியன் 'விளம்பிய காலஞ் சென்ற தின்னமும் வந்த தில்லை யினப்பரி' என்று சீறி அடிகளை வெகுண்டுரைக்க, அவர் அதற்கு ஆற்றாது இறைவனைக் குறையிரந்து வேண்ட, இறைவனும் நரிகளெல்லா வற்றையும் பரிகளாக்கித் தானும் ஒரு புரவி மீது ஏறிவருநின்றவன், திருவாதவூரின் கண் தம்வரவினை எதிர்நோக்கியிருந்த அடிகளுக்கு அவ்வூரின்கண் தன் திருவடிச் சிலம்போசையைக் காட்டியமையின் 'வாதவூரதனில் வந்தினி தருளிப், பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்' என்றார்.

54—5. திரு ஆர் பெருந்துறை செல்வன் ஆகி - அழகு நிறைந்த திருப்பெருந்துறையில் அருட்செல்வனாகத் தோன்றி என்னை ஆட்கொண்டபின், கரு ஆர் சோதியில் கலந்த கள்ளமும் - எப்பொருட்கும் மூலமாய் அமைந்த ஒளியில் மறைந்த தன்மையும்.

திரு - அழகு; செல்வமுமாம். "செல்வத் திருப்பெருந்துறையில்" (அருட் 1) என வருதலும் காண்க. இறைவன் ஞானாசிரியனாகத் திருப்பெருந்துறையில் தோன்றியமையின் செல்வனாகி என்பதற்கு ஞானாசிரியனாகத் தோன்றி எனினுமமையும். இறைவனைச் செல்வன் என்றல், "சிந்தையாலு மறிவருஞ் செல்வனே" (சத 47) "சீருடைச் செங்கமலத்தில் திகழுரு வாகிய செல்வன்" (குயில் 9) என வருவனவற்றிலும் காண்க. கருவார் சோதி - விந்துதத்துவத்தின் ஒளி. அதுவே எல்லாத் தத்துவங்களுக்கும் தாத்துவிகங்களுக்கும் மூலமாதல் பற்றிக் 'கருவார் சோதி' என்றார். இப்பகுதியால் எல்லாம் வல்ல இறைவன் திருப்பெருந்துறையில் ஞானாசிரியனாக எழுந்தருளியிருந்து வாதவூரடிகளை ஆண்டு கொண்டருளி மெய்ப்பொருளை உபதேசித்துப் பின்னர் ஒளிவடிவில் மறைந்தமையைக் கூறினார்.

"அங்க ணிவ்வா றறைந்திடு காலையப்
பொங்கு ஞானப் புதல்வர்க ளும்மொடு
மங்கை நாயகன் மாணிக்க வாசக
விங்கு நில்லென் றியம்பி மறைந்தனன்" (ஞானோபதேச 54)

என நம்பி திருவிளையாடற்புராணத்து வருதலுங் காண்க.

56—7. பூவலம் அதனில் பொலிந்து இனிது அருளி - திருப்பூவலம் என்னும் திருப்பதியில் விளங்கி இனிதாக அருள்செய்து, பாவம் நாசம் ஆக்கிய பரிசும் - அடியவர்களின் தீவினையை அழித்த தன்மையும்.

58 – 9. சயம் பெற - தன் அடியவனான பாண்டியன் வெற்றியடையும் பொருட்டு, தண் நீர் பந்தர் வைத்து - அவன் படைகளின் விடாய் தீர்த் தற்பொருட்டுக் குளிர்ந்த நீரினை உதவும் பந்தல் ஒன்று இட்டு, நல் நீர் சேவகன் ஆகிய நன்மையும் – நல்ல நீரினை வழங்கும் வேலையாளாக உருவம் புனைந்த நன்றியும்.

முன்னொரு காலத்திலே சிவபெருமானிடத்துப் பேரன்புடைய பாண்டியனொருவன் மதுரைமாநகரிற் செங்கோலோச்சிவரு நாளில், அக்காலத்திலிருந்த சோழமன்னன் ஒருவன் தான் பயந்த கன்னிகையைக் கொடுத்துப் பாண்டியனோடு உறவுகொள்வேம் என்றெண்ணித் தக்கார் பலரை அவன்பால் விடுப்ப அவரும் அதற்கு இயைந்தான். இதனை அறிந்த அப்பாண்டியன் தம்பி சோழன்மகளைத் தான் கொள்ளக் கருதிப் படையொடு செல்ல, அதனைக் கண்ட அச்சோழன் அவனுடன் எதிர்நிற்கமாட்டானாகி அச்சங்கூர்ந்து தன் மகளை அவனுக்குக் கொடுத்தான். அதன் பின்னர் அச்சோழன் தனக்குப் பெரும்பகைவனாகிய வடநாட்டரசன்மேல் மருமகனாகிய பாண்டியனோடு சென்று அவனைவென்று மீண்டான். வெற்றியினால் இறுமாப்படைந்த சோழன் மருகன், தருமநெறிகோடாத தன் தமையனை அமரிடைவென்று மதுரையைக் கொள்ள எண்ணிச் சோழனொடுங் கூடிப் பெரும் படையினொடும் மதுரையை அணுகக்கண்ட பாண்டியன் யாம் எதிர்நிற்க மாட்டேம்; என்செய்கேம் என்று சொக்கநாதருக்கு விண்ணப்பஞ் செய்தான். அப்போது, 'நீ அஞ்சாது படையொடு எதிர் சென்று போர்செய்குதி; வெற்றி தருகுவம்' என்று ஓரசரீரிவாக்குத் தோன்றியது. பாண்டியனும் மகிழ்ந்து தன்தானையொடு எதிர் சென்று சொக்கனை உள்ளத்து நினைத்து அவ்விருவரொடும் போர்புரிந்தான் இருதிறத்தினரும் பொருகின்ற காலை இறைவன் திருவருளால் வெப்பம் பொருந்திய கோடை முற்றுதலால் பகைவர்படை வாயுலர்ந்து உதகமின்றி இளைத்துப் போர்க் களத்தில் வீழ்ந்தது. இறைவன் பாண்டியனுக்குச் சயமுண்டாகச் சேவகனுருப் புனைந்து அவன் படைநடுவுள் தண்ணீர்ப் பந்தர் வைத்தான். பாண்டியனும் அவன் படைஞரும் அப்பந்தரிற் சென்று குளிர்ந்த நறிய நீரைப் பருகி அயர்வு நீங்கிக் கிளர்ந்து அமர்செய்து பகைவர் படையைத் தொலைத்துச் சொக்கன் கருணையைத் தொழுது வாழ்த்திப் பகைவனாய் வந்த தம்பியையும் அவன் மாமனாகிய சோழனையும் சிறைப் பிடித்து மீள்கையில் தண்ணீர் பரிந்தளித்த சேவகனொடு அப்பந்தரையும் காணாராயினர். வெற்றிபெற்ற பாண்டியன் அதிசயித்து இறைவன் திருவருளை நினைந்து துதித்தான் என்று இவ்வரலாற்றை நம்பி திருவிளையாடற் புராணம் கூறும்.

பந்தல் - பந்தர் என்றாயது. "கருந்துடி தூங்கும் தூணக்காற் பந்தர்" (பெரும்பாண் 124) என்புழிப்போல. நன்னீர் - பரிமளஞ்சேர்ந்த குளிர்ந்த நல்ல நீர். "பரிமளஞ்சேர், சீதள வமுதை நல்கத் தெளிந்தது குடித்த சேனை" (நம்பி திருவிளை. தண்ணீர்ப் 16) என வருதலுங் காண்க. நன்மை

யும் என்றூர் தருமநேர் விளங்க வைத்தமையின். "பொருவருஞ் சயமுண் டாகத் திருவுநக் கரந்து மற்றோர் சேவக னுருப்புனைந்து, தருமநேர் விளங்க வைத்தான் றண்ணீர்ப்பந்தர்" (நம்பி திருவிளை. தண்ணீர்ப் 15) என வருதலுங் காண்க.

*60—1.* வெண்காடு அதனில் விருந்தினன் ஆகி - திருவெண்காட்டிலே புதிது வந்தோனுகி, குருந்தின் கீழ் அன்று இருந்த கொள்கையும் - குருந்த மர நீழலின்கண் அந்நாளில் வீற்றிருந்த கோட்பாடும்.

விருந்தினனுகி என்றதனுல் பழையோனுகிய இறைவன் புதியோனுக கத் திருவுருக்கொண்டு போந்தமையும், 'வெண்காடதனில் குருந்தின் கீழன்றிருந்த கொள்கையும்' என்றதனுல், திருவெண்காட்டிலே குருந்தமர நீழற்கண் அந்நாளில் அங்ஙனம் புதியோனுக வீற்றிருந்து அன்பர்களுக் குப் போதித்தருளி மறைந்தமையும் பெறப்படும்.

*62–3.* பட்ட மங்கையில் பாங்காய் இருந்து - பட்ட மங்கை என்னும் திருப்பதியிலே உரிமையுடன் வீற்றிருந்து, அங்கு அட்ட மாசித்தி அருளிய அதுவும் - அவ்விடத்தில் எட்டுப்பெரிய சித்திகளின் இயல்பினை அறிவுறுத்தி யருளிய அத்தன்மையும்.

முன்னொரு காலத்திலே இறைவன் திருக்கையிலிருந்து, சிவகணங்கள் துதிசெய்து விதியிற் கேட்பச் சிவதருமங்களை உபதேசித்தருள்வாராயினர். அப்பொழுது அறுமுகக்கடவுளுக்கு அன்பொடு பால் நல்கிய இயக்கமாதர் அறுவரும் இறைவனைத் தொழுதுபோற்றி அடியோங்களுக்கு அட்டமா சித்திகளை உரைத்தல் வேண்டுமென இறைவனும் அணிமாமுதலிய எட்டுச் சித்திகளையும் பொருளொடு செப்புங்காலை, அம்மாதரார் இடையே பரா முகஞ்செய்தனராக அப்பொழுது இறைவன் வெகுண்டு நீவிர் தென்னவன் நாட்டிலே பட்டமங்கலம் என்னும் பதியிலே ஆலமர நீழலிற் கல்லுருவ மாகிக் கிடக்கக் கடவீர் எனச் சபித்தனர். அதுகேட்டு அம்மாதரார் வணங்கி, மங்கை பங்கனே சிறியோங்கள் பிழைபொறுத்தருளிச் சாபமும் ஒழித்தி என்று குறையிரப்ப, இறைவனும் உவகை கூர்ந்து நீவிர் யாம் புகன்ற நாட்டைச் சேருமின்; அவ்விடத்து யாம் வெளிப்பட்டு உங்கள் சாபமும் நீக்கி நுமக்கு அவ்வட்டமாசித்தியு நிகழ்த்துவேம் என்று அருள் புரிய, இயக்கிமார் அறுவரும் பட்டமங்கையிற்போந்து ஆலின்கீழ் நெடுங் காலம் கல்லாய் நின்றனர். இறைவனும் குருவடிவாகி அக்கற்களையணுக அம்மங்கையர் சிலைவடிவொழிந்து முன்னைவடிவொடும் வந்து வணங்கி அச் சித்திகளை விளம்பென்று ஏத்தினர். இறைவனும் அப்படிச் செய்குவம் என்று எட்டுச்சித்திகளையும் பொருளொடும் விரித்துரைத்தனன் என்று நம்பி திருவிளையாடற்புராணம் கூறும்.

பட்டமங்கை, பட்ட மங்கலம் எனவும் வழங்கும். சிவகங்கையைச் சார்ந்தது. பாங்கு - உரிமை. இயக்கமாதர்க்கு இறைவன் மொழிந்தபடி

வந்து அவர்க்கு அருள்புரிந்தமையின் 'பாங்கா யிருந்து' என்றார். * அட்டமா சித்தி அணிமா மகிமா கரிமா இலகிமா பிராத்தி பிராகாமியம் ஈசத்துவம் வசித்துவம் என்பன.

"அணிமா மகிமா கிரிமா லகிமா
நணுகீ சத்துவம் வசித்துவ நன்குள
வினைசேர் பிராத்திப் பிராகா மியமென்
குணமார் சித்திக ளெங்கக் கூறினன்" நம்பி திருவிளை. அட்டமா 15

என வருதல் காண்க.

64—5. வேடுவன் ஆகி வேண்டுஉரு கொண்டு - பாண்டியனுக்காகச் சோழனோடு போர்புரிதற்பொருட்டு வேட்டுவப் பரியாளனாகி அச்சமயத்திற்கு வேண்டிய திருவுருவத்தினை எடுத்து, காடது தன்னில் கரந்த கள்ளமும் - காடுமூடிக்கிடந்த மடுவினிடத்துக் குதிரையோடு குதித்து மறைந்த தந்திரமும்.

முன்னொருகாலத்தில் சோழமன்னன் ஒருவன் தன் வலிமையினை வியந்து செருக்குடையனாய்த் தென்திசையொழிந்த மூன்று திசைகளிலுமுள்ள அரசர்களை வென்று பின் தென்றிசை நோக்கி வருவானாயினான். அக்காலத்தில் மதுரையிலிருந்து அரசுசெய்த பாண்டியமன்னன், அவன் தன்னை எதிர்க்க வருதலை அறிந்து உற்றகாலத்துத் தெய்வமல்லாமல் வேறு உதவியில்லை எனத்தேறித் திருக்கோயிலிற் சென்று சொக்கனை வணங்கி 'சோழன் திக்கெலாம் வென்று நம்மேல் வந்தான்' என்று விண்ணப்பஞ் செய்தான். அப்போது சொக்கன் திருவருளால் 'நீ நின் படையொடு சென்று இளைத்திடாது அமர்செய்; வென்றி தருகுவம்' என்று அசரீரி வாக்குத் தோன்றிற்று. பாண்டியன் அது கேட்டுத் தன்படையொடு சென்று அவனோடு போர்செய்தான். அப்போது இறைவன் திருவருளால் பாண்டியனின் சிறுபடை அளவில்லாத வெம்படையாய் விளங்கச் சோழனின் தானை எதிர்நின்று பொரவாற்றாது முதுகிட்டது. அது கண்ட சோழன் வெகுண்டு மூலபலத்தோடு எதிர்க்கக் கண்டு பாண்டியன், என்னை யாளுடையாய் தேவரீர் மொழிந்தது கொண்டு எதிர்க்கின்றேன் என்று கூறி முன்செல்ல இறைவனும் வேட்டுவப் பரியாளாகிப் போர்க்களத்துத் தோன்றிப் பாண்டியன்முற்போந்து சோழன் ஏறிவந்த குதிரை முகத்தில் வேலினை எறிய அது கண்ட சோழன் நீ புகுமிடம் புகுந்து குதிரையோடு உன்னைப் பிடிப்பன் என்றுகூறித் தொடரச் சொக்கனும் அவனுக்குத் தளர்ந்தவன் போல் நடித்து களத்தினைவிட்டு ஓடுவான் போல் குதிரையொடும் மதுரை நோக்கிப் போகத் தொடங்கினான். சோழனும் தன் படைவெள்ளத்தொடு பின்றொடர்ந்தான். சொக்கனும் மதுரைமாநகரின் மேல்பாலுள்ள ஆழம்மிக்க தடத்துட் பாய்ந்து மறையப் பின்றொடர்ந்து

* இவற்றின் விரிவைப் பரஞ்சோதி திருவிளையாடற்புராணம் அட்டமா சித்தியுபதேசித்த படலம் 23-7 செய்யுள்களிற் காண்க.

வந்த சோழனும் வந்த வேகத்தினுல் குதிரையோடு அத்தடத்துட் பாய்ந்து மாண்டான் என நம்பி திருவிளையாடற்புராணம் கூறும். இவ்வரலாறு,

"மண்டிரு வேட்டுப் பஞ்சவற் பொருத
கிள்ளியுங் கிளையுங் கிளர்படை நான்குந்
திண்மையுஞ் செருக்குந் தேற்றமும் பொன்றிட
வெரிவா யுரக ரிருணாட் டொருவக்
கொலைக்கொண் டாழி குழியுடன் படைத்து
மறியப் புதைத்த மறங்கெழு பெருமான்" (83 : 11-6)

எனக் கல்லாடத்து வருதலுங் காண்க.

வேடுவனுகி - வேட்டுவப் பரியாளனுகி. "விரைவின் வெங்களத்துத் தோன்றி வேட்டுவப் பரியா ளாகி" (நம்பி திருவிளை. சோழனை 20) என வருதலுங் காண்க. இறைவன் வேட்டுவப் பரியாளாகியது அச்சமயத்திற்கு வேண்டிய திருவுருவாதலின் 'வேண்டுருக் கொண்டு' என்றுர். சோழனைத் தடத்தில் வீழ்த்திய இடம் அடிகள் காலத்துக் காடாய்க் கிடந்தமை பற்றிக் 'காடது தன்னில்' என்றுர். போர்க்களத்திலே புறங்கொடுத்தான் என்று சோழன் எண்ணும்படி களத்தினைவிட்டு மதுரை நோக்கிச் சென்று அச்சோழன் படையொடும் பின்ருெடர்ந்து தடத்துள் பாய்ந்து மாளுமாறு இறைவன் தன் படையொடு அதனுட் பாய்ந்து மறைந்தமையின் 'கரந்த கள்ளமும்' என்றுர்.

66—7. மெய்க் காட்டிட்டு - படைத்திரளின் உண்மையைக் காட்டியருளி, வேண்டு உருக்கொண்டு - தான் விரும்பியதோர் உருவினை மேற்கொண்டு, தக்கான் ஒருவன் ஆகிய தன்மையும் - தகுதியுடையோன் ஒருவனுகத் தோன்றிய தன்மையும்.

முற்காலத்து அரசுபுரிந்த பாண்டியமன்னன் ஒருவனுக்குச் சுந்தர சாமந்தன் என்னும் படைத்தலைவன் ஒருவன் இருந்தான். அவன் சிவபெருமானிடத்தும் அவன் அடியாரிடத்தும் பேரன்புடையனுய் ஒழுகிவரு நாளில் சேதிபர்கோன் என்னும் கிராதர் கோமான் பெரும்படையொடு தன்னுடன் பொருதற்கு வர எண்ணியிருப்பதை ஒற்றர் மூலம் அறிந்த பாண்டியன் தன் படைத்தலைவனை அழைத்து அதனை அறிவித்து நீ பொன்னறையைத் திறந்து வேண்டும் திரவியங்களை எடுத்துப் படைதிரட்டு என்றுன். படைத்தலைவனும் பொருள்பலவும் எடுத்துக் கொண்டு திருக்கோயிலை அடைந்து அங்கயற்கண்ணி பங்கனை அங்கையாற்ருெழுது இப்பொருள் உன்னடியவர்க்கே பயன்படல் வேண்டும் என்று இறைஞ்சி அப்பொருள் கொண்டு சிவனடியார்க்கு நாடொறும் அமுது செய்வித்து மன்னவன் பொருள் முழுவதையும் ஆறு திங்களில் அழித்தான். அரசனும் ஆறு திங்கள் சென்றதும் தன்படைத்தலைவனை அழைத்துப் படைகள் எவ்வளவு தொகுத்தனை என்னுவினவ, அவனும் 'அடியவர்க் கெளிய சுந்தரனுண்டு; அவன் அடியேன் கருத்தினை முடிப்பான். வேண்டியபொழுது படையுமுண்டு' என்று உரைப்ப மன்னவனும் அதிசயித்துச் சேனைத்தலைவ னானைக்

காலையில் நின் படையினை மெய்க்காட்டிடுக; உருப்படக்காண்பேம் என்று கூறி விடுத்தான். சாமந்தனும் திருக்கோயிலை யடைந்து சொக்கனை வணங்கி பாண்டியன் பொருளெல்லாம் உன் அடியார்க்கு இறைத்தேன். அவன் நாளைப்படையினை மெய்க்காட்டிடுக எனப் போந்தேன். படை காட்டுமாறு எவ்வாறு? அதனை அருள்செய்க எனவேண்டுதலும் அப்பொழுது நீ வருந்தாத மனத்தொடும் செல்; குறைவற வேண்டும்படையொடு கொற்றவன் காண யாம் வருவேம் என ஒரு அசரீரிவாக்குத் தோன்றிற்று. அவனும் மனந் தேறி மறுநாட்காலையில் மன்னவன் வாயிலை அடையும்போது இறையருளால் எம்மருங்கும் பல்லியங் கறங்கப் பெரும்படைச் சாத்துவர, அதனைக் கண்டு வேந்தன் பெரும் பயத்தினோடும் ஈதென்கொல் என்று படைத் தலைவனை வினவினன், அவனும் அடிவணங்கி இது நம்படை; அஞ்சற்க என் அப்படையினை நிறுத்தி அவற்றின் மெய்ம்மையைக் காட்டியிட்டான். அப் போது அரசன், பரிமேற்கொண்டு உலாவுகின்ற படைத்தலைவன் யார் கொல் என வினவி அவனைத் தன்படைத்தலைவனால் அருகழைத்துத் துகில் அளித்து அவன் பரியுகைக்குமாறெல்லாம் கண்டு அதிசயித்து நிற்கையில், அரசன்முன் ஒற்றன் ஒருவன் போந்து, படையான் மிக்க சேதிபர் கோமானைக் காட்டின்கண் ஒரு சிங்கம் கொன்றுவிட்டது என்றனன். அது கேட்ட வேந்தன் திருவருளை வாழ்த்தித் தன்படைத்தலைவனை நோக்கிக் கொடும் பகை போனது; இப்படைஞரை வருத்தவேண்டியதல்லை; தத்தம் இடத் துப் போகச் சாற்றுதி என்ன, அப்பெரும்படையும் படைத்தலைவனும் இறைப்பொழுதில் மறைந்திட பாண்டியனும் சாமந்தனும் இறைவன் திரு வருளை வியந்து வாழ்த்தினர் என நம்பி திருவிளையாடற்புராணம் கூறும்.

மெய்க்காட்டிட்டு - உண்மையைக் காட்டி. "எண்ணுப் பெரும்படை மெய்க்காட்டிட்டு" (நம்பிதிருவிளை. பயங்கரமாலை 39) என வருதலும் காண்க. தக்கான் என்றது வந்த படைகளின் நடுவே அழகு பொங்கப் பரிமேற்கொண்டு படைத்தலைவனாக நின்ற இறைவனை உணர்த்தியது.

68—9. ஓரி ஊரின் உகந்து இனிது அருளி - ஓரி என்னும் ஊரின் கண் அடியவள் ஒருத்தியை ஆட்கொள்ள விரும்பி அவளுக்கு மகிழ்ச்சி மிகும்படி இனிதாக அருள்செய்து, பார் இரும் பாலகன் ஆன பரிசும் - இந்நிலவுலகத்திற் பிறவாயாக்கைப் பெருமையையுடைய பாலகன் ஆகிய தன்மையும்.

முன்னொரு காலத்திலே பாண்டி நாட்டிலுள்ள சிறந்த கிராமம் ஒன் றில் மறையோன் ஒருவன் இருந்தான். அவன் தான் அரிதிற்பெற்ற கன்னிகையைப் பிரமசாரியாய் வரும் மறையோன் ஒருவனுக்குக் கொடுப் பம் என நிச்சயித்திருக்கையிற் பிச்சைபெற வந்த வைணவப் பிரமசாரி ஒருவனுக்குத் தன் கன்னிகையை மணஞ்செய்து கொடுத்து அவனொடு அவனூருக்குப் போக விடுத்தான். அவன் அவளொடு தன் ஊருக்குச் சென்று தன் வீட்டிற் புகும்பொழுது அவனுடைய தாய் சைவப் பார்ப்பன மகளை அவன் மணஞ்செய்து வந்தமையை அறிந்து கடுந்துயருழந்து அவ

ளைத் தன் வீட்டின் ஒதுக்கிடத்தே வைத்துக் கொடுமையாய் நடத்தி வந்தாள். அவளை மணந்தோனும் அவள்பால் மனம் வையாமல் இருப்ப, ஈசனிடத்தே மனம் வைத்த அப்பெண் அவ்வில்லின்கண் அளவிறந்த வைணவர்கள் புசித்தல் கண்டு, இங்கு ஒரு தவமுனிவர் நணுகாரோ என்று எண்ணியிருந்தாள். முன்செய்த நல்வினையால் அவள் மாமன் மாமி முதலானோர் பிறிதோர் இல்லத்திற்குப் போக மதுரைச் சொக்கநாதர் விருத்தர் உருக்கொண்டு அப்பெண் தனியே இருந்த அவ்வீட்டிற்சென்று நமக்கு அமுதுபடை என்றுகூற, அவளும் அவரை வணங்கித் தன் மாமி கதவடைத்துப் போயினள்; அமுதுபடி புறத்தேயில்லை என உரைத்தாள். அவரும் நீ செல்லுங்கால் கதவம் திறக்கும் எனக் கூற அவளும் அவ்வாறே சென்றபோது கதவந்திறப்ப உட்புகுந்து உணவுக்கு வேண்டும் பொருள்களை எடுத்து அடிசில் அமைத்துப் படைக்க அம்முதியோரும் வயிறார உண்டு அழகு மிக்க பதினாருட்டைப் பராயத்தராய் விளங்கினர். அதுகண்டு அவள் அதிசயித்து நிற்பப் பிறிதோரில்லத்திற்குச் சென்றிருந்த மாமி அம்மனைவாயிலில் வந்து இங்கு வந்தவர் யாவரோவென்று வினவ அவள் ஒருமாற்றமும் கூருது நின்ருள். அப்பொழுது இறைவர் பாலனுருக்கொண்டு தொட்டிலிற் கிடந்தனர். அதனைக் கண்ட மாமி இப்பாலன் யாவனென வினவ, இங்கு வந்தாள் ஒருத்தி இதனைத் தொட்டிலிற் கிடத்தி இப்பாலகனைப் பாதுகாத்துக்கொள் எனக் கூறிக் கணவனொடும் போயினள் என்ருள். அது கேட்ட மாமி பிறர்தரும் பாலகனை நீயோ காப்பாய் என்று கூறி அப்பாலகனோடும் புறத்தே தள்ளிக் கதவடைத்தாள். இறைவனும் பாலகனுருவம் நீங்கித் தாமாந்தன்மையை யுணரத்தக்க உண்மை வடிவினைக்கொண்டு அம்மாதுக்கு உமையம்மையின் சாரூபத்தைக் கொடுத்துச் சத்திமண்டலத்தை யடையுமாறு செய்து தாம் மறைந்தருளினர் என நம்பி திருவிளையாடற்புராணம் கூறும். இப்புராணத்தில், மறையோன் வாழ்ந்தவூர் கூறப்பட்டிலதாயினும் 'ஓரியூரின்' என அடிகள் கூறுதலின் இவ்வரலாறு அவ்வூரில் நிகழ்ந்ததாகக் கொள்ளப்படும்.

உகந்து - விரும்பி. பார் - நிலவுலகம். "துப்புறு பரவை யேழுஞ் சூழ்ந்த பார்" (கம்ப. உருக்காட்டு 33) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

70—2. பாண்டூர் தன்னில் ஈண்ட இருந்தும் - பாண்டூர் என்னும் தலத்தில் அடியவர்கள் திரண்டு வந்து வணங்கும்படி எழுந்தருளியிருந்தும், *தேவூர் தென்பால் திகழ்தரு தீவில் - திருத்தேவூருக்குத் தென்பக்

---

*தேவூர் வேதாரணியத்திற்குச் சமீபத்திலுள்ள ஒரூர். அதற்குத் தென்பால் திகழ்தருதீவு, மணற்றி, மணிபல்லவம் என்னும் பெயர்களையுடைய யாழ்ப்பாணத் தீபகற்பமாகலாம். இத்தீபகற்பத்திலுள்ள சிவதலங்களுள் நகுலேசுவரம் மிக்க பழமையுடையது. அதுவே இறைவன் கோவார் கோலங்கொண்ட தலமாக அமையுமோ என எண்ண இடமுண்டு.

கத்தே கடற்கண் விளங்காநின்ற தீவின்கண், கோ ஆர் கோலம் கொண்ட கொள்கையும் - அரசியற் றன்மை பொருந்திய திருவுருவினைக் கொண்டு எழுந்தருளிய கோட்பாடும்.

ஈண்டுதல் - திரளுதல். "ஈண்டு பெருந்தானை" (முல்லை 90) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. நெருங்குதல் எனினுமாம். திகழ்தருதல் - விளங்குதல். கோ என்றது ஈண்டு அரசியற் றன்மையை உணர்த்தியது. பாண்டூர் தேவூர் என்பன பாண்டி நாட்டிலுள்ளன என்பர்.

73—4. தேன் அமர் சோலை திரு ஆரூரின் - வண்டுகள் தங்கும் சோலைகளையுடைய திருவாரூரில், ஞானம் தன்னை நல்கிய நன்மையும் - வீடு பயக்கும் உணர்வினை உபதேசித்தருளிய நலமும்.

தேன் - வண்டு. "தேனிமிர் கண்ணி" (பு. வெ மா. 43) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. "சிறைவண்டார் பொழில்சூழ் திருவாரூர்" (ஞான 303 : 3) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. தேன் எனினுமமையும். ஞானம் - வீடுபயக்குமுணர்வு. 'ஞானமாவது வீடு பயக்குமுணர்வு' எனப் பரிமேலழகர் உரைத்தமையும் (குறள் 34 அதி) காண்க.

75—6. இடை மருது அதனில் ஈண்ட இருந்து - திருவிடைமருதூரின் கண் அடியவர்கள் நெருங்கி வந்து வழிபட வீற்றிருந்து, படிம பாதம் வைத்த பரிசும் - தனது தூய திருவடிகளை அடியவர்களின் சென்னிமீது வைத்து அருள் செய்த கருணைத் தன்மையும்.

இடைமருது - திருவிடை மருதூர். ஈண்ட இருந்து - நெருங்கி வந்து வழிபட இருந்து. "இடை மரு துறையும் எந்தாய் போற்றி" (போற்றி 145) "இடை மருதே யிடங்கொண்ட அம்மானே" (ஏசறவு 9) "வருந்திய மாதவத்தோர் வானோ ரேனோர் வந்தீண்டிப் பொருந்திய...இடை மருதில், பொருந்திய கோயிலே கோயிலாகப் பொலிந்தீரே" (தே. ஞான 192 : 5) என வருவன காண்க. படிமம் என்றது ஈண்டு தூய்மை என்னும் பொருள்பட நின்றது.

77—8. ஏகம்பத்தில் இயல்பாய் இருந்து - திருக்கச்சி ஏகம்பம் என்னும் காஞ்சிமாநகரில் தமது இயற்கையான அருவத் திருமேனியோடு வீற்றிருந்து, பாகம் பெண்ணோடு ஆயின பரிசும் - இடப்பாகம் உமையம்மையாரோடு கூடியதான தன்மையும்.

திருக்கையிலையில் இறைவி தன் உள்ளத்தில் எழுந்த அன்பின் மிகுதியால் இறைவனது பின்புறத்திற் சென்று அவ்விறைவனுடைய திருக்கண்களைத் தமது அழகிய திருக்கரங்களாற் புதைத்தலும் அக்கண்களினொளி மறைய அதனால் எல்லாவுலகங்களும் எட்டுத்திசைகளும் விண்ணோருலகமும் இருளடைந்தன. நிலவுலகினர் பூமியையும் அதிலுள்ள பொருள்களையும் காணாராயினர். தேவர் முதலிய யாவரும் ஒன்றுந் தோன்றாது

வருந்தி இருள்வயப்பட்டுப் பதைபதைத்துப் பெருங்குரலிட அதனைக் கேட்ட அம்மையார் தமது திருக்கரத்தை நீக்க இறைவன் தமது கண்களைத் திறந்தனர். உடனே ஞாயிறு திங்கள் வான்மீன் முதலிய எல்லா ஒளி மண்டலங்களும் விளங்கின. இறைவன் இறைவியை நோக்கி நீ நம் கண்களை விளையாட்டாக மூடித்திறந்தது ஒரு சிறு பொழுதே யாயினும் அஃது உலகங்களுக்கெல்லாம் எண்ணிறந்த பல ஊழிக்காலங்களாகக் கழிந்து படைத்தல் முதலிய தொழில்கள் இல்லையாம் வண்ணம் தகைந்த காரணத்தால் அதற்குக் கழுவாயாக நீ நம்மை அகன்று மண்ணுலகிற் சென்று நமக்கு இனிய காஞ்சிமாநகரில் நம்மைச் சிவலிங்க வடிவில் வைத்து வழிபடுவாயாக என்று விடுப்ப, இறைவியும் இறைவனைப் பிரிந்துபோந்து காஞ்சியிலே கம்பையாற்றங்கரையில் ஒரு மாமரத்தினடியிற் சிவலிங்கத் திருவுருவைக் கண்டு வழிபட, இறைவன் திருவுள்ளக் குறிப்பினால் அக்கம்பையாற்றில் வெள்ளம் சிவபூசையைச் சிதைவ செய்வதுபோற் பெருக்கெடுத்துக் கடுகி வருதலும் இறைவி மனங்கலங்கி இப்பெருநீர் வெள்ளம் எம்பிரான் மிசையே நண்ணும்; இனிச் செய்வதென்னே என்று தம்பெருமானார்பால் அன்பு நிறைந்தெழுகின்ற திருவுள்ளத்தோடும் தன் இருகரங்களாலும் அச்சிவலிங்கத்தினைக் கட்டித் தழுவப் பெருமானும் அத்திருவுருவினின்றுந் தோன்றி உமையம்மையை அணைத்துத் தனது இடப்பாகத்திற் பொருந்த வைத்தான் எனக் காஞ்சிபுராணம் கூறும்.

ஏகாம்ரம் என்பது ஏகம்பம் என மருவியது. ஏக ஆம்ரம் - ஒரு மாமரம். "நிறைமலர்த் தனிமா நீழ னித்தனே" (காஞ்சி. தழுவக் 405) என வருதலும் காண்க.

79–80. திருவாஞ்சியத்தில் சீர் பெற இருந்து - திருவாஞ்சியம் என்னும் திருப்பதியில் திருமணச்சீர் பெறுதற்குரிய அழகுடன் எழுந்தருளியிருந்து, மரு ஆர் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும் - இயற்கைமணம் பொருந்திய கூந்தலையுடைய உமாதேவியோடு கலந்து மகிழ்ந்த திருவிளையாட்டும்.

திருவாஞ்சியம் என்பது சோழநாட்டிலுள்ள பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று. இலக்குமியை வாஞ்சித்துத் திருமால் இறைவனைப் பூசித்த காரணத்தால் இத்தலம் இப்பெயர் பெற்றது.

"கற்றை வார்குழற் றிருவைவாஞ் சியத்துள்
கருணை யாலுறத் தமியனேன் மேவப்
பெற்ற திங்கண ராதலா லிதற்குப்
பெயரு மேதிரு வாஞ்சிய மெனவும்" (திருமால் தவம்புரி 105)

எனத் திருவாஞ்சியத்தலபுராணத்து வருதலும் காண்க. மரு - மணம். "மருவார் கொன்றை" (தே. சுந் 53 : 1) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. மருவார் குழலி யென்றது இயற்கை மணம் பொருந்திய கூந்

தலையுடைய உமையம்மையை. "மருவார் குழலி மாதோர் பாகமதாய்" (ஞான 25: 1) எனத் தேவாரத்து வருதலும் காண்க.

81—2. சேவகன் ஆகி திண் சிலை ஏந்தி - பாண்டியனுக்கு வெற்றியுண்டாகும் பொருட்டு வில்வீரனாக வடிவங்கொண்டு வலிய வில்லைக் கையில் ஏந்திக்கொண்டு, பல பல பாவகம் காட்டிய பரிசும் - பல வகையான அம்பெய்யும் இயல்புகளைக் காட்டிய தன்மையும்.

முன்னொரு காலத்திலே சிவபத்தியிற் சிறந்த பாண்டியன் ஒருவன் மதுரையம்பதியிலிருந்து செங்கோல் செலுத்து நாளில், சோழமன்னன் ஒருவன் அவனைப் பொருது வெல்லுதற்கு இயலாமையால் வஞ்சனையினால் வெல்லக் கருதித் தான் சார்ந்து நின்ற சமணசமயக் குருமார் எண்ணாயிரவரையும் தன்பால் அழைப்பித்து நீங்கள் மந்திரவாதஞ் செய்து பாண்டியனைக் கோறல்வேண்டும் என்று கேட்ப அவர்களும் அதற்கு இயைந்து மந்திரவாதஞ் செய்ய, ஓமகுண்டத்தினின்றும் ஒரு யானை தோன்றியது. சமணகுருமார் அதனை நோக்கிப் பாண்டியனை மதுரையம் பதியொடும் விழுங்கு என ஏவிவிட்டுத் தாங்களும் அதனொடு செல்வாராயினர். யானை மதுரையை அடைந்தது. அதனைக் கண்ட பாண்டியன் அஞ்சித் திருக்கோயிலையடைந்து பெரும, சமணர் மந்திரித்துவிட்ட யானையினாற் கலங்கினேன்; காத்தருள்க என்று வணங்கி நின்றான். அப்போது, கீழ்பால் மதிலின் பக்கலில் அட்டாலை கட்டின் வில்லாளாகி வந்து யானையை வெல்வல். கலங்கிடேல் என இறைவனருளால் ஓர் அசரீரி உண்டாயது. பாண்டியனும் அகமகிழ்ந்து அப்படியே அட்டாலை மண்டபம் இயற்றுவித்தான். இறைவனும் வில்வீரனாகத் தோன்றி அவ்வட்டாலைமீதேறி யானையை எய்தான். அவன் விட்ட நரசிங்க அம்பு அதன் மத்தகத்தைக் கிழிக்க யானை உரனழிந்து விழுந்து இறந்தது. பாண்டியன் மனமகிழ்ந்து இறைவனைப் பணிந்தான் என நம்பி திருவிளையாடற்புராணம் கூறும். இனி, இப்பகுதி சுந்தரப்பேரம்பெய்த திருவிளையாடலைக் குறிப்பதாகவுங் கொள்ளலாம்.

83—91. கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும் - திருக்கடம்பூர் என்னும் தலத்தில் கோயில் அமைய அங்கு வீற்றிருந்தும், ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும் - திருவீங்கோய் மலையில் அழகிய மரகதத் திருமேனியைக் காட்டியும், ஐயாறு அதனில் சைவன் ஆகியும் - திருவையாற்றில் ஓர் ஆதிசைவ அந்தணனாகியும், துருத்தி தன்னில் அருத்தியோடு இருந்தும் - திருத்துருத்தி என்னும் தலத்தில் அடியவர்க்கு அருள் புரியும் ஆசையுடன் வீற்றிருந்தும், திருப்பனை ஊரில் விருப்பன் ஆகியும் - திருப்பனையூர் என்னும் தலத்தில் அடியார்க்கு வேண்டுவன ஈயும் விருப்பமுடையவனாக வீற்றிருந்தும், கழுமலம் அதனில் காட்சி கொடுத்தும் - சீகாழி என்னும் தலத்தில் தனது திருவுருவினைக் காட்டியும், கழுக்குன்று அதனில் வழுக்காது இருந்தும் - திருக்கழுக்குன்றத்திலே ஞான

வடிவத்தொடு நிலையாக எழுந்தருளியும், புறம்பயம் அதனில் அறம் பல அருளியும் - திருப்புறம்பயம் என்னும் திருப்பதியில் அறநூற்பொருள்கள் பலவற்றை அருளிச்செய்தும், குற்றாலத்து குறியாய் இருந்தும் - திருக்குற்றாலம் என்னும் தலத்தில் திருமாலின் திருவுருவம் அகத்திய முனிவராற் சிவலிங்கத்திருவுருவமாக அதில் எழுந்தருளியிருந்தும்.

இடம் - வீடு. ஈண்டுத் திருக்கோயிலை உணர்த்தியது திருக்கடம்பூரில் கோயில் அமைய இறைவன் அங்கு எழுந்தருளியிருந்தமையின் 'கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும்' என்றார். "வளருங் கோல வளர்சடையாற் கிடம்...கடம்பூர் கரக்கோயிலே" என அப்பரடிகள் (தே.நாவு 133 : 1) அருளியமையுங் காண்க.

ஈங்கோய்மலை - திருவீங்கோய்மலை. "எழிலார் சுனையும் பொழிலும் புடைசூழ் ஈங்கோய் மலை" எனத் தேவாரத்து (ஞான 70 : 11) வருதலும் காண்க. எழில் - அழகு. அது ஈண்டு மரகதத் திருமேனியைக் குறித்தது.

ஐயாறதனிற் சைவனாகியும் என்றது திருவையாற்றிலே இறைவனுக்குப் பூசனைபுரியும் ஆதிசைவப் பார்ப்பனர் இருபத்து நால்வருள் ஒருவர், தன் மனைவியையும் மைந்தனையும் விடுத்துக் காசிக்குப் போய் நெடுநாளாக மீண்டு வாராமையால் அவரது மனைவி மக்கட்குரிய பொருளை ஏனையோர் கவர்ந்து கொள்ளக் கருதியபோது அதனைத் தடுத்தற்பொருட்டுக் காசிக்குப் போன சைவமறையோனின் வடிவத்தோடு இறைவன் தோன்றி அருள் செய்தமை பற்றியாகும். ஐயாறு சோழ நாட்டிற் காவிரியின் வடபாலுள்ள தலம். "கரைசெய் காவிரியின் வடபாலது...ஐயாறுடை யப்பனே" (தே. ஞான 142 : 9) என வருதலுங் காண்க.

துருத்தி : காவிரியின் தென்கரையிலுள்ள தலம். துருத்தி என்பதற்கு ஆற்றிடைக்குறை என்பது பொருள். "விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தி" (சிலப் 11 : 39) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. இது காவிரியின் நடுவுள் இருந்தமையின் இப்பெயர் பெற்றது. "பொன்னியின் நடுவு தன்னுட் பூம்புனல் பொலிந்து தோன்றும், துன்னிய துருத்தியானை" எனத் தேவாரத்து (நாவு 42 : 3) என வருதலும் காண்க அருத்தி - ஆசை.

பனையூர் சோழநாட்டிலுள்ள தலம். "காவிரி புடைசூழ் சோணாட்டவர்தாம் பரவிய கருணையங் கடலப், பாவிரி புலவர் பயிலுந் திருப்பனையூர்" (தே. சுந் 87 : 6) என வருதலும் காண்க.

கழுமலம் - சீகாழிப்பதி. "ஊருறு பதிக ளுலகுடன் பொங்கி யொலிபுனல் கொள வுடன்மிதந்த, காருறு செம்மை நன்மையான் மிக்க கழுமல நகர்" "ஒருவரிவ் வுலகில் வாழ்கிலா வண்ண மொலிபுனல் வெள்ளமுன் பரப்பக், கருவரை சூழ்ந்த கடலிடை மிதக்குங் கழுமலநகர்" எனத்

தேவாரத்து (ஞான 376 : 3, 9) வருவன காண்க. இறைவன் அடிகட்குத் திருக்கழுமலத்திலே காட்சி நல்கியமையின் 'கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்' என்றார்.

கழுக்குன்று : இது தொண்டை நாட்டிலுள்ள தலம். வழுக்காது - தப்பாது. வழுக்குதல் - தப்புதல். இப்பொருட்டாதல் "வழுக்கிக் கழித் தலே நன்று" (நாலடி 71) என்புழிக் காண்க. திருக்கழுக்குன்றிலே இறைவன் திருக்கோலத்தை அடிகட்குக் காட்டியருளியமையின் 'கழுக்குன்றதனில் வழுக்கா திருந்தும்' என்றார். "கணக்கிலாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய்கழுக் குன்றிலே" "காணொ ணாத்திருக் கோலம் நீ வந்து காட்டினாய் கழுக் குன்றிலே" எனத் திருக்கழுக்குன்றப் பதிகத்து (1, 4) வருவனவுங் காண்க.

புறம்பயம் - திருப்புறம்பயம் என்னும் திருப்பதி. இது சோழநாட்டிலே கும்பகோணத்திற்கு வடமேற்கே மண்ணியாற்றின் வடகரையிலுள்ளது. சனகர் முதலிய நால்வர்க்கு இறைவன் இத்தலத்தில் அறநூற் பொருள் பலவற்றை அருளிச் செய்தமையின் 'புறம்பய மதனி லறம்பல வருளியும்' என்றார். இதனை,

"திறம்பய னுறும்பொரு டெரிந்துணரு நால்வர்க்
கறம்பய னுரைத்தனை புறம்பய மமர்ந்தோய்" (166 : 1)

என்னும் திருஞானசம்பந்தர் தேவாரத்தானும் உணரலாம்.

குற்றாலம் - பாண்டி நாட்டிலுள்ள தலம். குறியா யிருந்து - சிவலிங்க வடிவமாய்த் தோன்றி இருந்து.

அகத்தியர் கொங்கு நாட்டிலிருந்து தென்றிசை நோக்கிச் செல்லும் வழியிற் திருக்குற்றாலம் என்னும் வைணவதலம் இருந்தது. அங்குள்ள வைணவப் பார்ப்பனர்கள் சிவனடியார்களைக் காணின் பகைஞரெனக் கருதி இகழ்ந்து வந்தனர். அவர்தம் செயலை உணர்ந்த அகத்தியர் அவ்வூர்த் தெருவில் நடந்து திருமால் கோயிலின் முன்னே சென்றார். அக்கோயிலிலுள்ள வைணவர்கள் அவரைக் கண்டு கண்டிகையுந் திருநீறும் அணிந்த நீ ஐயமேற்றுண்பவனுக்கு அடியவனாதலால் இவ்விடத்திற்கு வருதல் தகாது. ஆதலால் அப்பாற் போய்விடு என்று உரைத்தனர். அவரும் அதனைக்கேட்டு நகைத்து நான் அப்பாற் போய்விடுகிறேன் என்று திரும்பிச் சென்ற அகத்தியர் சிவபெருமானை இகழ்ந்த வைணவர்களின் அகந்தையை அகற்ற எண்ணி மாயவனின் அடியார்போல் உருக்கொண்டு மீண்டும் அவ்விடத்தைக் குறுகுதலும் தம்மை எதிர்வந்து போற்றிய வைணவர்களை நோக்கி அழகர்மலையிலிருந்து அத்திகிரிக்குச் செல்கின்றோம். இத்தலத்திலுள்ள நம்பெருமான் கோயிலைப் பரவும் விருப்புடையேம் என்றார். அதனைக் கேட்ட வைணவர்கள் திருமால் கோயிலைக் காட்ட முனிவர் அக்கோயிலை அடைந்து செஞ்சடைப் பெருமானை நினைத்துக் கொண்டு

திருமாலின் திருமுடிமேற் கையை வைத்துக் குழைவித்து ஒரு சிவலிங்க வடிவாகச் செய்தார். இவ்வரலாற்றினைக் கந்தபுராணத்துட் காண்க.

"சித்தினுற் கரும்பொன் மேனி செம்பொனும் படிபோற் கும்பன்
பத்தியா லுருகி மாலாம் படிவனே பரம னுன்" (திருமால் சிவ பிராணன 144)

எனத் திருக்குற்றாலத்தலபுராணத்து வருதலுங் காண்க. திருமால் திருவுரு சிவலிங்கத் திருவுருவானமைபற்றிக் 'குற்றாலத்துக் குறியாயிருந்தும்' என்றார்.

92—9. அந்தம் இல் பெருமை அழல் உரு கரந்து - முடிவில்லாத பெருமையினையுடைய தீப்பிழம்பின் வடிவத்தை மறைத்து, சுந்தர வேடத்து ஒரு முதல் உருவு கொண்டு - அழகிய கோலத்தினையுடைய ஒப்பற்ற ஞானசாரிய முதல்வராய் வடிவங்கொண்டு, இந்திர ஞாலம் போல வந்தருளி - இந்திரசாலவித்தைபோல வந்தவழி அறியப்படாமற் றோன்றி, எவ் எவர் தன்மையும் தன் வயின் படுத்து - எந்த எந்தத் தேவர்களது தன்மைகளையும் தன்னிடத்தே அடங்கவைத்து, தானே ஆகிய தயாபரன் எம் இறை - தான் ஒருவனே முழுமுதற் கடவுளாகிய அருளினுல் மேம்பட்ட எமது தலைவன், சந்திரதீபத்து சாத்திரன் ஆகி - சந்திரதீபம் என்னும் திருப்பதியிலே கலைவல்லோனுப் உருவுகொண்டு, அந்தரத்து இழிந்து வந்து - ஆகாயத்தினின்றும் இறங்கி வந்து, அழகு அமர் பாலையுள் - அழகு பொருந்திய பாலை என்னும் தலத்தின்கண், சுந்தர தன்மையொடு துதைந்து இருந்தருளியும் - அழகிய இயல்போடு நெருங்கியிருந்தருளியும்.

அந்தம் - முடிவு. அழலுரு வென்றது இறைவனுடைய தீப்பிழம்பு போன்ற ஒளிவடிவத்தை. "அழறிகழ் மேனி" "ஒளிகொண் மேனியுடையாய்" (ஞான 261 : 4; 197 : 6) எனத் தேவாரத்து வருவனவும் காண்க. சுந்தரவேடம் என்றது வட்டவடிவமாய் ஒவ்வொரு பொன்மணியைக் கொண்ட ஆறு ஆறுகிய காதணிகளை. அவை ஞானசாரியர்களால் அணியப்படுவன.

எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்து என்றது எவ்வெச் சமயிகள் எவ்வெத் தெய்வங்களை வணங்குகின்றார்களோ அவ்வத் தெய்வங்களின் தன்மைகளைத் தன்தெய்வத் தன்மையில் அடங்கவைத்து என்றவாறு. இதனை,

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாகனுர்தாம் வருவார்" (சுத் 2 செய் 25)

எனச் சிவஞானசித்தியாரினும்,

"எவ்வெவர் தம்மை யேனும் யாவரே யெனினும் போற்றின்
அவ்வவ ரிடமாக் கொண்டே யவர்க்கருள் தருவாய் போற்றி"
(கந்த ரதம் 65)

எனக் கந்தபுராணத்தும் வருவனவற்றுமறிக.

எல்லாவுயிர்களின் இயல்புகளையும் தன்னகப்படுத்து தான் அவற்றோடு ஒன்றாய் நிற்பினும் இறையியல்பு அவ்வுயிரியல்புகளின் வேறாய் முதன்மை யுற்று நிற்குமென்றற்குத் 'தானேயாகிய' என்றும், மேலோனாகிய இறைவன் வந்தருள்வது உயிர்களின்மேற் கொண்ட கருணையால் என்பது தோன்றத் 'தயாபரன்' என்றும் அருளிச் செய்தனர். "அந்தமில் பெருமை யழலுருக் கரந்து" (92) என்பதுமுதல் 'தானே யாகிய தயாபரன்' (96) என்பதுவரை இறைவன் ஞானாசாரியனாக வந்தமையைக் குறிப்பதாகும்.

சந்திரதீபம் - சந்திரதீவு. சாத்திரன் - கலைவல்லோன்; ஆசிரியன் என்றவாறு. அந்தரம் - ஆகாயம். "அந்தரக் கொட்பினர் வந்துடன் காண" (174) என்னும் திருமுருகாற்றுப்படையினும் இப்பொருட்டாதல் காண்க. அமர் - பொருந்திய. பாலை என்பது சந்திரதீபத்துள்ள தலம். இது திருக்கழிப்பாலை என்னும் தலமோ என எண்ண இடமுண்டு.

100—8. மந்திர மாமலை மகேந்திர வெற்பன் - மந்திர நூலாகிய ஆகமம் வெளிப்படுதற்கிடமான பெரிய மலையாகிய மகேந்திரமலையை இருப்பிடமாகக் கொண்டவன், அந்தம் இல் பெருமை அருள் உடை அண்ணல் - முடிவு இல்லாத பெருமையினையும் அருளினையுமுடைய பெரியோன், எம்தமை ஆண்ட பரிசது பகரின் - எம்மை அடிமைகொண்ட தன்மையைச் சொல்லுமிடத்து, ஆற்றல் அது உடை அழகு அமர் திரு உரு - சர்வ வல்லமையையுடைய அழகு பொருந்திய திருவுருவத்தில், நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும் - திருநீற்றின் வளைந்த வரிகளை நெற்றி முதலிய இடங்களில் இடைவெளியிட்டு அணிந்து காட்டியும், ஊனம் தன்னை ஒருங்கு உடன் அறுக்கும் - கேட்டினை ஒரு சேர அழிக்கின்ற, ஆனந்தமே ஆறா அருளியும் - பேரின்பத்தையே ஆறாகத் தந்தருளியும், மாதின் கூறு உடை மா பெரும் கருணையன் - உமையம்மையாரின் இடப்பாகத்தையுடைய மிகப் பெரிய அருளினையுடையான், நாதப் பெரும் பறை நவின்று கறங்கவும் - நாததத்துவமாகிய பெரியபறை பல்காலும் பயின்று ஒலிக்கவும்.

மந்திரம் என்பது "நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த, மறைமொழி தானே மந்திரமென்ப" எனத் தொல்காப்பியனாரும், "நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து, மறைமொழி காட்டிவிடும்" எனத் திருவள்ளுவநாயனாரும் கூறிய மந்திர இலக்கணத்தையுடையதென்பர். அப்பெரியோர் கூறியவை சாப அநுக்கிரக சத்தியையுடைய பெரியோர்கள் வெகுண்டும் அருளியும் கூறும் ஆணைமொழிகளாமன்றி இறைவழிபாட்டிற்குரிய மந்திரங்கள் எல்லாவற்றிற்கும் செல்லாவாம். இனி, மந்திரம் என்பதற்கு நினைப்பவனைக் காப்பது எனப் பொருள்கூறப்படுதலின் அம் மந்திரங்களே ஈண்டுக் குறிக்கப்பட்டனவாம் என்க. இறைவன் மந்திர நூலாகிய ஆகமத்தினை வெளிப்படுத்திய இடம் மகேந்திரமலை என்பது,

> "மன்னு மாமலை மகேந்திர மதனிற்
> சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியும்" (கீர்த்தி 9-10)

என அடிகள் அருளியவாற்றானுமறிக.

அந்தமில் பெருமை அண்ணல் என இயையும். "அந்தமில் பெருமையழலுருக் கரந்து...தானே யாகிய தயாபரன்" (கீர்த்தி 92-6) என வந்தமையுங் காண்க. அண்ணல் - பெருமையிற் சிறந்தோன். எந்தமை - எம்மை. "எந்தமை யுய்யக் கொள்வாய் போற்றி" (போற்றி 206) என வருதலும் காண்க. மற்றைய அடியார்களையும் உளப்படுத்தி 'எந்தமை' எனப் பன்மை கூறினர். பரிசது என்பதில் அது அசைநிலை. பரிசு - தன்மை.

ஆற்றல் - சர்வ வல்லமை. அது என்னும் சுட்டு அவ்வாற்றலின் பெருமையை உணர்த்தியது. ஆற்றலதுவுடைத் திருவுரு என இயையும். அழகமர் திருவுருவென்றது அழகுபொருந்திய பரமாசாரியத் திருவுருவை. நீற்றுக் கோடி - திருநீற்றின் வளைந்த வரி. கோடு - வளைவு. "கோடுவாய் கூடாப் பிறை" (கலி 142 : 24) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. கோடி (கோடு - இ) வளைவையுடையது. அது வரிகளையுணர்த்தியது. நீற்றுக்கோடி என்றது இறைவனது திருமேனியில் நெற்றி மார்பு முதலிய உறுப்புக்களில் திரிபுண்டரமாக அணிந்துள்ள திருநீற்றின் வடிவை உணர்த்தியது. அழலினைச் சாரும் பருப்பொருள்கள் அதனால் எரித்துத் தூயவாக்கப்பட்டு அதனைச் சார்ந்து விளங்குதல் போலச் சுத்தமாயை முதலியன இறைவனது ஞானக்கினியின் சேர்க்கையாற் றூயவாய் அவ்விறைவனையே பற்றுக்கோடாகக் கொண்டு நிற்குமென்பது இறைவன் திருமேனியில் விளங்கும் திருநீற்றின் கோடுகள் புலப்படுத்துவனவாகும். "சிவனவன் திரள் தோள்மேல் நீறுநின்றது கண்டனை யாயினும்" (சதக 33) "எந்தரமும் ஆட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்" (அம்மானை 3) "துடிகொள்நே ரிடையாள் சுரிகுழன் மடந்தை துணைமுலைக் கண்கள் தோய் சுவடு, பொடிகொள்வான் றழலிற் புள்ளிபோ லிரண்டு பொங்கொளி தங்குமார் பினனே" (அருட் 5) "தோளுலா நீற்றன்" (அச்சப் 6) என அடிகள் பிறுண்டும் அருளியமை காண்க.

நிமிர்ந்து - இடையிட்டு. இப்பொருட்டாதலை, "நிறைந்து முறழ்ந்து நிமிர்ந்துந் தொடர்ந்தும்" என்னும் பரிபாடல் உரையில் (19 : 82) நிமிர்ந்தும் என்பதற்கு இடையிட்டும் எனப் பரிமேலழகர் உரைத்தமையானுமறிக. இறைவன் திரிபுண்டரமாக விபூதி அணிந்தமையை 'நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்' என்பது குறிப்பதாகும்.

ஊனம் - கேடு. "பானல்வாய்ச் சிறு சேயொடு நீயமர் பயிறல், ஊனமே யெனத் தடுத்தனர்" என்னும் கந்தபுராணத்தும் (அவைபுகு 119) இப்பொருட்டாதல் காண்க. "பிணமும் கேடு மூனமு மாகும்" என்பது பிங்கலந்தை (10 : 190). சிவானந்த வெள்ளம் பெருக்கெடுத்த காலத்து அதன்கட்படிந்த உயிரைப்பற்றிய மலக்கறை முற்றும் வலிகெட்டொழிதலின் 'ஊனந் தன்னை யொருங்குட னறுக்கும் ஆனந்தமே யாறு' என்றார்.

"வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியும்
ஆனந்தங் காணுடையான் ஆறு" (4)

எனத் திருத்தசாங்கத்து வருதலுங் காண்க. ஒருங்குடன் - ஒரு சேர. "மூவேறு தாரமும் ஒருங்குடன் கொண்டு" (அக 282: 8) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. ஆனந்தமே என்பது ஆனந்தம்மே என விரிந்தது. ஆறாக என்பது கடைக்குறைந்து நின்றது. மாதிற் கூறுடை என்பதனை மாது கூற்றிலுடை என உருபு பிரித்துக் கூட்டி உமையம்மையாரை இடப்பாகத்திலுடைய என உரைப்பினுமமையும். பெருமை எனப் பொருள்படும் மா, பெரு என்னுஞ் சொற்கள் பிரிவின்றித் தொடர்ந்து வந்தமை "ஒருபொரு ளிருசொற் பிரிவில வரையார்" (தொல். எச்ச 64) என்பதனால் அமைக்கப்படும்.

நாத தத்துவம் உலகத்தோற்றத்திற்கு மூலமாதலாலும், அது ஒலி வடிவினதாதலாலும், அதனை இறைவற்கு முரசாக உருவகப்படுத்திக் கூறுதலாலும் 'நாதப் பெரும்பறை' என்றார்.

"தோற்றம் துடியதனில்" (35)

என உண்மை விளக்கத்தும்,

"பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாமநீர் வரைப்பி நானில வளாகமும்
ஏனைய புவனமு மெண்ணீங் குயிரும்
தானே வகுத்ததுன் றமருகக் கரமே"

எனச் சிதம்பர மும்மணிக்கோவையினும் வருவன காண்க. அடிகள் நாத தத்துவத்தினைப் பறையாக உருவகப்படுத்திக் கூறுதலை,

"வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையினர்" அன்னைப்பத்து 1.

எனவும்,

"பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை" திருத்தசாங்கம் 8.

எனவும்,

"ஞானவா ளேந்துமையன் நாதப்பறை யறைமின்" படையெழுச் 1.

எனவும் வருவனவற்றாலுமறிக. நவின்று - பயின்று. "மூவிரு முகனு முறைநவின் றொழுதலின்" (103) என்னும் திருமுருகாற்றுப்படையினும் இப்பொருட்டாதல் காண்க. நாதப்பறை மேன்மேலும் ஒலித்தலின் 'நவின்று கறங்கவும்' என்றார்.

109—110. அழுக்கு அடையாமல் ஆண்டுகொண்டு அருள்பவன் - மும்மலங்களும் உயிர்களைச் சேராவண்ணம் அவ்வுயிர்களை அடிமைகொண்டு அருள்செய்யும் இறைவன், கழுக்கடை தன்னை கைக்கொண்டு அருளியும் - முத்தலை வேலைத் திருக்கரத்தில் தாங்கியருளியும்.

அழுக்கடையாமல் என்றது உயிர்களைப்பற்றி நின்ற ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்கள் மீண்டும் பயிற்சிவயத்தால் உயிர்களைப் பற்றுமல் என்றவாறு. கழுக்கடை, முத்தலைவேல், மூவிலைவேல், சூலப்படை என்பன ஒருபொருட் சொற்கள். "கழுமுண் மூவிலைவேல் முத்தலை கழுச் சத்தி வருபவை சூலப் படையென வழங்குவர்" எனத் திவாகரத்து வருதல் காண்க. மும்மலங்களாகிய அழுக்கு உயிர்களைச் சார்ந்து வருத்தாமல் அவ்வுயிர்களை ஆண்டுகொண்டருளும் இறைவன் அம்மும்மலங்களையும் நீக்குதற்கு அறிகுறியாக இச்சா ஞானக்கிரியா சத்திகளாகிய முத்தலைகளையுடைய சூலவேலைத் தாங்குதல் இயைபுடைத்தாயிற்று. 'அழுக்கடையா நெஞ்சுருகும் மும்மலங்கள் பாயுங், கழுக்கடைகாண் கைக்கொள் படை" (தசாங்கம் 7) எனவும், "தயங்குமூ விலைச் சூலப்படை யானே" (திருப்புலம் 2) எனவும் வருவனவும் காண்க.

111 – 14. மூலம் ஆகிய மும்மலம் அறுக்கும் - உயிர்களின் துன்பங்கட்கு ஏதுவாகிய மும்மலங்களையும் நீக்குகின்ற, தூய மேனி சுடர்விடு சோதி - இயல்பாகவே பாசங்களினீங்கிய திருமேனியையுடைய கதிர்பரக்கும் பேரொளியாகிய இறைவன், காதலன் ஆகி - அன்புக்குரியவனாகி, கழுநீர் மாலை ஏல் உடைத்தாக எழில்பெற அணிந்தும் - செங்கழுநீர் மாலையினைப் பொருத்தமுடைத்தாக அழகுபெற அணிந்தும்.

மும்மலங்களும் உயிர்களின் துன்பத்திற்கு மூலமாயிருத்தலின் 'மூலமாகிய மும்மலம்' என்றார். மும்மலம் - ஆணவம் கன்மம் மாயை என்பன. மும்மலம் அறுக்கும் - மும்மலங்களையும் நீக்கும். "மயக்கமாயதோர் மும்மலப் பழ வல்வினைக்குள் அழுந்தவுந் துயக்கறுத்து" (திருக்கழுக் 7) எனவும், "சிதடரொடுந் திரிவேனை மும்மைமல மறுவித்து" (அச்சோ 9) எனவும் அடிகள் அருளியமை காண்க. அறுக்கும் சோதி என இயையும். தூயமேனி என்றார் இறைவன் இயல்பாகவே பாசங்களினீங்கிய பரிசுத்தமான அருட்டிருமேனியை யுடையனாகலின். "தூய திருமேனிச் செல்வர் போலும்" "தாத்தூய திருமேனித் தோன்றல் போலும்" (நாவு 242 : 3; 8) எனத் தேவாரத்து வருவனவும் காண்க. சுடர்விடு - கதிர்பரக்கும். விடுதல் - பரத்தல் என்னும் பொருட்டாதல் 'விடுசுடர் - பரந்த அனல்' என்னும் (பு. வெ. மா. 163) உரையானுமறிக. இறைவன் கதிர்பரக்கின்ற பேரொளியினனாதலின் 'சுடர்விடு சோதி' என்றார். "கடலிடை நஞ்சமுண்ட கறையணி கண்டனார்தாம், சுடர்விடு மேனிதன்மேல்" என அப்பரடிகள் (தே. நாவு 58 : 10) அருளியவாறுங் காண்க.

இறைவன் அடியார்களாற் செய்யப்படும் அன்புக்குரியவனாதலின் 'காதலனாகி' என்றார். இனி, அடியவன் தன்னைக் காதலியாகவும் ஆண்டானைக் காதலனாகவும் வைத்துரைத்தல் மரபாதலானும், சன்மார்க்கத்தின்கண் ஆண்டானுக்கும் அடியவனுக்குமுள்ள இயைபினுக்கு காதலன் காதலிக்குள்ள இயல்பினை எடுத்துக் காட்டுதலினாலும், அடிகள் சன்மார்க்கத்திற்குரியராதலினாலும் 'காதலனாகி' என்றார் எனினுமாம்.

"சூடுவேன் பூங்கொன்றை சூடிச்சிவன் திரள்தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கி நின்று
ஊடுவேன் செவ்வாய்க் குருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்" அம்மானை 17.

என அடிகள் அருளியமை ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. இறைவன் கழுநீர் மாலை அணிந்தமை "கழுநீர் மாலைக் கடவுள் போற்றி" (போற்றி 217) என்பதனாலுமறிக. இறைவன் பரமாசாரியனாய் அடிகளுக்கு உபதேசஞ் செய்தபோது கழுநீர் மாலையை அணிந்திருந்தார் என்பது,

"வண்ணமென் கழுநீர் மாலை வளம்பெற வணிந்து" (திருப்பெருந் 50)

"துற்ற சாந்துடன் முயங்குசெங் கழுநீர்த் தொடையலின் சுமை
பொறுதெனத் துளங்கி...இறைவன், கவின்கொள் மார்ப
ணி மலர்த்தொடை கழித்து" (திருப்பெருந் 62)

எனத் திருவாதவூரடிகள் புராணத்து வருவனவற்றாலுமறிக.

115 6. அரியொடு பிரமற்கு அளவு அறியாதவன் - திருமாலுக்கும் பிரமனுக்கும் எல்லை அறியப்படாதவன், பரிமாவின் மிசை பயின்ற வண்ணமும் - எல்லாரும் காணும்படி குதிரையின்மேல் பலகாலும் ஊர்ந்த தன்மையும்.

ஒடு - எண்ணுப் பொருளது. அளவு - எல்லை. "அகடுசேர்பு பொருந்தி அளவினிற்றிரியாது" (மலைபடு 33) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அறியாதவன் - அறியப்படாதவன். செயப்பாட்டு வினையாலணையும் பெயர். பரிமா - குதிரையாகிய விலங்கு. பரி - குதிரை. பயின்ற என்றது குதிரைமீது நெடும்பொழுது ஊர்ந்து வந்தமையைக் குறித்தது. நெருங்கி வந்த எனினுமாம். வண்ணம் என்றது தேவர்களிற் சிறந்த அரிக்கும் பிரமற்கும் அறிதற்கரிய இறைவன் அடிகள் பொருட்டு எல்லாருங்காணப் பரிமாவின்மீது எளிமையாய் வந்த தன்மையைக் குறித்தது. "பரிமா வேறி ஐயன் பெருந்துறையாதி யந்நாள்...ஆண்டுகொண்ட இயல்பறிவா ரெம்பிரா னாவாரே" (திருவார் 4) என வருதல் காண்க.

117—8. மீண்டு வாரா வழி அருள்புரிபவன் - திரும்பி இப்பிறவிக்கு வராத வீட்டு நெறியை அருள்செய்பவன், பாண்டி நாடே பழம்பதியாகவும் - பாண்டி நாட்டினையே தமது பழைய பதியாகக் கொண்டருளியும்.

மீண்டு வாராவழி - பரமுத்திவழி. மீளத்திரும்பாத வழியிற் சென்று இறைவன் திருவருளைப் பெற்று ஒன்றானவர் மீண்டு இப்பிறப்பினை அடையாராதலின், அப்பேற்றினைத் தருகின்ற நெறியினை 'மீண்டு வாரா நெறி' என்றார்.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி" குறள் 356.

என்பதும் ஈண்டு அறியற்பாலது. மீண்டு வாரா வழியை இறைவன் அருள்புரிதல், "வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி, ஆரா வமுதாய் அமைந்தன்றே" (திருவெண்பா 7) என்பதனாலுமறியப்படும்.

பாண்டியன்நாடு என்பது பாண்டிநாடு என மருவிற்று. பாண்டி நாட்டினைப் பழம்பதியென்றது அங்கயற்கண்ணியம்மையாரும் சோமசுந்தர பாண்டியரும் உக்கிரகுமாரரும் மதுரைமாநகரில் அரசுவீற்றிருந்து அந் நாட்டினைப் புரந்தமைபற்றியாகும்.

"தென்பாண்டி நாட்டானே" சிவபுரா 90.
"தென்னாடுடைய சிவனே போற்றி" போற் 164.
"தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானை" அம்மானை 10.
"தென்னனைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை" அம்மானை 19.
"தென்பாண்டி நாடனை" குயில் 2.

என இத் திருவாசகத்து வருவனவுங் காண்க.

"கடுக்கைமலர் மாற்றி வேப்பலர் சூடி
ஐவாய்க் காப்புவிட் டணிபூ ணணிந்து
விடைக்கொடி நிறுத்திக் கயற்கொடி யெடுத்து
வழுதி யாகி முழுதுல களிக்கும்
பேரரு ளுடையகன்" (2 : 9-14)

எனக் கல்லாடத்து வருதலும் ஈண்டு அறியற்பாலது.

பதி - இருப்பிடம். "தகைமிக்க தாழ்சினைப் பதிசேர்ந்து புள்ளார்ப்ப" (கலி 118 : 17) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

119—20. பத்தி செய் அடியரை பரம்பரத்து உய்ப்பவன் - அன்பினால் தன்னை வழிபாடு செய்கின்ற அடியவரை மிகமேலான வீட்டுலகிற் சேர்க்கின்ற இறைவன், உத்தரகோசமங்கை ஊராகவும் - உத்தரகோச மங்கையைத் தானிருக்கும் ஊராகக் கொண்டருளியும்.

பத்தியினாற் செய்யும் வழிபாட்டினைப் 'பத்திசெய்' என்றார். அவ்வழிபாடு இறைவனை இடைவிடாது நினைத்தலும் வணங்குதலும் வாழ்த்துதலுமாம். பரம் - சுத்தவித்தியாதத்துவம். இது சிவதத்துவம் ஐந்தனுள் கீழ்ப்படிகணுள்ளது. அதன் மேலே ஈசுவரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் தத்துவங்கள் உள்ளன. அவை மேன்மேல் நோக்க ஒன்றினொன்று உயர்வுடையன. அத்தத்துவங்களை அடைந்தோர் விஞ்ஞான கலராய் மீண்டுவாரா முத்தியாகிய சாயுச்சியத்தை அடைவர். சுத்த வித்தியாதத்துவம், தனக்குக் கீழேயுள்ள வித்தியாதத்துவம், ஆன்மதத்துவங்களை நோக்க உயர்வுடையதாகலின் 'பரம்' எனப்படும். பரம் - மேலானது எனப்பொருள்படும் வடசொல். அதனிலும் ஈசுவரமும் அதனிலும் சாதாக்கியமும் அதனிலும் சத்தியும் அதனிலும் சிவமும் உயர்வுடை

யன. இவ்வுயர் நிலைகளில் அடியாரைச் சேர்த்தலாற் 'பரம்பரத்துய்ப்பவன்' என்றார்.

உத்தரகோசம் - வீட்டுநூல். என்றது சர்வஞானோத்தரம் முதலிய ஆகமங்களை. இறைவன் அங்கு எழுந்தருளியிருந்து உமையம்மை முதலாயினோர்க்கு இவற்றை உபதேசித்தமையின் அத்தலம் உத்தரகோசமங்கையெனவும், அஃது அவ்விறைவர்க்குச் சிவபுரம்போல் ஊராகவும் கூறப்பட்டது. அடிகள்,

"தாதாடும் பூஞ்சோலைத் தத்தாய் நமையாளும்
மாதாடும் பாகத்தன் வாழ்பதியென் — கோதாட்டிப்
பத்தரெல்லாம் பார்மேற் சிவபுரம்போற் கொண்டாடும்
உத்தர கோசமங்கை யூர்"

எனத் திருத்தசாங்கத்தில் அருளியமையுங் காண்க.

121—2. ஆதி மூர்த்திகட்கு அருள் புரிந்தருளிய - முதலிற்றோன்றிய காரணேசுரர் முதலானவர்களுக்குத் திருவருள் செய்தருளிய தேவதேவன் திருப்பெயராகவும் - மகாதேவன் என்பது தனக்குரிய அழகிய பெயராகக் கொண்டருளியும்.

ஆதிமூர்த்திகளாவார்: பிரம விஷ்ணு உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் என்போர். இவர்களுள் பிரமா ஆன்ம தத்துவத்திலும், விஷ்ணு வித்தியாதத்துவத்திலும், உருத்திரன் சுத்த வித்தையிலும், மகேசுவரன் ஈசுவரத்திலும், சதாசிவன் சாதாக்கியத்திலும் பண்டுதொட்டே கடவுட்டன்மை பெற்றவராய் அமர்ந்திருந்து அவ்வத் தத்துவ புவனங்களில் இறைவனருளால் அதிகாரம் செலுத்துதலின் 'ஆதிமூர்த்திகள்' எனப்பட்டனர்.

தேவதேவன் - தேவர்களுக்குத் தேவன்; என்றது மகாதேவன் என்றபடி. இறைவன் ஆதிமூர்த்திகட்கும் முதல்வனுதல் பற்றித் 'தேவதேவன்' எனப்பட்டான். "தேவர்தேவுக்கே" (கோத்தும்பி 5) எனவும் "தேவதேவன் மெய்ச்சேவகன்" (சென்னி 1) எனவும் அடிகள் அருளியமையும் காண்க.

123—4. இருள் கடிந்து அருளிய - உயிர்களின் அறியாமை இருளைப் போக்கியருளிய, இன்ப ஊர்தி - பேரின்ப வடிவாகிய இடபத்தினை வாகனமாகவுடைய இறைவன், அருளிய பெருமை அருள் மலையாகவும் - எல்லாவுயிர்க்கும் அருள்செய்த பேரருளே தான் அமர்ந்திருக்கும் மலையாகவும் கொண்டருளி.

இருள் - அறியாமை. கடிதல் - போக்குதல். "கொடிது கடிந்து கோறிருத்தி" (புற 17 : 5) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடராகிய இறைவன், உயிர்களின் அறியாமையாகிய இருளைப் போக்குதலின் 'இருள்கடிந் தருளிய' என்றார்.

"இருள்கெட அருளும் இறைவா போற்றி" போற்றி 169.
"பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே" கோயிற் 3.
"இன்பம் பெருக்கி யிருளகற்றி" திருவெண்பா 11.

என அடிகள் பிறண்டு அருளியமையுங் காண்க.

இறைவனது பேரின்பமே இடபமாக அமைந்திருத்தலின் அதனை ஊர்தியாகவுடைய இறைவனை 'இன்பவூர்தி' என்றார். ஊர்தி - ஊர்தியை யுடையவன்; பெயர். "மால்விடையூர்தி" (சதக 65) என்புழிப்போல.

அருளிய அருள் என இயையும். "அருளிய அருளும் பொய்யோ" (எண்ணப்பதி 2) என வருதலுங் காண்க. இறைவன் எவ்வுயிர்க்கும் பேரருளே செய்தலின் 'அருளிய பெருமை யருள்' என்றார். பெருமை அருள் - பேரருள் எனத் திரிபடையாமல் இயல்பாய் நின்றது. இறைவன் உயிர்கட்குச் செய்யும் பேரருள் மிகப்பெரிதாயிருத்தலின் அதுவே அவற்கு இருக்கையாகிய மலையாகும் என்பார் 'அருண் மலையாகவும்' என்றார். "மன்னிய திருவருண் மலையே போற்றி" (போற்றி 128) என்பதும் ஈண்டறியற்பாலது.

125 – 6. எ எவர் எப்பெருந் தன்மையும் திறமும் - எவ்வெவ்வுயிர்களது எவ்வளவு பெருந்தன்மையினையும் கூறுபாட்டினையும், அப்பரிசு அதனால் ஆண்டுகொண்டு அருளி - அவ்வவ்வுயிர்க்கேற்ற தன்மைகளால் அடிமை கொண்டருளி.

எவ்வெவர் என்றது ஆணவமாகிய ஒரு மலமுடைய விஞ்ஞானகலரும், அதனோடு கன்மமலமுடைய பிரளயாகலரும், அவற்றோடு மாயாமல முடைய சகலருமாகிய முத்திறத்துயிர்களையும். இம்முத்திறத்துயிர்களுள் விஞ்ஞானகலரும் பிரளயாகலரும் ஏனைச் சகலரினும் பேரறிவும் பேராற்றலுமுடையராகலின் 'எப்பெருந்தன்மையும்' என்றும், சகலரிற் பல கூறுபாடுகளுண்மையால் 'திறமும்' என்றும் அருளிச்செய்தார். திறம் - கூறுபாடு. "அலகைத் தவிர்த்த எண்ணருந் திறத்த" (மலைபடு 347) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

இம்முத்திறத்தாருள் விஞ்ஞானகலருக்கு அவர்களைப் பற்றியிருக்கின்ற ஆணவமலம் ஒன்றினையும் அவர்கள் அறிவுக்குட் பேரறிவாய்ப் பிரகாசித்துத் தோன்றி நீக்கி அருள்வடிவாக்கி *ஞேயத்தில் அழுந்தும்படி திருவருள் செய்வார்; பிரளயாகலருக்குத் திருவுருக் காணும்படிக்கு மானும் மழுவும் சதுர்ப்புயமும் காளகண்டமும் முக்கண்ணுமுடைய திருமேனி கொண்டிருந்து அவர்களைப் பற்றியிருக்கின்ற ஆணவமலம் கன்மமலம் இரண்டையும் நீக்கி அருள்வடிவாக்கி ஞேயத்திலழுந்தும்படி திருவருள் செய்வார்; அசுத்தமாயையிற் றோன்றிப் பூலோகத்தை விட்டு நீங்காம லிருக்கின்ற சகலருக்கு அவர்களைப் போல மானுடச்சட்டை சாத்தி மாணாக்

* ஞேயம் - ஞானத்தால் உணரப்படும் பொருள்; இறைவன்.

காட்டி மானைப் பிடிப்பது போல முன்னின்று தரிசனை கொடுத்து அவர்களைப் பற்றியிருக்கின்ற ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் தீக்ஷாக்கிரமங்களினாலே தீர்த்து அருள்வடிவாக்கி அடிமை கொண்டருளுவார். இதனால் 'எப்பெருந்தன்மையும் எவ்வெவர் திறமும், அப்பரிசதனா லாண்டு கொண்டருளி' என்றார். இறைவன் மூவகை ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் முறைமையினை,

"மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க்கு
அஞ்ஞான அச்சகலர்க்கு அக்குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்தும் அன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்தும் தான்குருவாய் முன்" (8ம் சூத் 2ம் அதி)

என்னும் சிவஞானபோதத் திருவெண்பாவானும்,

"நன்னெறிவிஞ் ஞானகலர் நாடுமலம் ஒன்றினையும்
அந்நிலையே உள்நின் றறுத்தருளிப்—பின் அன்பு
மேவா விளங்கும் பிரளயா கலருக்குத்
தேவாய் மலகன்மந் தீர்த்தருளிப்—பூவலயந்
தன்னின்று நீங்காச் சகலர்க் கவர்போல
முன்னின்று மும்மலந்தீர்த் தாட்கொள்கை—அன்னவனுக்
காதிகுண மாதலினால்" (60-63)

என்னும் போற்றிப் பஃறொடை வெண்பாவானும் அறிக. இதனாற் சகல வர்க்கத்துட்பட்ட தம்மைக் குருமூர்த்தியாய் எழுந்தருளி வந்து இறைவன் ஆட்கொண்டருளியமையுங் கூறியருளினார்.

127—31. நாயினேனை - நாய்போலக் கீழ்ப்பட்ட அடியேனை, நலம் மலி தில்லையுள் - நன்மை மிகுந்த தில்லைப்பதியின்கணுள்ள, கோலம் ஆர் தரு பொதுவினில் வருக என - அழகுநிறைந்த அம்பலத்தின்கண்ணே வருவாயாக வென்று சொல்லி, ஏல என்னை ஈங்கு ஒழித்து அருளி - என் வினைக்குப்பொருந்த அடியேனை இந்நிலவுலகத்திலேயே விடுத்தருளி, அன்று உடன் சென்ற அருள் பெறும் அடியவர் - அந்நாளில் தன்னொடு வந்த தன்னருளைப் பெறுதற்குரிய அடியார்கள், ஒன்ற ஒன்ற உடன் கலந்து அருளியும் - தன்னொடு பொருந்தப் பொருந்த அவர்களோடு இரண்டறக் கலந்தருளியும்.

பிரமபுரமாகிய சரீரத்திலுள்ள தகரமாகிய புண்டரீக வீட்டினுள்ளேயிருக்கும் ஆகாயம் தியானிக்கற்பாலது என சாந்தோக்கியோபநிடதத்திலே கூறப்பட்டது. இவ்வாறே இப்பிரமாண்டம் பிரமபுரம் எனவும், இப்பிரமாண்டத்தினுள்ளே இருக்கும் தில்லைவனம் புண்டரீக வீடு எனவும், தில்லைவனத்தில் நிருத்தம் செய்யும் சிவம் ஆகாயம் எனவும் கூறப்படும். இவ்வாகாயம் சடமாகாது சித்தாதலால் சிதம்பரம் எனப்படும். இச்சிதம்பரம் எந்நாளும் களங்கமின்றி விளங்குந் தானமாதலால் 'நலமலி தில்லை' எனப்பட்டது.

திருப்பெருந்துறையிலே குருந்தமர நீழலில் இறைவன் பரமாசாரியனாய் வீற்றிருந்து அடிகளை ஆட்கொண்டருளியபின் தன்னோடு உடன் வந்த மற்றைய அடியார்களோடு மறைந்தபோது 'நீ தில்லைப்பொதுவின் கண்ணே வருக' எனக் கட்டளையிட்டமையால் 'நாயினேனை நலமலி தில்லையுட். கோலமார்தரு பொதுவினில் வருகென' என்றார்.

கோலம் - அழகு. "கோலமால் வரை" (தே. சுந் 55 : 5) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. பொது - மன்று; அம்பலம். ஏல - பொருந்த. ஆட்கொண்டருளிய பொழுதே யான் தன்னொடு கலத்தற்குத் தகுதியில்லாமையைக் கண்டு என் நிலைமைக்குப் பொருந்துமாறு விடுத்துச் சென்றமையின் 'ஏல' என்றார். இனி, ஏல என்பதற்கு அடியார்களோடு மறைதற்கு முன்னமே எனினுமமையும்.

அன்று என்றது இறைவன் அடிகளை ஆட்கொள்ள வந்த நாளைக் குறித்தது. அன்று உடன்வந்த அடியவர்கள் இறைவனொடு உடன்கலத்தற்குரிய தகுதிப்பாடுடையவர்களாய் இறைவனொடு பொருந்துதலின், 'அன்றுடன் சென்று அருள் பெறும் அடியவர் ஒன்றவொன்ற' என்றார்.

"செழுங்கமலத் திரளனநின் சேவடிசேர்ந் தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர்" (அடைக்கலப் 1)

என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறும் காண்க.

ஆண்டுகொண்டருளி (126) ஒழித்தருளி (129) உடன்கலந்தருளியும் (131) என முடிக்க.

132—9. எய்த வந்திலாதார் எரியில் பாயவும் - அங்ஙனம் அவனது அருளை அடைய வாராதவர் ஞானத்தீயிற் பாய்ந்து தன்னொடு கலக்கவும், மாலது ஆகி மயக்கம் எய்தியும் - தம்மீது வேட்கையுடையவராய் அவ்விருப்பம் கைகூடாமையின் மயக்கம் அடைந்து உடல்நீத்துத் தன்னை அடையவும், பூதலம் அதனில் வீழ்ந்து புரண்டு அலறியும் - பூமியில் வீழ்ந்து புரண்டு அலறி உடல்நீத்துத் தன்னை அடையவும், கடல் புக கால் விசைத்து ஓடி மண்டி - இறைவனது பரமானந்தக் கடலிற் புகுதற்குக் காலால் விரைந்து ஓடி மிக்குச்சென்று, நாத நாத என்று அழுது அரற்றி - தலைவனே தலைவனே என்று அழுது வாய்விட்டுப் புலம்பி, பாதம் எய்தினர் பாதம் எய்தவும் - உடல் நீத்துத் திருவடியை அடைந்தவர் அத்திருவடியோடு இரண்டறக் கலக்கவும், பதஞ்சலிக்கு அருளிய பரமநாடக என்று - பதஞ்சலி முனிவருக்கு அருள்புரிந்த மேலான கூத்தனே என்று புகழ்ந்து, இதம் சலிப்பு எய்த நின்று ஏங்கினர் ஏங்கவும் - அவ்வளவில் இறையருள் கைகூடாமையால் உள்ளம் அயர்வு அடையநின்று ஏங்கினவர் அவ்வேகத்தினால் உடல் நீத்துத் தன்னை அடையவும்.

எய்த வந்திலாதார் பரமாசாரியர் அருள்செய்த வண்ணம் பின் தடாகத்திற் ரேன்றும் ஞானக்கினியில் வீழ்ந்து இறைவனிடத்துச் சென்று கலந்தார்கள் என்பது,

''மருவுந் தொண்ட ருடன்கூடி வைகிச் சிலநாட் செல்லுமதற்
பரமன் சொல்லும் படியேபின் பயிலும் பொய்கைத் தழல்கண்டு
கருதுந் திருவைஞ் செழுத்தோதிக் காணக் கிளருங் கனன்மீது
விரவும் பேரன் புடையார்க ளெல்லாஞ் சென்று வீழ்ந்தார்கள்''
திருவெம்பல 16.

எனத் திருவாதவூரடிகள் புராணத்து வருதலானுமறிக. எரி என்றது ஞானக்கினியை. ''பலமலர் கமழுந் தடமீதிற் பரவரு ஞானவனல் சேர்வித், திலதென நீடுஞ் சடம்வேவித் திவ்வுட லீந்தோ ரிந்நாளில்'' (திருவாத திருவம்பல 20) என வருதலும் காண்க.

மால் - வேட்கை. ''ஊடியார் நலந்தேம்ப வொடியெறிந் தவர்வயின், மாறீர்க்கு மவள் மார்பென்று'' (கலி 68 : 12-3) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. ''மாயோன் மேக மயக்கம் வேட்கை, மாலென் றுரைப்பர்'' எனப் பிங்கலந்தையில் (10 : 931) வருதலுங் காண்க. மயக்கம் எய்தவும் என்பதற்கு மயக்கம் அடைந்து உடல்நீத்துத் தன்னையடையவும் எனவுரைக்க. இவ்வாறே 'புரண்டு வீழ்ந்தலறியும்' (134) 'ஏங்கினர் ஏங்கவும்' (139) என்பவற்றிற்கும் உரைக்க.

பூதலமதனிற் புரண்டு வீழ்ந்தலறுதல் இறைவனைப் பிரிந்தமையால் உளதாகிய ஆற்றுமைபற்றி. புரண்டு வீழ்ந்தலறி என்பதனை வீழ்ந்து புரண்டு அலறி என மாற்றிக்கூட்டிப் பொருள்கொள்க. ''தலைதடுமாறு வீழ்ந்து புரண் டலறி'' (அண்ட 152) அடிகள் பிறிதோரிடத்து அருளிய வாறுங் காண்க.

கடல்புகக் கால் விசைத்தோடி மண்டி என மாற்றிக்கூட்டிப் பொருள் கொள்க. கடல் என்றது பரமானந்தக் கடலே. ''பரமானந்தப்பழங்கடலதுவே'' (திருவண்டப் 66) எனவும் ''பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து'' (பிரார்த்தனை 5) எனவும் வருவன காண்க. விசைத்து - விரைந்து விசை - விரைவு ''கணைவிசை தடுப்பன'' (சீவக 2228) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. ''விசைவு முடுகலும் வேகமும் விரைவே'' என்பது பிங்கலந்தை (7 : 436). மண்டி - மிக்குச் சென்று. ''அறுவேறு வகையினஞ்சுவர மண்டி'' என்னும் திருமுருகாற்றுப்படையினும் இப்பொருட்டாதல் காண்க. அரற்றி - வாய்விட்டுப் புலம்பி. இப்பொருட்டாதல், ''கண்டவன் கரப்பக் கனவி னரற்றின்று'' (பு. வெ. மா. 302) என்புழி 'அரற்றின்று' என்பதற்கு வாய்விட்டுப் புலம்பியது என அதன் உரைகாரர் உரைத்தமையானுமறிக.

நாடகம் என்றது ஈண்டுக் கூத்தினை பதஞ்சலி முனிவர்க்கு இறைவன் தனது மேலான கூத்தினைக் காட்டியருளியமையின் 'பதஞ்சலிக்கு அருளிய பரமநாடக' என்றார்.

தாருகாவனத்தின்கண் இருந்த முனிவர்கள் கொண்ட செருக்கினை அகற்றி அவர்களை ஆட்கொள்ளக் கருதிய இறைவன் திருமாலை அழகிய பெண்வடிவில் வரச்செய்து தானும் அப்பெண்ணுமாய் அவ்வனத்தின்கட் செல்ல இறைவன் அழகினைக் கண்டு காமுற்று அம்முனிவர் பத்தினிகள் நிறையழிந்தனர். திருமால் கொண்ட அழகிய பெண்வடிவைக்கண்டு தவவலியையுடைய முனிவர்கள் உரனும் செருக்கும் அழிந்தனர். பின்பு அவர் தம்நிலை சிதைத்தவர் இறைவனே என உணர்ந்து வேள்வியினின்றும் பாம்பு முதலியவற்றை ஏவ அவற்றின் வலியை அடக்கிய இறைவன் அரிய திருக்கூத்தை இயற்றினர். அத்திருக்கூத்தின் வேகத்தினால் முனிவர்கள் ஒருங்கே வீழ்ந்தார்கள் திருமாலும் அஞ்சி நடுநடுங்கிச் சோகமுற்றனர். அதுகண்ட இறைவன் அக்கடுங்கூத்தினை மாற்றி இன்பக்கூத்து இயற்ற அதனை உமையம்மையாரும் திருமாலும் ஏனைக்கடவுளரும் கண்டு இன்பத்திலாழ்ந்தனர். திருமால் தன் இருக்கை எய்தி இறைவன் இன்பக்கூத்தினை நினைந்து களிப்பாற்றுயிலாது தனக்கு அணையான ஆதிசேடர்க்கு அப்பேற்றினை உரைப்ப அவரும் சிவபெருமானுடைய இன்பக் கூத்தினைக் காண விரும்பினராக அதனை அறிந்த திருமால் மிகவும் மகிழ்ந்து நீ தவத்தைச் செய்வாயாக என்று கூறிவிடுப்ப அவரும் வடகயிலை சார்ந்து இறைவன் திருக்கூத்தினைக் காணத் தவஞ்செய்தார். அதுகண்டு இறைவன் அவர்முன் தோன்றி அவர் அன்பினை பிறர் அறியும்வண்ணம் புலப்படுத்தி நாம் தேவதாரு வனத்திலே வெளிப்பட்டுநின்று விட்டுணு முதலானோர் தரிசிக்கத் திருக்கூத்து இயற்றியபொழுது அவ்வனம் பூமிக்கு நடுவன்மையால் அக்கூத்தினைப் பொறுக்கமாட்டாது அசைந்தமை கண்டு கூத்தினை விரைவில் ஒழித்துவிட்டோம். உனக்கும் இப்பொழுது இதுவே இடமாக நின்று தரிசிப்பிக்குமாறு இல்லை. அக்கூத்தினைப் பொறுக்கவல்ல சபை ஒன்று உண்டு. பிண்டமும் அண்டமும் தம்முள் ஒப்பனவாதலாலே உடம்பினுள்ள இடை பிங்கலை சுழுமுனை என்னும் மூன்று நாடிகளிற் சுழுமுனை நாடி உடம்பின் நடுவிற் போதல்போல இந்நிலத்திற் சுழுமுனை நாடி தில்லைவனத்திற்கு நேரே போய்க்கூடும். அந்தத் தலத்திலே மூலலிங்கம் இருக்கின்றது. அதற்குத் தெற்கே சபை ஒன்றுண்டு. அங்கே நாம் எக்காலத்தும் திருக்கூத்து இயற்றுவோம். அதனை அங்கே ஞானக் கண்களினால் தரிசித்தவர் பிறவித்துன்பம் நீங்கப்பெறுவர். ஆதலால் இனி நீ இவ்வுருவை ஒழித்து, அத்திரி முனிவரின் மனைவி அனசூயையின் அஞ்சலியிடத்தே ஐந்தலைமருவும் ஓர் பாலமாசுணமாகக் கண்டு அச்சத்தினால் அவள் கையைவிட நீ பதஞ்சலியான தன்மையினால் இப்பொழுதும் அந்த வடிவமாகிப் பதஞ்சலியெனும் பெயரைத் தரித்துத் தில்லைவனத்தின்கட் சேர்வையேல், நமது திருக்கூத்தினைக் காணப் பூசை இயற்றிக்கொண்டி

ருக்கும் புலிக்கான் முனிவருக்கும் நினக்கும் தைபூசம் குருவாரத்தோடு பொருந்தும் தினத்திற்பொருந்திய மத்தியானத்திலே இன்பக்கூத்தைத் தரிசிக்கச் செய்வோம் என்று அருளிச்செய்தார். இறைவன் அருளியவாறு பதஞ்சலி முனிவரர் தில்லையுட் சென்று புலிக்கான் முனிவாருடன் இருந்து தவமியற்றிக் குறித்த நாளில் இறைவன் இயற்றிய இன்பக்கூத்தினை நேரே கண்டுகளித்தனர் எனக் கோயிற்புராணம் கூறும்.

*140—6.* எழில் பெறும் இமயத்து இயல்பு உடை - எழுச்சிபெறும் இமயமலையின் தன்மையினையுடைய, புலியூர் அம்பொன் பொலிதரு பொதுவினில் - புலியூரின்கணுள்ள அழகிய பொன் வேய்ந்து விளங்கும் சிற்றம்பலத்திலே, நடம் பயில் - திருக்கூத்தைப் பயிலும், கனி தரு செவ்வாய் உமையொடு காளிக்கு அருளிய - கொவ்வைக் கனிபோன்ற சிவந்த வாயினையுடைய உமையம்மைக்கும் காளிக்கும் அருள்செய்த, திருமுகத்து அழகு உறு சிறு நகை இறையவன் - அழகிய முகத்திடத்தான அழகு மிக்க சிறு சிரிப்பினையுடைய இறைவன், ஒலிதரு உயர் கயிலை கிழவோன் - மேலோர்கள் வழுத்தும் வாழ்த்தொலியையுடைய மேலான திருக்கயிலைமலைக்கு உரிமையுடையோன், ஈண்டிய அடியவரோடும் - தம்மை நெருங்கிய அடியவர்களுடன், பொலிதரு புலியூர் புக்கு இனிது அருளினன் - விளங்குகின்ற புலியூரின்கணுள்ள சிற்றம்பலத்தின்கண்ணே புகுந்து இனிதாக எழுந்தருளினன்.

எழில் - எழுச்சி. நெடிய பெரிய சிகரங்களையுடைய பனிவரையாதலின் 'எழில்பெறு மிமயத்து' என்றார். "நெடும்பெருஞ் சிமையத்து" (முருகு 253) என வருதலும் காண்க. இமயமலையின் சிகரம் பொன்னிறமாய் விளங்குதல் போலப் புலியூரின்கணுள்ள சிற்றம்பலமும் பொன்வேய்ந்து விளங்குதலின் 'இமயத் தியல்புடை அம்பொன் பொலிதரு பொது' என்றார். இமயம் பொற்சிகரங்களையுடைத்தாதல் "பொற் கோட்டிமயமும்" "பொன்னுடை நெடுங்கோட் டிமயம்" (புற 2 : 24; 369 : 24) என வருவனவற்றாலுமறிக. இயல்புடைப் பொது எனவும், அம்பொற் பொலிதரு பொது எனவும் இயையும். புலிக்கால் முனிவர் சிவபெருமானைத் தில்லைக்கண் வழிபாடாற்றிய காரணத்தால் தில்லை 'புலியூர்', எனப்பட்டது. புலியூர்ப்பொது - புலியூர்க்கணுள்ள பொது.

நவிலுதல் - பயிலுதல். "நடைநவில் பெரும்பகடு" (பெரும்பாண் 198) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. இறைவன் தில்லைச்சிற்றம்பலத்தின்கண்ணே ஓவாது திருக்கூத்தியற்றுதலின் 'பொதுவினில் நடம் நவில்' என்றார். "திகழ்தில்லை யம்பலத்தே திருநடஞ்செய் கூத்தர்" (தோணோ 1) என வருதலும் காண்க. நடம்நவில் (141) இறைவன் (144) என இயையும்.

கனிதரு செவ்வாய் - கனியை ஒத்த செவ்வாய். "கனியை நேர்துவர் வாயார்" (சதக. 27) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுந்

காண்க. கனி என்றது கொவ்வைக்கனியை. "கொள்ளேர் பிளவகலாத் தடங் கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்" (நீத் 2) என வருதலுங் காண்க. கனிதரு செவ்வாய் உமை என்க.

"கொவ்வை வாய்க் கொடியே ரிடையாளுமை" தே. ஞான 260 : 9.

"கொவ்வைச் செவ்வாய்க் கோமள மாதுமையாள்" தே.ஞான 358 : 2

"கொவ்வையங் கனிவாய் மங்கை கொழுந்தனே" நம்பிதிருவிளை.
ஆனைசெய் 25

என வருவன காண்க.

உமையொடு காளிக்கு அருளியவென்றது உமையம்மைக்கும் காளிக்கும் அருள்செய்த என்றவாறு. உமைக்கு அருளியது திருத்த சாட்சியாக அமைந்து தரிசிக்கும் பேறுகும்.

"காடரங்கா வுமைகாண வண்டத் திமையோர் தொழ
நாடக மாடியை" ஞான 267 : 7.

"காம்பாடு தோளுமையாள் காணநட்டங் கலந்தாடல்
புரிந்தவன் காண்" நாவு 290 : 6.

"கூடிய விலயஞ் சதிபிழை யாமைக் கொடியிடை யுமையவள் காண
ஆடிய அழகா" சுந் 69 : 2.

எனத் தேவாரத்து வருவன காண்க.

காளிக்கு அருளியது காளியின் செருக்கினை ஊர்த்துவதாண்டவத்தால் அடக்கி நல்வழிப்படுத்தியதாகும்.

முன்னொரு காலத்திலே தாரகன் என்னும் அரக்கனைக் கொல்லும் பொருட்டுக் காடுகாள் என்னும் சத்தி தோற்றுவித்து அனுப்பிய காளி அவ்வரக்கனொடு பொருது அவன் உடலைப் பிளந்தவிடத்துக் கீழே சிந்திய குருதியாற் பின்னும் பல அரக்கர் உண்டாதலைக் கண்டு அவன் உடலுக்கு குருதியைத் தானே முற்றும் பருகி அதனால் வெறிகொண்டு உலகத்துள்ள உயிர்களையெல்லாம் அழிக்கப் புகுந்தனள். அதனைக்கண்ட இறையவன் அவள்முன்னே தோன்றிக் கொடுங்கூத்து இயற்றி அவள் செருக்கினை அடக்கி நல்வழிப்படுத்தியருளினார். இதனை,

"தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக் கூட்டாங்காண் சாழலோ" (சாழல் 14)

எனத் திருவாசகத்தும்,

"வல்லைவரு காளியை வகுத்து வலியாகு மிகு தாரகனை நீ
கொல்லென விடுத்தருள் புரிந்த சிவன்" ஞான 328 : 3.

"வென்றிமிகு தாரகன தாயிருயிர் மடங்கக்
கன்றிவரு கோபமிகு காளிகத மோவ
நின்றுநட மாடியிட நீடுமலர் மேலால்
மன்றன்மலி யும்பொழில்கொள் வண்திருவை யாறே" ஞான 168 : 5.

"......தாருகன் றன் னுயிருண்ட பெண்
போத்தன்றுனவன் பொங்கு சினந்தணி
கூத்தன்" நாவு 177 : 7.

"பைதற் பிணக்குழைக் காளிவெங் கோபம் பங்கப்படுப்பான்
செய்தற் கரிய திருநடஞ் செய்தன சீர் மறையோன்" நாவு 101 : 2.

"கொதியினால் வருகாளி தன்கோபங் குறைய ஆடியகூத்துடையானே"
சுந் 70 : 4.

எனத் தேவரத்தும்.

"மோடி தரவந்த மூக்க னுடைக்காளி
ஓடி யுலகுயிர்கள் உண்ணும்படி யெழலும்
நாடி யவள்வெருவி நாணிச் செருக்ககல
ஆடி யருள்செய்த யருளிங் கனுகாதோ" சயந்தன் 66.

எனக் கந்தபுராணத்தும் வருவனவற்றானுமறிக.

திருமுகத்துச் சிறுநகை இறையவன் என இயையும். "தில்லைச்சிற்றம்பலவன் சிரித்தமுகங் கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே" "குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்" (நாவு 80 : 7; 81 : 4) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. புலியூர் என்றது புலியூர்க்கணுள்ள அம்பலத்தை. அது ஞானத்தாற் பொலிதருதலின் 'பொலிதரு புலியூர்' என்றார். புக்கு - புகுந்து. கயிலை கிழவோனாகிய இறைவன் பரமாசாரியனாகத் திருப்பெருந்துறையில் எழுந்தருளிவந்து அடிகளை ஆட்கொண்டபின் தில்லையுட் கோலமார்தரு பொதுவினில் வருகெனப் பணித்தருளினமையால் இறைவன் எழுந்தருளிச் சென்ற இடமும் அதுவெனக்கொண்டு 'பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்' என்றார். ஒலிதரு கயிலை என்பதற்கு மந்திர ஒலி பயிலும் கயிலை எனினுமாம். கயிலைக்கு என நான்காவது விரிக்க. கிழவோன் - உரிமையையுடையோன். கயிலையிற் பிற அதிகார மூர்த்திகளுளராயினும் இறைவனே சிறந்த உரிமையுடையோனாதலின் 'கயிலை யுயர் கிழவோன்' என்றார். 'மானக்கயிலை மலையாய் போற்றி" (போற்றி 167) என வருதலுங் காண்க. இறைவன் (144) கிழவோன் (146) என்னும் பெயர்கள் 'புக்கினிதருளினன் (145) என்னும் வினைகொண்டு முடிந்தன.

*கயிலை யுயர்கிழவோன் (146) பயின்றனனாகிப் (2) பல்குணம் விளங்கி (3) கல்வி தோற்றியும் அழித்தும் (5) இருளைத் துரந்தும் (6) ஆகமம் தோற்றுவித்தருளியும் (10) நயப்புறவெய்தியும் (12) இன்னருள் விளைத்தும் (14) தடம்படிந்தும் (16) ஆகமம் வாங்கியும் (18) பணித்தருளியும் (20) அமர்ந்தருளியும் (22) இயல்பினதாகி (24) உய்ய (25) வந்தருளிச் (26) சாத்தாய்த் தான் எழுந்தருளியும் (28) காட்டிய கொள்கையும், (30); ஈந்தவிளைவும் (32), காட்டிய கொள்கையும் (34), குதிரையாக்கிய நன்மையும் (36), தோற்றிய தொன்மையும் (41), காட்டிய இயல்பும் (43), சேவகனாகிய கொள்கையும் (45) மண்சுமந்தருளிய பரிசும் (47), வேடங் காட்டிய இயல்பும் (48), மேனி காட்டிய தொன்மையும் (51), சிலம்பொலி காட்டிய பண்பும் (53), கரந்த கள்ளமும் (55), ஆக்கிய பரிசும் (57) சேவகனாகிய நன்மையும் (59), குருந்தின் கீழ் இருந்த கொள்கையும் (61) சித்தி அருளிய அதுவும் (63), காடது தன்னிற் கரந்த கள்ளமும் (65), ஒருவன் ஆகிய தன்மையும் (67), பாலகனாகிய பரிசும் (69) கோலங்கொண்ட கொள்கையும் (72), நல்கிய நன்மையும் (74) பாதம் வைத்தவப் பரிசும் (76) பெண்ணோடாயின பரிசும் (78) குழலியொடு மகிழ்ந்த வண்ணமும் (80) பாவகம் காட்டிய பரிசும் (82), இருந்தும் (83) காட்டியும் (84) சைவனாகியும் (85) அருத்தியோடிருந்தும் (86) விருப்பனாகியும் (86), காட்சிகொடுத்தும் (88) வழுக்காதிருந்தும் (89) அறம்பல அருளியும் (90) குறியாயிருந்தும் (91) துறைந்திருந்தருளியும் (99) ஆண்டுகொண்டருளி (126), ஒழித்தருளி (129), உடன்கலந்தருளியும் (131) புக்கினிதருளினன் (145) என வினைமுடிபு செய்க.*

---

*இத்திருவகவலின் உட்பொருள் 'சிவனது திருவருட் புகழ்ச்சி முறைமை' எனக் குறிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள் சிவபெருமான் ஆன்மாக்கள் மீது கொண்ட அளவிலாப் பெருங்கருணையாற் பல தலங்களிலும் எழுந்தருளியிருந்தும் பல அருட்டிருவுருவங்கள் கொண்டு தோன்றியும் அருள் செய்த புகழ்ச் செயல்கள் எல்லாவற்றையும் தொகுத்து முறைமையாகக் கூறுவது என்பதாம். இதனைப் "புகழ் பெருகுஞ் செய்கையெலாம் புகலகவலொன்றாகும்" என்னும் திருப்பெருந்துறைப் புராணத்தால் அறிக.*

---

# திருவண்டப் பகுதி

சிவனது தூலசூக்குமத்தை வியந்தது

தில்லையிலருளிச் செய்யப்பட்டது

இணைக்குறளாசிரியப்பா

திருச்சிற்றம்பலம்

அண்டப் பகுதியி னுண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் றுன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் றெரியின்
வேதியன் றொகையொடு மாலவன் மிகுதியும்
தோற்றமுஞ் சிறப்பு மீற்றொடு புணரிய
மாப்பே ரூழியு நீக்கமு நிலையுஞ்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்
தெறியது வளியிற்
கொட்கப் பெயர்க்குங் குழகன் முழுவதும்
படைப்போற் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போற் காக்குங் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவு டிருத்தகும்
அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோ னாடொறும்
அருக்கனிற் சோதி யமைத்தோன் றிருத்தகு
மதியிற் றண்மை வைத்தோன் றிண்டிறற்
றீயில் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலி னூக்கங் கண்டோ னிழறிகழ்
நீரி லின்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணிற் றிண்மை வைத்தோ னென்றென்
றெனைப்பல கோடி யெனைப்பல பிறவும்
அனைத்தனைத் தவ்வயி னடைத்தோ னஃதான்று
முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்னே ரில்லோன் றானே காண்க

ஏனத் தொல்லெயி றணிந்தோன் காண்க
கானப் புலியுரி யரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறு நினைதொறும்
ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன்
இன்னிசை வீணையி லிசைந்தோன் காண்க
அன்னதொன் றவ்வயி னறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க அநேகன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க
சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க
ஒருவ னென்னு மொருவன் காண்க
விரிபொழின் முழுதாய் விரிந்தோன் காண்க
அணுத்தருந் தன்மையில் ஐயோன் காண்க
இணைப்பரும் பெருமையி னீசன் காண்க
அரியதி லரிய வரியோன் காண்க
மருவியெப் பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க
அந்தமு மாதியு மகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதுஞ் செல்வது மானோன் காண்க
கற்பமு மிறுதியுங் கண்டோன் காண்க
யாவரும் பெறவுறு மீசன் காண்க
தேவரு மறியாச் சிவனே காண்க
பெண்ணா ணலியெனும் பெற்றியன் காண்க
கண்ணா லியானுங் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கு மமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவனெனை யாட்கொண் டருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளுந் தானு முடனே காண்க
பரமா னந்தப் பழங்கட லதுவே
கருமா முகிலிற் றோன்றித்
திருவார் பெருந்துறை வரையி லேறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய

ஐம்புலப் பந்தனை வாளர விரிய
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப
நீடெழிற் றோன்றி வாளொளி மிளிர
எந்தம் பிறவியிற் கோப மிகுத்து
முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்
பூப்புரை யஞ்சலி காந்தள் காட்ட
எஞ்சா வின்னரு ணுண்டுளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளந் திசைதிசை தெவிட்ட வரையுறக்
கேதக் குட்டங் கையற வோங்கி
இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணந்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாப நீங்கா தசைந்தன
ஆயிடை வானப் பேரியாற் றகவயிற்
பாய்ந்தெழுந் தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தமாக் கரைபொரு தலைத்திடித்
தூழூ ழோங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்ப றித்தெழுந்
துருவ வருணீ ரோட்டா வருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகின்
மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேன் மகிழ்தலி னோக்கி
அருச்சனை வயலு ளன்புவித் திட்டுத்
தொண்ட வுழவ ராரத் தந்த
அண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க
கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
அருந்தவர்க் கருளு மாதி வாழ்க
அச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலு மீர்த்தாட் கொள்வோன் வாழ்க
சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க
எய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க
கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
ஏதிலர்க் கேதிலெம் மிறைவன் வாழ்க
காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க
நச்சர வாட்டிய நம்பன் போற்றி
பிச்செமை யேற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி நாற்றிசை

நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇச்
சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனாற் காட்சியு மில்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவி னாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றென கெளிவந் தருளி
அழிதரு மாக்கை யொழியச்செய்த வொண்பொருள்
இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
அளிதரு மாக்கை செய்தோன் போற்றி
ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி
ஆற்றா வின்ப மலர்ந்தலை செய்யப்
போற்றா வாக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக் குவாஅன் மாமணிப் பிறக்க
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்
முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கு முள்ளத்
துற்றவர் வருந்த வுறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திற நோக்கி வருந்தினர்க் கொளித்தும்
இத்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்
கத்தந் திரத்தி னவ்வயி னொளித்தும்
முனிவற நோக்கி நனிவரக் கௌவி
ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென ஒளித்துஞ் சேண்வயின்
ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுட் டிருந்த வொளித்தும்
ஒன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்
பண்டே பயிறொறு மின்றே பயிறொறும்
ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்
ஆர்மி னார்மி னாண்மலர்ப் பிணையலிற்
தாடளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் றொடர்மின் விடேன்மின்
பற்றுமி னென்றவர் பற்றுமுற் றொளித்துந்
தன்னே ரில்லோன் றானேயான தன்மை
யென்னே ரனையோர் கேட்கவந் தியம்பி

அறைகூவி யாட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்
உளையா வன்பென் புருக வோலமிட்
டலைகடற் றிரையி னார்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண் டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவுங்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றே னாக வவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்
ஏற்றார் மூதூ ரெழினகை யெரியின்
வீழ்வித் தாங்கன்
றருட்பெருந் தீயி னடியோ மடிக்குடில்
ஒருத்தரும் வழாமை யொடுக்கினன்
தடக்கையி னெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியே னாயேன் றானெனைச் செய்தது
தெரியே னாவா செத்தே னடியேற்
கருளிய தறியேன் பருகியு மாரேன்
விழுங்கியு மொல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடற் றிரைபுரை வித்
துவாக்கட னள்ளுநீ ருள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுத மயிர்க்கா றோறுந்
தேக்கிடச் செய்தனன் கொடியே னூன்றழை
குரம்பை தோறு நாயுட லகத்தே
குரம்பைகொண் டின்றேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான வமுத தாரைகள்
எற்புத் துளைதொறு மேற்றின னுருகுவ
துள்ளங் கொண்டோ ருருச்செய் தாங்கெனக்
கள்ளூ றாக்கை யமைத்தன னொள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையு மிருப்ப தாக்கின னென்னிற்
கருணை வான்றேன் கலக்க
அருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே.

திருச்சிற்றம்பலம்

**1—6.** அண்ட பகுதியின் உண்டை பிறக்கம் - அண்டமாகிய **பகுதிகளின் உண்டை**யாகிய வடிவமும் விளக்கமும், அளப்பு அரும் **தன்மை** - **அளத்தற்கு அரிய தன்மை**யும், வளம் பெரும் காட்சி - வளப்பாடுடைய பெரிய தோற்றமும், ஒன்றனுக்கு ஒன்று நின்ற எழில் பகரின் - **ஒன்றற்கொன்று** மேம்பட்டு நின்ற எழுச்சியினைச் சொல்லுமிடத்து, **நூற்று ஒரு கோடியின்** மேற்பட விரிந்தன - நூற்று ஒரு கோடியினும் மேற்பட விரிந்தனவாகிய அவ்வண்டங்களெல்லாம், இல் நுழை கதிரின் துன் அணு புரைய - வீட்டினுள்ளே சிறு வழியினால் நுழைகின்ற ஞாயிற்றின் கதிரிடத்து நெருக்கமாகக் காணப்படும் அணுக்களை ஒப்ப, சிறிய ஆக பெரியோன் - சிறியனவாகத் தோன்றும்படி தான் அவற்றினும் பெரியோனாக இருப்பவன்.

அண்டப் பகுதியென்றது அண்டங்களின் மூலப் பகுதிகளான மண் நீர் தீ வளி வான் என்னும் ஐம்பூதங்களினின்றும் தோற்றி வானவெளியிற் காணப்படும் உலகங்களை உணர்த்தியதாகும். ஐம்பூதங்களின் அண்டங்களேயன்றி அவற்றின் மேலே மனம் முதலிய நான்கு தத்துவங்களின் அண்டங்களும், அவற்றின் மேலே வித்தியா தத்துவங்கள் ஏழின் அண்டங்களும், அவற்றின் மேலே சிவ தத்துவம் ஐந்தின் அண்டங்களும் உண்டு என்பதை,

> "சிறிதவன் தன்னருள் புரிவோர்
> பூதமைந்தினும் ஏனைய திறத்தினும் புறத்து
> மீது மாமண்ட மெவற்றிற்கும் வேத்தியல் புரிவார்" (அவைபுகு 131)

எனக் கந்தபுராணத்து வருதலானும் உணர்க. பகுதி - பகுப்பு. "தகுதியெனவொன்று நன்றே பகுயாற் பாற்பட் டொழுகப் பெறின்" (குறள் 111) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அண்டப் பகுதிகளெல்லாம் உருண்டை வடிவினவாய் விளங்குதல் பற்றி 'உண்டைப் பிறக்கம்' என்றார். உண்டை - உருண்டை. "உண்டையுண்டதனைத் தன்னுள்ளத்துள்ளுவாள்" கம்ப. மந்தரை 41. பிறக்கம் - விளக்கம். "மாமணிப் பிறக்கம்" (திருவாசகம் திருவண்ட 124) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

அண்டப் பகுதிகள் ஒவ்வொன்றன் அளவும் அவற்றின் இடைவெளித் தூரமும் அளந்தறிய முடியாமை பற்றி 'அளப்பருந் தன்மை' என்றார். "அளவிலண்டமும்" என ஞானமிர்தத்து (கடவுள் வாழ்த்து 4) வருதலும் காண்க. ஒவ்வொரு அண்டங்களின் தோற்றங்களை ஆராயுந்தோறும் குறையாத வளப்பாடுடையனவாய் விரிதலின் 'வளப்பெருங் காட்சி' என்றார்.

நின்ற எழில் - நின்றெழில் எனப் பெயரெச்சத்து அகரம் கெட்டது. "புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை" (குறள் 59, என்புழிப் போல, எழில் - எழுச்சி. குறள் 407 பரிமேல். பகருதல் - சொல்லுதல். "பெருந் துயரி

ளேடு மொரு வீடுபெற லில்லா, திருந்தன ளெனப் பகரின்'' (கம்ப. சூளாமணி 6) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

மண் முதலிய மூலப் பொருள்களின் அண்டங்கள், ஓரினத்திலும் மற்றைய இனம் கீழுள்ளதை நோக்க மேலுள்ளது பருமனுலும் தொகையினுலும் இத்துணைய என்று கணக்கிடுதலாகாமையின் அவை தம்மை 'நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன' என்ருர். நூற்றொரு கோடி என்பது ஈண்டு தொகை குறியாது அளவின்மை குறித்து நின்றது. ''கூர் கனக ராசியொடு கோடிமணி யாலுந், தூர்மி னெடு வீதியினை'' (கம்ப. கைகேசி 96) என்புழிப் போல.

அவ்வண்டங்களெல்லாம், வீட்டினுள்ளே சிறு புழையின் வழியே நுழைகின்ற ஞாயிற்றின் கதிரிடத்து நெருக்கமாகக் காணப்படும் அணுக்களையொப்பச் சிறியவாக இறைவன் மிகப் பெரியோனுதலின் 'இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச் சிறியவாகப் பெரியோன்' என்ருர். ஞாயிற்றின் கதிர்த் தோன்றும் நுண் துகளைச் சிறுமைக்கு உவமை கூறுதலை; ''வாய்ப்பறி யலனே வெயிற்றுக ளனைத்தும் மாற்ருேர் தேஎத்து மாறிய வினையே'' (பதிற். 20 : 6—7) என்பதிலும் காண்க. இல் - வீடு. துன்னுதல் - நெருங்குதல். அணு - நுண் துகள். புரைய என்னும் உவமச் சொல் மெய்யுவமத்தின்கண் வந்தது. ''வேய்புரை மென்ருேள்'' (கலி. 39 : 48) என்புழிப் போல. இப்பகுதியால் இறைவனது வியாபகப் பெருமை மனத்துக்குஞ் சொல்லுக்கும் எட்டா இயல்பிற்று என்பது உணர்த்தியருளினுர்.

6—12. தெரியின் - ஆராயுமிடத்து, வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியும் - பிரமர்களின் கூட்டத்தோடு திருமாலினரின் கூட்ட மிகுதியும், தோற்றமும் - படைப்பும், சிறப்பும் - சிறந்து நிற்றலும், ஈற்றொடு புணரிய மா பேர் ஊழியும் - இடையிடையே உண்டாகும் அழிவுகளோடு கூடிய மிகப் பெரிய ஊழிக்காலமும், நீக்கமும் - அவ்வூழிக்கால நீக்கத்தின்பின் தோன்றுதலும், நிலையும் - அவரும் அவையும் முன்போல நிலைபெறுதலும் ஆகிய இவைகள், சூக்கமொடு தூலத்து - சூக்குமநிலைக் கண்ணும் தூலநிலைக் கண்ணும், சூறை மாருதத்து எறியது வளியின் - சுழல் காற்றினுல் வீசப்பட்ட சுழல் காற்றின்கண் அகப்பட்ட பொருள்கள் போல, கொட்க பெயர்க்கும் குழகன் - அவரும் அவையும் சுழலும் வண்ணம் நிலைபெயரச் செய்யும் அழகினையுடையவன்.

இதனுற் பெருந் திரளினரான படைப்புக் கடவுளரும் மிகுதியாக உள்ளவர்களான காத்தற் கடவுளரும் அவர்களாற் செய்யப்படும் தோற்றமும் நிலைபேறும், அவ்விருவர் வாழ்நாளில் இடையிடையே உண்டாகும் ஊழிக் காலங்களோடு கூடிய அவர்களின் வாழ்நாள் முடிபாகிய மிகப் பெரிய ஊழிக்காலமும் அதன் நீக்கத்தின்கண் அவரும் அவையும் தோன்றுதலும் நிலைபெறுதலும் ஆகிய இவைகள் மாறிமாறிச் சுழலுமாறு சுழற்றும் குழகன் என இறைவனது வரம்பிலாற்றல் கூறியவாறு.

தெரிதல் - ஆராய்தல். "தெருளுற நோக்கித் தெரியுங்கால்" (கலி 140 : 31) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. வேதியன் - வேதத்தை அறிந்த பிரமன். "வேதியன் முதலா வமரரும்" எனக் கல்லாடத்து (25 : 13) வருதலுங் காண்க. ஒவ்வொரு அண்டத்திலும் படைத்தற் கடவுளரும் காத்தற் கடவுளரும் ஒவ்வொருவர் உளராதல் பற்றி 'வேதியன் றொகையொடு மாலவன் மிகுதியும்' என்றார். மாலவன் - திருமால். "அலரவனு மாலவனு மறியாமே யழலுருவாய்" (சாழல் 6) என வருதலுங் காண்க. மிகுதி - எண்ணின் மிகுதியைக் குறித்தது. தோற்றம் - படைப்பு. "தோற்றநிலை யிறுதி கட்டுவீ டென்னு, மாற்றருஞ் செயல்வழி" என்னும் திருக்கோவையார் உரையகவலிலும் (6-7) இப்பொருட்டாதல் காண்க. சிறப்பு என்றது ஈண்டுக் காத்தற்றொழிலாற் சிறந்து நிலைபெறுதலை உணர்த்தியது. வேதியன் றொகைக்குத் தோற்றமும், மாலவன் மிகுதிக்குச் சிறப்பும் நிரனிறையாகக் கொள்க.

ஈறு என்றது மாப்பேரூழிக்கு முன்னர் இடையிடையே உண்டாகும் அழிவுகளை. இனி, ஊழிக்காலத்தில் தோற்றமும் சிறப்பும் முடிவடைதலின், 'ஈற்றொடு புணரிய மாப்பேரூழியும்' என்றார் எனினுமாம்.

"இறுதியாங் காலந் தன்னில் ஒருவனே இருவ ருந்தம்
உறுதியின் நின்று ரெண்ணின் இறுதிதான் உண்டா காதாம்"

எனச் சிவஞானசித்தியாரில் வருதலுங் காண்க.

மாப்பேரூழி என்றது சர்வசங்கார காலத்தை. மா பேர் என்னும் ஒரு பொருட்சொற்கள் இரண்டு அடுக்கி நின்று மிகப்பெரிய என்னும் பொருள்தந்து நின்றன. நீக்கம் என்றது ஈண்டு ஊழிக்கால நீக்கத்தின் பின் தோன்றுதலை உணர்த்தி நின்றது. நிலையென்றது நிலைபெறுதலை. ஊழிக்காலத்தின் பின் தோன்றுதலும் நிலைபெறுதலும் நிகழ்தலின் மாப்பேரூழியின் பின் 'நீக்கமும் நிலையும்' என்பவற்றை வைத்து ஓதினார். மாப்பேரூழியில் ஒடுங்கி மீளத்தோன்றுதலை,

"அவன் அவள் அதுவெனும் அவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே ஒடுங்கி மலத் துளதாம்
அந்த மாதி யென்மனார் புலவர்" (சூத் 1)

எனச் சிவஞானபோதத்தும், 'ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை' எனச் சிவஞானபாஷ்யத்தும் (2ம் அதிகாரம்) வருவனவற்றாலு திரிபு. சூக்கம்-சூக்ஷ்ம என்னும் வடசொற்றிரிபு. தூலம்-ஸ்தூல என்பதன் மறிக.

மாருதம்-காற்று. சூறைமாருதம்-சுழல்காற்று. "சூறை வளியே சுழன்றெழு காற்றே" எனப் பிங்கலந்தையில் (1 : 30) வருதலுங் காண்க. வளி என்றது ஈண்டு வளியின்கண் அகப்பட்டுச் சுழலும் பொருளை உணர்த்தியது. கொட்கல்-சுழலல். "கடுங்கால் கொட்கு நன்பெரும் பரப்பின், விசும்பு" (பதிற் 17 : 12-3) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. கொட்க என்பது அண்டங்களும் அண்டத்தலைவர்களும் தோற்றுதலும் நிலை

பெறுதலும் அழிதலும், மீளத்தோற்றுதலும் நிலைபெறுதலும் அழிதலு மாகிய சுழற்சியைக் குறித்து நின்றது. குழகன்-அழகன். "கூற்றுதைத்த குழகன்" (ஞான 23 : 9) எனத் தேவாரத்து வருதலுங் காண்க.

உலகமும் உயிரும் சர்வசங்கார காலத்து ஒடுங்கிய சூக்குமநிலைக் கண் ணும், அவை மீளத்தோன்றிய தூலநிலைக்கண்ணும் அவற்றை நிலை பெயரச் செய்யும் இறைவனது பேராற்றலைச், 'சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத், தெறியது வளியிற், கொட்கப் பெயர்க்குங் குழகன்' என்பதனால் அருளிச் செய்தார்.

**12—19.** முழுவதும் படைப்போன் படைக்கும் பழையோன்-எல்லா வற்றையும் படைப்பவனாகிய பிரமனையும் படைக்கும் பழையவன்; படைத்தவை காப்போன் காக்கும் கடவுள்-படைக்கப்பட்ட பொருள்களைக் காப்போனாகிய திருமாலையும் காக்கும் கடவுள்; காப்பவை கரப்போன்-காக்கப்பட்ட பொருள்களை உரியகாலத்தில் தத்தம் முதற்பொருள்களில் ஒடுக்குகின்றவன்; கரப்பவை கருதா கருத்து உடை கடவுள் - அங்ஙனம் ஒடுக்கப்பட்டவற்றை ஓய்ந்திருக்கச் செய்யும் பொருட்டுச் சிலகாலம் கருதா திருத்தலும் பின்னர்க் கருதுதலும் உடைய கடவுள்; திரு தரும் அறு வகைச் சமயத்து அறுவகையோர்க்கும்-அழகு தரும் அறுவகைச் சமய நெறியினால் அறுவகைப்பட்ட சமயத்தவர்களுக்கும், வீடு பேறாய் நின்ற விண்ணோர் பகுதி-வீட்டின்பப் பேற்றைக் கொடுப்பவராய் நின்ற கடவு ளரின் பகுப்புகள் எல்லாம், கீடம் புரையும் கிழவோன்-தன்னை நோக்கப் புழுக்களை ஒப்பத்தோன்றுமாறு தானே அவ்வீடு பேற்றை அளித்தற்கு உரிமையுடையோன்.

முழுவதும் படைப்போன் என்றது எல்லாவற்றையும் படைப்பவனா கிய பிரமனை. "முழுவதும் கண்டவனை" (சதகம் 7) என அடிகள் பிறண்டு கூறுதலும் காண்க. படைப்போன் காப்போன் எனக் கூறப் பட்ட பிரமாவும் திருமாலும் பிரகிருதி மாயைக்கணுள்ள கீழ்ப்பட்ட படைத்தற்றொழிலையும் காத்தற்றொழிலையும் ஸ்ரீகண்ட உருத்திரர் வாயி லாகப் பெற்று நடத்துபவராதலின் இறைவனைப் படைப்போற் படைக்கும் பழையோன் என்றும், 'காப்போற் காக்கும் கடவுள்' என்றும் கூறினார். "மலரோன் தாதையை வகுத்தும்" என ஞானமிர்தத்து (கடவுள் வாழ்த் 5) வருதலுங் காண்க.

காப்பவை கரப்போன், கரப்பவை கருதாக் கருத்துடைக் கடவுள் என்றது பிரமனையும் திருமாலையும் படைத்துப் படைத்தலையும் காத்தலை யும் கொடுத்து அருள்செய்த இறைவனே, காக்கப்பட்ட எல்லாவற்றை யும் ஒடுக்குபவன் என்பதும், ஒடுக்கப்பட்டவை ஓய்வடையுமாறு அவற் றைக் கருதாதிருந்து பின்னர்க் கருதிப் படைப்பவன் என்பது கூறிய வாறாகும்.

அறுவகைச் சமயம் என்றது அடிகள்காலத்து வழங்கிய சமயங்களுள் தெய்வக் கொள்கையுடையனவாய் அத்தெய்வங்களால் வீடு பேற்றினைப்

பெறுதற்குரிய அறுவகைச் சமயங்களை. அவை மணிமேகலையிற் கூறப்பட்ட இரு கூற்று அறுவகைச் சமயங்களுள் சைவம், வைணவம், ஆசீவகம், நையாயிகம், வைசேடிகம், பிரமம் என்பன போலும். சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம் என்றும் கூறுவர்.

அறுவகையோர்க்கும் வீடுபேறாய் நின்ற விண்ணோர் பகுதி கீடம்புரையுங் கிழவோன் என்றது அறுவகைப்பட்ட சமயத்தவர்களுக்கும் வீடுபேற்றினைக் கொடுப்பவராய் நின்ற கடவுளர் பகுப்பெல்லாம் புழுக்களை ஒப்பத்தோன்றுமாறு எல்லாம் வல்ல இறைவனே அவ்வீடு அளித்தற்கு உரிமையுடையோன் என விண்ணோர்பகுதியின் சிறுமையினையும் இறைவனது பெருமையினையும் விளக்கியவாறும்.

பகுதி-பகுப்பு "பகுதியாற் பாற்பட்டொழுகப் பெறின்" (குறள் 111) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க, கீடம்-புழு. கிழவோன் - உரிமையையுடையோன். மெய்யான வீடுபேற்றினை அளித்தற்கு உரிமையுடையோன் இறைவன் ஒருவனேயாதலின் அவனைக் 'கிழவோன்' என்றார். "முத்திவழங்கும் பிரான்" எனத் திருக்கோவையாரில் (127) அடிகள் அருளியமையுங் காண்க.

19—28. நாள் தொறும் அருக்கனில் சோதி அமைத்தோன் - ஒவ்வொருநாளும் எழுகின்ற ஞாயிற்றுமண்டிலத்தில் ஒளியினை அமைத்தவன், திரு தகு மதியில் தண்மை வைத்தோன் அழகு பொருந்திய திங்களிற் குளிர்ச்சியை வைத்தவன், திண் திறல் தீயின் வெம்மை செய்தோன்-திண்ணிய வலியினையுடைய நெருப்பின்கண் வெப்பத்தைச் செய்தவன், பொய்தீர் வானில் கலப்பு வைத்தோன்-பொய்யற்ற வானின்கண் மற்றைய மூலப்பொருள்களின் கலப்பினை அமைத்தவன், மேதகு காலில் ஊக்கம் கண்டோன்-மேன்மை பொருந்திய காற்றின்கட் கிளர்ச்சியினை வைத்தவன், நிழல் திகழ் நீரில் இன் சுவை நிகழ்ந்தோன்-பொருள்களின் சாயை விளங்குதற்கிடமாகிய நீரின்கண் இனிய சுவையினை நிகழச் செய்தோன், வெளிப்பட மண்ணில் திண்மை வைத்தோன்-புலனுமாறு நிலத்தினிடத்துத் திட்பத்தினை வைத்தவன், என்று என்று எனை பல கோடி எனை பல பிறவும்-இப்படியிப்படி எத்தனையோ பலகோடி பொருள்களிலும் எத்தனையோ பல கோடியாகிய அவற்றின் வேறாகிய உயிர்களிலும், அனைத்து அனைத்து அவ்வயின் அடைத்தோன்-அத்தன்மைத்து அத்தன்மைத்தான இயல்புகளை அவ்வவற்றினிடமாகச் சேர்த்தவன்; அஃது ஆன்று-அஃதன்றியும்.

அருக்கன்-ஞாயிறு. பற்றுக்கோடாயுள்ள எல்லாப் பொருள்களையும் அழிக்கவல்லதாகலின் 'திண்திறல்தீ' என்றார். 'கந்தழி' (தொல்.) என்றும் 'சேர்ந்தாரைக் கொல்லி' (குறள்) என்றும் பிறரும் கூறுதல் காண்க. உலகாயத நூலார் கூறுமாறு பொய்யாகாமல் வான் என்றுமுள்ள பொருளாதலின் 'பொய்தீர் வான்' என்றார். மற்றைய பூதங்கள் கலந்திருக்குமிடம் வானாதல்பற்றி 'வானிற் கலப்பு வைத்தோன்' என்றார்.

உயிர்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படுதலின் 'மேதகு கால்' என்றார். ஊக்கம்-கிளர்ச்சி; என்றது இடைவிடாமற் சஞ்சரித்தலை. காற்றுக்குச் 'சதாகதி' என்னும் பெயருண்மையுமறிக. "சதாகதி மைந்தனும்" எனப் பாரதத்து (புட்ப 15) வருதலுங் காண்க.

நிழல்-பொருள்களின் சாயை. "வாளை, நீர்நணிப் பிறப்பி னடுங்கு நிழல் வெரூஉ, நீத்துடை நெடுங்கயம்" (பெரும்பாண் 287 9) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. நீருக்குச் சுவை சிறப்புப் பண்பாதலின் 'நீரிலின்சுவை நிகழ்ந்தோன்' என்றார். 'நீரின் சிறப்புப் பண்பாகிய சுவை' எனப் பரிபாடலுரையில் (3 : 78 உரை) வருதலுங் காண்க.

மண்-அணு. ஈண்டு நிலத்தை உணர்த்தியது. திண்மை-செறிவு. "மண்டிணிந்த நிலனும்" (புற 2 : 1) என வருதலுங் காண்க. என்று என்று-இப்படியிப்படி. எனைப்பலகோடி என்பதில் எனை என்பது எத்துணை என்னும் பொருள்பட நின்றது. "எனைப்பகை யுற்றாரும்" (குறள் 207) என்புழிப்போல. பல கோடி என்றது பல கோடி பொருள்களை. 'எனைப் பல கோடி' என்றமையால் எனைப் பல பிறவும் என்பதற்கு எனைப் பல கோடி பிறவும் எனவுரைக்க. பிறவும் என்றது அப்பொருள்களின் வேறாகிய உயிர்களை. அனைத்து-அத்தன்மைத்து. எனைப்பல கோடி எனைப் பல பிறவும் என்றதற்கு ஏற்ப 'அனைத்தனைத்து' எனச் சுட்டு இரட்டித்தது. அவ்வயின்-அவ்விடங்களில்; என்றது எனைப் பலகோடி பொருள்களிலும் எனைப்பலகோடி உயிர்களிலுமென்றவாறு. அடைத்தோன்-சேர்த்தோன்.

29—34. முன்னோன் காண்க-எப்பொருட்கும் முன் உள்ளவன் காண்க; முழுதோன் காண்க-எல்லாவற்றையும் உடையவன் காண்க. தன் நேர் இல்லோன் தானே காண்க-தனக்கு ஒப்பாவார் ஒருவரும் இல்லாதவனாய்த் தானே தனக்கு ஒப்பாகவுள்ளவன் என்றறிக. தொல் ஏனம் எயிறு அணிந்தோன் காண்க-பழைய காலத்தில் திருமாலின் அவதாரமாகிய பன்றியின் பற்களைப் பிடுங்கி அணிந்தவன் என்றறிக; கானம் புலி உரி அரையோன் காண்க-தாருகாவனத்து முனிவர் விடுத்த புலியின் தோலை அரையில் தரித்தவன் என்றறிக; நீற்றோன் காண்க-உலகம் முழுவதினையும் அழித்தலினாகிய திருநீற்றைத் தன் திருமேனி எங்கும் அணிந்தவன் என்றறிக. நினைதொறும் நினைதொறும் ஆற்றேன் காண்க-இறைவன் திருவுருவினை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் அவனைப் பிரிந்திருத்தலைப் பொறேன் என்றறிக. அந்தோ கெடுவேன்-அப்பிரிவினைப் பொறுப்பேனாயின் ஐயகோ யான் கெட்டொழிவேன்.

இறைவன் எப்பொருட்கும் முன்னுள்ளவனாதலின் அவனை 'முன்னோன்' என்றார். "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே" (திருவா. திருவெம் 9) எனவும் "முன்னி யுலகுக்கு முன்னவன் காண்" (தே. திருநாவு 263 : 8) எனவும் வருவன காண்க. உலகமும் உயிர்களுமாகிய எல்லாம் தன்னுள் அடங்கத் தான் அவற்றையுடையனாதலின் 'முழுதோன்' என்றார்.

தனக்கு ஒப்பாவார் பிறரின்றித் தானே தனக்கு ஒப்பாயிருத்தலின் தன்னேரில்லோன் தானே காண்க' என்றார். "தன்னேரில்லோன் தானேயான தன்மை" (திருவண்ட 146) "தனையொப்பாரையில்லாத் தனிமை" (புணர்ச்சி 7) என இத்திருவாசகத்தும் "இணையொருவர் தாமல்லால் யாருமில்லார்" "நின்னுவார் பிறரன்றி நீயே யானாய்" (நாவு 296 : 7; 309 : 7) எனத் தேவாரத்தும் வருவன காண்க.

'ஏனத்தொல் எயிறு அணிந்தோன்' என்பதனைத் தொல் ஏன எயிறு அணிந்தோன் என மாற்றிக் கூட்டிப் பொருளுரைக்க. ஏனம் - பன்றி. "இருளி கனலி ஏனஞ் சூரகம் எறுழி கோலம், ஒன்றிய களிறிவை பன்றியாகும்" எனத் திவாகரத்து வருதல் காண்க. இது திருமால் அவதாரங்களுள் ஒன்று. எயிறு என்றது முன்வாய்ப் பல்வரிசையின் இருகடையினுமமைந்த பற்களை,

"புகழா வாகைப் பூவி னன்ன
வளைமருப் பேனம்" பெரும்பாண் 109-110.

எனவும்,

"பிறையுறழ் மருப்பிற் கருங்கட் பன்றி" அக 322 : 10.

எனவும் வருவன காண்க.

முன்னொரு காலத்திலே இரணியாக்கன் என்னும் அரக்கன் இந்நிலவுலகைப் பாய்போற் சுருட்டிக்கொண்டு பாதாளத்திற் சென்றானாகத் திருமால் ஒரு பன்றி வடிவெடுத்துச் சென்று அவ்வரக்கனுடலைக் கிழித்துச் செங்குருதியைப் பருகி வெறிகொண்டு உலகங்களையெல்லாம் துன்புறுத்தலானார். அதனைப் பொறுக்கலாற்றாத கடவுளர் இறைவனை அணுகி வேண்டிக்கொள்ள அவர் அப்பன்றியின் கடைவாய்ப் பல்லைப் பிடுங்கி அதனை அடக்கியதற்கு அடையாளமாக அப்பல்லை அணிந்து கொண்டார் எனச் சிவரகசியகண்டத்திற் சொல்லப்பட்டது.

"கேழல்வெண் மருப் பணிந்தநீண் மார்பர்" ஞான 243 : 6.

"புரிநூ றிகழ் மார்பி னல்ல பன்றியின் கொம்பணிந்து" ஞான 107:5

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

தாருகாவனத்து இருடிகள் விட்ட புலியினை உரித்துத் தோலை இறைவன் அரையில் தரித்தமையின் 'கானப் புலியுரி யரையோன்' என்றார்.

"எழுதரு புலியை நோக்கி யீசனை முடித்தி யென்றே
தொழுதனர் விடுப்ப வாங்கே துண்ணென வருத லோடும்
அழல்விழிப் பரமன் நேர்போய் அங்கையால் உரித்து மற்றவ்
வுழுவையந் தோலை முன்னம் உடுத்தனன் தானையொப்ப" (ததீசி 101)

எனக் கந்தபுராணத்து வருதலும் காண்க.

அழல்வண்ணனாகிய இறைவன் சர்வசங்கார காலத்து எல்லாப் பொருள்களையும் எரித்து நீறாக்க அந்நீறு பற்றுதற்குப் பற்றுக்கோடு பிறிதொன்றின்மையின் அவனையே களைகணாகப் பற்றி நிற்றலின் 'நீற்றான்' என்றார். "வெந்த சாம்பற் பொடி பூசவல்ல விடை யூர்தி" "வெந்தநீறு மெய்பூசிய வேதியன்" (ஞான 251 : 11; 304 : 7) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. எல்லாப் பொருள்களும் பருவடிவாய் நின்ற காலத்தன்றி அவை நுண்ணியவாய காலத்தும் அவையிற்றுக்கும் பற்றுக்கோடாவான் இறைவனே என்பதனை அவன் திருமேனியில் இலங்கும் திருநீறு உணர்த்துகின்றது. இனி, இறைவன் பரமாசாரியனாய் எழுந்தருளி வந்தபொழுது திருநீறு அணிந்து வந்தமையின் 'நீற்றான்' என்றார் எனினுமாம். "நீற்றுக்கோடி நிமிர்ந்து காட்டியும்" (கீர்த்தி 104) எனவும். "சிவனவன் திரள்தோண்மேல் நீறு நின்றது கண்டனை யாயினும்" (சதகம் 33) எனவும் அடிகள் அருளியமையுங் காண்க.

பரமாசாரியத் திருவுருவை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் அடிகள் அவனைப் பிரிந்திருத்தலை ஆற்றாமையின் 'நினைதொறும் நினைதோறும் ஆற்றேன் காண்க' என்றார்.

"பொருளா வென்னைப் புகுந்தாண்ட பொன்னே பொன்னம்பலக் கூத்தா
மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து வருந்துவேனை" கோயின்மூத் 8.

"முத்தனையானே மணியனையானே முதல்வனே முறையோவென்
றெத்தனையானும் யான்தொடர்ந்துன்னை யினிப்பிரிந்தாற்றேனே"
எண்ணப் 4.

என அடிகள் அருளியவாறுங் காண்க. நினைதொறும் நினைதொறும் என்ற அடுக்கு இடையீடின்றி நினைத்தலைக் குறித்தது. அந்தோ கெடுவேன் என்பது ஆற்றேனாயின் ஐயகோ கெட்டொழுவேன் எனப் பொருள்கொள்ளுமாறு நின்றது.

35—41 இன் இசை வீணையில் இயைந்தோன் காண்க-இனிய ஓசையினையுடைய வீணைவாசிப்பதில் பொருந்தியிருப்பவன் காண்க. அவ்வயின் அன்னது ஒன்று அறிந்தோன் காண்க-அவ்வீணையினிடத்து அத்தன்மைத்தாகிய அரிய இசை ஒன்றினை அறிந்தவன் காண்க; பரமன் காண்க-எல்லாவற்றிற்கும் மேலானவன் காண்க; பழையோன் காண்க - எல்லாப் பொருள்களினும் பழமையுடையவன் காண்க; பிரமன் மால் காணாப் பெரியோன் காண்க-பிரமனும் திருமாலும் காணமுடியாத பெரியோன் காண்க. அற்புதன் காண்க-வியக்கத்தக்க இயல்புகளையுடையவன் காண்க. அநேகன் காண்க-பலவடிவாயிருப்பவன் காண்க. சொல் பதம் கடந்த தொல்லோன் காண்க-சொல்லின் அளவைக்கடந்த பழையோன் காண்க; சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க-மனமும் சென்று பற்றமுடியாத சேய்மைக்கண் உள்ளவன் காண்க.

இன்னிசை-இனிய ஓசை. மதுரைக் 349 நச். இறைவன் வீணை வாசிப்பதில் இயைந்திருத்தலின் 'இன்னிசை வீணையில் இயைந்தோன்' என்றார்.

"பண்ணுலாம் பாடல்வீணை பயில்வான்" ஞான 316 : 8.

"எப்பிறை நல் வீணை வாசிக்குமே" நாவு 113 : 7.

"பண்ணார்ந்த வீணை பயின்றான் தன்னை" நாவு 257 : 2.

எனத் தேவாரத்தும்,

"மழலையாழ் சிலம்ப வந்தகம் புகுந்தோன் மருவிடந்
திருவிடை மருதே" 10 : 7.

எனத் திருவிசைப்பாவிலும் வருவன காண்க. இன்னிசை வீணையில் இயைந்தோன் என்பதற்கு இனிய ஓசையானது வீணையின்கண் நுட்பமாய்க் கலந்திருத்தல்போல அவன் உயிரிற் கலந்துள்ளோன் என்று உரைப்பாருமுளர்.

அவ்வயின் அன்னதொன்று அறிந்தோன் என்றது அவ்வீணையினிடத்து அத்தன்மைத்தாகிய இன்னிசையில் ஒப்பற்றதாகிய பிரசவோசையினை அறிந்தவன் என்றவாறு. பிரசவோசை வேதசுரங்கள் நான்கனுள் ஒன்று. அது சாமகானத்திற் புலப்படுமென்ப. 'ஏழிசையாயிசைப்பயனாய்' எனச் சுந்தரர்தேவாரத்துள் 51 : 10) வருதல் காண்க. அவ்வயின் என்னும் சுட்டு வீணையினையும் அன்ன என்னும் சுட்டு இன்னிசையினையும் குறித்து நின்றன.

பரமன் -மேலானவன். "அடியார் பந்தனை விண்டற நல்கும் பரமன்" (வார்த் 5) "பால்திரு நீற்றெம் பரமனை" (எண்ணப் 6) என அடிகள் அருளியமை காண்க.

பிரமன் மால்காணுமை இறைவன் அழலுருவாய் நின்றகாலத்தென்க. "அலரவனும் மாலவனு மறியாமே யழலுருவாய், நிலமுதற்கீழ் அண்டமுற நின்றதுதா னென்னேடீ" (சாழல் 6) என அடிகள் அருளியமை காண்க

"அடியும்முடி, பிரமன் மாலும் அறியாமை நின்ற பெரியோன்"
(ஞான 253 : 10)

"பிரமனு மாலுமேலை முடியோடு பாதம் அறியாமை நின்ற பெரி
யோன்" (நாவு 14 : 2)

எனத் தேவாரத்து வருவனவும் ஈண்டு அறியற்பாலன.

அற்புதன் என்றது இறைவனை, சர்வவல்லமை முதலான குணவிசேடங்களைக் குறித்தது.

அநேகன் என்றது 'ஒன்றாய் இருதிறனாய் ஓரைந்தாய் ஐயைந்தாய் அன்றுதியின் மீட்டுமைந்தாய் அளப்பிலவாய்' அனைமந்த அருளுருவங்களையும், 'மண்ணீரனல் வளிவானெனுடு வெண்ணீர்மதி வெங்கதிர் உயிர் எண்ணி

டுரு' என்னும் அட்டமூர்த்தங்களையும் குறிக்கும். தான் ஒருவனாயினும் உயிர்களுக்கு அருள்செய்ய வேண்டிய பல திருவுருவங்களைக் கொள்ளுதலின் 'அநேகன்' என்றார் எனினுமாம்.

பழையோனாகிய இறைவன் ஆகம அளவையைக் கடந்தோனாதலின் 'சொற்பதங் கடந்த தொல்லோன்' என்றார். என்றது வாக்குக்கெட்டாதவன் என்றவாறு.

"அப்படியு மந்நிறமு மவ்வண்ணமு
    மவனருளே கண்ணாகக் காணினல்லால்
இப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்தன்
    இவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே" (தே 311 : 10)

என அப்பரடிகள் அருளியவாறுங் காண்க. பதம்-அளவை; தரம். தொல்லோன்-பழையோன். "சுற்றம்பல மின்மை காட்டித் தன்றொல்கழறந்த தொல்லோன்" (346) என்றார் திருக்கோவையாரினும்.

சித்தர்-மனம் சேட்சியன்-தூரத்தின்கணுள்ளவன்; என்றது மனத்தினால் சிந்தித்தறிய முடியாதவன் என்றவாறு. இதனால் இறைவன் மனாதீதன் என்பது புலப்படுத்தியவாறு. "மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே" என்றார் சிவபுராணத்தும். இறைவனுக்கு 'அப்பிரமேயன்' என்னும் பெயருண்மையின் காட்சி முதலிய அளவைகளால் அறியப்படாதவன் என்பது போதரும்.

42—8 பத்தி வலையில் படுவோன் காண்க - அன்பரது பத்தியாகிய வலையில் அகப்படுவோன் காண்க; ஒருவன் என்னும் ஒருவன் காண்க - உலகிற்கு ஒரு முழுமுதல் என்று சொல்லப்படும் ஒப்பற்றவன் காண்க; விரி பொழில் முழுதாய் விரிந்தோன் காண்க - விரிந்த உலகங்கள் எல்லாமாய் விரிந்து நின்றவன் காண்க; அணு தரும் தன்மையில் ஐயோன் காண்க-அணுவிற் காணப்படும் நுட்பத்தன்மையிலும் வியக்கத்தக்க நுண்மையுடையோன் காண்க; இணைப்பு அரு பெருமையில் ஈசன் காண்க-ஒப்புச்சொல்லுதற்கரிய பெருமையினையுமுடைய தலைவன் காண்க; அரியதில் அரிய அரியோன் காண்க-அருமையையுடைய பொருள்களினும் அருமையுடைய அரியோன் காண்க; எப்பொருளும் மருவி வளர்ப்போன் காண்க-அங்ஙனம் அருமையுடையனாயினும் எல்லாப்பொருள்களிலும் தான் கலந்து நின்று அவற்றை வளர்த்து வருவோன் காண்க.

வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதவனாயினும் இறைவன் அருமையில் எளியனாய் அன்பரது பேரன்பாகிய வலையில் அகப்படுதலின் 'பத்திவலையிற் படுவோன்' என்றார். தப்பாது அகப்படுத்துதல் பற்றிப் பத்தியை 'வலை' என்றார். இஃது ஏகதேசவுருவகம். பத்தியை வலை என்றமையால் இறைவனை அதில் அகப்படும் பொருளாகக் கொள்க. இறைவன் அன்புடையார் சிந்தையில் உறைதல்,

"பத்தியால் ஏத்தி நின்று பணிபவர் நெஞ்சத் துள்ளார்" (தே 25 : 5)

"பத்தராகிப் பாடியும் ஆடிநின்றும் உள்குவார் உள்ளத்துள்ளார்" (தே 45 : 9)

"உள்ளூறும் அன்பர் மனத்தார் தாமே" (தே 250 : 8)

"சீலமுடை அடியார் சிந்தையான் காண்" (தே 266 : 2)

என அப்பரடிகள் அருளியமையானுமறிக.

உலகுக்கெல்லாம் முழுமுதல்வன் இறைவனாதலானும் அவனோடொப்பார் பிறர் எவருமின்மையானும் 'ஒருவனென்னும் ஒருவன்' என்றார். "உலகுக்கொருவனாய் நின்றாய் நீயே" "ஒப்பொருவ ரில்லாதவொருவன்" (நாவு 252 : 1; 247 : 9) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

பொழில் - உலகம். "ஏழ்பொழிற்கு மேழ்கிலத் தலஞ்சமைத்த தென்ன" (கம்ப நகரப் 26) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. விரிபொழில் என்றது மண்முதல் விண்ஈறாகவுள்ள பகுதிகளாய் விரிந்த உலகங்களை. இறைவனது வியாபகத்துள் உலகங்களெல்லாம் அடங்குதல் பற்றி 'விரிபொழில் முழுதாய் விரிந்தோன்' என்றார்.

அணுத்தரும் தன்மையில் ஐயோன் - பரமாணுவிற் காணப்படும் நுட்பத்தன்மையினும் வியக்கத்தக்க நுண்மையுடையோன்; என்றது நுண்பொருள்கள் எல்லாவற்றினும் மிக்கநுண்பொருளாயுள்ளவன் என்றவாறு. "நுண்ணியான்" (ஞான 61 : 6) எனவும் "பரியர் நுண்ணியர் பார்ப்பதற்கரியவர்" (நாவு 141 : 5) எனவும் தேவாரத்து வருவனவுங் காண்க. ஐ - வியப்பு இச்சொல் இப்பொருட்டாதல், "ஐதேய்ந் தன்று பிறையு மன்று" (கலி 55 : 9) என்புழியுங் காண்க. "ஐவியப்பாகும்" (உரி 89) என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும்.

இறைவன் ஒப்புச் சொல்லுதற்கரிய பெருமையையுடைய தலைவனாதலின் 'இணைப்பரும் பெருமையில் ஈசன்' என்றார். இணைப்பு - ஒப்பு. ஈசன் - தலைவன்.

49 - 55. **நூல் உணர்வு உணரா நுண்ணியோன் காண்க** - நூற்பொருள் உணர்ச்சியினால் உணரப்படாத நுட்பத்தினையுடையோன் காண்க; **மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க** - மேலுங் கீழுமாய் விரிந்து நின்றவன் காண்க; **அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க** - முடிவும் முதலும் நீங்கினவன் காண்க; **பந்தமும் வீடும் படைப்போன் காண்க** - ஆன்மாவைப்பற்றிய அநாதிபந்தமாகிய ஆணவத்தைக் கெடுத்தற்பொருட்டுப் பிரவாக அநாதியாகிய பிறவிப் பந்தத்தினையும் அதன் நீக்கத்தினையும் உண்டாக்குவோன் காண்க; **நிற்பதும் செல்வதும் ஆனோன் காண்க** - நிலையியற் பொருள்களினும் இயங்கியற் பொருள்களினும் வியாபித்து நின்றவன் காண்க; **கற்பமும் இறுதியும் கண்டோன் காண்க** - பிரமன் முதலியோரது தோற்றத்தினையும் அவர்களது முடிவினையும் செய்தோன் காண்க;

யாவரும் பெற உறும் ஈசன் காண்க - உயர்ந்தோர் இழிந்தோர் எவராயினும் அன்பராயின் அவரெல்லாம் தனது அருளைப்பெறுமாறு அவர்பாற் சென்று பொருந்தும் தலைவன் காண்க;

நூலுணர்வுணரா நுண்ணியோன் என்றது கல்வி கேள்வி அறிவால் மட்டும் அறியப்படாத நுட்பமுடையோன் என்றவாறு. மேலொடு கீழாய் விரிந்தோன் என்றது மேலேயுள்ள பொருள்களுக்கெல்லாம் மேலாயும் கீழேயுள்ள பொருள்களுக்கெல்லாம் கீழாயும் நிற்கும் அவன்தன் விரிவினை உணர்த்தியது. ''பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர், போதார் புனைமுடியும் எல்லாப் பொருண்முடிபே'' (திருவெம் 10) என்பதும் காண்க. இனி, மேலேயுள்ள சுத்தமாயாவுலகம் முதற் கீழே யுள்ள அசுத்தமாயாவுலகம் ஈருன மாயையின் பரப்பு முழுவதும் விரிந்து நிற்போன் எனினுமாம். மேலொடு கீழாய் என்றதனால் இடைப்பட்ட பொருளுமாய் விரிந்து நின்றான் என்பதும் உபலக்கணத்தாற் கொள்ளப் படும். 'விரிந்தனை குவிந்தனை'' (ஞான 166 : 3) எனத்தேவாரத்து வருதலுங் காண்க.

மாயையின் பரப்பு முழுவதும் விரிந்து நிற்பினும் அம்மாயையிற் காணப் படும் முடிவும் தோற்றமும் இல்லாதவனாதலின் 'அந்தமும் ஆதியும் அகன்றோன்' என்றார். ''முதலும் இறுதியு மில்லார் போலும்'' (தே 234 : 6) என அப்பரடிகள் அருளியமையுங் காண்க. அந்தமும் ஆதியும் அகன்ற இறைவனை, ''அந்தமு மாதியு மாயினார்க்கு'' (பொற்சுண் 20) என அடிகள் பிறிதோரிடத்துக் கூறுமாறு எவனையெனின், இறைவன் உலகிற்கு முடிவும் முதலுமானமைபற்றியென்க.

பந்தம் - பிறவிப் பந்தம்; வீடு - அதன் நீக்கம். இறைவன் பந்தமும் வீடும் படைத்தலை, ''அண்டம் எண்டிசைக்கும் பந்தமும் வீடும் பரப்பு இன்றீர்'' (தே. நாவு 95 : 2) என்பதனாலுமறிக. இறைவன் பந்தத்தைப் படைத்தல் ஆன்மாவைப் பற்றி நிற்கும் அநாதிபந்தமாகிய ஆணவ வலியைக் கெடுத்தற் பொருட்டென்க. பந்தமும் வீடும் படைத்தல் பற்றிப் 'பந்தமோட்சப்ரணீத' என இறைவன் திருநாமம் வருதல் காண்க.

நிற்பதும் செல்வதும் ஆனோன் என்றது நிலையியற் பொருள்களும் இயங்கியற்பொருள்களும் இறைவனது வியாபகத்துள் அடங்குதல் பற்றியென்க.

கற்பம் - பிரமன் முதலிய தேவத்தலைவர்களுக்குரிய வாழ்நாள். ''நான்முகன் வாழ்நாள் கற்பமாகும்'' எனத் திவாகரத்து (தெய்வப்) வருதலும் காண்க. கண்டோன் - செய்தோன். யாவரும் என்றது உயர்ந்தோர் தாழ்ந்தோர் யாவரையும் குறித்தது. அவரெல்லாம் இறைவன் அருளைப் பெற விரும்பின் அன்பராதல் வேண்டும் என்பது வருவிக்கப்பட்டது. ''யாவராயினு மன்பரன்றி யறியொணு மலர்ச்சோதியான்'' (சென்னிப் 4) என வருதல் காண்க. உறும் - பொருந்தும். ''நீலுறு மணி செய்மாடம்'' (இரகுவம். நகர்ப் 42) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

56 - 65. தேவரும் அறியா சிவனே காண்க - தேவராயினும் அன்ப ரல்லாதார் அறியமுடியாத செம்பொருளாயுள்ளவனே காண்க; பெண் ஆண் அலி எனும் பெற்றியன் காண்க - பெண் ஆண் அலி என்னும் தன்மைகளையுடையவன் காண்க: கண்ணால் யானும் கண்டேன் காண்க - ஒன்றுக்கும் பற்றாத யானும் எனது ஊனக்கண்ணால் அவனது திருவுரு வைக் கண்டேன் காண்க; அருள் நனி சுரக்கும் அமுதே காண்க - அருளா கிய இனிய நீரை மிகவும் பெருகச் செய்கின்ற அமுதநீரூற்றென அறிக; கருணையின் பெருமை கண்டேன் காண்க - இறைவனது அருளின் பெருமை யினைக் கண்டேன் காண்க; புவனியில் சேவடி தீண்டினன் காண்க - இந் நிலவுலகத்தில் என்னை ஆட்கொள்ளவேண்டித் தனது செவ்விய திருவடியைப் பொருந்தச் செய்தனன் காண்க; சிவன் என யானும் தேறினன் காண்க - ஆட்கொள்ள வந்தவன் சிவபெருமான் என்று யானும் தெளிந்தேன் காண்க; அவன் எனை ஆட்கொண்டு அருளினன் காண்க - அச்சிவன் என்னை அடிமைகொண்டு அருள் செய்தனன் காண்க; குவளை கண்ணி கூறன் காண்க - கருங்குவளை மலர்போலும் கண்களையுடைய உமையம்மையாரை ஒரு கூற்றிலுடையவன் என்றறிக; அவளும் தானும் உடனே காண்க - அம்மையாகிய அவளும் அப்பனாகிய தானும் ஒன்றாயிருந்து அத்துவிதமா யுள்ளனர் என்றறிக.

தேவரும் என்புழி உம்மை உயர்வு சிறப்பு. சிவன் - செம்பொருள்" எவ்வுயிர்க்கும் எப்பொழுதும் நன்மையைச் செய்தலாற் சிவன் என்றார் எனினுமாம். தேவரும் சிவனை அறியாமை, "கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி" (போற் 143) "தேவர் கனவினும் கண்டறியாச் செம்மலர்ப் பாதங்கள்" (பொற்சுண்ணம் 16) "தேவா தேவர்க் கரியானே" (ஆசைப் 3) "கனவேயுந் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்" (தெள் 10) "தேவருங் காணாச் சிவபெருமான்" (வெண்பா 9) என வருவனவற்றாலுமறிக.

உலகம் பெண் ஆண் அலி என்னும் முக்கூறுடைமையானும் அவை உலகத்தை ஆக்கும் இறைவனிடத்தும் அமைந்திருந்தாலன்றி உளவாகாமை யானும் 'பெண் ஆண் அலியெனும் பெற்றியன்' என்றார். இனி, பெண் ஆண் அலியெனும் பெற்றியன் என இறைவற்கு மூன்று இயல்பு கூறி யது இறைவன் இயல்பு இத்தன்மைத்தென அறுதியிட்டுக் கூறவியலாமை பற்றி யெனினுமாம்.

"பெண்ணாகி யாணாய் அலியாய்...நின்றான்" (திருவெம் 18)

என இத் திருவாசகத்தும்,

"பெண்ணானை ஆணானைப் பேடியானை" (நாவு 235 : 2)

எனத் தேவாரத்தும் வருவன காண்க. பெற்றி - தன்மை. "பெற்றி யார்ப் பேணிக் கொளல்" (குறள் 442) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

தன்னை ஆட்கொள்ளுதற் பொருட்டுக் குருமூர்த்தமாய் எழுந்தருளிய காலத்து அடிகள் நேரே இறைவனைக் கண்டமையின் 'கண்ணுலியானுங் கண்டேன்' என்றார். "கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன் கண்கள் களிகூர" (குழைத்த 9) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க.

'அருணனி சுரக்கும் அமுது' என்பதில் சுரக்கும் என்னும் வினையாலும் *அமுது என்னும் நீரின் பெயராலும் இறைவனை நீரூற்றாக உருவகஞ் செய்து அவன் அருளை நீராகவுருவகஞ் செய்யாமையின் இஃது ஏகதேசவுருவகம். இறைவன் அருள்நனி சுரத்தல்,

"தாயிலாகிய இன்னருள் புரிந்த நலையனை" சத 39

"அருள்நிதி தரவரு மானந்த மலையே" பள்ளி 2

"என்பர மல்லா வின்னருள் தந்தாய்" கோயிற் 2

"என்பே யுருகநின் னருள் அளித்து" எண்ணப் 3

என அடிகள் அருளியவாற்றானுமறிக.

தன்னை ஆட்கொள்ளவேண்டி இறைவன் இந்நிலவுலகத்திலே தனது செவ்விய பாதங்களைத் தீண்ட வைத்தமையால் அவனது கருணையின் பெருமையைக் கண்டனராதலின் 'கருணையின் பெருமை கண்டேன்' என்றார். "மாறிலாதமாக் கருணை வெள்ளமே" சத 91) "கருணைமா கடலே" (பிடித் 2) "கருணைக் கடல்" (பிரார்த் 2) "கருணைக் கடலினர்" (அன்னைப் 2) "கருணை வெள்ளப் பிரான்" (கோத் 16) "கருணைத் தடங் கடல்" (ஏசறவு 9) என்பனவும் இறைவனது கருணையின் பெருமையைப் புலப்படுத்துவனவாகும்.

புவனியிற் சேவடி தீண்டினன் - இந்நிலவுலகில் தனது திருவடியைத் தீண்டச் செய்தனன். புவனியிற் சேவடி தீண்டும்படி இறைவன் எழுந்தருளியமை,

"அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபர னாகி யருளிய பெருமை" போற் 75-6.

"பொங்குமலர்ப் பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு" அம் 1.

"சிவனவனி வந்தருளி, எந்தரமு மாட்கொண்டு" அம் 3.

"அரையாடு நாகமசைத்த பிரான் அவனியின்மேல்
வரையாடு மங்கைதன் பங்கொடும்வந் தாண்டதிறம்" தென் 6.

"அவனி வந்த எங்கள் பிரான்" வார்த் 10

என அடிகள் பிறண்டும் அருளியவாற்றானுமறியப்படும்.

---

* "நாரமு மமுதமு நீரென லாகும்" பிங் 1:57.

தன் கருணையின் பெருமையினாற் புவனியிற் சேவடி தீண்டவந்து தன்னைவந்து ஆட்கொண்டருளினமையால் தன்னை ஆண்டவன் சிவபெருமானே எனத் தான் தெளிந்தமையைச் "சிவனென யானுந்தேறினன்" என அடிகள் அருளிச் செய்தார்.

"சிவனெனவே தேறினன்யான் என்றமையால் இன்றும்
சிவனவனி வந்தபடி செப்பில்—அவனிதனில்
உப்பெனவே கூர்மை யுருச்செய்யக் கண்டமையால்
அப்படியே கண்டாய் அவன்" (91)

எனத் திருக்களிற்றுப்படியாரில் வருதலுங் காண்க. 'சிவனென யானுந் தேறினன் காண்க, அவனெனை யாட்கொண் டருளினன் காண்க' எனச் சிவனெனத் தேறினமை முன்னர்க் கூறப்படினும் அடிகள் தம்மை ஆட்கொண்டருளிய பின்னரே சிவனெனத் தெளிந்தனர் எனக் கொள்க.

குவளைக் கண்ணி என்றது குவளைமலர்போலும் கண்களையுடைய உமையம்மையாரை. "குவளைம்மலர் நயனத்தவளொடும் நெய்யாடியபெருமான்" (திருஞான 15:1) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. கூறன் - கூற்றினையுடையவன். 'குவளைக்கண்ணிக் கூறன் காண்க; அவளுந் தானும் உடனே காண்க' என்பவற்றால் முழுமுதற்பொருள் அம்மையும் அப்பனுமாய் நின்ற முறைமையை உணர்த்தினார்.

66—95 பரம ஆனந்த பழங்கடல் அதுவே - அவனும் அவளும் ஒருருவாயமைந்த மேலான இன்பத்தைத்தரும் பழங்கடலாகிய அம்முழுமுதற் பொருளே, கரு மா முகிலின் தோன்றி - கரிய பெரிய மழைமேகம் போலத் தோன்றி, திரு ஆர் பெருந்துறை வரையில் ஏறி - அழகு நிறைந்த திருப்பெருந்துறையாகிய மலையில் ஏறி, திரு தரும் ஒளி மின் திசை திசை விரிய - அழகு பொருந்திய அருள் ஒளியாகிய மின்னல் திக்குகள்தோறும் பரவ, ஐம்புல பந்தனை வாள் அரவு இரிய - அதனால் ஐம்புல அவாவின் கட்டாகிய கொல்லுதலையுடைய பாம்புகள்கெட, வெம் துயர் கோடை மா தலை கரப்ப - பிறவியின் கொடுந்துன்பமாகிய கோடைக்காலம் தனது பெரிய தலையை மறைத்துக்கொள்ள, நீடு எழில் தோன்றி வாள் ஒளி மிளிர - மிகுந்த எழுச்சியையுடைய பக்குவான்மாக்களாகிய தோன்றிப் பூக்கள் மிக்க செவ்வொளியோடு விளங்க, எம்தம் பிறவியின் கோபம் மிகுத்து - எம்முடைய பிறவிபோன்றனவாகிய இந்திரகோபங்களை மிகுவித்து, முரசு எறிந்து மா பெரு கருணையின் முழங்கி - முரசினை அடித்தாற்போல மிகப்பெரிய கருணையினால் நாதப்பறையை ஒலிப்பித்தலாகிய முழக்கத்தினைச் செய்து, பூ புரை அஞ்சலி காந்தள் காட்ட - அடியார்களின் பூப்போன்ற குவிந்த கைகள் காந்தட்பூக்களைக் காட்ட, எஞ்சா இன் அருள் நுண் துளி கொள்ள - குறையாத இனிய அருளாகிய நுண்ணிய துளிகள் வீழாநிற்ப, செம்சுடர் வெள்ளம் திசை திசை தெவிட்ட - அதனால் சிவந்த ஒளியினையுடைய அருளாகிய வெள்ளம் திக்குகள்தோறும்

உள்ள பக்குவான்மாக்களின் உள்ளங்களில் நிறைப, சேத நூட்டம் கை அற ஓங்கி வரை உற - துன்பமாகிய நீர் நிலைகள் செயல் அற்றுப்போகும் படி அவ்வெள்ளம் உயர்ந்து எல்லையை அடைய, இருமுச்சமயத்து ஒரு பேய்த்தேரினை - அறுவகைச் சமயங்களின் பெறுபேறாகிய ஒரு கானல் நீரினை, நீர் நசை தர வரு நெடுங்கண் மான் இனம் - தமது உய்திக்குரிய நல்ல நீரெனக்கருதி அதனைப்பருக நீர்வேட்கை கொண்டுவர வருகின்ற நெடிய அறிவாகிய கண்களையுடைய மான் கூட்டங்கள், பெரு வாயிடை தவ பருகி - பெரிய வாயினால் மிகவும் பருகியும், அவ பெருந் தாபம நீங் காது தளர்வொடும் அசைந்தன - கேட்டினைச் செய்யும் பெரிய விடாய் நீங்கப்பெறாமல் தளர்ச்சியோடும் வருந்தினவாக, ஆயிடை - அப்பொழுது, வானப் பேர் யாற்று அகவயின் பாய்ந்து எழுந்து - அருள்வெளியாகிய பெரிய யாற்றின் உள்ளிடத்துப் பாய்ந்து மேல் எழுந்து, இன்ப பெரு சுழி கொழித்து சுழித்து - இன்பமாகிய பெரிய சுழியினைத் தெள்ளிச் சுழித் துக்கொண்டு சென்று, எம் பந்தம் மா கரை பொருது அலைத்து இடித்து - எமது மலக்கட்டாகிய பெரிய கரையினை மோதி அசைத்து இடித்து, ஊழ் ஊழ் ஓங்கிய நங்கள் இருவினை மா மரம் வேர் பறித்து எழுந்து - முறை முறையாக உயர்ந்துள்ள நம்முடைய இருவினைகளாகிய பெரிய மரங்களை வேரோடும் பிடுங்கி எழுந்து, உருவ அருள் நீர் ஓட்டி - அழகிய அருளா கிய நீரினைப் பாய்ச்சி, அரு வரை சந்தின் வான் சிறை கட்டி - அரிய மலைபோலும் நிலையிற்றிரியாத அடியார்களின் உள்ளமாகிய பெரிய சந்தன மரங்களாற் பெரிய அணையைக்கட்டி, மட்டு அவிழ் வெறி மலர் குளம் வாய் கோலி - தேன் பரக்கின்ற நறுமணத்தினையுடைய இதயகமலமாகிய குளத்திற்கு நீர்பாயும் வழியினை அமைந்து, நிறை அகில் மாபுகை வண்டு உடை கரைசேர் குளத்தில் மீக்கொள - நிறைபாகிய அகிலின் பெரிய புகையாகிய வண்டுகளையுடைய கரையமைந்த இருதயகமலமாகிய குளத் தில் அருள் வெள்ளமானது மேற்கொண்டுவர, மேல் மேல் மகிழ்தலின் நோக்கி - மேலும் மேலும் மகிழ்ச்சியுண்டாதலால் அதனை உற்றுப்பார்த்து, அருச்சனை வயலுள் அன்பு வித்து இட்டு - வழிபாடாகிய வயலிடத்துப் பாய்ச்சி அன்பாகிய வித்தினை விதைத்து விளைத்து, தொண்ட உழவர் ஆர தந்த - தொண்டர்களாகிய உழவர்கள் சிவபோகமாகிய விளைவினை நுகருமாறு தந்தருளிய, அண்டத்து அரும் பெறல் மேகன் வாழ்க - அருள் வெளியின்கண் உள்ள பெறுதற்கரிய மேகம் போல்வான் வாழ்க.

உலகின்கண் முகில் கடலின் ஒரு பகுதியின் நீராவியால் ஆகும் இங்கு அருண் முகில் பரமானந்தப் பழங்கடல் முழுதாலும் ஆனமையின் 'பர மானந்தப் பழங்கடலதுவே கருமா முகிலிற் றோன்றி' என்றார். அதுவே என்பது பழங்கடல் முழுவதையும் குறித்து நின்றது.

அடிகள் தமக்கு அருள்செய்த இறைவன் குருவாகிவந்து திருப்பெருந் துறையில் தங்கியமையின் அதனை அம்முகில்படியும் மலையாகக் கூறியருளி

ஞர். "பெருந்துறைக் கொண்டலே" (திருக்கழுக் 5) என அடிகள் பிறிதோரிடத்துக் கூறுதலும் காண்க.

திருத்தகு ஒளி என்றது இறைவனது அழகு பொருந்திய அருள் ஒளியைக் குறித்தது. தங்கிய இறைவனின் அருள்ஒளியே மின்னெளியாகத் திக்குகள் தோறும் பரவியது. மின்னெளி என்பது உருவக இயைபுபற்றி ஒளிமின் என மாற்றிக்கூட்டிப் பொருள் உரைக்கப்பட்டது. கருமாமுகில் பெருந்துறை வரையில் ஏறினமையால் அருள் ஒளியாகிய மின் திக்குகள் தோறும் பரவியமையின் 'மின்னெளி திசைதிசை விரிய' என்ருர். திசை திசை என்னும் அடுக்குத் தொறுப்பொருளில் வந்தது.

பந்தனை - பந்தனம். ஐம்புலனைப் பந்தனை என்றது சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐம்புலன்களும் ஐம்பொறிவாயிலாக மனத்தினைத் தம்பாற் கவரும் முறைமைபற்றியாகும். வாள் அரவு - கொல்லுந்தன்மையையுடைய அரவு. பாம்பின் விடம் உடம்பினை வருத்தி உயிர்நீங்கச் செய்வது போல ஐம்புல அவாக்களும் உயிரைப் பிணித்து வருத்திப் பிறவிக்கண் வீழச் செய்தலின் 'ஐம்புலப் பந்தனை வாளரவு' என்ருர். "அவா வென்ப வெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றுந், தவாப் பிறப்பீனும் வித்து" (குறள் 361) என்ருர் திருவள்ளுவநாயனுரும்.

அரவு இரிய என்றது மின் திசைதிசை விரிதலாற் பாம்பு கெட என்றவாறு "பார்கடல் பருகி மேகம் பார்ப்பினம் பதைப்ப மின்னி" (சீவக 3071) என்ருர் பிறரும். இரிய - கெட. "கோழிவயப்பெடை யிரிய... சேணின்று இழுமென விழிதரு மருவி" (311-16) என்னும் திருமுருகாற்றுப்படையினும் இப்பொருட்டாதல் காண்க.

வெந்துயர் என்றது ஈண்டுப் பிறவி எடுத்ததனுலாகிய கொடுந்துன்பத்தை. கோடை - கோடைக்காலம். வெந்துயரைக் கோடை என்றது கோடைக்காலம் போலத் துன்பஞ் செய்தல் பற்றி. "வேனில் உழந்த வறிதுயங் கோய் களிறு" (கலி 7 : 1) என வருதலுங் காண்க. மழையினுற் கோடைத்துன்பம் மறைதல்போல இறைவனது அருண்மழையினுல் பிறவியினுல் உண்டாகிய வெந்துயர் முற்றும் மறைதலின் 'வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப' என்ருர். கரப்ப (71) நுண்டுளி கொள்ள (76) எனக் கூட்டுக.

எழில் - எழுச்சி குறள் 407 பரிமேல். நீடெழில் என்பது ஈண்டு மிக்க எழுச்சியையுடைய பக்குவான்மாக்களை உணர்த்தியது. தோன்றி - செங்காந்தள். "காந்தள் தோன்றி பற்றை செங்காந்தள்" எனத் திவாகரத்தும் வருதலும் காண்க. இது மழைக்காலத்துப் பூத்தல் "தொடர் தோன்றி குருதி பூப்ப" (முல்லைப் 96) என வருதலானுமறியப்படும். வாளொளி - ஒரு பொருட் பன்மொழி. மிக்க ஒளி மழையினுல் தோன்றிப்பூ மிக்க செவ்வொளியோடு விளங்குதல்போல அடியார்களும் இறை

வன் அருளினால் பொலிவுபெற்று விளங்குதலின் "நீடெழில் தோன்றி வாளொளி மிளிர" என்றார்.

நாம் முன் எடுத்த அளவில்லாத பிறவிகள் போலக் கார்காலத்தே இந்திரகோபம் என்னும் தம்பலப்பூச்சிகள் நிலத்தின்கண் மிக்குத்தோன்றுதலின் 'எந்தம் பிறவியின் கோபம் மிகுத்து' என்றார். கார் காலத்து இந்திரகோபம் மிக்குத் தோன்றல்" எள்ளிட விடனு மின்றி யெழுந்தன விலங்கு கோபம் வெள்ளடைத் தம்பற் குப்பை சிதர்ந்தென விரிந்த மாதோ" (கம்ப. கார்கால 39) என்பதனாலுமறிக எந்தம் பிறவியின் கோபம் மிகுத்து என்பதற்கு எமது பிறவிபோன்றனவாகிய இந்திரகோபங்களை மிகுவித்து எனத் தொனிப்பொருள் கூறினும் 'எமது பிறவியினிடத்துச் சினம் மிகுந்து' என்பதே பொருளாகக் கொள்க.

கார்காலத்து முகில், முரசினை அடித்தாற்போல முழங்குதலின் 'முரசெறிந்து முழங்கி' என்றார். "கடிப்பிகு முரசின் முழங்கி யிடித்திடித்துப், பெயலா னாதே வானம்" (குறுந் 22) எனப் பிறருங் கூறுதல் காண்க எறிதல் - அடித்தல். இறைவன் மிகப்பெரிய கருணையுடையனாதலின் மாப்பெருங்கருணையின் என்றார். "மாகிற் கூறுடை மாப்பெருங் கருணையன்" (கீர்த்தி 107) "மாறிலாத மாக் கருணை வெள்ளமே" (சத 91) "பெருந்துறையில் மேய பெருங்கருணையாளன்" (வெண்பா 4) என அடிகள் பிறண்டும் அருளியமை காண்க. கருணையின் என்புழி இன் தவிர் வழி வந்தது. முழக்கம் - நாதப்பறையை ஒலிப்பித்தலாகிய முழக்கம். "நாதப்பெரும்பறை நவின்று கறங்கவும்" (கீர்த் 108) என அடிகள் அருளியமையுங் காண்க.

இறைவன் திருப்பெருந்துறையில் குருவடிவிற் றோன்றியகாலை அடியார்கள் தமது பூப்போன்ற கைகளைக் கூப்பித் தொழுது நிற்றலின் "பூப்புரை யஞ்சலி" என்றார். அஞ்சலி - கூப்புங்கை. 'இரண்டு கையும் பதாகையாய் அகமொன்றுவது' என்பர் அடியார்க்குநல்லார். (சிலப் 3 : 12 - 25 உரை). அடியார்களின் கூப்பியகரங்கள் காந்தண் மலர்போன்றமையாலும் காந்தள் கார்காலத்துப் பூத்தலினாலும் 'அஞ்சலி காந்தள் காட்ட' என்றார்.

எஞ்சா இன்னருள் - குறையாத இனிய அருள். எஞ்சாமை - குறையாமை. "எஞ்சாமை நிறையக் கற்று" (பதிற் 90 : 4) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. இறைவன் திருப்பெருந்துறையில் இன்னருள் புரிந்தமை, "தாயிலாகிய இன்னருள் புரிந்த தலைவனை நனிகாணேன்" (சத 39) "எனையு மாண்டுகொண் டின்னருள் புரியும் எம்பெருமான்" (பள்ளி 7) என அடிகள் அருளியமையானுமறியப்படும். இறைவன் இன்னருளே திருவார் பெருந்துறை வரையிலேறிய கருமாமுகிலிற்றோன்றிய மழையாகச் சொல்லப்பட்டது. நுண்துளி கொள்ள என்றது நுண்ணிய துணிகளாகப் பெய்ய என்றவாறு. மிகப்பெய்தமை 'வெள்ளந் திசை திசை தெவிட்ட' என்பதனாற் பெறப்படும்.

"மழைபெய்தலாற் சிவந்த ஒளியையுடைய வெள்ளம் திக்குகள்தோறும் சென்று தெவிட்டுதல் போல அருண்மழையால் திக்குகள்தோறும் உள்ள அடியார்களின் உள்ளத்து அருளாகிய வெள்ளம் நிறைவதாயிற்று. திசை திசை என்னும் அடுக்கு தொறுப்பொருளது. தெவிட்டல் - நிறைதல்.

கேதக் குட்டம் கையற வோங்கி என்பது மழை வெள்ளம் மிகுதலால் ஆங்காங்குள்ள நீர்நிலைகள் அவ்வெள்ளத்துள் அமிழ்ந்திச் செயற்றுப் போவதுபோல இறைவனது அருள்வெள்ளம் மிகுதலால் உயிர்களினது துன்பமாகிய நீர்நிலைகள் அவ்வருள் வெள்ளத்துள் மூழ்கிச் செயலற்றுப் போதலை உணர்த்தியவாறு. கேதம் - துன்பம். "கேதங்கள் கெடுத் தாண்ட கிளரொளியை" (கண்டபத்து 10) என்புழியும் இப்பொருட்டா தல் காண்க. "இடர் கோட்டாலை ஏதங் கேதம், அலக்கண் பீடையோ டல்ல கண்டமும், துன்பப் பொருளைச் சொல்லுங் கிளவி" எனத் திவா கரத்து வருதல் காண்க. குட்டம் - நீர்நிலை. இப்பொருட்டாதலை "குட் டம் தாங்கல் கோட்டக மேரி...நீர்நிலைப் பெயரே" என்னும் பிங்கலந்தை யால் (4 : 157) அறிக. வாவி என்று திவாகரம் கூறும். கையறுதல் - செயலறுதல். கையறவோங்கி (78) வரையுற (77) என மாறிக் கூட்டுக. வரை - எல்லை.

'இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை, நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணந், தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும், அவப்பெருந் தாபம் நீங்கா தசைந்தன' என்பது வேனிலால் வெதும்பி மிக்கநீர் வேட்கை யால் நீரைத் தேடிவரும் மான்கூட்டங்கள் நண்பகற் கடுமையாற் றோன் றும் கானல்நீரினை நீரெனக் கருதி அதனைப் பருகுதற்கு விரைந்தோடி நீரி னைப் பெறுமற் பெருந்தாபத்தினால் வருந்தினாற்போல, தமது உய்வினை நாடிய மக்கள் அறுவகைச் சமயத்தின் உண்மையல்லாத பெறுபேற்றினை உண்மையான பெறுபேறு எனக் கருதி அதனைப் பெறமுயன்றும் பெறுமல் வருந்திய தன்மையைக் கூறியதாகும்.

இருமுச் சமயம் என்றது அறுவகைச் சமயத்தினை. அடிகள் "அறு வகைச் சமயத் தறுவகை யோர்க்கும், வீடுபேறாய் நின்ற விண்ணோர் பகுதி, கீடம் புரையும் கிழவோன்" (அண்ட 17-9) என இறைவனை நோக்க அறுவகைச் சமயக் கடவுளரும் புழுவினை நிகர்ப்பர் எனவும், இங்கே 'இருமுச் சமயத்தொரு பேய்த்தேர்' என அறுவகைச் சமயப் பேறு கானல் நீருக்குச் சமானம் எனவும் அருளிச் செய்துள்ளார். அடி கள் அறுவகைச் சமயம் இவை எனக் கூருதொழியினும்,

"விரத மேபர மாகவே தியருஞ்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்" போற் 50-1

என்பதனால் மீமாஞ்சகமதத்தினையும்,

"மிண்டிய மாயா வாதம்" போற் 54.

என்பதனால் மாயாவாத மதத்தினையும்,

"உலோகாயதன்" போற் 56

என்பதனால் உலோகாயத மதத்தினையும்,

"சமய வாதிகள்" போற் 52

என்பதனால் ஏனைய மதங்களையும் அருளியுள்ளார். "புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்" (தேனோக்கம் 6) என்பதனாற் பௌத்தம் முதலிய பல சமயங்களும் சிறந்த உண்மை அறிவிற்கு இயையாத புல்லறிவு நெறிகள் என அருளியுள்ளார். மகாதேவனாகிய இறைவனை ஒழித்து ஒழிந்த தேவர்களையெல்லாம் கூறுமிடத்து,

"சாவமுன்னாள் தக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்ச மஞ்சி
ஆவ வெந்தாய் என்று அவிதா விடும் நம்மவ ரவரே" (சத 4)

என அவரியல்பினைக் கூறியுள்ளார். இவற்றால் அடிகள் எடுத்துக்கொண்ட அறுவகைச் சமயங்களும் மேலான வீடுபேற்றினைக் கொடுப்பனவல்ல என்பது இனிது புலப்படும்.

பேய்த்தேர் - கானல்நீர். நசை - விருப்பம். தர - கொடுவர. "எழிற் கலை, அறலவிர்ந் தன்ன தேர்நசை யோடி" (அக 395. 8-9) என வருதலுங் காண்க. அவம் - கேடு. தாபம் - விடாய் எனப் பொருள்படும் வடசொல். அசைதல் - வருந்துதல்.

அ + இடை = ஆயிடையென முடிந்தது. ஆயிடை - அப்போது. ஆயிடைத் தொண்ட உழவர் ஆரத் தந்த என முடிக்க. வானப் பேரியாறு - அருள்வெளியாகிய பெரியயாறு. அகவயின் - உள்ளிடம். "அரும்பொறி மண்டல மகவயி னியற்றி" (பெருங் (1) 38. 59) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. கொழித்தல் - தெள்ளுதல். "பொன்கொழியா விழிதரு மருவி" (306-16) என்றார் திருமுருகாற்றுப்படையினும்.

இன்பப் பெருஞ்சுழி கொழித்துச் சுழித்து என்றது யாற்றின்கண் நீர் மிக்கவழி ஆழம் மிகவுடைத்தாய் விரைந்து சுழித்துச் செல்லுதல்போல இன்னருள் பெருகியவழி இன்பம் தூயவுயிர்கள் எல்லாவற்றையும் தன்னகப்படுத்திச் செல்லுதலை உணர்த்தியது.

யாற்றின்கண் வெள்ளம் பெருகிச் செல்லுங்காற் கரையை மோதி இடித்துச் செல்லுதல் போல, அருள் வெள்ளமும் எமது பாசக்கட்டாகிய கரையை மோதி இடித்துச் செல்லுதலின் 'எம்பந்த மாக்கரை பொருதலைத்து இடித்து' என்றார். பொருதல் - முட்டுதல். புற 11:6 உரை. இடித்து (85) வேர் பறித்து எழுந்து (87) என இயையும்.

ஊழூழ் ஓங்கிய (86) இருவினை (87) எனக் கூட்டி முறை முறையே வளர்ந்துள்ள நல்வினை தீவினை எனக் கொள்க. ஊழூழ் - முறைமுறையே. குறிஞ்சி 44 நச். கடுவிசையோடும் பெருகிவருகின்ற வெள்ளம் கரைக்கணுள்ள பெருமரங்களை வேரோடும் பறித்து வீழ்த்திக்கொண்டு செல்லுதல்போல, இன்னருளாகிய வெள்ளமும் உயிர்கள் உள்ளத்திற் பெருகிச்

செல்லுங்கால் அவ்வுயிர்களின் இருவினைகளை வேரொடும் பெயர்த்துச் செல்லுதலின் "இருவினை மாமரம் வேர்பறித்து" என்றார். ஓங்கிய - வளர்ந்த. "மாவிசும் போங்கிய கடிமரத் துருத்திய" (கலி 48 : 4-5) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. எழுதல் - போதல்.

உருவ அருள்நீர் - அழகிய அருள்நீர். உருவ என்பது அழகிய என்னும் பொருட்டாதல் "உருவக்குதிரை மழவரோட்டிய" (அக 1 : 2) என்புழிக் காண்க. இன்னருள் வெள்ளத்தினின்றும் செல்லும் நீர் அருளாகிய நீராதலின் 'அருள்நீர்' என்றார். அருள்நீர் ஓட்டா என்பது இறைவன் உயிர்களுக்கு அருளினைச் செலுத்துதல் அறிவித்தபடியாம். "அருள் நனி சுரக்கு மமுதே காண்க" (அண்ட 59) "அருள்செய்யும் சித்தன்" (அருட் 8) என அடிகள் அருளியவாறுங் காண்க. ஓட்டா (88) தந்த (94) எனமுடிக்க.

அருவரைச் சந்தின் வான்சிறை கட்டி என்பது வெள்ளம் அரிய மலையினின்றும் ஈர்த்துக் கொணர்ந்த சந்தன மரங்களைக் கரைகளில் ஒதுக்கி அணையாக்கிக்கொண்டு அவ்வணையினூடே செல்லுதல்போல இறைவனது இன்னருள் வெள்ளமும் மெய்யடியார்களின் தூய உள்ளங்களை அணையாகக்கொண்டு அவற்றினூடு செல்லுமென்பது கூறினர்.

அருவரை - ஏறுதற்கரிய மலை. இறைவனிடத்துச் செலுத்தும் அன்பு நிலையினின்றுந் திரியாத மெய்யடியார் இயல்பு, இயற்கை நிலையிற்றிரியா மலையின் இயல்பை ஒப்பதாயிற்று. சந்து - சந்தனமரம். "கமலங் கலந்த வேரியுஞ்சந்தும் வியறந்தெனை" எனத் திருக்கோவையாரில் (301) வருதலுங் காண்க. வரைச் சந்தின் என்றார் வரையின்கண் சந்தன மரமன்றிப் பிறமரமின்மையின். சந்தின் என்றதனால் சந்தனமரம்போல மெய்யடியார் உள்ளமும் தூயவாதல் கூறினர். வான்சிறை - பெரிய அணை.

மட்டவிழ் மலர் - தேன்பரக்கின்ற மலர். வெறிமலர் - நறுநாற்றத்தை யுடைய மலர். மலர்க்குளம் என்றது இருதயகமலமாகிய குளத்தை. வாய்கோலி என்றது அருள்வெள்ளம் பாய்ந்து செல்லுதலாற் பின்னரும் பாய்ந்து செல்லுதற்கு வழியமைத்து என்றவாறு. வாய் - வழி. "பெரியார் நூல் காலற்று வாய்காப்புக் கோடல் வனப்பு" (ஏலாதி 23) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. கோலுதல் உண்டாக்குதல்.

நிறையகின் மாப்புகை - நிறையாகிய அகிலின் கரிய புகை. நிறை - நிறுத்துதல். "நிறையாற்று நெஞ்ச முடையேம்" கலி 90 : 29. நிறையென்றது புலனடக்கத்தை. 'நிறை - ஐம்பொறிகளையுமடக்குதல்'. கோவை 31 பேர் உரை. நிறையகில் மாப்புகை கரைசேர் குளம் என்றது நீராடிய மகளிர் தமது கூந்தலைப் புலர்த்துதற்கு இட்ட அகிலின் கரிய புகையாகிய வண்டுகளையுடைய குளம்போலப் பொறியடக்கமாகிய அகிற்புகையை யுடைய இருதயகமலமாகிய குளம் என்றவாறு. குளத்தின் மீக்கொள என்றது அருள்வெள்ளமானது உள்ளமாகிய குளத்தில் மேற்கொண்டுவர என்ற

வாறு. மகிழ்தலின் நோக்கி - அங்ஙனம் மேற்கொண்டு வருதலான் மகிழ்ச்சி யடைதலின் அதனை நோக்கி. நோக்குதற்கு வினைமுதல் தொண்ட உழவர் என்க.

பழங்கடலதுவே (66) முகிலிற் றோன்றி (67) வரையிலேறி (68) ஒளி விரிய (69) அரவு இரியக் (70) கோடை கரப்ப (71) தோன்றி மிளிர (72) கோபமிகுத்து (73) கருணையின் முழங்கி (74) இன்னருள் துளிகொள்ள (76) வெள்ளம் தெவிட்ட (77) குட்டம் கையறவோங்கி (78) யாற்று அகவயின் (83) பாய்ந்தெழுந்து சுழித்துப் (84) பந்தமா கரைபொருது (85) இருவினை மாமரம் வேர்பறித்து எழுந்து (87) அருள்நீர் ஓட்டா (88) சந்தின் சிறைகட்டி (89) குளவாய் கோலி (90) குளத்தின் (91) மீக்கொள (92) என வினைமுடிபு செய்க.

அர்ச்சனை வயலுள் அன்பு வித்து இட்டு என்றது தமது வழிபாடாகிய வயலினுள் அங்ஙனம் மேற்கொண்டு வந்த இன்னருள் வெள்ளத்தினைப் பாய்ச்சி அன்பாகிய வித்தினை விதைத்து என்றவாறு. தொண்டர் உழவர் ஆரத்தந்த என்றது தொண்டர்களாகிய உழவர்கள் சிவபோகமாகிய பயனை நுகருமாறு தந்தருளிய என்றவாறு. தொண்ட உழவர் (94) நோக்கி (92) இட்டு (93) ஆரத் தந்த (94) மேகன் (95) என இயையும். அண்டம் - வெளி. ஈண்டு அருள் வெளியினை உணர்த்தியது. மேகன் என்றார் அருட் கொடையின் மிகுதிபற்றி.

இறைவனை அண்டத்தரும்பெறன் மேகன் என உருவகஞ் செய்தமைக்கு அமையப், பரமானந்தத்தைப் பெருங்கடலாகவும், அதனையுடைய இறைவனைக் கருமாமுகிலாகவும், அவன் வந்து தங்கிய திருப்பெருந்துறையை அம்முகில்படியும் வரையாகவும், அவ்விறைவனது அருள் ஒளியினை மின்னொளியாகவும், அவ்வருள் ஒளி பரத்தலான் அழிவெய்தும் ஐம்புலக்கட்டுக்களை மின்னொளியால் அழிவெய்தும் பாம்புகளாகவும், இறைவன் அருளால் நீங்கும் துன்பங்களை மழைவீழ்ச்சியால் நீங்கும் கோடையாகவும், இறைவனருளால் விளக்கமுறும் பக்குவான்மாக்களை மழையினாற் பூத்து விளங்கும் தோன்றிச் செடிகளாகவும், அவன் அருள் பக்குவான்மக்களின் பிறவிகளில் கோபம் மிகுவதனை மழைவீழ்ச்சியால் இந்திரகோபங்கள் மிகுவதாகவும், இறைவனருளால் நிகழும் நாதப்பறை ஒலியினை முகிலின் முழக்கமாகவும், இறைவன் அருள்பெற்றுக் கைகூப்பி வணங்கி நிற்கும் அடியார்களின் கைகளை மழைக்காலத்துத் தோன்றும் காந்தள் மலராகவும், இறைவனது குறைவற்ற அருள் வீழ்ச்சியை நுண்ணிய மழைத்துளி வீழ்ச்சியாகவும், ஆங்காங்குள்ள பக்குவான்மாக்களின் உள்ளங்களில் இறைவன் அருள்நிறைதலை மழைவீழ்ச்சியால் ஆங்காங்குள்ள பள்ளங்களில் வெள்ளம் நிறைதலாகவும், பக்குவான்மாக்களின் துன்பங்கள் செயலறும் படி அருள்மிகுந்து பரத்தலை நீர்நிலைகள் செயலறும்படி மழைவெள்ளம் உயர்ந்து பரத்தலாகவும், அறுவகைச் சமயத்தின் பெறுபேற்றினைக் கானல் நீராகவும், அப்பேற்றினைப் பெறவிரும்பிவரும் அறி

வினையுடைய மக்கட் கூட்டத்தினை அக்கானல் நீரை விரும்பி உண்ண வரும் மான்கூட்டமாகவும், அச்சமயநெறிகளில் நின்று அந்நெறிகளுக்கு இயைய அறங்களை மிகுதியாக மேற்கொண்டு நின்றும் தம்பிறவித்துன்பம் நீங்கப்பெறாது வருந்துதலை அக்கானல் நீரைப் பருகித் தாபம் நீங்கப்பெறாது மான்கூட்டங்கள் வருந்துவனவாகவும், அருள்வெளியைப் பெரியயாறாகவும், அவ்வருள்வெளியின்கண் அருள்மிகுதலை யாற்றின்கண் வெள்ளம் வீழ்வதாகவும், அருள்மிகுதலால் உண்டாகும் இன்பத்தினை யாற்றின்கண் உண்டாகும் சுழியாகவும், அருள் இன்பத்தினால் மலபந்தம் நீங்குதலை ஆற்றுநீர்ப் பெருக்கால் கரைதாக்கப்படுதலாகவும், மலபந்தம் நீங்கப்பெற்ற பக்குவான்மாக்களின் இருவினைகள் நீங்குதலை யாறு செல்லும் வழியின்கணுள்ள பெருமரங்களின் வீழ்ச்சியாகவும், அருளினைச் செலுத்தலை நீரினைப் பாய்ச்சுதலாகவும், உலகவாதனைகளாற் கெடுக்கப்படாத திடபத்தியையுடைய அடியார்களை வரையாகவும், அவர்களின் பக்குவப்பட்ட தூய உள்ளத்தினைச் சந்தனமர அணையாகவும், இருதய கமலத்தைக் குளமாகவும், சத்தியத்தினை அருள்நீர் பாயும் வாயிலாகவும், நிலையிற் றிரியாமையை அகிலாகவும், நிலையிற் றிரியாமையின் பயனை அகிற்புகையாகிய வண்டாகவும், இருதய கமலத்தில் அருள்மிகுதலை குளத்தின்கண் நீர்மிகுதலாகவும், தொண்டர்கள் அருள் மிகுதலால் மகிழ்ந்து அதனைப் பயன்படுத்த நோக்குதலை உழவர் குளத்தில் நீர் மிகுதலால் மகிழ்ந்து அந்நீரைப் பயன்படுத்த நோக்குதலாகவும், வழிபாட்டினை வயலாகவும், அன்பினை நெல்விதைப்பாகவும், தொண்டரை உழவராகவும், அத்தொண்டர்பெறும் சிவபோக அநுபவத்தினை உழவர்பெறும் விளைந்த நெல்லுணவாகவும் உருவகஞ் செய்யப்பட்டவாறு காண்க.

*96—105.* கரும் பணம் கச்சை கடவுள் வாழ்க - பெரிய படத்தினையுடைய பாம்பை அரைக்கச்சாக அணிந்த கடவுள் வாழ்க; அருந் தவர்க்கு அருளும் ஆதி வாழ்க - அரிய தவத்தினையுடையவர்களுக்கு அருள்செய்யும் முதல்வன் வாழ்க; அச்சம் தவிர்த்த சேவகன் வாழ்க - பக்குவான்மாக்களுக்குப் பிறவிப்பிணியால் வரும் அச்சத்தை நீக்கிய வீரன் வாழ்க; நிச்சலும் ஈர்த்து ஆட்கொள்வோன் வாழ்க - எப்போதும் மாற்சாரசம்பந்தமாக வலிய வந்து இழுத்து அடிமைகொள்வோன் வாழ்க; சூழ் இரும் துன்பம் துடைப்போன் வாழ்க - உயிர்களை வந்து சூழ்கின்ற பெரிய வினைகளின் துன்பத்தை பற்றறக்கெடுப்பவன் வாழ்க; எய்தினர்க்கு ஆர் அமுது அளிப்போன் வாழ்க - தன்னை வந்து அடைந்தார்க்கு அரிய அமுதம் போன்ற திருவடிப்பேரின்பத்தைக் கொடுப்பவன் வாழ்க; கூர் இருள் கூத்தொடு குனிப்போன் வாழ்க - மிக்க இருளையுடைய பேரூழிக்காலத்து இயற்றுங் ஒடுக்கக் கூத்தொடு அதன் முடிவில் ஆடும் தோற்றக் கூத்தினை ஆடுவோன் வாழ்க; பேர் அமை தோளி காதலன் வாழ்க - பெரிய மூங்கில் போலும் தோளினையுடைய உமையம்மையின் கணவன் வாழ்க; ஏதிலர்க்கு ஏது இல் எம் இறைவன் வாழ்க - அன்பினால் இயைபில்லாதவர்களுக்குத்

தானும் இயைபு இல்லாதவனாகும் எம் இறைவன் வாழ்க; காதலர்க்கு எய்ப்பினில் வைப்பு வாழ்க - அன்பராயினார்க்கு எய்ப்படைந்த காலத்திற் எதிர்பாராது கிடைத்த புதைபொருள் போன்றவன் வாழ்க.

கரும்பணைக் கச்சைக் கடவுள் என்றது பாம்பை அரைக்கச்சாக அணிந்த இறைவனை. "வரியரவக் கச்சானை" "படவரவமொன்று கொண்டரையி லார்த்த பராபரனை" (நாவு 233 : 4 ; 234 . 3) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. கரும்பணம் - பெரிய பணம். கருமை - பெருமையென்னும் பொருட்டாதல் "கருவலித் தடக்கை" (சீவக 2269) என்புழிக் 'கருவலி - பெரியவலி' என நச்சினார்க்கினியர் உரைத்தமையானும் அறியப்படும். "கருமை கதழ்வு கயவுமூரி பெருமை பாடு மண்ணை மதற்கே" எனத் திவாகரத்து (பண்பு) வருதலுங் காண்க. பணம் - படம். அஃது ஈண்டுச் சினையாகுபெயராய்ப் பாம்பினை உணர்த்தியது. கச்சை - அரையிற் கட்டும் பட்டிகை. இறைவன் உலகங்களைத் தோற்றுவித்தற் பொருட்டுச் சுத்தமாயையைக் கலக்க அதனிடத்துப் பாம்பு மண்டலித்தாற் போலும் ஓரியக்கமுண்டாகும். இறைவனைப் பற்றுக்கோடாகக் கொண்ட அவ்வியக்கம் குண்டலினி சத்தியெனப்படும். அது நுண்ணுலகுக்கும் பருவுலகுக்கும் ஏதுவாகலின் அவ்விருவுலகினும் வியாபகமுடைய இறைவனுக்கு அரைக் கச்சுப் போல்வதாயிற்று.

அருந்தவர் - உயிர் உய்தி கூடுதற்குரிய அரிய தவத்தினையுடையவர். ஆதி - முதல்வன். அச்சம் தவிர்த்த என்றது பிறப்பிறப்பிற்குக் காரணமாகிய அறம்பாவம் என்னும் இரண்டின் பயத்தை நீக்கிய என்றவாறு. "ஒருகாத வடியார்தம் அடியனாக்கி அச்சந்தீர்த்தாட்கொண்டான்" (சத 28) "அளித்து வந்தெனைக் காவலென் றருளியச்சந்தீர்த்தநின்" (செத் 10) என வருவன காண்க. சேவகன் என்றார் பிறரால் நீக்குதற்கரிய அச்சத்தை நீக்கியமைபற்றி.

நிச்சலும் - எப்பொழுதும். "நிச்சநிரப்புக் கொன்றாங்கு" (குறள்) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. ஈர்த்தாட்கொள்ளல் - அன்பராயினாரைத் தகுதியறிந்து வந்து வலிந்திழுத்து ஆட்கொள்ளுதல். "ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே" என்றார் சிவபுராணத்தும் (74). "வளர்கின்ற நின் கருணைக் கையில் வாங்கவும்" (நீத் 4) "இரும்புதரு மனத்தேனை ஈர்த்தீர்த்தென் என்புருக்கி" (ஏசறவு 1) என்பனவும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலன. இது மார்க்கசம்பந்தம் எனப்படும். இங்ஙனம் ஆட்கொள்ளுதல் எக்காலத்துமாம் என்பார் 'நிச்சலும்' என்றார்.

சூழிருந் துன்பம் என்றது இறைவன் ஆணையால் வந்து சூழுந்துன்பம் என்றவாறு. முற்பிறவிகளிற் செய்த தீவினையின் பயன் துன்பவுருவில் வந்து உயிர்களைச் சூழ்ந்து வருத்துதலின், அதனை நீக்கும் இறைவனைச்

'சூழிருந்துன்பந் துடைப்போன்' என்று அருளிச்செய்தார். "தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி" (போற் 131) என வருதலுங் காண்க.

"பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு" (பழவினை 1)

என நாலடியாரிற் கூறியபடி வினை, தானே தன்னைச் செய்தவனைத் துன்பவுருவில் வந்து வருத்துமென்றல் சமணர்க்கு உடன்பாடாயினும் சித்தாந்த சைவர்க்கு அஃது உடன்பாடன்மையால் இறைவனாணையால் வந்து சூழும்' என உரைக்கப்பட்டது.

செய்து ளோர்பெறும் வினைப்பய னொருவர்
சேர்க்க வேண்டுவ தில்லெனி னிதுமே
லெய்து மேலிது நுகர்வதென் றறிவ
தில்லை நீவினை யெனிற் சடமறியா" (திருவாத திருப்பெருந் 65)

எனக் கடவுண்மாமுனிவர் அருளிச்செய்தமையால், வினைப்பயனை அனுபவிக்கும்போது உயிர்கள் அவற்றினை முறைப்படி யறியா; வினைதானே ஊட்டுமெனில் அது சடமாகலின் அறியாது ஆகவே உயிர்களையும் உயிர்களின் வினைப்பயன்களையும் அறிந்து இறைவன் ஊட்டுவிப்பான் என அறிக.

எய்தினர் - தன்னைவந்து அடைந்தவர். ஆரமுது - அரிய அமுது. அருமை என்னும் பண்புப்பெயர் ஆர் எனத் திரிந்தது. "ஆரஞர்' (கலி 120 : 15) என்புழிப்போல. ஆரமுது என்றது திருவடிப்பேரின்பத்தை.

உயிர்கள் தம் அறிவு இச்சை செயல்களில் ஒடுங்கிக் கேவலநிலையில் ஆணவ வல்லிருளில் அழுந்திக்கிடக்கும் காலத்தும் இறைவன் அவ்வுயிர்கள்பொருட்டுச் செய்யும் ஐந்தொழிற் கூத்தை ஓவாது இயற்றுதலின் 'கூரிருட் கூத்தொடு' என்றார். நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே" (சிவபுராண 89) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க. குனிப்பு - கூத்து. "குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ" (கோத் 3) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. குனிப்பு என்றது இறைவன் பேரூழியின்பின் நடிக்கும் பெருங்கூத்தினை. அது உயிர்களின் உடலிலுள்ள நாததத்துவத்தின்மேலுள்ள அருள்வெளிக்கண்ணும் பிரமாண்டத்தில் தில்லைச் திருச்சிற்றம்பலத்தின்கண்ணும் நடைபெறுவது.

கேவலத்தில் இறைவன் இயற்றுங் கூத்தினை ஆண்டு உடனிருந்து காண்பாள் உமையம்மையாகலின் 'கூரிருட் கூத்தினைக் குனிப்போன்' என்பதனை அடுத்துப் 'பேரமைத் தோளிக் காதலன்' என்று அருளிச்செய்தார்.

"பாலொத்தனைய மொழியாள் காண ஆடும் பரமனார்" (ஞான 70 : 2)

"அஞ்சொலாள் காணநின்று அழகநீ யாடுமாறே" (நாவு 23 : 9)

"கொடியிடை யுமையவள் காண ஆடிய அழகா" (சுந் 69 : 2)

எனத் தேவாரத்து வருவன காண்க.

"பாணியுந் தூக்குஞ் சீரு மென்றிவை
மாணிழை யரிவை காப்ப
வாணமில் பொருளெமக் கமர்ந்தனை யாடி" (கடவுள் 15-7)

எனக் கலித்தொகையில் வருதலும் ஈண்டு அறியற்பாலது.

அமை - மூங்கில். இது உமையம்மையின் தோளுக்கு உவமம். "அமை யார் திரடோட் குரவார் குழலாள்" (ஞான 153 : 2) "வேய்கொள் தோளுமை" (சுந் 56 : 8) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

ஏதிலர் - இயைபில்லாதவர். ஏது - இயைபு. அன்பினால் இயைபில்லா தவர்களுக்கு தானும் இயைபில்லாதவனாய் இறைவன் நிற்றலின் 'ஏதி லர்க்கு ஏதில் இறைவன்' என்றார். இயைபில்லாதவனாய் நிற்றல் - ஏதி லார்பாற் புலப்படாது நிற்றல்.

காதலர் - அன்பர். எய்ப்பு - இளைப்பு. "எய்ப்பிடத்துன்னைச் சிக்கெ னப் பிடித்தேன்" பிடித்தபத்து 5. வைப்பு - புதைபொருள். இறைவன் அன்பராயினர்க்கு எய்ப்பினில் வைப்புப் போன்றன் என்பதை,

"தொழும்பாள ரெய்ப்பினில் வைப்பனே" சதகம் 98.

"எனக் கெய்ப்பினில் வைப்பே" நீத் 39

எனப் பிறண்டும் அடிகள் அருளியவாற்றானுமறிக.

"நல்லடியார் மனத்து எய்ப்பினில் வைப்பை" (67 : 2)

எனச் சுந்தரர்தேவாரத்து வருதலுங் காண்க.

106—114. நச்சு அரவு ஆட்டிய நம்பன் போற்றி - நஞ்சினையுடைய பாம்பை ஆட்டிய நம்பெருமானுக்கு வணக்கம்; பிச்சு எமை ஏற்றிய பெரியோன் போற்றி - இவன் பித்தன் என்று சொல்லும்படியான நிலைமை யினை எனக்கு உண்டாகும்படி செய்த பெரியோனுக்கு வணக்கம்; நீற் றொடு தோற்ற வல்லோன் போற்றி - திருவெண்ணீற்றொடு திருவடிவம் தோற்ற வல்லவனுக்கு வணக்கம்; நால் திசை நடப்பன நடாஅய் - நான்கு திசைகளிலுமுள்ள இயங்கியற் பொருள்களை இயங்கச் செய்து, கிடப்பன கிடாஅய் - நிலையியற் பொருள்களிற் கிடப்பனவற்றைக் கிடக்கச் செய்து, நிற்பன நிறீஇ - அவற்றுள் நிற்பனவற்றை நிற்கச்செய்து, சொல் பதம் கடந்த தொல்லோன் - சொல்லளவையைக் கடந்துநின்ற பழையோன்; உள்ளத்து உணர்ச்சியில் கொள்ளவும் படாஅன் - மனத்தினது உணர்ச்சி யால் அளந்து அறிந்து கொள்ளவும் படாதவன்; கண் முதல் புலனால் காட்சியும் இல்லோன் - கண்முதலிய ஐம்பொறிகளின் அறிவினால் அறி யப்படுதலும் இல்லாதவன்; விண் முதல் பூதலம் வெளிப்பட வகுத்

தோன் - பிரகிருதி மாயையில் நுண்ணிய உருவில் ஒடுங்கிய வான் முதலாகிய ஐம்பெரும் பூதங்களையும் வெளிப்படையாகத் தோன்றுமாறு படைத்தவன்.

நஞ்சரவு என்பது நச்சரவு என வலித்தது. "மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம், வல்லொற் றிறுதி கிளையொற் றாகும்" (தொல். எழுத்து 414) என்பது விதி.

நச்சரவாட்டிய நம்பன் என்பது மணஞ் செய்தற்பொருட்டுத் தன் காதலியை அழைத்துச் சென்ற ஒருவன் திருப்புறம் பயம் என்னும் ஊரில் தங்கியிருந்தபோது அரவுதீண்டி இறக்க அதுகண்டு அவன்றன் காதலி மனங்கலங்கி இறைவனை நினைந்து புலம்பினள். இறைவன் அவட்கு இரங்கி ஒரு பாம்பாட்டியாக அங்கு போந்து பாம்பினை ஆட்டி அந்நஞ்சினைத் தீர்த்து அவனை உயிர்பெற்றெழச் செய்த வரலாற்றினைக் குறித்தது. "பச்சைத் தாள் அரவாட்டீ படர்சடையாய்" (ஏசற 4) என இத் திருவாசகத்தும், "கோளரவ மாட்டுங் குழகா போற்றி" "பற்றிப் பாம்பாட்டும் படிறன் கண்டாய்" (நாவு 219 5; 253 : 3) எனத் தேவாரத்தும் வருவனவுங் காண்க. திருப்புறம்பயத்தில் அரவின் விடந்தீர்த்தவன் இறைவனேயாகத் திருவிளையாடற்புராண காரர்கள் இந்நிகழ்ச்சியைத் திருஞானசம்பந்த சுவாமிகள் மீது ஏற்றிக் கூறியுள்ளனர். திருஞானசம்பந்தசுவாமிகள் விடம் தீர்த்தது திருமருகலிற் போந்த காதலர் வேறு இருவரில் ஒருவற்கேயாம் என்பதனை,

> "திருமருகல் நகரின்கண் எழுந்தருளி...பெருகுதமிழ்த் தொடைசாத்தி அங்கிருந்தார் பெரும்புகலிப் பிள்ளையார் தாம்" திருஞான. 472
>
> "மற்றிவனும் வாளரவு தீண்ட மாண்டான் மறிகடலிற் கலங்கவிழ்ந்தார் போலநின்றேன், சுற்றத்தார் எனவந்து தோன்றி என்பால் துயரமெலாம் நீங்க அருள்செய்தீர் என்னக், கற்றவர்கள் தொழுதேத்துங் காழிவேந்தர் கருணையினாற் காரிகையாள் தனக்கு நல்கப், பற்றியவாள் அரவுவிடந் தீருமாறு பணிமருகற் பெருமானைப் பாடலுற்றார்" திருஞான 481.

எனப் பெரியபுராணம் கூறுமாற்றானுமறிக.

பிச்செமை ஏற்றிய பெரியோன் என்றது உலகியல் நினைவு சிறிதுமின்றி இறைவனது திருவருட்டிறத்தையே நினைந்திருக்குமாறு தம்மைச் செய்தமையைத் தெரிவித்தவாறு. "வஞ்சகப்பெரும் புலையனேனையுன் கோயில் வாயிலிற் பிச்சனாக்கினாய்" (சதக 96) "தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி" (அம் 2) "என்பிறவி வேரறுத்துப் பெரும் பிச்சுத் தரும்பெருமான்" (அடைக் 3) "பித்தென்னை ஏற்றும்...அத்தன்" (திருவெண்பா 5) என அடிகள் அருளியமையுங் காண்க. பிச்சு-பித்து. எமை என்னும் இரண்டாவது நான்காவதன் பொருட்கண் வந்தது.

மாபேரூழிக் காலத்து எல்லாவுலகங்களையும் பொடியாக்கி அப்பொடி தன் திருமேனியிற் பொருந்துமாறு தோன்றுதல் தனக்கன்றிப் பிற

எவர்க்கும் ஆகாமையின் இறைவனை 'நீற்றொடு தோற்ற வல்லோன்' என்றார். "சுடுபொடி யணிந்த வளங்கொழி யகலத்து" (திருவாரூர்மும் 22 : 15) என வருதலுங் காண்க.

உலகத்திலுள்ள இயங்கியற்பொருள் நிலையியற்பொருள்களில், நிலையியற் பொருள்களில் கற்பாறை மலை முதலிய கிடக்கும் பொருள்களும். மரம் செடி முதலிய நிற்கும் பொருள்களும் உளவாதலின் நிலையியற்பொருள் களைக் கிடப்பன நிற்பன என இருவகைப்படுத்துக் கூறினர் 'நிற்பனவு நடப்பனவு நிலனுநீரும்' நாவு 312 : 7. நடாஅய், கிடாஅய், நிறீஇ என்பன நடத்தி கிடத்தி நிறுத்தி எனச் செய்தெனெச்சப் பொருள் தருதற்கு அளபெடை பெற்றுவந்தன. இவ்வினையெச்சங்கள் கடந்த (111 என்னும் பெயரெச்சத்தைக் கொண்டு முடிந்தன.

பதம் - அளவு முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருளாகிய இறைவன் சொல்லளவையைக் கடந்தோனாதலின் 'சொற்பதங்கடந்த தொல்லோன்' என்றார். "சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க" (திருவண்ட 40) "சொற்பதங் கடந்த அப்பன்" (அச்சப் 6 என அடிகள் பிறண்டும் அருளியமையுங் காண்க.

உள்ளத்துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன் என்றது மனத்துக்கும் எட்டாதவன் என்றவாறு. "மனவாசகங் கடந்தான்" (உயிருண்ணி 3) என வருதல் காண்க.

கண்முதற் புலனாற் காட்சியுமில்லோன் என்றது காட்சி முதலிய அளவைகளுக்கு அகப்படாதவன் என்றவாறு. புலன் - பொறியுணர்ச்சி. அவை : சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன. விண்முதற் பூதம் வான் வளி தீ நீர் நிலம் என்பன.

**115—123.** பூவில் நாற்றம் போன்று - மலரிடத்துள்ள நறுமணம் போன்று, உயர்ந்து எங்கும் ஒழிவு அற நிறைந்து - ஓங்கி எங்கும் நீக்க இல்லாமல் நிறைந்து, மேவிய பெருமை - எவற்றிற்குஞ் சார்பாகப்பொருந்திய பெருந்தன்மையினை, இன்று எனக்கு எளி வந்து அருளி - இப்பொழுது அடியேனுக்கு எளியனாய் வந்து அறிவுறுத்தியருளி, அழிதரும் ஆக்கை ஒழியச் செய்த ஒண்பொருள் - அழியுந்தன்மையையுடைய இவ்வுடம்பைத் தன்தன்மை கெடுமாறு செய்த சிறந்த பொருளாயுள்ளவன், இன்று எனக்கு எளிவந்து இருந்தனன் போற்றி - இந்நாளில் அடியேனிடத்தும் எளிதாகவந்து குருமூர்த்தியாய் எழுந்தருளியிருந்தவனுக்கு வணக்கம்; அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி - அன்பினால் உருகுதலைச் செய்யும் உடம்பினை அடியேனுக்கு அருள் செய்தவனுக்கு வணக்கம்; ஊற்று இருந்து உள்ளம் களிப்போன் போற்றி - இன்பநீர் ஊற்றாக இருந்து என் உள்ளத்தைக் களிக்கச் செய்வோனுக்கு வணக்கம். ஆற்றா இன்பம் அலர்ந்து அலை செய்ய - பொறுத்தற்கரிய இன்பவெள்ளம் அலர்ந்து பரந்து அலைவீச, போற்றா ஆக்கையை பொறுத்தல் புகலேன் - அதனைப் பேணமாட்டாத இவ்வுடம்பைத் தாங்குதலை விரும்பேன்.

பூவினிற் றோன்றும் மணம்போல இறைவனும் நீக்கமின்றி எங்கும் நிறைந் திருத்தலின் 'பூவின் நாற்றம் போன் றுயர்ந்தெங்கும் ஒழிவற நிறைந்து' என்றார். "பூவண்ணம் பூவின் மணம்போல மெய்ப்போத வின்ப மாவண்ண மெய்கொண்டவன்" எனப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்து (கடவுள் வாழ்த்து 5) வருதலும் காண்க.

இறைவன் ஒழிவற நிறைந்திருத்தல், "ஒழிவற நிறைந்த வொருவ போற்றி" (போற்றி 215) "ஒழிவற நிறைந்த யோகமே" (பிடித் 1) என அடிகளும், 'ஒழிவற நின் றெங்கு முலப்பிலான் காண்" (தே. 299 : 6) என அப்பரடிகளும் அருளியவாற்றானுமறியப்படும்.

இன்றெனக் கெளிவந்தருளி என்றது தன்பெருந்தன்மையால் இப்பொழுது எனக்கு எளிதாக வந்து அருளுபதேசஞ் செய்து என்றவாறு. "ஈறிலாதநீ எளிமையாகிவந் தொளிசெய் மானுடமாக நோக்கியும்" (சத 91) "என்பெலா முருக்கி யெளியையா யாண்ட ஈசனே" (பிடித் 10) என அடிகள் பிறண்டு அருளியமையுங் காண்க. இன்று என்றது ஆட்கொண்ட நாளை.

ஆக்கை - யாக்கை என்பதன் மரூஉ. யாக்கை - எழுவகைப் பொருளால் கட்டப்பட்டது. ஆக்கை ஒழியச் செய்தல், அதன் தன்மை கெடச் செய்தலன்றி நீங்குமாறு செய்தலாகாது. என்னை? 'அளிதரும் ஆக்கை செய்தோன்" (அண்ட 120) எனப் பின்னர் வருதலின்.

அளிதரும் ஆக்கை - அன்பினால் உருகுதலைச் செய்யும் ஆக்கை. "அன்பினா லடியேன் ஆவியோ டாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக" (கோயிற் 2) என அடிகள் அருளியமையுங் காண்க. அளிதல் - உருகுதல். "அளிபவர் உள்ளத் தமுதே போற்றி" (போற் 142) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. ஒண்பொருள் - ஒள்ளிய பொருள். "ஒளியென் னுளங் கொண்டவன் ஒண்பொருள்" (தே. 143 : 3) என அப்பரடிகள் அருளியமையுங் காண்க.

ஊற்றிருந்து - இன்ப நீரூற்றாக இருந்து. "ஊற்றான உண்ணா ரமுதே யுடையானே" (சிவபுராண 83) என அடிகள் பிறிதோரிடத்துக் கூறுதலுங் காண்க. களிப்போன் எனத் தன்வினையாற் கூறினும் அது களிப்பிப்போன் எனப் பிறவினைப் பொருளில் வந்தது. "குடிபொன்றிக் குற்றமு மாங்கே மிகும்" (குறள்) என்புழிப்போல.

ஆற்றா இன்பம் - பொறுத்தற்கரிய இன்பவெள்ளம். அலைசெய்ய என்றதனால் இன்பம் என்றது இன்பவெள்ளத்தை உணர்த்திற்று. அலர்தல் - பரத்தல். "அலர்ந்த விரிநீ ருடுக்கை யுலகம்" (கலி 114 - 18-19) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. தம் யாக்கையை அளிதரும் யாக்கையாகச் செய்துகொடுத்தும் அந்த யாக்கை பொறுத்தற்கரிய இன்பவெள்ளம் அலர்ந்து அலைவீச அதனைப் பேணமாட்டாமையால் அதனை விரும்பாமையின் 'போற்றா ஆக்கையைப் பொறுக்கல் புகலேன்' என்றார். போற்றுதல் - பேணுதல். "பார்ப்பானைத், தோழிநீ போற்றுதி யென்றி" (கலி

65 : 8-9) என்புழிப்போல. புகலல் - விரும்புதல். "ஒன்னா ரோட்டிய செருப்புகன் மறவர்" (மதுரைக் 726) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

124—145. மரகதம் குவாஅல் மாமணி பிறக்கம் மின் ஒளி கொண்ட பொன் ஒளி திகழ - பச்சை மணியின் குவியலும் மாணிக்க மணியின் குவியலும் ஒன்றுசேர்ந்து மின்னல் ஒளியைத் தன்னகத்துக் கொண்ட பொன்னொளிபோல விளங்காநிற்ப; திசைமுகன் சென்று தேடினர்க்கு ஒளித்தும் - அது தமது போருக்கு இடையூறாக நிற்றலின் அதுகண்ட பிரமனும் திருமாலும் மேலும் கீழும் சென்று அதன் முடியையும் அடியையும் தேடினாராக அவர்க்கு அகப்படாமல் ஒளித்தும், முறையுளி ஒற்றி முயன்றவர்க்கு ஒளித்தும் - நூல்களிற் சொல்லப்பட்ட முறையால் உள்ளத்தினை ஒன்றுபடுத்தி நின்று தன்னைக் காணமுயன்றவர்க்கு ஒளித்தும், ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்து உற்றவர் வருந்த உறைப்பவர்க்கு ஒளித்தும் - அன்பினால் ஒன்றுபட்ட தன்மையினைக் கொண்டு ஆராய்ந்து பார்க்கும் உள்ளத்தினையுடைய, உற்றார் வருந்தத் தாம் இறைவனைக் காண மேற்கொண்ட விரதமுயற்சியால் உறைந்து நிற்பவர்க்கு ஒளித்தும், மறைத்திறம் நோக்கி வருந்தினர்க்கு ஒளித்தும் - மந்திரங்களின் கூறுபாடுகளை ஆராய்ந்து அறிந்து உருவேற்றி அவற்றால் தன்னைக் காண முயன்று வருந்தினர்க்கு ஒளித்தும், இத்தந்திரத்தின் காண்டும் என்று இருந்தோர்க்கு அத்தந்திரத்தின் அவ்வயின் ஒளித்தும் - இந்த உபாயத்தினாற் காண்போம் என்று இருந்தோர்க்கு அவ்வுபாயத்தினால் அவ்விடத்தில் அறியப்படாமல் மறைந்தும், முனிவு அற நோக்கி - வெறுப்பு இன்றி ஆராய்ந்து பார்த்து, நனி வர கெளவி - அன்பினால் மிகுதியாகப்பற்றி, ஆண் என தோன்றி - ஒருகால் ஆண் என்று கருதும்படி தோன்றியும், அலி என பெயர்ந்து - மற்றொரு கால் அலி என்று கருதும்படி இயங்கியும் வாள் நுதல் பெண் என ஒளித்தும் - பிறிதொருகால் ஒளிபொருந்திய நெற்றியினையுடைய பெண் என்று கருதும்படி மறைந்தும், சேண்வயின் ஐம்புலன் செல விடுத்து - நெடுந்தூரத்தே ஐம்புல அவாக்களைச் செல்லுமாறு நீக்கி, அரு வரை தொறும் போய் - அரிய மலைகள்தோறும் சென்று, துற்றவை துறந்த வெற்று உயிர் ஆக்கை - தாம் முன்னர் நுகர்ந்தவற்றை விடுத்தமையால் உயிர் மட்டும் தங்கிய ஊனில்லாத உடம்பினையுடைய அருந்தவர் காட்சியுள் திருந்த ஒளித்தும் - செய்தற்கரிய தவத்தினைச் செய்தோரது தூய அறிவினுள் புலப்படினும் அவர் பிழை திருந்துமாறு ஒளித்தும், ஒன்று உண்டு இல்லை என்ற அறிவு ஒளித்தும் - ஒரு முழுமுதற்பொருள் உண்டு இல்லை என்ற அறிவுக்கு ஒளித்தும், பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும் ஒளிக்கும் சோரனை கண்டனம் - பழைய காலத்துப் பழகுந்தோறும் இந்நாளில் பழகுந்தோறும் தன்னை மறைத்துக் கொள்ளும் கள்வனைக் கண்டோம், ஆர்மின் ஆர்மின் - ஆரவாரியுங்கள் ஆரவாரியுங்கள். நாள் மலர் பிணையலின் தாள் தளை இடுமின் - புதிய மலர்களாற் கட்டப்

பட்ட மாலைகளைக் கொண்டு திருவடியைக் கட்டுங்கோள். சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின் பற்றுமின் என்றவர் பற்றுமுற்று ஒளித்தும் - வலம்வாருங்கள்; சூழ்ந்து நில்லுங்கள்; பின் தொடருங்கள்; விடாதேயுங்கள் பிடியுங்கோள் என்று கூறியவர்களது பற்றுதற்கும் அகப்படாமல் முழுவதும் மறைந்தும்;

மரகதக்குவாஅல் மாமணிப் பிறக்கம் மின்னொளி கொண்ட பொன்னொளி திகழ எனறது திசைமுகனும் திருமாலும் தம்முட்டாமே பெரியரெனச் செருக்கிப் போர்செய்தபோது அவ்விருவருக்கும் நடுவே இறைவன் இறைவியொடு மின்னொளிபோன்ற பேரொளியையுடைய பொன்னொளியுடையவனாகத் தோன்றி நின்றமையைக் குறித்தது அவ்வடிவு அம்மையும் அப்பனும் இரண்டறக் கலந்த தொன்றுதலின் 'மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம' என்றார்.

மரகதம் - பச்சைமணியைக் குறிக்கும் வடசொல். "மரகதம் அரிமணி பச்சை மணியே" என்பது பிங்கலந்தை (6 : 112). குவாஅல் - கூட்டம். "அணியிமேனுங்களும் பன்மணிக் குவாஅல்களும்' எனக் கந்தபுராணத்து (திருநகர 39) வருதலுங் காண்க. இறைவியின் நிறம் பச்சையாதலின 'மரகதக் குவாஅல்' என்றார். 'வேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை, வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லைக் கண்டேனே" எனத் திருவாசகத்தும், (கண்ட 10) "மஞ்சனே மணியுமானாய் மரகதத் திரளுமானாய்" எனத் தேவாரத்தும் (நாவு 57 : 1) வருவனவும் காண்க மாமணி - மாணிக்கம். 'மாமணி செம்மணி மாணிக்கம் பதுமராகமென் பது மப்பெயர்க்குரித்தே" எனப் பிங்கலந்தையில் (6 : 109) வருதல் காண்க பிறக்கம் - கூட்டம். 'பிணத்தின் பிறக்கம்' (கம்ப. நாகபாச 156) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. இறைவன் திருவுரு செந்நிறமாதலின் 'மாமணிப் பிறக்கம்' என்றார். "வம்பனேன் றன்னை யாண்ட மாமணியே" (வாழா 2) என வருதலும் காண்க திசைமுகன் என ஒருமையாற் கூறித் தேறினர் எனப் பன்மையால் முடித்தமையின் திருமாலும் கொள்ளப்படும். "மாலொடு நான்முகன் தேடி ஓய்யவ ருன்னி நிற்ப ஒண்டழல் விண்பிழந்தோங்கி...விரிசுடராய் நியற மெய்யன்" (குயில் 8) என அடிகள் அருளியவாறுங் காண்க. சென்று எனப் படர்க்கை வினையாற் கூறிலமையின் அவர் சென்றது இறைவன்பாலன்றி மேலும் கீழுமாகிய படர்க்கையிடத்தென்பது புலப்படும். செருக்குற்றனராதலின் திசைமுகனுக்கும் திருமாலுக்கும் இறைவன் வெளிப்பட்டிலர். "இருவரும் தம் சலமுகத்தால் ஆங்காரந் தவிரார் காண்" (சாழல் 6) என்பதனால் இருவரும் செருக்குற்றமை அறியப்படும.

உள்ளத்தை ஒருவழிப்படுத்துதற்கு நூல்களிற் சொல்லிய முறையால் தன்னுள்ளே மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆஞ்ஞை என்னும் தானங்களில் உள்ளத்தை நிறுத்தி இறைவனை அறிய முயலும் யோகிகளுக்கும் அவன் சேயனாய் நிற்றலின் 'முறையுழி யொற்றி

முயன்றவர்க் கொளித்தும்' என்றார். முறை - நூல். "இளைய பாலகன், முறைவரை வேயென முயல்வதொக்குமால்" எனக் கந்தபுராணத்தும் (அவை 1) வருதல் காண்க. உள், மூன்றாம் வேற்றுமைப் பொருள்படுவ தோர் இடைச்சொல்.

ஒற்றுமை கொண்டு நோக்கு முள்ளத்து உறைப்பவர், உற்றவர் வருந்த உறைப்பவர் எனத் தனித்தனி இயையும். கொல்லாமை வாய்மை கள்ளாமை புலாலுண்ணாமை கள்ளுண்ணாமை முதலிய நித்திய விரதங்களுடன் மனம் பொறிவழிப் போகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் கடவுளை வழிபட்டு நிற்கும் தம் நிலையினைக்கண்டு தம்மிடத்து அன்புடைய உறவினர் வருந்தா நிற்கவும், தாம் மேற்கொண்ட விரதநிலையில் உறைத்து நிற்பவர்க்கும் இறைவன் வெளிப்படாது நிற்றலின் 'உற்றவர் வருந்த உறைப்பவர்க்கொளித்தும்' என்றார். உறைப்பவர் என்றது விரதியரை.

மறை - மந்திரம். மந்திரங்களை அவற்றின் எழுகோடிகளாகிய நம, சுவதா, சுவாகா, வௌஷட், வஷட், கும், பட் என்னும் அந்தங்களோடு தாம் விரும்பிய இறைவனின் அருளைப்பெற உருவேற்றி வழிபடும் உபாசகர்களுக்கும் இறைவன் காண்டற்கரியவன் என்பார். 'மறைத்திறம் நோக்கி வருந்தினர்க் கொளித்தும்' என்றார். மறைத்திறம் என்பதற்கு வேதங்களின் பொருட்கூறுபாடு எனினுமமையும்.

முற்பிறப்பிலோ இப்பிறப்பிலோ தாம்செய்த பெரிய தீவினைப் பயன்களை நீக்குதற்குரிய உபாயங்களாக நூல்களிற் கூறப்பட்ட கழுவாய்களை முறைப்படி செய்து இறைவன் அருளைக் காண்போம் என்று இருப்போர்க்கும் இறைவன் காண்டற்கரியனாகலின் 'இத்தந்திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்கு அத்தந்திரத்தின் அவ்வயின் ஒளித்தும்' என்றார். தந்திரம் என்பதற்கு ஆகமம் முதலிய சமயநூல்கள் எனவும் உரைக்கலாம். தந்திரம் - நூல் என்னும் பொருட்டாதல், "அதிகாரம் பிடக மாரிடந் தந்திரம் பனுவ லாகமஞ் சூத்திர நூலே" என்னும் பிங்கலந்தையாலும் (7 : 299) அறிக. காண்டும் என்னும் உளப்பாட்டுத் தன்மை வினைமுற்று எதிர்காலம் காட்டுதல், 'டுபமொடு வருஉங் கடதற எதிர்காலம் பற்றிவரும்' எனச் சேனாவரையர் உரைத்தமையால் (தொல் வினை சூ 5) அறிக. அவ்வயின் - அவ்விடத்து. வயின், ஏழனுருபு "கலந்தநோய் கைம்மிகக் கண்படா தென்வயின்" (கலி 46 : 23) என்புழிப்போல.

தாந்தாம் கைக்கொண்ட சமயவழி நின்று இறைவனைத் தாந்தாம் அறிந்தவாறு வணங்கி நிற்பாரைக் கருணைக்கடலாகிய இறைவன் வெறுப்பின்றி நோக்கி அவர்வழிபடும் உருவினைப் பற்றி நின்று அருள்புரியுமிடத்துத் தன்னைப் பெண்ணுருவில் வழிபட்டார்க்கு ஆணுருவிற் றோன்றியும், ஆண்பெண் உருவில் வழிபட்டார்க்கு அவ்விரண்டுமல்லாத அலியுருவிற் றோன்றியும், ஆண் உருவில் வழிபட்டார்க்குப் பெண்ணுருவிற் றோன்றியும் அவரவர் அறிவின சிற்றெல்லையினையும் தனது பேரெல்லையினையும்

தெரிவித்தருளுவான் என்பார் 'முனிவற நோக்கி நனிவரக் கௌவி ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்த, வாணுதற் பெண்ணென வொளித்தும்' என்று அருளிச்செய்தார். முனிவு - வெறுப்பு. நனி என்பது மிகுதிப்பொருள் உணர்த்துவதோர் உரிச்சொல்.

ஐம்புல அவாக்களை விடுத்து அடைதற்கரிய மலைகளின் முழைஞ்சுகளிற் சென்று உணவை விடுத்து அதனால் உயிர்மட்டுமுடைத்தாய் மெலிந்த உடலையுடைய செயற்கரிய தவத்தினையுடைய முனிவர்களது தூய அறிவின்கண் இறைவன் வெளிப்பட்டும், பின்னர் அவர் திருந்துமாறு ஒழித்தலின், 'ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும் போய்த் துற்றவை துறந்த வெற்றுயிர் ஆக்கை அருந்தவர் காட்சியுள் திருந்த வொளித்தும், என்றார் இதனால் இறைவன் கொடுத்த உடம்பையும் கருவிகளையும் யான் எனது என்னும் அறிவுமுனைப்போடு வாட்டி வருத்தி முயலும் தவமுயற்சியாற் பெரும்பயனின்று என்பது கூறியபடியாம்.

சேண்வயின் விடுத்து என இயையும். ஐம்புலன் என்றது ஐம்புல அவாக்களை. துற்றவை - நுகர்ந்தவை. "துற்றவை துற்றும் துணையிதழ் வாய்த்தொட்டி" (பரி 20 51) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. துறத்தல் - விடுதல். யாக்கையையுடைய அருந்தவர் என்க. காட்சி-அறிவு. "துனியில் காட்சி முனிவர்" (முருகு 137) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. வெற்றுயிர் யாக்கை - உயிரை மாத்திரமுடைய ஊனற்ற உடம்பு. திருந்தவொளித்தும் என்றது அவர் யான் எனது என்னும் அறிவு முனைப்பு நீங்கி அருள்வழி நின்று தவஞ்செய்து திருந்துவதற்காக ஒளித்தும் என்றவாறு.

அமணர்கள் தமது கடவுளாகிய அருகனது உண்மையை அஸ்தி நாஸ்தி என்கின்ற உண்டு இல்லை என்னும் வாதத்தால் ஆராய்ந்து துணிவர். அவர்களது அறிவிற்கும் இறைவன் அறியப்படான் என்பார் 'ஒன்றுண்டில்லை யென்றறி வொளித்தும்'' என்றார்.

"ஐயுறு மமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியு முணராக் காழி யமர்ந்தனை" (ஞான திருவெழுகூற்)

எனத் தேவாரத்தும் வருதல் காண்க. ஒன்று - கடவுள் என்ற ஒரு பொருள். என்ற அறிவு - என்றறிவு என அகரம் தொக்கு நின்றது.

பயில்தொறும் - பழகுந்தோறும். "பயிறொறும் பண்புடையாளர் தொடர்பு" (குறள் 783) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. சோரன்-கள்வன். இறைவனை எக்காலத்தும் காண முடியாமையின் 'ஒளிக்கும் சோரனை' என்றார். ஆர்மின் ஆர்மின் என்ற அடுக்கு ஒருவகையிலும் காணப்படாது ஒளிக்கும் சோரனைக் கண்ட மகிழ்ச்சி மிகுதியைக் காட்டவும் அச்சோரன் மீட்டும் ஒளிக்குமுன் அவனைக் காண்டற்கு எல்லோரும் வம்மின் என்பதனைக் காட்டவும் வந்தது. நாண்மலர் - அன்றலர்ந்த மலர். பிணையல் - மாலை. சுற்றுமின் - அரும்பொருளைக் கண்டமையால் வலம்

வாருங்கள். சூழ்தல் - நாற்புறமும் நெருங்கி நிற்றல். தொடர்தல் - பின் தொடர்தல். விடேன்மின் - பின்தொடர்தலில் விடேன்மின்.

என்றவர் என்றது தத்துவ ஞானிகளை. துறவு நெறிக்கண் நின்று இறைவனைக் கண்ட தத்துவஞானிகளுக்கும் யான் எனது என்னும் செருக்குக் கெடாதவழி இறைவன் அவர்களது பற்றுதலுக்கும் அகப்படான் என்பார் 'ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்' என்றும், 'பற்றுமுற் றொழித்தும்' என்றும் அருளினார். பற்றுமுற்றும் ஒளித்தும் என்றது அவர்கள் உபாயங்கள் முழுவதற்கும் ஒழித்தும் என்றவாறு. இங்கே, "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு" எனத் திருவள்ளுவநாயனார் கூறிய நெறியில் நிற்பார்க்கும் இறைவன் ஒளிப்பன் என அருளியதை.

"பற்றாங்கவை அற்றீர்பற்றும் பற்றாங்கது பற்றி
நற்றாங்கதி யடைவோமெனிற் கெடுவீரோடி வம்மின்
தெற்றார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை இறைசீர்
கற்றாங்கவன் கழல்பேணின ரொடுங் கூடுமின் கலந்தே" உயிருண்ணி 6

என அடிகள் அருளியமையானுமறிக. ஒளித்தும் (115) தானேயான தன்மை (146) என இயையும்.

146 – 157 தன் நேர் இல்லோன் தானே ஆன தன்மை - தனக்கு ஒப்பாவார் பிறர் எவரும் இல்லாதவன் தான் ஒருவனுமே ஆன தன்மையினை, என் நேர் அனையோர் கேட்க - என்னை ஒத்த தகுதி குறைந்த தன்மையுடையோரும் கேட்டு உணருமாறு, மறையோர் கோலம் காட்டி வந்து - அந்தணர் கோலத்தைக் காட்டிக் குருவடிவில் எழுந்தருளி வந்து, அறைகூவி ஆட்கொண்டருளி - போர் செய்தற்கு வலிய அழைத்தாற்போல என்னை வலிந்து அழைத்து என்னை ஆட்கொண்டருளி, இயம்பி அருளலும் - உபதேசஞ்செய்து அருள்செய்த அளவிலே, உளையா - அருட்பெருக்கைத் தாங்க முடியாமல் மனம்வருந்தி, அன்பு என்பு உருக ஓலம் இட்டு - அன்பினால் என்பும் உருகக் கூவியழைத்து, அலைகடல் திரையில் ஆர்த்து ஆர்த்து ஓங்கி - அசையாநின்ற கடலின் திரைகளைப் போல இடையறாது ஆரவாரித்து மேலெழுந்து, தலைதடுமாறா வீழ்ந்து புரண்டு அலறி - நிலைகலங்கி கீழே வீழ்ந்து புரண்டு கதறி, பித்தரின் மயங்கி - பித்தரைப்போல மயங்கி, நாட்டவர் மத்தரின் மதித்து மருளவும் - நாட்டிலுள்ளார் என்னை வெறி கொண்ட பிடித்தாரைப் போலக் கருதி அச்சங்கொண்டு மருட்சியடையவும்; கேட்டவர் வியப்பவும் - என் தன்மையைக் கேள்விப்பட்டவர் வியப்படையவும், கட களிறு ஏற்றா தட பெருமதத்தின் ஆற்றேன் ஆக - ஆண்யானை பாகனைத் தன்மேல் ஏறவிடாமைக்குக் காரணமாகிய மிகப்பெரிய மதக்களிப்பினைத் தாங்கமாட்டாமை போல என்பாற் பெருகிய அருட்பெருக்கினைத் தாங்க இயலாதவனாகும்படி, அவயவம் சுவை தரு கோல் தேன் கொண்டு செய்தனன் - என் உறுப்புக்களை எல்லாம் தித்திப்பினைத் தருகின்ற கொம்புத் தேனைக் கொண்டு ஆக்கினன்.

தன் நேர் இல்லோன் தானேயான தன்மை என்றது தனக்கு ஒப்பாவார் பிறர் எவரும் இல்லாதவன் தான் ஒருவனேயான தன்மை என்றவாறு. "ஒன்னுவார் பிறரன்றி நீயேயானாய்" "இணையொருவர் தாமல்லால் யாருமில்லார்" (தே. 257 : 2; 296 : 7) எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியமையுங் காண்க. நேர் - ஒப்பு.

என் நேர் அனையோர் கேட்க என்றது தன்னை அறியும் ஆற்றலில் மிகத்தாழ்ந்த நிலையிலுள்ள என்னை ஒத்த தன்மையுடையோர் கேட்க என்றவாறு. நேர் என்பது ஈண்டு வினைச்சொல்லாய் நின்று ஒத்த என்னும் பொருள்தந்தது. "நறுமுல்லை நேர்முகை யொப்ப" (கலி 21 : 9) என்புழிப்போல. அனையோர் - அத்தன்மையையுடையோர்.

பலவகையான் முயன்றார்க்கெல்லாம் ஒளித்திருந்தும், அடிகளை ஆட்கொள்ளவேண்டி இறைவன் அந்தணப் பரமாசாரியனாய் வலிய வந்து வெளிப்பட்டமையின் "மறையோர் கோலம் காட்டி வந்து" என்றார்.

"அருவாய் மறைபயில் அந்தணனாய் ஆண்டுகொண்ட
திருவான தேவற்கே" கோத் 14.

"திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்" தெள் 1.

"அந்தண னாகிவந் திங்கே அழகிய சேவடி காட்டி
எந்தமராம் இவனென்றிங் கென்னையு மாட்கொண் டருளுஞ்
செந்தழல் போல்திரு மேனித் தேவர்பிரான்" குயில் 10.

"அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்" பள்ளி 8.

"பத்தர் சூழப் பராபரன் பாரில்வந்து பார்ப்பானெனச்
சித்தர் சூழச் சிவபிரான் தில்லைமூதூர் நடஞ்செய்வான்
எத்தனாகிவந் தில்புகுந் தெமை ஆளுங்கொண்டு" சென்னி 4

என வருவன காண்க.

அறைகூவல் - போருக்கு அழைத்தல். "அருமுனையா னறைகூவின பின்" (பு. வெ. மா. 67) என்புழி, 'அறைகூவின பின் - போருக்கு அழைத்த பின்' என அதன் உரையாசிரியர் உரைத்தமை காண்க. போருக்கு வலிந்து அழைத்தாற்போல இறைவனும் அடிகளை வலிந்தழைத்து ஆட்கொண்டருளினமையின் 'அறைகூவி ஆட்கொண்டருளி' என்றார். இதனை,

"கள்ளேன் ஒழியவுங் கண்டுகொண் டாண்டதெக் காரணமே" நீத் 2

"நம்மை யகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை" பொற் 12.

"ஆவா அரியயன் இந்திரன்வானோர்க் கரியசிவன்
வாவா வென்றென்னையும் பூதலத்தே வலித் தாண்டுகொண்டான்"
தெள் 7.

"தேடி நீ யாண்டாய் சிவபுரத் தரசே" வாழாப்பத்து 3.

"நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்"
குழைத். 8.

"தில்லைமூதூர் நடஞ்செய்வான், எத்தனுமாகிவந் தில்புகுந்தெமை
யாளுங் கொண்டு" சென்னிப். 4.

என அடிகள் அருளியவாற்றானுமறிக.

உளையா - வருந்தி. "உளைவிலை - வருத்தமிலையாய்" கலி 83 : 5 நச். வருந்தியது அருட்பெருக்கைத் தாங்கமுடியாமை பற்றி. இனி உளையா அன்பு என்பதற்கு வெறுப்பில்லாத அன்பு எனினுமாம். அன்பு என்புருக என்றது அன்பினால் உடலின் வலி, பாகமாகிய என்பும் உருகும்படி என்றவாறு. "அன்பினா லடியேன் ஆவியோ டாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக" (கோயிற்2) என வருதல் காண்க. ஓலமிட்டு - கூவியழைத்து. திருக்கோவையார் 179 உரை. ஓலமிட்டு (150) ஆர்த்து (151) என இயையும். அலைகடற் றிரையின் ஆர்த்தார்த்து ஓங்கி விழுந்து புரண்டு அலறி என இயையும். "ஓங்கலை மேவிப் புரண்டுவிழுந் தோலமிட்டுத், தீங்கணைந்தோ ரல்லுந் தேறாய் கலங்கிச் செறிகடலே" திருக்கோவை 17?) என அடிகள் அருளியமையுங் காண்க. ஆர்த்து ஆர்த்து என்னும் அடுக்கு விரைவு பற்றி வந்தது. தலைதடுமாறு - நிலைகலங்கி. இது செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். பித்தரின் மயங்கி - பித்தர் மயங்குவதுபோல மயங்கி என்றவாறு.

ஓலமிட்டதும் ஆர்த்தார்த்து ஓங்கியதும் தலைதடுமாறியதும் வீழ்ந்து புரண்டு அலறியதும் இறைவனது அருட்பெருக்கைத் தன் ஊனுடம்பில் தாங்கமுடியாமை பற்றி என்க.

மத்தர் - மனக்களிப்பினையுடையவர். மத்தம் - மனக்களிப்பு. "மத்த மனத்தொடு மாலிவனென்ன" (சதக 3) என வருதல் காண்க. மதித்தல் - கருதுதல். "மனங்கொ ளருள் நீர்மைதனின் ஆடலை மதித்தான்" (கந்த. திருவிளையாட்டு 1) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. மருளவும், வியப்பவும் ஆற்றேனாக என இயையும்.

கடக்களிறு ஏற்றாத் தடப்பெருமதத்தின் ஆற்றேனாக என்றது களிறு பாகனைத் தன்மீது ஏறவிடாமைக்குக் காரணமாகிய மதத்தின்வழி திரிதல் போல என்பாற்பெருகிய அருட்பெருக்கினை ஊனுடம்பினையுடைய யான் தாங்கமாட்டேனாய் அவ்வருள்வழித் திரிதர என்றவாறு. கடக்களிறு என்பது இடுகுறிமாத்திரையாய் நின்றது. கருங்கண்ணன் என்பதுபோல.

அவாவெங் கோற்றேன் கொண்டு செய்தனன் என்றது இங்ஙனம் ஆற்றாநிலையைக்கண்ட இறைவன் தன்பாற்று யான்கொண்ட பேரன்பாலும் தவ்வன்பினால் யான் பெற்ற பேரருளாலும் தூயதாய என் இயல்புக்குத்தக என் உடம்பையும் நுண்ணிய தூய இப்பவடிவாகச் செய்தனன் என்றவாறு. இது அடிகள் இறைவனிடத்து நிருவாணதிக்கை பெற்றுக்கொண்டபின் தமது உடம்பில் உளதாகிய தூயதன்மையைக் கூறியவாறு. அவயு

வம் - உறுப்பு வடசொல். கோற்றேன் - கொம்புத்தேன். மிக்க தீஞ்சுவைத் தாதலின் அதனை எடுத்துக் கூறினர். "கோற்றேன் எனக்கென்கோ குரை கடல்வா யமுதென்கோ" (உயிருண் 8) "கோற்றேன் மொழிக் கிள்ளாய்" (தசாங்கம் 7) என அடிகள் பிறாண்டு கூறுதலும் காண்க.

கேட்க (147) மறையோர் கோலம் காட்டி (149) வந்து (147) அறை கூவி ஆட்கொண்டருளி (148) இயம்பி (147) அருளலும் (149) உளையா ஓலமிட்டு (150) ஆர்த்தார்த்து ஓங்கி (151) விழுந்து புரண்டு அலறி (152) மயங்கி (153) மருளவும் வியப்பவும் (154) ஆற்றேனாக அவயவம் (151) கோற்றேன் கொண்டு செய்தனன் (157) என முடிக்க.

158—162 ஏற்றார் மூதூர் எழில் நகை எரியின் வீழ்வித்து ஆங்கு - பகைவர்களுடைய பழைய ஊர் மூன்றினையும் எழுச்சிபெற்றுத் தோன்றிய சிரிப்பில் உண்டான நெருப்பினால் சாம்பராய் வீழச் செய்தாற்போல, அன்று ஒருத்தரும் வாழாமை அடியோம் அடிக்குடில் அருள் பெருந் தீயில் ஒடுக்கினன் - எம்மை ஆட்கொண்ட அந்நாளில் ஒருவரும் தவறிப்போகா மல் அடியோங்களது அடிமைச் சிறு வீடுகளாகிய உடம்புகளைத் தனது அருளாகிய பெருந்தீயினிடத்தே ஒடுங்கச் செய்தனன்; தட கையின் நெல் லிக்கனி எனக்கு ஆயினன் - வளைந்த கையினிடத்து ஏந்திய நெல்லிக்கனி போன்று எனக்கு எளிவந்து விளங்கித் தோன்றுவானாயினன்.

ஏற்றார் - பகைவர். இப்பொருட்டாதலைப் "பேரெதிர்ந்தேற்றார் மதுகை மதந்தப" என்னும் பரிபாடலினும் (18 : 1) காண்க. முதுமை ஊர் - மூதூர் எழில் - எழுச்சி கலி 14 : 2 நச். எழில்நகை என்றார், போர்க்கரு களாயமைந்த தேவர்களின் அறியாமையை உணர்ந்த இறைவன் தேரின் கண் திருவடியை வைத்தலும் அதன் அச்சு முரிந்தமையால் உண்டாகிய எழுச்சிபெற்ற நகையாதலின்.

ஏற்றார் மூதூர் எழில்நகை எரியின் வீழ்வித்த வரலாறு :- தார காக்கன், கமலாக்கன், வித்யுன்மாலி என்னும் மூன்று அசுரர்களும் இரும்பு வெள்ளி பொன் என்னும் மூன்று உலோகங்களாலான முப்புரங்களை விண்ணிலுடையராய் அவற்றுடன் சென்று தேவர் முதலியோரது நகரங் களை அழித்துத் தீமைசெய்து வந்தனர். அம்முப்புரங்களை அழித்து அசு ரர்களை வெல்லத் தேவர்கள் எவராலும் ஆகாமையின் இறைவனிடத்துச் சென்று வேண்டுதல் செய்து பூமியைத் தேர்த்தட்டாகவும் சூரிய சந்திரர் களை உருளைகளாகவும் நான்முகனைச் சாரதியாகவும் கொண்டு தேர்அமைத்து மேருவை வில்லாகவும், வாசுகியை நாணாகவும் திருமாலை அம்பாகவும் அமைத்தனர். அமைத்த அத்தேவர், தம் எல்லோரதும் உதவியினாலேயே இறைவன் முப்புரங்களை அளிப்பராகின்றார் என்று எண்ணித் தருக்கினர். அதையறிந்த இறைவன்,

"தச்சு விடுத்தலும் தாமடி யிட்டலும்
அச்சு முரிந்ததென் றுந்தீ பற
அழிந்தன முப்புர மென்றுந்தீ பற" உந்தி 13.

என்றவாறு தேரில் திருவடியை வைத்தலும் தேரின் அச்சு முரிந்தது. அப்போது இறைவர்க்கு நகை உண்டாயிற்று. அந்நகையிலெழுந்த அக்கினியே முப்புரங்களை எரித்து வீழச்செய்தது என்பதாம்.

"விண்ணிலா ரிமையவர் மெய்ம்மகிழ்ந் தேத்தவே
எண்ணிலார் முப்புர மெரியுண நகைசெய்தார்" ஞான 286 : 7.

"தரியலர்கள் புரமூன்றுந் தழல்வாய்வேவச் சிரித்தானை" நாவு 294: 10.

"புரங்கண் மூன்றும் வெவ்வழலில் வெந்து பொடியாகி வீழக்கண்
டானை" நாவு 274 : 7.

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

எழில்நகை எரியின் வீழ்வித்தாங்கு (159) அடியோம் அடிக்குடில் ஒருத்தரும் வழாமை ஒடுக்கினன் என்றது எழுச்சிபெற்ற சிரிப்பாகிய அக்கினியினால் அசுரர்களை விடுத்து அவர்கள் முப்புரங்கள் மூன்றினையும் வீழ்வித்தாற்போல அடியார் வீடு பேற்றினைப் பெற அவர்களுடைய அடிமைக் குடில்களாகிய உடம்புகளை அருட்பெருந்தீயில் ஒடுக்கினன் என்றவாறு.

அடியோம் அடிக்குடில் என உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப் பெயரால் அடிகள் கூறியிருப்பினும் அடியோம் என்றது அடிகள் ஒழிந்த மற்றைய உடனிருந்த அடியார்கள் எல்லாரையும் குறித்தது. அருட்பெருந்தீயில் ஒடுக்கப்பட்டவர்களில் அடிகள் சேர்ந்தவரல்லர் என்பது,

"ஆற்றே னாக அவையவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்" (அண்ட. 156-7)

என அடிகள் தனக்கு இறைவன் அருட்பெருக்கினைத் தாங்கத்தக்க சிறந்த உடம்பினைக் கொடுத்தனன் என அருளிச்செய்தமையானும்,

"நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல வென்னை ஈங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறு மடியவர்
ஒன்ற வொன்ற வுடன்கலந் தருளியும்" கீர்த்தி 127-31.

என முன்னர் அருளிச் செய்தமையானும்,

"தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன்" திருவண்ட 162.

"கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையு மிருப்ப தாக்கினன்" திருவண்ட 178-9.

என பின்னரும் அருளிச் செய்தமையானும் இனிது விளங்கும்.

அடிமைக்குடில் அடிக்குடி என நின்றது விகாரம். "அன்னவற்குரிய ளென்ன வடிப்பணி செய்வலென்றாள்" (சீவக 552) என்பதன் உரையில் 'அடிமைப்பணி விகாரமாம்' என நச்சினார்க்கினியர் உரைத்தமையுங்

காண்க. குடில் - சிற்றில். "கூரை குரம்பை குடில் சிற்றிலாகும்" எனத் திவாகரத்து (இடப்பெயர்த்) வருதலுங் காண்க. உடம்பைக் குடில் என்றல்,

"மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை" சிவபுரா 54.

"சீவார்ந் தீமொய்த் தழுக்கொடு திரியுஞ் சிறுகுடில்" ஆசைப் 3.

"இருள்திணிந் திட்டதோர் வல்வினைச் சிறுகுடில்" அதிசய 10.

என வருவனவற்றானுமறிக. அடிக்குடில் எனக் குடிலுக்குரியாரது அடிமைத்தன்மை குடின்மேலேற்றப்பட்டது. குடில் (160) ஒடுக்கினன் (161) என முடிக்க.

தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன் என்பது நீர்வேட்கையால் வருந்தினர்க்கு அதனைத் தீர்த்தற்கு உள்ளங்கையிற் கிடைத்த நெல்லிக் கனி உதவுவதுபோலவும், அது கையிற் கிடைத்த அளவானே அது நீர் வேட்கையை நீக்கும் தன்மையுடைத்தென்பது அதனை வைத்திருப்பவர்க்கு விளங்குதல் போலவும், இறைவன் தனது பிறவித்துன்பத்தை எளிதிற் போக்குமாறு தமக்குக் கிடைத்தமையையும், கிடைத்த அவ்விறைவன் துன்பத்தைப் போக்கும் அருள்நீர்மையன் என்பது தமக்குத் தெற்றென விளங்குகின்றமையையும் உணர்த்தியவாறு. "மறவா மனத்தார்க்கெலாம் கையில் ஆமலகக் கனியொக்குமே" என அப்பரடிகள் (தே நாவு 186 : 2) அருளியமையும் காண்க. தடக்கை என்றது உள்ளங்கையை.

163—177 வாழி - என்னை அடிமைகொண்ட எம்பெருமான் திருவருள் வாழ்வதாக. தான் எனைச் செய்தது நாயேன் சொல்லுவது அறியேன் - அவ்விறைவன் தான் என்னை ஆட்கொண்ட வகையை நாயை ஒத்தவனாகிய அடியேன் சொல்லுதல் அறியேன்; தரியேன் - ஆட்கொண்டதனாலாகும் இன்பப்பேற்றினை அடியேன் தாங்கமாட்டேன்; தெரியேன் - அதனை இன்னதென்று தெரியவுமாட்டேன்; முறையோ - நான் இவ்வாறு இருப்பது முறையாகுமோ; ஆ ஆ செத்தேன் - ஆஆ யான் எனது என்னும் செருக்கு நீங்கப்பெற்றேன்; அடியேற்கு அருளியது அறியேன் - எம்பெருமான் அடியேனுக்கு அருள்செய்தமைக்குக் காரணம் யாது என்பதையும் அறிந்திலேன்; பருகியும் ஆரேன் - எம்பெருமான் அருளிய பேரின்ப வெள்ளத்தைக் குடித்தும் தெவிட்டப்பெறேன்; விழுங்கியும் ஒல்லகில்லேன் - அதனை முழுவதும் விழுங்கியும் பொறுக்குமாற்றலுடையேனல்லேன்; வாக்கு இறந்து அமுதம் - சொல்லின் அளவையையும் கடந்து பேரின்ப அமுதமானது, உவா கடல் நள்ளுநீர் உள் அகம் ததும்ப - நிறைமதிக் காலத்துக் கடலின் உள்ளிடத்துப் பொங்கி எழுகின்ற நீரைப்போல உள்ளத்தின் உள்ளிடத்தே நிரம்ப, செழு தண் பாற் கடல் திரை புரைவித்து - அதனைச் செழுமையான குளிர்ந்த பாற்கடலின் திரையினை ஒக்கப் பரவச் செய்து, மயிர்க்கால் தோறும் தேக்கிட செய்தனன் - மயிரின் அடிதோறும் வந்துநிறையும்படி செய்தனன்; நாய் உடல் அகத்தே குரம்பை கொண்டு - நாய்போல் இழிந்த என் உடம்பினுள்ளே தான் இருத்தற்குச் சிறுவீடு

அமைத்துக் கொண்டு, கொடியேன் ஊன் தழை குரம்பை தோறும் - கொடிய வனாகிய எனது ஊன்மிகுந்த சிறிய உடம்பின் இடங்கள் தோறும், இன் தேன் பாய்த்தி - இனிய தேன்போன்ற பேரின்பத்தினைப் பாயச்செய்து, நிரம்பிய அற்புதமான அமுத தாரைகள் எற்பு துளைதொறும் ஏற்றினன் - நிறைந்த வியக்கத்தக்க பேரின்ப அமுதநீர் ஒழுக்குகளை எனது உடம்பிலுள்ள எலும்பின் உட்டுளைகள்தோறும் ஏறச் செய்தனன்; உருகுவது உள்ளம் கொண்டு ஓர் உரு செய்தாங்கு - உருகுவதாகிய உள்ளத்தினையே முதற்காரணமாகக்கொண்டு கட்புலப்படத்தக்க ஒரு வடிவத்தைச் செய்தாற்போல, எனக்கு அன்பாறு ஆக்கை அமைத்தனன் - எனக்குப் பேரின்ப அமுதத்தைக்கொண்டு வாயூற இனிமைசெய்யும் உடம்பை ஆக்கிவைத்தான்.

வாழிய என்பது ஈறுகெட்டு வாழிஎன நின்றது. தான் எனைச் செய்தது என்றது இறைவன் என்னை ஆட்கொண்டு முன்னிருந்த நிலையினின்றும் வேறுநிலை அடையச் செய்த தன்மையினை.

"வஞ்சகப்பெரும் புலையனேனையுன் கோயில் வாயிலிற்
பிச்சனாக்கினாய் பெரிய அன்பருக் குரியனாக்கினாய்" சதக 96.

என அடிகள் அருளியமையுங் கண்டறியற்பாலது.

இன்பமன்றிப் பிறிதொன்றும் தோன்றாமையானும் அதன் இயல்பினைப் பிறர்க்கெடுத்துரைத்தல் ஆகாமையானும், 'சொல்லுவதறியேன்' என்றார். அதனைத் தம்மால் அறியலாகாமையின் 'தெரியேன்' என்றார். இறைவன் கொடுத்த பேரின்பத்தைத் தாங்கமாட்டாமையின் 'தரியேன்' என்றார் "கோற்றேன் எனக்கென்கோ குரை கடல்வாய் அமுதென்கோ, ஆற்றேன் எங்கள் அரனே" (உயிருண்ணி 8) என அடிகள் அருளியமையுங் காண்க.

முறையோ என்பது தான் எனைச் செய்ததைத் தெரியாமலும் சொல்ல அறியாமலும் தாங்க முடியாமலும் யானிருப்பது ஒழுங்காமோ என இறைவனிடம் முறையிட்டவாறு.

ஆவா செத்தேன் என்றது நீங்குதற்கரிய யான் எனது என்னும் செருக்கு நீங்கப்பெற்றேன்; ஆ ஆ இஃதென்ன வியப்பு என்றவாறு. யான் எனது என்பன நீங்கியமை,

"நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ" தெள் 18.

"யான் எனதென் றுரைமாய்த்துக் கோதிலமுதானானை" கண்டபத்து 5

என அடிகள் அருளியவாற்றானுமறியப்படும். ஆ ஆ என்பன இடையே உடம்படுமெய் பெற்று ஆவா என்றாயின. "ஆவா என்ன ஆசைப்பட்டேன்" (ஆசைப் 3) என்புழிப்போல. இவை ஈண்டு வியப்பின்கண் வந்தன.

அடியேற்கு அருளியது அறியேன் என்றது ஒன்றுக்கும் பற்றாத அடியேனுக்கு இறைவன் எளியனாய் வந்து அருளியது எதனால் என அறியேன் என இறைவன் அடியார்க்கெளியனாந் தன்மையை வியந்துரைத்தவாறு.

பேரின்பத்தைப் பருகியும் அதனைப் பருகும் வேட்கை மேன்மேல் வளர்தலின் 'பருகியும் ஆரேன்' என்றார். "புணருந் தொறும் பெரும் போகம் பின்னும் புதிதாய்...வளர்கின்றதே" எனத் திருக்கோவையாரில் (9) அடிகள் அருளியமையுங் காண்க. பருகுதல் - குடித்தல். ஆர்தல் - தெவிட்டல். பருகியும் ஆராமையினால் முழுவதும் விழுங்கியும் அதனைப் பொறுக்கும் ஆற்றலின்மையின் 'விழுங்கியு மொல்ல கில்லேன்' என்றார்.

"வழங்குகின் றாய்க்குன் அருளார் அமுதை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன்" அடைக்கலப் 10.

என அடிகள் அருளியவாறுங் காண்க. விழுங்குதல் - முழுதுமாய் உண்டல். ஒல்லல் - பொறுத்தல். இப்பொருட்டாதல் "ஒல்லுவ சொல்லா துரை வழுவச் சொல்ல" என்னும் பரிபாடலுரையில் (12 65) 'ஒல்லுவ-பொறுப்பன' எனப் பரிமேலழகர் உரைத்தமையானுமறிக. கில் - ஆற்றலுணர்த்துவதோர் இடைச்சொல்.

வாக்கிறந்தமுதம் (170) உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகந் ததும்ப (169) செழுந்தண் பாற்கடல் திரைபுரைவித்து (165) மயிர்க்கால்தோறுந் (170) தேக்கிடச் செய்தனன் (171) என மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்க.

பேரின்ப அமுதின் தன்மையும் அளவும் சொல்லின் அளவைக் கடந்தமையின் 'வாக்கிறந் தமுதம்' என்றார். இறத்தல் - கடத்தல். "சொல்லிறந்து நின்றதொன்மை யாதிகுணம்" (குயில் 1) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

உவா என்றது ஈண்டு நிறைமதிக் காலத்தை, "உவவுமதி யுருவி னோங்கல் வெண்குடை" (புற 3: 1) என வருதலுங் காண்க. அக்காலத்து கடலின் உள்ளிடத்துநீர் பெருகுவதுபோல உள்ளத்தின் உள்ளிடத்தே அமுதத்தைப் பெருகச் செய்தமையின் 'உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகந் ததும்ப' என்றார். உவாநாளிற் கடல் பெருதல்,

"உருகெழு பெருங்கடல் உவவுக் கிளர்ந்தாங்கு" அக 201 : 9.

"உவாக்கடற் பரப்பி லொல்லென மயங்கி" பெருங் (1) 37 : 278.

"உவாக்கட லொலியின்" பெருங் (1) 38 : 89.

என வருவனவற்றாலுமறியப்படும். நள்ளுநீர் - நடுவிலுள்ள நீர். நள்ளு - நடு. இப்பொருட்டாதல் "நள்ளுங் கீழுளு மேலுளும் யாவுளும்" (சத 46) என்புழியுங் காண்க. நள்ளுநீரைப் போல என ஒரு சொல் அவாய் நிலையான் வருவித்துரைக்க. ததும்ப - நிரம்ப. "குறும்பல் குறும்பிற் றதும்ப வைகி" (புற 177 : 7) என்புழிப்போல.

மிகத்தூய பேரின்ப அமுதத்தினை மேன்மேன் எழுந்து மயிர்க்கால் தோறும் தேக்கிடச் செய்தமைக்குச் 'செழுந்தண் பாற்கடற்றிரை' உவமை. பேரின்ப அமுதம் உடம்பின் உள்ளகத்தே நிரம்பி அதன் மேலுள்ள மயிர்க்கால் வரையில் நிறையச் செய்தமையின் 'அமுதம் மயிர்க்கால் தோறும் தேக்கிடச் செய்தனன்' என்றார். தேக்கல் - நிறைதல். "தேக்

இய தேனுடன் இருல்மதி கிடக்கும்'' (கல்லாடம் 1 : 5) என்புழியும் இப் பொருட்டாதல் காண்க. ''மலித றுவன்றன் மல்க லார்தல்...தேக்கல் கிளைத்தல் நிரம்பல் பூரணங் கமமே நிறைவு'' எனப் பிங்கலந்தையில் (7 : 470) வருதலுங் காண்க.

உடம்பின்கண் தோல் இரத்தம் எலும்பு மேதை முதலிய மற்றைய பொருள்களிலும் ஊன்மிக்கிருத்தல் பற்றி 'ஊன்றழை குரம்பை' என்ருர். தழைத்தல் - மிகுதல். இப்பொருட்டாதல் ''மைத்தழையா நின்ற மாமிடற்றம்பலவன்'' என்னும் திருக்கோவையாரினும் (102) காண்க. குரம்பை - குடில். சிறுபாண் 174 நச். குரம்பை போறலின் உடம்பைக் 'குரம்பை' என்ருர். ''கள்ளப் புலக் குரம்பை'' (சிவபுரா 88) ''மலமாக் குரம்பை'' (சத 54) ''இடுக்கணுடைப் புன்குரம்பை'' (சென்னி 8) ''முழுப் புழுக் குரம்பை'' (பிடித்த) என அடிகள் பிறண்டு அருளியமையுங் காண்க.

நாயுடல் என்பது உடம்பின் இழிவைக் குறித்தது. அடிகள் தமது உடம்பினை இறைவன் தானிருக்கும் இடமாகக் கொண்டமை கண்டு 'நாயுடலகத்தே குரம்பை கொண்டு'' என்ருர். ''இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்'' ''ஈசா உடலிடங் கொண்டாய்'' (கோயில் 5, 10) எனப் பிறண்டும் அருளியமை காண்க. அகத்து என்றது இருதயகமலத்தை.

இன்றேன் என்றது இனியதேன்போன்ற பேரின்பத்தை அதனை இறைவன் உடம்பெங்கும் நிறைவித்தமையோடு உடம்பிலுள்ள வலிய எலும்புகளின் துளைகள்தோறும் ஏறச்செய்தமைதோன்ற 'அமுத தாரைகள் எற்புத் துளைதொறும் ஏற்றினன்' என்ருர். அற்புதமான அமுத தாரை என்ருர் அப்பேரின்பவொழுக்கு முன் ஒருபோதும் கண்டறியப்படாத தொன்ருகலின் தாரை - ஒழுக்கு. ''நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்ப'' (திருவெம் 15) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. என்பு - எற்பு என்ருயிற்று. ''மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம், வல்லொற் றிறுதி கிளையொற் ருகும்'' (தொல் : குற்றியலுகரப் 9) என்பது விதி. என்பில் துளையுண்மை ''என தென்பின் புரை'' (உயிருண்ணி 4) என்பதனுலுமறியப்படும்.

நாயுடலகத்தே 172) குரம்பை கொண்டு (173) கொடியேன் ஊன்றழைக் (171) குரம்பைதோறும் (172) இன்றேன் பாய்த்தி நிரம்பிய (173) அற்புதமான அமுத தாரைகள் (174) எற்புத்துளைதொறும் ஏற்றினன் (175) என முடிக்க.

அன்பினுல் உருகும் உள்ளத்தையே பொருளாகக் கொண்டு அதனுல் ஓர் உருச்செய்தால் அது உருகிய தன்மைத்தாயிருக்குமாதலின், உருகுவதாகிய தமது யாக்கைக்கு 'உருகுவது உள்ளங்கொண் டோருருச் செய்தாங்கு ஆக்கை அமைத்தனன்' என உவமையாகக் கூறினர். இஃது இல்பொருளுவமை. அன்பினுல் ஆக்கை உருகல், ''அன்பினு லடியேன் ஆவியோ டாக்கை ஆனந்த மாய்க் கசிந்துருக'' (கோயிற் 2) என அடிகள் அருளியவாற்றுனுமறிக.

அள்ளூறு ஆக்கை - வாய் ஊற இனிமை செய்யும் யாக்கை. அள்ளூறல் - வாயூறல். "அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய்" (திருவெம் 3) என வருதல் காண்க.

172—182. ஒள்ளிய கன்னல் கனி தேர் களிறு என - சிறந்த கரும்பாகிய இனிய உணவினையும் விளவின் கனியினையும் ஆராய்ந்து உணவாகக்கொள்கின்ற ஆண்யானையைப்போல, கடைமுறை என்னையும் இருப்பது ஆக்கினன் - முடிவில் ஒன்றுக்கும் பற்றாத என்னையும் பேரின்பத்தில் நிலைபெற்று இருக்குமாறு செய்தருளினன்; என்னில் கருணை வான் தேன் கலக்க - என்னிடத்தில் திருவருளாகிய தூய தேன் கலக்கும்படி, பிரமன் மால் அறியா பெற்றியோன் - நான்முகனும் திருமாலும் அறியமுடியாத தன்மையையுடைய எம்பெருமான், அருளொடு பரா அமுது ஆக்கினன் - அவ்வருளொடு மேலான பேரின்ப அமுதத்தினையும் அமைத்து வைத்தனன்.

வேழக்கரும்பினையும் விழவின் கனியினையும் விரும்பியுண்ணும் யானை அவ்வுண்டற்சுவையின்கண் களித்து இறுமாந்திருத்தல்போல, இறைவன் தனது அருட்பேரின்பத்தில் திளைத்து இறுமாந்து களித்திருக்கச் செய்தனன் என்பார் 'கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை, என்னையு மிருப்ப தாக்கினன்' என்றார். "இறுமாந்திருப்பன்கொலோ - வீசன் பல்கணத்தெண்ணப்பட்டு" என அப்பரடிகள் (தே. 9 : 11) அருளியதும் ஈண்டு சிந்திக்கத்தக்கது.

கன்னல் - கரும்பு. "கழைவேழ மிக்கு கன்னல் கரும்பே" என்பது திவாகரம். தேர்தல் ஈண்டு உணவாகக் கொள்ளுதல். "கொங்கு தேர் வாழ்க்கை" (குறுந்) என்புழிப்போல. கடைமுறை - முடிவில். "கடைமுறை தான்சாந் துயரந் தரும்" (குறள் 792) என்புழிப்போல. என்னையும் - ஒன்றுக்கும் பற்றாத என்னையும். 'என்னையு மொருவனாக்கிச் சென்னியில் வைத்த சேவக போற்றி" (போற்றி 129 - 30) என வருதல் காண்க. இருப்பதாக்கினன் - சீவன் முத்தனாக இருக்கச் செய்தனன்.

இறைவன் என்னிடத்து வைத்த பேரருளினால் அவ்வருளொடு பேரின்பத்தினையும் அமைத்து வைத்தனன் என்பார், 'என்னிற் கருணைவான் றேன் கலக்க, அருளோடு பராவமுதாக்கினன்' என்றார். கருணை வான் தேன் - கருணையாகிய தூயதேன். "தன் கருணைத் தேன்" (அம்மானை 6) என அடிகள் அருளியமையுங் காண்க. வான் - தூய்மை இப்பொருட்டாதலை 'சங்கம்போல் வான்மையார் சால்பு" (பு. வெ. மா. 185) என்புழி வான்மையார் என்பதற்குத் தூய்மையுடையார் என அதன் உரையாசிரியர் உரைத்தமையானுமறிக. பரா அமுது என்றது மேலான பேரின்பத்தை.

அருளொடு பராவமுது ஆக்கிய பெருமான் தேவரிற் சிறந்த பிரமனும் திருமாலினாலும் காணமுடியாத பெருந்தன்மையோன் என்பார் 'பிரமன் மால்காணாப் பெற்றியோன்' என்றார். "பிரமன் மாலும் அறியாப் பெரியோன்" (ஞான 26 : 9) எனவும் 'பிரமன் மால் அறியாத பெருமையன்" (நாவு. 194 : 2) எனவும் தேவாரத்து வருவன காண்க.

# போற்றித் திருவகவல்

## சகத்தினுற்பத்தி

### தில்லையிலருளிச் செய்யப்பட்டது

### நிலைமண்டிலவாசிரியப்பா

திருச்சிற்றம்பலம்

**போற்றி** என்னும் சொல் இத்திருவகவற்கண் பெருவரவிற்றாகப் பயின்று வருதலின் இது போற்றித்திருவகவல் என்னும் பெயர்த்தாயிற்று. இதன் உட்பொருள் சகத்தின் உற்பத்தி எனப் பழைய சான்றோரால் குறிக்கப்பட்டுள்ளது. உயிர்கள் உடம்போடு கூடித் தோன்றும் தன்மை என்பது இதன் பொருள். சகம் என்றது உலகத்துயிர்களையாயினும் ஈண்டு மக்கள் உயிரே விதந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. இதனை மக்கட் பிறப்பிற் பல்வேறு வகைப்பட்ட துன்பங்களுக்குத் தப்பித் தெய்வமென்பதோர் சித்தமுண்டாதலும், அப்போது உண்டாகும் பலவகை இடையூறுகளும் விரித்துக் கூறப்படுதலால் அறியலாம். 'முத்திபெறு நெறியறியு மொழி போற்றித் திருவகவல்' என்பர் திருப்பெருந்துறைப் புராணகாரர்.

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்று
அடிமுடி யறியும் ஆதர வதனிற்
கடுமுர னேன மாகிமுன் கலந்து
ஏழ்தல முருவ விடந்துபின் வெய்த்து
ஊழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கட லுலகினில்
யானை முதலா எறும்பீ றாய
ஊனமி லியோனியி னுள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா வுதரத்
தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களி னூறலர் பிழைத்தும்
ஏழு திங்களிற் றாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்துந்

தக்க தாமதி தாயொடு தான்படுந்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
ஆண்டுகள் தோறு மடைந்தவக் காலை
ஈண்டியும் இருத்தியும் எனைப்பல பிழைத்தும்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்
ஒருங்கிய சாயல் நெருங்கியுண் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்
தெய்த்திடை வருந்த வெழுந்து புடைபரந்
தீர்க்கிடை போகா இளமுலை மாதர்தங்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்
பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுண்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்தும்
செல்வம் என்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்
புல்வரம் பாய பலதுறை பிழைத்தும்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின;
ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்;
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியருஞ்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களில்
அமைவ தாக வரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்
துலோகா யதமெனு மொண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவும்
தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்
தாடியும் அலறியும் பாடியும் பரவியுங்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்

படியே யாகிநல் லிடையறு அன்பிற்
பசுமரத் தாணி யறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்
சதுரிழந் தறிமால் கொண்டு சாருங்
கதியது பரமா வதிசய மாகக்
கற்றா மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலு நினையா
தருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியா தத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
உரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக்
கண்களி கூர நுண்டுளி யரும்பச்
சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதிய னாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை யரசே போற்றி
கூடல் இலங்கு குருமணி போற்றி
தென்றில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின்னார் உருவ விகிர்தா போற்றி
கன்னார் உரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா வென்றனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி

அரைசே போற்றி யமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி யறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி
கடையேன் அடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி யணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய விறைவா போற்றி
மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழா மேயரு ளரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரையுணர் விறந்த வொருவ போற்றி
விரிகடல் உலகின் விளைவே போற்றி
அருமையில் எளிய அழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையு மொருவ னாக்கி யிருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
அழிவிலா வானந்த வாரி போற்றி
அழிவது மாவதுங் கடந்தாய் போற்றி
முழுவது மிறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி
வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவ ருள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி

நனவிலும் நாயேற் கருளினை போற்றி
இடைமரு துறையு மெந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம் மண்ணா போற்றி
கண்ணா ரமுதக் கடலே போற்றி
ஏகம் பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி
குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் மெந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவர்க்
கத்திக் கருளிய வரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி
ஏனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட வருளும் இறைவா போற்றி
தளர்ந்தே னடியேன் தமியேன் போற்றி
களங்கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே யமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி
உறவே போற்றி யுயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி

அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி
இலங்கு சுடரெம் மீசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையார் அரிகே சரியாய் போற்றி
திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமு முருவமு மானாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி
தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளா னவர்கட் கன்பா போற்றி
ஆரா வமுதே யருளே போற்றி
பேரா யிரமுடைப் பெருமான் போற்றி
தாளி யறுகின் தாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி
எந்தமை யுய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடன் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர விசைந்தனை போற்றி
படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
ஒழிவற நிறைந்த வொருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்த சொன்மாலை கொண்டருள் போற்றி
புரம்பல வெரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி.

திருச்சிற்றம்பலம்.

1—10. நான்முகன் முதலா வானவர் தொழுது எழ - நான்கு முகங்களையுடைய பிரமன் முதலாக வானுலகத்துள்ள தேவர்கள் வணங்கிக்கொண்டு எழ, ஈர் அடியாலே மூ உலகு அளந்து - இரண்டு திருவடிகளாலே மூன்று உலகங்களையும் அளந்து அருளுதலும், நால் திசை முனிவரும் ஐம்புலன் மலர போற்றி செய் - நான்கு திசைகளிலுமுள்ள முனிவர்களும் ஐம்புலன்களும் மகிழ்ச்சியால் விரியும்படி வணங்குதலைச் செய்யும், கதிர்முடி திரு நெடு மால் - ஒளியையுடைய திருமுடியை அணிந்த அழகிய உயர்ந்த திருமால், அன்று அடி முடி அறியும் ஆதரவு அதனில் - நான்முகனோடு தான் மாறுபட்ட அந்நாளில் அம்மாறுபாட்டினை நீக்குமாறு தமக்கு மத்தியிற் றோன்றிய அனற்பிளம்பின் அடியின் முடிவினை அறியவேண்டும் என்ற விருப்பத்தால், கடு முரண் ஏனம் ஆகி - மிக்க வலியினையுடைய பன்றியின் வடிவெடுத்து, முன் கலந்து - முற்பட்டுப் பூமியிற் புகுந்து, ஏழ் தலம் உருவ இடந்து - கீழ் ஏழுலகங்களும் ஊடுருவும்படி பிளந்து, பின் எய்த்து - பின்னர்க் கீழ்ச்செல்ல இயலாது இளைப்புற்று, ஊழி முதல்வ சய சய என்று - ஊழியைச் செய்யும் முதல்வனே தேவரீருக்கு வெற்றியுண்டாகுக வெற்றியுண்டாகுக என்று, வழுத்தியும் காணா மலர் அடி இணைகள் - பரவியும் காணப்பெறாத தாமரைமலர் போன்ற திருவடிகள் இரண்டும், வழுத்துதற்கு எளிதாய் - துதித்தற்கு எளியவாகி.

பலி என்னும் அரசனால் வருந்திய பிரமன் இந்திரன் முதலிய தேவர்கள் வணங்கித்தொழ தமது இரு திருவடியால் மூவுலகங்களையும் அளந்து பலியின் வலியை ஒடுக்கி அருளுதலும் அத்தேவர்களன்றி. எவ்விடத்துமுள்ள முனிவர்களும் தமது ஐம்புலன்களும் மகிழும்படி பரவுதலைச் செய்யும் ஒளிமுடியையுடைய திருமால் தாம் பிரமனோடு மாறுபட்ட அந்நாளில் தமக்கிடையே தோன்றிய அனற்பிளம்பின் அடியின் முடிவினை அறியவேண்டுமென்னும் விருப்பத்தால் மிக்க வலியையுடைய ஏனமாகித் தரையுட்புகுந்து கீழ் ஏழுலகங்களையும் ஊடுருவும்படி பிளந்து அவ்வளவில் இளைப்படைந்து ஊழிமுதல்வ சயசயவென்று வழுத்தியும் காணாமலரடியிணைகள் வழுத்துதற்கெளிதாய் என்க.

'நான்முகன் முதலா' எனப் பிரமனைக் கூறியது திருமால் ஒழிந்த தேவர்களிற் பிரமன் சிறந்தோனாகலின். திருமால் மூவுலகளந்து அருளுதலும் நான்முகன் முதலாகிய தேவர்களும் முனிவர்களும் தொழுது வணங்கினமையின், 'நான்முகன் முதலா வானவர் தொழுதெழ' எனவும், 'நாற்றிசை முனிவரும் போற்றிசெய்' எனவும் அருளிச் செய்தார். தொழுதெழ அளந்து என இயையும். மூவுலகு: மண்ணுலகு, விண்ணுலகு, வளியுலகு என்பன. மால் உலகளந்தமை ''வையந் தன்னை. உரிதாய வளந்தானும்'' (ஞான 119 : 9) ''இருநிலந் தாவினானும'' (நாவு 51 : 9) எனத் தேவாரத்தும் ''உலகமூன்றும் அளந்தழி ஆங்கவன், ஈரடி நிரம்பிற்றும் இலவே'' (கோயில் நான்மணி 11-2) எனப் பதினொராந்திருமுறையிலும் கூறப்படுதல் காண்க. எல்லா இடங்களிலுமுள்ள முனிவர்களையும் உளப்படுத்தி ''நாற்றிசை முனிவரும்' என்றார்.

திருமாலின் அருளமுதைப் பெறுதலாற் சுவையின்பமும், நெடிய திருவுருவைக் காண்டலால் ஒளியின்பமும், திருவடிகளைப் பரிசித்தலால் ஊற்றின்பமும், திருவருளுரையைக் கேட்டலால் ஓசையின்பமும், தெய்வீக நறுமணத்தை நுகர்தலான் நாற்றவின்பமும் நிறைவுறப் பெறுதலின் 'ஐம்புலன் மலர' என்றார். மலர - மகிழ்ச்சியால் விரியும்படி. மலரப் போற்றி செய் என இயையும். அடிமுடி - அடியினது முடிவு. முடி முதனிலை வினைப்பெயர்.

அனற் பிழம்பின் அடியினது முடிவினை அறியுமாறு ஏனவுருக்கொண்டு சென்று காணாது எய்த்த திருமாலின் செயலைக் கூறவே அந்நாளில் அவ்வனற் பிழம்பின் முடியின் முடிவினை அறியுமாறு அன்ன வடிவங்கொண்டு சென்று காணாது எய்த்த நான்முகன் செயலும் தானே பெறப்படுமாதலின் நான்முகன் முடிதேடச் சென்று எய்த்தமை கூறுதொழிந்தார் என்க.

கடுமுரண் - மிக்க வலி. கடு ஈண்டு மிகுதிப் பொருளில் வந்தது. "கடுமுடையார்க்குங் காடு" (ஐங் 335) என்புழிப்போல. முரண் - வலி. இப்பொருட்டாதல் "மூரி முடுகல் முரன் வயம் பாழி...முன்பு மொய்ம்பு வலம், தாவுதாநம் மாநமுரம் வலி" எனத் திவாகரத்து (பண்பு) வருதலானுமறிக. ஏனம் - பன்றி.

முன் கலந்து என்றது தாம் மாறுபட்டு நின்ற பூவுலகத்தைப் பிளந்து என்றவாறு. ஏழ்தலம் என்றது கீழ் ஏழு உலகங்களை. அவை: அதலம் விதலம், சுதலம், தலாதலம், ரசாதலம், மகாதலம் பாதளம் என்பன. "அதல விதல சுதல நிதல தராதல ரசாதல மகாதலமென்ன பாதல மோரேழெனப்பகர்வர்" என்றார் திவாகரத்தும். (பல்பொருட்) உருவுதல் - ஊடுருவுதல். இடந்து - பிளந்து.

எய்த்து என்றது அனற்பிளம்பின் அடி கீழேழுலகங்களுக்கு அப்பாலும் சென்றமையின் அதன் முடிவினைக் காணமுடியாது இளைப்படைந்து என்றவாறு. எய்த்தல் - இளைத்தல். "ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனே" (அம் 14) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. ஊழியைச் செய்யும் முதல்வனாகிய இறைவனே தம்மத்தியில் அனற்பிளம்பாய் நின்றான் என்று எய்த்த அளவில் அறிந்த திருமால் 'ஊழி முதல்வ சயசய என்று வழுத்தியும் திருவடியைக் காணாராயினர்.

"திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை" தெள். 1

"அம்மால், திணிநிலம் பிளந்து காணாச் சேவடி" அச்சப் 5

என இத் திருவாசகத்தும்,

"இனைய னாகிய தனிமுதல் வானவன்
கேழல் திருவுரு வாகி யாழத்
தழுக்கிய ஏழும் எடுத்தனன் எடுத்தெடுத்

தூழி ஊழி கீழுறக் கிளைத்தும்
காண்பதற் கரியநின் கழலும்'' (12 : 14-8)

எனக் கோயில்நான்மணிமாலையிலும்,

''புகவுகிர் வாளெயிற் றுல்லிலங் கீண்டு பொறிகலங்க
மிகவுகு மாற்கரும் பாதத்தனேல்'' (18)

எனக் கோயில் திருப்பண்ணியர் விருத்தத்திலும் வருவன காண்க. திருவடியைக் காணுமை அவர் செருக்கு முழுவதும் நீங்காமையாலாகும். பின்னர் திருமால் திருவடியிணைகளைக் காணுமாறு தில்லைக்கண் தவங்கிடப்ப ஒரு திருவடியினைக் காட்டியருளினர். மற்றைத் திருவடியிணையும் காட்டுக என்று திருமால் தில்லை முன்றிலில் வரங்கிடந்தான் என அறிக. இதனை

''புரங்கடந்தா னடிகாண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங்கி டெந்தா யென்றிரப்பத் தன்னீரடிக் கென்னிரண்டு
கரங்கி டந்தானென்று காட்ட மற்றுங்கதுங் காட்டிடென்று
வரங்கி டந்தான் தில்லையம்பல முன்றிலம் மாயவனே'' (86)

எனத் திருக்கோவையாரில் வருதலானுமறிக.

வழுத்துதல் - பரவுதல். திருவடியிணைகள் என வந்தமையின் எளிதாய் என்னும் ஒருமைக் குறிப்புவினையெச்சத்தை எளியவாக எனத் திரிக்க. திருவடியிணைகள் எளிது என ஒருமை கூறியது 'கண்ணிரண்டுஞ் சிவந்தது' என்பதுபோலப் பால்வழுவமைதியாகக் கொண்டு எளியவாக எனப் பொருள் உரைக்கப்பட்டது. எளிதாய் (10) வந்து (75) என முடியும். இவ்வாறு ஒருவினை இடைவிட்டுச் சென்று வினையைக் கொண்டு முடிதல் 'மாட்டு' என்னும் உறுப்பாம். என்னை ?

''அகன்றுபொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
இயன்றுபொருண் முடியத் தந்தன ருணர்த்தல்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்''

என்றார் தொல்காப்பியனாராதலின். இவ்வினையெச்சத்திற்கும் அதுகொண்டு முடியும் 'வந்து' என்னும் வினைக்கும் இடையே 'வார்கடலுலகினில்' என்பது முதலாகக் 'கனவிலும் நினையாது' (74) என்பது ஈறுக வந்தனவெல்லாம் இடைப்பிறவரலாயின. இவ்வாறு வருதல்,

''தத்த மெச்சமொடு சிவணுங் குறிப்பின்
எச்சொல் லாயினு மிடைநிலை வரையார்'' தொல். வினை 40

என்பதனுற் கொள்ளப்படும்.

வார்கடல் உலகினில் வழுத்துதற்கெளிதாய் என மாற்றிக் கூட்டி வந்து (75) என்னும் வினையொடு முடித்தல், 'அவனியில் வந்து' எனப் பின்னர்க் கூறப்படுதலாற் கூறியது கூறலாகும். ஆதலால் வார்கடல் உலகினில் யானைமுதல் எறும்பீருய எனக்கூட்டிப் பொருள்கோடலே சிறப்புடைத்தாம் என்க.

11—2. வார் கடல் உலகினில் - நெடிய கடல் சூழ்ந்த நிலவுலகத்தில், யானை முதலா எறும்பு ஈருய - மிகப்பெரிய யானை முதலாக மிகச்சிறிய எறும்பு இறுதியாகவுள்ள, ஊனம் இல் யோனியில் உள் வினை பிழைத்தும் - கெடுதல் இல்லாத கருப்பையினுள்ளே இருக்கும்போது அதனுள் நிகழும் செயல்களுக்குத் தப்பியும்.

கட்புலனுக்குத் தோன்றுகின்ற இயங்கும் உயிர்களுள் மிகப்பெரியது யானையும், மிகச்சிறியது எறும்புமாதலின் 'யானை முதலா எறும்பு ஈருய' என்றார். எறும்பினும் சிறிய உயிர்கள் உளவாயினும் அவை கட்புலனாகாமையின் அவற்றைக் கூறுவாராயினர். இப்பிறவிகளெல்லாம் கேடின்றித் தோன்றுதொட்டு இடையறாது தொடர்ந்து வருதலின் 'ஊனமில் யோனி' என்றார். ஊனம் - கேடு. யோனி - கருப்பை. வடசொல்.

13—25. மானுடப் பிறப்பினுள் - மக்களாய்ப் பிறக்கும் பிறப்பினுள்ளும், மாதா உதரத்து ஈனம் இல் கிருமி செருவினில் பிழைத்தும் - தாயின் கருப்பையினுள்ளே குன்றுதல் இல்லாத புழுக்கள் இடும்போரிலே சிதைவு படாமல் தப்பியும், ஒரு மதி தான்றியின் இருமையின் பிழைத்தும் - கருப்பையினுள் முதல் திங்களில் தான்றிக்காயின் வடிவுபோல் இருக்கையில் இருவகையாக உண்டான கேட்டினின்றும் தப்பியும், இருமதி விளைவின் ஒருமையில் பிழைத்தும் - இரண்டாந் திங்களில் நாதமும் விந்துவும் ஒன்றுபட்டு விளைந்தவிடத்தும் எஞ்சிய விந்து உட்புகுதலால் உளதாகும் ஒருவகைக் கேட்டினின்றும் தப்பியும், மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும் - மூன்றாம் திங்களில் கருவளர்தற்பொருட்டுக் கருப்பையிற் சுரக்கும் மதநீர் மிகுதியினின்றும் தப்பியும், ஈர் இரு திங்களில் பேர் இருள் பிழைத்தும் - நான்காம் திங்களில் கருப்பையினுள் உண்டாகும் பெரிய இருளுக்குத் தப்பியும், அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும் - ஐந்தாம் திங்களில் சாவதினின்றும் தப்பியும், ஆறு திங்களில் ஊறு அலர் பிழைத்தும் - ஆறாம் திங்களில் உளதாகும் இடையூற்றிற்கு ஏதுவாகிய விரிவுகளுக்குத் தப்பியும், ஏழு திங்களில் தாள் புவி பிழைத்தும் - ஏழாந் திங்களில் உறுப்பு முழுவதும் நிறைவுற்ற கரு பூமியில் வீழ்தலினின்றும் தப்பியும், எட்டாம் திங்களில் கட்டமும் பிழைத்தும் - எட்டாம் திங்களில் உளதாகும் துன்பத்தினின்றும் பிழைத்தும், ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும் - எட்டாந் திங்களில் உண்டாகிய துன்பம் ஒன்பதாம் திங்களில் மிகுதலால் அதனின்று தப்பியும், தக்க தசமதி தாயொடு தான்படும் துக்க சாகர துயர் இடை பிழைத்தும் - கருவுயிர்த்தற்குத் தகுந்த காலமாகிய பத்தாந் திங்களில் தன்னைப் பெறுகின்ற தாய் அடையும் கடல்போன்ற பெருந்துன்பத்திலும் தான் அடையும் துன்பத்திலும் தப்பியும்.

தாயும் தந்தையும் ஒருங்கு புணர்ந்தவழி தந்தையின் உடம்பினின்றும் வெளிப்பட்ட வெண்பாலிலுள்ள புழுக்கள் தாயின் கருப்பையிற் சென்ற அளவில் அங்குள்ள செம்பாலிலுள்ள தாய்க்கருவினொடு ஒன்று சேர்தற்குச் செய்யும் போரில் அப்புழுக்களில் ஏனையவற்றைப் புறத்தே

தள்ளித் தான் சிதைவுபடாமல் அத்தாய்க் கருவிற்சென்று ஒன்றுதலை, 'மாதாவுதரத்து ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்' என்றது உணர்த்தியது.

உதரம் - வயிறு. "உதர, மோடு சடர மகடும் வயிறே" என்பது பிங்கலந்தை (5 : 288). ஈண்டுக் கருப்பையை உணர்த்தியது. ஹீந என்னும் வடசொல் ஈனம் என்றாயிற்று. கிருமி - புழு; வடசொல். ஈனமில் கிருமி என்றார் தந்தையின் வெண்பாவிலுள்ள கிருமிகள் மிகுதியாயிருத்தலின். செரு - போர்.

தந்தையின் வெண்பாலிற்றோன்றிய கருவிலொன்று தாயின் செம்பாலிற்றோன்றிய கருவிற் பதிந்து முதல் திங்களில் தான்றிக்காயின் அளவினை அடையும். அவை இரண்டும் ஒன்றுபடாமல் வேறுபட்டிருக்குமாயின் கருச்சிதைவுக்கு ஏதுவாமாதலின், 'ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்' என்றார்.

தந்தையின் கருவும் தாயின் கருவும் ஒன்றுபட்டவிடத்தும் அதனுள் பிற ஆண்கருக்கள் புக்கு ஊறுசெய்யுமாயின் அக்கரு சிதையும். அதனைத் தடுத்தற்குத் தாய்க்கருவின் வாய் அடைபடுதல் வேண்டும். அது நோய் மயக்கம் முதலிய ஏதுக்களால் நிகழாத விடத்துப் பிற ஆண் கருக்கள் புக்கு முன் புக்க கருவை அழித்துவிடும். அந்த தன்மையினின்றும் தப்ப வேண்டுமென்பர், 'இருமதி விளைவி னொருமையிற் பிழைத்தும்' என்றார்.

"எப்பிறப்பும் முன்செய் இருவினையால் நிச்சயித்துப்
பொற்புடைய தந்தைதாய் போகத்துட் — கர்ப்பமாய்ப்
புல்லிற் பனிபோற் புகுந்திவலைக் குட்படுங்கால்
எல்லைப் படாஉதரத் தீண்டியதீப் — பல்வகையால்
அங்கே கிடந்த அநாதியுயிர் தம்பரியால்
எங்கேனு மாக எடுக்குமென — வெங்கும்பிக்
காயக் கருக்குழியிற் காத்திருந்தும்" 13 - 19.

எனப் போற்றிப் பஃறொடையில் வருதலும் ஈண்டு அறியற்பாலது.

கருக்கள் ஒன்றுபட்டு, வாயிலும் அடைபட்டுக் கருவளரும்போது முன்பு மாதந்தோறும் கழிந்துகொண்டு வந்த தாயின் மதநீர் அக்கரு வளர்தற் பொருட்டு அக்கருப்பையினுள் சுரக்கும். அவ்வாறு சுரக்கும் மதநீர் வேண்டிய அளவினும் மிக்கவிடத்துக் கருவாய் திறந்து கருச்சிதைதலும் மூன்றாம் திங்களில் நிகழ்தலுண்டாதலின் அச்சிதைவுக்குத் தப்பியமையை 'மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்' என்றார்.

நாலாந் திங்களில் கருப்பையினுள் சுரந்த மதநீர் கருவளர்தற்கு வேண்டிய பகுதிபோக மிகுதி கழிவாகிய கருநிறத்தாய்க்கிடக்கும். அது மிகுந்தவிடத்தும் அதன் நச்சுத்தன்மையால் கருச்சிதைவுண்டாகுமாதலின் அதற்குத் தப்பியமையை 'ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்' என்றார்.

ஐந்தாம் திங்களிற் கருப்பையிற் பெருகும் மதநீரும் அதன் கழிவாகிய கரிய பகுதியும் மிக்கவிடத்து அவற்றுட்பட்ட கரு பிழைத்தலரிதாகலின் 'அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்' என்றார். முஞ்சுதல் - சாதல். இதனை "துஞ்சல் பொன்றல் விளிவல் வீதல், முஞ்சல் தவன்றல் முடிவுலத்தல் வீடல், மாய்தல் இறத்தல் மாளறபுதல், சாதலென்றச் சாற்றினர் புலவர்" என்னும் திவாகரத்தானும் (செயல்பற்றிய) அறிக.

ஆறுந்திங்களில் பிண்டமாக இருந்த கருவினிடத்துக் கை முதலிய உறுப்புக்கள் வளர்தலாகிய விரிவினால் கருப்பை இடங்கொள்ளாவிடத்துக் கரு சிதைவுறுமாதலின் அதற்குத் தப்பியமையை 'ஆறு திங்களில் ஊறலர் பிழைத்தும்' என்றார். ஊறு அலர் - உறுவதாகிய விரிவு.

ஏழாந் திங்களிற் கரு உறுப்புகள் முழுவதும் அமையப்பெறுதலால் ஒரோவழி அக்கருவினைத் தாங்கமாட்டாது கருவாய் திறத்தலானும் கருச்சிதையும். அதனின்று தப்பியமையை 'ஏழுதிங்களிற் றாழ்புவி பிழைத்தும்' என்றார்.

எட்டாந் திங்களிற் கரு மிக விரைந்து வளர்தலானும், அதனை வளர்தற்குச் சுரந்த மதநீரின் கழிவு மலம் மிகுதலானும், தாய் உண்ணும் உணவின் அடர்ச்சியானும் நெருக்குண்டு வருந்துதலினும் அத்துன்பங்களின்று தப்பியமையை 'எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்' என்றார். கட்டம் - கஷ்டம். "கல்வகை மனத்தேன் பட்ட கட்டமே" (சதகம் 48) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும் என்றது முன்சொன்னவற்றின் மிகுதியினால் வரும் துன்பங்களினின்று தப்புதலை உணர்த்தியது.

பத்தாம் திங்கள் கருவுயிர்த்தற்குத் தகுந்த காலம் என்பார் 'தக்க தசமதி' என்றார். தச - பத்து. "தசநான் கெய்திய பணைமருள் நோன்றாள்...பொருதொழி நாகம்" (நெடுநல் 115 - 7) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. தாய்படும் துக்கசாகரத்தொடு தான்படும் துயரிடைப் பிழைத்தும் என நிரல் நிறையாகக் கொள்க.

"தோற்றும் பொழுதின் ஈற்றுத் துன்பத்
தியாயுறு துயரமும் யானுறு துயரமும்" (பதினொந் திருமுறை)

எனத் திருவிடை மருதூர் மும்மணிக்கோவையில் வருதலுங் காண்க.

தாயொடு என்பதில் ஒடு - எண்ணொடு. ஆறறிவுடைய தாய் கருவுயிர்க்குங்கால் அடையும் துன்பம் பெரிதாகலின் 'துக்கசாகரம்' என்றும் ஆறறிவு விளங்கப்பெறாத பச்சிளங்குழவி அடையும் துன்பம் அவ்வளவு பெரிதாகாமையின் அதனைத் 'துயர்' என்றும் கூறினார்

26—41. ஆண்டுகள் தோறும் அடைந்த அக்காலை - யாண்டுகள் தோறும் வளர்ச்சி அடைந்து வந்த அந்த வாலிப்பருவத்தில், ஈண்டியும் இருத்தி

யும் எனை பல பிழைத்தும் - பொருளைத் தொகுத்து வைத்தும், தொகுத்து வைத்த பொருளைப் பாதுகாத்து வைத்தும், இவ்வாறு எவ்வளவோ பல துன்பங்களுக்குத் தப்பியும், காலை மலமொடு - காலையில் மலசலக் கழிவி லும், கடு பகல் பசி - உச்சிக்காலத்தில் பசிப்பிணியிலும், நிசி வேலை நித்திரை - இராக்காலத்தில் உறக்கத்திலும், யாத்திரை பிழைத்தும் - இவை யொழிந்தபோது போக்கு வரவில் நேரும் துன்பங்களுக்குத் தப்பியும், கரு குழல் செவ்வாய் வெண் நகை - கரிய கூந்தலினையும் சிவந்த வாயினையும் வெள்ளிய எயிற்றினையும், கார் மயில் ஒடுங்கிய சாயல் - கார்காலத்து மயி லும் அடங்குதற்கேதுவாகிய மென்மையினையும், நெருங்கி உள் மதர்த்து - மிகப் பருத்தலினால் ஒன்றோடொன்று நெருங்கி உள்ளே கழித்து, கச்சு அற நிமிர்ந்து கதிர்த்து - பட்டிகை அறும்படி அண்ணாந்து ஒளிவிட்டு, முன் பணைத்து - முற்பக்கம் பருத்து, இடை எய்த்து வருந்த எழுந்து புடை பரந்து - இடை இளைத்து வருந்தும்படி எழுச்சி பெற்றுப் பக்கங் களிற் பரந்து, ஈர்க்கு இடை போகா இளமுலை மாதர்தம் - ஈர்க்கும் நடுவே நுழையமுடியாதபடி நெருக்கத்தினையுடைய இளைய முலைகளையுடைய மக ளிருடைய, கூர்த்த நயன கொள்கையில் பிழைத்தும் - நுணுகிய பார்வை யையுடைய கண்களின் பெருங் களவிற்குத் தப்பியும், பித்தர் உலகர் பெரு துறை பரப்பினுள் - மயக்கங்கொண்ட உலகத்தவர் மேற்கொள்கின்ற மிக்க பலதுறைப்பட்ட எண்ணப்பரப்புகளுள், மத்த களிறு எனும் அவா இடை பிழைத்தும் - மதம்கொண்ட யானை என்று சொல்லத்தக்க அவாவி னின்றும் தப்பியும், கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும் - கற்கப்படுவன என்று சொல்லப்படும் பலவாகிய கடல்போன்ற கலைகளினின்றும் தப்பி யும், செல்வம் என்னும் அல்லலில் பிழைத்தும் - செல்வம் என்று உரைக் கப்படும் துன்பத்தினின்றும் தப்பியும், நல்குரவு என்னும் தொல் விடம் பிழைத்தும் - வறுமை என்று சொல்லப்படும் பழைய நஞ்சுக்குத் தப்பி யும், புல் வரம்பு ஆய பல்துறை பிழைத்தும் - புல்லைக்கீழ் எல்லையாக வுடைய பலவகை உயிர்த்தோற்றங்களின் இடையூறுக்குத் தப்பியும்.

ஈட்டியும் என்பது எதுகை நோக்கி மெலிந்தது. எனை - எவ்வளவு. "எனைப்பகை யுற்றாரு முய்வர்" (குறள் 207) என்புழியும் இப்பொருட் டாதல் காண்க. மலசலக் கழிவுத் துன்பம் மற்றைக் காலங்களினும் விடி யற்காலையில் மிக்கிருத்தலின் 'காலை மலமொடு' என்றார்.

பசித்துன்பம் எனைக்காலங்களிலும் ஞாயிறுதன் முழு ஆற்றலொடு கிளர்ந்து நிற்கும் உச்சிப்பொழுதில் வயிற்றிடத்துள்ள பசித்தீயும் கிளர்ந்து நிற்றலின் 'கடும்பகற் பசி' என்றார். கடும்பகல் - உச்சிப்பொழுது கலி 94 : 14 நச்.

உடம்பில் அயர்வு உண்டாகும்போது மற்றைக் காலங்களிலும் உறக் கம் வருதல் இயல்பாயினும் இராக்கால உறக்கம் எல்லாவுயிர்களுக்கும் பொதுவாதலின் 'நிசிவேலை நித்திரை' என்றார். இரவு என்னும் பொருள் படும் நிசா என்னும் வடசொல் நிசி என்றாகி ஈண்டு நடு இரவு என்னும் பொருள்பட வந்தது. நடு இரவை உணர்த்துவதாகிய நிசீத: என்பதே நிசி

என்றுயிற்று என்பாருமுளர். வேலா என்னும் வடசொல் தமிழில் வேலை என வந்தது. வேலை - காலம். இப்பொருட்டாதல் "அவ்வேலையில் வள்ளி யச்சமொடு மீண்டு" என்னும் கந்தபுராணத்தும் (வள்ளிதிருமண 112) காண்க. நித்திரை - உறக்கம். யாத்திரை - வழிச்செலவு.

கருங்குழலினையும் செவ்வாயினையும் வெண்ணகையினையும் மயில் ஒருங்கிய சாயலினையும் இளமுலையினையுமுடைய மாதர் என்க.

கருங்குழல் - கரிய கூந்தல். செவ்வாய் - கொவ்வைக் கனிபோலும் சிவந்த வாய். "கொங்கையர் கொவ்வைச் செய்வாய்" (நீத் 2) என வருதலுங் காண்க. பவளம்போற் சிவந்த வாய் எனினுமமையும். "கருங்கடற் பவளச் செவ்வாய்" (சீவக 658) எனப் பிறரும் கூறுதல் காண்க. வெண்ணகை - வெள்ளிய எயிறு." முத்தன்ன வெண்ணகையாய்" (திருவெம் 3) என வருதலும் காண்க.

மாதர் கார்காலத்து களிப்புடைய மயிலும் ஒடுங்குதற்கேதுவாகிய மிக்க மென்மையையுடையர் என்பார் 'கார்மயில் ஒருங்கிய சாயல்' என்றார். "மயின்மயிற் குளிக்குஞ் சாயல்" (சிறுபாண் 16) என்பது ஈண்டு அறியற்பாலது. கார்காலத்து மயில் களிப்புடைத்தாதல் "மஞ்ஞை மாயினம், கால மாரி பெய்தென வதனெதிர், ஆலலு மாலின" (குறுந் 251) என்பதனாலுமறிக ஒருங்குதல் - ஒடுங்குதல். "உரமொருங்கியது...வாலியது மார்பு" (கம்ப. யுத்த மந்தர 90) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. சாயல் - மென்மை. "சாயன் மென்மை" என்பது தொல்காப்பியம் (உரி 27). ஈண்டு கட்கினிதாகிய மென்மையை.

நெருங்கி என்றது எழுந்து புடைபரந்தமையின் தனங்கள் ஒன்றோடொன்று நெருங்கி என்றவாறு. "புணர்முலையார்" (அச்சோ 2) என வருதலும் காண்க. உள்மதர்த்து என்றது உள்ளே களிப்பினைத் தரும் அமுதினையுடைத்தாய் என்றவாறு.

"பொருப்பென வெழுந்து வல்லின் பொற்பெனத் திரண்டு தென்னங்
தருப்பயி விளநீ ரென்னத் தண்ணெனு வமுதுட் கொண்டு
மருப்பெனக் கூர்ந்து மாரன் மகுடத்தின் வனப்பு மெய்தி
இருப்பதோர் பொருளுண் டாமேல் இளமுலைக் குவமை யாமே"

எனக் கந்தபுராணத்து வருதலுங் காண்க. (மாயைப் 51)

கச்சு - பட்டிகை. "வம்பு பிணிகை பட்டிகை வார்வடம், என்றிவை யைந்துங் கச்சென விசைப்பர்" என்றார் திவாரத்தும். இது இயங்கும் போது அசைமல் கொங்கைமேற் கட்டப்படுவது. "கருங்க ணிளமுலை கச்சற விக்கி" (சீவக 2116) எனப் பிறர் கூறுதலும் காண்க. இப்பட்டிகையும் அறும்வண்ணம் நிமிர்ந்த கொங்கை என்பார் 'கச்சற நிமிர்ந்து' என்றார். நிமிர்ந்து - அண்ணாந்து. "அண்ணாந் தேந்திய வனமுலை" (அக ) என்றார் பிறரும். கதிர்த்தல் - ஒளிவிடுதல். "கதிர்முலைகண், மானக் கனகந் தரும்" (திருக்கோவை 335) என வருதலுங் காண்க.

முன்பணைத்து - முற்பக்கம் பருத்து, பணைத்தல் - பருத்தல். '' பணைத் தேந்திளமுலை '' (மதுரைக் 601) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

இடை பாரந்தாங்காது இளைத்து வருந்துமாறு கொங்கைகள் முன் வளர்ந்து பக்கங்களிற் பரந்தமையின் 'எய்த்திடை வருந்த எழுந்து புடை பரந்து' என்றார். '' அம்மாமுலை சுமந்து தேயும் மருங்குல்'' என்றார் திருக்கோவையாரினும். எய்த்து - இளைத்து. '' எய்த்த மெய்யே னெய்யே னாகி'' (பொருந 68) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. எழுதல்- வளர்தல். '' கடுகலித் தெழுந்த கண்ணகன் சிலம்பில்'' (மலைபடு 14) என் புழியும் இப்பொருட்டாதல் காண்க. புடை - பக்கம்.

ஈர்க்கிடை போகா இளமுலை என்றது முன்பணைத்து எழுந்து அடி புடைபரந்து ஒன்றோடொன்று நெருங்கியமையால் ஈர்க்கும் இடையே நுழையமுடியாத இளமுலை என்றவாறு.

'' இடையீர் போகா இளமுலை யாளை '' தே. ஞான 54 : 2.

'' ஈர்க்கிடை போகா வேரிள வனமுலை'' பொருந 36.

'' ஈர்க்கிடை புகாம லடிபரந் தோங்கும் ஏரிள வனமுலை'' நைட. சுயம்77

என வருவன காண்க. '' இடைவளி போகாது நெருங்குமுலைக் கொடிச் சியர் '' எனக் கல்லாடத்து வருதலும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலது.

காதலைச் செய்யும் மகளிரது கண்ணின் கொள்ளைக்குத் தப்புதலைக் கூற வந்தவர், அம்மாதர் காதலைச் செய்தற்குக் கருவியாயமைந்த கருங் குழலையும் செவ்வாயையும் வெண்ணகையையும் சாயலையும் இளமுலையை யும் விதந்தெடுத்துக் கூறுவாராயினர். குழல், வாய், நகை, சாயல் முலை என்னும் இரண்டாம் வேற்றுமை உருபும் பொருளும் உம்மையும் உடன் தொக்க தொகைநிலைச் சொற்கள் மாதர் என்பதனோடு தனித்தனி முடிந் தன.

காதலைச் செய்யும் மகளிரது கூரிய பார்வையால் மக்கள் கவரப்படு தலின் 'கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்' என்றார். கொள்ளை - பெருங் களவு.

பற்ற வேண்டியதைப் பற்றமாட்டாத பித்தர்போல, உலக வாழ்க்கை யைப் பெரிதென விரும்பும் மனிதர்கள் தம் வாழ்க்கைக்கு வேண்டிய பலதிறப்பட்ட எண்ணங்களையுமுடையராவர். அவ்வெண்ணங்களுள் அவா மதங்கொண்ட களிறுபோலக் கட்டுக்கடங்காது செல்லும் தீமையுடைத் தாகலின் 'பித்தவுலகர் பெருந்துறைப் பரப்பினுள், மத்தக் களிறெனு மவாவிடைப் பிழைத்தும்' என அதனை விதந்து கூறினார். மெய்ப்பொருளல் லாதவற்றை மெய்ப்பொருள் என்று உணரும் மயக்க உணர்வுடையாரைப் 'பித்தவுலகர்' என்றார். எண்ணங்கள் பெருந்துறைபோலப் பரந்து கிடத்த லின் 'பெருந்துறைப் பரப்பினுள்' என்றார். மத்தக்களிறு - மதச் செருக்குற்ற யானை. அது மதச்செருக்காற் பாகர்க்கடங்காது வேண்டியவாறு சென்று கெடுதி செய்வதுபோல, அவாவும் பிறர்க்குவரும் இடையூறெண்ணாது கெடுதி செய்தலின் 'மத்தக்களிறெனு மவா' என்றார்.

கல்வி பலகலைப் பிரிவுகளையுடைத்தாய் அவை ஒவ்வொன்றும் கடல் போற் பெரும்பரப்பினவாதலால் அவற்றையெல்லாம் கற்கப்புகுந்து முடிவு பெறுமையின் இடருண்டாகுமாதலாற் 'கல்வியென்னும் பல்கடற் பிழைத்தும்' என்றார்.

" கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல — தெள்ளிதி
னாராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து"

என்னும் நாலடியார் ஈண்டு சிந்திக்கத்தக்கது.

செல்வமானது ஈட்டல் காத்தல் முதலிய துன்பங்களை விளைத்தலிற் 'செல்வமென்னு மல்லலிற் பிழைத்தும்' என்றார். செல்வம் அல்லலுக்கு ஏதுவாதல்,

" இன்னல் தரும்பொருளை யீட்டலுந் துன்பமே
பின்னதனைப் பேணுதலுந் துன்பமே — அன்ன
தழித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பா
லிழத்தலுந் துன்பமே யாம்"

என நீதிவெண்பாவிலும்,

" ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்
காத்தலு மாங்கே கடுந்துன்பங் — காத்தல்
குறைபடிற் றுன்பங் கெடிற்றுன்பங் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்"

என நாலடியாரிலும் வருவனவற்றாலுமறிக. அல்லல் - துன்பம். அல்லலுக்குக் காரணமானதை அல்லல் எனக் காரியமாகக் கூறியது உபசார வழக்கு.

நல்குரவு - வறுமை. 'நுகரப்படுவன யாதுமில்லாமை' என்பர் பரிமேலழகர் (குறள் அதி 105 அவதாரிகை) நல்குரவை விடம் என்றது வருத்துதல் பற்றி. "நல்குரவென்னு மிடும்பை" "கொன்றதுபோலும் நிரப்பு" (குறள் 1045, 1048) எனத் திருவள்ளுவ நாயனார் கூறியமையுங் காண்க. தொல்விடம் - தொன்றுதொட்டுப் பலகாலமாக வருத்திவரும் நஞ்சு. தொன்றுதொட்ட பசியைத் 'தொல்பசி' (பதிற் 12 : 15) எனப் பிறரும் கூறுதல் காண்க. ஏனைய நஞ்சு பருகினோரை உடன் கொன்றுவிட, நல்குரவென்னும் நஞ்சு தொன்றுதொட்டுப் பல நாளாக வருத்திக்கொண்டிருப்பதனால் இதன் வேறுபாடு தோன்றத் 'தொல்விடம்' என்றார். விடம் - விஷயம் என்னும் வடசொற்றிரிபு.

புல்லைக் கீழ் எல்லையாகக் கொண்ட பல பிறவித்துறைகளையெல்லாம் பிழைத்து வந்தமைப் 'புல்வரம்பாய பலதுறை பிழைத்தும்' என்றார். புல்லைக் கீழ் எல்லையாகக்கோடல் "புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகி" (சிவபுராணம்) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாற்றானுமறியப்

படும். வரம்பு - எல்லே. "புலங்கெட நெரிதரும் வரம்பில் வெள்ளம்" (பதிற் 33 : 6) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

இப்பகுதியில் (11 – 41) இயங்கியற் பொருள்களுள் யானைமுதல் எறும்பீருயவற்றை முதற்கட் கூறிப் பின்னர் மானிடப் பிறப்பை எடுத்துக் கொண்டு அப்பிறப்பில் உயிர் கருவுற்ற காலந் தொடங்கிப் பூமியிற் பிறவியை அடையும் வரை அடையும் துன்பங்களை முறைப்பட வகுத்து ஓதி அதன் பின்னர் ஆண்டுகள் தோறும் வளரும் வளர்ச்சியைக் கூறி அதன் பின்னர்க் காலையில் மலோபாதிக்கும் நண்பகலிற் கடும்பசிக்கும் நடுஇரவில் நித்திரை உபாதிக்குந் தப்பியமையைக் கூறிப் பின்னர் மாதர் நயனக் கொள்ளையிற் பிழைத்தமையைக் கூறிப் பொருளல்லாத உலகவாழ்க்கையைப் பொருளாக எண்ணும் பித்தவுலகினரின் பல துறையாய எண்ணங்களுள் அவா அறக்கொடிதாகலின் அதனின்றும் தப்பியமை கூறிப் பின்னர் பல துறைப்பட்ட கல்வியின்றும் தப்பியமைகூறி, உலக வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப்படும் செல்வம் "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னுன் முடியும்" (திருக்கோவையார்) என அடிகள் கூறியவாறு சிறப்புடைத்தாயினும் அது ஈட்டுதல் முதலான பலவகைத் துன்பங்களைத் தருதலின் அதனின்று தப்பியமை கூறித் தொன்றுதொட்டு விடம்போல வருத்திவரும் நல்குரவுக்குத் தப்பியமை கூறியும் வந்த அடிகள் நிலையியற் பொருள்களுள் ஓரறிவுடைய புல்லினைக் கீழ் எல்லையாகவும் ஆறறிவுடைய மக்களை மேலெல்லையாகவும் அமைத்துக் கொண்டு அதனைத் தொகுத்துக் கூறுவார் 'புல்வரம்பாய பல்துறை பிழைத்தும்' என்று அருளிச்செய்தார்.

42—58. தெய்வம் என்பது ஓர் சித்தம் உண்டாகி - கடவுள் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதாகிய ஒருபொருள் உண்டு என்னும் எண்ணம் உளதாகி, முனிவு இலாதது ஓர் பொருள் அது கருதலும் - வெறுப்பில்லாததாகிய ஒப்பற்ற பொருளாகிய அதனை எண்ணப் புகுந்த அளவில், ஆறு மாயாகோடி சத்திகள் - உயிர்களின் உள்ளத்துள்ள உட்பகைகளாகிய விருப்பு வெகுளி ஈயாமை மயக்கம் செருக்கு பொறாமை என்னும் ஆறுகிய மாயையின் மிகப்பலவான ஆற்றல்கள், வேறு வேறு தம் மாயைகள் தொடங்கின - வேறுவேருகத் தம் வஞ்சனைகளைச் செய்யத் தொடங்கின; ஆப்தமாளுர் அயலவர் கூடி - உண்மையைக் கூறும் நண்பர்களும் பிறரும் ஒன்று சேர்ந்து, நாத்திகம் பேசி நா தழும்பு ஏறினர் - கடவுள் இல்லை என்று பொய் வழக்குப் பேசி அதனால் நாவும் தழும்பேறப்பெற்றனர்; சுற்றம் என்னும் தொல் பசு குழாங்கள் - உறவினர் என்று சொல்லப்படும் பழமையான பசுக்கூட்டங்கள், பற்றி அழைத்து பெருகவும் பதறினர் - நம்மைப் பிடித்து அழைத்து மிகவும் பதறினர்; விரதமே பரம் ஆக வேதியரும் சரதம் ஆக சாத்திரம் காட்டினர் - விரதம் ஆற்றுதலே வீடு பேற்றினைத் தரும் மேலான சாத்திரமாகச் சொல்லி வேதம் உணர்ந்த பார்ப்பனரும் தமது கூற்றுக்கு உண்மையாம்படி நூல்களைக் காட்டினர்; சமய வாதிகள் தத்தம் மதங்களில் - சமயக் கணக்கர்கள் தங்

கள் தங்கள் சமயங்களில், அமைவதாக அரற்றி மலைந்தனர் - வீடு பேற்றினைத் தரும் நெறி அமைந்திருப்பதாக வாய்விட்டுக் கதறி மாறுபட்டுக் கூறுவாராயினர்; மிண்டிய மாயவாதம் என்னும் சண்ட மாருதம் - நெருங்கிய மாயாவாதம் என்று சொல்லப்படும் சுழல் காற்றானது, சுழித்து அடித்து ஆர்த்து - சுழன்று வீசிப் பேராரவாரஞ் செய்யப்பெற்று, உலோகாயதன் என்னும் ஒள் திறல் பாம்பின் - உலோகாயதன் என்று சொல்லப்படும் ஒள்ளிய வலியினையுடைய பாம்பினது, கலா பேதத்த கடுவிடம் எய்தி - கலை வேறுபாடுகளையுடைய கொடிய நஞ்சு வந்து பொருந்தப்பெற்று, அதில் பெருமாயைகள் எனை பல சூழவும் - அங்கிலையில் பெரிய வஞ்சனைகள் எவ்வளவோ பல நம்மை வந்து சுற்றவும்,

தெய்வம் - கடவுள். "தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்" (கலி 103 : 76) என்புழிப்போல என்பது என்றது என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது எனப் பொருள்தந்து நின்றது. 'வாய்மையெனப்படுவது' என்பதற்கு 'வாய்மையென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது' எனப் பரிமேலழகரும் (குறள் 291 உரை), 'பேணினரெனப்படுதல்' என்பதற்குப் 'பேணினரென்று நன்மக்கள் புகழ்ந்து கூறப்படுதல்' என நச்சினார்க்கினியரும் (கலி 47 : 21 உரை) உரைத்தமை காண்க. தெய்வம் என்பதோர் சித்தம் - கடவுள் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதாகிய ஒரு பொருள் உண்டு என்னும் சித்தம். சித்தம் - கருத்து. உலகியலில் நிகழும் பேரிடர்களுக்கெல்லாம் தப்பித் தெய்வம் உண்டு என்பதொரு சித்தம்உண்டாதல் அரிதாகலின் 'தெய்வமுண்டென்பதோர் சித்தமுண்டாகி' என்றார். உண்டாகி என்னும் செய்தெனெச்சம் கருதலும் என்னும் தன் வினைமுதல் வினையொடு முடிந்தது.

தனு கரண புவன போகங்களைத் தந்து உயிர்களை நன்னிலைக்கட் செலுத்தும் கடவுள் தன் அருட் செயலில் வெறுப்புச் சிறிதுமின்மையின் 'முனிவிலாததோர் பொருள்' எனக் கூறினார். முனிவிலாதது என வெறுப்பின்மை கூறப்படினும் விருப்பின்மையும் கொள்ளப்படும். அது பற்றிக் கடவுளை "வேண்டுதல் வேண்டாமையிலான்" என்றார் திருவள்ளுவரும். ஒரு சித்தம் ஒரு பொருள் என நிற்கப்பாலன செய்யுளாதலின் ஓர் சித்தம் ஓர் பொருள் எனத் திரிந்து நின்றன.

பொருளது - பொருளாகிய அதனை. தெய்வம் உண்டென்பதோர் சித்தமுண்டாகி அதனை ஆராய்வார்க்கு அதன்பொதுவியல்பன்றிச் சிறப்பியல்பு இனிது விளங்காமையின் அம்முதற்பொருள் 'அது' என ஒரு குறிப்புப் பெயரளவாய் வைத்துச் சொல்லப்பட்டது. வேதத்துள்ளும் கடவுள் 'அது' 'அது' என வைத்துரைக்கப்படுதல் காண்க. இனி, அது என்பது பெயர்ப் பொருளை அசைத்து நின்ற அசைநிலை எனக் கொள்ளினுமமையும்.

ஆறு மாயாசத்திகள், கோடி மாயாசத்திகள் எனத் தனித்தனி இயைக்க. ஆறு மாயாசத்திகளாவன : உயிர்களின் உள்ளத்துள்ள உட்பகைகளாகிய விருப்பு, வெகுளி, இவறன்மை, மயக்கம், செருக்கு, பொறாமை என்பன.

இவற்றின் ஆற்றலால் விரியும் வினைகள் எல்லையில்லாதனவாகப் பெருகி நிகழ்தலின் அவற்றை 'ஆறுகோடி மாயாசத்திகள்' என்றார். கோடி என்பது ஈண்டு மிகப்பல என்னும் பொருளில் வந்தது. உட்பகை ஆறும் ஆணவத்தின் ஆற்றலால் அதன்வழி நிற்கும் உயிரின் உள்ளத்திற்கட் டோன்றுவனவாயினும் அவை தோன்றுதற்குக் கருவியாய் அவ்வுயிரோடு உடனின்று உதவுவது மாயையேயாகலின் அவற்றை மாயையின்மேலேற்றி 'மாயாசத்திகள்' என்றார். சத்தி, சக்தி என்னும் வடசொற்றிரிபு. மாயை - வஞ்சனை. "கூடம் புள்ளுவங் குத்திரங் கஞ்ச, மாயை தொடுப் பட்டிமை வஞ்சனையாகும்" என்பது பிங்கலந்தை (7 : 135).

ஆத்தம் என்பது ஆப்தம் என்னும் வடசொற்றிரிபு. ஆப்தமாவது உண்மை உரைத்தல். தாங்கண்ட உண்மையை மறையாது உரைப்பார் அன்பு மிக்க நண்பரேயாகலின் அவரை 'ஆப்தமானர்' என்றார். அயல வர் என்றது தம்பாற் பகையும் நட்புமில்லாத நொதுமலரை. ஆப்தமா னரும் அயலவரும் என உம்மை விரிக்க. இவ்விரு திறத்தினரும் நாத் திகராதலின் 'நாத்திகம் பேசி' என்றார். நாத்திகம் என்பது 'நாஸ்திக் யம்' என்னும் வடசொற்றிரிபு. நாத்திகம் என்பதற்குக் கடவுள் உண் மையை மறுப்பது என்பது பொருள். நாத்தழும் பேறினர் என்றது மிக அழுத்திப் பல கால் உரைத்தலால் நாவில் தழும்பேறப் பெற்றனர் என்றவாறு.

"ஏத்தேன் நாத்தழும்பேற" சதக 13.

"கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்தி" பொற்சுண் 15.

"முல்லை, நாத்தழும்பேறப் பாடாதாயினும்" புற 200 : 9-10.

என வருவன காண்க.

சுற்றம் - சுற்றத்தார். "பொலிந்த சுற்றமொடு, வளமனை மகளிர் குளநீரயர" (மதுரைக் 602-3) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. சுற்றத்தார் தாய் தந்தை முதலிய உறவு முறையிலுள்ளவர்கள். பசு - பந்திக்கப்படுவது. பசுக்கள் கயிற்றால் கட்டப்படுவது போல உயிர்கள் ஆணவத்தினால் கட்டப்பட்டிருத்தலின் அவையும் பசு எனப்படும். சுற் றத்தவர்களாகிய உயர்திணைப் பொருள்களைப் பசுக்குழாங்கள் என அஃ றிணையால் இழித்துக் கூறியது, தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி அத னைப் பற்றி ஆராயச் செல்வாரை அங்ஙனம் செல்லவொட்டாது தடுத் தித் தம்வழிப்படுத்தலாலுண்டாகிய வெகுளியினாலென்க. உயிர்கள் அநா தியே ஆணவத்தாற் பந்திக்கப்பட்டிருத்தலின் 'தொல்பசு' என்றார். அன்றியும் மக்கட் பிறப்பு உண்டாய காலந்தொடங்கிச் சுற்றத் தொடர் பும் தொடர்ந்து உளதாகலின் 'தொல்பசு' என்றார் எனிமாம்.

கடவுள் நினைவுடையாரான இவர் அந்நினைவிலேயே அழுந்தி நம்மைப் பாதுகாத்தலை விட்டுப் பிரிவரே என்னும் வருத்தம் பெரிதுடையராய்ச் சுற்றத்தார் மிகப் பதைத்து அவரைத் தம்மாட்டு ஈர்த்தலின் 'சுற்றமென்

னும் தொல்பசுக் குழாங்கள் பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்' என்றார். பெருகவும் பதறினர் என மாற்றிக் கூட்டிப்பொருள் கொள்க.

வேதியர் என்றது ஆரிய வேதங்களை ஓதியுணர்ந்த மீமாஞ்சகரை. அவர்கள் வேள்வி முதலிய விரதங்களை அனுட்டித்தலே வீடுபேற்றினைத் தரும் என்றும், அதனின்றும் வேறாகக் கடவுள் என்பதொரு பொருள் வேண்டா எனவும், வேதம் நித்தியம் என்றும், அதில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும் உறுதி பயக்கும் என்றும் கூறித் தம் கூற்றுக்கு அவ்வேதங்களையே சான்றாகக் காட்டுதலின் 'விரதமே பரமாக வேதியருஞ், சரதமாகவே சாத்திரம் காட்டினர்' என்றருளிச் செய்தார். தெய்வம் உண்டென்பதோர் சித்தம் உண்டாகியமைக்கு இவர் கூற்று முரண்பாடாதல் காண்க.

விரதம் - நோன்பு. பரம் என்பது கடவுளை உணர்த்தும் வடசொல். சரதம் - உண்மை. "இதுவே வேத முடிவிது சரதமென்றான்" (கம்ப. இரணியன்வதை 122) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. "சரதமுடையர் மணிவாய் திறக்கிற் சலக்கென்பவே" (57) என்னும் திருக்கோவையார் உரையில் சரதம் என்பதற்கு மெய் எனப் பேராசிரியர் உரைத்தமையுங் காண்க. சாத்திரம் - சாஸ்திரம் என்னும் வடசொற்றிரிபு. நூல்கள் என்பது பொருள்.

சமயவாதிகள் - சைவமல்லாத ஏனைச் சமயத்தவர்கள். அவர்கள் சமயங்கள் உலோகாயதம் பௌத்தம் சாங்கியம் நையாயிகம் வைசேடிகம் மீமாஞ்சகம் என்பன. புறச்சமயத்தவர்களும் அகச்சமயத்தவர்களுமாகிய சமயக்கணக்கர்கள் தங்கள் தங்கள் சமயங்களிலே உறுதியாகிய பயனைத் தரும் நெறி அமைந்திருப்பதாக வாய்விட்டுக் கதறித் தம்முண் மாறுபட்டுக் கூறுதலின் 'சமயவாதிகள் தத்தம் மதங்களில் அமைவதாக அரற்றி மலைந்தனர்' என்றருளிச் செய்தார்.

புறச்சமயங்கள் உலோகாயதம் புத்தம் சமணம் மீமாஞ்சகம் பஞ்சராத்திரம் பாட்டாசாரியம் என்பன. அகச்சமயங்கள் வைரவம் வாமம் காளாமுகம் மாவிரதம் சாத்தம் பாசுபதம் என்பன. இச்சமயங்களுள், 'விரதமே பரமாக வேதியரும், சரதமாகவே சாத்திரம் காட்டினர்' என்பது மீமாஞ்சகமதத்தையும், பின்னர்க் கூறப்படும் மாயாவாதம் என்பது சங்கராசாரியர் மதத்தையும், உலோகாயதன் என்பது புறச்சமயங்களுள் ஒன்றாகிய உலோகயதமதத்தையும் விதந்தெடுத்துக் கூறியனவாகும்.

தன் கொள்கையைத் திறம்பட எடுத்துரைக்கும் திட்பமுடைமையால் 'மிண்டிய மாயாவாதம்' என்றார். மாயாவாதத்தின் கொள்கை கடவுள் என்னும் பொருள் ஒன்றன்றிப் பிறிதொரு பொருளும் இல்லை என்பது. நியாயநூல் அளவைகளினால் அத்தன்மையாகத் தங்கொள்கையை எடுத்து இடித்துரைத்து ஆரவாரஞ் செய்யுந் தன்மைபற்றி 'மாயாவாதமென்னுஞ் சண்ட மாருதஞ் சுழித்தடித் தார்த்து' என்றார். ஆர்த்து என்னும் செய்தெனெச்சத்தை ஆரவாரிக்கப்பட்டு எனச் செயபாட்டெச்சமாக்குக.

உலோகாயதன் - உலோகாயதம். மகர னகரப் போலி. "அகன மர்ந்து செய்யா ளுறையும்" (குறள் 84) என்புழிப் போல. உலோகாயதம் மாதரே தெய்வம்; போகமே மோட்சம் எனக் கூறுவது. உலோகாயத சமயக்கொள்கை பொதுவறிவுடையாரைப் பெரிதும் மயங்கச் செய்து கெடுத்து விடுமாதலின் 'ஒண்டிறற் பாம்பின் கலாபேதத்த கடுவிடம் எய்தி' என்றார். உலோகாயதம் மிக்க வலிமை படைத்த பாம்பாகவும் அதனது பல்வேறு வகைப்பட்ட கலைகள் பாம்பின் விடமாகவும் உருவகஞ் செய்யப்பட்டன.

59—72. தப்பாமே தாம் பிடித்தது சலியா - முற்கூறப்பட்ட ஏதுக்களால் நெறிநின்று தவறாமல் தாம் பிடித்த கடவுட் கொள்கையினின்றும் சலிப்படைந்து விட்டு விடாமல், தழலது கண்ட மெழுகது போல - நெருப்பை அணுகின மெழுகினைப் போல, உளம் உருகி தொழுது - உள்ளம் உருகி இறைவனை வணங்கி, அழுது உடல் கம்பித்து - அழுது உடல் நடுக்கம் அடைந்து, ஆடியும் அலறியும் பாடியும் பரவியும் - பின்னர் ஆனந்தக் கூத்து இயற்றியும் ஓலமிட்டும் இசைபாடல்களைப் பாடி வழிபட்டும், கொடிறும் பேதையும் கொண்டது விடாது எனும் படியே ஆகி - பற்றுக்குறடும் அறிவிலியும் தாம்பிடித்தவற்றை நெகிழவிடா என்னும் பழமொழி போலாகத் தாம்பிடித்த கடவுட்கொள்கையை விடாமல், நல் இடை அறா அன்பின் - நன்றாகிய இடையே அற்றுப் போதலில்லாத அன்பினால், பசு மரத்து ஆணி அறைந்தால் போல - பச்சை மரத்திலே ஆணியை அடித்தாற்போல நன்றாகப் பதியப்பெற்று, கசிவது பெருகி - மனநெகிழ்ச்சி மிகுந்து, கடல் என மறுகி - கடல் போலச் சுழன்று, அகம் குழைந்து - மனம் குழையப்பெற்று: அனுகுலமாய் மெய் விதிர்த்து - அதற்கு அனுகூலமாய் உடம்பு நடுங்கப்பெற்று, சகம் பேய் என்று தம்மை சிரிப்ப - உலகினர் இவர் பேயாற் பிடிக்கப்பட்டவர் என்று தம்மைப் பரிகசிக்க, நாணது ஒழிந்து - அதற்கு நாணத்தை விட்டு, நாடவர் பழித்து உரை கோணுதல் இன்றி பூணது ஆக - நாட்டிலுள்ளார் தம்மைப் பழித்துக் கூறும் வசைமொழிகள் தாம் வெறுப்பின்றி ஏற்றுக் கொள்ளுதலால் அணிகலம் போல அமைய, சதுர் இழந்து - யாம் வல்லுநம் என்னும் வலி அழிந்து, அறி மால் கொண்டு - அதனால் உண்மை அறிவினைப்பெறும் விருப்பத்தினைக் கொண்டு, பர மா அதிசயம் ஆக - தாம் அடைதற்குரிய வீடுபேற்று இன்பமே மேலான பெரிய வியப்புக்கு இடமாக,

தப்பாமே என்றது மாயாசத்திகள் மாயைகள் தொடங்கினமையும், ஆத்தமாரும் அயலவர்களும் நாத்திகம் பேசினமையும் சுற்றத்தார்கள் பற்றியழைத்துப் பதறினமையும் வேதியர் சாத்திரங் காட்டினமையும் சமயவாதிகள் அரற்றி மலைந்தமையும் மாயாவாதிகள் ஆரவாரிக்கப்பட்டமையும் உலோகாயதனது கடுவிடம் எய்தப்பெற்று அந்நிலையில் பெரிய வஞ்சனைகள் சூழப்பெற்றமையுமாகிய இவ்வேதுக்களால் நெறியினின்றும்

தவறுமல் என்றவாறு. தப்புதல் - தவறுதல். "தப்பாமே தாளடைந் தார்" (திருவம்மானை 11) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

சலியா - சலியாமல். என்றது சலிப்படைந்து விட்டுவிடாமல் என்ற வாறு, சலியா - ஈறுகெட்ட எதிர்மறைவினையெச்சம், "காக்கை கரவா கரைந்துண்ணும்" (குறள் 527) என்புழிப்போல,

தழலது மெழுகது என்பவற்றில் அது பகுதிப்பொருள் விகுதி. தழ லது கண்ட மெழுகதுபோல உருகி என இயையும். "அழல் சேர்ந்த மெழுகே யன்னார்" (சத 88), "தீசேர் மெழுகொப்பாய்" (திருவெம் 7) "அழலுறுமெழுமாம் என்பராய் நினைவார்" (செத்திலாப் 4) "அனல் சேர் மெழுகொப்ப" (ஆசைப் 8) என பிறண்டு வருவனவும் ஈண்டறி யற்பாலன. கண்ட என்பது அணுகுதற் பொருளில் வந்தது. கம்பித்தல் - நடுங்குதல். "மெய்ம் முழுதுங் கம்பித் தழுமடியாரிடை" (நீத் 27) என் புழியும் இப்பொருட்டாதல் காண்க.

கொடிறு - குறடு. "கடைவாய்ப் புறமுங் கருவிப் பற்றுங், குருமகிழ் பூசமுங் கொடிறென லாகும்" என்பது பிங்கலந்தை. (10 : 402) பேதை - அறிவிலி. கொடிறும் பேதையும் கொண்டது விடாது என்பது ஒருமை பன்மை மயக்கம். அன்றி, கொடிறும் விடாது, பேதையும் விடாது எனத் தனித்தனி இயைப்பினுமமையும். பேதையைக் கொடிறொடு சேர்த் துக் 'கொண்டது விடாது' என அஃறிணையாற் கூறியது இழிவுபற்றி, *கொடிறும் பேதையும் தாம் பற்றிய பொருளை விடாத தன்மைபோல மெய்யன்பரும் கடவுட் கொள்கையை விடாமைபற்றிக் 'கொடிறும் பேதை யுங் கொண்டது விடாதெனும் படியேயாகி' என்றார். படி - தன்மை. "கருமணியம் பாலகத்துப் பதித்தன்ன படியவாய்" (சீவக 167) என் புழியும் இப்பொருட்டாதல் காண்க.

அன்பிற் (64) பெருகி (66) என இயையும். பசுமரத்தாணி அறைந் தாற் போல நன்றாகப் பதியப்பெற்று எனச் சில சொற்கள் வருவித் துரைக்க. பசுமரத்தாணி அறைந்தாற் போலக் கசிவது பெருகி என்றது பசுமரத்தில் ஆணி அறைந்தால் எப்படி எளிதில் நன்றாக அழுந்தி விடுமோ அதுபோலத் தைலதாரை போன்ற இடையீடில்லாத அன்பினால் மன நெகிழ்ச்சி மிகுந்து என்றவாறு. மரத்திற்குப் பசு மரத்தினையும், இடை யறு அன்பினுக்கு ஆணியினையும், அன்பினால் நெகிழ்ச்சி மிகுதலுக்கு அது நன்றாகப் பதிதலையும் உவமையாகக் கொள்க.

கசிவு - நெகிழ்ச்சிப் பெருக்கு. கடல் அலைபோல மீட்டும் மீட்டும் உள தாகலின் 'கடலென மறுகி' என்றார். கடல் அதன் அலைக்கு ஆகுபெயர். அகங்குழைதல் - உள்ளநெகிழ்தல். அனுகுலம் - அனுகூலம் என்னும் வட சொற்றிரிபு. அகங்குழைதலின் மெய்ப்பாடு மெய்விதிர்த்தலாதலின் 'அனு

*"கொடிறும் பேதையும் போலத் தாங்கொண்டதே பற்றி" சிவஞான பாடியம் அவையடக்கம்.

குலமாய் மெய் விதிர்த்து' என்றார். விதிர்த்தல் - நடுங்குதல். "அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கஞ் செய்யும்" என்பது தொல்காப்பியம்.

சகம் - உலகம். ஈண்டு உலகினரை உணர்த்தி நிற்றலின் ஆகுபெயர். பேய் என்றது பேய்க்கோட்பட்டாரை, பேய்க்கோட்பட்டவர் தம்வயமின்றி அப்பேயின் வயத்தராய் நிற்றல்போலத், தெய்வங் கொள்கையில் நிலைபேறுடையவர் அதனின்றும் பிறழாது நிற்றலின் அவரைக் காணுநர் இகழ்ந்து பரிகசித்தலின் 'சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப' என்றார். பேயர் என்பது பேய் என ஈறுகெட்டு நின்றது. இனி அறியாமையுடையாரைப் பேயர் என வழங்கும் உலக வழக்குப் பற்றி வந்ததெனினுமமையும்.

"பேயனேன்...என் சொல்லிப் பேசுகேனே" சத 23.

"உன்னடி பணியாப் பேயனாகிலும்" செத் 7.

"பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனை" கோத்தும்பி 12

என அடிகள் பிறண்டும் கூறுதல் காண்க.

நாணது ஒழிந்து என்றது சகம் பேய் என்று தம்மைச் சிரித்தலினால் நாணமடையாது என்றவாறு. நாடவர் பழித்துரை (69) கோணுதல் இன்றிப் பூணதுவாக (70) என மாற்றிக் கூட்டி நாட்டவர்களாற் பழித்துக் கூறப்படும் சொற்கள், தாம் வெறுப்பின்றி ஏற்றுக் கொள்ளப்படுதலால் அணிகலம் போல அமைய என்றவாறு. பழித்துரையை ஏற்றுக் கொள்பவரின் தன்மை அப்பழித்துரையின் மேலேற்றிக் 'கோணுதலின்றிப் பூணதுவாக' என்றார்.

சதுர் இழத்தல் - யாம் எவற்றையும் அறிய வல்லுநம் என்னும் தன் முனைப்பினை இழத்தல். சதுர் இழந்தன்றி உண்மையை அறியும் ஆசை நிகழாமையின் 'சதுரிழந்து அறிமால் கொண்டு' என்றார். அறிவு என்றது ஈறுகெட்டு நின்றது. அறிவு என்றது ஈண்டு தத்துவ ஞானத்தினை. மால் - ஆசை; வேட்கை. "மாநீர்க்கு மலன்மார்பென் றெழுந்த சொன்னோவோமோ" (கலி 68 : 13) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. "மாயோன் மேக மயக்கம் வேட்கை, மாலென் றுரைப்பர்" எனப் பிங்கலந்தையில் (10 : 931) வருதலுங் காண்க. சாருங்கதி என்றது தத்துவ ஞானத்தினால் (மெய்யறிவினால்) அடைதற்குரிய வீடுபேற்றினை. முன்னொரு போதுங் கண்டிராமையின் 'பரமாதிசயமாக' என்றார்.

73—87. கற்றா மனம் என கதறியும் பதறியும் - கன்றை ஈன்று அண்ணிய பசுவின் மனம்போலக் கதறுதலைச் செய்தும் பதறுதலைச் செய்தும், மற்று ஓர் தெய்வம் கனவிலும் நினையாது - வேறு ஒரு தெய்வத்தைக் கனவினிடத்தும் நினையாமல், அரு பரத்து ஒருவன் - அதற்கரிய மேன்மையையுடைய முதல்வனாகிய நீ, குருபரன் ஆகி அவனியில் வந்து அருளிய பெருமை - ஆசாரியமுதல்வனாய் இந்நிலவுலகத்தில் வலியவந்து எழுந்

தருளியிருந்து அருளால் உபதேசஞ் செய்த பெருந்தன்மையை, சிறுமை என்று இகழாது - எளிதிற் கிடைத்தமை பற்றி அதனைப் புல்லிதாக நினைத்து இகழ்ந்து விடாமே, திரு அடி இணையை - அவ்வாசாரிய முதல்வனது திருவடிகள் இரண்டினையும், பிறி வினை அறியா நிழலது போல முன்பின் ஆகி - உருவினைவிட்டு நீங்கும் செயலினை அறியாத நிழலைப்போலப் பிரியாது முன்னாகவோ பின்னாகவோ தொடர்ந்து, முனியாது அத்திசை - இடையூறுகளாற் பிரிய நேரினும் அதனால் வெறுப்புற்று மனத்தளர்ச்சி அடையாமல் குருபரன் எழுந்தருளிய திசையை நோக்கி வணங்கி, என்பு நைந்து உருகி நெக்கு நெக்கு ஏங்கி - வன்பொருளாகிய எலும்பும் தன் வன்மை கெட்டு உருகி மனம் நெகிழ்ந்து நெகிழ்ந்து இரங்கி, அன்பு எனும் ஆறு கரையது புரள - அன்பு என்று சிறப்பித்துச் சொல்லப்படும் ஆறு பெருகி இருகரையும் புரண்டு ஓட, நல் புலன் ஒன்றி - நல்ல புலன்கள் ஐந்தும் ஒன்றுபட்டு, நாத என்று அரற்றி - தலைவனே என்று வாய்விட்டுப் புலம்பி, உரை தடுமாறி - சொற்கள் குளறி, உரோமம் சிலிர்ப்ப - மயிர்சிலிர்ப்ப, கர மலர் மொட்டித்து - மலர்போன்ற கரங்களைக் குவித்து, இருதயம் மலர - அகத்தாமரையாகிய நெஞ்சம் விரிய, கண் களி கூர - கண்கள் களிப்பு மிக, நுண் துளி அரும்ப - அதனால் கண்களில் நுண்ணிய ஆனந்த நீர்த்துளிகள் தோன்ற, சாயா அன்பினை நாடொறும் தழைப்பவர் - கெடாத அன்பினை நாடோறும் தழைப்பிப்பவர்களை, தாயே ஆகி வளர்த்தனை போற்றி - தாயைப் போல நின்று வளர்த்தோயே நினக்கு வணக்கம்.

கன்று + ஆ = கற்றா. "மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம், வல்லொற் றிறுதி கிளையொற் றாகும்" (தொல். எழுத்து 414) என்பது விதி. கற்றா மனமெனக் கதறியும் பதறியும் என்றது ஈன்றணிய பசு தன் கன்றைப் பிரிந்தவிடத்துக் கதறியழைத்தலும், அதற்கு ஏதும் இடையூறு எய்தியதோவென மனம் பதறுதலும் போல மெய்யன்பர்களும் இறைவன் காட்சி நீங்கியபோது கதறியழைத்தலும் அக்காட்சி எய்துமோவென மனம் பதறுதலும் உடையராவர் என்பதாம். "கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே" (புலம்பல் 3) என அடிகள் மற்றோரிடத்துக் கூறுதலும் காண்க.

மெய்யன்பர்களின் மனம் முழுமுதற் கடவுளையன்றிப் பிறிதொரு தெய்வத்தையும் நினையாமையின் 'மற்றோர் தெய்வங் கனவிலும் நினையாது' என்றார்.

"உள்ளேன் பிறதெய்வம் உன்னை யல்லா தெங்கள் உத்தமனே" சத. 2

"மற்றறியேன் பிறதெய்வம்" ஏசறவு 5

என அடிகள் பிறாண்டு கூறுதலும் காண்க. நினையாது (74) அன்பினைத் தழைப்பவர் (86) என முடிக்க. இனி, நினையாது (74) அருளிய பெருமை (76) எனக் கூட்டிப் பிறதெய்வங்களை நினையாதபடி அருள்செய்த பெருமை எனவும் உரைக்கலாம். "யான் பிற வேத்தாவகை யிரங்கித், தன் கடைக்

கண் வைத்த தண்டில்லைச் சங்கரன்" (298) எனத் திருக்கோவையாரி னும் வருதல் காண்க. ஓர் தெய்வம் - ஒரு தெய்வம் என்பதன் விகாரம். கனவிலும் என்பதில் உம்மை எச்சவும்மை.

திருமால் பிரமன் முதலிய தேவர்களாலும் அறிதற்கருமையும் உயர்வு முடைய ஒப்பற்ற முதல்வனாதலின் இறைவனை 'அருபரத்தொருவன்' என்றார். "அரியயன் இந்திரன் வானோர்க் கரிய சிவன்" (தெள் 7) என வருதலுங் காண்க. பரம் - உயர்வு. குருபரனாகி அவனியில் வந்து அருளிய பெருமை என மாற்றிக் கூட்டுக. சிவபெருமான் குருபரனாகி அவனியில் எழுந்தருளி அருளியமை "இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும், அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி எந்தரமும் ஆட் கொண்டு" (அம்மானை 3) "அரையாடு நாக மசைத்தபிரான் அவனியின் மேல் ..வந்தாண்ட திறம்" (தெள் 6) "அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்" (திருப்பள்ளி 10) எனப் பிறண்டும் வருவனவற்றாலுமறிக.

"கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபர னென்றோர் திருப்பெயர் கொண்டு" கந்தர் கலி 24.

என வருதலுங் காண்க.

அவனி - நிலம்; வடசொல். குரு - ஆசாரியன்.

பிறிவினை - பிறிதாகும் செயல். உருவினை விட்டு நிழல் நீங்குதல் எக் காலத்துமின்மையின் 'பிறிவினை யறியா நிழல்' என்றார் "நிழல் தன்னை வீயா தடியுறைந் தற்று" (குறள் 208) என்றார் திருவள்ளுவரும். முனி யாது - வெறாது.

அத்திசை என்றது குருபரனாகி எழுந்தருளியிருந்த திசையை. அத் திசை நோக்கி வணங்கி எனச் சில சொற்கள் வருவித்து முடிக்க. இடை விடாது நிகழும் தன்மையும் மிகுதியும் பற்றி 'அன்பெனும் ஆறு' என் றார். புலன் என்றது பொறிவழிச் செல்லும் ஐந்தறிவுகளை. அவை ஒன்று படுதலின் 'ஒன்றி' என்றார் "ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்கள் நான்குஞ் சிந்தையே யாக" எனப் பெரியபுரா ணத்து (தடுத்தாட் 106) வருதலுங் காண்க. அரற்றுதல் - வாய்விட்டுப் புலம்புதல். மொட்டித்தல் - குவித்தல். தாமரை மலர் கூம்புதல்போல இருகரங்களையும் சேரக் குவித்தலின் 'கரமலர் மொட்டித்து' என்றார்.

கண்களி கூர நுண்டுளி யரும்ப என்றது குருபரனை மனத்தின்கண் நினைத்தலாற் கண்கள் களிப்பு மிகவும் நுண்ணிய ஆனந்தத் துளிகள் தோன்றவும் என்றவாறு. தழைப்பவர் - பிறவினை விகுதிதொக்க வினை யாலணையும்பெயர். அதன் ஈற்றிலுள்ள ஐயுருபு தொக்கது.

எனைப்பல சூழவும் (58) என்னும் வினைக்குச் செயப்படுபொருளாகத் தழைப்பவர் (86) என்பதைக் குறிப்பதாகிய தன்மை என்னும் சொல் முன்னர் விரித்துக் கூறப்பட்டது. எனவே, பெருமானை தம்மைச் சூழ

வும் (58) சலியா (59) மெழுகதுபோல 60) உளம் உருகி அழுது கம்பித்து (61) ஆடியும் அலறியும் பாடியும் பரவியும் (62) கொண்டது விடாதெனும் (64) படியே யாகி (64) பசுமரத்தாணி அறைந்தாற் போலக் (65) கசிவது பெருகி மறுகி (66) அகங்குழைந்து அனுகுலமாய் மெய் விதிர்த்துச் (68) சகம் தம்மைச் சிரிப்ப 68) நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை (69) கோணுதலின்றிப் பூணதுவாகக் கொண்டு (70) சதுர் இழந்து அறிமால் கொண்டு சாருங் (71) கதி அதிசயமாகக் (72) கதறியும் பதறியும் (73) கனவிலும் நினையாது (74) ஒருவன் அவனியில் வந்து அருளிய பெருமையைச் (76) சிறுமை என்று இகழாது (77) முனியாது (79) உருகி நெக்கு ஏங்கி (80) ஒன்றி அரற்றி 82) உரைதடுமாறி (83) மொட்டித்து மலரக் (84) கூர அரும்பத் (85) தழைப்பவர் (86) என வினை முடிபு செய்க.

தழைப்பவர் தாயேயாகி என இயல்பாகப் புணர்ந்தமை, "உயிரீறாகிய வுயர்திணைப் பெயரும், புள்ளி யிறுதி யுயர்திணைப் பெயரும், எல்லா வழியும் இயல்பென மொழிப" (தொல் எழுத்து 153) என்னும் விதி பற்றியாகும்.

88—93. மெய் தரு வேதியன் ஆகி - மெய்ப்பொருள் உணர்ச்சியினைத் தரும் மறையோனாகி வந்து, வினை கெட - சஞ்சிதம் ஆகாமியம் என்னும் வினைகள் கெடும்படி, கைதர வல்லை கடவுள் போற்றி - உதவிசெய்ய வல்லவனாகிய கடவுளே நினக்கு வணக்கம்; ஆடகம் மதுரை அரசே போற்றி - பொன்வண்ணமாய் விளங்கும் மதுரைமாநகருக்கு அரசனே நினக்கு வணக்கம்; கூடல் இலங்கு குருமணி போற்றி - நான்மாடக் கூடலாகிய மதுரைத் திருக்கோயிலில் விளங்காநின்ற நிறம்பொருந்திய மாணிக்கமே நினக்கு வணக்கம்; தென் தில்லை மன்றினுள் ஆடி போற்றி - அழகிய தில்லைச் சிற்றம்பலத்தின்கண் ஆனந்தக் கூத்தாடுபவனே நினக்கு வணக்கம்; இன்று எனக்கு ஆர் அமுது ஆனாய் போற்றி - இந்நாளில் அடியேனுக்கு அரிய அமுதமானவனே நினக்கு வணக்கம்.

மெய்யென்றது மெய்ப்பொருளுணர்ச்சியினை. இறைவன் மறையோன் வடிவில் வந்து மெய்ப்பொருளுணர்ச்சியினைத் தந்தருளியமையின் 'மெய் தரு வேதியனாகி' என்றார். "அறைகூவி யாட்கொண்டருளி, மறையோர் கோலங் காட்டி யருளலும்" (திருவண்ட 148 - 9) "உருநாமறியவோர் அந்தணனா யாண்டு கொண்டான்" (தெள் 1) "அந்தணனாவதுங் காட்டி வந் தாண்டாய்" (திருப்பள்ளி 8) எனப் பிறண்டு வருவனவும் காண்க.

வினை, பிராரர்த்தம் சஞ்சிதம் ஆகாமியம் என மூன்றாகவும், வினை கெட என்பதற்குச் சஞ்சிதம் ஆகாமியம் என்னும் வினைகள் கெடும்படி எனக் கூறியது உடம்பு உள்ளவரையும் அனுபவித்தற்குரிய பிராரர்த்த வினையைத் தவிர்த்தமையாலாகும். அங்ஙனமன்றி இம்மூவகை வினைகளையும் உடனே அழித்து வீடுபேறு அளித்தலுமுண்டு. அது பெற்றான் சாம்பானுக்கு உமாபதிசிவாசாரியர் செய்த சத்தியோநிருவாணதீக்கை

யின் பேறு போன்றதாகும். கைதருதல் - உதவி செய்தல். கடவுள் என்ருர் இறைவன் எப்பொருட்டன்மையையுங் கடந்து நிற்றலின்.

ஆடகம் - பொன். தடாதகைப் பிராட்டியாரைத் திருமணஞ்செய்து இறைவன் சோமசுந்தரபாண்டியனுய் முடிகவித்து மதுரைமாநகரிலிருந்து அரசு செலுத்தினராதலின் 'மதுரைக் கரசே' என்ருர்.

கூடல் - மதுரை. மதுரைமாநகர் நான்மாடக்கூடலான வரலாறு திருவிளையாடற்புராணத்துட் காண்க. இலங்குதல் - விளங்குதல். இப்பொருட்டாதல், "இரவின் மாட்டிய இலங்கு சுடர்" (பெரும்பாண் 349) என்புழியுங் காண்க. குரு - நிறம். "குருவுங் கெழுவு நிறனு குரிமே" என்பது தொல்காப்பியம். (உரி 5) குருமணி என்றது ஈண்டு மதுரைத் திருகோயிலில் எழுந்தருளியிருக்கும் சொக்கநாதரை. இங்ஙனமன்றி, இறைவன் அடிகளை ஆட்கொண்டபோது இன்ன இன்ன தலங்களை வணங்குதி எனப் பணித்து அவ்வத்தலங்களிலெல்லாம் இக்குருவடிவைமீ காட்டுதும் காணுதி என அருளிச் செய்தமையின் குருமணி என்பதற்கு ஆசாரியமணி எனப் பொருளுரைத்தலும் பொருந்தும். "வைத்தநம் பதிக டம்மி லிவை யிவை வணங்கி லாங்கே, யித்திகழ் வடிவே காண்டி காட்டுது மெனவியர்பி" எனத் திருவாதவூரடிகள் புராணத்து (மண்சுமந்த 93) வருதலும் காண்க. திருவுத்தரகோசமங்கையிற் சென்றபோது அங்கே இறைவரது குருவடிவங் காணப்பெருமையால் வருந்திய அடிகள் நீத்தல் விண்ணப்பம் அருளிச் செய்தமையும் அதன் பின்னர்க் குருவடிவங் காணப் பெற்றமையும்,

"சடையவர் கோயி லெய்தித் தம்மைவந் தடிமை கொண்ட
வடிவது காணு ராகி மயங்கிவெய் துயிர்த்து வீழ்ந்து
விடுதிகொ லென்னை யென்று நீத்தல் விண்ணப்ப மென்னுந்
தொடைகெழு பாட லோதக் காட்டினர் தொல்லை மேனி"
திருவம்பலத் 27

எனத் திருவாதவூரடிகள் புராணத்து வருதல் ஈண்டு சிந்திக்கத்தக்கது.

தென்தில்லை - அழகியதில்லை. இனி, தென்மன்று எனக் கூட்டித் திருவாலங் காட்டிற்குத் தெற்கின்கணுள்ள மன்று எனினுமாம்.

ஆடி - ஆடுபவன் எனப் பெயராய் நின்றது. அரு அமுது, ஆரமுது என்ருயின. "ஆரிருள்" (கலி 147 : 30) என்புழிப் போல. அமுதம் தன்னை யுண்டாரை நரை திரை நோய் மூப்புச் சாக்காடுகளினின்றும் நீக்கி என்றும் ஒரே தன்மைத்தாய் இருக்கச் செய்தல்போல இறைவன் அருளும், அடிகளுக்கு எல்லா நலங்களையும் ஒருங்கு கொடுத்தலின் 'அமுதமானாய்' என்ருர். "எனக்கமுதனை" (சத 98) "அமுதமுமாய் நின்ருன்" (திருவெம் 18) "அமுதமுமாய்" (அம்மானை 16) "அமுதானை" (கண்ட 5) "அடியார்க் கமுதன்" (வார்த் 10) என அடிகள் பிறுண்டு அருளியமையுங் காண்க. "அற்றவர்க் காரமுதானய் போற்றி" என்ருர் அப்ப

ரடிகளும். (தே. நாவு 246 : 2). இனி, உபநிடதங்களில் இறைவனை 'அமிர்தம்' எனக் கூறுதல் பற்றி 'அமிர்தமானாய்' என்றார் எனினுமாம்.

94—99. மூவா நான்மறை முதல்வா போற்றி - எக்காலத்தும் மூத்தல் இல்லாத நான்கு வேதங்கட்கும் முதல்வனே நினக்கு வணக்கம்; சே ஆர் வெல்கொடி சிவனே போற்றி - ஆனேற்றின் வடிவு எழுதப்பட்ட வெல்லும் கொடியினையுடைய சிவபெருமானே நினக்கு வணக்கம்; மின் ஆர் உருவ விகிர்தா போற்றி - ஒளிபொருந்திய உருவத்தினையுடைய விகிர்தனே நினக்கு வணக்கம்; கல் நார் உரித்த கனியே போற்றி - கல்லின்கண் நார் உரித்த பழச்சுவையை ஒப்பவனே நினக்கு வணக்கம்; கனக குன்றே காவாய் போற்றி - பொன்மலை போன்றவனே காப்பாற்றுவாயாக நினக்கு வணக்கம்; ஆ ஆ எனக்கு அருளாய் போற்றி - ஆ ஆ என்று வியக்கத்தக்க பேற்றினை எனக்கு அருள்புரிவாயாக நினக்கு வணக்கம்.

மூவாமுதல்வா எனவும் நான்மறை முதல்வா எனவும் தனித்தனி இயையும். "மூவா முதலாய் நின்ற முதல்வா" (புணர்ச்சிப் 10) "மூவாத முதலானே" (எசற 8) என வருவன காண்க. நான்மறை முதல்வா என்றார் நான்கு வேதங்களை அருளியமையானும் அவற்றால் போற்றப் படுதலானும். "வேதமெய்ந்நூல் சொன்னவனே" (நீத் 43) எனவும் "வேதங்கள், ஐயாவென வோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே" (சிவபுரா 34-5) எனவும் அடிகள் அருளியமையுங் காண்க.

சே - ஆனேறு; இடபம். இறைவனது கொடியில் ஆனேறு எழுதப் பட்டமையின் "சேவார் கொடிச் சிவனே" என்றார், "சேவக மேந்திய வெல்கொடியான்" (பொற் 16) "ஏற்றுயர் கொடியுடையாய்" (பள்ளி1) எனவும், "வருமிடபக் கொடியுடை யான்" "செங்கண் ஏறணி வெல் கொடியான்" "சேவுயருந் திண்கொடியான்" (தே. ஞான 12 : 10; 105 : 7; 129 : 1) "சேவார்ந்த வெல்கொடியாய்" (நாவு 246 : 9) "சேவேந்திய கொடியான்" (சுந் 82 : 8) எனவும் வருவன காண்க. எக்காலத்தும் தோல்வியின்மையின் 'வெல்கொடி' என்று கூறினார்.

இடபக்கொடியை விதந்து கூறினாராயினும், அரவு மதி கொன்றை வெண்ணீறு மூவிலைவேல் முதலியன கொண்டிருத்தலுங் கொள்க.

"கொடிமே விடபமுங் கோவணக் கீளுமோர் கொக்கிறகும்
அடியேற் கரணும் அகலத்தில் நீறும் ஐவாயரவு
முடிமேன் மதியும் முருகலர் கொன்றையு மூவிலைய
வடிவேல் வடிவு மென்கண்ணு ளெப்போதும் வருகின்றனவே" (20)

எனப் பொன்வண்ணத்தந்தாதியில் வருதலுங் காண்க.

இறைவன் உருவு ஒளிமிகுந்ததாதலின் 'மின்னார் உருவ' என்றார். "மின்னேரனைய பூங்கழல்கள்" (ஆனந்த 1) என அடிகள் பிறண்டு அருளியமையுங் காண்க. விக்ருத என்னும் வடமொழியினின்றும் பிறந்த விகிர்தன் என்பது விகிர்தா என விளியேற்றது. விகிர்தம் - வேறுபாடு.

அன்பால்கினைவார்க்கருள்செய்ய வேண்டி இறைவன் பல வேறுபாடு களையுடைய உருவுகளை மேற்கொள்வனுதலின் 'உருவ விகிர்தா' என்றார். "வேடம் பல பல காட்டும் விகிர்தனம் வேதமுதல்வன்" எனத் தேவாரத்து (ஞான 204 : 10, வருதல் காண்க.

கல்லின்கண் நார் உரித்தல் எவர்க்கும் செய்தற்கரியதொன்றாக அதனைச் செய்த இறைவன் பெருவன்மையுடையனாயினும் கனிபோல் இனிமை தரும் தன்மையையுடையன் என்பார் 'கன்னாருரித்த கனியே' என்றார்.

"கல்நா ருரித்தென்ன என்னையுந்தன் கருணையினாற்
பொன்னார் கழல்பணித் தாண்ட பிரான்" (தெள் 9)

"கல்நா ருரித்தென்ன யாண்டு கொண்டான்" (பூவல் 9)
எனவும், "கனியே போற்றி" (போற் 108) "அளிந்ததோர் கனியே" (பிடித் 4) எனவும் அடிகள் அருளியமையுங் காண்க.

"மனிதர்கா ளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழ லீச னெனுங்கனி
இனிது சாலவு மேசற் றவர்கட்கே" நாவு 205 : 7.

என்னும் தேவாரமும் ஈண்டறியற்பாலது. உரித்த கனியே எனப் பெயரெச்சத்தாற் கூறினும் உரித்தவனே, கனிபோன்றவனே என்பது பொருளாகக் கொள்க.

கநகம் - கனகம்; பொன். வடசொல். இறைவன் பொன்பலபோன்ற வனுதலின் 'கனகக் குன்றே' என்றார். "சுடர்பொற் குன்றை" (புணர்ச்சி 1) என அடிகள் பிறண்டு அருளியமையுங் காண்க.

"கனகக்குன் றத் தெழிற் பெருஞ் சோதியை" நாவு 113 : 5
"செங்கனகத் தனிக்குன்றைச் சிவனை" நாவு 241 : 6,
"அங்கனகச் சுடர்க்குன்றை" நாவு 298 : 1.
"கனகமால் வரையை" சுந்தரர் 68 : 6.

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. கனகக்குன்றே காவாய் போற்றி என இயைத்துப் பொருள் கொள்க. "காவாய் கனகத் திரளே போற்றி" என அப்பரடிகள் (தே 269 : 9) அருளியமையுங் காண்க.

ஆவா என்பது வியப்பின்கட் குறிப்பு. ஆ, ஆ என்னும் சொற்கள் நடுவே வகர உடம்படுமெய் பெற்று ஆவாவென்றாயின. இவ்வாறு,

"ஆவாவென் றென்னையும் பூதலத்தே வலித்தாண்டு கொண்டான்" தெள் 7,
"ஆவா திருமால் அவிப்பாகங் கொண்டன்று சாவாதிருந்தான்" திருவுந்தி 6.
"ஆவா வென்ன ஆசைப்பட்டேன்" ஆசைப் 3,
"ஆவா வென்றருளி ... உடலைச்சிதையாத தெத்துக்கு" குழைத் 2,
"ஆவா விருவ ரறியா வடி" திருக்கோவை 72.

என பிறண்டும் வருவன காண்க.

100—105. படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி - எல்லாத் தனுகரண புவன போகங்களையும் உண்டாக்குபவனே காப்பவனே அழிப் பவனே நினக்கு வணக்கம்; இடரை களையும் எந்தாய் போற்றி - பிற வித்துன்பத்தினை நீக்கும் எமது தலைவனே நினக்கு வணக்கம்; ஈச போற்றி- எப்பொருளையும் உடையவனே நினக்கு வணக்கம்; இறைவ போற்றி - எப்பொருளினும் தங்குவோனே நினக்கு வணக்கம்; தேச பளிங்கின் திரளே போற்றி - ஒளியையுடைய பளிங்கின் தொகுதியைப் போன்றவனே நினக்கு வணக்கம்; அரைசே போற்றி - தேவர்களுக்கும் அரசனே நினக்கு வணக் கம்; அமுதே போற்றி - உயிர்களுக்கு அமிழ்தம் போன்றவனே நினக்கு வணக்கம்; விரை சேர் சரண விகிர்தா போற்றி - மணம் பொருந்திய திரு வடிமலர்களையுடைய வேறுபட்ட இயல்பையுடையவனே நினக்கு வணக்கம்;

எல்லாவற்றையும் உண்டாக்குபவனும் காப்பவனும் அழிப்பவனும் இறைவனேயாதலின் "படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி" என்றார். "காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி" (திருவெம் 12) என அடிகள் பிறண்டு அருளியமையும் காண்க.

"தோற்றுவித் தளித்துப் பின்னும் துடைத்தருள் தொழில்கள் மூன்றும்
போற்றவே யுடைய னீசன்" சுத் 1; அதி 2, செய் 33.

எனச் சிவஞானசித்தியாரில் வருதலுங் காண்க. படைப்பாய் காப்பாய் துடைப்பாய் என முத்தொழில்களைக் கூறினும் மறைத்தல் அருளல்களும் அவற்றுள் அடங்குவனவாகக் கொள்ளப்படும். இவ்வைந்து தொழில்க ளும் உயிர்களின் உய்தி கருதி இறைவன் இயற்றும் அருட்செயல்களேயாம்.

" அழிப்பிளைப்பு ஆற்றல் ஆக்கம் அவ்வவர் கன்ம மெல்லாங்
கழித்திடல் நுகரச்செய்தல் காப்பது கன்ம ஒப்பில்
தெழித்திடல் மலங்கள் எல்லாம் மறைப்பருள் செய்தி தானும்
பழிப்பொழி பந்தம் வீடு பார்த்திடின் அருளே யெல்லாம்." சித்.

என வருவதனாலும் காண்க. சுத் 1 செய் 37.

இறைவன் துன்பத்தை நீக்குதலின் 'இடரைக் களையும் எந்தாய்' என்றார். "அடியேன் இடர்களைந்த அமுதே" (பிரார்த்தனை 4) என வருதலும் காண்க. இடர் என்றது பிறவித்துன்பத்தை. "இந்திரு ஞால இடர்ப்பிறவித்துயர்" (திருப்படை 3) என அடிகள் அருளியவாறுங் காண்க. களைதல் - நீக்குதல்.

உலகப்பொருள்கள் எல்லாவற்றையும் தனது உடைமையாகவுடைய வன் ஈசனொருவனேயாகலின் 'ஈச' என்றார். ஈசன் - எப்பொருளையும் உடையோன் என்று பொருள்தரும் வட சொல். இறைவன் - எப்பொருளி னும் தங்குகின்றவன். சிலப் 10 : 108 அடிநல். தேசம் - தேஜஸ் என் னும் வடசொற்றிரிபு. தேசம் - தேசு; ஒளி. "தேசமுடையாய் திற வேலோ ரெம்பாவாய்" (திவ். திருப்பா 7) என்புழியும் இப்பொருட்டா தல் காண்க. பளிங்கு, ஒளியும் களங்கமின்மையும் மற்றைப்பொருள்

களின் உருவினைத் தன்னிடத்துக் காட்டும் தன்மையும் உடைமையின் அத்தன்மைகளையுடைய இறைவனுக்கு உவமையாயிற்று. "முத்தொத் திராளும் பளிங்கினிற் சோதியு மொய்பவளத், தொத்தினை யேய்க்கும் படியாய்" என அப்பரடிகள் (தே 100 : 2) அருளியமையுங் காண்க.

"மதிமா சூர வொளிகால் பளிங்கின்
பூட்சித் தென்ன" (56 : 14-5)

என ஞானமிர்தத்து வருதலுங் காண்க.

அரைசு, அரசு என்பதன் போலி. "அவிர்சடை வானத் தடலரைசே" "அரைசே...விரைசேர் முடியாய்" (நீத் 36, 37) "அரைசே பொன்னம்பலத்தாடு மமுதே" (கோயின்மூத்த 5) எனப் பிறாண்டும் வருவன காண்க. இறைவன் அமிழ்தம் போன்றவனாதலின் 'அமுதே' என்றார்.

சரணம் என்றது ஈண்டு சரணம் புகுதற்குரிய திருவடியை உணர்த்தியது. இது வடசொல். பக்குவான்மாக்களுக்கு வீடுபேறாகிய அரும்பயனை அளிக்கும் நயம்பற்றி 'விரைசேர் சரண்' எனச் சிறப்பிக்கப்பட்டது. "உன் விரையார் கழற்கு" (சத 1) என அடிகள் பிறாண்டு கூறுதலுங் காண்க.

106—111. வேதி போற்றி - ஆணவமலத்தால் மறைப்புண்டு கிடக்கும் உயிர்களை அதன் மறைப்பினின்றும் நீக்கி உண்மை நிலையினை அடையச் செய்பவனே நினக்கு வணக்கம்; விமலா போற்றி - இயல்பாகவே மலங்களினீங்கினவனே நினக்கு வணக்கம் : ஆதி போற்றி - ஆதி சத்தியோடு கூடினவனே நினக்கு வணக்கம்; அறிவே போற்றி - அறிவுருவானவனே நினக்கு வணக்கம்; கதியே போற்றி - வீடு பேற்றினை அருள்பவனே நினக்கு வணக்கம்; கனியே போற்றி - கனியின் சுவை போன்றவனே நினக்கு வணக்கம்; நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி - கங்கையாறு பொருந்திய சிவந்த சடையினையுடையவனே நினக்கு வணக்கம்; உடையாய் போற்றி - எப்பொருள்களையும் உடையவனே நினக்கு வணக்கம்; உணர்வே போற்றி - எவற்றையும் அறிபவனே நினக்கு வணக்கம்; கடையேன் அடிமை கண்டாய் போற்றி - கீழ்ப்பட்டவனாகிய எனது அடிமைத் தொண்டினையும் ஒருபொருளாக ஏற்றுக் கடைக்கணித்தவனே நினக்கு வணக்கம்.

வேதி - வேதிப்பவன்; மாறுபடுத்துபவன். உயிர்களை அவற்றின் தன்மையினின்றும் நீக்கித் தன்தன்மையடையச் செய்தலின் இறைவனை 'வேதி' என்றார். "சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட அத்தன்" (அச்சோப் 1) என வருதலுங் காண்க.

விமலன் - மலங்களினீங்கினவன்; மாசற்றவன். இறைவன் ஆதிசத்தியோடு இயைந்தவனாதலின் 'ஆதி' என்றார். "ஆதிபகவன் முதற்றே யுலகு" என்றார் திருவள்ளுவரும். இனி ஆதி என்பதற்கு எப்பொருட்கும் முதலேயெனினுமாம்.

இறைவன் பேரறிஞனும் அறிவுருவானவனுமாதலின் 'அறிவே' என்றார். "ஞானந்தா னுருவாகிய நாயகன்" எனக் கந்தபுராணத்து (சூரனமைச்சியல் 128) வருதலும் காண்க.

கதி - வீடுபேறு. கதியைக் கொடுப்பவனைக் 'கதியே' என்றார். "மண்பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும், விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானை" என அப்பரடிகள் (தே 12 : 5) அருளியமையுங் காண்க. இறைவன் கனிபோ லினியனாதலின் 'கனியே' என்றார்.

"கனியினும்... இனியன் தன்னடைந் தார்க்கிடைமருதனே"
நாவு 128 : 10.

'ஈசனெனுங் கனி, இனிது சாலவும் ஏசற்றவர்கட்கே" நாவு 205 : 7.

"கற்றவர்களுண்ணுங் கனியே போற்றி" நாவு 246 : 1.

"கற்றுள வான்கனியாய கண்ணுதலை', சுந் 51 : 9.

"கண்ணுதலைக் கனியை" சுந் 84 : 6.

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. கனி என்றது தேமாங்கனி முதலாயினவற்றை.

"ஆமாத்தூ ரரனே யென்றழைத்தலும்
தேமாத் தீங்கனிபோலத் தித்திக்குமே" 157 : 3.

என அப்பரடிகள் அருளியமையுங் காண்க. கதியே போற்றி கனியே போற்றி என்பது "கற்றவர்களுண்ணுங் கனியே போற்றி கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி" எனத் தேவாரத்தும் (நாவு 246 : 1) வருதல் காண்க.

நதிசேர் செஞ்சடை நம்பன் என்றது பகீரதன் பொருட்டுப் பெருக்கெடுத்துவந்த ஆகாயகங்கையைச் சடையின்கண் ஏற்று அதன் செருக்கை அடக்கிய எம்பெருமான் என்றவாறு.

பகீரதன் தன் முன்னோர்கள் நற்கதியடையும் பொருட்டு ஆகாய கங்கையைப் பூமியிற் கொணரவேண்டி இறைவனை நோக்கித் தவஞ்செய்ய இறைவனருளாற் பலமுகமாகப் பெருக்கெடுத்துவந்த கங்கை தரையில் விழுந்து அதனைச் சிதையாமைப் பொருட்டு இறைவன் அதனைச் செஞ்சடையிற்றாங்கித் தரையில் இழியவிட்டனன் என்பது வரலாறு.

"மையறு மனத்த னாய பகீரதன் வரங்கள் வேண்ட
ஐயமி லமர ரேத்த வாயிர முகம தாகி
வையக நெளியப் பாய்வான் வந்திழி கங்கை யென்னுந்
தையலைச் சடையி லேற்றார் சாய்க்காடு மேவி னாரே" (65 : 7)

எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்து வருதலுங் காண்க. செஞ்சடை - சிவந்த சடை. "கங்கைநீர் தங்கு செஞ்சடையாய்" (அருட் 9) என வருதலுங் காண்க.

நம்பன் - சிவபெருமான். "நம்பன் பகவன்...எம்பிரான் பெயரே" எனப் பிங்கலந்தையில் வருதலும் காண்க. இனி, எல்லாவுயிரும் விரும்புதற்குரியோன் எனினுமாம். "நம்பு மேவும் நசையாகும்மே" என்பது தொல்காப்பியம் (உரி ). உணர்வே என்பதற்கு மெய்யுணர்வே எனினுமாம். 'கடையேனடிமை கண்டாய்' என்பதற்கு கடைப்பட்டவனாகிய என்னை நினக்கு அடிமையாகச் செய்தவனே எனினுமாம்.

*112–117*. ஐயா போற்றி - வழிபாட்டிற்குரியவனே நினக்கு வணக்கம்; அணுவே போற்றி — துகள்போல நுண்ணியனே நினக்கு வணக்கம்; சைவா போற்றி - சைவாசாரியனே நினக்கு வணக்கம்; தலைவா போற்றி - எவ்வகை மேம்பாட்டினர்க்கும் தலைவனே நினக்கு வணக்கம்; குறியே போற்றி - லிங்க வடிவினனே நினக்கு வணக்கம்; குணமே போற்றி - எண்குணமுடையவனே நினக்கு வணக்கம்; நெறியே போற்றி - வீட்டு நெறியை அருள்பவனே நினக்கு வணக்கம்; நினைவே போற்றி - நினைத்தற்குரியவனே நினக்கு வணக்கம்; வானோர்க்கு அரிய மருந்தே போற்றி - தேவர்களுக்கும் கிடைத்தற்கரிய மருந்துபோல்பவனே நினக்கு வணக்கம்; ஏனோர்க்கு எளிய இறைவா போற்றி - வானவரல்லராயினும் அன்பரான ஏனோர்க்கு எளிவந்தருளும் இறைவனே நினக்கு வணக்கம்.

ஐயன் - வழிபாட்டிற்குரியவன். பருப்பொருள்களுக்கெல்லாம் பருப்பொருளாயுள்ள இறைவனே நுண்பொருள்களுக்கெல்லாம் நுண்பொருளாயுமிருத்தலின் 'அணுவே' என்றார். "அணு அணுவி லிறந்தாய்" (சத 25) என அடிகள் பிறுண்டு அருளியமையுங் காண்க. "அணுவை" "பரமாணுவாய்" "அணுவாகி யாதியாய் நின்றான் கண்டாய்" எனத் தேவாரத்து (நாவு 214 : 1; 240 : 6; 253 : 7) வருவனவுங் காண்க.

அடிகள் "ஐயா றதனிற் சைவ னாகியும்" (கீர்த்தி 85) எனப் பிறிதோரிடத்து அருளுமாற்றல் சைவா என்பதற்கு ஈண்டுச் சைவாசாரியனே எனப் பொருளுரைக்கப்பட்டது. இனி, இறைவன் அநாதி சைவனாதலின் 'சைவா போற்றி' என்றார் எனினுமாம். "தழலிலங்கு திருவுருவச் சைவனே" (ஞான 367 : 7) "மான்மறி மழுவொன்றேந்தும் சைவனே" (நாவு 62 : 4) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

குணங்குறி கடந்த முழுமுதலிறைவன் அன்பர் வழிபாட்டின் பொருட்டுக் கன்மசாதாக்கியமாகிய சிவலிங்கவுருவாக அமைந்தமையின் 'குறியே' என்றார். குறி - லிங்கம்; அடையாளம்.

தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவேபாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்னும் எண்வகை இறைமைக் குணங்களை இயல்பாகவுடைமையின் 'குணமே' என்றார். "எட்டுக் கொலாமவர் சூடும் இனமலர்" ... "எட்டுவான் குணத்தீசன்" எனத் தேவாரத்து (நாவு 18 : 8; 203 : 8) வருவனவுங் காண்க.

நெறி - வீட்டு நெறியைக் கூறும் நூல், "பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க நெறி" (குறள் ) என்றார் திருவள்ளுவரும். வீட்டு நெறியைக் கூறும் நூலை அருள்பவனாதலின் 'நெறியே' என்றார். எக்காலத்தும் நினைத்தற்குரியவன் இறைவனாதலின் 'நினைவே' என்றார். "நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினை, என்றும் சிவன்றாள் இணை" எனப் பிறரும் அருளியமை காண்க.

இறைவன், அமுதுண்ட தேவர்களுக்கும் கிடைத்தற்கரிய வீடுபேற்றினை அருளும் அருமருந்தாயிருத்தல்பற்றி 'வானோர்க்கரிய மருந்தே' என்றார். ஏனோர் எனப் பொதுவகையாற் கூறினும் அது மெய்யன்பரையே குறிக்கும். "முக்கண துடையெந்தை, தன்னை யாவரும் அறிவதற் கரியவன் எளியவன் அடியார்க்கு" (அதிசய 3) "யாவரா யினு மன்பரன்றி யறியொணா மலர்ச் சோதியான்" (சென்னி 1) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க.

118—130. மூ ஏழ் சுற்றமும் முரண் உறு நரகிடை - நின்னால் ஆட்கொள்ளப்பட்டவர்களது இருபத்தொரு தலைமுறையினரான சுற்றத்தவர்களும் ஒன்றற்கொன்று மாறுபட்ட துன்பத்தைத் தருகின்ற நரகங்களில், ஆழாமே அருள் அரசே போற்றி - ஆழ்ந்துபோகாமல் அருள்புரியும் அரசனே நினக்கு வணக்கம்; தோழா போற்றி - அன்புமிக்க அடியாரை நின்னோடொத்தவராகக் கொண்டு அருள்செய்யும் தோழனே நினக்கு வணக்கம்; துணைவா போற்றி - தன்னைத் தோழனாகப்பெற்ற அடியவர்க்கு எவ்விடத்தும் எக்காலத்தும் நீங்காத் துணையாயுள்ளவனே நினக்கு வணக்கம்; வாழ்வே போற்றி - அன்பர்க்கு இன்பவாழ்க்கையை அருள்பவனே நினக்கு வணக்கம்; என் வைப்பே போற்றி - எனக்குக் கிடைத்த புதைபொருள் போன்றவனே நினக்கு வணக்கம்; முத்தா போற்றி - இயல்பாகவே பாசங்களினீங்கினவனே நினக்கு வணக்கம்; முதல்வா போற்றி - எல்லாவற்றிற்கும் முதலாயுள்ளவனே நினக்கு வணக்கம்; அத்தா போற்றி - எவ்வுயிர்க்கும் தந்தையே நினக்கு வணக்கம்; அரனே போற்றி - மும்மலங்களையும் அழிப்பவனே நினக்கு வணக்கம்; உரை உணர்வு இறந்த ஒருவ போற்றி - வாயாற் சொல்லவும் மனத்தால் நினைக்கவும் அடங்காத ஒப்பற்றவனே நினக்கு வணக்கம்; விரி கடல் உலகின் விளைவே போற்றி - விரிகடல் சூழ்ந்த நிலவுலகின் வாழ்வின் பயனாக உள்ளவனே நினக்கு வணக்கம்; அருமையில் எளிய அழகே போற்றி - அன்பரல்லாதார்க்கு அரியனாயிருந்தும் அன்பராயினார்க்கு எளியனாய் விளங்கும் அழகனே நினக்கு வணக்கம்; கரு முகில் ஆகிய கண்ண போற்றி - கரிய மழைமுகில் போல் அருளைப்பொழியும் கண்களையுடையவனே நினக்கு வணக்கம்; மன்னிய திரு அருள் மலையே போற்றி - கண்கள் பொழிதலால் நிலைபெற்ற திருவருள் அருவி பாயும் மலைபோன்றவனே நினக்கு வணக்கம்; என்னையும் ஒருவன் ஆக்கி - ஒன்றும்போதா நாயேனையும் எவ்வகையினுஞ் சிறந்த அடியாருள் ஒருவனாகச் செய்து, இரு கழல் சென்னியில் வைத்த சேவக

போற்றி - பெருமை பொருந்திய திருவடிகளை அடியேனது புன்றலையின் மேல் வைத்தருளிய வீரனே நினக்கு வணக்கம்.

மூவேழ் சுற்றம் - இருபத்தொரு தலைமுறையான சுற்றம்; என்றது அடிமை கொள்ளப்பட்ட ஒரு அடியவரது இருபத்தொரு தலைமுறையினர் என்றவாறு. அன்றி மூன்று பகுப்பாகிய ஏழுதலைமுறையெனக் கொண்டு அடிமைகொள்ளப்பட்ட ஒரு அடியவரது தந்தை முதலாக முன்னுள்ள ஏழுதலைமுறையிலுள்ளவரும், தாய் முதலாக ஏழுதலைமுறையிலுள்ளவரும் தாம்முதலாகப் பின்னுள்ள ஏழுதலைமுறையிலுள்ளவரும் எனக்கோடலுமொன்று. இன்னும் தமக்கு முன்னே பத்துத்தலைமுறையினரும் பின்னே பத்துத்தலைமுறையினரும் தாமுமாக இருபத்தொரு தலைமுறை எனக் கூறுதலுமொன்று.

முரணுடை நரகு - இன்பவுலகின் மாறுபட்ட நரகு; அன்றித் துன்பத்தின் வன்மை மென்மையில் மாறுபட்ட நரகுமாகும். நரகிடை ஆழாமே அருள் அரசு - நரகங்களில் ஆழ்ந்துபோகாமல் அருள்புரியும் அரசு. "கொடுமா நரகத் தழுந்தாமே காத்தாட் கொள்ளும் குருமணியே" (ஆனந்த 4) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க.

இறைவனைத் தந்தையாகவும் தோழனாகவும் ஆண்டானாகவும் ஆசிரியனாகவும் பாவித்து வழிபடும் முறையில், தோழன் தன்னேடொத்த இயல்பினனாதலின் தோழன் என்பதற்குத் தன்னேடொத்த வியல்பினை அருள்பவன் என்பது பொருளாகக் கொள்க.

துணை - துணைபுரிபவன். "துப்பனே சுடர்முடியானே துணையாளனே" (சதக 98) என அடிகள் அருளியமையுங் காண்க. வாழ்வு அளிப்பவனை 'வாழ்வே' என்றார். "வாழ்முதலே" "என்தன் வாழ்முதலே" (நீத் 23. 39) "போற்றியென் வாழ்முதலாகிய பொருளே" (பள்ளி 1) என வருவன காண்க.

வைப்பு - புதைபொருள். எய்ப்படைந்தவருக்கு அப்பொருள் பயன்படுதல்போல இறைவனும் பிறவித்துன்பத்தால் வருந்தினர்க்குப் பயன்படுதலின் 'எய்ப்பினில் வைப்பே' என்றார். "காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க" (அண்ட 105) "தொழுப்பாளர் எய்ப்பினில் வைப்பனே" (சதக 98) என அடிகள் பிறண்டு அருளியமையும் காண்க.

முத்தன், முக்த; என்னும் வடசொற்றிரிபு. விடுபட்டவன் என்பது பொருள். இறைவன் இயல்பாகவே பாசங்களினீங்கினவனாதலின் அவனை 'முத்தன்' என்றார். "அத்தன் முத்தன்" (திருக்கோவை 358) என்புழி முத்தன் என்பதற்கு 'இயல்பாகவே பாசங்களினீங்கியவன்" எனப் பேராசிரியர் உரைத்தமையுங் காண்க.

முதல்வா போற்றி என்றது - எல்லாவற்றிற்கும் முதலாயுள்ளவனே நினக்கு வணக்கம் என்றவாறு. "முதல்வா போற்றி முருகவேடன்னைப்

பயந்தாய் போற்றி" "முன்னியா நின்ற முதல்வா போற்றி" எனத் தேவாரத்து (நாவு 219 : 10; 271 : 5) வருவனவும் காண்க.

இறைவன் எவ்வுயிர்க்கும் தந்தையாதலின் 'அத்தன்' என்றார். 'அத்தன் - உலகத்துள்ளாரெல்லாருக்கும் தந்தை' எனப் பேராசிரியர் உரைத்தமையுங் காண்க. (திருக்கோவை 358 உரை) ஹரன் என்பது அரன் என நின்றது. பாசங்களை அறிப்பவன் என்பது பொருள். "பாசவேரறுக்கும் பழம்பொருள்" (பிடித்த 7) என வருதலுங் காண்க.

இறைவன் வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதவனாதலின் 'உரையுணர்விறந்த ஒருவன்' என்றார். "மாற்ற மனங் கழிய நின்ற மறையோனே" (சிவபுரா 45) "உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே" (கோயிற் 3) என வருவன காண்க. ஒருவன் - ஒப்பற்றவன். "ஒப்புனக் கில்லா வொருவனே" (பிடித் 5) என வருதலும் காண்க.

விளைவு - பயன், "விளைவின்கண் வீயா விழுமந்தரும்" (குறள் 284) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. விரிகடலுலகின் விளைவு எனப் பொதுப்படக் கூறினும் மனிதவாழ்வின் பயனைக் கொடுப்பவன் இறைவனாதலின் 'விரிகடலுலகின் விளைவே' என்றார்.

அன்பரல்லாதார்க்கு அருமையாய் இருந்தே அன்பராயினார்க்கு எளியனாய் விளங்கும் அழகனாதலின் 'அருமையில் எளிய அழகே' என்றார்.

"பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார்
ஆராலுங் காண்டற் கரியான் எமக்கெளிய
பேராளன்" அம்மானை 2.

"யாவரு மறிவரி யாயெமக் கெளியாய்" பள்ளி 3

"தன்னை யாவரும் அறிவதற் கரியவன் எளியவன்
அடியார்க்கு" அதிசய 3.

என இத்திருவாசகத்தும்,

"வஞ்சகர்க் கரியர் போலு மருவினோர்க் கெளியர் போலும்"
நாவு 66 : 7.

"எளியவ ரடியார்க் கென்றுமின் னம்பர் ஈசனாரே" நாவு 72 : 6.

எனத் தேவாரத்து வருவனவும் காண்க.

கருமுகில் - மழைமுகில். அது மழைபொழிவது போல அருள் பொழியுங் கண்ணையுடைமையின் 'கருமுகிலாகிய கண்ணே' என்றார். "கண்ணென்னுங் கண்ணோட்ட மில்லாத கண்" (குறள்) என்றார் திருவள்ளுவரும்.

அருளை மழையாகவும், கண்ணைக் கருமுகிலாகவும், இறைவனை மலையாகவும் உருவகஞ் செய்த முறைமைபற்றி 'மன்னிய திருவருண் மலையே போற்றி' என்றார். என்னையும் என்புழி உம்மை இழிவுசிறப்பு. ஒருவ

ளுக்கி - அடியாருள் ஒருவனுக்கி. "உனக்குரிய அன்பரில் உரியனுயுனைப் பருகநின்றதோர் துப்பனே" (சத 98) "தன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே" (அதிசய 1) என வருவன காண்க.

இருங்கழல் சென்னியில் வைத்த என்றது இறைவன் அடிகளுக்குத் திருவடிதீக்கை செய்தமையைக் கூறியவாறு.

"சிவன்...பூவாரடிச் சுவடென்றலைமேற் பொறித்தலுமே" தெள் 7.

"இணையார் திருவடி யென்றலைமேல் வைத்தலுமே" பூவல்லி 1.

"பெருந்துறையான், சீரார் திருவடி யென்றலைமேல் வைத்தபிரான்"

"மிதிக்குந் திருவடி யென்றலைமேல் வீற்றிருப்ப" குலா 7. [பூவல்லி 10

என அடிகள் பிறண்டு அருளியமையுங் காண்க. இருங்கழல் என்புழி இருமை, பெருமை என்னும் பொருட்டாய் நின்றது. "இருநிலம்" (பெரும் பாண் 29) என்புழிப்போல. சென்னி - தலை. சேவகன் - வீரன். திருவடி தீக்கை செய்து ஆட்கொள்ளும் திறமுடையார் பிறர் எத்தேவருமின்மையின் 'சேவக' என்றார்.

131—144. தொழு தகை துன்பம் துடைப்பாய் போற்றி - நின்னைத் தொழும் தகுதியையுடைய அடியார்களின் துன்பங்களை நீக்குவோனே நினக்கு வணக்கம்; அழிவு இலா ஆனந்த வாரி போற்றி - கெடுதலில்லாத இன்பக் கடலே நினக்கு வணக்கம்; அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி - கேடும் தோற்றமும் நீங்கினவனே நினக்கு வணக்கம்; முழுவதும் இறந்த முதல்வா போற்றி - எல்லாவற்றையுங் கடந்த முதல்வனே நினக்கு வணக்கம்; மான் நேர் நோக்கி மணாளா போற்றி - மானினது நோக்கம் போன்ற நோக்கினையுடைய உமையம்மைக்கு மணவாளனே நினக்கு வணக்கம்; வானகத்து அமரர் தாயே போற்றி - வானிடத்துள்ள தேவர்களுக்கும் தாய் போன்றவனே நினக்கு வணக்கம்; பார் இடை ஐந்தாய் பரந்தாய் போற்றி - நிலத்தினிடத்து நாற்றம் சுவை ஒளி ஊறு ஓசை என்னும் ஐந்து பண்புகளாக விரிந்து நின்றவனே நினக்கு வணக்கம்; நீர் இடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி - நீரினிடத்து சுவை ஒளி ஊறு ஓசை என்னும் நான்கு பண்புகளாய் விளங்கினவனே நினக்கு வணக்கம். தீ இடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி - நெருப்பினிடத்து ஒளி ஊறு ஓசை என்னும் மூன்று பண்புகளாக விளங்கினவனே நினக்கு வணக்கம்; வளி இடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி - காற்றினிடத்து ஊறு ஓசை என்னும் இரண்டு பண்புகளாக மகிழ்ந்து நின்றவனே நினக்கு வணக்கம். வெளி இடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி - வானிடத்து ஓசையாகிய ஒரு பண்பாய் நிறைந்துள்ளவனே நினக்கு வணக்கம்; அளி பவர் உள்ளத்து அமுதே போற்றி - அன்பினால் உருகுபவரது உள்ளத்தின்கண் ஊறும் அமுதமானவனே நினக்கு வணக்கம்; கனவிலும் தேவர்க்கு அரியாய் போற்றி - கனவினிடத்தும் அன்பரல்லாத தேவர்கட்கும் காண்

டற்கரியவனே வணக்கம். நனவிலும் நாயேற்கு அருளினை போற்றி - நனவினிடத்தும் நாய்போல் இழிந்த அடியேனுக்கு வெளிப்பட்டு அருள் புரிந்தவனே நினக்கு வணக்கம்.

இறைவன் தன்னைத்தொழும் தகுதியையுடைய அடியார்களின் துன்பங்களை நீக்குவோனாதலின் 'தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி' என்றார். "தஞ்சாப் பலிதேருந் தோன்றால் போற்றி, தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி" எனத் திருநாவுக்கரசுசுவாமிகள் (தே 219 ; 8) அருளியவாறுங் காண்க. தொழுதகை - வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இனி, தொழு என்பதனை முதனிலைத் தொழிற்பெயராகக் கொண்டு, 'தொழு தகை துன்பம்' என்பதற்குத் தொழுதலைத் தடுக்கும் துன்பம் எனவும், தொழுத கை துன்பம் எனப் பிரித்துத் தொழுத கையினையுடைய அடியார்க்குவரும் துன்பம் எனவும் உரைக்கலாம். தொழுதல் - கும்பிடுதல். "தொழுதகையுள்ளும் படையொடுங்கும்" (குறள் 828) என்புழியும் இப்பொருட்டாதல். காண்க. தகைதல் - தடுத்தல் என்னும் பொருட்டாதல், "கானந் தகைப்ப செலவு" (கலி 3 ; 22) என்புழிக் காண்க.

கடனீரும் வற்றும் ஊழிக்காலத்தும் கெடுதலில்லாத ஆனந்தமாகிய நீரானிறைந்த கடல் இறைவனாதலின் 'அழிவிலா ஆனந்தவாரி' என்றார். "பந்தமறுக்கு மானந்த மாக்கடலே" (கோயிற் 9) "ஆனந்த மாக் கடல்" (திருக்கோவை 146) என அடிகள் பிறண்டு அருளியமையும் காண்க.

இறைவன் கேடும் தோற்றமும் இல்லாதவனாதலின் 'அழிவதுமாவதுங் கடந்தாய்' என்றார். "பிறப்போ டிறப்பென்றும் இல்லாதான் காண்" "தோற்றக்கே டில்லாதான் காண்" (நாவு 243 : 5; 277 : 3) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

எல்லாப் பொருள்களிலும் இறைவன் கலந்திருந்தும் அவற்றால் தாக்குண்ணாது அவற்றிற்கும் அப்பாற்பட்டவனாய் நிற்றலின் 'முழுதுமிறந்த' என்றார். "பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளி சேர் விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகி" (திருவெம் 18) எனவும் "பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப், பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனை" (கண்ட 10) எனவும் வருவன காண்க. இறத்தல்-கடத்தல். முதல்வா - முதல்வனே.

மானேர் நோக்கி - மான்பிணையினது வெருவின நோக்கம் போலும் நோக்கினையுடையாள். "மானோக்கினவர்" என்பதற்கு 'மானினது நோக்கம் போலும் நோக்கினையுடையார்' (கலி 30 : 11 உரை) எனவும், "பிணையெழின் மானோக்கின்" என்பதற்கு 'மான்பிணையினது அழகினையுடைய வெருவின நோக்கம் போலும் நோக்கினையும்" (கலி 58 : 2 உரை) எனவும் வருஉம் உரைப்பகுதிகள் ஈண்டறியற்பாலன. மானேர் நோக்கி

என்றது ஈண்டு உமையம்மையாரை. "மானேர் நோக்கி உமையாள்" "மானேர் நோக்கி உமையாள்பங்கா" (சத 55 : 85) என பிறண்டு வருவனவுங் காண்க.

மண ஆளன் - மணாளன் என மருவிற்று. மணாளன் - மணவாளன்; கணவன். "கணவன் கொழுநன் காந்தன் கேள்வன்...மணவாளன் றன்பெயர்" எனப் பிங்கலந்தையில் (5 : 19) வருதலுங் காண்க. "மானேர் நோக்கி மணவாளா" (குழைத்த 4) என அடிகள் அருளியமையுங் காண்க.

அமரர் - அமர; என்னும் வடசொற்றிரிபு. மரணமில்லாதவர் என்பது பொருள். அமரர்க்கும் என நான்கனுருபும் உம்மையும் விரிக்க, மண்ணவர்க்கன்றி அமரர்க்கும் என எச்சவும்மை. தாயே என்றார் தாய் போலிரங்கி அருள்செய்யுந் தன்மைபற்றி,

"தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" சிவபுரா 61.
"தாயே யாகி வளர்த்தனை போற்றி" போற்றி 87.
"தாயிலாகிய இன்னருள் புரிந்த தலைவனை" சத 39.
"தாயான ஈசற்கே" கோத் 12.
"தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்" பூவல் 3.
"பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்பரிந்து" பிடித் 9.

என அடிகள் பிறண்டு அருளியமையும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலன.

பாரிடை ஐந்து - நிலத்தின் சிறப்புக் குணமாகிய நாற்றமும், ஏனை நீர் தீ வளி வெளி என்பவற்றின் சேர்க்கையாற் றோன்றிய பொதுக் குணமாகிய சுவை ஒளி ஊறு ஓசை என்பனவுமாம். பரத்தல் - விரிந்து நிற்றல்.

நீரிடை நான்கு - நீரின் சிறப்புக்குணமாகிய சுவையும், ஏனைத் தீ வளி வெளி என்பவற்றின் சேர்க்கையாற் றோன்றிய பொதுக்குணமாகிய ஒளி ஊறு ஓசை என்பனவுமாம். நிகழ்ந்தல் - விளங்குதல் "வளனற நிகழ்ந்து" (பதிற் 49) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

தீயிடை மூன்று - தீயின் சிறப்புக் குணமாகிய ஒளியும், வளி வெளி என்பவற்றின் சேர்க்கையாற் றோன்றிய பொதுக்குணமாகிய ஊறு ஓசை என்பனவுமாம். திகழ்தல் - விளங்குதல். "அயந்திகழ் நறுங் கொன்றை" (கலி 150 : 1) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

வெளியிடை இரண்டு - காற்றின் சிறப்புக்குணமாகிய ஊறும், ஏனைய விசும்பின் சேர்க்கையாற் றோன்றிய பொதுக்குணமாகிய ஓசையுமாம்.

வெளியிடை ஒன்று - விசும்பின் சிறப்புக்குணமாகிய ஓசை.

"பெண்ணகத் தரையர் காற்றிற் பெருவலி யிருவராகி
மண்ணகத்தைவர் நீரினால்வர் தீயதனில் மூவர்
விண்ணகத் தொருவர் வீழிமிழலையுள் விகிர்தனாரே" 64 : 6.

"மின்னுருவை விண்ணகத்தி லொன்றாய்மிக்கு வீசுங்கா றன்ன
கத்தி லிரண்டாய்ச் செந்தீத், தன்னுருவின் மூன்றாய்த் தாழ்
புனலினுன் காய்த், தரணிதலத்தஞ்சாகி யெஞ்சாத் தஞ்சமன்
னுருவை...வேளூரானைப் போற்றாதே யாற்றநாள் போக்கினேனே"
268 : 5.

"மண்ணதனி லைந்தை மாநீரினுன்கை வயங்கெரியின் மூன்றை
மாருதத் திரண்டை, விண்ணதனி லொன்றை...கற்பகத்தைக்
கண்ணாரக் கண்டேனே" 274 : 3.

எனத் திருநாவுக்கரசர் தேவாரத்து வருவனவுங் காண்க.

நிலத்தில் நாற்றம் முதலிய ஐந்து பண்புகளையும், நீரிடைச் சுவை முதலிய நான்கு பண்புகளையும், தீயிடை ஒளி முதலிய மூன்று பண்புகளையும், வளியிடை ஊறு முதலிய இரண்டு பண்புகளையும், வெளியிடை ஓசை என்னும் ஒரு பண்பினையும் அமைத்தோன் இறைவனாதலின், 'பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய்' "நீரிடை நான்காய் நிகழ்ந்தாய்" தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய்'' ''வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய்' ''வெளியிடை யொன்றாய் விளைந்தாய்'' என்றார்.

அளிபவர் - அன்பினால் மனம் நெகிழ்பவர். அளி - அன்பு. "அளி பவருள்ளத் தானந்தக் கனியே" (திருவிசைப்பா, கோயில் 1) என்புழி யும் இப்பொருட்டாதல் காண்க. அமுதே என்றார் இறைவன் இன்பஞ் செய்தல் பற்றி.

யாவராயினும் அன்பரன்றி யறியொணாமலர்ச் சோதியானாதலின், 'கனவிலுந் தேவர்க் கரியாய்' என்றார். "தேவர் கனவிலுங் கண்டறியாச் செம்மலர்ப் பாதங்கள்" (பொற் 16) என அடிகள் பிறண்டு அருளியமை யுங் காண்க. கனவிலும் என்புழி உம்மை உயர்வு சிறப்பு. 'நனவிலும் நாயேற் கருளினை' என்றார் இறைவன் வெளிப்படப்போந்து அருள் செய்தமையின்.

"கனவேயுந் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவே யனத் தோளியொடும் புகுந்தருளி
நனவே யெனைப்பிடித்தாட் கொண்டவா நயந்துநெஞ்சந்
சினவேற்கண் நீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ" தெள் 10.

என அடிகள் அருளியமை காண்க. நனவிலும் என்ற உம்மை இழிவு சிறப்பு.

145 —156. இடை மருது உறையும் எந்தாய் போற்றி - திருவிடை மருதூரில் எழுந்தருளியிருக்கும் எமது தந்தையே நினக்கு வணக்கம்; சடை இடை கங்கை தரித்தாய் போற்றி - திருச்சடையின்கண்ணே கங்கையினைத் தாங்கினவனே நினக்கு வணக்கம்; ஆரூர் அமர்ந்த அரசே போற்றி - திருவாரூரின்கண்ணே விரும்பி எழுந்தருளியிருக்கும் அரசனே நினக்கு

வணக்கம்; சீர் ஆர் திருவையாறு போற்றி - அழகுபொருந்திய திருவையாற்றில் எழுந்தருளியிருப்பவனே நினக்கு வணக்கம்; அண்ணாமலை எம் அண்ணா போற்றி - திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் எம் அண்ணா நினக்கு வணக்கம்; கண் ஆர் அமுத கடலே போற்றி - அறிவுக்கண்ணால் நுகரப்படும் அமுதக்கடலே நினக்கு வணக்கம்; ஏகம்பத்து உறை எந்தாய் போற்றி - காஞ்சிப்பதியிலே திருவேகம்பத்தில் எழுந்தருளியிருக்கும் எமது தந்தையே நினக்கு வணக்கம்; பாகம் பெண் உரு ஆனாய் போற்றி - இடப்பாகம் பெண்வடிவமானவனே நினக்கு வணக்கம்; பராய்த்துறை மேவிய பரனே போற்றி - திருப்பராய்த்துறையில் எழுந்தருளிய மேலோனே நினக்கு வணக்கம்; சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி - திருச்சிராப் பள்ளியில் எழுந்தருளிய சிவபெருமானே நினக்கு வணக்கம்; மற்றோர் பற்று இங்கு அறியேன் போற்றி - உன்னையொழிய வேறொரு பற்றுக் கோட்டினையும் இவ்விடத்தே அறியேன் பெருமானே நினக்கு வணக்கம்; குற்றாலத்து எம் கூத்தா போற்றி - திருக்குற்றாலத்தில் எழுந்தருளியிருக்கும் எம் கூத்தப்பிரானே நினக்கு வணக்கம்.

இடை மருதுறையும் எந்தை - திருவிடைமருதூரில் எழுந்தருளியிருக்கும் எமது தந்தை. "அந்த இடை மருதில் ஆனந்தத் தேனிருந்த பொந்தை" (பூவல்லி 2) "இடைமருதே யிடங்கொண்ட அம்மானே" (ஏசறு 9) "இடை மருதினி லுறையு மீசனை" (தே. நாவு 129 : 1) என வருவன காண்க. எந்தை - எம்தந்தை. "எந்தை தந்தை" (திவ். திருப் பல் 6) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. 'என் தலைவனே' எனினுமாம்.

பகீரதன் பொருட்டுப் பெருக்கெடுத்துவந்த ஆகாயகங்கையை இறைவன் திருச்சடையில் தாங்கியமையின் 'சடையிடைக் கங்கை தரித்தாய்' என்றார்.

ஆரூர் அமர்ந்த அரசு - திருவாரூரில் விரும்பி எழுந்தருளியிருக்கும் அரசு "ஆறணிவார்சடை யாரூரினிதமர்ந்தான்" (ஞான 105 : 7) 'ஆரூர் மூலட்டானத் தினிதமரும் பெருமானை" (நாவு 247 : 7) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. அமர்தல் - விரும்புதல். "ஆடலமர்ந்தாற் கரிதால்' (பு. வெ. மா. 236) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

சீரார் திருவையாறு - அழகுபொருந்திய திருவையாறு. இதனை,

"மான்பாய வயலருகே மரமேறி மந்திபாய் மடுக்கடோறும்
தேன்பாய மீன்பாயச் செங்கழுமல மொட்டலருந் திருவையாறே"
ஞான 130 : 4

"இஞ்சாய லிளந் தெங்கின் பழம்வீழ விளமேதி யிரிந்தங்கோடிச்
செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல வயல்படியுந் திருவையாறே"
ஞான 130 : 8.

"அன்னமலி பொழில்புடை சூழையாற்று" ஞான 130 : 11.

"மல்லிகை மென்செருந் சோலைத் திருவையாறு" நாவு 39 : 7.

என வந்துள்ள தேவாரப்பகுதிகளாலுமறிக. இது காவிரிக்கரைக்கணுள்ள தென்பது "அழகார் திரைக் காவிரிக்கோட்டத்தையாறு" (தே. சுந் 77 : 4) என்பதனாலுமறியப்படும்.

சீர் என்பதற்குப் புகழ் செல்வம் சீர்மை என்னும் பொருள்களுமமையும். "ஒல்லுதல் காற்றண்டை ஒண்புக ழழகு, செல்வஞ் சீர்மை சீரென்ருகும்" எனப் பிங்கலந்தையில் (பல்பொருட்) வருதலும் காண்க.

அண்ணாமலை திருவண்ணாமலை. இது திருமாலும் பிரமனும் அளவா வண்ணம் இறைவன் அழலாய் நின்றமலை.

"விளவார் கனிபட நூறிய கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை கேடில்புக ழோனும்
அளவா வண மழலாகிய வண்ணாமலை" ஞான 10 : 9.

"மறையினுெடு மாலவன் காணிலா...அண்ணாமலை" நாவு 119 : 10.

எனத் தேவாரத்து வருவன காண்க. அண்ணு என்பதனை அண்ணல் என்பதன் கடைக்குறையாகக் கொண்டு பெருமையிற் சிறந்தோன் எனப் பொருள் கொள்க. "அண்ணாமலை யண்ணல்" (ஞான 10 : 3) "அண்ணாமலையுறையு மண்ணல்" (நாவு 237 : 5) என வருவன காண்க.

அமுதக்கடல் வாயாற் பருகப்படுவதாக, இறைவன் அறிவுக்கண்ணால் அறிந்தனுபவிக்கப்படும் அமுதக்கடலாய் இருத்தலின் 'கண்ணாரமுதக் கடலே' என்ருர். "கண்ணாரமுதமாய் நின்ருன்" (திருவெம் 18) "மாலமுதப் பெருங்கடலே" (சத 26) என வருவனவும் காண்க.

ஏகம்பம் - கச்சித் திருவேகம்பம். ஏகம்பம் - ஏகாம்ரம் என்னும் வட சொற்சிதைவு. ஏக + ஆம்பரம் = ஏகாம்பரம். ஏகம் - ஒன்று; ஆம்ரம் - மாமரம். காஞ்சிபுரத்தில் தலவிருட்சம் மாமரம்.

பாகம் பெண்ணுருவானுய் என்றது இறைவனது அர்த்தநாரீசுரர் வடிவத்தைக் குறித்தது. "பாகம் பெண்ணுருவமானுர்" (நாவு 58 : 7) எனத் தேவாரத்து வருதலுங் காண்க.

பராய்த்துறை - திருப்பராய்த்துறை. இது காவிரிக்கரைக்கணுள்ளது. "பரப்புநீர்வரு காவிரித்தென்கரைத் திருப்பராய்த்துறை" என அப்பரடிகள் (தே. 144 : 1) அருளியமையுங் காண்க. மேவிய - பொருந்திய, எழுந்தருளிய. பரன் - மேலோன்.

சிராப்பள்ளி - திருச்சிராப்பள்ளி. "துறை மல்கு சாரற் சுனைமல்கு நீலத்திடை வைகிச், சிறைமல்கு வண்டுந் தும்பியும் பாடுஞ் சிராப்பள்ளி" (ஞான 98 : 4) என வருதல் காண்க. சிவன் - சிவபெருமான். 'எவ்வுயிர்க்

கும் எப்பொழுதும் நன்மையைச் செய்தலாற் சிவன்' என்னும் திருக்கோவையார் (358 பேர்) உரை ஈண்டறியற்பாலது.

இறைவனையன்றிப் பிறர் எவரையும் பற்றுக்கோடாகக் கருதாமையின் 'மற்றோர் பற்று இங்கு அறியேன்' என்றார். "ஐய நின்னதல்ல தில்லை மற்றோர் பற்று" (சத 73 என அடிகள் பிறண்டு அருளியவாறுங் காண்க. "மற்றொரு பற்றிலை நெஞ்சமே" என ஆளுடையபிள்ளையாரும் (தே. 282 : 6), 'மற்றுப் பற்றெனக்கின்றி நின்றிருப் பாதமே மனம் பாவித்தேன்" என ஆளுடைய நம்பியும் (தே சுந் 48 : 1) அருளியமை காண்க. பற்று - பற்றுக்கோடு. "பரிந்தோம்பிப் பற்றற்றேமென்பர்" (குறள் 88) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

குற்றாலத்துக்கூத்தன் - திருக்குற்றாலத்தில் எழுந்தருளியிருக்குங் கூத்தன். "குற்றாலத்துறை கூத்தன்" "குற்றாலத்தெங்கூத்தனை" "குற்றாலத்தமர்ந்துறையுங் கூத்தன்" (நாவு 9 : 10; 15 : 7; 294 : 3) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

157—160. கோகழி மேவிய கோவே போற்றி - திருவாவடுதுறையில் விரும்பி எழுந்தருளிய அரசனே நினக்கு வணக்கம்; ஈங்கோய்மலை எம் எந்தாய் போற்றி - திருவீங்கோய்மலையில் எழுந்தருளியிருக்கும் எம் எந்தையே நினக்கு வணக்கம்; பாங்கு ஆர் பழனத்து அழகா போற்றி - அழகு நிறைந்த திருப்பழனத்தில் வீற்றிருக்கும் அழகனே நினக்கு வணக்கம்; கடம்பூர் மேவிய விடங்கா போற்றி - திருக்கடம்பூரில் விரும்பி எழுந்தருளியிருக்கும் இயல்பாகத் தோன்றியவரே நினக்கு வணக்கம்.

கோகழி - திருவாவடுதுறை. திருப்பெருந்துறை என்னுமோவெனின், என்னும். என்னை? திருப்பெருந்துறையும் கோகழியும் வேறு வேறு தலங்களாதல்,

> "நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
> எண்ணி யெழுகோகழிக் கரசை" (பண்டாய 5)

என அடிகள் திருவாக்காற் பெறுதுமாகலின்.

ஈங்கோய்மலை - திருவீங்கோய்மலை. இம்மலையைப் பற்றி,

"ஏனத்திரள்வந் திழியுஞ் சாரலீங்கோய் மலை" ஞான 70 : 1.

"ஏலத்தொடு நல்லில வங்கமழு மீங்கோய் மலை" ஞான 70 : 2.

"எழிலார் சுனையும் பொழிலும் புடைசூழ் ஈங்கோய்மலை" 70 : 11.

எனத் தேவாரம் கூறும். எந்தை என்றது இறைவனை, "ஈங்கோய் நீங்கா இறைவனை" ஈங்கோய் நீங்கா துறையும் இறைவன்" (நாவு 268 : 7; 273 : 10) எனத் தேவாரத்து வருவனவும் காண்க.

பாங்கு - அழகு. "ஏரும் வனப்பு மெழிலு...பாங்கு மம்முஞ் சொக்கும்...அழகின் பெயர்" எனப் பிங்கலந்தையில் (7 : 183) வருதல் காண்க.

பழனம் - திருப்பழனம். "படுமாலை வண்டறையும் பழனம்" "பண்ணிலவு பைம்பொழில் சூழ் பழனம்" (நாவு 227 : 1; 232 : 2) என வருதல் காண்க.

கடம்பூர் - திருக்கடம்பூர். "பறையொடு சங்கமியம்பப் பல்கொடிசேர் நெடுமாடம், கறையுடைவேல் வரிக்கண்ணார் கலையொலிசேர் கடம்பூரில்" "பலிகெழு செம்மலர்சாரப் பாடலொ டாடலருத, கலிகெழு வீதிகலந்த கார்வயல்சூழ் கடம்பூரில்" (ஞான 204 : 4; 204 : 7) என வருவன காண்க. விடங்கன் = வி + டங்கன்; டங்கம் - உளி. விடங்கன் உளியினுற் செதுக்கப்படாதவன்; என்றது தானே யுண்டானவன்; சுயம்பு லிங்கம் என்பது கருத்து. "கையார் கழலார் விடங்கா போற்றி" என அப்பரடிகள் (தே 271 : 3) அருளியமையுங் காண்க.

161–170 அடைந்தவர்க்கு அருளும் அப்பா போற்றி - தன்னைச் சார்ந்தவர்க்கு அருள்செய்யும் தந்தையே நினக்கு வணக்கம்; இத்தி தன்னின் கீழ் இருமூவர்க்கு அத்திக்கு அருளிய அரசே போற்றி - இத்திமரத்தின் கீழ்றகீழிருந்து இயக்கியர் அறுவர்க்கும் கடம்பவனத்தில் ஐராவத யானைக்கும் அருள்செய்த அரசனே நினக்கு வணக்கம்; தென் நாடு உடைய சிவனே போற்றி - தெற்கின்கணுள்ள பாண்டி நாட்டினைப் பழமையான பதியாகவுடையவனே நினக்கு வணக்கம்; எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி - தென்னாட்டையுடையையாயினும் எந்நாட்டவர்க்கும் தலைவனே நினக்கு வணக்கம்; ஏன குருளைக்கு அருளினை போற்றி - பன்றிக்குட்டிக்குத் தாய்ப்பன்றியாய்க்கிடந்து அருள் செய்தவனே நினக்கு வணக்கம்; மான கயிலை மலையாய் போற்றி - பெருமைபொருந்திய கயிலைமலையை உறைவிடமாகக் கொண்டவனே நினக்கு வணக்கம்; அருளிட வேண்டும் அம்மான் போற்றி - அருள்செய்ய வேண்டும் அம்மானே நினக்கு வணக்கம்; இருள்கெட அருளும் இறைவா போற்றி - ஆணவ இருள் கெடும்படி அருள் புரியும் தலைவனே நினக்கு வணக்கம்; அடியேன் தமியேன் தளர்ந்தேன் போற்றி - நினக்கு அடியவனாகிய தனியேன் தளர்ச்சியடைந்தேன்; அத்தளர்ச்சியை நீக்கிக் காத்தருள வேண்டும் நினக்கு வணக்கம்.

இறைவன் எல்லாவுயிர்களையும் சார்ந்திருப்பினும் நமக்குச் சார்பாவான் இறைவனன்றிப் பிறரில்லையெனவுணர்ந்து தன்னை வந்தடைந்தவர்களுக்கு அருள்செய்பவனாதலின் 'அடைந்தவர்க்கருளுமப்பா' என்றார்.

இத்தி தன்னின்கீழ் இருமூவர்க்கு அருளிய என்றது இறைவன் பட்டமங்கையென்னும் தலத்தில் இத்திமரத்தின் கீழ் எழுந்தருளியிருந்து இயக்கியர் அறுவர்க்கு அட்டமாசித்திகளை உபதேசித்தருளிய திருவிளையாடலைக் குறித்தது.

"பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்
கட்டமா சித்தி யருளிய அதுவும்" 62 - 3.

எனக் கீர்த்தித்திருவகவலில் வந்தமை காண்க.

அத்திக்கருளிய வரலாறு: முன்னொரு காலத்திலே துர்வாசமுனிவர் காசியிலே ஒரு சிவலிங்கந் தாபித்து பூசைசெய்து தோத்திரம் பண்ணும்பொழுது சிவபிரான் திருமுடியினின்றும் ஒரு தாமரைப்பூ விழ அதனைத் தம்முடைய இரண்டு கைகளாலும் ஏந்திக் கண்ணிலும் சிரசிலும் ஒற்றிக்கொண்டு மகிழ்ச்சிமிகச் சுவர்க்கலோகத்துக்குப் போனார். போகும்பொழுது இந்திரன் அசுரர்களைக் கொன்று அமராவதிக்கு மீள்வானாகி வெள்ளையானை மேற்கொண்டு பவனிவந்தான்; அப்பொழுது தேவர்கள் அருகு வந்து ஒவ்வொரு கையுறைகளைக் கொடுத்து வணங்கினார்கள். துருவாச முனிவரும் தம் கையிலிருந்த தாமரைப்பூவை நீட்ட இந்திரன் அதனை வாங்கி வெள்ளையானையின் மேல் வைத்தான். வெள்ளையானை தாமரைப் பூவைக் கீழே தள்ளிக் காலினால் மிதித்துச் சிந்தியது. துருவாசமுனிவர் அதனைக்கண்டு கோபங்கொண்டு சிவபெருமான் திருமுடியின்மேற் சாத்தப்பட்ட தாமரைப்பூவை வாங்கி யானை மிதித்துச் சிந்தும்படி அதன்மேல் வைத்தாய். இச்சிவத்துரோகத்தினாலே நின் சிரசு பாண்டியன் வளையினாற் சிதறக்கடவது, இவ்வியானை காட்டானையாகக் கடவது என்று சபித்தனர். உடனே தேவர்கள் நடுநடுங்கித் துருவாசமுனிவருடைய திருவடிகளிலே வீழ்ந்து வணங்கி இந்தச் சாபத்தைத் தீர்த்தருளுமாறு இரந்துநிற்ப முனிவருந் திருவுளமிரங்கி இந்திரனுக்குத் தலையளவாக வந்தது முடியளவாகப் போகக்கடவது என்றும், வெள்ளையானை காட்டானையாகி நூறுவருடஞ் சென்றபின் முன்போலாகக் கடவது என்றும் சாபவிடுதி சொன்னார். வெள்ளையானை காட்டானையாகி நூறுவருடமுஞ் செல்லக் கடம்பவனத்தையடைந்து பொற்றாமரை வாவியில் முழுகிச் சொக்கலிங்கப்பெருமானை வழிபட்டு காட்டி யானைவடிவம் நீங்கி வெள்ளை யானையாயிற்று. இதனைத் திருவிளையாடற்புராணம் வெள்ளையானை சாபந்தீர்த்த படத்துட் காண்க.

உமையம்மையார் மலையத்துவச பாண்டியனுக்கு மகளாகத் தடாதகைப்பிராட்டியார் என்னும் திருநாமத்தோடு தோன்றி அரசாண்ட பாண்டி நாட்டிலே இறைவன் சோமசுந்தர பாண்டியனாகத் தோன்றித் தடாதகைப் பிராட்டியாரைத் திருமணஞ் செய்து அரசாண்டமையாலும், குமரக்கடவுள் உக்கிரபாண்டியராக அவர்கள்பாற் றோன்றி அரசாண்டமையாலும், தெற்கின்கணுள்ள பாண்டி நாட்டிலே சிவவழிபாடு மிகுதியாக இருந்தமையாலும், "முளைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி... தென்கூடற்றிருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப்பெற்றேனானே" (233 : 1) என அப்பரடிகள் அருளிச் செய்தவாறு சிவலிங்கத் திருமேனிகளுள் மதுரைச் சொக்கநாதர் திருமேனி மிகப் பழமையுடைமையாலும் 'தென்னாடுடைய சிவனே' என்றார். "தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானை" (அம் 10) "மருவித் திகழ்தென்னன்" (தெள் 15) "என்னை யாண்டு கொண்ட பாண்டிப்பிரான்" (பூவல்லி 2) 'வானந் தொழுந்தென்னன்' (தோணோ 8) "பாண்டிநன் னாடரா லன்னே யென்னும்"

(அனைப் 5) என்பவற்றில் இறைவன் சுந்தரபாண்டியராக வீற்றிருந்தமை கூறப்படுதல் காண்க.

இறைவன் தென்னாடுடையனாயினும், மற்றெங்நாட்டவர் எத்தெய்வப் பெயரான் வழிபடினும் அத்தெய்வமாய் நின்று அருள் செய்பவன் அவ் விறைவனே யாதலின் 'எந்நாட்டவர்க்கும் இறைவா' என்றார். இதனை;

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும் பிறக்கும்மேல் வினையுஞ் செய்யும் [செய் 25.
ஆதலான் இவையி லாதான் அறிந்தருள்செய்வ னன்றே" சூத் 2.

என்னும் சிவஞானசித்தியார் திருவிருத்தத்தானுமறிக.

ஏனம் - பன்றி, திவாகரம். (விலங்கின்) குருளை என்பது விலங்கின் பிள்ளைப் பெயர். "குருளையுங் குட்டியும் பறழும் பார்ப்பும் பிள்ளையு மறியும் கன்றுங் குழவியும் பெறுமே விலங்கின் பிள்ளைப்பெயரே" எனத் திவாகரத்து வருதல் காண்க. பன்றிக்குட்டிகளுக்குக் குருளை என்னும் பெயர் உரித்தாதல், "நாயே பன்றி புலிமுயல் நான்கும், ஆயுங் காலை குருளை என்ப" என்னும் தொல்காப்பியத்தால் (மரபு 8) அறிக.

ஏனக்குருளைக்கு அருளிய வரலாறு: வைகை யாற்றுக்குத் தெற்கே குருவிருந்ததுறை என்னும் ஊரிலே பிருகற்பதி இருந்து தவஞ்செய்தார். அவ்வூரில் சுகலன் என்னும் பெயரையுடைய வேளாளன் ஒருவன் இருந் தான். அவன் மனைவி பெயர் சுகலை. அவள் பன்னிரண்டு புதல்வர்களைப் பெற்றாள். அப்புதல்வர்கள் தாய்தந்தையர்கள் இறந்த பின் வேடரோடு கூடிக் காட்டிலே வேட்டையாடித் திரிந்தார்கள். ஒருநாள் அக்காட்டிலே தவஞ்செய்து கொண்டிருந்த பிருகற்பதியைக் கண்டு அவர் தவத்திற்கு இடையூறு செய்தார்கள். பிருகற்பதி அப்பிள்ளைகளைக் கோபித்து நீங்கள் பன்றிக் குட்டிகளாகப் பிறந்து தாய்தந்தையர்களை இழந்து வருந்தக் கடவீர்கள் என்று சபித்தார். உடனே அவர்கள் பயந்து இச்சாபம் எப் போது நீங்கும் என்றார்கள். பிருகற்பதி கோபந்தணிந்து சோமசுந்தரக் கடவுள் உங்களுக்குத் தாயாய் முலைதந்து உங்களைக் காத்துப் பாண்டிய னுக்கு மந்திரிகளாக்கிப் பின் முத்தி தந்தருளுவார் என்றார். பின்பு பிருகற் பதியின் சாபவழியே அப்பன்னிருமைந்தரும் ஒரு பன்றி வயிற்றிற் குருளைகளாகப் பிறந்திருக்குநாளில் தாய்ப்பன்றி பாண்டியன் வேட்டை யில் அகப்பட்டு இறக்கப் பன்றிக்குட்டிகள் பசியால் வருந்தலுற்றன. இறைவன் அப்பன்றிக் குட்டிகளின் மீது திருவுளமிரங்கித் தாய்ப்பன்றி யின் வடிவிற் சென்று முலைப்பால்கொடுத்து அருள்புரிந்தனன் எனத் திரு விளையாடற்புராணம் கூறும். இறைவன் ஏனக்குருளைக்கருள்செய் தமை,

"கோல மேனி வராகமே" (திருக்கழுக் 5)

"காட்டில், ஏவுண்ட பன்றிக் கிரங்கி யீசன் எந்தை பெருந்துறை யாதி அன்று, கேவலங் கேழலாய்ப் பால்கொடுத்த கிடப்பறி வாரெம் பிரானாவாரே" திருவார்த் 6.

"தாயாய் முலையைத் தருவானே" ஆனந்த 5.

என வருவனவற்றாலும் அறியப்படும்.

மானம் - பெருமை. "புகழும் மானமு மெடுத்து வற்புறுத்தலும்" (தொல் அகத் 41 : 14) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. இறைவன் கைலைமலையை உறைவிடமாகக் கொண்டமையின் 'கயிலை மலையாய்' என்றார். "ஒளிதரு கயிலை யுயர்கிழ வோனே" (கீர்த் 146) "கயிலைப் பரம்பரனே" (நீத் 34) "கயிலை மாமலை மேவிய கடலே" (செத் 10) என வருவன காண்க.

அருளிட வேண்டும் - அருள்செய்ய வேண்டும் "எங்கள் வாழ்வே வாவென் றருளாயே" (கோயில்மூத் 7) என அடிகள் பிறாண்டும் அருளியமை காண்க.

இருள்கெட அருளும் இறைவா என்றது அநாதிபந்தமாகிய ஆணவ மலவிருள் கெடும்படி அருள்புரியும் தலைவனே என்றவாறு. "பந்த மாகிய மலவிரு ளகற்றும் பரிதி யாயுள பல்லுயிர்க் குயிராய்" எனத் திருவாத வூரடிகள் புராணத்து (திருப்பெருந் 68) வருதல் காண்க. அடியேன் தமியேன் தளர்ந்தேன் எனக் கூட்டிப் பொருளுரைக்க.

171—86. களம் கொள கருத அருளாய் போற்றி - அடியேன் ஒரு நிலையான இடத்தைப் பெறவும் நின்னையே கருதவும் அருள்செய்வாயாக நினக்கு வணக்கம்; இங்கு அஞ்சேல் என்று அருளாய் போற்றி - இவ்வுலகத்தில் அஞ்சற்க என்று அருள் செய்வாயாக நினக்கு வணக்கம்; நஞ்சே அமுதமாய் நயந்தாய் போற்றி - பாடற்கடலிற் றோன்றிய நஞ்சினை அமுதமாக விரும்பி உண்டவனே நினக்கு வணக்கம்; அத்தா போற்றி - தந்தையே நினக்கு வணக்கம்; ஐயா போற்றி - வழிபாட்டிற்கு உரியவனே நினக்கு வணக்கம்; நித்தா போற்றி - என்றுமுள்ளவனே நினக்கு வணக்கம்; நிமலா போற்றி - மலமில்லாதவனே நினக்கு வணக்கம்; பத்தா போற்றி - என் உயிர் நாயகனே நினக்கு வணக்கம்; பவனே போற்றி - எவ்வுயிர்களுக்கும் பிறப்பிடமானவனே நினக்கு வணக்கம்; பெரியாய் போற்றி - பெரியவற்றிற்கெல்லாம் பெரியவனே நினக்கு வணக்கம்; பிரானே போற்றி - எப்பொருட்கும் தலைவனே நினக்கு வணக்கம்; அரியாய் போற்றி - யாவராயினும் அன்பரன்றி அறிதற்கரியவனே நினக்கு வணக்கம்; அமலா போற்றி - இயல்பாகவே பாசங்களினீங்கினவனே நினக்கு வணக்கம்; மறையோர் கோல நெறியே போற்றி - அந்தணர் வடிவுகொண்டு எழுந்தருளிவந்து பொய்தீர் ஒழுக்க நெறியினை அருளினவனே நினக்கு வணக்கம்; முதல்வா முறையோ தரியேன் போற்றி - முதல்வனே நின்னைப்

பிரிந்தமை முறையாகுமோ? அப்பிரிவை யான் ஆற்றமாட்டேன்; ஆற்று மாறு அருளுதி, நினக்கு வணக்கம்; உறவே போற்றி - எனக்கு உயிர்ச் சுற்றமானவனே நினக்கு வணக்கம்; உயிரே போற்றி - என் உயிர்க்கு உயிரே நினக்கு வணக்கம்; சிறவே போற்றி - சிறப்புடைப் பொருளே நினக்கு வணக்கம்; சிவமே போற்றி - மங்களப் பொருளே நினக்கு வணக் கம்; மஞ்சா போற்றி - எல்லாம் வல்லவனே நினக்கு வணக்கம்; மணாளா போற்றி - நாயகனே நினக்கு வணக்கம்; பஞ்சு ஏர் அடியாள் பங்கா போற்றி - செம்பஞ்சு ஊட்டிய அழகிய திருவடிகளையுடைய உமையம் மையை இடப்பாகத்திலுடையவனே நினக்கு வணக்கம்; நாயேன் அடி யேன் அலந்தேன் போற்றி - கீழ்மையையுடைய அடியேன் நின்னைப் பிரிந்து துன்பமுற்றேன்; அத்துன்பத்தை நீக்கி அருள்புரிய வேண்டும்; நினக்கு வணக்கம்; இலங்கு சுடர் எம் ஈசா போற்றி - விளங்குகின்ற ஒளியினையுடைய எம்மை உடையவனே, நினக்கு வணக்கம்.

களம்கொள என்றது சிவன்முத்தநிலையை அடைய என்றவாறு. வீடு பேற்றினை அடைய எனினுமாம். சிவன் முத்த நிலையை அடைந்தவரே இடைவிடாத தியானப்பயனாகிய சிவானுபவத்தைப் பெறுவர். இந்நிலை யினைப் பெறவும் தியானித்து அனுபவிக்கவும் அருள் செய்யவேண்டும் என்பார் 'களங்கொளக் கருத அருளாய்' என்றார்.

இங்கு என்றது இவ்வுலக வாதனைகளை. மலம் நீங்கப்பெற்றவர்களும் இவ்வுலகில் உறுங்கால் வாசனாமலத்தால் தாக்குண்டு வருந்துவர். ஆத லின் 'அஞ்சேலென்றருளாய்' என்றார்.

"மலமகல் பவரும் புவிமீதே மானிட வடிவந் தனையெய்திச்
சிலபக லெனினும் பயில்காலைச் சேர்தரு மலவா தனையென்றே"

எனவும், திருவாத. திருவம் 20

"அஞ்சே லென்றருளவேண்டு மாவடு துறையுளானே"

நாவு 5: 17

எனவும் வருவன காண்க.

நஞ்சு என்றது பாற்கடலின்கண் எழுந்த நஞ்சை. இறைவன் அதனை விரும்பி உண்டமையின் 'நஞ்சே அமுதாய் நயந்தாய்' என்றார். "நஞ்ச முதா வருந்தினனே" (நீத் 18) "வானவர் தொழத் துற்பெரிய நஞ்சமுத மாகமு னயின்றவர்" (தே. ஞான 336 : 2) "நஞ்சம் ஆரமுதாக நயந்து கொண்டு" (தே. நாவு 186 . 4, என வருவன காண்க. நஞ்சை அமுத மாக நயந்தமை இறைவனது பேரருட் டன்மையைக் காட்டுவதாகும். "உண்பரிய நஞ்சதனை யுண்டுலகமுய்ய வருளுத்தமன்" (ஞான 335 : 7) "விடமுண்டு அருள்செய் சடையன்" (சுந் 93 : 7) எனத் தேவாரத்தும் வருவன காண்க.

22

"செற்றுல முயிரனைத்தும் உண்டிடவே நிமிர்ந்தெழலுஞ் சிந்தை மேற்கொள், பற்றுலங் கதுநுகர்ந்து நான்முகனே முதலோர்தம் பாவைமார்கள், பொற்றாலி தனையளித்தோன்" (குற்றாலப் 1)

என்னும் கந்தபுராணமும் இதனை வலியுறுத்தும்.

அமுதாக என்பது அமுதா எனக் குறைந்து நின்றது. நயத்தல் - விரும்புதல். "புலம்பிரிந் துறையுஞ் செலவுநீ நயந்தனை யாயின்" (முருகு 63-4) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அத்தா - தந்தையே. ஐயன் - வழிபாட்டிற்குரியவன்.

நித்தன் - என்றுமுள்ளவன். "என்றும் ஒருபடித்தாயிருப்போன்" ஞானமிர் 55 : 16 பழையவுரை. "நித்தனே அடையார் புரமெரித்த சிலையனே" (செத் 3) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க.

நிமலா போற்றி - மலமற்றவனே வணக்கம். "நிமலா போற்றி யென்று நின்றேத்த, இரக்கம் புரிந்தார்" என ஆளுடையபிள்ளையார் அருளியமையுங் காண்க. (தே. ஞான 70 : 8)

பத்தா என்பது பர்த்தா என்னும் வடசொற்றிரிபு. தலைவன்; கணவன் என்பது பொருள். "பத்தா துணைவன் றலைவன் மணவாளன் றன்பெயர்" என்பது பிங்கலந்தை (5 : 191). இறைவனைப் பத்தா என்றல் "பத்தா பத்தர்க்களுக்கருள் செய்யும் பரம்பரனே" "பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா" என்னும் சுந்தரர் தேவாரத்தும் (25 - 3; 52 : 1) காண்க.

பவன் - எல்லா உலகங்களும் உயிர்களும் தோன்றுதற்கு இடமானவன். பவம் - தோற்றம்; பிறப்பு. "பவத்திற மறுகெனப் பாவை நோற்றனளென்" (மணி 30 : 264) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. தோற்றுதற் இடமானவன் எனினும் தோற்றுதற்கு நிமித்தகாரணன் என்பது பொருள். "பவனெம் பிரான் பனிமாமதிக் கண்ணி" (சத 9) என அடிகள் பிறாண்டு கூறுதலுங் காண்க. "நமோ பவாயருத்ராயச நம; என எசுர்வேதத்திடையிலுள்ள சதருத்ரியத்தில் வருதலும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலது.

பிரான் - எப்பொருட்குமிறைவன். "தலைவன் மன்னவன் பிரானே கொழுநன்...உரைசெ யெப்பொருட்கும் இறைவன் மேற்றே" என்பது திவாகரம்.

அரியாய் என்றார் இறைவன் அன்பரல்லார்க்குக் காண்டற்கரியனாதலின். "யாவராயினு மன்பரன்றி யறியொணா மலர்ச்சோதியான்" (சென்னிப் 1) "யாவரு மறிவரியா யெமக்கெளியாய்" (பள்ளி 3) "தன்னை யாவரும் அறிவதற் கரியவன் எளியவன் அடியார்க்கு" (அறி ய 3) என வருவன காண்க.

அமலன்-மலமற்றன். 'நிர்மலனுயிருப்போன்' ஞானமிர் 55 : 8 பழைய வுரை. அ எதிர்மறைப்பொருளுணர்த்தியது. "அலைசேர் புனலன் அனலன் அமலன்" (ஞான 158. 6) "அண்டமுதல்வன் அமலன்" (சுந் 94 : 2) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

மறையோர் கோலநெறியென்றது இறைவன் அந்தணப் பரமாசாரியனாய் எழுந்தருளிவந்து உபதேசித்த பொய்தீ ரொழுக்க நெறியினை. "மறையோர் கோலங் காட்டி யருளலும்" எனத் திருவண்டப்பகுதியில் (140) வந்தமையுங் காண்க. கோலம்-வடிவு "மாலுங்காட்டி வழிகாட்டி வாரா வுலக நெறியேறக் கோலங்காட்டி யாண்டானை" (ஆனந்த 3) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

முறையோ தரியேன் முதல்வா என்பதனை முதல்வா முறையோ தரியேன் என மாற்றிக்கூட்டி முதல்வனே நீ என்னைப் பிரிந்தமை முறைமையாகுமோ? அப்பிரிவினை யான் ஆற்றமாட்டேன். ஆற்றுமாறு அருளுதி எனப் பொருள்கொள்க. ஆற்றுமாறு அருளுதி என்பது அவாய்நிலையான் வருவிக்கப்பட்டது.

"அரத்த மேனியாய் அருள்செய் அன்பரும்
நீயும் அங்கெழுந் தருளி இங்கெனை
இருத்தினாய் முறையோ" சத 93.

"முத்தனை யானே மணியனை யானே
முதல்வனே முறையோவென்
றெத்தனை யானும் யான்றொடர்ந் துன்னை
இனிப்பிரிந் தாற்றேனே" எண்ணப் 4.

என வருவன காண்க.

உறவே-சுற்றமே. "உருவே யென்னுறவே" (நாவு 261 : 1) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. உயிரே-உயிர்க்குயிரே. "உலகுக்குயிரானாய்" (பள்ளி 9) 'எல்லா உயிர்கட்கும் உயிரே" (கோயிற் 4) என அடிகளும், "உரைசேரு மெண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனி பேத, நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா யங்கங்கே நின்றான்" (132 : 4) என ஆளுடையபிள்ளையாரும் அருளியமை காண்க.

சிறவு-சிறப்பு. "சிறவே செய்து வழிவந்து சிவனே நின்தாள் சேர்ந்தாரே" எனத் திருச்சதகத்து (86) வருதலுங் காண்க. இறைவனின் மிக்க சிறப்புடைய பொருள் பிறிதின்மையின் 'சிறவே' என்றார். "சிறப்பென்னும் செம்பொருள்" எனத் திருவள்ளுவரும் அருளியமை காண்க.

சிவம்-செம்பொருள். 'செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே செல்வமே சிவபெருமானே" (பிடித்த 1) என அடிகள் அருளியமையுங் காண்க.

மஞ்சன் என்பது மைந்தன் என்பதன் மரூஉ. மைந்தன்-வலியோன். மைந்து-வலி. "மைந்து பொருளாக வந்த வேந்தனை" (தொல். புறத்)

என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. இறைவன் சர்வவல்லமை யுடையனுதலின் 'மஞ்சா' என்ருர். "மஞ்சனே மணியு மாஞய் மரகதத் திரளுமாஞய்" (நாவு 57 : 1) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. மஞ்சனே போற்றி என்பதற்கு 'அழகனே வணக்கம்' என்றும், 'மழையே போற்றி' என்றும் உரைப்பாருமுளர்.

மணாளா போற்றி-மணவாளனே போற்றி. "வள்ளலே போற்றி மணாளா போற்றி" (246 : 8) என அப்பரடிகள் அருளியமையுங் காண்க. மணாளா என்பதற்கு உமையம்மையின் மணாளா எனவும் உரைக்கலாம். "மலையான் மடந்தை மணவாளா போற்றி" (நாவு 246 : 3) எனத் தேவாரத்து வருதலுங் காண்க.

பஞ்சேர் அடியாள் என்றது உமையம்மையை. பஞ்சு என்றது செம் பஞ்சுக்குழம்பை. "பஞ்சுதோய் மெல்லடிப் பாவையா ளொடும்" (ஞான 274 : 6) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. ஏர்-அழகு. "ஏரணி யணியி னிளையரு மினியரும்" என்னும் பரிபாடலினும் (6 : 27) இப் பொருட்டாதல் காண்க. 'பஞ்சேர் அடியாள் பங்கா' என்ருர் இறைவன் உமையம்மையை ஒரு கூற்றிலுடைமையின், "பஞ்சுலாவிய மெல்லடிப் பார்ப்பதி பாகனை" (தே 241 : 9) என ஆளுடையபிள்ளையாரும், "பஞ் சுண்ட மெல்லடியாள் பங்கன் றன்னை" (தே. 288 : 2) என ஆளுடைய யரசும் அருளியமை காண்க.

அலந்தேன் நாயேன் அடியேன் என்பதனை, நாயேன் அடியேன் அலந் தேன் என மாற்றிக்கூட்டிப் பொருளுரைக்க. நாயேன் அடியேன் - கீழ் மையையுடைய அடியேன். "நாயடியேன்" (சத 13, 16 கண்ட 3) "நாயடியேற்கு" (ஊசல் 1) எனப் பிறுண்டும் அடிகள் அருளியமை காண்க. அலந்தேன்-நின்னைப் பிரிந்து துன்பமுற்றேன்; அத்துன்பத்தை நீக்க அருள்செய்ய வேண்டும் எனச் சில சொற்கள் அவாய் நிலையான் வருவித்துரைக்க. "முறையோ தரியேன் முதல்வா போற்றி" (போற் 180) என்ற இடத்துப் பொருளை ஈண்டும் கூறியது ஆற்ருமை மிகுதிபற்றிய தாகலின் புனருத்தியாகாது. அலத்தல்-துன்புறுதல். "அலப்பென் ருேழி யவ ரகன்ற ஞான்றே" (குறுந் 41) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

இலங்குசுடர் ஈசா-விளங்காநின்ற ஒளியையுடைய ஈசா. "தோற் றச் சுடரொளியாய்" (சிவபுரா 80) "தூயமேனிச் சுடர்விடு சோதி" (கீர்த் 112) "விரிந்தே யெரியுஞ் சுடரனையாய்" (நீத் 38) "தூண்டா விளக்கின் சுடரனையாய்" (பிரார்த் 4) என அடிகள் பிறுண்டு அருளி யமையுங் காண்க. இலங்குதல்-விளங்குதல். "இலங்குவெள் ளருவியொடு" (மதுரைக் 299) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

187—196. கவைத்தலை மேவிய கண்ணே போற்றி—கவைத்தலை என் னும் தலத்தில் விரும்பி எழுந்தருளிய கண்போற் சிறந்தவனே நினக்கு

வணக்கம்; குவைப்பதி மலிந்த கோவே போற்றி-குவைப்பதி என்னும் தலத்தில் மகிழ்ச்சிமிகுந்து எழுந்தருளியிருந்த தலைவனே நினக்கு வணக்கம்; மலைநாடு உடைய மன்னே போற்றி-மலைநாட்டினையுடைய மன்னனே நினக்கு வணக்கம்; கலை ஆர் அரிகேசரியாய் போற்றி-கலைஞர்கள் நிறைந்த அரிகேசரி என்னும் தலத்தையுடையவனே நினக்கு வணக்கம்; திருக்கழுக்குன்றில் செல்வா போற்றி-திருக்கழுக்குன்றில் எழுந்தருளியிருக்கும் செல்வனே நினக்கு வணக்கம்; பொருப்பு அமர் பூவணத்து அரனே போற்றி-மலைகள் பொருந்திய திருப்பூவணத்தில் எழுந்தருளிய சிவபெருமானே நினக்கு வணக்கம்; அருவமும் உருவமும் ஆனாய் போற்றி-அருவமும் உருவமும் ஆனவனே நினக்கு வணக்கம்; மருவி கருணை மலையே போற்றி-இயல்பாகப் பொருந்திய திருவருளை மலைபாகவுடையவனே நினக்கு வணக்கம்; துரியமும் கடந்த சுடரே போற்றி—நான்காம் நிலையையுங் கடந்த ஒளிவடிவினனே நினக்கு வணக்கம்; தெரிவு அரிதாகிய தெளிவே போற்றி-பருப்பொருளறிவாலும் நுண்பொருளறிவாலும் அறிதற்கரிதாகிய அருளால் தெரியப்படும் பொருளே நினக்கு வணக்கம்

கவைத்தலை, குவைப்பதி என்பன சிவதலங்கள். மேவிய என்றார் கவைத்தலை என்னும் தலத்தில் இறைவன் திருக்கோயில் கொண்டெழுந்தருளியமையின். கண்ணே என்றார் இறைவன் கண்போற் சிறந்தவனாதலின். "கருவேயென் கற்பகமே கண்ணே" "நெடிய விசும்பொடு கண்ணே போற்றி" (தே. 261 : 1; 269 : 10) என அப்பரடிகள் அருளியமையுங் காண்க.

மலிதல்-மிகுதல். "பூமலி வையை வருபுனல்" (கலி 90 : 10-11) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. கோவே போற்றி - தலைவனே வணக்கம். "குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி" என அப்பரடிகள் (தே. 246 : 7) அருளியமையுங் காண்க. மலைநாடு என்றது சேரநாட்டினை "வேழமுடைத்து மலைநாடு" (தனிப்பாடல்) என வருதலுங் காண்க.

அரிகேசரி-ஒரு சிவதலம். கலைஞர்கள் ஆண்டு மிக்கிருந்தமையின் 'கலையார் அரிகேசரியாய்' என்றார். 'கலையார் அரிகேசரியாய்' என்பதற்கு ஆடையாக உடுத்திய சிங்கத்தோலுடையவனே என்பாருமுளர். இறைவன் திருக்கோயில் கொண்டெழுந்தருளி அடியார்க் கருள்புரிந்த தலங்களைக் 'கவைத்தலை மேவிய கண்ணே' 'குவைப்பதி மலிந்த கோவே' 'மலைநாடுடைய மன்னே' 'திருக்கழுக்குன்றிற் செல்வா' 'பொருப்பமர் பூவணத் தரனே' என அடிகள் கூறுகின்றாராதலின் அவற்றிடையே போந்த 'அரிகேசரி' என்பதும் ஒரு சிவதலம் என்று துணியப்படும்

திருக்கழுக்குன்றம் இறைவனுறையும் தலமாதலின் 'திருக்கழுக்குன்றிற் செல்வா' என்றார். "கண்ணுகலான் காதல்செய் கோயில் கழுக்குன்றை" (ஞான 103 : 11) "கழைபாடு கழுக்குன்றமமர்ந்தான் கண்டாய்" (நாவு 295 : 5) "நட்டமாடி நவிலும்மிடம...கழுக்குன்றமே" (சுந் 81 : 7)

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. 'செல்வா' என்றார். இறைவன் ஞானச்செல்வனாதலின். "தேனார் பொழில்சூழ் மறைக்காட்டுறை செல்வா" (தே. ஞான 173 : 5) என வருதலுங் காண்க.

பூவணம் - பாண்டி நாட்டிலுள்ள திருப்பூவணம் என்னும் தலம். "பாரார் வையைப் புனல்வாய்ப் பரப்பிப் பன்மணி பொன்கொழித்துச், சீரார் வாரி சேர நின்ற தென்றிருப் பூவணமே" "செடியார் வையை சூழ நின்ற தென்றிருப் பூவணமே" (தே. ஞான 64 : 3; 64 : 4) என வருவன காண்க. மலைகள் பொருந்திய பூவணமாதலின் 'பொருப்பமர் பூவணம்' என்றார். "பொறைமல்கு பொழிலணி பூவணத்து" (ஞான 278 : 7) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. பூவணத்தரன்-பூவணத்தில் எழுந்தருளியிருக்கும் அரன். "பூவணத்துறை ஈசனே" (ஞான 278 : 5) "புண்ணியனுறுறை பூவணம்" (சுந் 11 : 2) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

அருவமாய் நிற்கும் இறைவன் உயிர்களுக்கு அருள் செய்யவேண்டி உருவமாயுமிருத்தலின் 'அருவமு முருவமு மானாய்' என்றார். "ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்" (தே. 232 : 11) என அப்பரடிகள் அருளியவாறுங் காண்க. அருவமும் உருவமும் கூறவே அருவுருவமும் கொள்ளப்படும். இறைவற்கு இம்மூன்றும் வடிவமேயாம் என்பது,

"அருவமோ உருவா ரூபம் ஆனதோ அன்றி நின்ற
உருவமோ உரைக்கும் கர்த்தா வடிவெனக் குணர்த்திங் கென்னின்
அருவமும் உருவா ரூபம் ஆனதுமன்றி நின்ற
உருவமும் மூன்றும் சொன்ன ஒருவனுக் குள்ள வாமே" சூத் 1 செய் 39

எனச் சிவஞானசித்தியாரில் வருதலானுமறிக.

*சாக்கிரம் சொற்பனம், சுழுப்தி துரியம் துரியாதீதம் என்னும் அவத்தைகளுள் துரியாதீத அவத்தைக்கண் நிற்கும் உயிர். தனக்கே தோன்றாது அருள்வழி நின்றுணரும் ஒளிவடிவினன் இறைவனாதலின் 'துரியமு மிறந்த சுடரே' என்றார்.

---

*பிருகுடி நாப்பண்-ஆன்மாவானவன் புருவமத்தியிலே நின்றபோது, ஆன்ற சாக்கிரம்-விசாலமுடைத்தாகிய சாக்கிராவத்தை என்றும், ஒரு பெருங் கந்தரம் சொற்பனம்-ஒப்பில்லாத பெரிய கழுத்தடியிலே நின்றபோது சொப்பனவத்தையென்றும், மருமத் தாதி சுழுத்தி-நெஞ்சடியிலே நின்ற போது சுழுத்தியவத்தையென்றும், வலஞ்சுழி யுந்தி யும்பர் ஒருநால் கங்குலி துரியம்-வலமாய்ச் சுழித்திருக்கின்ற நாபித்தானத்துக்கு மேலே மேலே நாலங்குலமும் கீழே நாலங்குலமுமாக எட்டங்குலத்து நின்ற போது துரியாவத்தையென்றுஞ் சொல்லப்படும், ஞானாமிர் 16 ; 9-12 உரை.

"துரியமு மிறந்த தூயோன்" 54 : 20

என ஞானாமிர்தத்தும்,

"துரியங் கடந்த துரியா தீதத்தே
அரிய வியோமங்கொண் டம்பலத் தாடும்
பெரிய பிரானை" 2454.

எனத் திருமந்திரத்தும் வருவன காண்க. 'துரியமும்-நின்மல துரியாவத்தைக்கும்' என்பது ஞானாமிர்தம் பழையவுரை (54 : 20 உரை). துரியமும் என்புழி உம்மை உயர்வு சிறப்பு.

இறைவன் காட்சி கருதல் நூல்முதலிய அளவைகளால் அறியப்படாது அவனது திருவடிஞானம் ஒன்றனானே தெளியப்படுதலின் 'தெரிவரிதாகிய தெளிவே' என்றார்.

"பாசஞா னத்தாலும் பசுஞானத் தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத் தாலே
நேசமொடும் உள்ளத்தே நாடி" (9ம் சூத்)

எனச் சிவஞானசித்தியாரில் வருதலுங் காண்க.

197—206. தோளா முத்த சுடரே போற்றி-துளையிடப்படாத முத்தின் ஒளியாயுள்ளவனே நினக்கு வணக்கம்; ஆளானவர்க்கு அன்பா போற்றி-ஆட்பட்டவர்க்கு அவர்செய்யும் அன்புமயமாய் அருள்செய்பவனே நினக்கு வணக்கம்; ஆரா அமுதே அருளே போற்றி-தெவிட்டாத அமுதத்தை ஒப்பவனே அருளையுடையவனே நினக்கு வணக்கம்; ஆயிரம் பேர் உடை பெம்மான் போற்றி-ஆயிரம் திருப்பெயர்களையுடைய பெருமானே நினக்கு வணக்கம்; தாளி அறுகின் தாராய் போற்றி-தாளியறுகினாலாகிய மாலையினை மார்பில் அணிந்தவனே நினக்கு வணக்கம்; நீள் ஒளியாகிய நிருத்தா போற்றி-திருமாலும் பிரமனும் அடியும் முடியும் காணவொண்ணாது நீண்ட ஒளியுருவாய்த் தோன்றிய கூத்தனே நினக்கு வணக்கம்; சந்தன சாந்தின் சுந்தர போற்றி-திருமேனியிற் சாத்தப்பட்ட சந்தனக்கலவையின் அழகினையுடையவனே நினக்கு வணக்கம். சிந்தனைக்கு அரிய சிவமே போற்றி-நினைத்தற்கு அரிதாகிய சிவமே நினக்கு வணக்கம்; மந்திர மாமலை மேயாய் போற்றி - மறைமொழிகளை வெளிப்படுத்தற்கிடமான பெரிய மகேந்திர மலையிற் பொருந்தினவனே நினக்கு வணக்கம். எம் தமை உய்ய கொள்வாய் போற்றி- அடியோமைப் பிழைக்குமாறு அடிமைகொள்வோனே நினக்கு வணக்கம்.

தோளாமுத்து-துளையிடப்படாதமுத்து. 'தோளாமணி – துளையிடாத மாணிக்கம்' என நச்சினார்க்கினியர் உரைத்தமையுங் காண்க. (சீவக 3037 உரை). சுடர்-ஒளி. முத்தின் ஒளியினை இறைவனது தண்ணிய ஒளிக்கு உவமை கூறினார். "சுடர்பொற் குன்றைத் தோளா முத்தை" (புணர்ச் 1) "தோளாமுத்தொப்பானை" (தே. நாவு 280. 1) எனப் பிறாண்டு வருவனவுங் காண்க.

"முதல்வன் வகுத்த மதலை மாடத்
திடவரை யூன்றிய கடவுட் பாண்டிற்
பள்ளிச் செம்புய லுள்விழு துறீஇப்
புத்தே ணிவந்த முத்த மாச்சுடர்" (11ந் திருமுறை)

என இளம்பெருமானடிகள் அருளியமையுங் காண்க.

ஆரா-அமையாத; தெவிட்டாத. உண்டு தெவிட்டும் அமுதினை விலக்குதற்கு 'ஆரா வமுதே' என்றார். "ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே" (சிவபுரா 67) "ஆரா வமுதாய் அலைகடல்வாய் மீன் விசிறும் பேராசை வாரியனை" (அம் 2) "ஆராவமுதே யாசைப்பட்டேன்" (ஆசைப் 7) என அடிகள் அருளியமையுங் காண்க.

இறைவனுக்கு *ஆயிரத்தெட்டுத் திருநாமங்கள் வழிபாட்டு நூல்களிற் கூறப்பட்டிருக்கவும், 'பேராயிரமுடைய' என்றது 'சகஸ்திரநாமம்' என்னும் வடநூல் வழக்குப்பற்றியாகும். "பேராயிரம் பரவித் திரிந்து" (ஆசைப் 7) "ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலாற் காயிரந் திருநாமம் பாடி" (தெள் 1) என அடிகள் பிறண்டும் அருளியமை காண்க.

"பேராயிரமும் பிதற்றத் தீரும் பிணிதானே" ஞான 2
"பேராயிரமுடைய பெம்மான் றன்னை" நாவு 236 : 1
"பேராயிரமுடையா யென்றேனானே" நாவு 251 : 1
"பேராயிரம் பரவி வானோ ரேத்தும் பெம்மானை" நாவு 268 : 8
"பேராயிரங்களேத்தும் பெரியவன் காண்" நாவு 279 : 4
"பேருமோராயிரம் பேருடையார்" சுந் 18 : 3
"பேருமோராயிர மென்பரால் எம்பிரானுக்கே" சுந் 44 : 7
"பேராயிரவர் மயானத்துப் பெரியபெருமானடிகளே" சுந் 53 : 7
"பேரோராயிரமும் முடையானை" சுந் 56 : 11

எனத் தேவாரத்து வருவனவும் ஈண்டு அறியற்பாலன.

தாளி அறுகு-தாளையுடைய அறுகு. தாளியறுகு என இங்கே கூறியவாறே,

"தாளி யறுகினர் சந்தனச் சாந்தினர்" (8)

என அன்னைப்பத்திலும்,

"நாயேனை யாளுடையான் தாளியறுகாம் உவந்ததார்" (9)

எனத் திருத்தாங்கத்திலும் அடிகள் கூறுமாற்றால் 'தாளியறுகு' என்பதற்குக் கொடியறுகு எனப்படும் ஒருவகை அறுகு எனக் கொள்க.

---

* "ஆயிரத்தெண்பேரானை" 11ஆம் திருமுறை. சிவபெருமான் திருவந்தாதி 81.

தார்-மார்பின் மாலை. "வண்ண மார்பிற் றருங் கொன்றை" (புற. கடவுள்) என்றார் பிறரும். சந்தனச் சாந்து-சந்தனக் கலவை. "தாளி அறுகினர் சந்தனச் சாந்தினர்," (அன்னை 8) என அடிகள் பிறண்டும் கூறுதல் காண்க. சுந்தரம்-அழகு; வடசொல்.

இறைவனது சர்வ வியாபக நிலையினை மனம் முற்றும் உணரமாட்டாமையின் 'சிந்தனைக்கரிய சிவமே' என்றார்.

"சிந்தையாலுந் தெரிவருஞ் செல்வனே" சத 47

"தேனே அமுதே சிந்தைக் கரியாய்" சத 85

"சிந்தனைக்கும் அரியாய்" பள்ளி 5

என அடிகள் பிறண்டும் அருளியவாறு காண்க.

இறைவன் மந்திரமலையாகிய மகேந்திரமலையில் எழுந்தருளியிருந்து ஆகமங்களை வெளிப்படுத்தியருளியமையின் 'மந்திரமாமலை மேயாய்' என்றார்.

"மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமந் தோற்றுவித் தருளியும்" 9-10.

"மற்றவை தம்மை மகேந்திரத் திருந்து
உற்றவைம் முகங்க ளாற்பணித் தருளியும்" 19-20.

"மந்திர மாமலை மகேந்திர வெற்பன்" 100.

எனக் கீர்த்தித்திருவகவலில் வந்தமை காண்க.

எந்தமை-எம்மை. "எந்தமை யாண்ட பரிசது பகரின்" (கீர்த் 102) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. உய்தல்-பிழைத்தல். "திரை தரப் புணைபெற்றுத் தீதின்றி யுய்ந்தாங்கு" கலி 134 : 25) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. உய்யக்கொள்வாய் - பிழைக்குமாறு அடிமை கொள்வோனே. "உய்யக்கொள்வாய் அழுங்குகின்றேன் உடையாய்" (அடை கலப் 10) "ஒருரு வாயநின் திருவருள் காட்டி என்னையும் உய்யக்கொண்டருளே" (எண்ணப் 1) என அடிகள் பிறண்டும் அருளியமை காண்க.

207-217. புலி முலை புல்வாய்க்கு அருளினை போற்றி-ஒருபுலி தனது முலையை ஒரு புல்வாய் மான் கன்றுக்கு ஊட்டுமாறு அருள்செய்தவனே நினக்கு வணக்கம்; அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி - அலைகளையுடைய கடலின்மேலே நடந்தவனே நினக்கு வணக்கம்; கருங்குருவிக்கு அன்று அருளினை போற்றி-கருக்குருவிக்கு அக்காலத்தே அருள்புரிந்தவனே நினக்கு வணக்கம்; இரு புலன் புலர இசைந்தனை போற்றி-பெரிய ஐம் புல அவாக்களும் இயல்பாகவே அவிந்து போகும்படி அமைந்தவனே நினக்கு வணக்கம்; படி உற பயின்ற பாவக போற்றி-நிலத்தின்கண்ணே பொருந்தப் பலகாலும் காட்டிய திருவுருவங்களை உடையவனே நினக்கு

வணக்கம்; அடியொடு நடு ஈறு ஆனாய் போற்றி-முதலும் நடுவும் முடிவு மானவனே நினக்கு வணக்கம்; நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல்-துன்பவுலகத்திலும் துறக்கவுலகத்திலும் பூவுலகத்திலும் போகாதபடி, பரகதி பாண்டியற்கு அருளினை போற்றி-மேலான வீடுபேற்றினைப் பாண்டியற்கு அருளினவனே நினக்கு வணக்கம். ஒழிவு அற நிறைந்த ஒருவ போற்றி-நீ இல்லாத இடம் இல்லையாம்படி எங்கும் நிறைந்த ஒப்பில்லாதவனே நினக்கு வணக்கம்; செழு மலர் சிவபுரத்து அரசே போற்றி-செழுமையான பூக்கள் நிறைந்த சிவலோகநாதனே நினக்கு வணக்கம்; கழுநீர் மாலை கடவுள் போற்றி-செங்கழுநீர் மாலையைத் தரித்த கடவுளே நினக்கு வணக்கம்.

புலிமுலை புல்வாய்க்கருளிய வரலாறு: முன்னொரு காலத்திலே கடம்பவனத்தின்கட் புலிகள் நெருங்கிவரப் புல்வாய் மான்கள் அருகி வந்தன. இறுதியில் ஒருபுல்வாய் மான்பிணை தான் ஈன்ற கன்றை ஓரிடத்தில்விட்டு அவ்வனத்தின்கணுள்ள ஒரு வாவியின்கண் நீர் பருகச் சென்ற போது அதனை ஒரு வேடன் அம்பால் எய்தான். அது தன் கன்றை நினைந்து வருந்தி வீழ்ந்து இறந்தது. எல்லாவுயிர்க்கும் தாயாகி எங்கும் நிறைந்த இறைவன், அவ்வனத்து வேறு மான்பிணை இல்லாமையால் அருகில் உலவிய பெண்புலியை அதற்குப் பாலூட்டுமாறு ஏவ அதுவும் அவ்வாறே சென்று அப்புல்வாய் மான் கன்றுக்கு முலைப்பால் ஊட்டி அதனை வளர்த்து வரலாயிற்று என நம்பி திருவிளையாடற்புராணம் கூறுகிற்கும். இத்திருவிளையாடலை,

"தழல்விழிப் பேழ்வாய்த் தரக்கின் றுளிமுலை
பைங்கட் புல்வாய் பாலுணக் கண்ட
வருணிறை பெருமா னிருணிறை மிடற்றோன்" (40 : 19-21)

எனக் கல்லாடமும்,

"பொன்னெயிற் கடம்ப வனத்தபுல் வாய்க்குப் புலிமுலை
யளித்தபுண் ணியம் போல்" (பரத்து 59)

எனத் திருக்காளத்தி புராணமும் கூறும். புல்வாய்—ஒருவகை மான். "புல்வாய் நவ்வி யுழையே கவரி" எனத் தொல்காப்பியத்து (மரபு 57) வருதலும் காண்க.

அலைகடல் மிசை நடந்தாய் என்றது இறைவன் வலைஞர் கோலத்திற் சென்று, கடலுள் திரிந்து வலைஞர்களைத் துன்புறுத்திய கெளிற்று மீனைப் படுத்த திருவிளையாடலைக் குறித்தது.

"கேவேட ராகிக் கெளிறது படுத்தும்" கீர்த்தி 17

"ஆரா வமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனை" அம்மானை 2.

"பெருந்துறையெம் பேரருளாளன்பெண் பாலுகந்து,
மணிவலை கொண்டுவான் மீன்விசிறும் வகையறிவார்" வார்த் 3.

"மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு மாயிடிலே" திருப்படை 1·

என அடிகள் பிறாண்டும் அருளியமை காண்க. இத்திருவிளையாடலை,

"நெடுஞ்சடைக் கிடந்த குறும்பிறைக் கொழுந்துங்
கருமுகில் வெருத்த திருமிடற் றிருளு
நுதன்மதி கிழித்த தழலவிர் நோக்கமு
மறைத்தொரு சிறுகுடிப் பரதவ னாகிப்
பொன்றலைப் புணர்வலை கொடுங்கர மாக்கி
நெடுங்கடல் கலக்கு மொருமீன் படுத்த
நிறையரு ளாயகன்" 17 : 23-9.

எனக் கல்லாடம் கூறுதலுங் காண்க.

கருங்குருவிக் கருளியவரலாறு: முன்னொரு காலத்திலே கரிக்குருவிகள் எந்நாளும் காக்கைக்கு ஒளித்து அஞ்சி உழல்கையில் அவற்றுள் மிக்க அறிவுள்ளதொரு குருவி 'இவ்வுலகில் யாவர்க்கும் பகையுண்டு; அதனை வெல்வாருமுண்டு, எனத் தன்னுள் ஆராய்ந்து கூற்றங்கெட வுதைத்த இறைவனின் திருப்பாதம் பணிந்து பகை வெல்வேம் எனத் தெளிந்து பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கி ஆலவாய் இறைவனை வலம் வந்து வழிபட்டு வந்தது. கரிக்குருவியின் கருத்தினை அறிந்த இறைவன் இரங்கி யமனையும் வெல்லுந்தக்க ஆற்றலைத்தரும் மூன்றெழுத்தாலாகிய மிருத்தியுஞ்சயம் என்னும் மந்திரத்தை உபதேசித்தருளினார். குருவியும் இறைவனை வணங்கி அம்மந்திரத்தைச் செபித்துக் காக்கை முதலிய பறவைகளை வெல்லவல்ல திறம்பெற்று அதனால் வலியான் என்னும் பெயரும் பெற்றது என நம்பி திருவிளையாடற்புராணம் கூறும். இவ்வரலாறு,

"பலகறி பெற்றிவ் வுலகுயி ரளித்த
பஞ்சின் மெல்லடிப் பாவை கூறுகிக்
கருங்குரு விக்குக் கண்ணருள் கொடுத்த
வெண்டிரு நீற்றுச் செக்கர் மேனியன்" 40 : 6-9.

எனக் கல்லாடத்துக் கூறப்படுதலுங் காண்க.

இரும்புலன் என்றது பெரிய ஐம்புல அவாக்களை. அவை இயல்பாகவே அவிந்து போதும் வண்ணம் அமைந்தவனாதலின் "இரும்புலன் புலர இசைந்தனை என்றார். 'பொறிவாயி லைந்தவித்தான்'' என்றார் திருக்குறளினும். இனி இறைவன் அருள்வழி நின்று அவனை நோக்கும் உயிரின்கண் ஐம்புல அவாக்களும் கெட்டொழிதல் பற்றி 'இரும்புலன்புலர இசைந்தனை' என்றார் எனினுமாம்,

படி-நிலம். குறள் 606 பரிமேல். பாவகம்-உருவம். ''பாவகம் பலபல காட்டிய பரிசும்'' (கீர்த் 82) என வருதல் காண்க. இறைவன் அடியார்க் கருள்செய்யும் பொருட்டு நிலமிசைப் பலகாற்கொண்ட திருவுருவங்களை யுடைமையின் 'படியுறப் பயின்ற பாவக' என்றார். இறைவன் படி யுறப் பயின்ற பாவகங்கள் பலவற்றைக் கீர்த்தித்திருவகவலுட் காண்க.

ஆதியுமந்தமுமில்லாத இறைவன் உலகத்திற்கு ஆதியாயும் அந்தமாயு மிருத்தலால் நடுவாயுமிருத்தல் அமையுமாதலின் 'அடியொடு நடு ஈருனாய்' என்றார். இறைவனுக்கு 'ஆதி மத்தியாந்தரஹிதர்' என்னும் திருநாமமுண் மையும் ஈண்டறியற்பாலது.

''முந்தும் நடுவும் முடிவுமாகிய மூவரறியாச்
சிந்துரச் சேவடி யானை'' குயில் 5.

''முந்திய முதல்நடு விறுதியு மானாய்'' பள்ளி 8.

என இத் திருவாசகத்தும்,

''அந்தநீர் முதனீர் நடுவா மடிகேள்'' ஞான 138 : 7.

''ஆதியாய் நடுவா யந்தமாய் நின்றவடிகளார்'' ஞான 377 : 6.

''முதலாகி நடுவாகி முடிவானனே'' நாவு 218 : 3.

''ஈறுந்நடுவு முதலுமாவா ரிடைமருது மேவியிடங் கொண்டாரே''
நாவு 231 : 1.

''முடியாதே முதனடுவு முடிவானானை'' நாவு 287 : 3.

எனத் தேவாரத்தும் வருவன காண்க.

நரகு சுவர்க்கம் என்பன வடசொல்லினின்றும் தோன்றியவை. நரகு-தீவினையாளர் துன்புறும் உலகு. ஒடு, எண்ணொடு, சுவர்க்கம்-நல் வினையாளர் இன்புறும் உலகு. நானிலம்: குறிஞ்சி முல்லை மருதம் நெய் தல் என்னும் நாற்பெருங் கூற்றினையுடைய நிலவுலகம். குறிஞ்சி முல்லை பாலை மருதம் நெய்தல் என நிலம் ஐந்தாகவும் நானிலம் என்றது என்னை யெனின், முல்லையுங் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து பாலையென்ப தோர் படிவம் கொள்ளுதல் பற்றியாகும்.

'' அவற்றுள்,
நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே'' (அகத் 2)

எனத் தொல்காப்பியத்து வருதலுங் காண்க.

* மலயத்துவச பாண்டியனுக்குத் திருமகளாகத் தோன்றிய $ தடாத கைப்பிராட்டியாரை இறைவன் திருமணஞ்செய்து, இந்திரனோடொருங்

---

* மலையத்துவசன்-பொதியின் மலையின் உருவமெழுதிய கொடியையுடைய வன். ''மன்னுமாதவம் பெருகிய மலைக்கொடி மன்னன்'' (நம்பி திரு விளை 4 : 1) என வருதல் காண்க. இவன் அகத்திய முனிவர் அருளாற் பிறந்தவனாதலின் அம்முனிவர்க்கு இருப்பிடமாயுள்ளதும் துவசம்போல உயர்ந்து தோன்றுவதுமாகிய பொதியின் மலையின் தொடர்பான பெயரை அவனுக்கு இட்டனர் என்று அஷ்டமிப் பிரதட்சிண மான்மியம் கூறு கின்றது.

$ கல்லாடம் 31 ; 10-21 பார்க்க.

இருந்த அப்பாண்டியனைச் சுவர்க்கத்தினின்றும் வருவித்து ஏழ்கடலில் தீர்த்தமாடுவித்து வீடு நல்கியமையின் 'நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமற், பரகதி பாண்டியற்கருளினை' என்றார்.

"மன்றுளாயக வாழ்ந்தனம் வாழ்ந்தன
மென்று வாழ்த்தி யிறைஞ்சல்கண் டுத்தம
னன்று தன்னுல கீந்திட வாங்கவர்
சென்ற டைந்தனர் தெய்வத் தனுக்கொடு" (9 : 9)

என நம்பிதிருவிளையாடற்புராணத்து வருதலுங் காண்க.

ஒப்பற்றவனாகிய இறைவன் சட சித்துக்களிலெல்லாம் நீக்கமற நிறைந்திருத்தலின் 'ஒழிவற நிறைந்த வொருவ' என்றார்.

"பூவி னாற்றம் போன்றுயர்ந் தெங்கு
மொழிவற நிறைந்து மேவிய பெருமை" அண்டப் 115-6.

"ஒழிவற நிறைந்த யோகமே" பிடித்த 1

என அடிகள் பிறண்டு அருளியமையுங் காண்க.

"எங்குமாகி நின்றானும்" ஞான 142 : 6.

"உலகெலாஞ் சோதியாய் நிறைந்தான்" ஞான 142 : 7.

"எவ்விடத்து முள்ளான் றன்னை" நாவு 225 : 3.

"எவ்விடத்து நீயலா தில்லை" நாவு 276 : 8.

"ஒழிவற நின்றெங்கு முலப்பிலான் காண்" நாவு 299 : 6.

எனத் தேவாரத்தும்,

"ஒழிவற நிறைந்த மதிசேர் செஞ்சடை,
ஒருவன்"

என ஞானாமிர்தத்தும் வருவனவும் ஈண்டறியற்பாலன. 'ஒழிவற நிறைந்த ஒருவன்' என்பதற்கு 'அணுப் புதைக்கவும் இடமின்றிச் § சடசித்துக்களெல்லாம் நிறைந்த...உவமனில்லாத பரமேசுவரன்' எனவும் (53 : 23-4 உரை), 'சர்வ வியாபகமாய் நிறைந்த ஏகன்' எனவும் (55 : 7 உரை) பொருளுரைப்பர் ஞானாமிர்தம் பழையவுரைகாரர்.

---

§ சடசித்துக்கள் என்றார் பொருள்கள் எல்லாம் சடப்பொருள், சித்துப் பொருள் என இரண்டாய் அடங்குதலின். இறைவன் சடப்பொருள்களில் நிறைந்திருத்தலை, "புவிமுதலைம் பூதமாய்ப் புலனைந்தாய் நிலனைந்தாய்க் கரண நான்காய், அவையவைசேர் பயனுருவாய் அல்லவுருவாய் நின்றான்" (ஞான 129 : 7) எனவும், "உரைசேரு மெண்பத்துநான்கு நூறாயிரமாம் யோனிபேத, நிரைசேரப் படைத்தவற்றினுயிர்க் குயிராய் அங்கங்கே நின்றான்" (ஞான 132 : 4) எனவும் தேவாரத்து வருவனவற்றாலுமறியப் படும்.

சிவபுரம்-சிவலோகத்துள்ளது. 'சீரார் சிவலோகந் தன்னுட் சிவ புரத்தில், ஏரார் திருக்கே யி ..ள்ளிருப்ப'' எனத் திருக்கயிலாய ஞான வுலாவில் (9) (பதினோராந்திருமுறை) வருதலுங் காண்க. இனி 'பத்த ரெல்லாம் பார்மேற் சிவபுரம்போற் கொண்டாடும், உத்தர கோசமங்கை யூர்'' (தசாங் 2) என அடிகள் அருளுமாற்ருல் பார்மேற் சிவபுரம் உத்தர கோசமங்கை எனினுமாம். '' திருப்பெருந்துறையில் நிறைமலர்க் குருந்த மேவியசீர் ஆதியே'' (1) என அருட்பத்தில் அடிகள் அருளிச் செய்தமை யின் 'சிவபுரம்' திருப்பெருந்துறையெனல் அமையாதோவெனின், 'சிவபுரத் தரசே திருப்பெருந்துறையுறை சிவனே'' (வாழாப் 1) எனச் சிவபுரத் தின் வேருகத் திருப்பெருந்துறை கூறப்படுதலின் அமையாதென்க. இனிச் சோழநாட்டிலுள்ள சிவதலம் எனினுமாம். ''பொன்கரை பொரு பழங் காவிரியின், றென்கரை மருவிய சிவபுரமே'' ''பண்டமர்தரு பழங்காவிரி யின், தெண்டிரை பொருதெழு சிவபுரமே'' எனத் தேவாரத்து (ஞான 112 : 1, 10) வருதலுங் காண்க.

சிவபுரத்தரசனாகிய இறைவன் அடிகளை ஆட்கொண்டபோது அணிந் தருளியது செழுங்கழுநீர்மாலையாதலின் 'கழுநீர்மாலைக் கடவுள்' என்றார்.

''காதல னாகிக் கழுநீர் மாலை
ஏலுடைத் தாக எழில்பெற வணிந்தும்'' (113-4)

எனக் கீர்த்தித்திருவகவலில் வருதலுங்காண்க.

218—225. தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி-நின்னை வணங்கு வாரது மயக்கத்தினை அறுப்பவனே வணக்கம்; பிழைப்பு வாய்ப்பு ஒன்று அறியா நாயேன்-பிழைபடுதலும் பிழைபடாமையும் சிறிதும் அறியாத நாயினேனது, குழைத்த சொல் மாலை கொண்டருள் போற்றி-மனத்தினைக் குழைவித்த சொற்களால் ஆகிய மாலையினை ஏற்றுக்கொண்டருள்க நினக்கு வணக்கம்; புரம் பல எரித்த புராண போற்றி-முப்புரங்களை எரித்த பழையோனே நினக்கு வணக்கம்; பரம் பரஞ் சோதி பரனே போற்றி- ஒளியையுடைய மேலான பொருள்களுக்கெல்லாம் மேலான ஒளியை யுடைய மேலோனே நினக்கு வணக்கம்; புயங்கம் பெருமான் போற்றி போற்றி- பாம்பை அணியாகவுடைய பெருமானே நினக்கு வணக்கம்; புராண காரண போற்றி போற்றி-பழமையான காரணப் பொருளாயுள்ளவனே நினக்கு வணக்கம் வணக்கம்; போற்றி போற்றி சய சய போற்றி- வணக்கம் வணக்கம் வெல்க வெல்க நினக்கு வணக்கம்.

மையல் துணிப்பாய்-மயக்கத்தினை அறுப்பவனே. 'மறப்பும் பிறப் பென் றிவையிரண்டின் மயக்கறுத்த, கருணைக் கடலுக்கே'' (போத் 9) ''மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி, மறுமையோ டிம்மையுங் கெடுத்த பொருளனே'' (அருட் 9) என அடிகள் அருளியவையுங் காண்க. மையல்-மயக்கம். இப்பொருட்டாதல் ''மையல் கொண்டு மொய்யென

வுயிர்த்தம்" (முல்லைப் 83) என்புழியுங் காண்க. அது பிறப்புக்கேதுவானதென்பது "பொருளல்லவற்றைப் பொருளென் றுணரும் மருளானாம் மாணாப்பிறப்பு" (குறள் 351) என்பதனாலுமறிக.

'பிழைப்பு-தப்பு; தவறுபடுதல். "யாதென் பிழைப்பென நடுங்கி" (கலி 128 : 10) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. வாய்ப்பு-பிழையாமை. "அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்" (குறள் 948) என்புழி வாய்ப்ப என்பதற்குப் 'பிழையாமல்' எனப் பரிமேலழகர் உரைத்தமையுங் காண்க.

பிழைபடுதலும் பிழையின்றி வாய்ப்புறுதலும் ஆகிய ஒன்றனையும் அறியாத எளியேனைக் குழையச் செய்த சொன்மாலையை ஏற்றுக்கொண்டருள்க என அடிகள் அருளுமாற்றால் அடிகள் தற்போதம் நீங்கித் திருவருள்வழி நின்று இத்திருப்பாடல்களை அருளிச் செய்தனர் என்பதும், அத்திருப்பாடல்கள் அடிகளின் மனத்தினைக் குழையச் செய்தன என்பதும் போதருமாறு காண்க.

ஒன்று-சிறிதும். "இடனின்றி யிரந்தோர்க்கொன் றீயாமை யிழிவென" (கலி 2 : 19) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. குழைத்த-குழைவித்த. "அலமர லுண்கண்ணா ராய்கோதை குழைத்தநின்" (கலி 73 : 12) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. சொன்மாலை-சொல்லாகிய மாலை, "ஆராதசொன் மாலைகள்" (ஞான 37 : 11) "ஊரனுரைத்த சொன்மாலைகள்" (சுந் 11 : 10) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. குழைத்த சொன்மாலை என்றது ஈண்டு திருவாசகம்.

இறைவன் எரித்த புரங்கள் மூன்றாதலின் 'புரம்பல எரித்த' என்றார். "புரம்மூன்றும் எரித்த விமலன்" (ஞான 171 : 2) "புரம்மூன்றும் எரிசெய்தன் கண்" (நாவு 243 : 9) என வருவனகாண்க இரண்டின் மேற்பட்டவற்றைப் பலவென்றல், "ஒன்றிரண்டலபல" (பதிற் 41 : 15) என்புழியுங் காண்க.

புராணன்-பழையோன் "புராணன்றான் காண்" (222 : 3) "புதியனவுமாய் மிகவும் பழையான்றன்னை" (225 : 7) "பாலர் சாலப் பழையர்" (231 : 7) என அப்பரடிகள் அருளியமையுங்காண்க.

ஒளியையுடைய பொருள்களுள் மேலான ஒளியையுடைய ஞாயிற்றினும் மேலான பேரொளியையுடையவன் இறைவனாதலின் 'பரம்பரஞ் சோதிப் பரனே' என்றார் "பரமாம் பரஞ்சோதியை" "பரஞ்சுடர்ச் சோதியுட் சோதியாய் நின்ற சோதியே" (நாவு 178 : 9; (211 : 3) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

புயங்கம்-பாம்பு. இது புஜங்க: என்னும் வடசொற்றிரிபு. இறைவன் பாம்பையணியாகவுடைய பெருமானாதலின் 'புயங்கப்பெருமான்' என்றார். "அக்கொடரவ மணிந்தான் கண்டாய்" "அக்கரவ மாரமாக வணிந்தவனை" (நாவு 253 : 2; 274 : 21) என வருவன காண்க.

உலகத்தின் தோற்றநிலை இறுதிகளுக்குப் பழமையான நிமித்தகாரணமாயுள்ளவன் இறைவனாதலின் 'புராண காரண' என்றார்.

இத்திருவகவல் ஏ ஈற்றே என ஈற்றே எனமுடிவெய்தாது இகரவீற்றன் முடிவெய்தியுள்ளது. இதனால் அகவல் இகர ஈற்றானும் முடிவெய்தும் என்பது அறியத்தக்கது. எல்லா அடிகளும் நாற்சீரான் வந்தமையின் இது நிலமண்டிலவாசிரியப்பா.

---

## 5. திருச்சதகம்.

### பத்திவைராக்கிய விசித்திரம்

*திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது*

உயர்வு குறித்து வந்த திரு என்னும் அடையடுத்த சதகம் என்பது உயர்ந்த கருத்துக்களையுடைய நூறு திருப்பாடல்களால் அமைந்த பகுதியாகும். சதம்-நூறு. வடமொழி, சதகம்-நூற்றினையுடையது. இந்த நூறு பாடல்களும் அந்தாதித் தொடையாக அமைந்துள்ளன. அன்றியும் அவை நூறும் ஒரேவகைச் செய்யுளால் அமையாது பத்துப்பத்துப் பாடல்கள் ஒவ்வொருவகைச் செய்யுளால் அமைந்துள்ளன. இத்திருச்சதகத்தின் உட்பொருள் பத்திவைராக்கிய விசித்திரம் என்பது. இறைவனிடத்துப் பற்றும் உலகப்பொருள்களிடத்துப் பற்றின்மையும் உளவாகும்பொழுது உண்டாகும் அழகு என்பது இதன்பொருள். இச்சதகம் நுதலிய பொருள் 'சத்தியஞானந்தருதே சிகர்மோகஞ் சதகமதாம்' எனத் திருப்பெருந்துறைப் புராணகாரர் கூறுவர். இவ்வழகினை, மெய்யுணர்தல் அறிவுறுத்தல் சுட்டறுத்தல் ஆத்துமசுத்தி கைம்மாறுகொடுத்தல் அநுபோகசுத்தி காருணியத்திரங்கல் ஆனந்தத்தழுந்தல் ஆனந்தபரவசம் ஆனந்தாதீதம் எனப் பத்துவகைப்படுத்தி அவை ஒவ்வொன்றினையும் பப்பத்துத் திருப்பாடல்களால் அடிகள் விளக்கியுள்ளார்.

# 1. மெய்யுணர்தல்

## கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

5. மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னுங்
கைதா னெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே.

ப-ரை : உடையாய்-எல்லா உயிர்களையும் உலகங்களையும் உடையவனே, உன்விரை ஆர் கழற்கு-உனது நறுமணம் பொருந்திய திருவடியை வணங்குதற்கு, மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து-உடம்பு தானாகவே மயிர் சிலிர்க்கப்பெற்று நடுநடுங்கி, கை தான் தலைவைத்து-கை தானாகவே சிரசிற் குவியப்பெற்று, கண் நீர் ததும்பி-கண்களில் நீர் ததும்பி, உள்ளம் வெதும்பி-உள்ளம் உருகி, பொய் தான் தவிர்ந்து-நிலையற்றவற்றின் பற்று தானாகவே நீங்கப்பெற்று, உன்னை போற்றி சய சய போற்றி என்னும்-உனக்கு வணக்கம் வெல்க வெல்க வணக்கம் என்று கூறும், கை தான் நெகிழ விடேன்-ஒழுக்க நெறியைக் கைவிடமாட்டேன்; என்னை கண்டு கொள்-ஆயினும் என்னில பிறழாவண்ணம் அடியேனைப் பார்த்துக் காத்தருள்க.

உடையவனே, நின்திருவடியை வணங்குதற்கு மெய் தானாகவே மயிர் சிலிர்க்கப்பெற்று விதிர் விதிர்த்துக் கைதான் தலைவைத்துக் கண்களில் நீர் ததும்பி உள்ளம் உருகிப் பொய்தான் தவிர்ந்து நினக்கு வணக்கம் வெல்க வெல்க வணக்கம் என்று கூறும் ஒழுக்க நெறியைக் கைவிடமாட்டேன்; ஆயினும் என்னில பிறழாவண்ணம் அடியேனைப் பார்த்துக் காத்தருள்க என்பதாம்.

மெய்-உடம்பு. அரும்புதல்-மயிர் சிலிர்த்தல். உடம்பு இடைவிடாது நடுங்கியமை தோன்ற 'விதிர்விதிர்த்து' என்றார். விதிர்விதிர்த்து - மிக நடுங்கி எனினுமாம். மெய்தானரும்பல் விதிர்விதிர்த்தல் முதலியன அன்பின் மிகுதியாலாகிய மெய்ப்பாடுகள்.

"மைத்தழையா நின்ற மாமிடற்றம்பலவன் கழற்கே
மெய்த்தழையா நின்ற வன்பினர் போல விதிர்விதிர்த்து" (102)

எனத் திருக்கோவையாரினும்,

"கண்டு தொழுது கரசர ணுதி யங்கமெலாம்
கொண்ட புளகங்க ளாக எழுந்தன்பு கூரக்கண்கள்
தண்டுளி மாரி பொழியத் திருமூலட் டானர்தம்மைப்
புண்டரி கக்கழல் போற்றித் திருத்தாண் டகம்புனைந்து" நாவு 222.

"எழுதாத மறையளித்த எழுத்தறியும் பெருமானைத்
தொழுதார்வம் உறநிலத்தில் தோய்த்தெழுந்தே அங்கமெலாம்
முழுதாய பரவசத்தின் முகிழ்த்தமயிர்க் கால்மூழ்க
விழுதாரை கண்பொழிய விதிர்ப்புற்று விம்மினார்" நாவு 335

எனப் பெரியபுராணத்தும் வருவன காண்க. தெய்வ மணங்கமழுந் திருவடியாதலின் 'விரையார் கழல்' என்றார். "மணங்கமழ் தெய்வத்திள நலங் காட்டி" என்றார் திருமுருகாற்றுப்படையினும். இனி விரையார்கழல் என்பதற்கு அன்பரிட்ட நறுமலரான் மணம் கமழும் திருவடி எனினுமாம். "விண்ணுஞ் செலவறியா விரையார் கழல்" (256) என்னும் திருக்கோவையார் உரையில். 'எல்லாப் பொருளையும் கடந்து நின்றனவாயினும் அன்பர்க்கணியவாய் அவரிட்ட நறுமலரான் வெறிகமழுமென்பது போதர வெறியார் கழல் என்றார்' எனப் பேராசிரியர் உரைத்தமையுங் காண்க. வெதும்பல்-உருகுதல் என்னும் பொருட்டு, தவிர்ந்து என்பது தவிரப் பெற்று என்னும் பொருளில் வந்தது. உன்னை-உனக்கு. உருபு மயக்கம். சய என்பது வெல்க என்னும் பொருளது. சய சய என்பது வெல்க வெல்க என வாழ்த்தியவாறு. கை-ஒழுக்கம். "கலந்த நோய் கைம்மிக" (கலி 46 : 2) என்புழிப்போல.

உள்ளம் வெதும்பல், பொய் தவிர்தல் என்பன மனத்தின் தொழிலாதலாலும், போற்றி சய சய போற்றி என்பது வாக்கின் தொழிலாதலாலும், விதிர்விதிர்த்தல் கைதலை வைத்தல் கண்ணீர் ததும்பல் என்பன காயத்தின் தொழிலாதலாலும் மனம் வாக்கு காயம் என்னும் முக்கரணங்களாலும் வழிபடாநின்றேன் என்பது கூறினார். ஆயினும் இங்நிலைமை பிறழாவண்ணம் பார்த்துக் காத்தருள்க என்பார் 'என்னைக் கண்டுகொள்' என்று அருளிச்செய்தார்.

தான் நான்கனுள் முதன் மூன்றும் தானாகவே என்ற பொருளில் வந்தன. பின்னது அசைநிலை, அரும்பி, விதிர்விதித்து தலைவைத்து, ததும்பி, வெதும்பி என்னும் சினைவினைகள்,

"அம்முக் கிளவியுஞ் சினைவினை தோன்றிற்
சினையொடு முடியா முதலொடு முடியினும்
வினையோ ரனைய வென்மனார் புலவர்" தொல் வினை 34

என்ற விதிப்படி 'என்னும்' என்ற முதல்வினையொடு முடிய அது கை என்னும் பெயரினைக் கொண்டு முடிந்தது.

உயிர்ப்பொருள் உயிரில்பொருள் அறிவுப்பொருள் அறிவில்பொருள் என்ற பகுப்பினுட்பட்ட எல்லாவற்றையும் உடைமையாகக் கொண்டான் இறைவனாதலின் 'உடையாய்' என்றார். "எல்லாமுன் உடைமையே எல்லாமுன் அடிமையே" எனத் தாயுமானவர் அருளியமையுங்காண்க.

இதன்கண் பொய்தான் தவிர்ந்து மெய்யுணருங்கால் மெய்யரும்புதல் முதலிய செயல்கள் உளவாமாகலின் மெய்யுணர்தல் என்னும் முதற்பத்து நுதலியபொருள் போதருதல் காண்க. 1

6 கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினு
நள்ளே னினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்கள் உத்தமனே.

ப-ரை : இறைவா-இறைவனே, எங்கள் உத்தமனே-அடியோங்களுக்கு அருள் செய்யும் பெரியோனே, குடி கெடினும்-என் குடிப்பிறப்பிற்குரிய செல்வவாழ்வுகெட நேர்ந்தாலும், புரந்தரன் மால் அயன் வாழ்வு கொள்ளேன்-இந்திரன் திருமால் பிரமன் என்னும் தேவத்தலைவர்களின் உயர்ந்த செல்வ வாழ்க்கையை விரும்பி ஏற்றுக்கொள்ளமாட்டேன்; நினது அடியாரொடு அல்லால் நள்ளேன்-உன் அடியாரொடல்லாமல் பிறரொடு நட்புக் கொள்ளேன்; திருவருளாலே இருக்கப்பெறின்-யான் நின் திருவருளாலே திருவருள் நெறியில் இருக்கப் பெறுவேனாயின், நரகம் புகினும் எள்ளேன்-நரகத்தின்கண்ணே செல்ல நேரினும் அதனை இகழமாட்டேன்; உன்னை அல்லாது பிற தெய்வம் உள்ளேன்-உன்னை அல்லாது பிற தெய்வங்களை நினைக்கவுமாட்டேன்.

இறைவா, எங்கள் உத்தமனே, எங்கள் குடிகெட நேர்ந்தாலும் புரந்தரன் மால் அயன் என்னும் தேவத்தலைவர்களின் உயர்ந்த வாழ்க்கையை விரும்பி ஏற்றுக்கொள்ளமாட்டேன்; உன் அடியாரோடல்லாமல் பிறரொடு நட்புக்கொள்ளேன்; நின் திருவருளாலே திருவருள் நெறியில் இருக்கப்பெறுவேனாயின் நரகம்புகினும் அதனை இகழமாட்டேன்; உன்னையல்லாது பிறதெய்வங்களை நினைக்கவும் மாட்டேன் என்பதாம்.

இறைவன்-எப்பொருளினும் தங்குகின்றவன். பிறப்பினை அறுத்துப் பேரின்ப வாழ்வினை அளிக்கும் பெரியோன் இறைவனேயாகலின் 'உத்தமன்' என்றார். உத்தமன்-பெரியோன். பிறஅடியார்களையும் உளப்படுத்தி 'எங்கள்' என்றார். 'கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு' எனப் பயனின்மையை முன் வைத்துக் கூறியது புரந்தரன் முதலிய இறையவர் வாழ்க்கை நலங்களை வலிந்துதர எத்தனித்தாலும் அவற்றினுள்ள வெறுப்பின் மிகுதிபற்றியென்க. "வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன் மண்ணும் விண்ணும்" (உயிருண்ணிப் 7) என பிறிதோரிடத்து அடிகள் கூறுதலுங் காண்க.

புரந்தரன்-இந்திரன்; வடமொழி. பகைவர் புரங்களை அழிப்பவன் என்பது பொருள். மால்-அன்பரிடத்து அன்பு செய்பவன். பிறப்பிலி என்னும் பொருள்படும் அஜன் என்னும் வடமொழி அயன் எனத் தமிழில் திரிந்தது. ஈண்டு பிரமனுக்கு உபசாரவழக்கு. இந்திரன் வாழ்வு சிறந்ததாதல் பற்றி அதனை முற்கூறினர். "இந்திரன் முதலிய இறை

யவர் பதங்களும்'' (திருக்குறள் உரைப்பாயிரம்) எனப் பரிமேலழகர் உரைத்தலுங் காண்க. புரந்தரன் மால் அயன் வாழ்வு இன்பம் பயத்தல் பற்றி அவற்றை எடுத்துக் கூறினார். இந்திராதி பதங்களை அடைந்தவர்க்கும் புநராவர்த்தியினாற் பிறப்புண்டாமாதலின் அப்பதங்களைச் சிவனடியார் விரும்பார் என்க.

"கொங்குலா வரிவண்டினிசைபாடுமலர்க்கொன்றைத்
தொங்கலானடியார்க்குச் சுவர்க்கங்கள் பொருளலவே'' ஞான 177:7.

எனத் தேவாரத்து வருதலுங் காண்க.

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு என்றமையால் ஏனையோர் வாழ்வையும் கொள்ளாமை தானே பெறப்படும். வாழ்வும் என்ற சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.

'குடிகெடினும்' என்பது மத்திபதீபமாக நின்று குடிகெடினும் புரந்தரன் மாலயன் வாழ்வு கொள்ளேன் எனவும், குடிகெடினும் நினதடியாரொடல்லால் நள்ளேன் எனவும் இயைந்து பொருள்தந்தது. அடியாருறவு வீடுபேற்றிற்கு ஏதுவாதலானும், குடிப்பிறப்பிற்குரிய பெருமை கெடநேருங்கால் அடியவரல்லாதாரோடு நட்புச்செய்தல் குடிப்பிற்கு வருந் தீங்கினும் மிக்க தீங்கினைப் பயத்தலானும் அவ்வடியார் உறவையே வேண்டும் என்பார், 'குடிகெடினும் நள்ளேன் நினதடியாரொடல்லால்' என்றார். குடி-குலத்தின் உட்பிரிவு, "விலக்கின்மனை ஒழுக்கத்தின் மேதக்க நிலைவேளாண், குலத்தின்கண் வரும் பெருமைக் குறுக்கையர் தங்குடி விளங்கும்'' (திருநாவு 15) எனப் பெரியபுராணத்து வருதலுங் காண்க. ஈண்டுக் குடி என்றது குடிப்பிறப்பிற்குரிய பெருமையை உணர்த்துதலின் ஆகுபெயர். கெடினும் என்ற உம்மை கொடாமையை உணர்த்துதலின் எதிர்மறை. நள்ளல்-சிநேகித்தல்.

நரகம், பாதாளத்தில் தீவினையாளர் சென்று தங்கும் இடம். "பாவர் சென்றல்கு நரகம்'' (திருக்கோவை 337) என அடிகள் அருளியமையுங் காண்க. அது அள்ளல், ரௌரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி என எழுவகைப்படும். இறைவன் திருவருளுடையார் நரகம் புகுதல் எக்காலத்துமின்மையின் 'நரகம் புகினும்' என்றார். உம்மை எதிர்மறை. மிக்க துன்பத்தினைப் பயக்கும் நரகின்கண் ஓரோவழி புகநேருமாயினும் இறைவன் திருவருளுணர்ச்சியோடு இருக்கப்பெறின் அதனையும் இகழேன் என்பார், 'நரகம் புகினுமெள்ளேன் திருவருளாலே இருக்கப்பெறின்' என்றார். எள்ளல்--இகழுதல். "ஆற்ற லுடையோ ராற்றல் போற்றாதென், னுள்ள மெள்ளிய மடவோன்'' (புற 73 : 5-6) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. திருவருளால்-ஆல், ஒடுப்பொருட்டு. நரகம் புக்கவர் திருவருளுணர்ச்சியோடு இருக்கப்பெறுதல் அரிதாகலின் 'இருக்கப்பெறின்' என்றார்.

எங்கும் நிறைதல் எல்லாம் அறிதல் முதலிய இறைவனுக்குரிய குணங்கள் இல்லாத திருமால் முதலியோரைப் 'பிறதெய்வம்' என்றார். சிவபரம் பொருளையன்றிப் பிறதெய்வங்களைச் சிறிதும் மனத்தினாலும் நினைத்திலேன் என்பார், 'உள்ளேன் பிறதெய்வம்' என்றார். உள்ளல்-நினைத்தல். "உள்ளுவன் மன் யான் மறப்பின்" திருக்குறள் 1125. உள்ளேன் என மனத்தின் செயலைக் கூறியதனால் வாக்கினால் வாழ்த்தேன்; காயத்தால் வணங்கேன் என்பனவுங் கொள்க. அடிகள் பிறதெய்வங்களை வழிபடாமையை,

"மற்றோர் தெய்வங் கனவிலு நினையாது" போற்றி 74.

"செழுமணி யணிந்தாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர்
துணையென நினைவனோ சொல்லாய்" வாழாப் 10.

"கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம்" ஏசறவு 5.

என அவர் அருளியவாற்றானு மறியப்படும்.

"உற்றவரு முறுதுணையு நீயேயென்று முன்னையலால்
ஒருதெய்வ முள்கே னென்றும்...அலரானில்லே" (245 : 7)

"சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோஞ்
சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்" (312 : 5)

எனத் திருநாவுக்கரசு சுவாமிகளும்,

"வைச்சே யிடர்களைக் களைந்திட வல்ல மணியே மாணிக்கவண்ணா,
நச்சே னொருவரை நானுமை யல்லா னாட்டியத்தான்குடி நம்பீ"
(15 : 2)

"விரும்பே னுன்னை யல்லா லொருதெய்வமென் மனத்தால்
கரும்பாருங் கழனிக் கழுப்பாலை மேயானே" (23 : 4)

"தாழை வாழையந் தண்டாற் செருச்செய்து தருக்கு வாஞ்சியத்துள்
ஏழைபங்காளனை யல்லால் இறையெனக் கருதுதலிலமே" (76 : 9)

எனச் சுந்தரமூர்த்திசுவாமிகளும் அருளியமையும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலன. அடிகள் இறைவன் திருவருளாற் பிறதெய்வம் உள்ளா தொழிந்தாரென்பது "யான் பிறவேத்தா வகையிரங்கித், தன்கடைக்கண் வைத்த தண்டில்லைச் சங்கரன்" (298) எனத் திருக்கோவையாரில் வருதலானறியப்படும்.

இதன்கண் புரந்தரன் மாலயன் வாழ்வு கொள்ளாமையும் பிறதெய்வம் உள்ளாமையும் அடியாரல்லாரோடு நள்ளாமையும், அவை அழிவுடைமையும் பெரும்பயன்தாராமையும் பற்றியாதலின் மெய்யுணர்தல் என்னும் முதற்பத்து நுதலியபொருள் போதருதல் காண்க. 2

7. உத்தம னத்த னுடையா னடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மாலிவ னென்ன மனநினைவில்
ஒத்தன வொத்தன சொல்லிட வூரூர் திரிந்தெவரும்
தத்த மனத்தன பேசவெஞ் ஞான்றுகொல் சாவதுவே.

ப-ரை: உத்தமன் அத்தன் உடையான் அடியே நினைந்து உருகி-சிறந்தவனும் உலகத்துள்ளார் எல்லாருக்கும் தந்தையும் எல்லாவற்றையும் உடையவனுமாகிய இறைவனுடைய திருவடிகளையே இடைவிடாது நினைந்து உள்ளம் உருகி, மத்த மனத்தொடு-களிப்பேறிய மனத்தோடு, ஊர் ஊர் திரிந்து-ஊர்கள் தோறும் திரிந்து, மன நினைவில் ஒத்தன ஒத்தன சொல்லிட-என் உள்ளக்கருத்தில் அவ்வப்போது பொருந்தின பொருந்தினவாகிய எண்ணங்களை யான் சொல்ல, எவரும்-என் நிலையைக்கண்டார் என்சொல்லைக் கேட்டார் எல்லோரும், மால் இவன் என்ன-பித்துப்பிடித்து மயங்கினவன் இவன் என்று, தம் தம் மனத்தன பேச-தத்தம் மனத்திற் றோன்றிய எண்ணங்களைச் சொல்ல, சாவது எஞ்ஞான்று-எனது தற்போதங் கெடுவது எந்நாளோ?

உத்தமனும் அத்தனும் உடையானுமாகிய இறைவன் திருவடிகளையே நினைந்துருகிக் களிப்பேறிய மனத்தொடு ஊர்கள்தோறும் திரிந்து மன நினைவில் அவ்வப்போது பொருந்தின பொருந்தினவாகிய எண்ணங்களை யான் சொல்லவும், எவரும் என்னைப் பித்துப்பிடித்து மயங்கினவன் என்று தத்தம் மனத்தன சொல்லவும் எனது தற்போதங்கெடுவது எந்நாளோ என்பதாம்.

உத்தமன்-சிறந்தவன். இறைவன் உலகத்துள்ளார் எல்லாருக்குந் தந்தையாதல்பற்றி 'அத்தன்' என்றார். "அத்தன் முத்தன், சிவன் செய்த சீரருளார் தில்லையூர" (358) என்னும் திருக்கோவையார் உரையில், 'அத்தன் - உலகத்துள்ளாரெல்லாருக்குந் தந்தை' எனப் பேராசிரியர் உரைத்தமையுங் காண்க. அன்றிப் பேரின்பமாகிய பெருஞ் செல்வத்தை நல்கிக் காத்தருளல்பற்றிக் கூறினார் எனினுமாம். இடைவிடாது நினைத்தற்குரியது திருவடியேயாதலின் 'அடியே நினைந்து' என்றார். அடியே என்பதில் ஏகாரம் பிரிநிலை. தேற்றமுமாம். அன்பினால் நினைக்குந்தோறும் உள்ள முருகுதலின் 'நினைந் துருகி' என்றார். "நீணிலா வணியினானை நினைந்து நைந்துருகி" (அச்சப் 10) என அடிகள் பிறண்டு அருளியமையுங் காண்க. "நினைந்துருகு மடியாரை" (நாவு 228 : 1) என்பது தேவாரம்.

மத்தம்-உன்மத்தம்; பெருங்களிப்பு. மால்-மயக்கம். அது மயக்கமுடையவனை உணர்த்தியது. என்னப் பேச எனக் கூட்டுக. மன நினைவில் ஒத்தன வொத்தன சொல்லுதலை அடிகள் செயலாகக் கொள்க. தம் ஊரவர் செயலாக உரைப்பாருமுளர். ஒத்தல்-பொருந்துதல். "ஊராண்மைக் கொத்த படிறுடைத்து" (கலி 89 : 2) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

இறைவனை வழிபடுதற்கு ஊர்தோறும் செல்லுதலை 'ஊரூர் திரிந்து' என்றார். எவரும் என்றது கற்றோரும் கல்லாதோரும் பெரியோரும் சிறியோருமாகிய யாவரையும் குறித்தது. தத்தமனத்தன பேசவென்றது ஊரிலுள்ளவர்கள் தத்தம் மனத்திற்றோன்றிய இகழ்ச்சியமைந்த கருத்துக்களைப் பேசு வென்றவாறு.

"சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாக" போற்றித் 68-70.

என அடிகள் அருளியமையும் காண்க. கொல்-அசை. சாதல் - தற்போதங் கெடுதல். "நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ" (தெள்ளேணம்) என அடிகள் அருளியமையுங் காண்க.

நினைந்துருகி (1) மனத்தொடு (2) ஊரூர்திரிந்து ஒத்தன வொத்தன சொல்லிட எவரும் (3) மாலிவன் என்ன (2) தத்த மனத்தன பேச எஞ்ஞான்று கொல் சாவது (4) என மாறிக்கூட்டி முடிக்க.

இதன்கண் எவரும் மாலிவன் என்னத் தத்தமனத்தனபேச அவர் கூற்றுப் புகழ்ச்சியாயினும் இகழ்ச்சியாயினும் அவற்றில் விருப்பு வெறுப் பின்றித் திருவருள் ஒன்றிலேயே தோய்ந்து நிற்றல் மெய்யுணர்வின் பயன் என்பது பெறப்படுதலின் மெய்யுணர்தல் என்னும் முதற்பத்து நுதலிய பொருள் புலனாதல் அறிக. 3.

8. சாவமுன் னாள்தக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சமஞ்சி
ஆவவெந் தாயென் றவிதா விடுநம் மவரவரே
மூவரென் றேயெம் பிரானொடு மெண்ணிவிண் ணாண்டுமண்மேற்
றேவரென் றேஇறு மாந்தென்ன பாவந் திரிதவரே.

ப-ரை: சாவ முன் நாள் தக்கன் வேள்வி தகர் தின்று-தாம் எல்லோரும் இறந்துபட நேரும் என உணர்ந்தும் முன்னாளில் தக்கனாற் செய்யப்பட்ட யாகத்தில் அவியாக ஓமஞ்செய்த ஆட்டின் ஊனைத் தின்றும், நஞ்சம் அஞ்சி - பின்னர்த் திருப்பாற்கடலில் எழுந்த நஞ்சினை அஞ்சி ஆ அ எந்தாய் என்று அவிதா இடும் நம்மவர் அவரே - ஆ ஆ எங்களுக்கு இரங்கி எங்கள் தந்தையே அருள்செய்க என்று முறையிடு செய்யும் நம்மவர்களாகிய அத்தேவர்கள் தாமோ, எம்பிரானொடு மூவர் என்று எண்ணி-எம்பெருமானொடு தம்மையும் சேர்த்து மூவராவோம் என்று நினைத்து, விண் ஆண்டு - விண்ணுலகத்தில் தத்தம் உலகங்களை ஆட்சி புரிந்து, மண்மேல் தேவர் என்று இறுமாந்து திரிதவர் - நிலவுலகத்தில் யாம் முழுமுதற் கடவுளாவோம் என்று செருக்குற்றுத் திரிவுபடும் தவத்தினையுடையர். என்ன பாவம்-தக்கன் வேள்வியில் சாவடைந்தும் நஞ்சம் அஞ்சி அவிதா இட்டும் இழிவடைந்த தேவர்களது அறியாமையை என்ன தீவினை என்போம்.

நாம் எல்லோரும் சாவநேரும் என உணர்ந்தும் முன்னாளில் தக்கனாற் செய்யப்பட்ட வேள்வியில் அவியாக ஓமஞ்செய்த ஆட்டின் ஊனைத்தின்றும் பாற்கடலில் எழுந்த நஞ்சினைக் கண்டு அஞ்சி ஆ ஆ எங்களுக்கு இரங்கி எந்தாய் அருள்செய்க என்று அவிதா இடும் நம்மவர்களாகிய அத் தேவர்கள்தாமோ. எம்பெருமானொடு தம்மையுஞ் சேர்த்து மூவராவோம் என்று எண்ணி விண் ஆண்டு நிலவுலகத்தில் யாம் முழுமுதற் கடவுளாவோம் என்று செருக்குற்றுத் திரிவுபடும் தவத்தினையுடையவர். அவர்களது அறியாமை என்ன தீவினைப் பயன் என்போம் என்பதாம்.

சாவ முன்னாள் தக்கன் வேள்வித் தகர் தின்று என்றது ததீசி முனிவரது இடித்துரையாலும் திருநந்தி தேவர் உமையம்மையார் என்பவர்களின் ஆணைமொழியாலும் தக்கனது வேள்வி அழிவுபடும் என்றும் அவ்வேள்வியிற் புகுந்துள்ள தாம் எல்லோரும் இறந்துபடநேரும் என்றும் அறிந்திருந்தும் அந்த யாகத்தினின்றும் நீங்கமாட்டாது சாகும் வண்ணம் அவியாகிய ஆட்டினைத் தின்று என்றவாறு. தின்றும் என்னும் உம்மை தொக்கது.

நஞ்சம் அஞ்சி அவிதாஇடும் நம்மவர் என்றது, சாவாதிருக்க அமுதுண்ணக்கருதித் திருப்பாற்கடலைக் கடைந்த காலத்துத் தோன்றிய நஞ்சினைக் கண்டு அஞ்சித் தங்களைப் பாதுகாக்க வேண்டுமென்று முறையிடுசெய்யும் நம்போன்ற சகல வர்க்கத்தினராகிய தேவர் என்றவாறு. நஞ்சையஞ்சி என இரண்டாவது விரிக்க இனி, நஞ்சின் அஞ்சி என ஐந்தாவது விரிப்பினுமமையும். "அச்சக் கிளவிக் கைந்து மிரண்டு மெச்ச மிலவே பொருள்வயி னான்" என்பது தொல்காப்பியம் (வேற்றுமயங் 17) நஞ்சம் அஞ்சியமை.

"வடங்கெழு மலைமத்தாக வானவ ரசுரரோடு
கடைந்திட வெழுந்தநஞ்சங் கண்டுபல் தேவரஞ்சி" (நாவு 65 : 2)

எனத் தேவாரத்து வருதலானுமறிக.

தின்று அஞ்சி அவிதாவிடும் நம்மவர் என இயையும் ஆஎன்பது ஆவா என்பதன் குறுக்கம். ஆவா என்பது இரக்கக் குறிப்பிடைச்சொல். அவிதா என்பது துன்பம் நேர்ந்து இறைவனை நினைந்து ஓலமிடும் ஓர் ஓலச்சொல். *'சிவதா' என்பது போல. நஞ்ச மஞ்சி தேவர் ஓலமிட்டமை, "அருந்தே ரழிந்தன மாலமென் றோலமிடு மிமையோர்" எனத் திருக்கோவையாரில் (329) வருதலானுமறியப்படும்.

---

* பெரியபுராண எறிபத்தர் 16—18 பார்க்க.

மூவரென்றே எம்பிரானொடு மெண்ணி என்றதனால் நம்மவர் என்றது பிரம விட்டுணுக்களாகிய இருவரை. இவர் சகல வர்க்கத்தினராய் நம்மைப் போல மும்மலமுடைய உயிரினத்தவராகலின் 'நம்மவர்' என்றார். பிறர் கூறும் பெருமை இவர்க்கின்மையிற் 'பொய்வானவர்' எனத் திருக்கோவையாரில் (67) கூறப்படுதலும் ஈண்டு அறியற்பாலது. அவரே என்புழி ஏகாரம் வினப்பொருளில் வந்து இழிவைக் குறித்தது.

இவர் மகாருத்திரனாகிய பரமசிவனைக் குணிருத்திரனாக வைத்து அவனொடு தம்மையும் ஒத்தநிலையில் வைத்துப் பிரமன் விஷ்ணு உருத்திரன் என மூவராக எண்ணினராதலின் 'மூவரென்றே யெம்பிரானொடு மெண்ணி' என்றார். 'மகாருத்திரனாகிய பரமசிவனைக் குணிருத்திரனாக வைத்தெண்ணுவோரை நோக்கி, நம்மவரே, மூவரென்றே யெம்பிரானொடு மெண்ணி விண்ணாண்டு மண்மேற், றேவரென்றே யிறுமாந்தென்ன பாவந் திரிதவரே' என வாதவூரடிகள் இரங்கிக்கூறிய திருவாக்கும் அறிக' எனச் சிவஞானபாடியத்து (முதற் சூத்திரவுரை) வருதலுங் காண்க. பரமசிவன் மும்மூர்த்திகளுக்கும் தலைவன் என்பதை,

"தேவர்கோ வறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன்" (சத 30)

"முந்து நடுவு முடிவுமாகிய மூவரறியாச்
சிந்துரச் சேவடி யானை" (குயிற் 5)

"முந்திய முதனடு விறுதியு மானாய், மூவருமறிகிலர்" (திருப்பள்ளி 8)

என இத்திருவாசகத்தும்,

"தேவராயு மசுர ராயுஞ் சித்தர் செழுமறை சேர்
நாவராயு நண்ணுபாரும் விண்ணெரி காலீரும்
மேவராய விரைமலரோன் செங்கண்மா லீசனென்னும்
மூவராய முதலொருவன் மேயதுமுதுகுன்றே" (ஞான 53 : 1)

"வரியாய மலரானும் வையந்தன்னை
உரிதாய வளந்தானு முள்ளுதற்கங்
கரியானு மறியாத கள்ளின் மேயான்
பெரியானென் றறிவார்கள் பேசுவாரே" (ஞான 119 : 9)

"மவையுரித்ததன் கொண்டங்க மணிந்தவனை வஞ்சர்மனத்தி
றையுநெஞ்சணுகாதவனை, மூவருருத்தனதா மூலமுதற்கருவை"

எனத் தேவாரத்தும், (சுந் 84 : 7)

"தேவரின் ஒருவன் என்பர் திருவுருச் சிவனைத் தேவர்
மூவராய் நின்ற தோரார்" (சூத் 1, செய் 49)

எனச் சிவஞானசித்தியாரிலும்,

"அரியாகிக் காப்பானயனுய்ப் படைப்பா
னரனு யழிப்பானுந்தானே" (திருக்கைலாயஞான 5)

"வீரனயனரி...யாருமறியாவகை யெங்களீசர் பரிசுகளே"
(பொன்வண்ணத் 95)

எனப் பதினொராந்திருமுறையிலும் வருவனவற்றாலும் உணர்க.

பிரம விட்டுணுக்களால் விண்ணுலகில் ஒவ்வோர் உலகங்கள் ஆட்சி செய்யப்படுதலின் 'விண்ணாண்டு' என்றார். இவர் மண்மேல் தம்மைப் பரம்பொருளாகக் கருதி இறுமாத்தலின் 'மண்மேற் றேவரென்றே யிறுமாந்து' என்றார். தேவர் என்பது ஈண்டு பரமசிவனைக் குறித்தலின் ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி, இதனைத் 'தேவரென்றது ஒருவரை கூறும் பன்மைக்கிளவி; "மண்மேற்றேவரென்றே யிறுமாந்து" என்றார் பிறரும்' என நச்சினார்க்கினியர் உரைத்தமையானும் (சீவக 1513 உரை) தெளிக. என்றே என்பதில் ஏகாரம் தேற்றம். 'இறுமாந்து என்ன பாவந் திரிந்தவரே' என்பது அடிகள் அவர்களின் அறியாமை கருதி இரங்கிக் கூறியவாறு. என்னபாவம் என்பதற்கு இஃதென்ன தீவினையின் பயன் இருந்தவாறு எனினுமாம்.

தவர்-தவத்தினையுடையவர். "திரிதவர் கண்ணுள்ளும் உள்ளத்தினுள்ளும் திரிதரினும்" (பொன்வண்ணத்) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. திரிதவர் திரிவுபடும் தவத்தினையுடையவர். தவத்தில் திரிவுபாடு என்னையெனில், பயன் கருதாது நோற்கும் தவமும் பயன்கருதி நோற்கும் தவமும் எனத் தவம் இருவகைப்படும். நீத்தவராகிய பெரியோர் தவம் பயன்கருதாமையின் திரிவுபாடிலதாகும். பயன்கருதும் தக்கன் முதலிய தேவர், சூரபன்மன் முதலிய அவுணர் நோற்கும் தவம் திரிவுபட்டு இடுக்கணுண்டாக்கியமை வரலாறுகளால் உணரலாம். அந்தாதித் தொடையான இச்சதகத்தில் அடுத்த திருப்பாட்டு "தவமே புரிந்திலன்" எனத் தொடங்குதலின் 'திரிதருவர்' என்பது ரகரவுகரங் கெட்டுத் திரிதவர் என்றாயிற்று எனக் கோடல் பொருந்தாதென்க.

இதன்கண் சிவபெருமானை மூவருள் ஒருவனாகக் கருதாது அம்மூவரையும் இயக்கி ஆளும் முழுமுதல்வன் என்று உணர்தல் வேண்டும் என்பதனால் மெய்யுணர்தல் என்னும் பதிகப்பொருள் புலப்படுமாறு காண்க. 4

9. **தவமே புரிந்திலன் தண்மலர் இட்டுமுட் டாதிறைஞ்சேன்**
**அவமே பிறந்த அருவினை யேன்உனக் கன்பருள்ளாஞ்**
**சிவமே பெறுந்திரு எய்திற்றி லேன்நின் திருவடிக்காம்**
**பவமே யருளுகண் டாய்அடி யேற்கெம் பரம்பரனே.**

ப-ரை: எம் பரம் பரனே-எங்கள் மேலோர்க்கும் மேலோனே, தவமே புரிந்திலன்-அடியேன் தவத்தைச் செய்திலேன்: தண் மலர் இட்டு முட்டாது இறைஞ்சேன்-குளிர்ந்த மலர்களை இட்டு நின்னைக் குறைவுற வணங்

தேன்; அவமே பிறந்த அருவினையேன்-பயனின்றிப் பிறந்த கடத்தற்கரிய தீவினையுடையேன், உனக்கு அன்பர் உள் ஆம்-உனக்கு அன்பராயுள்ளார் நடுவிலிருக்கும், சிவமே பெறும் திரு எய்திற்றிலேன் - வீட்டின்பத்தையே அடைதற்கேதுவாகிய செல்வத்தை அடைந்திலேன்; அடியேற்கு நின் திருவடிக்கு ஆம் பவமே அருளு-அடியேனாகிய எனக்கு நின் திருவடியை அடைதற்குரிய பிறவியையே அருள்செய்வாயாக.

எம் பரம்பரனே, தவமே புரிந்திலன்; மலர்இட்டு நின் திருவடியை வணங்கேன்; பயனின்றிப் பிறந்த கடத்தற்கரிய தீவினையையுடையேன் உனக்கு அன்பராயுள்ளார் நடுவிலிருக்கும் சிவமே பெறும் திருஎய்திற்றிலேன்; இனியாயினும் நின் திருவடியை அடைதற்குரிய பிறவியை அடியேற்கு அருள்செய்ய வேண்டும் என்பதாம்.

தவம் என்றது ஈண்டு சிவாச்சிரம ஒழுக்கநெறிகளை. தவமே என்புழி ஏகாரம் தேற்றப்பொருட்டு, தண்மலர் என்றார் நாண்மலராதல் தோன்ற. இறைஞ்சுதற்கு மலர் சிறந்ததாதலின் 'மலரிட்டு' என்றார்.

"இலையார் மலர்கொண் டேல்வி நண்பகல், நிலையா வணங்க
நில்லா வினைகளே" (ஞான 25 : 5)

'தண்ண மலர்தூவித் தாள்கள் தொழுதேத்த, எண்ணு
மடியார்கட்கு இல்லை இடுக்கணே" (ஞான 86 : 9)

"இச்சையான் மலர்கள் தூவி யிரவொடு பகலுந் தம்மை
நச்சுவார்" (நாவு 66 : 1)

"விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்டர் நாயகன் தன்னடி சூழ்மின்கள்" (நாவு 195 : 1.)

எனத் தேவாரத்து வருவனவும் காண்க.

முட்டாது-குறையாது. "செய்கடன் முட்டா வண்ணந் திருப்பணி செய்யும் நாளில்" பெரியபுரா. அரிவாட் 12. முட்டாது இறைஞ்சேன் என்றது மந்திரலோபம், தந்திரலோபம், கிரியாலோபம், திரவியலோபம், பத்திலோபம் முதலிய குறைபாடுகளின்றி வணங்கேன் என்றவாறு.

உனக்கன்பருள்ளாம் திரு, சிவமே பெறுந்திரு எனத் தனித்தனி இயைக்க. இறைவனுக்கு அன்பராயுள்ளார் நடுவிலிருத்தலும் செல்வமாதலின் 'அன்பருள்ளாந் திரு' என்றார். அதனை வேண்டுதல், "உன்னடியார் நடுவுளிருக்கு மருளைப்புரியாய்" (கோயில் மூத் 1) என்பதனாலுமறிக. அது சிவத்தையே பெறுதற்கு வாயிலாதலின் 'சிவமே பெறுந்திரு' என்றார்.

'தவமே புரிந்திலன்' எனவும், 'தண்மல ரிட்டு முட்டா திறைஞ்சேன்' எனவும், 'அவமே பிறந்த அருவினையேன்' எனவும், 'அன்பருள்ளாம் சிவமே பெறுந்திரு எய்திற்றிலேன்' எனவும் அடிகள் அருளியது இயல்பாகத் தம்மைத் தாழ்த்திக்கூறும் முறைமைபற்றியாகும்.

திருவடிக்காம் பவம்-திருவடியைப் பெறுதற்குரிய தகுதியமைந்த மானிடப்பிறப்பு. "இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால், மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிம்மா நிலத்தே" (தே 81 : 4) என அப்பரடிகள் அருளியமையுங் காண்க. பவம்-பிறப்பு. ஏகாரம் தேற்றப் பொருளது.

இதன்கண் தவம்புரிதலும் மலரிட்டு இறைஞ்சுதலும் அன்பருள்ளாம் சிவமே பெறுந்திரு எய்துதலுமே மெய்ம்மை என உணரப்படுதலால் மெய்யுணர்தல் என்னும் முதற்பத்து நுதலிபொருள் போதருதல் காண்க.5.

10 பரந்துபல் லாய்மல ரிட்டுமுட் டாதடி யேயிறைஞ்சி
இரந்தவெல் லாமெமக் கேபெற லாமென்னும் அன்பருள்ளங்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன் வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாயரு ளாய்நின்னை யேத்த முழுவதுமே.

ப-ரை : பரந்து பல் ஆய் மலர் இட்டு-விரிவாகப் பல ஆராய்ந்து எடுக்கப்பட்ட மலர்களைப் பெய்து முட்டாது அடியே இறைஞ்சி-குறைவுபடாமல் திருவடிகளையே சிறப்பாக வணங்கி, இரந்த எல்லாம் எமக்கே பெறலாம் என்னும்-ஈயுப்படி வேண்டிக்கொண்ட எல்லாவற்றையும் எமக்குப் பெற்றுக்கொள்ளலாம் என்று கருதுகின்ற. அன்பர் உள்ளம் கரந்து நில்லா கள்வனே-அன்பர்களுடைய உள்ளத்தில் மறைந்து நில்லாத கள்வனே, நின்னை முழுவதும் ஏத்த-உன்னையே முழுவதும் வாழ்த்தும் வண்ணம், நின் தன் வார் கழற்கு அன்பு-நின்னுடைய நீண்ட கழலணிந்த திருவடிக்கட் செய்யும் அன்பினை, எனக்கு நிரந்தரமாய் அருளாய் - அடியேனுக்கு இடையீடின்றி நிகழும்படி அருள்செய்வாயாக.

விரிவாக மலர்களை இட்டுக் குறைவுபடாது நின் திருவடிகளையே வணங்கி இரந்தவெல்லாம் எமக்குப் பெறலாம் என்று கருதுகின்ற அன்பர்களுடைய உள்ளத்தில் கரந்து நில்லாத கள்வனே, நின்னை முழுவதும் வாழ்த்தும் வண்ணம் நின்னுடைய திருவடிக்கட் செய்யும் அன்பினை எனக்கு நிரந்தரமாய் நிகழும்படி அருள் செய்வாயாக என்பதாம்.

பரந்து என்னும் எச்சத்தைப் பரக்கவெனத் திரித்து இறைஞ்சி என்னும் வினையொடு முடிக்க. மலரிட்டு அடி இறைஞ்சுதல் இறைஞ்சுவார் நிலைமைக்குத்தகச் சுருக்கமாகவும் விரிவாகவும் அமையும். இங்கு பரந்து என்பது விரிவாக என்னும் பொருளில் வந்தது. இனி, பரந்து என்பதற்குப் பலதலங்கள்தோறும் சென்று எனினுமாம். "வினைகெடப் பள்ளமும் மேடும் பரந்து திரிவரே" எனத் திருமந்திரத்து (509) வருதலுங் காண்க.

பன்மலர் என்றது கோட்டுப்பூ கொடிப்பூ நீர்ப்பூ நிலப்பூ என்பவற்றை. ஆய்மலர் என்றது எடுத்துவைத்து அலர்ந்தபூவும் தானே விழுந்துகிடந்த பூவும் பழம்பூவும் உதிர்ந்தபூவும் அரும்பும் இரவில் எடுத்த பூவும் கை

சில்லை எருக்கிலை ஆமணக்கிலை என்பவற்றிற் கொணர்ந்த பூவுமாகிய விலக்கி யன ஒழித்து, உரியகாலத்தில் உரியமுறைப்படி புழுக்கடி எச்சந்தாக்கல் சிலந்தி கூடுகட்டல் மயிர்சுற்றல் முதலிய குற்றங்கள் இல்லாதனவாக ஆராய்ந்து எடுத்த மலர்களை. திருவடி இறைஞ்சுதற்கு மலர் சிறந்ததா தலின் 'மலரிட்டு' என்றார். "எய்ந்த மாமலரிட்டு முட்டாததோர் இயல் பொடும் வணங்காதே" (அற்புதப் 2) எனவும் "மற்றுன்று மாமலரிட் டுன்னை வாழ்த்தி வந்தித்தலன்றி" (திருக்கோவை 178) எனவும் வருவன வும் காண்க.

அடியே இறைஞ்சி இரந்தவெல்லாம் எமக்கே பெறலாமென்னும் அன்பர் என்க. அடியே என்பதில் ஏகாரம் தேற்றம். இறைஞ்சி என்ற வினையை இரந்த என்பதனோடு முடிக்க. இரத்தல்-இன்னது தருகவென வேண்டிக்கோடல். எமக்கே என்பதில் ஏகாரம் அசை.

அன்பருள்ளம் கரந்து நில்லாக் கள்வன் என்றது அன்பருள்ளத்தில் மறைந்து நிற்றமுடியாது வெளிப்படுகின்ற கள்வன் என்றவாறு. "அடி யார்க்குக், கரக்ககில்லா தருள்செய் பெருமான்" எனத் தேவரத்து (ஞான 195 : 8) வருதலும் காண்க. இதனால் அன்பரல்லாதார் உள்ளத் துக் கரந்து நிற்பவன் என்பது போதரும்.

வார்கழல் என்பது அதனையுடைய திருவடியை உணர்த்தியது. 'கழற்கு' என்னும் நான்காவது ஏழாவதன் பொருட்கண் வந்தது. "எம்பிரான் தில்லைச் சூழ்பொழிற்கே" (திருக்கோவை 167) என்புழிப்போல. வீடு பயக்கும் இறையருளையுண்டாக்கத் திருவடியிடத்துச் செய்யும் அன்பு சாதனமாதலின் 'உன்தன் வார்கழற்கு அன்பு அருளாய்' என்றார். "மெய் யன்பை உடையாய் நான் பெறவேண்டுமே" "அணியா ரடியா ருனக் குள்ள அன்புந் தாராய்" (பிரார்த்த 318) என அடிகள் பிறண்டு அருளி யமையுங் காண்க.

"கோலநீடிய நிதிபதி வாழ்க்கையுங் குறியேன்
மேலையிந்திரன் அரசினைக் கனவிலும் வெஃகேன்
மாலயன்பெறு பதத்தையும் பொருளென மதியேன்
சாலநின்பதத் தன்பையே வேண்டுவன் தமியேன். பானு 154.

எனக் கந்தபுராணத்து வருதலும் ஈண்டறியற்பாலது.

நிரந்தரம்-இடையீடின்மை. வடசொல் 'புல்லைப்புன்மையிலே, நிரந் தரமாய் நின்ற வென்னையும்" (11-ந் திருமுறை கோயிற்றிருப்பண்ணியர் 41) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அன்பு நின்பால் இடையீடின்றி நிகழவேண்டுமென்பார் 'நிரந்தரமாயருளாய்' என்றார்.

"ஏழையென்புன்மை கருதா திடையறு வன்பெனக்கு
வாழி நின்பாத மலர்க்கே மருவ வருளுகண்டாய்

எனப் பதினொராந்திருமுறையில் வருதலும் காண்க. அவ்வன்பு நின்னை ஏத்துவதற்கே பயன்பட வேண்டுமென்பார் 'நின்னை ஏத்தமுழுவதுமே

என்றார். ஏத்துதல்-வாழ்த்துதல். "சிறப்புச் செய் துழையராப் புகழ் பேத்தி" (கலி 25 : 15) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

இதன்கண் நின்றன் வார்கழற் கன்பெனக்கு நிரந்தரமாய் அருளாய் என்பதனால் மெய்யுணர்தல் என்னும் முதற்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 6.

11. முழுவதுங் கண்ட வனைப்படைத் தான்முடி சாய்த்து முன்னாட்
செழுமலர் கொண் டெங்குந் தேட அப் பாலனிப் பால்எம்பிரான்
கழுதொடு காட்டிடை நாடகமாடிக் கதியிலியாய்
உழுவையின் தோலுடுத் துன்மத்த மேல்கொண் டுழிதருமே.

ப-ரை: முழுவதும் கண்டவனை படைத்தான்-உலகம் முழுவதும் படைத்தவனாகிய பிரமதேவனைத் தனது உந்திக்கமலத்தினின்றும் தோற்றுவித்தவனாகிய திருமால், முன் நாள்-முன்னொரு காலத்தில், முடி சாய்த்து-தலைவணங்கி, செழு மலர் கொண்டு எங்கும் தேட-செழுமையாகிய தாமரை மலர்களைக் கரங்களிற் கொண்டு பூசித்து எவ்விடங்களிலும் தேட, அப்பாலன் எம்பிரான்-அப்பாற் பட்டிருந்தவனாகிய எங்கள் தலைவன், இப்பால்-காண்டற்கு அரிதாகிய தன் நிலைமைக்கு மாறாக இவ்வுலகில், கழுதொடு காட்டிடை நாடகம் ஆடி-பேய்க்கணங்களோடு கூடிச் சுடுகாட்டிற் கூத்தாடி, கதி இலியாய்-போக்கு இல்லாதவனாய், உழுவையின் தோல் உடுத்து-புலியின் தோலை ஆடையாக உடுத்து, உன்மத்தம் மேல்கொண்டு உழிதரும்-மிக்க களிப்பை மேற்கொண்டு அலைந்து திரிவான். அவன் நிலைமை இருந்தவாறென்னே.

எல்லாவற்றையும் படைத்தவனாகிய பிரமதேவனை உந்திக்கமலத்தினின்றும் தோற்றுவித்தவனாகிய திருமால் தலைவணங்கிச் செழுமையாகிய தாமரை மலர்களைக் கையிற்கொண்டு பூசித்து எங்கும் தேடவும் அப்பாற் பட்டிருந்தவனாகிய எங்கள் தலைவன் இவ்வுலகில் பேய்க்கணங்களோடு கூடிச் சுடுகாட்டின்கண் கூத்தாடிக் கதியிலியாய் புலியின்தோலை ஆடையாக உடுத்து உன்மத்த மேல்கொண்டு அலைந்து திரிவான். அவன் நிலைமை இருந்தவாறென்னே.

முழுவதும் என்றது, பிரமன் படைப்பாகிய அண்டத்துக்குட்பட்ட உலகம் முழுவதையும் குறித்தது. கண்டவன்-படைத்தவன். என்றது பிரமனை, "ஞாலமுன் படைத்தான் நளிர்மாமலர் மேலயன்" (ஞான 146 : 9) எனவும் "முந்தியிவ் வுலகமெல்லாம் படைத்தவன்" (நாவு 73 : 8) எனவும் தேவாரத்து வருவனவுங் காண்க. காண்டல்-படைத்தல். இப்பொருட்டாதல் "நீ கண்டனையோம்" என்பதற்கு நின்னாற் 'படைக்கப்பட்டாற் போல்வேம்' என்னும் (பதிற் 63 : 14) உரைப்பகுதியானுமறிக. கண்டவனைப் படைத்தான் என்றது திருமாலை. "உவணக்கொடியினன் உந்திமலர்த்தோன்றிப், பார்முதற் படைத்தவன்" எனக் கல்லாடத்து

(78:7-8) வருதலுங் காண்க. முழுவது கண்டவன் எனப் பிரமன் ஆற்றல் கூறியது அவனைப் படைத்தானாகிய திருமாலின் ஆற்றல் தோன்றற் பொருட்டென்க.

திருமால் முன்னாள் முடிசாய்த்துச் செழுமலர் கொண்டு பூசித்து எங்கும் தேடியது சக்கராயுதத்தைப் பெறும் பொருட்டாகும். திருமால் சக்கரத்தைப் பெறவேண்டிச் சிவபெருமானை நாடோறும் ஆயிரம் செந்தாமரை மலர்கொண்டு நெடுங்காலம் பூசித்தும் இறைவன் காட்சி அரிதாக, அதனால் வருந்திய உள்ளத்தோடும் ஒருநாள் பூசிக்கும்போது ஆயிரம் மலரில் ஒன்று குறையத் தன்கண் மலரை இறைவன் திருவடியிற் சாத்தி வழிபட்டு அருள் பெற்றனன் என்பது வரலாறு.

"பங்கயம் ஆயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்கண் இடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரமாற் கருளியவா
றெங்கும் பரவிநாந் தோணோக்கம் ஆடாமோ" (தோணோ 10)

என அடிகள் அருளியமை காண்க. இங்கே அத்திருமால் இறைவனை நெடுங்காலம் பூசித்தும் காணப் பெருமையளவிற் கூறப்பட்டது.

முடிசாய்த்தல்-தலைவணங்கல். "முனிந்தாள லென்று முடிசாய்த்து நின்றான்" (நள. கலிநீங்கு 69) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. 'முடிசாய்த்து' என்றமையாலும் 'செழுமலர் கொண்டு' என்றமையாலும் திருமால் இறைவன் திருவடியைக் காணக் கடுமுரண் ஏனமாகிச் சென்ற வரலாற்றினைக் கூறுதல் ஈண்டுப் பொருந்தாதென்க. திருமால் செழுமலர் கொண்டு தேட அப்பாலன் ஆனது திருமாலின் அன்பின் மிகுதியாலாகும் உயர்ந்த செயலை நம்மனோர்க்குப் புலப்படுத்தும் பொருட்டாகும்.

இப்பால் என்றது இவ்வுலகில் தனது அரிய நிலைக்கு மாறாக எளியனாய் என்னும் பொருளை ஆற்றலால் தந்தது. "எல்லாவுலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய் நல்லார் உளத்துமிக்கருள் நல்கலால்" எனத் திருமந்திரத்து (1576) வருதலும் காண்க. கழுது, பேயாயினும் ஈண்டு பேய்வடிவங் கொண்ட சிவகணங்களைக் குறித்தது. காடு-சுடுகாடு. ஈண்டு, இறைவன் உலகம் முழுவதையும் தன்னுள் ஒடுக்கிய பேருக்காலத்து அவ்விறைவன் அமைந்த இடத்தைக் குறித்தது. நாடகம்-ஐந்தொழிற்கூத்து.

கதியிலி என்றது எங்கும் நிறைந்தவனாதலின் போக்கும் வரவும் இல்லாதவன் என்றபடி. "போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே" (சிவபுரா 77) என அடிகள் அருளியமையுங் காண்க.

உழுவை-புலி. உழுவையின் தோலுடுத்து என்றது தாருகாவனத்து முனிவர்கள் மீமாஞ்சக நெறிநின்று வேள்வி இயற்றித் தம்மைக் கொல்லுமாறு விடுத்த புலியைக்கொன்று அதன் தோலை உடுத்து என்றவாறு.

உன்மத்தம்-பெருங்களிப்பு. மேல்கொண்டு என்றது உடையனாய் என்றபடி. உழிதருதல்-சுற்றித்திரிதல். "புலியதளே யுடையாகத் திரிவான் தன்னை" (நாவு 281 : 7) எனத் தேவாரத்து வருதலும் காண்க.

இங்கே பேய்களோடு சுடுகாட்டில் கூத்தாடியும், கதியற்றவனாகியும், புலித்தோல் உடுத்தவனாகியும், பித்து மிகுதியுடையவனாகியும் சுற்றித் திரிவான் என இறைவனது எளிமை தொனிப்பொருளாகத் தோன்றுமாயினும், கழுதொடு காட்டிடை நாடகமாடுதலும், கதியிலியாதலும், உழுவையின்தோல் உடுத்தலும், உன்மத்தம் மேல்கொண்டு உழிதருதலும் அவனது இறைமைக் குணங்களையே நன்கு புலப்படுத்துவனவாகும்.

இதன்கண் இறைவனது இறைமைக் குணங்கள் புலப்படுதலின் மெய்யுணர்தல் என்னும் முதற்பத்து நுதலியபொருள் புலப்படுமாறு காண்க. 7.

12. உழிதரு காலுங் கனலும் புனலொடு மண்ணும் விண்ணும்
இழிதரு காலமெக் காலம் வருவது வந்ததற்பின்
உழிதரு கால்அத்த உன்னடி யேன்செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாயவை காத்தெம்மைக் காப்பவனே.

ப-ரை: உழிதரு காலும் கனலும் புனலொடு மண்ணும் விண்ணும்-ஓரிடத்து நில்லாது திரியும் காற்றும் தீயும் நீரும் நிலனும் விசும்புமாகிய இவ்வைம்பெரும் பூதங்களும், இழிதரு காலம் வருவது எக்காலம்-தத்தம் நிலையினீங்கி ஒடுங்குகின்ற காலம் வருவது எக்காலமோ? வந்ததற் பின்-பூதங்களின் ஒடுக்க காலமாகிய பேரூழிக்காலம் வந்த பின்னரும், உழிதரு கால் அத்த-ஓய்வின்றி அசைந்தாடும் திருவடியையுடைய தந்தையே, உன் அடியேன் செய்த வல்வினையை-உன் அடிமையாகிய யான் செய்த வலிய வினைகளை, கழிதரு காலமுமாய் – நீக்குகின்ற காலதத்துவமும் ஆகி, அவை காத்து-அவ்வினைகள் அடியேனைத் தாக்காவண்ணம் தடுத்து, எம்மை காப்பவனே-என்னையும் என்னைப் போன்ற ஏழை அடியாரையும் காப்பாற்றியருள்பவனே, அதனைக் கூறியருள்க.

க-ரை: ஐம்பெரும்பூதங்களும் தத்தம் நிலையினீங்கி ஒடுங்குகின்ற காலம் வருவது எக்காலமோ? பூதங்களின் ஒடுக்ககாலமாகிய பேரூழிக்காலம் வந்தபின்னரும் ஓய்வின்றி அசைந்தாடும் திருவடியையுடைய தந்தையே! உன்னடியேன் செய்த வல்வினையை நீக்குகின்ற காலதத்துவமுமாகி அவ் வினைகள் அடியேனைத் தாக்காவண்ணம் தடுத்து எம்மைக் காப்பவனே, அதனைக் கூறியருள்க.

காற்று எப்பொழுதும் ஓரிடத்து நில்லாது அசைந்துகொண்டேயிருத்தலின் 'உழிதருகால்' என்றார். உழிதரு-ஓரிடத்து நில்லாது திரியும். "இப்பொருட்டாதல் உழிதரு பெருநிதி யுவப்ப நல்கினான்" (சீவக 330) என்புழி உழிதரு என்பதற்கு 'ஓரிடத்து நில்லாது திரியும்' என நச்சி

னார்க்கினியர் உரைத்தமையும் காண்க. சுழலும் எனினுமமையும். உழிதருகால் எனக் காற்றின் இயல்பு கூறியதனால் வெங்கனலும் தண்புனலும் திணிநிலனும் அகல்விண்ணும் என மற்றைய பூதங்களின் இயல்புகளும் கொள்ளப்படும். செய்யுளாதலின் காலும் கனலும் புனலும் மண்ணும் விண்ணும் என பிறழக் கூறினாராயினும் மண் புனலிலும், புனல் கனலிலும், கனல் காலிலும், கால் விண்ணிலும் ஒடுங்கித் தத்தம் நிலையின் நீங்கும் என்க.

"இருநிலனது புனலிடை மடிதர வெரிபுக வெரியது மிகு
பெருவெளியினிலவிதர வளிகெட வியனிடை முழுவதுகெட"

எனத் தேவாரத்து வருதலும் காண்க. (ஞான 22 : 7)

இழிதருகாலம் - தத்தம் நிலையினீங்கும் காலம். என்றது அவை ஒடுங்கும் பேரூழிக்காலத்தை. இழிதருகாலம் வருவது எக்காலம் என அடிகள் வினவியது ஐம்பெரும்பூதங்களின் ஒடுக்கத்தின் பின்னர்த்தானே தம் வினையொடுங்கித் திருவடியிற் கலத்தல் உளதாகும் என அதன்கணுள்ள பெருவிருப்பினால் என்க. வந்ததற் பின்னும் என உம்மை விரிக்க.

உழிதருகால்-உலகம் ஒடுங்கிய பின்னும் ஓய்வின்றி அசைந்தாடும் திருவடி. இறைவனது அருட்கூத்துக்கு ஒருபொழுதும் இடையீடின்மையின் அங்ஙனம் அருளிச் செய்யப்பட்டது. அடியேன் செய்த வல்வினை எனப் பொதுப்படக்கூறினும் எடுத்த பிறப்பு முகந்து நின்ற பிராரத்த வினையொழிந்த சஞ்சித ஆகாமிய வினைகளே இங்கு கூறப்பட்டன.

கழிதரு காலம்-நீங்குகின்ற காலதத்துவம் கால முதலிய தத்துவங்கள், உயிர்கள் வினைப்பயனை அனுபவித்து ஈடேறும் பொருட்டு அமைக்கப் பட்டனவாகிய ஒற்றுமைபற்றிக் 'கழிதரு காலமுமாய்' என இறைவன் மேல் ஏற்றிக்கூறினார். அவை காத்தல்-காலதத்துவத்தில் நீங்காது நின்ற சஞ்சித ஆகாமிய வினைகள் தாக்காதவாறு தடுத்தல். எம்மை என்ற பன்மை தம்மையும் தம்போன்ற அடியாரையும் உளப்படுத்திநின்றது.

இதன்கண் 'உழிதரு காலுங் கனலுங் புனலொடு மண்ணும் விண்ணும், இழிதரு காலம் எக்காலம் வருவது' என்பதனால், ஐம்பெரும்பூதங்களும் அவற்றின் காரியமாகிய உலகங்களும் ஒடுங்கும் என்னும் மெய்யுணர்வு புலப்படுதலின் மெய்யுணர்தல் என்னும் முதற்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 8.

13. பவனெம் பிரான்பனி மாமதிக் கண்ணிவிண் ணோர்பெருமான்
சிவனெம் பிரானென்னை யாண்டுகொண் டானென் சிறுமைகண்டும்
அவனெம் பிரானென்ன நானடி யேனென்ன விப்பரிசே
புவனெம் பிரான்தெரி யும்பரி சாவ தியம்புகவே.

ப-ரை: பவன்-உலகத்தோற்றத்திற்கு நிமித்தகாரணமாயுள்ளவனும், எம்பிரான்-எம்பெருமானும், பனி மா மதி கண்ணி-குளிர்ச்சியும் பெருமை

யும் பொருந்திய பிறைத்திங்களை முடிமாலையாகவுடையவனும், விண்ணோர் பெருமான்-தேவர் தலைவனும், சிவன் - செம்பொருளாயுள்ளவனுமாகிய, எம்பிரான் - எங்கள் தலைவன், என் சிறுமை கண்டும் - பெரியோனாகிய தான் ஏற்றுக்கொள்ளக்கூடாத எனது இழிவரலை அறிந்திருந்தும், என்னை ஆண்டுகொண்டான் - என்னை அடிமையாக ஏற்றுக்கொண்டான்; அவன் எம்பிரான் என்ன-அத்தகைய பெரியோன் எங்கள் ஆண்டானாகவும், யான் அடியேன் என்ன-சிறியேன் அவனுக்கு அடியேனாகவும் உள்ள இப் பரிசே-இந்த ஆண்டான் அடிமைத் தொடர்பாகிய இயல்பே, புவன் எம் பிரான் தெரியும் பரிசு ஆவது இயம்புக - சிதாகாயத்திலுள்ளவனும் எங் கள் தலைவனுமாகிய இறைவனை அறிந்துகொள்ளும் தன்மை எனக் கூறுக.

பவனும் எம்பிரானும் மதிக்கண்ணியனும் விண்ணோர் பெருமானும் சிவனுமாகிய எம்பிரான் என் சிறுமை கண்டும் என்னை ஆண்டுகொண்டான். அத்தகைய பெரியோன் எங்கள் ஆண்டானாகவும் சிறியேன் அவனுக்கு அடியேனாகவும் உள்ள இந்த ஆண்டான் அடிமைத்தொடர்பாகிய இயல்பே புவனும் எம்பிரானுமாகிய இறைவனை அறிந்து கொள்ளும் தன்மையாகும் எனக் கூறுக என்பதாம்.

பவன் என்பது இறைவனது அட்டமூர்த்தீசுவரர்களது திருநாமங்களுள் ஒன்று. உலகத்தோற்றத்திற்குக் காரணமாயுள்ளவன் என்பது பொருள். இறைவன் அட்டமூர்த்திசுவர நாமங்களாவன: பவன் சர்வன் ஈசானன் பசுபதி உருத்திரன் உக்கிரன் பீமம் மகாதேவன் என்பனவாம்.

பனிமாமதிக் கண்ணி-குளிர்ச்சியும் பெருமையும் பொருந்திய பிறைத் திங்களைக் கண்ணியாகவுடையவன். "பனிமாமதிச் சென்னியான்" (தே. ஞான 303 : 9) எனவும் "பசும்பணிக்கோடு மிலைந்தான்" (திருக் கோவை 149) எனவும் வருவன காண்க. மா என்பது இறைவனால் அணியப்பட்ட பெருமையையுணர்த்த வந்தது. மதி என்றது ஒரு கலையாகிய திங்களை. இதனை, "ஒற்றை வெண்பிறையானை" (தே நாவு 233 : 5) எனவும், "தாரென்ன வோங்குஞ் சடைமுடிமேற் றனித் திங்கள் வைத்த, காரென்ன வாருங் கறைமிடற் றம்பலவன்" (56) என்னும் திருக்கோவையார் உரையில், 'தனித்திங்கள்' என்பதற்கு 'ஒரு கலையாகிய திங்கள்' எனப் பேராசிரியர் பொருளுரைத்தமையானுமறிக. மதிக்கண்ணி-மதியாகிய கண்ணி எனினுமாம். "செழுநீர் மதிக்கண்ணிச் சிற்றம்பலவன்" (கோவை 123) என்பதன் உரையில் மதிக்கண்ணி - மதியாகிய கண்ணி என அதன் உரையாசிரியர் உரைத்தமையுங் காண்க. கண்ணி-முடிமாலை. பிறைமதி முடிமாலைபோல அமைந்திருத்தலின் 'மதிக் கண்ணி' என்றார். கண்ணி-கண்ணியையுடையவன் என்னும் பொருளைத் த[illegible] [illegible]வரவிகுதி புணர்ந்து கெட்ட[illegible] [illegible]றிக் கண்ணிப் பெருமான் என[illegible] இயைப்பினுமமையும்.

விண்ணோர் பெருமான் - தேவர் தலைவன். "விண்ணோர் பெருமானை வீரட்டானை" (நாவு 236 : 2) எனத் தேவாரத்து வருதலும் காண்க. சிவன் - செம்பொருளாயுள்ளவன். "செம்பொருட்டுணிவே" (பிடித் 1) என அடிகள் அருளியமையுங் காண்க.

சிறுமை-சிறிய தன்மை. இழிவு. "வெறுப்பனவே செய்யுமென் சிறுமையை" (அடைக்கலப் 1) என வருதலுங் காண்க. என் சிறுமை கண்டும் ஆட்கொண்டது இறைவன் தன் பேரருளினாலாகும்.

"கடையவ னேனைக் கருணையினாற் கலந்தாண்டுகொண்ட
விடையவனே" (நீத் 1)

"வன்னெஞ்சக் கள்வன் மனவலிய னென்னாதே
கன்னெஞ் சுருக்கிக் கருணையினா லாண்டுகொண்ட" (கோத் 11.)

"ஆனோ அலியோ அரிவையோ வென்றிருவர்
காணாக் கடவுள் கருணையினால் ஆட்கொண்டருளி" (பொன்னூசல் 5)

"கருத்திருத்தி யூன்புக்குக் கருணையினா லாண்டு கொண்ட" (கண்ட 3)

என அடிகள் அருளியமையுங் காண்க.

அவன் என்பது பண்டறி சுட்டாய்ப் பேரருள் குறித்து நின்றது. நான் அடியேன் என்ன என வருதலாற் பிரான் என்றது ஈண்டு ஆண்டான் என்னும் பொருளில் வந்தது. "என்னைத்தான் என்று அறிதலும் தன்னை நானும் பிரான் என்றறிந்தனன்" என்னும் தேவாரத்தும் (நாவு, பொது. குறுந்) இப்பொருட்டாதல் காண்க. நான் என்பது சிறியேன் என்பதைக் குறிப்பிற் புலப்படுத்தி நின்றது.

அவன் எப்பிரான் என்ன நானடியே னென்ன என்பதில் என்ன என்பது ஆக என்னும் பொருளில் வந்தது. "தாரென்ன வோங்குஞ் சடைமுடிமேல்" (திருக்கோவை 56) என்புழிப்போல. அவற்றை ஆற்றலால் வருவிக்கப்பட்ட 'உள்ள' என்னும் பெயரெச்சக் குறிப்பொடு முடிக்க.

புவன் என்பதில் புவ என்பது வானத்தைக் குறிப்பதாயினும் ஈண்டு சிதாகாயத்தை உணர்த்தியது. எனவே புவன் என்பதற்குச் சிதாகாயத்திலுள்ளவன் என்பது பொருளாகும். எம்பிரானை என இரண்டாவது விரிக்க. இப்பரிசே எம்பிரானைத் தெரியும் பரிசாவது இயம்புக. இயம்புகவே என்றது இறைவன் இயல்பையும் உயிரின் இயல்பையும் அறிய விரும்புவார் அவனை ஆண்டானாகவும் உயிரை அடிமையாகவும் அறிய வேண்டுமெனக் கூறுக என்றவாறு.

இதன்கண் இறைவனுக்கும் உயிருக்குமுள்ள ஆண்டான் அடிமைத் திறமாகிய தொடர்பின் உண்மை பெறப்படுதலின் மெய்யுணர்தல் என்னும் முற்பத்து நுதலிய பொருள் புலப்படுமாறு காண்க. 9.

14. புகவே தகேனுனக் கன்பருள் யானென் பொல்லா மணியே
தகவே யெனையுனக் காட்கொண்ட தன்மையெப் புன்மையரை
மிகவே யுயர்த்திவிண் ணோரைப் பணித்தியண் ணாவமுதே
நகவே தகுமெம் பிரானென்னை நீசெய்த நாடகமே.

ப-ரை :- என் பொல்லா மணியே - எனது துளையிடாத மாணிக்கமே. யான் உனக்கு அன்பருள் புகவே தகேன் - யான் உன்னுடைய அன்பர் கூட்டத்தில் புகுதற்கே தகுதியில்லாதவன்; எனை உனக்கு ஆட்கொண்ட தன்மை தகவே - அங்ஙனமாகவும் தகுதியில்லாத என்னை உனக்கு ஆளாகக் கொண்ட தன்மை நின் பெருமைக்குத் தகுதியாகுமோ? எப் புன்மையரை மிகவே உயர்த்தி - எத்தகைய இழிந்தோரையும் மிக உயர்வடையச் செய்து, விண்ணோரை பணித்தி - உயர்ந்தவர்களாகிய தேவர்களைத் தாழ்வடையச் செய்கின்றாய்; அண்ணா - தந்தையே, அமுதே - அமுதம் போன்றவனே, எம்பிரான் - எங்கள் தலைவனே, நீ செய்த நாடகம் நகவே தகும் - நீ இவ்வாறு இயல்பிற்கு மாறாக என்னை ஆட்கொண்டு அருள் செய்த திருக்கூத்து சிறிது நகையாடுதற்கே தக்கதாகும்.

என் பொல்லா மணியே, யான் உன் அன்பர் கூட்டத்திற் புகுதற்கே தகுதியற்றவன்; அங்ஙனமாகவும் தகுதியில்லாத என்னை உனக்கு ஆளாகக் கொண்ட தன்மை நின்பெருமைக்குத் தகுதியாகுமோ? எத்தகைய இழிந்தோரையும் மிக உயர்வடையச் செய்து உயர்ந்தோராகிய தேவர்களைத் தாழ்வடையச் செய்கின்றாய். அண்ணா அமுதே எம்பிரான்! நீ இவ்வாறு இயல்பிற்கு மாறாக என்னை ஆட்கொண்டு அருள்செய்த திருக்கூத்து சிறிது நகையாடுதற்கே தக்கதாகும் என்பதாம்.

பொல்லா - துளையிடாத. "முலைவட்டப் பூணுபுத்து முள்கலிற் கிழிந்து பொல்லா" (சீவக 2184) என்புழிப் பொல்லா என்பதற்குத் துளையிடாத என நச்சினார்க்கினியர் பொருளுரைத்தமையுங் காண்க. பொள்ளாமணி என்பது வடநூலார் மதம் பற்றிப் பொல்லாமணி என மரீஇயிற்று. மணி என்பது நவமணிகளுக்கும் பொதுப்பெயராயினும் ஈண்டு மாணிக்கத்தை உணர்த்திற்று. "தோளாமணியே" (கோவை 47) என்பதற்குத் துளைக்கப்படாத மாணிக்கமே எனப் பேராசிரியர் பொருளுரைத்தமையுங் காண்க. இறைவன் துளையிடாத மாணிக்கம் போலும் இயல்பாகவே ஒளியையுடைய சிவந்த திருமேனியுடைமையின் 'பொல்லா மணியே' என்றார்.

"என்னை யாண்ட பொல்லா மணியேயோ" அசைப் 1.

"என்பொல்லா மணியைப் புணர்ந்தே" புணர்ச் 1.

"புனையப்பெறுவ தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே" புணர்ச் 47.

"அம்பலத் தாடுகின்ற என்பொல்லா மணியை" அச்சப் 3.

என இத்திருவாசகத்தும்,

"என்போலா மணிகதுங் சொல்வ லென்றிறை கோயில் புக்கான்" (20:2) என நம்பி திருவிளையாடற் புராணத்தும்,

"என்பொலா மணி மனமிரங்கிற் றென்பவே" (முனிவர் 6)

எனப் பிரபுலிங்கலீலையினும் வருவன காண்க. இறைவன் மாணிக்கம் போலும் ஒளியையுடைய சிவந்த மேனியனுதல், "வைப்புமா டென்றும் மாணிக்கத்தொளி யென்றும் மனத்திடை யுருகாதே" (அதிசயப் 1) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையானும் அறியப்படும்.

உனக்கு அன்பர் - உன்னிடத்தன்பர் எனினுமாம். புகவே தகேன் என்பது அடியார் திருக்கூட்டத்தில் புகுதற்கே தகுதியில்லாதேன் அவருள் ஒருவனுய் இருப்பது யாங்ஙனம் என்பதை உணர்த்தியது. புகவே என்ப தில் ஏகாரம் தேற்றப் பொருட்டு. அன்பர் கூட்டத்திற் புகுதற்கே தகுதியில்லாத என்னை உனக்கு ஆளாகக் கொண்ட தன்மை நின் பெரு மைக்குத் தகுதியாமோ என்பார் 'புகவே தகேன்; தகவே யெனை யுனக் காட்கொண்ட தன்மை' என்ருர். இதனுல் தகுதியில்லாதோரையும் தகுதி வருவித்து ஆட்கொள்ளும் இறைவனது பேரருட்டிறம் புலப்படுத்தவாறு. தகவே என்பதில் ஏகாரம் வினுப் பொருளில் வந்து எதிர்மறைப் பொருளை உணர்த்தியது.

எப்புன்மையரை என்பதில் இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக் காது. மிகவே உயர்த்தி - மிகவும் உயரச் செய்து. புன்மையரை மிகவே உயர்த்தி விண்ணேரைப் பணித்தி என்றது விண்ணேரிலும் புன்மையரை மிகச் செய்தல் பற்றியாகும். "மிக்க விருப்புறுவோரை விண்ணேரின் மிகுத்து நண்ணுர் கழியத் திருப்புறு சூலத்தினேன்" எனத் திருக்கோ வையாரில் (315) அடிகள் அருளியமையுங் காண்க. மிகவே என்பதில் ஏகாரம் அசை.

விண்ணேரைப் பணித்தி என்றதனுல் உயர்தோரான விண்ணேர் அதி கார மலத்துட்பட்டுச் செருக்குறுங்காலத்து அச்செருக்கினை நீக்குமாறு அவர்களைத் தாழ்வடையச் செய்யும் மறக்கருணையை விளக்கியவாறு. அண்ணு அமுதே என்பதற்கு அடைதற்கரிய அமுதம் போன்றவனே என வும் உரைக்கலாம். எம்பிரான், அண்மை விளி. "என் எம்பிரான் வம் பனேன் வினைக் கிறுதியில்லையே" (சதகம 93) என்புழிப்போல

என்னை நீ செய்த நாடகம் என்றது ஒரு சிறிதும் தகுதியில்லாத சிறியேனை நீ ஆட்கொண்டு அருள்செய்த திருக்கூத்து என்றவாறு நகவே தகும் என்றது அத்திருக்கூத்துப் பேரானந்தமாகிய சிரிப்பைத் தருவதை வெளியிட்டவாருகும்.

இப்பதின்கண் இறைவன் இயல்பும் அவன் ஆட்கொண்டருளும் இயல் பும் செருக்குற்ருேரை ஒறுக்கும் இயல்புமாகிய மெய்ம்மை பெறப்படுத லின் மெய்யுணர்தல் என்னும் முதற்பத்து நுதலிய பொருள் புலப்படு மாறு காண்க. 10.

## 2. அறிவுறுத்தல்

இதன் பொருள் தமக்கு வேண்டியவற்றை இறைவனிடம் விண்ணப்பித்தலும் தம் மனத்திற்கு நல்லறிவுறுத்தலுமாம்.

### தரவு கொச்சகக் கலிப்பா

15. நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே.

ப-ரை :- ஆடகம் சீர் மணி குன்றே - மாற்றுயர்ந்த பசும்பொன்னில் அமைந்த சிறப்பினையுடைய மாணிக்கமலை போன்றவனே, எம் உடையானே - எம்மை அடிமையாக உடையவனே, நான் உன் அடியார்போல் நாடகத்தால் நடித்து - யான் உன் அடியவர் போல உருவங் கொண்டு நாடகம் ஆடி, நடுவே வீடு அகத்தே புகுந்திடுவான் - அந்நடிப்பளவிலேயே நின்றுகொண்டு இடையில் வீட்டுநிலையிற் புகுவதற்கு, மிக பெரிதும் விரைகின்றேன் - அளவின் மிக்க விரைவோடு முற்படுகின்றேன்; உனக்கு இடை அறா அன்பு - ஆதலால் உன்னிடத்தில் இடைவிடாமல் நிகழும் மெய்யன்பு, என் அகத்து ஊடு நின்று உருக தந்தருள் - என் உள்ளத்தினிடத்து நிலைபெற்று ஆதனால் உள்ளம் உருகும்படி அடியேனுக்குத் தந்தருள்வாயாக.

மணிக்குன்றே உடையானே, நான் உன் அடியார்போல் நடித்து அந்நடிப்பளவிலேயே நின்றுகொண்டு இடையில் வீட்டு நிலையிற் போதற்கு மிகப் பெரிதும் விரைகின்றேன்; ஆதலால் உன்னிடத்து இடையறாமல் நிகழும் மெய்யன்பு என் உள்ளத்தினிடத்தே நிலைபெற்று அதனால் உள்ளம் உருகும்படி அடியேனுக்குத் தந்தருள வேண்டும் என்பதாம்.

நாடகத்தால் நடித்தல் - கூத்தாடுவார் எடுத்த கூத்திற்கு இயைந்தவர்களின் வேடம் தாங்கி நடித்தல். யான் மெய்யுணர்வினை அடைந்தும் என் உள்ளத்தில் மெய்யன்பு நிகழாமையால் அதனைப் பிறர் அறியாதவாறு உன் மெய்யடியார் போல் நடிப்பேனாயினேன் என்பார், 'நாடகத்தால் உன் அடியார்போல் நடித்து' என்றார். அவ்வளவிலும் அமையாது இந்நடிப்பு நிலையிலேயே நின்றுகொண்டு இடையில் மெய்யன்பர் பெறத்தக்க வீட்டு நிலையிற் புகுதற்கு மிகமிக முற்படுகின்றேன் என்பார் 'நான் நடுவே வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்' என்றார். புகுந்திடுவான், வான் ஈற்று வினையெச்சம்.

ஆடகம் - பொன். "ஆடக மாட நெருங்குங் கூடல்" என்னும் தேவாரத்தும் இப்பொருட்டாதல் காண்க. ஆடகச்சீர் மணிக்குன்றே என்றது மாற்றுயர்ந்த பொன்னின் பசுமையும் மாணிக்க மணியின் வண்

ணமும் கலந்த அம்மையப்பரது திருவுருவைக் குறித்தது. "மாசற்ற மணிக் குன்றே" (சதகம் 24) என அடிகள் பிறண்டு அருளியமையுங் காண்க. "மற்றவ ரறியா மாணிக்க மலையை" எனச் சேந்தனார் திருவிசைப்பாவில் (திருவீழி மிழலை 2) வருதலும் ஈண்டறியற்பாலது. மணி என்றது ஈண்டு மாணிக்கம், "அக்கு மரவு மணி மணிக்கூத்தன்" (திருக்கோவை 103) என்புழிப் போல. குன்றே என்றார் அளக்கலாகா அளவும் பெருமையு முடைய இறைவன் பேரூழிக் காலத்தும் தான் ஒடுங்குதலின்றி அசை வற்ற இயல்புடையவனாதலன்.

> "வான்கெட்டு மாருதம் மாய்ந்து அழல்நீர் மண்கெடினும்
> தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு" (தென் 18)

என அடிகள் அருளியமையுங் காண்க.

வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேனாதலின் அது கைகூடுதற்கு என் உள்ளத்தில் இடையறு மெய்யன்பு நிலைபெறவும், அவ்வன்பினால் உள்ளம் உருகவும் செய்தருள வேண்டும் என்பார் 'இடையறு அன்புனக் கென்னூடகத்தே நின்றுருகத் தந்தருள்' என்றார். அடிகள் இறைவன்பால் அன்பையே வேண்டுதல்.

> "உன்றன வார்கழற் கன்பெனக்கு நிரந்தரமா யருளாய்" சத 6.
>
> "நின்கழற்கணே, மெய்கலந்த அன்ப ரன்பெனக்கு மாகவேண்டும்" சத 73.
>
> "வேண்டு நின்கழற்கண் அன்பு" சத 74.
>
> "மெய்யன்பை உடையாய் நான் பெறவேண்டும்" பிரார்த் 3.
>
> "அணியா ரடிய ருனக்குள்ள அன்புந் தாராய்" பிரார்த் 8.

என வரூஉம் திருவாக்குகளானுமறிக.

இதன்கண் உன்னடியார்போல் நடித்து வீடகத்தே புகுதிடுவான் விரைகின்றேன். அங்ஙனமாயினும் அது கைகூடும் வண்ணம் இடையறு அன்பு தந்தருள் என வேண்டிக்கொள்ளப்படுதலின் அறிவுறுத்தல் என்னும் இரண்டாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 11.

16\. யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயு மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே.

ப-ரை: யான் பிறப்பு ஏதும் அஞ்சேன்-யான் பிறப்பதற்கு ஒரு சிறிதும் அஞ்சுவேனல்லேன்; இறப்பதனுக்கு என் கடவேன்-அப்பிறப் பின் பின்வரும் இறத்தற்கு யாது செய்யவல்லேன்; வானேயும் பெறில் வேண்டேன்-விண்ணுலக அரசு எனக்கு எளிதிற் கிடைப்பதாயினும் அதனை விரும்பேன்: மண் ஆள்வான் மதித்தும் இரேன்-மண்ணுலக அரசை விரும் பாத யான் மண்ணுலகத்தை ஆளுதற்கு நெஞ்சத்தால் நினைத்தும் இருக்க

மாட்டேன்; தேன் ஏயும் மலர் கொன்றை சிவனே-தேன் பொருந்திய கொன்றை மலர் மாலையையுடைய சிவபெருமானே, எம்பெருமான் - எங்கள் தலைவனே, எம்மானே-எம்முடைய இறைவனே, உன் அருள்பெறும் நாள்-நினது திருவருளைப் பெறுதற்குரிய காலம், என்று என்று வருந்துவன்-எப்பொழுது வாய்க்கும் என்று நினைந்து வருந்துவேன்.

யான் பிறத்தற்குச் சிறிதும் அஞ்சுவேனல்லேன்; ஆனால் பிறப்பின் பின்வரும் இறத்தற்கு யாதுசெய்ய வல்லேன்: விண்ணுலக அரசு எனக்கு எளிதிற் கிடைப்பதாயினும் அதனை விரும்பேன்; மண்ணுலகத்தை ஆளுதற்கு நினைத்தும் இருக்கமாட்டேன்; கொன்றைமலர் மாலையையுடைய சிவனே, எம்பெருமானே, எம்மானே, நினது திருவருளைப் பெறுதற்குரிய நாள் எப்பொழுது வாய்க்கும் என்று நினைத்து வருந்துவேன் என்பதாம்.

யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கு என் கடவேன் என்றது பிறப்பும் இறப்பும் அஞ்சுதற்குரியனவாயினும் பிறங்குங்கால் உயிர் உணர்வு விளக்கம் முழுவதும் எய்தாமையின் அப்பிறப்பின்கண் உண்டாகும் துன்பம் புலப்படாமை பற்றியும், இறக்குங்கால் உணர்வு விளக்கம் மிக்கவிடத்து இறப்புத்துன்பம் மிகப் புலப்படுதல் பற்றியுமாகும். அங்ஙனம் கொள்ளினும் அடிகளின் நோக்கம் பிறப்புக்கும் இறப்புக்கும் அஞ்சுவேன் என்பதாம். "பிறப்பினோ டிறப்பு மஞ்சேன்...வெண்ணீ றணிகிலாதவரைக் கண்டால் அம்மநா மஞ்சுமாறே" (அச்சப் 5) என்னும் அடிகள் திருவாக்கும் ஈண்டு உணரத்தக்கது. ஏதும்-சிறிதும். "யாதோ வறிகுவ தேதுமரிது" என்னும் திருக்கோவையாரினும் (2) இப்பொருட்டாதல் காண்க.

'வானேயும் பெறில் வேண்டேன்; மண்ணாள்வான் மதித்துமிரேன்' என்றது யான் எவ்வளவு அஞ்சினும் என் வினை அறுதபோது பிறப்பும் இறப்பும் உளவாகும். பிறந்து மண்ணாள்வான் கருதியுமிரேன்; இறந்து தேவவடிவு அடைந்தபோது வானாட்சி கிடைப்பினும் அதனையும் விரும்பேன் என்றவாறு, வானேயும் என்பதில் ஏ, பிரிநிலை; வானேயும் பெறில் என்பது வானே பெறினும் என உம்மை பிரித்துக் கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது.

தேனேயும் மலர்க்கொன்றை - தேன் பொருந்திய கொன்றைமலர் "தேனார் மலர்க் கொன்றை" (அம் 16) "தேனாடு கொன்றை" (பூவல் 5) "தேனக மாமலர்க் கொன்றை" (பொற் 17) என இத்திருவாசகத்தும். "தேன் திகழ் கொன்றையும்" "தேனுடைக் கொன்றை" (நாவு 107 : 10; 104 : 4) எனத் தேவாரத்தும் வருவன காண்க. மலர் மாலைக்கு ஆகுபெயர். இறைவற்குக் கொன்றை மலர் சிறந்த அடையாளப் பூவாகும்.

"தேனேறு மலர்க்கொன்றைக் கண்ணியான் காண்" நாவு 237 : 2.

"கடிவிளங்கு கொன்றையந் தாரார் போலும்" நாவு 225 : 4.

"வண்டார் கொன்றைத், தாரன் மாலையன் தண்ணறுங்
கண்ணியன்" நாவு 126 : 7.

எனத் தேவாரத்தும்,

"தேனொருபால் திகழ் கொன்றை யணிசிவன்" (275)

எனத் திருமந்திரத்தும்,

"கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்" கடவுள் 1-2.

என அகநானூற்றினும்,

"கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
வண்ண மார்பிற் றாருங் கொன்றை" கடவுள்

எனப் புறநானூற்றினும் வருவன காண்க.

ஏயும்-பொருந்தும். "முகிழ்சூழ் இலையும் முகைகளும் ஏயுங்கொல்' (11-ந் திரு. திருப்பண்ணி 25) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. எம்மான்-எம்முடைய இறைவன். "இகல்குன்ற வில்லிற் செற்றோன் றில்லை யீசன் எம்மான்" என்னும் திருக்கோவையார் (4) உரையில் எம் மான் என்பதற்கு 'எம்முடையவிறைவன்' எனப் பேராசிரியர் பொரு ளுரைத்தமையுங் காண்க.

'அருள்பெறு நாள் என்று' என்ற குறிப்பு என் உள்ளத்து மெய் யன்பின்மையாலும் அதனால் உள்ளம் உருகாமையாலும் நின் அருளைப் பெறுதல் அரிதாகின்றது என அருள்பெறுதற்குரிய சாதனமின்மைபற்றி வருந்தியமையைப் புலப்படுத்தி நின்றது. என்றே என்பதில் ஏ தேற்றம்.

இதன்கண் என் உள்ளத்தின்கண் மெய்யன்பின்மையாலும் அதனால் உள்ளம் உருகாமையாலும் யான் நின்பாற் பெறவேண்டிய அருளைப்பெற மாட்டாதவனாயிருக்கின்றேன் என இறைவனிடத்து முறையிடும் குறிப் பினால் உள்ளத்திற்கு அறிவுறுத்தல் பெறப்படுதலின் அறிவுறுத்தல் என் னும் இரண்டாம்பத்து நுதலியபொருள் புலப்படுமாறு காண்க. 12.

17. வருந்துவனின் மலர்ப்பாத மவைகாண்பான் நாயடியேன்
இருந்துநல மலர்புனையேன் ஏத்தேன்நாத் தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தாய் அருளமுதம் புரியாயேல்
வருந்துவனத் தமியேன்மற் றென்னேநா னுமாறே.

ப.ரை: பொருந்திய பொன் சிலை குனித்தாய் - பொன்னுருவாகப் பொருந்திய மேருமலையை வில்லாக வளைத்தவனே, நாய் அடியேன்-நாய் போன்ற சிறுமையையுடைய அடியேன், நின் மலர் பாதம் அவை காண் பான் வருந்துவன் - நின்னுடைய தாமரை மலர்போன்ற திருவடிகளாகிய அவற்றைக் காணும்பொருட்டு வருந்தி முயல்கின்றேன்; இருந்தும் - அவ் வாறு வருந்தி முயன்றிருந்தும், நலமலர் புனையேன்-திருவடிகளைக் காண்

பதற்குச் சாதனமாக நல்ல மலர்களை மாலையாகத் தொடுத்து நினக்கு அணியேன்; நா தழும்பு ஏற ஏத்தேன்-நின்னை மேன்மேலும் துதித்தலால் நாவில் தழும்புண்டாகும்படி நின்புகழைப் பாடேன்; அருள் அமுதம் புரியாயேல்-என்னிடத்து அச்சாதனங்களின்மையால் நினது திருவருளாகிய அமுதத்தினை அடியேனுக்கு வழங்கல் செய்யாதொழிகுவையாயின், அதமியேன் வருந்துவன் - அச்சாதனத் தகுதிகளில்லாது துணையிலாதேனாகிய யான் மேன்மேலும் வருந்துவேன்; நான் ஆம் ஆறு மற்று என் - நான் அங்ஙனம் வருந்தாது உய்யும்வழி வேறு யாது உளது?

பொற்சிலை குனித்தாய், நாயடியேன் நின் மலர்ப்பாதங்களாகிய அவற்றைக் காணும் பொருட்டு வருந்தி முயல்கின்றேன்; அவ்வாறு முயன்றிருந்தும் திருவடிகளைக் காண்பதற்குச் சாதனமாக நல்ல மலர்களைத் தொடுத்து நினக்கு அணியேன்; நாத்தழும்பேற ஏத்தேன்; என்னிடத்து அச்சாதனங்களின்மையால் நின் திருவருளாகிய அமுதத்தினை அடியேனுக்கு வழங்கல் செய்யாதொழிகுவையாயின் அத்தமியேன் வருந்துவன்; நான் வருந்தாது உய்யும்வழி வேறு யாது உளது என்பதாம்.

வருந்துவன் என்றது நின்மலர்ப்பாதங்களைக் காணும் பொருட்டு வருந்தி முயல்கின்றேன் என்னும் பொருளது. மலர்ப்பாதம்-மலர் போன்ற பாதம். "மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்" (திருவெம் 2) "மாலறியா மலர்ப்பாத மிரண்டும்" (திருப்படை 1) எனப் பிறண்டும் வருவன காண்க. மலர் என்றது தாமரை மலரை. "தாமரைத் தாள்" (சத 45) எனவும், "சொற்பதங் கடந்த அப்பன் தாளை தாமரைகள்" (அச்சப் 6) எனவும் அடிகள் அருளியவாறுங் காண்க. பாதமவை என்பதிற் சுட்டு பாதங்கள் என்னும் துணையாய் நின்றது. இருந்தும் என்றது மலர்ப்பாதங்களைக் காணும் பொருட்டு வருந்தி முயன்றிருந்தும் என்னும் பொருளது.

நலமலர் என்றது உரியகாலத்து உரிய முறைப்படி உரியனவாகக் கொய்தெடுக்கப்பட்ட நல்ல மலர்களை. புனையேன் என்ற வினையினால் அம்மலராற் றொடுக்கப்பட்ட மாலை என உரைக்கப்பட்டது. "பூமாலை புனைந் தேத்தேன்" (சத 14) என வந்தமையுங் காண்க.

நாத்தழும்பு ஏற என்றது பல்காற் பாடுதலால் நாவில் தழும்பு உண்டாகும்படி என்றவாறு. "கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்தி" (திருப்பொற் 15) என வருதலுங்காண்க. நாத்தழும்பு ஏறுதற்குச் செயப்படுபொருளாகிய இறைவன் புகழ் வருவிக்கப்பட்டது.

சிலை-மலை. "சிலையளித்த தோளான்" (பு. வெ. மா. 33) என்பதற்கு "மலையையொத்த தோளான்" என அதன் உரையாசிரியர் பொருளுரைத்தமையுங் காண்க. பொற்சிலை என்றது பொன்னுருவாகப் பொருந்திய மேருமலையை. குனிதல்-வளைத்தல். குனித்தாய் என்னும் வினையினால் வில்லாக என்பது வருவிக்கப்பட்டது. இறைவன் பொற்சிலை குனித்தமை அவுணர் புரங்களை அழித்தற் பொருட்டாகும்.

"விண்டார் புரம்வேவ மேருச் சிலையாகக், கொண்டான்" ஞான 83 : 6.

"நினையாதார் புரமெரிய வளைத்த மேருச், சிலையானை" நாவு 277 : 6.

"வரியர நாணதாக மாமேரு வில்லதாக
அரியன புரங்கள்மவை யாரழ லூட்ட லென்னே" சுந் 99 : 8.

எனத் தேவாரத்தும்,

"அடையார் புரங்கள் இகல்குன்ற வில்லிற் சென்றேன்" (4)

எனத் திருக்கோவையாரினும் வருவன காண்க.

வில்லாதற்குப் பொருந்தாத மலையை வளைத்த நீ, மலர்புனைதற்கும் ஏத்துதற்கும் என்னைத் தூண்டாத மனத்தை வளைத்து உதவலாமன்றே. அதனால் அருளமுதம் வழங்குதல் செய்தலும் இயையுமே. அங்ஙனம் வழங்குதல் செய்யாதொழிவையாயின் என்பார் 'அருளமுதம் புரியாயேல்' என்றார். அருளமுதம்-திருவருளாகிய அமுதம். "புயங்கன் அருளமுதம் ஆரப்பருகி" (யாத்திரைப் 9) எனவும், "உண்டேன் அவரருள் ஆரமிர்தத்தினை" (11-ந் திருமுறை. கோயில் திருப்பள்ளி 14) எனவும் வருவன காண்க. ஏத்துதல் அருள் பெறுதற்கேதுவாதல்,

"எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமே" 36.

"ஏத்தியு மெம்பெரு மானென் றிறைஞ்சியும்
ஆத்தஞ்செய் தீசன் அருள்பெற லாமே" 39.

எனத் திருமந்திரத்து வருவனவற்றானுமறிக.

அந்தமியேன் என்பதில் சுட்டு மலர்புனைதலும் ஏத்துதலுமாகிய அச்சாதவைகளின்மையை உணர்த்தியது. தமியேன்-துணையில்லாதேன். திருக்கோவை 90 பேர் உரை. மற்று, பிறிது பொருளது. ஆம் ஆறு என்றது வருந்தவேணுகிய யான் வருந்தாது உய்யும் வழி என்னும் பொருளது. ஏ-அசை.

இதன்கண் நின்மலர்ப்பாதங்களைக் காண்பான் வருந்தி முயல்கின்ற யான் மலர்புனையவும் ஏத்தவும் உதவி செய்யாது புறப்புலன்களில் அலைந்து திரியும் என் மனத்தினை அவ்வாறு திரியாது அடக்கித் தரவேண்டுமென இறைவனை வேண்டிக் கொள்ளுதலினால் மனத்திற்குக் குறிப்பான் அறிவுறுத்தியமை பெறப்படுதலின் அறிவுறுத்தல் என்னும் இரண்டாம் பத்து நுதலியபொருள் போதருதல் காண்க. 13.

18. ஆமாறுன் றிருவடிக்கே யகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் றிருக்கோயில் தூகேன்மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.

ப-ரை : புத்தேளிர் கோமான்-கடவுளர் தலைவனே, உன் திருவடிக்கே ஆம் ஆறு-உன்னுடைய திருவடிகளுக்கே ஆளாகும் வண்ணம், அகம் குழையேன்-அன்பினால் மனம் நெகிழ்ந்திலேன்; அன்பு உருகேன்-அன்பினால் மனம் உருதலும் இல்லேன்; பூ மாலை புனைந்து ஏத்தேன்-பூவாலாகிய மாலையைச் சாத்தித் துதியேன்; புகழ்ந்து உரையேன்-நின் பெருமைகளைப் புகழ்ந்து பேசேன்; நின் திருக்கோயில் தூகேன்-நின் திருக்கோயில்களைத் திருவலகிட்டு விளக்கஞ் செய்யேன்; மெழுகேன்-திருமெழுக்கிடேன்; கூத்து ஆடேன்-ஆனந்தக் கூத்து ஆடுதல் செய்யேன்; சதுராலே சார்வான் விரைகின்றேன்-என் அறிவின் ஆற்றலினால் நின்னை அடைதற்கு முற்படுகின்றேன்; சாம் ஆறே-அங்ஙனம் முற்படுதல் பிறவிப் பயன்பெறாது இறந்துபடும் வழியேயாகும்.

புத்தேளிர் கோமான்! உன்திருவடிக்கு ஆளாகும் வண்ணம் மனம் குழையேன்; அன்பினால் மனம் உருகேன்; மலர்மாலையைச் சாத்தித் துதியேன்; நின்பெருமைகளையெல்லாம் புகழ்ந்து உரையேன்; உனது திருக்கோயிலை அலகிடேன்; மெழுகிடேன்; கூத்தாடேன்; ஆற்றலால் நின்னை அடைதற்கு முற்படுகின்றேன்; அங்ஙனம் முற்படுதல் பிறவிப்பயன் பெறாது இறந்துபடும் வழியேயாகும் என்பதாம்.

கடவுளர் தலைவன் இறைவனாதலின் அவனைப் 'புத்தேளிர் கோமான்' என்றார். கோமான், அண்மைவிளி, திருவடிக்கே ஆமாறு-திருவடிக்கே ஆளாமாறு. திரு-ஞானச்செல்வம். ஏகாரம் தேற்றப்பொருளது. குழைதல்-நெகிழ்தல்; உருகுதல்-நீர்போல் உருகுதல். அகம் குழைதலுக்கும் உருகுதற்கும் அன்பு ஏதுவாகும். "அன்பினாலடியேன் ஆவியோடாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக" (கோயிற் 2) என வருதலுங் காண்க. இறைவன் திருவடிக்கு ஆளாதற்கு அன்பினால் அகங்குழைதலும் உருகுதலும் சிறந்த சாதனங்களாகும்.

"அன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தவொண் ணாதே" (272)

எனத் திருமந்திரத்து வருதலும் காண்க.

ஏத்தேன்-துதியேன். புகழ்ந்துரைத்தல்-இறைவன் பெருமைகளைப் புகழ்ந்து பேசுதல். தூகல்-திருவலகிடுதல். மெழுகல்-கோமயத்தால் மெழுகுதல். குழைதலும் உருகுதலும் மனத்தின் செயல்களாகும். ஏத்துதலும் உரைத்தலும் மொழிகளின் செயல்களாகும். தூகலும் மெழுகலும் உடலின் செயல்களாகும். இறைவனை வழிபட்டு அதன்பயனாக ஆனந்தத்தால் கூத்தாடுதலும் செய்திலேன் என்பார் கூத்தாடேன் என்றார். பூமாலை புனைந்தேத்தல் தூகல் மெழுகல் கூத்தாடல் என்பன இன்றியமையாதன என்பது,

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி" (245 : 3)

என அப்பரடிகள் திருவாக்காலும் தெளிக.

சதுர்-ஆற்றல். ஏ-தேற்றம். சார்வான், வானீற்று வினையெச்சம். ஏ-அசை. சார்வான் விரைகின்றேன் என மாற்றிக் கூட்டி முடிக்க. இறைவன் திருவடிக்கு ஆமாறு அகங்குழைதல் முதலியனவற்றைச் செய்யாது சதுராகவே சார்தற்கு முற்படுதல் பிறவிப் பயனைப் பெறுது இறந்துபடும் வழியேயாகும் என்பார் சாமாறு என்றார்.

இதன்கண் மனமொழிமெய்கள் சரியையாகிய சைவநன்னெறிக்கணின்று வழிபடுதற்கு இயைந்து வாராமையை இறைவனிடத்துக் கூறுமுகத்தால் நெஞ்சிற்குக் குறிப்பினால் அறிவுறுத்தலின் அறிவுறுத்தல் என்னும் இரண்டாம் பத்து நுதலியபொருள் போதருதல் காண்க. 14.

19. வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே.

ப-ரை : வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி-ஆகாயமாகி நிலமாகிக் காற்றாகி ஒளியுடைப் பொருள்களாகி, ஊனாகி உயிராகி-உடலோடு கூடிய உயிராகி, உண்மையுமாய் இன்மையுமாய்-மெய்யன்பர்களுக்கு உள்பொருளாகியும் அஃதில்லார்க்கு இல்பொருளாகியும், கோனாகி-எப்பொருட்டும் தலைவனாகியும், அவர் அவரை யான் எனது என்று கூத்தாட்டுவானாகி-உலகத்துள்ள ஒவ்வொருவரையும் யான் என்றும் எனது என்றும் செருக்கடைந்து கூறிக் கூத்தாடும்படி செய்பவனாகியும், நின்றாயை-நிற்கின்ற நின்னை, என் சொல்லி வாழ்த்துவன்-யாது சொல்லி வாழ்த்தக் கடவேன்.

வான்முதலிய பொருள்களாகியும் உள்பொருளாகியும் இல்பொருளாகியும் அப்பொருள்கள் எல்லாவற்றிற்கும் தலைவனாகியும் உலகிலுள்ள ஒவ்வொருவரையும் யான் எனது என்று செருக்கடைந்து கூறிக் கூத்தாடும்படி செய்பவனாகியும் நிற்கின்ற நின்னை என்சொல்லி வாழ்த்தக் கடவேன் என்பதாம்.

வானாகி என்றதனால் விண்ணையும் மேகத்திலுள்ள நீரையும் குறித்தார். மண் என்றதனால் அணுச்செறிந்த நிலத்தைக் குறித்தார். "மண்டிணிந்த நிலனும்...(புற 2) எனப் பிறர் கூறுதலும் காண்க. வளி-காற்று. ஒளி என்றதனால் ஞாயிறு திங்கள் தீ என்னும் ஒளியுடைப் பொருள்கள்

மூன்றனையும் குறித்தார். வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி என ஐம்பூதங்களும் முற்கூறப்பட்டமையின் அவற்றின் பரிணாமமாகிய உடலை வேறு கூறவேண்டாமையின் 'ஊனாகி யுயிராகி' என்பதற்கு உடலோடு கூடிய உயிராகி எனப் பொருளுரைக்கப்பட்டது. உயிர் உடலோடு கூடி நிற்கும் நிலையில் 'இயமானன்' எனப்படும். வானாகி என்பது முதல் உயிராகி என்பது வரையில் இறைவனது அட்டமூர்த்தங்கள் கூறப் பட்டன.

"நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்"

என இத் திருவாசகத்தும், தோணோ 5.

"இருநிலனாய்த் தீயாகி நீருமாகி யியமானனா யெறியுங் காற்றுமாகி, அருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாசமா யட்டமூர்த்தியாகி" (நாவு 308:1) எனத் தேவாரத்தும் வருவன காண்க. இதனால் இறைவனது சருவ வியாபகநிலை கூறினார்.

இறைவன் மெய்யன்பர்க்கு உள்பொருளாக வெளிப்பட்டும், அஃதி லார்க்கு இல்பொருளாக வெளிப்படாதும் நிற்கும் இயல்பு பற்றி 'உண்மையுமா யின்மையுமாய்' என்றார். "மெய்யர் மெய்யனே" (சத 100) எனவும், "மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினாக்கு" (பொற் 20) என வும், "அன்பர்க்கு மெய்யானை யல்லாதார்க் கல்லாத வேதியனை" (அம் மானை 13) எனவும் அடிகள் அருளியவாறுங் காண்க.

எல்லாப் பொருள்களுக்கும் தலைவனாக இருப்பவன் இறைவனாதலின் 'கோனாகி' என்றார். "அளவிறந்த பல்லுயிர்க்குங் கோனாகி நின்றவாறு கூறுதுங்கா ணம்மானாய்" (அம்மானை 16) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க. இதனால் இறைவன் தன்வயத்தனாதல் கூறினார்.

யான் என்பது அகப்பற்று; எனது என்பது புறப்பற்று: "யானென தென்னும் செருக்கு" (குறள் 346) என்றார் திருவள்ளுவரும். இவற்றை முறையே அகங்காரம் மமகாரம் என்பர் வடநூலார். அவரவர் என்றது யான் எனது என்று செருக்கிற்கூற வல்லாராய் உலகங்களிலுள்ள மக்கள் தேவர் நரகரைக் குறித்தது.

கூத்தாட்டுவானென்றது உயிர்கள்தோறும் இறைவன் கலந்து நின்று இயக்கினாலன்றி அவை தாமாக இயங்குந்தன்மையுடையனவல்ல என்பதை உணர்த்தியது. "ஆட்டுவித்தா லாரொருவ ராடாதாரே யடக்குவித்தா லாரொருவரடங்காதாரே" (309 : 3) என அப்பரடிகள் திருவாக்கும் காண்க. நின்றாயை என இறந்த காலத்தாற் கூறினும் நிற்கின்றாயை என்பது பொருளாகக் கொள்க.

என்சொல்லி வாழ்த்துவன் என்பது நின் இயல்புகள் என்சொல்லில் அடங்கா என்பதை உணர்த்தியது.

"என்னானை யென்னணை யென்னி னல்லால்
ஏழையேன் என்சொல்லி யேத்துகேனே" நாவு 309 : 7.

எனத் தேவாரத்து வருதலுங் காண்க.

இதன்கண், இறைவனை வாழ்த்துதற்கு அவன் இயல்பு அடங்காமையின் வாழ்த்தாதிருக்க முயாலும் மனமொழிமெய்களை வெறுத்து இறைவனை முன்னிலைப்படுத்துக் கூறுமுகமாக இயன்றவரை வாழ்த்துவதே கடமையென மனமொழி மெய்களுக்குக் குறிப்பினால் அறிவுறுத்தலின் அறிவுறுத்தல் என்னும் இரண்டாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 15.

20 வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.

ப-ரை : மதுகரம் சூழ்த்தது முரலும் தாரோயை-வண்டுகள் சூழ்ந்து மொய்த்து ஒலிக்கும் கொன்றை மலர்மாலையுடைய நின்னை, வானவர்கள் வாழ்த்துவதும் தாம் வாழ்வான்-தேவர்கள் வாழ்த்தி வணங்குவதும் தாம் நெடுங்காலம் இன்பவுலகில் வாழும்பொருட்டே, மனம் நின்பால் தாழ்த்துவதும்-அவர்கள் தம் நெஞ்சை நின்னிடத்துத் தங்கும்படி செய்வதும், தாம் உயர்ந்து தம்மை எல்லாம் தொழவேண்டி-தாம் உயர்வடையவும் அதனால் தம்மை எல்லாவுயிர்களும் வணங்கவும் விரும்பியே; ஆனால், நாய் அடியேன் யானும்-நாய் போன்ற சிறுமையையுடைய அடியவனாகிய யானும், பாழ்த்த பிறப்பு அறுத்திடுவான் உன்னை பரவுவன்-பயனின்றிக் கழியும் எடுத்த பிறப்பில் அப்பிறப்பினை அறுத்தலாகிய பயனைப் பெற வேண்டி உன்னை வாழ்த்துவேன்.

மதுகரம் முரலும் தாரோயை வானவர்கள் வாழ்த்துவதும் தாம் நெடுங்காலம் இன்பவுலகில் வாழும்பொருட்டே; அவர்கள் தம் நெஞ்சை நின்பால் தங்கும்படி செய்வதும் தாம் உயர்வடையவும் அதனால் தம்மை எல்லாம் தொழவிரும்பியே; ஆனால் நாயடியேன் யானும் அப்பயன்களை விரும்பாது பயன்றிக் கழியும் எடுத்தபிறப்பில் அப்பிறப்பினை அறுத்தலாகிய பயனைப் பெறும்பொருட்டு உன்னை வாழ்த்துவேன் என்பதாம்.

வானவர்கள் மொழியினாலும் மனத்தினாலும் நின்னை வாழ்த்துவதும் நின்னை இடைவிடாது நினைத்தலும் செய்தல், தாம் வாழும் இன்பவுலகில் நெடுங்காலம் வாழவும் தாம் உயர்வடைந்து அதனால் தம்மைப் பிறர் தொழவும் வேண்டியாகும் என்பது "வாழ்த்துவதும் வானவர்கள்..., தொழவேண்டி" என்பதன் பொருளாகும். அவர்கள் பெறவிரும்பும் பயன்கள் இன்பவுலக வாழ்வும் தமது உயர்வும் பிறர் தம்மை வணங்குதலுமாதலின் அழிவுடைய அப்பயன்கள் விரும்பத்தக்கனவல்ல என்பது கருத்து.

தாழ்த்துதல் - தங்கச் செய்தல். "கவுளிழி கடாத்துத், தண்ணறு நாற்றந் தாழ்ப்ப" (பெருங் (2) 12 : 142-3) என்புழியும் இப்பொருட்டா தல் காண்க. மனந் தாழ்த்துதல்-இறைவனிடத்து மனத்தைத் தங்கச் செய்தல்; என்றது இடைவிடாது நினைத்தல் என்றவாறு. எல்லாம் - எல்லா வுயிர்களும். சூழ்ந்து என்பது எதுகை நோக்கி வலித்தது. மதுகரம் - வண்டு. "விதிகரந்த செய்வினையேன் மென்குழற்கே வாளா, மதுகரமே ஏத்துக்கு வந்தாய்" எனச் சிவபெருமான் திருவந்தாதியிலும் (11-ந் திருமுறை) இப்பொருட்டாதல் காண்க. மதுகரம் முரலும் தார் என்றது இறைவனது அடையாள மாலையாகிய கொன்றைமலர் மாலையை உணர்த்தியது. "மணங்கொண்ட, தாதகத்த தேன்முரலுங் கொன்றையான்" (11-ந் திருமுறை மூத்தநாயனர் திருவிரட்டைமணிமாலை) என வருதல் காண்க. தார் என மார்பின்மாலை கூறப்படினும் உபலக்கணத்தாற் கண்ணியாகிய முடிமாலையுங் கொள்ளப்படும்.

பாழ்த்த பிறப்பு-பயனின்றிக் கழிவதாகிய எடுத்த பிறப்பு. பிறப்பு அறுத்திடுவான்-பிறப்பினை ஒழித்திடுவதற்காக. அடிகள் பிறப்பினை அறுக்க விரும்பினர் என்பது,

"பிறவியை வேரொடுங் களைந்தாண்டுகொள்" நீத் 19.

"அடியேனை மண்ணூர்ந்த பிறப்பறுத்திட்டாள்வாய்" ஏசற 2.

"பாருரு வாய பிறப்பற வேண்டும்" எண் 1.

"பித்திலனேனும் பிதற்றிலனேனும் பிறப்பறுப்பாய்" எண் 4.

என அடிகள் பிறண்டு அருளியவாற்ருனுமறியப்படும். பிறப்பறுத்திடுவான் பரவுவன் என இயையும்.

"சாத்திர மோதுஞ் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி யகலவிட் டோடுமோ" (1631)

எனத் திருமந்திரத்து வருதலுங் காண்க. வானவர்களுடைய விருப்பம் மீண்டும் பிறத்தற்கு ஏதுவாமன்றி நித்திய இன்பத்தைத் தருவதின்ரும். அடிகள் துன்பத்திற்கிடமான பிறப்பினை ஒழித்து நித்தியமாகிய முத்தியின்பத்தினைப் பெறுமாறு பரவுவாராயினர். யானும் என்பதில் உம்மை வானவர்களன்றி யானும் என இறந்தது தழீஇய எச்சவும்மை.

இதன்கண் மனமொழிகளால் இறைவனை இயன்றவாறு வழிபடும் போது வானுகில் இன்புற்றுவாழும் தேவர் வாழ்வினைக் கருதும் மனமொழிகளை வெறுத்து இறைவனை முன்னிலையாக்கிக் கூறுமுகமாகப் பிறப்பறுத்துப்பெறும் வீடே பெறுதற்குரியதெனக் குறிப்பினால் அவற்றிற்கு அறிவுறுத்தமை பெறப்படுதலின் அறிவுறுத்தல் என்னும் இரண்டாம் பத்து நுதலியபொருள் புலப்படுமாறு காண்க. 16.

21\. பரவுவா ரிமையோர்கள் பாடுவன நால்வேதங்
குரவுவார் குழன்மடவாள் கூறுடையா ளொருபாகம்
விரவுவார் மெய்யன்பி னடியார்கண் மேன்மேலுன்
அரவுவார் கழலிணைகள் காண்பாரோ வரியானே.

ப-ரை: அரியானே - யாவர்க்கும் அறிதற்கும் காண்டற்கும் அரியவனே, இமையோர்கள் பரவுவார்-தேவர்கள் வாழ்த்துவர்; நால்வேதம் பாடுவன-நான்கு வேதங்களும் நின்னைப் புகழ்ந்து பாடுவன; குரவு வார் குழல் மடவாள்-குராமலரை அணிந்த கூந்தலையுடைய உமையம்மையார், ஒரு பாகம் கூறு உடையாள்-நின் திருமேனியின் இடப்பாகத்தைத் தனக்குக் கூறாகவுடையாள்; அடியார்கள் மேல் மேல் மெய் அன்பின் விரவுவார்-அடியார்கள் மேன்மேலும் உண்மையான அன்பினால் நின்னொடு கலப்பார்கள்; உன் அரவு வார் கழல் இணைகள் காண்பாரே - அவரெல்லாம் உன்னுடைய ஒலிக்கின்ற நெடிய வீரக்கழலணிந்த திருவடிகளைக் காணப்பெறுவாரோ?

அரியானே, இமையோர்கள் பரவுவார்; நால்வேதம் பாடுவன; மடவாள் ஒருபாகம் கூறுடையாள்; அடியார்கள் மேன்மேலும் மெய்யன்பினால் நின்னோடு கலப்பார்கள். அவரெல்லாம் உன்கழலிணைகள் காண்பாரோ என்பதாம்.

தேவர்கள் இறைவனை முன்னிலைப் படுத்துத் துதித்தலின் 'பரவுவார் இமையோர்கள்' என்றார். பரவல் முன்னிலைக்கண் வருமென்பது "பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்" (புறத் சூ 22) என்னும் தொல்காப்பியச்சூத்திரவுரையில், 'புகழ்தல் படர்க்கைக் கண்ணும் பரவல் முன்னிலைக்கண்ணும் வரும்' என இளம்பூரணர் உரைத்தமையானுமறிக. மறைகளெல்லாம் இறைவன் புகழைப் பாடுதலின் 'பாடுவன நால்வேதம்' என்றார்.

குரவு-ஒருவகை மரம். "நின்ற குரவின் மிசையேறி நிகழ்வதறிய வொளித்திருந்தான்" (பெரிய புரா. சண்டேசுர 45) எனவருதல் காண்க. ஈண்டுக் குராமலரை உணர்த்தியது. "குராப்பயில் கூழையிவள்" (திருக்கோவை 362) என்புழிபோல. குரவு குழன் மடவாள் எனக் கூட்டிக் குராமலரையணிந்த கூந்தலையுடைடைய உமையம்மையார் எனவுரைக்க.

"குரவங் கமழ் நறுமென்குழ லுமை" ஞான 10 : 5.
"குரவங் கமழ் நறுமென்குழ லரிவை யவள் வெருவ" ஞான 13 : 1.
"குரவங் கமழ் குழலாள்" ஞான 88 : 2.
"குரவார் குழலா ளொருகூறன்" ஞான 153 : 2.

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. ஒருபாகம் என்றது இடப்பாகத்தை. "மாதிடங் கொண்டம்பலத்து நின்றோன்" எனத் திருக்கோவையாரில் (138) வருதலுங் காண்க.

அடியார்கள் மேன்மேல் மெய்யன்பின் விரவுவார் என மாற்றிக் கூட்டிப் பொருளுரைக்க. இனி, மெய்யன்பின் அடியார்கள் மேன்மேல் விரவுவார் எனக் கூட்டிப் பொருளுரைப்பினுமமையும். விரவுதல்-கலத்தல். ஈண்டு உள்ளத்தாற் கலத்தலைக் குறித்தது. அரவுதல் - ஒலித்தல். "வண்டரவு கொன்றை" எனத் தேவாரத்து வருதலுங் காண்க. இனி, அரவு வார்கழலிணைகள் என்பதற்குப் பாம்பினையும் நீண்ட வீரக்கழலினையும் அணிந்த திருவடிகள் எனினுமாம். நான்கு வேதங்களையும் சேர்த்து எண்ணிக் காண்பாரோ என உயர்திணையாற் கூறியது மிகுதிபற்றியாகும். தேவர்கள் தம் உலக இன்ப வாழ்வை விரும்புதலிற் பரவியும் இறைவன் திருவடிகளைக் கண்டிலர். நான்கு வேதங்களும் நின்னைப் புகழ்ந்தும் நின்னைக் காண்டற்குரியனவல்ல.

"வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரிந்த
போதக் காட்சிக்குங் காணலன்" (சூரன் அமைச் 127)

எனக் கந்தபுராணத்து வருதலும் ஈண்டு அறியத்தக்கது. அரியான்-எத்தகைய மேம்பாட்டினரும் அறிதற்கும் காண்டற்கும் அரியவன்.

"அந்தமாதி யயனுமாலு மார்க்கும் அறிவரியான்" ஞான 73 : 9.
"ஒன்று மறிவானவர்க்கு மறியாமை நின்ற அரன்" ஞான 224 : 4.
"ஒருவர்க்கு முணர்வரியான்" ஞான 319 : 6.
"யாவரு மறிதற் கரியான்றனை" நாவு 176 : 2.
"அவன் இவன் என்றியாவர்க்கும் அறியவொண்ணுச்
செம்பொன் காண்" நாவு 299 : 3.
"காண்டற்கரிய கடவுள் கண்டாய்" நாவு 237 : 1.

எனத் தேவாரத்து வருவனவும் காண்க.

இதன்கண், மொழியினுற் பாடியும் பரவியும் இன்பமடைதலினும் மெய்யன்பினுல் விரவித் திருவடிக் காட்சியைப் பெறுதலே சிறந்ததாகும் என்னும் உண்மையை இறைவனை முன்னிலைப்படுத்திக் கூறுங் குறிப்பினுன் நெஞ்சிற்கு அறிவுறுத்தமையின் அறிவுறுத்தல் என்னும் இரண்டாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 17.

22. அரியானே யாவர்க்கும் அம்பரவா அம்பலத்தெம்
பெரியானே சிறியேனை ஆட்கொண்ட பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன் வியந்தலறேன் நயந்துருகேன்
தரியேன்நான் ஆமாறென் சாவேன்நான் சாவேனே.

ப-ரை: யாவர்க்கும் அரியானே-எத்தகைய மேம்பாட்டினர்க்கும் அறிதற்கும் காண்டற்கும் அரியவனே, அம்பரவா-சிதாகாயத்தையுடையவனே, அம்பலத்து எம் பெரியானே-தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் திருக்கூத்தாடும் எங்கள் பெரியோனே, சிறியேனை ஆட்கொண்ட பெய் கழல் கீழ்-சிறிய

வணுகிய என்னை ஆட்கொண்டருளிய இட்ட வீரக்கழலிணையுடைய திருவடியின்கண், விரை ஆர்ந்த மலர் தூவேன் - நறுமணம் பொருந்திய மலர்களை இட்டு வழிபடேன்; வியந்து அலறேன்-பெறுதற்கரிய நின் திருவடிக் காட்சியைப் பெற்று வியப்படைந்து வாய்குழறேன்; நயந்து உருகேன்-விரும்பி அன்பினால் மனம் உருகேன்; நான் ஆம் ஆறு என்-அடியேன் உய்யும் வழி யாது? அதனை அருளாதொழியின், தரியேன்-உனக்கு ஆளாகிய யான் மலர் தூவல் வியந்தலறல் நயந்துருகல் செய்யாமல் இவ்வுலகில் தங்கி வாழேன்; நான் சாவேன் சாவேன்-அதனால் நான் இறந்துபடுவேன் இறந்துபடுவேன்.

யாவர்க்கும் அரியானே, அம்பரவா, அம்பலத்தெம் பெரியோனே, சிறியேனை ஆட்கொண்டருளிய உன் திருவடிக்கண் மலர் தூவேன்; வியந்தலறேன்; விரும்பி அன்பினால் மனமுருகேன்; இவைகளைச் செய்யாத யான் உய்யும் வழி யாது? மன மொழி மெய்களால் நின்னை வழிபடாது இவ்வுலகில் தங்கி வாழேன்; இறந்துபடுவேன்; இறந்துபடுவேன் என்பதாம்.

யாவர்க்கும் என்பதில் உம்மை முற்றுப்பொருளைத் தருவதாயினும் அறிவாற்றல்களிற் குறைந்தவர்களைக் குறியாது அவற்றின் மேம்பட்டுயர்ந்த திருமால் பிரமன் இந்திரன் முனிவர் முதலியோரைக் குறித்தது. தேவர் முனிவர் முதலிய யாவர்க்கும் இறைவன் அறிதற்கரியான் என்பது,

"தேவரு மறியாச் சிவனே காண்க" அண்ட 56.

"கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி" போற்றி 143.

"தேவர்கோ வறியாத தேவதேவன்" சத 30.

"பாரார் விசும்புள்ளார் பாதாளத்தார் புறத்தார்
யாராலுங் காண்டற் கரியான்" அம்மானை 2.

"வான்வந்த தேவர்களும் மாலயனோ டிந்திரனுங்
கானின்று வற்றியுங் காண்பரிய கனைகழலோன்" அம்மானை 4.

"மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த
தேவருங் காணாச் சிவபெருமான்" வெண்பா 9.

"உலவாக் காலந் தவமெய்தி உறுப்பும் வெறுத்திங்
குனைக்காண்பான், பலமா முனிவர் நனிவாட" சத 54.

என இத் திருவாசகத்தும்,

"தன்னையார்க்கு மறிவரியான்" திருமலை 1.

"சார்வரு தவங்கள் செய்து முனிவரும் அமரர்தாமும்
கார்வரை யடவி சார்ந்துங் காணுதற் கரியான்" கண்ணப் 128.

எனப் பெரியபுராணத்தும் வருவனவற்றாலுமறிக.

அம்பரம்-ஆகாசம். "அம்பர மனல் கால்" (திவ். பெரிய தி. (1) 8 : 8) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. இதனைச் சிதாகாசம்

எனவும் சூக்குமவெளி எனவும் கூறுவர். இதன்கண் விளங்கும் பெரியோனாகிய இறைவன் திருச்சிற்றம்பலத்தின்கண் யாவரும் காணுமாறு திருக்கூத்தியற்றுதலின் 'அம்பரவா அம்பலத்தெம் பெரியோனே' என்றார். இனி, திகம்பரவா என்பது அம்பரவா என முதற்குறைந்து வந்ததெனக்கொண்டு திசைகளையாடையாகவுடையவனே என உரைத்தலுமொன்று.

பெரியோனாகிய இறைவனை நோக்கத் தான் மிகச் சிறியனாதலின் அடிகள் தன்னைச் சிறியேன் என்றார். ஆட்கொள்ளல் - ஆளாக்கொள்ளல். ஆட்கொண்ட கழல் என இயையும். "போற்றியாம் உய்யவாட் கொண்டருளும் பொன் மலர்கள்" (திருவெம் 20) என, வருதலுங் காண்க. இறைவன் திருவடியைக் காட்டி அடிகளை ஆட்கொண்டமையின் 'ஆட்கொண்ட பெய்கழல்' என்றார்.

"கண்ணார் கழல்காட்டி அடியேனை ஆட்கொண்ட,
அண்ணாமலை யானை" அம் 10.

"நாண்மலர்ப் பாதங்காட்டி...நம்மையிம்மை ஆட்கொண்ட
வண்ணங்கள்" பொற் 8.

"பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாச மறுத்தெனை யாண்ட
ஆருடைப் பொன்மேனி யமுதினை" குயில் 9.

"அந்தண னாகிவந் திங்கே அழகிய சேவடி காட்டி
...என்னையும் ஆட்கொண்டருளும்...தேவர்பிரான்" குயில் 10.

"மைப்புலாங் கண்ணால் ஏறுண்டு கிடப்பேனை மலரடியிணைகாட்டி
அப்பன் என்னைவந் தாண்டுகொண் டருளிய அற்புதம்" அற் 7.

"விரைமலர்க் கழல்காட்டி அச்சன் என்னையும் ஆண்டுகொண்
டருளிய அற்புதம்" அற் 9.

"பெருந்துறை யாளி யன்று...தன் கழல்காட்டி...என்னை ஆண்
டருளுங் கிடப்பறிவார்" வார்த்தை 9.

என அடிகள் அருளியவாறுங் காண்க.

பெய்கழல்-இட்ட வீரக் கழல். "பெய்கழலான்" (பு. வெ. மா. 162) என்பதற்கு 'இட்ட வீரக்கழலினையுடையான்' என அதன் உரையாசிரியர் உரைத்தமையுங் காண்க. கழல் என்றது கழலையுடைய திருவடியை உணர்த்தியது. விரை-மணம். மலர்தூவேன் என்பது மெய்யின் வழிபாட்டையும், வியந்தலறேன் என்பது மொழியின் வழிபாட்டையும் நயந்துருகேன் என்பது மனத்தின் வழிபாட்டையும் செய்யாமையைக் குறித்தன. உனக்கு ஆளாகிய யான் மலர்தூவல் முதலியவற்றைச் செய்யாமையின் இவ்வுலகில் தங்கியிரேன் என்பார் 'தரியேன்' என்றார்.

இதன்கண்; அடிகள் தமது மனமொழி மெய்கள் வழிபாடு செய்யாமையைக் குறித்து வருந்தி இறைவனை முன்னிலைப் படுத்தி இந்நிலையில்

இருத்தலினும் சாதலே நன்று என்று கூறுமுகமாகக் குறிப்பினுல்அம் மூன்று கருவிகளுக்கும் அறிவுறுத்தமை பெறப்படுதலின் அறிவுறுத்தல் என்னும் இரண்டாம் பத்து நுதலிய பொருள் புலப்படுமாறு காண்க. 18.

23. வேனில்வேள் மலர்க்கணைக்கும் வெண்ணகைச்செவ் வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே
ஊனெலா நின்றுருகப் புகுந்தாண்டான் இன்றுபோய்
வானுளான் காணுய்நீ மாளாவாழ் கின்ருயே.

ப-ரை: வேனில்வேள் மலர் கணைக்கும் - இளவேனிற் காலத்தைத் தனது ஆட்சிக்குரிய சிறந்த காலமாகக் கொள்கின்ற மன்மதன் எய்யும் மலர் அம்பிற்கும், வெள் நகை செவ்வாய் கரிய பானல் ஆர் கண்ணியர்க்கும்-வெள்ளிய முறுவலையும் சிவந்த வாயினையும் கருங்குவளை மலர் போன்ற கரிய கண்களையுமுடைய மகளிர்பொருட்டும், பதைத்து உருகும் பாழ் நெஞ்சே-பதைத்து உருகும் பயனற்ற நெஞ்சமே, ஊன் எலாம் நின்று உருக புகுந்து ஆண்டான்-என் உடம்பின் உறுப்புக்கள் எல்லாம் உருகி நிற்கும்வண்ணம் என்னுள்ளே புகுந்து ஆட்கொண்ட எம்பெருமான், இன்றுபோய் வான் உளான்-இன்று நம்மை விட்டு மறைந்து நுண்ணிய பரவெளியின்கண் உள்ளான்; நீ காணுய்-நீ அவனைக் கண்டிலை; மாளா வாழ்கின்ருயே - அதனுல் மாண்டொழியாமல் இன்னும் வாழ்கின்றனையே; உன் அறியாமை இருந்தவாறென்னே.

வேனில்வேள் மலர்க்கணைக்கும் வெண்ணகைச் செவ்வாய்க் கரிய பானலார் கண்ணியர்க்கும் பதைத்து உருகும் பயனற்ற நெஞ்சே, என் உடம்பின் உறுப்புக்கள் எல்லாம் உருகி நிற்கும் வண்ணம் என்னுள்ளே புகுந்தாண்ட எம்பெருமான் இன்று நம்மைவிட்டு மறைந்து வானின்கணுள்ளான்; நீ அவனைக் கண்டிலை; அதனுல் மாண்டொழியாமல் இன்னும் வாழ்கின்ருயே; உன் அறியாமை இருந்தவாறென்னே என்பதாம்.

வேனில் எனப் பொதுப்படக் கூறினும் மலர்க்கணைகள் மலரும் இளவேனிற்காலமே கொள்ளப்பட்டது. வேள் என்பது முருகனையும் உணர்த்துமாயினும் வேனில்வேள் என்றதனுல் மன்மதனைக் குறித்தது. மலர்க்கணை என்றது மன்மதன் ஆற்றலைப் புலப்படுத்தியது. கணை-அம்பு.

வெண்ணகை - வெள்ளிய முறுவல். திருக்கோவை 58 பேர். வெண்ணகை, செவ்வாய் என்பன கண்ணியர் என்பதில் விகுதியால் உணர்த்தப்படும் மகளிர் என்பதனேடு முடிந்தன. கரியகண், பானலார் கண் எனத் தனித்தனி இயையும். பானல் - கருங்குவளை. "பானல் கருங்குவளை" எனப் பிங்கலந்தையில் (9 : 365) வருதலுங் காண்க. ஆர், உவமப்பொருட்டு. "யாழார் மொழிமங்கை" (திருக்கோவை 51) என்புழிப் போல. பானலார் கரிய கண்ணியர் எனக்கூட்டிக் கருங்குவளை மலர்போலும் கரிய கண்ணியர் எனவுரைக்க. "குவளைக் கருங்கட் கொடியே ரிடைக்கொடி" எனத் திருக்கோவையாரில் (51) வருதலுங் காண்க. கணைக்கும் கண்ணி

யர்க்கும் என்புழி உம்மைகள் எண்ணுப் பொருளன. மலர்க்கணைக்குப் பதைத்துக் கண்ணியர்க்கு உருகும் நெஞ்சு என நிரனிறையாகக் கொள்க. மலர்க்கணையால் வருந்தி அதனைத் தீர்த்தற்கு மகளிரைப் பெறும்பொருட்டு உருகும் எனக் காரணகாரிய முறைப்படி கொள்க. மன்மதனுக்குக் கணை யாகும் மலர்கள் தாமரைப்பூ, மாம்பூ, அசோகம்பூ, முல்லைப்பூ, கருங்குவ ளைப்பூ என்பன. இவை முறையே மகளிர் கூட்டுறவு விருப்பினையும் அதனால் உடல் பசலையடைதலையும் வேறு உலகசிந்தனை ஒழிதலையும் செயலற்றுக் கிடத்தலையும் அறிவு மயங்குதலையும் செய்வனவாம். அவை இங்கே 'பதைத்து' என்பதாற் குறிக்கப்பட்டனவாகும். நெஞ்சு இறை வன் பொருட்டுப் பதைத்து உருகாது கண்ணியர் பொருட்டுப் பதைத் துருகுதல் பயனற்ற செயலாதலின் 'பதைத்துருகும் பாழ்நெஞ்சே' என் றார். நெஞ்சு இறைவன் பொருட்டுப் பதைத்துருக வேண்டுமென்பது, "வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர் பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப், பள்ளந்தாழுமாறு புனலிற் கீழ்மே லாகப் பதைத்துருகும் அவர்" (சத 21) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாற்றானுமறிக.

ஊனெலாம் என்பது ஆகுபெயராய் உடம்பின் எலும்பு முதலிய உறுப்புக்கள் எல்லாவற்றையும் உணர்த்தி நின்றது. நின்று உருக என்ப தனை உருகி நிற்ப என எச்சவிகுதியைப் பிரித்துக்கூட்டி முன்பின்னாக மாற்றிப் பொருள்கொள்க. ஊனெலாம் உருகப்புகுந்தாண்டான் என்க 'கல்நெஞ்சுருக்கிக் கருணையினா லாண்டு கொண்ட...அம்பலவன்" (கோத் தும்பி 11) "என் என்பெலா முருக்கி எளியையா யாண்ட ஈசனே" (பிடித் 10) "வியனுலகில் எனைத்தான் புகுந்தாண்டான்" (உயிருண்ணிப் 4) என அடிகள் பிறாண்டு அருளியவாறுங் காண்க.

போய்-மறைந்து. வான் எனப் பொதுப்படக் கூறினும் ஈண்டு இறை வனுக்குரிய பரவெளியைக் குறித்தது. காணாய்-கண்டிலை. மாளா-மாண் டொழியாமல். வாழ்கின்றாயே என்பதன் ஆற்றலால் உன் அறியாமை இருந்தவாறென்னே என்பது வருவிக்கப்பட்டது.

இதன்கண் நெஞ்சை முன்னிலைப்படுத்து விளித்து அதன் இழிவை அறிவுறுத்தமையின் அறிவுறுத்தல் என்னும் இரண்டாம்பத்து நுதலிய பொருள் புலப்படுமாறு காண்க. 19.

24. வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றாய் ஆழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே.

ப-ரை : வாழாத நெஞ்சமே-அழிவில்லாத பேரின்ப வாழ்க்கையில் வாழக் கருதாத நெஞ்சமே, வாழ்கின்றாய்-அழியும் இயல்புடைய இவ்வுலக இன்ப வாழ்வில் வாழ்ந்து அவ்வளவில் அமைந்திருக்கின்றாய்; வல்வினைப்

பட்டு ஆழாமல் காப்பானை ஏத்தாது ஆழ்கின்றாய்-வலிய இருவினைகளின் வயப்பட்டு அழுந்தாமல் நம்மைக் காப்பாற்றும் இறைவனைப் புகழ்ந்து துதியாமல் விடுத்து அவ்விருவினைப் பயன்களில் அழுந்துகின்றாய்; உனக்கு கேடு சூழ்கின்றாய்-இவற்றால் உனக்குக் கேட்டினை நீயே தேடிக்கொள்ளக் கருதுகின்றாய்; பல்காலும் சொன்னேன்-உனக்குப் பலமுறையும் அறிவுரை அறிவுறுத்தி வருகின்றேன்; நீ அதனைக் கேளாதொழியின், நீ அவலம் ஆய கடல் வெள்ளத்தே வீழ்கின்றாய்-நீ துன்பமாகிய கடற்பெருக்கில் வீழ்ந்தொழிகின்றாய்.

பேரின்ப வாழ்க்கையில் வாழக் கருதாத நெஞ்சமே, வல்வினைப்பட்டு ஆழாமற் காப்பாற்றும் இறைவனைப் புகழ்ந்து துதியாமல் அவ்விருவினைப் பயன்களில் அழுந்துகின்றாய். இவற்றால் உனக்குக் கேட்டினை நீயே தேடிக்கொள்ளக் கருதுகின்றாய்; உனக்குப் பலமுறையும் அறிவுரையை அறிவுறுத்தி வருகின்றேன்; அதனைக் கேளாதொழியின் நீ அவலமாகிய கடல்வெள்ளத்து வீழ்ந்தொழிகின்றாய். என் செய்வது? என்பதாம்.

வாழ்தல்-இன்புற்று வாழ்தலைக் குறிப்பதாகலின் வாழ்கின்றாய் என்பதற்கு அழியும் இயல்புடைய இவ்வுலக இன்பவாழ்வில் வாழ்ந்து அவ்வளவில் அமைந்திருக்கின்றாய் எனக் குறிக்கப்பட்டது. அழிவில்லாத பேரின்ப வாழ்வில் வாழக்கருதாத நெஞ்சமாதலின் 'வாழாத நெஞ்சமே' என்றார். வல்வினையென்றது பிறவிக்கேதுவாகிய ஒத்த வலியையுடையவாகிய நல்வினை தீவினை இரண்டினையும் குறித்து நின்றது, நல்வினைப்பட்டு ஆழாமற் காப்பானை ஏத்தாதே ஆழ்கின்றாய் என மாறிக் கூட்டுக.

உனக்குக் கேடு சூழ்கின்றாய் என்றது வாழாமல் வாழ்ந்தும் ஆழாமற் காப்பானை ஏத்தாது ஆழ்ந்தும் உனக்குக் கேட்டினை நீயே தேடிக்கொள்ளக் கருதுகின்றாய் என்றவாறு. சூழ்தல்-கருதுதல். "பலசூழும் மனத்தோடு பைதலேன் யானாக" (கலி 46 : 17) என்புழிப்போல. சொல்கின்றேன் பல்காலும் என்றதன் ஆற்றலால் அறிவுறுத்தியும் கேளாதொழியின் என்பது வருவிக்கப்பட்டது. அவலக் கடலாய வெள்ளம் என்றதனை அவலமாய கடல்வெள்ளம் என ஆய என்பது பிரித்துக் கூட்டப்பட்டது. அவலமாய கடல்-துன்பமாகிய கடல். "அவலக் கடல் விழ்ந்த, என்னேரனையேன்" (ஆனந்த 1) என அடிகள் பிறண்டு அருளியமையுங் காண்க. வீழ்வாய் என்னும் எதிர்காலம், துணிவுபற்றி வீழ்கின்றாய் என நிகழ்காலத்தாற் கூறப்பட்டது.

இதன்கண், பல்கால் அறிவுறுத்தியும் கேளாமல் வாழாமல் வாழ்ந்தும் ஆழாமற் காப்பானை ஏத்தாது ஆழ்ந்தும் உனக்குக் கேட்டினை நீயே தேடிக் கொள்ளக் கருதுகின்றாய்; அதனால் துன்பமாய கடல்வெள்ளத்தே வீழ்வாய் என நெஞ்சினை முன்னிலைப்படுத்தி அறிவுறுத்தமையின் அறிவுறுத்தல் என்னும் இரண்டாம்பத்து நுதலியபொருள் புலப்படுமாறு காண்க.

20.

## 3. சுட்டறுத்தல்.

எங்கும் நிறைந்த பொருளாகிய இறைவனை அறிதற்குச் சுட்டியறியும் அறிவு கருவியாகாது என உணர்ந்து அதனை ஒழித்தல்பற்றி இப் பதிகத்திற் கூறுகின்றார். சுட்டறுத்தல் எனக் கூறினும் சுட்டியறியும் அறிவை ஒழித்தல் என்பது பொருளாகக் கொள்க. சுட்டறிவு, இது குடம் இது படம் எனக் கண்ட பொருளைப் பொறிமுதலிய கருவிகளுடன் கூடி நின்று அறியும் அறிவு. இறைவனைச் சுட்டறிவினால் அறிதல் இயலாதென்பதனை. "அனைத்துலகு மாயநின்னை ஐம்புலன்கள் காண்கிலா" (சத 76) என்பதனாலுமறிக.

### எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

25. வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை யாண்டாய்க்
குள்ளந்தாள் நின்றுச்சி யளவு நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே.

ப-ரை: வெள்ளம் தாழ் விரி சடையாய்-கங்கையின் நீர்பெருக்குத் தங்கிய விரிந்த சடையினையுடையாய்; விடையாய்-இடபவாகனத்தையுடையவனே, விண்ணோர் பெருமானே-தேவர் தலைவனே, எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்-என்று அடியவர் கூறக்கேட்டு அவ்வளவிலே நின்னை விரும்பிய நெஞ்சுடையராய், பள்ளம் தாழ் உறு புனலின்-உயர்ந்த விடத்தினின்றும் பள்ளத்தில் வீழும் மிக்க நீரை ஒத்து, கீழ் மேலாக பதைத்து உருகும் அவர் நிற்க-கீழ் மேலாகும்படி விரைந்து மனம் உருகுகின்ற மெய்யன்பர்கள் நின் அருளை வேண்டித் திருமுன்னிலையில் நிற்கவும், என்னை ஆண்டாய்க்கு-சிறியேனை ஆட்கொண்ட நின்பொருட்டு, உள்ளம் தாள் நின்று உச்சி அளவும் நெஞ்சாய் உருகாது-உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை வரையும் மனம் தானேயாய் நின்று உருகுகின்றிலது. உடம்பு எல்லாம் கண்ணாய் வெள்ளம் பாயாது-உடல் முழுவதும் கண் தானாகவே நின்று ஆனந்தவெள்ளம் பாய்கின்றிலது; அதனால், அண்ணா-தலைவனே, தீவினையினேற்கு-தீவினையையுடையேனாகிய எனக்கு, நெஞ்சம் கல் ஆம்-மனம் கல்லின் தன்மையுடையதாகும்; கண் இணையும் மரம் ஆம்-கண்கள் இரண்டும் மரக்கண்ணின் தன்மையுடையனவாகும்; யாது செய்வேன்.

கங்கை வெள்ளந் தங்கிய விரிந்த சடையையுடையவனே, இடபவாகனத்தை யுடையவனே, விண்ணோர் பெருமானே என்று அடியவர் கூறக் கேட்டு அவ்வளவிலேயே நின்னை விரும்பிய மனத்தையுடையராய்ப் பள்

ளத்திற்பாயும் மிக்க நீரைப்போலக் கீழ்மேலாகும்படி பதைத்து மனம் உருகுகின்ற மெய்யன்பர் நின் அருளைவேண்டி நின் திருமுன்னிலையில் நிற்கவும் என்னை ஆட்கொண்ட நின்பொருட்டு உள்ளங்கால் தொடங்கி உச்சந் தலைவரையும் மனம் தானாகவே நின்று உருகுகின்றிலது; உடம்பு முழுவதும் கண் தானாகவே நின்று ஆனந்தவெள்ளம் பாய்கின்றிலது; அதனால் அண்ணா. தீவினையுடையேனுக்கு மனம் கல்லின் தன்மையுடையதாகும்; கண்கள் இரண்டும் மரக்கண்ணின் தன்மையுடையனவாகும். யாது செய்வேன் என்பதாம்.

வெள்ளம்-கங்கை நீர்ப்பெருக்கு. தாழ்தல்-தங்குதல். தாழ்சடை என இயையும். "புன்சடைமேற் கங்கை வெள்ள ஆற்றானை" (நாவு 243 : 3) "சடைமேற் கங்கை வெள்ளந் தரித்ததென்னே" (சுந் 4 : 1) எனத் தேவாரத்தும் "தெள்ளம் புனற்கங்கை தங்குஞ் சடையன்" எனத் திருக்கோவையாரினும் 379) வருவனவும் காண்க. விரி சடை-விரிந்த சடை. "விரித்த சடையினன் விண்ணவர் கோன்" "விரிசடையாய் வேதியனே" (நாவு 89 : 8; 313 : 6) என வருவனவும் காண்க. சடையாய் விடையாய் என்பன இறைவன் உலகிற்கு ஆதாரமாகியும் ஆதேயமாகியும் நின்று பாது காப்பவன் என்பதைக் குறித்தன. கங்கைநீரைத் தரித்தமையால் ஆதாரமாதலும், இடபத்தை ஊர்தியாகக் கொண்டமையால் ஆதேயமாதலும் அறிக. விண்ணோர் பெருமான்-தேவர்தலைவன். 'விண்ணோர் பெருமானே விகிர்தா" (ஞான 80 : 3) எனத் தேவாரத்து வருதலும் காண்க.

விரிசடையாய் விண்ணோர் பெருமானே என்று பிறர் கூறக்கேட்ட அளவிலேயே வேட்கைமிக்க நெஞ்சம் உடையரானமையின் 'எனக் கேட்டு வேட்ட நெஞ்சாய்' என்றார். வேட்டல் - விரும்புதல். "தொல்வினைப் பயன் றுய்ப்பத் துறக்கம்வேட் டெழுந்தாற்போல்' (கலி 118 : 3) என் புழியும் இப்பொருட்டாதல் காண்க. நெஞ்சு என்பது ஈண்டு நெஞ்சுடையாரை உணர்த்தியது. கேட்டு வேட்ட நெஞ்சாய்ப் பதைத்துருகும் அவர் என இயையும். சிவபெருமான் திருப்பெயரைக் கேட்ட வளவில் அடியார்கள் மனமுருகுவார்கள் என்பது "நிலா முகிழ்க்குந் திருமுடியார் பேரொலிக்க உருகுமவர்க்கு" (திருக்குறிப்பு 113) எனப் பெரியபுராணத்து வருதலானுமறிக.

பள்ளந்தாழ் உறுபுனல் - உயர்ந்தவிடத்தினின்றும் பள்ளத்தே வீழும் மிக்க நீர். "பள்ளம் புகும் புனல்போன்று" என்றார் திருக்கோவையாரினும் (379) உறு. மிகுதிப் பொருள் தருவதோர் உரிச்சொல். புனலின் விரைவுபோல விரைந்து உருகும் நெஞ்சம் என்க. பதைத்தல் ஈண்டு விரைதல் என்னும் பொருட்டு. கீழ்மேலாக உருகும் என்றது உள்ளத்தின் எப்பகுதி முதற்கண் உருகியது என்பது தோன்றாமல் முழுவதும் உருகுதலை உணர்த்தியது. உருகுமவர் என்பது வினையாலணையும் பெயராய் மெய்யன்பர் என்னும் பொருள் தந்தது. வீழ்க என்றதன் ஆற்றலால் அம்

மெய்யன்பர்கள் நின்னருளை வேண்டித் திருமுன்னிலையில் என்பன வருவிக்கப்பட்டன.

என்னை ஆண்டாய்க்கு - சிறியேனை ஆட்கொண்ட நின்பொருட்டு "ஒன்றும் போதா நாயேனை உய்யக்கொண்ட நின்கருணை" "நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே யாட்கொண்டாய்" (குழைத் 3. 8) என அடிகள் அருளியவாறுங் காண்க.

உள்ளந்தாள்-தாளின் உட்புறம். உச்சி-உச்சந்தலை. நெஞ்சு ஆய் உருகாது எனப்பிரித்து உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைவரையும் நெஞ்சு தானாய் நின்று உருகுகின்றிலது எனவுரைக்க. கண்ணாய் என்பதில் ஆய் என்பதற்குக் கண் உடம்பெல்லாந் தானாய்நின்று எனப் பொருள் கொள்க. ஒன்றும் போதா நாயேனை ஆண்டருளின நின்கருணையை நினைந்து உள்ளங்கால் முதல் உச்சந்தலைவரையும் நெஞ்சு தானேயாய் நின்று உருக வேண்டும். உடம்பெல்லாம் கண் தானாகவே நின்று ஆனந்த நீரைப் பெருக்க வேண்டும். அங்ஙனம் செய்யாமையால் 'நெஞ்சங் கல்லாம் கண்ணிணையும் மரமாம்' என்றார். வெள்ளம் - ஆனந்தக் கண்ணீர். நெஞ்சங் கல்லாதல்-மனம் கல்லின் தன்மையுடைத்தாதல் கண்ணிணை மரமாதல் கண்ணிணை மரக் கண்ணின் தன்மையுடைத்தாதல். அவ்வாறானமை உருகாமையாலும் ஆனந்தக் கண்ணீர் பாயாமையாலும். கண் பால்பகாவஃறிணைப் பெயராதலின் பாயாது என ஒருமை முடிபு பெற்றது. யாது செய்வேன் என்பது இசையெச்சம்.

இதன்கண், நெஞ்சு ஒருவாறு இறைவனை அறியலாமென எண்ணி அது தன்னளவில் நின்று உணரமாட்டாமையால் அதனை ஒழித்து உள்ளங்கால் முதல் உச்சந்தலைவரையும் பரந்து நின்றாயினும் அறியுமோ வெனின் அங்ஙனம் பரந்து நிற்றல் அதன் இயற்கைக்குப் பொருந்தாது எனவும், கண் இருந்துழி இருந்து காணமாட்டாதென அதனை ஒழித்து உடம்பின் உறுப்பு முழுவதிலுங் கலந்து நின்று ஆனந்த வெள்ளம் பொழிந்து காணுமோவெனில் அதுவும் அதன் இயற்கைக்குப் பொருந்தாது எனவும் சுட்டியுணரப்படாமை புலனாதலிற் சுட்டறுத்தல் என்னும் மூன்றாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 21.

26. வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேட னென்பாய் போல
இனையனா னென்றுன்னை யறிவித் தென்னை
ஆட்கொண்டெம் பிரானானாய்க் கிரும்பின் பாவை
அனையநான் பாடேனின் றாடேன் அந்தோ
அலறிடேன் உலறிடேன் ஆவி சோரேன்
முனைவனே முறையோநான் ஆன வாறு
முடிவறியேன் முதலந்த மாயி னானே.

ப—ரை: முதல் அந்தம் ஆயினானே-உலகந்தோற்றத்திற்கு முன்னும் அதன் அழிவுக்குப் பின்னும் உள்ளவனே, புகுந்து நின்று-இந்நிலவுலகில்

பரமாசாரியத் திருமேனிகொண்டு வலிய எழுந்தருளி வந்து தங்கி, வினையிலே கிடந்தேனை-கன்ம மலத்துட் கட்டுண்டு கிடந்தவனாகிய என்னை, போது-இங்கே வருக என அழைத்து, நான் வினைக்கடன் என்பாய் போல-நான் வினையைக் கெடுத்து உய்யக் கொள்பவன் என்று கூறுவாய் போல, நான் இனையன் என்று உன்னை அறிவித்து - யான் இத்தன்மையுடையவன் என்று நின் உண்மைத் தன்மையினை எனக்கு அறிவித்து, என்னை ஆட்கொண்டு-என்னை ஆளாகக்கொண்டு, எம்பிரான் ஆனாய்க்கு- எங்கள் தலைவனாகிய நினது பேரருளின் திறத்திற்குக் கைம்மாறாக, இரும்பின் பாவை அனைய நான்-இரும்பினாற் செய்யப்பட்ட பாவைபோல அசைவற்றுக்கிடக்கும் நான், பாடேன்-நின்புகழைப் பாடுதல் செய்யேன்; நின்று ஆடேன்-நின்று ஆடுதலைச் செய்யேன்; அந்தோ-ஐயகோ, அலறிடேன் உலறிடேன் ஆவி சோரேன் - உரைதடுமாறேன் வாட்டமடைந்திலேன் அவசமடைந்திலேன்; முனைவனே-கடவுளே, நான் ஆன ஆறு முறையோ-நான் இங்ஙனம் ஆகிய தன்மை முறையாகுமோ? ஆகாதே; முடிவு அறியேன்-இது எவ்வாறு முடியும் என அறிந்திலேன்.

முதலந்தமாயினானே, இவ்வுலகிற் பரமாசாரியனாய் வலிய எழுந்தருளி வந்து தங்கி வினையிலே கட்டுண்டு கிடந்த என்னை இங்கே வருக என அழைத்து நான் வினையைக்கெடுத்து உய்யக் கொள்பவன் என்று கூறுவாய்போல யான் இத்தன்மையுடையன் என்று நின் உண்மைத் தன்மையினை எனக்கு அறிவித்து என்னை ஆட்கொண்டு எம்பிரானாகிய நினது பேரருளின் திறத்திற்குக் கைம்மாறாக இரும்பின்பாவை போல அசைவற்றுக்கிடக்கும் நான் பாடேன்; நின்று ஆடேன்; அந்தோ! அலறிடேன் உலறிடேன் ஆவிசோரேன்; முனைவனே, நான் இங்ஙனம் ஆகிய தன்மை முறையாகுமோ? ஆகாதே, இது எவ்வாறு முடியும் என அறிந்திலேன் என்பதாம்.

வினை என்றது கன்மமலத்தினை. அது பிராரத்தம் ஆகாமியம் சஞ்சிதம் என மூவகைப்படும். இவற்றுள் பிராரத்தம் எடுத்த பிறவியில் அனுபவிக்கும் வினை; ஆகாமியம் எடுத்த பிறவியில் ஈட்டும்வினை. சஞ்சிதம் முற்பிறவிகளில் ஈட்டிய வினையில் அனுபவிக்கப்பட்டவை போக எஞ்சியுள்ளவை. வினை பிறவிக்கு ஏதுவாயும் பிறவியில் ஈட்டப்படுவதாயுமுள்ளது அதனால் வினையின் வயப்பட்டுப் பிறந்து வினைப்பயனை அனுபவித்து வினையைத்தேடி இறந்து இவ்வாறு உழன்று திரிந்தமையை உணர்த்தும் பொருட்டு 'வினையிலே கிடந்தேனை' என்றார். கிடத்தல் ஈண்டு வினைவயப்பட்டிருத்தலை உணர்த்தியது. கிடந்தேனை என்னும் இரண்டாவது போது என்பதன் ஆற்றலால் வருவிக்கப்பட்ட அழைத்து என்பதனோடு முடிந்தது.

இறைவன் அடிகளை ஆட்கொண்டது குருவடிவாய் வலியவந்து ஆதலின் புகுந்து என்பதற்கு நிலவுலகிற் குருவடிவாய் வலிய வந்து என

வுரைக்கப்பட்டது. "பொங்குமலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி, எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு" (அம் 1) என அடிகள் அருளியமையும் காண்க. நின்று என்பது ஈண்டு தங்கி என்னும் பொருளில் வந்தது. போது-போதுக என்னும் வியங்கோளீறுகெட்டது. வருக என்பது பொருள்.

வினைக்கேடன் என்றார் இறைவன் உயிர்களின் வினையைக் கெடுத்து உய்யக்கொள்பனாதலின். "வினைக்கேடரு முளரோ பிறர் சொல்லீர் வியனுலகில், எனைத்தான் புகுந்தாண்டான்" (உயி·ண்ணி 4) என அடிகள் பிறண்டு கூறுதலுங் காண்க. என்பாய் போல என்றது வினைக்கேடன் என்று குறிப்பினால் அறியும்படி. என்றவாறு. இனையன்-இத்தன்மையுடையேன். அன் விகுதி தன்மைக்கண் வந்தது. அறியாமையிற் கிடக்கும் உயிர்கள் இறைவன் அறிவித்தாலன்றி அவன்றன் முழுமுதற் றன்மையை உணரமாட்டா என்பது தெரிவிப்பார் 'இனையனு னென்றன்னை யறிவித்து' என்றார். "அறிவிக்க வன்றி யறியா வுளங்கள்" எனச் சிவஞானபோதத்து (சூத் 8 : 2 : 2) வருதலும் காண்க ஆனுய்க்கு என்பதற்கு ஆனவினது அருள்திறத்திற்குக் கைம்மாறாக என ஆற்றலாற் சில சொற்கள் வருவித்துரைக்க.

கூத்தாட்டும் பாவை தோலினாலும் மரத்தினாலும் செய்யப்பட்டு ஆட்டுவாரால் ஆட்டப்படும் தான் அவைபோலன்றி ஒரு செயலுமற்றுக் கிடந்தமையின் 'இரும்பின்பாவை யனைய நான்' என்றார்.

இறைவனிடத்து அன்புடையார் அவ்வன்பு முதிரமுதிர அவன் புகழைப்பாடி ஆனந்தக் கூத்தாடி உரைதடுமாறி வாட்டமுற்று அவசமடைவராதலின் அம்முறைமை தோன்றப் பாடேன் ஆடேன் அலறிடேன் உலறிடேன் ஆவிசோரேன் என்று அருளினார். "நாவார்ந்த மறைபாடி நட்டமாடி நான்முகனு மிந்திரனு மாலும் போற்ற" (நாவு 313 : 7) எனத் தேவாரத்து வருதலுங் காண்க.

முனைவன்-கடவுள். "வினையி னீங்கி விளங்கிய அறிவின் முனைவன்" என்பர் ஆசிரியர் தொல்காப்பியனார் (தொல்மரபு சூத் 94). நான் ஆனவாறு முறையோ என்றது நன்றிமறந்தமையாகும் என்னும் பொருள் தோன்ற நின்றது. முடிவறியேன் என்றது இதன் பயன் எவ்வாறு முடியும் என்பதை அறியேன் என்றவாறு. முதலந்தமாயினான் என்பது உலகம் தோன்றுதற்கு முன்னும் அஃது அழிந்த பின்னும் உள்ளவன் என்னும் பொருளது. "ஆதியு மந்தமுமாயினாற்கு" (பொற் ) என அடிகள் மற்றோரிடத்து அருளியவாறுங் காண்க

இதன்கண் முனைவனே முதலந்த மாயினானே என இறைவன் சுட்டறிவிற்குப் புலப்படாதவன் என்பது தோன்ற வைத்தமையானும் முதலிரண்டடிகளில் ஆன்மபோதங் கெட்டுச் சிவபோதம் விளங்கின்றமை தோன்றக் கூறுதலானும் சுட்டறுத்தல் என்னும் மூன்றும்பத்து நுதலிய பொருள் புலப்படுதல் காண்க.

27. ஆயனான் மறையவனு நீயே யாதல்
அறிந்தியா னியாவரினுங் கடைய னாய
நாயினே னாதலையு நோக்கிக் கண்டு
நாதனே நானுனக்கோ ரன்ப னென்பேன்
ஆயினே னாதலா லாண்டு கொண்டாய்
அடியார்தா மில்லையே யன்றி மற்றோர்
பேயனே னிதுதானின் பெருமை யன்றே
யெம்பெருமா னென்சொல்லிப் பேசு கேனே.

ப-ரை : நாதனே-இறைவனே, ஆயன் நான் மறையவனும் நீயே ஆதல் அறிந்து - திருமாலும் பிரமனும் நீயேயாதலை அறிந்தும், யான் யாவரினும் கடையன் ஆய நாயினேன் ஆதலையும் நோக்கி கண்டு - அடியேன் எல்லாரினுங் கீழ்ப்பட்டவன் ஆகிய நாயின் தன்மையையுடையேன் ஆதலையும் ஆராய்ந்து கண்டும், நான் உனக்கு ஓர் அன்பன் என்பேன் ஆயினேன் - யாவரினும் கடையவனாகிய நான் உனக்கு ஓர் அன்பன் என்று சொல்லுவேனாயினேன்; ஆதலால் ஆண்டு கொண்டாய்-அதனால் நீ அடியேனை ஆட்கொண்டருளினாய்: ஓர் பேயனேன் அன்றி மற்று அடியார்தாம் இல்லையே – ஒரு பேயின் தன்மையுடையேனாகிய என்னையன்றி நீ ஆட்கொள்வதற்கு வேறு அடியார்கள் இல்லையா? இது நின் பெருமை அன்றே-அடியார் இருக்கவும் என்னை ஆட்கொண்ட இச்செயல் நின் பெருந்தன்மையைக் குறிக்குமல்லவா? எம்பெருமான்-எங்கள் தலைவனே, என் சொல்லி பேசுகேன் – நின்னை என்ன சொல்லி நான் புகழ்ந்து பாடுவேன்.

நாதனே திருமாலும் பிரமனும் நீயேயாதலை அறிந்தும் யான் யாவரினும் கீழ்ப்பட்டவனாகிய நாயினேனாதலையும் ஆராய்ந்து கண்டும் அடியேனும் உனக்கு ஓர் அன்பன் என்று சொல்லிக்கொள்வேனாயினேன்; அதனால் நீ அடியேனை ஆண்டருளினாய்; ஒரு பேயனேனாகிய என்னை அன்றி நீ ஆட்கொள்ளுதற்கு வேறு அடியார்கள் இல்லையா? அடியார்கள் இருக்கவும் என்னை ஆட்கொண்டருளிய இச்செயல் நின் பெருந்தன்மையைக் குறிக்குமல்லவா? எங்கள் தலைவனே, நின்னை என்ன சொல்லிப் புகழ்ந்து பாடுவேன் என்பதாம்.

ஆயன் நான்மறையவன் என்றது ஈண்டுக் காரணேசுரர்களான பிரமவிட்டுணுக்களை. ஆயர்பாடியில் உதித்தமைபற்றித் திருமாலை 'ஆயன்' என்றார், "கோவலன் நான்முகன் வானவர் கோனும்" (சுந். 17 : 1) எனத் தேவாரத்தும், "ஆனாகிய மாயவனே" எனப் பதினொராந் திருமுறையினும் (கோயிற்றிருப் 8) வருவன ஈண்டைக்கேற்ப அறியற்பாலன. மறையவனும் என்புழி உம்மையை ஆயன் என்பதனோடுங் கூட்டுக. ஆயனும் நான்மறையவனும் இறைவனாதலை,

"விண்முதற் பூதலம் ஒன்றிய இருசுடர் உம்பர்கள்பிறவும்
படைத் தளித் தழிப்ப மும்மூர்த்திக ளாயினை"

என ஆளுடையபிள்ளையார் அருளிச் செய்தமையும் வலியுறுத்தும். காப்புக்கடவுளும் படைப்புக் கடவுளும் நீயேயாதலால் எல்லாரினும் முழுமுதல் இறைவன் நீயே என்பதை அறிந்தும், யான் யாவரின் கடையனேன் ஆய நாயினேன் ஆதலையும் ஆராய்ந்து அறிந்தும் என்றதனால் இறைவனது மிக்க உயர்வையும் தனது மிக்க இழிவையும் அறிந்திருந்தும் யான் உனக்கு ஓர் அன்பனென்பேன் ஆயினேன் என்பது பொருந்தாதென்பதை அறிவுறுத்தியருளினார். நீயே என்பதில் ஏகாரம் தேற்றப்பொருட்டு. அறிந்தும் என உம்மை விரிக்க. நான்-யாவரினும் கடையனாகிய நான். என்பேனாயினேன்-என்று சொல்லுவேனாயினேன். அங்ஙனம் சொல்லுதலையே ஆதாரமாகக் கொண்டு நீ என்னை ஆட்கொண்டருளினாய் என்பார் 'ஆதலால் ஆண்டு கொண்டாய்' என்றார்.

ஓர் பேயனேன் அன்றி மற்று அடியார் தாம் இல்லையே என மாறிக் கூட்டிப் பொருள்கொள்க. பேயனேன் அன்றி மற்றோர் அடியார்தாம் இல்லையே எனக் கூட்டிப் பொருள்கோடல் இலக்கண மரபிற்கு வழுவாம். மானுடவடிவினேனாயினும் பேய்த்தன்மையாகிய இழிவுடைமை பற்றிப் 'பேயனேன்' என்றார் "பேயனேனும் பெருநெறி காட்டாய்" (செத் 7) என அடிகள் பிறிதோரிடத்துக் கூறுதலுங் காண்க. மற்று, பிறிது என்னும் பொருளில் வந்தது. இல்லையே என்புழி வினாப்பொருட்டாகிய ஏகாரம் உளராகவும் என எதிர்மறைப் பொருளை உணர்த்தி நின்றது. "ஞாலமிந்திரன் நான்முகன் வானவர் நிற்க மற்றெனை நயந்தினி தாண்டாய்" (செத் 9) என அடிகள் அருளியவாறுங் காண்க. வேறு அடியார் உளராகவும் நான் உனக்கோர் அன்பன் என்று சொல்லிய அளவில் ஆண்டுகொண்ட இச்செயல் நின்பெருந்தன்மையைக் குறிப்பதாகும் என்பார் 'இதுதான் நின்பெருமை அன்றே' என்றார். எங்கள் தலைவனாகிய நின்பெருமை மனமொழிகளுக்கு அடங்காமையின் 'எம்பெருமான் என் சொல்லிப் பேசுகேனே' என்றார். என் சொல்லி - என்ன சொல்லி "எண்ணுகேனென்சொல்லி யெண்ணுகேனே" (நாவு 313 : 1) எனத் தேவாரத்து வருதலும் காண்க.

இதன்கண் மிக்க இழிவுடைய யான் நின்கணின் பெருந்தன்மையில் எதனைச் சொல்லிப் பாட வல்லேனாவேன் என்றமையால் அடிகள் மனமொழிகளுக்கு எட்டாத இறைவன் புகழ் சுட்டளவிற்றன்று என்பது புலப்பட வைத்தமையாற் சுட்டறுத்தல் என்னும் மூன்றாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 23.

28. பேசிற்றாம் ஈசனே யெந்தா யெந்தை
    பெருமானே யென்றென்றே பேசிப்பேசிப்
பூசிற்றான் திருநீறே நிறையப் பூசிப்
    போற்றியெம் பெருமானே யென்று பின்ரு

நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே அவாவெள்ளக் கள்வ னேனை
மாசற்ற மணிக்குன்றே யெந்தாய் அந்தோ
என்னைநீ யாட்கொண்ட வண்ணந் தானே.

ப-ரை: மாசு அற்ற மணி குன்றே-குற்றமற்ற மாணிக்க மலையே, எந்தாய்-எங்கள் தந்தையே, தாம் பேசில்-தாம் புகழ்ந்துரைக்கில், ஈசனே எந்தாய் எந்தை பெருமானே-உலகு உயிர்களை உடையவனே, எங்கள் தந்தையே, எங்கள் தந்தைக்கும் தலைவனே, என்று என்று பேசி பேசி-என்று என்று பலகாலும் புகழ்ந்து உரைத்தும், பூசில் எம்பெருமானே போற்றி என்று திரு நீறே நிறை பூசி- அணிந்துகொள்ளில் எங்கள் தலைவனே காத்தருள்க என்று கூறித் திருநீற்றையே உடல் முழுவதும் பரவப்பூசியும், பின்று நேசத்தால் பிறப்பு இறப்பு கடந்தார் தம்மை ஆண்டானே-பின்னிடுதலில்லாது வளரும் மெய்யன்பினால் இனிவரும் பிறப்பையும் கடக்கும் தகுதியுடையாரை ஆட்கொண்டருளினவனே, அவா வெள்ளக் கள்வனேனை-அவாப் பெருக்கினையுடைய கள்வனாகிய என்னை நீ ஆட்கொண்ட வண்ணம்தான் என்னை-நீ அடிமைகொண்ட தன்னை என்னையோ? அந்தோ-என்ன அதிசயம்

மாசற்ற மணிக்குன்றே எந்தாய் தாம் புகழ்ந்துரைக்கில் ஈசனே எந்தை எந்தை பெருமானே என்று என்று பலகாற் புகழ்ந்துரைத்தும், பூசில் எம்பெருமானே போற்றி என்று கூறித் திருவெண்ணீற்றையே நிறையப் பூசியும், பின்னிடாது வளரும் மெய்யன்பினாற் பிறப்பு இறப்பினைக் கடக்கும் தகுதியுடையாரை ஆட்கொண்டருளினவனே, நீ அவாவெள்ளக் கள்வனாகிய என்னை நீ ஆட்கொண்ட தன்மை என்னையோ. என்ன அதிசயம் என்பதாம்.

தாம் என்றது பிறப்பிறப்பைக் கடப்பவராகிய மெய்யடியாரைக் குறித்தது. அவர் பேசின் ஈசனே என்பது முதலிய இறைவன் திருப்பெயர்களைப் பலகாலும் பேசுவரேயன்றி வேறொன்றையும் பேசாராகலின் "பேசிற்றாம் ஈசனே எந்தாய் எந்தை பெருமானே யென்றென்றே பேசிப் பேசி" என்றார். இறைவன் தமக்குத் தந்தையாதலே யன்றித் தம் தந்தைக்கும் தலைவனாயினான் என்பார் 'எந்தாய் எந்தைபெருமானே" என்றார். "எண்ணார் தங்கள் எயிலெய்த எந்தாய் எந்தை பெருமானே" எனத் தேவாரத்தும் (சுந் 52:6) "ஈசனே யெந்தா யிறைபோற்றி" எனப் பதினொராந்திருமுறையினும் (திருக்கைலாயஞான) வருவன காண்க. எந்தைக்கும் என்னும் நான்கனுருபும் எச்சவும்மையும் செய்யுள் விகாரத்தாற் றொக்கு நின்றன. என்றே என்புழி ஏகாரம் தேற்றப் பொருட்டு.

அவர் தமது உடலிற் பூசப்புகுவாராயின் 'எங்கள் பெருமானே. காத்தருள்க என்று கூறி உடல்முழுவதிலும் நிறையத் திருநீற்றையே

யன்றி வேறு எதனையும் பூசார் என்பது தோன்றப் "பூசிற்றன் றிரு நீறே நிறையப் பூசிப் போற்றியெம் பெருமானே" என்றார். ஏகாரம்-தேற்றம். போற்றியெம்பெருமானே என்று நிறையப் பூசி என மாற்றிக் கூட்டிப் பொருளுரைக்க. போற்றி-வணக்கம். பின்றல் - பின்னிடுதல், "பெரிது நொந்தாற்றல் போகிப் பின்றினன் பெயர்ந்து போனான்" என்னும் கந்தபுராணத்தும் (சிங்கமுகாசுர 175) இப்பொருட்டாதல் காண்க. பின்றா நேசம் எத்துணை இடையூறு வரினும் பின்னிடுதலில்லாது வளரும் மெய்யன்பு.

ஈசன் புகழே பேசுதலும் திருநீறே நிறையப் பூசுதலும் பின்றா நேசத்தினையுடையராதலும் உள்ளவர்களே பிறப்பிறப்பினைக் கடக்குந் தகுதியுடையவராதலின் 'பிறப்பிறப்பைக் கடந்தார்' என்றார். துணிவு பற்றிக் கடப்பாரைக் கடந்தார் என இறந்த காலத்தாற் கூறினார்.

அவா-விருப்பம் "ஆவியன்னார் மிக்கவாவினராய்க் கெழுமற்கழி வுற்று" (திருக்கோவை 37) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அவாவெள்ளம்-அவாப்பெருக்கு. அவா பிறவிக்கேதுவாதல் "அவாவென்ப வெல்லா வுயிர்க்கும் எஞ்ஞான்றும், தவாஅப் பிறப்பீனும் வித்து" (குறள் 361) என்பதனாலுமறிக. பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை ஆண்டருளும் இயல்புடையவனாகிய நீ அவாவெள்ளக் கள்வனாகிய என்னை ஆண்டருளிய தன்மை வியக்கத்தக்கதென்பார் "பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை யாண்டானே அவாவெள்ளக் கள்வனேனை நீ ஆட்கொண்ட வண்ணந்தான் என்னே" என்றார். அவாவெள்ளக் கள்வனேனை என்றது அடிகள் தம்மைத் தாழ்த்திக்கூறும் முறைமைபற்றியாகும். அன்றி உண்மையியல்பு பற்றிக்கூறியதெனின் இறைவனால் ஆட்கொள்ளப்படுமாறில்லை யென்க.

'நான் உனக்கோர் அன்பன்' (சதகம் 23) என்ற அளவில் என்னை ஆட்கொண்டருளினாய்; நான் கூறியது சொல்லளவன்றி உண்மையன்று; நானோ அவாவெள்ளக்கள்வன். அத்தகைய என்னை நீ ஆட்கொண்ட வண்ணம் என்னே என அடிகள் வியந்துரைத்துக் கூறியவாறு. அந்தோ - அதிசயக்குறிப்பு. பூசிற்றான்; வண்ணந்தான் என்பவற்றில் தான் அசை.

இதன்கண் 'அவாவெள்ளக் கள்வனேனை ஆட்கொண்டவண்ணந்தான் என்னே' என்பதனால் ஆட்கொண்டருளிய இறையியல்பு சுட்டியுணப்படாமையின் சுட்டறுத்தல் என்னும் மூன்றாம்பத்து நுதலியபொருள் போதருதல் காண்க. 24.

29. வண்ணந்தான் சேயதன்று வெளிதே யன்ற
   நேகனேகன் அணுவணுவில் இறந்தா யென்றங்
கெண்ணந்தான் தடுமாறி யிமையோர் கூட்டம்
   எய்துமா றறியாத எந்தாய் உன்றன்

வண்ணந்தான் அதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்கள் அவைகாட்டி வழியற் றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டாய்
எம்பெருமான் என்சொல்லிச் சிந்திக் கேனே.

ப-ரை: எம்பெருமான்-எங்கள் தலைவனே, வண்ணம்தான் சேயது அன்று-நினது நிறந்தான் செந்நிறமுடையதன்று; வெளிது அன்று-வெண்ணிறமுடையது அன்று; அநேகன்-ஏகனாகிய நீயே பலவகைத் திருமேனிகளையுடையையாவாய்; ஏகன்-அன்றி ஒருவனாகிய முழுமுதல்வனுமாவாய்; அணு-நீயே அணுவாயுமுள்ளாய்; அணுவில் இறந்தாய் - அவ்வணு உருவத்தையுங் கடந்த நுண்மையுடையையுமாவாய் என்று இங்ஙனம் பலவாறு கூறி, அங்கு எண்ணந்தான் தடுமாறி-நின்னையறியும் அவ்விடத்தில் நினைவு மயங்கி, இமையோர் கூட்டம் எய்தும் ஆறு அறியாத எந்தாய்-தேவர்களது கூட்டம் நின்னை அறியுமாறும் அடையுமாறும் அறிய முடியாத எங்கள் தந்தையே, வழி அற்றேனை-உய்யும் நெறியை அறியாத அடியேனை, உன் வண்ணம் அது காட்டி-உனது உண்மையான அந்நிறத்தைக் காட்டியும், வடிவு அது காட்டி - உண்மையான அத்திருவுருவத்தைக் காட்டியும், மலர் கழல்கள் அவை காட்டி - தாமரை மலர் போன்ற திருவடிகளைக் காட்டியும் அருள்செய்து, திண்ணம்தான் பிறவாமல் காத்து ஆட்கொண்டாய்-உறுதியாக இனிப் பிறவாமற் பாதுகாத்து ஆட்கொண்டருளினை; என்சொல்லி சிந்திக்கேன் - அத்தகைய நின்னை எங்ஙனம் நினைந்து புகழ்ந்துரைப்பேன்.

எம்பெருமானே உனது நிறந்தான் செந்நிறமுடையதன்று; வெண்ணிறமுடையதன்று; ஏகனாகிய நீயே பலவகைத் திருமேனிகளையும் உடையையாவாய்; ஒருவனாகிய முழுமுதல்வனுமாவாய்; நீயே அணுவாயுமுள்ளாய்; அவ்வணுவுருவையுங் கடந்த நுண்மையுடையையுமாவாய் என்று இங்ஙனம் பலவாறு கூறி, நின்னை அறியும் அவ்விடத்தில் எண்ணந்தடுமாறித் தேவர்களது கூட்டம் நின்னை அறியுமாறும் அடையுமாறும் அறியமுடியாத எங்கள் தந்தையே, உய்யுநெறியை அறியாத அடியேனை உன்தன் உண்மையான நிறத்தைக் காட்டியும் திருவுருவைக் காட்டியும் திருவடிகளைக் காட்டியும் அருள்செய்து உறுதியாக இனிப்பிறவாமல் காத்து ஆட்கொண்டருளினை; அத்தகைய நின்னை எங்ஙனம் நினைந்து புகழ்ந்துரைப்பேன் என்றவாறு.

வண்ணந்தான் சேயது என்றது செம்மேனியெம்மானின் திருமேனி எங்கும் திருவெண்ணீற்றைப் பரவப் பூசியிருப்பதனாலாகும். "ஒண்மையனே திருநீற்றை உத்தூளித் தொளிமிளிரும் வெண்மையனே" (நீத் 22) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க. "தழலார் மேனித் தவள நீற்றர்" எனத் தேவாரத்து (ஞான 71:7) வருதலுங் காண்க. 'வெளிதன்று' என்றது வெண்ணிறம் திருவெண்ணீற்றுப் பூச்

சாகிய செயற்கையான் அமையுந்தன்மையால் இயற்கை நிறம் அதுவன்று என்பது. இவ்விரண்டினையும் ஒருங்கு சேர்த்து உணருங்கால் இறைவன் நீறுபூத்த செந்தழல் வண்ணன் என்பது போதரும்.

"துடிகொள்நே ரிடையாள் சுரிகுழன் மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய் சுவடு
பொடிகொள்வான் தழலிற் புள்ளிபோ லிரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே" (அருட் 5)

என அடிகள் அருளியமையுங் காண்க.

அநேகன் என்றது ஏகனாகிய இறைவன் பல்லுயிர்களுக்கும் அருள் செய்யவேண்டிச் சிவம் சத்தியாயும், பஞ்ச சாதாக்கிய வடிவமாயும், இருபத்தைந்து மாகேசுவர வடிவங்களாகியும் ஐவகைக் காரணேசுவர வடிவங்களாகியும் இன்னும் அளப்பில்லாத திருவுருவங்களாகியும் அமைந்தமை பற்றியாகும். ஏகன் என்றது இவ்வாறு பலவகைத் திருவுருவங்களைக் கொண்ட இறைவன் ஒருவனே என்பது பற்றியாகும். "ஏக னனேக னிறைவனடி வாழ்க" (சிவபுரா) என அடிகள் அருளியமையுங் காண்க.

நூலுணர்வால் அறியமுடியாத நுண்ணியனாகலின் 'அணு' என்றும், அவ்வணுவும் சுட்டியறியப்படுமாதலின் அவ்வணுவுருவத்தையும் கடந்த நுண்மையுடையனாதலின் 'அணுவில் இறந்தாய்' என்றும் கூறினார். ஈண்டு "நூலுணர்வுணரா நுண்ணியோன் காண்க" (49) எனவும், "அணுத்தருந் தன்மை யில்லோன் காண்க" (45) எனவும் திருவண்டப் பகுதியில் வருவன நோக்கத்தக்கன.

அங்கு என்றது தேவர் பலரும்கூடி நின்னை அறியும் அவ்விடத்தில் என்றவாறு. இமையோர் கூட்டம் எண்ணந்தான் தடுமாறி என்றது தேவர்கள் பலருங் கூடித் தாந்தாமறிந்தவாறு கூறுதலின் அது எல்லோருக்கும் ஒப்பமுடியாமையின் விவாதம் உண்டாக அதனால் நினைவு தடுமாறி என்றவாறு. எய்துமாறறியாத என்றது நினைவு தடுமாறியமையால் இமையோர் கூட்டம் இறைவனது உண்மைத் தன்மையை அறியமுடியாமலும் அடையும் வழியை அறியமுடியாலும் இருந்தமை பற்றியாகும்.

உன்றன் வண்ணந்தான் அதுகாட்டி என்பதில் அது என்னும் சுட்டு இறைவனது உண்மை நிறத்தினைச் சுட்டியதாகும். அச்சுட்டினை வடிவு அதுகாட்டி எனவும் கூட்டுக. மலர்க்கழல்கள்-தாமரை மலர்போன்ற திருவடிகள். "செழுங்கமலத் திரளனநின் சேவடி" (அடைக்கலப் 1) எனவும், "தாளதாமரைகள்" (அச்சப் 6) எனவும் வருவன காண்க. திருவடிகள் இரண்டாகலின் 'கழல்கள் அவை' எனப் பன்மைச் சுட்டுக் கொடுத்தார். கழல் என்றது இறைவன் திருவருட்சத்தியை.

வழியற்றேனைத் திண்ணந்தான் பிறவாமற் காத்தாட்கொண்டாய் என்றது உய்யும்வழி யறியாதிருந்த என்னை உறுதியாகப் பிறவாதிருக்கும்

வண்ணம் பாதுகாத்து ஆட்கொண்டமைபற்றியாகும். தான் நான்கும் ஏ இரண்டும் தன்னும் அசை. என் சொல்லிச் சிந்திக்கேன் என்றதனை என் சிந்தித்துச் சொல்லுகேன் என விகுதி பிரித்துக் கூட்டி நின்னை எங்ஙனம் நினைந்து புகழ்ந்துரைப்பேன் எனப் பொருளுரைக்கப்பட்டது. என்னை ? நினைவின் வழிச் சொல்லும் செயலும் நிகழ்தலின்.

இதன்கண் ‘என்சொல்லிச் சிந்திக்கேன்’ என்பதனால் இறைவன் மன மொழி மெய்களுக்கு எட்டாமை கூறுதலின் சுட்டறுத்தல் என்னும் மூன்றாம்பத்து நுதலியபொருள் போந்தவாறு காண்க. 25.

30. சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே.

ப-ரை: வந்தனை ஆட்கொண்டு உள்ளே புகுந்த விச்சை - வலிய எழுந்தருளி வந்து அடியேனை ஆளாகக்கொண்டு எனது உள்ளத்துள்ளே புகுந்தருளிய வித்தையையுடைய, மால் அமுத பெரு கடலே - யாவராலும் விரும்பத்தக்க அமுதப் பெருங்கடலே, மலையே - அருண்மலையே, செ தாமரை காடு அனைய மேனி தனி சுடரே - செந்தாமரை மலர்களின் நெருக்கத்தை ஒத்த திருமேனியையுடைய ஒப்பற்ற சுடரே, நாயினேன் தன் சிந்தனை நின் தனக்கு ஆக்கி - நாய்போன்ற கீழ்மையுடையேனது நினைவு முழுவதையும் உனக்குரியதாகச் செய்து, கண் இணை நின் திரு பாதம் போதுக்கு ஆக்கி - என் இரு கண்களையும் நின் திருவடிமலர்களுக்கு உரியனவாக்கி அவற்றைக் கண்டு களிக்கும் வண்ணம் அமைத்து, வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி—வழிபாட்டினையும் அத்திருவடி மலர்களுக்கே அமையச் செய்து, வாக்கு உன் மணி வார்த்தைக்கு ஆக்கி—என் மொழியினையும் நின்னைப்பற்றிய மாணிக்கம் போன்ற வாசகங்களுக்கு உரிமையாக்கி, இரண்டும் இலி தனியனேற்கு - முழுவதும் சத்தாகிய தன்மையும் முழுவதும் அசத்தாகிய தன்மையுமில்லாதேனாகிய சதசத்தாயிருக்கின்ற தனித் தன்மையுடையேனாகிய எனக்கு, ஐம்புலன்கள் ஆர உன்னை தந்தனை - கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலநுகர்வும் நிறைவுறுவண்ணம் உன்னையே எனக்குத் தந்தருளினாய். உன் அருட்பெருஞ் செயலை என்னென்பேன்.

வலிய எழுந்தருளி வந்து அடியேனை ஆட்கொண்டு எனது உள்ளத்தின்கண்ணே புகுந்தருளிய விச்சையையுடைய யாவராலும் விரும்பத்தக்க அமுதப்பெருங்கடலே, மலையே, செந்தாமரைக்காடனைய திருமேனிச் தனிச்

சுடரே, நாய்போன்ற கீழ்மையையுடையேனது நினைவு முழுவதையும் உனக்குரியதாகச் செய்து என் இருகண்களையும் நின் திருவடி மலர்களுக்கு உரியனவாய் அமைத்து வழிபாட்டினையும் அத்திருவடி மலர்களுக்கே அமையச் செய்து என்மொழியினையும் நின்னைப்பற்றிய மாணிக்கம்போன்ற வாசகங்களுக்கே உரிமையாக்கி இரண்டுமிலித் தனியனேற்கு ஐம்புல நுகர்வும் நிறைவுறும் வண்ணம் உன்னையே எனக்குத் தந்தருளினாய்; நின் அருட்பெருஞ்செயலை என்னென்பேன் என்றவாறு.

உலகியல் நினைவு பிறிதொன்றுமின்றித் தன்னையே எப்பொழுதும் நினைந்து கொண்டிருக்கும் வண்ணம் இறைவன் செய்தமையால் 'சிந்தனை நின்றனக்காக்கி' என்றார். "என்னை நினைந்தடிமைகொண் டென்னிடர் கெடுத்துத் தன்னை நினையத் தருகின்றான்" எனப் பதினொராந் திருமுறையில் (விநாயகர் திருவிட் 1) வருதலும் காண்க. சிந்தனை - நினைவு. கண்கள் எங்கு நோக்கினும் காண்பது இறைவன் திருவடிகளையேயாதலின் 'கண்ணிணை நின் திருப்பாதப் போதுக்காக்கி' என்றார். தான் செய்யும் வழிபாடுகள் முழுவதும் அத்திருவடி மலர்களுக்கே அமைந்தமைபற்றி 'வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி' என்றார்.

வாயினால் மொழியும் மொழிகள் இறைவனைப்பற்றிய மணிவாசகமாக அமைந்தமை பற்றி 'வாக்கு உன் மணிவார்த்தைக் காக்கி' என்றார். "மாசின் மணியின் மணிவார்த்தை-பேசிப், பெருந்துறையேயென்று பிறப்பறுத்தேன்" (பண்டாய 7) என அடிகள் பிறுண்டு அருளியமையுங் காண்க. 'வாக்குன் மணிவார்த்தைக்காக்கி' என உடம்பொடு புணர்த்தலால் அடிகள் இறைவனைப்பற்றி அருளிய அருட்பாடல்கள் மாணிக்கவாசகம் ஆனமை அறியப்படும், இது குறித்தே அடிகள் மாணிக்கவாசகர் என அழைக்கப்பட்டனர்போலும். ஆக்கி என்ற வினையெச்சங்கள் நான்கும் இறைவன் செயலாக, அவை தந்தனை என்னும் இறைவன் வினையொடு முடிந்தன.

ஐம்புலன்கள் ஆர என்றது கண் முதலிய பொறிகளால் நுகரப்படும் காட்சி முதலிய புலன்கள் ஐந்தும் நிறைவுறும் வண்ணம் இறைவன் அருளியமைபற்றி என்க. வந்தனை என்னும் முன்னிலையொருமை வினைமுற்று, வந்து என்னும் செய்தெனெச்சப் பொருளில் வந்தது.

இறைவன் இவ்வுலகில் ஞானாசாரியனாக எழுந்தருளி வந்து தம்மை ஆட்கொண்டமையின் 'வந்தனை யாட்கொண்டு' என்றார்.

"பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு" அம் 1.

"சிவனவனி வந்தருளி, எந்தரமும் ஆட்கொண்டு" அம் 3.

"இப்புறத்தே...மாதிறேனும் வந்தருளி...அந்தணனாய் ஆட்கொண்ட"
கோத் 4.

"அந்தணனாகி வந்திங்கே...என்னையு மாட்கொண்டருளும்" குயிற் 10.

"குணக்கடல்... அணைந்து வந்தெனை ஆண்டுகொண்டருளிய அற்புதம்" அற் 6.

"பத்தர்சூழப் பராபரன் வாரில் வந்து பார்ப்பானென...எத்
தனுகிவந்தில் புகுந்தெமை ஆளுங்கொண்டு" சென்னிப் 4.

என அடிகள் பிறாண்டு அருளியவாறுங் காண்க.

உள்ளே புகுந்த-உள்ளத்தினுட் புகுந்த. "வந்தென் உளம் புகுந்த ஆரியனை" (அம் 2) "சிவபெருமான் ஊனுடி நாடிவந் துள்புகுந்தான்" (பூவல் 5) "ஆட்கொண்ட வள்ளல் ஊன் பழித்துள்ளம் புகுந்து" (குயில் 4) என வருவன காண்க.

விச்சை-வித்தை. "கல்லை மென்கனி யாக்கும் விச்சை கொண்டு" (சத 94) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. மால் – விரும்பம். வேட்கை. "மயக்கம் வேட்கை மாலென்றுரைப்பர்" பிங் 10 : 931 இறைவன் அடியார்கள் பருகுவதற்கேற்ற அமுதப் பெருங்கடலாயுள்ளானதலின் 'அமுதப்பெருங்கடலே' என்றார்.

"கடுந்தகை யேனுண்ணுந் தெண்ணீர் அமுதப் பெருங்கடலே" நீத் 12.

"திரைபொரா மன்னு மமுதத் தெண்கடலே" கோயிற் 3

என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க. 'கடலே' என்றது கொள்ளக் குறைவுபாடாமைபற்றியென்க. "கொளக் குறைபடாமையின் முந்நீரனையை" (பதிற் 90 : 16) என்றார் பிறரும்.

உலகமும் உயிரும் தன் வியாபகத்துள் அடங்கி நிற்பினும் தான் அவற்றால் தாக்குண்ணாது அசைவற நிற்றல் பற்றி 'மலையே' என்றார். "தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு" (தெள் 18) என்பது ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. உன்னைத் தந்தனை - உன்னை அடியேனுக்குத் தந்தனை. "தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னை" (கோயிற் 10) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க. இறைவன் திருமேனி வெம்மையில்லாத ஒப்பற்ற தழல்வடிவமாதல் பற்றிச் 'செந்தாமரைக் காடனைய மேனித் தனிச்சுடரே' என்றார். "அந்தாமரை மேனியப்பா" (நீத் 29) எனவும், "சிருடைச் செங்கமலத்தின் திகழுருவாகிய செல்வன்" (குயில் 9) எனவும் வருவன காண்க. "செந்தாமரை வண்ணன் தீர்த்தச் சடையன்" எனப் பதினொராந் திருமுறையில் (திருவாரூர் மும்மணி 12) என வருதலுங் ஈண்டு அறியற்பாலது. காடு என்றது தாமரையின் நெருக்கத்தைக் குறித்தது. "தாமரைக்காடு போன்றார்" என்பதற்கு 'தாமரையின் நெருக்கத்தையொத்தார்' என நச்சினார்க்கினியர் பொருளுரைத்தமையுங் காண்க. (சீவக 2199 உரை).

இரண்டுமிலி என்பது இரண்டுமில்லாதவன் எனப் பொருள்படும். அவ்விரண்டினையும் இருவினைகள் என்றும், ஆக்கக் கேடுகள் என்றும்

நூலறி அநுபவ அறிவு என்றும் உரைப்பர். இருவினைகள் நீங்கியிருப் பின் அடிகள் திருமேனி நில்லாது. "வினைப்போகமே யொருதேகங் கண்டாய்" எனப் பட்டினத்தடிகள் அருளியமையுங் காண்க. ஆக்கக் கேடுகள் நீங்கியிருப்பின் அஃது இடைப்பட்ட பயனுமன்றி அடிகளின் குறிக்கோளன்றாம். நூலறிவு அநுபவ வறிவு எனக்கொள்ளின் ஈரெட் டாண்டெல்லைதனில் எக்கலையுங் கற்றுணர்ந்து முதன் மந்திரியாய் அமர்ந் திருந்த அடிகளுக்கு அவ்வறிவுகள் இல்லையெனல் அமையாது. பின்னை, இரண்டும் என்றது என்னையெனின் இறை உயிர் உலகு என்னும் மூன்றனுள் இறை சத்து; உலகு அசத்து; உயிர் இறையை நோக்க அசத் தாதலும் உலகினை நோக்கச் சத்தாதலும் உடைமையின் சதசத்து. "இரு திற னறிவுள திரண்டலா தான்மா" எனச் சிவஞானபோதம் ஏழாஞ் சூத்திரத்து வருதலும், 'பாரிசேட வளவையான் இருதிறனறிவுள தொன் றுண்டென்பது பெறப்படுதலின் அதுவே சத்தாதற் றன்மையும் அசத் தாதற் றன்மையுமாகிய இரண்டு மின்றிச் சதசத்தாயுள்ள உயிராம்' என்னும் அப்பகுதிப் பொழிப்புரையும் ஈண்டறியற்பாலன. உயிர்களுக் குச் சார்ந்ததன் வண்ணம் உண்மையால் கடவுளைச் சார்ந்து அறிவிக்க அறிந்து ஈடேறுதலும், உலகினைச் சார்ந்து பிறப்பு இறப்பு அடைந்து உழலுதலுமுண்டு. உயிர் வியாபக சத்தாகிய இறையுள் அடங்கிய வியாப் பியச் சத்தாகும். உலகு வியாப்பிய அசத்தாகும். இங்ஙனம் உயிருக்குச் சத்தாதற் றன்மையும் அசத்தாதற் றன்மையும் உண்டெனின் அத்தன்மைத் தான பிறபொருள்களுமுண்டோ என்னும் வினு நிகழும். அதற்கு விடை, காண்டற்கருவியாகிய கண் தனக்கு ஒளியின் உதவி கிடைத்தவழி காண்ட லும் அஃதில்வழி காணமாட்டாமையும், சார்ந்ததன் வண்ணமாகிய பளிங்கு ஒளியின் உதவி பெற்றவழி விளங்குதலும் அஃதில்வழி விளங் காமையும் காண்டுமன்றே. ஆதலால் இரண்டு மிலித்தனியனேன் என்றது முழுவதும் சத்தாதலும் முழுவதும் அசத்தாதலும் இன்றிச் சதசத்தாயிருக் கின்ற தனியனேன் என்றவாறு. இன்னும் உணர்வு சிறிதுமில்லாத உல கினை நோக்கச் சிற்றறிவுடைய உயிர் சித்தாதலும், பேரறிவுடைய இறை வனை நோக்க அசித்தாதலுமுண்மையின் சிதசித்தாயிருக்கின்ற தனியேன் எனவும் உரைக்கலாம். உயிரைச் சதசத்து எனவோ சிதசித்து எனவோ கொள்ளுதல் சத்தாதல் அசத்தாதல்; சித்தாதல் அசித்தாதல் பிரம்பப் பெருமைபற்றியாகும். தனியனேற்கு உன்னைத் தந்தனை என முடிக்க.

இதன்கண் என் மனமொழிமெய்கள் நின்னைச் சிந்தித்தலும் புகழ்ந் துரைத்தலும் வழிபடுதலுமாகிய செயல்கள் செய்யுமாறு ஆக்கி உன்னைத் தந்தனை என்பதனால், மனமொழிமெய்கள் தாமாக நினைந்து புகழ்ந்து வழிபடமாட்டா என்பது பெறப்படுதலின் சுட்டறுத்தல் என்னும் மூன் றாம்பத்து நுதலியபொருள் போதருதல் காண்க. 26.

31. தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே.

ப-ரை: முனைவனே-வினையினீங்கி விளங்கிய அறிவினையுடையவனே, தனியனேன்-இரண்டுமிலியாகிய தனித்தன்மையுடையனாகிய யான், பிறவி பெரு பௌவத்து – பிறவியாகிய பெரிய கடலில் விழுந்து, எவ்வ தட திரையால் எற்றுண்டு – பிறவித் துன்பமாகிய பெரிய அலைகளால் எறியப்பட்டு, பற்று ஒன்று இன்றி – பற்றுக்கோடு யாதும்இல்லாமல், கனியை நேர் துவர் வாயார் என்னும் காலால் கலக்குண்டு – கொவ்வைப் பழத்தினை ஒத்த சிவந்த வாயினையுடைய மகளிர் என்னும் சுழல் காற்றினால் மனக்கலக்கம் எய்தி, காம வான் சுறவின் வாய்ப்பட்டு–காமமாகிய பெரிய சுறாமீனின் வலையில் அகப்பட்டு, இனி உய்யும் ஆறு என் என்று எண்ணி-வருந்துகின்ற இந்நிலையில் உய்வதற்கு வழி யாது என்று பல கால் நினைந்து, அஞ்சு எழுத்தின் புணை பிடித்து கிடக்கின்றேனை – திருவைந்தெழுத்தாகிய தெப்பத்தைப் பற்றுக்கோடாகப் பிடித்துக் கொண்டு கிடக்கின்றவனாகிய என்னை, ஆட்கொண்டு – அடிமை கொண்டருளி, மூர்க்கனேற்கு முதல் அந்தம் இல்லா மல்லல் கரை காட்டினாய் – மாறுபட்ட குணத்தினையுடைய எனக்கு தோற்றமும் அழிவுமில்லாத வளப்பம் பொருந்திய முத்திக்கரையைக் காட்டியருளினாய். நின் பெருங்கருணையை என்னென்பேன்.

முனைவனே, தனியனேன் பிறவியாகிய பெருங்கடலில் விழுந்து பிறவித் துன்பமாகிய பேரலைகளால் எறியப்பட்டுப் பற்றுக்கோடு யாதும் இல்லாமல் மகளிர் என்னும் சுழல்காற்றாற் கலக்குண்டு காமமாகிய பெரிய சுறவின்வாயில் அகப்பட்டு வருந்துகின்ற இந்நிலையில் உய்வதற்கு வழி எதுவாம் என்று எண்ணித் திருவைந்தெழுத்தாகிய தெப்பத்தினைப் பற்றுக்கோடாகப் பிடித்துக்கொண்டு கிடந்தவனாகிய என்னை ஆட்கொண்டு மூர்க்கனேற்கு தோற்றமும் அழிவுமில்லாத முத்திக்கரையைக் காட்டியருளினாய். நின்பெருங்கருணையை என்னென்பேன் என்பதாம்.

தனியனேன் கிடக்கின்றேனை எனக்கூட்டிக் கிடக்கின்ற தனியனேனை என்பது கருத்தாகக் கொள்க. பிறவியைக் கடல் என்றார் காரண காரியத் தொடர்ச்சியாய் இடையீடின்றி வருதலின். "பிறவியென்னுமிக் கடலை நீந்த" (சென்னிப் 4) "மேலைப்பிறப்பு முந்நீர் கடக்க" (பாண்டி 9) என அடிகள் பிறண்டு அருளியமையுங் காண்க. பிறவியைப் பௌவம் என்றதற்கேற்பப் பிறவி அடைந்த உயிர்களைத் தாக்குவனவாகிய தன்னால் வருவதும் பிறவுயிரால் வருவதும் தெய்வத்தால் வருவதுமாகிய பிறவித்துன்பங்களைத் திரையாக உருவகித்தார் பிறவி கடலாக, துன்பங்கள் திரையாக, அக்கடலில் எழும் சுழல் காற்றுப் போலாக மாதர் கலக்குதலின் 'துவர் வாயார் என்னும் காலால்' என உருவகித்தார். கனி என்றது கொவ்வைக் கனியை.

"குழல் கொன்றை கொவ்வை செவ்வாய்" திருக்கோவை 108.

என வருதல் காண்க. துவர் - சிவப்பு. "இன்மொழித் துவர் வாய்" (பொருந 27) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. மாதரின் அழகை வாயின்மேலிட்டுத் 'துவர்வாயார்' என்றார்.

காமம் – புணர்ச்சி வேட்கை. அதனைப் பிறவிக் கடலில் உள்ள சுறாமீனாக உருவகித்தார். இனி என்றது பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து எவ்வத்திரையால் எற்றுண்டு பற்றுக்கோடின்றித் துவர்வாயார் என்னும் காலாற் கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு வருந்திக் கிடக்கின்ற நிலையையுணர்த்தியது. என் என்று எண்ணி – யாது என்று பலகால் நினைந்து. அதன் பெறுபேறு அஞ்செழுத்தின் புணைபிடித்தலாகும். அஞ்செழுத்தின் என்புழி இன் தவிர்வழி வந்தது. பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்குத் திருவைந்தினைத் தெப்பமாக உருவகித்தார். முதலந்தமில்லா என்பது தோற்றமும் கேடுமில்லாத வீடாகிய கரையைச் சிறப்பித்து. இறைவனுக்கு முதலந்தமின்மையின் அவ்விறைவனால் அருளப்படும் வீட்டிற்கும் அச்சிறப்புக் கூறப்பட்டது. மல்லல் – வளம். "மல்லல் வளனே" என்பது தொல்காப்பியம் (உரி 7) வளம் அந்தமிலின்பம். அது அவ்வின்பத்தினையுடைய வீட்டினை உணர்த்தியது. பிறவியைக் கடலாகக் கூறினமையின் அதனின்று நீங்கி அடையும் வீடுபேற்றினைக் கரையாக உருவகஞ் செய்தார். ஐந்தெழுத்தின் புணைபிடித்தல் ஆட்கொள்ளுதற்கும் ஆட்கொள்ளல் கரைகாட்டற்கும் ஏதுவாகும். கரைகாட்டினாய் என விகுதி பிரித்து மாற்றிக்கூட்டிக் கிடக்கின்றேனை ஆட்கொண்டு கரைகாட்டினாய் எனமுடிக்க.

இதன்கண் அடிகள் முதலந்தமில்லா மல்லற்கரைகாட்டக் கண்டனராதலின் அதனை மனமொழி மெய்களால் அறியாமடியாமை பெறப்படுதலின் சுட்டறுத்தல் என்னும் மூன்றும்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 27.

32. கேட்டாரு மறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டான்
நாட்டார்கள் விழிதிருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே.

ப-ரை: ஆரும் கேட்டு அறியாதான்-எவ்வகை மேம்பாட்டினராலும் தம் கேள்வி அறிவால் அறியப்படாதவனும், கேடு ஒன்று இல்லான் – அழிவு சிறிதும் இல்லாதவனும், கிளை இலான்-சுற்றத்தினர் இல்லாதவனும், கேளாதே எல்லாம் கேட்டான்–பிறர்வாயிலாகக் கேட்டறியாதே இயல்பாகவே எல்லாவற்றையும் அறிந்தவனுமாகிய இறைவன், நாட்டார்கள் விழித்திருப்ப – நாட்டிலுள்ளார் அனைவரும் பார்த்திருப்பவும், ஞாலத்து உள்ளே–இந்நிலவுலகத்தில், நாயினுக்கு தவிசு இட்டு - ஒரு நாய்க்கு உயர்ந்த ஆசனத்தை இட்டதுபோல இருக்கை அமைத்து, நாயினேற்கு காட்டாதன எல்லாம் காட்டி–இழிவுடையேனுக்குக் கல்வியறிவாற் கண்டறிய முடியாதன எல்லாவற்றையும் காட்டியருளி, கேளாதன எல்லாம் கேட்பித்து–கேள்வியறிவாற் கேட்டறிய முடியாதனவற்றையெல்லாம் தன்வாயிலாகக் கேட்டறியும் வண்ணம் செய்து, என்னை ஆட்கொண்டு மீட்டேயும் பிறவாமல் காத்தான்–தகுதியற்றவனாகிய என்னை அடிமைகொண்டருளி மீட்டும் பிறவாமல் காப்பாற்றியருளினான். எம்பெருமான் செய்திட்ட விச்சைதான்–இஃது எங்கள் தலைவன் செய்த வியப்புக்குரிய திருவிளையாடலாகும்.

யாவராலும் கேட்டு அறியப்படாதவனும் கேடு ஒரு சிறிதும் இல்லாதவனும் சுற்றத்தினர் இல்லாதவனும் பிறரிடத்துக்கேட்டறியாமலே இயல்பாகவே எல்லாவற்றையும் அறிந்தவனுமாகிய இறைவன் நாட்டிலுள்ளார் அனைவரும் பார்த்திருப்பவும் இந்நிலவுலகத்தில் (புகுந்து) நாயினுக்குத் தவிசு இட்டது போல இருக்கை அமைத்து இழிவுடையேனுக்குக் காட்ட முடியாதனவெல்லாம் காண்பித்துக் கேள்வியறிவாற் கேட்டறியமுடியாதனவற்றையெல்லாம் தன்வாயிலாகக் கேட்டறியும்வண்ணம் செய்து என்னை ஆட்கொண்டு மீட்டும் பிறவாமல் காத்தருளினான். இஃது எம்பெருமான் செய்த வியப்புக்குரிய திருவிளையாடலாகும்.

இறைவன் கல்வி கேள்வி அறிவுகளால் ஓரளவு அறியப்படினும் எவ்வகை மேம்பாட்டினராலும் பிறர்பாற் கேட்டு முழுவதும் அறியப்படாதவனாகலின் 'கேட்டாரு மறியாதான்' என்றார். அறியாதான்–அறியப்படாதவன். இதில் 'படு' என்னும் செயப்பாட்டு விகுதி தொக்கது. இறைவன் என்றுமுள்ளவனாகலின் 'கேடொன்றில்லான்' என்றார்.

கிளை-தந்தை தாய் முதலிய சுற்றம். இறைவன் யாவர்க்கும் தந்தை தாய் முதலிய சுற்றமாவனே யன்றித் தனக்கு அஃதிலானாதலின் 'கிளை யிலான்' என்றார்.

"எந்தை யாய்எம்பிரான் மற்று மியாவர்க்குந்
தந்தை தாய்தம் பிரான்றனக் கஃதிலான்' சதக 47.

என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க. இறைவன் எல்லாமறிபவனாதலின் 'கேளாதே யெல்லாங் கேட்டான்' என்றார்.

நாட்டார்கள் விழித்திருப்பவென்றது நாட்டிலுள்ளார் தாம் கதி யடைதற்குத் தகுதியின்மையாற் பார்த்துக் கொண்டிருப்ப என்றவாறு. விழித்திருப்ப ஆட்கொண்டான் என இயையும். நாயினேற்கு இருக்கை அளித்தது, இழிவுடைய நாய்க்கு உயர்ந்த ஆசனத்தை இட்டது போலு மென்பார் 'நாயினுக்குத் தவிசிட்டு' என்றார். காட்டாதன காட்டி யென்பதும் கேளாதன கேட்பித்து என்பதும் கல்வி கேள்வி அறிவுகளால் முழுவதும் அறிய முடியாத இறையியல்பு, உயிரியல்பு, பாசவியல்பு என்ப வைகளை உணர்த்தி உபதேசஞ் செய்து அனுபவஞானத்தால் உணர வைத்தமையை உணர்த்துவனவாகும்.

மீண்டேயும் என்பது எதுகைநோக்கி வலித்தது. பிறவாமற் காத்தல் என்றது பிறப்பித்துப் பக்குவநிலையை அடையச் செய்த இறைவன் உயிரை மீண்டும் பிறத்தற்கு ஏதுவான இயல்பு அடையாதிருக்கும்படி பாதுகாத்தல் என்றவாறு. அதன் பயன் அழிவிலா இன்பநுகர்ச்சி. காத்தாட் கொண் டான் என்பதனை ஆட்கொண்டு காத்தான் என விகுதி பிரித்துக் கூட்டி யுரைக்க. காட்டாதன காட்டுதலும் கேளாதன கேட்பித்தலும் வியப்புக் குரிய செயல்களாதலின் 'எம்பெருமான் செய்திட்ட விச்சைதானே என்றார்.

இதன்கண் கேட்டாரும் அறியாதான் முதலிய இறையியல்புகளும் காட்டாதன காட்டுதல் முதலிய உயிரியல்பு பாசவியல்புகளும், சுட்டி யுணரப்படுவனவாகாமல் இறையருளினாற் றெளியத்தக்கன வாகலிற் சுட்டறுத்தல் என்னும் மூன்றாம்பத்து நுதலியபொருள் போந்தவாறு காண்க. 28.

33. விச்சைதா னிதுவொப்ப துண்டோ கேட்கின்
மிகுகாதல் அடியார்தம் அடிய னாக்கி
அச்சந்தீர்த் தாட்கொண்டான் அமுத மூறி
யகநெகவே புகுந்தாண்டான் அன்பு கூர
அச்சன்ஆண் பெண்ணலியா காச மாகி
யாரழலாய் அந்தமாய் அப்பா னின்ற
செச்சைமா மலர்புரையு மேனி யெங்கள்
சிவபெருமா னெம்பெருமான் றேவர் கோவே.

ப—ரை : அச்சன் ஆண் பெண் அலி ஆகாசம் ஆகி-தந்தையும் அவன் அவள் அது என்னும் உலகப்பொருட்டொகுதியும் ஞானப்பரவெளியும் ஆகியும், ஆர் அழலாய்-அப்பரவெளிக்கணுள்ள அரிய அழல்போன்ற சுடர்வடிவாகியும், அந்தம் ஆய்-முடிவிடன் ஆகியும், அப்பால் நின்ற-பிரகிருதிமாயைக்கு அப்பாலாகியும் நிலைபெற்ற, செச்சை மா மலர் புரையும் மேனி-வெட்சியின் சிறந்த மலரையொத்த செவ்விய திருமேனியையுடைய, எங்கள் சிவபெருமான்-எங்கள் சிவபெருமானும், எம்பெருமான் - எங்கள் தலைவனும், தேவர்கோ-தேவர்களுக்குத் தலைவனுமாகிய இறைவன், மிகு காதல் அடியார்தம் அடியன் ஆக்கி-மிக்க அன்பினையுடைய தன் அடியார்க்கு என்னை அடியவனாகச் செய்து, அச்சம் தீர்த்து ஆட்கொண்டான்-அதனால் பழைய மலவாதனை மீட்டும் தாக்குங்கொல்லோ என்னும் அச்சத்தினை நீக்கி ஆளாகக் கொண்டான்; அமுதம் ஊறி அகம் நெக-அமுதம்போன்ற இன்பம் ஊற்றெடுத்து உள்ளம் அன்பினால் நெகிழவும், அன்பு கூர-மெய்யன்பு மிகவும், புகுந்து ஆண்டான்-எனது உள்ளத்தினுள்ளே புகுந்து ஆட்கொண்டருளினான்; கேட்கின் - இங்ஙனம் இறைவன் செய்த அருட் செயலைக் கேட்கப்புகுந்தால், இது ஒப்பது விச்சை உண்டோ-எனக்குச் செய்த இதனை ஒத்ததாகிய வியத்தகுசெயல் வேறுஉண்டோ? இல்லை.

தந்தையும் அவன் அவள் அது என்னும் உலகப்பொருட்டொகுதியும் ஞானப்பரவெளியும் ஆகியும், அப்பரவெளிக்கணுள்ள அழல் போன்ற சுடர்வடிவாகியும், அந்தத்தைச் செய்பவனாகியும் பிரகிருதி மாயைக்கு அப்பாலாகியும் நிலைபெற்ற, வெட்சியின் மலரை ஒத்த சிவந்த திருமேனியையுடைய எங்கள் சிவபெருமானும் எங்கள் தலைவனும் தேவர்களுக்குத் தலைவனுமாகிய இறைவன் மிக்க அன்பினையுடைய தன் அடியார்க்கு என்னை அடியவனாகச் செய்து அச்சம்தீர்த்து ஆட்கொண்டான்; அமுதம் போன்ற இன்பம் ஊற்றெடுத்து உள்ளம் நெகிழவும் மெய்யன்பு மிகவும் என் உள்ளத்தினுள்ளே புகுந்து ஆட்கொண்டருளினான். இங்ஙனம் இறைவன் செய்த அருட்செயலைக் கேட்கப்புகுந்தால் எனக்குச் செய்த இதனை ஒத்ததாகிய வியத்தகு செயல்வேறு உண்டோ? இல்லை.

விச்சை-வித்தை. தான்-அசை. உண்டோ என்பதில் ஓகார எதிர் மறை. கேட்கின் என்றது இறைவன் ஆட்கொண்டருளும் அருட்செயலை ஆராயப்புகின் என்றவாறு. இருவினையொப்பு மலபரிபாகமெய்திய அடிகளை இறைவன் ஆட்கொண்டு ஆணவமல ஆற்றலைக் கெடுத்தவிடத்தும் எத்தனையோ காலமாகப் பயின்று வந்த பயிற்சி வயத்தான் பெருங்காயம் வைத்த பாத்திரத்தில் அதனை எடுத்த விடத்தும் அதன் மணம் நீங்காமை போல வாசனாமலம் உயிரைத்தாக்குமாதலின் அதனை நீக்கும்பொருட்டு மிக்க அன்பினையுடைய அடியவர்களுக்கு அடியவனாகச் செய்து ஆட் கொண்டமையின் ' மிகுகாத லடியார்த மடியனாக்கி யச்சந்தீர்த் தாட் கொண்டான்'' என்றார் மிகுகாதலடியார் - கணந்தோறும் மிகாநின்ற அன்பினையுடைய மெய்யடியார். அடியார்தம் அடியனாக்கியமை,

"பாசமானவை பற்றறுத் தியர்ந்ததன் பரம்பெருங் கருணையால்
ஆசை தீர்த்தடி யாரடிக் கூட்டிய அற்புத மறியேனே" அற் 8.

"அறவையென் றடி யார்கள் தங்க ளருட்கு ழாம் புகவிட்டு" சென்னிப் 7.

"நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை யாண்டபிரான்" பூவல்லி 8.

என அடிகள் பிறுண்டு அருளியவாற்ருனுமறியப்படும். 'அச்சந்தீர்த்தாட் கொண்டான்' எனக் கூறப்படினும் ஆட்கொண்டு அச்சந்தீர்த்தான் எனக் கொள்க. அச்சந்தவிர்த்தமை, "அச்சந்தவிர்த்த சேவகன் வாழ்க" (திருவண்டப் 98) "அச்சந் தவிர்த்தென்னை ஆண்டுகொண்டான்" (தெள் 8) "அளித்து வந்தெனக் காவவென் றருளி அச்சந்தீர்த்தநின்" (செத் 10) என இத்திருவாசகத்தும், "காதரந் தீர்த்தருளும் தயல்வளர் மேனியன்" எனத் திருக்கோவையாரினும் (117) வருவனவற்ருலுமறிக. "அச்சமறுத்தென்னை யாண்டனன் நந்தியே" எனத் திருமந்திரத்து (2456) வருதலும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலது.

அமுதூறி-அமுதம் போன்ற இன்பம் ஊற்றெடுத்து. "தேன்றங்கித் தித்தித் தமுதூறி" "அடியவர்கள் நெஞ்சுளே நின்றமுதமூறி" (பொன் 2, 4) "என்கணிலே யமுதூறி" (அடைக் 7) "காயத்துள் அமுதூற ஊற" (செத் 5) என வருவன காண்க. இறைவன் புகுந்தாண்டமையால் அமுதூறி அகநெகுவதாயிற்று. "பொய்யனே னகநெகப்புகுந்து" (செத் 1) எனவும் "அன்பால் நீ அகநெகவே புகுந்தருளி யாட்கொண்டது" (ஏசறவு 7) எனவும் வருவன காண்க. கூர-மிக.

அச்சன்-தந்தை. திசைச்சொல். தந்தையை அச்சன் என்பது குடநாட்டார் வழக்கு என்பர் நச்சினுர்க்கினியர். (தொல். சொல் சூத் 400 உரை). "அச்சன் என்னையும் ஆண்டுகொண்டருளிய வற்புதமறியேனே" (அற்புத 9) என அடிகள் பிறுண்டு அருளியமையுங் காண்க. அத்தன் என்பது எதுகைநோக்கி அச்சன் எனத் திரிந்தது எனினுமாம். இறைவனை அச்சன் என்றது உலகத்துத் தந்தை போலாகாது எக்காலத்தும் எவ்விடத்தும் எல்லாவுயிர்களுக்கும் நன்மையே நாடிச் செய்யும் அருட்டிறம் பற்றியாகும்.

ஆண் பெண் அலி ஆகி ஆகாசமாகி என ஆகி என்பதனை முன்னுங் கூட்டுக. ஆண் பெண் அலி என்றது அவன் அவள் அது என்னும் உலகப்பொருள் முழுவதும் தனது வியாபகத்துள் அடங்கத் தான் அவற்றுடனுகியும் பிறிதாகியும் நிற்கும் நிலைபற்றியாகும். "பெண்ணுகி யாணு யலியாய்ப் பிறங்கொளிசேர் விண்ணுகி மண்ணுகி இத்தனையும் வேருகி" (திருவெம் 18) என அடிகள் அருளியமையுங் காண்க.

ஆகாசமாகின்றது இறைவன் நுண்ணிய ஞானப் பரவெளியாய் நிற்கும் நிலைமையைக் குறித்தது. ஞானப்பரவெளி தனது அருட்சத்தியா

கத் தான் அதனுள் அமைந்து ஆரழற் சுடராய் நிற்கும் தன்மை சிதாகாசவித்தை அல்லது தகரவித்தை பயில்வார்க்கு அருள்செய்யும் பொருட்டாகும்.

அந்தமாய் நின்றது தன்செயலால் உலகமுழுவதும் தன்னுள் ஒடுங்கத் தான் முடிவிடமாய் நிற்கும் நிலைமையை உணர்த்தியதாகும். அப்பால் என்றது பிரகிருதிமாயைக்கு மேலேயுள்ள அசுத்தமாயை சுத்தமாயைகளைக் குறித்தது. எல்லாம் ஒடுங்கிய நிலையில் இறைவன் ஒருவனே நிற்பன் என்பது தோன்ற 'அப்பால் நின்ற' என்றார். "விண்ணை மடங்க வெற்புக்கரப்ப, மண்ணை மடங்கவரு மொருகாலத்து மன்னி நிற்கும் மண்ணல்" (75) எனவும்.

"முன்னுமொருவ ரிரும்பொழின் மூன்றற்கு முற்றுமிற்றாற்
பின்னுமொருவர்" (160) எனவும்,

திருக்கோவையாரில் வருவனவும் காண்க.

இத்துணை *அரும் பெரும் பொருளாயுள்ள இறைவன் அன்பர்க்கருளும் பொருட்டு உருவத்திருமேனி தாங்குதலின் 'செச்சை மாமலர் புரையும் மேனி எங்கள் பெருமான்' என்றார். செச்சை-வெட்சி. "செச்சை செந்தூரம் வெட்சியாகும்" என்பது திவாகரம் (மரப்). செச்சை மாமலர் புரையும் மேனி என்றது வெட்சியின் சிறந்த மலரை யொத்த சிவந்த திருமேனி என்றவாறு. "செச்சை மலர் புரை மேனியன் திருப்பெருந்துறை யுறைவான்" (உயிருண்ணி 9) என அடிகள் அருளியமையுங் காண்க. செச்சை மலர் செந்நிறமுடைத்தாதல், "எரிநகை யிடையிடு பிழைத்த நறுந்தார்ப், புரிமலர்த்துழாஅய் மேவன் மார்பினோய்" (13 : 59-60) என்னும் பரிபாடலுரையில் 'எரிநகை யிடையிடுபு' என்பதற்கு 'நிறத்தால் எரியை யொத்த வெட்சிமலரை யிடையிட்டு' எனப் பரிமேலழகர் உரைத்தமையானுமறியப்படும். மேனிச் சிவபெருமான் என இயையும் மற்றைய அடியார்களையும் உளப்படுத்தி 'எங்கள் சிவபெருமான்' என்றார். இந்திரன் திருமால் பிரமன் முதலிய தேவர்கள் யாவர்க்கும் தலைவனாதலின் 'தேவர்கோ' என்றார்.

"வானவன் மாலயன் மற்றுமுள்ள தேவர்கட்கும்
கோனவனாய் நின்று கூடலிலாக் குணக்குறியோன்" பூவல் 12.

என அடிகள் அருளியமையுங் காண்க.

இதன்கண், 'செச்சை மாமலர் புரையுமேனி யெங்கள் சிவபெருமான்' என இறைவன் சுட்டியறியப்படுபவனாகக் கூறப்படினும் உள் புகுந்தாண்டதும் ஆகாயமாகி யாரழலாய் அந்தமாகியதும் ஆகிய இயல்புகள் சுட்டறிவுக்குப் புலனாகாமையின் சுட்டறுத்தல் என்னும் மூன்றும் பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 29.

---

* "அந்தமிலமுதே யரும்பெரும் பொருளே யாரமுதே" வாழாப் 8.

34. தேவர்கோ வறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாதும் அஞ்சோம்
மேவினோ மவனடியா ரடியா ரோடு
மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே.

ப—ரை: தேவர் கோ அறியாத தேவ தேவன்-தேவர்கட்கு அரசனாகிய இந்திரனும் அறியமாட்டாத மகாதேவனும், செழு பொழில்கள் பயந்து காத்து அழிக்கும்-செழுமைபொருந்திய உலகங்கள் அனைத்தையும் படைத்தும் காத்தும் அழித்தும் முத்தொழில் செய்கின்ற, மற்றை மூவர் கோனாய் நின்ற முதல்வன்-தன்னின் வேறாகிய பிரமன் திருமால் உருத்திரன் என்னும் மூவர்க்கும் தலைவனாய் நிலைபெற்ற முதல்வனும், மூர்த்தி-அட்ட மூர்த்தியாயுள்ளவனும், மூதாதை – பிரமன் திருமால் உருத்திரன் சதாசிவன் ஈசுவரன் என்பவர்களுக்குத் தந்தையாகிய சதாசிவமூர்த்திக்கும் தந்தையாயுள்ளவனும், மாது ஆளும் பாகத்து எந்தை – உமையம்மையார் தமதாக்கிக் கொண்ட இடப்பாகத்தையுடைய எங்கள் தந்தையும், யாவர் கோன்-எல்லார்க்கும் தலைவனுமாகிய சிவபெருமான், வந்து என்னையும் ஆண்டு கொண்டான்-வலிய வந்து ஒன்றும் போதா நாயேனையும் ஆளாகக் கொண்டருளினான்; நாம் ஆர்க்கும் குடி அல்லோம் – ஆதலால் இனி நாம் பிறரெவர்க்கும் அடிமை அல்லோம்; யாதும் அஞ்சோம் – எதற்கும் சிறிதும் அஞ்சுவோமல்லோம். அவன் அடியார் அடியாரோடு மேவினோம்-அவ்விறைவனுடைய அடியார்க்கும் அடியாரோடும் சேர்ந்துள்ளோம்; மேன்மேலும் குடைந்து ஆடி ஆடுவோம்-மேலும் மேலும் அவனது பேரின்ப வெள்ளத்தில் மூழ்கித்திளைத்து ஆனந்தக் கூத்து ஆடுவோம்.

தேவர்கட்கு அரசனாகிய இந்திரனும் அறியாத மகாதேவனும் உலகங்கள் அனைத்தையும் படைத்துக் காத்து அழிக்கின்ற மற்றைய பிரமன் திருமால் உருத்திரன் என்னும் மூவர்க்கும் தலைவனாய் நின்ற முதல்வனும் அட்டமூர்த்தியாயுள்ளவனும், மூதாதையாயுள்ளவனும் உமையம்மையார் ஆளும் இடப்பாகத்தையுடைய எங்கள் தந்தையும், யாவார்க்கும் தலைவனுமாகிய சிவபெருமான் வலியவந்து என்னையும் ஆளாகக் கொண்டருளினன். ஆதலால் இனி நாம் பிறர் எவர்க்கும் அடிமையல்லோம்; யாதும் அஞ்சோம் அவ்விறைவனுடைய அடியார்க்கும் அடியாரோடும் சேர்ந்துள்ளோம். மேலும் மேலும் அவனது பேரின்ப வெள்ளத்தில் மூழ்கித் திளைத்து ஆனந்தக்கூத்தாடுவோம் என்பதாம்.

இறைவனது இறைமைக்குணத்தினைக் கூறத்தொடங்கிய அடிகள் முதலில் 'தேவர்கோ வறியாத தேவதேவன்' என்றும், பின்னர் அவனில்

மேம்பட்ட பிரம்மன் முதலிய மூவர்க்கும் தலைவனாய் உள்ளவன் என்றும் அட்ட மூர்த்தங்களையுடையவன் என்றும் கீழுள்ள பிரமன் முதலியோர்க்குத் தாதையாகிய சதாசிவமூர்த்திக்கும் தாதையுள்ளவன் என்றும் உமையம்மையாளும் பாகத்தையுடையவன் என்றும் எங்கள் தந்தை என்றும் கூறியருளி இவையெல்லாவற்றையும் சேர்த்து முடித்தற் பொருட்டு 'யாவர் கோன்' என்றும் அருளிச் செய்தார்.

தேவர்கோ—தேவர்கட்கு அரசனாகிய இந்திரன். அவன் பசுபோத முனைப்பினால் இறைவனைக் காணமுடியாமையின் 'தேவர்கோ அறியாத தேவ தேவன்' என்றார். தேவதேவன்—தேவர்க்குத் தேவன். மகாதேவன் என்றவாறு. "ஆதிமூர்த்திக் கருள்புரிந்தருளிய தேவதேவன்" (கீர்த்தி 122) தேவதேவன் மெய்ச் சேவகன்" (சென்னிப் 1) என அடிகள் பிறண்டு அருளியமையுங் காண்க. "மிகுதேவர்க்குந் தேவன்" திருமந்திரம் 2636. தேவன் என ஒருமையாற் கூறினார் தேவர்க்கும் மேலாகிய தேவன் ஈசன் ஒருவனேயாதலின்.

பொழிகள் என்றது உலகங்களை. பயந்து—பெற்று. "நீண்ட தோளினாய் நிற்பயந் தெடுத்த யான்" (கம்ப. மந்திரப் 63) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. ஈண்டு படைத்து என்னும் பொருட்டாய் நின்றது. 'பயந்து காத்து அழிக்கும்' என்புழி வினையெச்சங்கள் எச்சப்பொருள் தாராமல் செவ்வெண் மாத்திரையே குறித்து நின்றன. "சக்கரமும் கந்தித்துச் சுழலுமாப் போன்" (சிவஞானசித் சூத் 10 செய்யுள் 6) என்புழிப்போல. மற்றைய என்பது தன்னின் வேறாகிய பிறிதுபொருளில் வந்தது. பிரமன் முதலியோரைக் கொண்டு படைத்தல் முதலிய தொழில்களைச் செய்விக்கும் பெருந்தலைவன் இறைவனாதலின் 'மூவர்கோன்' என்றார். "மூவண்ணல் தன்சந்நிதி முத்தொழில் செய்ய, வாளா மேவண்ணல்" எனப் பரஞ்சோதி திருவிளையாடற்புராணத்து (கடவுள் வாழ்த்து 1) வருதலும் காண்க.

மூர்த்தி—அட்ட மூர்த்தி. "அட்டமூர்த்தி யழகன்" (சென்னிப் 2) எனவும். "அட்டமூர்த்தியை மட்டவிழ்சோலை யாரூரானை" (தே. சுந். 59 : 2) எனவும் வருவன காண்க. அட்ட மூர்த்தம் நிலம் நீர் தீ வளி வான் உயிர் ஞாயிறு திங்கள் என்னும் எட்டுமாம். அவற்றைத் தனது மூர்த்தமாகக் கொண்டு தான் மூர்த்திமானாய்ப் பவர் முதலிய எட்டுத் திருநாமங்களோடு விளங்குபவன்.

"நில நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப் பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்"

என அடிகளும், (தோணோ 5)

"அட்ட மூர்த்தியதாகிய வப்பரோ" தே. 124 : 3.

என அப்பரடிகளும் அருளியமையுங் காண்க.

மூதாதை = முது + தாதை. தந்தைக்குத் தந்தை. பிரமன் முதலியோருக்குத் தந்தையாகிய சதாசிவனுக்குத் தந்தையாகலின் இறைவனை மூதாதை என்றார். 'மாதாளும் பாகந்தெந்தை' என்றதனால் உமையம்மையார் அக்கினியும் சூடும்போலக் குணமாகாது இறைவனோடு ஒருங்கு நிற்பவர் என்பது கூறியவாறு.

மால் பிரமன் மற்றொழிந்த தேவர்கள் முதலிய எல்லாருக்கும் தலைவன் இறைவனாதலின் 'யாவர் கோன்' என்றார். யாவர்கோன் என்பதில் யாவர்க்கும் கோன் என்னும் நான்கனுருபும் முற்றும்மையும் தொக்கு நின்றன. என்னையும் என்பதில் உம்மை இழிவு சிறப்பு. வந்து ஆட்கொண்டான் என்றது அம்முழுமுதல் இறைவன் கைம்மாறு கருதாத பெருங்கருணையினால் தானே வலிய என்னை ஆட்கொண்டான் என்றவாறு. "தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும் வான்வார் கழல்" (திருவெம். 6) என அடிகள் அருளியவாறுங் காண்க.

அவ்வாறு இறைவன் ஆட்கொண்டமையால் யாம் இனிப் பிறர் எவர்க்கும் அடிமையல்லோம்; எதற்கும் சிறிதும் அஞ்சோம் என்பார் 'நாமார்க்கும் குடியல்லோம் யாது மஞ்சோம்' என்றார். "நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்... கோமாற்கே நாமென்றும் மீளாவாளாய்க் கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே" (நாவு 312 : 1) எனத் தேவாரத்து வருதலும் காண்க.

"அங்கவர்தந் திருவேடம் ஆலயங்கள் எல்லாம்
அரனெனவே தொழுதிறைஞ்சி யாடிப் பாடி
எங்குமியாம் ஒருவர்க்கும் எளியோ மல்லோம்
யாவர்க்கும் மேலானோம் என்றிறுமாப் பெய்தித்
திங்கள்முடி யாரடியார் அடியோ மென்று
திரிந்திடுவர்" சூத்.12.

எனச் சிவஞானசித்தியாரில் வருதலும் ஈண்டறியற்பாலது. குடியென்றது ஈண்டு அடிமை என்னும் பொருட்டு. "தாமார்க்குங் குடியல்லாச் சங்கரன்" (நாவு 312 : 1) எனத் தேவாரத்து வருதலுங் காண்க.

யாதும் அஞ்சோம் என்பதில் யாதுக்கும் என்னும் நான்கனுருபு தொக்கது. இனி அதுவே இரட்டுறமொழியால் சிறிதும் என்ற பொருளையும் தந்தது. யாதும் என்னும் உபலட்சணத்தால் யாவர்க்கும் அஞ்சோம் என்பதும் கொள்க. யாதும் என அஃறியாற் கூறியது உயிர்களுப் பேரச் சத்தைத் தருகின்ற யமனுக்குக்* 'கூற்று' என்னும் அஃறிணைப் பெயரும் உளதாதல் பற்றியாகும் "நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்" என அப்பரடிகள் அருளியமையுங் காண்க.

---

*கூற்றெனப் பெயரிய கொடுந்தொழிலொருவ, னாற்றல் செற்ற வண்ணல். 11-ந் திரு. திருவாரூர் மும்மணிக் 13.

அடியார் அடியார்-இறைவன் அடியார்க்கு அடியார். "உன்னடியாரடி யாரடியோம்" "அடியா ரடியோம்" (திருப்படை 2, 8) என வருவன வுங் காண்க. அடியாரொடும் மேவினேம் எனக்கூட்டி இறைவன் ஆண்டு என்னை அடியாரிற் கூட்டினமையின் அடியாரொடு மேவினேம் என வுரைக்க. "அப்பனுண்டு தன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே" (அதிசய 1) "அடியா ரடிக்கூட்டிய அற்புதமறியேனே" (அற் 8) என அடிகள் அருளியமையுங் காண்க. பேரின்பம், வெள்ளம்போல இடையீ டின்றிப் பெருகுதலினாலும், அதனை நுகருந்தோறும் தெவிட்டப் பெருமை யானும் "மேன்மேலுங் குடைந்தாடி யாடுவோமே" என்றார். "இன்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற நெஞ்சங் கொண்டீர்" (திருப்பாண்டிப் 3) எனவும் "ஆனந்த வெள்ளம் வற்றாது முற்றாது" (கோவை 307) எனவும் அடிகள் அருளியமையுங் கொள்க. ஆடுவோம்-பேரின்பத்தில் மூழ்கிய ஆநந் தத்தாற் கூத்தாடுவோம்.

இதன்கண்; தேவதேவன், மூவர்கோன், மூர்த்தி. மூதாதை மாதாளும் பாகத்தெந்தை, யாவர் கோன் எனக் கூறப்பட்ட இறையியல்புகள் சுட்டி யறியப்படுவனவன்மையின் சுட்டறுத்தல் என்னும் மூன்றாம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 30.

## 4. ஆத்தும சுத்தி

ஆத்தும சுத்தி என்பது உயிரினது தூய்மையானநிலை. அது யான் எனது என்னும் அகப்பற்று புறப்பற்றுக்களின் நீக்கமும், அவற்றுக்கு ஏதுவாகிய கன்ம நீக்கமும் உளவாயவழி உண்டாவதாகும். கன்ம நீக்கத் திற்கு இடையறாத இறைபணி வேண்டுவதாகும். அதுவும் தூய்மையுடைய மனமொழி மெய்களாற் செய்யப்படுவதாகும்.

### அறுசீர்க்கழிநெடி லடியாசிரிய விருத்தம்.

35. ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே.

ப-ரை: துணை இலி பிண நெஞ்சே-எனக்குத் துணையாதல் இல்லை யான பிணம்போலப் பயனற்றுக் கிடக்கும் நெஞ்சமே, கூத்து உடையான் கழற்கு அன்பு இலை-திருக்கூத்தையுடைய சிவபெருமான் திருவடிக்கண் அன்பு செய்கின்றிலை; என்பு உருகி பாடுகின்றிலை-அன்பின்மையால் என்பு உருகப் பாடுகின்றாயுமில்லை. ஆடுகின்றிலை - பாடலின்மையால் அதற் கேற்ப ஆனந்தக்கூத்து ஆடுகின்றாயுமில்லை. பதைப்பதும் செய்கிலை-இறை வன் திருவருளைப் பெறவேண்டுமென்று துடித்தலும் செய்கின்றாயில்லை; பணிகிலை-வணங்குகின்றாயும் இல்லை; பாத மலர் சூடுகின்றிலை - இறைவன்

திருவடியாகிய மலரை நின்தலைமேற் சூடுகின்றாயுமில்லை; சூட்டுகின்றதும் இலை-அவ்விறைவன் திருவடிக்கண் மலரைச் சூட்டுவதும் செய்கின்றாயில்லை. தேடுகின்றிலை-அவ்விறைவன் யாண்டு உள்ளான் என்று தேடுகின்றாயுமில்லை; தெருவுதொறு அலறிலை-தெருக்கள்தோறும் அவ்விறைவனைத் தேடி அலறுகின்றாயுமில்லை. நீ இவ்வாறு பிணம்போற் பயனற்றுக் கிடப்பின், செய்வது ஒன்று அறியேன்-உன்னோடு கூடிய யான் உய்தி அடைவதற்குச் செய்யத்தக்கது ஒன்றையும் அறிகின்றிலேன்.

துணையிலி பிணநெஞ்சே, கூத்துடையான் திருவடிக்கண் அன்பிலை; என்புருகிப் பாடுகின்றிலை; ஆடுகின்றிலை; பதைப்பதுஞ் செய்கிலை; பணிகிலை; இறைவன் பாதமலர்களை நின்தலைமேற் சூடுகின்றாயுமில்லை; அவ்விறைவன் திருவடிக்கண் மலரைச் சூட்டுகின்றாயுமில்லை; அவ்விறைவனைத் தேடுகின்றாயுமில்லை; தெருக்கள்தோறும் அவ்விறைவனைத் தேடி அலறுகின்றாயுமில்லை; இந்நிலையில் உன்னோடு கூடிய யான் உய்தியடையச் செய்யத்தக்கது ஒன்றையும் அறிகின்றிலேன் என்பதாம்.

கூத்துடையான் - திருக்கூத்தையுடையவன்; சிவபெருமான். கழற்கு என்னும் நான்காவது ஏழாவதன் பொருட்கண் வந்தது. இறைவன் திருவடிக்கண் அன்பின்மையாற் பாடுதலும் ஆடுதலும் செய்கின்றிலை; அதைப் பற்றிப் பதைப்பதுஞ் செய்கிலை என்றார். உருகி என்னும் செய்தென் எச்சத்தை செயவென் எச்சமாக்குக. அன்பின்மையால் பாடுவது செய்யாமையாலும் அதனால் என்புருகாமையாலும் 'அன்பிலை என்புருகிப் பாடுகின்றிலை' என்றார். பாடுதல் நெகிழ்ச்சிக்கேதுவாதல், "பாடி நைந்து நைந்துருகி" (சத 100) "கண்ணுக்கினியானைப் பாடிக் கசிந்துள்ளம் உள் நெருக்கு நின்றுருக" (திருவெம் 4) "மாலுக்கரியானை வாயார நாம்பாடிப் பூலித் தகங்குழைந்து" (பொன்னூசல் 8) என வருவனவற்றாலுமறிக.

அன்பின்மையும் பதைப்பின்மையும் மனத்தின் செயல்களாகும். பாடுதலும் அலறுதலும் மொழியின் செயலாகும். என்புருகுதலும் ஆடலும் பணிதலும் பாதமலர் சூடுதலும் பாதத்திற்கு மலர் சூட்டுதலும் தேடுதலும் மெய்யின் செயல்களாகும். ஆகவே மனமொழி மெய்கள் இறைவன் பணியில் நில்லாமையின் செய்வதொன்றறியன் என்றார். என்றவன் கருத்து மனமொழி மெய்கள் முற்கூறப்பட்ட இறைபணியில் நிற்றற்கு இறைவன் அருள்செய்ய வேண்டுமென்பதும், அதனால் உயிர் தூய்மையான நிலையடையவேண்டும் என்பதும் குறிப்பெச்சம்.

பதைத்தல்-துடித்தல். "பதையேன் மனமிக உருகேன்" செத் 2. பாதமலர் சூடுகின்றிலை என்றது இறைவன் திருவடிமலரை நின்சிரசிற் சூடுகின்றிலை என்றவாறு. பாதமலர் சூட்டுகின்றதுமிலை என இயைத்து திருவடிக்கண் மலரைச் சாத்துகின்றாயுமில்லை எனவுரைக்க. நெஞ்சே என விளித்துப் பாடுகின்றிலை; ஆடுகின்றிலை; பணிகின்றிலை; சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை; தேடுகின்றிலை; அலறிலை என மொழிமெய்களின்

செயல்களையும் அதன் செயல்களாகக் கூறியது மனவினைவின்படி மொழியும் மெய்யும் தொழிற்படும் இயைபுபற்றியாகும்.

தேடுகின்றிலே என்றது இறைவன் யாண்டுள்ளான் அவனை யார் கண்டனர் என்று தேடுகின்றாயில்லையென்றவாறு. "தேடிற்றிலேன் சிவனெவ்விடத்தான் எவர்கண்டனரென்று" (நீத்தல் 45) அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க. தேடுதல் கடனாகுதல் "உள்ளுகித் தேடுவேன்" (அம் 17) "ஒருத்தனே யுன்னை ஓலமிட்டலறி யுலகெலாந் தேடியுங் காணேன்" (அருட் 2) என வருவனவற்றாலுமறிக. தெருவுதொறு அலறிலே என்றது அன்பின்மையால் தெருவுதொறும் இறைவனைத் தேடி அலறுகின்றாயுமில்லை என்றவாறு.

"மருளிய மலர்ப்பாதம் மனத்தில்வளர்ந் துள்ளுருக்கத்
தெருவுதொறு மிகவலறிச் சிவபெருமா னென்றேத்தி" ஏசறவு 9.

என்பதும் ஈண்டு அறியற்பாலது. துணையிலி நெஞ்சு என்றது உயிராகிய எனக்குத் துணையாதல் இல்லையான நெஞ்சு என்றவாறு. பிணநெஞ்சு என்றார் ஆடுதல் பாடுதல் பதைத்தல் முதலிய செயல்களைச் செய்யாமல் உயிர் நீங்கிய உடல்போற் கிடத்தலின்.

இதன்கண், ஆடல்பாடல் முதலிய அன்பின் செயல்கள் உயிரின் தூய்மைக்கு இறைவன் திருவருளாற் கிடைக்க வேண்டியன என்பது பெறப்படுதலின் ஆத்துமசுத்தி என்னும் நான்காம் பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 31.

36. அறிவி லாத வெனைப்புகுந் தாண்டுகொண் டறிவதை யருளிமேல்
நெறியெ லாம்புல மாக்கிய எந்தையைப் பந்தனை யறுப்பானைப்
பிறிவி லாதவின் னருள்கள்பெற் றிருந்துமா றாடுதி பிணநெஞ்சே
கிறியெ லாமிகக் கீழ்ப்படுத் தாய்கெடுத் தாயென்னைக் கெடுமாறே.

ப—ரை: பிண நெஞ்சே-பிணம்போலப் பயனற்றுக் கிடக்கும் மனமே, அறிவு இலாத என்னை புகுந்து ஆண்டுகொண்டு-தன்னை அறியும் உண்மையறிவு இல்லாத அடியேனை வலியவந்து ஆளாகக்கொண்டு, அறிவதை அருளி-தன்னை அறிதற்குக் கருவியாகிய அவ்வுண்மை யறிவைத் தந்தருளி, மேல் நெறி எலாம் புலம் ஆக்கிய எந்தையை-மேலாகிய வீட்டிற்குரிய வழிகள் எல்லாவற்றையும் புலப்படச் செய்த எங்கள் தந்தையும், பந்தனை அறுப்பானை-பாசப்பிணிப்பினை ஒழிப்பவனுமாகிய இறைவனை, பிறிவு இலாத இன் அருள்கள் பெற்றிருந்தும்-எஞ்ஞான்றும் நீங்குதலில்லாமைக்கு ஏதுவாகிய இனிய அருள் உதவிகளை எளிதாகப் பெற்றுக்கொண்டிருந்தும், மாறாடுதி-தடுமாறுகின்றாய்; கிறி எலாம் மிக கீழ்ப்படுத்தாய் - அத்தடுமாற்றத்தினால் பொய்ந்நெறிகளெல்லாம் மேற்பட என்னைக் கீழ்ப்படுத்திவிட்டாய்; என்னை கெடுமாறு கெடுத்தாய்-அங்ஙனம் கீழ்ப்படுத்தமையால் என்னைக் கெட்டுப்போமாறு கெடுத்துவிட்டாய்; உன் இயல்பினை என்னென்பேன்.

பிணநெஞ்சே, அறிவில்லாத என்னை வலியவந்து அடிமைகொண்டு தன்னை அறிதற்குக் கருவியாகிய உண்மை அறிவினைத் தந்தருளி வீட்டு நெறிகள் எல்லாவற்றையும் புலப்படுத்திய எந்தையும் பந்தனை அறுப்பானுமாகிய இறைவனை எஞ்ஞான்றும் பிரியாமைக்கேதுவாகிய இன்னருள் பெற்றிருந்தும் தடுமாறுகின்றாய்; அத்தடுமாற்றத்தினால் பொய்ந்நெறிகளெல்லாம் மேற்பட என்னைக் கீழ்ப்படுத்தி விட்டாய்; அங்ஙனம் கீழ்ப்படுத்தமையால் என்னைக் கெடுமாறு கெடுத்து விட்டாய்; உன் இயல்பினை என்னென்பேன் என்பதாம்.

அறிவு-இறைவனை அறியும் உண்மை அறிவு. புகுந்தாண்டு கொண்டு என்றது இறைவன் தானே வந்து ஆளாகக் கொண்டு என்றவாறு.

"தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்" திருவெம் 6.

"பொருளா வென்னைப் புகுந்தாண்ட பொன்னே" கோயின்மூத் 8.

"எனைத்தான் புகுந்தாண்டான்" உயிருண்ணி 4.

"பொருளா வென்னைப் புகுந்தாண்டு" திருக்கோவை 73.

எனப் பிறண்டும் அடிகள் அருளியமை காண்க.

அறிவதை என்பதில் அது இறைவனை அறியும் உண்மை அறிவை (ஞானத்தைச்) சுட்டியது. மேல்நெறி என்றது வீட்டுநெறியை. புலமாக்கல்-அறியச்செய்தல். பந்தனை அறுப்பானை - சிவநெறிக்கட் சேறற்குத் தடையாகவுள்ள பாசப்பிணிப்பை ஒழிப்பவனை.

"பந்தமறுத் தென்னை யாண்டுகொண்ட பாண்டிப்பிரான்" பூவல் 2.

"பந்த மறுக்கும் ஆனந்த மாக்கடலே" கோயிற் 9.

"அடியார் பந்தனை விண்டறநல்கும் எங்கள் பரமன்" வார்த் 5.

"பந்தமறுத் தாண்டு...அருளி வாறு" அச்சோ 6.

என அடிகள் அருளியவாறுங் காண்க. எந்தையை, அறுப்பானை என்னும் இரண்டாம் வேற்றுமைகள் 'பிறிவு' என்னும் தொழிற்பெயரைக் கொண்டு முடிந்தன. பிறிவு-பிரிவு. "பிறியும் மனத்தார் பிரிவரிய பெற்றியனை" குலாப் 4. பிறிவிலாத அருள் - தன்னை என்றும் பிரியாமைக்கு ஏதுவாகிய அருள். இலாத என்னும் எச்சம் ஏதுப்பொருட்டு. இன்னருள்-இனிய அருள். "மண்ணுழை யாவுமறிதில்லை மன்னன தின்னருள் போல்" திருக்கோவை 348. இன்னருள் பெற்றிருந்தும் என்பதில் உம்மை தடுமாறாதிருப்பதற்குரிய அருள்கள் பெற்றிருந்தும் பயற்சி வயத்தால் தடுமாறுகின்றாய் என உயர்வு சிறப்பு. மாறுடுதல் - தடுமாறுதல். கிறி-பொய். வஞ்சனையுமாம். "கிறியும் கீழ்மையுங் கெண்டையங் கண்களும்" அற்புதப் 10. மாறுடுதலினால் பொய்ந்நெறிகளெல்லாம்

மேலோங்குதலின் 'கிறியெலாமிக' என்றார். அங்ஙனம் மிகுதலால் யான் கீழ்படுதலின் 'கீழ்ப்படுத்தாய்' என்றார். கெடுமாறு கெடுத்தாய் எனக் கூட்டுக.

மேலைத் திருப்பாட்டில் (சத 31) நெஞ்சு தூய்மையடைவதற்கு உதவியான பாடல் ஆடல் முதலிய செயல்கள் அற்றுக் கிடந்தமையைக் கூறி, இத்திருப்பாட்டால் உதவி செய்யாமையோடு மாறுடிக் கீழ்ப்படுத்தி என்னை ஒருவாற்றானும் உய்திகூடாதபடி கெடுத்து விட்டாய் எனப் பயனற்றுக்கிடக்கும் மனம் என்னைப் பயனற்றுப் போகும் வண்ணம் செய்ததனைச் கூறியருளினார்.

இதன்கண், பிறிவிலாத இன்னருள் பெற்றிருந்தும் கிறியெலாம் மிகக் கீழ்ப்படுத்துக் கெடுத்த தம் மனத்தினைக் கடிந்து கூறும் வாயிலாக அதனைத் தூய்மைசெய்து தரல் வேண்டுமென வேண்டிக் கோடல் புலப்படுதலின் ஆத்துமசுத்தி என்னும் நான்காம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 32.

37. மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையையெம்மதியிலி மடநெஞ்சே
தேறு கின்றிலம் இனியுனைச் சிக்கெனச் சிவனவன்திரடோண்மேல்
நீறு நின்றது கண்டனை யாயினும் நெக்கிலை யிக்காயம்
கீறு கின்றிலை கெடுவதுன் பரிசிது கேட்கவுங் கில்லேனே.

ப—ரை: எம் மதி இலி மட நெஞ்சே - யாம் கூறும் அறிவுரையை ஏற்றுக்கொள்ளுதலில்லாத அறியாமையுடைய மனமே, எனை மாறி நின்று - என்னை மாறுபட்டு நின்று, கெட கிடந்தனையை - யான் கெடுமாறு என்பாற் கிடந்தாற்போலுவை. இனி உனை சிக்கென தேறுகின்றிலம் - உன்னை உறுதியாகத் தெளியமாட்டோம். சிவன் அவன் திரள் தோள் மேல் - சிவபெருமானாகிய அவ்விறைவன் பரமாசாரியனாய் எழுந்தருளிய பொழுது அவனது திரண்ட தோள்களின்மீது, நீறு நின்றது கண்டனை ஆயினும் - திருவெண்ணீறு நிலைபெற்று விளங்குதலைக் காட்சியளவையாற் கண்டாயாயினும், நெக்கிலை - அவனை நினைந்து அன்பினால் உருகுகின்றாயில்லை; உன் பரிசு கெடுவது - இவற்றால் உன் தன்மை கெட்டுப்போவதாகும். இது கேட்கவும் இல்லேன் - நான் இதனைக் கேட்கவும் ஆற்றலில்லேன்.

எம்மதியிலி மடநெஞ்சே, என்னை மாறுபட்டு நின்று யான்கெடுமாறு என்பாற் கிடந்தாற் போலுவை: ஆதலால் உன்னை உறுதியாகத் தெளியமாட்டோம். சிவபெருமானாகிய அவ்விறைவனுடைய திரண்ட தோளின் மீது திருவெண்ணீறு நிலைபெற்று விளங்குதலைக் கண்டனையாயினும் அவனை நினைந்து அன்பினால் உருகுகின்றாயில்லை; இவ்வுடம்பைக் கீறுகின்றாயில்லை; இவற்றால் உன் தன்மை கெட்டுப்போவதாகும். இதனைக் கேட்கவும் ஆற்றலில்லேன் என்பதாம்.

மாறிநிற்றல்-உயிர்க்கு உதவியாய் இறைவழிபாட்டில் நில்லாது பயிற்சி வயத்தான் உலகியல்வழி நிற்றல். கிடந்தாலனையை என்பது கிடந்தனையை என விகாரப்பட்டது. எம்மதி-உயிராகிய எம்மை அறியும் அறிவு எனினு மாம். தாம் கூறும் அறிவுரையை ஏற்று அதன்படி ஒழுகாமைபற்றி 'எம்மதியிலி மடநெஞ்சே' என்றார். மடம்-அறியாமை. "வருந்தினை யளியவென் மடங்கெழு நெஞ்சே" (கலி 123 : 19) என்புழியும் இப் பொருட்டாதல் காண்க.

என்னை ஆதாரமாகக் கொண்டு கிடக்கும் நீ எனக்கு உறுதுணையா காது என்கேட்டிற்கு உறுதுணையாகின்றாயாதலால் இனிமேல் உன்னை உறுதியாகத் தெளிய மாட்டோம் என்பார் 'தேறுகின்றிலம் இனியுனைச் சிக்கென' என்றார். தேறுதல்-தெளிதல். "தேறினும் தேறாவிடினும்" குறள் 876. சிக்கென-உறுதியாக. "தேற்றமிலாதவர் சேவடி சிக்கெனச் சேர்மின்களே" (பாண்டிப் 10) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

சிவனவன் என்பதில் அவன் என்னும் பண்டறிசுட்டு இறைவனது இறைமைக் குணங்களைச் சுட்டியது. திரள்தோள்-திரண்டதோள். "மல்ல யங்கு திரள்தோள்கள்" (ஞான 211 : 4) "செங்கனகத் திரடோளெஞ் செல்வன் றன்னை" (நாவு 298 : 2) எனத் தேவாரத்து வருவனவும் காண்க. திரள்தோள்மேல் நீறு நின்றது "சினபவளத் திரண்டோண்மேற் சேர்ந்திலங்கு வெண்ணீற்ற னென்கின்றாளால்" (நாவு 6 : 1) எனத் தேவா ரத்தும், "தோட்கொண்டநீற்றன்" (அம்மானை 3.) "தோளுலா நீற்றன்" (அச்சப் 6) என இத்திருவாசகத்தும், "அவன் தோள் பூசு அத்திருநீ றென" "தவளத்த நீறணியும் தடந்தோளண்ணல் (109, 112) எனத் திருக்கோவையாரினும் வருவனவற்றாலும் அறிக. திரள்தோள் என்ற உபலட்சணத்தால் திருமேனி முழுவதும் கொள்ளப்படும். "நீறு பயில் கின்ற மெய்யுடையான் (ஞான 103 : 5) எனவும் "மெய்யெல்லாம் வெண் ணீறு சண்ணித்தமேனி" (நாவு 5 : 1) எனவும் தேவாரத்து வருவன காண்க. இறைவன் திருமேனியிலுள்ள திருவெண்ணீற்றின் குறிப்பு உல கும் முழுவதும் பேரூழிக்காலத்து வெந்து சாம்பராகி அங்ஙனம் செய்த இறைவனிடத்திலேயே தங்கியிருப்பதை உணர்த்துவதாகும். நீற்றினை எடுத்துக் கூறினாராயினும் உபலக்கணத்தாற் கண்டிகையுங் கொள்க. "கண்டிகையு முளைத்தெழு மூவிலை வேலும்....உடையார்" "கண்டிகை பூண்டு கடிசூத்திரமேற் கபாலவடம்....வைத்திட்ட" (நாவு 2 : 3; 112 : 9) எனத் தேவாரத்து வருவனவும் காண்க. கண்டனையாயினும் என்பதில் உம்மை, நூல்வாயிலாகக் கேட்டதேயன்றிக் காட்சியளவையாற் கண்டும் என இறந்ததுதழீஇயவெச்சவும்மை. கண்டனையாயினும் நெக்கிலையென் றது முழுமுதல் இறைவனைக் கண்டிருந்தும் அன்பினால் உருகுகின்றாயில்லை யென்றவாறு.

இக்காயம் கீறுகின்றாயில்லையென்றது இவ்வுடம்பினைற் பெறவேண்டிய வீடுபேற்றினைப் பெறுதற்குரிய நிலைமையைப் பெற்றிருந்தும் இவ்வுடம்போடு கூடிவாழும் வாழ்க்கையை விரும்புகின்றாய் என்பதை உணர்த்தியது. கேட்கவும் கில்லேன் என்றது நெஞ்சே நின்தீய இயல்புகளைச் செவிவாயிலாகக் கேட்டுப் பொறுக்குமாற்றலில்லாத யான் கண்டு எங்ஙனம் ஆற்றுவேன் என்னும் பொருள்பட நின்றது. கில்-ஆற்றலுணர்த்தும் இடைச்சொல். "முன்போல் வேட்டையினின் முயலகில்லேன்" (பெரிய புரா. கண்ணப் 45) என்புழிப்போல.

இதன்கண், மடநெஞ்சே என்னை மாறிநின்று யான் கெடக்கிடந்தாலனைய தன்மையையுடையை; அதனால் உன்னைச் சிக்கெனத் தேறுகின்றிலம்; நெக்கிலை; இக்காயம் கீறுகின்றிலை, இதனைக் கேட்கவும் கில்லேன் எனத் தனது உயிரின் தூய்மைக்கு உதவியாய் நிற்க வேண்டியமனம் அவ்வழி நில்லாமையைக் கூறுமுகத்தால் அம்மனத்தினை எனக்கு உதவுமாறு அருள்செய்ய வேண்டுமென வேண்டிக்கொண்டமை புலப்படுதலின் ஆத்துமசுத்தி என்னும் நான்காம்பத்து நுதலியபொருள் போந்தவாறு காண்க. 33.

38\. கிற்ற வாமன மேகெடு வாயுடை யானடி நாயேனை
விற்றெ லாமிக ஆள்வதற் குரியவன் விரைமலர்த் திருப்பாத
முற்றி லாவிளந் தளிர்பிரிந் திருந்துநீ உண்டன வெல்லாமுன்
அற்ற வாறுநின் னறிவுநின் பெருமையும் அறுவறுக்
கில்லேனே.

ப—ரை: மனமே-நெஞ்சமே, உடையான்-உலகத்தை உடைமையாகவும் அடிமையாகவும் உடையவனும், அடி நாயேனை விற்று எலாம் மிக ஆள்வதற்குரியவன் - அடிமையாகிய நாய் போன்ற இழிவையுடைய எளியேனை விலைப்படுத்தியாயினும் எனக்கு எல்லா நலங்களும் மிகுமாறு ஆண்டுகொள்வதற்கு உரிமையுடையவனுமாகிய இறைவனுடைய, விரை மலர் திரு பாத முற்று இலா இளம் தளிர் பிரிந்திருந்து - நறுமணம் பொருந்திய தாமரைமலர் போன்ற திருவடிகளாகிய எக்காலத்தும் முற்றுதலில்லாத இளந்தளிர்களை நீங்கியிருந்து, முன் நீ உண்டன எல்லாம் அற்ற ஆறும் - முன்னர் நீ நுகர்ந்திருந்த இன்பங்கள் எல்லாம் நீங்கிய தன்மையையும், நின் அறிவும் நின் பெருமையும்-அதனை அறியாத நின் அறிவையும், நின் இழிவின் மிகுதியையும், அளவு அறுக்கில்லேன்-அளவிட்டு வரையறுக்கும் ஆற்றலுடையேனல்லேன்; ஆதலால், கிற்றவா கெடுவாய்-நீ செய்தவாற்றான் கெடுவாய்; அதனை நீ அறிந்திலை.

மனமே, உடையானும் அடிநாயேனை விற்று எல்லா நலன்களும் மிகுமாறு ஆண்டு கொள்வதற்குரிமையுடையவனுமாகிய இறைவனுடைய விரைமலர்த் திருப்பாதமாகிய முற்றுதலில்லாத இளந்தளிர்களைப் பிரிந்திருந்து அதனால் முன்னர் நீ நுகர்ந்தவையெல்லாம் அற்றவாற்றையும்

அதனை அறியாத நின் அறிவையும், நின் இழிவின் மிகுதியையும் அளவிட்டு வரையறுக்கும் ஆற்றலுடையேனல்லேன்; ஆதலால் நீ செய்த வாற்றான் கெடுவாய்; அதனை நீ அறிந்திலை என்பதாம்.

கிற்றல்-செய்தல். கிற்றவாறு என்பது கிற்றவா என ஈறுகெட்டு நின்றது. மனம் கிற்றவாறு என்னையெனின், இறைவன் பரமாசாரியனாய் வலிய எழுந்தருளி வந்து அருளுபதேசம் செய்தபொழுது அவனை அணுகியிருந்து நுகர்ந்த இன்பங்களெல்லாம் அவன் மறைந்தவிடத்து நீங்கிய தன்மையைப் பொறுத்திருந்ததாகும். கிற்றவாற்றால் என மூன்றாவது விரித்து அதனைக் கெடுவாய் என்பதனோடு முடிக்க. இனி, கில் தவா எனப் பிரித்து உலகப் பற்றிச் செல்லும் ஆற்றல்கெடாத எனவும், கிற்று அவா எனப்பிரித்து ஆற்றலுடைத்தாகிய அவாவினை மேற்கொண்ட எனவும் பொருளுரைப்பாருமுளர்.

உலகத்துள்ள பொருள் எல்லாவற்றையும் உடைமையாகவும் அடிமையாகவும் உடையானாதலின் இறைவனை உடையான் என்றார். உடையானாகிய இறைவனது அளவற்ற உயர்வினை நோக்கத் தம்நிலை மிகக் கீழானதாதல் பற்றி 'அடிநாயேனை' என்றார். ''யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான், யாவர்க்கும் கீழாம் அடியேனை'' (திருவெண்பா 8) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க. விற்றல்-உலகியலில் ஒன்றனை விற்று அதன் விலையைத் தாம் பெற்றுக் கொள்ளும் தன்மையையுடையது. ஈண்டு இறைவன் உயிரைவிற்றுத் தான் அடையும் பேறு ஒன்றுமின்மையின், அவ்வுயிர்க்கே எல்லா நலமும் மிகுமாறு செய்கின்றானாதலின் 'விற்றெலாம் மிக' என்றார். ஆணவமலத்தோடு விரவிச் செயலற்றுக் கிடந்த உயிரை இறைவன் உய்விக்குமாறு திருவுளங்கொண்டு வினைக்கீடாகச் செய்தலே ஈண்டு விற்றலாகும். அதனால் உயிர் வினைக்கீடாகப் பிறந்திறந்து வினைகளைச் செய்து வினைப்பயன்களை அநுபவித்தலால் ஆணவவலி கெடப்பெற்று இருவினையொப்பு மலபரிபாகமாகிய பக்குவநிலையையடையும். அந்நிலையில் இறைவன் அவ்வுயிரை ஆட்கொண்டு அவ்வுயிர்க்கு எல்லா நலமும் மிகச் செய்வான். இதனை விளக்கவே 'விற்றெலாமிக ஆள்வதற்குரியவன்' என்றார். ஆள்பவன் என்னாது ஆள்வதற்குரியவன் என விதந்து கூறியது, மற்றைத் தேவர்கள் உயிர்க்குறுதி பயக்கும் ஐந்தொழிற்குமுரியரல்லாமையால் அவ்வைந்தொழிற்குமுரிய இறைவனே ஆள்வதற்குரியன் என்பது தோற்றுதற் பொருட்டென்க.

இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட பின்னர்த் தமது கருவி கரணங்கள் அருள் வழிப்பட்டுநின்று உண்முகமாகக் கண்டு நுகர்ந்த இன்பங்களை விளக்குவார் அவ்விறைவன் திருவடிகளை 'விரைமலர்த் திருப்பாத முற்றிலா இளந்தளிர்' என்று சிறப்பித்துரைத்தார். விரை என்றது ஈண்டு மகரந்தத்தினை. அதனைக் கூறவே, அதனோடு தொடர்புடைய தேனும் அடங்கும். ஆகவே விரை மூக்குணர்விற்கும், தேன் நாவுணர்விற்கும், மலர்த்திருப்

பாதத்தளிர் கண்ணுணர்விற்கும், இளமை ஊற்றுணர்விற்கும், தேனைப் பருகிய உயிராகிய தனது ஆரவாரம் செவியுணர்விற்கும் இயையுமாறு காண்க. பொறியுணர்வு கூறவே அந்தக் கரணங்கள் மொழி மெய்கள் எல்லாம் அவ்வின்பநுகர்ச்சியைப் பெற்றமை புலனும். மலர் என்றது தாமரை மலரை, இறைவன் மூவாமேனி முதல்வனுதலின் அவன் திருப் பாதங்களைத் 'திருப்பாத முற்றிலா விளந்தளிர்' என்றார். "மூவாமேனி முதல்வன் காண்" "மூவாமேனி முதல்வனை" (நாவு 262 : 8; 274 : 1) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க, பாத இளந்தளிர் என இயை யும். "மின்னந்தமாஞ் செந்தளிர்கள்" (திருவெம் 20) எனவும், "இடி குரற் கூற்றின் எருத்திற வைத்த திளந்தளிரின், படியிடப் பாலது... கச்சியேகம்பமேய வரதருக்கே" (பதினொராந். திருவேகம்ப 44) எனவும் வருவன காண்க. மலர்த்திருப்பாதம் என்றது உவமையணியும், பாத முற்றிலா இளந்தளிர் என்றது இல்பொருள் உருவகவணியுமாகும்.

பிரிந்திருந்து அற்றவாறும் என இயையும். அறுதல்-இல்லாமற் போதல். இறைவனை அணுகியிருந்தபோது நுகர்ந்த இன்பங்களெல்லாம் அவன் மறைந்தபோது நீங்கியமையின் 'பாதவிளந்தளிர் பிரிந்திருந்து உண்டனவெலாம் அற்றவாறும்' என்றார். அறிவும் பெருமையும் என்பன அறியாமையையும் சிறுமையையும் உணர்த்தின. இவற்றின் மிகுதிபற்றி 'அளவறுக்கில்லேன்' என்றார்.

இதன்கண், நெஞ்சை முன்னிலைப் படுத்தி மனமே கிற்றவாற்றுற் கெடுவாய் எனவும், இறைவன் திருவடியைப் பிரிந்தமையால் முன் நுகர்ந்த இன்பங்களெல்லாம் அற்றவாற்றினை நீ அறிந்திலையெனவுங் கூறியிருப்பி னும் அம்மனத்தினை என் உயிர் தூய்மையடைதற்கு உதவுமாறு அருள் செய்ய வேண்டுமென வேண்டிக்கோடலே கருத்தாகலின் ஆத்தும சுத்தி என்னும் நான்காம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 34.

39. அளவ றுப்பதற் கரியவன் இமையவர்க் கடியவர்க் கெளியான் நங், களவ றுத்துநின் றுண்டமை கருத்தினுட் கசிந்துணர்ந் திருந்தே யுங், உளக றுத்துனை நினைந்துளம் பெருங்களன் செய்தது மிலை நெஞ்சே, பளக றுத்துடை யான்கழல் பணிந்திலை பரகதி புகுவானே.

ப—ரை : நெஞ்சே-மனமே, இமையவர்க்கு அளவறுப்பதற்கு அரிய வன்-இறைவன் தேவர்களுக்கும் தன்பெருமையை அளந்து முடிவு செய் தற்கு அரியவன்; ஆயினும், அடியவர்க்கு எளியன்-தன் அடியவர்க்கு எளிவந்து அருள் செய்யும் பேரருளையுடையான்; நம் களவு அறுத்து ஆண்டமை-அவன் நம்மைத் திருடிய பாசங்களை ஒழித்து ஆட்கொண்டருளி நம்மிடத்து நிலைபெற்ற தன்மையை, கருத்தினுள் உணர்ந்து கசிந்திருந்தே யும்-உள்ளத்தில் நினைந்து உணர்ந்து நெகிழ்ந்திருந்தும், பரகதி புகுவான்-மேலான வீட்டுநெறியிற் போதற்கு, உனை நினைந்து-உன் இயல்பை

நினைந்து, உள கறுத்து-பொறிநுகர்ச்சிகளாக உள்ளனவற்றை வெறுத்து நீக்கி, உளம் பெரு களன் செய்ததும் இல்லை-உள்ளத்தை இறைவன் எழுந்தருளியிருத்தற்குரிய பெரிய திருக்கோயிலாகச் செய்ததும் இல்லை; பளகு அறுத்து உடையான் கழல் பணிந்திலை-குற்றங்களை நீக்கி எம்மையுடைய அவ்விறைவன் திருவடிகளை வணங்குகின்றாயுமில்லை; நின் தன்மை இருந்தவாறென்னே.

இறைவன் தேவர்களுக்கும் தன்பெருமையை அளந்து முடிவு செய்தற்கு அரியவன்; ஆயினும் தன் அடியவர்க்கு எளிவந்து அருள்செய்யும் பேரருளாளன். அவன் நம்மைத் திருடிய பாசங்களை ஒளித்து நம்மை ஆட்கொண்டருளி நம்மிடத்து நிலைபெற்ற தன்மையை உள்ளத்தில் உணர்ந்து நெகிழ்ந்திருந்தும் பரகதி புகுவதற்கு உன் இயல்பை நினைந்து பொறி நிகழ்ச்சிகளாக உள்ளனவற்றை வெறுத்து நீக்கி உள்ளத்தை இறைவன் எழுந்தருளியிருக்கும் பெரிய திருக்கோயிலாகச் செய்ததுமில்லை. நின் குற்றங்களை நீக்கி எம்மையுடைய அவ்விறைவன் திருவடிகளை வணங்குகின்றாயுமில்லை; நின் தன்மை இருந்தவாறென்னே.

அளவறுத்தல்-காட்சி அனுமானம் முதலிய அளவைகளால் இறைவன் இயல்புகளை அளவிட்டறிதல். இறைவன் சுட்டியறியப்படானாகலின் 'அளவறுப்பதற்கரியவன்' என்றார். "ஓரளவில்லாவொருவன்" என்றார் திருக்கோவையாரினும் (308). இமையவர்க்கு என்பதில் உயர்வு சிறப்பும்மை தொக்கது. அடியவர்க்கெளியான் என்றது தன் அடியவர்களுக்கு எளிவந்தருளும் பேரளுடையான் என்றவாறு.

"முன்னை யென்னுடை வல்வினை போயிட முக்கணது டையெந்தை
தன்னை யாவரும் அறிவதற் கரியவன் எளியவன் அடியார்க்கு" அதிசய 3.

என அடிகள் பிறண்டு அருளியவாறுங் காண்க.

"புரிகொள் சடையர் அடியார்க் கெளியர்" ஞான 68 : 2.

"வஞ்சகர்க் கரியர்போலு மருவினோர்க் கெளியர் போலும்" நாவு 66:7.

"எளியவ ரடியார்க் கென்று மின்னம்ப ரீசனாரே" நாவு 72 : 5.

"தன்னடியார்க் கெளியான் றன்னை" நாவு 247 : 3.

"உகந்துள்ளி நண்ணுதார்க் கரியானை யடியேற் கெளியானை" சுந் 59 : 7.

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. அடியார்க்கு அளவறுப்பதற்கு எளியவன் என இயைத்துப் பொருளுரைப்பின் இறைவன் சுட்டியறியப் படுபவனாவான். "தன்பெருமை தானறியாத் தன்மையன் காண்" (சாழல் 19) என அடிகள் மற்றோரிடத்து அருளிச் செய்தலின் அவனுனுமறிதற்கரிய அவனது அளவற்ற பெருமையையை அடியவர்கள் எளிதில் அறிவர் எனக் கூறுதல் பொருந்தாமையின் எளிவந்து அருளும் பேரருளாளன் எனப் பொருள்கோடலே பொருந்துவதாகும்.

"கனவிலும் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலும் நாயேற் கருளினை போற்றி" போற்றி 143-4.

என்னும் அடிகள் திருவாக்கும் ஈண்டு சிந்திக்கத்தக்கது.

களவு என்னும் தொழிற்பெயர் நம்மைக் களவு செய்த பாசங்களை உணர்த்தியது. பாசத்தின் களவாவது: இறைவன்பாற் சாராது மனத்தினைத் தன்பாற் கவர்ந்தமையாகும். பாசமறுத்தாண்டமை.

"பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசமறுத்தெனை யாண்ட
ஆருடை யம்பொன்மேனி யமுதினை" குயிற் 8.

என அடிகள் அருளியமையானுமறிக. நின்றுண்டமை என்பதை ஆண்டு நின்றமை என இயைத்துப் பொருள்கொள்க. கருத்தினுள் உணர்ந்து கசிந்திருந்தேயும் என மாறிக்கூட்டுக. கருத்து-உள்ளம். நெஞ்சிற்கு உள்ளம் கூறுதலை, "வருந்தினை வாழியென் நெஞ்சே...இனிச் சிறக்க நின் உள்ளம்" என அகப்பாட்டில் (19 : 2-8) வருதலானுமறிக. இருந்தேயும் என்பதில் ஏ அசைவுநிலை. உம்மை, களவறுத்தாண்டமையைச் சுட்டியுணராயாயினும் என இறந்ததுதழீஇய எச்சவும்மை.

உள-உள்ளன. அவை பொறிவாயிலாக வரும் நுகர்வுகள். கறுத்தல்-ஈண்டு வெறுத்தல். உனைநினைதல்-உன் இயல்பினை நினைதல். உளம் பெருங்களஞ் செய்தல்-உள்ளத்தினை இறைவன் எழுந்தருளியிருக்கும் பெரிய திருக்கோயிலாகச் செய்தல். உள்குவார் உள்ளத்தினை இறைவன் கோயிலாகக் கொள்ளுதல்,

"இறைஞ்சுவார் சிந்தையுள்ளே கோயிலாகத் திகழ்வானை" ஞான 200:2.

"சேவடி, காலையு மாலையுங் கைதொழுவார் மனம்
ஆலயம் ஆரு ரரநெறி யார்க்கே" நாவு 17 : 8.

"நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்" நாவு 116 : 1.

எனத் தேவாரத்தும்,

"மறவாமை யானமைத்த மனக் கோயில் உள்ளிருத்தி" வாயி 8.

எனப் பெரியபுராணத்தும் வருவனவற்றாலுமறிக.

பளகு-குற்றம். "பண்டுனை நினையமாட்டாப் பளகனேன்" (தே. நாவு 62 : 5) "பளகறு கேள்விப் பயிற்சியர்" (காஞ்சி. திருநகர 108) என்பனவற்றிலும் இப்பொருட்டாதல் காண்க. அறுத்துப் பணிந்திலை என இயையும். 'செய்தது மிலை' என்ற உம்மையைப் பணிந்ததுமிலை எனவும் கூட்டுக.

பரகதி-மேலான வீட்டு நெறி. "பரகதி பாண்டியற் கருளினை போற்றி" (போற் 214) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அவ்

வீட்டு நெறியிற் போதற்குரிய இறைவனை நினைத்தலும் கழல்பணிதலு மாகியவற்றைச் செய்திலை என்பார், 'உளம் பெருங்களஞ் செய்ததுமிலை கழல் பணிந்திலை பரகதி புகுவானே' என்றார். "மலர்பறித்திறைஞ்சிப் பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப் பரகதி கொடுத்தருள் செய்யும் சித்தனே" (அருட் 8) என அடிகள் பிறண்டு அருளியமையும் காண்க.

இதன்கண் நெஞ்சே என முன்னிலைப்படுத்தி உளகறுத்து உளம் பெருங்களன் செய்ததுமிலை எனவும், பளகறுத்து உடையான் கழல் பணிந்ததுமிலை எனவும் கூறியிருப்பினும் ஆத்தும சுத்திக்குரிய இத் தன்மைகளை எனக்கருளவேண்டுமென இறைவனை வேண்டுதலே கருத்தாகலின் ஆத்துமசுத்தியென்னும் நான்காம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 35.

**40. புகுவ தாவதும் போதர வில்லதும் பொன்னகர் புகப்போதற், குகுவ தாவதும் எந்தையெம் பிரானென்னை யாண்டவன் கழற்கன்பு, நெகுவ தாவதும் நித்தலு மமுதொடு தேனொடு பால்காட்டி, மிகுவ தாவதும் இன்றெனின் மற்றிதற் கென்செய்வேன் வினையேனே.**

ப—ரை: புகுவதாவதும்-சென்று அடைதற்குரிய நெறியையுடையதும், போதரவு இல்லதும்-மீண்டு வருதற்குரிய நெறி இல்லாததுமாகிய, பொன்நகர் புக போதற்கு-சிவநகருட் புகுதற்காகச் செல்லுதற்கு, உகுவது ஆவதும்-நீங்கவேண்டிய அகப்பற்றுப் புறப்பற்றுக்கள் நீங்குவதும், எந்தை எம்பிரான் என்னை ஆண்டவன் கழற்கு அன்பு நெகுவதாவதும்-எங்கள் தந்தையும் எங்கள் தலைவனும் என்னை ஆட்கொண்டவனுமாகிய இறைவனுடைய திருவடிக்கு அன்பினால் நெஞ்சம் நெகிழவேண்டியதும், நித்தலும் அமுதொடு தேனொடு பால் கட்டி மிகுவது ஆவதும்-எப்பொழுதும் அமுதும் தேனும் பாலும் கருப்புக்கட்டியும் போலும் இனிய பேரின்பச் சுவையானது மிகவேண்டியதும், இன்றெனின் - இப்பொழுது எனக்கு இல்லையானால், வினையேன் இதற்கு என் செய்கேன் - எடுத்த உடம்பு முகந்து நின்ற வினையை அநுபவித்தற்குரிய யான் இந்நிலைமைக்கு யாது செய்யவல்லேன்.

சென்றடைதற்குரிய நெறியையுடையதும் அடைந்தோர்கள் மீண்டு வருதற்குரிய நெறியில்லாததுமாகிய பொன்னகர் புகப்போதற்கு அகப்பற்று புறப்பற்றுக்கள் நீங்குவதும் எந்தை எம்பிரான் என்னை ஆண்டவன் கழற்கு அன்பினால் நெஞ்சம் நெகிழவேண்டியதும் நித்தலும் அமுதும் தேனும் பாலும் கருப்புக்கட்டியும் போலும் இனிய பேரின்பச் சுவை மிகவேண்டியதும் இப்பொழுது எனக்கு இல்லையானால் வினையேன் இந்நிலைமைக்கு யாது செய்யவல்லேன் என்பதாம்.

புகுவதாவதும் போதரவில்லதும் என்றதனால் இறைவன் அருளும் திருவடிநீழலாகிய வீடு பக்குவமடைந்த உயிர்களுக்குச் சென்றடைதற்குரிய

நெறியையுடையதாயும், அடைந்தால் மீள்தற்குரிய நெறியையில்லாததாயும் என அதன் சிறப்பியல்புகூறப்பட்டது.

"மீண்டு வாரா வழியருள் புரிபவன்" கீர்த் 117.

"வாராவுலகந் தந்து வந்தாட் கொள்வோனே" ஆசைப் 7.

"பிறிவறியா வன்பர்நின் னருட்பெய்கழல் தாளிணைக்கீழ்
மறிவறியாச் செல்வம் வந்து பெற்றார்" அடைக் 9.

"வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
ஆரா வமுதா யமைந்தன்றே" வெண்பா 7.

"வாரா வுலக நெறியேறக், கோலங்காட்டி யாண்டானை" ஆனந்த 3.

என அடிகளும்,

"வாரா வுலகருள வல்லான் றன்னை" தே. 217 : 2.

என அப்பரடிகளும் அருளியவாறும் காண்க.

போதரவு-திரும்பி வருதல். ஈண்டு திரும்பி வருதற்குரிய நெறியை யுணர்த்தியது. போதரவில்லதுமாகிய எனப் பண்புருபு விரித்துப் பொருள் கொள்க. பொன்னகர்-வீடாகிய அழகிய நகர்; சிவநகர். "போரேறே நின் பொன்னகர்வாய் நீ போந்தருளி" (சதகம் 53) என அடிகள் அருளியமையுங் காண்க. உகுவதாவது - நீங்கவேண்டிய அகப்புறப் பற்றுக்கள். இவை பொன்னகர் புகப்போதற்குத் தடையாக வுள்ளனவாதலின், 'பொன்னகர் புகப்போதற்குத் உகுவதாவதும்' என்றார். "யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த வுலகம் புகும்" (குறள்) என்பதும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. உகுவதாவது-கெடவேண்டியது; நீங்கவேண்டியது. உகுதல்-கெடுதல் என்னும் பொருட்டாதல் "அழிந்துகு நெஞ்சத்தே மல்ல லுழப்ப" (கலி 72 : 23) என்புழிக் காண்க.

கழற்கு அன்பு-திருவடிக்கு அன்பு. "வேண்டு நின்கழற்கண் அன்பு" (சத 74) என அடிகள் அருளியமையுங் காண்க. அன்பு நெகுவதாவது அன்பினால் மனம் நெகிழவேண்டியது. "நாயினேன் நெகுமன்பில்லை" (சத 60) "அன்பினா லடியேன் ஆவியோ டாக்கை யானந்தமாய்க் கசிந் துருக" (கோயிற் 2). "அன்பால் நீ அகநெகவே புகுந்தருளி" (ஏசறவு 7) என வருவனவுங் காண்க.

அமுதொடு தேனொடு என்ற ஒடுக்கள் எண்ணுப்பொருளில் வந்தன. அவற்றைப் பால் கட்டி என்பவற்றோடும் கூட்டுக. அமுது தேன் பால் கட்டி என்பன உவம ஆகுபெயராய் இறைவன் அருளும் பேரின்பச் சுவையை உணர்த்தின.

"தேனை ஆனெயைக் கரும்பினின் தேறலைச் சிவனை" சத 38.

"தேனே யமுதே கரும்பின் தெளிவே சிவனே" சத 55.

"தேனைப் பாலைக் கன்னலின் தெளியை" சத 58.

"தேனே யமுதே சிந்தைக் கரியாய்" சத 85.

"தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கு, மானே" சத 90.

"தேனையும் பாலையுங் கன்னலையு மொத்தினிய
கோனவன் போல் வந்து" அம் 14.

"ஊனா யுயிராய் உணர்வாயென் னுட்கலந்து
தேனாய் அமுதமுமாய்த் திங்கரும்பின் கட்டியுமாய் அம் 16.

"தேனைப் பாலை நிறையின் அமுதை அமுதின் சுவையை" புணர்ச் 4.

"தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்" ஏசறவு 10.
என அடிகள் பிறண்டு அருளியமையுங் காண்க.

கட்டி-கரும்புக்கட்டி. "கட்டியி னரிசியும் புழுக்குங் காணமும்" (சீவக 1938) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. "கன்னல் கட்டி கற்கண்டாகும்" என்பது பிங்கலந்தை (6 : 44). மிகுவதாவது - அப் பேரின்பச்சுவை மிகவேண்டியது; இன்றெனின் என்பதன் ஆற்றலால் இப்பொழுது இல்லையாயின் என உரைக்கப்பட்டது. மற்று-அசை. வினையேன் என்றது உடம்பு முகந்து நின்ற வினையை அனுபவித்தற்குரியேன் என்றவாறு.

இதன்கண் பொன்னகர் புகப்போதற்கு உகவேண்டியதும் ஆண்டவன் கழற்கு அன்பு நெகவேண்டியதும் நித்தலும் பேரின்பச் சுவை மிக வேண்டியதும் உயிரின் தூய்மைக்குரியனவாதலின் அவற்றை அருள வேண்டுமென இறைவனை வேண்டுமுகத்தால் ஆத்துமசுத்தி என்னும் நான்காம்பத்து நுதலியபொருள் போந்தவாறு காண்க. 36.

41. வினையென் போலுடை யார்பிறர் ஆர்உடை யான்அடி நாயே னைத், தினையின் பாகமும் பிறிவது திருக்குறிப் பன்றுமற் றதனாலே, முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்துநான் முட்டிலேன் தலைகிறேன், இனையன் பாவனை யிரும்புகன் மனஞ்செவி யின்னதென் றறியேனே.

ப—ரை : என் போல் வினை உடையார் பிறர் ஆர்-என்னைப்போல இறைவனைப் பிரிந்து உலகில் வாழ்வதற்கேதுவாகிய பிராரத்த வினை யுடையவர் பிறர் யாவர் உளர்; ஒருவருமில்லை. உடையான் அடி நாயேனை தினையின் பாகமும் பிறிவது திருக்குறிப்பு அன்று-என்னை ஆளாகவுடையான் அடிமையாகிய நாய்போன்ற இழிவுடையேனைத் தினையின் பாதியளவு பொழுதாயினும் பிரிந்திருத்தல் அவனது திருவுள்ளக் கருத்தன்று; அதனால்-அப்பிராரத்த வினையினால், முனைவன் பாத நல் மலர் பிரிந்திருந்தும்-வினையினீங்கிய விளங்கிய அறிவினையுடைய இறைவனுடைய திருவடிகளாகிய நல்ல மலர்களை அணுகியிராது பிரிந்திருந்தும், நான் தலை முட்டிலேன் கிறேன்-நான் அப்பிரிவினை ஆற்றாது தலையைக் கற்றாணில் மோதுதல் செய்திலேன்; அதனாற் பிளத்தலும் செய்திலேன்; இனையன் பாவனை இரும்பு-

இத்தன்மையுடையேனது. இடையருத் தியானம் அன்பின்மையால் வன்மையான இரும்பாகவுள்ளது; மனம் கல்-எனது மனமும் இளகுதலில்லாத கல்லாகவுள்ளது; செவி இன்னது என்று அறியேன்-இறைவனது உபதேசத்தினைக் கேட்ட செவி இன்ன பொருளாகவுள்ளது என்று சொல்லுமாறறியேன்.

என்னைப்போற் பிராரத்தவினையுடையார் பிறர் யாவர் உளர்! என்னை ஆளாகவுடையான் அடிநாயேனைத் தினையின் பாதியளவு பொழுதாயினும் பிரிந்திருத்தல் அவனது திருவுள்ளக்குறிப்பன்று; அதனுல் முனைவனுடைய திருவடிகளாகிய நல்ல மலர்களைப் பிரிந்திருந்தும் அப்பிரிவினை ஆற்ருது யான் தலையை முட்டிலேன்; கீறேன்; இத்தன்மையுடையேனது பாவனை இரும்பு; மனம் கல்; செவி இன்னபொருளாகவுள்ளது என்று சொல்லுமாறறியேன் என்பதாம்.

வினை என்போல் உடையார் பிறர் ஆர் என்றது இறைவன் வலிய வந்து ஆட்கொள்ளப் பெற்றிருந்தும் உடனே கதிபெறமாட்டாது உலகில் வாழ்வதற்கு ஏதுவாயிருந்த பிராரத்த வினையை என்னைப்போல உடையவர் பிறர் யாவர் என்றவாறு. ஒருவருமில்லை என்பது குறிப்பு.

அடிநாயேனை-அடிமையாகிய நாய்போன்ற இழிவுடையேனை. "இங்கிருந்த லழகோ அடிநாயேன்" (பிரார்த் 4) "அடிநாயேன் அரற்றுகின்றேன்" (குழைத்த 10) என வருவனவும் காண்க. தினையின் பாகமும் பிறிவது அவன் திருக்குறிப்பன்று என்றது இறைவன் எப்பொழுதும் என்னை அணுகியிருப்பதன்றித் தினையின் பாதியளவு பொழுதாயினும் என்னைப் பிரிந்திருப்பது அவனது திருவுள்ளக்கருத்தன்று என்றவாறு. பாகம்-கூறு; பகுதி. 'பாகத்தைப் படாத நெஞ்சிற் பல்லவதேய மன்னன்" சீவக 2278. தினையின் பாகம்-தினையின் கூறு. "தினைப்பிளந்தன்ன சிறுமையரேனும்" எனத் திருமந்திரத்து (2667) வருதலுங் காண்க. பொருளின் சிறுமையாற் காலதின் சிறுமையைக் கூறினுர். "தினைத்துணையேனும் பொறேன் துயராக்கைத் திண்வலையே" (நீத் 38) என அடிகள் பிருண்டு அருளியமையுங் காண்க. பிறிவது-பிரிவது. "பிறிவிலாத வின்னருள் பெற்றிருந்தும்" (சத 32) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. திருக்குறிப்பு-திருவுள்ளக்கருத்து. "தென்றில்லைக்கோனே உன்றன் திருக்குறிப்புக் கூடுவார் நின்கழல் கூட" (சத 55) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. பிறிவது திருக்குறிப்பன்று என்ருர், இறைவன் தகுதியிருப்பின் வீடளிக்கும் விருப்புடையான் என்ற கருத்துப்பற்றி.

அதனுல் என்றது உடனே கதிபெருமைக்கு ஏதுவாகத் தடுத்திருந்த அப்பிராரத்த வினையினுல் என்றவாறு. அதனுல் இறைவன் திருவடி மலர்களைப் பிரிய நேர்ந்தமையின் 'அதனுல் முனைவன் பாதநன்மலர் பிரிந்திருந்தும்' என்ருர். அடிகள் இறைவனைப் பிரிந்திருந்தமை,

"ஆள்வதற்குரியவன் விரைமலர்த் திருப்பாத
முற்றிலா விளந்தளிர் பிரிந்திருந்தும்" சத 34.

"பொருளா வெனைப் புகுந்தாண்ட பொன்னே பொன்னம்பலக்கூத்தா
மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து வருந்துவேனை" கோயின்மூத் 8.

என வருவனவற்றாலுமறிக. முனைவன்-கடவுள். "முனைவனே முறையோ" "முனைவனே ஆட்கொண்டாய்" (சத 22 : 27) என அடிகள் பிறண்டு அருளியமையுங் காண்க.

முட்டிலேன் தலைகீறேன் என்றது முட்டிப்பிளந்திலேன் என்றவாறு. தலையை மோதிப் பிழத்தற்கு மோதப்படும் பொருள் வலிதாயிருக்க வேண்டுமாதலின் கற்றூண் என்பது வருவிக்கப்பட்டது. "துள்ளித் தூண் முட்டுமாங் கீழ்" என்றார் நாலடியாரினும். இனையன்-தன்மை ஒருமைக் குறிப்பு வினையாலணையும் பெயர்.

பாவனை-இடைவிடாத் தியானம். "பாவனை யாய கருத்தினில் வந்த பராவமுதாகாதே" (திருப்படையாட்சி 3) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அதனை இரும்பு என உருவகித்தது அன்பாகிய கசிவின்மை பற்றியாகும். மனத்தைக் கல் என்றது இறைவனது அருளுருவக் காட்சியை உள்ளுணர்வாற் கண்டிருந்தும் அவன் பிரிவை ஆற்றியிருக்கும் தன்மைபற்றியாகும். செவி இன்னதென்று அறியேன் என்றது இறைவனது அருளுபதேசங்களைக் கேட்ட செவி இப்பொழுது யாதாயிற்று என அறிகிலேன் என்றவாறு.

இதன்கண், முனைவன் பாதநன்மலர் பிரிந்திருத்தற்கேதுவான பிராரத்த வினையுடையேன் செய்யும் பாவனையும், அதற்கேதுவான மனமும், பாவனை செய்தற்குரிய அருளுபதேசத்தைப் பெற்ற செவியும் உயிரின் தூய்மைக்கேற்ற நிலையில் நில்லாமையைக் கூறுமுகத்தால் அவற்றை அதற்கேற்ற முறையில் அமையுமாறு அருள வேண்டுமென வேண்டிக்கொள்ளுதலால் ஆத்துமசுத்தி யென்னும் நான்காம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 37.

42. ஏனை யாவரு மெய்திட லுற்றுமற் றின்னதென் றறியாத,
தேனை ஆனெயைக் கரும்பினின் தேறலைச் சிவனையென் சிவலோகக்,
கோனை மானன நோக்கிதன் கூறனைக் குறுகிலேன் நெடுங்காலம்,
ஊனை யானிருந் தோம்புகின் றேன்கெடு வேனுயிர் ஓயாதே.

ப—ரை: ஏனை யாவரும் எய்திடல் உற்று இன்னது என்று அறியாத-மெய்யன்பரல்லாத மற்றை நான்முகன் முதலிய பிறர் எவரும்

எய்தி இத்தன்மையுடையது என்று அறிய முடியாத, தேனை - தேன் போன்றவனும், ஆன் நெய்யை-பசுவின் நெய் போன்றவனும், கரும்பின் இன் தேறலை-கருப்பஞ் சாற்றின் இனிய தெளிவு போன்றவனும் சிவனை-சிவனெனும் நாமந் தனக்கேயுடையவனும், என் சிவலோகக் கோனை - என்னையாளாகவுடைய சிவலோக நாயகனும், மான் அன்ன நோக்கிதன் கூறனை-மானின் நோக்குப்போலும் நோக்கினையுடைய உமையம்மையை இடப்பாகத்திலுடையவனுமாகிய இறைவனை, குறுகிலேன்-யான் அடையப் பெற்றிலேன். யான் நெடுங்காலம் இருந்து ஊனை ஓம்புகின்றேன்-யான் உலகில் நெடுங்காலம் வாழ்ந்திருந்து ஊனுடம்பைப் பாதுகாக்க வேண்டியவனாகின்றேன்; அதனால், உயிர் ஓயாதே கெடுவேன்-அதனால் என் உயிர் ஒழியாது கெடப்பெறுவேன்.

மெய்யன்பரல்லாத பிறர் எவரும் எய்திடலுற்று இத்தன்மையுடையது என்று அறியமுடியாத தேன்போன்றவனும் பசுவின் நெய்போன்றவனும் கருப்பஞ் சாற்றின் தெளிவுபோன்றவனும் செம்பொருளாயுள்ளவனும் எனது சிவலோகநாயகனும் உமையம்மையை இடப்பாகத்திலுடையவனுமாகிய இறைவனை அடையப்பெற்றிலேன்; யான் உலகில் நெடுங்காலம் வாழ்ந்திருந்து ஊனுடம்பைப் பாதுகாக்க வேண்டியவனாயிருக்கின்றேன்; அதனால் என் உயிர் ஒழியாது கெடப்பெறுவேன் என்றவாறு.

ஏனை யாவரும் என்றது இறைவனருளால் அவனைச் சார்ந்து அறிதற்குரிய மெய்யன்பரல்லாத மற்றையோரைக் குறித்தது. "யாவராயினு மன்பரன்றி யறியொணாமலர்ச் சோதியான்" (சென்னிப் 1) என அடிகள் அருளியமையும் காண்க. ஏனையோராவார், "திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்" (126) என்பது முதலாக "ஒன்றுண் டில்லை யென் றறிவொளித்தும்" (139) என்பது ஈறாகத் திருவண்டப்பகுதியில் அருளிச் செய்யப்பட்டவர்களாவர்.

எய்திடலுற்று இன்னதென்றறியாதவென்றது எய்திடலுறலும் இன்னதென்று அறிதலும் இல்லாதவென்றவாறு. 'எய்திடலுற்று மற்றின்னதென் றறியாத' என்ற அடைமொழி, தேனை, ஆனெயை, கரும்பினின் தேறலை, சிவனை, சிவலோகக்கோனை, மானனநோக்கிதன் கூறனை என்பவற்றோடும் தனித்தனி சென்றியையும்.

இன்னது என அஃறிணை வாய்பாட்டாற் கூறியது பரம்பொருளை 'அது' எனக்கூறும் வடமொழிக் கொள்கைபற்றியாகும். தேனை ஆனெயைக் கரும்பினின் தேறலை என்று அடுக்கிக் கூறியது தனித்தனி அவை போலுதலன்றி அவற்றின் கலப்புப் போன்றும் இருக்கும் இறைவன் அருளியல்பு பற்றியாகும்.

"தேனையும் பாலையுங் கன்னலையும் அமுதத்தையும் ஒத்து" நீத் 21.
"தேனையும் பாலையுங் கன்னலையும் ஒத்து" அம் 14.

"தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்" அம் 16.

"தேனைப் பாலை நிறையின் அமுதை அமுதின் சுவையை" புணர்ச் 4.

"தேனா யின்னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்" எசறவு 10.

என அடிகள் பிறண்டு அருளியமையுங் காண்க. ஈறிலின்பம் பயக்கும் இறைவனோடு சார்த்தத் தேனும் ஆனெயும் கரும்பினின் தேறலும் இறப்ப இழிந்தனவேயாயினும் "பொருளது புரைவே புணர்ப்போன் குறிப் பின், மருளற வரூஉ மரபிற் றென்ப" (தொல். மெய்ப் 27) என் பதனால் ஈண்டுச் சொல்லுவானது கருத்துவகையானும், உலகத்துப் பொருள் களுள் அவற்றினூங்கு மிக்கனவின்மையானும் உயர்ந்தனவாய் உவமை யாயின என்க. இவை, இறைவனிடத்துள்ள இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தி என்பனவற்றை முறையே தேனும் நெய்யும் கரும்பின்சாறும் குறிப்பாலுணர்த்தும் முறைமைபற்றியும் உயிர்களிடத்துள்ள அம்மூவ கைச் சத்திகளுக்கும் முறையே இவை இன்பந்தருதல் பற்றியுமாகும். தேன் விருப்பத்திற்கும் நெய் நல்லறிவுவிருத்திக்கும் கரும்பின்சாறு தொழிற் பாட்டின் பயனுக்கும் உரியவாதல் காண்க.

சிவன் என்பது இறைவனும் இறைவியும் ஒன்றுபட்டிருக்கும் நிலை யைக் குறிப்பது. சிவன் என்னும் திருநாமம் எங்கள் இறைவனுக்கே யன்றிப் பிறர் எவர்க்கும் இல்லாதது. இத்திருநாமத்தினை இடைவிடாது நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் தியானிப்பவர்களுக்கு அருள்செய் தற்கு இறைவன் இறைவியோடு பின்றொடர்ந்து திரிவான். அதனை,

"சிவனே சிவனே சிவனேயென் பார்பின்
சிவன்உமை யாளோடு திரிவன்—சிவனருளால்
பெற்றவிளங் கன்றைப் பிரியா துடனோடிச்
சுற்று பசுப்போற் றொடர்ந்து."

என்னும் சிவசிவவெண்பாவானும் உணர்க. சிவனே சிவனே என்பவர் பின்னே, சிவன் உமையாளொடு திரிவன் என்றதனால் சிவன் என்னும் திருநாமத்தில் இறைவனும் இறைவியும் அத்துவிதமாய் இயைந்திருக்கும் சிறந்தபொருள் இனிது விளங்கும்.

சிவலோகம்-சுவர்க்கம். அதர்வசிரசு, ஐதரேய முதலிய உபநிட தங்களிலே சிவலோகமானது சுவர்க்கலோகமென்று கூறப்பட்டுள்ளது. சிவலோகக் கோன்-சிவலோக நாயகன். "சிவலோகக்கோன் திருப்புயங் கன் அருளார்பெறுவார்" (யாத்திரைப் 10) என அடிகள் பிறண்டு அரு ளியமையுங் காண்க. எம் சிவலோகக்கோன் என்றது அடிகள் இறைவ னிடத்துத் தொண்டுபூண்டு நிற்கும் உரிமைபற்றியாகும்.

மானன நோக்கி என்றது மானின் நோக்குப் போலும் நோக்கினை யுடைய உமையம்மையை. "வெருள்புரி மானன்ன நோக்கிதன் பங்க" (அடைக்கலப் 5) என அடிகள் பிறண்டு அருளியமையுங் காண்க.

"மானன நோக்கி தன்னோடுடனாவது" ஞான 316 : 3.

"மானன மென்விழி யாளொடும் வக்கரை மேவியவன்" ஞான 318 : 5.

"மானேர் நோக்கி, அருமான வாண்முகத்தாள மர்ந்தகாண" நாவு 215 : 3.

"மானைப்புரையு மடமென் னோக்கி மடவாளஞ்ச" சுந் 41 : 8.

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

குறுகிலேன்-குறுகப்பெற்றிலேன்; நெடுங்காலம் என்றது இறைவனைப் பிரிந்திருக்கும் நாட்கள் அடிகளுக்கு நெடுங்காலமாகத் தோன்றுதல் பற்றியாகும். அது ஓம்புகின்றேன் என்பதனோடு முடிந்தது. ஊனை ஓம்புகின்றேன் என்றது ஊனுடம்பினைப் பெறவேண்டிய பேறுபெற்றவிடத்தும் உடனே கதி அடையமுடியாத பிராரத்த வினையுடைமையால் அவ்வுடம்பினை உணவு உடை முதலியவற்றால் ஓம்பவேண்டிய நிலையுளதாயிற்று என அடிகள் இரங்கிக் கூறியவாறு.

உயிர் ஓயாதே கெடுவேன் என்றது இறைவன் அருளால் ஆணவ வலிருளின் ஆற்றலும் சஞ்சித ஆகாமிய வினைகளும் ஒழியப்பெற்றிருந்தும் பிராரத்தவினை யுண்மையாலும், ஒழிந்த ஆணவ கன்மங்களின் வாதனை யுண்மையாலும் என் உயிர் தப்பாது கெடவேண்டி நேரலாமென அடிகள் அஞ்சிக் கூறியவாறு.

இதன்கண், என் உயிர் தூய்மையடைதற்குப் பிராரத்த வினையையும் மற்றைய மலகன்மங்களின் வாதனையையும் நீக்கி அருள்செய்ய வேண்டுமென இறைவனை வேண்டிக்கொள்ளுதல் புலப்படுதலின் ஆத்துமசுத்தி என்னும் நான்காம்பத்து நுதலியபொருள் போந்தவாறு காண்க. 38.

43. ஒய்வி லாதன வுவமனி லிறந்தன வொண்மலர்த் தாள்தந்து
நாயி லாகியகுலத்தி னுங்கடைப்படும் என்னைநன் னெறிகாட்டித்
தாயி லாகிய இன்னருள் புரிந்தஎன் தலைவனை நனிகாணேன்,
தீயில்வீழ்கிலேன் திண்வரை யுருள்கிலேன் செழுங்கடல் புகுவேனே.

ப—ரை: ஒப்பு இலாதன-உயிர்களுக்கு உதவும் அருட்செயலில் ஒப்புதலில்லாதனவும், உவமனில் இறந்தன-உவமானங்களில் ஒப்புமையுறாது அவற்றைக் கடந்தனவுமாகிய, ஒள் மலர் தாள் தந்து-உண்மையறிவும் பேரொளியும் பெருநன்மையுமுடைய தாமரைமலர்போலும் திருவடிகளை எனக்குத் தந்தருளி, நாயில் ஆகிய குலத்தினும் கடைப்படும் என்னை-நாயிடத்துளதாகிய இழிந்த பிறப்பினுங் கீழ்ப்பட்ட எனக்கு, நல் நெறி காட்டி-வீடு அடைதற்குரிய நல்ல நெறியாகிய அன்பு நெறியை அருளுபதேசத்தாற் புலப்படுத்தி, தாயில் ஆகிய இன் அருள்புரிந்த-தாயிடத்துண்டாகும் அருளினும் மேலாகிய இனிய அருளை என்னிடத்துச் செய்த, என் தலைவனை நனி காணேன்-என்னுடைய இறைவனை நெடும்பொழுது காணப்பெற்றிலேன்; தீயில் வீழ்கிலேன் - ஆயினும் தீயில் வீழ்ந்திறக்க

மாட்டாதவனுயிருக்கின்றேன்; திண் வரை உருள்கிலேன்-திண்ணிய கன்மலை உச்சியிலிருந்து உருண்டு வீழ்ந்து இறக்கமாட்டாதவனுயிருக்கின்றேன்; செழு கடல் புகுவேனே-மிக்கநீர் வளத்தினையுடைய கடலில் பாய்ந்து உயிரை விடுவேனே? அதுவுஞ் செய்யமாட்டாதவனுயிருக்கின்றேன்.

அருட்செயலில் ஓய்வில்லாதனவும் உவமனில் இறந்தனவுமாகிய திருவடிகளை எனக்குத் தந்தருளி, நாய்க்குலத்தினுங் கீழ்ப்பட்ட எனக்கு நல்ல அன்பு நெறியைக் காட்டித் தாயிடத்துண்டாகும் அருளினும் மேலாகிய இனிய அருளைச் செய்த என்தலைவனை நெடும்பொழுது காணப்பெற்றிலேன்; ஆயினும் தீயில் வீழ்கிலேன்; திண்வரைமேலிருந்து உருள்கிலேன்; செழுங்கடலிற் பாய்ந்து உயிரை விடவும் மாட்டாதவனுயிருக்கின்றேன் என்பதாம்.

ஓய்விலாதன தாள், உவமனிலிறந்தன தாள், ஒண்மலர்த்தாள் எனத் தனித்தனி இயைக்க. ஓய்வு-செயல் ஒழிதல். திருவடிகள் உயிர்களுக்குச் செய்யும் அருளுதவியில் ஒழிவின்றியிருத்தலின் 'ஓய்விலாதன' என்றார். உவமன்-உவமை. உவமன் இல்லாதனவாதலின் 'உவமனிலிறந்தன' என்றார்.

"மிக்குவமன், மாறொன்றிலாதன . இன்னம்பரான்ற னிணையடியே" நாவு 101 : 4.

"உவமனிலாதென... இன்னம்பரான்ற னிணையடியே" நாவு 101 : 10. எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

ஒண்மலர்த்தாள்-ஒள்ளிய மலர்போலுந் தாள்; "ஒண்மலரடியிணை" "ஒண்மலரடி" (ஞான 261 : 9; 262 : 9) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. மலர் என்றது தாமரைமலரை. "ஏரிக் கனகக் கமலமலரன்ன சேவடி" (தே 43 : 2) எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியவாறும் காண்க. 'உவமனிலிறந்தன' எனக் கூறிய அடிகள், 'ஒண்மலர்த்தாள்' என உவமைபுணர்த்துக் கூறியது முன்னொடு பின் முரணுகாதோவெனின் உண்மையறிவும் பேரொளியும் பெருநன்மையும் உடைய எனப்பொருள் படத்தக்க *'ஒண்மை' என்னும் அடைமொழி கொடுத்திருத்தலானும், உலகத்துத் தாமரைமலர் அத்தன்மைகள் உடையதல்லாமையானும், அத்தன்மையுடைய தாமரை மலரே ஈண்டுத் திருவடிகளுக்கு உவமையாகக் கூறப்பட்டிருத்தலின் முரணுகாதென்க. "ஒப்பிலாதன வுவமணி லிறந்தன ஒண்மலர்த் திருப்பாதத்தப்பன்" (அதிசயப் 1) என அடிகள் பிறுண்டு அருளியவாறுங் காண்க.

---

*"நன்மையு மிகுதியும் அறிவு மொழுங்கும், ஒண்மை யென்னுஞ் சொல்லிற் குரிய" திவாகரம் (பண்புபற்றிய); "அழகு நன்றும் அறிவும் ஒண்மை" பிங்கலந்தை 10 : 210.

ஆகிய-உண்டாகிய. "போகிய பொழுதி ஞகிய சூழ்ச்சி" பெருங் (3) 7 : 2. நாயிலாகிய குலம்-நாயினிடத்துளதாகிய குலம்; என்றது நாய்க் குலம் என்றவாறு. நன்னெறி காட்டுதற்கு ஒரு சிறிதும் தகுதியில்லாத கடையேன் என்பார் 'நாயிலாகிய குலத்தினும் கடைப்படும் என்னை' என்ருர். என்னை என்பதில் இரண்டாவது நான்காவதன் பொருட்கண் வந்தது. நன்னெறி காட்டுதல்-பேரின்பமயமாகிய வீடு அடைதற்குரிய நல்லநெறியாகிய அன்பு நெறியை உபதேசத்தால் விளங்க வைத்தல். இறைவன் நன்னெறியாட்டியமை,

"மாலயன் வானவர் கோனும் வந்து
வணங்க அவர்க்கருள் செய்த ஈசன்
ஞால மதனிடை வந்திழிந்து
நன்னெறி காட்டி" திருவார்த்தை 2.

என அடிகள் பிருண்டு அருளியமையானும் அறிக.

தாயில் என்னும் ஐந்தாம் வேற்றுமையை உறழ்பொருளில் வந்ததாகக் கொண்டு தாயிலாகிய இன்னருள் புரிந்த என்பதற்கு தாயிடத்துண்டாகிய அருளினும் மேலாகிய இனிய அருளைச் செய்த எனவுரைக்க.

"தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" சிவபுரா 61.

"பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்து" பிடித்த 9.

என அடிகளும், "பெற்றிருந்த தாயவளின் நல்லாய் நீயே" என அப்பரடிகளும் (தே. 251 : 6) அருளியவாறுங் காண்க.

என் தலைவன் என்றது "என் சிவலோகக்கோன்" (சதகம் 38) என்பதுபோல ஆண்டான் அடிமையுரிமை பற்றியாகும். நனிகாணேன் என்பதில் நனி என்பது காலநீட்சியைக் குறித்தது. எனவே நெடுங்காலம் காணப்பெற்றிலேன் என்றவாறு. காணப்பெருமை,

"நாயினேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல வென்னை யீங்கொழித் தருளி" கீர்த்தித் 121-3.

என்று அருளிச் செய்து இறைவன் ஈண்டிய அடியவரோடும் உடன் மறைந்தமை பற்றியாகும்.

"அங்க ணிவ்வா றறைந்திடுங் காலையப்
பொங்கு ஞானப் புதல்வர்க டம்மொடு
மங்கை நாயகன் மாணிக்க வாசக
விங்கு நில்லென் றியம்பி மறைந்தனன்" ஞானே 54.

என நம்பி திருவிளையாடற் புராணம் கூறுதலுங் காண்க.

தீயில் வீழ்தலும் திண்வரை யுருள்தலும் செழுங்கடல் புகுதலுஞ் செய்யமாட்டாமை இறைபணிக்கு மாறாகும் என்பதுபற்றியாகும். அன்றியும் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டும் உடனே கதியடையப்பெறாத வாறு பிராரத்தவினை உளதாதல் பற்றியுமாகும். துன்பமிகுதியாற் சாதற்குத் துணிவார் தீயில் வீழ்தல் முதலியன செய்தல்.

"இன்னுயி ரீவ ரீயா ராயி
னன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர்" மணி 2 : 44-5.

எனவும்,

"கைம்மை யுய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்
சார னாட" குறுந் 69.

எனவும் வருவனவற்றானு மறிக. புகுவேனே என்பதில் ஏகாரம் வினாப் பொருளிலும் எதிர்மறைப் பொருளிலும் வந்தது.

இதன்கண், அடிகள் இறைவனது அருட்காட்சியை இழந்து நெடும் பொழுது இருக்க ஆற்றாதவராய் அவ்வாற்றாமையைத் தீர்த்தற்குத் தீயில் வீழ்ந்தும் திண்வரை உருண்டும் கடல்புக்கும் உயிர் விடவும் முடியாமைக்கு இரங்கி எனது உயிரின் தூய்மைக்கு வினைமாசினை நீக்கியருள வேண்டும் என்னும் குறிப்பினால் ஆத்துமசுத்தி என்னும் நான்காம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க.

44. வேனில் வேள்கணை கிழித்திட மதிசுடும் அதுதனை நினையாதே, மானி லாவிய நோக்கியர் படிறிடை மத்திடு தயிராகித், தேனி லாவிய திருவருள் புரிந்தவென் சிவனகர் புகப்போகேன், ஊனி லாவியை யோம்புதற் பொருட்டினும் உண்டுடுத் திருந்தேனே.

ப—ரை: தேன் நிலாவிய திரு அருள் புரிந்த-தேனின் இனியதன்மை விளங்கும் திருவருளை விரும்பிச் செய்த, என் சிவன் நகர் புக போகேன்-என்னுடைய சிவபெருமானது பொன்னகருட் புகுதற்குப் போகமாட்டாதவனாகிய யான், மான் நிலாவிய நோக்கியர் படிறு இடை-மானினது நோக்கம்போன்று விளங்கும் நோக்கினையுடைய மகளிரது பொய்வாழ்வின் கண், மத்து இடு தயிர் ஆகி-மத்திட்டுக் கடைந்த தயிர்போல மனம் கலக்குண்டு, வேனில்வேள் கணை கிழித்திட-இளவேனிற் காலத்திற்குரிய கருவேளாகிய மன்மதனின் மலரம்பு மனத்தைப் பிளக்க, மதி சுடும் அது தனை நினையாது-அப்பிளவில் மதியின் நிலவு சுடுகின்ற மாறுபட்ட அந்தத் துன்பநிலையைக் கருதாமல், ஊனில் ஆவியை ஓம்புதற் பொருட்டு-அவற்றிற்கு உதவுவதாகிய இந்த ஊனுடம்பில் உயிரை வைத்துப் பாதுகாத்தற்பொருட்டு, உண்டு உடுத்து இருந்தேன்-இன்னமும் உண்டும் உடுத்தும் இருக்கின்றேன்; என் அறியாமையை என்னென்பேன்.

தேனின் இனிமைத் தன்மை விளங்கும் திருவருளை விரும்பிச் செய்த என்னுடைய சிவபெருமானது சிவனருட் புகுதற்குப் போகமாட்டாதவனாகிய யான் மானிலாவிய நோக்கினையுடைய மகளிரது பொய் வாழ்வின்கண் மத்திட்ட தயிர்போல மனம் கலக்குண்டு அதனால் வேனில்வேள் கணை மனத்தைக் கிழித்திட அப்பிளப்பில் மதியின் நிலவு சுடுகின்ற மாறுபட்ட அத்துன்பநிலையைக் கருதாமல் அவற்றிற்கு உதவுவதாகிய இந்த ஊனுடம்பில் உயிரை வைத்துப் பாதுகாத்தற்பொருட்டு இன்னமும் உண்டு உடுத்து இருக்கின்றேன். என் அறியாமையை என்னென்பேன்.

வேனில்-இளவேனிற்காலம். சித்திரை வைகாசி மாதங்கள். அக்காலத்து மன்மதனது தொழிற்பாடு மிகுதியாதலின் 'வேனில்வேள்' என்றார். கணை-அம்பு. அவை ஐவகை மலர்கள். கிழித்தல்-மனத்தை வருத்துதல். "சுறுஅக்கொடியான் கொடுமையை" (கலி 117 : 42) எனப் பிறரும் கூறுதல் காண்க. மதிசுட என்றது மதியின் நிலவு உடலிற்பட அது மனத்திற்குச் சூடாகத் தோன்ற என்றவாறு. "பிரிந் துலந்தவர்க்குயிர் சுடு விடமாய்...மலர்ந்தது நெடுநிலா மதனன் வேண்டவே" (கம்ப உண்டாட்டு 2) எனவும், "சுடர்கான்றெழுந்த வெண்டிங்காளென்னே சுடுதி" (நைடதம். சந்திரோபாலம்பனப் 10) எனவும் வருவன ஈண்டைக்கேற்ப அறியற்பாலன. அதுதனை என்றது மலரம்பு கிழிக்க மதிநிலவு சுடுதலாகிய உலகியலுக்கு மாறுபட்ட துன்பநிலையைக் குறித்தது.

மான் நிலாவிய நோக்கியர் என்றது மானினது நோக்கம் போன்று விளங்கும் நோக்கினையுடைய மகளிர் என்றவாறு. "மான் மறித் தனைய நோக்கி" "மானை நோக்கியர்" (சுந் 8 : 2; 54 : 6) "மானுலா மழைக் கணார்" (நாவு 67 : 6) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. நிலாவுதல்-விளங்குதல். "நேசமுடைய அடியவர்கள் நின்று நிலாவுக வென்று வாழ்த்தி" (திருப்பொற் 4) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. ஈண்டு நோக்கியர் என்றது மானின் மருண்ட நோக்குப் போலும் அழகிய நோக்கத்தினால் *நோய்நோக்கு நோக்கவல்ல மகளிரை. படிறு-பொய். "படிறு-பொய் சூது களவு" எனப் பிங்கலந்தையில் (10 : 727) வருதல் காண்க. ஈண்டுப் பொய்வாழ்வை உணர்த்தியது. இனி வஞ்சனையெனினுமமையும். "படிறு குய்யம் பகர்வ வஞ்சனை" எனத் திவாகரத்து வருதலும் காண்க.

மத்திடு தயிராதல்-மத்திட்ட தயிர்போல மனம் கலக்குண்டல்.

"மத்துறு தண்டயி ரிற்புலன் திக்கதுவக் கலங்கி" நீத் 134.

---

*மகளிர் நோக்கு பொதுநோக்கும் நோய்நோக்கும் அதனைத் தீர்க்குமருந்து நோக்குமென மூவகைப்படும். "ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல், காதலர் கண்ணேயுள" "இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு, நோய்நோக்கொன் றந்நோய் மருந்து" (குறள் 1099; 1092) என வருவன காண்க.

"மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போல் தளர்ந்தேன்" அடைக்கலப் 6

என அடிகளும்,

"மத்துறு தயிரே போல மறுகுமென் னுள்ளந் தானும்" தே 52 : 9.

"மத்தார் தயிர்போன் மறுகுமென் சிந்தை" தே. 97 : 3.

என அப்பரடிகளும் அருளியவாறுங் காண்க. மனம் கலக்குண்ணுதற்கு ஏது அம்மகளிரது நோய்நோக்காகும். தயிராகி இருந்தேன் என இயையும்.

திருவருள் என்றது இறைவன் பரமாசாரியனாய் எழுந்தருளிவந்து திருவடிக்காட்சியளித்து நன்னெறி காட்டிய இன்னருளை. "ஒண்மலர்த் தாள்தந்து, நாயிலாகிய குலத்தினுங் கடைப்படும் என்னை நன்னெறி காட்டித் தாயிலாகிய இன்னருள் புரிந்த என்தலைவனை" (சத 39) என அடிகள் அருளியமையுங் காண்க திருவருள்புரிந்த சிவன்என இயையும். புரிந்த-விரும்பிச் செய்த என்சிவன் என்றூர் தம்மை வலியவந்து ஆட்கொண்ட உரிமைபற்றி. புக-உட்புக. போகேன் என்பது போகமாட்டாதவனாகிய யான் என எதிர்மறைவினையாலணையும் பெயர்ப்பொருளில் வந்தது. ஊன் என்றது ஊனுடம்பினை. இன்னும் என்றது இறைவன் அருளுபதேசம்பெற்ற பின்னரும் என்றவாறு. இருந்தேன் என அடிகள் இறந்த காலத்தாற் கூறியது அடிகள் இறைவன் காட்சியைப் பிரிந்த பின்னர் நிகழ்ந்துபோன நாட்களைப் பற்றியதாயினும் இருக்கின்றேன் என்பது பொருளாகக் கொள்க. இப்பொருளுக்கு 'இன்னும்' என்னும் அடைமொழி துணையாதல் காண்க.

சிவனகர் புகப்போகேனாகிய யான் மத்திடுதயிராகி அதுதனை நினையாது ஓம்புதற்பொருட்டு இன்னும் இருந்தேன் என மாறிக் கூட்டி வினைமுடிவு செய்க.

இதன்கண், என் சிவனகர் புகப்போகமாட்டாதவனாகிய யான் என்னுடம்பை நீக்கிவிடலாமோவெனின் அதுவுஞ் செய்யமாட்டாதவனாய் அவ்வுடம்பில் வைத்து உயிரைப் பாதுகாக்க வேண்டியவனாய் இருக்கின்றேன் என இரங்கிக் கூறுமுகத்தால், இந்நிலையினின்றும் நீங்கி உயிரைத் தூய்மையடையச் செய்யவேண்டுமென இறைவனிடத்து வேண்டிக்கொள்வது கருத்தாகலின் ஆத்துமசுத்தி என்னும் நான்காம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 40.

---

## 5. கைம்மாறு கொடுத்தல்

தம்மை ஆட்கொண்டு பேரருள் செய்த இறைவனுக்குக் கைம்மாருகக் கொடுக்கத்தக்கது யாதென எண்ணி ஒன்றுமில்லாமை பற்றி வருந்துதல்.

### கலிவிருத்தம்

45. இருகை யானையை யொத்திருந் தென்னுளக்
கருவை யான்கண் டிலேன்கண்ட தெவ்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேன்கிற்ப னுண்ணவே.

ப—ரை: வானுளோர்க்கு ஒருவனே - விண்ணுலகத்திலுள்ள தேவர்களுக்கும் ஒப்பற்ற முழுமுதலே, யான் இரு கை யானையை ஒத்து இருந்து-யான் இரண்டு கைகளையுடைய யானையை ஒத்து உயிர் வாழ்ந்திருந்து, என் உள கருவை கண்டிலேன்-அதனுல் என் உள்ளத்தின்கணுள்ள முதற்பொருளாகிய உன்னை அறியப்பெற்றிலேன்; கண்டது எவ்வமே - என் உயிர்வாழ்வில் யான் கண்டது துன்பமேயாகும்; வருக என்று பணித்தனை-நின்னைக் காணும் முயற்சியில் ஈடுபடாத என்னை வருக என்று ஆதரவோடு அழைத்து ஆட்கொண்டருளினுய்; கிற்றிலேன் - அங்ஙனம் பேரருள் செய்த நினக்கு யாதும் கைம்மாறு செய்யும் ஆற்றலில்லேன்; உண்ணவே கிற்பன்-ஆயினும் அவ்வருளாரமுதை நுகர ஆற்றலுள்ளேன்.

வானுளோர்க்கு ஒருவனே, யான் இருகையையுடைய யானையை ஒத்து உலகத்தில் வாழ்ந்திருந்து என் உள்ளத்துள்ள முதற்பொருளாயுள்ள நின்னை அறிந்திலேன்; என் வாழ்க்கையிற் கண்டது துன்பமே; நின்னைக் காணும் முயற்சியில் ஈடுபடாத என்னை இங்கே வருகவென்று ஆதரவோடு அழைத்து ஆட்கொண்டருளினை; அங்ஙனம் செய்த நினக்கு யாதும் கைம்மாறு செய்யும் ஆற்றலில்லேன்; ஆயினும் அவ்வருளாரமுதத்தை நுகர ஆற்றலுள்ளேன் என்பதாம்.

இருகையானை-இல்பொருளுவமை. அடிகள் தமக்கு இருகை யானையை உவமானமாகக் கூறியது உடலுறுதியும் உள்ளவுறுதியும் பெற்று அதிகாரத்தில் இருந்தமைபற்றியாகும். அதனுல் தமது உள்ளக்கருவாகிய முழுமுதல்வனை அறியமாட்டாமையின் 'என்னுள்ளக் கருவைக் கண்டிலேன்' என வருந்திக் கூறினர். அவ்வதிகார வாழ்வில் இருந்தபோதிலும் பின்னர் அவர் கண்டது இடையிடை மிகுதியுமுண்டாகிய துன்பமேயாதலின் 'கண்டது எவ்வமே' என்ருர். எவ்வம்-துன்பம். ''யானுற்ற வெவ்வ முரைப்பின்'' கலி 146 : 33. இனி, இருகை யானையை ஒத்து உளக்கருவை கண்டிலேன் என்பதனுல் அடிகள் பேருணவினர் எனவும், பேருடலினர் எனவும், கருவுநவினர் எனவும், தம் உள்ளக்கருவைக் காணும் முயற்சியின்றி அதற்கு மாறுபட்ட நெறியிற் செல்பவர் எனவும் கூறுவாருமுளர்.

அதற்கு, அடிகள் வரலாற்று நூலினுள்ளும் அடிகள் திருவாக்கினுள்ளும் ஆதாரமின்மையின் அவ்வாறு கூறுதல் பொருந்தாதென்க.

வருகவென்றது நின்னைக் காணும் முயற்சியில் ஈடுபடாதிருக்கவும் அதனைப் பொருட்டாக எண்ணாது தம்மை அருண்மிகுதியால் ஆதரவுடன் அழைத்தமையைக் குறிப்பதாகும். பணித்தல்-அழைத்து ஆட்கொள்ளல்.

வானுளோர்க்கும் என உம்மை விரிக்க. மண்ணுளோர்க்கும் பாதாளத்தார்க்குமன்றி வானுளோர்க்கும் எனப் பொருள்படுதலால் உம்மை எச்சவும்மை. வானுளோரைக் கூறியது துன்பவுலகினரிலும் இன்பதுன்பவுலகினரிலும் வானுளோர் இன்பவுலகினர்பற்றியென்க. "விண்ணோர் முழுமுதல் பாதாளத்தார் வித்து மண்ணோர் மருந்து" (தென் 19) என அடிகள் பிறிதோரிடத்துக் கூறியிருத்தலும் அறியத்தக்கது.

கிற்றிலேன் என்பது தன்னைத் தாம் அறியாதிருக்கவும் வலியவந்து ஆதரவுடனழைத்து ஆட்கொண்டருளிய இறைவனுக்குக் கைம்மாருக ஒன்றுஞ் செய்யும் ஆற்றலில்லாதிருத்தலைக் குறிப்பதாகும்.

"அன்றே யென்றன் ஆவியும் உடலும் உடமையெல்லாமுங்
குன்றே யனையாய் எனையாட் கொண்ட போதே கொண்டிலையோ"
குழை 7.

எனவும்,

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னை" கோயிற் 10.

எனவும் அடிகள் பிறவிடங்களில் அருளிச் செய்தலால் தாமே இறைவனுக்கு அடிமையான இடத்து இறைவனுக்குக் கைம்மாருகக் கொடுத்தற்குப் பிறிது எப்பொருளுமின்மைபற்றி வருந்துவதே கிற்றிலேன் என்பதன் உள்ளுறைப் பொருளாகும்.

உண்ணக்கிற்பன் என்றது, 'அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்' என அடிகள் கூறுமுகத்தால் இறைவனது அருளாமுதத்தை உண்ணுதற்கு ஆற்றலுள்ளேன் என்றவாரும்.

இதன்கண், கிற்றிலேன் என்பதனுல் கைம்மாறு கொடுக்க இயலாது வருந்தும் அடிகளின் உள்ளக்கருத்து வெளிப்படுதலாற் கைம்மாறுகொடுத்தல் எண்ணும் பதிக நுதலியபொருள் போந்தவாறு காண்க. 41.

46. உண்டொர் ஒண்பொருள் என்றுணர் வார்க்கெலாம்
பெண்டிர் ஆண் அலி யென்றறி யொண்கிலை
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினுய்
கண்டுங் கண்டிலேன் என்னகண் மாயமே.

ப—ரை: ஓர் ஒண்பொருள் உண்டு என்று உணர்வார்க்கு எல்லாம்-ஒரு சிறந்த முழுமுதற்பொருள் அழிவிலதாக என்றும் உள்ளது என்று பொதுவகையால் அறியும் அன்பர்களுக்கெல்லாம், பெண்டிர் ஆண் அலி என்று அறிய ஒண்கிலை-அம்முழுமுதற் பொருள் பெண்ணோ ஆணோ

அலியோ இன்னது எனத் துணிந்து அறியமுடியாத நிலையில் உள்ளானை; அங்ஙனமாக, தொண்டனேற்கு உள்ளவா வந்து தோன்றினாய் - அடிமையாகிய எனக்கு நின் உண்மைத் தன்மை இருந்தவாறு வலிய எழுந்தருளி வந்து காட்சிதந்தருளினாய்; கண்டும் கண்டிலேன்-அவ்வுண்மை இயல்பை நீ காட்டக்கண்டிருந்தும் இப்பொழுது காணாதவனாயினேன்; என்ன கண் மாயம்-இஃதென்னை கண்ணை மயக்கிய மாயவித்தை.

ஒரு சிறந்த முழுமுதற்பொருள் அழிவிலதாக என்றும் உள்ளது என்று பொதுவகையான் அறியும் அன்பர்களுக்கெல்லாம், பெண்ணோ ஆணோ அலியோ இன்னதெனத் துணிந்து அறியமுடியாத நிலையில் உள்ளானை; அங்ஙனமாகவும் அடியனேனுக்கு நின் உண்மைத் தன்மை இருந்தவாறு வலிய எழுந்தருளிவந்து காட்சிகொடுத்தருளினாய்; அவ்வுண்மை இயல்பை நீ காட்டக் கண்டிருந்தும் இப்பொழுது காணாதவனாயினேன்; இஃதென்னை கண்ணை மயக்கும் மாயவித்தை என்பதாம்.

ஓர் என்பது ஓர் எனச் செய்யுள் விகாரத்தாற் குறுகியது. "அண்டமார் இருளூடு கலந்து உம்பர், உண்டு போலு மொர் ரொண்சுடர்" எனத் தேவாரத்து (நாவு) வருதலும் காண்க. பொருள் ஒன்று உண்டு எனப் பொதுவகையால் உணரும் அன்பர்கள் அப்பொருள் பெண்ணோ ஆணோ அலியோ என்று இத்தன்மைத்து என அறிய முடியாத நிலையில் இருக்கின்றனர்.

"ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக் கடவுள்" திருப்பொன் 5.

என இத்திருவாசகத்தும்.

"ஆணலார் பெண்ணு மல்லார் அதிகைவீ ரட்டனாரே" நாவு 27 : 8.

"பெண்ணொ டாணென்று பேசற் கரியவன்" நாவு 161 : 8.

எனத் தேவாரத்தும் வருவன காண்க. அங்ஙனம் இருத்தல் அப்பொருள் இத்தன்மைத்தெனச் சுட்டியுணரப்படும் *பிரமேயப் பொருளாகாது அப்பிரமேயப் பொருளாயிருத்தல் பற்றியாகும். அங்ஙனமாயின் அதனை அறியுமாறென்னையெனின் அவனருளே கண்ணாகக் காட்டிற் காணலாமென்பது. பெண்டிர் என்பது பெண் என்னும் பொருளில் வந்தது. இனி, பெண்டிர் ஆண் அலி என்றது அவன் அவள் அவர் என்னும் முற்கூற்றுப் பிரபஞ்சத்தைக் குறிப்பதாகும். அலி என்பது ஆணுமல்லதாய்ப் பெண்ணுமல்லதாய் அமைந்ததொரு பிறப்பாயினும் அது இங்கே அஃறிணைப் பொருளைக் குறித்து நின்றது. சித்தும் அசித்துமாகிய பிரபஞ்சங்கள் முழுவதும் இறைவனது சர்வவியாபகத்துள் அடங்கி ஒன்றுபட்டு நிற்றலின் இறைவன் எல்லாமாய் அல்லதுமாய் நிற்பானாயினன். அவ்வுண்மையை இறைவனருளாலன்றி அறிதல் கூடாமையின் 'பெண்டிர் ஆணலி யென்றறி யொண்

*பிரமேயம்-பிரமாணத்தாலறியப்படுவது.

கிலே' என்றார் எனினுமமையும். அறிய என்னும் வினையெச்சத்திறுகெட்டது. உண்மை ஞானிகளுக்கும் பெண் ஆண் அலி என்று அறியவொண்ணாத நீ, தொண்டனாகிய எனக்கு நின் உண்மைத்தன்மை இன்னது என உள்ளவாறு வலியவந்து காட்டியருளினை என்பார் 'தொண்டனேற் குள்ளா வந்து தோன்றினாய்' என்றார். உள்ளவாறு என்பது உள்ளவா என ஈறுகெட்டது. "உள்ளவா காணவந்தருளாய்" (கோயிற் 1) எனப் பிறண்டு வருதலும் காண்க. உள்ளவாறாவது உண்மை இயல்பு இருந்தபடி.

இறைவன் தனது உண்மை இயல்பு இருந்தபடி அடிகள் உணருமாறு தோன்றியது ஞானாசாரிய வடிவிலாகும். அவ்வடிவமே இறைவனுக்கு என்றுமுள்ள வடிவமோவெனின் எல்லாமா யல்லதுமாய் எங்குமுள்ள இறைவன் தகுதியுடைய உயிர்களுக்கு அருள்செய்ய வேண்டி ஒவ்வொரு திருமேனி கொண்டருளுவான். அத்திருமேனிகளுள் அடிகளுக்கு அருள் செய்ய எழுந்தருளி வந்த ஞானாசாரிய வடிவுமொன்றாகும். இறைவன் கொண்டருளுந் திருமேனி அளவுக்குட்பட்டதாகலின் அதுவே இறைவனது உண்மையியல்பு எனல் அமையாது. அதனால் எல்லாம் வல்ல இறைவன் தனது ஆற்றலால் ஆங்காங்கு தோன்றி அருள்செய்வன் என்பதே உண்மை இயல்பாகும்.

"ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில் அளவில்லை கிளக்க வேண்டா" தே. 312 : 4.

என ஆளுடையபிள்ளையார் அருளிய திருவாக்குங் காண்க.

வந்து என்பதன் ஆற்றலால் வலிய வந்து என உரைக்கப்பட்டது. "தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும், வான்வார் கழல்" (திருவெம் 6) என வருதலும் காண்க. இறைவனது அருட்டிருமேனியைக் கண்டுகொண்டிருந்த அடிகள் 'நலமலி தில்லைப் பொதுவினில் வருகென அருளிச் செய்து இறைவன் மறைந்த விடத்துக் காணப்பெறாமையின் 'கண்டுங் கண்டிலேன்' என்றார். இறைவன் அருட்டிருமேனி காட்டி ஆட்கொண்டருளி உடனே மறைந்தமை அடிகளின் கண்ணை மயக்கிய மாய வித்தை போறலின் 'என்னகண் மாயமே" என்றார். "ஆய்ந்தே யிருப்பார் போய் ஆரூர் புக்கார் அண்ணலார் செய்கின்ற கண்மாயமே" (நாவு 238 : 5) எனத் தேவாரத்து வருதலும் காண்க. இது மருட்கை பற்றிய வியப்பாகும்.

இதன்கண், கண்டும் கண்டிலேன் என்றதனால் இறைவன் காட்சியை இழந்த அடிகள் கைம்மாறு கொடுத்தல் யாங்ஙனம் என வருந்துதல் புலப்படுதலின் கைம்மாறு கொடுத்தல் என்னும் ஐந்தாம்பத்து முதலிய பொருள் போந்தவாறு காண்க.

47. மேலை வானவ ருமறி யாததோர்
கோல மேயெனை யாட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேயிவை வந்துபோம்
கால மேயுனை யென்றுகொல் காண்பதே.

ப—ரை: மேலை வானவரும் அறியாதது ஓர் கோலமே - மேலாகிய பதவிகளிலுள்ள தேவர்களும் அறிய முடியாததாகிய ஒப்பற்ற திருக்கோலத்தையுடையவனே, எனை ஆட்கொண்ட கூத்தனே - என்னை ஆட்கொண்டருளிய திருவிளையாட்டையுடையவனே, ஞாலமே விசும்பே இவை வந்து போம் காலமே - மண்ணும் விண்ணும் இவற்றினுட்பட்ட நீர் நெருப்பு வளியும் ஆகிய ஐம்பெரும்பூதங்களும் தோன்றி ஒடுங் குதற்குக் காரணமான காலதத்துவமாயிருப்பவனே; உனை காண்பது என்றுகொல் - அருமையில் எளியையாய் வந்து அருள் செய்த உன்னை இனிக் காண்பது எப்போது?

மேலைவானவரும் அறிதற்கரிதாகிய ஒப்பற்ற திருக்கோலத்தையுடைய வனே, என்னை ஆட்கொண்டருளிய கூத்தனே, ஞாலமே நீரே தீயே வளியே விசும்பே இவை தோன்றி ஒடுங்குதற்குக் காரணமான கால தத்துவமானவனே; உன்னை இனி காண்பது எப்போது என்பதாம்.

மேலை வானவர் என்றது மேலானபதங்களிலுள்ள தேவரை. அவர் திருமால் பிரமன் முதலியோர். மேலை என்பதில் ஐ-சாரியை. வானவரும் என்பதில் உம்மை உயர்வு சிறப்பு. அறியாதது-அறியமுடியாதது. வினை யாலணையும் பெயர். அறியாதது ஆகிய கோலம், ஓர் கோலம் எனத் தனித்தனி இயையும். வானவரும் அறியமுடியாத ஒப்பற்ற திருக்கோல முடையனாதலின், மேலைவானவரும் அறியாதது ஓர் கோலமே என்றார்.

"பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியு நாரணனு நான்மறையும்
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ" கோத் 1.

"முன்னாய மாலயனும் வானவருந் தானவரும்
பொன்னார் திருவடி தாமறியார்" பூவல்லி 17.

"பங்கயத் தயனுமா லறியா நீதியே" அருட் 1.

என அடிகள் பிறாண்டு அருளியவாறுங் காண்க.

அடிகளை ஆட்கொண்டதும் மதுரை இறைவனது அறுபத்துநான்கு திருவிளையாடல்களுள் ஒன்றாதல் 'எனை ஆட்கொண்ட கூத்தனே' என் பதனால் அறியப்படும். ஆட்கொண்டமையே இங்கு இறைவன் செய்த கூத்தாகலின் திருவிளையாட்டாதல் இனிது புலனாம். ஞாலமே விசும்பே என்றருளியமையால் அவற்றினிடைப்பட்ட நீர் நெருப்பு காற்று என்னும் ஏனைய பூதங்களும் கொள்ளப்படும். ஏகாரங்கள் எண்ணுப்பொருளன.

வந்துபோதல்-தோன்றி ஒடுங்குதல். காலம்-காலதத்துவம். அது, அதனை இயக்குகின்ற இறைவனை உணர்த்தியது. இறைவன் அருட்டிருமேனி கொண்டு ஆட்கொண்டருளி மறைந்தமையின் 'உனை என்று கொல் காண்பது' என்பது ஆராமை மிகுதியால் அருளியதாகும்.

இதன்கண், உனை என்றுகொல் காண்பதே என்றதனால் கைம்மாறு கொடுக்க முடியாது வருந்துதலும் புலப்படுதலின் கைம்மாறு கொடுத்தல் என்னும் ஐந்தாம்பத்து நுதலியபொருள் புலப்படுமாறு காண்க. 43.

48. காண லாம்பர மேகட் கிறந்ததோர்
வாணி லாப்பொரு ளேயிங்கொர் பார்ப்பெனப்
பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே.

ப—ரை : காணல் ஆம் பரமே-நின் அருளாற் காண்டற்குரியதாகிய மேலாகிய பொருளே, கட்கு இறந்தது ஓர் வாள் நிலா பொருளே-கண் ஒளிக்கு அடங்காததாகிய ஒப்பற்ற பேரொளிப் பொருளே, பாணனேன்-வீணனாகிய யான், புலன் போற்றி-ஐம்புல இன்பங்கள் என்னைப் பற்றாது பாதுகாத்து, இங்கு ஓர் பார்ப்பு என-இவ்வுலகத்தே குடம்பை தனித் தொழியப் பறந்து செல்லும் ஒரு பறவைக் குஞ்சுபோல, படிறு ஆக்கையை விட்டு - பொய்யாகிய இவ்வுடம்பை நீக்கிவிட்டு, உன்னை பூணும் ஆறு அறியேன்-உன்னைப் பொருந்தும் வழியை அறியாதவனாயினேன்.

நின் அருளாற் காண்டற்குரியதாகிய மேலான பொருளே, கண் ஒளிக்கு அடங்காததாகிய ஒப்பற்ற பேரொளிப் பொருளே, பாணனேன் ஐம்புலவின்பங்கள் என்னைப் பற்றாது பாதுகாத்து இங்கு ஓர் பார்ப்பெனப் பொய்யாகிய இவ்வுடம்பை நீக்கிவிட்டு உன்னைப் பொருந்தும் வழியை அறியாதவனாயினேன் என்பதாம்.

எல்லாப் பொருட்கும் அப்பாலாய இறைவனது அருட்குருமேனியை அவனருளாலே தாம் கண்டமைபற்றிக் 'காணலாம் பரமே' என்றார். பரம்-எல்லாப் பொருட்கும் அப்பாலாயவன்; திருக்கோவை 251 உரை. "அவனருளே கண்ணாகக் காணினல்லால்" (நாவு 311 : 9) எனத் தேவாரத்து வருதலும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. வாள் நிலா-ஒருபொருட் பன்மொழி; பேரொளியைக் குறித்தது. பேரொளியையுடைய பொருளை அற்ப ஒளியையுடைய கண் காணமாட்டாது தம் ஒளி மழுங்குதல்பற்றிக் 'கட்கிறந்ததோர் வாணிலாப் பொருளே' என்றார்.

இங்கு-இந்நிலவுலகத்து. இங்கு பூணுமாறறியேன் என இயையும். பார்ப்பு-பறவைக்குஞ்சு. "அவற்றுட், பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை" என்பது தொல்காப்பியம் (மரபு 4). பார்ப்பென என்றது தனக்காதாரமாயிருந்த முட்டையோட்டினை விடுத்துச் செல்லும் குஞ்சு

போல என்றவாறு. உடம்பினுள் வேற்றுமையின்றி நின்றே பின் புகாமற் போதலின் பார்ப்பு உயிர்க்குவமையாயிற்று. பார்ப்பென ஆக்கையை விட்டு என இயையும். பறவைக் குஞ்சைக் கூறினர் பறந்துபோதற் றொழிலான் உயிரோடொப்புமையெய்துவது அதுவேயாகலின்.

பாழ்நன் என்பது பாணன் என மரீஇயிற்று. வாழ்நன், வாணன் என்றாயது போல. பாணன்-வீணன், இறைவனைப் பொருந்து வழியை அறியாது வீணே இருத்தல்பற்றி அடிகள் தம்மைப் 'பாணன்' என்றார். படிறு-பொய்; என்றது நிலையின்மையை. ஆக்கை-என்பு நரம்பு முதலியவற்றால் கட்டப்பட்டது. பூணுதல்-பொருந்துதல். பூணுமாறு என்பதற்கு உன் திருவடியைப் பொருந்துமாறு எனினுமமையும். ஆக்கையை விட்டுப் பூணுமாறு அறியேன் என்பதற்கு ஆக்கையை விடுதற்கும் உன்னைப் பொருந்துதற்கும் வழியை அறியேன் என்பது கருத்தாகக் கொள்க. "மண்மேல் யாக்கை விடுமாறும், வந்துன் கழற்கே புகுமாறும்" (குழைத் 9) என வருதல் ஈண்டறியற்பாலது. போற்றுதல்-பாதுகாத்தல். "அனையவை போற்றி நினைஇயன நாடிக்காண்" (கலி 15 : 23) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. புலன் போற்றுதல்-ஐம்புல இன்பங்கள் தம்மைப் பற்றாது பாதுகாத்தல். இறைவனை அடைதற்குப் புலன் போற்றுதல் இன்றியமையாததாகலின் 'புலன்போற்றி' என்றார். புலன்போற்றிப் பூணுமாறு என இயையும்.

இதன்கண், தம்மை ஆட்கொண்டருளிய இறைவனுக்குக் கைம்மாறு கொடுக்கும் நெறியின்றி வருந்தும் அடிகள் பாணனேன் படிற்றாக்கையை விட்டு உனைப்பூணுமாற்றினையாவது அறியாதவனாயினேன் என வருந்திக் கூறுதலால் கைம்மாறு கொடுத்தல் என்னும் ஐந்தாம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 44.

49. போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்துநின்
றாற்றல் மிக்கவன் பாலழைக் கின்றிலேன்
ஏற்று வந்தெதிர் தாமரைத் தாளுறும்
கூற்ற மன்னதோர் கொள்கையென் கொள்கையே.

ப—ரை: போற்றி என்றும் - நின் அருட்குருமேனியைக் காணப் பெறாதயான் காத்தருள்க என்று வேண்டுதல் செய்தும், புரண்டும் - அங்கப்பிரதட்சணம் பண்ணியும், புகழ்ந்தும்-நின் பொய்யில் புகழைப் புகழ்ந்து பாடியும், நின்று-இந்நிலையில் அமைந்து, ஆற்றல் மிக்க அன்பால் அழைக்கின்றிலேன்-உறுதிமிக்க மெய்யன்பினால் அழைத்தலும் செய்கின்றிலேன்; என் கொள்கை-இவ்வாறிருக்கின்ற எனது கொள்கை, எதிர் ஏற்றுவந்து-முன்னிலையிர் எதிர்த்து வந்து, தாமரை தாள் உறும் கூற்றம் அன்னது ஓர் கொள்கை-நின் தாமரைமலர் போன்ற திருவடியின் உதையினைப் பெற்ற கூற்றுவனது கொள்கையை ஒத்ததாகிய ஒருவகைக் கொள்கையேயாம்.

போற்றி என்றும் புரண்டும் புகழ்ந்தும் நின்று உறுமிக்க அன்பால் அழைத்தலும் செய்கின்றிலேன்; இவ்வாறிருக்கின்ற என் கொள்கை, முன்னிலையில் மாறுபட்டு வந்து நின் திருவடியின் தாக்குதலையடைந்த கூற்றுவனது கொள்கையை ஒத்ததாகிய ஒருவகைக் கொள்கையேயாம் என்பது.

அடிகள், திருவடியின்பம் நல்கிக் காத்தருள் என்று இறைவனை வேண்டுதல் செய்யவேண்டும் என்பார் 'போற்றி' என்றும், உடலாற் புரண்டு வலம்வந்து வழிபடல் வேண்டும் என்பார் 'புரண்டு' என்றும், அவன் பொய்யில் புகழைப் புகழ்ந்து பாடவேண்டும் என்பார் 'புகழ்ந்து' என்றும், மனமொழி மெய்கள் இங்ஙனம் இறைபணியில் நிற்கவேண்டும் என்பார் 'நின்று' என்றும் அருளினர். ஆற்றல்மிக்க அன்பு - திடமான அன்பு. அவ்வன்பினுல் இறைவனை அழைத்தலே செயற்பாலதாகவும் அவ்வாறு செய்திலேன் என்பார் 'ஆற்றல் மிக்க அன்பால் அழைக் கின்றிலேன்' என்றார்.

ஏற்று வந்து எதிர் என்பதை எதிர் ஏற்றுவந்து என மாறிக்கூட்டிப் பொருள் கொள்க. எதிர்-முன்னிலை ஏற்றுவந்து-எதிர்த்துவந்து. தாமரைத் தாள்-சிவந்த தாமரைமலர் போன்ற தாள். "தாட்செய்ய தாமரைச் சைவனுக்கு' (குலாப் 9) என அடிகள் பிருண்டு அருளியமையுங் காண்க. என்கொள்கை முன்னிலையில் எதிர்த்து வந்து இறைவனது தாமரைமலர் போன்ற திருவடியின் தாக்குதலைப் பொருந்தி இறந்துபட்டுச் செயலற்ற கூற்றுவனது கொள்கைபோன்றதோர் கொள்கையாகும் என்பது பின் இரண்டடிகளின் கருத்தாகும்.

கூற்றுவன் மார்க்கண்டேயரின் உயிரைக் கொள்ள வந்து அவர் சிவ பூசை செய்துகொண்டிருத்தலை மதியாது எதிரில் மாறுபட்டு வந்து அவ ரது உயிரைப் பாசம் வீசி இழுத்தலும் அவர் சிவலிங்கப் பெருமானை இறு கத்தழுவிக்கொள்ள அப்பாசம் சிவலிங்கப்பெருமானையும் சேர்த்துப் பற்றுவ தாக அமைய, தம்மைச் சரணடைந்த மார்க்கண்டேயரைக் காத்தற்பொருட்டு இறைவன், சிவலிங்கத்திருமேனியினின்றும் வெளிப்பட்டுக் கூற்றுவனை உதைத்தலும் அவன் வீழ்ந்து செயலற்றனன். ஆனல் யானே மாறு பாடின்றி முன்னிலைக்கண் வந்து தாமரை மலர்போன்ற திருவடி சூட்டப் பெற்று ஆட்கொள்ளப்பெற்றிருந்தும் இப்போது அத்திருவடிக் காட்சி கிடைக்கப்பெருமையின் போற்றியென்றும் புரண்டும் புகழ்ந்து நின்று ஆற்றல்மிக்க அன்பால் அழைத்தல் முதலியன செய்யமாட்டாது செய லற்றுக்கிடக்கின்றேன். எனவே செயலற்றுக் கிடக்கும் அளவில் கூற்று வனது கொள்கையும் என்கொள்கையும் ஒத்தன என்பது கருத்து. கூற்றுவனது செயலறுதி இறந்துபாட்டால் ஏற்பட்டது; எனது செயலறுதி உயிர்வாழ்ந்திருந்தும் இறைபணி நில்லாமையால் ஏற்பட்டதாகும்.

இதன்கண், 'ஆற்றல்மிக்க அன்பால் அழைக்கின்றிலேன்' என்பத ஞல் அழைக்கமாட்டாமையும், அதனுல் காட்சி பெறமாட்டாமையும்

50. கொள்ளுங் கில்லெனை யன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டும் அருமலர்க் கொன்றையான்
நள்ளுங் கீழுளு மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே.

ப—ரை: நள்ளும்-நடுவின்கணுள்ள பூவுலகத்தினுள்ளும், கீழ் உளும்-அப்பூவுலகிற்குக் கீழுள்ள உலகங்களினுள்ளும், மேல் உளும்-பூவுலகத்திற்கு மேலேயுள்ள உலகங்களினுள்ளும், யா உளும்-எல்லாப் பொருள்களுள்ளும், எள்ளும் எண்ணெயும் போல் நின்ற எந்தை எள்ளும் அதனுள் கலந்துள்ள எண்ணெயும் போல எங்கும் நிறைந்திருக்கின்ற எங்கள் தந்தையும், கள்ளும் வண்டும் அரு மலர்க் கொன்றையான்-தேனும் அதனை நுகரும் வண்டும் நீங்காத கொன்றைமலர் மாலையையுடையவனுமாகிய இறைவன், எனை அன்பரில் கூய் பணிகொள்ளும் கில்-என்னை அடியார் நடுவுள் அழைத்துக் கூட்டித் தொண்டனாகக் கொள்ளுதல் செய்வானோ?

நள்ளும் கீழுளும் மேலுளும் யாவுளும் எள்ளும் எண்ணெயும் போல எங்கும் நிறைந்துள்ள எங்கள் தந்தையும் கொன்றைமலர் மாலையை உடையவனுமாகிய இறைவன் என்னை அடியார் நடுவுள் அழைத்துக் கூட்டித் தொண்டனாகக் கொள்ளுதல் செய்வானோ? அங்ஙனம் செய்யின் எனது துயர் ஒழியும் என்பதாம்.

கொள்ளுங் கில் என்புழிக் கில் என்பது வினாப்பொருளில் வந்தது. கில் என்பதை எனை என்பதனோடு கூட்டிக் கில்லேனை என்பது கில்லெனை எனக் குறுகி நின்றது எனக்கொண்டு ஆற்றல் இல்லாத என்னை எனப் பொருள் கொள்ளுதல் அமையாதோவெனின், கொள்ளும் என்னும் செய்யுமென்னும் முற்றிற்குக் கொள்வானோ எனப் பொருள் கொள்ள வேண்டியிருத்தலின் அமையாதென்க. அன்பரிற் கூய்-அன்பர் நடுவுள் அழைத்து. பணி-தொண்டு.

கள்ளும் வண்டும் அருமலர்க் கொன்றை என்றது தேனும் அதனை யுண்ணும் வண்டும் நீங்காத கொன்றை மலர் என்றவாறு. "நறைக்கண் மலிகொன்றையோன்" (258) "கள்ளின மார்த்துண்ணும் வண்கொன்றையோன்" (295) "தேன் வண்டுறைதரு கொன்றையன்" (380) என அடிகள் திருக்கோவையாரில் அருளியமையுங் காண்க. கள்-தேன். "கட்கமழு நறுநெய்தல்" (மதுரைக் 250) என்புழிப்போல. வண்டினுளொரு சாதியெனினுமமையும் 'கள் வண்டினுளொரு சாதியென்பாருமுளர்' எனப் பேராசிரியர் உரைத்தமையும் (திருக்கோவை 295 உரை) காண்க. கள்ளும் வண்டுமரு என்னும் அடை இறைவனிடத்துத் திருவருளமுதம் உண்மையையும், அதனை நுகரும்பொருட்டு பக்குவான்மாக்கள் நீங்காதிருத்தலையும் குறிப்பிற் புலப்படுத்துகின்றது. மலர்க்கொன்றை - கொன்றை மலர்மாலை இது இறைவனுக்குரிய அடையாள மாலையாகும்.

நள்ளுளும் என்பது நள்ளும் என நின்றது. நள்-நடு. "நள்ளிராவும் நண்பகலும்" (திவ். திருவாய் (4) 7:2) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. நள் கீழ் மேல் என்பன நடுவுலகம் கீழுலகம் மேலுலகங்களைக் குறித்தன. உள்ளும் உம்மும் இடப்பொருளையும் எண்ணுப் பொருளையும் குறித்தன. நள்ளும் கீழுளும் மேலுளும் என்றபின் யாவுளும் என்றது அவ்வுலகங்களிலுள்ள இயங்குதிணை நிலத்திணையான எல்லாப்பொருள்களையும் குறித்தது. எள்ளும் எண்ணெயும் போல்நின்ற என்றது எள்ளின் கண் எண்ணெய் எங்குங் கலந்து மறைந்து நிற்றல்போல இறைவன் எங்கும் வியாபித்து மறைந்திருத்தலைக் குறித்தது.

"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமறைச் சோதியான்" (தே. 204:10)

என்ற ஆளுடையரசர் வாக்கும் ஈண்டு கருதத்தக்கது.

எந்தை கொன்றையான் அன்பரிற் கூய் எனைப்பணி கொள்ளும் இல் என முடிக்க.

இதன்கண், இறைவன் என்னைக் கூய்ப்பணி கொள்ளுமாயின் கைம்மாறு கொடுக்கப்பெறலாமே என்னும் ஆதாரம் தோன்றுதலால் கைம்மாறு கொடுத்தல் என்னும் இந்நாம்பத்து நுதலியபொருள் போந்தவாறு காண்க. 46.

51. எந்தை யாயெம் பிரான்மற்றும் யாவர்க்குந்
தந்தை தாய்தம் பிரான்தனக் கஃதிலான்
முந்தி யென்னுள் புகுந்தனன் யாவரும்
சிந்தை யாலும் அறிவருஞ் செல்வனே.

ப—ரை: எந்தை யாய் எம்பிரான்-எமக்குத் தந்தையும் தாயும் தலைவனுமாயுள்ளவன்; மற்றும் யாவர்க்கும் தந்தை தாய் தம்பிரான்-மற்றும் தேவர் முதலிய யாவர்க்கும் தந்தையும் தாயும் தலைவனுமாவன்; தனக்கு அஃது இலான்-ஆயின் தனக்குத் தந்தையும் தாயும் தலைவனுமாகிய அம்முறைமை இல்லாதவன்; யாவரும் சிந்தையாலும் அறிவு அரும் செல்வன்-எவ்வகை மேம்பட்டினரும் மனத்தாலும் அறிதற்கரிய வீடுபேறாகிய செல்வத்தை அருள்பவன்; முந்தி என் உள் புகுந்தனன்-முன்னர் என் உள்ளத்தினுள் புகுந்தனன்; பின்னர்க் காட்சியையுந் தந்து ஆட்சிகொண்டருளி மறைந்தனன்.

எந்தையுந்தாயும் எம்பிரானுமாயுள்ளவன்; மற்றும் யாவர்க்கும் தந்தை தாய் எம்பிரானுமாவன்; ஆயின் தனக்குத் தந்தையும் தாயும் தலைவனுமாகிய அம்முறைமை இல்லாதவன்; எவ்வகை மேம்பட்டினரும் சிந்தையாலும் அறிதற்கரிய செல்வன்; முந்தி என்னுள் புகுந்தனன்; பின்னர்க் காட்சியைத் தந்து ஆட்கொண்டருளி மறைந்தனன் என்பதாம்.

எம் தந்தை-எந்தை என்றாயது. யாய்-தாய். "யாயே கண்ணினும் கடுங்கா தலளே, யெந்தையு நிலனுறப் பொறாஅன்" (அக 12:12) என்

புழியும் இப்பொருட்டாதல் காண்க. எமக்குத் தந்தையாயும் தாயாயும் தலைவனுமாயுள்ளான் இறைவனே என்பார் 'எந்தை யாயெம்பிரான்' என்றார்.

'எந்தையு மெந்தை தந்தை தந்தையுமாய வீசர்'' (நாவு 64 : 7) எனவும்

''எந்தையை எந்தை தந்தைபிரானை'' (சுந் 57 : 4) எனவும் தேவாரத்து வருவனவுங் காண்க.

யாவர்க்கும் என்னும் உம்மை உயர்வுப்பொருளிலும் முற்றுப் பொருளிலும் வந்தது. யாவர்க்கும் என்றதனால் திருமால் பிரமன் முனிவர் முதலாயினாருங் கொள்ளப்படுவர். ஒருவற்குத் தந்தையும் தாயும் தலைவனுமாயுள்ளார் தமக்கும் அம்முறையையினையுடையராவர். முழுமுதலிறைவன் தனக்குத் தந்தையும் தாயும் தலைவனுமில்லாதவனாதலின் 'தனக்கு அலிலான்' என்றார். ''தாயுமிலி தந்தையிலி தான் றனியன்'' (சாழல் 3, அடிகள் பிருண்டு அருளியமையுங் காண்க. 'அவர் இலான்' என்றது அலிலான் என அஃறிணைவாய்பாட்டாற் கூறியது தந்தை தாய் தலைவன் என உலகிலுள்ள முறைமை இல்லாதவன் என்பது விளக்குதற் பொருட்டாகும்.

அடிகள் உலகவாழ்விற் பயனில்லையெனத் தெளிந்து இறைவன் அருள்வாழ்விற் புகுதற்குரிய பக்குவநிலை உண்டானபொழுதே இறைவன் தன்னுள் புகுந்தனன் என்பார், 'முந்தி யென்னுள் புகுந்தனன்' என்றார். அருள் வாழ்வை விரும்புவார் அடையும் பக்குவநிலை மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நால்வகைப்படும். அந்நால்வகை நிலையுள் அடிகள் தீவிரதம் என்னும் நிலைக்கண் இருந்தனர் என்பது இறைவன் வலியவந்து ஆட்கொண்டமையாலறியப்படும். அடிகளின் பக்குவ நிலைகண்டு உள்ளத்திற் புகுந்த இறைவன், வெளிப்பட்டுப் பரமாசாரியனாய்க் காட்சிகொடுத்து ஆட்கொண்டருளி மறைந்தமையை நினைந்து வருந்துகின்ற அடிகள் முந்தியென்னுள் புகுந்தனன்; பின்னர் பரமாசாரிய வடிவங்காட்டி ஆட்கொண்டருளினன்; இப்பொழுது மறைந்து விட்டனன் என்று இரங்கிக் கூறும் தொனிப்பொருள் 'முந்தியென்னுள் புகுந்தனன்' என்பதனுள் அடங்கியுள்ளது.

உலகத்தில் ஒரு பொருளை அறியுங்கால் காண்டல் கருதல் உரை என்னும் மூவகை அளவைகளால் அறியப்படும். காட்சியளவையானும் உரையளவையானும் அறியப்படாத இறைவன் கருதலளவையால் அறியப்படுவனோவெனின் அதனாலும் அறியப்படான். அங்ஙனமாயின் இறைவன் இல்பொருளோவெனின் அற்றன்று; இறைவன் பிரமாணங்களால் அறியப்படாத அப்பிரமேயனாதலின். யாவரும் என்புழி உம்மை உயர்வுப் பொருளிலும் முற்றுப்பொருளிலும் வந்தது. மொழியாலன்றிச் சிந்தையாலும் என உம்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை. இதுபற்றி இறைவன் வாக்குமனாதீதன் எனப்படுவான்.

"யாவரும் அறியாததோர் அமைதி" ஞான 214 : 6.
"யாவரும் அறிதற்கரியான் தனை" நவு 175 : 2.
"விண்ணோரு மறிகிலா ஆரெரும்பானை" நாவு 116 : 3.
"மனத்தாலும் நினைப்பரியான்" சுந் 97 : 3
"யாவர்க்கும் அறிவரிய அத்தர் பெருமானை" சுந் 38 : 10.

எனத் தேவாரத்தும்,

"மறையினான் அயனான் மாலான் மனத்தினான் வாக்கான் மற்றுங்
குறைவிலா வளவினாலுங் கூறொணா தாகிநின்ற
இறைவனார்" (அவையடக்கம்)

எனச் சிவஞானசித்தியாரிலும் வருவன காண்க. "வாக்கிறந்த பூரணமாய்", எனத் திருவிளையாடற் புராணத்தும், "மனவாக்கினிற் றட்டாமனின்றதெது" எனத் தாயுமானவர் பாடலிலும் வருவனவும் ஈண்டறியற்பாலன. செல்வம்-அந்தமிலின்பத்தழிவில் வீடாகிய செல்வம். அதனையுடையனாய் வழங்கும் இறைவன் 'செல்வன்' எனப்பட்டான்.

இதன்கண், முந்தியென்னுட் புகுந்தனன் என்பதனால் முன்னர் என்னுள்ளத்தில் வலியவந்து புகுந்து பின்னர், வெளிப்பட்டு ஆட்கொண்டருளி மறைந்த எம்பெருமானுக்குச் செய்யும் கைம்மாறு யாது? அதனை அளிக்கும் நெறியாது? என வருந்துதல் புலப்படுதலின் கைம்மாறு கொடுத்தல் என்னும் ஐந்தாம்பத்து நுதலியபொருள் புலப்படுமாறு காண்க. 47.

52. செல்வம் நல்குர வின்றிவிண் ணோர்புழுப்
புல்வரம் பின்றி யாவர்க்கும் அரும்பொருள்
எல்லை யில்கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வ கைமனத் தேன்பட்ட கட்டமே.

ப—ரை: செல்வம் நல்குரவு இன்றி-செல்வமுடையார் வறுமையுடையார் என்னும் வேறுபாடின்றியும், விண்ணோர் புழு புல் வரம்பு இன்றி-தேவர்களும் புழுவும் புல்லும் என்னும் உயர்வு தாழ்வு இன்றியும், யாவர்க்கும் அரும்பொரும்-எல்லாவுயிர்களுக்கும் அறிதற்கும் அடைதற்கும் அரிய பரம்பொருளினுடைய, எல்லை இல் கழல் கண்டும் பிரிந்தனன்-எல்லையில்லாத வீரக் கழலணிந்த திருவடிகளைக் காணும் பேற்றினைப் பெற்றிருந்தும் இப்பொழுது அக்காட்சி நீங்கப்பெற்றேன்; அந்நீக்கம், கல் வகை மனத்தேன் பட்ட கட்டமே-கல்லின் வகைகளுள் ஒன்று எனக் கருதப்படும் வலிய நெஞ்சத்தினையுடையேன் அடைந்த துன்பமேயாகும்.

செல்வமுடையார் நல்குரவுடையார் என்னும் வேறுபாடின்றியும் விண்ணோர் புழு புல் என்னும் உயர்வு தாழ்வு இன்றியும் எல்லாவுயிர்களுக்கும் அறிதற்கும் அடைதற்கும் அரிய பரம்பொருளினுடைய வீரக் கழலணிந்த திருவடிகளைக் காணும் பேற்றினைப் பெற்றிருந்தும் இப்போது அக்காட்சி நீங்கப்பெற்றனன்; அந்நீக்கம் கல்வகை மனத்தேன் பட்ட துன்பமேயாகும் என்பதாம்.

நல்குரவு-வறுமை. 'நுகரப்படுவன யாவுமில்லாமை' என்பர் பரிமேலழகர். (குறள் 105 அதி உரை) செல்வம் நல்குரவு என்பன அவற்றையுடைய மக்களை உணர்த்தி நின்றன. விண்ணோர் புழு புல் என்பன, செல்வம் நல்குரவின்றி, நல்வினையின் உயர்வாலும் தீவினையின் இழிவாலும், உயர்வு இழிவு அடைந்த தேவரையும் புழுக்களையும் புன் முதலிய தாவரங்களையும் உணர்த்தின. 'செல்வம் நல்குரவின்றி விண்ணோர் புழுப்புல் வரம்பின்றி யார்க்கும் அரும்பொருள்' என்பதனால் செல்வராயினும் வறியராயினும் நல்வினையாலுயர்ந்த தேவர் முதலியோராயினும் தீவினையா லிழிந்த புழு புல் முதலிய தாவரங்களாயினும் அங்ஙிலைமைகளையடைந்த எல்லாவுயிர்களுக்கும் அரும்பொருளாயுள்ளான் இறைவன் என்பது அறியப்படும். மக்களையும் விண்ணோரையும் நோக்கி யாவர்க்கும் அரும்பொருள் என்றாராயினும், புழு புல் முதலியவற்றை நோக்கி யாவற்றிற்கும் அரும்பொருள் என்பதும் உபலக்கணத்தாற் கொள்ளப்படும். "யாவர்க்கும் அறிவறிய செங்கண் ஏற்றானை" (சுந் 38 : 4) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. அரும்பொருள்-அறிதற்கும் அடைதற்கும் அரிய பொருள். அது இறைவனை உணர்த்தி ஆறும் வேற்றுமைப் பொருள்பட நின்றது. எனவே அரும்பொருளாகிய இறைவனுடைய என்றபடி.

பொருள் கழல் என இயையும். கழல் அதனையுடைய திருவடியை உணர்த்தியது. அதனை எல்லையில் கழல் என்றது பாதாளமேழினுங் கீழ்ச் சொற்கழிவு பாதமலராதல் பற்றியாகும். கழல்கண்டும் என்றது இறைவனது பரமாசாரியத்திருவுருவாகிய திருவருள் வடிவக் காட்சியை உணர்த்தியது. பிரிந்தனன் என்றது அக்காட்சியில் தாம் அடைந்த பேரின்ப நிலையினைப் பிரிதற்கேதுவாகிய பிராரத்த வினையினையுடையனாயினேன் எனக் கழிந்ததற்கு இரங்கிக் கூறியதாகும். அப்பொருளைக் 'கல்வகை மனத்தேன் பட்ட கட்டமே' என்பதனாலும் இனிது விளங்கும்.

கல்வகை மனத்தேன் பட்ட கட்டமே என்றது மனம் காண்பதற்கரிதாகலின், புறத்தே காணப்படும் கல்வகையில் அடங்காது வேறுபட்ட கல்லாகிய வலிய நெஞ்சுடையேனாயினும் அவ்விறைவன் பிரிவால் அடைந்த துன்பம் தாங்குதற்கரிதாகியது; யாது செய்வேன் என்பதை விளக்கி நின்றது.

இதன்கண், கழல்கண்டும் பிரிந்தனன்; அதனாற்பட்ட கட்டம் தாங்குதற்கரியதாகியது; யாது செய்வேன் என்பதனால் கைம்மாறு கொடுக்க முடியாது வருந்துதல் புலப்படுதலின் கைம்மாறு கொடுத்தல் என்னும் ஐந்தாம்பத்து நுதலியபொருள் போந்தவாறு காண்க. 48.

53. கட்ட றுத்தெனை யாண்டுகண் ணாரநீ
றிட்ட வன்பரொ டியாவருங் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடிரண் டும்அறி யேனையே.

ப—ரை: கண் ஆர-என் கண்கள் மகிழ்ச்சி நிறையும் வண்ணம், நீறு இட்ட அன்பரோடு யாவரும் காண-திருவெண்ணீறு அணிந்த மெய்யடியார்களோடு மற்றுமுள்ள யாவரும் காணும் வண்ணம், கட்டு அறுத்து எனை ஆண்டு-பாசபந்தத்தினை அறுத்து என்னை ஆட்கொண்டருளி, பட்டி மண்டபம் ஏற்றினை-சமய உண்மைகளை ஆராயும் வித்தியாமண்டபத்தில் என்னைச் சேர்த்தருளினை; அதனால், எட்டினோடு இரண்டும் அறியேனை ஏற்றினை-எட்டும் இரண்டும் அறியாத என்னை உயர்வடையச் செய்தனை.

கண்கள் மகிழ்ச்சி நிறையும் வண்ணம், திருநீறிட்ட மெய்யன்பர்களோடு மற்றுமுள்ள யாவரும் காணும் வண்ணம் பாசபந்தத்தினை அறுத்து என்னை ஆட்கொண்டருளிப் பட்டி மண்டபத்தில் ஏற்றினை; அதனால் எட்டினோடு இரண்டும் அறியாத என்னை உயர்வடையச் செய்தனை. இவற்றிற்குச் செய்யத்தக்க கைம்மாறு யாதுளது என்பதாம்.

கட்டறுத்தெனை யாண்டு-அநாதிபந்தமாகிய ஆணவத்தினைக் கெடுத்து என்னை ஆட்கொண்டருளி.

"பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசமறுத்தெனை யாண்ட
ஆருடை அம்பொனின் மேனி அமுதினை" குயில் 9.

"எந்தை யெந்தாய் சுற்றம்மற்று மெல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தெனை யாண்டுகொண்ட பாண்டிப்பிரான்" பூவல் 2.

"கொந்துகுழல் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத் தெனையாண்டு" அச்சோ 6.

என அடிகள் பிறண்டும் அருளியவாறு காண்க. கண்ணார அறுத்து ஆண்டு ஏற்றினை என இயைக்க. இனி, கண்ணாரக் காண ஏற்றினை எனக் கூட்டிப் பொருளுரைப்பினுமமையும். நீறு, திருவருட்பேற்றின் அறிகுறியாதலின் நீறிட்ட அன்பர் அத்திருவருட் பேற்றினையுடைய அன்பர்கள் என்க. திருவெண்ணீற்றிற்கு வீடுபேறாகிய செல்வத்தைக் கொடுப்பது என்னும் பொருளமைந்த 'விபூதி' என்னும் பெயருண்மையுமறிக அன்பர் என்றது இறைவனுடன் வந்த மெய்யடியார்களை. யாவரும் என்றது அடிகளுடன் வந்தவர்களையும் மற்றும் ஆங்குள்ளவர்களையுமாகும்.

கல்வி பயிலும் களம் என்னும் பொருளுடைய 'பட்டியம்' என்னும் சொல் இங்கே 'பட்டி மண்டபம்' என நின்றது. பட்டிமண்டபம்-வித்தியா மண்டபம். சிலப் 5:102 அடி. நல் உரை.

"ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டிமண் டபத்துப் பாங்கறிந் தேறுமின்" மணி 1:60-61.

"பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்" கம்ப. நகர 62.

என வருவன காண்க.

ஏற்றினை இரண்டனுள் முதற்கணுள்ளது சேர்த்தருளினை எனவும், ஏனையது உயர்வடையச் செய்தனையெனவும் பொருள் தந்து நின்றன. அன்றி அவற்றுள் ஒன்றினுக்கு இடபவூர்தியையுடையவனே எனப் பொருள்கொண்டு இறைவனைக் குறித்ததாகக் கொள்ளின், முன்னர்க் 'கட்டறுத்தெனை' எனவும், பின்னர் 'அறியேனை' எனவும் வந்த இரண்டாம் வேற்றுமைகளுக்கு முடிக்குஞ்சொல் 'ஏற்றினை' என்னும் ஒன்றே உளதாகும். அதனால் அவ்வேற்றுமைகளுள் ஒன்று பொருளின்றி நின்றுவற்றும். ஆதலால் 'இறைவனே' என்னும் எழுவாயை அவாநிலையான் வருவித்துக் கட்டறுத்தெனைப் பட்டிமண்டபம் ஏற்றினையெனவும், அறியேனை ஏற்றினை எனவும் தனித்தனி இயைத்துப் பொருள் கோடலே சிறப்புடைத்தாமென்க.

எட்டினோடு இரண்டு பத்து; பத்து என்னும் எண்ணின் தமிழ்க்குறி யகரம்; யகரம் திருவைந்தெழுத்தில் ஒன்று. அது தூலபஞ்சாக்கத்தில் இறுதியிலும், சூக்குமபஞ்சாக்கரத்தில் நடுவிலும் அமையும். அந்த யகரம் உயிரினைக் குறிப்பதாக உயிராகிய என்னியல்பை அறியாத என்னை என்பது எட்டினோடிரண்டும் அறியேனை என்பதற்குப் பொருளாகும். உயிராகிய என்னியல்பை அறியாத இழிபுடைய என்னை நின் பேரருளால் சமய உண்மைகளை ஆராயும் பட்டிமண்டபம் ஏற்றினை எனவும், அதனால் என்னை உயர்வடையச் செய்தனை எனவும் கொள்க.

எட்டினோடு இரண்டு பத்து என்னும் எண்ணின் தமிழ்க்குறியாகிய யகரத்தைக் குறிப்பது என்பதனையும், அந்த யகரம் ஆன்மாவைக் குறிக்கும் என்பதனையும்,

"எட்டு மிரண்டு முருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள்—சிட்டன்
சிவாயநம வென்னுந் திருவெழுத் தஞ்சாலே
யவாயமற நின்றாடு வான்"

என உண்மைவிளக்கத்தும்,

"எட்டு மிரண்டு மினிதறி கின்றிலர்
எட்டு மிரண்டு மறியாத வேழையர்
எட்டு மிரண்டு மிருமூன்று நான்கெனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே" 963.

எனத் திருமந்திரத்தும் வருவனவற்றாலுமறிக.

எட்டினோடிரண்டும் அறியேனை என்றது எட்டும் இரண்டும் பத்து என்று அறியாத என்னை எனவும் பொருள்படும். இனி, எட்டினோடு இரண்டும் என்பதில் ஒடு எண்ணுப்பொருளதாகலின் எட்டும் இரண்டும் எனவே பொருள்படும். அதனால் எட்டு என்னும் எண்ணைக் குறிக்கும் அகரமும், இரண்டு என்னும் எண்ணைக் குறிக்கும் உகரமும் கொள்ளப்பு

மாறன்றி முன்னது அகரத்தைக் குறிப்பது எனவும், பின்னது உகரத்தை யும் மகரத்தையும் குறிப்பது எனவும் கொண்டு அம்மூன்று எழுத்துக் களும் சேர்ந்து பிரணவத்தைக் குறிக்கும் என்ப்பொருள் கோடல் இயை யாமை காண்க. இனி, எட்டினொடிரண்டு பத்து; அது இறைவன்பால் வைக்கும் பத்திக்குப் பெயராய் அப்பத்தியில்லாத என்னை எனவும் பொருள் படும். பத்து என்பது பத்தியைக் குறித்தலை "பத்துடை யடியவர்க் கெளியவன்" (திவ். திருவாய் (1, 3 : 1) என்புழிக் காண்க.

இதன்கண், என்னை ஆண்டு பட்டிமண்டபம் ஏற்றினை எனவும் என்னியல்பை அறியாத என்னை உயர்வடையச் செய்தனை எனவும் அடி கள் கூறுமுகத்தால் இவற்றிற்கு யான் செய்யும் கைம்மாறு யாதோவென அடிகள் வருந்துதல் குறிப்பிற் புலப்படுதலால் கைம்மாறு கொடுத்தல் என்னும் ஐந்தாம்பத்து நுதலியபொருள் போந்தவாறு காண்க. 49.

54. அறிவ னேயமு தேயடி நாயினேன்
அறிவ னாகக்கொண் டோஎனை யாண்டது
அறிவி லாமையன் றேகண்ட தாண்டநாள்
அறிவ னோவல்ல னோவரு ளீசனே.

ப—ரை : அறிவனே-அறிவுருவானவனே, அமுதே-அமுதத்தன்மை யுடையவனே, அடி. நாயினேன் எனை-கீழாகிய நாயின் தன்மையுடையவ னாகிய என்னை, அறிவன் ஆக கொண்டோ ஆண்டது-அறியத்தக்கவன் எனத் திருவுள்ளம் பற்றியோ ஆட்கொண்டருளியது? ஆண்ட நாள் கண் டது அறிவிலாமை அன்றே-அடியேனை ஆட்கொண்டருளிய காலத்தில் யான் கண்டது அறிவிலாமை அன்றோ? அறிவனோ அல்லனோ ஈசனே அருள்-இந்நிலையில் யான் அறிவுடையேனோ அறிவில்லேனோ அருளிச் செய்வாயாக.

அறிவனே அமுதே கீழாகிய நாயின்தன்மையுடையேனாகிய என்னை அறியத்தக்கவன் எனத் திருவுள்ளம் பற்றியோ ஆட்கொண்டருளியது? அடியேனை ஆட்கொண்டருளிய நாளில் யான் கண்டது அறிவிலாமை அன்றே; இந்நிலையில் யான் அறிவுடையேனோ அறிவில்லேனோ அருளிச் செய்வாயாக என்பதாம்.

அறிவது என்பது இயல்பாகவே எல்லாமறிபவன் என்னும் அவனது இறைமைக் குணத்தைக் குறித்து. அமுது தன்னை உண்டாரை நரை திரை மூப்புச் சாக்காடுகளின்றி இனிதிருக்கச் செய்வது இறைவனும் தம்மையடைந்த பக்குவான்மாக்களுக்குப் பேராவொழியாப் பிரிவில்லா மறவா நினையா அளவிலா இன்பத்தன்மையை அருளுதலின் அமுதே என்றார். அடி என்பது ஈண்டு கீழ்மைப் பொருட்டு.

அறிவனாகக் கொண்டோ எனை ஆண்டது என்றது அறியுந் தகுதி என்பாலிருப்பதாகத் திருவுள்ளம்பற்றியோ என்னை ஆட்கொண்டருளியது

என்றவாறு, இங்ஙனம் அடிகள் வினவுமாற்ருல் தகுதியுடையேன் அல்லன் என்பது கூறியதாகும். அதனை 'அறிவிலாமை யன்றே யான் கண்டது' என்பதும் வலியுறுத்தும்.

ஆண்டநாள் கண்டது அறியாமை யன்றே என்றது, அடிகள் இறைவன் தம்மை ஆட்கொண்டபொழுது தம்பால் தாம் கண்டது அறியாமை யல்லவா என்பதனுல் இறைவனுல் ஆட்கொள்ளப்பட்டு மெய்யுணர்வினை அடைந்த அடிகள் தமது முன்னைய நிலையை எண்ணிக் கூறியதாகும். இதனை 'அறிதோ றறியாமை கண்டற்ருல்' என்னும் திருக்குறள் வலியுறுத்தி நிற்றல் காண்க.

அறிவனே அல்லனே அருள் என்றது அறியுந் தகுதியுடையேனுகக் கொண்டு நின்னுல் ஆட்கொள்ளப்பட்ட யான் ஆட்கொண்டபின் அறிவிலாமையாகிய முன்னைய நிலையை அறிந்தேன்; ஆட்கொண்டமையால் அறிவுடையேனுயின் நின் அருட்காட்சியைக் கண்ட யான் பின் அதனைப் பிரியப்பெறேன். இப்பொழுது பிரியப்பெற்றமையால் அறிவிலனுகின்றேன். ஆதலால் அறிவிலனுகின்ற நிலைமையை நீக்கி நின் திருவடிக் காட்சியைத் தந்தருளவேண்டும் என்பது கருத்து.

இதன்கண், இறைவனது அருட்காட்சியைப் பிரிந்த அடிகள் கைம்மாறு கொடுக்கமாட்டாமையொடு பிரிந்தமையையும் ஆற்ருராய் அக்காட்சியை அருளவேண்டும் என்னும் கருத்துத் தோன்றுதலின் கைம்மாறு கொடுத்தல் என்னும் ஐந்தாம்பத்து நுதலியபொருள் போந்தவாறு காண்க. 50.

---

## 6. அநுபோக சுத்தி

அநுபோக சுத்தியென்பது சிவானுபவத்தின் பொருட்டு உயிர் தன் அநுபவங்களைச் சுத்திசெய்தல்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்.

55. ஈசனேயென் னெம்மானே எந்தை பெருமான் என்பிறவி
நாசனேநான் யாதுமொன் றல்லாப் பொல்லா நாயான
நீச னேனை யாண்டாய்க்கு நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேயம் பலவனே செய்வ தொன்றும் அறியேனே.

ப-ரை: ஈசனே-எல்லாவுயிர்களுக்கும் எல்லாப் பொருள்களுக்கும் இறைவனே, என் எம்மானே-எனக்கு அருள்செய்யுமாறு எழுந்தருளிவந்த எங்கள் தலைவனே, எந்தை பெருமான்-என் தந்தையாகிய பெரியோனே,

என் பிறவி நாசனே-எனது பிறப்பை ஒழிப்பவனே, தேசனே-ஞான ஒளி வடிவினனே, அம்பலவனே - சிதாகாயத்தையுடையவனே, யாதும் ஒன்று அல்லா பொல்லா நாயான நீசனேனை-ஏதும் ஒரு பொருளாக மதிக்கப் படாத தீமையுடைய நாயாகவுள்ள இழிவுடையவனுகிய என்னை, ஆண் டாய்க்கு-ஆட்கொண்டருளிய நின்னை, நான் நினைக்க மாட்டேன்-நான் இடையீடின்றி நினைக்கமாட்டாதவனுயிருக்கின்றேன், செய்வது ஒன்றும் அறியேன்-அதனுல் இனிச் செய்யத்தக்கது ஒன்றையும் அறிகின்றிலேன்.

ஈசனே, என் எம்மானே, எந்தைபெருமானே, என்பிறவி நாசனே, தேசனே அம்பலவனே, யாதும் ஒருபொருளாக மதிக்கப்படாத பொல்லா நாயாகவுள்ள நீசனேனை ஆட்கொண்டருளிய நின்னை நான் இடையீடின்றி நினைக்கவுமாட்டாதவனுயிருக்கின்றேன்; அதனுல் யான் இனிச் செய்யத் தக்கது ஒன்றையும் அறிகின்றிலேன் என்பதாம்.

ஈசன்-சித்தும் அசித்துமாகிய பிரபஞ்சங்கள் எல்லாவற்றுக்கும் தலைவன்.

"ஈசான; சர்வ வித்யானும்
ஈஸ்வர. சர்வ பூதானும்"

என வேதம் கூறுமாறும் காண்க. என் எம்மானே என்றது இறைவன் அருள் செய்யவேண்டி வலிய எழுந்தருளி வந்த உரிமைபற்றியாகும். எந்தைபெருமான் என்பதில் விளியுருபாகிய ஏ தொக்கது. "யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்" (சத) எனப் பிறிதோ ரிடத்து அருளிச்செய்த அடிகள், ஈண்டு என்பிறவி நாசனே என்றது இனிப்பிறவி உண்டாகாதவாறு என்பிறவியை நாசஞ் செய்தமையால் எடுத்த பிறவியின் ஒழிவாகிய இறவியினுல் துன்பமுனதாகாது என்னும் கருத்துப் பற்றியாகும்.

ஆண்டாய்க்கு என்னும் நான்காவது இரண்டாவதன் பொருட்கண் வந்தது. நினைத்தல், ஈண்டு இடையீடின்றி நினைத்தலைக் குறித்தது. அங்ஙனம் நினைக்க முடியாமை உலக அநுபவங்கள் தாக்குவதாலாகும். அத்தாக்குதலை நீக்கியருள வேண்டும் என்பதே இப்பாட்டில் வேண்டிக் கொண்ட பொருளாகும். தேசன்-ஒளிவடிவினன். தேசு-ஒளி.

செய்வதொன்றும் அறியேனே என்றது எடுத்தபிறப்புக்குரிய பிரா ரத்த வினையை அநுபவித்துக் கொண்டிருக்கும் யான் அந்த அநுபோகங் களினுல் தாக்குதலடைந்து நின்னை இடையீடின்றி நினைக்கும் வழி ஒன்றை யும் அறிகின்றிலேன் என்பதாம்.

இதன்கண், நீசனேனை ஆண்டாயை நினைக்கமாட்டேன் என்றமை யாலும், செய்வதொன்றுமறியேன் என்றமையாலும் பிராரத்த அநுபவங் கள் தாக்குகின்றன; அவற்றை நீக்கியருளவேண்டும் என்னும் வேண்டு கோள் பெறப்படுதலின், அநுபோகசுத்தி யென்னும் ஆரும்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 51.

56. செய்வ தறியாச் சிறுநாயேன் செம்பொற்பாத மலர்காணாப்
பொய்யர் பெறும்பே றத்தனையும் பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாத மேவக் கண்டுங் கேட்டிருந்தும்
பொய்ய னேன்நாள் உண்டுடுத்திங் கிருப்ப தானேன் போரேறே.

ப-ரை : போர் ஏறே-பொறி வாயில்களாகிய ஐந்து யானைகளையும் அழிக்கும் போரில் அரியேறு போன்றவனே, பொய் இலா மெய்யர்-நிலையில்லாத பொய்யாகிய உலகவாழ்விற் பற்றற்ற மெய்யன்பர்கள், வெறி ஆர் மலர் பாதம் மேவ கண்டும்-நறுமணம் நிறைந்த தாமரை மலர்போன்ற திருவடிகளை அடைதலை நேரிற் கண்டும், கேட்டிருந்தும் - நீ அறிவுறுத்தியருளக் கேட்டிருந்தும், பொய்யனேன் நான் -அந்நெறியிற் றலைப்படமாட்டாது நிலையற்ற பொய்யாகிய உடலோடு கூடிவாழும் வாழ்க்கையை உடையேனாகிய யான், உண்டு உடுத்து இங்கு இருப்பதானேன்-இவ்வுடலைப் பேணும் பொருட்டு உண்டும் உடுத்தும் இருப்பவனாயினேன்; செய்வது அறியா சிறுநாயேன்-இந்நிலையினை நீக்குதற்குச் செய்யத்தக்கது இன்னதென்று அறியாத கீழாகிய நாய்போன்ற யான், செம்பொன் பாத மலர் காணா-சிவந்த பொன்போன்ற திருவடிமலர்களைக் காணும் பேறு இல்லாத, பொய்யர் பெறும்பேறு அத்தனையும் பெறுதற்கு உரியேன்-நிலையில்லாத உலக வாழ்க்கையையுடையார் பெறுகின்ற துன்பப்பேறுகள் அவ்வளவினையும் பெறுதற்குரியவனாகின்றேன்; இது தகுமோ?

போரேறே, நிலையில்லாத உலக வாழ்விற் பற்றற்ற மெய்யன்பர்கள் திருவடியடைதலை நேரிற் கண்டும் நீ அறிவுறுத்தியருளக் கேட்டிருந்தும் அந்நெறியிற் றலைப்படமாட்டாது பொய்யாகிய உடலோடு கூடிவாழும் வாழ்க்கையையுடையேனாகிய யான், இவ்வுடலை ஓம்புதற் பொருட்டு உண்டு உடுத்து இங்கு இருப்பதானேன்; இந் நிலையினை நீக்குதற்குச் செய்யத்தக்கது இன்னதென்று அறியாத சிறுநாயேன், செம்பொற்பாத மலர்களைக் காணும் பேறில்லாத பொய்யர் பெறும் துன்பப் பேறுகள் அத்தனையும் பெறுதற்குரியவனாகின்றேன்; இது தருமமோ என்பதாம்.

செய்வதறியா என்றது உண்டு உடுத்து இங்கு இருப்பதாகிய பொய்யுலக வாழ்வை நீக்குதற்குச் செய்யத்தக்கது இன்னதென்றறியா என்றவாறு. சிறுமை-இழிவு. 'செம்பொற் பாதமலர் காணாப் பொய்யர்' என்றமையான் அப்பாத மலரைக் கண்டு வைத்தும் பொய்யுடல் வாழ்க்கையையுடைமையையாற் பொய்யர் போலாயினேன் என்பது பெறப்படும். பேறு என்றது பொய்யர் பெறும் துன்பப் பேற்றை உணர்த்தியது. உரியேன் என்பது உரியவனாவேன் என்னும் பொருள்பட நின்றது. அதனால், செம்பொற்பாத மலர்கண்டும் மெய்யர் வெறியார் மலர்ப்பாதம் மேவக் கண்டும் நீ அறிவுறுத்தியருளக் கேட்டும் இருக்கும் யான் துன்பநிலையினை அடைதல் தகுமோ? அதனால் அத்துன்ப நிலையை நீக்கியருளவேண்டும் என்பது குறிப்பெச்சம்.

வெறியார் பாதம், மலர்ப்பாதம் எனத் தனி இயையும். வெறியார் பாதம்-நறுமணம் நிறைந்த பாதம். "நின்வெறி மலர்த்தாள்" (நீத் 44) எனவும், "வெறியார் கழல் வீழ்சடைத் தீவண்ணன் சிவன்" (திருக்கோவை 286) எனவும் வருவனவுங் காண்க. மலர்ப்பாதம்-தாமரை மலர் போன்ற பாதம். "தாமரைத்தாள்" சத 45 மெய்யர் பாதம் மேவக் கண்டும் என இயையும். "அருள்பெற்ற, சீரேறடியார் நின்பாதஞ் சேரக் கண்டும்". (சத 53) என வருதலும் காண்க.

கேட்டிருந்தும் என்றது ஞான நன்னெறிக்கண் ஒழுகும் மெய்யன்பர்கள் மேன்மையான நம் மெய்ப்பதம் பெறுவர் என இறைவன் அறிவுறுத்தமையைக் குறிப்பதாகும்.

"புரிந்து போந்துள சிற்றறி வனைத்தும்
போக்கி யவ்வறி வெனச்சிவ போதம்
விரிந்து தோன்றுநெஞ் சுடையவித் தகரே
மேன்மை யானநம் மெய்ப்பதம் பெறுவார்" திருப்பெருந் 72.

எனத் திருவாதவூரடிகள் புராணத்து வருதலும் காண்க.

இருப்பதானேன் என்றது நின்திருவடிப்பேற்றைப் பெறமாட்டாது இவ்வுலகில் இருப்பது உடலை ஓம்புதற் பொருட்டு உண்பதற்கும் உடுப்பதற்குமாகவுமே அமைகின்றது என அடிகள் இரங்கிக் கூறியவாறு.

போரேறே என இறைவனை விளித்தது, இறைவன் பொறிவாயில்களாகிய ஐந்து யானைகளை அவித்தவனுதல் பற்றியாகும். அங்ஙனம் கூறுங்கால் பொறிவாயில்கள் இறைவனைத் தாக்க அவற்றை ஒருபாயத்தால் அவித்தான் என்னும் பொருளதாகதோவெனின் இயல்பாகவே பொறிவாயில்களின் தாக்குதல்களை நீக்கிய இறைவனைப் "பொறிவாயிலைந்தவித்தான்" (குறள் ) எனக் கூறியது போன்ற ஒருபசார வழக்காகும். "உறு பொறி காய்ந்திசை மாதவனே" (ஞான 371 : 5) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. இனி, போரேறே என்பதற்கு, அந்தமிலின்பத் தழிவில் வீடாகிய பரமுத்தியை அளிக்கும் செயலில் மற்றைய எத்தேவர்களுக்கும் இல்லாத ஆற்றலுடையான் இறைவனுதல் பற்றியும், தம்மையடையும் பக்குவான்மாக்களை ஆட்கொள்ளும் போது அவைகளை மேற்கதியடையவொட்டாது தடுக்கும் பாசபந்தங்களாகிய பகைகளை அறுக்கும் போரில் அரியேறு போன்றவனுதல் பற்றியும் எனினுமாம். இக் கருத்திற்கு அநுகூலமாக, "நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும், அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்" (திருப்பள்ளி 10) என அடிகள் அருளியிருத்தலுங் காண்க. இறைவனைப் பேரேறு என்று அடிகள் பிறுண்டும் கூறுதலை, "திண்போர் விடையான் சிவபுரத்தார் பேரேறு" என இத்திருவாசகத்தும் (பூவல்லி 16) அப்பரடிகள் கூறுதலை, "கருங்கைக் களிற்றுரிவை கதறப்போர்த்த, போரேறே" (313 : 5) எனத் தேவாரத்தும் காண்க.

இதன்கண், உண்டுடுத்திங்கிருப்பதானேன் அதனைச் செய்வதறியாச் சிறுநாயேன் பொய்யர் பெறும்பேறு அத்தனையும் பெறுதற்குரியவனாகின்றேன்; இது தகுமோ எனக் கூறுமுகத்தால் அநுபோகசுத்தி என்னும் ஆறும்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 52.

57. போரே றேநின் பொன்னகர்வாய் நீபோந் தருளி யிருள்நீக்கி
வாரே றிளமென் முலையாளோ டுடன்வந் தருள அருள்பெற்ற
சீரே றடியார் நின்பாதஞ் சேரக் கண்டுங் கண்கெட்ட
ஊரே றாயிங் குழல்வேனோ கொடியேன் உயிர்தான் உலவாதே.

ப-ரை: போர் ஏறே-உயிர்களின் மலபந்தங்களை நீக்கும் போரில் அரியேறு போன்றவனே, நின் பொன் நகர் வாய்-நினது பொன்மயமான சிவபுரத்திகணுள்ள திருக்கோயிலினின்றும், வார் ஏறு இள மெல் முலையாளொடு நீ உடன் போந்தருளி-கச்சு அணிந்த இளமையும் மென்மையும் பொருந்திய தனங்களையுடைய அம்மையாரொடும் நீ ஒருங்கு புறப்பட்டருளி, வந்து இருள் நீக்கி அருள-இந்நிலவுலகின்கண் வந்து ஆணவமல இருளின் ஆற்றலைக்கெடுத்து அருள்புரிய, அருள்பெற்ற சீர் ஏறு அடியார்-அத்திருவருளைப் பெற்ற சிறப்புமிக்க மெய்யடியார்கள், நின் பாதம் சேர கண்டும்-நின் திருவடிகளை அடைய நேரே பார்த்திருந்தும், கண்கெட்ட ஊர் ஏறாய் இங்கு உழல்வேனோ-யானும் அதனைப் பெறமாட்டாது கண்கெட்ட குருட்டு ஆண் ஊர்ப்பன்றி போலாக இவ்வுலகில் அலைந்து திரிவேனோ? கொடியேன் உயிர்தான் உலவாதே-கொடிய பிராரத்தவினையையுடைய என் உயிர் ஒழிக்கின்றிலதே; யாது செய்வேன்.

பேரேறே, நின் பொன்னகரினின்றும் உமையம்மையாளொடும் நீ ஒருங்கு புறப்பட்டருளி இந்நிலவுலகின்கண் வந்து இருள் நீக்கி அருள அத்திருவருளைப் பெற்ற சீரேறு அடியார்கள் நின் திருவடிகளை அடையக் கண்டிருந்தும் யானோ அதனைப் பெறமாட்டாது கண்கெட்ட ஊரேறாய் இவ்வுலகில் அலைந்து திரிவேனோ? கொடிய வினையையுடைய என் உயிர் ஒழிக்கின்றிலதே, யாது செய்வேன் என்பதாம்.

பொன்னகர்-சிவபுரத்தின்கணுள்ள செம்பொற்றிருக்கோயில், "புகுவதாவதும் போதர வில்லதும் பொன்னகர் புகப்போந்த" (சத 36) என வந்தமையுங் காண்க. பொன்னகர்வாய் என்னும் ஏழாவது ஐந்தாவதன் பொருட்கண் வந்தது. இளமைச் செவ்வி குன்றாது என்றுங் கன்னியாய் இருப்பவளாதலின் அம்மையை, 'வாரே றிளமென் முலையாரொடு" என்றருளினார். முலையாளோடு நீ உடன் போந்தருளி வந்து இருள்நீக்கி என மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்க. இறைவன் மெய்யன்பர்களுக்கு அருள் செய்யும் பொருட்டு அம்மையொடு போந்தருவான் என்பது,

"தேவியும் தானும்வந் தெம்மையாள" திருப்பொற் 2.

"மருவார் மலர்க் குழல் மாதினொடும் வந்தருளி
அருவாய் மறைபயில் அந்தணனாய் ஆண்டுகொண்ட" கோத் 14.

"அரையாடு நாக மசைத்தபிரான் அவனியின்மேல்
வரையாடு மங்கைதன் பங்கொடும்வந் தாண்டதிறம்" தெள் 6.

"கனவேயும் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவேய் அனவளைத் தோளியொடும் போந்தருளி
நனவே யெனைப்பிடித் தாண்டவா" தெள் 10.

"பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான்" பொன்னூசல் 9.

என அடிகள் பிறாண்டு அருளியவாற்றானுமறிக. மென்முலையாளென்றது திருவருட்சத்தியை. "அலர்ந்த நின் மெய்க்கருணையும் நீயும், அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்" (திருப்பள்ளி 10) என வருதலுங் காண்க. "அருளது சத்தியாகும் அரன்றனக்கு" எனச் சிவஞானசித்தியாரில் (சூத் 5. செய் 9) வருதலும் ஈண்டு அறியற்பாலது.

சீரேறடியார்-இறைவன் திருவருளைப் பெற்ற சிறப்புமிக்க மெய்யடியார். பாதஞ்சேர என்றது தாடலைபோல் இரண்டறக் கலக்க என்றவாறு.

"ஒன்றன் றிரண்டன் றிரண்டொன்று தானன்று
நின்றதொரு தன்மை நிலை" (61)

"சாற்றில் அதற்குவமை தாடலைபோற் சன்மார்க்க
வேற்று விதிபலவும் வேண்டாவே' (62)

எனத் துகளறுபோதத்து வருவனவும் காண்க.

கண்டும் உழல்வேனோ என இயையும். உம்மை எதிரது தழீஇய எச்சவும்மை. ஊரேறு என்பதற்குப் பொலியெருது என்று உரைப்பாருமுளர். பொலியெருது விடுதல் முப்பத்திரண்டு அறங்களுள் ஒன்றாயினும் அதற்குக் கண்கெட்ட ஏற்றினை விடும் வழக்கம் யாண்டுமின்மையானும் பொலியெருது எல்லாராலும் பாதுகாக்கப்படுதலின் அதற்கு அலைந்து திரியும் வழக்கம் இன்மையானும், "ஊர் நாயிற் கடையானே" (சத 56) என்பதுபோலத் தம்மைப் பலவிடங்களிலும் தாழ்த்திக் கூறும் அடிகள் ஊரேறாகத் தம்மை உரையாராதலானும் கண்கெட்ட ஊரேறு என்பதற்குக் குருடாகிய ஆண் ஊர்ப்பன்றி எனவுரைத்தலே இயைபுடைத்தாமென்க. பன்றியின் ஆண்பால் ஏறு எனப்படுதல், "பன்றி புல்வாயுழையே கவரி, யென்றிவை நான்கு மேறெனப்படும்" (தொல் மரபு 38) என்பதனால் அறிக. உழல்வேனோ என்பதில் ஓகாரம் வினாப்பொருளில் வந்தது. அடியார் நின்பாதம் சேரக்கண்டும் அதனைத் தாமும் பெறமுடியாத பிராரத்தவினையுடைமை பற்றி அடிகள் தம்மைக் 'கொடியோன்' என்றார். தான்-அசை. உலவாதே என்பதில் ஏ-ஒழியிசை.

இதன்கண், ஊரேறாயிங்குழல்வேனோ என்பதனால் உழலும் துன்ப நிலையை ஒழித்தல் வேண்டும் என்பது பெறப்படுதலின் அநுபோகசுத்தியென்னும் ஆறும்பத்து நுதலியபொருள் போந்தவாறு காண்க. 53.

58. உலவாக் காலந்தவமெய்தி உறுப்பும் வெறுத்திங் குனைக்காண்பான்
பலமா முனிவர் நனிவாடப் பாவி யேனைப் பணிகொண்டாய்
மலமாக் குரம்பை யிதுமாய்க்க மாட்டேன் மணியேஉனைக்
காண்பான்
அலவா நிற்கும் அன்பிலேன் என்கொண் டெழுகேன் எம்மானே.

ப-ரை: மணியே-மாணிக்கம் போல்பவனே. எம்மானே-எங்கள் தலைவனே, இங்கு பல மா முனிவர்-இவ்வுலகிற் பல பெரிய முனிவர்கள், உனை காண்பான்-உன்னைக் காணும்பொருட்டு, உலவா காலம் தவம் எய்தி-அளவில்லாத காலம் தவநெறியிற் றலைப்பட்டு, உறுப்பும் வெறுத்து நனி வாட-அதனால் தமது உடம்மையும் வெறுத்து மிகவும் வாடிவருந்தவும், பாவியேனை பணி கொண்டாய் - பக்குவமின்மையால் அவர்க்கருளாத நீ பாவியாகிய என்னைத் தொண்டனைக் கொண்டாய்; மல மா குரம்பை இது மாய்க்க மாட்டேன்-பணிகொண்டு பின்னர் என்னைப் பிரிந்த நின்னைக் காணும் பொருட்டு மலங்களையுடைய பெரிய யாக்கையாகிய குரம்பையை ஒழிக்க மாட்டாதவனாயிருக்கின்றேன்; உனை காண்பான் அலவா நிற்கும் அன்பு இலேன்-நின்னைக் காணும்பொருட்டு வருந்தி நிற்கும் அன்பு இல்லாதவனாகிய யான், என் கொண்டு எழுகேன் - எதனைப் பற்றுக்கோடாகக்கொண்டு மேற்பட்டு நின்னைக் காணவல்லேன்.

மணியே, எம்மானே, இவ்வுலகத்திலே பல பெரிய முனிவர்கள். உன்னைக் காணும் பொருட்டு அளவில்லாத காலம் தவநெறியிற் றலைப்பட்டு அதனாற் றமது உடம்பையும் வெறுத்து மிகவும் வாடி வருந்தவும், பக்குவமின்மையால் அவர்க்கு அருள்புரியாத நீ பாவியாகிய என்னைத் தொண்டனாகக் கொண்டனை; அங்ஙனம் பணிகொண்டு பின்னர்ப் பிரிந்த நின்னைக் காணும்பொருட்டு இந்த மலமாக்குரம்பையாகிய இதனை அழித்து ஒழிக்கமாட்டாதவனாயிருக்கின்றேன்; நின்னைக் காணும்பொருட்டு வருந்தி நிற்கும் அன்பில்லாதவனாகி யான் எதனைப் பற்றுக்கோடாகக் கொண்டு மேற்பட்டு நின்னைக் காணவல்லேன் என்பதாம்.

உலவாக்காலம்-அளவில்லாத காலம். உலப்பு-அளவு. "மிடைந்தவர் உலப்பிலர்" கம்ப, உருக்காட்டு 23 பெரிய முனிவர்கள் அளவில்லாத காலம் தவம் இயற்றினராதலின் 'உலவாக்காலந் தவமெய்தி' என்றார்.

"புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
உண்டியா யண்ட வாணரும் பிறரும்
வற்றி யாருநின் மலரடி காணு மன்ன" செத். 2.

என அடிகள் பிறண்டு அருளியமையுங் காண்க. உறுப்பு அதனையுடைய உடலை உணர்த்தியது. உம்மை, உயர்வு சிறப்பு, உடலை வெறுத்தல்-உடலுக்கு வேண்டிய உணவு முதலியன கொடாது ஒறுத்தல். நனிவாட என்றது முனிவர்கள் நெடுங்காலம் கடுந்தவம் புரிந்தும் காண்டற்கருமை

யால் மிகவும் வாட என்றவாறு. முனிவர் நனிவாடப் பாவியேனைப் பணி கொண்டாய் என்றது இறைவனது பேரருளினை வியந்தவாறு. அடிகள் தம்மைப் பாவியேன் என்றது பலவிடத்தும் பணிவுடைமை தோன்றக் கூறும் முறைமைபற்றியாகும். "பாவியேற் கிதலாது மின்க ளொன்றும் வண்ண மில்லையே" (சத 77) "பாவியேன்...அழுக்கு மனத்தடியேன்" (அடைக்கலப் 1) "பாவியேற்கு முண்டாமோ" (பிரார்த்தனைப் 5) "பாவி யேனுடைய ஊனினை யுருக்கி" (பிடித்த 9) என அடிகள் பிறண்டு அருளியவாதும் காண்க.

மலமாக் குரம்பை-மலங்களையுடைய பெரிய யாக்கையாகிய குரம்பை. "மலவன்மாக் குரம்பையை மாற்றியம் மான்முதல் வானவர்க்கப்பாற் செலவன்பர்க்கோக்குஞ் சிவன்" என்னும் திருக்கோவையார் (155) உரையில் மலவன்மாக் குரம்பை என்பதற்கு மலங்களையுடைய வலிய யாக்கையாகிய குரம்பை எனப் பேராசிரியார் உரைத்தமையுங் காண்க. "மும் மலம் பொதிந்த முழுமலக் குரம்பை" எனச் சிதம்பரச் செய்யுட் கோவையில் (68 : 3) வருதலுங் காண்க. குரம்பை-குடில். "ஈத்திலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை" பெரும்பாண் 88. அடிகள் யாக்கையைக் குரம்பை என்றலை,

"கொடியேன் ஊன்றழை, குரம்பை தோறும்" திருவண்டப் 171-2.

"புழுக்கணுடைப் புன்குரம்மை...அழுக்குமனத் தடியேன்"
அடைக்கலப் 1.

"நீக்கிமுன் னெனைத் தன்னொடு நிலாவகை குரம்பையிற் புகப்பெய்து"
அதிசயப் 8.

"முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து, கடைப்படாவண்ணம்" பிடித்த 2.

"புழுவினாற் பொதிந்திடு குரம்பையில்" சென்னிப் 8.

என வருவனவற்றிலுங் காண்க. குரம்பையை மாய்க்கமாட்டாமை பிராரத்த வினையுடைமையால் என்க.

உலகத்துச் சிறந்த பொருள்களுள் மணி சிறந்ததாதல் பற்றி 'மணியே' என்றார்.

"என் மணியே, வெறுத்தெனை நீ விட்டிடுதி" நீத் 6.

"மணியே யமுதேயென் மதுவெள்ளமே" நீத் 13.

"சுடர்மா மணியே...கறைக்கண்டனே" நீத் 32.

"எனையாண்ட பொல்லா மணியேயோ" ஆசைப் 1.

"ஏதா மணியே யென்றேத்தி...அணைவது என்றுகொல்லோ"
புணர்ச்சிப் 9.

"அம்பலத் தாடுகின்ற என்பொலா மணியை" அச்சப் 3.

"ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த வாரமுதே" பிடித்த 3.

59. மானேர் நோக்கி யுமையாள் பங்கா வந்திங் காட்கொண்ட
தேனே அமுதே கரும்பின் தெளிவே சிவனே தென்தில்லைக்
கோனே யுன்றன் திருக்குறிப்புக் கூடு வார்நின் கழல்கூட
ஊனார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்ப தானேன் உடையானே.

ப—ரை : மான் நேர் நோக்கி உமையாள் பங்கா-மானினது நோக்குப் போலும் நோக்கினையுடைய உமையம்மையை ஒரு கூற்றிலுடையவனே, இங்கு வந்து ஆட்கொண்ட-இந்நிலவுலகத்தில் பரமாசாரியனாக வலிய எழுந்தருளி வந்து என்னை அடிமைகொண்டருளிய, தேனே அமுதே கரும்பின் தெளிவே-தேனும் அமுதமும் கருப்பஞ்சாறும் போன்றவனே, சிவனே-சிவன் என்னும் நாமம் நினக்கேயுரிய செம்மேனி யெம்மானே, தென்தில்லை கோனே-தெற்கின்கட் தில்லைச் சிற்றம்பலத்தின் கண் எழுந்தருளியிருக்கும் கூத்தப்பிரானே, உடையானே-எல்லா உலகங்களையும் உயிர்களையும் உடைமையாகவும் அடிமையாகவும் உடையவனே, உன் தன் திருக்குறிப்பு கூடுவார் நின் கழல்கூட-நின்தன் திருவுள்ளக் கருத்துப் பொருந்தப்பெற்ற மெய்யடியார்கள் நின்திருவடியை அடைய, ஊன் ஆர் புழு கூடு இது காத்து-யானோ தசை நிறைந்த புழுக்கூடாகிய இவ்வுடலைப் பாதுகாத்து, இங்கு இருப்பதானேன் - இந்நிலவுலகத்தில் இருக்க வேண்டியவனாயினேன். இது தகுமோ?

உமையாள் பங்கா, இங்கு வந்து ஆட்கொண்ட தேனே அமுதே கரும்பின் தெளிவே சிவனே தில்லைக்கோனே உடையானே நின்தன் திருவுள்ளக்குறிப்புக் கூடுவார் நின் திருவடியை யடைய, யானோ புழுக்கூடாகிய இவ்வுடலைப் பாதுகாத்து இந்நிலவுலகில் இருக்கவேண்டியவனாயினேன். இது தகுமோ என்பதாம்.

மானேர் நோக்கி உமையாள்-மானின்மட நோக்குப்போலும் நோக்கினையுடைய உமையாள். ''மானேர் நோக்கியுடையாள் பங்கா'' (சத 85) எனவும் ''மான்மட நோக்கி'' (திருக்கோவை 21) எனவும் வருவன காண்க. உமையாள் பங்கா என்றார், இறைவன் அடிகளை ஆட்கொள்ள வந்த காலத்துத் திருவருட்சத்தியோடு வந்தமையின். இங்கு வந்து-இந்நிலவுலகில் வலிய வந்து. ''அரையாடு நாக மசைத்தபிரான் அவனியின் மேல், வரையாடு மங்கைதன் பங்கொடும்வந் தாண்ட திறம்'' (தெள் 6) என அடிகள் பிறண்டும் அருளியமை காண்க. இறைவனது திருவருட் காட்சி அடிகட்குக் கழிபேரின்பமும் உறுதியும் பயந்தமையின் 'தேனே அமுதே கரும்பின் தெளிவே' என விளித்தார். ''தேனே யமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும் மானே'' (சத 90) என வருதலுங் காண்க.

தென்தில்லை-தெற்கின்கட் டில்லை (திருக்கோவை 127 பேர்). நின்னால் ஆட்கொள்ளப்பட்டவர்களில் நின் திருவுள்ளக் குறிப்புப் பொருந்தப்பெற்ற மெய்யடியார்கள் நின் திருவடியை அடைய, அதனைப் பொருந்தப் பெற மாட்டாத யான் இவ்வுடலை ஓம்பி இங்கு இருக்க வேண்டியவனானேன்;

இது தருமோ என்பார் 'உன்றன் திருக்குறிப்புக் கூடுவார் நின்கழல் கூடப் புழுக்கூடிது காத்திங் கிருப்பதானேன்'' என்று அருளிச் செய்தார். அடியேனையும் கழல் கூடும் வண்ணம் அருள்செய்ய வேண்டும் என்பது குறிப்பு. இவ்வுடம்பு எடுத்ததன் பயன் இறைவன் திருவடியை அடைதலே யென்பது,

''படிறுயின சொல்விப் பாழுட லோம்பிப் பலகடைச்சென்
றிடரு தொழிது மெழுநெஞ்சமே யெரியாடி யெம்மான்
கடறுயின நஞ்ச முண்ட பிரான் கழல்சேர்தல் கண்டா
யுடரு னுள பயனுவ சொன்னே னிவ்வுலகி னுள்ளே''
(பொன்வண்ணத் 13)

எனப் பதினொரா்ந் திருமுறையில் வருதலானுமறிக.

இதன்கண், ஊனுர் புழுக்கூடிது காத்திங் கிருப்பதானேன் என்பதனுல் பிராரத்த வினையினுல் உண்டாகும் அநுபோகங்களின் தீமையை நீக்கி அருளவேண்டுமென்பது பெறப்படுதலின் அநுபோகசுத்தி யென்னும் ஆரும்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 55.

60. உடையா னேநின் றனையுள்கி யுள்ள முருகும் பெருங்காதல்
உடையார் உடையாய் நின்பாதஞ் சேரக் கண்டிங் கூர்நாயின்
கடையா னேன்நெஞ் சுருகாதேன் கல்லா மனத்தேன்
கசியாதேன்
முடையார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்பதாக முடித்தாயே.

ப—ரை: உடையானே – என்னை ஆளாகவுடையவனே, நின் தனை உள்கி-நின்னை நினைந்து, உள்ளம் உருகும் பெரு காதல் உடையார்-மனம் உருகுகின்ற பேரன்பினை உடையவர்கள், உடையாய் நின்பாதம் சேர கண்டு-தம்மை அடிமையாக உடையையாகிய நின்திருவடிகளை அடையக் கண்டு வைத்தும், இங்கு ஊர் நாயின் கடையானேன்-இவ்வுலகில் ஊரில் அலைந்து திரியும் நாயினும் கடைப்பட்டவனும், நெஞ்சு உருகாதேன்-அன்பின்மையால் உள்ளம் உருகாதவனும், கல் ஆம் மனத்தேன்-கல்லைப் போன்ற மனத்தினையுடையவனும், கசியாதேன்–அதனுல் மனம் நெகிழப் பெருதவனுமாகிய யான், முடை ஆர் புழு கூடு இது காத்து-தீயநாற்றம் நிறைந்த புழுக்கூடாகிய இவ்வுடம்பைப் பாதுகாத்துக் கொண்டு, இங்கு இருப்பதாக முடித்தாயே-இந்நிலவுலகத்தில் இருக்க வேண்டியவனுக முடிவு செய்து விட்டனையோ.

உடையவனே, நின்னை நினைந்து உள்ளமுருகும் பெருங்காதலுடையவர்கள் தம்மை அடிமையாக உடையையாகிய நின்திருவடியை அடையக் கண்டும், இவ்வுலகில் ஊர்நாயினும் கடைப்பட்டவனும் அன்பின்மையால் உள்ளமுருகாதவனும் கல்போன்ற மனத்தினையுடையவனும் அதனுல் மனம் நெகிழப் பெருதவனுமாகிய யான் முடையார் புழுக்கூடாகிய இவ்வுடம்

பைப் பாதுகாத்துக்கொண்டு இங்கு இருக்கவேண்டியவனாக முடிவுசெய்து விட்டனையோ? என்வினை இருந்தவாறென்னே என்பதாம்.

உள்குதல்-நினைத்தல். காதல்-அன்பு. உள்ளம் உள்குதற்கும் உருகுதற்கும் பெருங்காதல் ஏதுவாகும். பெருங்காதலுடையார் என்றது மெய்யன்பர்களை. உடையாய் நின்பாதம் என்றது அம்மெய்யன்பர்களை அடிமையாக வுடைமையாகிய நினது திருவடியென்றவாறு. ஈண்டு உடையாய் என்பது முன்னிலை வினையாலணையும் பெயர். கண்டும் என்புழி உம்மை தொக்குநின்றது, கண்டும் உருகாதேன் என இயையும்.

ஊர்நாய்-தன்னை வளர்ப்பவரின்மையால் ஊணுக்கும் உறைவிடத்துக்கும் ஊரில் அலைந்து திரியும் நாய். ஊர்நாயிற் கடையானேன் என்பது முதலாக அடிகள் தம்மைப்பற்றிக் கூறியன "பணியுமா மென்றும் பெருமை" (குறள் ) என்னும் முறைமைபற்றியனவாகும். கல்லா மனத்தேன் என்பதற்குத் தத்துவஞானத்தையுதவும் நூல்களைக் கற்றறியாத மனத்தையுடையேன் எனினுமாம். கசிதல்-உள்ளம் உருகுதற்கு முன்னிகழும் நிகழ்ச்சி. "கருணையே நோக்கிக் கசிந்துளம் உருகி" (வாழாப் 7) "கசிந்துருக வேண்டுவனே" (புலம் 3) "கசிந்துருகக் கேதங்கெடுத்தென்னை யாண்டருளும்" (வார்த்தை 9). முடை-புலால்நாற்றம் எனினுமாம். முடித்தாயே-ஏ, வினப்பொருட்டு.

இதன்கண், கூடிது காத்திங்கிருப்பதாக முடித்தாயே என்றதனால் உடலோடு இருக்கும் காலத்துளவாகும் அநுபோகங்களால் தீங்குண்டாகாதவாறு அவற்றை நீக்கியருளவேண்டுமென்பது பெறப்படுதலின் அநுபோகசுத்தியென்னும் ஆரும்பத்து நுதலியபொருள் போந்தவாறு காண்க. 56

61. முடித்தவாறும் என்றனக்கே தக்க தேமுன் அடியாரைப்
பிடித்த வாறுஞ் சோராமற் சோர னேனிங் கொருத்திவாய்
துடித்த வாறுந் துகிலிறையே சோர்ந்த வாறும் முகங்குறுவேர்
பொடித்த வாறும் இவையுணர்ந்து கேடென் றனக்கே
சூழ்ந்தேனே.

ப—ரை: என் தனக்கு முடித்தவாறும் தக்கதே-எனக்குப் புழுக்கூடு இது காத்திங்கிருப்பதாக முடிபுசெய்ததும் பொருந்துவதே. முன் அடியாரைச் சோராமல் பிடித்தவாறும் தக்கதே-முன்னர் உன்னை நாடிய மெய்யடியாரைச் சோரம்போகாமல் நீ பிடித்துக் கொண்ட விதமும் தக்கதே. சோரனேன்-மாயாசத்தியால் கவரப்பட்டவனாகிய யான், இங்கு ஒருத்தி வாய் துடித்தவாறும்-இவ்வுலகத்திலுள்ள மாயையாகிய ஒருத்தியின் வாய் இதழ் துடித்தவிதமும், துகில் இறையே சோர்ந்த வாறும்-அவள் அணிந்திருந்த ஆடை சிறிது வழுவிய விதமும், முகம் குறுவேர்

பொடித்தவாறும்-முகத்திற் சிறியவியர்வை அரும்பிய விதமுமாகிய, இவை உணர்ந்து என் தனக்கே கேடு சூழ்ந்தேன்-இவைகளை உணர்தலால் எனக்கு யானே கேட்டினைக் கருதுவேனாயினேன்.

எனக்குப் புழுக்கூடிது காத்திங்கிருக்க முடித்தவாறும் பொருந்துவதே; முன் மெய்யடியாரைச் சோராமற் பிடித்தவாறும் தக்கதே, சோரனேன் இவ்வுலகத்திலுள்ள மாயையாகிய ஒருத்தியின் வாயிதழ் துடித்தவாறும், அவள் அணிந்த துகில் சிறிது வழுவியவிதமும், முகத்திற் சிறிய வியர்வை அரும்பிய விதமுமாகிய இவைகளை உணர்தலால் எனக்கு யானே கேட்டினைக் கருதுவேனாயினேன் என்பதாம்.

முடித்தவாறும் என்றது முன் திருப்பாட்டில் 'முடையார் புழுக்கூடிங்கிதுகாத்திங் கிருப்பதாக முடித்தாயே' என்பதைச் சுட்டியது. அங்கே இது தகுமோ என எண்ணிய அடிகள், இங்கே என் நிலைமைக்கு இது தக்கதே என உடம்பாட்டாற் கூறி இரங்குகின்றார்.

முன் என்றது இறைவன் பரமாசாரியனாகி எழுந்தருளி அடிகளை அடிமைகொண்ட நாளைக் குறித்தது. அடியாரைச் சோராமற் பிடித்தல்-மெய்யடியாரை மாயாசத்தி கவராமல் திருவருட் சத்தியால் தம்பால் இயைவித்தல். 'தக்கதே' என்பதை, 'முடித்தவாறுந் தக்கதே', 'பிடித்தவாறுந் தக்கதே' என ஈரிடத்தும் கூட்டுக. சோரனேன் என்றது மாயா சத்தியால் கவரப்பட்டேனாகிய யான் என்றவாறு. ஒருத்தி என்றது மாயையை. வாய் துடித்தவாறும்-வாயிதழ் துடித்தவிதமும். "வாய்பவளந் துடித்தவா" எனத் திருக்கோவையாரில் (32) வருதலும் காண்க. இறை-சிறிது. "மற்று இறைகுறையுண்டு" (திருக்கோவை 94) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. குறுவேர்-அச்சம் முதலியவற்றாற் சிறிதாகத் தோன்றும் வியர்வை. பொடித்தல்-அரும்புதல்; தோன்றுதல். "முலை பொடியா" திருக்கோவை 104. வாயிதழ் துடித்தலும் துகில் இறைசோர்தலும் முகம் குறுவியர் கொள்ளுதலும் மாயையின் ஆற்றல்கள். வாய் இதழ்துடித்தலால் மொழியும், துகில் சோர்தலால் மெய்யும், ஆசையின் வெப்பத்தால் முகம் வியர் பொடித்தலால் மனமும் காமவயப்பட்டமை கூறினார்.

இவை உணர்ந்து என்றது பிராரத்த வினையுடன் உலகில் வாழ்ந்திருந்து வினைப்பயன்களை அனுபவிக்கும்போது கடவுள் தியானம் இடையீடுபடுதலான் மாயையின் ஆற்றல்கள் புலப்படுதல் பற்றியாகும். உணர்ந்து என்னும் செய்தெனெச்சம் உணர்தலால் என ஏதுப்பொருளில் வந்தது. சூழ்ந்தேனே என்றது இறைவன் அருள்வழிப்பட்டோர் இவ்வுலகில் வாழுங்காலத்து மாயையின் சக்திகளால் தாக்குண்டு கேடடைவர் என்பதனை அடிகள் தம்மேலிட்டுக் கூறியவாறு.

இதன்கண், 'ஒருத்தி வாய் துடித்தவாறும்' என்பது முதலியவற்றுற் குறிக்கப்பட்ட அநுபோகங்களைச் சுத்தி செய்யவேண்டுமென வேண்டிக் கொள்ளுதல் புலப்படுதலின் அநுபோகசுத்தி யென்னும் ஆறும்பத்து நுதலியபொருள் போந்தவாறு காண்க. 57.

62. தேனைப் பாலைக் கன்னலின் தெளியை யொளியைத்
தெளிந்தார்தம்
ஊனை உருக்கும் உடையானை உம்ப ரானை வம்பனேன்
நானின் அடியேன் நீயென்னை ஆண்டாயென்றால் அடியேற்குத்
தானுஞ் சிரித்தே யருளலாந் தன்மை யாமென் தன்மையே.

ப—ரை: தேனைப் பாலைக் கன்னலின் தெளியை—தன்னைப் பாவிப்பவர்களுக்குத் தேனும் பாலும் கரும்பின் தெளிந்த சாறும் போல இனிமையைச் செய்பவனும், ஒளியை—பேரொளியுருவினனும், தெளிந்தார் தம் ஊனை உருக்கும் உடையானை-தன்னைப் பரம்பொருள் என தெளிந்த மெய்யன்பர்களின் ஊனுடலை உருகச் செய்யும் ஆண்டவனும், உம்பரானை-வானோர்க்குயர்ந்த வுலகமாகிய சிவபுரத்தரசனுமாகிய இறைவனை நோக்கி, வம்பனேன்-நிலையான அன்பில்லாதவனாகிய யான், நான் நின் அடியேன் நீ என்னை ஆண்டாய் என்றால்-நான் நினக்கு அடியவன்; நீ என்னை ஆட்கொண்டவன் என்று கூறினால், என் தன்மை—எனது தன்மை, அடியேற்குத் தானும் சிரித்து அருளலாம் தன்மையே ஆம்—அங்ஙனம் கூறும் அடியேன் பொருட்டு அவ்விறைவன் தானும் எள்ளி நகைத்தருளலாம் தன்மையளவினதேயாகும்.

தன்னைப் பாவிப்பவர்களுக்குத் தேனும் பாலும் கரும்பின் தெளிந்த சாறும் போல் இனிமையைச் செய்பவனும் பேரொளியுருவினனும் தன்னைப் பரம்பொருள் எனத் தெளிந்த மெய்யன்பர்களது ஊனுடலை உருகச் செய்யும் ஆண்டவனும் சிவலோகத்தரசனுமாகிய இறைவனை நோக்கி வம்பனாகிய யான் 'நான் நின் அடியேன்; நீ என்னை ஆண்டாய்' என்றால் எனது தன்மை அங்ஙனம் கூறும் அடியேன்பொருட்டு அவ்விறைவன் தானும் எள்ளி நகைத்தருளலாம் தன்மையளவினதேயாகும் என்பதாம்.

கன்னலின் தெளி-கரும்பினின் றெடுக்கப்பட்ட சாற்றின் தெளிவு. தன்னைப் பாவிப்பார்க்கு இறைவன் தேனும் பாலும் கரும்பின் தெளிவும் போல இனிமையைச் செய்தலின், 'தேனைப் பாலைக் கன்னலின் தெளியை' என்றார்.

"ஞானக் கரும்பின் தெளியைப் பாகை" பொற். 15.

"தேறலைத் தெளியைத் தெளிவாய்த்ததோர், ஊறலை"
தே. நாவு. 212 : 1.

"தித்திக்குந் தேனைப் பாலைத் தீங்கரும்பி னின்சுவையைத்
தெளிந்த தேறற் குருமணியை" தே. நாவு. 243 : 1.

"பாவிப்பார் மனத்தூறுமத் தேனைக் கட்டியைக்
கரும்பின் தெளிதன்னை" தே. சு. ந். 59 : 10.

என்னும் திருவாக்குகளும் காண்க.

இறைவன் பேரொளி யுருவினனாதலின் 'ஒளியை' என்றார். தெளிந்தார் என்றது இறைவனைப் பரம்பொருள் என ஐயந்திரிபறத் தெளிந்த மெய்யன்பர்களை. ஊன் என்றது ஊனுடலை உணர்த்தியது. ஊனை உருக்கும் என்றார், இறைவனருளால் உள்ளொளியாகிய ஞானம் பெருகுந்தோறும் ஊனுடல் சுருங்குதல் பற்றி. "ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி" (பிடித்த 9) என மேல்வருதலுங் காண்க. உடையான்—ஆட்கொண்டவன். உம்பர் என்றது எல்லாவுலகங்களுக்கும் மேலாகிய சிவ புரத்தையுணர்த்தியது. வம்பனேன் – நிலையான அன்பில்லாத யான். "வம்பனேன் வினைக்கிறுதியில்லையே" (சத 93) "வம்பனேன் றன்னை யாண்டமா மணியே" (வாழாப் 2) என வருவன காண்க. வம்பு – நிலையின்மை. "வம்பு நிலையின்மை" என்பது தொல்காப்பியம் (உரி 31)

நான் நின் அடியேன் நீயென்னை ஆண்டாய் என்றால் சிரித்தேயருளாம் தன்மையென்றது, அடியனாதற்கும் ஆட்கொள்ளப்படுதற்கும் தகுதியில்லாதவனாகிய யான் 'நின் அடியேன்' என்றும் 'நீ என்னை ஆண்டாய்' என்றும் கூறினால் அது இறைவன் நகைத்தேயருளலாம் தன்மைத்து என்றவாறு. தான் என்னும் படர்க்கையொருமைப் பெயர் இறைவனை உணர்த்தியது. உம்மை, இறந்தது தழீஇய எச்சவும்மை. சிரித்தே என்பதில் ஏகாரத்தைப் பிரித்து தன்மையே யாம் எனக் கூட்டுக.

இதன்கண், என் தன்மை தானும் சிரித்து அருளலாம் தன்மையே யாம் என்றதனால் அங்ஙனம் இறைவன் சிரித்தருளுதலாகிய பேறுகிடைக்கப்பெறின் அதனால் என் உலக அநுபவங்கள் சுத்தியடையுமே என்னும் விழைவு புலப்படுதலின் அநுபோகசுத்தி யென்னும் ஆரும்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 58.

63. தன்மை பிறரால் அறியாத தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை யாண்டையா புறமே போக விடுவாயோ
என்னை நோக்கு வார்யாரே யென்னான் செய்கேன் எம்பெருமான்
பொன்னே திகழுந் திருமேனி யெந்தாய் எங்குப் புகுவேனே.

ப—ரை : தன்மை பிறரால் அறியாத தலைவா–நின் தன்மை பிறர் எவராலும் அறியமுடியாத இறைவனே, பொல்லா நாயான புன்மையேனை ஆண்டு–பொல்லாத நாய்போன்ற இழிவுடையவனாகிய என்னை ஆட்கொண்டருளி, ஐயா புறமே போக விடுவாயோ–ஐயனே என்னைப் புறத்தே செல்ல விடுவாயோ? என்னை நோக்குவார் யாரே–அங்ஙனம் விடுவாயாயின் என்னை அருட்கண்ணால் பார்த்துப் பாதுகாப்பவர் பிறர்

எவர் உளர்? எம்பெருமான் நான் என் செய்கேன்-எம்பெருமானே நான் யாது செய்ய வல்லேன்? பொன்னே திகழும் திருமேனி எந்தாய்-பொன் போல விளங்கும் திருமேனியையுடைய எந்தையே! எங்கு புகுவேன்-நின்னிடத்தன்றி வேறு எவ்விடத்து அடைக்கலம் புகுவேன்?

தன்மை பிறரால் அறியாத தலைவனே, நாய்போன்ற புன்மையை யுடையவனாகிய என்னை ஆட்கொண்டருளிப் புறத்தே செல்லவிடுவாயோ? அங்ஙனம் விடுவையாயின் என்னை நோக்குவார் பிறர் எவர் உளர்? எம்பெருமானே! நான் யாது செய்யவல்லேன்? பொன்னே திகழும் திருமேனியையுடைய எந்தையே, நின்னிடத்தன்றி வேறு எவ்விடத்து அடைக்கலம் புகுவேன் என்பதாம்.

பிறர் எவராலும் அறியமுடியாத உண்மை இயல்புகளை இறைவன் உடையனாதல்பற்றித் 'தன்மை பிறரால் அறியாத தலைவா' என்றருளினார். பிறரன்றி அவன்தானும் முழுவதும் அறியான் என்பது, "தன் பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ" (சாழல் 19) என்பதனால் விளங்கும்.

"ஞானந் தானுரு வாகிய நாயக னியல்பை
யானும் நீயுமாய் இசைத்துமென் றுலகெ தெளிதோ
மோனந் தீர்கலா முனிவருந் தேற்றிலர் முழுதுந்
தானுங் காண்கிலன் இன்னமுந் தன்பெருந் தலைமை"

சூரன் அமைச் 128

எனக் கந்தபுராணத்து வருதலும் ஈண்டு அறியற்பாலது.

பொல்லாநாய்-தீங்குமிக்க நாய். நாயான-நாய்போன்ற. "நாயான நந்தம்மை யாட்கொண்ட நாயகனை" (அம்மானை 7) என வருதலுங் காண்க. புறமே போக விடுவாயோ என்றது நின் முன்னிலையிலன்றிப் புறத்தே போக விடுவாயோ என்றவாறு. ஓகாரம்-எதிர்மறை. விடுதல் நின் தகுதிக்குப் பொருந்தாது என்பது கருத்து. என்னை நோக்குவார் யாரே என்றது என்னை நோக்குவார் நின்னையன்றிப் பிறர் இல்லை என்றபடி.

பொன்னே திகழுந் திருமேனி-பொன்னைப் போல விளங்குகின்ற திருமேனி. "பொன்னை யழித்த நன்மேனிப் புகழில் திகழும் அழகன்" (குயிற் 7) "பொன்னேர் தரு திருமேனியனே" (தே. ஞான 160 : 1) "பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்" "பொன்னொத்த மேனி" "பொன்போல் திருமேனி யுடையான் றன்னை" (தே. நாவு. 1 : 8; 81:9; 243 : 2) "பொன்னார் மேனியனே" "பொன்செய்த மேனியினீர்" (தே. சுந். 24 : 1; 25 : 1) "பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி" (பதினொரந். பொன்வண்ணத் 1) என வருவன காண்க. பொன்னே திகழுந் திருமேனி எந்தாய் என்றது ஈண்டு ஞானாசாரியனது திருமேனியை நினைவு கூர்ந்து கூறியதாகும். எங்குப் புகுவேன் என்றது

நின்பாலன்றி புகலிடம்பிறிதில்லை என்றவாறு. "போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை" (சத 62) 'பொருளே தமியேன் புகலிடமே" (நீத். 17) என அடிகள் அருளியமையுங் காண்க. ஏ-அசை.

இதன்கண், ஆண்டு புறமேபோக விடுவாயோ? என்னை நோக்குவார் யாரே? யான் என் செய்வேன்; எங்குப் புகுவேன் என்பவற்றால் நின் காட்சியை இழந்தயான் பிராரத்த வினைப்பயனை நுகரும்போது நிகழும் தீய அநுபோகங்களை நீக்கியருள வேண்டுமென்பது புலப்படுதலின் அநுபோகசுத்தி யென்னும் ஆறும்பத்து நுதலியபொருள் போந்தவாறு காண்க. 59.

64. புகுவேன் எனதே நின்பாதம் போற்று மடியா ருள்நின்று
நகுவேன் பண்டு தோள்நோக்கி நாண மில்லா நாயினேன்
நெகுமன் பில்லை நினைக்காண நீயாண் டருள அடியேனுந்
தகுவ னேயென் தன்மையே எந்தாய் அந்தோ தரியேனே.

ப—ரை: நாணம் இல்லா நாயினேன்-என் தகுதியின்மையை நோக்கி நாணுதல் இல்லாத நாய்போன்ற கீழ்மையையுடையேன், பண்டு போற்றும் அடியார் உள் நின்று-எனக்குக் காட்சி கொடுத்த முன்னாளில் நின்னைத்துதிக்கும் மெய்யடியார் கூட்டத்துள் நடுவே நின்று, தோள் நோக்கி நகுவேன்-திருவெண்ணீறணிந்த நின் திருத்தோள்களைத் தரிசித்து மகிழ்ச்சியால் சிரிப்பேனாயினேன்; நின்னைக் காண நெகும் அன்பு இல்லை-நின்னை இடையீடின்றித் தரிசித்துக் கொண்டிருப்பதற்குரிய மனம் நெகிழும் மெய்யன்பு என்னிடத்து இல்லை. நீ ஆண்டு அருள அடியேனும் தகுவனே-அதனால் நீ ஆட்கொண்டு திருவருள் புரிதற்கு அடியேனும் தகுதியுடையனாவேனோ? என் தன்மையே — என் தன்மை இதுவே, எந்தாய் - என் தந்தையே, அந்தோ தரியேன்-ஐயகோ இவ்வுலக வாழ்வைப் பொறுத்திருக்க மாட்டேன்; நின் பாதம் எனதே புகுவேன்-நின்னால் யான் ஆட்கொள்ளப்பட்டமையால் நினது திருவடி எனக்குரியதே; ஆதலால் எங்ஙனமாயினும் அதனை அடைவேன்.

நாணமில்லா நாயினேன் எனக்குக் காட்சிகொடுத்த முன்னாளில் நின்னைப் போற்றும் மெய்யடியார் கூட்டத்துள் நடுவே நின்று திருவெண்ணீறணிந்த நின் திருத்தோள்களைத் தரிசித்து மகிழ்ச்சியால் நகுவேனாயினேன்; நின்னை இடையீடின்றித் தரிசித்துக் கொண்டிருப்பதற்குரிய மனம் நெகிழும் மெய்யன்பு என்னிடத்து இல்லை; அதனால் நீ ஆட்கொண்டு அருளுதற்கு அடியேனும் தகுதியுடையனாவேனோ? என் தன்மை இதுவே எந்தாய் அந்தோ இவ்வுலகவாழ்வைத் தரித்திருக்கமாட்டேன். நின்னால் யான் ஆட்கொள்ளப்பட்டமையால் நின் திருப்பாதம் எனக்குரியதே; ஆதலால் எங்ஙனமாயினும் அதனை அடைவேன் என்பதாம்.

புகுவேன் எனதே நின்பாதம் என்றது யான் தகுதியில்லாதவனுயி னும் நின்னுல் ஆட்கொள்ளப்பட்டமையால் நின் திருவடி எனக்குரியதா கும்; ஆதலால் அத்திருவடியை அடைவேன் என்றவாறு. போற்றும் அடி யார் உள்நின்று என்றது இறைவன் ஞானசாரியனுக எழுந்தருளிவந்து அடிகளுக்கு உபதேசம் செய்த காலத்து அவ்விறைவனைச் சூழ்ந்து நின்று துதிக்கும் மெய்யடியார் கூட்டத்துள் நடுவில் நின்று என்றவாறு. பண்டு என்றது இறைவன் அடிகளுக்கு உபதேசஞ் செய்த நாளைக் குறித்தது. அதனைப் பண்டு எனலாமோவெனின், இறைவனைப் பிரிந்த அடிகளுக்கு அப்பிரிவினுலுளதாகிய வருத்த மிகுதியால் கழிந்த நாட்கள் பன்னெடுங் காலம் போலத் தோன்றலின் அங்ஙனம் கூறினுர் என்க. தோள்நோக்கி நகுவேன் என்றது நின் திருத்தோள்களை நோக்கி மகிழ்ந்து சிரிப்பேனுயி னேன் அம்மகிழ்ச்சி நின்பிரிவால் இப்போது இலதாயிற்று என்றவாறு. என்தோளின் பூரிப்பை நோக்கி இறுமாந்து களிப்பேனுயினேன் என்பாரு முளர்.

நாணமில்லாமை-இறைவனை இடையீடின்றித் தரிசித்துக் கொண்டி ருத்தற்குரிய மனநெகிழும் மெய்யன்பில்லாமையை எண்ணி நாணமடை யாமை. நாணம் இல்லாத பிறப்புக்களுள் நாய் சிறந்தமைபற்றி 'நாண மில்லா நாயினேன்' என்றுர். நெகும் அன்பு-நெகுதற்குக் காரணமாகிய மெய்யன்பு. "அன்பால் நீ அகநெகவே புகுந்தருளி" (ஏசறவு 7) என வருதலும் காண்க. அடியேனும் என்பதில் உம்மை இழிவு சிறப்பு. தகு வனே என்பதில் ஏ-வினு. என் தன்மையே என்பதில் ஏ, தேற்றப் பொருளில் வந்தது. அந்தோ-இரக்கப் பொருள் குறிக்கும் திசைச் சொல். தரியேன்-இவ்வுலக வாழ்க்கையைப் பொறேன். "தரிக்கிலேன் காய வாழ்க்கை" (சத 61) என அடிகள் கூறுதலும் காண்க. "போந்த வுடல் தன்னுடனே உயிர்வாழத் தரியேன்" எனப் பெரியபுராணத்து (திருநாவு 150) வருதலும் காண்க.

இதன்கண், அந்தோ தரியேன் என்றதனுல் இவ்வுலகில் வாழுவ தால் எனக்குளதாகும் அநுபோகங்கள் எனக்குத் தீமை பயப்பனவாகும். ஆதலால் அவற்றை நீக்கியருளவேண்டும் என்பது பெறப்படுதலின் அநு போகசுத்தி என்னும் ஆறும்பத்து நுதலியபொருள் போந்தவாறு காண்க. 60.

---

## 7. காருணியத்திரங்கல்

காருணியத்திரங்கல் என்பது இறைவனது திருவருளின் பொருட்டு இரங்குதல் என்னும் பொருளுடையது. காருணியம்–திருவருள். காருணியத்துக்கு இரங்கல் எனக் குவ்வுருபு விரிக்க.

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

65. தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள் விடலையே போற்றி ஒப்பில்
ஒருத்தனே போற்றி உம்பர் தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி எங்கள் நின்மலா போற்றி போற்றி.

ப—ரை: காய வாழ்க்கை தரிக்கிலேன் - உடம்போடு இவ்வுலகில் வாழும் வாழ்க்கையைப் பொறுக்குமாற்றலுடையேனல்லேன்; சங்கரா போற்றி - சுகத்தைச் செய்பவனே பாதுகாத்தருள்க. வான விருத்தனே போற்றி–சிதாகாயத்தில் விளங்கும் முதியோனே காத்தருள்க; எங்கள் விடலையே போற்றி - எங்கள் பெருமையிற் சிறந்தோனே பாதுகாத்தருள்க. ஒப்பு இல் ஒருத்தனே போற்றி-ஒப்பற்ற ஒருவனே பாதுகாத்தருள்க; உம்பர் தம்பிரான் போற்றி-வானவர்க்குத் தலைவனே பாதுகாத்தருள்க; தில்லை நிருத்தனே போற்றி-தில்லைச் சிற்றம்பலத்தின்கண் திருக்கூத்து இயற்றுபவனே பாதுகாத்தருள்க; எங்கள் நின்மலா போற்றி போற்றி-பாசபந்தமுடைய எங்களுக்கு அதனை நீக்கியருளும் இயல்பாகவே பாச பந்தங்களினீங்கியவனே பாதுகாத்தருள்க பாதுகாத்தருள்க.

உடம்போடு வாழும் வாழ்க்கையைப் பொறுக்குமாற்றலுடையேனல்லேன்; ஆதலால் சங்கரா, வானவிருத்தனே, எங்கள் விடலையே, ஒப்பில் ஒருத்தனே, உம்பர் தம்பிரானே, தில்லைநிருத்தனே, எங்கள் நின்மலா பாதுகாத்தருள்க பாதுகாத்தருள்க என்பதாம்.

காய வாழ்க்கை-காயத்தோடு கூடி வாழும் வாழ்க்கை. காயம் - உடல். பிராரத்த வினையுடைமையால் உடலோடு கூடிவாழும் வாழ்க்கை உளதாக அதனால் இறைவனது திருவுருவக்காட்சியைப் பிரியநேர்ந்தமையால் உளதாகும் துன்பமிகுதி பற்றித் 'தரிக்கிலேன் காய வாழ்க்கை' என்றார். "தினைத்துணையேனும் பொறேன் துயராக்கையின் திண்வலையே" (நீத் 39) என அடிகள் பிறண்டு அருளியமையுங் காண்க.

சங்கரன்=சம்+கரன். பேரின்பமாகிய சுகத்தைச் செய்பவன் என்பது பொருள். போற்றி என்பது வணக்கம் என்னும் பொருள்தருவதாயினும் ஈண்டு பாதுகாத்தருள்க என்னும் பொருளில் வந்தது. "போற்றினரியவை போற்றல்" (குறள் 693) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. வானம் என்றது சிதாகாயத்தை. இறைவன் காலதத்துவத்தைக் கடந்தோனாகலின் 'விருத்தனே' என்றார்.

"நிருத்த னவன் நீதி யவன் நித்த னெறியாய
விருத்த னவன்" ஞான 167 : 5.

"விருத்தன்காண் விண்ணவர்க்கு மேலானன் காண்" நாவு 299 : 2.

"வெண்காடு மேய, விருத்தனைய வேதன் றன்னை" சுந் 6 : 10.

எனத் தேவாரத்தும் வருவன காண்க. விடலை-தலைவன்; பெருமையிற் சிறந்தோன்.

"திண்ணியோனுந் தலைவனும் பாலை
யிறைவனுங் காமத்துறைவனும் விடலை" 10:1039.

எனப் பிங்கலந்தையில் வருதலுங் காண்க. இறைவன் பெருமையிற் சிறந்தோனாகலின் விடலையே என்றார்.

"மந்தர வரிசிலை யதனிடை யரவரி வாளியால்
வெந்தழி தர வெய்த விடலையர்" தே. ஞான 344 : 5.

"விடலையானை விரைகமழ் தேன் கொன்றைப்
படலையானை" தே. நாவு 208 : 4.

என வருவனவுங் காண்க.

ஒருத்தன் என்பதே ஒப்பற்றவன் எனப் பொருள்படவும் ஒப்பில் ஒருத்தனே என்றது இறைவன் ஒப்பும் உயர்வும் அற்ற தனிமுதல்வன் என்பதைப் புலப்படுத்தற் பொருட்டென்க. "ஒப்பிலா வொருவன் றன்னை" "மற்றாரும் தன்னொப்பாரில்லாதான் காண்" நாவு 238–10 எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

உம்பர் தம்பிரான்-தேவர் தலைவன். "உம்பரார் தம் பராபரா" (சத 97) என இத்திருவாசகத்தும், "உம்பர் பெருமான்", "தேவர் பிரான்", "விண்ணோர்கட்குத் தேவர்" (ஞான 33:6; 318 : 10; 267 : 7; உம்பர் தம்பிரான் நாவு 180 : 6) எனத் தேவாரத்தும் "உறுதுணை நந்தியை உம்பர்பிரானை" எனத் திருமந்திரத்தும் (2630) வருவன காண்க. உம்பர்-வானவர். "சூளாமணி யும்பர்க் காயவன்" என்னும் திருக்கோவையாரினும் (47) இப்பொருட்டாதல் காண்க

தில்லை நிருத்தன-தில்லைச்சிற்றம்பலத்து இடைவிடாது நிருத்தஞ் செய்பவன்; "நிருத்தம் பயின்றவன் சிற்றம்பலத்து" எனத் திருக்கோவையாரில் (62) அடிகள் அருளியமையுங் காண்க. நிருத்தம் - கூத்து. உம்பர் தம்பிரானாயினும் அவர்க்கரியனாய் எம்மனோர்க் கெளியனாய் தில்லைச்சிற்றம்பலத்துத் திருக்கூத்து இயற்றும் பேரருளாளன் என்பது தோன்றத் தில்லை நிருத்தனே என்றார். "வீண்ணிறந்தார் நிலம்விண்டார் என்று மிக்காரிருவர், கண்ணிறந்தார் தில்லையம்பலத்தார்" (107) எனத் திருக்கோவையாரில் அடிகள் அருளியமை ஈண்டு சிந்திக்கற்பாலது.

நின்மலன்-அநாதியே மலங்களினின்று நீங்கியவன். எங்கள் நின்மலா என்றது மலபந்தமுடைய எங்களுக்கு அதனை நீக்கியருளும் மலமற்றவனே என்றவாறு.

இதன்கண், சங்கரா வானவிருத்தனே விடலையே ஒப்பில் ஒருத்தனே உம்பர் தம்பிரான் தில்லை நிருத்தனே எங்கள் நின்மலா என விளித்து, போற்றி என்பவற்றால் 'காத்தருள்க' என இரங்கி வேண்டுதலின் காருணியத்திரங்கல் என்னும் ஏழாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 61.

66. போற்றியோ நமச்சி வாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சி வாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய சயசய போற்றி போற்றி.

ப—ரை: ஓம் நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன் போற்றி-ஓம் நமச்சிவாய என்னும் மந்திரப்பொருளாயுள்ளவனே பாம்பை அணிந்தவனே பிராரத்த வினையால் அடியேன் அறிவு மயங்கப் பெறுகின்றேன் காத்தருள்க; ஓம் நமச்சிவாய புகலிடம் பிறிது ஒன்று இல்லை போற்றி-ஓம் நமச்சிவாய என்னும் மந்திரப்பொருளாயுள்ளவனே, நான் அடைக்கலமாக அடையத் தகுந்தவிடம் நின்னையொழியப் பிறிதொன்றில்லை; ஆதலாற் காத்தருள்க; ஓம் நமச்சிவாய புறம் எனை போக்கல் போற்றி-ஓம் நமச்சிவாய என்னும் மந்திரப் பொருளாயுள்ளவனே நின் காட்சியைப் பிரிந்த என்னைப் புறத்தே போக்காது காத்தருள்க. ஓம் நமச்சிவாய போற்றி-ஓம் நமச்சிவாய என்னும் மந்திரப் பொருளாயுள்ளவனே காத்தருள்க; சய சய-நின்புகழ் வெல்க வெல்க. போற்றி போற்றி-காத்தருள்க காத்தருள்க.

ஓம் நமச்சிவாய, புயங்கனே பிராரத்த வினையால் அறிவு மயங்குகின்றேன்; காத்தருள்க; ஓம் நமச்சிவாய நான் அடைக்கலமாக அடையத் தகுந்த நின்னையொழியப் பிறிதொன்றில்லை; ஆதலாற் காத்தருள்க; ஓம் நமச்சிவாய என்னைப் புறத்தே போகவிடாதே; காத்தருள்க; ஓம் நமச்சிவாய காத்தருள்க; நின்புகழ் வெல்க வெல்க; காத்தருள்க காத்தருள்க என்பதாம்.

போற்றி என்பன காத்தருள்க என்னும் பொருளன. ஓம் நமச்சிவாய என்பது இறைவனுக்குரிய தூல பஞ்சாக்கர மந்திரமாகும். நமச்சிவாய என்பது இறைவனது அருட்டிருமேனியின் அங்கங்களாக அமைந்திருக்கும் முறையினை,

"ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடுந் திருவடியி லேநகரம்—கூடு
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகரு முகம் வாமுடியப் பார்.

என்னும் உண்மைவிளக்கத்தானுமறிக. திருவடியிலே நகாரமும், திருவுந்தியிலே மகாரமும், திருத்தோளிலே சிகாரமும், திருமுகத்திலே வகாரமும் திருமுடியிலே யகாரமுமாக இந்த முறைமையிலே நமச்சிவாய என்ற பஞ்சாக்கரமே திருமேனியாக அமைந்தமையை இதனால் அறியலாம். இம்மந்திரம் தூலமாதல் பற்றியும் போகத்தை விரும்பும் உயிர்களால் செபிக்கப்படுதல் பற்றியும் தீக்கைப் பேறுடையார் அஃதில்லார் ஆகிய யாவர் மூன்னும் சொல்லத்தக்கதாதல் பற்றியும் அடிகள் "நமச்சிவாய வாழ்க" (சிவபுராணம்) என்பது முதலாகப் பலவிடங்களிலும் கூறியுள்ளார். சைவ சமயாசாரியர்களுள் ஒருவராகிய இவ்வாளுடைய அடிகளைப் போலவே ஆளுடைய பிள்ளையார் ஆளுடைய அரசர் ஆளுடைய நம்பியார் ஆகிய மற்றை சமயாசாரியர் மூவரும் தாமருளிச் செய்த தமிழ் மறைகளில் நமச்சிவாய என்னும் தூலபஞ்சாக்கரத்தையே அமைத்துத் திருப்பதிகஞ் செய்தருளுவாராயினர்.

"நாத நாம நமச்சிவாயவே" 307 : 1.

என ஆளுடையபிள்ளையாரும்,

"நற்றுணை யாவது நமச்சிவாயவே" (11 : 1)

என ஆளுடைய அரசரும்,

"சொல்லுநா நமச்சிவாயவே 48 : 1.

என ஆளுடைய நம்பியும் அருளிச் செய்தமை காண்க. ஆனால் அவர்கள் அம்மந்திரத்தினைச் சிகாராதியாகவே செபித்து வந்தனர் என்பது அவர்கள் வரலாற்றிடையே அறியத்தக்கதாகவுள்ளது. அடிகள் 'நமச்சிவாய' என நகாரமுதலாகக் கூறினும் ஞானசாரியனாகிய இறைவனிடத்து சிகாராதியாகவே உபதேசம் பெற்றனர் என்பது, "நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்" (ஏசறவு 10) என அருளிச் செய்தமையான் அறியப்படும். சிகாராதியாகிய சூக்கும பஞ்சாக்கரமே பேரின்ப வாழ்வில்எய்தி வாழ்வதற்கு உச்சரிக்கத்தக்கது என்பது.

"ஆதிமல மிரண்டும் ஆதியாய் ஓதினால்
சேதியா மும்மலமுந் தீர்வாகா—போதம்
மதிப்பரிதாம் இன்பத்தே வாழலாம் மாறி
விதிப்படியோ தஞ்செழுத்து மே" உண்மை விளக் 43.

என்பதனால் அறியலாம்.

சூக்கும பஞ்சாக்கரம் இறைவனது சூக்குமமாகிய திருமேனியில் நான்கு திருக்கரங்களையும் முயலகனை மிதித்த திருப்பாதத்தையும் உணர்த்துவதாக அமைந்துள்ளது. இதனை,

"சேர்க்கும் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கிலிறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான்". (33)

என்னும் உண்மைவிளக்கத்தானுமறிக.

THE NATIONAL HIGH SCHOOL
No............
TRIPLICANE, MADRAS.

புயங்கன்-பாய்பை அணிந்தவன். "புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே" "திருப்புயங்கன் அருளார் பெறுவார்" (யாத்திரைப் 3, 10) என அடிகள் மேலும் கூறுதல் காண்க. மயங்குகின்றேன் என்பது நினது அருளுருவக்காட்சியை இழந்து, பிராரத்த வினையோடு கூடிய உடலோடு வாழ்தலின் அவ்வினையின் அனுபவத்தால் மயக்கமடைகின்றேன் என்றவாறு. மயக்கம்-திரிபுணர்ச்சி. புகலிடம்-தஞ்சம். அம்மயக்கினை நீக்குதற்குத் தஞ்சமான இடம் நீயன்றிப் பிறிதில்லையென்பார், 'புகலிடம் பிறிதொன்றில்லை' என்றார். இறைவனே புகலிடம் என்பது "பொருளே தமியேன் புகலிடமே" (நீத் 17) எனவும், "எமக்குப் புகலாம் விருப்பர்க்கு" (திருக்கோவை 143) எனவும் அடிகள் அருளியமையானறிக.

புறமெனைப் போக்கல் என்றது நின்சார்பினின்றும் பிரித்து மலச்சார்பிலே செல்லுமாறு என்னைப் போக்காதொழிக வென்றவாறு. போக்கல் என்னும் முன்னிலை எதிர்மறை ஒருமை வினைமுற்று போக்காது என வினையெச்சப் பொருட்டாய் 'போற்றி' என்பதனோடு முடிந்தது. கண்டாய்-முன்னிலை அசை. இறுதியிலுள்ள போற்றி போற்றி என்பதற்கு வணக்கம் வணக்கம் எனப் பொருளுரைக்கினும் இழுக்காகாது.

இதன்கண், மயங்குகின்றேன் புகலிடம் பிறிதொன்றில்லை, புறமெனைப் போக்கல்கண்டாய் என்பவற்றால் எனக்கருள் செய்ய வேண்டுமென்பது புலப்படுதலின் காருணியத்திரங்கல் என்னும் ஏழாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 62.

67. போற்றியென் போலும் பொய்யர் தம்மையாட் கொள்ளும் வள்ளல்

போற்றிநின் பாதம் போற்றி நாதனே போற்றி போற்றி
போற்றிநின் கருணை வெள்ளப் புதுமதுப் புவனம் நீர்தீக்
காற்றிய மானன் வானம் இருசுடர்க் கடவு ளானே.

ப—ரை: என் போலும் பொய்யர் தம்மை ஆட்கொள்ளும் வள்ளல் போற்றி-என்னைப் போன்ற மெய்யடியார் போல் நடிக்கும் பொய்யர்களையும் அடிமைகொண்டருளும் வள்ளலே காத்தருள்க; நின்பாதம் போற்றி போற்றி - நின் திருவடிக்கு வணக்கம் வணக்கம்; நாதனே போற்றி போற்றி-தலைவனே காத்தருள்க காத்தருள்க; புவனம் நீர் தி காற்று வானம் இருசுடர் இயமானன் கடவுளானே-நிலம் நீர் நெருப்பு காற்று விசும்பு ஞாயிறு திங்கள் உயிர் என்னும் எண்வகைப் பொருள்களையும் அட்டமூர்த்தங்களாகக் கொண்டு அவற்றுள் மூர்த்திமானாக விளங்கும் கடவுளே, நின் கருணை வெள்ளம் புது மது போற்றி-நினது அருட்பெருக்காகிய புதியதேன் என்னைக் காத்தருள்க.

என்போலும் பொய்யர்தம்மை அடிமை கொண்டருளும் வள்ளலே காத்தருள்க; நின் திருவடிக்கு வணக்கம் வணக்கம்; நாதனே காத்தருள்க காத்தருள்க; புவனம் நீர் தீ காற்று வானம் ஞாயிறு திங்கள் உயிர்

என்னும் எண்வகைப் பொருள்களையும் அட்டமூர்த்தங்களாகக் கொண்டு அவற்றுள் மூர்த்திமானாக விளங்கும் கடவுளே நின் அருட்பெருக்காகிய புதியதேன் என்னைக் காத்தருள்க என்பதாம்.

என்போலும் பொய்யர் என்றது மெய்யன்பின்றி என்னைப் போன்று மெய்யர்போல் நடிக்கின்ற பொய்யர்களை. "நாடகத்தா லுன்னடியார் போல் நடித்து" (சதகம் 11) என அடிகள் அருளியமையுங் காண்க. அத்தகைய பொய்யரையும் இறைவன் ஆட்கொள்ளுதலின் 'பொய்யர் தம்மை யாட்கொள்ளும் வள்ளல்' என்றார். "பொய்யவனேனைப் பொருளென வாண்டொன்று பொத்திக் கொண்ட, மெய்யவனே" (நீத் 7) எனவும், "வான்பழித்திம் மண்புகுந்து மனிதரை யாட்கொண்ட வள்ளல்" (குயிற் 4) எனவும் வருவன காண்க. தகுதியுடையார் தகுதி இல்லார் என்னும் வேறுபாடு கருதாது தகுதியில்லாரையும் ஆட்கொண்டு வரையாது வழங்குதலின் வள்ளல் என்றார். வள்ளல் அண்மைவிளி. போற்றி நின்பாதம் போற்றி என்பதில் போற்றி என்பது வணக்கம் என்ற பொருளிலும், நாதனே போற்றி என்பதிற் காத்தருள்க என வேண்டிக் கோடற் பொருளிலும் வந்தன.

புவனம் நீர் தீ காற்று இயமானன் வானம் செஞ்சுடர் வெண்சுடர் என்னும் இவையன்றி உலகத்துப் பொருள்கள் பிற இன்மையின் இவ்வெட்டுப் பகுப்பையும் எட்டு முகூர்த்தங்களாகக் கொண்டு தான் அவற்றில் மூர்த்திமானாக விளங்குபவன் என்பதும், அங்ஙனம் விளங்கினும் அவற்றிற்கு அப்பாற்பட்டும் உளன் என்பதும் "புவனம் நீர் தீக், காற்றியமானன் வானம் இருசுடர் கடவுளானே" என்பதால் இனிது விளங்கும். இறைவனுக்கும் அட்டமுகூர்த்தமுண்மை, 'நிலம் நீர் நெருப்புயிர் நீள் விசும்பு நிலாப் பகலோன், புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்" (தோணோ 5) "அட்டமூர்த்தி யழகன்" (சென்னிப் 2) "அட்ட மூர்த்தி யழல் போலுருவன்" (தே. ஞான 253 : 8) "அட்டமா வுருவினானே யாவடு துறையுளானே" (தே. நாவு 57 : 3) "அட்ட மூர்த்தியை மட்டவிழ் சோலை யாரூரானை" (தே. சுந் 59 : 2) என வரூஉம் திருவாக்குக்களானும் அறிக. இயமானன்—உயிர். "இயமானனாம்விமலா" சிவபுராணம் 36. கடவுள் என்றது கடத்தல் என்னும் பொருளுடைத்தாய் உலகப்பொருள்கள் எல்லாவற்றையுங் கடந்து எங்கும் நிறைந்துள்ள இறைவனை ஆகுபெயராய் உணர்த்தியது.

இறைவனது கருணை வெள்ளம்போன்றமையின் 'கருணைவெள்ளம்" என்றார்.

"தன் கருணை வெள்ளத் தழுத்தி" அம் 5.

"வான் கருணை வெள்ளப் பிரான்" கோத் 16.

"தன் கருணை வெள்ளத்து மன்னூற" பொன்னூசல் 3.

என அடிகள் பிறண்டும் அருளியவாறுங் காண்க.

கருணையைப் புதுமது என்றார், உலகத்துத் தேன் போலாது புதிது புதிதாக இனிமை தந்துகொண்டிருக்கும் தேனாதல் பற்றி. தெவிட்டாததேன் என்றவாறு. "புணர்ந்தாற் புணருந்தொறும் பெரும்போகம் பின்னும் புதிதாய்" (9) எனத் திருக்கோவையாரில் வருதலும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. மது-தேன். கருணையைத் தேன் என்றல், "கருணை வான்றேன் கலக்க" (அண்டப் 180) என்புழியுங் காண்க.

இதன்கண், பொய்யர்தம்மை ஆட்கொள்ளும் வள்ளல், 'நாதனே போற்றி' 'நின்கருணை வெள்ளப்புதுமது போற்றி' 'என்பவற்றால் இறைவன் பேரருளை வேண்டிக்கோடல் புலப்படுதலின் காருணியத் திரங்கல் என்னும் ஏழாம்பத்து நுதலியபொருள் போதருதல் காண்க. 63.

68. கடவுளே போற்றி யென்னைக் கண்டுகொண் டருளு போற்றி
விடவுளே யுருக்கி யென்னை ஆண்டிட வேண்டும் போற்றி
உடலிது களைந்திட் டொல்லை உம்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த சங்கரா போற்றி போற்றி.

ப—ரை: கடவுளே போற்றி – உலகப்பொருள்கள் எல்லாவற்றையுங் கடந்து நிற்கும் இறைவனே நினக்கு வணக்கம். என்னைக் கண்டுகொண்டு அருளுபோற்றி - அடியேனை இடர்க்கடற் புகாவண்ணம் திருவருணோக்கஞ் செய்து அருளுவாயாக நினக்கு வணக்கம். விட உள் உருக்கு என்னை ஆண்டிட வேண்டும் போற்றி - இருவகைப் பற்றுக்களையும் யான் விடுதற்கு அன்பால் என் உள்ளத்தை உருகச் செய்து ஆளாக நின்பால் வைத்துக்கொள்ளவேண்டும் நினக்கு வணக்கம். உடல் இது களைந்திட்டு ஒல்லை உம்பர் தந்தருளு போற்றி – வினைவயத்தாற் கிடைத்த தூலதேகமாகிய இந்த உடம்பினை நீக்கி விரைவாக மேலாகிய வீட்டின்பத்தைத் தந்தருள்வாயாக; நினக்கு வணக்கம். சடையுளே கங்கை வைத்த சங்கரா போற்றி - பெருக்கெடுத்து வந்த கங்கையால் உலகிற்குத் தீங்குண்டாகாதவாறு திருச்சடையினுள்ளே அக்கங்கையை வைத்தருளிய சங்கரனே நினக்கு வணக்கம்.

கடவுளே நினக்கு வணக்கம். அடியேனை திருவருணோக்கம் நல்கி அருளுவாயாக நினக்கு வணக்கம். உலகப் பற்று விடுதற்கு என் உள்ளத்தை அன்பால் உருகச் செய்து என்னை ஆட்கொள்ள வேண்டும்; நினக்கு வணக்கம். தூலதேகமாகிய இவ்வுடம்பினை நீக்கி விரைவாக மேலாகிய வீட்டின்பத்தைத் தந்தருளுக; நினக்கு வணக்கம். சடையின்கண்ணே கங்கையை வைத்தருளிய சங்கரனே நினக்கு வணக்கம்என்பதாம்.

கடவுள் எல்லாவற்றையும் கடந்தவர். பதிஞானத்தானன்றிப் பசு பாச ஞானங்களால் அறியப்படாதவர். போற்றி-எல்லாம் வணக்கப் பொருளன. கண்டுகொண்டு அருளு - துயர்புகா வண்ணம் திருவருள் நோக்கஞ் செய்து அருளுவாயாக. "யான் துயர்புகா வண்ணம் அருள் செய்து" (அற் 2) என வருதலும் காண்க. விட என்னும் எச்சத்திற்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. உள்-உள்ளம்.

ஆண்டிட வேண்டும் என்பது முன்னர் ஆட்கொள்ளப்பட்ட தம்மை மீட்டும் ஆட்கொள்ளவேண்டும் என வேண்டிக்கொண்டதாகாது ஆட்கொண்ட தம்மைப் புறத்தே பிரியவொட்டாது 'ஆளாக நின்பால் வைத்துக்கொள்ள வேண்டும்' என்னும் பொருளில் வந்தது. "புறமெனைப் போக்கல் கண்டாய்" (சத 62) என அடிகள் அருளியமை ஈண்டு அறியற்பாலது.

உம்பர்தந்தருளுதற்கு எடுத்த இவ்வுடல் தடையாக விருத்தலின் இவ்வுடம்பினை நீக்கி விரைவாக மேலாகிய வீட்டின்பத்தைத் தந்தருள வேண்டும் என்பார், 'உடலிது களைந்திட் டொல்லை யும்பர் தந்தருளு' என்றார். "பிறப்பறுக்க லுற்றார்க் குடம்பும் மிகை" (குறள் 346) என்றார் திருவள்ளுவரும். "உடலைச் சிதையாத தெத்துக்கு" (குழைத் 2) "செடிசேருடலைச் செலநீக்கிச் சிவலோகத்தே நமை வைப்பன்" (யாத். 4) எனவும் அடிகள் அருளியமையும் ஈண்டறியற்பாலன.

கங்கை வைத்த - பொங்கும் புனற் கங்கையை வைத்த. "பொங்கும் புனற் கங்கை தாங்கி" (திருக்கோவை 75) என வருதலுங் காண்க. சடையுளே கங்கை வைத்தமை உலகத்தைக் காத்தற்பொருட்டாதலினாலும், சங்கரா என விளித்தமை சுகத்தைச் செய்பவனே என்பதாதலாலும் அடிகள் முன்னர் வேண்டிய வேண்டுகோளுக்கு இயைந்த கருத்துடை அடைகொளியணியாய் அமைந்தன.

இதன்கண், என்னைக் கண்டுகொண்டருளும்; என்னை ஆண்டிடவேண்டும்; உடலிது களைந்திட் டொல்லை யும்பர் தந்தருளு' என இறைவன் கருணையை வேண்டி இரங்குதலினால் காருணியத்திரங்கல் என்னும் ஏழாம் பத்து நுதலியபொருள் போதருதல் காண்க. 64.

69. சங்கரா போற்றி மற்றோர் சரணிலேன் போற்றி கோலப்
பொங்கரா வல்குற் செவ்வாய் வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி மால்விடை யூர்தி போற்றி
இங்கிவ்வாழ் வாற்ற கில்லேன் எம்பிரான் இழித்திட் டேனே.

ப—ரை : சங்கரா போற்றி - சுகத்தைச் செய்பவனே நினக்கு வணக்கம்; மற்று ஓர் சரண் இலேன் போற்றி - பிறிதொரு புகலிடம் இல்லேன்; ஆதலாற் காத்தருள்க; பொங்கு அரா அல்குல் - சீற்றங் கொண்ட பாம்பின் படம்போன்ற அல்குலினையும், செவ்வாய் - செய்ய வாயினையும், வெள் நகை - வெள்ளிய நகையினையும், கரிய வாள் கண் - கரிய வாள் போன்ற கண்ணினையுமுடைய, கோல மங்கை ஓர் பங்க போற்றி - அழகிய உமையம்மையை ஒரு கூற்றிலுடையவனே நினக்கு வணக்கம். மால் விடை ஊர்தி போற்றி - பெரிய விடையை வாகனமாகக் கொண்டவனே நினக்கு வணக்கம். எம்பிரான் - எங்கள் தலைவனே, இங்கு இவ்வாழ்வு ஆற்ற கில்லேன் இழித்திட்டேன் - இவ்வுலகத்தில் இவ்வுடலோடு கூடி

வாழும் வாழ்க்கையைப் பொறுக்க மாட்டுகிலேன்; அதனை வெறுத்து விட்டேன்.

சங்கரா நினக்கு வணக்கம்; பிறிதொரு புகலிடம் இல்லேன் ஆதலாற் காத்தருள்க. மங்கையை இடப்பாகத்திற் கொண்டவனே நினக்கு வணக்கம்; பெரிய விடையை ஊர்தியாகக் கொண்டவனே நினக்கு வணக்கம்; எங்கள் தலைவனே இவ்வுலகத்தில் இவ்வுடலோடு கூடி வாழும் வாழ்க்கையைப் பொறுக்கமாட்டேன்; இதனை வெறுத்து விட்டேன்; ஆதலால் இவ்வுடலை நீக்கி உம்பர் தந்தருளவேண்டும் என்பதாம்.

சரண் - புகலிடம். நின்னையொழிய வேறு புகலிடம் இல்லேன் என்பார் 'மற்றோர் சரணிலேன்' என்றார். "போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை" (சத 62) என அடிகள் அருளியமையுங் காண்க. கோல மங்கை என இயையும். 'கோலமா மங்கை தன்னைக் கொண்டொரு கோல மாய, சீலமே' (நாவு 57 : 8) எனத் தேவாரத்தும் வருதல் காண்க. இனி 'கோல' என்னும் அடையை அல்குல் வாய் நகை கண் என்பவற்றோடு கூட்டினுமமையும். பொங்குதல் - வெகுளல். வெகுண்ட காலையே பாம்பு படமெடுத்தலின், 'பொங்கரா' என்றார். அரா ஆகுபெயராய் நின்று படத்தையுணர்த்தியது. அரவின் படம் போன்ற அல்குல் என்க. 'பைந்நாப்பட அரவேரல்குல் உமை" (உயிருண்ணி 1) என வருதலுங் காண்க. "அரவுக்கிளர்ந்தன்ன...அல்குல்" (நற் 336 : 1-3) என்றார் பிறரும். கரியகண், வாட்கண் எனத் தனித்தனி இயைக்க. கருமை கண்ணிற்கு இலக்கணமாதல், "ஈசற் கியான் வைத்த வன்பி னகன்றவன் வாங்கிய வென்பாசத்திற் காரென்று... பெருநீளம் பெருங் கண்களே" (109) என திருக்கோவையாரினும் வருதல் காண்க. வாட்கண் - வாள்போலும் கண். திருக்கோவை 48 பேர். மங்கை என்றது உமையம்மையை. ஓர் பங்க என்றது இடப்பங்கை. "மாதிடங் கொண் டம்பலத்து நின்றோர்" (திருக்கோவை 138) என அருளியமையுங் காண்க.

மால்விடை - பெரியவிடை, "வெள்ளிமலை யன்ன மால்விடையோன்" (திருக்கோவை 128) என்புழி மால்விடை என்பதற்குப் பெரிய விடை எனப் பேராசிரியர் பொருளுரைத்தமையுங் காண்க.

"கயிலை நடந்தனைய உயர்நிலை நோன்றாட்
பிறைசெறிந் தன்ன இருகோட் டொருதிமிற்
பால்நிறச் செங்கண் மால்விடைப் பாக" திருவிடைமரு 16 : 4-6.

எனப் பதினொராந் திருமுறையினும் வருதல் காண்க. இனி இறைவன் தடமதில்க ளவை மூன்றுந் தழலெரித்த அந்நாளில் திருமால் இடபமதாய்த் தாங்கினானாதலின் மால்விடை என்பதற்குத் திருமாலாகிய விடை எனினுமமையும். ஊர்தி - ஏறப்படுவது, வாகனம். "ஊர்தி வால்வெள்

ளேறே'' புற கடவுள் 3. மங்கையோர் பங்கனுகிய இறைவன் மால் விடையை ஊர்தியாகக் கொண்டமையின் மங்கையோர் பங்க; மால்விடையூர்தி என்றூர். ''செங்கண்மால் விடையார் செழும்பொன் மலைவல்லி பங்கினனுர்'' என்றூர் பெரியபுராணத்தும். (உருத்திரபதி 3.)

இங்கு-இவ்வுலகத்து. இவ்வாழ்வு - உடலோடு கூடிவாழும் இழிந்த வாழ்வு. ஆற்ற கில்லேன் - பொறுக்க மாட்டுகிலேன், ''ஒன்றூ மிவட்கு மொழிதல் கில்லேன்'' (திருக்கோவை 288) என்புழி மொழிதல் கில்லேன்-மொழிய மாட்டுகிலேன், எனப் பேராசிரியர் பொருளுரைத்தமையுங் காண்க. கில்-ஆற்றலுணர்த்தும் இடைநிலை. இழித்தல்-வெறுத்தல் ஆதலால் இவ்வுடலை நீக்கி உம்பர் தந்தருள வேண்டும் என்பது குறிப்பெச்சம். ''உடலிது களைந்திட் டொல்லை யும்பர்தந் தருளு'' (சத 64) என அடிகள் அருளியமையுங் காண்க.

இதன்கண் இவ்வுலக வாழ்க்கையைப் பொறுக்கமாட்டேன் இழித்திட்டேன் ஆதலால் இவ்வுடலை நீக்கி உம்பர் தந்தருள வேண்டும் என்பதனுல், காருணியத்திரங்கல் என்னும் ஏழாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 65.

70. இழித்தனன் என்னை யானே எம்பிரான் போற்றி போற்றி
பழித்திலேன் உன்னை என்னை ஆளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமை போற்றி
ஒழித்திடிவ் வாழ்வு போற்றி உம்பர்நாட் டெம்பி ரானே.

ப—ரை: யானே என்னை இழித்தனன் - யானே என்னை இழிவு படுத்தினேன்; எம்பிரான் போற்றி போற்றி - எங்கள் தலைவனே வணக்கம் வணக்கம்; உன்னைப் பழித்திலேன் - ஆண்டவனுகிய நின்னை இகழ்ந்திலேன்; என்னை ஆளுடைய பாதம் போற்றி - அடியேனை ஆளாகவுடைய நின் திருவடிகளுக்கு வணக்கம். பிழைத்தவை எல்லாம் பொறுக்கை பெரியவர் கடமை போற்றி - பிழையாகச் செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்துக் கொள்ளுதல் பெரியோராகிய நின்போல்வார்க்குக் கடமையாகும்; நினக்கு வணக்கம். உம்பர் நாட்டு எம்பிரானே - மேலாகிய சிவலோகத்துள்ள எங்கள் தலைவனே; இவ்வாழ்வு ஒழித்திடு போற்றி - இவ்வுடலோடு கூடி வாழும் இவ்வாழ்க்கையை ஒழித்தருள்க நினக்கு வணக்கம்.

யானே என்னை இழித்தனன்; எங்கள் தலைவனே நினக்கு வணக்கம் வணக்கம்; ஆண்டவனுகிய நின்னைப் பழித்திலேன்; என்னை ஆளாகவுடைய நின் திருவடிகளுக்கு வணக்கம்; பிழையாகச் செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்தல் பெரியவர் கடமையாகும்; நினக்கு வணக்கம்; உம்பர்நாட்டு எம்பிரானே; இவ்வுடலோடு கூடிவாழும் இவ்வாழ்க்கையை ஒழித்தருள்க; நினக்கு வணக்கம் என்பதாம்.

இழித்தனன் என்னை யானே என்றது, நின்னால் ஆட்கொள்ளப்பட்டு ஆன்மாவாகிய என்னியல்பை அறிந்த பின் என்னை யானே இழிவுபடுத்தினேன் என்பதாம். உன்னைப் பழித்திலேன் என்றது இழிவுடைய என்னை ஆட்கொண்டருளிய நின் பேரருளைப் பழித்திலேன் என்பதாம்.

ஆளுடைப்பாதம் என்பதற்கு ஆட்கொண்டருளிய பாதம் எனினுமாம். இறைவன் திருவடியைக் காட்டி அடிகளை ஆட்கொண்டருளியமையின் இங்ஙனம் கூறினார். "பெருந்துறையிற் கண்ணார் கழல்காட்டி நாயேனை யாட்கொண்ட, அண்ணாமலையானை" (அம் 10) என அடிகள் அருளியமையுங் காண்க.

பிழைத்தவை என்றது நின் அடிமையாகிய யான், என்னை இழிவு படுத்தியது நின் அடிமைத் தொண்டினையும் இழிவுபடுத்தியதாகும். அங்ஙனம் இழிவுபடுத்தியதாகிய அப்பிழை என்றவாறு. பிழைத்தவை யெல்லாம் எனக் கூட்டுக. பொறுக்கை பெரியவர் கடமை என்றது அப்பிழைகளைப் பொறுத்துக் கொள்ளுதல் பெரியார் கடமையாதலின் பெரியவனாகிய நீயும் அடியேன் செய்த பிழைகளைப் பொறுத்தருள வேண்டும் என்பதாம். "பொறுப்பரன்றே பெரியோர் சிறுநாய்கள் தம் பொய்யினையே" (நீத் 6) என அடிகள் பிறண்டு அருளியமையுங் காண்க.

"பிழைத்ததெலாம் பொறுத்தருள் செய் பெரியோ னென்னும்"
நாவு 245 : 5.

"உன்பாலன்பர் பிழைபொறுத்தி யென்பதும்
பெரியோய் நின்றன் கடனன்றே" நாவு 261-7.

எனத் தேவாரத்தும்,

"சிறியவர் ஒரு பிழை செய்யின் மேலவர்
பொறையொடு பின்னரும் போற்ற லல்லதை
இறையதும் வெகுள்வரோ" சூரனமைச் (170)

எனக் கந்தபுராணத்தும்,

"பெரியவ சிறியேன் செய்த பிழை பொறுத் தருளென் றன்பிற்
றிருவடி பரவி" 12 : 11.

என நம்பி திருவிளையாடற் புராணத்தும் வருவனவும் ஈண்டு அறியற்பாலன. பிழைத்தவை பொறுக்கை பெரியவர் கடமை என்றதனால் பிழை செய்தவர் சிறியவர் என்பது பெறப்படும். "பெரியோர் பொறுப்பரன்றே சிறியோர்கள் பிழைத்தனவே" எனத் தஞ்சைவாணன் கோவையினும் (397) வருதல் காண்க.

ஒழித்திடு இவ்வாழ்வு என்றார் இவ்வுடலோடு கூடிவாழும் வாழ்க்கை திருவடியை எய்துதற்குத் தடையாக இருத்தலினால். உம்பர் நாடு என்

றது எல்லாவுலகங்களுக்கும் மேலாகிய சிவலோகத்தை. சிவலோகத்துள்ள இறைவனே எமக்குத் தலைவன் என்பார் "உம்பர் நாட்டெம்பிரானே" என்றார்.

இதன்கண், "ஒழித்திடிவ் வாழ்வு" என வேண்டிக் கொள்ளுதலால் காருணியத்திரங்கல் என்னும் ஏழாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 66.

71. எம்பிரான் போற்றி வானத் தவரவர் ஏறு போற்றி
கொம்பரார் மருங்குல் மங்கை கூற வெண் ணீற போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத் திருச்சிற்றம் பலவ போற்றி
உம்பரா போற்றி என்னை ஆளுடை யொருவ போற்றி.

ப—ரை: எம்பிரான் போற்றி - எங்கள் தலைவனே நினக்கு வணக்கம்; வானத்து அவர் அவர் ஏறு போற்றி - விண்ணுலகத்திலுள்ள பதவிகளில் இருக்கும் அவ்வத் தேவர்களுக்கெல்லாம் ஏறு போல்பவனே நினக்கு வணக்கம்; கொம்பர் ஆர் மருங்குல் மங்கை கூற - பூங்கொம்பு போன்ற நுண்ணிய இடையினையுடைய உமையம்மையை ஒரு கூற்றில் உடையவனே; வெண் நீற போற்றி - திருவெண்ணீற்றையுடையவனே நினக்கு வணக்கம்; செம்பிரான் போற்றி - செம்மேனியையுடைய பெருமானே நினக்கு வணக்கம்; தில்லைச் திருச்சிற்றம் பலவ போற்றி - தில்லையிற் திருச்சிற்றம்பலத்தையுடைய கூத்தப் பிரானே நினக்கு வணக்கம்; உம்பரா போற்றி - மேலாகிய சிவலோகத்தையுடையவனே நினக்கு வணக்கம்; என்னை ஆளுடை ஒருவ போற்றி - என்னை ஆளாகவுடைய ஒப்பற்றவனே நினக்கு வணக்கம். உடலிது களைந் திட்டு ஒல்லை உம்பர் தந்தருள்வாயாக என்பதாம்.

எங்கள் தலைவனே வணக்கம்; விண்ணுலகத்துள்ள பதவிகளில் இருக்கும் அவ்வத்தேவர்களுக்கெல்லாம் ஏறு போல்பவனே நினக்கு வணக்கம்; உமையம்மையை ஒரு கூற்றிலுடையவனே நினக்கு வணக்கம்; திருவெண்ணீற்றையுடையவனே நினக்கு வணக்கம்; செம்மேனியையுடைய பெருமானே நினக்கு வணக்கம்; தில்லையிற் திருச்சிற்றம்பலமுடைய கூத்தப் பிரானே நினக்கு வணக்கம்; மேலாகிய சிவலோகத்தையுடையவனே நினக்கு வணக்கம்; என்னை ஆளாகவுடைய ஒப்பற்றவனே நினக்கு வணக்கம்.

வானத்தவரவர் என்றது விண்ணுலகத்தில் ஆங்காங்குள்ள திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவத்தலைவர்களைக் குறித்தது. அவர் என்றது அவரவர் என்று சுட்டு இரட்டித்தது, வெவ்வேறு பதவிகளில் இருக்கும் தேவர்களின் பன்மை தோன்றற் கென்பது. ஏறு – சிங்கேறு. "சிங்கமே யுன்னடிக்கே போதுகின்றேன்" (நாவு 313 : 2) எனத் தேவாரத்தும் வருதல் காண்க. இறைவன் விண்ணவர்க் கெல்லாம் தலைவனுதல் தோன்ற "வானத்தவரவர் ஏறு" என்றார். "வானவர் தலைவனே",

"வானவர்க் கிறைவா", "சிவபுரத்தமர ரேறே", "விண்ணோர் தலைவனே" (திருநாவு 23:9; 42:4; 75:2; 250:7) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. இனி, ஏறு - உயர்வு, ஆகுபெயராய் உயர்வுடைய இறைவனை உணர்த்தியது எனினுமாம்.

"கொம்பரார் மருங்குல் மங்கை" என்றது உமையம்மையை.

"கொம்பன்ன மின்னி னிடையாளோர் கூறன்" ஞான 224:5.

"கொம்பனைய நுண்ணிடையாள் கூறு" 246:7.

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. கொம்பர் – கொம்பு என்பதன் போலி. ஆர் உவமவுருபு. மங்கை கூற, வெண்ணீற என்றதனால் இறைவன் உலகிற்கு ஆதியும் அந்தமுமாயினன் என்பது குறிப்பால் உணரப் படும்.

செம்பிரான் – செம்மேனியையுடைய பிரான். "சிவனெனு நாமம் தனக்கேயுடைய செம்மேனி யெம்மானே" "செக்கரது திகழ்மேனிச் சிவனவன் காண்" (நாவு 112:9; 301:2) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. செம்பொருளாகிய தலைவன் எனினுமாம். தில்லை தலப்பெயர். திருச்சிற்றம்பலம் - கோயிற் பெயர். "தில்லைச் சிற்றம்பலத் தொருத்தன் (9) எனத் திருக்கோவையாரிலும் "சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துணின்று பொற்புட னடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி" எனப் பெரியபுராணத்தும் (தில்லை வாழ்அந் 2) வருவன காண்க. உம்பரான் என்பது உம்பரா என விளி ஏற்றது. உம்பரான் – மேலாகிய சிவலோகத்தை யுடையவன் "உருகி லவு மொண்சுடரை உம்பரானை" தே. நாவு 294:6 தன்னொப்பாரில்லாத பரம்பொருளே தன்னை ஆளாகக் கொண்டான். என்பார் "என்னை ஆளுடை யொருவ" என்றார்.

எம்பிரான், வானத்தவரவரேறு, மங்கை கூற, வெண்ணீற, செம்பிரான், திருச்சிற்றம்பலவ, உம்பரா, ஆளுடை யொருவ என இறைவனை முன்னிலைப்படுத்திப் போற்றி என வணக்கம் தெரிவித்தமையால், "உடலிது களைந்திட்டு ஒல்லை யும்பர் தந்தருள்" (சத 64) என்பது அவாய் நிலையான் வருவித்துரைக்கப்பட்டது.

இதன்கண், இறைவனை முன்னிலைப்படுத்தி போற்றி என வணக்கம் தெரிவித்தமை கொண்டு, அவாய் நிலையான் வருவிக்கப்பட்ட உடலிது களைந்திட்டு ஒல்லை உம்பர் தந்தருள் என்பதனால் காருணியத்திரங்கல் என்னும் ஏழாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 67.

72. ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி யெங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி
தருக நின் பாதம் போற்றி தமியனேன் தனிமை தீர்த்தே.

ப—ரை : ஒருவனே போற்றி - தனி முதல்வனே நினக்கு வணக்கம்; ஒப்பு இல் அப்பனே போற்றி - தனக்கு யாரும் நிகரில்லாத தந்தையே நினக்கு வணக்கம்; வானோர் குருவனே போற்றி - தேவர்களுக்கும் குருவாயுள்ளவனே நினக்கு வணக்கம்; எங்கள் கோமள கொழுந்து போற்றி - அடியேங்களது மென்மையான இளந்தளிர் போன்றவனே நினக்கு வணக்கம்; என்னை வருக என்று நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி - அடியேனை இங்கே வருகவென்று அழைத்து நின் பக்கலில் இழுத்துக் கொள்ளுதல் வேண்டும்; நினக்கு வணக்கம். தமியனேன் தனிமை தீர்த்து நின் பாதம் தருக போற்றி - நின்னைப் பிரிந்த துணையில்லாதேனது பிரிவுத் துயரை ஒழித்து நின் திருவடியைத் தந்தருள வேண்டும் நினக்கு வணக்கம்.

ஒருவனே நினக்கு வணக்கம்; தனக்கு யாவரும் நிகரில்லாத தந்தையே நினக்கு வணக்கம்; தேவர்களுக்கும் குருவாயுள்ளவனே நினக்கு வணக்கம்; கோமளக் கொழுந்து போன்றவனே நினக்கு வணக்கம்; அடியேனை இங்கே வருக என்று அழைத்து நின்பக்கலில் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்; நினக்கு வணக்கம்; நின்னைப் பிரிந்த தமியேனது பிரிவுத் துயரை ஒழித்து நின் திருவடியைத் தந்தருளவேண்டும்; நினக்கு வணக்கம் என்பதாம்.

ஒருவன் - இரண்டாமவன் இல்லாதவன்; முழுமுதல்வன் என்றவாறு. "ஒருவனாய் நின்ற பெம்மான்" (ஞான 315 : 9) "தெளிவார்க்கெலாம் ஒருவனே", "ஒருவனாகி நின்றான் இவ்வுலகெலாம்", "உலகுக் கொருவனே" (நாவு 126 : 5; 210 : 11; 245 : 4) எனத் தேவாரத்து வருவன காண்க. "ஒப்பில்" என்னும் அடையை ஒருவன் என்பதனோடும் கூட்டுக. "ஒப்பொருவர் இல்லாத ஒருவன் (தே. நாவு 247 : 9) என வருதலுங் காண்க. அப்பன் - தந்தை. "தாயாகிப் பல்லுயிர்க்கோர் தந்தையாகி" (தே. நாவு 260 : 2.) ஒப்பில் அப்பனே என்றார், உடலைப் பாதுகாக்கும் உலகியல் தந்தை போலாது பிறர் எவராலும் அளித்தற்கரிய வீடு பேற்றினை யளிக்கும் தந்தையாதல் பற்றி.

குருவன் - குருவாயுள்ளவன். "குருவனே யடியேனைக் குறிக்கொளே" நாவு 127 : 5 எனத் தேவாரத்து வருதலுங் காண்க. பக்குவ மூதிர்ந்த மக்களுக்கே யன்றித் தேவர்களுக்கும் குருவாயுள்ளவன் இறைவனாதல் பற்றி, "வானோர் குருவனே" என்றார். ஒருவனே என்பது எதுகை நோக்கிக் குருவனே என்றாயிற்று. கோமளம் - மென்மை; இளமையுமாம். கொழுந்து போன்றவனைக் கொழுந்து என்றார். ஆள்வதற்குரியவன் விரை மலர்த்திருப்பாதம் முற்றிலா விளந் தளிர் (சத 34) என வருதலுங் காண்க. கொழுந்து - தளிர். கோமளக் கொழுந்து என்பதற்கு அழகிய தீபச் சுடர் போன்றவன் எனினுமாம். ஈண்டு சுடர் சிவலிங்க வடிவினைக் குறிக்கும்.

வாங்குதல் - இழுத்தல் "கைபுனை வேழம், புரிபுனை பூங்கயிற்றிற்பைய வாங்கி" (கலி 80 : 6-7) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க வாங்குதல் வேண்டும் - பாசபந்தத்தினின்றும் பிறவித் துன்பத்தினின்றும் இழுத்து நீக்குதல் வேண்டும். பாசபந்தத்தினின்றும் பிறவித்துன்பத்தினின்றும் நீங்குதற்கருமை தோன்ற "வாங்கிட வேண்டும்" என்றார். இனி நின்பால் வாங்கிட வேண்டும் என்பதற்கு நின்னிடத்து அணைத்துக் கொள்ளல் வேண்டும் எனினுமாம். வாங்கிட வேண்டும் என்பது வாங்கியருளி என எச்சப்பொருட்டாய் நின் பாதந் தருக என்பதனோடு முடியும். நின் பாதம் தருக என மாறிக் கூட்டுக. திருவடியைத் தந்தருள்க என அடிகள் வேண்டுதலை,

"தணியார் பாதம் வந்தொல்லை தாராய்" சத 89.

"தணியா தொல்லை வந்தருளித் தளிர் பொற்பாதந் தாராயே" பிரார்த் 8.

எனப் பிறண்டு வருவனவற்றாலுமறிக. தமியனேன் என்பதற்கு உணர் விழந்த யான் எனினுமமையும். தனிமை என்றது இறைவனைப் பிரிந்தமையாலுளதாகும் துன்பத்தை.

இதன்கண், "நின்பால் வாங்கிட வேண்டும்", "தருக நின்பாதம்" என்பவற்றால் இறைவன் திருவருளைப் பெற இரங்குதலில் பெறப்படுதலின் காருணியத்திரங்கல் என்னும் ஏழாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 68.

73. தீர்ந்த அன் பாய அன்பர்க் கவரினும் அன்ப போற்றி
பேர்ந்தும் என் பொய்ம்மை யாட்கொண் டருளிடும் பெருமை
போற்றி
வார்ந்தநஞ் சயின்று வானோர்க் கமுதம்ஈ வள்ளல் போற்றி
ஆர்ந்தநின் பாதம் நாயேற் கருளிட வேண்டும் போற்றி.

ப—ரை : தீர்ந்த அன்பு ஆய அன்பர்க்கு - முடிவாகிய பேரன்பு அமைந்த மெய்யடியார்களுக்கு; அவரினும் அன்ப போற்றி - அவர் அன்பளவினும் மேம்பட்ட பேரருளினால் அவர்களை ஆட்கொள்பவனே நினக்கு வணக்கம்; பேர்ந்தும் என் பொய்ம்மை ஆட்கொண்டு அருளிடும் பெருமை போற்றி - மீண்டும் எனது பொய்ம்மையன்பினையும் பொருளாகக் கொண்டு ஆட்கொண்டு அருள் செய்த பெருமையுடையவனே நினக்கு வணக்கம்; வார்ந்த நஞ்சு அயின்று வானோர்க்கு அமுதம் ஈ வள்ளல் போற்றி - திருப்பாற்கடலில் பொங்கி எழுந்த நஞ்சை உண்டு தேவர்களுக்கு அமுதத்தினைக் கொடுத்தருளிய அருள் வள்ளலே நினக்கு வணக்கம்; ஆர்ந்த நின் பாதம் நாயேற்கு அருளிட வேண்டும் போற்றி - நலமார்ந்த நின் திருவடிகளை நாயின் தன்மையுடைய சிறியேனுக்குத் தந்தருள வேண்டும் நினக்கு வணக்கம்.

முடிவாகிய பேரன்பு அமைந்த மெய்யன்பர்க்கு அவரினும் மேம்பட்ட பேரருளினால் அவர்களை ஆட்கொள்பவனே நினக்கு வணக்கம்; மீண்டும் எனது பொய்யன்பினையும் பொருளாகக் கொண்டு ஆட்கொண்டு அருள் செய்த பெருந்தன்மையுடையவனே நினக்கு வணக்கம்; வார்ந்த நஞ்சினை உண்டு தேவர்களுக்கு அமுதத்தினை ஈந்தருளிய வள்ளலே நினக்கு வணக்கம்; நலமார்ந்த நின் திருவடிகளை நாயேற்குத் தந்தருள வேண்டும் நினக்கு வணக்கம் என்பதாம்.

தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரினும் அன்ப என்பதற்கு முடிவாகிய பேரன்பு அமைந்த மெய்யடியார்களுக்கு அவர் அன்பளவிலும் மேற்பட்ட பேரன்புடையவனே என்பது பொருளாயினும் இறைவன் உயிர்களிடத்துச் செய்யும் அன்பு அருள் எனப்படுதலின் பேரருள் என உரைத்து, அது பேர்ந்தும் என் பொய்ம்மை ஆட்கொண்டு அருளிடும் பெருமை என்பதனாலும் தெளியப்படும். தீர்ந்த என்பதற்கு இருவகைப் பற்றினையும் விட்ட எனவும், அன்பாய என்பதற்கு அன்புருவாய எனவும் உரைப்பாருமுளர். பேர்ந்தும் என்புழி உம்மை, மெய்யன்புடையவர்களை ஆட்கொள்வதன்றி, மீண்டும் பொய்ம்மை அன்பினையும் பொருளாகக் கொண்டு ஆட்கொள்ளுதலையுணர்த்தலின் இறந்தது தழீஇய எச்சவும்மை "பொய்யவனேனைப் பொருளென வாண்டொன்று பொத்திக் கொண்ட மெய்யவனே" (நீத் 7) என அடிகள் அருளியமையுங் காண்க. பெருமை என்பது பெருமையுடையவனே என்னும் பொருள் தந்து நின்றது.

வார்ந்த—நீண்ட. வார்தல் என்னும் உரிச்சொல் நெடுமையாகிய பண்புணர்த்தும் என்பது "வார்தல், போகல், ஒழுகல் மூன்றும் நேர்பு நெடுமையுஞ் செய்யும் பொருள" (உரி 21) என்னும் தொல்காப்பியத்தாலும் அறிக. ஈண்டும் பொங்கி எழுந்த என்னும் பொருட்டாய் நின்றது. "பொங்கி நின்றெழுந்த கடல் நஞ்சினை (நாவு 146 : 6) எனத் தேவாரத்து வருதலும் காண்க. தீமை பயக்கும் கொடிய நஞ்சைத் தானுண்டு நன்மை பயக்கும் அமுதத்தினைத் தேவர்க்குக் கொடுத்தருளியமையின் இறைவனை வள்ளல் என்றார்.

இறைவன் நஞ்சுண்டு தேவர்க்கு அமுதருளியமை

"கடல் சேர்தரு விடமுண் டமுதம் அமரர்க்கருள் செய்த
விடை சேர்தரு கொடியான்" ஞான 13 : 10.

"ஆழ்தரு மால் கடல் நஞ்சினையுண்டு ஆரமுதம் அமரர்க்கருளி"
ஞான 39 : 8.

"கலமார் கடலுள் விடமுண்டு அமரர்க்கமுதம் அருள் செய்த"
ஞான 66 : 5.

"உண்ணற்கரிய நஞ்சை யுண்டொரு தோழந் தேவர்
விண்ணிற் பொலிய அமுதளித்த விடைசேர் கொடியண்ணல்"
ஞான 74 : 7.

"ஆலக் கோலத்தின் நஞ்சுண்டு அமுதத்தைச்
சாலத் தேவர்க்கீந்தளித்தான்" ஞான 81 : 3.

"விண்ணவருக்காய் வேலையு ணஞ்சம் விருப்பாக
உண்ணவனைத் தேவர்க்கமு தீந்து எவ்வுலகிற்கும்
கண்ணவனை..." ஞான 101 : 6.

"ஆலமுண்டு அமுதம் அமரர்க்கரு ளண்ணலார்" ஞான 145 : 9.

"தொல்லையா ரமுதுண்ண நஞ்சுண்டதோர் தூமணி மிடறு"
ஞான 259 : 5.

"வருந்தி வானோர்கள் வந்தடைய மாநஞ்சு தான்
அருந்தியாரமுதவர்க் கருள் செய்தான்" ஞான 293 : 5.

"ஆழியுள் நஞ்சமு தாரவுண் டன்றமரர்க்கமுது ண்ண
ஊழிதொறு முளரா அளித்தான்" ஞான 363 : 11.

"அஞ்சித்தே விரிய யெழுந்த நஞ்சுதனை யுண்டு அமரர்க்கமுதருளி"
ஞான 377 : 10.

"பொறுத்தான மார்க் கமுதருளி நஞ்சமுண்டு" நாவு 84 : 5.

"விண்ணோர் நடுங்கக்கண்டு விரிகடலினஞ்சுண்டு அமுதமீந்த தேவனை"
நாவு 232 : 6.

"முந்நீர் நஞ்சுண்டு இமையோர்க் கமுத நல்கும் உற்றானை" நாவு 276 : 3.

"கடலில் விடமுண்டு அமரர்க்கமுத மீய இசைந்தவன் காண்"
நாவு 277 : 7.

"நஞ்சுண்டு தேவர்களுக் கமுதீந்தானை" நாவு 287 : 2.

"நஞ்சுண்டு தேவர்க்கமுதங் கொடுத்த நலம்" சுந் 2 : 4.

"வங்கமலி கடல் நஞ்சை வானவர்கள் தாமுய்ய
நுங்கி யமுதவர்க் கருளி" சுந் 51 : 11.

"கடல் நஞ்சும் அருந்து நம்பி அமரர்க் கமுதீந்த அருளெனம்பி"
சுந் 63 : 3.

எனத் தேவாரத்தும் வருவன காண்க.

ஈ வள்ளல் வினைத்தொகை. ஆர்ந்தபாதம் - நலம் பொருந்திய பாதம். "நலமார்ந்த பாதம்" (ஞான 244 : 4) எனத் தேவாரத்தும் வருதல் காண்க.

கழலா வினைகள் கழற்றுவ வாகலின் "பிறவித் துயர் நீத்திடும் கழல்" என்றும், "நீங்காப் பிறவி நிலை கெடுத்துக் கழலா வினைகள் கழற்றுவ ...அடித்தலமே" நாவு 128 : 4; 93 : 9.

இதன்கண், "ஆர்ந்த நின்பாதம் நாயேற் கருளிட வேண்டும்" என் பதினுல் காருணியத்திரங்கல் என்னும் ஏழாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 69.

74. போற்றியிப் புவனம் நீர் தீக் காலொடு வான மானுய்
போற்றியெவ் வுயிர்க்குந் தோற்றம் ஆகிநீ தோற்ற மில்லாய்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈருயீ றின்மை யானுய்
போற்றியைம் புலன்கள் நின்னைப்புணர்கிலாப்புணர்க்கையானே.

ப—ரை: இப்புவனம் நீர் தீ காலொடு வானம் ஆனுய் போற்றி—இந்நிலமும், நீரும், நெருப்பும், காற்றும், வானமும் ஆகிய ஐம்பூதங்களும் ஆனவனே; நினக்கு வணக்கம்; எவ் உயிர்க்கும் தோற்றம் ஆகி நீ தோற்றம் இல்லாய் போற்றி – எல்லாவுயிர்க்கும் பிறப்பையுண்டாக்கும் காரணன் ஆகி நீ ஒன்றிலிருந்து தோன்றுதலில்லாதவனே நினக்கு வணக்கம்; எல்லா உயிர்க்கும் ஈருய் ஈறு இன்மை ஆனுய் போற்றி – எல்லா உயிர் உலகு களுக்கும் ஒடுக்கத்தைச் செய்பவனுய் நீ ஒன்றிலும் ஒடுங்குதல் இல்லாத வனே நினக்கு வணக்கம்; ஐம்புலன்கள் நின்னை புணர்கிலா புணர்க்கை யானே போற்றி—ஐம்புலன்களும் நின்னை அடைந்து தாக்காதபடி அவற்ருெடு கலந்திருப்பவனே நினக்கு வணக்கம்.

நிலமும் நீரும் நெருப்பும் காற்றும் வானமும் ஆகிய ஐம்பூதங்களு மானவனே நினக்கு வணக்கம்; எல்லாவுயிர்களுக்கும் பிறப்பை உண்டாக் கும் காரணன் ஆகி நீ ஒன்றிலிருந்து தோற்றுதலில்லாதவனே நினக்கு வணக்கம்; எல்லா உயிர் உலகுகளுக்கும் ஒடுக்கத்தைச் செய்பவனுய் நீ ஒன்றிலும் ஒடுங்குதலில்லாதவனே நினக்கு வணக்கம்; ஐம்புலன்களும் நின்னை யடைந்து தாக்காதபடி அவற்ருெடு கலந்திருப்பவனே நினக்கு வணக்கம் என்பதாம்.

புவனம், நீர், தீ, கால், வானம் என முறையே ஒன்றினுள் ஒன்று ஒடுங்கு முறைபற்றிக் கூறினர். இறைவனது அட்ட முகூர்த்தங்களுள் புவனம், நீர், தீ, கால், வானம் என்னும் ஐந்தும் கூறப்பட்டமையால் ஒழிந்த ஞாயிறு திங்களும் உயிரும் உபலக்கணத்தாற் கொள்ளப்படும்.

"அலைகின்ற நீர் நிலம் காற்று அனல் அம்பரமாகி நின்றீர்" நாவு 95 : 3

"தோற்றுந் தீயொடு நீர் நிலம் தூவெளி காற்றுமாகி நின்ருன்" நாவு 182 : 6.

"நிலனும் நீரும் நெருப்பினெடு காற்ருகி நெடு வானுமாகி" நாவு 311 : 7.

"மண்ணிலங்கு நீர் அனல் கால் வானுமாகி" நாவு 272 : 5.

"தரிக்கும் தரை நீர் தழல் காற்று அந்தரம்...ஆனீர்" சுந் 9 : 3.

"நிலம் கிளர்நீர் நெருப்பொடு காற்று ஆகாசமாகி" சுந் 16 : 7.

"நிலனே நீர் வளி தீ நெடுவானகமாகி நின்ற புலனே" சுந் 27 : 8.

என வருதல் காண்க.

எவ்வுயிர்க்கும் தோற்றமாதல் கேவலநிலையிற் கிடந்த ஆன்மாக்களுக்கு தனுகரண புவன போகங்களைக் கொடுத்தல். "போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்" (திருவெம்பா 20). எவ்வுயிர்க்கும் தோற்றமாயுள்ள இறைவன் ஒன்றிலிருந்து தோன்றுதலிலனுதலின் தோற்றமில்லாய் என்றார். எவ்வுயிர்க்கும் ஈறுதல் உயிர்களுக்குத் தோற்றுவிக்கப்பட்ட தனுகரண புவன போகங்களை ஒடுக்குதல். "எவ்வுயிர்க்கும் ஈறும் இணையடிகள்" (திருவெம்பா 20) என வருதலுங் காண்க. ஈற்றினைச் செய்யும் கடவுளை ஈறு என்றது உபசாரம். "அந்தமாதி என்மனார் புலவர்" என்னும் சிவஞானபோத முதற் சூத்திரத்துள் அந்தத்தைச் செய்யும் கடவுளை அந்தம் என்றது போல் எல்லாவுயிர்க்கும் ஈறுகும் இறைவன் தான் ஒன்றிலும் ஒடுங்குதலில்லாதவனுதலின் "ஈறின்மையானுய்" என்றார். "ஈறில்லாத நல்லீச னொருவனே" என அப்பரடிகள் (தே. நாவு 214 : 3) அருளியவாறுங் காண்க.

புலன்கள்-சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன. அவை நாமுதலிய பொறிகளால் உணரப்படுவன. பொறிவாயிலாகப் புலன்களை உணர்தல் உயிரியல்புபற்றி இறையியல்பின்மையின் புலன்கள் நின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே என்றார். புணர்கிலாப் புணர்க்கை—வேறும் உடனும் நிற்கும் நிலை. "பொல்லாப் புலனைந்தும் போக்கினன் காண்." (நாவு 221 : 6) எனவும், "புலனைந்தாய் ... நின்றான் அமருங் கோயில்" (ஞான தே. 129 : 7) எனவும் வருவன காண்க. "நின்பாதம் அருளிட வேண்டும்" (சத 69) என்பது குறிப்பெச்சம்.

இதன்கண், நின்பாதம் அருளிட வேண்டுமென வருவிக்கப்பட்ட குறிப்பெச்சத்தினுல் காருணியத்திரங்கல் என்னும் ஏழாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 70.

---

## 8. ஆனந்தத்தழுந்தல்

இறைவனது பேரின்பத்தில் முழுகி நிற்றல்

எழுசீர்க் கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

75. புணர்ப்ப தொக்க எந்தை யென்னை யாண்டு பூண நோக்கினுய்
புணர்ப்ப தன்றி தென்ற போது நின்னொ டென்னொ டென்னிதாம்
புணர்ப்ப தாக அன்றி தாக அன்பு நின்க ழற்க ணே
புணர்ப்ப தாக அங்க ணாள புங்க மான போகமே.

ப—ரை: எந்தை-என் தந்தையே; புணர்ப்பது ஒக்க என்னை ஆண்டு பூண நோக்கினுய்-என்னை நின்னொடு இயைவிப்பதாகிய பக்குவகாலம்

ஒத்துவர அதனால் நீ என்னை வலிய வந்து ஆட்கொண்டு நான் அடிமைத் தொண்டு பூணும்படி திருவருட் பார்வை நல்கினாய்; இது புணர்ப்பது அன்று என்றபோது—இந்தப் பக்குவகாலம் நின்னொடு என்னை அத்துவித மாகச் சேர்ப்பதற்குரியதன்று என்று திருவுள்ளங் கொண்டு என்னை நீ பிரிந்தபொழுது; நின்னொடு என்னொடு இது என்னும்—நின்னொடும் என் னொடும் உள்ள இத்தொடர்பு யாதாகும்? அங்கணாள — கண்ணோட்ட முடையவனே; இது புணர்ப்பதாக அன்றாக — இக்காலம் என்னை நின் னொடு இயைவிப்பதாகுக, அல்லதாகுக; நின் கழல்கண் அன்பு — நின் திருவடிக்கணுள்ள என் மெய்யன்பு; புங்கமான போகம் புணர்ப்பதாக — உயர்ந்த சிவானந்த போகத்தை இயைவிப்பதாக.

எந்தையே, என்னை நின்னொடு இயைவிப்பதாகிய பக்குவம் ஒத்து வர அதனால் நீ என்னை வலியவந்து ஆட்கொண்டு யான் அடிமைத் தொண்டு பூண நோக்கினாய்; இக்காலம் நின்னொடு என்னை அத்துவிதமாய் இயைவிப்பதற்குரித்தன்று என்று திருவுளங் கொண்டு என்னை நீ பிரிந்த பொழுது நின்னோடும் என்னோடு முள்ள இத்தொடர்பு யாதாகும்? அங்க ணாள, இக்காலம் என்னை நின்னொடு இயைவிப்பதாக அல்லதாகுக. நின் திருவடிக்கணுள்ள மெய்யன்பு நின் உயர்ந்த சிவானந்த போகத்தை இயை விப்பதாக அருள் செய்யவேண்டும் என்பதாம்.

புணர்ப்ப நோக்க என்புழி புணர்ப்பது என்றது அடிகளைத் திருவருட் பேற்றில் இயைவிக்கும் பக்குவ காலத்தைக் குறித்தது. என்னை ஆண்டு பூண நோக்கினாய் எனக் கூறினும் என்னை நோக்கி ஆண்டு பூணவைத் தாய் என்பது பொருளாகக் கொள்க. "குரம்பையிற் புகப்பெய்து நோக்கி ...யாண்டு தன்னடியாரிற் கூட்டிய அதிசயம்" (அதிசயம் 8) "மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி மறுமையோடிம்மையுங் கெடுத்த பொருளனே" (அருட் 9) என வருவன காண்க. நோக்குதல் ஈண்டு நயனதீக்கையைக் குறித்தது.

புணர்ப்பதன்றிது என்புழி இது என்றது நோக்கி ஆண்டு பூண வைத்த காலத்தைக் குறித்தது. புணர்ப்பது அன்று என்றபோது என்றது ஆட்கொண்ட இக்காலம் உடனே கதியைச் சேர்ப்பதற்குரியது அன்று என்று திருவுள்ளங் கொண்டு "நலமலி தில்லையுட் கோலமார் தருபொது வினில் வருக" எனப் பணித்து நீங்கியபோது என்றவாறு.

நின்னொடு என்னொடு இது என்னும் என்பதில், நினக்கு என்னொடு என், நின்னொடு எனக்கு என்என ஒடு உருபு ஒன்றை நான்காவதாக்குக. நின் னொடு என்னொடு உளதாகிய தொடர்பு என்னை நின்னொடு உடனே இயைவி யாமையின் யாது பயனுடைத்தாம் என்பார் இது என்னும்? என்றார். இறை வனால் அடிகள் ஆட்கொள்ளப்பட்டும் உடனே அடிகள் கதியடையாமைக் கேது பிராரத்த கன்மம் அநுபவித்து முடிவு பெறுமையாகும்.

இது புணர்ப்பதாக அன்ருக என்றது நின்ெனுடு என்னைப் புணர்ப்ப தாகிய இப்பக்குவகாலம் என்னை நின்னெடு புணர்ப்பதாயினும் புணர்க்க; அன்றி ஒழியினும் ஒழிக; அதுபற்றி யான் கவலேன் என்றவாறு. நின் கழற்கண் அன்பு புங்கமான போகம் புணர்ப்பதாக என்றது, நின் திருவடிக்கணுள்ள மெய்யன்பு உயர்ந்த சிவானந்த போகத்தை இயைவிப்பதாக அருள் செய்ய வேண்டும் என்றவாறு.

"கழற்கண் அன்பு", "அடியேன் நின் பூங்கழல்கள் அவையல்லா எவை யாதும் புகழேன்" (புலம் 1) "தென்னன் வார்கழலே நினைந்து (தென் 15) "கழற்போதிறைஞ்சி" (பாண்டிப் 1) என்பனவற்ருலுமறிக. அங்கணன்–கண்ணேட்டமுடையவன் என நச்சிஞர்க்கினியார் உரைத்தமையுங் காண்க. இறைவன் அங்கண்மை, "அரக்கனை யடர்த்தவன் இசைக்கினிது நல்கியருள் அங்கணன்" "நேசமின் மனச் சமணர் தேரர் கணிரந்தமொழி பொய்கள் அகல்வித் தாசை கொள் மனத்தை அடியாரவர் தமக்கருளும் அங்கணன்" (ஞான 336 : 8; 337 : 10) எனத் தேவாரத்து வருவனவற்ருலுமறிக. புங்கம்–உயர்ச்சி. "அம்புக்குதைதுகில் உயர்ச்சியும் புங்கம்" (பிங் 10-819) என வருதல் காண்க. புங்கமான போகம்–உயர்ந்த போகம்; உயர்ச்சி ஒப்பின்மையும் அழிவின்மையும் பற்றியாகும். போகம் என்றது சிவானந்த போகத்தை "உணர்வி னேர் பெற வருஞ் சிவபோகம்" (சம்பந் 161) எனப் பெரியபுராணத்து வருதலுங் காண்க.

இதன்கண் "புங்கமான போகம் புணர்ப்பதாக" என்றதனல் ஆனந்தத்தழுந்தல் என்னும் எட்டாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 71.

76\. போகம் வேண்டி வேண்டி லேன்பு ரந்த ராதி இன்பமும்
ஏக நின்க ழலி ணைய லாதி லேனென் எம்பிரான்
ஆகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி அஞ்ச லிக்கணே
ஆக என்கை கண்கள் தாரை ஆற தாக ஐயனே.

ப—ரை: ஏக–ஒருவனே; என் எம்பிரான்–என்னுடைய எம்பிரானே; ஐயனே–ஞாஞசாரியனே; போகம் வேண்டி–சிவானந்த போகத்தை விரும்புதலால்; புரந்தரன் ஆதி இன்பமும் வேண்டிலேன் - இந்திரன் முதலிய இறையவர் பதவிக்குரிய இன்பங்களையும் விரும்புகின்றிலேன்; நின் கழல் இணை அலாது இலேன்–நின் திருவடிகள் இரண்டும் அல்லது வேருெரு பற்றுக்கோடும் இல்லேன்; ஆகம் விண்டு கம்பம் வந்து – மனம் விரிந்து நெகிழவும் உடல் நடுங்கவும்; என் அஞ்சலி கை குஞ்சிக் கண்ணே ஆக- எனது குவிந்த கைகள் சிரசின்கண்ணே பொருந்தவும்; கண்கள் தாரை ஆறது ஆக–கண்களிலிருந்து ஒழுகும் ஆனந்த நீர் ஒழுக்கு ஆருகப் பெருகவும் அருளுக.

ஏக, என் எம்பிரான், ஐயனே, சிவபோகத்தை விரும்புதலால் இந்திரன் முதலிய இறையவர் பதங்களுக்குரிய இன்பங்களையும் விரும்புகின்றிலேன்; நின் திருவடிகள் இரண்டு மல்லாது வேறொரு பற்றுக்கோடும் இல்லேன்; மனம் விரிந்து நெகிழ உடல் நடுங்க என் அஞ்சலிக்கை சிரசின் கண்ணே பொருந்தவும், கண்களினின்று ஒழுகும் ஆனந்த நீர் ஒழுக்கு ஆறுகப் பெருகவும் அருளுக என்பதாம்.

போகமென்பது சிவானந்த போகத்தை. இதனையே அடிகள் விரும்பியமை, "அன்பு நின்கழற்கணே புணர்ப்பதாக அங்கணாள புங்கமான போகமே." (சத 71) என அருளியமையாலுமறிக. போகம் வேண்டி என்புழி வேண்டி என்னும் செய்தெனெச்சம் ஏதுப் பொருளில் வந்தது. தேவர்களின் பதங்கள் பலவற்றுள்ளும் இந்திரபதத்தால் வரும் இன்பம் சிறந்ததாதலின் புரந்தராதி இன்பமும் என்றார். புரந்தராதி என்பது வடநூல் முடிவு. இன்பமும் என்புழி உம்மை சிறப்புப் பொருளில் வந்தது. இந்திரன் முதலிய தேவர்களுக்குரிய இன்பங்களிலும் சிவானந்த போகமே சிறந்ததாதலின் "போகம்வேண்டி வேண்டிலேன் புரந்தராதி இன்பமும்" என்றார். "கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு" (சத 2) எனவும், "வேண்டேன் மண்ணும் விண்ணும்" (உயிருண்ணி 7) எனவும் வருவனவும் ஈண்டறியற்பாலன. ஏகன்–ஒருவன். "ஏக பெருந்தகையாய பெம்மான் (ஞான 4:4) "எந்தையே ஏகமூர்த்தி (நாவு 41-4) என்று வருவன காண்க. இறைவனை ஏகன் என்றது ஒப்பொருவனில்லாதவனாதலின் "ஒப்பிலா ஒருவன்", "ஒப்பொருவர் இல்லாத ஒருவன்" (நாவு 239 : 4; 246 : 9) எனத் தேவாரத்தும் வருவன காண்க. "கழலிணையலாது இலேன்" என்றது நின் கழலிணையே பற்றுக் கோடன்றி வேறொரு பற்றுக்கோடு இல்லேன் என்றவாறு. "போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை" (சத 62) எனவும், "பொருளே தமியேன் புகலிடமே" (நீத் 17) எனவும் அடிகள் அருளியமை காண்க. இனி நின் திருவடிகளின் மேற் பற்றல்லது வேறொரு பற்று உடையேனல்லேன் எனினுமாம். "செப்பரிய பெருஞ் சீர்த்திச் சிவனார் செய்ய கழல் பற்றி எப்பற்றினையுமற வெறிவார் (பெரிய: விறன்மிண்ட 4) என வருதல் காண்க. செய் பரிவு நீங்கி" (சீவக 1737) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. இறைவனை அகநெகிழ்ந்து இறைஞ்சுங்கால் உடலும் நடுங்குதலின் "ஆகம் விண்டு கம்பம் வந்து" என்றார். "மெய்ம் முழுதுங் கம்பித் தழுமடியாரிடை" (நீத் 27) என அடிகள் அருளியமையுங் காண்க. விண்டு, வந்து என்னும் செய்தெனெச்சங்களைச் செயவெனெச்சமாகக் கொள்க. என் அஞ்சலிக்கை குஞ்சிக்கண்ணே ஆக என மாறிக் கூட்டிப் பொருள் கொள்க. குஞ்சி ஆண்மான் மயிர் "குஞ்சி பித்தை யோரி .. ஆண் மான் மயிர்" பிங் 5 : 339. அஞ்சலி என்றது இரண்டு கையும் பதாகையாய் அகமொன்றுவது என்பர் அடியார்க்கு நல்லார் (சிலப்பதி 3 : 18 உரை). அஞ்சலிக்கணே என்பதற்குத் தொழுதலின் கண்ணே எனினுமாம். அஞ்சலி தொழுதல்

என்னும் பொருட்டாதல், "தொழுதலும் வாவற் பறவையும் அஞ்சலி" எனப் பிங்கலந்தையில் (10 : 13) வருதலுங் காண்க. தாரை நீரொழுக்கு; அருளவேண்டும் என்பது அவாய் நிலையான் வருவிக்கப்பட்டது.

இதன்கண், ஆகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி அஞ்சலிக்கணே ஆக எனவும், கண்கள் தாரை ஆறதாக எனவும் வேண்டிக்கொள்ளுதலால் ஆனந்தத்தழுந்தல் என்னும் எட்டாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 71.

77. ஐய நின்ன தல்ல தில்லை மற்றோர் பற்று வஞ்சனேன்
பொய்க லந்த தல்ல தில்லை பொய்மை யேனெ னெம்பிரான்
மைக லந்த கண்ணி பங்க வந்து நின்க ழற்கணே
மெய்க லந்த அன்ப ரன்பெ னக்கு மாக வேண்டுமே.

ப—ரை: ஐய-ஐயனே; என் எம்பிரான்—என்னுடைய எம்பிரானே; மை கலந்த கண்ணி பங்க—அஞ்சனம் தோய்ந்த கண்களையுடைய உமையம்மையை ஒரு கூற்றில் உடையவனே; வஞ்சனேன் நின்னது அல்லது மற்று ஓர் பற்று இல்லை—மாயையின் தொடர்புடைய எனக்கு நினது பற்றுக் கோடேயல்லாமல் பிறிதொரு பற்றுக்கோடும் இல்லை, அங்ஙனம் அறிந்திருந்தும்; பொய்ம்மையேன் – பொய்யன்புடையவனாகிய யான்; பொய் கலந்தது அல்லது இல்லை – பொய்யாகிய மாயை என்னைச் சார்ந்ததல்லாமல் வேறு குற்றமும் இல்லேன்; நின்கழற்கண் மெய்கலந்த அன்பர் அன்பு – நினது திருவருளாகிய திருவடிக்கண் வந்து சார்ந்து மெய்ம்மையாகவே இரண்டறக்கலந்த மெய்யடியார்களது அன்பே; எனக்கும் ஆக வேண்டும் – பொய்ம்மையேனாகிய எனக்கும் உண்டாகும்படி அருள் செய்தல் வேண்டும்.

ஐயனே, என் எம்பிரான், கண்ணி பங்கனே, வஞ்சனேனுக்கு நின்னையல்லது வேறோர் பற்றுக்கோடு இல்லை அங்ஙனம் அறிந்தும் பொய்யன்பினையுடையவனாகிய யான் பொய்யாகிய மாயை என்னைச் சார்ந்ததல்லாமல் வேறு குற்றமும் இல்லேன்; ஆதலால் நின் திருவடிக்கண் வந்து கலந்த மெய்யடியார்களது மெய்யன்பே எனக்கும் உண்டாகும்படி அருள் செய்தல் வேண்டும் என்பதாம்.

வஞ்சனேன் நின்னது அல்லது மற்றோர் பற்று இல்லை என மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்க. அடிகள் தம்மை வஞ்சனேன் என்றலை "வஞ்சனேற் குய்தலாவது", "வஞ்சனேனை ஆண்டு கொண்ட நின்னதாள்" (சத 77 : 80) "வஞ்சனே னிங்கு வாழ்கிலேன் கண்டாய்" (வாழாப் 6) என வருவனவற்றினுங் காண்க. அடிகள் இறைவனையே யன்றிப் பிறிதொன்றையும் பற்றுக் கோடாகக் கொண்டிலர் என்பதை.

"மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி" போற்றி 155.

"நின்னலால் பற்று மற்றெனக் காவதொன் றினி உடையனோ" சத 97.

"எம்பரனே பற்று நான் மற்றிலேன் கண்டாய்" வாழா 1.

"பண்ணினேர் மொழியாள் பங்கநீ யல்லால்
பற்று நான் மற்றிலேன் கண்டாய்" வாழா 5.

என வருவனவற்றாலுமறிக. வஞ்சனேன் என்பதற்கு மாயையின் தொடர்புடைய எனக்கு என நான்காவது விரிக்க. இனி, இல்லை என்பது இருதிணை ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவாகிய எதிர்மறைக் குறிப்புவினை முற்றாகலின் வஞ்சனேன் நின்னது அல்லது மற்றொர் பற்று இல்லை என்பதற்கு, மாயைத் தொடர்புடைய யான் நின்பற்றல்லது பிறிதொரு பற்று இல்லேன் எனவும் உரைக்கலாம்.

பொய்ம்மையேன் பொய்கலந்ததல்லதில்லை என மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்க. பொய் கலந்தது அல்லது இல்லை என அடிகள் கூறியது நிலையில்லாத உடம்பும் அது முகந்து நின்ற பிராரத்த வினையும் தமக்கு உளவாதல் பற்றியாகும்.

மைகலந்த கண்ணி என்றது உமையம்மையை. "மை விரவு கண்ணாள்" (நாவு 312 : 3) என வருதலுங் காண்க. இறைவன் மெய்யன்பரைத் தன் திருவடிக்கீழ்ச் சேர்த்துக் கொள்ளத் திருவருட் சத்தியோடு இயைந்து நின்றமை தோன்ற "மைகலந்த கண்ணி பங்க" என்றார். வந்து கலந்த என இயையும்.

கழற்கணே கலந்த அன்பர் என்க. அன்பர் அன்பு எனக்குமாக வேண்டுமென அடிகள் வேண்டிக் கொண்டது, அதுவே திருவடிக்கண் இரண்டறக் கலத்தற்கு ஏதுவாதல் பற்றி என்க.

"அன்போ டுருகி அகங் குழைவார்க்கன்றி
என்போல் மணியினை எய்தவொண் ணாதே" (272)

"ஆர்வம் உடையவர் காண்பார் அரன் தன்னை
ஈரம் உடையவர் காண்பார் இணையடி" (273)

எனத் திருமந்திரத்து வருதல் காண்க.

இதன்கண் மெய்கலந்த அன்பர் அன்பு எனக்குமாக வேண்டும் என்றதனால் ஆனந்தத்தழுந்தல் என்னும் எட்டாம் பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 73.

78. வேண்டும் நின்க ழற்கண் அன்பு பொய்மை தீர்த்து மெய்மையே
ஆண்டு கொண்டு நாயி னேனை ஆவ வென்ற ருளுநீ
பூண்டு கொண்ட டிய னேனும் போற்றி போற்றி யென்றும் என்
மாண்டு மாண்டு வந்து வந்து மன்ன நின்வ ணங்கவே. [றும்

ப—ரை: மன்ன - என் அரசே; நாயினேனை - நாயைப் போன்ற இழிந்தவனாகிய என்னை; ஆவ என்று பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையே ஆண்டு கொண்டு அருளும் நீ - ஆஆ என்று இரங்கியருளி பொய்ம்மை யாகிய உலகப்பற்றை ஒழித்து மெய்ம்மையாகவே ஆட்கொண்டருளியநீ; அடியனேனும் பூண்டு கொண்டு - நின் அடிமையாகிய யானும் நின் தொண்டினை மேற்கொண்டு; போற்றி என்றும் போற்றி என்றும் - வணக்கம் என்றும் வணக்கம் என்றும் பன்முறை கூறிக்கொண்டு; மாண்டு வந்து மாண்டு வந்து - பன்முறை இறந்து பிறந்து இறந்து பிறந்தாயினும்; நின் வணங்க - நின்னை மறவாது வணங்கும் பொருட்டு; நின் கழற் கண் அன்பு வேண்டும் - நின் திருவடிக்கண் அன்பினைத் தந்தருளவேண்டும்.

மன்ன! நாயினேனை ஆஆ என்று இரங்கியருளி பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையாகவே ஆட்கொண்டருளிய நீ நின் அடிமையாகிய யானும் நின் தொண்டினை மேற்கொண்டு வணக்கம் என்றும் வணக்கம் என்றும் பன்முறை கூறிக்கொண்டு பலமுறை இறந்து பிறந்து இறந்து பிறந்தாயினும் நின்னை மறவாது வணங்கும் பொருட்டு நின் திருவடிக்கண் அன்பினைத் தந்தருள வேண்டும் என்பதாம்.

வேண்டும் நின்கழற் கன்பு என்பதில் வேண்டும் என்பதற்குத் தந்தருள வேண்டும் என ஆற்றலால் ஒரு சொல் வருவித்துரைக்கப்பட்டது. பொய்ம்மை என்றது நிலையில்லாத அகப்புறப் பற்றுக்களை.

மெய்ம்மையே ஆண்டு கொண்டு என்றது, "கண்ணார நீறு இட்ட அன்பரோடு யாவரும் காண" (சத 49) வெளிப்படையாக ஆட்கொண்டமையைக் குறித்தது. ஆ, ஆ, என்னும் இரக்கக் குறிப்புச் சொல் ஆவ எனச் செய்யுள் நோக்கிக் குறுகிநின்றது. "அளித்து வந்தெனக் காவவென் றருளி" (செத்திலாப் 10) என்ப் பிருண்டு வருதல் காண்க.

நாயினேனை ஆவவென்று பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையே ஆண்டு கொண்டு அருளுநீ என இயைத்து நாயினேனை ஆவாவென்று இரங்கியருளி பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையாகவே ஆட்கொண்டருள்வாயாக என உரைப்பாருமுளர். அங்ஙனம் உரைப்பின் அடிகள் இன்னும் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றிலர் என்றும் அதனால் தம்மை ஆட்கொள்ள வேண்டுகின்றார் என்றும் பொருளமையும். இறைவனால் ஆட்கொண்ட பின்னரே இத்திருவாசகத்தைப் பாடியருளும் அடிகள் ஆட்கொண்டருள வேண்டும் என்றல் வேண்டா கூற்றாகும். அடிகள் இத்திருப்பாட்டில் வேண்டிக் கொள்வது இறைவன் தம்மை உடனேயே தன்பால் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது. பிராரத்த வினையுண்மையால் அது முடியாதெனில் மாண்டு மாண்டு வந்து வந்தாயினும் போற்றி என்றும் போற்றி என்றும் நின்னை மறவாது வணங்குதற்குரிய நின் கழற் கண் அன்பினைத் தந்தருள வேண்டும் என்பது.

அடியனேனும் என்பதில் உம்மை, நின் திருவடிப்பேற்றை உடனே பெறும் பக்குவமில்லாதவனுகிய யானும் என இழிவு சிறப்பு. போற்றி போற்றி என்றும் என்றும் என்பதைப் போற்றி என்றும் போற்றி என்றும் என இயைத்து வணக்கம் என்றும் வணக்கம் என்றும் பலகாற் கூறி எனப் பொருள் கொள்க.

மாண்டு வந்து மாண்டு வந்து எனக் கூட்டி இறந்து பிறந்து இறந்து பிறந்து எனவுரைக்க. பிறந்து என்பதற்குப் பிறந்தாயினும் என ஒரு சொல் ஆற்றலால் வருவிக்கப்பட்டது. மன்ன, அருளுநீ மாண்டு மாண்டு வந்து நின் வணங்க நின்கழற்கண் அன்பு தந்தருள வேண்டும் என முடிக்க.

இதன்கண், வேண்டும் நின்கழற்கண் அன்பு என்றதனுல் சாதனமாகிய அன்பு கிடைக்கவே சாத்தியமாகிய ஆனந்தத்தழுந்தல் ஒருதலையாகலின் ஆனந்தத்தழுந்தல் என்னும் எட்டாம் பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க.

79. வணங்கும் நின்னை மண்ணும் விண்ணும் வேத நான்கும் ஓலமிட்
டுணங்கு நின்னை யெய்த லுற்று மற்றொ ருண்மை யின்மையின்
வணங்கி யாம்வி டேங்க ளென்ன வந்து நின்ற ருளுதற்
கிணங்கு கொங்கை மங்கை பங்க என்கொ லோநி னைப்பதே.

ப—ரை: இணங்கு கொங்கை மங்கை பங்க - ஒத்த கொங்கைகளையுடைய மங்கையது கூற்றையுடையவனே, மற்று ஓர் உண்மை இன்மையின் - நின்னெடொத்த பிறிதொரு உண்மைப் பொருள் இல்லாமையினுல், நின்னை மண்ணும் விண்ணும் வணங்கும் - இணையிலியாகிய நின்னை மண்ணுலகத்தவரும் விண்ணுலகத்தவரும் வணங்குவர்; வேதம் நான்கும் நின்னை எய்தல் உற்று ஓலம் இட்டு உணங்கும் - நான்கு வேதங்களும் நின் உண்மைத் தன்மையைக் கூறத்தொடங்கி மாட்டாமையால் இஃதல்ல எனக் கூறி அடைக்கலம் வேண்டி வாடிநிற்கும்; அங்ஙனம் அருமையுடையையாயினும், யாம் வணங்கி விடேங்கள் என்ன - நின் அடியோமாகிய யாங்கள் நின்னை வணங்கி விடமாட்டோம் என்று பெருமகிழ்ச்சியால் கூற; வந்து நின்று அருளுதற்கு நினைப்பது என் கொல் - வெளிப்பட்டு வந்து நின்று அருள் செய்வதற்குத் தடையாகத் திருவுள்ளத்துக் கருதுவது யாதோ?

மங்கை பங்கனே, நின்னெடு ஒத்த பிறிதொரு உண்மைப் பொருள் இன்மையின் மண்ணவரும், விண்ணவரும் நின்னையே வணங்குவர்; வேதம் நான்கும் நின் உண்மை இயல்பைக் கூறத் தொடங்கி மாட்டாமையால் ஓலமிட்டு வாடா நிற்கும்; அங்ஙனம் அருமையுடையையாயினும்; நின் அடிமையாகிய யாங்கள் நின்னை வணங்கி விடமாட்டோம் என்று பெரு

மகிழ்ச்சியால் கூற வெளிப்பட்டு வந்து நின்று அருள் செய்வதற்குத் தடையாகத் திருவுள்ளத்துக் கருதுவது யாதோ என்பதாம்.

மண், விண் என்பன ஆகுபெயர்; வேதம் நான்கும் எய்தலுற்று வேதம் நான்கும் நின்னை அடையத் தொடங்கி என்றது நின் உண்மைத் தன்மையை உரைக்கத் தொடங்கி என்றவாறு. ஓலமிட்டு உணங்கும் என்றது அங்ஙனம் உரைக்கத் தொடங்கி மாட்டாமையால் இஃதல்லையாயிருக்கின்றாய் இஃதல்லையாயிருக்கின்றாய் என்று கூறி ஓலமிட்டு வாடி நிற்கும் என்றவாறு. வேதங்கள் அன்மைச் சொல்லினாற் கூறி வணங்குதலை,

"அல்லை யீதல்லை யீதென மறைகளு மன்மைச்
சொல்லி னாற் றுதித் திளைக்குமிச் சுந்தரன்" கடவுள் 29.

"பூதங்க ளல்ல பொறியல்ல வேறு புலனல்ல உள்ள மதியின்
பேதங் களல்ல விவையன்றி நின்ற பிறிதல்ல வென்று பெருநூல்
வேதங் கிடந்து தடுமாறும் வஞ்ச வெளியென்ப கூடன் மறுகிற்
பாதங்க ளோவ வளையிந்த னுதி பகர்வாரை யாயு மவரே (19 : 1)

எனத் திருவிளையாடற் புராணத்து வருதலானுமறிக.

ஓலமிடுதல் - அடைக்கலம் வேண்டியழைத்தல். உணங்குதல் - உலர்தல், வாடுதல். எய்தலுறுதல் - அடைய முயலுதலாயினும் உண்மைத் தன்மையைக் கூறத் தொடங்குதல் எனப் பொருந்துமாறு பற்றி உரைக்கப்பட்டது. மற்றொர் உண்மை இன்மை அளவைகளானும் பொருந்துமாற்றானும் ஆராய்ந்தவழி நிறைவுடைய இறைமைக் குணங்களையுடைய நின்னை ஒத்த பிறிதொரு பொருளின்மை கண்டதாகும்.

வணங்கி யாம் விடேங்கள் என்ன என்றது அங்ஙனம் அருமையுடையையாயிருந்தும் வலிய வந்து ஆட்கொண்டருளிய பின்னர் பிரிந்த நின்னை அடியேங்கள் வணங்கி விடமாட்டோம் என்று பற்றிக்கொண்டு பெருமகிழ்ச்சியாற் கூறத்தக்கதாக என்றவாறு. அருளுதற்கு என்பது குவ் வீகுதியீற்றுச் செயவெனெச்சம். அருளுதற்கு என்கொலோ நினைப்பது என இயைக்க. வெளிப்பட்டு அருளுதற்கு தடையாக திருவுள்ளத்துக் கருதுவது யாதோ? என்பதனால் தடை யாதொன்றும் இல்லை என்பதும் அதனால் வெளிப்பட்டு அருள் செய்ய வேண்டும் என்பதும் யாதும் தடையுளதாயின் முன்னர் வெளிப்பட்டு ஆட்கொள்ள மாட்டாய் என்பதும் போதரும்.

இதன்கண், வணங்கி யாம் விடேங்கள் என்ன வந்து நின்றருளுதற்கு நினைப்பது என்கொலோ யாதுமில்லையே வெளிப்பட் டருள்க என வேண்டிக் கொள்ளுதலால் ஆனந்தத் தழுந்தல் என்னும் எட்டாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க.

80. நினைப்ப தாக சிந்தை செல்லும் எல்லை யேய வாக்கினால்
தினைத்த னையு மாவ தில்லை சொல்ல லாவ கேட்பவே
அனைத்து லகு மாய நின்னை ஐம்புலன்கள் காண்கிலா
எனைத்தெ னைத்த தெப்பு றத்த தெந்தை பாதம் எய்தவே.

ப—ரை: எந்தை-எங்கள் தந்தையே, சிந்தை நினைப்பதாக எல்லை ஏய செல்லும்-என் மனம் நின்னை நினைந்தறிவதற்காகத் தனது ஆற்றலின் எல்லையளவும் மேற்பட்டுச் செல்லும்; நீ மனோதீதனாதலின் நின்னை அறிதல் அதனால் முடியாது. வாக்கினால் சொல்லல் ஆவ கேட்பவே-வாக்கினால் சொல்லத்தக்கன கல்வி கேள்வியால் அறியப்படுவனவே; தினைதனையும் ஆவது இல்லை-அதனால் நின்னைப்பற்றிச் சொல்வதற்குத் தினையளவும் முடிவதில்லை; அனைத்து உலகும் ஆய நின்னை-எல்லாவுலகங்களிலும் உடனாயும் வேறாயும் அமைந்த நின்னை; ஐம்புலன்கள் காண்கிலா-மெய்யின்கணுள்ள ஐம்புலன்களும் காணும் ஆற்றலுடையனவல்ல; அங்ஙனமாயின், பாதம் எய்த-நின் திருவடியை அடைய; அது எனைத்து எனைத்து-அது எவ்வெத் தன்மைகளையுடையது; எப்புறத்தது-எவ்விடத்துள்ளது அறிகிலேன் ஆதலால் அதனையடையுமாறு அருள்செய்ய வேண்டும்.

எந்தையே என்மனம் நின்னை நினைந்தறிவதற்காய்த் தனது ஆற்றலின் எல்லையளவும் மேற்பட்டுச் செல்லும்; நீ மனோதீதனாதலின் நின்னை அறிதல் அதனால் இயலாது. வாக்கினால் சொல்லத்தக்கன கல்வி கேள்விகளால் அறியப்படுவனவே; அவற்றால் நின்னைப் பற்றிச் சொல்வதற்குத் தினையளவும் முடிவதில்லை. எல்லாவுலகங்களிலும் உடனாயும் வேறாயும் அமைந்த நின்னை ஐம்புலன்களும் காணும் ஆற்றலுடையனவல்ல. நின்னுடைய திருவடியை அடைய அது எவ்வெத்தன்மைகளையுடையது, எவ்விடத்துள்ளது அறிகிலேன்; ஆதலால் அதனை அடையுமாறு அருள் செய்ய வேண்டும் என்பதாம்.

எல்லை-அளவு "நன்னா டலைவரு மெல்லை" கலி 39 : 31. சிந்தை நினைந்தறிவதற்குத் தனது ஆற்றலில் எல்லையளவும் மேற்பட்டு செல்லினும் அதனால் நினைந்தறிதற்கரியன என்பது "யாவரும் சிந்தையாலும் அறிவருஞ் செல்வனே" (சத 47) என அடிகள் அருளியவாற்றானு மறியப்படும்.

தினை-சிறுமையைக்குறிக்கும் ஓரளவை, தனை-அளவு. "இத்தனையும் வேண்டும் எமக்கே லோரெம்பாவாய்" திருவெம் 3. சிறுமைக்குத் தினைத் தனையை எடுத்துக் கூறுதலை,

"தினைத்தனை யுள்ளதோர் பூவினிற் றேன்" திருவா. கோத். 3.

"தினைத்தனைப் பொழுதும் மறந் துய்வனோ" தே. 116 : 1.

"தினைத் தனையாம் பொழுது மறந்துய்வனோ" பெரிய-திருநாவு. 174.

என வருவனவற்றினுங் காண்க.

இறைவன் அனைத்துலகும் ஆயமையை,

"பண்ணும் பதமேழும்... விண்ணும் முழுதானான்" ஞான 11 : 4.

"எல்லா வுலகமு மானாய் நீயே" நாவு 251 : 7.

"உலகெலா நீயே யாகி யமைந்தவனே" நாவு 257 : 6.

"உலகமெல்லாம் ஆயவனை" நாவு 279 : 1.

"அனைத்துலகு மானானை" நாவு 293 : 1.

"பாரொடு விண்ணும் . பகலுமாகி" சுந் 2 : 10.

எனத் தேவாரத்து வருவனவற்றாலுமறிக.

ஐம்புலன்கள் என்றது சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவற்றை உணரும் ஐம்பொறிகளை உணர்த்தியது. இறைவன் அனைத்துலகினும் உள்ளானாயினும் அவன் தன்னைக் காட்டினாலன்றி அறியமுடியாமையின் "ஐம்புலன்கள் காண்கிலா" என்றார். "மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி மயானத்தான் வார்சடையான் என்னினல்லான், ஒப்புடைய னல்லன் ஒருவனல்லன் ஓரூரனல்லன் ஓருவமனில்லி, அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும் அவனருளே கண்ணாகக் காணினல்லால், இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" (310 : 10) என அப்பரடிகள் அருளியமையுங் காண்க.

இறைவன் திருவடியின் தன்மையும் இடனும் அளந்தறிய வொண்ணா என்பார், எனைத்தெனைத்த தெப்புறத்த தெந்தை பாதம் என்றார்.

"அழ கெழுத லாகா வருட் சேவடி" நாவு 220 : 4.

"உரையா லுணரப் படாதவடி ... அகல மளக்கிற் பாரில்லாவடி" நாவு 219 : 7.

"அணியனவும் சேயனவு மல்லாவடி அடியார்கட் காரமுத மாயவடி" 219 : 9

"எழுவாய் இறுவாயிலாதன ... ஐயாறனடித் தலமே" நாவு 92 : 5.

"என்றும் நீங்காப் பிறவி நிலைகெடுத்துக் கழலா வினைகள் கழற்றுவ .........ஐயாறனடித்தலமே" நாவு 92 : 19.

எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியவாறுங் காண்க. எனைத்தெனைத்து என்பதற்கு எவ்வளவினது எவ்வளவினது எனப் பொருள் கொண்டு பிரகிருதி மாயை, அசுத்த மாயை, சுத்த மாயை என்பவற்றைக் கடந்து நிற்றல் பற்றி அங்ஙனம் கூறப்பட்டது என்பாருமுளர்.

இதன்கண், எந்தையே நின்பாதம் எய்த அது எனைத்து எனைத்து எப்புறத்தது என்பதனால் திருவடியை யடையும் ஆர்வம் புலப்படுதலின் ஆனந்தத்தழுந்தல் என்னும் எட்டாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 76.

81 எய்த லாவ தென்று நின்னை யெம்பி ரானிவ் வஞ்சனேற்
குய்த லாவ துன்க ணன்றி மற்றொ ருண்மை யின்மையின்
பைத லாவ தென்று பாது காத்தி ரங்கு பாவியேற்
கீத லாது நின்கண் ஒன்றும் வண்ணம் இல்லை யீசனே.

ப-ரை: எம்பிரான்-எங்கள் தலைவனே; நின்னை எய்தலாவது என்று-யான் நின்னை அடைந்து ஒன்றுவது எப்போது? இவ் வஞ்சனேற்கு-இவ்வஞ்சகனாகிய எனக்கு; உய்தல் ஆவது உன்கண் அன்றி மற்று ஓர் உண்மை இன்மை-அடியேனுக்கு உய்தி கூடுதல் உன்னிடத்தன்றி பிறிதொரு பொருளிடத்து உளதாந்தன்மை இன்மையின்; பைதல் ஆவது என்று பாதுகாத்து இரங்கு-நின்னை எய்தாமையால் துன்பம் எனக்கு உண்டாகின்றது என்று திருவுள்ளம் கொண்டு இரங்கிப் பாதுகாத்தருள்வாயாக; ஈசனே - முத்திச் செல்வத்தையுடையவனே; பாவியேற்கு ஈது அலாது நின்கண் ஒன்றும் வண்ணம் இல்லை-நின்னை அடையப்பெறாத தன்மையுடையேனுக்கு நீ இரங்கி யருளுகின்ற இதுவேயல்லாமல் நின் திருவடிக்கண் இயையும் வழி பிறிதில்லை.

எம்பிரானே, நின்னை அடைந்து ஒன்றுவது எப்போது? இவ்வஞ்சனேற்கு உய்தலாவது உன்னிடத்தன்றிப் பிறிதொரு பொருளிடத்து உளதாந்தன்மையின்மையின் நின்னை எய்தாமையால் எனக்குத் துன்பம் உண்டாகின்றது என்று திருவுள்ளம் கொண்டு இரங்கிப் பாதுகாத்தருள்க. ஈசனே! பாவியேற்கு நீ இரங்கி யருளுகின்ற இதுவேயல்லாமல் நின் திருவடிக்கண் இயையும் வழி பிறிதில்லை என்பதாம்.

எய்தல்-அல்லீற்றுத் தொழிற்பெயர். என்று - எப்போது. திருவருட் காட்சி நீங்கப்பெற்று அதனால் பெரிதும் இடருறும் அடிகள் அவ்விடர் நீங்கும் பொருட்டு நின்னை எய்தலாவது என்று என வினவுவாராயினர்.

உயிர்க்கு உறுதி அளித்து உய்விக்கும் தன்மை இறைவனிடத்தன்றிப் பிறிதொரு பொருட்கண் உளதாந்தன்மை இன்மையின் "உய்தலாவதுன் கண்ணன்றி மற்றொரு உண்மை யின்மையின்" என்று அருளிச் செய்வாராயினர்.

"முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு, பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன...ஐயாறனடித்தலமே" நாவு 92:1.

"இழித்தனவே ழேழ் பிறப்பு மறுத்தன்...ஐயாறனடித்தலமே" 92:2.

"கொடு நரகக் குழி நின்றருடருகைக் கொடுத்தேற்று மையாற்றனடித் தலமே" நாவு 42:4.

"துன்பக் கடலிடைத்
இன்பக் கரை முகந் தேற்றுந் திறத்தன...ஐயாறனடித்தலமே"
நாவு 92:6.

"வாராவுலக மருள வல்லாய் நீயே" நாவு 251:9.

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. உண்மை-உளதாந் தன்மை. மற்ருேர் என்றது பிறிதொரு பொருளை உணர்த்தியது. அதனை அஃறிணையாற் கூறியது இறை உயிர் உலகு என்னும் மூப்பொருள்களுள் இறைவனே உயிர்களுக்கு உய்தி அருள்பவனன்றி உலகமல்லாமையின்.

பைதல்-துன்பம். என்று-என்று கருதி. இன்மைபைதல் உண்டாவதற்கு ஏது. பாதுகாத்து இரங்கு என்பதற்கு இரங்கிப் பாதுகாத்தருள்க எனப் பொருளுரைக்க. பாவி-பாவமுடையவன். பாவம்-தன்மை. அஃது இறைவனால் ஆட்கொள்ளப்பட்டும் பின்னர் அவனைப் பிரிந்து எய்த முடியாதிருக்கும் தன்மை. பாவியேற்கு-தீவினையேற்கு எனினுமாம்.

ஈது என்றது இறைவன் இரங்கியருளுதலைச் சுட்டியது. வீட்டின்பப் பேற்றிற்கு இரங்கியருளுதலே சிறந்த ஏதுவாமாகலின் "ஈதலாது நின்கண் ஒன்றும் வண்ணம் இல்லையே" என்ருர். ஒன்றுதல் – இறைவனேடு அத்துவிதமாகக் கலத்தல்.

இதன்கண், எய்தலாவது என்று? என்றும், பைதலாவதென்று பாதுகாத்திரங்கு என்றும் வேண்டிக் கொள்ளுதலால் ஆனந்தத்தழுந்தும் ஆர்வமுடைமை பெறப்படுதலின் ஆனந்தத்தழுந்தல் என்னும் எட்டாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 77.

82. ஈசனேநீ யல்ல தில்லை யிங்கும் அங்கும் என்பதும்
பேசினேனேர் பேதமின்மை பேதை யேனென் எம்பிரான்
நீசனேனை யாண்டு கொண்ட நின்மலாவோர் நின்னலால்
தேசனேயோர் தேவருண்மை சிந்தியாது சிந்தையே.

ப—ரை: ஈசனே-முத்திச் செல்வத்தையுடையவனே; இங்கும் அங்கும் நீ அல்லது இல்லை என்பதும்-இகத்திலும் பரத்திலும் துணையான பரம்பொருள் நீ அல்லாமல் பிறிதொரு பொருள் இல்லை என்பதையும், பேதம் இன்மை-உயிர் வேறுபாடின்றி அத்துவிதமடைதலாகிய வீட்டின் இயல்பையும்; ஓர் பேதையேன் பேசினேன்-ஒன்றற்கும் பற்ருத அறிவிலியாகிய யான் எடுத்துரைத்தேன்; என் எம்பிரான்-எனக்குச் சிறப்புரிமையுடைய எங்கள் தலைவனே; நீசனேனை ஆண்டு கொண்ட நின்மலா-கீழ்மையுடையவனுகிய என்னை ஆட்கொண்டருளிய தூயோனே, தேசனே-ஞானுசாரியனே; ஓர் நின் அல்லால்-ஒப்பற்ற நின்னையல்லாமல் ஓர் தேவர் உண்மை சிந்தை சிந்தியாது-பிறிதொரு தெய்வம் உண்டு என்பதை என் மனம் நினையாது; ஆதலின் நின்னேடொன்றுமாறு அருள்செய்ய வேண்டும்.

ஈசனே இகத்திலும் பரத்திலும் துணையான பரம்பொருள். நீயேயல்லாமல் பிறிதொரு பொருள் இல்லை என்பதையும்; உயிர் வேறுபாடின்றி அத்துவிதமடைதலாகிய வீட்டின் இயல்பையும் ஒன்றுக்கும் பற்ருத அறிவிலியாகிய யான் பேசினேன்; என்பிரானே! நீசனுகிய என்னை ஆண்டு கொண்ட நின்மலா; தேசனே ஒப்பற்ற நின்னையல்லாமல் பிறிதொரு தெய்வம் உண்டு என்பதை என்மனம் நினையாது; ஆதலால் நின்னேடொன்றுமாறு அருள்செய்ய வேண்டும் என்பதாம்.

நீ யல்லது இல்லை என்றது நீயேயல்லாமல் பிறிதொரு பொருள் இல்லை என்றவாறு. ஈசனே என்று விளித்தமையால் இல்லை என்பதற்கு நின் போல் ஈசத்துவமுடைய பிறிதொரு பொருள் இல்லை எனக் கொள்க. இங்கும் அங்கும்-இகபரம் இரண்டினும், இம்மை மறுமை இரண்டினும் எனினுமாம். இங்கும் அங்கும் துணையாவார் இறைவனே என்பது,

"இகபரமுமாம் பேராளன்" ஞான 184 : 3

"துஞ்சும் போதும் துணையென வாகுமே" நாவு 153 : 10

எனத் தேவாரத்து வருவனவற்றாலுமறிக.

ஓர் பேதமின்மை என்றது முத்திநிலைக்கண் உயிர் இறைவனொடு பிரிவின்றி அத்துவிதமாய் நிற்கும் நிலையை உணர்த்தியது. பேதமின்மை யென்பதன்கண் உம்மை விரித்துரைக்க. ஓர் பேதையேன் பேசினேன் என்றது, ஒன்றுக்கும் பற்றாத அறிவிலியாகிய யான் பேரறிஞன் போல நின்னியல்பினையும் நீ அருளும் வீட்டின் இயல்பினையும் எடுத்துரைத்தேன்; அதனைப் பொறுத்தருள்க என்றவாறு. என் எம்பிரான்-எனக்குச் சிறப்புரிமையுடைய எங்கள் தலைவன். "நின்கழலிணையலாதிலேன் என் எம்பிரான்" (சத 72) என வருதலும் காண்க.

மெய்யன்பும் பக்குவ முதிர்ச்சியுமாகிய உயர்வு நன்குடைய அடிகள் தம்மைத் தாழ்த்திக் கூறும் இயல்புபற்றி "நீசனேனை" என்றார். "யாதுமொன்றல்லாப் பொல்லா நாயான நீசனேனை ஆண்டாய்க்கு" (சத 51) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க நின்மலன்-அழுக்கற்றவன்; என்றது இயல்பாகவே பாசங்களினின்று நீங்கினவன் என்றவாறு. ஓர் இரண்டனுள் முன்னது ஒப்பற்ற என்னும் பொருளிலும் பின்னது ஒரு என்னும் பொருளிலும் நின்றன. தேசன்-ஒளிவடிவினன்.

எப்பொழுதும் இறைவனைச் சிந்தித்த பயிற்சி வயத்ததான அடிகள் சிந்தை இறைவனையன்றிப் பிறிதொரு தெய்வமுண்மையைச் சிந்தியாமையின் "நின்னலால் ஓர் தேவருண்மை சிந்தியாது சிந்தையே" எனச் சிந்தித்தலைச் சிந்தையின் செயலாக அருளிச் செய்தனர். "நற்றவாவுனை நான் மறக்கினுஞ் சொல்லு நா நமச்சிவாயவே" தே 48 : 1 எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியவாறுங் காண்க. அடிகள் பிற தெய்வத்தைச் சிந்தியாமை "உள்ளேன் பிற தெய்வ முன்னையல்லா தெங்கள் உத்தமனே (சத 2) என்பதனாலுமறிக. "நச்சே னொருவரை நானுமை யல்லால் நாட்டியத்தான் குடி நம்பீ" (தே 15 : 2) "எந்தாய் நின்னை யல்லா லினியாரை நினைக்கேனே" (தே 24 : 7) எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியமையுங் காண்க. சிந்தை சிந்தியாது - மனஞ் சிந்தியாது. நின்னோடொன்றுமாறு அருள் செய்ய வேண்டுமென்பது குறிப்பெச்சம்.

இதன்கண், நீசனேனை யாண்டு கொண்ட நின்மலா, தேசனே என் சிந்தை நின்னலல்லால் ஓர் தேவருண்மை சிந்தியாது. ஆதலால் இரங்கி நின்னை ஒன்றும் வண்ணம் அருள் செய்ய வேண்டும் என்பது பெறப்படுதலின், ஆனந்தத்தழுந்தல் என்னும் ட்டாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 78.

83. சிந்தை செய்கை கேள்வி வாக்குச் சீரில் ஐம்பு லன்களால்
முந்தை யான காலம் நின்னை யெய்தி டாத மூர்க்க னேன்
வெந்தை யாவி ழுந்தி லேன்என் உள்ளம் வெள்கி விண்டிலேன்
எந்தை யாய நின்னை யின்னம் எய்த லுற்றி ருப்பனே.

ப-ரை: ஐயா!-வழிபாட்டிற்குரிய இறைவனே; சிந்தை செய்கை கேள்வி வாக்கு சீர் இல் ஐம்புலன்களால்-மனம் செயல் கேள்வி மொழி சிறப்பில்லாத ஐம்பொறிகள் ஆகிய இவற்ருல்; முந்தை ஆன காலம்-நின்னால் ஆட்கொள்ளப்பட்ட முற்காலத்தில்; நின்னை எய்திடாத மூர்க்கனேன்-நின்னை உடனே அடைதற்கேதுவாகிய பெரிய தவத்தைச் செய்யாத அறிவிலியாகிய யான்; விழுந்து வெந்திலேன்-தீயில் விழுந்து வெந்திலேன்; என் உள்ளம் வெள்கி விண்டிலேன்-நீ ஆட்கொண்டு பிரிந்தமையால் என் மனம் நாணி உடைந்து இறந்திலேன்; எந்தையாகிய நின்னை-எமது தந்தையாகிய நின்னை; இன்னம் எய்தல் உற்று இருப்பன்-இன்னமும் அடைதற்கு முயன்று கொண்டு இருப்பேனுயினேன்.

ஐயா, சிந்தை செய்கை கேள்வி வாக்கு சிறப்பில்லாத ஐம்பொறிகள் ஆகிய இவற்ருல் முற்காலத்தில் நின்னை எய்திடாத மூர்க்கனுகிய யான் தீயில் விழுந்து வெந்திலேன்; என் உள்ளம் வெள்கி உடைந்து இறந்திலேன்; எந்தையாகிய நின்னை இன்னமும் அடைதற்கு முயன்று கொண்டிருக்கிறேன். இந்நிலை கண்டு இரங்கியருள வேண்டும் என்பதாம்.

ஐம்புலன்களால் என்புழி ஆல் என்றது மூன்றனுருபைச் சிந்தை முதலியவற்ரேடும் கூட்டி எண்ணும்மைகளை விரித்துரைக்க. கருவிகளுள் சிந்தை சிறந்தமை பற்றி அதனை முதலிற் கூறினர். செய்கை-மனம் மொழி மெய்களுள் மெய்யின் செயல். கேள்வி-கேட்டறியும் அறிவு. 'சீரில்' என்பது நடுநிலை விளக்காக நின்று சிந்தை செய்கை கேள்வி வாக்கு என்பவற்ரேடும் இயையும். மனமொழி மெய்களையும் அறிவையும் ஐம்புலன்களையும் சீரில் என அடிகள் கூறியது இறைவன் வலிய வந்து ஆட்கொள்ளுதற்கு ஏதுவாகிய தவத்தைச் செய்த இக்கருவிகள், உடனே இறைவனை அடைதற்கும் ஏதுவான மிக்க தவத்தைச் செய்யாமை பற்றி என்க. புலன்களாகிய காரியங்கள் அவற்றையுணரும் கருவிகளாகிய பொறிகளுக்கு ஆகுபெயர்.

முந்தை-முன். முந்தையான காலம்-முற்காலம். ஈண்டு அடிகள் இறைவனுல் ஆட்கொள்ளப்பட்ட நாளைக் குறித்தது. அதனை முந்தை

யான காலம் என்று அடிகள் கூறியது இறைவனைப் பிரிந்த பின் கழிந்த நாட்கள் நெடுங்காலம் போலத் தோன்றியமை பற்றி என்க. சிந்தை செய்கை கேள்வி வாக்கு ஐம்புலன்களால் எய்திடாத என்பதற்கு அக் கருவிகளால் இறைவனை உடனே எய்துதற்குரிய பெரிய தவத்தைச் செய்யாத என்பது பொருளாகும். அங்ஙனமன்றிச் சீரில்லாத அக்கருவிகளை யுடைமையால் நின்னை அடையமாட்டாத என உரைக்கலாகாதோவெனின் அவற்றையுடைய அடிகளை இறைவன் வலிய வந்து ஆட்கொண்டது எங்ஙனம் என எதிர்வினவுக.

மூர்க்கன்-அறிவிலி. "மூத்தி நெறியறியாத மூர்க்கரொடு" அச்சோ 1. வெந்து விழுந்திலேன் என்பதனை, விழுந்து வெந்திலேன் என மாறிக் கூட்டிப் பொருள் உரைக்கப்பட்டது. வேதலாகிய தொழில் பற்றி வேதற்கு இடன் தீ யென்பது பெறப்பட்டது. "தாயிலாகிய இன்னருள் புரிந்தவென் தலைவனை நனி காணேன் தீயில் வீழ்கிலேன் திண்வரை யுருள்கிலேன்" (சத 39) என அடிகள் அருளியமையுங் காண்க.

வெள்கி-நாணி. "வில்வினை மேருவில் வைத்தவன் தில்லைத் தொழாரின் வெள்கி" திருக்கோவை 26. உள்ளம் வெள்கி-மனம் நாணி. நாணம் என்னையெனில் இறைவன் வலியவந்து ஆட்கொண்டும் உடனே கதி அருளாது அடிகளைப் பூமியில் விட்டுப் பிரிந்தமை பற்றி யுண்டாகியது.

"ஏல என்னை யீங்கொழித் தருளி
.....................................
இறைவன் ஈண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்
ஒலிதரு கயிலை யுயர்கிழ வோனே" கீர்த்தி 129-146.

என அடிகள் அருளியவாறுங் காண்க. உள்ளம் வெள்கி விண்டிலேன் என்றது நாணத்தினால் மனம் உடைந்து இறக்கப் பெற்றிலேன் என்றவாறு.

இன்மை எய்தலுற்று இருப்பன் என்றது வெந்து விழுதல், வெள்கி விள்ளுதல் முதலியன செய்யமாட்டாத யான் இன்னும் நின்னையடைய முயன்று கொண்டிருப்பே னாயினேன் என்றவாறு.

இதன்கண், சிந்தை முதலியவற்றால் எய்திடாத மூர்க்கனேன் வெந்து விழுந்திலேன்; உள்ளம் வெள்கி விண்டிலேன்; இன்மை எய்தலுற்று இருப்பன், என்பனவற்றால் என்னிலைமை கண்டிரங்கி நின்னை எய்துமாறு அருள் செய்ய வேண்டும் என்பது புலப்படுதலின் ஆனந்தத்தழுந்தல் என்னும் எட்டாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 79.

84. இருப்பு நெஞ்ச வஞ்ச னேனை ஆண்டு கொண்ட நின்னதாட்
கருப்பு மட்டு வாய்ம டுத்தெ னைக்க லந்து போகவும்
நெருப்பும் உண்டு யானும் உண்டி ருந்த துண்ட தாயினும்
விருப்பம் உண்டு நின்கண் என்கண் என்பதென்ன விச்சையே.

ப-ரை: இருப்பு நெஞ்ச வஞ்சனேனை-இரும்பு போன்ற வலிய நெஞ்சத்தையுடைய வஞ்சகனுகிய என்னை; ஆண்டு கொண்ட நின்ன தாள்-ஆட்கொண்டருளிய நின்னுடைய திருவடியின்பமாகிய; கருப்பு மட்டு வாய் மடுத்து-கருப்பஞ்சாற்றை உண்பித்து; என்னை கலந்து போகவும்-என் உயிரோடு கலந்து நீ பின்னர் பிரிந்து செல்லவும்; நெருப்பும் உண்டு-நெருப்பும் உள்ளது; யானும் உண்டு இருந்தது உண்டு-யானும் அந்நெருப்பில் வீழ்ந்து இறந்தொழியாமல் உணவுகளை உண்டு உயிர் வாழ்ந்திருந்ததும் உண்டு; அது ஆயினும்-அது அங்ஙனமாயினும்; நின்கண் என்கண் விருப்பம் உண்டு என்பது-நின்னிடத்து எனக்கு விருப்பம் உண்டு என்று சொல்வது; என் அவிச்சையே-என் அறியாமையேயாம்.

இரும்புபோலும் வலிய நெஞ்சத்தையுடைய வஞ்சகனுகிய என்னை ஆட்கொண்டருளிய நின்னுடைய திருவடியின்பமாகிய கருப்பஞ்சாற்றை உண்பித்து என் உயிரோடு கலந்து நீ பின்னர் பிரிந்து போகவும் நெருப்பும் உள்ளது; யானும் அந்நெருப்பில் விழுந்து இறந்தொழியாமல் உண்டு உயிர் வாழ்ந்திருந்ததும் உண்டு. அங்ஙனமாயினும் நின்கண் எனக்கு விருப்பம் உண்டு என்று சொல்வது என் அறியாமையேயாம் என்பதாம்.

கரும்பு இரும்பு என்பன எதுகை நோக்கி வலித்தல் விகாரம் பெற்றன. அன்பினல் குழையாத வலிய நெஞ்சமுடையனே் என்பார். "இருப்பு நெஞ்ச வஞ்சனேனை" என்ருர். "இரும்பு தரு மனத்தேனை" (ஏசறவு 1) என அடிகள் பிருண்டு அருளியமையுங் காண்க. "வன்னெஞ்சமாம் இரும்பும் குழைத்த மதுரைப்பிரான்" (85) என மதுரைக் கலம்பகத்து வருதலுங் காண்க. வஞ்சனேனை—வஞ்சகமுடையனுகிய என்னை. "ஆண்டு நீ யளித்த அருளினை மருளினன் மறந்த வஞ்சனேன்" (வாழாப் 6) என அடிகள் அருளியமையுங் காண்க. நின் என்பது நின்ன என விரித்தல் விகாரம் பெற்றது. அ, ஆரும் வேற்றுமைப் பன்மை உருபு. தாட் கருப்பு மட்டு—திருவடியின்பமாகிய கருப்பஞ்சாறு. இனி நின்னதாட் கருப்பு மட்டு என்பது "நற்பகற் சோமன்" (திருக்கோவை 168) என் புழிப்போல விகார வகையான் வலிந்து நின்றது எனக்கொண்டு தாள் மடுத்து கலந்து போகவும் என உரைப்பினும் அமையும். ஈண்டு கருப்பு மட்டு என்பதற்கு கருப்பஞ்சாறு போன்ற திருவருள் இன்பம் எனக் கொள்க. வாய் மடுத்து—உண்பித்து. ஒரு சொல். கருப்பு மட்டு என்றதற்கு எற்ப வாய் மடுத்து என்ருராயினும் திருவடியின்பத்தை அநுபவிக்கச் செய்து என்பது கருத்தாகக் கொள்க.

கலந்து போகவும்-என்னுயிரோடு கலந்து பிரிந்து செல்லவும். உயிரொடு கலந்தமை "ஊனு ருடல் புகுந்தான் உயிர் கலந்தான் உளம் பிரியான், தேனுர் சடை முடியான்" (உயிருண்ணிப் 2) என அடிகள் அருளியமையா னுமறிக.

பிரிவுத் துயரை ஆற்ருது வீழ்ந்து உடலை நீக்குதற்கு நெருப்பு உள தாகவும் அங்ஙனம் செய்யாது யான் உண்டு உலகில் வாழ்ந்திருந்ததுண்டு என்பார், "நெருப்பும் உண்டு யானும் உண்டிருந்த துண்டு" என்ருர். "ஊனிலாவியை ஓம்புதற் பொருட்டினும் உண்டுடுத் திருந்தேனே". "பொய்யனேனுன் உண்டுடுத்திங் கிருப்பதா னன் போரேறே" (சத 40:52) என அடிகள் பிருண்டு அருளியமையுங் காண்க.

அதாயினும் என்றது நெருப்பில் வீழ்ந்து இறவாமல் உயிர் வாழ்ந் திருந்தும் என்றவாறு. நின்கண் என்னும் ஏழாவது நான்காவதன் பொருளில் வந்தது. நின் பிரிவுத் துயரை ஆற்ருது தீயில் விழுந்து இறவாமல் யான் உண்டு உயிர் வாழ்ந்து கொண்டு நின்பால் எனக்கு அன்பு உண்டு என்று கூறுதல் என் அறியாமையே என்பார், "விருப்பம் உண்டு நின் கண் என் கண் என்ப தென்ன விச்சையே" என்ருர். அவிச்சை அறியாமை. என்ன விச்சையே என்பதை, என்ன விச்சையே எனப் பிரித்து என்ன வித்தையோ என்றுரைப்பாருமுளர். இரங்கி யருள்செய்யவேண்டு மென்பது குறிப்பெச்சம்.

இதன்கண், விருப்பம் உண்டு, நின்கண் என்கண் என்பது என் அவிச்சை. அதனுல் இரங்கியருள்செய்ய வேண்டும் என்பதனுல் ஆனந் தத்தழுந்தும் அவா புலப்படுதலின் ஆனந்தத்தழுந்தல் என்னும் எட்டாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 80.

---

## 9. ஆனந்த பரவசம்

இறைவன் திருவடி அருளாகிய பேரின்பத்தில் மூழ்கி தன் தன்மை நீங்குதலை அடிகள் விரும்பியது. பரவசம்-தன்வசமிழத்தல்.

85. விச்சுக் கேடுபொய்க் காகா தென்றிங் கெனைவைத்தாய்
இச்சைக் கானுர் எல்லாரும் வந்துன் தாள்சேர்ந்தார்
அச்சத் தாலே ஆழ்ந்திடு கின்றேன் ஆரூரெம்
பிச்சைத் தேவா என்னுன் செய்கேன் பேசாயே.

ப·ரை : ஆரூர் எம் பிச்சை தேவா-திருவாரூரில் எழுந்தருளியிருந்து நின்னை வந்தடைகின்ற மெய்யன்பர்களுக்குத் திருவருளாகிய பிச்சையை

ஈந்தருளும் எங்கள் தியாகேசமூர்த்தியே; பொய்க்கு விச்சு கேடு ஆகாது என்று இங்கு என்னை வைத்தாய்-பொய்யாகிய இவ்வுலகவாழ்விற்கு வித்தும் கெட்டொழிதல் பின்னர் ஆக்கத்திற்குக் கூடாது என்று கருதியோ அடியேனை இவ்வுலக வாழ்க்கையில் இருத்தினாய்; இச்சைக்கு ஆனார் எல்லாரும் வந்து உன் தாள் சேர்ந்தார்-நின் திருவருள் விருப்பத்திற்கு உரியராகிய மெய்யடியார்கள் எல்லாரும் நின்பால் வந்து நின் திருவடிகளை அடைந்தனர்; அச்சத்தாலே ஆழ்ந்திடுகின்றேன்-இவ்வுடலுடன் இவ்வுலகில் வாழ்வதால் நின் திருவடியை யடைதல் கிடைக்குமோ கிடையாதோ என்னும் அச்சத்தினாலும் கிடையாதவழி மீண்டும் பிறந்திறந்து உழல வேண்டுமே என்னும் அச்சத்தினாலும் துன்பத்தில் மூழ்குகின்றேன். நான் என் செய்கேன்-யான் யாது செய்வேன்; பேசாயே-அஞ்சி வருந்தாது இங்கே வா என்று நின்பால் என்னை அழைத்து அருளவேண்டும்.

ஆரூர் எம் பிச்சைத்தேவா, நிலையில்லாத இவ்வுலக வாழ்விற்கு வித்துக் கெட்டொழிதல் கூடாது என்று கருதியோ அடியேனை இவ்வுலக வாழ்க்கையில் இருக்கச் செய்ததனை? நின் திருவருள் விருப்பத்திற்கு உரியராகிய மெய்யடியார்கள் எல்லாரும் நின்பால் வந்து நின் திருவடிகளை எய்தினர். யான் அச்சத்தாலே துன்பத்தில் ஆழ்ந்திடுகின்றேன். யான் யாது செய்வேன். என்னை நின்பால் அழைத்து அருள் செய்ய வேண்டும் என்பதாம்.

விச்சு-வித்து "விச்சதின்றியே விளைவு செய்குவாய் (சத 96) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. உலக வாழ்க்கையைப் பொய் என்றது நிலையின்மையாகும். வித்துக் கெட்டுவிட்டாற் பின்னர் தாவரம் தோன்றாதவாறு போல இவ்வுலக வாழ்விற்கு வித்தாகிய உடல் கெட்டுவிட்டால் உலக வாழ்வு கெட்டுவிடும்; ஆதலால் வித்துக்கெட விடக் கூடாது என்று கருதியோ என்னை இவ்வுலக வாழ்வில் இருக்கச் செய்தனை என்பார், "விச்சுக் கேடு பொய்க்காகா தென்றிங் கெனைவைத்தாய்" என்றார். என்றோ என்னும் ஓகாரம் கெட்டது. இச்சைக்கு ஆனார்-நின் திருவருள் விருப்பத்திற்கு உரியராயினார்; இனி விருப்புடன் செய்யும் தொண்டிற்கு உரியராயினார் என்பாருமுளர். தாள் சேர்ந்தார்-முத்தியாகிய திருவடியைச் சேர்ந்தார். "அடியா ரானா ரெல்லாரும் வந்துன் தாள் சேர்ந்தார்" "அறவே நின்னைச் சேர்ந்த அடியார் மற்றொன்றறியாதார், சிறவே செய்து வழி வந்து சிவனே நின் தாள் சேர்ந்தாரே" (சத 83 : 86) என வருவன காண்க. திருவடியே முத்தியாதல் "முத்தித் தாள் மூவா முதல்வர்" (திருவிடைமூம் 7 : 40) எனப் பதினொராம் திருமுறையில் வருதலானுமறிக.

ஆழ்ந்திடுகின்றேன் என்பதற்கு ஏற்ப அச்சத்தால் வரும் துன்பத்தை வெள்ளமாகக் கொள்க.

ஆரூர்-திருவாரூர் என்னும் தலம். இது நிலமடந்தைக்கு இருதய கமலம் போன்றது. "மேதினிக் காதன் மங்கை யிதய கமலமாம், மாதொர்

பாகனுர் ஆரூர்'' எனப் பெரிய புராணத்து வருதலானும் அறிக. ''ஒரு ரென்றுலகங்களுக்கெல்லாமு ரைக்கலாம் பொருளாய்'' (தே. சுந் 59 : 11) என்பதனுல் இதன் பெருமை அறியப்படும். பிக்ஷா என்பது பிக்கை என்ருகிப் பின்னர் பிச்சை எனத்திரிந்தது. பிச்சைத் தேவா என்பது பிச்சாடன மூர்த்தியே எனப் பொருள் தருவதாயினும் ஆரூரெம் பிச்சைத் தேவா என்றதனுல் திருவாரூரில் எழுந்தருளியிருந்து பக்குவான்மாக்களுக்குத் திருவருட் பிச்சையைக் கொடுத்தருளுகின்ற கொடையரசாகிய தியாகராசமூர்த்தியைக் குறித்தது. ''பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில் ஆரூரா என்றே போற்ரு நில்லே'' (நாவு 244 : 7) எனத் தேவாரத்து வருதலும் காண்க. அச்சத்தாலே ஆழ்ந்திடுகின்ற நிலையில் யான் யாது செய்வேன், அஞ்சாது இங்கே வா என்றழைத்து அருள் செய்ய வேண்டும் என்பார், ''என்னுன் செய்கேன் பேசாயே'' என்ருர்.

இதன்கண், பேசாயே என்பதனுல் அஞ்சி வருந்தாது இங்கே வா என்று அழைத்தருளாயோ என்பது பெறப்படுதலின் ஆனந்த பரவசம் என்னும் ஒன்பதாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 81.

86. பேசப் பட்டேன் நின்னடி யாரில் திருநீறே
பூசப் பட்டேன் பூதல ரால்உன் அடியானென்
றேசப் பட்டேன் இனிப்படு கின்ற தமையாதால்
ஆசைப் பட்டேன் ஆட்பட் டேன்உன் அடியேனே.

ப-ரை: உன் அடியேன்–உன் அடியவனுகிய யான்; நின் அடியாரில் பேசப்பட்டேன்–உன் மெய்யடியாருள் ஒருவனுக வைத்து மெய்யன்பர்களாற் புகழ்ந்துரைக்கப்பட்டேன்; திருநீறே பூசப்பட்டேன்–ஞானுசாரியனுக எழுந்தருளி வந்த நின்னுல் பேரின்பப்பேற்றிற்கு அறிகுறியாகிய திருவெண்ணீறு பூசப்பட்டேன்; பூதலரால் உன் அடியான் என்று ஏசப்பட்டேன் - பூமியிலுள்ளவர்களால் இவன் தன் அமைச்சுரிமையை விடுத்து உனக்கு அடியவனுனவன் என்று இகழப்பட்டேன்; இனி படுகின்றது அமையாதால்-இனி யான் துன்பப்படுவது நின் திருவருட்டிறத்திற்குப் பொருந்தாது; ஆட்பட்டேன் ஆசைப்பட்டேன்–உனக்கு ஆட்பட்டவனுகிய யான் வீட்டின்பப் பேற்றைப் பெற ஆசைப்பட்டேன். அதனைத் தந்தருள்க.

உன் அடியவனுகிய யான் உன் அடியாருள் ஒருவனுக வைத்து மெய்யன்பர்களாற் புகழ்ந்துரைக்கப்பட்டேன்; ஞானுசாரியனுக எழுந்தருளி வந்த நின்னுல் திருநீறு பூசப்பட்டேன்; பூமியிலுள்ளவர்களால் இவன் தன் அமைச்சுரிமையை விடுத்து உனக்கு அடியவனுனவன் என்று இகழப்பட்டேன். இனி யான் துன்பப்படுவது நின் திருவருட்டிறத்திற்குப் பொருந்தாது. உனக்கு ஆட்பட்டவனுகிய யான் வீட்டின்பப் பேற்றைப் பெற ஆசைப்பட்டேன். அதனைத் தந்தருளுக என்பதாம்.

பேசப்படுதல்-புகழ்ந்துரைக்கப்படுதல். இறைவன் குருந்தமர நிழலில் ஞானாசாரியனாக எழுந்தருளி வந்து ஆட்கொண்ட காலத்து இறைவனால் அடிகளுக்குத் திருவெண்ணீறு அணியப்பட்டமையின் "திருநீறு பூசப் பட்டேன்" என்றார். என்னையுந் தன் சுண்ண வெண்ணீறணிவித்துத் தூ நெறியே சேரும் வண்ணம், அண்ணலெனக்கருளியவாறார் பெறுவார் அச்சோவே" (அச்சோ 4) என அடிகள் பிறிதோரிடத்து அருளியதும் ஈண்டறியற்பாலது. திருநீறு-வீடு பேற்றிற்கு அறிகுறி. அதனால் அதற்கு 'விபூதி' என்னும் பெயருண்மையுமறிக. பூசப்பட்டேன் என்றதன் ஆற்ற லால் பூசற்கு வினை முதலாகிய நின்னால் என்பது வருவிக்கப்பட்டது.

பூதலர் என்றது ஈண்டுப் பூவுலகத்துள்ள பொது மக்களைக் குறித்தது. ஏசப்படுதல்-முதன் மந்திரியாகிய பதவியைக் கைவிட்டுச் சிவனுக்கு அடி யவனாகி அலைந்து திரியும் அறிவிலி என இகழப்படுதல். "நாடவர் பழித் துரை பூணதுவாக" (போற் 69-70) "பித்தனென்றெனை யுலகவர் பகர்வ தோர் காரணமிது கேளீர்" (அதிசய 4) என்பன ஈண்டறியற்பாலன. உன் அடியானென்றேசப்பட்டேன் என்றது உன் அடியனாகிய எனக்கு வரும் துன்பத்தை நீக்கிப் பாதுகாத்தல் நின்மேலது என்பன உட்கொண்டு.

படுத்தல்-துன்பப்படுதல். அமையாது என்றது நின்திருவருட்டிறத் திற்குப் பொருந்தாது என்றவாறு. ஆல்-அசை. ஆட்பட்டேன்-ஆசைப் பட்டேன் என மாறிக் கூட்டி எழுவாயும் பயனிலையுமாகக் கொள்க. ஆசைப்பட்டேன் என்பதில் ஆசைக்குரிய வீடு பேற்றின்பம் வருவிக்கப் பட்டது.

இதன்கண், வீடு பேற்றின்பத்தினைப் பெற ஆசைப்பட்டேன் என்ற தனால் ஆனந்த பரவசம் என்னும் ஒன்பதாம் பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 82.

87\. அடியேன் அல்லேன் கொல்லோ தானெனை ஆட்கொண்டிலை கொல்லோ
அடியா ரானார் எல்லாரும் வந்துன் தாள் சேர்ந்தார்
செடிசேர் உடலம் இதுநீக்க மாட்டேன் எங்கள் சிவலோகா
கடியேன் உன்னைக் கண்ணாரக் காணுமாறு காணேனே.

ப-ரை: எங்கள் சிவலோகா-எங்கள் சிவலோகநாதனே, அடியார் ஆனார் எல்லாரும் வந்து உன் தாள் சேர்ந்தார்-உன் மெய்யடியாராயினார் எல்லோரும் நின்பால் வந்து நின் திருவடி நிழலை அடைந்தனர். செடி சேர் உடலம் இது நீக்கமாட்டேன்-துன்பத்தினைத் தருகின்ற உடலமா கிய இதனை ஒழிக்கவும் மாட்டேன்; கடியேன்-கசிவில்லாத கடின மனத்தை யுடையவனாகிய யான்; உன்னை கண் ஆர காணும் ஆறு காணேன்-நிலை பேறான பேரின்பத்தினைத் தரும் நின்னைக் கண் குளிரக் காணும் வழியை

யும் கண்டிலேன்; ஆதலால், அடியேன் அல்லேன் கொல்லோ-யான் நினக்கு அடியேன் அல்லேனோ? தான் என்னை ஆட்கொண்டிலை கொல்லோ-நீ தான் என்னை ஆட்கொண்டதில்லையோ?

எங்கள் சிவலோகா, உன் மெய்யடியாராயினோர் எல்லாரும் வந்து உன் திருவடி நிழலை அடைந்தனர். செடிசேர் உடலமாகிய இதனை ஒழிக்கவும் மாட்டேன்; கடியவனாகிய யான் உன்னைக் கண்ணாரக் காணும் வழியையும் கண்டிலேன்; ஆதலால் யான் நினக்கு அடியேன் அல்லேனோ? நீ தான் என்னை ஆட்கொண்டிலை கொல்லோ? ஆட்கொண்டதுண்டாயின் நின்னைக் காணுமாறு காட்டியருள்க என்பதாம்.

இறைவனுடன் போந்த மெய்யடியார்கள் எல்லாரும் இறைவன் தாளைச்சேர, தாம் அங்ஙனம் சேராமைபற்றி, அடியேனல்லேன் கொல்லோ தானெனை ஆண்டிலை கொல்லோ, என்றருளிச் செய்வாராயினர். "அரத்த மேனியாய் அருள் செய் அன்பரும் நீயும் அங்கெழுந் தருளி இங்கெனை இருத்தினாய் முறையோ?" (சத 93) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க. கொல் இரண்டும் அசைநிலை. கொண்டது என்னும் முற்றுவினை கொண்டு எனச் செய்யுள் விகாரத்தால் திரிந்து நின்றது. அடியாரானார் என்றது இறைவனுடன் போந்த மெய்யடியார்களை. உன் தாள் சேர்ந்தார் - அவர்கள் நின் திருவடி நிழலை யடைந்தனர்.

"அன்றுடன் சென்ற அருள்பெறு மடியவர்
ஒன்ற ஒன்ற உடன் கலந் தருளியும்
..............................................
பாதம் எய்தினர் பாதம் எய்தவும்' கீர்த்தி 130-7.

என அடிகள் அருளியவாறுங் காண்க.

அடியாரானார் நின் தாள் சேர்ந்தார், உடலம் இது நீக்கமாட்டேன் என்றது நின் மெய்யடியாராயினோர் நின் திருவடி நிழலை அடைந்தனர்; யானோ இவ்வுடலோடிருந்து வருந்துவேனாயினேன்; இதனை ஒழிக்கவும் மாட்டேனாயினேன் என்றவாறு.

"அடியார் சிலருன் அருள் பெற்றார் ஆர்வம் கூர யான் அவமே
முடையார் பிணத்தின் முடிவின்றி முனிவால் அடியேன்
மூக்கின்றேன்" (பிராத்த 2)

"அருளா ரமுதப் பெருங்கடல்வாய் அடியா ரெல்லாம் புக்கழுந்த
இருளா ராக்கை இது பொறுத்தே எய்த்தேன் கண்டாய் எம்மானே"
(பிராத்த 3)

செடி-பாவம். "செடியேறு தீமைகள் எத்தனையும் செய்திடினும்" (குலாப் 2) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. "தீவினை மறமே செடியே யகமே துரிதங் கலிட்டம் பாவமாமே" (7-140) எனப் பிங்கலந்தை கூறுதலுங் காண்க. செடி ஈண்டுப் பாவத்தின் பயனாய துன்பத்தை

உணர்த்தியது. உடலம் துன்பத்தினைப் பயத்தலின் செடி சேருடல் என்றார். "செடிசே ருடலைச் சிதையாதது எத்துக்கு" (குழைத் 2) என வருதலும் காண்க. உடலம் - உடல், "வம்பு பழுத்துடலம் மாண்டிங்ஙன் போகாமே" (குலாப் 6) என வருதலும் காண்க.

சிவலோகத்தை அடைதற்குத் தடையாயுள்ள செடிசேருடலை நீக்கக் கருதியும் அதனை நீக்கமாட்டாமையின் "செடிசேருடலம் இது நீக்க மாட்டேன்" என்றார். "செடிசே ருடலைச் செலநீக்கிச் சிவலோகத்தே நமைவைப்பான்" (யாத் 4) என்பதனால் சிவலோகத்தையடைதற்கு உடலம் தடையாதலறிக. உடலை நீக்க மாட்டேன் என்றார், உடலை நீக்கின் அது தற்கொலையாகிய பாவத்தைத் தருவதுடன் கோலமார் தரு பொதுவினில் வருகென்ற கட்டளையைக் கடந்த தீமையையும் தருதல் பற்றி யென்க. நீக்கவும் என்ற உம்மை தொக்கது.

கடியேன் - உருக்கமில்லாத நெஞ்சுடையேன். "கல்வகை மனத்தேன்" (சத 48), "கல் நேரனைய மனக்கடையாய" (ஆனந்த 1) என வருவன காண்க. கடியேன் என்று அடிகள் தம்மைக் கூறுதலை "கடியேனுடைய கடுவினையைக் களைந்து" (பிரார்த்த 2) என்புழியும் காண்க.

கண்ணாரக் காணல் - கண்குளிரக் காணல். என்றது நன்றாகக் காணல். ஞானாசாரியனாக எழுந்தருளி வந்த திருக்கோலத்தை மீண்டும் கண்ணாரக் காண்டற்குரிய நெறியையும் அறிந்திலேன் என்பார் "காணுமாறு காணேன்" என்றார். காணுமாறும் என்னும் உம்மை தொக்கது. காட்டியருளுதி என அவாய் நிலையால் வருவித்து முடிக்க. இங்ஙனம் காட்டியருளுதி என வேண்டியருளுதல் இறைவன் கட்டளையைக் கடந்ததாகாதோவெனின் இறைவனைப் பிரிந்த ஆற்றாமை மிகுதியால் வேண்டிக் கொள்ளப்பட்டதாகலின் ஆகாதென்க.

இதன்கண், கண்ணாரக் காணுமாறு காணேன் காட்டியருளுதி என வேண்டிக் கொள்ளுதலால் ஆனந்த பரவசம் என்னும் ஒன்பதாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க.

88. காணு மாறு காணேன் உன்னை அந்நாட் கண்டேனும்
பாணே பேசி யென்றன்னைப் படுத்ததென்ன பரஞ்சோதி
ஆணே பெண்ணே ஆரமுதே அத்தா செத்தே போயினேன்
ஏணுண் இல்லா நாயினேன் என்கொண் டெழுகேன் எம்மானே.

ப-ரை: பரஞ்சோதி-மேலான ஒளிப்பிழம்பாக உள்ளவனே; ஆணே, பெண்ணே ஆர் அமுதே - ஆணாகவும், பெண்ணாகவும் அரிய அமுதமாகவும் உள்ளவனே; அத்தா - எங்கள் தந்தையே; எம்மானே - எங்கள் தலைவனே; உன்னை அந்நாள் கண்டேனும் - உன்னை ஆட்கொண்டருளிய அந்நாளில் காணப்பெற்றும்; காணும் ஆறு காணேன் - இப்பொழுது உன்னைக் காணும் நெறியைக் கண்டிலேன்; பாணே பேசி என்தன்னை படுத்தது

என்ன - இச்சக வார்த்தையைப் பேசி என்னை அகப்படுத்திக் கொண்டது யாது பயன் கருதி; அத்தா செத்தே போயினேன் - எங்கள் தந்தையே நின் பிரிவைப் பொருது இறந்து போகும் நிலையிலுள்ளேன்; ஏண் நாண் இல்லா நாயினேன் - வலிமையும் நாணமும் இல்லாத நாயினேன்; என் கொண்டு எழுகேன் - எதனைப் பற்றுக் கோடாகக் கொண்டு உய்ந்தெழுவேன்.

பரஞ்சோதி, ஆணாகவும் பெண்ணாகவும் அரிய அமுதமாகவும் உள்ள வனே, எம்மானே, ஆட்கொண்ட நாளில் உன்னை காணப்பெற்றும் இப் பொழுது உன்னைக் காணும் நெறியைக் கண்டிலேன், பாணே பேசி என்னை அகப்படுத்திக் கொண்டது யாது பயன் கருதி? அத்தா, நின் பிரி வைப் பொருது செத்துப் போகும் நிலையிலுள்ளேன்; வலியும் நாணமும் இல்லாத நாயினேன் எதனைப் பற்றுக் கோடாகக் கொண்டு எழுவேன்; யான் பற்றுகப் பற்றி எழுதற்கு நின் அருளன்றிப் பிறிதொன்றுமில்லை என்பதாம்.

உன்னை அந்நாட் கண்டேனும் காணும் ஆறுகாணேன் என்றது திருப்பெருந்துறையிற் குருந்த மரநிழலில் ஆட்கொண்டருளிய அந்நாளில் உனதருளால் உன்னைப் காணப்பெற்றும் இப்பொழுது காணும் நெறியைக் காணாதவனாயினேன், என்றவாறு. அந்நாட் கண்டமை "கண்ணால் யானுங் கண்டேன் காண்க" (திருவண்ட 581) "கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன் கண்கள் களிகூர", "நிகழா நின்ற திருமேனி காட்டி என்னைப் பணி கொண்டாய்" (குழைத்த 9; 10) என வருவன வற்றாலும் அறிக. காணுமாறு காணாமை, "கடியேன் உன்னைக் கண்ணா ரக் காணுமாறு காணேன்" (சத 83) என்பதனாலுமறிக. காண்பதற்கும் இறையருள் வேண்டுமென்பது "காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே" (தே. நாவு 309 : 3) என்னும் அப்பர் அருண்மொழியானுமறிக. கண்டேனும்-உம்மை உயர்வு சிறப்பு.

பாண் - இச்சகவார்த்தை. பாண் குலாய்ப் படுக்கல் வேண்டா (சீவக 2515.) இனி, பாண்-கள்; அது ஆகுபெயராய் மயக்கந்தரும் சொற்களை உணர்த்தியது, என்பாருமுளர். படுத்தது-அகப்படுத்திக்கொண்டது. என் றது அடிமை கொண்டது. என் என்றது யாது பயன் கருதி ... "யாது நீ பெற்ற தொன்றென்பால்" (கோயிற் 10) என அடிகள் அருளியவாறுங் காண்க. நினக்கு என்னால் யாதும் பயனில்லை என்பது கூற வேண்டா... எனக்குப் பயன் கருதியே என்னை அகப்படுத்திக் கொண்டாயாயின் இப் போது உன்னைக் காணும் நெறியறியாதவனாய் இருத்தலால் எனக்கும் பயனின்றாகின்றதே, காணுமாறு காட்டியருள் என்பது குறிப்பு. பரஞ் சோதி-எல்லாப் பொருட்கும் அப்பாலாகிய வொளி (திருக்கோவை 131 பேர்.)

எல்லாவுயிர்க்கும் தந்தையாந் தன்மையும் தாயாந் தன்மையும் உடைய வன் இறைவனாதலின் "ஆணே, பெண்ணே" என்றார். இனி ஒரே திரு

மேனியில் இவ்விருவடிவும் உண்மை பற்றி இங்ஙனம் கூறினர் எனினு மமையும். "மாதுற்ற மேனி" (கோவை 174.) ஆரமுதே யென்றூர் கழி பெருஞ் சுவை யோடுறுதி பயத்தலுடைமையான்.

நின் பிரிவாற்ருது செத்தே போவேன் என்பதைத் துணிவு பற்றிப் போயினேன் என இறந்த காலத்தாற் கூறினர். ஏண்-நின்னைக் காணும் வலி. ஏண்-வலி என்னும் பொருட்டாதல் "ஏணிலான் சேவகமும்" (சிறு பஞ்ச 12) என்புழியுங் காண்க. ஏண்-திண்மை (சீவக 770 நச்.) நாண்-நின்னைக் காணமுடியாத போது இறந்துபட வேண்டிய நாணம்.

"பூணெ ணாதெதொ ரன்பு பூண்டு பொருந்தி நாடொறும் போற்றவும்,
நாணெ ணாததொர் நாண மெய்தி" (திருக்கழு 4) என வருதலும் காண்க.

என் கொண்டெழுகேன் என்றது எதனைப் பற்றுக் கோடாகக் கொண்டு உய்ந்தெழுவேன்? யான் பற்றுக் கோடாகப் பற்றி எழுவதற்கு நின்னருளன்றிப் பிறிதொன்றுமில்லை என்றவாறு.

இதன்கண், "காணுமாறு காணேன்" என்பதாலும் "என் கொண்டெழுகேன்" என்பதாலும் நின்னருளால் காணுமாறு காட்டியருள வேண்டுமென்பது பெறப்படுதலின் ஆனந்த பரவசம் என்னும் ஒன்பதாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 84.

89. மானேர் நோக்கி யுடையாள் பங்கா மறையீறறியா மறை யோனே
தேனே அமுதே சிந்தைக் கரியாய் சிறியேன் பிழை பொறுக்கும்
கோனே சிறிதே கொடுமை பறைந்தேன் சிவமா நகர்குறுக
போனர் அடியார் யானும் பொய்யும் புறமே போந்தோமே.

ப-ரை: மான் நேர் நோக்கி உடையாள் பங்கா-மானினது நோக்கினை ஒத்த நோக்கினையுடையவளும் எல்லாவற்றையும் உடையவளுமாகிய உமையை ஒரு கூற்றிலுடையவனே; மறை ஈறு அறியா மறையோனே-வேதங்களும் அவற்றின் முடிபாகிய உபநிடதங்களும் உணர முடியாத மறைபொருளாக உள்ளவனே, தேனே-தேன் போன்றவனே; அமுதே-அமுதம் போன்றவனே; சிந்தைக்கு அரியாய்-மனத்துக்கும் அறிதற்கரியவனே; சிறியேன் பிழை பொறுக்கும் கோனே-சிறுமையுடையேனுகிய என் குற்றங்களைப் பொறுத்து என்னை ஆட்கொண்டருளிய தலைவனே; சிறிது கொடுமை பறைந்தேன் - ஆட்கொண்டருளிய நின்னைப் பிரிந்த ஆற்ருமை மிகுதியால் சிறிதளவு கொடுஞ் சொற்களைக் கூறிவிட்டேன்; அடியார் மா சிவநகர் குறுகப் போனர் - நின் மெய்யடியார்கள் பெருமையையுடைய சிவபுரத்தை அணுகச் சென்ருர்கள்; யானும் பொய்யும் புறமே போந்தோம் - யானும் பொய்யாகிய உடலும் அதற்குப் புறம்பான வழியிற் போனேம், அடியார் போனவழியிற் போக அருள் செய்ய வேண்டும்.

உடையாள் பங்கா, மறையும் மறையின் ஈறும் அறிய முடியாத மறை யோனே, தேனே, அமுதே, சிந்தைக்கரியவனே, சிறியேன் பிழை பொறுக் கும் கோனே, நின்னைப் பிரிந்த ஆற்ருமை மிகுதியால் சிறிது கொடுஞ் சொற்களைச் சொல்லி விட்டேன்; மெய்யடியார்கள் சிவமாநகர் குறுகப் போனர். யானும் பொய்யாகிய உடலும் அதற்குப் புறம்பான வழியிற் போனேனும். அவர் போன வழியிற் போக அருள் செய்யவேண்டும் என்ப தாம்.

"மானேர் நோக்கி உடையாள்" என்றது உமையம்மையை. "மானேர் நோக்கி மணாள போற்றி" (போற்றி 135), "மானேர் நோக்கி உமையாள்" (சத 55), "மானேர் நோக்கி மணவாளா" (குழைத் 4), "உடையாள் உன்றன் நடுவிருக்கும்" (கோயில் மூத் 1) என வருவன காண்க. உடையாள் - எல்லாவற்றையும் உடையாள் திருக்கோவை 257 பேர். இனி எம்மையாளாகவுடையாள் எனினுமாம். "எம்மையா ளுடையா ளிட்டிடையின்" (திருவெம் 16) என வருதலுங் காண்க.

மறை ஈறு - மறையும் ஈறும் என உம்மைத்தொகை. வேதங்களும் அவற்றின் முடிவாகிய உபநிடதங்களும் என்றபடி. மறைஈறு அறியா என்பதற்கு வேதமும் முடிவை அறியாத எனினுமாம். மறையோன்-மறை பொருளாயுள்ளவன், அந்தணன். கோவை 218 பேர் இறைவன் தேன் போலவும் அமுதம் போலவும் இனிமை பயக்குந் தன்மை பற்றித் தேனே அமுதே என்ருர். "தேனுய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெரு மான்" (ஏசற 10) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க. அமுது போற் கழிபெருஞ் சுவையோடுறுதிபயத்தலுடையவனே என் பார், அமுதே என்ருர் எனினுமாம். மனங்கழிய நின்றமையின் இறை வனைச் சிந்தைக் கரியாய் என்ருர். "சிந்தைக் கரிய சிவமே போற்றி" (போற்றி 204), சிந்தையாலும் அறிவருஞ் செல்வனே" (சத 47) என அடிகளும், "அறிவறிய சிந்தையானை" (280 : 9) என அப்பரடிகளும் அருளியமை காண்க. சிந்தைக்கரியாய் என்றதனுல் வாக்குக்கும் அரிய வன் என்பதும் கொள்க. "சொல்லற் கரியானை" (சிவபுரா 92), "சொற் கழிந்தவனே" (நீத் 43), "சொற்பதங் கடந்த அப்பன்" (அச்சப் 6) என வருவனவுங் காண்க.

சிறிதே கொடுமை பறைந்தேன் அதனைப் பொறுத்தருள வேண்டு மென்பார், "சிறியேன் பிழை பொறுக்கும் கோனே" என்ருர். "வெறுப் பனவே செய்யுமென் சிறுமையை நின் பொறுமையினுற் பொறுப்பவனே" (அடைக் 2) "பேயேன துள்ளப் பிழை பொறுக்கும் பெருமையனை" (கோத் 12) என வருவன காண்க. "அத்தா வுன் னடியேனை யன்பாலார்த் தாய்...பேயேனுயேன் பிழைத்தனகளெத்தனையும் பொறுத்தாயன்றே" (தே. 308 : 8) என அப்பரடிகள் அருளியவாறுங் காண்க.

கொடுமை-கடுஞ்சொல். பறைதல்-சொல்லுதல். "ஒன்றிய இலைப் பூச்சூட்டி ஊட்டி மூன் பறைந்தோர் பார்ப்பான் அன்றிது செய்யான்"

(பெரிய கண்ணப்ப 109) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அல்லல் பறையேன் (சுந் 15 : 6) என்பது தேவாரம். அடிகள் சிறிதே பறைந்த கொடுமை இறைவனைப் பிரிந்த ஆற்றுமை மிகுதியால் தோன்றியனவாகும். அவை :

"விச்சுக் கேடு பொய்க் காகா தென்றிங் கெனை வைத்தாய்" சத 81

"அடியேன் அல்லேன் கொல்லோ தான் எனை ஆண்டிலை கொல்லோ" சத 83

"பாணே பேசி என்றனைப் படுத்த தென்ன பரஞ்சோதி" சத 84.

"அரத்த மேனியாய் அருள் செய் அன்பரும் நீயும் அங்கெழுந்தருளி
இங்கெனை இருத்தினுய் முறையோ?" சத 93.

என்பன போல்வனவாகும். அடிகள் இறைவனைப் பிரிந்தாற்றுமை "உன்னை இனிப் பிரிந்தாற் றேனே" (எண்ணப் 4) என்பதினுலுமறியப்படும்.

இறைவன் ஞானசாரியனுய் எழுந்தருளித் தம்மை ஆட்கொண்டருளி மறைந்தபின் அவ்விறைவன் கட்டளைப்படி அடியார் பலரும் திருப் பெருந்துறையின் கண்ணுள்ள * ஒரு பொய்கையில் ஒளிப்பிழம்பு தோன்ற அதன் கண் மூழ்கி மறைந்தனராதலின் "சிவமா நகர் குறுகப் போனுர் அடியார்" என்றுர். "எழுந் தழல் விளைந்த போதில் யாவரும் தடத்தி னூடு விழுந்து பின்னெய்தி நம்பால்" எனத் திருவாதவூரடிகள் புரா ணத்து (மண் சுமந்த 86) வருதலுங் காண்க. அடிகளைச் சில காலம் நில வுலகில் இருக்கப் பணித்தமையின், "யானும் பொய்யும் புறமே போந் தோம்" என்றுர். "புறமே போந்தோம் பொய்யும் யானும்" (சத 86). பொய் - பொய்யாகிய உடம்பு. உடலோடு இருக்க நேர்ந்தமை பற்றி "யானும் பொய்யும் புறமே போந்தோம்" என்றுர்.

"அருளா ரமுதப் பெருங்கடல் வாய் அடியா ரெல்லாம் புக்கழுந்த
இருளா ராக்கை யிது பொறுத்தே எய்த்தேன்" பிரார்த் 3.

என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க. இதன் கண், யான் பறைந்த கொடுமையைப் பொறுத்து நின் அடியார் போன நெறிக் கண் யானும் போக அருள வேண்டுமென்பது போதருதலின் ஆனந்த பரவசம் என்னும் ஒன்பதாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 85.

90. புறமே போந்தோம் பொய்யும் யானும் மெய்யன்பு
பெறவே வல்லேன் அல்லா வண்ணம் பெற்றேன் யான்
அறவே நின்னைச் சேர்ந்த அடியார் மற்றென் றறியாதார்
சிறவே செய்து வழிவந்து சிவனே நின்றாள் சேர்ந்தாரே.

---

* இப்பொய்கைக்கு "ஞானக்கினி தீர்த்தம்" எனவும், "திருத்தமாம் பொய்கை" எனவும் பெயர். "திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந்துறை யில்" திருவாசகம் (அருட்பத்து 2).

ப-ரை சிவனே-சிவபெருமானே; நின்னை அற சேர்ந்த அடியார்-நின்னை முற்றும் வந்தணுகிய மெய்யடியார்கள், மற்று ஒன்று அறியாதார்-நின்னையன்றிப் பிறிதொன்றனையும் அறியாதவராய்; சிறவே செய்து வழி வந்து நின் தாள் சேர்ந்தார்-சிறந்த தொண்டுகளைச் செய்து நினது செந்நெறிக்கண் வந்து நின் திருவடிகளை அடைந்தனர். யான் மெய் அன்பு பெற வல்லேன் அல்லா வண்ணம் பெற்றேன்-யானோ நின்னை அடைதற்கேதுவான மெய்யன்பைப் பெறுதற்கு ஆற்றலுடையேனல்லாத தன்மையைப் பெற்றுள்ளேன்; யானும் பொய்யும் புறமே போந்தோம்-ஆதலால் யானும் பொய்யாகிய உடம்பும் நின்னை அடையும் நெறியல்லாத புறநெறியிற் போனேம்.

சிவனே நின்னை முற்றும் வந்து அணுகிய மெய்யடியார் நின்னையன்றிப் பிறிதொன்றினையும் அறியாராய்ச் சிறவு செய்து வழிவந்து நின் திருவடியை அடைந்தனர். யானோ நின்னை அடைதற்கேதுவான மெய்யன்பைப் பெறுதற்கு ஆற்றலுடையேனல்லாத தன்மையைப் பெற்றுள்ளேன்; ஆதலால் யானும் பொய்யும் புறமே போந்தோம்; நின்தாள் சேர்தற்கு யான் இனிச் செய்யத்தக்கது யாதுமில்லை; நீ இரங்கியருள வேண்டும் என்பதாம்.

யானும் பொய்யும் புறமே போந்தோம் என மொழி மாற்றிக் கூட்டுக. யானும் பொய்யும் புறமே போந்தோமே (சத 85) என வருதலுங் காண்க. புறம்-திருவடியை எய்தும் வழியல்லாத வழி. மெய்யன்பு பெறவே வல்லேன் அல்லா வண்ணம் பெற்றேன் என்றது மெய்யன்பினைப் பெறவல்லேனல்லாத தன்மையினை அடைந்தேன் என்றவாறு. இங்ஙனம் கூறியது உடனே கதிகிடையாமையால் மெய்யன்பு தமக்கில்லை என்பது கருதிப் போலும். யான் மெய்யன்பு பெறவே வல்லேன் அல்லா வண்ணம் பெற்றுள்ளேனாதலால் யானும் பொய்யும் புறமே போந்தோம். அதனால் நின்னை அடைதற்குரிய மெய்யன்பைப் பெறும் ஆற்றலின்மையே நின்னை அடைதற்குத் தடையாகவுள்ளது போலும் என்பது அடிகள் கருத்து.

அற-முற்றும். "வகையறச் சூழாதெழுகின்" (குறள் 465) என்புழிப் போல. அடியார் என்றது மெய்யடியார்களை. அவர்கள் இறைவனையேயன்றிப் பிறிதொன்றனையும் பற்றுக் கோடாகக் கருதாமையின் "மற்றொன்றறியாதார்" என்றார். அறியாதார்-முற்றெச்சம். அடியார் மற்றொன்றறியாதாராய்த் தாள் சேர்ந்தார் என முடிக்க. சிறவே என்றது இறைவன் திருவடியை அடைதற்குரிய சிறந்த தொண்டுகளை உணர்த்தியது.

இதன்கண், நின்தாள் சேர்தற்குச் செய்யத்தக்கது யாதுமில்லை; இரங்கியருள வேண்டும் என்பதனால் ஆனந்த பரவசம் என்னும் ஒன்பதாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 86.

91. தாராய் உடையாய் அடியேற் குன்தாள் இணையன்பு
பேரா வுலகம் புக்கார் அடியார் புறமே போந்தேன் யான்
ஊரா மிலைக்க குருட்டா மிலைத்திங் குன்று னிணையன்புக்
காரா யடியேன் அயலே மயல்கொண் டழுகேனே.

ப-ரை: உடையாய்-என்னை ஆளாகவுடையவனே, அடியார் பேரா உலகம் புக்கார்-நின் மெய்யடியார்கள் மீளாவுலகமாகிய வீட்டுலகத்தினை அடைந்தனர்; யான் புறமே போந்தேன்-யான் அதற்குப் புறம்பாகிய இடத்தை அடைந்தேன்; ஊர் ஆ மிலைக்க குருட்டு ஆ மிலைத்து-ஊரிலுள்ள நல்ல பசு கனைக்க அதனைக் கேட்ட குருட்டுப் பசுவும் கனைத்தது போல; இங்கு உன் தாள் இணை அன்புக்கு ஆராய்-இவ்விடத்து இந்நிலையில் உனது திருவடியிணையைப் பெறுதற்குரிய மெய்யன்புக்கு என்ன தகுதியுடையேனாய்; அடியேன் அயலே மயல் கொண்டு அழுகேன்-நின் அடியவனாகிய யான் அவர் போன வழிக்குப் புறத்தே நின்று ஆசைப் பட்டு அழுவேன்; அடியேற்கு உன் தாள் இணை அன்பு தாராய்-ஆதலால் அடியேனுக்கு நின் திருவடித் துணையைப் பெறுதற்குரிய மெய்யன்பினை எனக்குத் தந்தருளுக.

உடையவனே, நின் மெய்யடியார்கள் பேராவுலகம் புக்கனர். யான் அதற்குப் புறம்பாகிய இடத்தினை அடைந்தேன். ஊரிலுள்ள நல்ல பசுக் கனைக்க அதனைக் கேட்ட குருட்டுப் பசுவும் கனைத்தது போல இவ் விடத்து உனது திருவடியிணையைப் பெறுதற்குரிய மெய்யன்புக்கு என்ன தகுதியுடையேனாய் நின் அடியவனாகிய யான் அவர்போன வழிக்குப் புறத்தே நின்று ஆசைப்பட்டு அழுவேன். ஆதலால் அடியேற்கு நின் திருவடித்துணையைப் பெறுதற்குரிய மெய்யன்பினை எனக்குத் தந்தருள வேண்டும் என்பதாம்.

தாராய்-தருதி, முன்னிலை உடன்பாட்டு எதிர்கால வினைமுற்று. "தணியார் பாதம் வந்தொல்லை தாராய்" (சத 89) என்புழியும் இப் பொருட்டாதல் காண்க. தாளிணையன்பு-தாளிணையைப் பெறுதற்கு ஏது வாகிய மெய்யன்பு. அன்பு தாராய் என இயையும். "உனக்குள்ள அன்புந்தாராய்" (பிரார்த் 8) என அடிகள் அருளியமையுங் காண்க. பேராவுலகம்—மீளத் திரும்புதலில்லாத வுலகமாகிய வீடு. "பேராவுலகந் தந்து வந்தாட் கொள்வோனே" (ஆசைப் 7) என வருதலும் காண்க. அடியார் பேராவுலகம் புக்கார் என மாறிக் கூட்டுக.

"பிரிவறி யாவன்பர் நின்னருட் பெய்கழற் றாளிணைக்கீழ்
மறிவறி யாச் செல்வம் வந்து பெற்றார்" (அடைக்கலப் 9)

என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க. பேராவுலகம் புகாமையின் புறமே போந்தேன் என்றார்.

ஊரா—ஊரிலுள்ள நல்ல பசு, மிலேத்தல்—கதறுதல். ஊராமிலேக்கக் குருட்டா மிலேத்து என்றது. ஊரிலுள்ள குருடல்லாத நல்ல பசு கதற அதனைக் கேட்ட குருட்டுப் பசுவுங் கதறியது போல என்றவாறு. நல்ல பசுவின் கதறல் தன் கன்றினை அழைக்கவோ உணவினைப் பெறவோ உதவும். குருட்டுப் பசுவின் கதறல் அவற்றை நோக்காது, நல்ல பசு கதறியதைக் கேட்டுக் கதறிய பயனற்றதாகும். அதுபோல என ஒரு சொல் வருவித்துரைக்கப்பட்டது.

நின் தாளிணை யன்பினையுடைய மெய்யடியார் நின்னைப் போற்றிப் பேராவுலகம் புக்காராக, அவர் புக்க வழிக்குப் புறமான வழியிற் போன யான் நின் தாளிணை அன்புக்கு என்ன உரிமையுடையேனாய்ப் புறத்தே நின்று அழுவேன். குருட்டாவின் கதறல் பயனின்றிப் போதல் போல என் அழுகையும் பயனற்றதாகும் என்பதாம். மிலேத்தல்-கதறுதல். இப் பொருட்டாதல் ''இங்குன்'' தாளிணை அன்புக் காராய் மயல்கொண் டழுகேனே என அடிகள் தமது அழுகை தாளிணையன்பாகிய பயனைத் தராமையைக் காட்டுதலால் நன்கு உணரப்படும். இவ்வாறே நம்மாழ் வாரும்,

''எப்படி யூரா மிலேக்கக் குருட்டா மிலேக்கு மென்னும்
அப்படி யானும் சொன்னேன் அடியேன் குற்றிய தென்பனே''

(நம்மாழ் - திருவிருத்தம் 94) எனத் திவ்விய பிரபந்தத்தின் கண் கூறுத லுங் காண்க.

இதன்கண், நின்தாள் சேர்தற்குச் செய்யத்தக்கது யாதுமில்லே இரங்கி யருள வேண்டும் என்பதனுல் ஆனந்த பரவசம் என்னும் ஒன்பதாம் பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க.

92. அழுகேன் நின்பால் அன்பாம் மனமாய் அழல் சேர்ந்த
மெழுகே யன்னார் மின்னார் பொன்னார் கழல் கண்டு
தொழுதே யுன்னைத் தொடர்ந்தா ரோடுந் தொடராதே
பழுதே பிறந்தேன் என்கொண் டுன்னைப் பணிகேனே.

ப-ரை: நின்பால் அன்பாம் மனம் அழல் சேர்ந்த மெழுகே அன்னா ராய்-நின்னிடத்து அன்பு பொருந்திய மனம் அழலைச் சேர்ந்த மெழுகு போல உருகுபவராய்; மின் ஆர் பொன் ஆர் கழல் கண்டு-ஒளி பொருந்திய நின் பொன்போன்ற திருவடியைத் தரிசித்து; தொழுது உன்னைத் தொடர்ந்தா ரோடும் தொடராது-வணங்கி நின்னைப் பிரியாது தொடர்ந்தவர்களாகிய மெய்யடியவர்களோடும் தொடர்ந்து வரமாட்டாது; அழுகேன்-பிற்பட்டுத் தனித்து நின்று அழுபவனுகிய யான்; என் கொண்டு உன்னைப் பணி கேன்-இனி எதனைத் துணையாகக் கொண்டு உன்னை வணங்குவேன்; பழுதே பிறந்தேன்-பயனின்றிப் பிறந்தவனுனேன்; என்னைப் பிறவிப் பயனுடையவனுகச் செய்தருள வேண்டும்.

நின்னிடத்து அன்பு பொருந்திய மனம் அழலைச் சேர்ந்த மெழுகு போல உருகுபவராய், நின் பொன்போன்ற திருவடிகளைத் தரிசித்து வணங்கி, நின்னைப் பிரியாது தொடர்ந்தவர்களாகிய மெய்யடியார்களோடும் தொடர்ந்து வரமாட்டாது, பிற்பட்டுத் தனித்து நின்று அழுபவனாகிய யான், இனி எதனைப் பற்றுக்கோடாகக் கொண்டு உன்னை வணங்குவேன்; பயனின்றிப் பிறந்தவனானேன்; என்னைப் பிறவிப் பயனுடையவனாகச் செய்தருள வேண்டும் என்பதாம்.

அழுகேன் என்பது ஈண்டு அழுபவனாகிய யான் என வினையாலணையும் பெயராய் நின்றது. மனமாய் என்பதில் ஆய் என்னும் எச்சத்தைப் பிரித்து அன்னராய் எனக் கூட்டிப் பொருள் உரைக்கப்பட்டது. அழல் சேர்ந்த மெழுகு போல உருகும் மனத்தின் வினை அதனை உடையார் மேனின்றது. தொடர்ந்தார் என்பது பிரியாது தொடர்ந்து கதியடைந்தவர்களாகிய மெய்யடியார்களென வினையாலணையும் பெயராய் நின்றது. தொடராத-தொடரமாட்டாது. தொடராது அழுகேன் என மாறிக்கூட்டுக.

என் கொண்டு என்றது எதனைத் துணையாகக் கொண்டு என்றவாறு. அம்மெய்யடியார் போல அன்பாம் மனமாய் அழல் சேர்ந்த மெழுகு போல உருகுந் தன்மையும் அவரை விடாது பின் தொடர்ந்து செல்லும் ஆற்றலும் இன்மையின் இனி எனக்குத் துணை பிறிதில்லை என்பார், 'என் கொண்டு' என்றார். பழுதே பிறந்தேன்-பயனின்றிப் பிறந்தவனாயினேன். ஏ-தேற்றம். இனி, நின்பால் அன்பாம் மனமாய் அழமாட்டேனும் உன்னைத் தொடர்ந்தாரோடும் தொடரமாட்டாது பழுதே பிறந்தேனுமாகிய யான் என் கொண்டு உன்னைப் பணிவேன் எனவும் உரைக்கலாம். இவ்வுரையில் அழுகேன் என்பது அழமாட்டாதவனாகிய யான் எனத் தன்மையொருமை எதிர்மறை வினையாலணையும் பெயராயும், பிறந்தேன் என்பது தன்மையொருமை இறந்தகால வினையாலணையும் பெயராகவும் கொள்ளவேண்டும்.

இதன்கண், அழுகேன் பழுதே பிறந்தேன் என்கொண்டுன்னைப் பணிகேன் என்றமையால் அழுபவனாகிய எனக்கு உற்ற துணையை உதவிப் பிறவிப்பயனுடையதாகச் செய்ய வேண்டும் என்பது பெறப்படுதலின் ஆனந்த பரவசம் என்னும் ஒன்பதாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 88.

93. பணிவார் பிணிதீர்த் தருளிப் பழைய வடியார்க்குன்
அணியார் பாதங் கொடுத்தி அதுவும் அரிதென்றால்
திணியார் மூங்கில் அனையேன் வினையைப் பொடியாக்கித்
தணியார் பாதம் வந்தொல்லை தாராய் பொய்தீர் மெய்யானே.

ப-ரை: பொய்தீர் மெய்யானே-உயிர்களின் பொய்ம்மையை நீக்கியருளும் மெய்ப்பொருளாயுள்ளவனே; பணிவார் பழைய அடியார்க்கு பிணி

தீர்த்தருளி-நின்னை மெய்யன்போடு வணங்குபவர்களாகிய பழைய அடியார்க்குப் பிறவிப் பிணியை நீக்கியருளி; உன் அணி ஆர் பாதம் கொடுத்தி-உன் அழகு நிறைந்த திருவடிகளைக் கொடுத்தருளினை; அது அரிது என்றுலும்-எனக்கு இப்போது உடனே அப்படி அருள் செய்தல் முடியாதாயினும்; திணி ஆர் மூங்கில் அனையேன் வினையைப் பொடியாக்கி-திட்பம் பொருந்திய மூங்கிலைப் போன்ற திமையையுடையவனுகிய எனது பிராரத்த கன்மத்தையும் ஞானத் தீயாற் பொடி செய்து; ஒல்லை வந்து தணி ஆர் பாதம் தாராய்-காலம் நீட்டியாது விரைந்து வந்து குளிர்ச்சி பொருந்திய நின் திருவடிகளைத் தந்தருள்வாயாக.

பொய்தீர் மெய்யானே, நின்னைப் பணிபவர்களாகிய பழைய அடியார்க்குப் பிறவிப் பிணியை நீக்கியருளி உனது திருவடிகளைக் கொடுத்தருளினை; எனக்கு இப்பொழுது பிணிதீர்த்துத் திருவடிகளைத் தருதல் அரிதாயினும் மூங்கிலனையேன் வினையைப் பொடியாக்கி விரைந்து வந்து திருவடிகளைத் தந்தருள வேண்டும் என்பதாம்.

பணிவார் பழைய அடியார்க்குப் பிணி தீர்த்தருளி உன்பாதம் கொடுத்தி என இயைத்து பொருள் கொள்க. பணிவார்-அடியவர். "பணிவோர் மருங்களியா" கோவை 52. பிணி-பிறவிப்பிணி. "பிறவிப் பிணிப்பட்டு மடங்கினர்க்கே" (நீத் 18) என அடிகள் அருளியவாறுங் காண்க. பழைய அடியார்-தொன்றுதொட்டு வழிபட்டு இறைவனுக்கு ஆட்பட்ட மெய்யன்பர்களை. "பாதங் கொடுத்தி" என்றது வீடு பேற்றினைக் கொடுத்தருளுதி என்றவாறு. "அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்ட அரசமர்ந்திருந்தார்" எனப் பெரிய புராணத்து (திருநாவுக் 427) வருதலுங் காண்க. கொடுத்தி என்பதில் இகர விகுதி காலங் காட்டாது முன்னிலை விகுதியாய் நின்றது. தகரம் இறந்த காலம் காட்டிற்று.

அதுவும் அரிது என்றுல் என்பதில் உம்மையைப் பிரித்து அது அரிதென்றுலும் எனக் கூட்டி, எனக்கு இப்பொழுது உடனே அப்படிச் செய்தல் முடியாதாயினும் எனப் பொருள் கொள்ளப்பட்டது. திணியார் மூங்கில்-திண்மை பொருந்திய மூங்கில் என்றது குழாய் மூங்கிலல்லாத கன்மூங்கிலை. இம்மூங்கில் போல மனநெகிழ்ச்சியில்லாதேன் என்பார், "திணியார் மூங்கிலனையேன்" என்றுர். "திணியார் மூங்கிற் சிந்தையேன்" (பிரார்த்தனை 8) என அடிகள் பிருண்டு அருளியமையுங் காண்க. இனி மூங்கிலிடத்தே உண்டாகும் தீ அதனையே அழிப்பது போல யானே எனக்குத் தீமையைத் தேடிக் கொள்பவன் எனப் பொருள் கொள்ளலும் பொருந்தும்.

இறைவனுல் ஆட்கொள்ளப்பட்ட போது சஞ்சித வினையும் ஆகாமிய வினையும் அழிக்கப்பட்டமையின் வினையென்றது எஞ்சி நின்ற பிராரத்த வினையைக் குறித்தது. தணி: தண்மை; குளிர்ச்சி "தணிபுனல்", "தணி

மழை'' (பரி 6 : 29; 9 : 11) என்பவற்றிலும் இப்பொருட்டாதல் காண்க. இப்பொழுது கூடாதாயினும் காலம் நீட்டியாது விரைந்து வந்து எனப் பொருள் தந்து நின்றது. அங்ஙனம் கொள்ளாக்கால் அடியார் பிணி தீர்த்துப் பாதம் கொடுத்தருளினை; அது அரிதாயினும் என் வினையைப் பொடியாக்கி ஒல்லை திருவடியைத் தரவேண்டும் என வேண்டுதல் பயனில் கூற்றும்.

இதன் கண், ஒல்லை தணியார் பாதம் தாராய் என்றதனால் ஆனந்த பரவசம் என்னும் ஒன்பதாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 89.

94. யானே பொய்யென் நெஞ்சும் பொய்யென் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந் துறுமாறே.

ப-ரை : தித்திக்கும் தேனே அமுதே கரும்பின் தெளிவே-இனிக்கும் தேனும் அமுதும் கரும்பின் தெளிந்த சாறுமாக உள்ளவனே; மானே-பெரியோனே; யானே பொய்-யானும் நிலையில்லாத பொய் வாழ்வுடையேன்; என் நெஞ்சும் பொய்-என் உள்ளமும் நிலைபேறில்லாத பொய்ம்மையுடையது; என் அன்பும் பொய்-அவ்வுள்ளத்தினிடத்துளதாகும் அன்பும் இடையீடுபடும் பொய்ம்மையுடையது; ஆனால்-அங்ஙனமாயின்; வினையேன் அழுதால் உன்னை பெறலாமே-பிராரத்த வினையின் பயனை நுகர்ந்து கொண்டிருக்கும் யான் உன்னை அடைய வேண்டுமென்று விரும்பி அழுதால் உன்னை அடைய முடியுமா? அடியேன் உன்னை வந்து உறும் ஆறு அருளாய்-ஆதலால் அடியேன் உன்னை வந்து அடையுமாறு அருள் செய்ய வேண்டும்.

தேனே அமுதே கரும்பின் தெளிவே மானே, யானே பொய்; என் நெஞ்சும் பொய்ம்மையுடையது. அந்நெஞ்சிடத்துளதாகும் அன்பும் பொய்; அங்ஙனமாயின் உன்னை அடைய வேண்டுமென்று விரும்பி அழுதால் உன்னை அடைய முடியுமா? ஆதலால் அடியேன் நின்னை வந்து அடையுமாறு அருள் செய்ய வேண்டும் என்பதாம்.

யானே என்பதில் ஏகாரம் எண்ணுப் பொருளது. அடிகள் தம்மை பொய் என்றது நிலையற்ற உலக வாழ்வுடைமை பற்றியாகும். நெஞ்சும் பொய் என்றது ஓரிடத்து நிலைபேறின்றி அலையு நிலைமை பற்றியாகும். தம்முடைய அன்பினைப் பொய் என்றது எண்ணெய் ஒழுக்குப் போல இடையீடின்றி நிகழாது அன்பு இடையறவுபடுதல் பற்றியாகும். அங்ஙனம் இடையறவுபடுதல் உண்டி உறக்கம் முதலியன பற்றியாகும். ஆனால் என்பது முற்கூறிய மூன்றும் பொய்யாகுமாயின் என ஏதுவை வலியுறுத்தியது. வினையேன் என்றது எடுத்த உடலுக்குரிய பிராரத்த கன்

மத்தை அநுபவித்துக் கொண்டிருக்கும் யான் என்றவாறு. வினையேன்-குறிப்பு வினையாலணையும் பெயர். பெறலாமே என்பதில் ஏகாரம் எதிர் மறைப் பொருளில் வந்தது. அடியேன் வந்து உறுமாறு அருளாய் எனப் பின்னர் அடிகள் வேண்டிக் கொள்ளுமாற்றானும் அவ்வேகாரம் எதிர் மறை என்பது இனிது விளங்கும். தித்திக்கும் என்பதனை தேன் அமுது கரும்பின் தெளிவுகளுக்கு இனம் விலக்காது இயல்புகூறும் அடை மொழியாக்குக. தேன் முதலியன போல இறைவன் இனியனாக விளங்குதல் தேனே அமுதே கரும்பின் தெளிவே சிவனே (சத 55) என அடிகள் அருளியவாற்றானுமறிக. தேன் அமுது கரும்பின் தெளிவு என்பன அறிவு இச்சை செயல்களுக்கு இன்பந்தருபவன என்பதைக் குறிப்பனவாகும். தித்திக்கும் மானே என இயைத்து இனிமைதரும் பெரியோனே என உரைப்பினும் அமையும். மான் என்பது மகான் என்பதின் திரிபு. பெரி யோன் என்பது கருத்து. அருளாய் முன்னிலை உடன்பாட்டு எதிர்கால வினைமுற்று.

இதன் கண், அடியேன் உனைவந்து உறுமாறு அருளாய் என்பதனால் உன்னை வந்து அடைந்து பெறும் ஆனந்தத்தினால் பரவசமடைய விரும்பு தல் பெறப்படுதலின் ஆனந்த பரவசம் என்னும் ஒன்பதாம் பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 90.

## 10 ஆனந்தாதீதம்

ஆனந்தாதீதம்-வடநூன் முடிபு. ஆனந்த அதீதம் எனப் பிரிக்கப் படும். ஆனந்தம் பேரின்பம். அதீதம் அதன் மேற்பட்ட நிலை. இறை வனது முத்தியின்பத்தில் தன்னை மறத்தல் பரவசமாகும். அதன் முதிர்ந்த நிலையே அதீதமாகும். இந்நிலையையடையும் உயிருக்குத் தன்னுணர்வும் தான் நுகரும் உணர்வும் உளவாகா.

எண் சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

95. மாறி லாதமாக் கருணை வெள்ளமே
வந்து முந்திநின் மலர்கொள் தாளிணை
வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்
மெய்ம்மை யன்பருன் மெய்ம்மை மேவினார்
ஈறி லாதநீ எளியை யாகிவந்
தொளிசெய் மானுட மாக நோக்கியும்
கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்
கடைய னாயினேன் பட்ட கீழ்மையே.

THE NATIONAL HIGH SCHOOL
No.........
TRIPLICANE, MADRAS

ப-ரை: மாறு இலாத மா கருணை வெள்ளமே-ஒரு காலத்தும் வேறுபடுதலில்லாத பேரருட் பெருக்கே; நின் மலர் கொள் தாளிணை - நினது தாமரை மலரின் தன்மையைக் கொண்ட திருவடிகள் இரண்டினையும், வேறு இலா பத பரிசு பெற்ற நின் மெய்ம்மை அன்பர்-விட்டு நீங்குதல் இல்லாத பக்குவ நிலையை யடைந்த நின்னுடன் வந்த மெய்யன்பர்கள்; முந்தி வந்து உன் மெய்ம்மை மேவினர்-முற்பட்டு வந்து உனது மெய்ம்மையாகிய திருவடியின்பத்தைப் பெற்றனர். ஈறு இலாத நீ-அழிவில்லாத இறைமைக் குணங்களையுடைய அரியையாகிய நீ, எளியை ஆகி ஒளி செய் மானுடம் ஆக வந்து நோக்கியும்-அருளால் எளிமையையுடையையாகி ஒளி விளங்குகின்ற மக்கள் வடிவில் ஞானசாரியனாக எழுந்தருளி வந்து திருவருட் பார்வையாகிய நயனதீட்சை செய்தும், கீறு இலாத நெஞ்சு உடைய நாயினேன்-பிளந்து அழிந்தொழியாத வன்நெஞ்சுடைய நாய் போன்றவனாகிய யான், கடையன் ஆயினேன்-புறத்தே நிற்பவன் ஆயினேன். பட்ட கீழ்மை - அதனால் யான் அடைந்த இழிவரலை என்னென்பேன்.

மாறிலாதமாக் கருணை வெள்ளமே, நின் தாமரை மலரின் தன்மையைக் கொண்ட தாளிணையை விட்டு நீங்குதலில்லாத பக்குவ நிலைமையை யடைந்த நின் மெய்ம்மை அன்பர்கள் உன் மெய்ம்மையாகிய திருவடியின்பத்தைப் பெற்றனர். ஈறிலாத நீ, அருளால் ஒளியையுடையையாகி விளங்குகின்ற மக்கள் வடிவில் ஞானசாரியனாக எழுந்தருளி வந்து திருவருட் பார்வையாகிய நயனதீட்சை செய்தும், கீறிலாத வன்னெஞ்சுடைய நாயினேன் புறத்தே நிற்பவனாயினேன். அதனால் யானடைந்த இழிவரலை என்னென்பேன் என்பதாம்.

இறைவன் பேரருள் மாக்கருணை எனப்பட்டது. பேரருளை வெள்ளமாகக் கூறுதலை "கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை வெள்ளத் தழுத்தி" (அம்மானை 5) "வான் கருணை வெள்ளப் பிரான்" (கோத் 16) "தன் கருணை வெள்ளத்து" (பொன்னூசல் 3) என வருவனவற்றிலும் காண்க. இறைவன் கருணையே உருவாயுள்ளானாதலின் கருணை வெள்ளமே என்றார். இறைவனது பேரருட் பெருக்கு மிகுதல்குறைதலின்றி எக் காலத்தும் ஒரே தன்மைத் தாயிருத்தலின் "மாறிலாத மாக்கருணை வெள்ளமே" என்றார். "குறை விலா நிறைவே கோதிலா அமுதே" (கோயிற் 5) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க.

மலர் கொள் தாள்-தாமரை மலரின் தன்மையைக் கொண்ட தாள். "தாமரைத் தாள்" (சத 45) என வந்தமையுங் காண்க. தாளிணையை என இரண்டாவது விரிக்க. வேறு இலாத - விட்டு நீங்குதலில்லாத. பதப்பரிசு-இறைவனோடு இரண்டறக் கலத்தற்குரிய பக்குவ நிலைமை. மெய்ம்மை யன்பர்-மெய்யன்பர் என்றது இறைவன் அடிகளை ஆட்கொள்ள வந்த ஞான்று உடன் வந்த அணுக்கன் தொண்டர்களை. உன் மெய்ம்மை

மேவினர்-உன் மெய்ம்மையாகிய திருவடியின்பத்தைப் பெற்றனர். "பழைய அடியார்க்குன் அணியார் பாதங் கொடுத்தி" (சத 89) என்பது ஈண்டறியற் பாலது.

ஈறிலாத-அறிவற்ற என்றது அழிவற்ற இறைமைக் குணங்களின் பெருமையையும் அருமையையும் உணர்த்தியது. அங்ஙனமன்றி, ஈறிலாத நீ என்பதற்கு அழிவில்லாத நீ என அழியாமையை உணர்த்தியது எனக் கொள்ளின் அழியாமை உயிர்க்குமுண்டு, உலகுக்கு முண்டாதலின் அதனைச் சிறப்பாக இறைவனுக்குக் கூறுதல் அமையாது. எளியையாகி என்றதனாலும் நீ அரியை என்பது போதரும். "எத்தனையு மரிய நீ யெளியையானாய்" (தேவா நாவு 308 : 8), எளியையாகி யாண்டமை "எளியையா யாண்ட ஈசனே மாசிலா மணியே" (பிடித்த 10) எளிவந்தென்னை ஆண்டு கொண்ட என்னாரமுதேயோ (ஆசைப் 5) என்பதனாலு மறியப்படும். எளியையாதல் கைம்மாறு கருதாத பேரருளாகும்.

மானுடம்-மனித வடிவு. "மற்றவர் தம்மை நோக்கி மானுடமிவர்தா மல்லர்" எனப் பெரியபுராணத்து (காரைக்கால் 47) வருதலுங் காண்க. திருப்பெருந்துறையில் குருந்த மரநிழலில் தெய்வீக ஒளி திகழ மக்கள் வடிவில் ஞானாசாரியனாக எழுந்தருளியவன் இறைவன், என்பது புலப்பட "ஈறிலாத நீ எளியையாகி வந்து ஒளி செய் மானுடமாக நோக்கியும்" என்றார். இறைவன் மானுடத் திருவுருவங் கொண்டருளுதல்,

"மீ கெழு பரஞ்சுடர் வெளிப்பட் டம்ம
எம்மனோர் போல வினிதெழுந் தருளிக்
கைம்மா றற்ற கணக்கில்பே ரின்ப
மோனவாழ் வளிக்கு ஞான தேசிகன்" 2 : 13-6,

எனவும்,

"மானிட னுய வடிவுகொண் டருளாது
மானிட னுய வடிவுகொண் டருளி" 14 : 21-2.

எனவும் பண்டார மும்மணிக்கோவையில் வருவனவற்றாலுமறிக.

நோக்கியும் என்றது திருவருட்பார்வை செய்தலாகிய நயனதீட்சை செய்தும் என்றவாறு. உம்மை-உயர்வு சிறப்பு. இறைவன் அடிகளுக்கு நயனதீட்சை மாத்திரஞ் செய்தானல்லன். அதன்மேலும் தத்துவ சுத்தியாகிய நிருவாண தீக்கையினையும், மந்திர உபதேசமாகிய வாசக தீட்சையையும், சிவஹஸ்தமத்தக சம்யோசனம் ஆகிய பரிச தீட்சையையும் செய்தருளினன் என்பது புராணவரலாற்றால் அறியப்படும்,

"நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை குரம்பையிற் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து நுகமின்றி விளாக்
கைத்து" (அதிசயம் 8)

நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்—
ஏசறவு 10.

என அடிகள் அருளியவாறுங் காண்க.

"நெஞ்சிற்கு நிறிலாமை தன் செயலொழிந்து ஒருவழிப்பட்டு நில்லாமை
சினமிறக்கக் கற்றாலும் சித்தி யெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே"

என்ற தாயுமானவர் வாக்கும் ஈண்டு சிந்திக்கத்தக்கது. அடிகளுக்கு மனம் ஒருவழிப்பட்டு அடங்காமை பிராரத்த வினையுடைமையாலாகும். ஒடுங்காத மனமுடைமையால் தன் சிறுமையை உணர்த்த நாயினேன் என்றார். நாயினேன் எனக் கடையனாயினேன் என்க. கடையனாயினேன் வாயிற் புறத்தே நிற்பவனாயினேன். என்றது மெய்யன்பர் உன் மெய்ம்மை மேவினாராக யானும் பொய்யும் புறமே போந்தோம் என்பதை விளக்கியதாகும்.

பட்ட கீழ்மை-அடைந்த இழிவரல். அடிகளுக்கு உண்டாகிய இழிவரல் என்னையெனின் முழுமுதலிறைவன் வலியவந்து ஆட்கொள்ளப் பெற்றும் உடனே கதியடையாது பிராரத்த கன்மத்தை நுகர்ந்து கொண்டு உண்டு உடுத்து உறங்கி உலகில் வாழவேண்டிய நிலைமையாகும்.

"தேனிலாவிய திருவருள் புரிந்த நின் சிவநகர் புகப்போகேன்
ஊனிலாவியை ஓம்புதற் பொருட் டினும் உண்டுடுத்திருந்தேனே.
(சத 40)

மெய்யர் வெறியார் மலர்ப்பாதம் மேவக் கண்டுங் கேட்டிருந்தும்
பொய்யனேன் நான் உண்டுடுத்திருப்பதானேன் போரேறே (சத 52)

என அடிகள் அருளியமையுங் காண்க.

இதன் கண், நிறிலாத நெஞ்சுடைய நாயினேன் என்பதனால் மனந் தொழிற்படாது இறையின்பத்தில் மூழ்கும் அதீத நிலையை விரும்புதல் பெறப்படுதலின் ஆனந்தாதீதம் என்னும் பத்தாம் பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 91.

96. மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெனைப்பணி கொண்டபின் மழக்
கையி லங்குபொற் கிண்ணம் என்றலால்
அரியை என்றுனைக் கருது கின்றிலேன்
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்ம்மை அன்பருன் மெய்ம்மை மேவினார்
பொய்யில் அங்கெனைப் புகுத விட்டுநீ
போவ தோசொலாய் பொருத்த மாவதே.

ப-ரை: மை இலங்கு நல் கண்ணி பங்கனே-தீட்டிய மை விளங்குதற்குக் காரணமாகிய நல்ல அருட்கண்களையுடைய உமையம்மையை ஒரு கூற்றி லுடையவனே; மெய் இலங்கு வெள் நீற்று மேனியாய் - வீடுபேற்றிற்கறிகுறியாகிய உண்மை விளங்கும் திருவெண்ணீற்றை அணிந்த திருமேனியையுடையவனே; வந்து எனை பணி கொண்ட பின்-நீ ஞானாசாரியனாக இவ்வுலகில் எழுந்தருளி வந்து அடியேனைத் தொண்டனாகக் கொண்டருளிய பின், மழ கை இலங்கு பொன் கிண்ணம் என்று அலால்-குழவியின் கையில் விளங்குகின்ற பொற்கிண்ணம் போலும் என்று நின்னை எளிமையாகக் கருதுகின்றதல்லாமல், அரியை என்று உனை கருதுகின்றிலேன்-பெறுதற்கு அருமையுடையை என்று உன்னை நான் நினைக்கின்றிலேன்; மெய்ம்மை அன்பர் உன் மெய்ம்மை மேவினார்-நின்னுடன் வந்த மெய்யன்பர்கள் உன் மெய்ம்மையாகிய திருவடியின்பத்தைப் பெற்றனர்; என்னை பொய்யில் புகுதவிட்டு-அடியேனைப் பொய்யாகிய உலக வாழ்க்கையில் புகும்படி விட்டு; நீ அங்கு போவதோ பொருத்தமாவது-நீ சிவபுரத்துக்கு எழுந்தருள்வதுதானோ எளியையாகி வந்து பணி கொண்ட நின் திருவருட்டிறத்திற்குத் தகுதியாவது; சொலாய்-சொல்லியருள்வாயாக.

மையிலங்கு நற்கண்ணி பங்கனே, மெய்யிலங்கு வெண்ணீற்று மேனியாய். நீ ஞானாசாரியனாக எழுந்தருளி வந்து என்னைப் பணிகொண்ட பின், மழக்கையிலங்கு பொற்கிண்ணம் போலும் என்று நின்னை எளிமையாகக் கருதுகின்றதல்லாமல் பெறுதற்கு அரியை என்று உன்னைக் கருதுகின்றிலேன்; நின்னுடன் வந்த மெய்ம்மை அன்பர் உனது மெய்ம்மையாகிய திருவடியின்பத்தைப் பெற்றனர். என்னைப் பொய்யாகிய உலக வாழ்க்கையிற் புகும்படி விட்டு நீ சிவபுரத்துக்கு எழுந்தருள்வதுதானோ எளியையாகி வந்து பணிகொண்ட நின் பெருமைக்குப் பொருத்தமாவது? சொல்லியருள்க என்பதாம்.

மையிலங்கு நற்கண்ணி என்றது உமையம்மையை. "மையார் தடங்கண் மடந்தை மணவாளா" (திருவெம்பா 11) எனத் திருவாசகத்தும் "மையார்ந்த வொண் கணுமை" (ஞான 266 : 1) மையார் மலர்க்கண்ணாள் பாகர் போலும் (நாவு 234 : 3) "மையார் கண்ணி பங்கா" (சுந் 27:4) எனத் தேவாரத்தும் வருவன காண்க. மை-மகளிர் கண்ணுக்குத் தீட்டும் அஞ்சன மை. அது இறைவியின் கண்களை யடைந்து விளக்கம் பெற்றதென்பார், "மையிலங்கு கண்" என்றார். இலங்கும் என்னும் எச்சம் காரியப்பொருட்டு. நற்கண்-அருட்கண்.

வந்து எனைப் பணிகொண்ட பின் என்றது எத்துணை மேம்பாட்டினாரும் அறிதற்கரிய உயர்வினையுடையையாகிய நீ எளியையாய் ஞானாசாரியனாக வலிய எழுந்தருளி வந்து சிறியேனைத் தொண்டனாகக் கொண்ட பின் என்றவாறு.

"என்பெலா முருக்கி யெளியையா யாண்ட ஈசனே" (பிடித்த 10)

"பணிகொண் டென்னை யாட்கொண்டு" (புணர்ச் 5)

"வேண்டும் அயன்மாற் கரியோய் நீ வேண்டி யென்னைப் பணி கொண்டாய்" (குழைத்த 6)

"திகழா நின்ற திருமேனி காட்டி யென்னைப் பணிகொண்டாய்" (குழைத்த 10) என வருவன காண்க.

மழ - குழவி. "விசும்புற்ற திங்கட்கழு மழப் போன்று" (198) என்னும் திருக்கோவையாரினும் இப்பொருட்டாதல் காண்க. மழக் கையிலங்கு பொற்கிண்ணம் என்றலால் அரியை என்றுனைக் கருதுகின்றிலேன் என்றது குழவியின் கையிற் கொடுக்கப்பட்ட பாலுணவையுடைய பொற்கிண்ணத்தை அக்குழவி அதன் அருமை தெரியாது நழுவவிட்டுப் பாலுணவை யுமிழ்ந்து அக்கிண்ணத்தையும் சிதைப்பதுபோல, மிக்க அருமையுடைய நீ எளிமையுடையையாய் வலிய எழுந்தருளி வந்து என்னை ஆட்கொண்டமையால் நின்னை அரியை என்று கருதாது எளியை என்று எண்ணுவேனாய் அதனால் நின்னையும் பிரிந்து நின்னருளால் எய்தும் பேரின்பத்தையும் இழந்தேன் என்றவாறு. குழந்தைக்குப் பொற்கிண்ணத்திற் பால் கொடுக்கும் முறைமையினை உமையம்மையார் ஆளுடைய பிள்ளையாருக்குப் பொற்கிண்ணத்தில் திருமுலைப்பாலைக் கொடுத்தமையானும், அதனை,

"போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன் (282:2)

எனத் தேவாரத்து ஆளுடைய பிள்ளையார் அருளிச் செய்தமையானும் அறிக. மெய்யிலங்கு வெண்ணீறு "சத்தியமாவது நீறு" என ஆளுடைய பிள்ளையாரால் அருளிச் செய்யப்பட்டது. திருநீற்றின் உண்மை, பசுவின் சாணம் எங்ஙனம் அக்கினியைச் சேர்ந்து தன்தன்மை கெட்டு தூய்தாந் தன்மையடைகின்றதோ அதுபோல இறைவனைச் சார்ந்த உயிரும் தன் ஆணவ இருள் கெட்டு தூய்மையடைந்து இன்புறும் என்பதை உணர்த்துவதாகும். ஞானாசாரியனாய் எழுந்தருளிய ஞான்று இறைவன் திருமேனியில் வெண்ணீறு காணப்பட்டமையின் "வெண்ணீற்று மேனியாய்" என்றார். "சிவனவன் திரடோண் மேல், நீறு நின்றது கண்டனை யாயினும்" (சத 33) என அடிகள் அருளியவாறுங் காண்க. "செந்நிற மேனி வெண்ணீறணிவோன்" (திருக்கோவை 69) என்பதும் ஈண்டைக் கேற்ப அறியற்பாலது.

மெய்ம்மையன்பர்-மெய்யன்பர். மெய்ம்மை-திருவடியின்பம். மெய்ம்மையன்பர் மெய்ம்மை மேவினமை "நின் மலர் கொள் தாளிணை வேறிலாப் பதப் பரிசு பெற்ற நின் மெய்ம்மை யன்பர் உன் மெய்ம்மை மேவினார்." (சத 91) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க.

பொய்யில் எனைப்புகுதவிட்டு எனக் கூட்டிப் பொருள் கொள்க. இனி, பொய் இலங்கு என்னைப் புகுத விட்டு எனப் பிரித்துப் பொய்ம்மை விளங்கும் எளியேனைப் புறத்தே போக விடுத்து எனப் பொருளுரைப் பாருமுளர். என்னைப் பொய்யில் புகுதவிட்டு நீ சிவபுரத்துக்கு எழுந்தருள்வதுதானோ எளியையாகி வந்து பணிகொண்ட நின் திருவருட்டிறத் திற்குப் பொருத்தமாவது கூறியருள்க என்றார். அங்குப் போவதோ எனக் கூட்டுக. அங்கு என்றது சிவபுரத்தை. போவது-போதல்; தொழிற் பெயர். சொல்லாய் என்பது சொலாய் என நின்றது. "எப்பினில் வைப்பனே யெனை வைப்பதோ சொலாய்" (சத 98) என வருதலுங் காண்க.

இதன் கண், சொலாய் என இறைவனை விடை கூறுமாறு வினு வினும், நீ என்னை விட்டுப் போவது நின் திருவருட்டிறத்திற்குப் பொருத்த மற்றதாகலின் என்னையும் உடன் கொண்டு செல்லுதல் வேண்டும் என் பது குறிப்பாகும். அதனால் ஆனந்தாதீதத்தை அவாவுதல் பெறப்படுத லின் ஆனந்தாதீதம் என்னும் பத்தாம் பத்து நுதலிய பொருள் போத ருதல் காண்க. 92.

97. பொருத்தம் இன்மையேன் பொய்ம்மை யுண்மையேன்
போத வென்றெனைப் புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்
மாண்டி லேன்மலர்க் கமல பாதனே
அரத்த மேனியாய் அருள்செய் அன்பரும்
நீயும் அங்கெழுந் தருளி இங்கெனை
இருத்தி னாய்முறை யோஎன் எம்பிரான்
வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே.

ப-ரை : கமல மலர் பாதனே - தாமரை மலர் போன்ற திருவடிகளை யுடையவனே, அரத்த மேனியாய் - செந்நிறமான திருமேனியையுடைய வனே, என் எம்பிரான் - என்னுடைய எம்பிரானே, பொருத்தம் இன்மை யேன் - நின்னை உடனே அடைதற்குரிய தகுதியில்லாதேன், பொய்ம்மை உண்மையேன் - பொய்யுலக வாழ்வில் இருக்க வேண்டிய நிலைமையை உடையேன், எனை போத என்று புரிந்து நோக்கவும் - அத்தகைய என்னை வருக என்று அழைத்து விரும்பி அருட் பார்வை நல்கவும், வருத்தம் இன்மையேன் - நின்னை விரைந்து அணுகும் முயற்சியில்லாதேன், வஞ்சம் உண்மையேன் - மயக்கமுடையேன், மாண்டிலேன் - அவற்றால் இறந் தொழிந்திலேன், அருள் செய் அன்பரும் நீயும் அங்கெழுந்தருளி - நின்னால் அருள் செய்யப்பட்ட மெய்யடியார்களும் நீயும் சிவபுரத்துக்கு எழுந்தருளி, எனை இங்கு இருத்தினாய் - சிறியேனைப் பொய்யுலக வாழ்வில் இருக்கு மாறு பணித்தாய், முறையோ - இது உனக்குத் தகுதியோ? வம்பனேன் வினைக்கு இறுதி இல்லையே - நிலையில்லாதேனாகிய எனது பிராரத்த வினைக்கு ஓர் அழிவில்லையோ?

கமல மலர்ப் பாதனே, அரத்த மேனியாய், என் எம்பிரான், நின்னை உடனே அடைதற்குத் தகுதியில்லாதேன், பொய்யுலக வாழ்க்கையில் இருக்க வேண்டிய நிலைமையையுடையேன், அத்தகைய எனை வருக என்று அழைத்து அருட்பார்வை நல்கவும், நின்னை விரைந்து அணுகுதற்கு முயற்சியில்லாதேன், வஞ்சமுண்மையேன், அவற்றால் இறந்தொழிந்திலேன், நின்னால் அருள் செய்யப்பட்ட நின் மெய்யடியார்களும் நீயும் சிவபுரத்துக்கு எழுந்தருளி என்னை இப்பொய்யுலக வாழ்வில் இருக்குமாறு பணித்தாய், இது முறையோ? நிலையில்லாதேனாகிய எனது பிராரத்த வினைக்கு இறுதி இல்லையோ? அதனை அழித்துக் கதியருள வேண்டும் என்பதாம்.

பொருத்தம் - உடனே கதி அடைதற்குரிய தகுதி. பொருந்தற்குரியதான அத்துவிதக் காட்சி என்பாருமுளர். உண்மை - உள்ள தன்மை. பொய்மை யுண்மை பொருத்த மின்மைக்கு ஏதுவாகும். போத - போதக; வருக. வருத்தம் - முயற்சி. "ஆற்றின் வருந்தா வருத்தம்" (குறள் 68) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. ஈண்டு வருத்தம் - நின்னை விரைந்து அணுகுதற்கேற்ற முயற்சியைக் குறித்தது. வருத்த மின்மைக்கு வஞ்சமுண்மை ஏதுவாகும்.

பொய்மையுண்மையும் பொருத்தமின்மையும் வஞ்சமுண்மையும் வருத்தமின்மையும் ஆகிய இக்குறைபாடுகளையுடையேன் அவற்றால் உடனே இறந்துபட்டிருக்கலாம். அதுவும் செய்ய முடியாதவனாயினேன் என்பார், மாண்டிலேன் என்றார்.

அரத்தம் - ரத்தம் என்னும் வடமொழி. அகரத்தை முதலிற் பெற்று வந்தது. சிவப்பு என்பது பொருள். "அரத்த மேனியர் அடும்படை ஏந்துங் கரத்தர்" (கந்த. முதனாட் 82) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அங்கு என்றது சிவபுரத்தை. எழுந்தருளி என்றது புறப்பட்டுச் சென்றருளி என்றவாறு. இங்கு என்றது பொய்யுலக வாழ்வினை. இருத்தினாய் - இருக்கவென்று கட்டளையிட்டருளினாய்.

முறையோ என்றது ஒன்றும் போதா நாயேனை உய்யக்கொண்ட நின் கருணைக்கு என்னையும் உடன் அழைத்துச் சேறல் இயலாததொன்றன்று. அங்ஙனமாகவும் அழைத்துச் செல்லாது இங்கு எனை இருத்தியது தகுமோ என அடிகள் இரங்கிக் கூறியவாறு. என் எம்பிரான் என்பது என்னுடைய தலைவனே என உரிமை தோன்றக் கூறியவாறு "நின் கழலிணையலாதிலேன் என் எம்பிரான்", "பொய்மையேன் என் எம்பிரான்" (சத 76, 77) எனப் பிறண்டுமருளியவாறு காண்க. வம்பு - நிலையின்மை. வினை - பிராரத்த வினை. இல்லையே என்புழி ஏகாரம் வினா. வினைக்கு இறுதியில்லையேயாயினும் அவ்வினையை அழிவு செய்தருள வேண்டும் என்பது குறிப்பு.

இதன் கண், அன்பரும் நீயும் அங்கெழுந்தருளி இங்கென்னை இருத்தினாய் முறையோ? வினைக்கிறுதியில்லையே என்பவற்றால் ஆனந்தாதீத விருப்பம் மிகவுண்மை புலப்படுதலின் ஆனந்தாதீதம் என்னும் பத்தாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 93.

98. இல்லை நின்கழற் கன்ப தென்கணே
ஏலம் ஏலுநற் குழலி பங்கனே
கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
டென்னை நின்கழற் கன்ப னாக்கினாய்
எல்லை யில்லைநின் கருணை எம்பிரான்
ஏது கொண்டுநான் ஏது செய்யினும்
வல்லை யேயெனக் கின்னும் உன்கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானனே.

ப-ரை: மறு இல் வானனே-குற்றமற்ற சிதாகாசத்திலுள்ளவனே, ஏலம் ஏலும் நல் குழலி பங்கனே-மயிர்ச் சாந்து பொருந்தும் நல்ல கூந்தலையுடைய உமையம்மையை இடப்பாகத்திலுடையவனே, நின் கழற்கு அன்பு அது என்கண் இல்லை-நின் திருவடிக்குரிய மெய்யன்பு என்னிடத்தில் இல்லை; அங்ஙனமாகவும், கல்லை மென் கனி ஆக்கும் விச்சை கொண்டு-மகா மேருமலையை மென்மையான கனிபோல இழகச் செய்து வில்லாக வளைத்த வித்தையினாலே, என்னை நின் கழற்கு அன்பன் ஆக்கினாய்-கல் போன்ற மனமுடைய என்னை நின் திருவடிக்கு அன்புடையவனாகச் செய்தனை; எம்பிரான்-எம்பெருமானே, நின் கருணை எல்லை இல்லை-நின் திருவருளுக்கு ஓர் அளவு இல்லை; நான் ஏது கொண்டு ஏது செய்யினும்-நான் எதனைக் கருவியாகக் கொண்டு எத்தீய செயல்களைச் செய்தாலும், எனக்கு இன்னும் உன் கழல் காட்டி மீட்க வல்லையே-குறைவுடையேனாகிய எனக்கு மீண்டும் நின் திருவடியைக் காட்டியருளி இப்பொய்யுலக வாழ்வினின்றும் மீட்டருளவும் ஆற்றலுடையையல்லவா?

மறுவில் வானவனே, ஏலம் ஏலும் நற்குழலி பங்கனே, நின் திருவடிக்குரிய மெய்யன்பு என்னிடத்தில் இல்லை; அங்ஙனமாகவும் கல்லை மென் கனியாக்கும் வித்தையினாலே கல் போன்ற மனமுடைய என்னை நின் திருவடிக்கு அன்புடையவனாகச் செய்தனை; எம்பிரானே, நின் கருணைக்கு எல்லை இல்லை; நான் ஏது கொண்டு ஏது செய்தாலும் எனக்கு இன்னும் நின் திருவடியைக் காட்டியருளி இப்பொய்யுலக வாழ்வினின்றும் மீட்டருளவும் ஆற்றலுடையையல்லவா? என்பதாம்.

அன்பது என்பதில் அது என்பது திருவடிக்குரிய மெய்யன்பைச் சுட்டியது. ஏலம்-மயிர்ச்சாந்து. "ஏலக் குழலி" (திருவெம்:5) "ஏல வார் குழலிமார் இருவர் தங்கணாயகனே" (அருட் 3) என வருவன காண்க.

இறைவியின் கூந்தல் இயல்பாகவே நறுமணமுடைத்தாகவும் ஏலம் ஏலு நற்குழலி என்றது உபசார வழக்காகும்.

கல்லை மென்கனியாக்கும் விச்சை கொண்டு என்னை நின்கழற் கன்ப னாக்கினாய் என்றது மகா மேருமலையாகிய கல்லை மென்கனிபோல் இழகச் செய்து வில்லாக வளைத்த வித்தையினால் கற்போலும் நெஞ்சுடைய என்னை நெகிழச் செய்து நின்கழற்கு அன்பனாக்கினாய் என்றவாறு. "தெவ்வரை மெய்யெரி காய் சிலை யாண்டென்னை யாண்டுகொண்ட, செவ்வரை மேனி யன்" (114) எனத் திருக்கோவையாரில் வருதலும், இப்பகுதிக்கு "பகை வரை மெய்யெரித்த வரையாகிய காய்சிலையைப் பணிகொண்டு பின் என்னை அடிமை கொண்ட செவ்வரை போலும் திருமேனியையுடையன்" என உரையும், வலியனவற்றை வயமாக்கிப் பயின்று பின் என்னை யாண்டா னென்பது போதர "காய்சிலை யாண்டென்னை யாண்டு கொண்ட"வென்றார்; என்னைத் தனக்கடிமை கொள்ளுதல் காரணமாகப் பிறிதொன்றின் மேலிட்டுக் கல்லை வளைத்தான்; என்னெஞ்சை வளைத்தல் காரணமாக அல்லது தனக்கொரு பகையுண்டாய்ச் செய்ததன்று போலும் என்பது கருத்து. "கல்லை மென் கனி யாக்கும் விச்சை கொண்டென்னை நின்கழற் கன்பனாக்கினாய்" என்பதுமது என விசேடவுரையும் பேராசிரியர் எழுதி யிருத்தலும் ஈண்டு அறியற்பாலன. விச்சை - வித்தை. விச்சை கொண்டு- வித்தையால்.

எல்லை - அளவு. "நன்று டலைவரு மெல்லை" கலி 39:31. இறை வன் திருவருளுக்கு எல்லையின்மையின் "எல்லை யில்லை நின் கருணை" என்றார். "எல்லையில் மாக்கருணைக் கடல் (திருப்படை 4) என வருத லுங் காண்க. எல்லையில்லை நின் கருணை என்பது அடிகள் பின்னர் வேண்டும் வேண்டுகோளுக்கு ஏதுவாக அமைந்துள்ளது.

ஏதுகொண்டு என்புழிக் கொண்டு என்பது மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபு. ஏது செய்யினும் என்புழி உம்மை, எவ்வித இழிவுடைய செயலைச் செய்யினும் என இழிவு சிறப்பு. வல்லையே என்புழி ஏகாரம் தேற்றம். இன்னும் என்றது முன்னுமல்லாமல் பின்னும் என்ற பொரு ளில் வந்தது. உம்மை, இறந்தது தழீஇய எச்சவும்மை. மீட்கவும் என்ப தில் உம்மை, இங்கு எனை இருத்திப் பிரிக்கும் ஆற்றலுடைய நினக்கு என்னை அதனினின்று மீட்கவும் ஆற்றலுண்டு என இறந்தது தழீஇய எச்சவும்மை. மறுவில் வான் - குற்றமில்லாத சிதாகாயம். பூதாகாயத்தை விலக்குதற்கு "மறுவில்" என்னும் அடை கொடுக்கப்பட்டது.

இதன் கண், எனக்கு இன்னும் உன் கழல் காட்டி மீட்கவும் வல் லமையுடையை யல்லவா? என்றதனால் அங்ஙனம் அருள் செய்ய வேண் டும் என்பது பெறப்படுதலின் ஆனந்தாதீதம் என்னும் பத்தாம் பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 94.

99. வான நாடரும் அறியொ ணாதநீ
மறையில் ஈறுமுன் தொடரொ ணாதநீ
ஏனை நாடருந் தெரியொ ணாதநீ
என்னை யின்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடு வித்தவா
உருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே.

ப-ரை: வான நாடரும் அறியொணாத நீ - விண்ணுலகத்தவரும் அறிய இயலாத நீ, மறையில் ஈறும் முன் தொடரொணாத நீ - வேதங்களின் முடிபாகிய உபநிடதங்களும் முற்காலத்தில் தொடர்ந்து பற்றி இன்ன தன்மையன் என உணர்த்த முடியாத நீ, ஏனை நாடரும் தெரியொணாத நீ - மற்றைய உலகத்திலுள்ளவர்களும் தெரிய முடியாத நீ, என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா - அடியேனை இனிதாக எளிவந்து ஆட்கொண்டருளியவாறும், ஊனை நாடகம் ஆடுவித்தவா - என் ஊனுடலை ஆனந்தக்கூத்து ஆடும்படி செய்தவாறும், நான் உருகி உனை பருக வைத்தவா - அடியேன் உள்ளமுருகி உன் அருட்பெருக்கைப் பருகும்படி செய்தவாறும், ஞான நாடகம் ஆடுவித்தவா - என்னை மெய்ஞ்ஞானக் கூத்து ஆடும்படி செய்தவாறும், வையகத்து உடை அவிச்சை நையவே - பூவுலகில் என்னுடைய அறியாமை நீங்கும் பொருட்டேயாம்.

வான நாடரும் அறிய முடியாத நீ, மறையின் முடிபாகிய உபநிடதங்களும் முன்தொடரொணாத நீ, ஏனைநாடரும் தெரியொணாத நீ அடியேனை இனிதாக எளிவந்து ஆண்டருளியவாறும் என் ஊனுடலை ஆனந்தக் கூத்தாடும்படி செய்தவாறும், நான் உள்ளமுருகி உன் அருட்பெருக்கைப் பருகும்படி செய்தவாறும், என்னை ஞானநாடகம் ஆடும்படி செய்தவாறும், பூவுலகில் என்னுடைய அறியாமை நீங்கும் பொருட்டேயாகும். நின் அருட்செயல் எத்துணை வியப்பிற்குரியது என்பதாம்.

வான நாடர் - விண்ணுலகத்துள்ள திருமால் முதலியோர். "வான நாடரும் மருவியேத்தா விண்ணுள்ளீராய் நிற்பதென்னே" (சுந் 6 : 4) எனத் தேவாரத்து வருதலும் காண்க. இறைவனைக் திருமால் முதலிய வானநாடரும் அறியவொண்ணாமையை, "நான்முகனோ, டொருங்கு வளைக் கரத்தானு முணராதவன்' (331) எனத் திருக்கோவையாரில் அருளியமையானுமறிக. உம்மை உயர்வு சிறப்பு. ஒண்ணாத என்பது இடைக் குறைந்து நின்றது. மறையீறு - வேதங்களின் முடிபாகிய உபநிடதங்கள். "மறையீறு அறியா மறையோனே" (சத 85) என வருதலுங் காண்க. ஏனைநாடர் என்றது வித்தியாதத்துவ புவனங்களிலுள்ள உருத்திரர்களை. "மாவேறு சோதியும் வானவரும் தாமறியாச், சேவேறு சேவடி', (கோத் 1) என வருதலுங் காண்க

இன்னிதாயாண்டு கொண்டவா - இனிதாக ஆட்கொண்டருளியவாறு.

''வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று போது நான்
வினைக்கேடன் என்பாய் போல
இனையனு னென்றுன்னை யறிவித்தென்னை ஆட்கொண்டு'' (சத 22)

''பத்தர் சூழப் பராபரன் பாரில் வந்து பார்ப்பானெனச்
சித்தர் சூழச் சிவபிரான் தில்லை மூதூர் நடஞ் செய்வான்
எத்த னுகிவந் தில்புகுந்தெமை ஆளுங்கொண்டு'' (சென்னிப் 4)

என்பன ஈண்டறியற் பாலன. இனிதாய் என்பது - இன்னிதாய் என ஒற்று விரிந்து நின்றது.

ஊன் அதனையுடைய உடலை உணர்த்தியது. ஊனிலாவியை யோம்புதற் பொருட்டு (சத 40) என்புழிப் போல. நாடகம் என்றது ஈண்டு ஆனந்தக் கூத்தை. ''நக்குமழுதுங் தொழுதும் வாழ்த்தி நாணு விதத்தாற் கூத்து நவிற்றி'' (புணர்ச்சிப் 8) என வருதல் காண்க. உருகிப் பருக வைத்த வா என இயையும். பருக வைத்தவா என்ற வினையால், உனை என்பதற்கு உனது அருட் பெருக்கை என உரைக்கப்பட்டது.

''உருகிப் பெருகி யுளங் குளிர முகந்து கொண்டு
பருகற் கினிய பரங்கருணைத் தடங்கடலை''......தெள் 15.

''பருகிய நின் பரங்கருணைத் தடங்கடலில்'' ஏசறவு 9.

என வருவன காண்க. வைத்தவாறு - அருள் செய்தவாறும். ''அன்பரில்... உனைப் பருக நின்றதோர் துப்பனே'' (சத 98) என வருதல் காண்க.

ஞான நாடகம் - மெய்ஞ்ஞானத்தால் உயிர் திருவருட் சத்தியைச் சார்ந்து இறைவனை அடைந்து மகிழ்தல். இது உயிரினுள் நிகழ்வதாகும்.

''ஊனநடனம் ஒருபால் ஒருபாலாம்
ஞானநடம் தான் நடுவே நாடு''

என்பது திருவருட்பயன்.

ஆண்டு கொண்டதும் ஊனை நாடகம் ஆடுவித்ததும் உனைப் பருக வைத்ததும் ஞான நாடகம் ஆடுவித்ததும் வையகத்துள் அறியாமை நீங்கும் பொருட்டேயாகும். ஏகாரம் - தேற்றம். அதனை நைய என்பதனேடும் கூட்டுக. அவிச்சை - அறியாமை. இது ஆணவத்தால் ஏற்பட்டது. வையகத்துடைய இச்சை எனப் பாடங் கொளின் அது அடுத்த திருப் பாட்டில் அந்தாதியாக வரும் முறையில் விச்சதின்றியே என்பதனேடு முரண்படும். ஆதலின் வையகத்துடை அவிச்சை எனப் பாடங் கொள்ளப்பட்டது.

இதன் கண், ஊனை நாடகம் ஆடுவித்தமையானும் ஞான நாடகம் ஆடுவித்தமையானும் ஆனந்தாதீதம் என்னும் பத்தாம் பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க.

95.

100. விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
 விண்ணு மண்ணக முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
 புலைய னேனையுன் கோயில் வாயிலிற்
பிச்ச னாக்கினாய் பெரிய அன்பருக்
 குரிய னாக்கினாய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமர மாயி னுங்கொலார்
 நானும் அங்ஙனே யுடைய நாதனே.

ப-ரை: விண்ணும் மண்ணக முழுதும் யாவையும் - விண்ணுலகத்தையும் மண்ணுலகம் முழுவதையும் மற்றும் எல்லா வுலகங்களையும், விச்சு அது இன்றியே விளைவு செய்குவாய் - வித்தாகிய அம்மூலகாரணம் புலப்படுதலில்லாமலே படைத்தருள்வாய்; வைச்சு வாங்குவாய் - சுட்டிய காலம் வரையும் காத்து வைத்து உரிய காலத்திலே ஒடுக்குவாய்; வஞ்சகம் பெரும் புலையனேனை - அறியாமையையுடைய பெரும் இழிவரலையுடைய என்னையும், உன் கோயில் வாயிலில் பிச்சன் ஆக்கினாய் - நினது திருக் கோயிலின் வாயிலில் நின்னை என்றும் தரிசிக்க வேண்டும் என்னும் பித்துடையவனாய் நிற்கும் வண்ணம் செய்தாய்; பெரிய அன்பருக்கு உரியன் ஆக்கினாய் - பேரன்பர்களாகிய மெய்யடியார்களுக்கு உரியேனாகுமாறு செய்தாய்; தாம் வளர்த்தது ஓர் நச்சு மாமரம் ஆயினும் கொலார் - உலகத்தவர் தம்மால் வளர்க்கப்பட்டது ஒரு நச்சு மாமரமானாலும் அதனை தாம் வெட்டி அழிக்கமாட்டார்; உடைய நாதனே - என்னை அடிமையாகவுடைய தலைவனே; நானும் அங்ஙனே - நின்னால் வளர்க்கப் பட்ட யானும் குற்றமுடையேனாயினும் நின்னாற் துன்புறுத்தப்படா தொழிதல் வேண்டும்.

விண்ணுலகத்தையும் மண்ணுலக முழுவதையும் மற்றும் எல்லா வுலகங்களையும் வித்தாகிய மூலகாரணம் புலப்படுதலில்லாமலே விளைவு செய்குவாய்; சுட்டிய காலம் வரையும் காத்து வைத்து உரிய காலத்திலே ஒடுக்குவாய்; வஞ்சகமுடைய பெரும் இழிவரலையுடைய என்னையும் உன் திருக்கோயில் வாயிலில் நின்னை என்றும் தரிசிக்க வேண்டும் என்னும் பித்துடையவனாய் நிற்கும் வண்ணம் செய்தாய்; பேரன்பர்களாகிய மெய் யடியார்களுக்கு உரியேனாகுமாறு செய்தாய்; உலகத்தவர் தம்மால் வளர்க்கப்பட்டது ஒரு நச்சு மாமரமானாலும் அதனைத் தாமே அழிக்க மாட்டார்; உடையநாதனே! நின்னால் வளர்க்கப்பட்ட யானும் குற்ற முடையேனாயினும் நின்னாற் துன்புறுத்தப்படாதொழிதல் வேண்டும்.

விச்சு, வைச்சு, பிச்சன் என்பன நச்சு என்னும் எதுகை நோக்கித் திரிந்தன. இனி இதற்கு முதற் திருப்பாட்டின் ஈற்றிலுள்ள வித்தையின் போலியாகிய விச்சை என்பதை இத்திருப்பாட்டிற்கு முதலாகக் கொண்டமையின் அங்ஙனமாயிற்று எனினும் அமையும்.

விச்சதின்றியே விளைவு செய்குவாய் என்றது விண்ணுலகம் முதலிய வற்றை இறைவன் உண்டாக்குங்கால் அவற்றிற்கு மூலகாரணமாகிய மாயை எல்லார்க்கும் எளிதிற் புலப்படாமை பற்றியாகும். "அளவிலண் டமும் மூளையின்றி விளைத்து", ஞானமிர்தம் கடவுள் 4. "விச்சதின்றி நாறு செய்வானும்" (நரியைக்) (தே. நாவு. 4 : 2.) என வருதல் காண்க. இங்ஙனம் கொள்ளாது முதலுற்பவத்தில் இறைவன் அவ்வுயிர்களுக்கு வினைகளாகிய வித்துக்களுக்கு ஈடாகவல்லாமல் தனது இச்சைப்படி தனு கரணபுவன போகங்களைக் கொடுப்பவன் என உரைக்கின் அது இறை இயல்புக்கு வழுவாகுமென்க.

வைச்சு - வைத்து. "வைச்ச பொருள் நமக்காகுமென்றெண்ணி" (தே. நாவு 80 : 4) வைத்து என்றது குறித்த காலம் வரையும் காத்து வைத்து என்றவாறு. வாங்குதல் - தம்பால் ஒடுக்குதல். "ஓடு தந்து நில்லென்றான் எல்லாம் தான் வைத்து வாங்க வல்லான்" (பெரிய. திரு நீல 20) வஞ்சகம் - மயக்கம்; புலைமை - இழிவு. "வஞ்சகப் புலையனேனை வழியறத் தொண்டிற் பூட்டி" (நாவு 76 : 5.)

கோயில் வாயிலில் பிச்சனாக்கினாய் என்றது திருக்கோயில் வாயிலிலே நின்னைத் தரிசிக்கும் பெருவிருப்பால் பைத்தியம் பிடித்தவன் போல நிற் கும் வண்ணம் செய்தாய் என்பது.

பெரிய அன்பர் என்றது இறைவனுடன் வந்த அணுக்கன் தொண் டர்களை. அன்பருக்குரியனாக்கினாய் என்றது "பேசப்பட்டேன் நின் அடி யாரில்" (சத 82) என அடிகள் முன்னர் அருளிச் செய்த வண்ணம் அவ் வடியாரில் தாமும் ஒருவராதல்.

"நச்சு மாமரமாயினும் கொலார்" என்பதற்கு உலகினர் என எழு வாய் வருவித்துக் கொள்க. உலகினர் தாம் வளர்த்ததொரு மாமரம் பின்னர் நச்சுத் தன்மையுடையதென அறிந்தவிடத்தும் தாமே அதனைக் கொல்லார். அதுபோல நின்னால் வளர்க்கப்பட்ட யானும் தீமையுடையே னாயினும் கொல்லப்படாது அருள் செய்தல் வேண்டும் என்பதாம். கொல்லாதருள்செய்தல் வேண்டும் என்பதன் குறிப்பு கொன்றால் மீளப் பிறப்புண்டாம்; அதனால், நீ ஆட்கொண்டமை, ஊனை நாடகமாட வைத் தமை,— உனைப் பருக வைத்தமை, ஞான நாடக மாடுவித்தமை ஆகிய இவைகள் பயனிலவாகும்; ஆதலாற் கொல்லாது இப்போதே என்னை உய்யக் கொண்டருள வேண்டும் என்பதாம்.

இதன் கண், "நச்சு மாமரமாயினும் கொலார் நானும் அங்ஙனே" என்பதனால் கொல்லாது பாதுகாத்து உய்யக் கொண்டருள வேண்டும் என வேண்டுதல் அதீதமாகிய சிவானந்த நுகர்ச்சிப் பொருட்டு என்பது பெறப்படுதலின் ஆனந்தாதீதம் என்னும் பத்தாம் பத்து நுதலிய பொருள் புலனாதல் காண்க. 96.

101. உடைய நாதனே போற்றி நின்னலால்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
உடைய னேபணி போற்றி உம்பரார்
தம்ப ராபரா போற்றி யாரினுங்
கடைய னுயினேன் போற்றி யென்பெருங்
கருணை யாளனே போற்றி என்னைநின்
அடிய னுக்கினுய் போற்றி ஆதியும்
அந்த மாயினுய் போற்றி யப்பனே.

ப-ரை: அப்பனே ஆதியும் அந்தமும் ஆயினுய் போற்றி-என் தந்தையே உலகத்திற்கு முதலும் முடிவும் ஆனவனே வணக்கம்; உம்பரார் தம் பராபரா போற்றி-மேலுலகத்தவர்களான தேவர்களுடைய மேலான பரம்பொருளே, வணக்கம்; யாரினும் கடைய னுயினேன் போற்றி-யான் மெய்யடியார் எவரினும் கடைப்பட்டவனுயினேன், காத்தருள்க; என் பெரும் கருணையாளனே போற்றி-என்னுடைய பேரருளாளனே வணக்கம்; என்னை நின் அடியன் ஆக்கினுய் போற்றி-யாரினுங் கடையனுகிய என்னை நினக்குத் தொண்டனுகச் செய்தாய் வணக்கம்; உடைய நாதனே போற்றி-என்னை அடிமையாகவுடைய தலைவனே வணக்கம்; இனி எனக்கு பற்று ஆவது நின் அலால் மற்று ஒன்று உடையனே-நின்னுல் ஆட்கொள்ளப்பட்ட பின்னர் எனக்குப் பற்றுக்கோடாகவுள்ளது நின்னையன்றிப் பிறிதொரு பொருளை உடையனே; பணி-கூறியருள்வாயாக. போற்றி-வணக்கம்.

அப்பனே, ஆதியும் அந்தமும் ஆனவனே, வணக்கம்; தேவர்களுடைய மேலான பரம்பொருளே, வணக்கம்; யாரினும் கடைய னுயினேன் காத்தருள்க; என்னுடைய பெருங் கருணையாளனே, வணக்கம்; என்னை நின் அடியனுக்கினுய் வணக்கம்; உடைய நாதனே வணக்கம்; எனக்குப் பற்றுக்கோடாகவுள்ளது நின்னையன்றிப் பிறிதொரு பொருளை உடையனே? பணித்தருள்க; வணக்கம் என்பதாம்.

உடைய நாதன் - அடிமையாகவுடைய தலைவன்; என்றது இறைவனை. ''உடையநாதன் திருமுடிமேன் மன்றல் விரவுந் திருப்பள்ளித் தாமஞ் சாத்தி'' எனப் பெரிய புராணத்து (சண்டேசுர 47) வருதல் காண்க. போற்றி என்பன வணக்கம் என்னும் பொருள்பட நின்றன. ''யாரினும் கடையனுயினேன் போற்றி என்பதில் போற்றி என்பது காத்தருள்க என்னும் பொருள்பட நின்றது. ''நின்னலாற் பற்று மற்றெனக் காவ தொன்றினி உடையனே பணி'' என்பது இனி எனக்குப் பற்றுவது நின் அல்லால் மற்று ஒன்று உடையனே பணி என இயைத்துப் பொருள் கொள்ளப்பட்டது. இனி என்பது நின்னுல் ஆட்கொள்ளப்பட்ட பின் என்னும் பொருட்டாய் நின்றது. பற்று-பற்றப்படுவது; ஆதாரம். அடிகளுக்கு இறைவனே யன்றிப் பிறிதொரு பற்றுக் கோடின்மை.

"ஐய் நின்ன தல்ல தில்லை மற்றோர் பற்று" சத:73.

"பத்தேது மில்லாதென் பற்றறநான் பற்றி நின்ற
மெய்த் தேவர் தேவுக்கே......" கோத் 5

"வம்பனேன் தன்னை யாண்டமா மணியே
மற்று நான் பற்றிலேன் கண்டாய்" வாழாப் 2

"பண்ணினேர் மொழியாள் பங்கநீ யல்லால்
பற்று நான் மற்றிலேன் கண்டாய்" வாழாப் 5

என அடிகள் அருளியவாற்றானுமறிக.

உம்பரார் மேலுலகத்தவர். பராபரன் பரத்துக்குப் பரமானவன்; என்றது மேலானவற்றிற்கும் மேலானவன் என்றவாறு. யாரினும் என்றது நின் மெய்யடியார் எவரினும் என்றவாறு. கடையன் - கடைப்பட்டவன். பின்னுள்ளவன் என்றவாறு.

என்னை நின் அடியனுக்கியது நீ பெருங் கருணையாளனாக இருந்தமையன்றே, என்பார் "என் பெருங் கருணையாளனே என்னை நின் அடியனாக்கினாய்" என்றார். கருணையாலாண்டமை,

"கடையவ னேனைக் கருணையினாற்கலந் தாண்டுகொண்ட
விடையவனே......" நீத் 1

"கன்னெஞ் சுருக்கிக் கருணையினால் ஆண்டு கொண்ட
அன்னந் திளைக்கு மணிதில்லை யம்பலவன்......" கோத் 11

"கன்னா ருரித்தென்ன என்னையுந் தன் கருணையினாற்
பொன்னார் கழல் பணித் தாண்ட பிரான்......" தெள் 9

"ஆனோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர்குழாம்
நாணாமே யுய்ய ஆட்கொண்டருளி" பொன்னூசல் 5

"உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானை......" கண்டபத்து 3.

"பூத்தானே புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினால்
பேர்த்தேநீ யாண்டவா றன்றே யெம் பெருமானே" ஏசறவு 8

"சீரார் அருளாற் சிந்தனையைத் திருத்தி யாண்ட சிவலோகா"
பிரார்த் 9

என அடிகள் அருளியவாற்றானுமறிக.

ஆதியும் என்ற உம்மையை அந்தம் என்பதனேடும் கூட்டுக. ஆதியு மந்தமுமாதல் உலகத்திற்குத் தோற்ற நிலை இறுதிகளைச் செய்தல். இறைவன் ஆதியு மந்தமுமாதல்.

"ஆதியு மந்தமு மாயினுற்கு" பொற் 20

என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க.

"அந்தமும் ஆதியும் ஆகிய அண்ணலார்" ஞான 39 : 1

"ஆதியும் ஈறுமாய் எம் அடிகள்" ஞான 77 : 10

"ஆதியாய் நடுவாய் அந்தமாய் நின்ற அடிகளார்" ஞான 378 : 6

"ஆதியும் அந்தமும் ஆனுன் கண்டாய்" நாவு 236 : 9

"ஆதியும் அந்தமும் ஆயினுய்" சுந் 92 : 4

எனத் தேவாரத்து வருவனவும் காண்க.

இதன் கண், 'என்னை நின் அடியனுக்கினுய்"; "நின்னலால் பற்று மற்றெனக் காவதொன்றினி உடையனே பணி" என்பதனுல் ஆட்கொண்ட நீ பிறிதொரு பற்றற்ற எனக்கு ஆனந்தாதீதத்தை அருள வேண்டும் என்பது பெறப்படுதலின் ஆனந்தாதீதம் என்னும் பத்தாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 97.

102. அப்ப னேயெனக் கமுத னேஆ
னந்த னேயக நெகஅள் ளூறுதேன்
ஒப்ப னேயுனக் குரிய அன்பரில்
உரிய னுயுனைப் பருக நின்றதோர்
துப்ப னேசுடர் முடிய னேதுணை
யாள னேதொழும் பாளர் எய்ப்பினில்
வைப்ப னேயெனை வைப்ப தோசொலாய்
நைய வையகத் தெங்கள் மன்னனே.

ப-ரை: எனக்கு அப்பனே-எனக்குத் தந்தையே, அமுதனே-எனக்கு அமுதம் போன்றவனே; ஆனந்தனே-அழியாத பேரின்பமுடையவனே; அகம் நெக அள் ஊறு தேன் ஒப்பனே-உள்ளம் உருகும் வண்ணம் இனிமையால் வாயூறுதற்கு ஏதுவாயுள்ள தேனைப் போன்றவனே, உனக்கு உரிய அன்பரில் உரியனுய்-நினக்கு உரியராகிய மெய்யன்பரைப்போல யானும் உரிமையுடையேனுகி, உனை பருக நின்றது ஓர் துப்பனே-உனது திருவருட் பெருக்கினைப் பருகும் வண்ணம் ஞானசாரியனுய்க் காட்சி தந்து நின்ற ஒப்பற்ற தூயோனே; சுடர்முடியனே-செவ்வொளி விளங்கும் சடைமுடியை யுடையவனே, துணையாளனே-அன்பர்க்கு உறுதுணையாயுள்ளவனே, தொழும்பாளர் எய்ப்பினில் வைப்

பனே - தொண்டர்களுக்குத் தளர்ந்த இடத்துப் புதைபொருள் போல உதவுபவனே, எங்கள் மன்னனே - எங்கள் அரசனே, எனை வையகத்து நைய வைப்பதோ சொலாய் - அடியவனாகிய என்னைப் பொய்யாகிய உலக வாழ்வில் வருந்தும்படி வைப்பதுதானோ நின் திருவுள்ளக் கருத்து? கூறியருள்க.

எனக்கு அப்பனே, அமுதனே, ஆனந்தனே, உள்ளம் உருகும் வண்ணம் இனிமையால் வாயூறுதற்கேதுவாகிய தேனை ஒப்பவனே, உனக்குரிய மெய்யன்பர்களைப் போல யானும் உரிமையுடையேனாகி நினது திருவருட் பெருக்கைப் பருகும் வண்ணம் ஞானாசாரியனாய்க் காட்சி தந்து நின்ற ஒப்பற்ற தூயோனே, சுடர்முடியனே, துணையாளனே, தொழும்பாளர் எய்த்தவிடத்துப் புதைபொருள் போல் உதவுபவனே, எங்கள் மன்னனே, எனை வையகத்து வருந்தும்படி வைப்பதுதானோ நினது திருவுள்ளக் கருத்து? கூறியருள்க என்பதாம்.

அமுதனே என்றார் கழிபெருஞ்சுவையோ டுறுதிபயத்தலுடைமையான், ஆனந்தனே என்றார், இறைவன் என்றும் அழியாப் பேரின்பமுடையனாயிருத்தலின். "அத்தனானந்தன்" (திருவெம் 3) "அத்தர் ஆனந்தரால் அன்னே யென்னும்" (அன்னை 3) "அன்பன் அமுதளித்தூறு மானந்தன்" (குயிற் 6) என அடிகள் பிறாண்டும் இறைவனை ஆனந்தன் என்றருளிச் செய்தமை காண்க. அள்ளூறுதல் - வாயூறுதல். "அமுதனென் றள்ளூறித் தித்திக்கப் பேசுவாய்" (திருவெம் 3) என் புழியும் இப்பொருட்டாதல் காண்க. அகநெகவும் வாயூறவும் செய்யும் தேன் எனத் தேனின் விசேடம் கூறியவாறு. தேன் ஒப்பன் - தேன் போன்றவன். "கோற்றே னெனக் கென்கோ குரைகடல் வாயமுதென்கோ" (உயிருண்ணிப் 8) என அடிகள் அருளியவாறுங் காண்க. அன்பரில் என்புழி இல் ஒப்புப்பொருட்டு. உனைப் பருக - உன் திருவருட் பெருக்கைப் பருக. "என்பொலா மணியை யேத்தி யினி தருள்பருக மாட்டா" (அச்சப் 3) என வருதல் காண்க. "பருகற் கினிய பரங் கருணைத் தடங்கடலை" (தெள் 15) "சிவன் கருணைத் தேன் பருகி" (குலாப் 5) என்பனவும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலன. நின்றது - ஞானாசாரியனாகக் காட்சி கொடுத்து நின்றது. துப்பன் - தூயோன். துப்பு - தூய்மை. (பிங் 10 : 626) இனி "துப்பனே தூயாய் தூய வெண்ணீறு துதைந்தெழு துளங்கொளி வயிரத் தொப்பனே" (அருட் 6) என துப்பனே என்பதின் வேறாகத் தூயாய் என்றலின் துப்பனே என்பதற்குப் பவளம் போன்றவனே எனினுமமையும். "பவளச் செவ்வி யாயின வீசன்" (282) எனத் திருக்கோவையாரிலும் "பெருங்கடற் பவளம் போல் வண்ணராகிலும்" (ஞான 242-5) எனத் தேவாரத்தும் வருவன ஈண்டறியற்பாலன.

முடி - சடையானியன்ற முடி. "பைவா யரவு மறியும் மழுவும் பயின் மலர்க்கை, மொய்வார் சடைமுடி முன்னவன்" (170) எனத்

திருக்கோவையாரில் வருதலும், சடைமுடி என்பதற்குச் "சடைகளா னியன்ற முடி" எனப் பேராசிரியர் உரைத்தமையும் காண்க. அது ஒளி யுடைத்தாகலின் இறைவனைச் சுடர் முடியனே என்றார். "மின்னங் கலருஞ் சடைமுடியோன்" (திருக்கோவை 172) என்பதும் "ஒளி யவ் விடத்து விரியுஞ் சடையானியன்ற முடியையுடையவன்; மின்னங் கலரு மென்பதற்கு மின்னவ் விடத்தலர்ந்தாற் போலுஞ் சடையெனினு மமை யும்" என்னும் அப்பகுதி (பேர்) உரையும் ஈண்டறியற்பாலன. இறை வன் சடை * செஞ்சடையாதலின் சுடர்தல் என்பதற்குச் செவ்வொளி விளங்குதல் எனவுரைக்க.

"சடையே நீரகந் ததும்பி நெருப்புக் கவிக்கும்மே." (11-ந் திருமுறை) என்னும் இளம் பெருமானடிகள் திருவாக்கு இங்கு கருதத்தக்கது.

துணையாளன் - துணையாகவுள்ளவன். "தோன்றிய எவ்வுயிர்க்கும் துணையாய் நின்ற தாயானை". "பல்லுயிர்க்கும் துணையானானை" (நாவு 263 : 4 : 276 : 3) எனத் தேவாரத்தும் வருவன காண்க. தொழும்பாளர் - தொழும்பர், அடியவர். அடியவர்க்கு எய்த்த இடத்துப் புதைபொருள் போல உதவுதலின் "தொழும்பாளர் எய்ப்பினில் வைப்பே" என்றார். "எனக் கெய்ப்பினில் வைப்பே' (நீத் 39) என அடிகள் பிறிதோரிடத் தும் அருளியமை காண்க.

"பத்தருக் கெய்ப்பினில் வைப்பென வுதவும்
முத்தித்தாள திருவிடைமும் 7 : 41 – 2

"அடியவர் எய்ப்பினில் வைப்பாகக் கருதி வைத்த நிதியே"
கோயில் திருப்பண்ணி 33.

எனப் பதினொராந் திருமுறையில் வருதலுங் காண்க.

இதன் கண், பலபட விளித்து "எனை வையத்து நைய வைப்பதோ சொலாய்" என்பதனால் என்னை வையகத்து வைப்பதை நீட்டியாது விரைய உய்யக் கொண்டருள வேண்டும் என்னும் குறிப்புப் பெறப்படு தலின் ஆனந்தாதீத விருப்பம் என்னும் பதிகப் பொருள் போந்தவாறு காண்க. 98.

103. மன்ன வெம்பிரான் வருக வென்னெனை
மாலு நான்முகத் தொருவன் யாரினும்
முன்ன எம்பிரான் வருக வென்னெனை
முழுதும் யாவையும் இறுதி யுற்றநாட்
பின்ன எம்பிரான் வருக என்னெனைப்
பெய்க ழற்கண்அன் பாயென் னாவினாற்
பன்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பாவ நாசநின் சீர்கள் பாடவே.

---

* சுருடரு செஞ்சடை வெண்சுட ரம்பலவன் திருக்கோவை 336.

ப-ரை: மன்ன - எங்கள் அரசனே, எம்பிரான் - எங்கள் தலைவனே, எனை வருக என் - அடியேனை நின்பால் வருக என்று அழைத்தருள்வாயாக, மாலும் நான்முகத்து ஒருவன் யாரினும் முன்ன - திருமாலினும் நான்முகத்தொருவனாகிய பிரமனிலும் மற்றை எவ்வகை மேம்பட்டாரினும் முற்பட்டவனே, எம்பிரான் - எங்கள் தலைவனே, எனை வருக என் - அடியேனை நின்பால் வருக என்று அழைத்தருள்வாயாக; முழுதும் யாவையும் இறுதி உற்ற நாள் பின்ன - எல்லா வுலகங்களும் எல்லாப் பொருள்களும் நின்பால் ஒடுங்குதலுற்ற பேரூழிக் காலத்துக்குப் பின்னரும் ஒடுங்குதலின்றி நிலைபெற்றிருப்பவனே, எம்பிரான் - எங்கள் தலைவனே, எனை வருக என் - அடியேனை நின்பால் வருக என்று அழைத்தருள்வாயாக; பாவநாச - உயிர்களின் பாவங்களை ஒழிப்பவனே; எம்பிரான் - எங்கள் தலைவனே, பெய் கழல் கண் அன்பாய் என் நாவினால் நின் சீர்கள் பன்ன பாட - இட்ட வீரக்கழலினையுடைய திருவடிக்கண் மெய்யன்புடையேனாய் எனது நாவினால் நினது மிக்க புகழ்களைப் பிறர்க்கு எடுத்துச் சொல்லவும் இசையுடன் பாடவும், எனை வருக என் - அடியேனை நின்பால் வருக என்று அழைத்தருள்வாயாக.

மன்ன, எம்பிரான், எனை வருக என்று அழைத்தருள்வாயாக. திருமாலினும் பிரமனிலும் மற்றை யாரினும் முற்பட்டவனே, எம்பிரான், எனை வருக என்று அழைத்தருள்வாயாக; எல்லா வுலகங்களும் எல்லாப் பொருள்களும் இறுதியுற்ற பேரூழிக்காலத்துப் பின்னரும் ஒடுங்குதலின்றி நிலை பெற்றிருப்பவனே, எம்பிரான், எனை வருக என்று அழைத்தருள்வாயாக; பாவநாச, எம்பிரான், இட்ட வீரக்கழலினையுடைய திருவடிக்கண் மெய்யன்புடையேனாய் எனது நாவினால் நினது மிக்க புகழ்களைப் பிறர்க்கு எடுத்துச் சொல்லவும் இசையுடன் பாடவும் எனை வருக என்று அழைத்தருள்வாயாக என்பதாம்.

மன்னன் என்பது மன் என்னும் இடைச்சொல்லடியாகப் பிறந்த பெயர். அது நிலைபெறுதற் பொருளில் வந்து ஈறுகெட்டு விளியாயிற்று. அங்ஙனமாயினும் பொதுவகையான் மன்னன் என்பதற்கு அரசன் எனப் பொருளுரைக்கும் வழக்காறுண்மையால் அரசனே என்னும் பொருளுரைக்கப்பட்டது.

யாரினும் என்புழி உறள் பொருளில் வந்த இன்னை மாலினும் எனச் சேர்த்தும், இன்னையும் உம்மையும் நான்முகத்தொருவன் என்பதனோடும் சேர்த்தும் பொருளுரைக்கப்பட்டது. யாரினும் என்பது எவ்வகை மேம்பாட்டினரினும் என்னும் பொருளில் வந்தது. அதனாற் குறிக்கப்பட்டவர் உருத்திரர் அனந்தர் முதலானோர். இங்ஙனம் கொள்ளாது திருமாலும் பிரமனும் முதலிய தேவர்கள் யாரினும் எனப் பொருளுரைப்பது சிறப்புடைத்தாகாது. இறைவன் திருமால் பிரமன் அன்றி அவரினும் மேம்பட்ட உருத்திரன் முதலாயினாரினும் மேம்பட்டவன் என்பதை,

"மாவேறு சோதியும் வானவரும் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றாதாய் கோத்தும்பீ (கோத் 1)

என அடிகள் அருளிய திருவாக்கானுமறிக.

முன்னவன் பின்னவன் என்பன விளிக்கண் முன்னபின்ன என வந்தன. முழுதும் யாவையும் என எஞ்சாமைப் பொருள்படக் கூறியது உலகங்கள் எல்லாவற்றையும் அவற்றிலுள்ள பொருள்கள் எல்லாவற்றை யும் அடக்குதற் பொருட்டாகும். அவை தனு கரண புவன போகங்க ளாகும். யாவையும் இறுதியுற்ற நாள் என்றது பேரூழிக் காலத்தை. "ஓதத்தொலி மடங்கி யூருண்டேறி யொத்துலகமெலா மொடுங்கிய பின்" நாவு 248 : 2. இதனை வடநூலார் சர்வசங்கார காலம் என்பர். முன் னவன் பின்னவன் என்பன தோற்றமுடைய எவருக்கும் எவற்றுக்கும் முன்னே தான் தோற்றமின்றியுள்ளவன் எனவும், பேரூழிக்குப் பின்னே தான் இறுதியின்றி யுள்ளவன் எனவும் பொருள்படுவனவாகும். இதன் தாற்பரியம் தோற்றமும் ஒடுக்கமுமின்றி அநாதி நித்தியன் என்பதாகும்.

"விண்ணை மடங்க விரிநீர்பரந்து வெற்புக் கரப்ப
மண்ணை மடங்க வருமொருகாலத்து மன்னி நிற்கும்
அண்ணல்" கோவை 75.

"முன்னு மொருவரி ரும் பொழின் மூன்றற்கு முற்று மிற்றாற்
பின்னு மொருவர் சிற்றம்பலவர்" கோவை 160

"மூப்பா னிளையவன் முன்னவன் பின்னவன்" கோவை 312

எனத் திருக்கோவையாரினும்

"பின்றானு முன்றானு மானான்றன்னை" நாவு 224 : 2

"முன்னவன் காண் பின்னவன் காண் மூவாமேனி முதல்வன்
காண்" நாவு 261 : 8.

"முன்னுமாய் பின்னுமாய் முடிவானான் காண்" நாவு 298 : 4

எனத் தேவாரத்தும் வருவன காண்க.

பெய்கழல் - இட்ட கழல். கழல் ஈண்டு திருவடியை உணர்த்தியது. கழற்கண் அன்பாய் - திருவடிக்கண் அன்புடையனாய். "வேண்டு நின் கழற் கன்பு" (சத 74) என அடிகள் திருவடியன்பை வேண்டுதல் காண்க. பன்ன - நின் சீர்களை அறியாதவர்க்கு எடுத்துச் சொல்ல. பன்னல் - சொல் லல். "பன்னிய பனுவற் பார்ப்பன குறுமகள்" பெருங் (2) 3 - 30 என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. பாட என்றது அப்புகழ்களை அமைத்து இசைப் பாடல்களைப் பாட என்றவாறு. நாவினாற் பன்ன பாட வருக என் என முடியும். என் என்பது பகுதி மாத்திரையாய் முன்னிலை ஏவலொருமை வினைமுற்றுப் பொருளில் வந்தது. "எனை வருக என்" என நான்கு முறை வேண்டிக்கொண்டது இறைவனை அணு கும் ஆர்வ மிகுதியாலாகும்.

பாவ நாசன் - உயிர்களின் பாவங்களை ஒழிப்பவன்,

"பண்டு நாம் செய்த பாவங்கள் தீர்ப்பார்" ஞான 41 : 10

"பாதந் தொழுவார் பாவம் தீர்ப்பார்" ஞான 67 : 1.

"நினைத்துத் தொழுவார் பாவம் தீர்க்கும் நிமலா" ஞான 69 : 6

"பணியு மடியார்களன பாவமற இன்னருள் பயந்து" ஞான 340 : 4

"பத்தர் தம் பாவந் தீர்க்கும்......அத்தனுர்" நாவு 68 : 10

"தன் அடைந்தார் தம் ...பாவமெலாம் அரித்தானை" நாவு 279 : 2

"பாவம் தீர்க்கும் அருமணியை" நாவு 242 : 1

எனத் தேவாரத்தும் வருவனவுங் காண்க. புண்ணியங்களும் உயிர்கள் கதியடைதற்குப் பொன் விலங்கு போலத் தடையாகவுள்ளனவன்றோ அவற்றை யொழித்தல் வேண்டாவோவெனின் பாவம் நீங்கிய உயிர்கள் செய்யும் புண்ணியங்கள் பயன் கருதாது செய்யும் நிஷ்காமிய கருமங் களாய் வீடு பேற்றிற்கு ஏதுவாதல் பற்றி அவற்றை ஒழித்தல் கூறப் பட்டிலது.

இதன் கண், "வருக என் னெனை" எனப் பலகாற் கூறுமுகத்தால் அடிகள் ஆனந்தாதீத நிலையை விரும்புதல் மிகுதியாகப் புலப்படுதலின் ஆனந்தாதீதம் என்னும் பத்தாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 99.

104. பாட வேண்டும்நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டும்நான் போற்றி யம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டும்நான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டும்நான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே.

ப-ரை: நின் மெய்யர் மெய்யனே - நின்னுடைய மெய்யடியார் களுக்கு மெய்ப்பொருளாயுள்ளவனே, நான் நின்னையே போற்றி பாட வேண்டும் - அடியேன் மற்றெவரையும் வணங்காது நின்னையே வணங்கி உன் புகழ்களையே பாட அருள்செய்ய வேண்டும், நான் போற்றி பாடி நைந்து நைந்து நெக்கு நெக்கு உருகி ஆட வேண்டும் - அங்ஙனம் நான் நின்னை வணங்கிப் புகழ்களைப் பாடி நின்னைக் காணும் அவாவினுல் உள் ளம் வருந்தி வருந்தி நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகி யான் ஆனந்தக் கூத்து ஆட அருள் செய்ய வேண்டும், நாயினேன் நான் போற்றி அம்பலத்து ஆடு நின் கழல் போது கூடவேண்டும் - கீழ்மையுடையேனுகிய அடியேன் நின்னை வணங்கித் தில்லைத் திருச்சிற்றம்பலத்தின் கண் ஆனந்தத் தாண்

டவஞ் செய்தருளுகின்ற நின் வீரக் கழலிணையுடைய திருவடிமலர்களைச் சார்ந்து தரிசிக்க அருள் செய்தல் வேண்டும்; போற்றி எனை இப்புழுக் கூடு நீக்கு - நினக்கு வணக்கம்; அடியேனை இப்புழுக் கூடாகிய உடம்பி னின்றும் நீக்கியருள வேண்டும்; நான் போற்றி பொய் எலாம் வீட வேண்டும் - நான் நின்னை வணங்கி நிலையற்ற பொய்யாகிய இவ்வுலக பந்தங்கள் எல்லாவற்றினும் நீங்கும்படி அருள் செய்ய வேண்டும், வீடு தந்தருளு போற்றி - அந்தமில் இன்பத் தழிவில் வீட்டைத் தந்தருளுக; நினக்கு வணக்கம்.

நின் மெய்யடியவர்களுக்கு மெய்ப்பொருளாக வுள்ளவனே, அடி யேன் நின்னையே வணங்கி நின் புகழ்களையே பாட அருள் செய்ய வேண் டும்; அங்ஙனம் நான் நின்னை வணங்கிப் புகழ்களைப் பாடி நின்னைக் காணும் அவாவினால் உள்ளம் நைந்து நைந்து நெக்கு நெக்கு உருகி நான் ஆனந்தக் கூத்து ஆட அருள் செய்யவேண்டும். கீழ்மையுடையேனாகிய நான் நின்னை வணங்கித் திருச்சிற்றம்பலத்தின் கண் ஆனந்தத் தாண்ட வஞ் செய்தருளுகின்ற நின் திருவடிமலர்களைச் சார்ந்து தரிசிக்க அருள் செய்தல் வேண்டும். நினக்கு வணக்கம்; அடியேனை இப்புழுக் கூட்டி னின்றும் நீக்கியருள வேண்டும். நான் நின்னை வணங்கிப் பொய்யாகிய இவ்வுலக வாழ்வினின்றும் நீங்கும்படி அருள்செய்ய வேண்டும். வீடு தந்தருளுக. நினக்கு வணக்கம் என்பதாம்.

நின்னையே பாடவேண்டும் எனக் கூறினும் நின் புகழ்களையே பாட வேண்டும் என்பது கருத்தாகக் கொள்க. நின்னையே என்பதில் ஏகாரம் பிரிநிலை. பாடி என்றது முன்னர்ப் பாடவேண்டும் என்பதை அனுவ தித்தது. நைதல் - வருந்துதல். "நைந்துள்ளி, யுகுவதுபோலு மென் னெஞ்சு" (கலி 33 : 15 – 16) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. நைதல் ஈண்டு பிரிந்து மறைந்த இறைவனைக் காணும் அவா மிகுதியால் வருந்துதலை உணர்த்தியது. நைந்து உருகி என இயையும். "உடைந்து நைந் துருகி" (ஆசைப் 4) என வருதலும் காண்க. நெக்கு - நெகிழ்ந்து. நெகிழ்தல் உருகுதற்கு முன் நிகழும் வினை. நெக்கு நெக்கு உருகி எனக் கூட்டுக. "ஊற்று மணற் போல் நெக்கு நெக்குள்ளே உருகி", "நெக்கு நெக்குள் ளுருகி யுருகி" (புணர்ச்சிப் 2, 8) என அடிகள் அருளியமை காண்க. ஆடுதல் - ஆனந்தக் கூத்தாடுதல்.

அம்பலத்தாடு நின் கழல் - தில்லைச் சிற்றம்பலத்தாடும் நின் திருவடி.

"அம்பலத் தாடினனுக்கு" பொற் 11

"அம்பலத்தாடு கின்ற என்பொலா மணியை" அச்சப் 3.

என இத்திருவாசகத்தும்,

"தில்லைச் சிற்றம்பலத்துப் பயில்கின்ற கூத்தன்" (18)

"அம்பலத்து ஆடும்பிரான்" (19)

"அம்பலத்தாடு முன்னேன்" (65)

"சிற்றம்பலத் தாடுமெங் கூத்தப்பிரான்" (204)

"அம்பலத்துக் குனிக்கும் பிரான்" (229)

"சிற்றம்பலத்து நடம்பயில் வோன்" (263)

எனத் திருக்கோவையாரினும் வருவன காண்க. கழல் - கழலணிந்த திருவடி. "செயன் மன்னுஞ் சீர்க் கழற் சிற்றம்பலவர்" 395 எனத் திருக்கோவையாரில் வருதலுங் காண்க. கழல்போது - திருவடிமலர். "தில்லையோன் அடிப்போது" (கோவை 181) என வருதலுங் காண்க. "வீடு தந்தருளு" எனப் பின்னர் வருதலால் "அம்பலத்தாடு நின் கழற்போது கூடவேண்டும்" என்பதற்குத் தில்லைச்சிற்றம்பலத்தின் கண் ஆனந்தத் தாண்டவஞ் செய்யும் நின் திருவடி மலர்களைச் சார்ந்து தரிசிக்க அருள்செய்ய வேண்டும் எனப் பொருளுரைக்கப்பட்டது.

புழுக்கூடு - புழுக் கூடாகிய உடம்பு. "ஊனுர் புழுக் கூடு", "முடையார் புழுக் கூடு" (சத 59, 60) "புழுக்கணுடைப் புன்குரம்பை" (அடைக் 1) "முழுப் புழுக் குரம்பை" (பிடித் 2) "புழுவினுற் பொதிந்திடு குரம்பை" (சென்னிப் 8) எனப் பிருண்டு அருளியவாறுங் காண்க. இறைவன் திருவடிமலரை அடைதற்கு இவ்வுடம்பு தடையாக இருத்தலின் "இப்புழுக்கூடு நீக்கு" என்ருர். வீட வேண்டும் - நீக்க வேண்டும் என்றது நீங்க அருள்செய்ய வேண்டும் என்றவாறு. நீக்கு அருளு என்னும் வினைமுதல்கள் நீக்குவாய் அருளுவாய் என்னும் முன்னிலை யேவலொருமை வினைமுற்றுப் பொருளில் வந்தன. அருளு என்பதில் உ, சாரியை.

மெய்யர் என்றது மெய்ம்மையையுடையவர்கள் எனப் பொருள்படுமாயினும் நின் மெய்யர் என்றதனுல் மெய்யன்புடைய அடியவர்களை உணர்த்தியது. மெய்யர்க்கு என நான்காவது விரிக்க. மெய்யனே என்பதற்கு மெய்பொருளாக நின்று அருள் செய்பவனே என்பது கருத்தாகக் கொள்க. "மெய்யர் மெய்யை" (பொற்சுண் 12) "அடியவர் படுதுயர் களைவதோர் வாய்மையர்" (ஞான 344 : 2) "மெய்யர்க்கு மெய்ப்பொருளான விமலனை", "மெய்யர் மெய்ப்பொருளோ" (சுந் 45 : 11; 52 : 2) என வருவன காண்க.

இதன்கண், "இப்புழுக் கூடு நீக்கு", "வீடு தந்தருளு" என்பவற்ருல் வீட்டின்பமாகிய ஆனந்தாதீதத்தை விரும்புதல் புலப்படுதலின் ஆனந்தாதீதம் என்னும் பத்தாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 100.



திரு உத்தரகோசமங்கை

( By kind courtesy of the Archaeological Survey of India )

# 6. நீத்தல் விண்ணப்பம்

பிரபஞ்ச வைராக்கியம்

உத்தர கோச மங்கையில் அருளிச் செய்யப்பட்டது.

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

105. கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்றோல்
உடையவ னேமன் னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம் பிரானென்னைத் தாங்கிக்
கொள்ளே.

ப-ரை: கடையவனேனை கருணையினால் கலந்து ஆண்டு கொண்ட - கடைப்பட்டவனாகிய என்னை நின் பேரருளினால் வலிய எழுந்தருளி வந்து என்பால் இயைந்து ஆட்கொண்டருளிய, விடையவனே - இடபவாகனனே, விட்டிடுதி கண்டாய் - அடியேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடா தொழிதல் வேண்டும்; விறல் வேங்கையின் தோல் உடையவனே - வலிய புலியின் தோலை உடையாகக் கொண்டவனே; மன்னும் உத்தர கோச மங்கைக்கு அரசே - நிலைபெற்ற திருவுத்தர கோசமங்கை என்னும் தலத்துக்கு அரசனே, சடையவனே - சடையையுடையவனே, எம்பிரான் - எங்கள் தலைவனே, தளர்ந்தேன் என்னை தாங்கிக்கொள் - நின் திருவுருவக் காட்சி பெறுமையானும் இவ்வுலகப் பற்று நீங்காமையானும் சோர்வடைந்தேன்; அடியேனை அணைத்துப் பாதுகாத்துக் கொள்வாயாக.

கடையவனாகிய என்னை நின் பேரருளினாற் கலந்து ஆண்டு கொண்டருளிய விடையவனே, அடியேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடா தொழிதல் வேண்டும். வலிய வேங்கையின் தோல் உடையவனே, உத்தர கோசமங்கைக்கு அரசே, சடையவனே, எம்பிரான், தளர்ந்தேன் என்னைத் தாங்கிக் கொள்வாயாக.

அடிகள் தம்மைக் கடையவன் என்றது ஆணவ முனைப்பு நிகழாமைப் பொருட்டும் எவ்விடத்தும் தம்மைத் தாழ்த்திக் கூறும் முறைமை பற்றியுமாகும். கருணையினால் ஆண்டுகொண்ட - பேரருளினால் ஆண்டு கொண்டருளிய:

"வன்னெஞ்சக் கள்வன் மனவலியன் என்னாதே
கன்னெஞ் சுருக்கிக் கருணையினால் ஆண்டுகொண்ட" கோத் 11.

"கன்னு ருரித்தென்ன என்னையுந்தன் கருணையினல்
பொன்னூர் கழல்பணித் தாண்டபிரான்" தெள் 9.

"உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக் கருணையினு லாண்டு கொண்ட
திருத்துருத்தி மேயானை" கண்டபத்து 3

"பூத்தானே புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினல்
பேர்த்தே நீ யாண்டவா றன்றேயெம் பெருமானே" ஏசறவு 8

என அடிகள் பிறண்டும் அருளியமை காண்க. கலத்தல் - மனத்திற் பொருந்துதல். கலந்தரண்டமை.

"கயன்மாண்ட கண்ணிதன் பங்கனெனைக் கலந்தாண்ட லுமே"
(தெள் 11)

என்பதனுலுமறிக. கலத்தற்கும் கருணையே காரணமாதலின் கருணையினுற் கலந்து என்ருர். "கற்போலு நெஞ்சங் கசிந்துருகக் கருணையினல், நிற்பானைப் போலவென் னெஞ்சினுள்ளே புகுந்தருளி" (தோணு 4) என அடிகள் அருளியமையுங் காண்க. கலந்து என்ற வினையினல் தானே வலிய எழுந்தருளி வந்தமை பெறப்பட்டது.

"தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்,
வான் வார்கழல்......" திருவெம்பா 6.

"பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு" அம் : 1.

"இந்திரனும் மாலயனும் ஏனேரும் வானேரும்
அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
எந்தரமும் ஆட்கொண்டு" அம் : 3.

"அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்தன்றி நின்ற சிவம் வந்து நம்மை
உருக்கும் பணிகொள்ளும் என்பது கேட்டு" தெள் : 3.

"அரையாடு நாகம் அசைத்தபிரான் அவனியின் மேல்
வரையாடு மங்கைதன் பங்கொடும்வந் தாண்டதிறம்" தெள் : 6.

என இத்திருவாசகத்தும்,

"பொருளா வெனைப் புகுந்தாண்டு" (73)

எனத் திருக்கோவையாரினும் வருவன காண்க.

இறைவனுக்குரிய தரும வெள்விடையும் மால்விடையுமாகிய எருத்து வாகனங்கள் இரண்டனுள் ஈண்டு விடையென்றது அறவடிவாகிய தரும

வெள்விடையேயாகும். விட்டிடுதி என்பது எதிர்கால முணர்த்துவதாயினும் ஈண்டு விடுகின்றனையோ என நிகழ்காலத்தில் குறிப்பினால் விரைப் பொருளில் வந்தது. கண்டாய் என்னும் முன்னிலையசை விட்டுவிடா தொழிய வேண்டும் என்பதைக் குறிப்பினால் உணர்த்தியது.

விறல் வேங்கை தாருகா வனத்து இருடிகளால் இறைவனைக் கொல்லுமாறு அபிசார வேள்வியிலிருந்து தோற்றுவித்து விடப்பட்டதாகும். இறைவன் அதனைக் கொன்று உரியை உடையாகக் கொண்டனன் என்க.

"கருத்தில்விழி சிவந்தமுனிக் கணங்கணத்தி லுதிப்பித்த
வெரித்ததிரு முழுவையைநே ரேவுதலு மெந்தைபிரான்
சிரித்தருளி யதுபிடித்துத் திருக்கரத்தி னகநுதியால்
உரித்தவுரி பசும்பட்டா வுடை தொடைமே லுறவுடுத்தான்"

(பதஞ் 32) எனக் கோயிற் புராணத்து வருதலுங் காண்க.

உத்தரகோச மங்கை என்பது பாண்டி நாட்டிலுள்ள ஒரு சிவதலம். இது தத்துவங்களிலுண்டாகும் வினாக்களுக்கு விடை கூறும் தொகையாகிய நூலினை இறைவன் மெய்யடியார்களுக்கும் இறைவிக்கும் உபதேசஞ் செய்து அவ்விறைவியோடு இருக்கும் தலம் எனப் பொருள் கொள்ளத்தக்கதாகவுள்ளது. தளர்ச்சியுற்ற பிறையைச் சடையிற் றாங்கி பாதுகாத்த நீ தளர்ந்த என்னையும் தாங்கிப் பாதுகாத்தல் கடனும் என்பது தோன்றச் "சடையவனே" என்றார். சடையவன் - சடையையுடையவன் "தில்லைச் சிற்றம்பலத்துப் பொற்பந்தியன்ன சடையவன்" (305) எனத் திருக்கோவையாரினும் வருதல் காண்க.

தளர்தல் - ஞானசாரியத் திருவுருவைக் காணப் பெருமையாலும் பொய்யுலக வாழ்விற் பற்று அருமையாலும் உளதாகிய தளர்ச்சி.

"மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போல் தளர்ந்தேன்" (அடைக் 6)

என வருதலுங் காண்க. தாங்குதல் - அணைத்துக் கொள்ளுதல்.

இதன் கண் விட்டிடுதி கண்டாய்; தளர்ந்தேன் என்பவற்றால் நீத்தல் விண்ணப்பமும் பிரபஞ்ச வைராக்கியமும் புலப்படுதல் காண்க.

இப்பதிகம் அந்தாதித் தொடையாக அமைந்துள்ளது. 1.

106. கொள்ளேர் பிளவக லாத்தடங் கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்
விள்ளே னெனினும் விடுதிகண் டாய்நின் விழுத்தொழும்பின்
உள்ளேன் புறமல்லேன் உத்தர கோசமங் கைக்கரசே
கள்ளே னொழியவுங் கண்டுகொண் டாண்டதெக் காரணமே.

ப-ரை: உத்தர கோசமங்கைக்கு அரசே - திருவுத்தர கோசமங்கை தலத்திற்கு அரசனே, கள்ளேன் ஒழியவும் - மாயையின் தொடர்பால் களவுடைய மனத்தையுடையேனாகிய யான் நின்னை நீங்கிச் செல்லும் குறிப்புடையேனாகவும், கண்டு கொண்டு ஆண்டது எக்காரணம் - அதனை அறிந்துகொண்டும் என்னை ஆட்கொண்டது யாது காரணத்தாலோ? நின் கருணையினாலன்றோ? அதனால், நின் விழு தொழும்பின் உள்ளேன் - நினது சிறந்த திருத்தொண்டின்கண் அகத்தொண்டனானேன், புறம் அல்லேன் - புறத்தே னல்லேன்; ஆதலால், கொள் பிளவு அகலா ஏர் தடம் கொங்கையர் - கொள்ளின் பாகத்தின் அளவு இடைவெளியில்லாத அழகிய பெரிய தனங்களையுடைய மகளிரின், கொவ்வை செவ்வாய் விள்ளேன் எனினும் - கொவ்வைக் கனி ஒக்கும் சிவந்த வாயிதழின் அமுதுண்டலினின்றும் நீங்கேனாயினும், விடுதி கண்டாய் - என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

உத்தரகோச மங்கைக்கு அரசே, கள்ளேன் நின்னை நீங்கும் குறிப்புடையேனாகவும், என்னை ஆட்கொண்டது நின் கருணையினாலன்றோ? அதனால் யான் நின் விழுத்தொ » டின்கண் அகத்தொண்டனானேன்; புறத்தேனல்லேன், ஆதலால் தடங்கொங்கைகளையுடைய மகளிரின் செவ்வாய் விள்ளேன் எனினும் என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

கொள் - ஒருவகைத் தானியம். பிளவு - பிளந்த பாதி. கொள்பிளவு அகலாக் கொங்கை, ஏர்கொங்கை, தடங்கொங்கை எனத் தனித்தனி இயையும். கொள் பிளவகலாத் தடங்கொங்கை என்றது, கொள்ளின் பாகமளவும் இடைவெளியில்லாத மிகவும் நெருங்கிய தனங்களையுடையார் என்றபடி "புடைபரந் தீர்க்கிடை போகா இளமுலை மாதர்" (போற்றி 30 - 4) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க. பிளவு - பாகம். மாமதியின் பிளவு - பெரிய மதியின் பாகம் எனப் பேராசிரியர் பொருளுரைத்தமையும் (திருக்கோவை 10 உரை) காண்க. "பிறைப் பிளவார் சடையோன் (கோயில் திருப்பண்ணி 24) எனப் பதினொராந் திருமுறையில் வருதலும் காண்க. கொள்ளின் பிளவு சிறுமைக்கு எடுத்துக் காட்டப்பட்டது. "தினைப் பிளந்தன்ன சிறுமையரேனும்" எனத் திருமந்திரத்து (2667) வருதலும் ஈண்டு அறியற்பாலது. ஏர் - அழகு.

கொவ்வைச் செவ்வாய் - கொவ்வைக் கனியை ஒக்கும். சிவந்த வாயிதழ் "கொவ்வைச் செவ்வாய்" "கோவை வந்தாண்ட செவ்வாய் (108, 200) எனத் திருக்கோவையாரினும் வருவன காண்க. விள்ளுதல் - நீங்குதல். செவ்வாய் விள்ளேன் எனினும் என்றது அதரபானஞ் செய்தலை வெறுத்து நீங்குதற்கு முயலும் யான் அங்ஙனம் நீங்கமாட்டேனாயினும் என ஆற்றலாற் பொருள் கொள்ளுமாறு நின்றது.

விடுதி - விடுவாய் என எதிர்காலப் பொருள் தரும். முன்னிலை யேவல் ஒருமை வினைமுற்றாயினும் இங்கே குறிப்பினால் விடுகின்றனையோ என

நிகழ்காலத்திலும் வினைப் பொருளிலும் வந்தது. விழு என்னும் உரிச்சொல் சிறப்பு என்னும் பொருளது. தொழும்பு - தொண்டு. "என்னைத் தன்றொழும்பிற் கழியா தருள் வைத்த சிற்றம்பலவன்" (கோவை 261) என்புழி தொழும்பின் என்பதற்குத் தொண்டுபடுதற்கண் எனப் பேராசிரியர் உரைத்தமையுங் காண்க. இனித் தொழும்பினுள்ளேன் என்பதற்கு அடியார் கூட்டத்தினுள்ளேன் எனினுமாம். தொழும்பு என்பது அடிமை என்னும் பொருட்டாதலை "என்னைத் தன் தொழும்பிற் படுத்த நன்னீள் கழலீசர்" (267) என்னும் திருக்கோவையார் உரையில் தொழும்பிற்படுத்த - தன் அடிமைக் காட்படுவித்த என்னும் (பேர்) உரையானுமறிக.

அடிகள் தம்மைக் கள்ளேன் என்றது ஞானாசாரியரைக் கண்டபோது புறத்தே வணங்காமையாலும், ஒரு வினாவை நிகழ்த்தி அதற்கு நின்னாற் கூறப்படும் விடை பொருத்தமுடைத்தாயின் ஆட்படுவேன் என்றமையாலுமென்பது.

"தொண்டுபடு மடியார்க ளாற்றுன் பான்மேற்
றுண்ணாற்றுன் பானென்னுந் தொகுதிசூழ
வொண் டொடிபங் கினனிருப்ப விருப்பா லெய்தி
யுடனுரைத்துச் சிவஞான முணர்வா ரன்பு
மண்டியநெஞ் சினில்வணங்கி வணங்கார்போல
மந்திரியா மேன்மையுடன் வந்து நின்றார்" திருபெருந் 34

"என்றலுமே சிவமேது ஞான மேதிங்
கிலங்கி யிடும் போதமே தியம்பு வீரேல்
அன்றுவட நீழலில்வந் திருந்தார் நீரே
யடியேனு முமக்கடிமை யாவே னென்ன" திருப்பெருந் 36

எனத் திருவாதவூரடிகள் புராணத்து வருவன காண்க.

கள்ளேன் ஒழியவும் கண்டுகொண்டு ஆண்டது என்றது கள்ளேன் நீங்கிச் செல்லும் குறிப்புடையேனாகவும் அதனைக் கண்டுகொண்டு ஆண்டது என்றவாறு.

"வளர்கின்ற நின்கரு ணைக்கையில் வாங்கவும் நீங்கியிப்பால்
மிளிர்கின்ற என்னை......" நீத் : 4

"அழுமடி யாரிடை யார்த்துவைத் தாட்கொண் டருளி" நீத் : 27
"நம்மை யகப்படுத் தாட்கொண் டருமை காட்டும் மெய்மை"
பொற் 12

என்பன நன்கு அறியற்பாலன. கண்டுகொண்டும் என உம்மை விரிக்க. எக்காரணம் என வினாப்பொருளில் இருப்பினும் ஆண்டு கொண்டது

நின்கருணையினாலேயாம் என்பது அருத்தாபத்தியாற் பெறப்படும். "கடையவனேனைக் கருணையினாற் கலந்தாண்டு கொண்ட விடையவனே" (நீத் 1) என அடிகள் அருளியவாறு காண்க.

இதன் கண், கொங்கையர் கொவ்வைச் செவ்வாய் விள்ளேன் எனினும், அதனை விடுதி கண்டாய் என்பதனால் உலக வாழ்வில் பற்றுடையேனாயினும் நீக்கி என்னைக் கைவிடாது காத்தல் வேண்டும் என்பது பெறப்படுதலின் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் பெறப்பட்டவாறு காண்க. 2.

107. காருறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங் கரைமரமாய்
வேருறு வேனை விடுதிகண் டாய்விளங் குந்திருவா
ரூருறை வாய்மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
வாருறு பூண்முலை யாள்பங்க என்னை வளர்ப்பவனே.

ப-ரை: விளங்கும் திருவாரூர் உறைவாய்-விராட்புருடனுக்கு இதய கமலமாக விளங்கும் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் தியாகேசனே, மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே-எக்காலத்தும் நிலை பெறும் திருவுத்தர கோசமங்கை என்னும் தலத்துக்கு அரசே, வார் உறு பூண் முலையாள் பங்க-கச்சுப் பொருந்திய அணிகலங்கள் அமைந்த தனங்களையுடைய உமையம்மையை ஒரு கூற்றிலுடையவனே, என்னை வளர்ப்பவனே-என்னை வளர்ப்பவனே, கார் உறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங்கரை மரமாய் வேர் உறுவேனை-கருமை பொருந்திய கண்களையுடைய மகளிரது ஐம்புலவின்பங்களை விரும்பும் காமமாகிய ஆற்றங்கரைக்கணுள்ள மரம்போலாக மெய்யுணர்வாகிய வேர் ஆற்று நீரால் அரிக்கப்பட்டு பிறவித் துன்பமாகிய வெள்ளத்தில் வீழக்கடவேனை, விடுதி கண்டாய்-கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

திருவாரூர் உறைவாய், உத்தரகோச மங்கைக்கு அரசே, பூண் முலையாள் பங்க, என்னை வளர்ப்பவனே, கருமை பொருந்திய கண்களையுடைய மகளிரது ஐம்புல இன்பங்களை விரும்பும் காமமாகிய ஆற்றங்கரைக் கணுள்ள மரம்போலாய் வேருறுவேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிய வேண்டும் என்பதாம்.

காருறுகண்-கருமை பொருந்திய கண். கருமை கண்ணிற்கு இலக்கணமாதல்,

> "ஈசற் கியான் வைத்த அன்பினகன்று அவன் வாங்கிய என்
> பாசத்திற் காரென்று அவன் தில்லையின் ஒளிபோன்று அவன் தோள்
> பூசத்திரு நீறென வெளுத்து ஆங்கவன் பூங்கழல் யாம்
> பேசத் திருவார்த்தையிற் பெருநீளம் பெருங்கண்களே"
>
> (109 கோவை)

எனவும்,

"கண்ணிற் கியல்பு கசடறக் கிளப்பின்
வெண்மை கருமை செம்மை யகல
நீள மொளியென நிகழ்த்துவர் புலவர்" (ஷை செய்யுள் உரைமேற்)

எனவும் வருவனவற்றுலுமறியப்படும். காருறு கண் என்பதற்குக் கரிய மைதீட்டிய கண் எனினுமாம். அழகினையுடைய மகளிர் என்பார் அவ் வழகினைக் கண்மேலிட்டுக் "காருறு கண்ணியர்" என்ருர். அழகினை நுதன் மேலிட்டு "நன்னுதல் விறலியர்" (பதிற் 47) எனப் பிறர் கூறி யிருத்தலுங் காண்க. கண்ணியரது என ஆருவது விரிக்க. ஐம்புலன் - கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலவின்பங்கள். அவ்வின்பங்களை விரும்புங் காமத்தினை "ஐம்புலன்" என உபசரித்தார். மரமாய் வேருறுவேனை என்றது மரம்போலாக மெய்யுணர்வாகிய வேர் அரிக்கப்பட்டு பிறவித் துன்பமாகிய வெள்ளத்தில் வீழக்கடவேனை என்ற வாறு. ஆற்றங்கரை மரமாய் வேருறுவேனை என்றதன் ஆற்றலால் மெய் யுணர்வாகிய வேர் காமவெள்ளமாகிய ஆற்று நீரால் அலைக்கப்பட்டுப் பிறவித் துன்பமாகிய வெள்ளத்தில் வீழக்கடவேனை எனப் பொருள் உரைக்கப்பட்டது.

காமத்தை ஆருகவும் தம்மை ஆற்றங்கரைக்கணுள்ள மரமாகவும் மெய்யுணர்வை அம்மரத்தின் வேராகவும் தாம் காமத்திஞல் பிறவித் துன்பத்தில் வீழ்ந்து வருந்துதலை அவ்வேர் ஆற்று நீரால் அலைக்கப்பட்டு அம்மரம் ஆற்று வெள்ளத்தில் வீழ்தலாகவும் உருவகஞ் செய்து "ஐம் புலன் ஆற்றங்கரை மரமாய் வேருறுவேனை" என்ருர்.

விளங்குந் திருவாரூர் என்றது விராட்புருடனுக்கு இதயகமலமாக விளங்கும் திருவாரூர் என அதன் விளக்கச் சிறப்பு விரிக்கப்பட்டது. "திருவாரூர் உறைவாய்" எனத் தியாகேசனையும், "உத்தரகோச மங் கைக்கு அரசே" என அரசனையும், "முலையாள் பங்க" என அம்மை அப்பனையும் விளித்தது, யான் வேண்டும் குறைகளை ஈந்து பாதுகாத்து அம்மை யப்பனுய் என்னை வளர்க்கவேண்டும் எனத் தமது குறைகளை இவ்விளிகள் மூலம் விண்ணப்பித்துக் கொண்டதாகும்.

இதன் கண் "ஐம்புல னுற்றங்கரை மரமாய் வேருறுவேனை விடுதி கண்டாய்" என்பதஞல் பிரபஞ்ச வைராக்கியம் என்னும் பதிக நுத லிய பொருளும், தம்மைக் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் பெறப் பட்டவாறு காண்க. 3.

108. வளர்கின்ற நின்கரு ணைக்கையில் வாங்கவு நீங்கியிப்பால்
மிளிர்கின்ற வென்னை விடுதிகண் டாய்வெண்
மதிக்கொழுந்தொன்
ளுளிர்கின்ற நீண்முடி யுத்தர கோசமங் கைக்கரசே
தெளிகின்ற பொன்னுமின் னும்அன்ன தோற்றச்
செழுஞ்சுடரே.

**ப-ரை:** வெள் மதி கொழுந்து ஒன்று ஒளிர்கின்ற நீள்முடி - வெண்ணிறமான இளம்பிறை ஒன்று விளங்குகின்ற நீண்ட சடைமுடியை யுடைய, உத்தரகோச மங்கைக்கு அரசே - திருவுத்தரகோச மங்கை என்னும் தலத்துக்கு அரசனே, தெளிகின்ற பொன்னும் மின்னும் அன்ன தோற்றம் செழுசுடரே - உருகித் தெளிந்த மாற்றுயர்ந்த பொன்னையும் மின்னலையும் ஒத்த தோற்றத்தினையுடைய பேரொளியுருவினனே, வளர்கின்ற நின் கருணை கையில் வாங்கவும் - வளர்ந்து கொண்டிருக்கின்ற நினது திருவருட் கரத்தால் நின்பால் இழுக்கவும், நீங்கி இப்பால் மிளிர்கின்ற என்னை - நின்னை விட்டுப் பிரிந்து இப்பொய்யுலக வாழ்வில் விளங்குதற் கேதுவாகிய வினையையுடைய என்னை, விடுதி கண்டாய் - கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

வெண்மதிக் கொழுந்து ஒன்று விளங்குகின்ற நீண்ட சடைமுடியை யுடைய உத்தர கோசமங்கைக்கு அரசே, ஒளிர்கின்ற பொன்னும் மின்னும் ஒத்த தோற்றத்தினையுடைய சுடர் கொழுந்தே, வளர்கின்ற நின் திருவருட் கரத்தால் நின்பால் இழுக்கவும், நின்னின் நீங்கி இப்பொய் யுலக வாழ்வில் விளங்குதற்கேதுவாகிய வினையையுடைய என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

வளர்கின்ற கருணை - அன்பர்க்கு வழங்க வழங்கச் சிறிதும் குறைவு படாது வளர்ந்து கொண்டேயிருக்கின்ற கருணை. திருவருளால் ஈர்த்தல் பற்றிக் கருணையைக் கை என்றார். கையில் - கையினால், வாங்குதல் - இழுத்தல். "குடவாய்க் கொடிப்பின்னல் வாங்கி" (கலி 83 : 9) என்புழிப்போல. நீங்கி இப்பால் மிளிர்கின்ற என்னை என்பதற்கு நின்னை விட்டுப் பிரிந்து இப்பொய்யுலக வாழ்வில் விளங்குதற்கேதுவாகிய வினையையுடைய என்னை எனப் பொருளுரைக்க. இங்ஙனம் உரையா விடத்து இறைவன் திருவருளுக்கு மாறாக அடிகளே இறைவனை விட்டுப் பிரிந்து சென்றனர் எனப் பொருள்படும். அது அடிகள் வரலாற்றிற்கு மாறாகும்.

"மதிக்கொழுந் தலைய விழுங் கங்கை குதித்த சடைக் கூத்தனார்" (மானக் 32) எனப் பெரியபுராணத்தும் வருவன காண்க. மதிக் கொழுந்து ஒளிர்கின்ற சடை என்றதனால் எய்த்து அடைந்த திங்களுக்கு இரங்கியருள் செய்து முடியின்கட் கொண்டதுபோல என்னையும் நின்பால் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும் என உள்ளுறைப் பொருள் தோன்றுமாறு காண்க.

தெளிகின்ற பொன் - ஓடவிட்டுத் தெளிந்த பசும்பொன். இது மிக்க ஒளியுடைத்தென்பது "தாவின்று திருமணி பொருத திகழ்விடு பசும்பொன்" பதிற் 19 : 14-5 என்பதனாலும் அறியப்படும். "பொன்னும் மின்னும் அன்ன தோற்றம்" என்புழி பொன் திருமேனிக்கும் மின் செஞ்சடைக்கும் உவமையாகக் கொள்க,

"பொன்னே திகழுந் திருமேனி யெந்தாய்" சத 59

"பொன் னியலுந் திருமேனி" திருப்படை 6

"பொன் ஞெளி கொள் மேனி" தே. ஞான 71 : 6

எனவும்,

"மின்னெறி செஞ்சடைக் கூத்தப்பிரான்" திருக்கோவை 49

"மின்னங் கலருஞ் சடை முடியோன்" திருக்கோவை 172

"மின்னிற் பொலி சடை" தே. ஞான 11 : 8

"மின்னே யன்ன சடை" தே. ஞான 256 : 4

எனவும் வருவன காண்க. தெளிகின்ற பொன் என்றதனுல் பொன்னுக்கு ஒளியுடைமையும் பெறப்படுதலின் திருமேனிஒளிக்கு மின் கூறப்பட்டது எனல் அமையாதென்க. இறைவன் பேரொளியுருவினனுதலின் "செழுஞ் சுடரே" என்ருர்.

"செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தி" (5)

"தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தி (7)

எனப் பிடித்தபத்திலும் அடிகள் அருளியமை காண்க.

"திகழ்ந்த நற்செழுஞ்சுடர்" ஞான 232 : 10

"வானோர் செழுஞ்சுடரே" நாவு 260 : 1

"எறும்பி யூர் மலேமேன் மாணிக்கத்தைச் செழுஞ்சுடரை'
நாவு 304 : 1

"தேவாதி தேவர் முதலுமாகிச் செழுஞ்சுடராய்ச் சென்றடிகள்
நின்றவாறே" நாவு 307 : 8

எனத் தேவாரத்தும் வருவன காண்க.

இதன் கண், நீங்கி யிப்பால் மிளிர்கின்ற என்னை விடுதி கண்டாய் என்பதனுல் பிரபஞ்ச வைராக்கியமும் தம்மைக் கைவிடலாகாதென் பதும் புலப்படுமாறு காண்க. 4.

109. செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி யாரிற் பன்னுள்
விழுகின்ற வென்னை விடுதி கண் டாய்வெறி வாயறுகால்
உழுகின்ற பூமுடி யுத்தர கோசமங் கைக்கரசே
வழிநின்று நின்னரு ளாரமு தூட்ட மறுத்தனனே.

ப-ரை : வெறிவாய் அறுகால் உழுகின்ற பூமுடி - தேன் பொருந் திய வாயினையுடைய வண்டுகள் கிண்டுகின்ற கொன்றை மலர் மாலையை

அணிந்த திருமுடியினையுடைய, உத்தர கோசமங்கைக்கு அரசே - திருவுத்தர கோசமங்கை என்னும் தலத்துக்கு அரசனே, வழி நின்று நின் அருள் ஆர் அமுது ஊட்ட - நான் செல்லும் வழியின் இடையில் நின்று நினது திருவருளாகிய அரிய அமிர்தத்தினை நீ வலிய வந்து உண்பிக்கவும், மறுத்தனன் - அதனை நுகர்ந்து உடனே கதி பெறுதற்குத் தடையாகிய பிராரத்தவினையையுடைய யான் மறுத்தனனாய், செழிகின்ற தீ புகு விட்டிலின் - சுவாலிக்கின்ற விளக்குச் சுடரில் வீழ்ந்திறக்கின்ற விட்டிற் பூச்சியைப் போல, சில் மொழியாரின் பல் நாள் விழுகின்ற என்னை - சிலவாகிய மொழியினையுடைய மகளிரிடத்து பலநாள் விழுந்து கிடந்து அழிகின்ற என்னை, விடுதி கண்டாய் - கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

திருவுத்தர கோசமங்கைக்கு அரசே, வழியின் இடையில் நின்று நின் திருவருளாகிய அரிய அமிழ்தத்தினை நீ வலிய வந்து உண்பிக்கவும், அதனை ஏற்றுக்கொள்ளாது, மறுத்தனனாய், விளக்குச் சுடரில் வீழ்ந்தழியும் விட்டிற் பூச்சியைப் போல சின்மொழியாரிற் பன்னாள் வீழ்ந்து அழிகின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

செழிகின்ற தீ எனப் பொதுப்படக் கூறினும் ஈண்டுச் சுவாலித்து எரிகின்ற விளக்கின் சுடர் எனக் கொள்க; விட்டில் விழுவது அதன் கண்ணேயாதலின். தீயில் விழுந்து அழிகின்ற விட்டில் போலச் சின்மொழியாரின் விழுந்தழிகின்ற என்னை எனக் கொள்க. சின்மொழி - சிலவாகிய மொழி. சின்மொழியாரென்றது சிலவாகிய மொழியினையுடைய மகளிரை. "தீவயின் மேனியன் சிற்றம்பலமன்ன சின்மொழியை" (343) எனத் திருக்கோவையாரில் வருதலுங் காண்க. சின்மொழியார் என்றூர் எனினும் செந்துவர் வாய் முதலியனவற்றையுடைய அழகிய மகளிர் எனக் கொள்க. "திறமலி சின்மொழிச் செந்துவர் வாயினை" (திருவாரூர் மும்மணிக் 24) எனப் பிறரும் கூறுதல் காண்க.

வெறி - கள். ஈண்டுத் தேனை உணர்த்தியது. வெறிவாய் பூ எனக் கூட்டி நறுமணம் பொருந்திய பூ எனினும் அமையும். அறுகால் என்பது சினையாகு பெயராய் ஆறுகால்களையுடைய வண்டை உணர்த்தியது: "அறுகானிறை மலர்" (126) எனத் திருக்கோவையாரினும், 'அறுகால் வண்டாடு தண்பொழில்'' (சுந் 71 : 9) எனத் தேவாரத்தும் வருவன காண்க.

பூ எனப் பொதுப்படக் கூறினும் கொன்றைப் பூமாலையே கொள்ளப்பட்டது. இறைவனுக்குரிய அடையாளப் பூமாலை அதுவாகலின். "கண்ணி கார்நறுங் கொன்றை காமர் வண்ண மார்பிற் றாருங் கொன்றை" (புறநா. கடவுள்) எனப் பிறரும் கூறுதல் காண்க. பூ முடி - கொன்றைப் பூமாலையை யணிந்த முடி.

"வண்டணை கொன்றையும்... முடியுடையான்" நாவு 85 : 2

"வெறிக் கொன்றை மாலை முடியீர்" நாவு 95 : 10

"நாறுபூங்கொன்றை முடியார் தாமே" நாவு 291 : 4

"குலையேறு நறுங் கொன்றை முடிமேல் வைத்து" நாவு 303 : 2

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

வழி நின்று என்றது அடிகள் குதிரை கொள்ளச் சென்ற வழிக்கண் இடைநின்று என்றவாறு. அருளாரமுது - அருளாகிய அரிய அமுது. "அருளாரமுதப் பெருங்கடல் வாய்" (பிரார்த்தனைப் 3) என வருதல் காண்க. அமுதூட்ட மறுத்தனன் என்றது இறைவன் திருவருள் பெற்ற பின் இறைவனைப் பிரிதற்கேதுவாகிய பிராரத்த வினையைத் தம்மேலேற்றிக் கூறினர்.

"வழங்குகின் றாய்க்குன் னருளா ரமுதத்தை வாரிக் கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னன்வினை யேனென் விதியின்மையால்"
(அடை 10)

என்பது ஈண்டு அறியற் பாலது. "மறுத்தனன்" என்ற முற்று எச்சப் பொருளில் வந்தது. மறுத்தனனாய் விழுகின்ற என்னை என இயையும்.

இதன் கண், சின்மொழியாரிற் பன்னாள் விழுகின்ற என்னை விடுதி கண்டாய் என்றதனால் பிரபஞ்ச வைராக்கியமும், கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் பெறப்பட்டவாறு காண்க. 5.

110. மறுத்தனன் யானுன் அருளறி யாமையின் என்மணியே
வெறுத்தெனை நீவிட் டிடுதிகண் டாய்வினை யின்தொகுதி
ஒறுத்தெனை ஆண்டுகொள் உத்தர கோசமங் கைக்கரசே
பொறுப்பரன் றேபெரி யோர்சிறு நாய்கள்தம் பொய்யினையே.

ப-ரை : என் மணியே - என் மாணிக்கமே, உத்தரகோசமங்கைக்கு அரசே - திருவுத்தர கோசமங்கை என்னும் தலத்துக்கு அரசே, பெரியோர் சிறு நாய்கள் தம் பொய்யினை பொறுப்பர் அன்றே - பெரியவராயுள்ளவர்கள் இழிந்த நாய் போன்றவர்களது பொய்ச் செயல்களைத் தம் பெருமையால் பொறுத்துக் கொள்ளுவார்கள் அல்லவா? யான் உன் அருள் அறியாமையில் மறுத்தனன் - அடியேன் நினது திருவருளின் அருமையை அறியாமைக்கேதுவாகிய பிராரத்தவினையுடைமையால் அதனை மறுத்து விட்டேன் நீ எனை வெறுத்து விட்டிடுதி கண்டாய் - அதனால் நீ அடியேனை வெறுத்துக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். வினையின் தொகுதி ஒறுத்து எனை ஆண்டுகொள் - எனது பிரா

ரத்த வினையின் தொகுதி முழுவதையும் கடிந்து அடியேனை ஆண்டு கொண்டருளுக.

என் மணியே, உத்தரகோசமங்கைக்கு அரசே, பெரியோர் சிறு நாய் போன்றவர்களது பொய்யினைப் பொறுத்துக் கொள்வார்களல்லவா? அடியேன் நினது திருவருளின் அருமையை அறியாமைக்கேதுவாகிய பிராரத்தவினையுடைமையால் அதனை மறுத்துவிட்டேன்; நீ எனை வெறுத்துக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். எனது பிராரத்தவினையின் தொகுதியை வெறுத்து ஆண்டுகொண்டருளுக என்பதாம்.

யான் உன் அருளறியாமையின் மறுத்தனன் எனக் கூட்டிப் பொருள் கொள்க. அருள் என்றது அருளாரமுதத்தினை; "நின்னருளாரமு தூட்ட மறுத்தனன்" (நீத் 5) என வந்தமை காண்க. அருளை மறுத்தமைக்குப் பிராரத்தவினையின் தொகுதியே ஏதுவாதல், "வினையின் தொகுதி யொறுத்து" என மேல் வருதலானும் அறியப்படும். வினை என்றது பிராரத்த வினையை. ஒறுத்து - கெடுத்து எனினுமாம். நாய்கள் - நாய் போன்றவர்கள். பொய் - பொய்ச் செயல்.

இதன் கண், மறுத்தனன் யானுன் அருளறியாமையின் எனவும் வெறுத்தெனை விட்டிடுதி கண்டாய் எனவும் வினையின் தொகுதி யொறுத்தெனை யாண்டு கொள் எனவும் வருவனவற்றால் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் பெறப்பட்டவாறு காண்க, 6.

111. பொய்யவ னேனைப் பொருளென வாண்டொன்று
பொத்திக்கொண்ட
மெய்யவ னேவிட் டிடுதிகண் டாய்விட முண்மிடற்று
மையவ னேமன்னு முத்தர கோசமங் கைக்கரசே
செய்யவ னேசிவ னேசிறி யேன்பவந் தீர்ப்பவனே.

ப-ரை: விடம் உண் மிடற்று மையவனே - நஞ்சுண்டமையால் கண்டத்தில் கருமை நிறத்தையுடையவனே, மன்னும் உத்தர கோசமங்கைக்கு அரசே - நிலைபெற்ற திருவுத்தர கோசமங்கை என்னும் தலத்துக்கு அரசே, செய்யவனே - சிவந்த திருமேனியை யுடையவனே, சிவனே - சிவனே, சிறியேன் பவம் தீர்ப்பவனே - சிறுமையுடையேனது பிறப்பை நீக்குபவனே, பொய்யவனேனை பொருள் என ஆண்டு - நிலையற்ற பொய் யுலக வாழ்வினையுடையவனாகிய என்னை ஒரு பொருளாக மதித்து ஆட்கொண்டருளி, ஒன்று பொத்தி கொண்ட மெய்யவனே - ஒப்பற்ற வீடுபேற்றினை அருளாது மறைத்துக் கொண்ட மெய்ப்பொருளாயுள்ளவனே, விட்டிடுதி கண்டாய் - என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

விடமுண் மிடற்று மையவனே, உத்தர கோசமங்கைக்கு அரசே, செய்யவனே, சிவனே, சிறுமையுடையேனது பிறப்பை நீக்குபவனே, பொய்யவனேனை ஒரு பொருளாகக் கருதி ஆட்கொண்டருளி ஒப்பற்ற வீடு பேற்றினை மறைத்துக் கொண்ட மெய்யவனே, என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும், என்பதாம்.

பொய்யவனேனை - பொய்யுலக வாழ்வில் பற்று நீங்கப் பெறாதவனாகிய என்னை. "பொய்யனேன் நான் உண்டுடுத்திங் கிருப்பதானேன்" (சத 52) "பொய்யனேன் அகநெக" (செத் 1) எனப் பிறண்டும் கூறுதல் காண்க. பொருளென ஆண்டு - பொருளாக மதித்து ஆண்டு.

"பொருளா வெனைப் புகுந்தாண்ட பொன்னே" கோயின் மூத் 8.

"புலையனேனையும் பொருளென நினைந்துன் அருள் புரிந்தனை" செத் 3.

"பொருளாவெனைப் புகுந்தாண்டு" திருக்கோவை 73.

"புலியூர் எனை நின்று ஆண்டான்"—புலியூரின்கண் ஒரு பொருளாக மதித்து என்னை நின்று ஆண்டவனது (திருக்கோவை 244 பேர்)

என வருவன காண்க.

ஒன்று பொத்தி கொண்ட என்றது ஒப்பற்ற வீடு பேற்றினை அருளாது மறைத்துக் கொண்ட என்றவாறு. உடனே வீடு பேற்றினை இறைவன் அருளாமை, தூலவுடம்பும் அது முகந்து நின்ற பிராரத்த வினையும் உடனே நீங்கத்தக்க பக்குவமடையாமையாலாகும். அதனை உணர்ந்து பொத்திக்கொண்டமையால் இறைவனை "மெய்யவனே" என்றார். பொத்துதல் - மறைத்தல்.

விடமுண் மிடற்று மையவன் - விடமுண்டமையால் கண்டத்தில் கருமை நிறமுடையவன்.

"நஞ்சுண் மழைதரு கண்டன்" நீத் 46.

"செழுமிடற்றின் மைவந்த கோன்" திருக்கோவை 212.

"அருந்தும் விட மணியா மணி கண்டன்" திருக்கோவை 272.

"மை கொண்ட கண்டா" திருக்கோவை 386.

என அடிகளும்,

"கடுவிடமுண்டு இருண்ட மணி கண்டத்தோன்" தே. 129 : 3.

"கறுத்த நஞ்ச முண்டிருண்ட கண்டர்" தே. 237 : 3.

"நஞ்சினை யுண்டிருள் கண்டனார்" தே. 258 : 2.

என ஆளுடைய பிள்ளையாரும் அருளியமை காண்க. உண் என்னும் வினை எதுப் பொருளில் வந்தது.

செய்யவன் - சிவந்த மேனியையுடையவன்.

"செய்ய மேனியனே" செத் 1.

"செந்நிற மேனி வெண் ணீறணி வோன்" திருக்கோவை 69.

"தேய்ந்து மலி வெண்பிறையான் செய்ய திருமேனியினன்
தே. ஞான 181 : 5.

"செய்ய மாமேனியர் தே. ஞான 351 : 2.

என வருவன காண்க.

சிவன் - எவ்வுயிர்க்கும் எப்பொழுதும் நன்மையைச் செய்தலாற் சிவன் (திருக்கோவை 358 பேர்) பவம் தீர்ப்பவன் - பிறவியை நீக்குபவன். "அடியவர்கள் நெஞ்சுளே நின்றமுத மூறிக் கருணை செய்து துஞ்சல் பிறப்பறுப்பான்" "திதோடாவண்ணம் திகழப் பிறப்பறுப்பான்" (பொன்னூசல் 4, 6) அடிகள் அருளியமையுங் காண்க.

இதன் கண், பொய்யவனேனை எனவும் விடுதி கண்டாய் எனவும் கூறியவற்றால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடா தொழிதல் வேண்டுமென்பதும் பெறப்படுதல் காண்க. 7.

112. தீர்க்கின்ற வாறென் பிழையைநின் சீரரு ளென்கொலென்று
வேர்க்கின்ற வென்னை விடுதிகண் டாய்விர வார்வெருவ
ஆர்க்கின்ற தார்விடை யுத்தர கோசமங் கைக்கரசே
ஈர்க்கின்ற வஞ்சொடச் சம்வினை யேனை யிருதலையே.

ப-ரை: விரவார் வெருவ ஆர்க்கின்ற தார் விடை உத்தரகோச மங்கைக்கு அரசே - நின்னை வந்து அடையாதவர் அஞ்சுமாறு ஒலிக்கின்ற கிண்கிணி மாலையை அணிந்த எருத்து வாகனத்தையுடைய உத்தரகோச மங்கைக்கு அரசே, வினையேனை அஞ்சொடு அச்சம் இருதலை ஈர்க்கின்ற - பிராரத்தவினையையுடைய என்னை ஐம்புல நுகர்வின் அவாவும் அதற்கு மாறாகிய அச்சமும் உலகின்பாலும் நின்பாலும் இழுக்கின்றன. ஆகையால், பிழையை தீர்க்கின்ற ஆறு என் - ஐம்புல நுகர்வில் ஈர்க்கப்படும் எனது பிழையினைத் தீர்த்துக் கொள்ளும் வழியாது? நின் சீர் அருள் என் கொல் என்று - நினது சிறந்த திருவருட் குறிப்பு யாதோ என்று எண்ணி, வேர்க்கின்ற என்னை விடுதி கண்டாய் - மனம் புழுங்குகின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

விரவார் வெருவ ஒலிக்கின்ற தார் விடையையுடைய உத்தரகோச மங்கைக்கு அரசே, வினையேனை ஐம்புல நுகர்வின் அவாவும் அதற்கு மாறாகிய அச்சமும் இருபாலும் ஈர்க்கின்றன. ஆகையால் எனது பிழையைத் தீர்க்கின்ற ஆறு யாது? நின் சீர் அருள் என் கொல் என்று எண்ணி வேர்க்கின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

பிழையைத் தீர்க்கின்றவாறு என் என்றார். ஐம்புல நுகர்வின்கண் பயிற்சி வயத்தால் உளதாகும் அவாவினை நீக்கியருள வேண்டும் என்பது தோன்ற. நின் சீர் அருள் என்கொல் என்றது நினது சிறந்த திருவருட் குறிப்பு யாதோ என்றவாறு. சீர் - நன்மையுமாம். வேர்த்தல் - வியர்த் தல்; ஈண்டு அதற்குக் காரணமாகிய புழுக்கத்தை உணர்த்தியது.

விரவார் - பகைவர். ஈண்டு இறைவனை அடையாதவர்களை. தார் - கிண்கிணிமாலை. ஈர்க்கின்ற - ஈர்க்கின்றன; அன்பெறாத முற்று. அஞ் சொடு அச்சம் - அஞ்சும் அச்சமும். அஞ்சு - ஐந்து. கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புல நுகர்வின் அவாவினை. ஓடு, உம்மைப் பொருட்டு. ஐம்புல அவா உலகின் கண்ணும், நின்னால் ஆட் கொள்ளப்பட்ட யான் ஐம்புல நுகர்வின் அவாவினால் இழுப்புண்டால் யான் நின்னை அடையுமாறு அரிதாகும் என்னும் அச்சம் நின்பாலும் ஈர்த்தலின், "அஞ்சொடு அச்சம் வினையேனை இருதலையும் ஈர்க்கின்ற" என் றார். இருதலையும் என உம்மை விரிக்க.

இதன் கண், அஞ்சொ டச்சம் வினையேனை ஈர்க்கின்ற; பிழையைத் தீர்க்கின்ற வாறென்? நின் சீரருள் என் கொலென்று வேர்க்கின்ற என்னை விடுதி கண்டாய் என்பவற்றால் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலப்படுமாறு காண்க. 8.

113 இருதலைக் கொள்ளியி னுள்ளெறும் பொத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண் டாய்வியன் மூவுலகுக்
கொருதலை வாமன் னும் உத்தர கோசமங் கைக்கரசே
பொருதலை மூவிலை வேல்வல னேந்திப் பொலிபவனே.

ப-ரை: வியன் மூ உலகுக்கு ஒரு தலைவா - பெரிய மூன்று உல கங்களுக்கும் ஒப்பற்ற தலைவனே, மன்னும் உத்தரகோச மங்கைக்கு அரசே - நிலைபெறும் திருவுத்தரகோச மங்கை என்னும் தலத்துக்கு அரசே; பொரு இலை மூ தலை வேல் - போர் செய்தற்குரிய இலைவடிவினவாகிய மூன்று நுனிகளையுடைய சூலப்படையை, வலன் ஏந்தி பொலிபவனே - வலத் திருக்கரத்திற் றாங்கி விளங்குபவனே, இருதலை கொள்ளியின் உள் எறும்பு ஒத்து - இருபக்கமும் நெருப்புப் பொருந்திய விறகின் உட்டுளை யுள் அகப்பட்ட எறும்பைப் போன்று, நினைப்பிரிந்த விரிதலையேனை விடுதி கண்டாய் - நின்னைப் பிரிந்து வருந்துகின்ற மயிர் விரிந்த தலையையுடைய என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

மூவுலகுக்கு ஒரு தலைவா, உத்தரகோச மங்கைக்கு அரசே, மூவிலை வேல் வலனேந்திப் பொலிபவனே, இருபக்கமும் நெருப்புப் பொருந்திய விறகின் உட்டுளையுள் அகப்பட்ட எறும்பினைப் போன்று நின்னைப் பிரிந்து வருந்துகின்ற விரிதலையேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடா தொழிதல் வேண்டும் என்பதாம்.

கொள்ளி - நெருப்புப் பற்றிய விறகு. இருதலைக் கொள்ளி - இருபக்கமும் நெருப்புப்பற்றிய விறகு. உள் எறும்பு - அவ்விறகின் உட்டுளையில் அகப்பட்ட எறும்பு, அவ்வெறும்பு நெருப்பு நெருங்க நெருங்க மிக வருந்துவது போல, நின்னைப் பிரிந்த யான் நின்னை விட்டு அகல அகல மிக வருந்துவேனாயினேன் என்பார், 'இருதலைக் கொள்ளியின் உள்ளெறும் பொத்து நினைப்பிரிந்த விரிதலையேனை' என்றார்.

"இருதலை மின்னுகின்ற கொள்ளி மேல் எறும்பென் உள்ளம்"
நாவு 75 : 6.

எனத் தேவாரத்தும்.

"கொள்ளித் தலையின் எறும்பது போலக் குலையுமென்றன்
உள்ளத் துயரை" (106)

எனக் கந்தர் அலங்காரத்தும்,

"இடைநிலைக் கொள்ளி யிடைநின்று வருந்தி
ஒருதலைப் படாஅ உறவி போன்றனை" 339.

என அகநானூற்றினும் வருவனவுங் காண்க.

விரிதலை - மயிர் விரிந்த தலை. அது இறைவனைப் பிரிந்த வருத்த மிகுதியால் உண்டானதாகும் வியன் - பெருமை. மூவுலகு - மேல் கீழ் நடு உலகு. மூவுலகுக்கும் என உம்மை விரிக்க. ஒரு தலைவன் - ஒப்பற்ற தலைவன்.

பொருதலை மூவிலை வேல் - போர் செய்தற்குரிய மூவிலைவேல். "பொரு சூலப்படை", "போர் கொள் சூலப்படை" (ஞான 100 : 6; 252 : 5) எனத் தேவாரத்து வருவன காண்க. மூவிலை வேல் என்றது மூவிலைச் சூலத்தினை இதனை இறையன் ஏந்துதல்,

* "மூவிலைச் சூலப் படையமர் கொள்கையி னாரும்" ஞான 205 : 3.

"வெஞ்சின மூவிலைச் சூலத்தர் வீழி மிழலையார்" ஞான 267 : 3.

"மூவிலை வேற் கையானை" நாவு 305 : 1.

"கொல்லும் மூவிலை வேலுடையானை" சுந் 56 : 3.

"இலையார்ந்த மூவிலைவேல் ஏந்தி போற்றி" நாவு 245 : 3.

எனவும், வலனேந்துதல்

---

* மூவிலைச் சூலம் மழுவின் வேறு என்பது "வெண் மழு மூவிலைச் சூலப் படையமர் கொள்கையி னாரும்" "மூவிலைச் சூலமும் மழுவும் பற்றினர் போலும்" (ஞான 205 : 3; 380 : 7) எனத் தேவாரத்து மழுவின் வேறாகச் சூலம் கூறப்படுதலால் அறியப்படும்.

"மூவிலைச் சூலம் வலனேந்தி......ஆரூரமர்ந்தானே." ஞான 105 : 1
எனவும் தேவாரத்து வருவனவற்றால் அறியலாம்.

"மூவிலை யொருதாட் சூலமேந்துதல்
மூவரும் யானென மொழிந்த வாறே (6)

எனத் திருவொற்றியூர் ஒருபாவொரு பஃதில் வருதலால் மூவிலைச் சூலம் ஏந்துதலின் கருத்து இனிதுரைக்கப்படும். வலன் - வலம் என்பதன் போலி.

இதன் கண், இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பொத்து நினைப் பிரிந்த விரிதலையேனை விடுதி கண்டாய் என்பதனால் நின்னைப் பிரிந்து உலக வாழ்க்கையில் வருத்தப்படுகின்ற என்னைக் கைவிடாதொழிதல் வேண்டும் எனப் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலப்படுமாறு காண்க. 9.

114. பொலிகின்ற நின்றாள் புகுதப்பெற் றாக்கையைப் போக்கப்
பெற்று
மெலிகின்ற வென்னை விடுதிகண் டாயளி தேர் விளரி
ஒலிநின்ற பூம்பொழில் உத்தர கோசமங் கைக்கரசே
வலிநின்ற திண்சிலை யாலெரித் தாய்புர மாறுபட்டே.

ப-ரை : அளி தேர் விளரி ஒலி நின்ற பூ பொழில் - வண்டுகள் தேனாகிய உணவினைத் தேடுங்கால் பாடும் விளரிப் பண்ணின் ஒலி நிலை பெற்ற பூஞ்சோலையையுடைய, உத்தர கோசமங்கைக்கு அரசே - திரு வுத்தரகோசமங்கையென்னும் தலத்துக்கு அரசனே, புரம் மாறுபட்டு வலிநின்ற திண்சிலையால் எரித்தாய் - முப்புரங்களையும் பகைத்து வலிநிலை பெற்ற மேருமலையாகிய வில்லினால் அழலம்பைச் செலுத்தி எரித்தவனே' ஆக்கையைப் போக்கப் பெற்று - நின்னருளால் உடம்பினை நீக்கப்பெற்று, பொலிகின்ற நின் தாள் புகுதப் பெற்று - அதனால் விளங்குகின்ற நின் திருவடிகளை அடையப் பெற்று உய்யுமாறு, மெலிகின்ற என்னை விடுதி கண்டாய் - உய்யுமாறு வருந்துகின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

உத்தரகோசமங்கைக்கு அரசே, முப்புரங்களையும் மாறுபட்டுத் திண் சிலையால் எரித்தவனே, நின்னருளால் உடம்பினைப் போக்கப்பெற்று அத னால் நின் திருவடிகளை அடையப்பெற்று உய்யுமாறு வருந்துகின்ற என் னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

ஆக்கையைப் போக்கப்பெற்று நின்றாள் புகுதப்பெற்று மெலிகின்ற என மாறிக் கூட்டி, ஆக்கையைப் போக்கப்பெற்று அதனால் நின் தாள் புகுதப்பெற்று உய்யுமாறு மெலிகின்ற எனச் சில சொற்கள் வருவித் துரைக்க.

அளி - வண்டு. "அளி முரல் கொங்கார் தடமலர்" திருக்கோவை 119. "தாரிடை யளிக ளார்ப்ப" (கம்ப. வரைக் காட்சி 30) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. தேர்தல் - தேனாகிய உணவினைத் தேடுதல். "பூந்தேனைத் தேர்ந்து சேர் வண்டுகள்" ஞான 238 : 3. "கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி" (குறுந் 2) என வருதலுங் காண்க. விளரி - இரங்கற் பண். "விளரி யுறுதருந் தீந்தொடை" (புறநா. 260 : 2) என்புழி விளரி என்பதற்கு "இரங்கற் பண்ணாகிய விளரி" என அதன் உரையாசிரியர் பொருளுரைத்தவாறு காண்க. "விளரிப் பண் கண்ணினார் பாணர் களிறெறிந்து வீழ்ந்தார்க்கு" (பு வெ. மா. 137) என வருதலுங் காண்க "நுளையர் விளரி நொடிதருந் தீம்பாலை" (7 – 48) என்னும் சிலப்பதிகாரவுரையில் "விளரியென்றூர் விளரி இரங்கினர் பாடும் பண்ணாதலால்" என அரும்பதவுரைகாரர் உரைத்தமையும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலது.

வலிநின்ற திண்சிலை என்றது வலிநிலைபெற்ற திண்ணிய மேருமலை வில்லை குறிப்பினால் உணர்த்தியது. பகைவர் புரங்களை மேருவே வில்லாகக் கொண்டு எரித்தமை,

"மேருவே வில்லா மேவலர் புரங்கண்மூன் றெரித்த கையனே" (7) என அருட்பத்தில் அருளியமையானும் "அம்பலவர் பகை செகுக்குங் குனிதரு திண்சிலை" என்னும் திருக்கோவையாருக்கு (98) 'அம்பலவர் பகையைச் செகுக்கும் வளைந்த திண்ணிய சிலையாகிய மேரு' என்ற பேராசிரியர் உரையானும் அறிக

"பெரிய மேரு வரையே சிலையா மலைவுற்றூர் எயின்மூன்றும்"
ஞான 3 : 9

"விண்டார் புரம் வேவ மேருச் சிலையாகக் கொண்டான்" ஞான 83 : 6

"கைம்மருவு மேருவிலு......மும்மதிலு நொடியளவிற் பொடிசெய்த
முதல்வன்" ஞான 131 : 4

"அந்தரமூவெயிலு மனலாய் விழ வோரம்பினால்
மந்தரமேரு வில்லாக வளைத்தான்" ஞான 318 : 3

எனத் தேவாரத்தும், "விண் பயில் புரங்கள் வேவ வைதிகத் தேரின் மேருத் திண்சிலை குனிய நின்றூர்" எனப் பெரிய புராணத்தும் (குங்குலிய 30) வருவன காண்க, எரித்தாய் - அழலம்பைச் செலுத்தி எரித்தாய். "மும்மதிலுங் கருமால் வரையே சிலையாப்......அழலம்பொன்றினால் எய்த எம்மான்" "நீடுவரை மேருவிலதாக நிகழ்நாக மழலம்பால் கூடலர்கண் மூவெயிலெரித்த குழகன்" (ஞான 315 : 7; 341 - 3) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. இங்ஙனம் வில்லும் அம்பும் கூறப்படினும் இறைவன் சிரிப்பே முப்புரங்களை அழித்தது. இதனை,

"தச்சு விடுத்தலுந் தாமடி யிட்டலும்
அச்சு முரிந்ததென் றுந்தீபற
அழிந்தன முப்புரம் உந்தீபற" உந்தீ 3.

என்னும் அடிகள் திருவாக்கினாலுமறியலாம்.

"எண்ணிலார் புரங்கள் மூன்று மெரியுணச் சிரிப்பர் போலும்."
நாவு 68 : 3

"விண்டார் புரமூன்றும் வேவ நோக்கி நக்கானை" நாவு 256 : 5

"அடங்கார் புரிமெரிய நக்காய் போற்றி" நாவு 270 : 1

"தரியலர்கள் புரமூன்றுந் தழலால் வேவச் சிரித்தானை"
நாவு 293 : 10

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

புரம் எரித்தாய் என்ற விளியினால் மும்மலப் புரமாகிய உடலைப் போக்கி வீடு அருள வேண்டும் என்னும் உள்ளுறைப் பொருள் போதருதல் காண்க.

இதன் கண், ஆக்கையைப் போக்கப் பெற்று நின்தாள் புகுதப் பெற்று மெலிகின்ற என்னை விடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 10.

115. மாறுபட் டஞ்சென்னை வஞ்சிப்ப யானுன் மணிமலர்த்தாள்
வேறுபட் டேனை விடுதிகண் டாய்வினை யேன்மனத்தே
ஊறும்மட் டேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
நீறுபட் டேயொளி காட்டும் பொன்மேனி நெடுந்தகையே.

ப-ரை : வினையேன் மனத்து ஊறும் மட்டே - பிராரத்த வினையுடையேனாயினும் பேரருளால் எனது மனத்தின் கண்ணே ஊறுகின்ற தேன் போன்றவனே, மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே - நிலைபெறும் உத்தரகோசமங்கை என்னும் தலத்துக்கு அரசே, நீறு பட்டு ஒளி காட்டும் பொன்மேனி நெடுந்தகையே - திருவெண்ணீறு அணியப்பட்டு வெண்மையான ஒளி காட்டும் பொன்போலும் திருமேனியையுடைய பேரருளையுடையவனே, அஞ்சு என்னை மாறுபட்டு வஞ்சிப்ப - ஐம்பொறிகளும் சிறியேனை முரண்பட்டு மயக்க, யான் உன் மணிமலர் தாள் வேறுபட்டேனை - அதனால் நினது அழகிய மலர்போன்ற திருவடிகளைப் பிரிந்தேன். அங்ஙனம் பிரிந்த என்னை, விடுதி கண்டாய் - கைவிடுகின்றனையோ ? கைவிடாதொழிதல் வேண்டும்.

வினையேன் மனத்து ஊறும்மட்டே, உத்தரகோசமங்கைக்கு அரசே, பொன்மேனி நெடுந்தகையே, அஞ்சு எனை மாறுபட்டு வஞ்சிக்க, அதனால் நினது திருவடிகளைப் பிரிந்தேன், அங்ஙனம் பிரிந்த என்னை கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

அஞ்சு என்றது குறிப்பினால் ஐம்புலன்களை உணர்த்தியது. ஐம்புலன்களும் என்வழி நில்லாமல் மாறுபட்டு நின்று மயக்குதலின், "மாறுபட்டு அஞ்செனை வஞ்சிப்ப" என்றார். 'மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் (கோயிற் 1) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க. வஞ்சிப்ப என்னும் செயவெனெச்சம் மணி மலர்த்தாள் வேறுபடுதற்கு ஏதுவாகலின் ஏதுப் பொருளில் வந்தது. அஞ்சு எனை மாறுபட்டு வஞ்சித்தமை பிராரத்த வினையின் அனுபவமுண்மையாலாகும். யான் என்னும் எழுவாய் வேறுபட்டேனை என்பதிலுள்ள வேறுபட்டேன் என்பதனோடு முடியும். வேறுபட்டேன் என்பது வினையாலணையும் பெயராய் ஐ உருபு ஏற்று வேறுபட்டவனாகிய என்னை என்னும் பொருள் தந்து நின்றது.

மட்டு-தேன். இது மட்டே என விளியுரு பேற்றது. மனத்து ஊறு மட்டு-மனத்தின்கண் ஊறுகின்ற தேன்.

"என் உள்ளத்துள்ளே யூறும் அத்தேனை" நாவு 267 : 3
"உருகுமனத் தடியவர்கட்கு ஊறுந்தேனை" நாவு 297 : 3
"தித்தித்தென் மனத்துள்ளே யூறுந்தேனை" நாவு 297 : 7
"கருதுவார் இதயத்துக் கமலத்தூறும், தேனவன் காண்" நாவு 300 : 1
"பாவிப்பார் மனத்தூறுமத்தேனை" சுந் 59 : 10

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. இறைவன் அன்பராயினார்க்கு தேன் போன்று இனியனாதலின் "தேனே" என்றார். "தேனைத் தினியான்" (ஞான 38 ; 3) 'தெள்ளத் தேறித் தெளிந்து தித்திப்பதோர் உள்ளத்தேறல்' "தேனைத்தடியார்க் கினியார் போலும்" "உணர்ந்தார்க் கென்றுந் தேனவன் காண்" நாவு 204 : 10; 295 : 1; 298 : 5) எனத் தேவாரத்து வருவன காண்க.

இறைவன் பொன்போலும் திருமேனியனாதலின் "பொன்மேனி நெடுந்தகையே" என்றார்.

"புண் சுமந்த பொன்மேனி" அம்மானை 8.
"பொன்னை யழித்த நன்மேனிப் புகழிற் றிகழு மழகன்" குயிற் 7.
"ஆருடை யம்பொனின் மேனி அமுதினை" குயிற் 9.
"பொன்னிய லுந்திரு மேனி" திருப்படை 6
"பொன் செய்த மேனியன்" திருக்கோவை 278
"சிவந்த பொன் மேனி மணி" திருக்கோவை 361

என அடிகள் பிறண்டும் அருளியமை காண்க. பொற்புயமுடையார்க்கு, பொன் வண்ணருக்கு, பொன்வடிவினருக்கு நமஸ்காரம் என்று தைத்திரீய

ஆரணியகம் (20 : 40) கூறுதலானும் சிவபெருமான் பொன்மேனியனுதல் பெறப்படும். இறைவன் பொன்மேனி திருவெண்ணீறுபட்டு வெள்ளொளி காட்டுதலின் "நீறுபட்டே யொளிகாட்டும் பொன்மேனி" என்றார். "திரு நீற்றை யுத்தூளித் தொளிமிளிரும் வெண்மையனே" (நீத் 22) என வரு தலுங் காண்க. நீறுபட்டே, மனத்தே என்பவற்றில் ஏகாரம் அசை நிலை. தகை - அருள். "அருளுங் குணமும் தளர்வுந்தகையே" என்பது பிங் கலந்தை (10 : 566). நெடுந்தகை - பெரிய அருளையுடையவன். மணி மலர்த்தாள் வேறுபட்டேனாயினும் நின் பேரருளினால் கைவிடலாகாது என்பார், 'மணிமலர்த்தாள் வேறுபட்டேனை விடுதி கண்டாய் நெடுந் தகையே" என்றார். நெடுமை - குணப் பண்பு பற்றி வந்தது. இனி, நெடுந் தகை என்பதற்கு பெரிய தகுதிப்பாடுடையவன், பெரிய மேம்பாட் டாளன், அளத்தற்கரிய தன்மையை யுடையவன் என்ற பொருள்களும் அமையும்.

இதன்கண், மாறுபட்டென்னை வஞ்சிப்ப யான் உன் மணிமலர்த் தாள் வேறுபட்டேனை விடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக் கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 11.

116. நெடுந்தகை நீயென்னை யாட்கொள்ள யான்ஐம் புலன்கள் கொண்டு
விடுந்தகை யேனை விடுதிகண் டாய்விர வார்வெருவ
அடுந்தகை வேல்வல்ல உத்தர கோசமங் கைக்கரசே
கடுந்தகை யேன்உண் ணுந் தெண்ணீர் அமுதப் பெருங்கடலே.

ப-ரை: விரவார் வெருவ அடு தகை வேல் வல்ல - உலகிற்குத் தீமை செய்யும் பகைவர் கண்டு அஞ்சும்படி தண்டஞ் செய்து கொல் லும் தன்மையையுடைய மூவிலை வேலைச் செலுத்துதலில் வல்ல, உத்தர கோச மங்கைக்கு அரசே - திருவுத்தரகோச மங்கை என்னும் தலத்துக்கு அரசே, கடு தகையேன் உண்ணும் தெள்நீர் அமுத பெருகடலே - மிக்க தளர்ச்சியையுடையேனாகிய யான் பருகுதற்குரிய தெளிந்த தன்மையை யுடைய பெரிய அமுதக் கடலே, நெடுந்தகை - பேரருளையுடையவனே, நீ என்னை ஆட்கொள்ள - நீ என்னை அடிமை கொள்ளவும், யான் ஐம் புலன்கள் கொண்டு விடும் தகையேனை - யான் ஐம்புல நுகர்ச்சிகளை மேற் கொண்டு நின்னை விட்டுப் பிரியும் தன்மையுடையவனாகிய என்னைக் கை விடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

உத்தரகோச மங்கைக்கு அரசே, அமுதப் பெருங்கடலே, நீ என்னை ஆட்கொள்ளவும் யான் ஐம்புலநுகர்ச்சியை மேற்கொண்டு நின்னை விட் டுப் பிரியும் தன்மையுடையவனாகிய என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

நெடுந்தகை - அண்மை விளி. அடிகள் நீங்கி நிற்பவும் பேரருளால் வலிய வந்து ஆட்கொண்டமையின் இறைவனை "நெடுந்தகை" என்றார். "கடையவனேனைக் கருணையினாற் கலந்தாண்டு கொண்ட விடையவனே" (நீத் 1) "கள்ளேன் ஒழியவும் கண்டு கொண்டாண்டது எக்காரணமே" (நீத் 2) என வருவனவும் காண்க. ஆட்கொள்ளவும் என உம்மை விரித்து அதனை "விடும்" என்பதனோடு முடிக்க. ஐம்புல நுகர்ச்சிகளை மேற்கொண்டு மேனிலைப்படுத்தற்குரிய நின்னை விட்டுப் பிரியும் தன்மையுடையனாயினேன் என்பார், "யான் ஐம்புலன்கள் கொண்டு விடுந்தகையேனை" என்றார். ஐம்புலன்கள் கொண்டு என்பதற்கு ஐம்புலன்கள் செலுத்தும் நெறியை மேற்கொண்டு எனினுமாம். ஐம்புல நுகர்ச்சியை மேற்கொண்டது பிராரத்த வினையுடைமையாலாகும். ஐம்புலன்கள் கொண்டமை விட்டுநீங்குதற்கேதுவாகலின், கொண்டு என்னும் செய்தெனெச்சம் ஏதுப் பொருளில் வந்தது. யான் என்னும் எழுவாய் தகையேன் என்பதனோடு முடியும்.

விரவார் - பகைவர் என்றது உலகிற்குத் தீமை செய்வாரை. வேல் - இங்கே இறைவனுக்குரிய மூவிலை வேலாகிய சூலப்படையை உணர்த்திற்று. "மூவிலைச் சூலப் படையானே" (திரும்புலம்பல் 2) என வருதல் காண்க. வல்ல என்பதனை வல என்பதன் விரித்தல் விகாரமாகக் கொண்டு, வேலை வலப்பக்கத்திலுடையவனே எனினுமாம். "பொருதலை மூவிலை வேல் வலன் ஏந்திப் பொலிபவனே." (நீத் 9) என வருதலும் காண்க. வல என்பது வலப் பக்கத்தினை உணர்த்துதல், "இடவல" (3 : 83) என்னும் பரிபாடலினும் காண்க.

தகை - தளர்ச்சி. "அருளுங் குணமும் தளர்வுந் தகையே" (பிங். 10 : 566) கடுந்தகை - மிக்க தளர்ச்சி என்றது இறைவனைப் பிரிந்தமையாலுளதாகிய தளர்ச்சி. உண்ணும் அமுதக் கடல் என இயையும். நீர் - நீர்மை. "நீணீர் நெறி கதுப்பு" (கலி 98 : 15) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அமுதம் என்றது ஈண்டு திருவருளை.

இதன்கண், ஐம்புலன்கள் கொண்டு விடுதகையேனை விடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 12.

117\. கடலினுள் நாய்நக்கி யாங்குன் கருணைக் கடலினுள்ளம்
விடலரி யேனை விடுதிகண் டாய்விட லில்லடியார்
உடலில மேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
மடலின் மட் டேமணி யேயமு தேயென் மதுவெள்ளமே.

ப-ரை : விடல் இல் அடியார் உடல் இலமே மன்னும் - நின்னைப் பற்றி விடுதல் இல்லாத மெய்யடியாரது உள்ளமாகிய திருக்கோயிலின் கண் எழுந்தருளியிருக்கும், உத்தர கோசமங்கைக்கு அரசே - திருவுத்தர

கோச மங்கை என்னும் தலத்துக்கு அரசே, மடலில் மட்டே - பூவின்கணுண் டாகும் தேனே, மணியே - மாணிக்கமணியே, அமுதே - அமுதமே, என் மது வெள்ளமே - எனது கட்களிப் பெருக்கே, கடலினுள் நாய் நக்கி யாங்கு - மிக்க நீரையுடைய கடலினுள்ளாயினும் நாய் நக்கி ஒரு சிறிது நீரைப் பருகுவது போல, கருணை கடலில் உள்ளம் விடல் அரியேனை - நினது அருட்பெருங் கடலின்கண் உள்ளத்தை விட்டு ஒரு சிறிதன்றி ஆரப்பருகுதலில்லாத என்னை, விடுதி கண்டாய் - கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

உத்தரகோச மங்கைக்கு அரசே, மடலின் மட்டே, மணியே, அமுதே, என்மதுவெள்ளமே மிக்க நீரையுடைய கடலினுள் நாய் நக்கி ஒரு சிறிது நீரைப் பருகுவதுபோல நினது அருட்பெருக்கின்கண் உள்ளத்தை விட்டு ஒரு சிறிதன்றி ஆரப்பருகுதல் இல்லாத என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

மிக்க நீரையுடைய கடலினுள்ளும் நாய் நக்கிச் சிறிதளவு நீரையே கொள்ளுமாறு போல நினது அருட்பெருங் கடலின்கண் உள்ளத்தை விடுத்து ஒரு சிறிது கொள்வதன்றி நிறையக் கொள்ளுதல் இல்லேனை என்பார், "கடலினுள் நாய் நக்கி யாங்குன் கருணைக் கடலினுள்ளம் விடலரியேனை" என்ருர். நக்கியது ஆங்கு என்பது நக்கியாங்கு என வந்தது. இறைவன்கருணை கடல் போன்றது என்பது,

"தன் கருணை வெள்ளத்தழுத்தி" அம்மானை 5

"கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்" அன்னை 2

"களிவந்த வான் கருணை வெள்ளப்பிரான்" கோத் 16

"வந்திமை யோர்கள் வணங்கியேத்த மாக்கரு ணைக்கடலாய்"
வார்த்தை 5

"எல்லையில் மாக்கருணைக் கடல்" திருப்படை 4

என அடிகள் அருளியவாற்ருனுமறிக. கருணையைக் கடல் என்றது அதன் மிகுதி பற்றி என்க. விடலரியேனை என்பதில்அருமை இன்மைகுறித்து நின்றது. "அருங் கேடனென்பதறிக" குறளிற் காண்க.

விடலில் அடியார் என்பதில் விடுதற்குச் செயப்படுபொருள் வருவிக் கப்பட்டது. உடல் ஆகு பெயராய் உள்ளத்தை உணர்த்தியது. "எந் தையே ஈசா உடலிடங்கொண்டாய்" "சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்" (திருவாசகம் கோயில் திருப் 10) நினைப்பவர் மனம் கோயி லாக் கொண்டவர்" (அப்பர்) என வருஉம் அருள்வாக்குகளுங் காண்க. உடலிலம் - பண்புத் தொகை.

மடல் - பூவிதழ். மட்டு - தேன். "மட்டுவா யவிழ்ந்த தண்டார்" (சீவக 1145) என்புழிப் போல. பூத்தேன் போல இன்பத்தைச் செய்த

லின் "மடலின் மட்டே" என்றார். இறைவன் மாணிக்க மணிபோலும் செம்மை பொருந்திய திருமேனியுடன் ஞானசாரியனாக எழுந்தருளியமையின் மணியே என்றார். கழிபெருஞ்சுவையோடு உறுதி பயத்தலுடைமையான் "அமுதே" என்றார். மது-கள். அது இங்கே களிப்பை உணர்த்தியது. கள்ளினால் உண்டாகும் களிப்பு உடல் உணர்வுகளை மறக்கச் செய்து முழுவதும் தன்வயப்படுத்துதல் போல, இறைவன் அருளால் உண்டாகும் களிப்பு உடலையும் உணர்வையும் உலகத்தையும் மறக்கச் செய்து பரவசமடையச் செய்தலின் 'மதுவெள்ளமே' என்றார். "எனை நானென்பதறியேன் பகல் இரவாவதுமறியேன்" (உயிருண்ணி 3) என அடிகள் அருளியவாறுங் காண்க.

இதன்கண், கருணைக் கடலினுள்ளம் விடலரியேனை விடுதி கண்டாய் என்பதனால் நினது அருட்பெருங்கடலில் உள்ளம் புக்கழுந்தி நிறைவினைப் பெறத்தக்க தவமில்லாதேனைக் கைவிடாதொழிதல் வேண்டும் என்பது போதநதலின் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலப்படுமாறு காண்க. 13.

118. வெள்ளத்துள் நாவற்றியாங் குன்அருள் பெற்றுத்துன்
பத்தினின்றும்
விள்ளக் கிலேனை விடுதிகண் டாய்விரும் பும்அடியார்
உள்ளத்துள் ளாய்மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
கள்ளத்து ளேற்கரு ளாய்களி யாத களியெனக்கே.

ப-ரை: விரும்பும் அடியார் உள்ளத்து உள்ளாய் – நின்னை விரும்பி அன்பு செய்யும் மெய்யடியாரின் மனத்தின்கண் உள்ளவனே, மன்னும் உத்தர கோசமங்கைக்கு அரசே - நிலைபெற்ற திருவுத்தரகோசமங்கை என்னும் தலத்துக்கு அரசே, வெள்ளத்துள் நா வற்றியாங்கு - நல்ல நீர்ப் பெருக்கினுள் உள்ளான் ஒருவனுக்கு நா வரண்டு துன்பமுண்டானாற் போல, உன் அருள்பெற்று இன்றும் துன்பத்து விள்ளக்கிலேனை - நின் திருவருளைப் பெற்றும் இப்போதும் பொய்யுலகத் துன்பத்தினின்றும் நீங்குதற்குரிய ஆற்றலில்லாத என்னை, விடுதி கண்டாய் - கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். கள்ளத்துளேற்கு எனக்கு களியாத களி அருளாய் - மாயையின் கரவின்கண் உள்ளேனாகிய எனக்கு அக்கரவினை நீக்கிப் புலன்களால் நுகரப்பெறாத பெருங் களிப்பை எனக்கு அருள்புரிவாயாக.

அடியார் உள்ளத் துள்ளாய் உத்தர கோசமங்கைக்கரசே, வெள்ளத்துள் இருந்தும் ஒருவனுக்கு நா வரண்டு துன்பமுண்டானாற்போல நின் திருவருளைப் பெற்றும் இப்போதும் பொய்யுலகத் துன்பத்தினின்றும் நீங்கும் ஆற்றலில்லாத என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். கள்ளத்துளேற்கு எனக்குக் களியாதகளி அருளாய் என்பதாம்.

வெள்ளத்துள் நாவற்றியாங்கு என்பதற்கு நல்ல நீர்ப் பெருக்கினுள்ளான் ஒருவனுக்கு நாவரண்டதுபோல என ஆற்றலாற் சில சொற்கள் வருவித்துரைக்கப்பட்டன. வற்றியது ஆங்கு வற்றியாங்கு என விகாரமடைந்தது. உன் அருள் என்றது இறைவன் அடிகளை ஆட்கொண்டருளிய திருவருட்டிறத்தையாகும். பெற்று என்பதில் உம்மை தொக்கது. துன்பத்தினின்றும் என்பதனைத் துன்பத்தின் இன்றும் எனப் பிரித்து இன்றும் துன்பத்தின் விள்ளக்கிலேனை என்பது பொருளாகக் கொள்க. துன்பம் பிராரத்த வினையாலுண்டாகும் துன்பம். நின்னால் ஆட்கொள்ளப்பட்ட பின்னர் இப்போதும் என்றவாறு. கில் - ஆற்றலிடைநிலை. கள்ளத்துளேற்கு எனக்கு என நான்காம் வேற்றுமையை இருமுறை விரித்துக் கூறியது, இறைவன் திருவருளைப் பெறும் ஆர்வ மிகுதியாலாகும். களி - களிப்பு. "விடக்களியா நம் விழுநகரார்க்கும் வியன் முரசே" திருக்கோவை 297 என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. களியாத களி - புலன்களின் வாயிலாக அடையப் பெறாத களிப்பு.

இதன் கண் துன்பத்தினின்றும் விள்ளக்கிலேனை விடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பது புலப்படுதல் காண்க. 14.

119. களிவந்த சிந்தையொ டுன்கழல் கண்டுங் கலந்தருள
வெளிவந் திலேனை விடுதிகண் டாய்மெய்ச் சுடருக்கெல்லாம்
ஒளிவந்த பூங்கழல் உத்தர கோசமங் கைக்கரசே
எளிவந்த எந்தைபி ரான்என்னை ஆளுடை என்னப்பனே.

**ப-ரை :** மெய் சுடருக்கு எல்லாம் ஒளி வந்த பூங்கழல் - மெய்யான ஒளியையுடைய மண்டலங்களுக்கெல்லாம் ஒளி உண்டாதற்கேதுவாகிய பொலிவினையுடைய திருவடியையுடைய, உத்தரகோசமங்கைக்கு அரசே - திருவுத்தரகோசமங்கை என்னும் தலத்துக்கு அரசே, எளி வந்த எந்தை பிரான் - அருமையில் எளியையாய் வலிய வந்த எம் தந்தை முதலியோர்க்கும் தலைவனே, என்னை ஆளுடை என் அப்பனே - அடியேனை ஆளாகவுடைய என் தந்தையே, உன் கழல் கலந்தருளி களிவந்த சிந்தையொடு கண்டும் - நின் திருவடிகள் என்னைக் கலந்து அருள் செய்ய அவற்றைக் களிப்புண்டாகின்ற உள்ளத்தோடு தரிசித்தும், வெளி வந்திலேனை - பிராரத்தவினையினின்றும் வெளிப்படாத என்னை, விடுதி கண்டாய் - என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

உத்தரகோச மங்கைக்கரசே, எந்தை பிரானே, என் அப்பனே, உன் திருவடிகள் என்னைக் கலந்து அருள் செய்ய அவற்றைக் களிப்பு உண்டாகின்ற உள்ளத்தொடு தரிசித்தும், பிராரத்த வினையினின்றும் வெளிப்படாத என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்,

உன் கழல் கலந்தருள களிவந்த சிந்தையொடு கண்டும் என மாறிக் கூட்டுக. நீ ஞானசாரியனாக வலிய வந்து என்னோடு இயைந்து திருவருள் செய்ய என்பார், அவர் திருவடிமேல் ஏற்றி "உன் கழல் கலந்தருள" என்றார். களி - களிப்பு. திருக்கோவை 52 பேர். சிந்தையில் களிவருதற்கு கழல் காணுதல் ஏது. வெளிவருதல் பிராரத்த வினையினின்றும் நீங்குதல். மெய்ச்சுடர் - ஞாயிறு, செந்தீ, விண்மீன் முதலியன. இவையெல்லாம் மெய்ச் சுடராய் விளங்குதற்கு ஒளியை நல்கியது திருவடியென்பார், மெய்ச்சுடருக்கெல்லாம் ஒளிவந்த கழல் என்றார். பூங்கழல் - பொலிவினையுடைய திருவடி. திருக்கோவை 17 பேர். கழலையுடைய அரசே என இயையும்.

எளி வந்த பிரான் என இயையும். "பெருந்துறையில் எளிவந்திருந்து" (அம் 18) "எளி வந்தென்னை யாண்டு கொண்ட என்னாரமுதேயோ" (ஆசைப் 5) "என் என்பெலாம் உருக்கி எளியை யாண்ட ஈசனே மாசிலாமணியே" (பிடித்த 10) என அடிகள் பிறண்டும் அருளியமை காண்க. "எம்மானை எளிவந்த பிரானை" (சுந் 59 : 1) என்பது தேவாரம். எந்தை பிரான் - எந் தந்தை முதலியோர்க்கும் பிரான். "எந்தையை எந்தை தந்தை பிரானை" (சுந் 57 : 7) "என்னிற வெந்தை பிரான்றனை" "எந்தை பிரா னிடைமருதினை" (நாவு 88 - 8; 127 - 3) எனத் தேவாரத்தும் "எந்தை பிரானென்று, நச்சியே யண்ணலை நாடுகிலாரே" எனத் திருமந்திரத்தும் 278 வருவன காண்க.

இதன்கண் கழல் கலந்தருளக் கண்டும் வெளிவந்திலேனை விடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலனாதல் காண்க. 15.

**120.** என்னைஅப் பாஅஞ்சல் என்பவர் இன்றிநின் றெய்த்தலைந்தேன்
மின்னையொப் பாய்விட் டிடுதிகண் டாயுவ மிக்கின்மெய்யே
உன்னையொப் பாய்மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
அன்னையொப் பாய்எனக் கத்தனொப் பாய்என் அரும்பொருளே.

ப-ரை : மின்னை ஒப்பாய் - மின்னை ஒத்த ஒளியுருவினனே, உவமிக்கின் மெய்யே உன்னை ஒப்பாய் - உனக்கு உவமை கூறப் புகில் உண்மையில் உன்னையே நீ ஒப்பவனே, மன்னும் உத்தர கோசமங்கைக்கு அரசே - நிலைபெறும் திருவுத்தரகோசமங்கை என்னும் தலத்துக்கு அரசே, எனக்கு அன்னை ஒப்பாய் - அடியேனுக்குத் தாயை ஒப்பவனே, அத்தன் ஒப்பாய் - தந்தையை ஒப்பவனே, என் அரும் பொருளே - எனது பெறுதற்கரிய பொருளாயுள்ளவனே, என்னை அப்பா அஞ்சல் என்பவர் இன்றி நின்று - அடியேனைப் பார்த்து அப்பனே பயப்படாதே என்று சொல்லிப் பாதுகாப்பவர் ஒருவருமில்லாது வருந்தி நின்று, எய்த்து

அலேந்தேன் - இளைத்து அலேந்தேன், விட்டிடுதி கண்டாய் - என்னைக் கை விடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

மின்னை ஒப்பவனே, மெய்யே உவமிக்கின் உன்னையே ஒப்பவனே, உத்தரகோச மங்கைக்கு அரசே, எனக்கு அன்னையை ஒப்பவனே, அத்தனை ஒப்பவனே, எனது அரும் பொருளாயுள்ளவனே, என்னைப் பார்த்து 'அப்பா, அஞ்சல்' என்று சொல்லிப் பாதுகாப்பவர் ஒருவருமில்லாது வருந்தி நின்று எய்த்தலேந்தேன், என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

அப்பா அஞ்சல் என்பது வருந்தினோர்க்கு இரங்குவோர் கூறும் தேற்றவுரை. என்பவரின்றி எனக்குளதாகும் பிரபஞ்ச அச்சத்தினை நீக்கிப் பாதுகாக்க வல்லார் நீயன்றிப் பிறரில்லை என்றபடி. ''அருளாதொழிந்தால் அடியேனை அஞ்சேல் என்பார் ஆரிங்கு'' (கோயின் மூத் 8) ''வா வென்று விடில்என்னை அஞ்சேல் என்பார் ஆரோதான்'' (ஆனந்த 6) என வருவன காண்க. அச்சம் இறப்புப் பிறப்புப் பற்றிய அச்சம் எனினுமாம்.

''கறங்கோலை போவதோர் காயப்பிறப்போ டிறப்பென்னும்
அறம்பாவ மென்றிரண் டச்சந் தவிர்த்தென்னை யாண்டு
கொண்டான்'' (தெள் 7)

என அடிகள் அருளியவாறுங் காண்க.

இன்றி என்பது இல்லாமையால் என ஏதுப்பொருளில் வந்தது. எய்த்தல் - இளைத்தல். அலேதல் - அஞ்சல் என்பார் யாண்டாயினும் உளரோவென அலேந்து தேடுதல். ஒப்பாய் யாவும் விளிப்பொருளில் வந்தன. மின்னல் உருவத்தின் ஒளிக்கு உவமானம் ''பொங்கரவம் புன்சடை மிடைந்த மின்னனையான்'' எனத் திருக்கோவையாரில் (125) வருதலுங் காண்க.

மெய் உண்மையில் என ஏழனுருபு விரிக்க. ஏயைப் பிரித்து உன்னையே எனக் கூட்டுக. உவமிக்கின் உன்னை யொப்பாய் என்றது உனக்கு உவமை கூறப் புகுந்தால் உனக்கு ஒப்பாவார் பிறர் எவருமின்மையின் உன்னை யொப்பாய் என்றவாறு ''தாமே தமக்கொப்பு மற்றில்லவர்'' எனத் திருக்கோவையாரில் (228) வருதலுங் காண்க. உன்னை ஒப்பாய் என்றமையால் மின்னையொப்பாய் அன்னை யொப்பாய் அத்தனொப்பாய் என்பன ஒருபுடை யுவமையாவனவாகும்.

இதன் கண் ''என்னை அப்பா அஞ்சல் என்பவரின்றி நின்றெய்த்தலேந்தேன்'' விட்டிடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கியமும் என்னைக் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலனுமாறு காண்க.

16.

121. பொருளே தமியேன் புகலிட மேநின் புகழ் இகழ்வார்
வெருளே எனைவிட் டிடுதிகண் டாய் மெய்மை யார் விழுங்கும்
அருளே யணிபொழில் உத்தர கோசமங் கைக்கரசே
இருளே வெளியே யிகபர மாகி யிருந்தவனே.

ப-ரை: பொருளே - மெய்ப்பொருளாகவுள்ளவனே, தமியேன் புக லிடமே - வேறு புகலிட மில்லாத தமியேனுக்குப் புகலிடமாயுள்ளவனே, நின் புகழ் இகழ்வார் வெருளே - நின் மெய்ப்புகழை பழித்துரைப்பவர்க்கு அச்சத்தைச் செய்பவனே, மெய்ம்மையார் விழுங்கும் அருளே - மெய்யடி யார்கள் விழுங்குகின்ற அருளமுதமே, அணி பொழில் உத்தரகோசமங் கைக்கு அரசே - அழகிய சோலை சூழ்ந்த திருவுத்தரகோச மங்கை என்னும் தலத்துக்கு அரசே, இருளே - உலகியல் உணர்வால் உணரப்படாது மறைந் திருப்பவனே, வெளியே - மெய்யுணர்வால் உணரப்பட்டு வெளிப்படு பவனே, இகம் பரம் ஆகி இருந்தவனே - உயிர்களுக்கெல்லாம் இம்மை மறுமையும் வீடு பேறும் அருள்பவனாய் இருக்கின்றவனே, என்னை விட்டிடுதி கண்டாய் - என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடா தொழிதல் வேண்டும்.

பொருளே, தமியேன் புகலிடமே, நின்மெய்ப்புகழை இகழ்வார்க்கு அச்சத்தைச் செய்பவனே, மெய்மையால் விளங்கும் அருளமுதமே, உத் தரகோசமங்கைக்கு அரசே, இருளே, வெளியே, இகபரமாகி இருந்தவனே, என்னைக் கைவிடுகின்றனையோ கைவிடாதொழில் வேண்டும் என்பதாம்.

பொருள் - மெய்ப்பொருள் குறள் 351 பரிமேல். பொருளே என்றார், இறைவன் மெய்யர்க்கு மெய்ப்பொருளாயுள்ளானாதலின். "மெய்யர்க்கு மெய்ப்பொருளான விமலனை" "நீர் பலி ஏற்றதென் என்று விண்ணப் பஞ் செய்பவர்க்கு மெய்ப்பொருளாய வீழி கொண்டீர்" (சுந் 45 : 11; 88 : 9) எனத் தேவாரத்தும் வருவன காண்க.

நின்னையொழிய வேறு புகலிடமில்லேன் என்பது தோன்றத் தமி யேன் புகலிடமே என்றார். "போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறி தொன்றில்லை" (சத 62) என அடிகள் அருளியவாறுங் காண்க. இறை வனே உயிர்களுக்குப் புகலிடமாயுள்ளான் என்பது,

"எமக்குப் புகலாம் விருப்பர்க்கு" திருக்கோவை 143.

"பற்றற்றவர்க்குப் புகலோன்" திருக்கோவை 188.

"புகலிடமாய் நின்ற புண்ணியன் றானே" திருமந் 1723

"ஒழிவற நிறைந்த மதிசேர் செஞ்சடை
ஒருவன் பாத மல்லதை
பிறிது முண்டோ பெரும்புக ணமக்கே" ஞானமிர்தம் 53 ; 23 : 5

என வருவனவற்றானுமறிக.

புகழ் என்றது பொருள்சேர் புகழை. "பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு" (குறள் 5) என வருதலுங் காண்க. ஏதில் பெரும் புகழ் எனினு மமையும். "ஏதில் பெரும் புகழ் எங்கள் ஈசன்" (திருவார்த் 8) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க.

"குற்றமில் பெரும்புகழ்க் கொள்ளிக் காடர்" ஞான 274 : 11

"கோதில் புகழான்" ஞான 341 : 9

"பழிசே ரில் புகழான்" சுந் 23 : 10

எனத் தேவாரத்தும் வருவன காண்க. வெருள் - அச்சம்.

மெய்ம்மையார் - மெய்யன்பர். விழுங்கும் என்ற வினையினால் அருள் என்பதற்கு அருளமுதம் என உரைக்கப்பட்டது.

"வழங்குகின் றாய்க்குன் அருளாரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்கு கின்றேன்" (அடைக்கலப் 10) என அடிகள் பிறிதோ ரிடத்து அருளியவாறுங் காண்க. பசுஞானம் பாசஞானங்களினால் இறைவன் உணரப்படானாதலின் "இருளே" என்றும், பதிஞானமொன்றினாலே உணரப்படுவனாதலின் "வெளியே" என்றும் அருளிச் செய்தார். "பாசஞானத்தாலும் பசு ஞானத்தாலும் பார்ப்பரிய பரமனைப் பதி ஞானத்தாலே நேசமொடும் உள்ளத்தே நாடி (9-ம் சூத்) எனச் சிவ ஞான சித்தியாரில் வருதலுங் காண்க.

இகம் - எடுத்த பிறப்பாகிய இம்மைப் பயனையும் இப்பிறப்பில் செய்த வினைப் பயனால் வரும் மறுமைப் பயனையும் உணர்த்தியது. பரம் - இம்மை மறுமை யல்லாத வீடு பேறாகிய பயனை உணர்த்தியது. இகம் இம்மை மறுமையினையும் பரம் வீடு பேற்றினையும் குறிக்கும் என்பதனை

"மண்பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்தும் தேவருக்கும் வீடுபேறாய் நின்றானை."

என்னும் அப்பரடிகள் திருவாக்கானுமறிக. இகபரமாகியிருந்தவனே என்றதனால் இம்மை மறுமைப் பயன்களையும் வீடு பேற்றினையும் அருள்பவன் இறைவன் என்பது போதரும். "இகபரமும்......ஆம் பேராளன்" (ஞான 184 : 3) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. இருக்கின்றவனே என்னாது இருந்தவனே என இறந்த காலத்தாற் கூறியது துணிவு பற்றியாகும்.

இதன் கண், தமியேன் புகலிடமே என்னை விட்டிடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடாதொழிதல் வேண்டுமென்பதும் புலனாதல் காண்க. 17.

122. இருந்தென்னை ஆண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை
யென்னினல்லால்
விருந்தின னேனை விடுதிகண் டாய்மிக்க நஞ்சமுதா
அருந்தின னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
மருந்தின னேபிற விப்பிணிப் பட்டு மடங்கினர்க்கே.

ப-ரை: மிக்க நஞ்சு அமுதா அருந்தினனே - பெருநஞ்சாகிய ஆலகால விடத்தை அமிழ்த உணவாக உண்டவனே, மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே - நிலைபெறும் திருவுத்தரகோசமங்கை என்னும் தலத்துக்கு அரசே, பிறவிப் பிணி பட்டு மடங்கினர்க்கு மருந்தினனே - பிறவியாகிய பிணியின் வாய்ப் பட்டுக் கீழ்மை அடைந்தோர்க்கு அந்நோயினைத் தீர்க்கும் மருந்தாகவுள்ளவனே, இருந்து எனை ஆண்டு கொள் - இகபரம் அருளபவனாயிருந்து என்னைத் தொண்டனாக ஆட்சிபண்ணிக்கொள்; விற்றுக்கொள் ஒற்றிவை என்னின் அல்லால் - விரும்புவார்க்கு என்னை விற்றுக்கொள் அல்லது ஒற்றி வைத்துக்கொள் என்று கூறின் கூறலாமன்றி, விருந்தினனேனை விடுதி கண்டாய் - வேறொரு உரிமையுமில்லாத புதிய அடிமையாகிய என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

நஞ்சை அமுதாய் அருந்தினனே, உத்தரகோசமங்கைக்கு அரசே, பிறவிப் பிணிப்பட்டு மடங்கினர்க்கு அப்பிணியைத் தீர்க்கும் மருந்தாகவுள்ளவனே, இகபரமருள்பவனாயிருந்து என்னைத் தொண்டனாக ஆட்சி பண்ணிக் கொள்க. என்னை விற்றுக்கொள் அல்லது ஒற்றிவை என்று கூறின் கூறலாமன்றி வேறு உரிமையில்லாத விருந்தினனேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

இருந்து என்றது முன்னைய திருப்பாட்டில் இகபரமாயிருத்தலைச் சுட்டியது. ஆண்டு கொள் - அடிமைத் தொண்டனாக ஆட்சிபண்ணிக் கொள். அடிமைகொண்ட பொருளை விற்றலும் ஒற்றி வைத்தலும் இயலுமாகலின் "விற்றுக் கொள் ஒற்றிவை" என்றார். விற்றல் - தனக்குரிய உரிமை முழுவதையும் இழந்து தான் கொடுத்த பொருளின் விலையினைப் பெற்றுக்கொள்ளல். ஒற்றி - முழு உரிமையும் பெறாமல் அநுபவிக்கும் உரிமை மட்டும் பெற்றது. ஒற்றியாக வாங்கப்பட்ட பொருள் வருவாயை எடுப்பதற்குரியதன்றி விற்றற்குரியதன்று. எத்துணைக் காலஞ் சென்ற பின்னரும் ஒற்றி கொடுத்தவன் தான் பெற்ற பணத்தைத் திருப்பித் தரும் போது அவ்வொற்றிப் பொருளை அவனிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

"ஊன்றி நின்றார்ஐவர்க் கொற்றி வைத்தாய் பின்னை யொற்றி
யெல்லாம்
சோனறு கொண்டாய் கச்சியேகம்பமேய சுடர் வண்ணனே"

நாவு 99 : 9.

"விற்றுக் கொள்வீர் ஒற்றியல்லேன் விரும்பி யாட்பட்டேன்"...
சுந் 95 : 2

எனத் தேவாரத்தும் வருவன காண்க.

ஆண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை என்பவற்றுள் ஆண்டு கொள் என்பது ஆண்டு கொள்ளுந் தன்மை நினக்கன்றிப் பிறர் எவர்க்கும் இன்மையையும், விற்றுக்கொள் என்பது எனை விலைப் பொருளாகப் பெற்றுக்கொண்டு என் விலைைக் கொடுக்கத்தக்கார் பிறர் இல்லாமையையும், ஒற்றிவை என்பது அவ்வாறே ஒற்றிப் பொருளாக ஏற்றுக்கொண்டு என் தொண்டிற்குரிய விலையைக் கொடுக்கத் தக்கார் பிறர் எவரும் இல்லாமையையும் உணர்த்தி நின்றன. அதுபற்றியே "விடுதிகண்டாய்" என்றார்.

என்னினல்லால் என்பதற்கு "என்று கூறுதலன்றி" எனப் பொருளுரைத்தல் அமையாது. என்னை? என்னின் என்பது "என்று கூறின்" எனப் பொருள் தருமன்றி என்று கூறுதல் எனப் பொருள் தருமாறில்லை. என்று கூறின் என்றதன் ஆற்றலால் என்று கூறின் கூறலாமன்றிப் பிறிதொன்றுங் கூறுதற்கு உரிமையில்லாமை பெறப்படும். "பூதங்கள் தோறுநின் றாயெனி னல்லால் போக்கிலன் வரவிலன் எனநினைப்புலவோர், கீதங்கள் பாடுதல் ஆடுதலல்லால் கேட்டறியோமுனைக் கண்டறிவாரை (பள்ளி 5) என்பதிலும் "நின்றா யெனினல்லால்" என்பது நின்றாய் என்று கூறிற் கூறலாமன்றி வேறு கூறமுடியாது எனப் பொருள் தந்து நின்றவாறுங் காண்க

விருந்தினனேனை - புதிய அடியவனாகிய என்னை. விருந்து - புதுமை. இறைவனோடு போந்த மெய்யடியார்கள் பழவடியார்களாதலின் அவர்கள் முன்னே ஆட்கொள்ளப்பட்ட தாம் புதிய அடியன் என்னும் கருத்தினராய் "விருந்தினனேனை" என்றார்.

"நின் பழவடியாரொடு மென்படிறு விரும்பரனே" நீத் 35.

"பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளும்" அம்மானை 9

"உன்பழவடியார் கூட்டம் அடியேன் காண ஆசைப்பட்டேன்."
ஆசைப் 9

"பன்னா ளுன்னைப் பணிந்தேத்தும் பழையவடியா ரொடும் கூடாது
என்னாயகமே பிற்பட்டிங் கிருந்தேன்" ஆனந்த 2.

"பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மை தீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ"
திருவெம்பா 3

என அடிகள் அருளியவாறுங் காண்க.

மிக்க நஞ்சு என்றார் அளவானும் கொடுமையானும் மிக்க விடமாதலின். "பாரிடம் விண்ணு மெங்கும் பயில் நஞ்சு பரந்து மிண்ட" (ஞான 314 : 4) "கடல் கடைந்திடக் கனன்றெழுந்த விடம்" (ஞான 229 : 10) "வானஞ் சும்பெரு விடத்தை" (ஞான 231 : 5) என வருவனவும் "களை கடற் செய்த நஞ்சு என்றதனுன் நஞ்சின் பெருமை கூறினார் செய்யாத நஞ்சிற் செய்த நஞ்சு கொடிதாகலின் அதன் கொடுமை விளங்க செய்த நஞ்சென்றார்" (141 பேர்) எனவும், "ஓங்கும் ஒருவிடம் உண்டு - உலகம் முழுவதையும் சுடும் வண்ணம் மேன்மேலும் வளரா நின்றதோர் விடத்தைத் தானுண்டு" (158 பேர்) எனவும் வரூஉம் திருக் கோவையார் உரைப் பகுதிகளும் ஈண்டறியற்பாலன. இறைவன், தேவர் கள் உய்யவேண்டி *உண்ணலாகா நஞ்சை அமுதம் போல விரும்பி உண் டமையின் "நஞ்ச மமுதாய் அருந்தினனே" என்றார்.

"நஞ்சம் விருப்பாக உண்ணவனை" ஞான 101 : 6

"நஞ்சம் அமுதாக வுண்ட கடவுள்" ஞான 254 : 3

"நஞ்சைத் தமக்கமுதா வுண்ட நம்பர்" நாவு 264 : 8.

"பேரமுதம் உண்டார்கள் உய்யப் பெருங்கடல் நஞ்சு
ஆரமுதா யுண்டான்" நாவு : 19 : 9

"வானத்தவ ருய்ய வன்னஞ்சையுண்ட கண்டத்து" நாவு 80 : 6

எனத் தேவாரத்தும்,

"உம்பர் உய்யக் களமாம் விட மமிர்தாக்கிய தில்லைத்
தொல்லோன்" (22)

"ஓங்குமொரு விடமுண்டம் பலத்தும்பருய்ய வன்று
தாங்கு மொருவன்" (158)

"விண்ணோர் குழுவினை யுய்ய நஞ்சுண்டு" (229)

எனத் திருக்கோவையாரினும் வருவன காண்க.

"பிறவிப் பிணிப்பட்டு மடங்கினர்க்கு மருந்தினனே" எனக் கூட் டிப் பொருள் கொள்க. மடங்குதல் - கீழ்ப்படுதல். "காரொலி மடங்க... களத்தி ஞர்த்த பேரொலி." (கம்ப நாக பாச 291) அல்லலைச் செய்யும் பிறவியாகிய பிணியின் வாய்ப்பட்டுக் கீழ்மையடைந்தோர்க்கு மருந்தா யுள்ளான் இறைவனாதலின் 'மருந்தினனே பிறவிப் பிணிப்பட்டு மடங்கி னர்க்கே' என்றார்.

"பிறவிப் பிணிக்கோர் மருந்தே" புணர்ச்சிப் 9

---

* "உண்ணலாகா நஞ்சு" "உண்ணற்கரிய நஞ்சை" "உண்பரிய நஞ்சுதனை" தே. ஞான 49 : 9; 74 ; 7; 335 - 7.

"மருந்து நம்மல்லற் பிறவிப் பிணிக்கு" (திருக்கோவை 148) என அடிகள் பிறூண்டும் அருளியவாறு காண்க.

இதன் கண், என்னை ஆண்டுகொள் வீற்றுக்கொள் ஒற்றிவை என்னினல்லால் விடுதி கண்டாய் என்பவற்றால் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலப்படுதல் அறிக. 18.

123\. மடங்கவென் வல்வினைக் காட்டைநின் மன்னருட்
டீக்கொளுவும்
விடங்கவென் றன்னை விடுதிகண் டாயென் பிறவியைவே
ரொடுங்களைந் தாண்டுகொள் உத்தர கோசமங் கைக்கரசே
கொடுங்கரிக் குன்றுரித் தஞ்சுவித் தாய்வஞ்சிக் கொம்பினையே.

ப-ரை: உத்தரகோச மங்கைக்கு அரசே - திருவுத்தரகோச மங்கை என்னும் தலத்துக்கு அரசனே, கொடு கரி குன்று உரித்து - கொடிய கஜன் என்னும் யானையாகிய குன்றினை உரித்து மாதங்காரி என்னும் மூர்த்தத்தினால், வஞ்சிக் கொம்பினை அஞ்சுவித்தாய் - வஞ்சிக் கொம்பு போன்ற உமையம்மையை அச்சமுறச் செய்தவனே, என் வல் வினை காட்டை - எனது வலிய வினையாகிய காட்டினை, மடங்க - கீழ்ப்பட்டழியுமாறு, நின் மன் அருள் தீ கொளுவும் விடங்க - நினது நிலைபெற்ற அருளாகிய தீயை இட்டு எரிக்கின்ற சுயம்பு மூர்த்தியே, என்றன்னை விடுதி கண்டாய் - என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாது, என் பிறவியை வேரொடும் களைந்து ஆண்டு கொள் - எனது பிறவியாகிய மரத்தினை அதற்கு வேராகிய அவாவினொடும் நீக்கி ஆட்கொண்டருளுவாயாக.

உத்தரகோச மங்கைக்கு அரசே, கொடுங்கரிக் குன்றினை உரித்து, உமையம்மையை அச்சமுறச் செய்தவனே, எனது வலிய வினையாகிய காட்டினைக் கீழ்ப்பட்டழியும்படி நினது பேரருளாகிய தீயையிட்டு எரிக்கின்ற விடங்கனே, என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாது என் பிறவியை வேரொடுங் களைந்து ஆட்கொண்டருளுவாயாக என்பதாம்.

மடங்குதல் - கீழ்ப்படுதல். வினையென்பது சஞ்சித ஆகாய கன்மங்களை. வினையைக் காடு என்றது மிகுதி பற்றி. வினையைக் காடு என்றதற்கு ஏற்ப அருளைத் தீ என்றார். கொளுவுதல் - மாட்டி எரித்தல். விடங்கன் - உளி முதலிய கருவிகளால் தோற்றுவிக்கப்படாதவன். என்றது சுயம்பு என்றவாறு. பிறவியை வேரொடும் என்றமையால் பிறவி மரம் எனப்பட்டது இது ஏகதேசவுருவகம்.

"பிறவிவே ரறுத்தென் குடிமுழுதாண்ட பிஞ்ஞகா" பிடித்த 6.

"பிறவிவே ரறுக்குங் கரும்பினை" சுந் 58 : 6

என வருவன காண்க.

கொடுங் கரிக் குன்று - கொல்லும் கொடுமையும் குன்று போன்ற தோற்றமுமுடைய கயாசுரன் என்னும் யானை. கரிக் குன்று உரித்தமை,

"கருங்கட் மூன்றுகு நால்வாய்க் கரியுரித்தோன்" (55)

"உருப் பனையன்ன கைக்குன் றுரித்து" (137)

எனத் திருக்கோவையாரில் வருவனவற்றாலுமறிக. உரித்து அஞ்சுவித்தாய் என்றது யானையை உரிக்கும்போது கொண்ட ஒளியும் உக்கிரமும் மிகுந்த மாதங்காரி என்னும் உக்கிரத் திருவுருவினால் உமையை அஞ்சச் செய்தவனே என்றவாறு. கயாசுரன் என்னும் அசுரனை அழித்தபோது இறைவன் கொண்ட திருவுருவைக் கண்டு இறைவி அஞ்சினள் என்பதாம். "அரிவை அஞ்ச வன்பனைத் தடக்கை வேள்விக் களிற்றினை யுரித்த எங்கள் அன்பனை" "உமை யஞ்சவே கொல்லை யானை உரித்தவன்" (நாவு 74 : 2; 169 : 5) என வருவன காண்க. வஞ்சிக் கொம்பு ஆறும் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய் குறிப்பினால் உமையம்மையை உணர்த்தியது. வஞ்சிக் கொம்பினை மகளிர்க்கு உவமை கூறுதலை "வஞ்சிக் கொம்பனாள்" (சீவ 353) என்பதினாலுங் காண்க.

இதன் கண், வல்வினையைக் கொளுத்தி பிறவியை வேரொடுங்களைந் தாண்டுகொள் என்தன்னை விடுதி கண்டாய் என வருவனவற்றால் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலனாதலறிக. 19.

**124.** கொம்பரில் லாக்கொடி போல்அல மந்தனன் கோமளமே
வெம்புகின் றேனை விடுதிகண் டாய்விண்ணவர் நண்ணுகில்லா
உம்பருள் ளாய்மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
அம்பர மேநில னேஅனல் காலொடப் பானவனே.

ப-ரை : விண்ணவர் நண்ணுகில்லா உம்பர் உள்ளாய் - விண்ணுலகத்தவர்களும் அணுகமாட்டாத மேலாகிய சிவபுரத்திலுள்ளவனே; மன்னும் உத்தரகோச மங்கைக்கு அரசே - நிலைபெறும் திருவுத்தரகோசமங்கை என்னும் தலத்துக்கு அரசே, அம்பரமே நிலனே அனல் காலொடு அப்பு ஆனவனே - ஆகாயமும் நிலனும் தீயும் காற்றும் நீருமாயுள்ளவனே, கோமளமே - என்றும் ஒரு பெற்றித்தாய இளமையினையுடையவனே, கொம்பர் இல்லா கொடி போல் அலமந்தனன் - படருதற்குக் கொழு கொம்பு இல்லாத இளங்கொடி சுழல்வது போலச் சுழன்று வருந்தி, வெம்புகின்றேனை விடுதி கண்டாய் - உலகவாதனையால் வாடுகின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

விண்ணுலகத்தவரும் அணுகமாட்டாத மேலான சிவபுரத்திலுள்ளவனே, உத்தரகோச மங்கைக்கரசே, ஆகாயமும் நிலனும் தீயும் காற்றும் நீருமாயுள்ளவனே, கோமளமே, கொம்பரில்லாக் கொடி போலச் சுழன்று வருந்தி வாடுகின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

கொம்பர் - கொழுகொம்பு. அலமருதல் - சுழலுதல். "அலமர றெருமர லாயிரண்டுஞ் சுழற்சி" என்பது தொல்காப்பியம் (உரி 310 : 14). ஈண்டு சுழன்று வருந்துதலை உணர்த்தியது. அலமந்தனன் என்னும் தன்மை ஒருமை இறந்தகால வினைமுற்று எச்சப்பொருட்டாய் வெம்புகின்றேனை என்பதனோடு முடிந்தது. கோமளம் - இளமை. இறைவன் என்றும் * மூவா விளநலமுடையனாதலின் 'கோமளமே' என்றார்.

"முத்தியர் மூப்பிலார்" 8 : 2

"மூப்பும் நீங்கிய முக்கண் மூர்த்தி" 300 : 6

என ஆளுடைய பிள்ளையாரும்

"மூவா முதலாய மூர்த்தி தன்னை" 216 : 3

"மூவாத மேனி முக்கண்ணினானை 242 : 4

"மூவாத மேனி முக்கண்ணா போற்றி 269 : 2

என ஆளுடைய அரசும் அருளியமை காண்க.

கோமளம் - மென்மையுமாம். வெம்புதல் - வாடுதல். "வேரோடு மரம் வெம்ப" (கலி 10 : 4) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. விண்ணவர் என்றது விண்ணில் வாழும் திருமால் பிரமன் இந்திரன் முதலான தேவர்களை. இவர்கள் சிவஞானம் பெறுமையால் அணுகமாட்டாராயினர். நண்ணமாட்டா - அணுகமாட்டாத. "விண்ணகத் தேவரு நண்ணவு மாட்டா விழுப்பொருளே" (திருப்பள்ளி 9) என வருதலுங் காண்க. இல் - ஆற்றலுணர்த்துவதோர் இடைநிலை. உம்பர் என்றது இறைவனது மேலாகிய சிவபுரத்தை உணர்த்தியது. உம்பருள்ளாய் - மேலாகிய சிவபுரத்தினுள்ளவனே. "ஊனையுருக்கு முடையானை உம்பரானை" "உம்பரா போற்றி" (சத 58 : 67) என வருவன காண்க. திருமால் முதலிய விண்ணவரும் நண்ணமாட்டாத சிவலோகத்துள்ளாராதலின் அரியராயினும் எம்மனோர்க்கு எளியர் என்னும் கருத்தால் 'உத்தரகோச மங்கைக்கரசே' என்றார்.

செய்யுளாதலின் "அம்பரமே நிலனே அனல் காலொடு அப்பானவனே" என ஐம்பூதங்களை முறை பிறழக் கூறினார். அவை தோற்ற முறை பற்றி அம்பரம் கால் அனல் அப்பு நிலன் எனவும், ஒடுக்க முறை

---

* "மூவாவிளநலங்காட்டி" திருமுருகாற்றுப்படை.

பற்றி நிலன் அப்பு அனல் கால் அம்பரம் எனவும் அமையும். 'பரம் பொருளினின்று ஆகாயந் தோன்றி அதனின்றும் காற்றுத் தோன்றி அதனின்றும் தீத் தோன்றி அதனின்றும் நீர் தோன்றி அதனின்றும் நிலந் தோன்றிற்றென்று தேவாரத்துள்ளும் கூறப்பட்டது' என்ற பரிபாடலுரையும் (2:7-12 பரிமேல்) ஈண்டு அறியற்பாலது. காலொடு என்னும் ஒடுவை அனல் அப்பு என்பவற்றோடுங் கூட்டுக. அப்பு - நீர். ஐம்பூதங்களைக் கூறிய உபலக்கணத்தால் உயிரும், செஞ்சுடரும் வெண் சுடரும் கொள்ளப்படும். ஆகவே அட்டமூர்த்தமானவனே என்பது கொள்ளப்படும்.

"இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி யியமானனா யெறியுங்
காற்றுமாகி அருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாச
மா யட்ட மூர்த்தியாகி" திருநாவு 307 : 1

எனத் தேவாரத்து வருதலுங் காண்க.

இதன் கண், கொம்பரில்லாக் கொடிபோல் அலமந்தனன் வெம்புகின்றேனை விடுதி கண்டாய் என்பவற்றால் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலனாதலறிக. 20.

125. ஆனைவெம் போரிற் குறுந்தூ றெனப்புல னால்அலைப்புண்
டேனையெந் தாய்விட் டிடுதிகண் டாய்வினை யேன்மனத்துத்
தேனையும் பாலையும் கன்னலை யும்அமு தத்தையு மொத்
தூனையும் என்பினை யும்உருக் காநின்ற ஒண்மையனே.

ப-ரை: வினையேன் மனத்து - பிராரத்த வினையையுடையேனது உள்ளத்தில் எழுந்தருளியிருந்து, தேனையும் பாலையும் கன்னலையும் அமுதத்தையும் ஒத்து - தேனையும் பாலையும் கருப்பஞ்சாற்றையும் அமுதத்தினையும் ஒத்து இனிமை செய்து ஊனையும் என்பினையும் உருக்காநின்ற ஒண்மையனே - எனது உடலின் ஊனினையும் திண்பொருளாகிய எலும்பினையும் உருகிக் கரையச் செய்கின்ற அறிவொளியின்ப வுருவினனே, எந்தாய் - என் தந்தையே, ஆனை வெம் போரில் குறு தூறு என - யானைகள் ஒன்றோடொன்று செய்கின்ற கொடிய போரில் அகப்பட்ட செடிகள் போல, புலனால் அலைப்புண்டேன் - ஐம்புலன்களாலும் அலைக்கப்பட்டு வருந்தி அழிக்கின்ற என்னை, விடுதி கண்டாய் - கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

வினையேன் மனத்து எழுந்தருளியிருந்து தேனையும் பாலையும் கன்னலையும் அமுதத்தினையும் ஒத்து இனிமை செய்து எனது ஊனையும் என்பினையும் உருகச்செய்கின்ற ஒண்மையனே, எந்தாய், ஆனைவெம்போரில் அகப்பட்ட சிறிய பற்றையைப் போல ஐம்புலன்களால் அலைக்கப்பட்டு வருந்தி அழிகின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

ஆனை வெம்போர் - யானைகள் ஒன்றோடொன்று பொருகின்ற கொடிய போர். "குன்றேறி யானைப்போர் கண்டற்றால்" (குறள் 758) என்றார் திருவள்ளுவரும். ஆனைவெம்போரில் அவற்றின் காலால் மிதியுண்டு சிதையும் சிறுசெடிகள் போல ஐம்பொறிகளும் ஐம்புலன்களின் மேற்செல்லும் ஆசையில் அவற்றால் அலைக்கப்பட்ட என்னை என்பார், "ஆனை வெம் போரிற் குறுந்தூறெனப் புலனால் அலைப்புண்டேனை" என்றார். ஆனை வெம்போருக்குப் பொறிகள் புலன்கள் மேற்செல்லும் ஆசையும், குறுந் தூறுக்கு அவற்றால் அலைக்கப்பட்ட அடிகளும் உவமை. பொறிகளை ஆனை யாகக் கூறுதலை "உரனென்னுந் தோட்டியா லோரைந்துங் காப்பான்" (குறள் 24) என்பதனாலுமறிக. "தொண்டர் அஞ்சு களிறு மடக்கி" (தே ஞான 250 : 1) என வருதலுங் காண்க. தூறு - செடி. தூறென- செடி அழிந்தாற்போல. "ஆனை இனத்தின் துகைப்புண்ட அமணுயிர மும் மாய்ந்ததற் பின்" (திருநாவு 299) எனப் பெரிய புராணத்து வருத லுங் காண்க. அலைப்புண்டேனை - ஐம்புலன்களால் அலைக்கப்பட்டு வருந் திய என்னை.

"ஐவரா லலைக்கப்பட்டுக் குழியிடைத் தோணி போன்றேன்" நாவு 31:6

"ஐவரா லாட்டப்பட்டேன்" நாவு 51 : 8.

"கூட்டமாய் ஐவர் வந்து கொடுந்தொழிற் குணத்தராகி
ஆட்டுவார்க் காற்ற கில்லேன்" நாவு 67 : 4.

எனத் தேவாரத்தும் வருவன காண்க. இங்கே அடிகள் தம்மைப் புலனா லலைப்புண்டேனை எனக் கூறியது எடுத்த உடம்பும் அது முகந்து நின்ற கன்ம அனுபவமும் உளவாதல் பற்றியாகும். அவற்றை நீக்கவேண்டுமென் பது குறிப்பு.

வினையேன் மனத்து என்பதற்குத் தீவினையேனது மனத்தின்கண் என உரைக்கில் அம்மனத்தின்கண் இறைவன் புலப்பட்டு தேனையும் பாலையும் கன்னலையும் அமுதத்தையும் ஒத்து இனிமை செய்தல் பொருந் தாது. அதனால் பிராரத்த வினையுடையேனது என உரைக்கப்பட்டது. தேன் முதலியவற்றை ஒத்தல் வெவ்வேறு வகையான இன்பஞ் செய் தல். ஊனையும் என்பினையும் உருக்காநின்ற என்றது, ஊனும் என்பும் உருகும்படியான அன்பினைத் தாராநின்ற என்றவாறு. "அன்பினா லடி யேன் ஆவியோ டாக்கை யானந்தமாய்க் கசிந்துருக" (கோயிற் 2) என அடிகள் அருளியவாறுங் காண்க. ஒண்மை என்பது அறிவு, ஒளி, நன்மை முதலிய பல பொருள் தருதலின் ஒண்மையனே என்பதற்கு அறிவொளி இன்பவுருவினனே என உரைக்கப்பட்டது.

இதன்கண், புலனாலலைப்புண்டேனை விடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடாதொழிதல் வேண்டுமென்பதும் புல னாதல் காண்க. 21.

126. ஒண்மைய னேதிரு நீற்றையுத் தூளித் தொளிமிளிரும்
வெண்மைய னேவிட் டிடுதிகண் டாய்மெய் யடியவர்கட்
கண்மைய னேயென்றுஞ் சேயாய் பிறர்க்கறி தற்கரிதாம்
பெண்மைய னேதொன்மை யாண்மைய னேஅலிப்
பெற்றியனே.

ப-ரை: மெய் அடியவர்கட்கு என்றும் அண்மையனே - மெய்யடியவர்களுக்கு எப்பொழுதும் அணித்தாகவுள்ளவனே; பிறர்க்கு சேயாய் - மெய்யடியவரல்லாதார்க்கு என்றும் தூரத்திலுள்ளவனே; அறிதற்கு அரிதாம் - எத்துணை மேம்பாட்டினரும் அறிதற்கரிய, தொன்மை பெண்மையனே ஆண்மையனே அலி பெற்றியனே - பழமையுடைய பெண் தன்மையுடையவனே, ஆண் தன்மையுடையவனே, அலித் தன்மையுடையவனே, ஒண்மையனே - அறிவொளி யின்பவுருவினனே, திருநீற்றை உத்தூளித்து ஒளி மிளிரும் வெண்மையனே - திருவெண்ணீற்றைப் பரவ அணிந்து அதன் ஒளி விளங்கும் வெண்ணிற முடையவனே, விட்டிடுதி கண்டாய் - என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

மெய்யடியவர்கட்கு என்றும் அணித்தாகவுள்ளவனே, அல்லாதார்க்குத் தூரத்திலுள்ளவனே, அறிதற்கு அரிதாம் பழமையுடைய பெண் தன்மையுடையவனே, ஆண்டன்மையுடையவனே, அலித் தன்மையுடையவனே, ஒண்மையனே, திருநீற்றை உத்தூளித்து அணிந்து அதன் ஒளி விளங்கும் வெண்மையனே, என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

உத்தூளித்தல் - எங்கும் பரவப் பூசுதல். மிளிர்தல் - விளங்குதல். ஒளி மிளிரும் - திருநீற்றின் ஒளி விளங்கும். "ஒளி வெண்ணீற்றப்பர்" "ஒளிநீ றணிந்து" (ஞான 28:1; 221:3) எனத் தேவாரத்து வருவனகாண்க. வெண்மையனே என்றார், செய்ய திருமேனியையுடைய இறைவன் திருவெண்ணீற்றைப் பூசுதலால் வெண்ணிறமுடையவனாய் விளங்குதலின், "செய்ய திருமேனி மிசை வெண்பொடி யணிந்து" (ஞான 336:6) எனத் தேவாரத்து வருதலும் காண்க.

எப்பொழுதும் தன் திருவடியையே சிந்திக்கும் மெய்யடியார்க்கு இறைவன் வெளிப்பட்டுத் தோன்றலின் "மெய்யடியவர்கட் கண்மையனே" என்றும் அம்மெய்யடியாரல்லாத பிறர்க்கு மறைந்திருத்தலின் "பிறர்க்குச் சேயாய்" என்றும் அருளினர்.

"புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க" சிவபுராணம் 8

"ஓயாதே யுள்குவா ருள்ளிருக்கு முள்ளானைச்
சேயானை" அம்மானை 7

எனப் பிறண்டும் அடிகள் அருளியவாறு காண்க. எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை அண்மை சேய்மை உடையன் என எல்லைக்

குட்பட்ட உருவினனாகக் கூறுதல் அமையுமோவெனின், ஈண்டு அண்மை யும் சேய்மையும் இறைவன் திருவருளைப் பெறுதற்குரிய தகுதியையும் தகுதியின்மையையும் உணர்த்தின வாகலின் அமையுமென்க. 'என்றும்' என்னும் சொல் என்றும் அண்மையனே, என்றும் சேயாய் என ஈரிடத் தும் இயையும்.

பிறக்கரிதாம் தொன்மை - எத்துணை மேம்பாட்டினராலும் அறிய முடியாத பழமை. "சொல்லிறந்து நின்ற தொன்மை" (குயிற் 1) என அடிகள் பிறிதோரிடத்தும் அருளியவாறு காண்க. இறைவன் தொன் மையை "பெண்ணோ டாணலியாய்ப் பிறவா வுருவானவனே' (சுந் 28 : 6) என்னும் தமிழ் மறையானுமறிக. தொன்மை என்பதை பெண்மை அலி என்பவற்றோடும் கூட்டுக. இறைவனைப் பெண் ஆண் அலிப் பெற்றி யன் என்றது இன்ன தன்மையன் என்று சுட்டி யுணரப்படாமையினு லாகும்.

இதன் கண் விட்டிடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக் கியமும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலனாதல் காண்க. 22.

127. பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச் சுருக்குமன்பின்
வெற்றடி யேனை விடுதிகண் டாய்விடி லோகெடுவேன்
மற்றடி யேன்றன்னைத் தாங்குந ரில்லையென் வாழ்முதலே
யுற்றடி யேன் மிகத் தேறிநின் றேனெனக் குள்ளவனே.

ப-ரை : என் வாழ் முதலே - என் வாழ்க்கைக்கு மூலகாரணமா யுள்ளவனே, எனக்கு உள்ளவனே - எனக்கு உள் பொருளாய் வெளி வந்து ஆட்கொண்டவனே, அடியேன் உற்று மிக தேறி நின்றேன் - அடி யேன் உன்னைச் சார்ந்து வீடுபேறு கிடைக்குமென மிகவும் தெளிந்து நின்றேன். விடிலோ கெடுவேன் - அதனை தாராது கைவிடிலோ யான் கெட்டொழிவேன்; அடியேன் தன்னைத் தாங்குநர் இல்லை - அடியேனைத் தாங்கிப் பாதுகாப்பார் நின்னையன்றிப் பிறர் எவரும் இல்லை; பெற்றது கொண்டு - நின்பாற் பெற்ற திருவருளைக் கொண்டு அன்பினைப் பெருக்கி உய்வடைய மாட்டாது, பிழையே பெருக்கி - குற்றத்தையே பெருகச் செய்து, சுருக்கும் அன்பின் வெற்று அடியேனை விடுதி கண்டாய் - அத னால் சுருங்கச் செய்த அன்பினையுடைய பயனற்ற அடியேனைக் கைவிடு கின்றனையோ ? கைவிடாதொழிதல் வேண்டும்.

என் வாழ்முதலே, எனக்கு உள்ளவனே, அடியேன் நின்னைச் சார்ந்து வீடு பேறு கிடைக்குமென மிகத் தெளிந்து நின்றேன்; அதனைத் தாராது கைவிடிலோ யான் கெடுவேன்; அடியேனைத் தாங்குநர் நின்னையன்றிப் பிறர் எவரும் இல்லை; நின்பாற் பெற்ற திருவருளைக் கொண்டு அன் பினைப் பெருகச் செய்து உய்வடையமாட்டாது குற்றத்தையே பெருகச்

செய்து அதனால் சுருங்கச் செய்த அன்பினையுடைய பயனற்ற அடியே னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச் சுருக்கும் அன்பின் வெற் றடி யேனையென்றது நின்பாற் பெற்ற திருவருளைக் கொண்டு அன்பினைப் பெருகச் செய்து பிழையைச் சுருக்க வேண்டியது முறையாகவும் அதற்கு மாறாக பிழையைப் பெருக்கி அன்பைச் சுருக்கி அதனால் பயனற்ற அடி யேனை என்றவாறு. பெற்றது கொண்டு என்பதற்கு பெற்ற இவ்வுட லைக் கொண்டு என்பாருமுளர், வெறுமை - இன்மை.

விடிலோ கெடுவேன் என்றது அடியேன் உற்று மிகத் தேறி நின் றேனாக நீ கைவிடின் கெட்டொழிவேன் என்றவாறு. "வில்லேர் புரு வத் துமையாள் கணவா விடிற் கெடுவேன் (நாவு 96:4) எனத் தேவா ரத்து வருதலும் காண்க. ஓ-அசை. அடியேன் தன்னைத் தாங்குநர் மற்று இல்லை என மாறிக் கூட்டுக. மற்று-பிறிது பொருளில் வந்தது. தாங்குநர்-கேட்டினின்றும் விலக்கிப் பாதுகாப்பார்.

உயிர்களின் வாழ்வுக்கு முதன்மையான பரம்பொருளாயிருந்து அவற் றின் ஆணவ வல்லிருளை நீக்கி வீடுபேறு அளித்தற் பொருட்டுத் தனு கரண புவன போகங்களைக் கொடுத்துத் தகுதி வருவித்து அருள் செய் பவனாதலின் இறைவனை "வாழ்முதலே" என்றார். உறுதல்-சார்தல். மிகத் தேறுதல்-ஆட்கொள்ளப்பட்டமையால் வீடுபேறு கிடைத்தல் ஒரு தலையெனத் தெளிதல். அடியேன் உற்று மிகத் தேறி நின்றேன் என் றமையால் எனக்குள்ளவனே என்பதற்கு உள்பொருளாய் வெளிவந்து ஆட்கொண்டவனே எனப் பொருள் உரைக்கப்பட்டது.

இதன் கண், பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச் சுருக்குமன் பின் வெற்றடியேனை விடுதி கண்டாய்; விடிலோ கெடுவேன் என்பத னால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலனாதல் காண்க. 23.

128. உள்ளன வேநிற்க இல்லன செய்யுமை யற்றுழனி
வெள்ளன லேனை விடுதிகண் டாய்வியன் மாத்தடக்கைப்
பொள்ளனல் வேழத் துரியாய் புலனின்கட் போதலொட்டா
மெள்ளன வேமொய்க்கும் நெய்க்குடந் தன்னை யெறும்பெனவே.

ப-ரை: பொள்ளல் வியல் மா தட கை நல்வேழத்து உரியாய்- துளையினையுடைய மிகவும் பெரிய நீண்ட தும்பிக்கையையுடைய நல்ல கஜன் என்னும் யானையின் தோலையுடையவனே, நெய் குடம் தன்னை மொய்க்கும் எறும்பு என-நெய் நிறைந்த குடத்தை மொய்க்கும் எறும்பைப் போல, நின் கண் போதல் ஒட்டா புலன் மெள்ளனவே மொய்க்கும்- உள்ளம் நின்பால் சாரவொட்டாதபடி ஐம்புலன்களும் மெல்ல மெல்லச்

சூழ்கின்றன: உள்ளன நிற்க இல்லன செய்யும் - உண்மையாயின இருக்கப் பொய்யாயினவற்றையே செய்கின்ற, மையல் துழனி வெள்ள அனலேனை - மயக்கமாகிய ஆரவாரத்தின் மிக்க வெம்மையையுடையேனை, விடுதி கண்டாய் - கைவிடுகின்றனையோ ? கைவிடாதொழிதல் வேண்டும்.

வேழத்துரியாய், நெய்க்குடம் தன்னை மொய்க்கும் எறும்பென உள்ளம் நின்பாற் சாரவிடாதபடி புலன்கள் மெல்ல மெல்ல மொய்க்கின்றன. அதனால் உள்ளன நிற்க இல்லன செய்யும் மயக்கமாகிய ஆரவாரத்தின் மிக்க வெம்மையையுடையேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

உள்ளன - இறைவனை அடைதற்குரிய மெய்யாகிய தருமங்கள்; இல்லன - நிலையில்லாத அறம் பாவங்கள். மையல் என்றது பிறவிக்கு வித்தாகிய காமம் வெகுளி மயக்கம் என்னும் மூன்றனுள் ஒன்றாகிய மயக்கம். அது ஒன்றை மற்றொன்றாக உணரும் உணர்வு. அதனால் பிறவித் துன்பங்கள் உளவாகும். "பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும், மருளானும் மாணாப் பிறப்பு" (குறள் 351) என்றார் திருவள்ளுவரும்.

துழனி - ஆரவாரம். "அந்தணர் வேள்வியும் அருமறைத் துழனியும்" (தே. ஞா 286 : 37) "வையைத் துழனியும்" (கல்லாடம் 41 : 34) "திருமலி துழனி பொங்கச் செழுங்களி மகிழ்ச்சி செய்தே" (பெரிய கண்ணப் 19) என்பனவற்றிலும் இப்பொருட்டாதல் காண்க. அத்துன்பங்களின் மிகுதியை உணர்த்த 'வெள்ளம்' என்றார். அனல் - வெம்மை. துன்பத்தை வெம்மையெனல் "வெந்துயர் கோடையின் மாத்தலை கரப்ப" என்பதிலுங் காண்க. வெள்ள அனலேனை என்பது வெள்ளனலேனை என எதுகை நோக்கி அகரம் கெட்டது. இனி மையல் துழனி வெள்ளன் எனக் கொண்டு 'மயக்க ஆரவாரப் பெருக்கினேன்' எனவும், மையல் துழனி வெள்ளன் அலேனை எனக்கொண்டு 'மயக்கத்தையும் ஆரவாரத்தையும் உடைய தூயனல்லாத சிறியேனை' எனவும் பொருளுரைப்பாருமுளர்.

வியன் மா தட - ஒரு பொருட் பன்மொழி. மிகுதிப் பொருளில் வந்தது. பொள்ளல் - துளை, பொள்ளல் தடக்கை வேழம் என இயையும், "பொள்ளல் நீள் பணைக்கைக் கயந்தான் உகைத்த நற்காளை" (திருத்தொண்டர் திருவந் 85) எனப் பதினொராந் திருமுறையில் வருதலுங் காண்க. நல்வேழம் என்றது சிறந்த யானைக்குரிய இயல்புகள் அமைந்து முழுவதும் யானை வடிவமான கஜன் என்னும் அசுரன் என்றவாறு. உரியாய் - உரியைப் போர்த்தவனே. "அத்தியி னுரிதனை யழகுறப் போர்த்தவன்" (தே. ஞான 286 : 4).

போதலொட்டா என்பதற்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. புலன் மெள்ளனவே மொய்க்கும் என்றது நின்னால் ஆட்கொள்ளப்பட்டமையின் வாதனை செய்யாது அடங்கியிருந்த புலன்கள் நின்பிரிவு நீட்

NATIONAL HIGH SCHOOL

டித்தலான் மெல்ல மெல்ல வந்து மொய்க்கின்றன என்றவாறு. புலன்-பால்பகா வஃறிணைப் பெயராதலின் புலன்கள் என உரைக்கப்பட்டது.

நெய்நிறைந்த குடத்துள் எறும்புகள் மொய்த்துத் தாம் உண்டலோடு பிறர்க்கும் பயன்படாதவாறு கெடுப்பதுபோலப் புலன்கள் என்னுள்ளத்தைச் சூழ்ந்து அரித்தலொடு அவ்வுள்ளம் இறைவன்பாற் சென்று பயனடையாதவாறு கெடுப்பனவாயின.

இதன் கண் மையல் நுழனி வெள்ளனலேனை விடுதி கண்டாய் என்றதனுல் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும், கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலனுதல் காண்க. 24.

129\. எறும்பிடை நாங்கூ ழெனப்புல னுலரிப் புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண் டாய்வெய்ய கூற்றொடுங்க
உறுங்கடிப் போதவை யேயுணர் வுற்றவ ரும்பரும்பர்
பெறும்பத மேயடி யார்பெய ராத பெருமையனே.

ப-ரை: வெய்ய கூற்று ஒடுங்க உறும் கடி போது அவையே - கொடிய கூற்றுவன் வலிகெட்டொழிய அவன்மீது பொருந்திய நறுமணத்தினையுடைய மலர்போன்ற திருவடிகளையே, உணர்வு உற்றவர் உம்பர் உம்பர் பெறும்பதமே - மெய்ம்மை உணர்ந்து ஆலயப்பணியும் அரன்பணியும் செய்யும் சரியையாளர்களும் அவரின் மேம்பட்டவராய் அவ்வுணர்வுடன் நினக்கு அருச்சனை செய்கின்ற கிரியையாளர்களும் அவரின் மேம்பட்டவராய் அவ்வுணர்வும் அருச்சனையும் அகத்தேயுடையவராய்ச் சிவோகம் பாவனையுடைய யோகிகளும் முறையே அடைகின்ற சாலோகம் சாமீபம் சாரூபம் என்னும் பதவிகளாகவுள்ளவனே, அடியார் பெயராத பெருமையனே - மெய்யடியார்களாகிய ஞானிகள் பெறுகின்ற மீளத்திரும்புதலில்லாத சாயுச்சியமாகிய பெருமையையுடையவனே; எறும்பு இடை நாங்கூழ் என - எறும்புகளின் கூட்டத்தின் இடைப்பட்ட நாங்கூழ்ப் புழுவை ஒப்ப, புலனுல் அரிப்புண்டு அலந்த - ஐம்புலன்களால் உள்ளம் அரிக்கப்பட்டு வருந்திய, வெறும் தமியேனை விடுதி கண்டாய் - அன்பற்ற தனித்தவனுகிய என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

கூற்றுவன் ஒடுங்கும்படி அவன்மீது பொருந்திய மலர்போன்ற திருவடிகளையே உணர்வுற்றவர்களாகிய சரியையாளர்களும் அவரின் மேம்பட்டவராகிய கிரியையாளர்களும் அவரின் மேம்பட்டவராகிய யோகிகளும் அடைகின்ற பதவிகளாகவுள்ளவனே, அடியார் பெயராத பெருமையனே, எறும்பினிடையே அகப்பட்ட நாங்கூழ்ப் புழுவைப் போல ஐம்புலன்களால் உள்ளம் அரிக்கப்பட்டு வருந்திய அன்பற்ற தனித்தவனுகிய என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

கூற்று - இயமன். வெய்ய கூற்று என்றார், உயிருண்ணும் கூற்றாதலின். 'உயிருண்ணும் கூற்றுப் போன்றவன்' (புற 4 12) "தொல்லுல

கிற் பல்லுயிரைக் கொல்லும் கூற்றை" (தே. நாவு 296 : 9) என வருவன காண்க. உறும் - தீண்டிய எனினுமமையும். கடிப்போது - மணம் பொருந்திய பூ. கடி - வாசனை. "காந்தள் கடிகமழுங் கண்வாங் கிருஞ் சிலம்பின்" கலி 39 : 15. கடிப்போது உருவகமாய்த் திருவடியை உணர்த்தியது. இறைவனுடைய மலர்போன்ற திருவடி பொருந்திய அளவிலேயே வெய்ய கூற்றுவனது வலிகெட்டொழிந்தமையின் "வெய்ய கூற்றொடுங்க உறுங்கடிப்போது" என்றார். "காலன் புகுந்த வியக் கழல் வைத்தெழிற் றில்லை நின்ற மேலவன்" (286) எனத் திருக்கோவையாரில் வருதலும், 'கழல் வைத்தென்றார் எளிதாகச் செய்தலான்' என்னும் பேராசிரியர் உரையும் ஈண்டறியற்பாலன. இறைவன் தன்திருவடியால், தன் கடமையைச் செய்ய வந்த கூற்றுவனின் வலிகெட்டொழியச் செய்தது என்னையெனின், தஞ்சமென்று தன் தாளடைந்த தவமுதல்வராகிய மார்க்கண்டேயரது உயிரைக் கவர வந்த கூற்றுவனின் தீச்செயல் பற்றியென்க.

"நின்னடியே வழிபடுவா னிமலா நினைக்கருத
என்னடியா னுயிரை வவ்வே லென்றடற் கூற்றுதைத்த
பொன்னடி" ஞான 52 : 3.

"தோடுலா மலர்க டூவித் தொழுமார்க் கண்டேயன்
வீடுநா ளணுகிற் றென்று மெய்கொள்வான் வந்த காலன்
பாடுதான் செலலுமஞ்சிப் பாதமே சரணமென்னச்
சாடினார் காலன் மாளச் சாய்க்காடு மேவினாரே" தே. நாவு 65 : 1.

எனத் திருநாவுக்கரசு சுவாமிகளும்,

"நீற்றுத் தீயுருவாய் நிமிர்ந்தானை நிரம்புபல்கலையின் பொருளாலே,
போற்றித்தன் கழறொழு மவனுயிரைப் போக்குவான் உயிர்நீங்கிட தாளால்
கூற்றைத் தீங்குசெய் குரைகழலானை" சுந் 62 : 6.

"தஞ்சமென் றுதன் தாளது அடைந்த பாலன்மேல் வந்த காலனையுருள
நெஞ்சிலோருதை கொண்ட பிரானை" சுந் 68 : 4.

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அருளியவாறு காண்க.

கூற்றுவன் ஒடுங்க உதைத்தது ஒற்றைத் திருவடியாகவும் 'போதவையே' எனப் பன்மை கூறியது கூற்றொடுங்க உறும் ஆற்றல் அத்திருவடியிரண்டற்கும் ஒத்த இயல்பினவாதல் பற்றியாகும். கூற்றை உதைத்தது ஒற்றைத் திருவடியாதல்,

"உடம்பினை விடக்கருதி நின்ற மறையோனைத்
தொடர்ந் தணவு காலனுயிர் காலவொரு காலால்
கடந்தவ னிருப்பது" ஞான 167 : 4.

"காய்ந்தான் செறற் கரியானென்று காலனைக் காலொன்றினால்
பாய்ந்தான்" நாவு 84 : 6.

என்னும் தேவாரத்தானும்,

"காலன் புகுந்த வியக்கழல் வைத்து—காலன் வலிகெட
ஒரு கழலை வைத்து" 286 உரை.

என்னும் திருக்கோவையாருரையானுமறிக.

கூற்றினை உதைத்தது இடத்திருவடியாதல்,
"வீட வெடுத்தது காலனை... தில்லைச் சிற்றம்பலத்து
நட்டம், ஆட வெடுத்திட்ட பாதமன்றே" நாவு 81 : 10.

எனத் தேவாரத்தும்,

"மதத்தான் மிக்கான் மற்றிவன் மைந்தன் னுயிர்வாங்கப்
பதைத்தா னென்னு வுன்னிவெ குண்டான் பதிமூன்றுஞ்
சிதைத்தான் வாமச்சேவடி தன்னாற் சிறிதுந்தி
உதைத்தான் கூற்றன் விண்முகில் போல் மண்ணுற வீழ்ந்தான்"
மார்க் 253.

எனக் கந்தபுராணத்தும் வருவனவற்றாலறிக.

வெய்ய கூற்றொடுங்க உறுங்கடிப்போது என்றதனால் இறைவனது முடிவிலாற்றலுடைமை புலப்படுதல் காண்க. போதவையே - போதுகளையே, அவை என்பது துணைச் சொல்லாக வந்தது. "சடையவை தாழ்வுற" "தோளவை நெரிய" (தே. ஞான 13 : 3; 75 : 8). என வருவன காண்க. ஏகாரம் தேற்றம். போதவையே பெறும்பதமே என முடிக்க.

கூற்றுவனுக்கு மறக் கருணையினால் தண்டஞ் செய்து ஒறுத்த அத் திருவடிகளே, உணர்வுற்றவர், உம்பர், உம்பர் ஆகிய சரியை கிரியை யோகிகள் அறக்கருணையினாற் பெறுகின்ற சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும் பதவிகளாக உள்ளான் என இறைவனது அருட்டிறம் ஒன்றே இருவேறு பயன் கொடுக்கும் தன்மை கூறப்பட்டது.

உணர்வுற்றவர் என்றது திருவடிகளையே மெய்ம்மையாக வுணர்ந்து ஆலயப் பணியும் அடியார் பணியும் ஆற்றும் சரியையாளரைக் குறித்தது. உம்பர் என்றது அவரினும் மேம்பட்டவராய் அத்திருவடி யுணர்வொடு இறைவனைப் பூசிக்கும் கிரியையாளரை உணர்த்தியது; மேலும் உம்பர் என்றது அவரினும் மேம்பட்டவராய் அத்திருவடி யுணர்வும் இறைவன் பூசனையும் அகத்தே நிகழ ஆணவ நீக்கத்தின் பொருட்டு சிவோகம் பாவனையாளராகிய யோகிகளை உணர்த்தியது. உம்பர் - மேனிலை. உணர் வுற்றவரும் உம்பரும் உம்பரும் என்னும் எண்ணும்மைகள் செய்யுள்

விகாரத்தாற் றெக்கன. சாலோகம் முதலிய பதங்களை யருளும் இறைவனைப் "பதமே" என்றார்.

அடியார் பெயராத பெருமையனே என்றது மெய்யடியார்களாகிய சிவஞானிகள் பெறுகின்ற மீளத்திரும்புதலில்லாத சாயுச்சியமாகிய பெருமையுடையவனே என்றவாறு. ஞானிகள் சாயுச்சியம் பெறுவர் என்றது,

"சன்மார்க்க முத்திகள் சா லோக்கிய சா மீப்பிய
சாரூப்பிய சாயுச்சியம் என்றுசதுர் விதமாம்
முன்மார்க்க ஞானத்தால் எய்து முத்தி
முடிவென்பர் மூன்றினுக்கும் முத்திபதம் என்பர்"

சுபக்கம் சூத் 8 செய் 18.

எனச் சிவஞானசித்தியாரில் வருதலுங் காண்க.

சரியை முதலியவற்றான் எய்தும் சாலோகம் முதலிய பதமுத்திகளைப் பெற்றார்க்கு அங்கிலைகளிற் பெயர்ச்சியுண்மை போல சிவசாயுச்சியமாகிய பரமுத்தியைப் பெற்றார்க்குப் பெயர்ச்சியின்மையின் அடிகள் 'பெயராத பெருமையனே' என்றார்.

"பிறிவறி யாஅன்பர் நின்னருட் பெய்கழற் றாளிணைக்கீழ்
மறிவறி யாச்செல்வம் வந்து பெற்றார்" (அடைக் 9) எனப் பிறிதோரிடத்து அடிகள் அருளியமையுங் காண்க.

ஞானவழியான் சிவசாயுச்சியமாகிய பரமுத்தி எய்திய உயிரை மீண்டும் பிறவியிற் செலுத்தாமல் அந்தமிலின்பம் துய்க்கச் செய்தலாகிய பெருமையையுடையனுகலின் 'பெயராத பெருமையனே' என்றார். பெயராத என்னும் எதிர்மறைப் பெயரெச்சம் பெருமையன் என்னும் பெயர் கொண்டு முடிந்தது.

நாங்கூழ் - மண்ணுணிப்பாம்பு. இதனை நாகப்பூச்சி என்றும் பூநாகம் என்றும் கூறுவர். எறும்புக்கூட்டத்தில் அகப்பட்ட நாங்கூழ் அவற்றால் அரிக்கப்பட்டு வருந்துதல் போல ஐம்புலன்களினுல் உள்ளம் அரிக்கப் பட்டுத் தாம் வருந்தியமை பற்றி "றும்பிடை நாங்கூழெனப் புலனுலரிப் புண்டலந்த" என்றார். வெறுமை - அன்பின்மை. தமியேன் - துணையில்லாது தனிப்பட்டேன்.

இதன் கண், புலனுலரிப்புண் டலந்த வெறுந்தமியேனை விடுதி கண்டாய் என்பதனுல் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலப்படுதல் காண்க. 25.

130. பெருநீ ரறச்சிறு மீன்றுவண் டாங்கு நினைப்பிரிந்த
வெருநீர்மை யேனை விடுதிகண் டாய் வியன் கங்கை பொங்கி
வருநீர் மடுவுண் மலைச்சிறு தோணி வடிவின் வெள்ளைக்
குருநீர் மதிபொதி யுஞ்சடை வானக் கொழுமணியே.

ப-ரை: வியன் கங்கை பொங்கி வருநீர் மடுவுள் - பெரிய கங்கையாறு பொங்கி வந்து தங்கிய நீரையுடைய சடையின்கணுள்ள மடுவினுள், மலை சிறு தோணி வடிவின் - திரையினால் தாக்கப்படுகின்ற சிறிய தோணி போன்ற வடிவினையுடைய, வெள்ளை குருநீர் மதிபொதியும் சடை - வெள்ளைநிறத் தன்மையையுடைய மதியினை உள்ளடக்கிய சடையினை யுடைய, வானக் கொழு மணியே - சிதாகாயத்திலுள்ள சிறந்த மாணிக்கமே, பெரு நீர் அற சிறு மீன் துவண்டாங்கு - மிக்க நீர் வற்றிப் போக அதனுள் வாழ்ந்த சிறிய மீன்கள் வருந்தினாற் போல, நினை பிரிந்த வெரு நீர்மையேனை விடுதி கண்டாய் - ஆதாரமாகிய நின்னைப் பிரிந்ததனால் வருந்துகின்ற அஞ்சுந் தன்மையுடையேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

கங்கை பொங்கி வருநீர் மடுவுள் சிறு தோணி வடிவினையுடைய மதியினை உள்ளடக்கிய சடையினையுடைய வானக்கொழுமணியே, பெருநீர் வற்றிப் போக அதனுள் வாழ்ந்த சிறு மீன்கள் வருந்தினாற் போல ஆதாரமாகிய நினைப் பிரிந்ததனால் வருந்துகின்ற அஞ்சுந் தன்மையுடையேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

அகற்சியையுடைய கங்கையாதலின் 'வியன்கங்கை' என்றார். வியல் - அகலம். "வியலென் கிளவி யகலப் பொருட்டே" என்பது தொல்காப்பியம் (உரி 364 : 68). பகீரதனது தவத்தால் விண்ணினின்றும் பலமுகமாக விசையொடும் வருகின்ற கங்கையை அவன் வேண்டுகோட்கிரங்கி இறைவன் சடையில் ஏற்ற அளவில் அஃது ஒரு மடுப்போலத் தோன்றலின் 'கங்கை பொங்கி வருநீர் மடுவுள்' என்றார்.

"அஞ்சையு மடக்கி யாற்ற லுடையனாயனேக காலம்
வஞ்சமில் தவத்துள் நின்று மன்னிய பகீரதற்கு
வெஞ்சின முகங்க ளாகி விசையொடு பாயுங் கங்கை
செஞ்சடை யேற்றார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே."

திருநாவு 73 - 4

எனத் தேவாரத்தும் வருதல் காண்க.

கங்கை நீர் மடு என்க. "கங்கை மடுத்ததும்பிய வளர்சடை மறைத்த அம்மறையோர்" (அமர்நீதி 15) எனப் பெரியபுராணத்து வருதலுங் காண்க. மடு - இயற்கை நீர்நிலை. மலைச் சிறு தோணி என ஒற்றுமிக்கமையால் மலைக்கப்படுகின்ற எனச் செயப்பாட்டு வினைப்பொருள் கொள்ளப்பட்டது. மலைத்தல் - நீர்த் திரையால் தாக்கப்படுதல்.

இறைவன் சடையில் அணிந்தது ஒருகலைப் பிறையாதலின் சிறு தோணி வடிவு அதற்கு உவமையாகக் கூறப்பட்டது. இறைவன் அணிந்தது ஒருகலைப் பிறையாதல்,

"வெண்மதியின் ஒற்றைக் கலைத் தலையாய்" நீத் 40.

எனவும்,

'கலைச்சிறு திங்கள் மிலைத்த சிற்றம்பலவன்—ஒரு கலையாகிய சிறிய பிறையைச் சூடிய சிற்றம்பலவனது'—திருக்கோவை 25 உரை.

'சடைமுடி மேற் றனித் திங்கள் வைத்த......அம்பலவன்—சடையானியன்ற முடிமேல் ஒரு கலையாகிய திங்களை வைத்த'—திருக்கோவை 56 உரை. எனவும்,

"மூன்றுறழ் ஐந்து வைகல் முடிந்துழி மதியம் என்போன்
ஆன்றதண் கலையின் மூவைந் தழிதலும் அவனே யென்னச்
சான்றுரை செய்தல் போலோர் தண்கலை இருத்தலோடும்
மான்றனன் மெலிந்து வெள்கி வானவர் கோனையுற்றான்"
கந்தபுரா. சந்திர. சா. 8

எனவும் வருவனவற்றாலறியலாம்.

தோணி வடிவின் மதி என இயையும். பிறைக்குத் தோணியை உவமை கூறுதலை,

"நாவாய் பிறைச் சென்னி" ஞான 324 : 6.

எனத் தேவாரத்தும்,

"எரிகின்ற தீயொத்துளசடை ஈசற்கத் தீக்கிமையோர்
சொரிகின்ற பாற்கடல் போன்றது சூழ்புனலப் புனலிற்
சரிகின்ற திங்களோர் தோணியொக்கின்றதத் தோணியுய்ப்பான்
தெரிகின்ற திண்கழை போன்றுளதாலத் திறலரவே" (67)

எனப் பொன் வண்ணத்தந்தாதியிலும்,

"ஓமெனு மெழுத்தின் வடி வாய்நட நவின்றுபுலி
யூரன் மகு டச்சடில மேல்
மாமதி யினைத் தனது கோடென வெடுப்பமத
மாமுகன் முகக்கை தொடரத்
தூமதி பணிப்பகை யெனவர நதிப்புகவோர்
தோணியென விட்டகலுமே" (53)

எனச் சிதம்பரச் செய்யுட் கோவையிலும் வருவன காண்க.

வடிவின் - இன் ஒப்புப் பொருளது. குரு - நிறம். "குருவும் கெழுவு நிற னாகும்மே" (தொல் உரி 301 : 5). நீர் தன்மை. "நீணீர் நெறிக் கதுப்பு" (கலி 98 : 15) என்புழிப் போல. பொதிதல் - உள்ளடக்குதல். கங்கை பொங்கி வருநீர் மடுவுள் மதிபொதியுஞ் சடை என்க. "பனிச் சந்திரனொடு பாய்புனல் சூடும் பரன்" எனத் திருக்கோவையாரில் (211) வருதலுங் காண்க.

பெருநீரில் வாழ்ந்த சிறு மீன்கள் அந்நீர் வற்றியவிடத்து வாடினாற் போல எனக்கு ஆதாரமாகிய நின்னைப் பிரிந்து வருந்தி அதனால் அஞ்சினேன் என்பார், "பெருநீரறச் சிறு மீன் துவண்டாங்கு நினைப் பிரிந்த வெருநீர்மையேனை" என்றார். துவள்தல் - வருந்துதல். "சோறு கூறையின்றியே துவண்டு" (ஞான 233 : 3) தேவாரம். துவண்டாங்கு என்பதற்கு ஏற்ப, நினைப் பிரிந்த என்பதற்கு நினைப் பிரிந்து வருந்துகின்ற எனவுரைக்க. "மருளார் மனத்தோ டுனைப் பிரிந்து வருந்துவேனை" (கோயில் மூத் 8) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க. வெருநீர்மையேனை - அஞ்சுந் தன்மையுடைய என்னை, "திருப்பெருந்துறையுறை சிவனே அஞ்சினேன் நாயேன்" (வாழாப் 6) என அருளியமை காண்க. நின் பிரிவால் அஞ்சுந் தன்மையுடைய என்னைக் கைவிடலாகாது என்பார் "வெருநீர்மையேனை விடுதி கண்டாய்" என்றார்.

இதன் கண், நினைப் பிரிந்த வெருநீர்மை யேனை விடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலனாதல் காண்க. 26.

**131.** கொழுமணி யேர்நகை யார்கொங்கைக் குன்றிடைச் சென்று குன்றி
விழுமடி யேனை விடுதிகண் டாய்மெய்ம் முழுதுங் கம்பித்
தழுமடி யாரிடை யார்த்துவைத் தாட்கொண் டருளியென்னைக்
கழுமணி யேயின்னுங் காட்டுகண் டாய்நின் புலன்கழலே.

ப-ரை : கொழு மணி ஏர் நகையார் - கொழுவிய முத்தை யொக்கும் வெள்ளிய பற்களையுடைய மகளிரது, கொங்கை குன்று இடை சென்று - தனங்களாகிய மலைகளிடத்துச் சென்று, குன்றி விழும் அடியேனை - அறிவு குறைந்து விழுகின்ற அடியேனை, விடுதி கண்டாய் - கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். மெய் முழுதும் கம்பித்து அழும் அடியாரிடை - அன்பின் பெருக்கால் உடல் முழுவதும் நடுங்கி அழுகின்ற மெய்யடியார் நடுவுள், என்னை ஆர்த்து வைத்து ஆட்கொண்டருளி - அடியேனையும் சேர்த்து வைத்து அடிமையாகக் கொண்டு அருள் புரிந்து, என்னை கழும் மணியே - அடியேனைத் தூய்மை செய்த குருமணியே, இன்னும் நின் புலன் கழல் காட்டு - நின்னைப் பிரிந்து வருந்துகின்ற எனக்கு இன்னும் ஞானத் திருவடியைக் காட்டியருள வேண்டும்.

மகளிரது கொங்கைகளாகிய குன்றிடைச் சென்று அறிவு குன்றி விழுகின்ற அடியேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். உடல் முழுவதும் கம்பித்து அழுகின்ற மெய்யடியார் நடுவுள் என்னை ஆர்த்து வைத்து ஆட்கொண்டருளி என்னைத் தூய்மை செய்த

குருமணியே இன்னும் நின் ஞானத் திருவடியைக் காட்டியருள வேண்டும் என்பதாம்.

கொழுமணி என்றது குற்றங்களின்மையால் தெளிந்த ஒளியையுடைய வெண்ணிற முத்தினை. மணி என்பது முத்தைக் குறித்து வரல் "மணி வாள் நகையாய் 385 என்னும் திருக்கோவையாரினுங் காண்க. ஏர் - உவமவுருபு. "முத்தேர் முறுவலாய்" (கலி 64 : 29) என்புழிப் போல. நகை - எயிறு. (கலி 72 : 12 நச்). மகளிர் பல்லுக்கு முத்தினை உவமை கூறுதலை,

"முத்தன்ன வெண்ணகையாய்" திருவெம் 3.

"ஒண்ணித்தில நகையாய்" திருவெம் 4.

"கனி பவளத் தயலுளவே முத்தமொத்த நிரை" திருக்கோவை 35

"தொண்டைக் கனிவாய்க் குளிர் முத்த நிரைத்து" திருக்கோவை 36

"கவவின வாணகை வெண் முத்தம்" திருக்கோவை 108

என வருவனவற்றிலுங் காண்க.

மகளிரது இளமைச் செவ்வி புலப்பட "கொழுமணி ஏர் நகையார்" என்றார். குன்றிடை - குன்றினிடத்து. இடை - இடத்து. "முலையிடை வாங்கி முயங்கினன்" (கலி 146 : 24) என்புழிப்போல. காமத்தால் அறிவு குன்றி மகளிரை முயங்குதலின் "கொங்கைக் குன்றிடைச் சென்று குன்றி விழுமடியேனை" என்றார்.

கம்பித்தல் - நடுங்குதல். "விதிர்ப்புப் பணிப்பு விதலை கம்பம் அதிர்ப்புப் பொதிர்ப்பு நடுக்கமாகும்" எனத் திவாகரத்தும் வருதல் காண்க. மெய்யடியார்க்கு அன்பின் பெருக்கால் உடல் முழுவதும் கம்பித்தலும் ஆனந்தக்கண்ணீர் சொரிதலும் நிகழ்தலின் "மெய்ம் முழுதுங் கம்பித்தழுமடியார்" என்றார்.

"நகமெலாந் தேயக் கையா லுண்மலர் தொழுது தூவி
முகமெலாங் கண்ணீர் மல்க முன் பணிந்தேத்துந் தொண்டர்"
நாவு 40 : 8.

"கரையா நினைந்துருகிக் கண்ணீர் மல்கிக் காதலித்து நின்
கழலே யேத்து மன்பர்க்கு" நாவு 260 : 3.

"அகங் குழைந்து மெய்வருந்தி யழுவார் தங்கள் வாயவன் காண்"
நாவு 261 : 3.

"குறையாத வுவகைக் கண்ணீர், ஆரூத வானந்தத் தடியார்"
நாவு 293 : 5.

எனத் தேவாரத்தும்,

அழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுளம் உருகி யழுதுடல் கம்பித்து (போற்றி 60-1)

எனத் திருவாசகத்தும்,

"மெய்த்தழையா நின்ற வன்பினர் போல விதிர் விதித்து" 102

எனத் திருகோவையாரிலும்,

"காவலன் வியந்து பல்காற் கண்டுகண் டதிச யித்துப்
பூவினை யடைவிற் கொய்து புளகிதத் தோடுங் கண்ணீர்
மேவ மெய் கம்பித் தன்பின் வெள்ளத்து மூழ்கி மிக்க
தேவதே வனைப்பூ சித்தான் விதிப்படி சிறந்த நல்கி" இந்திரன் பழி 22

எனத் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்தும் வருவன காண்க.

அடியாரிடை யார்த்து வைத்தாட்கொண்டருளி என்றது மெய்யடியாரிடைத் தங்கச் செய்து அடிமை கொண்டருளி என்றவாறு. "அறவை யென்றடியார்கள் தங்கள் அருட் குழாம்புக விட்டுநல் லுறவு செய்தெனை உய்யக் கொண்ட பிரான்" (சென்னிப் 7) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க.

கழுவும் மணி என்பது கழுமணி என இடைக்குறைந்து நின்றது. கழுவுதல் - தூய்மை செய்தல். மணி - குருமணி. ஆசாரிய சிரேட்டர் என்றவாறு. இறைவன் குருவாக எழுந்தருளி வந்து அடிகளின் பாசவழுக்கை நீக்கியமையின் "என்னைக் கழுமணியே" என்றார்.

"பாச மறுத்தெனை யாண்ட" குயில் 9.

"பந்த மறுத் தென்னை யாண்டு கொண்ட பாண்டிப்பிரான்" பூவல்லி 2.

"கடிய வினை யகற்றிப் பழமலம் பற்றறுத் தாண்டவன்" பாண்டி 8.

"பழவினைகள் பாறும் வண்ணம் சித்தமலமறுவித்துச்
சிவமாக்கி யெனை யாண்ட அத்தன்" அச்சோ 1.

"பந்த மறுத்தெனை யாண்டு" அச்சோ 6.

என அடிகள் அருளியவாறும் காண்க.

கண்டாய் என்பது முன்னிலையசையாயினும் காட்டியருள வேண்டும் என்னும் ஆர்வமிகுதியையுணர்த்தியது. கழல் அத்தனையுடைய திருவடிக்கு ஆகுபெயர். ஞானமயமான திருவடியாதலின் 'புலன்கழல்' என்றார்.

இதன்கண், நகையார் கொங்கைக் குன்றிடை விழுமடியேனை விடுதி கண்டாய் எனவும், இன்னும் காட்டு கண்டாய் நின்புலன் கழலே எனவும் கூறுமாற்றால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டுமென்பதும் புலனாதல் காண்க. 27.

132. புலன்கள் திகைப்பிக்க யானுந் திகைத்திங்கோர் பொய்ந்நெறிக்கே
விலங்குகின் றேனை விடுதிகண்டாய் விண்ணும் மண்ணுமெல்லாம்
கலங்கமுந் நீர்நஞ் சமுதுசெய் தாய்கரு ணாகரனே
துலங்குகின் றேனடி யேனுடை யாயென் தொழுகுலமே.

ப-ரை: விண்ணும் மண்ணும் எல்லாம் கலங்க - விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவருமாகிய எல்லாரும் கலக்கமடைய, முந்நீர் நஞ்சு அமுது செய்தாய் - அதனை நீக்கும் பொருட்டு திருப்பாற்கடலிற் றோன்றிய ஆலகாலவிடத்தை உண்டருளி அவர்களைக் காத்தருளினவனே, கருணை ஆகரனே - கருணைக்கு இருப்பிடமானவனே, துலங்குகின்றேன் அடியேன் உடையாய் - உலகவாதனையால் நடுங்குகின்றேனாகிய அடியேனை ஆளாக உடையவனே, அடியேன் தொழுகுலமே - என்னுடைய வணக்கத்திற்குரிய மரபினையுடைய அந்தணாளனே, புலன்கள் திகைப்பிக்க யானும் திகைத்து - ஐம்புலன்களும் மயக்கத்தைச் செய்ய யானும் அவற்றால் மயக்கமடைந்து, இங்கு ஓர் பொய் நெறிக்கே விலங்குகின்றேனை - இவ்வுலகில் நிலையற்ற ஒரு பொய்யாகிய வழியின்கண் விலகிச் செல்லுகின்றேனாகிய என்னை, விடுதி கண்டாய் - கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவருமாகிய எல்லாரும் கலக்கமடைய அதனைக் கண்டு திருப்பாற்கடலிற் றோன்றிய நஞ்சை உண்டருளி அவர்களைக் காத்தருளினவனே, கருணாகரனே, துலங்குகின்றேனாகிய அடியேனை ஆளாக உடையவனே, அடியேன் தொழுகுலமே, ஐம்புலன்களும் திகைப்பிக்க யானும் திகைத்து இவ்வுலகில் ஒரு பொய்யாகிய வழியின்கண் விலகிச் சென்றவனாகிய என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

அமுதம் பெறவிரும்பி வானவரும் தானவரும் திருப்பாற்கடலைக் கடைந்தபோது எழுந்த ஆலகால விடத்தைக் கண்டு விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவருமாகிய எல்லாரும் அஞ்சிக் கலக்கமடைந்தமையின் "விண்ணும் மண்ணுமெல்லாங் கலங்க" என்றும், இறைவன் அவர்கள் கலக்கத்தை நீக்கும்பொருட்டு பாற்கடலிற்றோன்றிய அந்நஞ்சை அமுது செய்தருளினமையின் "முந்நீர் நஞ்சு அமுது செய்தாய்" என்றும் அருளினர்.

"தேவர் தானவர் பரந்து திண்வரை மால் கடனிறுவி
நாவதாலமிர் துண்ண நயந்தவர்" ஞான 232 : 2.

"வடங்கெழு மலைமத்தாக வானவர் அசுரரோடு
கடைந்திட வெழுந்த நஞ்சுங் கண்டு பஃறேவரஞ்சி
அடைந்து நுஞ் சரண மென்ன வருள் பெரிதுடையராகித்
தடங்கட னஞ்ச முண்டார் சாய்க்காடு மேவினாரே" நாவு 65 : 2,

"மண்டலை யிரந்து கொண்ட மாயனோ டசுரர் வானோர்
தெண்டிரை கடைய வந்த தீ விடந் தன்னையுண்ட" நாவு 71 : 4.

"நெருங்கின வானவர் தானவர் கூடிக் கடைந்த நஞ்சைப்
பருக்கின வாறென் செய்கேன் ஒற்றியூருறை பண்டங்கனே"

நாவு 86 : 11.

"பரவி வானவர் தானவர் பலருங் கலங்கிட வந்த கார்விடம்"

ஞான 186 : 2.

"நஞ்சமுது செய்த மணிகண்டன்" ஞான 329 : 6.

எனத் தேவாரத்தும்,

"முன்னுங்கடு விடமுண்ட தென்றில்லை முன்னோன்" 236.

"தெண்ணீர்க் கடனஞ், சூணுந் திருத்த மொருவன்" 341.

எனத் திருக்கோவையாரினும் வருவன காண்க.

விண்ணும் மண்ணும் இடவாகுபெயராய் ஆண்டுள்ளாரை உணர்த்தின. முந்நீர் - நிலத்தைப் படைத்தலும், காத்தலும், அழித்தலுமாகிய மூன்று நீர்மையையுடைய நீர்; என்றது கடலை. முந்நீர் என்பதற்கு 'நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்று தொழிலையுடைய நீர் (பெரும்பாண் 441 உரை) எனவும், நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்று தொழிலுடைமையின் முந்நீர் ஆகுபெயர் (சீவக 5 உரை) எனவும் நச்சினார்க்கினியர் உரைத்தமை காண்க. ஆற்றுநீரும் ஊற்றுநீரும் மழைநீருமுடைமையால் கடற்கு முந்நீர் என்று பெயராயிற்று எனப் புறநானூற்றுரைகாரரும் (புற 9 : 14 உரை) முந்நீர் - கடல் ஆகுபெயர்; ஆற்றுநீர் ஊற்றுநீர் மேனீரென இவையென்பார்க்கு அற்றன்று. ஆற்றுநீர் மேனீராகலானும் இவ்விரண்டுமில்வழி ஊற்றுநீருமின்றாகலானும் இவற்றை முந்நீரென்றல் பொருந்தியதன்று; முதியநீரெனின் "நெடுங் கடலுந் தன்னீர்மை குன்றும்" என்பதனால் அதுவும் மேனீரின்றி அமையாமையின் ஆகாது; அதனால் முந்நீர்க்குப் பொருள் யாதோவெனின் முச்செய்கையையுடைய நீர், முந்நீரென்பது; முச்செய்கையாவன மண்ணைப் படைத்தலும், மண்ணையழித்தலும் மண்ணைக் காத்தலுமாம் என அடியார்க்கு நல்லாரும் (சிலப் 17 உரை) எழுதிய உரைப்பகுதிகள் ஈண்டறியற்பாலன. முந்நீர் என்பது கடலுக்குப் பொதுப்பெயராயினும் ஈண்டுப் பாற்கடலை உணர்த்தியது. முந்நீர் நஞ்சு - பாற்கடலிற்றோன்றிய நஞ்சு. அமுது செய்தாய் - உண்டாய். கருணை + ஆகரன் – கருணாகரன் என வடமொழி முடிபு. இருப்பிடமானவன் என்பது பொருள். ஆகரம் - இருப்பிடம். நஞ்சமுண்டு தேவர்க்கருள் செய்தமையின் 'கருணாகரனே' என்றார்.

"ஆலால முண்டங் கமரர்க்கருள் செய்ததாமே" ஞான 312 : 10.

"உண்பரிய நஞ்சுதனை யுண் டுலகுய்ய அருளுத்தமன்" ஞான 335 : 7.

"நஞ்சங் கண்டு பஃறேவர் அஞ்சியடைந்து நுஞ்சரணம் என்ன
அருள்பெரி துடையராகித் தடங்கடல் நஞ்சம் உண்டார்" நாவு 65 : 2.

"விடமுண் டருள்செய்......சடையன்" சுந் 93 : 7.

எனத் தேவாரத்தும்,

"மணியக்கணியும் அரன் நஞ்சமஞ்சி மறுகி விண்ணோர்
பணியக் கருணை தரும் பரன்" (195)

"விண்ணோர் குழுவினை யுய்ய நஞ்சுண்டு அம்பலத்துக்
குனிக்கும் பிரான்" (229)

எனத் திருக்கோவையாரினும் வருவன காண்க.

துலங்கல் - நடுங்குதல். "இலங்கை மன்னனை யீரைந்திரட்டி தோள், துலங்க வூன்றியதூ மழுவாளினர்" (தே. ஞான 299 : 8) துளங்கு என்பது துலங்கு என எதுகை நோக்கித் திரிந்தது. அன்றி லகரமும் ளகரமும் பொருள் வேறுபாடின்றி ஒத்து நடக்கும் என்னும் வடமொழி மதம்பற்றித் தமிழிலும் வந்தது எனினுமமையும். துலங்குகின்றேன் - முற்றெச்சம். விண்ணும் மண்ணுமெல்லாம் கலங்க எழுந்த நஞ்சையுண்டு அவர்கள் கலக்கத்தை நீக்கியருளியதுபோல பிறப்பிறப்புத் துன்பங்களால் வரும் துலக்கத்தை நீக்கியருள வேண்டும் என்பார், 'விண்ணு மண்ணுமெல்லாங் கலங்க நஞ்சமுது செய்தாய், துலங்குகின்றேன் அடியேன்' என்றார். அடியவனது கலக்கத்தை நீக்குதல் ஆண்டானாகிய நினது கடமையென்பது புலப்பட 'அடியேன் உடையாய்' என்றார்.

தொழுகுலன் எனற்பாலது தொழுகுலம் என நின்றது. தொழுகுலன் - வணங்குதற்குரிய மரபினன்; அந்தணன். குலம் - கோயில் என்பாருமுளர். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புலன்களும் அறிவை மயக்குதலின் 'புலன்கள் திகைப்பிக்க' என்றார். "மாறிநின்றென்னை மயக்கிடும் வஞ்சப்புலனைந்தின்" (கோயிற்றிருப் 1) என அடிகள் பிறிதோரிடத்துக் கூறுதலுங் காண்க.

"சாணிரு மடங்கு நீண்ட சழக்குடைப் பதிக்கு நாதர்
வாணிக ரைவர்......மயக்கஞ் செய்து" நாவு 67 : 7

"பொத்தார் குரம்பை புகுந்தைவர் நாளும் புகலழிப்ப
மத்தார் தயிர்போல் மறுகு மென் சிந்தை" நாவு 96 : 3

"கட்டனு ளைவர் வந்து கலக்காமைக் காத்துக் கொள்வாய்"
நாவு 57 : 5

திகைப்பித்தல் - மயக்கமுறுத்தல். "தேவே தில்லைநட மாடீ திகைத்தேன்" (ஆனந்த 6). யானும் என்புழி உம்மை, நின்னால் ஆட்கொள்ளப்பட்ட யானும் என உயர்வு சிறப்பு. திகைத்து என்றது நின்னால்

ஆட்கொள்ளப்பட்டிருந்தும் நின் பிரிவின் காலநீட்சியால் நின் அருள் நெறியை விட்டு மயக்கமடைந்து என்றவாறு. பொய்நெறி என்றது நிலை யற்ற இவ்வுலக இன்பத்தில் தலைப்படும் அவநெறியை. பொய் நெறிக்கு என்னும் நான்காவது ஏழாவதன் பொருட்கண் வந்தது; "ஒரு குதலைச் சின்மழலைக்கென்னே" (திருக்கோவை 104) என்புழிப் போல. விலங்குதல் - விலகுதல். "பருவரை நாடனீங்கி விலங்காது நெஞ்சுடைந்தது" (திருக் கோவை 150 கொடு) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அழிவி லின்பம் பயக்கும் சிவநெறிக்கட் சேறலொழிந்து துன்பம் பயக்கும் அவ நெறிக்கட் செல்கின்றேன் என்பார், "விலங்குகின்றேனை" என்றார். விலங்குகின்றேனை என்பது வினையாலணையும் பெயராய் ஐயுருபு ஏற்று விலங்குகின்றவனாகிய என்னை எனப் பொருள் தந்து நின்றது.

இதன் கண், யானுந் திகைத்திங்கோர் "பொய்நெறிக்கே விலங்கு கின்றேனை விடுதி கண்டாய்" எனவும், "துலங்குகின்றேன்" எனவும் கூறியவற்றால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும், கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலப்படுதல் காண்க. 28.

**133.** குலங்களைந் தாய்களைந் தாயென்னைக் குற்றங்கொற்
றச்சிலையாம்
விலங்கலெந் தாய்விட் டிடுதிகண் டாய்பொன்னின் மின்னு
கொன்றை
அலங்கலந் தாமரை மேனியப் பாஒப்பி லாதவனே
மலங்களைந் தாற்சுழல் வன்றயி ரிற்பொரு மத்துறவே.

ப-ரை: கொற்றம் சிலை ஆம் விலங்கல் எந்தாய் - முப்புரங்களையும் எரிக்கும் வெற்றியைத் தரும் வில்லாக வளைத்த மேருமலையையுடைய எந்தையே, குலம் களைந்தாய் - எனது சுற்றப்பற்றினை நீக்கி, என்னை குற்றம் களைந்தாய் - என்னுடைய காம முதலிய குற்றங்களையும் நீக்கி ஆட்கொண்டருளினை; பொன்னின் மின்னு கொன்றை அலங்கல் - பொன் னைப் போல விளங்குகின்ற கொன்றை மலர் மாலையையுடைய, அம் தாமரை மேனி அப்பா - அழகிய செந்தாமரை போலும் திருமேனியை யுடைய என் தந்தையே, ஒப்பு இலாதவனே - (உயர்வும்) ஒப்பும் இல்லா தவனே, மத்து உற பொரு தயிரின் - மத்து மிகப் பொருந்தி அலைத்த லால் கரைந்து சுழலும் தயிரைப் போல, மலங்கள் ஐந்தால் சுழல்வன் - நின் பிரிவினால் ஐந்து மலங்களால் சுழல்கின்றேனாயினேன், விட்டிடுதி கண்டாய் - என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண் டும்.

கொற்றச் சிலையாம் விலங்கல் எந்தாய், எனது சுற்றப்பற்றினை நீக்கி என்னுடைய குற்றங்களையும் நீக்கி ஆட்கொண்டருளினை. கொன்றை

மலர் மாலையையுடைய செந்தாமரை போலுந் திருமேனியையுடைய அப்பா, ஒப்பிலாதவனே, மத்து உறப்பொரு தயிரினைப் போல மலங்கள் ஐந்தால் சுழல்கின்றேனாயினேன், என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

குலம் - மரபு. அது மரபிலுள்ளவரது பற்றினை உணர்த்தியது. குற்றம் - உட்பகைகள் ஆறு; அவை காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாற்சரியம் என்பன. இங்ஙனம் கொள்வது வடநூல் மரபு. இவ்வறுவகைக் குற்றங்களையும் காமம், வெகுளி, மயக்கம் என மூன்றில் அடக்கிக் கூறுவர் ஆசிரியர் திருவள்ளுவர் (குறள் 360). எனவே, மயக்கத்துள் லோபம் மோகம் மதம் மாற்சரியம் என்னும் நான்கும் அடங்கும். குலங் களைந்தாய், குற்றங் களைந்தாய் என்றதன் ஆற்றலால் குலங் களைந்து குற்றங் களைந்து ஆட்கொண்டருளினை என்பது போதரும்.

"குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான்" அம்: 20

"கயன்மாண்ட கண்ணிதன் பங்கனெனைக் கலந்தாண்டலுமே
அயன் மாண் டருவினைச் சுற்றமுமாண்டு" தெள்: 11

"இணையார் திருவடி யென்றலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்க ளத்தனையுந் துறந்தொழிந்தேன்" பூவல்லி: 1

"எந்தையெந் தாய்சுற்ற மற்றுமெல்லாம் என்னுடைய
பந்தமறுத் தென்னை யாண்டு கொண்ட பாண்டிப்பிரான்" பூவல்லி: 2

என அடிகள் அருளியவாறுங் காண்க.

மின்னுதல் - விளங்குதல், கலி 101 : 27 நச். பொன்னின் மின்னு கொன்றை - பொன்னைப் போல விளங்குகின்ற கொன்றை மலர். "பொன்றிகழ் கொன்றைமாலை", "பொன்னங் கொன்றையும்" (நாவு 35 : 9; 124 : 6) எனத் தேவாரத்தும் வருவன காண்க. கொன்றை ஆகுபெயராய்ப் பூவை உணர்த்தியது. அலங்கல் எனப் பொதுப்படக் கூறினமையால் இறைவற்குரிய அடையாளப் பூவாகிய கொன்றை மலரானன கண்ணியும் தாரும் மாலையும் கொள்ளப்படும்.

"கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்" அக. கடவுள்

எனவும்,

"விரைக் கொன்றைக் கண்ணியன் காண்" தே. நாவு 289 : 1

"விரை கமழு மலர்க் கொன்றைத் தாரான்" தே. நாவு 286 : 8

"வண்டு படு மலர்க் கொன்றை மாலையான் காண்" தே. நாவு 278 : 8

எனவும் வருவன காண்க.

தாமரை மேனி - செந்தாமரை போலும் திருமேனி. "செந்தாமரைக் காடனைய திருமேனி" (சத 26) எனவும், "சீருடைச் செங்கமலத்தில் திகழுருவாகிய செல்வன்" (குயிற் 9) எனவும், "பூந்தாமரை மேனி" (தே. நாவு 112:3) எனவும் வருவன காண்க. மேனி - நிறம்.

ஒப்பிலாதவன் – தானே தனக்கு ஒப்பன்றி வேறு ஒப்பு இல்லாதவன்.

"இணையொருவர் தாமல் லால் யாரு மில்லார்" நாவு 296:7

"தன்னியல்பார் மற்றொருவ ரில்லான் கண்டாய்" நாவு 252:8

எனத் தேவாரத்தும்,

"இணையு மளவு மில்லா விறையோன்" (202)

"தாமே தமக்கொப்பு மற்றில்லவர்" (228)

"ஓரளவில்லா வொருவன்" (308)

எனத் திருகோவையாரினும் வருவன காண்க. ஒப்பில்லாதவனே என்றதன் ஆற்றலால் உயர்வில்லாதவனே என்பதும் கொள்ளப்படும்.

மலங்கள் ஐந்து என்பதனை "ஐம்மலத்தாரு மதித்த சகலத்தர்" (திருமந் 2218) எனத் திருமூலர் கூறுதலும் காண்க. மலங்கள் ஐந்தாவன: ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்பன.

"ஆணவ மாகும் அதீதமேன் மாயையும்
பூணுந் துரியஞ் சுழுத்தி பொய்க் காமியம்
பேணுங் கனவும் மாமாயை திரோதாயி
காணு நனவும் மலக்கலப் பாகுமே" 2220

எனத் திருமந்திரத்தும்,

"மும்மல நெல்லி னுக்கு முளையொடு தவிடு உமிப்போல்
மம்மர் செய்து அணுவின் உண்மை வடிவினை மறைத்து நின்று
பொய்மை செய் போக பந்த போத்திருத் துவங்கள் பண்ணும்
இம்மலம் மூன்றி னோடும் இருமலம் இசைப்பன் இன்னும்"
சூத். 2 செய் 86

"மாயையின் காரி யத்தை மாயேய மலம தென்றும்
ஏயுமும் மலங்கள் தத்தந் தொழிலினை இயற்ற ஏவுந்
தூயவன் தனதோர் சத்தி திரோதான கரிய தென்றும்
ஆய்வர்இம் மலங்கள் ஐந்தும் அணுக்களை அணைந்து நிற்கும்"
சூத் 2 செய் 87

''மலமாயை கன்மம் மாயே யந்திரோ தாயி மன்னி'' சூத் 2 செய் 88

எனச் சிவஞான சித்தியாரிலும்,

''ஒன்றாகி யழிவின்றிப் பலவாற்றலுடைத்தாய்ச் செம்புறு மாசென்னத்,
தொன்றாகி யருள்விளைவி னீங்கும் இருள்மலத்துடன் அத் தொடக்கு
நீப்ப,
மின்றாவு முடலாதி நல்கு மிருமாயை யிருவினைகட்கேது,
வென்றோது கருமமிவை நிகழ்த்து திரோதமு மெனும் ஐவகைப்
பாசத்தை''. தழுவக் குழைந்த 61

என காஞ்சி புராணத்தும் வருவன காண்க.

மலங்கள் ஐந்தனுள் ஆணவமலம் என்பது எண்ணிறந்த சத்திகளான் எண்ணிறந்த உயிர்களிலுஞ் செம்பிற் களிம்பு போல அநாதியே விரவி நிற்ப தொன்றாய்க் கேவலத்தில் ஆவரசக்தியானுஞ் சகலத்தில் அதோ நியாமிகா சத்தியானும் அஞ்ஞான நிகழ்ச்சிக்குக் காரணமாய் நிற்பது. கன்மம் என்பது சதசத்தாற் செய்யப்படுதலின் அறம் பாவமென்று இருவகைத்தாய் இருவகைக்கும் உரிய பயன் தருதலாற் செயப்படுபொருளாகிய தனக்கு முதற் காரணம் உண்டென்பது காட்டி கான்மிய மலம் எனப்பட்டுப் பந்தமுறுத்துதலொப்புமையான் மும்மலத்துள் ஒன்றென எண்ணப்பட்டு நன்மை தீமையாகிய காரணவேதுவானும் இன்பத் துன்பமாகிய காரியவேதுவானும் அனுமித்தறியுமாறு நிற்பது. மாயை என்பது நித்தமாகியும் அருவமாகியும் ஒன்றாகியும் உலகம் உண்டாவதற்கு ஓர் வித்தாகியும் சடமாகியும் எங்கும் வியாபகமாகியும் முதல்வனுக்கோர் பரிக்கிரகசத்தியாகியும் புவன போகமும் தனுகரணமுமாக உயிர்களின் பொருட்டு விரிந்ததோர் மலமாகியும் உள்ள இலக்கணங்களையுடையது. மாயேயம் என்பது மாயையின் காரியங்களாகும். திரோதாயி என்பது உயிரோடு ஒன்றி நின்று மலங்களைத் தொழிற்படுத்தி பாகம் வருவிக்கும் மறைப்புச் சத்தி.

மத்துற பொருதயிரின் மலங்கள் ஐந்தாற் சுழல்வன் என்றது, மத்து மிகப் பொருந்தி அலைத்தலான் கரைந்து சுழலும் தயிரைப் போல ஆணவ முதலிய மலங்கள் ஐந்தால் சுழல்கின்றேனாயினேன் என்றவாறு. சுழல்வன் என்னும் எதிர்காலமுற்று சுழல்கின்றேனாயினேன் என நிகழ்காலப் பொருளில் வந்தது. இறைவனால் ஆட்கொள்ளப்பட்டும் சுழலும் நிலைமை உண்டாயது, அவ்விறைவன் பிரிவின் நீட்சி பற்றியாகும். உற என்பது மிகுதிப் பொருளில் வந்த உரிச்சொல்.

இதன் கண், ''மலங்களைந்தாற் சுழல்வன்'', ''விட்டிடுதி கண்டாய்'' என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலப்படுதல் காண்க.

134. மத்துறு தண்டயி ரிற்புலன் றீக்கது வக்கலங்கி
வித்துறு வேனை விடுதிகண் டாய்வெண் டலைமிலைச்சிக்
கொத்துறு போது மிலைந்து குடர்நெடு மாலைசுற்றித்
தத்துறு நீறுடன் ஆரச்செஞ் சாந்தணி சச்சையனே.

ப-ரை: வெண் தலை மிலைச்சி - வெண்மையான நகுசிரம் என்னும் தலையினைத் தலையிற் சூடி, கொத்து உறு போது மிலைந்து - கொத்துக் களாகப் பொருந்திய கொன்றை மலர் மாலையைச் சூடி, குடர்நெடு மாலை சுற்றி - குடர் போலும் நெடிய மாலையைக் கழுத்தைச் சுற்றித் தொங்க அணிந்து, தத்து உறு நீறுடன் - பரவப் பூசிய திருநீற்றுடன், செம் ஆர சாந்து அணி சச்சையனே - செஞ்சந்தனக் குழம்பை அணிந்த ஆராய்ந்தறியப்படுபவனே, புலன் தீ கதுவ - ஐம்புலன்களாகிய நெருப்புப் பற்றி வெதுப்ப, மத்து உறு தண் தயிரிற் கலங்கி - மத்தப் பொருந்திய குளிர்ந்த தயிரைப் போலக் கலங்கி, வித்து உறுவேனை விடுதி கண்டாய் - பிறவிக்கு வித்தாக உறுவேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடா தொழிதல் வேண்டும்.

வெண்டலை மாலை மிலைச்சி கொத்தாகப் பொருந்திய கொன்றை மலர் மாலையைச் சூடிக் குடர்நெடு மாலையைச் சுற்றித் தொங்க அணிந்து நீறுடன் செஞ்சாந்து அணிந்த சச்சையனே, புலன்களாகிய தீக்கதுவ மத்துறு தண் தயிரிற் கலங்கி பிறவிக்கு வித்தாக உறுவேனைக் கைவிடு கின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

புலன்றீக்கதுவ மத்துறு தண்டயிரிற் கலங்கி எனக் கூட்டுக.

"சித்தத்துள் ஐவர் தீய செய்வினை பலவுஞ் செய்ய
மத்துறு தயிரே போல மறுகுமென் னுள்ளந் தானும்" நாவு 52 : 9

"பொத்தார் குரம்பை புகுந்தைவர் நாளும் புகலழிப்ப
மத்தார் தயிரேபோன் மறுகுமென் சிந்தை" நாவு 96 : 3.

எனத் தேவாரத்தும் வருவன காண்க. புலனைத் தீ என்றது தீ தான் பற்றிய பொருளை எரிப்பது போலப் புலன் உயிரைக் கெடுத்தலின். "ஐவர் சங்கடம் பலவுஞ் செய்ய அழிப்பனாய் வாழமாட்டேன்", "ஐவர் வந்து முறைமுறை செய்ய அற்றநான் அலைந்து போனேன்" (தே. நாவு 52 : 2; 52 : 8) என வருவன காண்க. கதுவ - பற்றி அழிக்க எனினு மமையும். வித்துறுவேனை என்றது பிறவிக்கு வித்தாக உறுவேனை என்ற வாறு. பிறவிக்கு வித்தாதல் புலன்களின் வழிச் சென்று கீழ்மையடைதல்.

வெண்டலை - நகுசிரம். மிலைச்சி - தலையிற் சூடி. "நலம் பெறுசென்னி நாமுற மிலைச்சி" குறிஞ்சி 116. தாருகாவனத்து இருடிகள் தாம் செய்த ஆபிசார வேள்வியினின்றும் தோன்றிய வெண்டலையை இறைவனைக் கொல்லுமாறு ஏவுதலும் இறைவன் அதனைப் பிடித்து சடைமுடிக்கண் வைத்து நின் செயலினைப் புரிதி யென்றனன். அவ்வளவில் அதன் ஆற்றல் கெட்டது. இதனை,

"சீற்றமா முனிவர் வேள்வித் தீயில் வெண்டலைதான் ஒன்று
தோற்றியே யுலகம் யாவுந் தொலைய நக் கெழுந்த தன்றே"

தக்ஷி 108

"நக்கெழு சிரத்தை யன்னார் நாதன்மேல் விடுத்த லோடும்
அக்கணம் அணுக வற்றால் அகிலம திறவா வண்ணம்
முக்கணன் அருள்செய் தந்த முண்டமுண் டகக்கை பற்றிச்
செக்கரஞ் சடைமேற் கொண்டுன் செயலினைப் புரிதி யென்றான்"

தக்ஷி. 109.

எனக் கந்தபுராணத்து வருதலுமறிக.

"பின்றாழ் சடைமேல் நகுவெண்டலையா" ஞான 71 : 4

"செங்க ணரவு நகுவெண் டலையு முகிழ் வெண்டிங்களுந்
தங்கு சடையன்" ஞான 74 : 5

"புனையும் விரிகொன்றைக் கடவுள் புனல்பாய
நனையுஞ் சடைமே லோர் நகுவெண் டலை சூடி" ஞான 84 : 1

"நகுவெண் டலையர் நளிர் கங்கை தங்கு முடியர்" நாவு 8 : 7

"கிடந்த நீர்ச் சடைமிசைப் பிறையு மேங்கவே
கிடந்து தானகுதலைக் கெடில வாணரே" நாவு 10 : 8

"நஞ்சமா நாக நகுசிர மாலை நகுவெண்டலை
தஞ்சமா வாமுஞ் சரக்கறையோ வென்தனி நெஞ்சமே" நாவு 111 : 4

எனத் தேவாரத்தும் வருவன காண்க.

கொத்துறு போது மிலைந்து - கொத்தாகப் பொருந்திய கொன்றை மாலையைச் சூடி. "கொத்தினிற் பொலி கொன்றை கொடுக்கிலே" "கொந்தணவு நறுங்கொன்றை மாலையானை" (நாவு 152 : 2; 259 : 10) தேவாரத்தும், "கொந்தார் நறுங் கொன்றைக் கூத்தன்" (276) எனத் திருக்கோவையாரினும் வருவன காண்க. மிலைதல் - சூடுதல் "பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்" (44) என்னும் திருமுருகாற்றுப்படையினுங் காண்க.

கழுத்திலணிந்து மார்பில் தொங்கும் மாலை குடர்போல் நெடிதாயிருத்தலின் 'குடர் நெடுமாலை' என்றார். இனி, சர்வசங்கார காரணன் தானே என்பது போதர தன்னால் அழிக்கப்பட்ட தேவத் தலைவர்களது எலும்பு தலையோடுகளை அணிவது போலக் குடரையும் அணிந்தான் எனக் கொள்ளுதலுமொன்று. தத்துதல் - பாய்தல், பரத்தல். "தத்தரி நெடுங்கட் டன் மகள்" (மணி 2 : 7) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க தத்துறு நீறு - பரவப் பூசப்பட்ட நீறு. "மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த

மேனியான்", "வெயிலாய சோதி விளங்கு நீற்றர்" (நாவு 5 : 1; 264 : 1) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. இனி, தத்து நீறு - ஒளி வீசுகின்ற நீறுமாம். "ஒளி நீறு பூசும் ஒருவர் போலும்" (தே நாவு 302 : 4) என வருதலுங் காண்க. தத்துதல் - வீசுதல் சீவக 144 நச்.

ஆரச் செஞ்சாந்து - செஞ்சந்தனக் குழம்பு. "தாளி யறுகினர் சந்தனச் சாந்தினர்" (அன்னைப் 8) என அடிகள் அருளியமையுங் காண்க. நீறுடன் செஞ்சாந்தணிந்தமை இறைவனது மாதொரு கூறனும் நிலையை குறிப்பித் புலப்படுத்தலும் காண்க. "பால் வெள்ளை நீறும் பசுஞ் சாந்தும் பைங்கிளியுஞ், சூலமுந் தொக்க வளையு முடைத்தொன்மைக், கோலமே நோக்கி" (கோத் 18) என வருதலும் காண்க.

சர்ச்சை என்னும் வடமொழிச் சொல் சச்சையெனத் திரிந்தது. சர்ச்சை - ஆராய்வு. சர்ச்சையன் - ஆராய்ந்தறியப்படுபவன். இறைவன் கருதலளவையால் ஒருவாறு ஆராய்ந்தறியப்படுபவனுதலால் சர்ச்சையன் என்றார். "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா சுடர் விட்டுள னெங்கள் சோதி" (தே 312:5) எனத் திருஞானசம்பந்த சுவாமிகளும் அருளியமையான் இறைவனை ஆராய்ந்தறிவதற்கு ஏதுக்களும் எடுத்த மொழியுமுடைய கருதலளவை உரியதாதலை எதிர் மறை முகத்தால் அங்கீகரித்தருளினர். "அருளினல் ஆகமத்தே அறியலாம் அளவினுலும் தெருளலாஞ் சிவனை" (சிவஞான சித்தி பாயிரம்) என வருதலுங் காண்க.

வெண்டலை மிலேச்சுதல், கொத்தறு போது மிலேதல், குடர்நெடு மாலை சுற்றுதல், தத்துறு நீறு அணிதல், ஆரச் செஞ்சாந்தணிதல் என்று ஈண்டுக் கூறப்பட்டனவன்றிப் புலித்தோலுடுத்தல், ஆனைத் தோல் போர்த்தல், பாம்பணிதல், நஞ்சுண்டல், பிறையணிதல், கபாலத்தைக் கோடல், எலும்பணிதல், தலையோட்டு மாலை தரித்தல், மயிர்க் கயிறு தரித்தல் முதலாக இறைவனிடத்து நிகழ்வனவாக அறியும் இயல்புகளை ஆராயும் போது இறைவன் விருப்பு வெறுப்பில்லாதவன் என்பதும், முழு முதலாயுள்ளவன் என்பதும், சர்வ வல்லமையுள்ளவன் என்பதும், பேரருளாளன் என்பதும் முதலான இயல்புகள் புலப்படுதலின் ஆராய்ந்தறியப்படுவோன் எனப் பொருள் கொள்ளுதல் பொருந்துமாறு காண்க. சச்சையன் என்பதற்கு இங்ஙனம் பொருள் கொள்ளாமல் சத்து, சத்தா என்ருகி ஆவீறு ஐயாகும் என்னும் விதிபற்றி சத்தை என்ருகிப் பின்னர், வித்தை விச்சையென்று வந்தது போல சத்தை சச்சையெனப் பொருள் கூறுதல் பெரிதும் இடர்ப்பாடுடைத்தாகும். சச்சையன் என்பதற்கு உண்மைப் பொருளாயுள்ளவன் என்பது பொருள்.

இதன் கண், புலன் தீக்கதுவக் கலங்கி வித்துறுவேனை விடுதி கண்டாய் என்பதனுல் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 30.

135. சச்சைய னேமிக்க தண்புனல் விண்கால் நிலம்நெருப்பாம்
விச்சைய னேவிட் டிடுதிகண் டாய்வெளி யாய்கரியாய்
பச்சைய னேசெய்ய மேனிய னேயொண் படவரவக்
கச்சைய னேகடந் தாய்தடந் தாள அடற்கரியே.

ப-ரை: சச்சையனே - ஆராய்ந்தறியப்படுபவனே, மிக்க தண் புனல் விண் கால் நிலம் நெருப்பாம் விச்சையனே - மிகுந்த குளிர்ந்த நீரும் வானும் காற்றும் நிலமும் நெருப்புமாகிய ஐம்பூதங்களிடத்தும் வியாபித்து நின்ற வியக்கத்தக்கவனே, வெளியாய் கரியாய் பச்சையனே செய்ய மேனியனே - வெண்ணிற முடையவனே, கருநிறமுடையவனே, பச்சை நிறமுடைய வனே, செந்நிறமுடைய திருமேனியையுடையவனே, ஒண் பட அரவ கச்சையனே - ஒளி பொருந்திய படத்தையுடைய பாம்பாகிய கச்சையை யுடையவனே, தட தாள அடல் கரிகடந்தாய் - பெரிய கால்களையுடைய வலிய கயாசுரன் என்னும் யானையைக் கொன்று வெற்றி கொண்டவனே, விட்டிடுதி கண்டாய் - என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடா தொழிதல் வேண்டும் என்பதாம்.

சச்சையனே, புனல் விண் கால் நிலம் நெருப்பாம் விச்சையனே, வெண்மை கருமை பசுமை செம்மை ஆகிய நிறங்களையுடைய திருமேனியை யுடையவனே, அரவக் கச்சையனே, கயாசுரன் என்னும் யானையைக் கொன்று வெற்றி கொண்டவனே, என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

மிக்க தண்புனல் என மிகுதியும் தண்மையுமாகிய நீரின் பொதுக் குணமும் சிறப்புக் குணமும் கூறப்பட்டமையால் இவ்வாறே விண் கால் நிலம் நெருப்புக்களிலும் அவ்வவற்றின் பொதுக் குணம் சிறப்புக் குணங் களை விரித்துக் கொள்க. விண் கால் நெருப்பு புனல் நிலம் எனத் தோற்ற முறைபற்றியாவது நிலம் புனல் நெருப்பு கால் விண் என ஒடுக்க முறை பற்றியாவது கூறாது புனல் விண் கால் நிலம் நெருப்பு என முறை பிறழக் கூறினர், செய்யுளாதலின். இறைவன் ஐம்பூதங்களாயும் உள் ளான் என்பது,

"அலைகின்ற நீர் நிலம் காற்று அனல் அம்பரமாகி நின்றீர்"
நாவு 95 : 3.

"தோற்றந் தீயொடு நீர் நிலந் தூவெளி காற்றுமாகி நின்றான்"
நாவு 182 : 6.

"மண்ணவன் காண் தீயவன்காண் நீரானுன் காண் வந்தலைக்கும்
மாருதன் காண் மழை மேகஞ்சேர், விண்ணவன் காண்" நாவு 265 : 1.

"மண் இலங்குநீர் அனல் கால் வானுமாகி மற்றவற்றின்
குணமெல்லாமாய் நின்றாரும்" நாவு 272 : 5.

"நிலனாகி நெருப்பாய் நீராய் நிறைகாலாய் இவையிற்றின் நியமாகி"
நாவு 239 : 6.

எனத் தேவாரத்து வருவனவற்றாலு மறிக. ஒருவனே பல்வேறு இயல்புகளையுடையனாதல் வியப்புக்குரிய தாகலின் விச்சையனே என்றார். வித்தை - விச்சை என்றாயிற்று.

இறைவனுடைய ஈசானம் முதலிய திருமுகங்கள் ஐந்தனுள் ஈசானம் பசுமையும் வெண்மையும், தற்புருஷம் பொன்மையும், அகோரம் கருமையும், வாமதேவம் செம்மையும், சத்தியோசாதம் நல்ல வெண்மையுமுடைமையின், "வெளியாய் கரியாய் பச்சையனே செய்யமேனியனே" என்றார். ஈண்டுக்கூறிய நான்கு உபலட்சணத்தில் பொன்மையனே என்பதையும் சேர்த்துக்கொள்க. இனி, "புனல் விண் கால் நில நெருப்பாம் விச்சையனே" என்றமையால் புனலுக்கு வெண்மையும், விண்ணுக்குப் பசுமையும், காலுக்குக் கருமையும், நிலத்திற்குப் பொன்மையும், நெருப்பிற்குச் செம்மையும் கொள்ளப்படுதல்,

"மண் புனல் அனல் கால் வான்......வண் பொன்மை வெண்மை
செம்மை கறுப்பொடு தூமவன்னம்" சூத். 2 செய். 67

எனச் சிவஞானசித்தியாரிலும்,

"பொன் பார் புனல் வெண்மை பொங்கும் அனல் சிவப்பு
வன் கால் கருமை வளர் வான் தூமம் என்பார்" (5)

என உண்மை விளக்கத்தும் வருவனவற்றாலறியப்படுதலின் இப்பூதங்களிற் கலந்து நிற்கும் இறைவனுக்கு ஐந்து நிறங்களும் அமையுமாறு காண்க. நிறங்களோர் ஐந்துடையாய் (சிவபுராணம் 49) என அடிகள் அருளியவாறுங் காண்க.

இனி, இறைவன் திருவடி ஞானமுடையார்க்கு வெளியாயும் குறையுணர்வாகிய பசு அறிவும் பாச அறிவும் உடையார்க்கு வெளிப்படாமல் இருளாயுமிருத்தலின் "வெளியாய் கரியாய்" என்றார் எனக் கோடலுமொன்று. "ஊனக்கண் பாசம் உணராப்பதியை ஞானக்கண்ணினிற் சிந்தைநாடி" (சூத் 9) எனச் சிவஞான போதத்து வருதலுங் காண்க. பாதியாம் உமைதன்னோடும் பாகமாய் நின்ற இறைவனது இடப் பாகம் பச்சை நிறமுடையவனாகவும் வலப் பாகம் செம்மை நிறமுடையவனாகவும் விளங்குதலின் "பச்சையனே செய்ய மேனியனே" என்றார் எனலுமாம் "பச்சை நிறமுடையார் பாலர் சாலப்பழையர்" (நாவு 230 : 7) எனவும், "அயன் மாற்கரியொண்ணுச் செய்ய மேனியனே" (செத்திலாப் 1) எனவும் வருவன காண்க.

ஒண்பட அரவு என்புழி ஒண்மை படத்தின்கணுள்ள ஒளி பொருந்திய மணிக்கு ஆகு பெயர் எனக் கொள்ளினுமமையும். பட அரவு - நாகம். கச்சை - அரையில் அணியப்படும் வடம். அரவைக் கச்சாக அணிந்தமை

"புற்றரவக் கச்சார்த்த புனிதா", "பையரவக் கச்சையாய்" (நாவு 244 : 7; 312 : 3) எனத் தேவாரத்து வருதலாலுமறிக. இறைவன் அரவைக் கச்சாக அசைத்தமை குண்டலினி என்னும் சுத்தமாயையைத் தன்னுள் அடக்கி யிருத்தலைப் புலப்படுத்துவதாகும்.

கடத்தல் - வெல்லுதல். கடந்தாய் என்பது முன்னிலை வினைப்பெயர் விளியேற்று நின்றது. தடந்தாள அடற்கரி என்றது கஜன் என்னும் யானை வடிவையுடைய அசுரனை. தாள என்பதில் உடைமைப் பொருளில் வந்த அகரவுருபு ஒருமைக்கண் வந்தது. அடற்கரி கடந்தாய் என்பது இறைவனின் மறக்கருணையைப் புலப்படுத்தியது.

இதன் கண், விட்டிடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடா தொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 31.

136. அடற்கரி போலைம் புலன்களுக் கஞ்சி யழிந்தவென்னை
விடற்கரி யாய்விட் டிடுதிகண் டாய்விழுத் தொண்டர்க்கல்லால்
தொடற்கரி யாய்சுடர் மாமணி யேசுடு தீச்சுழலக்
கடற்கரி தாயெழு நஞ்சமு தாக்குங் கறைக்கண்டனே.

ப-ரை: விழு தொண்டர்க்கு அல்லால் தொடற்கு அரியாய் - சிறந்த மெய்யடியார்க்கன்றிப் பிறர்க்குப் பற்றுதற்கு அரியவனே, சுடர் மாமணியே - ஒளி விளங்கும் பெரிய மாணிக்கமே, சுடு தீ சுழல - சுடுமியல் பினையுடைய நெருப்பும் தன்னைக் கண்டு அஞ்சிச் சுழலும்படி, கடல் கரிதாய் எழு நஞ்சு அமுது ஆக்கும் கறை கண்டனே - திருப்பாற் கடலின் கண் கரிய நிறமுடைத்தாய் எழுந்த ஆலகால விடத்தை உணவாகக் கொண்டு மிடற்றில் தங்கச் செய்த அதனால் நஞ்சின் கறுப்புப் பொருந் திய திருமிடற்றையுடையவனே, அடல் கரிபோல் ஐம்புலன்களுக்கு அஞ்சி அழிந்த என்னை - கொல்லுதலையுடைய யானையைப் போன்ற ஐம் புலன்களுக்கும் அச்சமடைந்து நிலைகலங்கிய அடியேனை, விடற்கு அரி யாய் - விட்டு நீங்காதிருக்க வேண்டியவனே, என்னைக் கைவிடுகின் றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

விழுத்தொண்டர்க்கல்லால் பிறர்க்குப் பற்றுதற்கு அரியவனே, சுடர் மாமணியே, நஞ்சு அமுதாக்கும் கறைக்கண்டனே, வலிய யானை போன்ற ஐம்புலன்களுக்கு அஞ்சி மனமழிந்த என்னை விடற்கரியாய், கைவிடுகின் றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

அடற்கரி - கொல்லுதலையுடைய கரி, அடலேறு - கொல்லுதலையுடைய வேறு (கலி 102 : 31) என நச்சினார்க்கினியர் பொருளுரைத்தமையுங் காண்க. அடல் - வருத்துதலுமாம். கரிபோல் புலன் - யானையைப் போன்ற ஐம் புலன்கள். "வருங்கை யானை மதகளிறஞ்சு" (நாவு 159 : 8) என்றார் தேவாரத்தும். ஈண்டு புலன் என்றது ஐம்புலன்களை. போல் என்னும்

உவமவுருபு இடைச்சொல் போன்ற எனப் பெயரெச்சமாகி ஈறுகெட்டுப் பகுதி மாத்திரையாய் வினைத்தொகையாய் நின்றது. விடற்கருமை - விட்டு நீங்கமாட்டாமை. அதுபற்றி விடற்கரியாய் என்பதற்கு விட்டுநீங்காதிருக்க வேண்டியவனே எனப் பொருளுரைக்கப்பட்டது.

விழுத்தொண்டர் என்றது ஈண்டு அணுக்கன் தொண்டரை. தொடுதல் - மனத்தினுல் அணுதல். அரியாய் என்றது விழுத்தொண்டர்க்கன்றிப் பிறர்க்கு அணுகற்கரியாய் என்றவாறு. "நண்ணல் அரியாய் போற்றி", "சார்தற்கரியானை" (தே. நாவு 270 : 10; 276 : 1) என்னும் அருள்வாக்குகள் ஓர்க.

சுடுதீச் சுழல எழுநஞ்சு என்றது சுடுமியல்பினையுடைய நெருப்பும் தன் வெம்மைக்காற்ருது சுழல கடலின் கண் எழுந்த நஞ்சு என்றவாறு. இதனுல் நஞ்சுவேகங் கூறப்பட்டது.

"வரைதிரிதர அரவக டழலெழவரு நுரைதரு கடல்விடம்"
ஞான 125 : 3.

"கனத்தார் திரைமாண் டழற்கான்ற நஞ்சு" ஞான 155 : 10.

"கடல் கடைந்திடக் கனன்றெழுந்த விடம்" ஞான 229 : 10.

எனத் தேவாரத்தும் வருவன காண்க. இனி, தன் வேகம் எண்திசையையும் சுடுகின்ற தியாகச் சுழலும் வண்ணம் எழுந்த நஞ்சு எனினுமாம்.

"திருநெடுமால் நிறத்தை யடுவான் விசும்பு சுடுவான் எழுந்து விசை போய்ப் பெருகிட", "அண்டவர்கள் கடல் கடைய அதனுள் தோன்றி அதிர்ந்தெழுந்த ஆலாலம் வேலை ஞாலம், எண்டிசையும் சுடுகின்றவாற்றை" (தே. நாவு 14 : 1; 296 : 8) என வருவன காண்க. கடல் எழு, கரிதாய் எழு எனத் தனித்தனி இயையும். கடற்கண் எழு என ஏழாவது விரிக்க. கரிதாய் எழுவிடம் - கரிய நிறமுடைத்தாய் எழுந்த விடம். "வானவர் கடையக் கரிய நஞ்சது தோன்ற" (தே. ஞான 231 : 6) என வருதல் காண்க. அமுதாக்கல் - உணவாகக் கொள்ளல். "கனைகடற் செய்த நஞ்சுண்டு", "ஓங்குமொருவிட முண்டு அம்பலத்தும்பருய்ய வன்று தாங்குமொருவன்", "விண்ணோர் குழுவினையுய்ய நஞ்சுண்டு" (141; 158; 229) எனத் திருக்கோவையாரில் வருவன காண்க. கறை - கறுப்பு. உண்ட அக்கரிய நஞ்சினைக் கழுத்தின் கண் அடக்கிக் கொண்டு அந்நஞ்சின் கருமை புறத்தே தோன்றுமாறு செய்தமையின், "கறைக் கண்டன்" என்ருர். "கறைக் கண்டனுறை கோயில்", "கண்ணகத்தான் மனத்தான் சென்னியானெங் கறைக்கண்டனே" (நாவு 9 : 9; 112 : 6) எனத் தேவாரத்தும் வருவன காண்க.

இதன் கண், "ஐம்புலன்களுக்கஞ்சி யழிந்தவென்னை" விட்டிடுதி கண்டாய் என்றமையால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 32.

137. கண்டது செய்து கருணைமட் டுப்பரு கிக்களித்து
மிண்டுகின் றேனை விடுதிகண் டாய்நின் விரைமலர்த்தாள்
பண்டுதந் தாற்போற் பணித்துப் பணிசெயக் கூவித்தென்னைக்
கொண்டெனெந் தாய்களை யாய்களை யாய குதுகுதுப்பே.

ப-ரை: என் எந்தாய் - என் தந்தையே, கருணை மட்டு பருகி களித்து - நின் அருளாகிய தேனைப் பருகிச் செருக்குற்று, கண்டது செய்து மிண்டுகின்றேனை - மனத்திற் றோன்றியதைச் செய்து நெருங்கி வன்மொழி பேசுகின்றேனை விடுதி கண்டாய் - கைவிடுகின்றனையோ? கைவிடா தொழிதல் வேண்டும், நின் விரை மலர்தாள் - நின்னுடைய நறுமணம் பொருந்திய மலர்போலுந் திருவடிகளை, பண்டு தந்தால் போல் பணித்து - முன்னர் தந்தருளியது போலத் தந்தருளி, பணி செய கூவித்து - நின் திருத்தொண்டினைச் செய்யும்படி அணுக்கன் தொண்டரால் என்னை அழைப் பித்து, என்னை கொண்டு - என்னை ஏற்றுக்கொண்டு, களை ஆய குது குதுப்பு களையாய் - எனது வீடு பேற்றிற்கு இடையூறாயுள்ள ஆவலை நீக்கி யருள்வாயாக.

என் எந்தாய், நின் கருணையாகிய தேனைப் பருகிக் களித்து என் மனத்துத் தோன்றியதைச் செய்து மிண்டுகின்றேனைக் கைவிடுகின் றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். நின் திருவடிகளைப் பண்டு தந்தருளியது போலத் தந்தருளி நின் திருத்தொண்டினைச் செய்யும்படி என்னை அழைப்பித்து என்னை ஏற்றுக்கொண்டு எனது வீடு பேற்றிற்கு இடையூறாயுள்ள ஆவலை நீக்கியருள்வாயாக என்பதாம்.

கருணை மட்டுப் பருகிக் களித்துக் கண்டது செய்து மிண்டுகின்றேனை என மாறிக் கூட்டிப் பொருள் கொள்க. மட்டு - தேன். "கட்டு வடக் கழலினர் மட்டு மாலையர்" (பரி 12 : 24) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. கருணை மட்டு - கருணையாகிய தேன். "கருணை வான் தேன்" (திரு வண்ட 180) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமை காண்க. பருகி என்றார் மிகக் குடித்தமை தோன்ற. களித்து கண்டது செய்து என்றது திருவருட்டேனை மிகப் பருகியமையால் களித்து செய்வன தவிர்வன இன்னவென்று அறியாமல் மனத்தில் தோன்றியவற்றைச் செய்து என்ற வாறு. "உன் அருள் புரிந்தனை புரிதலுங் களித்துத் தலையினானடந் தேன் விடைப்பாகா" (செத் 3) என அடிகள் பிறிதோரிடத்து அருளிய மையும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. மிண்டுதல் - நெருங்கி வன் மொழி பேசுதல்.

"சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத் தொழும்பையு மீசற்கென்று
விரிப்பிப்ப னென்னை விடுதிகண் டாய்விடின் வெங்கரியின்
உரிப்பிச்சன் றோலுடைப் பிச்சனஞ் சூண்பிச்ச னூர்சுடுகாட்
டெரிப்பிச்ச னென்னையு மாளுடைப் பிச்சனென் றேசுவனே." நீத் 49

"சிறிதே கொடுமை பறைந்தேன்" சத 85

என அடிகள் அருளியமை காண்க.

விரை தாள் என இயைத்து நறுமணம் பொருந்திய திருவடியெனக் கொள்க.

"விரை சேர் சரண விகிர்தா போற்றி" போற்றி 105

"உன் விரையார் கழற்கு" சத 1

என அடிகள் அருளியமையுங் காண்க.

"வெண்ணெய்ப்பிரான் விரையார் கழல்" ஞான 144 : 4

"வீழிமிழலையான் விரையார் பாதம்" ஞான 132 : 11

"நறுமலராய் நாறும் மலர்ச் சேவடி" நாவு 119 : 8

எனத் தேவாரத்தும் வருவன காண்க. இனி, விரைமலர் எனக் கூட்டி நறுமணம் பொருந்திய மலர் எனினுமமையும். மலர்த்தாள் - மலர் போலுந் தாள். "அம்பலத்தோன் மலர்த்தாள்" திருக்கோவையார் 329. மலர் என்றது தாமரை மலரை.

பண்டு தந்தாற் போற் பணித்து என்றது ஆட்கொள்ளப்பட்டபோது நின்னால் தரப்பட்ட பின்னர்ப் பிரிக்கப்பட்ட திருவடிகளை மீட்டும் தந்து என்றவாறு. பணித்தல் - கொள்தல். கூவித்து என்பது கூவித்து எனப் பிறவினை விகுதி தொக்கு நின்றது. பணி செயக் கூவித்து என்றது நின்னைப் பிரிந்து வருத்தும் என்னை, நின் பணி செய்யும் அணுக்கன் தொண்டரால் அழைப்பித்து என்றவாறு. என்னைக் கொண்டு - என்னைப் பணி செய்தற்குரிய ஆளாக ஏற்றுக் கொண்டு. களையா குதுகுதுப்பு - நெற் பயிருக்கு இடையூறுகத் தோன்றும் களைப்புல் போல வீடு பேற்றிற்கு இடையூறுகத் தோன்றும் ஆவல். குதுகுதுப்பு - குதகலம் என்னும் வடசொற் பொருளைத் தரும் அடுக்குச் சொல். அன்றிக் குதூகலம் என்னும் சொல்லின் திரிபு எனலுமாம். "வெந்நாற்று வேசனை நாற்றங் குதுகுதுப்ப (பரி 20 : 13) என்புழி குதுகுதுப்ப - ஆசைப்படாநிற்ப பரிமேல.

இதன் கண், "கண்டது செய்து கருணைமட்டுப் பருகிக் களித்து மிண்டுகின்றேனை விடுதி கண்டாய்" என்பதனுல் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலப்படுதல் காண்க. 33.

138\. குதுகுதுப் பின்றிநின் றென்குறிப் பேசெய்து நின் குறிப்பில்
விதுவிதுப் பேனை விடுதிகண் டாய்விரை யார்ந்தினிய
மதுமதுப் போன்றென்னை வாழைப் பழத்தின் மனங்கனிவித்
தெதிர்வதெப் போது பயில்விக் கயிலைப் பரம்பரனே,

ப-ரை: கயிலைப் பரம்பரனே - திருக்கயிலையில் எழுந்தருளியிருக்கும் மேலானவற்றிற்கும் மேலானவனே, நின் குறிப்பில் குதுகுதுப்பு இன்றி நின்று - நின் திருவுள்ளக் குறிப்பின் வழி ஒழுகுவதில் ஆசைப்படுதலின்றி நின்று, என் குறிப்பே செய்து - என் உள்ளக் கருத்தின்படியே ஒழுகிக் கொண்டு, விதுவிதுப்பேனை விடுதி கண்டாய் - வீடகத்தே புகுந்திடுவான் விரைகின்றேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். என்னை வாழைப்பழத்தின் மனம் கனிவித்து - அடியேன் மனத்தை வாழைப்பழத்தைப் போல முழுவதும் நெகிழச் செய்து, விரை ஆர்ந்து இனிய மது மது போன்று - நறுமணம் நிறைந்து இனிய மகரந்தத்தோடு கூடிய பூவின் தேன் ஒழுக்குப் போன்று, என்னை எதிர்வது எப்போது - எனக்கு எதிர்வந்து காட்சியளிப்பது எப்பொழுது, பயில்வி - குறிப்பினால் அருள் செய்க.

கயிலைப் பரம்பரனே, நின் திருவுள்ளக் குறிப்பின்வழி ஒழுகுவதில் ஆவலின்றி நின்று என் உள்ளக் கருத்தின்வழி ஒழுகிக்கொண்டு வீட்டகத்தே புகுந்திடுவான் விரைகின்றேனை கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். வாழைப்பழத்தினைப் போல அடியேன் மனத்தினைக் கனிவித்து, விரையார்ந்து இனிய மதுமதுப் போன்று எனக்கு எதிர்வந்து காட்சியளிப்பது எப்பொழுது? குறிப்பினால் அருள் செய்க என்பதாம்.

குதுகுதுப்பு - ஆசைப்படுதல். நின் குறிப்பில் குதுகுதுப்பில் நின்று என மாறிக் கூட்டிப் பொருள் கொள்க. விதுவிதுப்பு - மிக்க விரைவு. ஈண்டு நின் திருவுளக் குறிப்பின்வழி ஒழுகாது தன் விருப்பப்படி ஒழுகிக்கொண்டு வீடகத்தே புகுந்திட மிக விரைதலை,

"நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்" சத 11

என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க.

விரையார்ந்து இனிய மதுமதுப் போன்று என்னும் உவமையை இறைவனுக்குக் கூறியது தெய்வத் திருமணமும் இனிமையும் அழகும் செந்நிறமும் பற்றியாகும். விரை - மணம். மது இரண்டனுள் முன்னது மகரந்தம் பொருந்திய பூவை உணர்த்தியது. பின்னது தேனை உணர்த்தியது. "மதுவுங் கிழங்கு மருந்தி யிருந்து எம்மொடு" (திருக்கோவை 127) என்புழிப்போல. தேனொழுக்குப் போன்று இடையீடின்றிக் காட்சியளிக்க வேண்டும் என்பார், "மதுப்போன்று எதிர்வது" என்றார். எதிர்வது - எதிர்தல். தொழிற் பெயர்.

என்னை என்னும் இரண்டாவது நான்காவதன் பொருளில் வந்தது. வாழைப்பழத்தின் மனங்கனிவித்து என்றது வித்தில்லாத வாழைப்பழத்தைப் போல என் கல்லியன் மனத்தினை முழுவதும் கனிவித்து என்றவாறு. "கல்லியல் மனத்தைக் கசிவித்துக் கழலடி காட்டி" சுந் 67 - 5

மனம் கனிவித்து என்ருர், தானே மனம் கனியாமையின். நின் குறிப்பில் குதுகுதுப்பின்றி நின்று என் குறிப்பே செய்து என்பதும் இதனைப் புலப்படுத்துவதாகும். மனம் கனிந்து அன்பனுகிய நிலையில் இறைவன் காட்சியளித்தலின் மனங் கனிவித்து எதிர்வது என்ருர். பயில் - குறிப்பு. பயில்வி - குறிப்பித் தருளுக; என்றது குறிப்பினுல் அருள் செய்க என்றபடி. இனிப் பயில்வி என்பதனைக் கயிலைக்கு விசேடணமாக்கி செறிந்த சிறப்பினையுடைய எனவும், பயில் வீ என்பது பயில் வி எனக் குறுகி நின்றது எனக் கொண்டு நெருங்கிய பூக்களையுடைய எனவும் உரைப்பாருமுளர். இறைவனுக்குக் கயிலை சிறந்த தலமாதலின் 'கயிலைப் பரம்பரனே' என்ருர். ''தில்லைத்தொல்லோன் கயிலை'', ''மாணிக்கக் கூத்தன் வடவான் கயிலை'' எனத் திருக்கோவையாரினும் 22, 23 வருவன காண்க. மிக்க மேலோனுதலின் இறைவனைப் பரம்பரனே என்ருர். ''படிதானில்லாப் பரம்பரனே'' (ஆசைப் 9) என வந்தமையுங் காண்க.

இதன் கண், 'குதுகுதுப்பின்றி நின்றென் குறிப்பே செய்து நின் குறிப்பில் விதுவிதுப்பேனை விடுதி கண்டாய்' என்பதனுல் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலப்படுதல் காண்க. 34.

139. பரம்பர னேநின் பழவடி யாரொடு மென்படிறு
விரும்பர னேவிட் டிடுதிகண் டாய்மென் முயற்கறையின்
அரும்பர நேர்வைத் தணிந்தாய் பிறவியை வாயரவம்
பொரும்பெரு மான்வினை யேன்மன மஞ்சிப் பொதும்புறவே.

ப-ரை : மெல் முயல் கறையின் அரும்பு அர நேர் வைத்து அணிந்தாய் - மென்மையாகிய முயற்களங்கத்தையுடைய திங்களின் அரும்பு போன்ற பிறையைப் பாம்பினுக்கு நேராக வைத்துச் சடையில் அணிந்தவனே, பெருமான் - சிவபெருமானே, பிறவி ஐ வாய் அரவம் - பிறவித் துன்பமாகிய ஐந்து வாய்களையுடைய பாம்பு, வினையேன் மனம் அஞ்சி பொதும்பு உற பொரும் - பிராரத்தவினையுடையேனது உள்ளம் அச்சம் அடைந்து உட்டுளை பொருந்தும்படி தாக்கி விடத்தைக் கக்குகின்றது. பரம்பரனே - மிகமேலோனே, நின் பழ அடியொரொடும் என் படிறு விரும்பு அரனே - நின்னுடைய பழமையான அடியவர்களது மெய்யடிமையோடு எனது பொய்யடிமையினையும் ஒப்ப விரும்பி ஏற்றுக்கொண்ட சங்கார காரணனே, விட்டிடுதி கண்டாய் - என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

முயற்கறையினையுடைய திங்களின் அரும்பு போன்ற பிறையைப் பாம்பினுக்கு நேராய் வைத்து அணிந்தவனே, பெருமானே, பிறவித்துன்பமாகிய ஐவா யரவம் வினையேன் மனம் அஞ்சிப் பொதும்பு உறும்படி பொரும்பரம்பரனே, நின்பழவடியார் மெய்யடிமையோடு பொய்யடிமை

யினையும் ஒப்ப விரும்பி ஏற்றுக்கொண்ட அரனே, என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

என்படிறு எனப் பின்வருதலின் பழவடியாரொடும் என்பதற்குப் பழவடியார்களது மெய்யடிமையோடு என உரைக்கப்பட்டது. படிறு என்பது ஈண்டு பொய்யடிமை. படிறும் என உம்மை விரிக்க. அரன் - மும்மலங்களை அழிப்பவன்: மேல் என்னும் அடை முயலுக்கும் பிறைக்கும் பொருந்தும். முயற்கறை - முயல்போலும் களங்கம். அது உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய் திங்களை உணர்த்தியது. அரும்பு - முகிழ். முகிழ் போன்ற முதிரா இளம் பிறையை "முகிழ் வெண் டிங்களுந் தங்கு சடையன்" (ஞான 74;5) எனத் தேவாரத்தும் வருதல் காண்க. அரா, அர எனக் குறுகிற்று. "குரு மணிசேர் அர வைத்தார் கோலம் வைத்தார்" (தே நாவு 227 : 8) என் புழிப்போல். நேர் - எதிர். திங்களுக்குப் பாம்பு எதிர் எனக் கோடல் சோதிட நூல் வழக்கு. நேர் வைத்து அணிதல் - எதிரானவற்றை ஒருங்கு வைத்து அணிதல்.

"பாம்பொடு திங்கள் பகை தீர்த்தாண்டாய்" நாவு 312 : 2.

"வெண் திங்கள் பற்றிப் பாம்புடன் வைத்த பராபரன்" நாவு 185 : 9.

"முடிக்கொண்டார் முளையிள வெண் திங்களோடு
மூசும் இளநாகம் உடனாகக் கொண்டார்" நாவு 309 : 3.

எனத் தேவாரத்து வருதலும்

"அரவும் பிறையும் அணியுறக் கொண்டவன் - பிறைக்குப் பகையாகிய
அரவையும் பிறையையும் அழகுறத் தனக்கு அணியாகக்
கொண்டவன்" — திருக்கோவையார் 359 பேர்.

"மாமதியின் அயல் வந்த ஆடர வாட வைத்தோன் - ஏதங்குறித்து
வந்த ஆடரவைப் பெருமையையுடைய பிறையின் பக்கத்து
அதனை வருத்தாமற் செய்து ஆடவைத்தவனது"
— திருக்கோவையார் 381 பேர்

"அழலவிர் சோதி முழுவெயி லெறிப்ப
இளநிலா வெறிக்குங் குளிர்மதிக் குழவியும்
வெஞ்சினம் பொதிந்த நஞ்சுமிழ்ப் பகுவாய்
வெள்ளைமுள் ளெயிற்றுப் பிள்ளைவா ளரவும்
ஒண்டிரை கொழிக்குந் திம்புனற் கங்கைத்
தண்டிறை மருங்கிற் றனிவிளை யாட
உடன்வைத் தாற்றிய படர்சடைக் கடவுள்"
திருவாரூர் நான்மணிமாலை 21 : 1-7

எனவும் வருவன காண்க.

பிராரத்தவினை உள்ளவரையும் பிறவித் துன்பம் உளதாகலின் அத் துன்பத்தின் கொடுமை நோக்கி அதனை ஐவா யரவம் என உருவகஞ் செய்தார். பிறவித் துன்பம் உளதாதற்கு ஐம்பொறிகளும் ஐம்புலன்களும் ஏதுவாகலின் அதற்கு இயைய அரவத்திற்கும் ஐந்து வாயைக் கூறுவாராயினர். ''ஐவா யரவணை'', 'ஐந்தலைய மாசுணம்'' (நாவு 74 : 10; 226 : 3) எனத் தேவாரத்தும் வருவன காண்க. அரவம் பொருதல் - அரவம் தாக்கி விடம் கக்குதல். பொதும்புறல் என்றது அரவம் பொருதலினாலே உள்ளே பொந்து உடைத்தாதல்; என்றது மனம் உள்ளீடின்றித் தன்னிலைமை கெடுதல்.

இதன் கண், ''வினையேன் மனம் அஞ்சிப்பொதும்புற பிறவி ஐவாயரவம் பொரும்; நின்பழவடியாரொடும் என்படிறு விரும்பும் அரனே, விட்டிடுதி கண்டாய்'' என்பவற்றால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலனாதல் காண்க. 35

140. பொதும்புறு தீப்போற் புகைந்தெரி யப்புலன் தீக்கதுவ
வெதும்புறு வேனை விடுதிகண் டாய்விரை யார்நறவந்
ததும்புமந் தாரத்திற் றாரம் பயின்றுமந் தம்முரல்வண்
டதும்புங் கொழுந்தே னவிர்சடை வானத் தடலரசே.

ப-ரை: விரை ஆர் நறவம் ததும்பும் மந்தாரத்தில் - நறுமணம் பொருந்திய தேன் நிறைந்த மந்தார மலரின்கண், தாரம் பயின்று மந்தம் முரல் வண்டு - எடுத்த விசையைப் பாடிப் பின் படுத்த விசையை ஒலிக்கும் வண்டுகளும், அதும்பும் கொழும் தேன் - அவற்றைக் கண்டு ஒதுங்கும் கொழுவிய தேனீக்களும் பொருந்திய, அவிர்சடை வானத்து அடல் அரசே - விளங்கும் சடைமுடியினையுடைய சிதாகாயத்தின் கண் தங்கிய வரம்பிலாற்றலையுடைய அரசனே, பொதும்பு உறு தீ போல் புகைந்து எரி - மரப்பொந்திற் பொருந்திய நெருப்பைப் போலப் புகைந்து எரிகின்ற, அப்புலன் தீ கதுவ - அப்புலன்களாகிய நெருப்புப் பற்றிக் கொள்ள, வெதும்புறுவேனை விடுதி கண்டாய் - வெதும்புகின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

வானத்தடலரசே! ஐம்புலன்களாகிய நெருப்புப் பற்றிக் கொள்ள வெதும்புகின்றவனாகிய என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

பொதும்பு - மரப்பொந்து. பொதும்புறு தீப் போல் புகைந்தெரி என்றது மரப்பொந்தினுள்ளே பற்றிய நெருப்பு அப்பொந்தின் வழியாகப் புகைந்து கொண்டு எரிவது போலப் புகைந்து எரிகின்ற என்றவாறு. எரி தீ என இயையும். அப்புலன் தீக் கதுவ என்புழி அ என்பது பண்டறி சுட்டாய் ஐம்புலன்களின் தீமையையுணர்த்தியது 'ஐவர் தீய செய்வினை பலவுஞ் செய்ய'', ''ஐவர் வந்து முறை முறை துயரஞ் செய்ய''

(நாவு 52 : 9 ; 52 : 8) எனத் தேவாரத்தும் வருவன காண்க. "பிறவி ஐவாயரவம் பொரும்......மனம் அஞ்சிப் பொதும்புறவே" (நீத் : 35) என முன்னர்த் திருப்பாட்டிற் கூறினமையால் அப்பொதும்பில் ஐம்புலன் தீக் கதுவலின் வெறும்புகின்றேனை என்றார்.

மந்தாரம் என்பது முதலிற் கூறும் சினையறி கிளவியாய் (தொல் வேற். மயங்கு 31) மந்தார மலரை உணர்த்தியது. மந்தார மலரின் கண் வண்டுந் தேனும் தங்கிய சடை என்க. தாரம் - உச்சவிசை; மந்தம் - மந்த ஓசை. "மந்தம் முழவுங் குழலு மியம்பும்" (தே. சுந் 4 : 10) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. வண்டு மந்தம் முரலல், "வண்டு மந்தம் மலி யம்பர்" (ஞான 83 : 4) எனத் தேவாரத்தும் வருதல் காண்க. வண்டு தாரம் மந்தம் என்னும் இசைவேறுபாடுகளை இசைப்பதாகக் கூறுவது கவி மரபு. 'காரடைந்த சோலை சூழ்ந்து காமரம் வண்டிசைப்ப", "சேருடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு சிவந்த வண்டு வேறாய உருவாகிச் செவ்வழிநற் பண்பாடு மிழலை' (தே. ஞான 47 : 3; 132 : 7) என வருவன காண்க. அதும்புதல் - ஒதுங்குதல். என்றது தாரம் மந்தம் இசைக்கும் ஆண் வண்டினைக் கண்டு அதற்கு முன் அம்மலரில் படிந்துள்ள கொழுத்த பெண் தேனீ ஒதுங்குமென்க. வானம் - சிதாகாயம். அடல் - வரம்பிலாற்றல். அரசு - இறைவன்.

இதன் கண், புலன் தீக்கதுவ வெதும்புறுவேனை விடுதிகண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலனாதல் காண்க. 36.

141. அரைசே யறியாச் சிறியேன் பிழைக்கஞ்ச லென்னினல்லால்
விரைசேர் முடியாய் விடுதிகண் டாய்வெண் ணகைக் கருங்கட்
டிரைசேர் மடந்தை மணந்த திருப்பொற் பாதப்புயங்கா
வரைசேர்ந் தடர்ந்தென்ன வல்வினை தான்வந் தடர்வனவே.

ப-ரை : வெள் நகை கரு கண் திரை சேர் மடந்தை மணந்த - வெள்ளிய எயிற்றினையும் கரிய கண்ணினையுமுடைய திரை பொருந்திய கங்கையைத் திருமணஞ் செய்தருளிய, திரு பொன் பாத புயங்கா - கண்டாரால் விரும்பப்படும் அழகினையுடைய பொன்போலும் திருவடியை யுடைய அரவாபரணனே, விரை சேர் முடியாய் - நறுமணம் பொருந்திய சடைமுடியையுடையவனே, வரை சேர்ந்து அடர்ந்து என்ன - மலைகள் பல சேர்ந்து நெருங்கினாற் போல, வல்வினை வந்து அடர்வன - வலிய பிராரத்தவினைகள் திரண்டு வந்து நெருங்குகின்றன. ஆகையால், அரைசே - இறைவனே, அறியா சிறியேன் பிழைக்கு - அறியவேண்டியதை அறியாத சிறுமையுடையேனது குற்றத்தினை நீக்குதற்கு, அஞ்சல் என்னின் - அஞ்சற்கவென்று நீ கூறியருளின், அதுவே அமையும், அல்லால் விடுதி

கண்டாய் - அங்ஙனம் கூறியருளாது என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

திரைசேர் மடந்தை மணந்த புயங்கா, விரைசேர் முடியாய், மலைகள் வந்து நெருங்கினாற் போல வலிய வினைகள் வந்து நெருங்குகின்றன. ஆகையால் அறியாச் சிறியேன் பிழைக்கு அஞ்சல் எனின் அதுவே அமையும். அங்ஙனம் கூறியருளாது என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

அரசே என்பது எதுகை நோக்கி அரைசே என நின்றது. அறியாச் சிறியேன் என்பதற்குச் செய்யவேண்டியதை அறியாச் சிறியேன் எனினுமாம். "செய்வதறியாச் சிறுநாயேன்" (சத 52) என பிறுண்டும் அடிகள் அருளியமை காண்க. பிழைக்கு என்பது பிழையை நீக்குதற்கு என்னும் பொருளில் வந்தது; அஞ்சேல் எனின் அல்லால் என்பதற்கு அஞ்சற்க என்று கூறியருளின் அதுவே அமையும். அங்ஙனம் கூறுமல் என ஆற்றலாற் சில சொற்கள் வருவித்துரைக்கப்பட்டன.

விரை சேர் முடி - குரவும் கொன்றையும் கூவிளமும் ஆத்தியும் முதலாகிய நறுமணம் பொருந்திய பூக்களையுடைய முடி. வெண்ணகையினையும் கருங்கண்ணினையுமுடைய மடந்தை என்றது கங்கையை. கங்கையைப் பெண்ணாகக் கூறல், "விரிதிரையின் நாரிக் களிக்கமர், நன்மாச் சடைமுடி நம்பர்" 265 என்னும் திருக்கோவையாரினுங் காண்க. திரைசேர் மடந்தை மணந்த புயங்கா எனக் கூட்டிக் கங்கையை மணந்த இறைவனே எனவுரைக்க.

"படலொலி திரைகள் மோதிய கங்கைத் தலைவனார்" ஞான 376 : 1

"கன்னியார் கங்கைத் தலைவா போற்றி" நாவு 270 : 5

"வண்டார் குழலி யுமைநங்கை பங்கா கங்கை மணவாளா."
சுந் 52:7

எனத் தேவாரத்தும் வருவன காண்க. திரைசேர் மடந்தை மணந்த என்பது பாற்கடற்கண் எழு செல்வியாகிய திருமகள் வணங்கிப் பொருந்திய என்பாரும் உளர்.

திருப்பாதம் பொற்பாதம் எனத் தனித்தனி இயையும், "குழகனார் திருப்பாதமே", "அத்தா உன் பொற்பாதம்" (நாவு 170 : 4; 275 : 1) எனத் தேவாரத்தும் வருவன காண்க. திரு - கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் என்றது அழகு. புயங்கம் - பாம்பு, புயங்கா - பாம்பினை ஆபரணமாக அணிந்தவனே. வரை சேர்ந்து அடர்ந்தென்ன என உவமை கூறியது வலிய பிராரத்தவினைகள் தம்மை வந்து நெருங்குவதாலுண்டாகும் துன்ப மிகுதியை உணர்த்துவதற் பொருட்டாகும். அடர்

தல் - நெருங்குதல். அடர்ந்தாலென்ன என்பது அடர்ந்தென்ன எனக் குறைந்து நின்றது. வல்வினை சாதியொருமையாகலின் தான் என்னும் ஒருமையசை பெற்றது.

இதன் கண், வல்வினைதான் வந்து அடர்வன, அறியாச் சிறியேன் பிழைக்கஞ்சலெனின் அல்லால் விடுதி கண்டாய் என்பவற்றால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 37.

142. அடர்புல னால்நிற் பிரிந்தஞ்சி அஞ்சொல்நல் லாரவர்தம்
விடர்விட லேனை விடுதிகண் டாய்விரிந் தேயெரியுஞ்
சுடரனை யாய்சுடு காட்டர சேதொழும் பர்க்கமுதே
தொடர்வரி யாய்தமி யேன்தனி நீக்குந் தனித்துணையே

ப-ரை: விரிந்து எரியும் சுடர் அனையாய் - எங்கும் பரந்து சுவாலித் தெரிகின்ற தீப்பிழம்பு போன்றவனே, சுடு காட்டு அரசே - எல்லாம் ஒடுங்கும் இடமாகிய சுடுகாட்டுக்கு அரசனே, தொழும்பர்க்கு அமுதே - மெய்த்தொண்டர்களுக்கு அமுதம் போன்றவனே, தொடர்வு அரியாய் - பசுஞான பாசஞானங்களால் எவரும் தொடர்ந்து அறிதற்கு அரியவனே, தமியேன் தனி நீக்கும் தனி துணையே - துணையிலாதேனது தனிமையை நீக்கியருளும் ஒப்பற்ற துணையாகவுள்ளவனே, நின் பிரிந்து - நின்னைப் பிரிந்து, அடர் புலனால் அஞ்சி - என்னை வருத்துகின்ற ஐம்புலன்களுக்கு அஞ்சி, அம் சொல் நல்லார் அவர்தம் விடர் விடலேனை - அழகிய சொற்களையுடைய மகளிராகிய அவர்களுடைய முழைஞ்சு போன்ற புழையினை விட்டு நீங்கும் ஆற்றலில்லாத என்னை, விடுதி கண்டாய் - கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

விரிந்தே யெரியுஞ் சுடரனையாய், சுடுகாட்டரசே, தொழும்பர்க் கமுதே, தொடர்வரியாய் தமியேனது தனிமையை நீக்கும் தனித் துணையா யுள்ளவனே, நின்னைப் பிரிந்து ஐம்புலன்களுக்கு அஞ்சி அஞ்சொல் நல்லாராகிய அவர்களுடைய விடர்விடலேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

அடர்புலன் - வருத்துகின்ற ஐப்புலன், "அடர்புலன் போக்கற்றோர்க்கும்" (கோயிற் புரா. பாயிரம் 18) புலனால் - புலனுக்கு. புலனுக்கு அஞ்சி என இயையும். "அடற்கரி போல் ஐம்புலனுக்கஞ்சி" (நீத் 32) எனப் போந்தவாறுங் காண்க. அஞ்சொல் நல்லார் - இனிமை பயக்கும் சொல்லையுடைய மகளிர். அஞ்சொல் என்றாராயினும் கயற்கண், பணைத்த கொங்கை, நுண்ணிடை, பஞ்சின் மெல்லடி முதலாயினவுங் கொள்க. "கயலார் தடங்கண் அஞ்சொனல்லார்", "பஞ்சியாரு மெல்லடிப் பணைத்த கொங்கை நுண்ணிடை அஞ்சொலார்." (ஞான 63 : 2; 237 : 4) எனத்

தேவாரத்து வருவன காண்க. விடர் - முழைஞ்சு "விடர்வரை" கலி 45 : 17 வெடிப்பு எனினுமாம். நல்லார் அவர் தம் விடர் - மகளிராகிய அவர்களுடைய விடர் போலும் புழை, நல்லார் அவர் எனச் சுட்டியது அஞ்சொல்லும் நல்லியல்பும் உடையராயினும் அவர்தம் இழிவரலையுணர்த்தும் பொருட்டாகும். "அஞ்சொல் நல்லார்தம் விடர்விடலேனை" என அடிகள் தம்மை இழித்துக் கூறியது 'பணியுமாமென்றும் பெருமை' என்னும் முறைமை பற்றியாகும்; உண்மையன்று. உலகியல் பற்றியுமாம்.

எரியும் சுடரனையாய் என்றது எரியும் தீப்பிழம்பு போன்றவனே என்றவாறு. "எரிபோலும் மேனியன்" (ஞான 161 : 9) "தழல் போல் வதோர் மேனி" (நாவு 211 : 2) எனத் தேவாரத்தும் வருவன காண்க. இறைவன் சர்வசங்கார காரணனாதல் பற்றிச் "சுடுகாட்டரசே" என்றார். சர்வசங்காரஞ் செய்யுமிடமே சுடலையாக அவ்விடத்துத் தான் மட்டும் எஞ்சி நிற்பன் என்க. "கோயில் சுடுகாடு" (சாழல் 3) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க. "நீண்ட வார் சடை தாழ நேரிழை பாட நீறு மெய் பூசி மாலயன் மாண்டவார், சுடலை நடமாடு மாண்பது வென்" (தே ஞான 186 : 3) இறைவன் பற்றப்படும் பொருளன்மையின், தொடர்தல் - ஆராய்ந்தறிதல் என்பதே பொருள். அவன் அருள் பெற்ற பதி ஞானமொன்றானேயன்றி பசு ஞான பாச ஞானங்களால் ஆராய்ந்து அறியப்படுபவனாகாமையின் தொடர்வரியாய் என்றார். தமியேன் என்பதற்கு உணர்விழந்தேனது என உரைப்பினும் அமையும். தனித்துணை - ஒப்பற்ற துணை. "துஞ்சும்போது துணையென்லாகுமே", "பொதுநீக்கித் தனைநினைய வல்லார்க் கென்றும் பெருந்துணை" (நாவு 153 : 10; 214 : 5) என வருவன காண்க.

இதன் கண், 'அஞ்சொல் நல்லாரவர்தம் விடர்விடலேனை விடுதி கண்டாய்: தமியேன் தனிநீக்கும் தனித்துணையே' என்பவற்றால் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 38.

143\. தனித்துணை நீநிற்க யான்தருக் கித்தலை யானடந்த
வினைத்துணை யேனை விடுதிகண் டாய்வினை யேனுடைய
மனத்துணை யேயென்றன் வாழ்முத லேயெனக்
கெய்ப்பில்வைப்பே
தினைத்துணை யேனும் பொறேன்றுய ராக்கையின் திண்வலையே.

ப-ரை: வினையேனுடைய மன துணையே - பிராரத்த வினையுடையேனது உள்ளத்திற்குத் துணையாகவுள்ளவனே, என்றன் வாழ்முதலே - எனது அந்தமிலின்பத் தழிவில் வீடாகிய நல்வாழ்வுக்கு முதற்பொருளாகவுள்ளவனே, எனக்கு எய்ப்பில் வைப்பே - எனக்கு இளைப்புற்ற

விடத்து ஒருவனுக்குப் புதைபொருள் அகப்பட்டாற் போலக் கிடைத்த வனே திண்வலை ஆக்கையின் துயர் - விட்டு நீங்க முடியாத திண்ணிய வலைபோன்ற இவ்வுடம்பின்கண் அகப்பட்டு அது தரும் துன்பத்தினை, தினை துணையேனும் பொறேன் - தினையளவு நேரமும் பொறுக்கமாட்டேன்; அங்ஙனமாகவும், தனி துணை நீ நிற்க - ஒப்பற்ற துணையாக நீ நிற்க அதனை மறந்து, யான் தருக்கி தலையால் நடந்த வினை துணையேனை - யான் என்னும் செருக்குற்று அதனால் தலைகீழாக நடந்த வினையையே துணையாகக் கொண்டிருக்கின்ற என்னை விடுதி கண்டாய் - கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்

மனத்துணையே, என்றன் வாழ்முதலே, எனக்கு எய்ப்பில் வைப்பே, திண்வலை போன்ற ஆக்கையின் துயர் தினைத்துணையேனும் பொறேன், அங்ஙனமாகவும் தனித் துணையாக நீ நிற்க அதனை மறந்து யான் என்று செருக்கித் தலையால் நடந்த வினையையே துணையாகக் கொண்டிருக்கின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

யான் தருக்கி என்பதற்கு யான் எனத் தருக்கி என இடையே ஒரு சொல் வருவித்துரைக்க. தலையால் நடத்தல் - தலைகீழாக நடத்தல். என்றது முறை மாறி நடத்தல் என்றவாறு "புலைய னேனையும் பொருளென நினைந்துன் அருள்பு ரிந்தனை புரிதலுங் களித்துத் தலையி னடந்தேன்", (செத் 3) என வருதலுங் காண்க. தனித் துணையாகிய நீ நிற்கவும் வினையையே துணையாகக் கோடலானேன் என்பார், "வினைத்துணையேனை", என்றார். வினையே சார்பாக நின்றமையின் இங்ஙனம் கூறினார். "இனவடி யாருடன் கூட்டா தேகினுயோ வென்னையு மென் வினையையுமிங் கிருத்தி யெந்தாய்" (திருவிளை வாதவூர் 54) என்பது ஈண்டறியற்பாலது. நின்றடர்த்திடு மைம்புலனை அடக்கித் தன்னையே நினையும் வண்ணம் அடிகள்மனத்திற்குத் துணையாக நிற்றலின் இறைவனை "மனத்துணையே" என்றார்.

எனது வீட்டின்ப வாழ்க்கைக்கு முதற் பொருளாயுள்ளவன் இறைவனுதலின் "என்றன் வாழ்முதலே" என்றார் "போற்றியென் வாழ் முதலாகிய பொருளே" (திருப்பள்ளி 1) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க. எய்ப்பினில் வைப்பு - ஒருவன் பொருளின்றி இளைப்புற்றவிடத்து கிடைத்த புதைபொருள். இறைவனை எய்ப்பினில் வைப்பு என உருவகஞ் செய்தனராயினும் எனக்கு வைப்புப் போன்றவனே என்பது கருத்தாகக் கொள்க. "நல்லடியார் மனத்தெய்ப்பினில் வைப்பை" (67 : 2) எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியவாறுங் காண்க.

தினைத்துணை என்புழி தினை சிறிய கால அளவுக்கு உவமையாகக் கூறப்பட்டது. துணை - அளவு. "இனைத்துணைத் தென்ப தொன்றில்லை" (குறள் 87) என்புழிப் போல.

திண்வலை ஆக்கையின் துயர் என மாறிக் கூட்டுக. திண்வலையிலகப் பட்ட பிராணி அதனை விட்டு நீங்கமாட்டாமை போல இவ்வுடம்பின் கட்பட்ட உயிர் அதனின் நீங்கமாட்டாது அவ்வுடம்பினுலுளதாகும் துன் பங்களை யெல்லாம் அநுபவிக்கும். இங்கே அடிகள் பிராரத்தவினைக் கேடா கத் தமக்குக் கிடைத்த உடம்பினை நீங்கமாட்டாது அதனுலுண்டாகும் துன்பங்களைப் பொறுக்கமாட்டாதவராய் ஆக்கையின் துயர் தினைத்துணை யேனும் பொறேன் என்ருர். அங்ஙனமாகவும் அத்துயரை நீக்கவல்ல தனித் துணையாக நீ நிற்கவும் யான் அதனை மறந்து யான் என்று செருக் கடைந்து தலைகீழாக நடக்கத் தொடங்கினேனுயினும் அதனைப் பொறுத்து என்னைக் கைவிடலாகாது என்பார் விடுதி கண்டாய் என்ருர்.

இதன் கண், ஆக்கையின் துயர் தினைத்துணையேனும் பொறேன்; தருக்கித் தலையால் நடந்த எனை விடுதி கண்டாய் என்பவற்ருல் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 39.

144. வலைத்தலை மானன்ன நோக்கியர் நோக்கின் வலையிற்பட்டு
மிலைத்தலைந் தேனை விடுதிகண் டாய்வெண் மதியினெற்றைக்
கலைத்தலை யாய்கரு ணகர னேகயி லாய மென்னும்
மலைத்தலை வாமலை யாண்மண வாளவென் வாழ்முதலே.

ப-ரை: வெள் மதியின் ஒற்றை கலை தலையாய் - வெண்மையான திங் களின் ஒரு கலைப் பிறையைத் தலையின்கணுடையவனே, கருணகரனே - அருட்கு இருப்பிடமாகவுள்ளவனே, கயிலாயம் என்னும் மலை தலைவா - திருக்கயிலாயம் என்று சொல்லப்படும் மலையில் எழுந்தருளியிருக்கும் தலை வனே, மலையாள் மணவாளா - மலை மடந்தையாகிய பார்வதியம்மைக்கு மணவாளனே என் வாழ் முதலே - எனது வாழ்விற்கு முதற் பொருளா யுள்ளவனே, வலை தலை மான் அன்ன நோக்கியர் நோக்கின் வலைப் பட்டு - வலையில் அகப்பட்ட மானின் மருண்ட பார்வை போன்ற பார்வை யினையுடைய மகளிரின் நோக்கமாகிய வலையில் அகப்பட்டு, மிலைத்து அலைந்தேனை விடுதி கண்டாய் - மயங்கி அலைந்த என்னைக் கைவிடுகின் றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

மதியின் ஒற்றைக் கலைத் தலையாய், கருணகரனே, கயிலாயமென் னும் மலைத் தலைவா, மலையாள் மணவாளா, என் வாழ் முதலே, மகளிர் நோக்கின் வலைப்பட்டு அலைந்த என்னைக் கைவிடுகின்றனையோ? கை விடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

வலைத்தலை என்பதில் தலை ஏழனுருபு. வலைத்தலை மான் என ஏழாம் வேற்றுமை பெயர் கொள்ளுமாயினும் வலைத்தலை அகப்பட்ட மான் எனவே பொருள் கொள்ளப்படும். மான் அச்ச ஸ்ருகுதியால் இயல்பாக மருண்ட பார்வையுடைத்தாயினும் வலையிலகப்பட்ட விடத்து மருண்ட

பார்வை மிக்குத் தோன்றும். அவ்விதம் மிக்க மருட்சியுடைமை பற்றி "வலைத்தலை மானன்ன நோக்கியர்" என்றார். நோக்கியர் நோக்கின் வலை - நோக்கினையுடைய மகளிரது நோக்கமாகிய வலை.

"காய்சின வேலன்ன மின்னியல் கண்ணின் வலை கலந்து
வீசினபோ துள்ள மீனிழந்தார்" (74)

எனத் திருக்கோவையாரினும்,

"மாழையொண் கண்ணினார்கள் வலைதனின் மயங்குகின்றேன்"
நாவு 51 : 6

"வாணுர் நுதலார் வலைப்பட்டடியேன்" சுந் 3 : 9

"மானை நோக்கியர் கண் வலையிற்பட்டு" சுந் 54 : 6

எனத் தேவாரத்தும் வருவன காண்க. மிலைத்து அலைந்தேனை - மயங்கி அலைந்தேனை.

"மறிநே ரொண்கண் மடநல்லார் வலையிற்பட்டு மதிமயங்கி
அறிவே யழிந்தேனையா" சுந் 52 : 4

"வேலங்காடு தடங்கண்ணார் வலையுட்பட்டுன் னெறிமறந்து
மாலங்காடி மறந்தொழிந்தேன் மணியே முத்தே மரகதமே"
சுந் 52 : 5

"மானை நோக்கியர்கண் வலையிற் பட்டு வருந்தி" சுந் 54 : 6

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியமையுங் காண்க. இனி மிலைத்தல் - சூடுதல். ஈண்டு அவர் வழியை மேற்கொள்ளல் என உரைப்பினுமமையும். அலைதல் - உலகியல் வாழ்வில் திரிதல்.

வெண்மதி என்பது இனஞ்சுட்டில்லாப் பண்புகொள்பெயர். "செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும் வெண்டிங்களுள் வெயில் வேண்டினும்" (புறம் 38 : 7) எனப் பிறாண்டும் வருதல் காண்க. சென்னியில் ஒரு கலைப் பிறையைச் சூடினமையின் மதியின் ஒற்றைக்கலைத் தலையாய் என்றார்.

"ஒற்றை வெண்பிறை தோன்றும்......புனிதனார்க்கே" நாவு 231 : 2

"ஒற்றை வெண்பிறையானை யுமையோடொன்றும் பேரானை"
நாவு 232 : 5

எனத் தேவாரத்தும் வருவன காண்க.

"மதியின் ஒற்றைக் கலைத்தலையாய்" என விளித்தது, ஒற்றைக் கலையோடு கிலானை வந்து அடைந்த திங்களைத் தலைக்கண் வைத்து அணிந்து காத்தருளியது போல் என்னையும் காத்தருள வேண்டும் என்னும் உள்ளுறையுடைமையால் இது கருத்துடையடைகொளியணியாகும். இவ்

வாறே மற்றைய விளிகளும் கருத்துடையடைகொளியாய் அமைவதை உய்த்துணர்க.

இதன்கண், "வலைத்தலைமானன்ன நோக்கியர் வலையிற்பட்டு மிலைத் தலைவேனை விடுதி கண்டாய்" என்பதனுல் பிரபஞ்ச வைராக்கிய விருப் பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 40.

145. முதலைச் செவ் வாய்ச்சியர் வேட்கைவெந் நீரிற் கடிப்ப மூழ்கி
விதலைச் செய் வேனை விடுதிகண் டாய்விடக் கூன்மிடைந்த
சிதலைச்செய் காயம் பொறேன்சிவ னேமுறை யோமுறையோ
திதலைச் செய் பூண்முலை மங்கைபங் காவென் சிவகதியே.

ப-ரை: திதலை செய் பூண் முலை மங்கை பங்கா-தேமல் பொருந் திய அணிகலன்கள் அணிந்த முலைகளையுடைய மங்கையது கூற்றையுடை யவனே, என் சிவகதியே-எனது வீடுபேருகவுள்ளவனே, செவ்வாய்ச் சியர் முதலை கடிப்ப-சிவந்த வாயினையுடைய மகளிராகிய முதலைகள் கடிப்ப, வேட்கை வெந்நீரில் மூழ்கி-அதனுல் அவர் மீதுண்டாகிய விருப் பமாகிய வெந்நீரிடத்து முழுகியும், விதலை செய்வேனை விடுதிகண்டாய்- நடுக்கத்தைச் செய்கின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடா தொழிதல் வேண்டும்; விடக்கு ஊன் மிடைந்த சிதலை செய் காயம் பொறேன்-மிக்க ஊன் செறிந்த துன்பத்தைச் செய்கின்ற இவ்வுட லோடு இருத்தலைத் தாங்கமாட்டேன். முறையோ முறையோ-என்னை இவ்வுடலோடு கூடிய வாழ்க்கையில் வைத்தல் முறையாகுமோ முறையா குமோ.

மங்கை பங்கா, என்சிவகதியே, செவ்வாய்ச்சியராகிய முதலை கடிப்ப வேட்கை வெந்நீரில் மூழ்கி நடுக்கத்தினையடைகின்றேனைக் கைவிடுகின் றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். ஊன் மிடைந்ததும் துன்பத் தைச் செய்கின்றதுமாகிய இவ்வுடலோடு இருத்தலைத் தாங்கமாட்டேன். முறையோ முறையோ என்பதாம்.

செவ்வாய்ச்சியர்-சிவந்த வாயினையுடைய மகளிர். செவ்வாய்ச்சியர் என்றாராயினும் சுடர்நுதல் மடநோக்கு வாணகை, இலங்கெயிறு அசை நடை முதலியவற்றையுமுடைய வனப்பு வாய்ந்த மகளிர் எனக் கொள்க. முதலைச் செவ்வாய்ச்சியர் என உருவகஞ் செய்தமையின் ஒற்றுமிக்கது. செவ்வாய்ச்சியர் என்னும் பன்மையொடு முதலையென்னும் அஃறிணை இயற்பெயரைச் சேர்த்தமையின் முதலைகள் என்பது பொருளாகக் கொள்க. செவ்வாய்ச்சியரை முதலைகள் என்றமையின் 'கடிப்ப' என்றார். கடித்தல் என்றது வேட்கை விளைத்தலை. வேட்கையை வெந்நீர் என உருவகஞ் செய்தது, வேட்கையிகக்காரர்க்கு உடல் வெதும்புதல் பற்றி யாகும். மூழ்கியும் என உம்மை விரிக்க. விதலை-நடுக்கம். "பனிப்படு

பைதல் விதலைப் பருவத்து" என்னும் பரிபாடலினும் (11 : 75) இப் பொருட்டாதல் காண்க. வெந்நீரில் மூழ்கியும் விதலைச் செய்வேனை என்றது தண்ணீரில் மூழ்கி நடுங்குதல் உலகியல்பாக வெந்நீரில் மூழ்கி நடுங்குவேனை என ஒரு நயந் தோன்ற நின்றது.

விடக்கு - ஊன் "வடிக்கணை தொடுத், தெய்து துணித்திடும் துணித்த விடக்கினை" பதினொராந்திரு கண்ணப்பதேவர் (37 - 8) "தசையுந் தூவுந் தடியும் விடக்கும்......புலவு மூன் பெயர்" எனப் பிங்கலந்தையில் (5 250) வருதலுங் காண்க. விடக்கு ஊன் என்பன ஒருபொருட் பன்மொழிகளாதலின் மிக்க ஊன் எனப் பொருள் உரைக் கப்பட்டது. இனி, விடக்கு ஊன் என்பதற்கு புலவு நாறும் ஊன் எனினுமமையும். "புன்புலால் யாக்கை" (பிடித் 10) என அடிகள் அருளியவாறுங் காண்க. மிடைதல் - நெருங்குதல்; செறிதல். மிடைந்த காயம் என இயையும். சிதலை - நோய்; துன்பம். காயம் - உடம்பு. "காயமே கோயிலாக கடிமன மடிமை யாக" (தே. நாவு 76 - 4). விடக் கூன் மிடைந்த காயம் சிதலையையும் செய்தலின் "காயம் பொறேன்", "திணைத்துணையேனும் பொறேன் துயராக்கைத் திண்வலையே" (நீத் 39) என அடிகள் அருளியமையுங் காண்க. பேரின்பத்தைச் செய்யுமாறு "சிவனே" என்றார். முறையோ முறையோ என அடுக்கி முறையிட்டது இவ்வுடம்புடன் சிலகாலம் இருக்குமாறு இறைவன் பணித்துப் பிரிந் தமை பற்றியாகும். "ஏல என்னை ஈங்கொழித்தருளி" (கீர்த் 129) என வருதலுங் காண்க. திதலை - தேமல். திதலை செய் எனற்பாலது எதுகை நோக்கி ஒற்றுமிக்கது. அன்றி திதலையைச் செய்யும் எனினுமாம். சிவ கதி - வீடுபேறு.

"மெய்ம்மையா முழவைச்செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப்பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகிற் சிவகதிவிளையுமன்றே." நாவு 76 : 2

எனத் தேவாரத்து வருதலுங் காண்க. இறைவன் வீடுபேறாய் நின்றா ராதலின் சிவகதியே என்றார்.

"மண்பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்தும் தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானை" 12 : 5

என அப்பரடிகள் திருவாக்குங் காண்க.

இதன் கண், விடக்கூன்மிடைந்த சிதலைச் செய் காயம் பொறேன் விடுதிகண்டாய் என்பவற்றால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் என்னைக் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 41.

146. கதியடி யேற்குன் கழல்தந் தருளவும் ஊன்கழியா
விதியடி யேனை விடுதிகண் டாய்வெண் டலைமுழையிற்
பதியுடை வாளரப் பார்த்திறை பைத்துச் சுருங்கவஞ்சி
மதிநெடு நீரிற் குளித்தொளிக் குஞ்சடை மன்னவனே.

ப-ரை: வெண் தலை முழையில் பதி உடை வாள் அர - நகுசிரம் என்னும் வெண்டலையின் உட்டுளையை இருப்பிடமாகவுடைய ஒளியை யுடைய பாம்பு, பார்த்து இறை பைத்து சுருங்க - மதியைப் பார்த்து சிறிது படம் விரித்துச் சுருண்டு அசைய, மதி அஞ்சி நெடு நீரில் குளித்து ஒளிக்கும் - அதனைப் பிறைமதி கண்டு பயந்து கங்கைநீரில் மூழ்கி மறைகின்ற, சடை மன்னவனே - செவ்விய சடைமுடியினையுடைய நிலை பேறுடையவனே, அடியேற்கு உன் கழல் கதி தந்து அருளவும் - அடி யேனுக்கு உன் கழலையுடைய திருவடிகளைப் புகலிடமாகத் தந்தருளவும், ஊன் கழியா விதி அடியேனை - அதனை உடனே அடையும்படி இவ் வுடம்பினை நீக்கமுடியாதமைக்கு ஏதுவாகிய பிராரத்தவினையையுடைய அடியேனை, விடுதி கண்டாய் - கைவிடுகின்றனையோ? கைவிடாதொழி தல் வேண்டும்.

வெண்டலை முழையைப் பதியாகவுடைய பாம்பு திங்களைப் பார்த்து சிறிது படம் விரித்துச் சுருண்டு அசைய அதனைப் பிறை மதி கண்டு பயந்து கங்கை நீரில் மூழ்கி மறைகின்ற சடைமன்னவனே, அடியேற்கு உன் கழல் தந்து அருளவும், அதனை உடனே அடையும்படி இவ்வுடம் பினை நீக்கமுடியாத வினையுடைய அடியேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

கதி - புகலிடம். "கதியே போற்றி கனியே போற்றி" (போற்றி 108) உன்கழல் கதிதந்தருளவும் என மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்க. கழல் தந்தருளியமை, "தன்வார் கழல்களெனக் களியா நிற்கும் அம் பலத்தோன்", "தன்செருல் கழறந்த தொல்லோன்" 293 : 346 எனத் திருக்கோவையாரில் வருவனவற்றாலுமறிக. கழல் தந்தருளவும் என்றது ஆட்கொண்டருளவும். என்றபடி உம்மை உயர்வு சிறப்பு. ஊன் கழியா விதி - உடம்பினை நீக்க முடியாமைக்கு ஏதுவாகிய வினை; வினை என்றது பிராரத்தவினையை.

வெண்டலை - நகுசிரம். இது தாருகாவனத்து இருடிகளால் ஏவப்பட் டது. நகுவெண்டலை "வெண்டலை மிலைச்சி......சாந்தணி சச்சையனே" (நீத் 30) "பின்றாழ் சடைமேல் நகுவெண்டலையர்" (தே ஞான 71 : 4) என வருவன காண்க.

முழை என்றது வெண்டலையிலுள்ள உட்டுளையை. "பகுவாய நகு வெண்டலை", "விழியிலா நகுதலை" (தே. ஞான 46 : 8; 272 : 5) என வருவன காண்க. பதி - இருப்பிடம். "அம்பலத்துப் பதியுடையான்"

(292) என்னும் திருக்கோவையாரினும் இப்பொருட்டாதல் காண்க. வாள் - ஒளி. அரா - அர எனக் குறுகி நின்றது. பாம்பு வெண்டலை முழையை இருப்பிடமாகக் கொண்டமை "முழைக்கொள் அரவோடு" (சுந் 9: 9) என்பதனுலுமறிக. "அஞ்சி மதிநெடு நீரில் ஒளிக்கும்" என்றதனுல் அர பார்த்தது அம்மதியையாகும். இறை - சிறிது. "எழில்வாயிளவஞ்சியும் விரும்பும் மற்றிறை குறையுண்டு" திருக்கோவை (94) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. பைத்துச் சுருங்கல் - படத்தை விரித்துச் சுருண்டு அசைதல். "உத்தமன் நீள்முடிமேல் வெள்ள வளாகத்து வெண்ணுரை சூடி வியன் பிறையைக் கொள்ள அளாய்கின்ற பாம்பொன்றுளது குறிக்கொண்மினே" (பொன்வண்ணத் 78 நெடுநீர் என்றது கங்கையை. "பிறையு நெடுநீரும் பிரியா முடியினுர்" ஞான 87 : 8 எனத் தேவாரத்தும் வருதல் காண்க. சடைமுடியில் அணிந்த வெண்டலையின் உட்டுளையில் தங்கும் பாம்பு முடியில் அணியப்பட்டுள்ள மதியைக் கண்டு சிறிது படம் விரித்து அதனை உண்ணுமாறு சுருண்டு அசைதலும், அதனை மதி கண்டு அஞ்சி சடையிற் றரித்த கங்கைப் பெருவெள்ளத்தில் முழுகி ஒளிக்கும் சடையென இறைவனது சடையின் பெருமை கூறியவாறு. மன்னவனே என்பதற்கு ஒன்றற் கொன்று முரணுனவற்றையும் தீங்கு பயக்குமாறு எழுந்தவற்றையும் சடையின் கண்ணே வைத்து முறைசெய்து ஆளும் பேரரசனே எனினுமமையும்.

இதன் கண், "கழல் தந்தருளவும் ஊன் கழியாவிதியடியேனை விடுதி கண்டாய்" என்பதனுல் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் என்பதும் போதருதல் காண்க. 42.

147. மன்னவ னேயொன்று மாறறி யாச்சிறி யேன்மகிழ்ச்சி
மின்னவ னேவிட் டிடுதிகண் டாய்மிக்க வேதமெய்ந்நூல்
சொன்னவ னேசொற் கழிந்தவ னேகழி யாத்தொழும்பர்
முன்னவ னேபின்னு மானவ னேயிம் முழுதையுமே.

ப-ரை : மிக்க வேதம் மெய் நூல் சொன்னவனே - உயர்வினையுடைய அறிவு நூலாகிய வேதத்தையும் தத்துவ நூலாகிய ஆகமத்தையும் சொல்லியருளியவனே, சொல்கழிந்தவனே - சொற்களால் இப்படிப்பட்டவன் என்று சொல்லமுடியாமல் அப்பாற்பட்டவனே, கழியா தொழும்பர் முன்னவனே - எக்காலத்தும் நீங்குதலில்லாத அணுக்கன் தொண்டர்க்கு முன்னின்று அருள் செய்பவனே, பின்னும் இம்முழுதையும் ஆனவனே - அன்றி இவ்வுலகங்கள் முழுதையும் தோற்றுவித்து அவை முழுதிலும் கலந்துள்ளவனே, மன்னவனே - நிலைபேறுடையவனே, ஒன்றும் ஆறு அறியா சிறியேன் - நின்னொடு கலக்கும் நெறியை அறியாத சிறுமையுடையேனது, மகிழ்ச்சி மின்னவனே - இன்பத்தில் மின்னல் போன்றவனே, விட்டிடுதி கண்டாய் - என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

வேத மெய்ந்நூல் சொன்னவனே, சொற்கழிந்தவனே, தொழும்பர் முன்னவனே, பின்னும் இவ்வுலகங்கள் முழுதையும் தோற்றுவித்து அவை முழுதிலும் கலந்துள்ளவனே, மன்னவனே, நின்னொடு கலக்கும் நெறியை அறியாத சிறியேனது இன்பத்தில் மின்னல் போன்றவனே, என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

மன்னவன் - நிலைபேறுடையவன். மன் - நிலைபேறு. ஒன்றுதல் - இரண்டறக் கலத்தல் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டபோது அடிகளுக்கு உளதாகிய மகிழ்ச்சி இறைவன் பிரிவால் மின்னல் தோன்றி மறைவது போல நீங்கினமையின் "சிறியேன் மகிழ்ச்சி மின்னவனே" என்றார். மகிழ்ச்சி நீங்கினமட்டில் அமையாது துன்பமும் உளதாதல், மின் தோன்றி மறையும்போது நமது கண்களில் முன்புள்ள சிற்றொளியும் குன்றி இருளாதலின் அறியப்படும்.

மிக்க என்ற அடை வேதநூலுக்கும் மெய்ந்நூலுக்கும் பொது. வேதநூல் பொதுவாகிய அறிவு நூல்; மெய்ந்நூல் - சிறப்பாகிய தத்துவ நூல்; என்றது ஆகமத்தை. சொன்னவன் என்பதற்கு இயற்றினவன் எனவும் இயற்றியதை விளங்க எடுத்துரைத்தவன் எனவும் பொருள் கொள்க.

"வேத முதல்வன்" ஞான 32:4

"வேதமெல்லாம் முறையால் விரித்தோத நின்ற வொருவனார்" ஞான 135 : 3

"வேதத்தோ டாறங்கம் சொன்னார்" நாவு 234 : 2

"வேதனைய் வேதம் விரித்திட்டானே" நாவு 257 : 4

"செழுமறை பகர்ந்த பட்டனே" சுந் 69 : 9

"அங்கங்களும் மறைநான்குடன் விரித்தான்" சுந் 71 : 3

எனத் தேவாரத்தும் வருவன காண்க.

"வேதங்கள் மொழிந்த பிரான்" காரைக்கால் 18

எனப் பெரியபுராணத்தும் வருவன காண்க.

வேதநூலும் மெய்ந்நூலாகிய ஆகமநூலும் இறைவன் இயற்றி உபதேசித்தருளினன் எனக் கூறுங்கால், வேதநூல் அன்றி ஆகமநூல் ஒன்றே அமையாதோ என்பார்க்கு, உலகத்து வாழும் மக்கள் தானதவம் என்னும் இருவகை நெறிபற்றி ஒழுகுவாராதலின் தான நெறிக்கண் உள்ளார்க்கு வேதநூலும் தவநெறிக்கண் உள்ளார்க்கு ஆகமநூலும் வேண்டற்பாலனவாம் என விடையிறுக்க.

சொற்கழிந்தவன் - வாக்குக்கு எட்டாதவன்.

"சொற்பதங் கடந்த தொல்லோன்" அண்ட 40, 11

"சொற்பதங் கடந்த அப்பன்" அச்சப் 6

"சொல்லும் பொருளும் இறந்த சுடர்" புணர்ச்சிப் 4

"சொல்லுதற்கரிய ஆதியே" கோயில் 9

என அடிகள் பிறவிடங்களிலும் அருளியமை காண்க.

"சொல்லினை இறந்தார்" நாவு 49 : 1

"சொற்பதமும் கடந்து நின்ற எம்மான் காண்" நாவு 277 : 10

"சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய்" நாவு 308 : 4

என அப்பரடிகள் அருளியவாறுங் காண்க. சொற்கழிந்தவனே என்றத னால் இயைபுபற்றி மனத்துக்கும் எட்டாதவன் என்பதும் கொள்ளப் படும். "மாற்றமனங் கழிய நின்ற மறையோனே" (சிவபுரா 45) என அடிகள் அருளியமையுங் காண்க.

கழியாத் தொழும்பர் என்றது இறைவனை விட்டு நீங்காத அணுக் கன் தொண்டர்களாகிய மெய்யடியார்களை பின்னும் என்றது அன்றியும் என்ற பொருளில் வந்தது. இம்முழுதையும் ஆனவனே என மாறிக்கூட்டி, இம்முழுதையும் என்னும் இரண்டாவதற்கு முடிக்குஞ் சொல்லாக ஆக்கி என ஒரு சொல் வருவித்து, ஆனவனே என்பதற்கு ஆக்கிய இவ்வுலகம் முழுதிலும் நிறைந்து நின்றவனே எனப் பொருளுரைக்க. இ என் னுஞ் சுட்டு கட்புலப்படும் சிதசித்துப் பிரபஞ்சங்களைச் சுட்டியது.

இதன் கண், "ஒன்றுமா றறியாச் சிறியேன் மகிழ்ச்சி மின்னவனே விட்டிடுதி கண்டாய்" என்பதனுல் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 43.

148. முழுதயில் வேற்கண் ணியரென்னு மூரித் தழன்முழுகும்
விழுதனை யேனை விடுதிகண் டாய்நின் வெறிமலர்த்தாள்
தொழுதுசெல் வானத்தொழும்பரிற் கூட்டிடு சோத்தெம்பிரான்
பழுதுசெய் வேனை விடேலுடை யாயுன்னைப் பாடுவனே.

ப-ரை : எம்பிரான் - எங்கள் தலைவனே, முழுது அயில் வேல் கண் ணியர் என்னும் மூரி தழல் முழுகும் விழுது அனையேனை - முழுவதும் கூர்மையுடைய வேல்போலும் கண்களையுடைய மகளிர் என்று சொல் லப்படும் வலிய நெருப்பில் அமிழ்ந்து போகும் நெய்யைப் போல் அழி கின்ற என்னை, விடுதி கண்டாய் - கைவிடுகின்றனையோ? கைவிடா தொழிதல் வேண்டும். நின் வெறி மலர் தாள் தொழுது செல் - நினது நறுமணம் கமழும் தாமரை மலர் போன்ற திருவடிகளைத் தொழுது

கொண்டு நின்னுடன் செல்கின்ற, வான தொழும்பரில் கூட்டிடு - உயர்வுடைய அணுக்கன் தொண்டர் கூட்டத்தோடு என்னைச் சேர்த்தருளுதி, சோத்து - நினக்குத் தாழ்மையான வணக்கம்; உடையாய் - என்னை ஆளாக வுடையவனே, பாடுவன் - உன் பொருள் சேர் புகழ்களைப் பாடுவேன்; பழுது செய்வேனை விடேல் - பிழை செய்வேனாயினும் என்னைக் கைவிடா தொழிதல் வேண்டும்.

எம்பிரான், மகளிர் என்னும் வலிய நெருப்பில் அமிழ்ந்துபோகும் நெய்யைப் போல் அழிகின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடா தொழிதல் வேண்டும். நின் திருவடிகளைத் தொழுதுகொண்டு நின்னுடன் செல்கின்ற தொழும்பரில் என்னைச் சேர்த்தருளுதி, நினக்குத் தாழ்மை யான வணக்கம்; உடையாய், உன்னைப் பாடுவன்; பிழை செய்வே னாயினும் என்னைக் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

அயில் வேல் - கூர்மையையுடைய வேல். "அயிற் குல வேல்" திருக்கோவை (36). வேற்கண் - வேல் போலும் கண். அடிகள் மகளிர் கண்ணுக்கு வேலை உவமை கூறுதலை, "வைவேற்கண் புதைத்துப் பொன்னே" (43), "தெளி சென்ற வேற்கண் வருவித்த செல்லலெல்லாம்" (50), "மூரிபுருவ வடிக்கலர் வேற்கண்ணி" (291), "வேற்பொலி கண்ணி" (368) என்னும் திருக்கோவையாரினும் காண்க. அயில் வேற்கண்ணியர் என மகளிரைக் கூறியது அவர் தமது கூர்மையையுடைய வேல் போலும் கண் நோக்கத்தால் ஆடவரைப் பிணிக்கவல்லார் என்பது தோன்ற.

"ஈர்க்கிடை போகா இளமுலை மாதர் தங்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்" போற் 34—5

என அடிகள் அருளியிருத்தலும்;

"நோக்கிற் பிணிகொள்ளும் கண்ணொடு" கலி 93 : 23

எனப் பிறர் கூறியிருத்தலும் ஈண்டறியற் பாலன.

மூரி - வலி. தழலுக்கு வலியாவது தான்பற்றிய பொருளை அழித்தல். தழலில் முழுகும் நெய் உருகி அழிதல் போல மகளிராகிய நெருப்பிற்பட்டு அழுகின்றேன் என்பார், "கண்ணியர் என்னும் மூரித்தழல் முழுகும் விழுதனையேனை" என்றார். விழுது - நெய்; வெண்ணெயுமாம்.

இறைவனது மலர்போலும் திருவடிகள் தொழும்பர்க் கணியவாய்த் தெய்வமணம் கமழ்தல் பற்றி "வெறிமலர்த்தாள்" என்றார். "வெறியார் கழல் வீழ்சடைத் தீவண்ணன் சிவன்" (256) எனத் திருக்கோவையாரினும் அடிகள் அருளியவாறு காண்க. தாள் தொழுது செல் தொழும்பர் என இயையும். வானத் தொழும்பர் - உயர்வினையுடைய தொழும்பர். வான் - உயர்வு. "வான்வார் கழல்பாடி" (திருவெம் 6) வாசனுமலம்

பற்றறுதற்கும் கதியடைதற்கும் தொண்டரிடையிருத்தல் ஏதுவாகலின் தொண்டரிற் கூட்டிடு என வேண்டுவாராயினர்.

"அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்" (1) எனக் கோயின்மூத்த திருப்பதிகத்தும்

"குறிக்கொள் கௌன்றுநின் தொண்டரிற் கூட்டாய்" (8)

எனச் செத்திலாப்பத்தினும் அடிகள் அருளியமை காண்க.

சோத்தம் இழிந்தார் செய்யும் அஞ்சலி. அது சோத்து எனக்கடைக் குறைந்து நின்றது "சோத்தெம்பிரானென்று சொல்லிச் சொல்லி" (பொற் 8) என்புழிப் போல: எம்பிரான் என்றார், யான் உன்னடியன் என்பது தோன்ற. இறைவன் சோத்தம் உன்னடியம் என்றோரை உயர வைத்தல், "சோத்துன்னடியம் என்றோரைக் குழுமித் தொல்வானவர் சூழ்ந்து ஏத்தும்படி நிற்பவன்" (173) எனத் திருக்கோவையாரில் அடிகள் அருளியவாற்றானுமறிக.

பழுது - குற்றம். "பழுதில் தொல்புகழான் பங்க" (வாழாப் 10) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. செயிர் புகர் பழுது ஏதமாசு... குற்றமாகும்" எனத் திவாகரத்து (பண்பு) வருதலுங் காண்க. குற்றம் ஈண்டு மனமொழி மெய்கள் இறைவன்பால் நில்லாது புறம் போந்தமை. "பாவிடை யாடு குழல்போற் கரந்து பரந்துள்ளம்" (அடை 8), "சுருள் புரி கூழையர் சூழலிற் பட்டுன் திறமறந்திங் கிருள்புரி யாக்கையிலே கிடந்தெய்த்தனன்" (அடை. 5) என அருளியமை ஈண்டைக்கேற்ப அறியற்பாலன என்னை ஆட்கொண்ட நீ யான் செய்யும் பழுதினைப் பொறுத்து விடாதொழிதல் வேண்டும் என்பார் 'பழுது செய்வேனை விடேல்' என்றார்.

உனைப்பாடுவன் என்பதற்கு பழுது செய்வேனாயினும் உன்னைப் புகழ்ந்து பாடுதல் ஒழியேன்; அதனால் என் பிழைக்கிரங்கிக் கைவிடாதொழிதல் வேண்டும் என்பது கருத்தாகக் கொள்க. மற்றைத் தொண்டுகளிலும் பாடற்றொண்டு சிறப்புடைத்தென்பதும் அத்தொண்டினைச் செய்யும் வாக்கும் மனமும் இறைவன்பால் ஈடுபடும் என்பதும் அதனால் பெரும்பயன் உண்டாம் என்பதும் பற்றியே அடிகள் பிறிதோரிடத்து

"தானேவந் தெம்மைத் தலையளித் தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடு" (திருவெம்பா 6)

எனப் பாவை நோன்பு நோற்கும் மகளிர் கூற்றில் வைத்துக் கூறியிருத்தலும் காண்க.

அடியார்கள் இறைவனைப் பாடுதலையும் அதனால் அவர் அடையும் பேற்றினையும்

"பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக
மண்ணின்றி விண் கொடுக்கும் மணிகண்டன்" ஞான 179 : 8

"கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி" ஞான 179 : 5

"கற்பகத்தைப் பண்களார்தரப் பாடுவார் கேடிலர் பழியிலர்
புகழாமே" ஞான 240 : 2

"அளகத் திருநல் நுதலிபங்கா அரனே யென்
றுளகப்பாடும்அடியார்க்குறுநோ யடையாவே" ஞான 102 : 3

எனத் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியவாற்றானும் அறியலாம்

இதன் கண், முழுதயில் வேற்கண்ணியர் மூரித்தழல் முழுகும் விழுதனையேனை விடுதிகண்டாய், விழுத்தொழும்பிற் கூட்டிடுதி கண்டாய்; பழுது செய்வேனை விடேல் என்பவற்றால் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடாதொழிதல் வேண்டுமென்பதும் புலப்படுதல் காண்க. 44.

149. பாடிற்றி லேன்பணி யேன்மணி நீயொளித் தாய்க்குப்பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண் டாய்வியந் தாங்கலறித்
தேடிற்றி லேன்சிவ னெவ்விடத் தானெவர் கண்டனரென்
றோடிற்றி லேன்கிடந் துள்ளுரு கேனின் றுழைத்தனனே.

ப-ரை: மணி-மாணிக்க மணியைப் போன்றவனே, நீ ஒளித்தாய்க்கு-நீ காட்சியளித்து மறைந்தனை, அங்ஙனம் மறைந்த நின் பொருட்டு, பாடிற்றிலேன்-நினது புகழ்ச்சியமைந்த பாடல்களைப் பாடினேனல்லேன்; பணியேன்-நின்னை வணங்கிலேன்; ஆங்கு வியந்து-நீ அருள் செய்து மறைந்த அப்பொழுது உண்டாகிய மருட்கை பற்றிய வியப்பினால், சிவன் எவ்விடத்தான் எவர் கண்டனர் என்று-அலறி ஓடிற்றிலேன் தேடிற்றிலேன்-எனக்கு அருள் செய்த சிவன் எவ்விடத்துள்ளான்? யார் அவனைக் கண்டனர் என்று வினவிக் கதறிக் கொண்டு ஓடினேனுமல்லேன்; ஓடித் தேடினேனுமல்லேன்; கிடந்து உள் உருகேன்-நின் பிரிவின் கவலை மிகுதியால் செயலற்றுக் கிடந்து உள்ளம் உருகப்பெற்றிலேன்; நின்று உழைத்தனன்-பயனின்றி நின்று வருந்தினேன், பசு ஊன் வீடிற்றிலேன் விடுதிகண்டாய்-செவ்வித் தசையையுடைய உடம்பு நீங்கப் பெற்றிலேன்; இத்தன்மையையுடையேனாயினும் என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

மாணிக்கமணி போன்றவனே, நீ ஒளித்தாய்க்குப் பாடிற்றிலேன்; பணியேன்; நீ அருள்செய்து மறைந்த அப்பொழுதுண்டாகிய மருட்கை

பற்றிய வியப்பினால், 'எனக்கு அருள் செய்த சிவன் எவ்விடத்துள்ளான் யார் அவனைக் கண்டனர்' என்று அலறி ஓடிற்றிலேன்; நின் பிரிவின் கவலை மிகுதியால் செயலற்றுக் கிடந்து உள்ளம் உருகேன்; நின்று உழைத்தனன்; பசிய ஊனுடம்பு நீங்கப் பெற்றிலேன்; இத்தன்மையை யுடையேனாயினும் என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

பாடுதல் பணிதல் அலறுதல் தேடுதல் ஓடுதல் உருகுதல் என்னும் இச்செயல்களெல்லாம் உடைய அடிகள் இவை ஒன்றுஞ் செய்திலேன் என எதிர்மறைமுகத்தாற் கூறியது அவற்றின் பயனாக இறைவனது திருவடிப்பேறு உடன் கிடைக்கப் பெறுமை பற்றியுமாகும். மணி - அண்மை விளி; ஆசாரியருள் மேலானவராக அறிந்தமையின் மணி என்றார். எனவே குருமணி என்றவாறு "குருமணி போற்றி" (போற்றி 91)

"காத்தாட்கொள்ளும் குருமணியே" (ஆனந்த 4) ன அடிகள் பிறவிடங்களிலும் அருளியமை காண்க.

பச்சூன் - செவ்வித்தசை. "பச்சூன் நின்று பைந்நிணம் பெருத்த" புறம் 258 : 4 'செவ்வியான இறைச்சி' பெரும்பாண் 283 நச். ஈண்டு பச்சூன் என்றது பச்சூன் பொருந்திய உடம்பை. இறைவன் திருவருட் காட்சி மறைந்த நிலையில் பிரிவாற்றாது ஊனுடலை நீங்கப் பெறுதல் முறையாகவும் அது செய்திலேன் 'ஒளித்தாய்க்குப் பச்சூன் வீடிற்றிலேன்' என்றார். "முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்துநான் முட்டிலேன் தலைகீறேன்", "தாயிலாகிய இன்னருள் புரிந்தவென் தலைவனை நனிகாணேன், தீயில்வீழ்கிலேன் திண்வரை யுருள்கிலேன் செழுங்கடல் புகுவேனே" (சத 37;39) என அடிகள் அருளியமை ஈண்டறியற்பாலன.

வியப்பு - இறைவன் திருவுரு உடன் மறைந்ததனால் உண்டாகிய மருட்கைபற்றிய வியப்பு. ஆங்கு - இறைவன் ஆட்கொண்டு மறைந்த காலத்தை உணர்த்தியது. "மறையினின் மணந்தாங்கே மருவறத் துறந்த பின்" கலி 53 : 8 என்புழி ஆங்கு என்பது காலத்தை உணர்த்தி நிற்றல் காண்க. ஆங்கு வியந்து என்பதற்கு ஆட்கொண்டருளிய அப்பொழுது மகிழ்ச்சியால் வியப்படைந்திருந்தும் என உரைக்கினும் அமையும்.

அடிகள் தம்மைக் குருந்தமரத்தடியில் குருவாக எழுந்தருளி ஆட்கொண்டு மறைந்தவர் சிவனென்று தெரிந்தனராதலின் சிவன் எவ்விடத்தான் என்று வினவுவராயினர்.

"புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க" (61 : 2)

எனத் திருவண்டப் பகுதியில் வருதலுங் காண்க.

சிவன் எவ்விடத்தான் எவர் கண்டனர் என்பன தேடிச்சென்ற போது முற்படுவாரிடத்து வினவுவனவாகும். உழைத்தல் - வருந்துதல்.

இதன் கண், பச்சூன் வீடிற்றிலேனை விடுதிகண்டாய் என்பதனுல் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டுமென்பதும் போதருதல் காண்க. 45.

150. உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத் தீயினொப்பாய்
விழைதரு வேனை விடுதிகண் டாய்விடில் வேலைநஞ்சுண்
மழைதரு கண்டன் குணமிலி மானிடன் தேய்மதியன்
பழைதரு மாபர னென்றென் றறைவன் பழிப்பினையே.

ப - ரை : பலாப்பழத்து ஈயின் ஒப்பாய் - பலாப்பழத்தின்கண் ஈயினை ஒத்து, உழை தரு நோக்கியர் கொங்கை விழைதருவேனை - மானினது நோக்குப் போலும் நோக்கினையுடைய மகளிருடைய முலையை விரும்புகின்ற என்னை, விடுதி கண்டாய் - கைவிடுகின்றனையோ ? கைவிடாதொழிதல் வேண்டும்; விடின் - கைவிடுவையாயின், வேலை நஞ்சு உண் மழை தரு கண்டன் என்று - கடலில் எழுந்த நஞ்சை உண்ட கரிய மேகம் போலும் கண்டத்தை யுடையவன் என்றும், குணம் இலி என்று - குணமில்லாதவன் என்றும், மானிடன் என்று - மானிடன் என்றும், தேய்மதியன் என்று - குறைமதியன் என்றும், பழை தருமாபரன் என்று - பழமையாகிய பெரிய பரதேசி என்றும், என்று பழிப்பினை அறைகுவன் - என்று இப்படி இப்படி நினக்கு இழிவுரையினைக் கூறுவேன்.

பலாப்பழத்து ஈயினொப்பாய், மகளிரது கொங்கைகளை விரும்புகின்ற என்னைக் கைவிடுகின்றனையோ ? கைவிடா தொழிதல் வேண்டும். கைவிடின் வேலை நஞ்சுண் மழைதரு கண்டன், குணமிலி, மானிடன், தேய்மதியன், பழைதருமாபரன் என்று என்று நினக்குப் பழிப்புரையினைக் கூறுவேன் என்பதாம்.

உழை - மான். "உழையதட பள்ளி" மதுரைக் 310. ஈண்டு ஆகு பெயரான் அதன் மருண்ட பார்வையை உணர்த்திற்று. தரு - உவமைச் சொல். மானின் நோக்குப் போலும் நோக்கினையுடைய அழகிய மகளிர் என்பது தோன்ற 'உழைதரு நோக்கியர்' என்ருர்.

"ஆய் தூவி யனமென வணிமயிற் பெடையெனத்
தூதுணம் புறவெனத் துதைந்தநின் னெழினலம்
மாதர்கொண் மானோக்கின் மடநல்லாய் நிற்கண்டார்ப்
பேதுறூஉ மென்பதை யறிதியோ வறியாயோ" கலி 56 : 15-8

எனப் பிறரும் கூறுதல் காண்க. கொங்கை என்றது கோங்கின் கணுண்டாகிய பொலிந்த அரும்பை யொக்கும் முலையை. "கோங்கிற் பொலியரும்

பேய் கொங்கை" (கோவை 13) என அடிகள் அருளியமை காண்க. * "முதிர் கோங்கின் முகையென முகஞ் செய்த குரும்பையெனப், பெயல் துளி முகிழெனப் பெருத்தநின் னிளமுலை." பலாப் பழத்தின் ஈயினைப் பாய் கொங்கை விழைதருவேனை எனக் கூட்டி பலாப்பழத்தில் மொய்க்கும் ஈ அதனை விரும்புதல் போல மகளிர் கொங்கையை விரும்புகின்ற என்னை என்றவாறு. ஈயின் என்புழி இன் சாரியை. ஒப்பாய் - ஒத்து. விழை தரு - ஒரு சொல். விழைதல் - விரும்புதல். "துணையுநர் விழைதக்க சிறப் புப் போல்" கலி 145 : 1.

வேலை நஞ்சுண் மழைதரு கண்டன் என்றது, திருப்பாற் கடலில் எழுந்த ஆலகாலவிடத்தை உண்டு மேகம் போலக் கறுத்த கண்டத்தை யுடையன் என்றவாறு. வேலை நஞ்சு உண்டமை இறைவன் பேரரு ளுடைமையையும் முடிவிலாற்றலுடைமையையும் புலப்படுத்துவதாகும்.

"உம்பர் உய்யக் களமாம் விடமமிர்தாக்கிய தில்லைத் தொல்
லோன்" (22)

"ஓங்குமொரு விடமுண்டம் பலத்தும்பருய்ய வன்று
தாங்கு மொருவன்" 158

"நஞ்சமஞ்சி மறுகி விண்ணோர், பணியக் கருணை தரும்பரன்" 195

"விண்ணோர் குழுவினையுய்ய நஞ்சுண்டு ...... பிரான்" 229.

எனத் திருக்கோவையாரினும்

"உலகுய்யக் காரின் மல்கு கடல் நஞ்சமதுண்ட கடவுள்" ஞான 2 : 4

"உண்டான் நஞ்சை யுலக முய்யவே" ஞான 23 : 2

"இறையே கருணையாய், உண்பரிய நஞ்சதனை உண்டு உலகம்
உய்ய அருளுத்தமன்" ஞான 335 . 7.

"வேலை நஞ்சுண் டுனமொன்றில்லா ஒருவன்" நாவு 112 : 8.

"சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச் சிங்கமே" 312 : 2.

எனத் தேவாரத்தும் வருவன காண்க.

வேலை - கடல். மழை - முகில். "மழை குழுமி நாட்டம் புதைத்தன்ன கள்ளிருள்" (திருக்கோவை 156) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. விடத்தை உண்டமையால் இறைவன் கண்டம் மேகம் போலக் கறுத்தமையை;

"காரென்ன வாரும் கறை மிடற்றம்பலவன்" கோவை 56.

"காரியல் கண்டர்" 301.

* கலி. 56 : 23 - 4.

"கருமால் விடையுடையோன் கண்டம் போற் கொண்டலெண் டிசையும்
வருமால்" 326.

"சிற்றம்பலத்தான் மிடற்றின், மூற்படு நீண்முகில்" 348

எனத் திருக்கோவையாரிலும்

"கொண்டது நீலமும் புரை திருமிடற்றர்" ஞான 79 : 2.

"மேகம் போல் மிடற்றர்" நாவு 58 : 7

எனத் தேவாரத்தும் வருவன காண்க. வேலை நஞ்சுண் மழைதரு கண்டன் என்பதில் கடலில் எழுந்த நஞ்சை உண்டு உள்ளே சென்றால் கொன்று விடும் என்று எண்ணி கண்டத்தில் அடக்கிய போதும் அதன் கருமை புறத்தார்க்குப் புலப்படுமாறு கருமையடைந்த கண்டத்தினை யுடையவன் என்னும் பழிப்புரையும் அடங்கியிருத்தல் காண்க.

குணமிலி - உயிர்களுக்கு மாறி மாறி நிகழுகின்ற சாத்துவிக இராசத தாமத என்னும் முக்குணங்களும் இல்லாதவன். குணாதீதன் என்றபடி. "குணமொன்றில்லீர் குறிப்பில்லீர்" (சுந் 77 : 10) எனத் தேவாரத்தும் வருதல் காண்க. இதில் நற்பண்பில்லாத குணங்கேடன் என்ற பழிப் புரையும் அடங்கியிருத்தல் காண்க.

மானிடன் - மானை இடத் திருக்கரத்தில் ஏந்தியவன். தாருகாவனத்து இருடிகளின் யாகத்தினின்றும் தோன்றிப் பேரொலிசெய்து கொண்டு எதிர்ந்த மானினை இடத் திருக்கரத்தில் தாங்கித் திருச்செவிக்கண்மையில் சேர்த்து அதன் ஆற்றலை அடக்கிய பெருமையையுடையவன் என்பதனை இது புலப்படுத்துவதாகும். மானை இடத்திருக்கரத்தில் தாங்கியமை,

"மானிடமார் தருகையர் மா மழுவாரும் வலத்தார்" ஞான 43 : 7.

"மங்குன் மதிவைப்பர் வானநாடர் மடமான் இட முடையார்"
நாவு 230 : 2.

"ஏறமரும் பெருமானை இடமானேந்தும் கையானை" நாவு 276 : 5.

"வார் பொதியும் முலையாளோர் கூறன் தன்னை மானிடங்கை
யுடையானை" நாவு 303 : 7.

"மானிடங் கொண்டார் வலங்கை மழுவாட்கொண்டார்" நாவு 309 : 1.

"மானை யிடத்ததொர் கையன்" சுந் 10 : 1.

எனத் தேவாரத்தும்

"வாமத்திலே யொருமானைத் தரித்தொரு மானை வைத்தாய்"
கோயினான் 14.

எனப் பதினொராந் திருமுறையிலும்

"மற்றதன் பின்றை எந்தை மான்பிணை அதனை நோக்கித்
தெற்றென விளித்து நந்தஞ் செவியினுக் கணித்தாய் மேவி
நிற்றலுங் கூவுகென்றே நீடருள் செய்து வாமப்
பொற்றடங் கையிற் பற்றிப் பொருக்கென ஏந்தி நின்றான்."

தந்தியுத் 104.

எனக் கந்தபுராணத்தும்

"கருமிடற்றன் செஞ்சடையன் வெண்ணீற்ற னென்னும்
மழுவலத்தன் மானிடத்த னென்னும்" 28.

எனச் சிதம்பரச் செய்யுட் கோவையினும் வருவனவற்றாலு மறிக. மானிடன் என்பதில் சில்வாழ்நாள் பல்பிணிச் சிறுதொழிலுடைய மனிதத் தன்மையுடையவன் என்னும் பழிப்புரையும் அமைந்திருத்தல் காண்க.

தேய்மதியன் - ஒரு கலையாகத் தேய்ந்த பிறைமதியை சடை முடியிற் சூடினவன். தக்கன் சாபத்தால் தன் கலைகள் தேயப்பெற்று அடைக்கலம் புகுந்த சந்திரனைத் திருச்சடையில் தரித்து கலைவளருமாறு அருள் செய்தமையை இது புலப்படுத்துவதாகும். தேய்ந்த அறிவுடையவன் என்பது பழிப்புரை.

பழைதரு மாபரன் என்பது பழைய பெரிய மேலானவன் என்னும் பொருட்டு. இறைவன் பழையோன் என்பதை "படைப்போற்படைக்கும் பழையோன்", "பரமன் காண்க பழையோன் காண்க" (திருவண்டம் 13; 37) என அடிகள் பிறவிடங்களிற் கூறியிருத்தலுங் காண்க. "மிகவும் பழையான் றன்னை" (நாவு 224:7) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. பரன் - மேலானவன்; பரமன் திருக்கோவை 11 பேர். பழை தரு மாபரன் என்பதற்குப் பழமையான பெரிய ஆண்டி. "ஐயமேற்றுணுந் தொழிலார மண்ணலாரறை" (ஞான 213:9) என்பது பழிப்புரை. பரன் - பரதேசி; அந்நியன்.

விடின் நஞ்சுண் மழைதரு கண்டன் முதலிய பழிப்பினை அறைகுவன் என முடிக்க. "விடின் வெங்கரியின் உரிப்பிச்சன் றோலுடைப் பிச்சனஞ் சூண்பிச்ச னூர்ச் சுடுகாட் டெரிப்பிச்ச னென்னையு மாளுடைப் பிச்ச னென் றேசுவனே" (நீத் 49) என மேலும் அடிகள் அருளியமை காண்க.

"கொற்றவ னேஎன்றுங் கோவணத்தாய் என்றும் மாவணத்தால்
நற்றவ னேஎன்றும் நஞ்சுண்டி யேஎன்றும் அஞ்சமைக்கப்
பெற்றவ னேஎன்றும் பிஞ்ஞக னேஎன்றும் மன்மதனை
செற்றவ னேஎன்றும் நாளும் பரவும் என்சிந்தனையே" 91.

எனப் பொன் வண்ணத் தந்தாதியில் வருதலும் ஈண்டறியற்பாலது.

பழிப்பினையே அறைகுவன் பழிப்பது போல் புகழமைந்த மொழிகளையே கூறுவன் என்றவாறு. இங்ஙனம் கூறுவது வஞ்சப் புகழ்ச்சி என்னும் அணியாகும்.

இதன் கண், 'உளிழ் தரு நோக்கியர் கொங்கை விழைதருவேனை விடுதி கண்டாய்' என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடா தொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 46.

151. பழிப்பினின் பாதப் பழந்தொழும் பெய்தி விழப்பழித்து
விழித்திருந் தேனை விடுதிகண் டாய்வெண் மணிப்பணிலங்
கொழித்துமந் தாரமந் தாகினி நுந்தும்பந் தப்பெருமை
தழிச்சிறை நீரிற் பிறைக்கலஞ் சேர்தரு தாரவனே.

ப-ரை: பந்தம் பெருமை தழி - சடைமுடியாகிய அணையின் பெருமையைச் சார்ந்து; வெண்மணி பணிலம் கொழித்து - வெண்மணியாகிய முத்துக்களையுடைய சங்குகளைக் கொழித்து, மந்தாரம் நுந்தும் - மந்தார மலர்களைத் தள்ளும் மந்தாகினி சிறை நீரில் - கங்கையாகிய வரம்புக்குட்பட்ட நீர் நிலையில், பிறை கலம் சேர் தரு தாரவன் - பிறைமதியாகிய தோணி பொருந்தப் பெற்ற கொன்றை மாலையையுடையவனே, பழிப்பு இல் நின் பாத பழம் தொழும்பு எய்தி விழ - இகழ்ச்சியில்லாத நின் திருவடிகளின் பழமையாகிய தொண்டினை நின்னருளாற் பெற்று அது என் விதியின்மையால் நழுவிப் போக, பழித்து விழித்திருந்தேனை விடுதி கண்டாய் - நின்னைப் பழித்துக் கொண்டு செய்வதறியாது திகைத்து விழித்துக் கொண்டிருந்த என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடா தொழிதல் வேண்டும்.

சடை முடியாகிய அணையின் பெருமையைச் சார்ந்து வெண்மணிப் பணிலம் கொழித்து மந்தாரம் நுந்தும் கங்கை நீரில் பிறைமதியாகிய தோணி பொருந்தப் பெற்ற கொன்றை மாலையையுடையவனே, நின் திருவடிகளின் பழமையாகிய தொண்டினை நின்னருளாற் பெற்று அது என் விதியின்மையால் நழுவிப் போக நின்னைப் பழித்துக் கொண்டு விழித்திருந்தேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

பழிப்பு - இகழ்ச்சி; குற்றம். இறைவனுடைய திருவடிகள் எத்தகைய குற்றமும் அற்றன

"சிந்திப் பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்த செந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்பு சுற்றி
அந்திப் பிறை யணிந் தாடுமையாற னடித்தலமே" நாவு 92:1

"எழுவா யிறுவா யிலாதன வெங்கள் பிணிதவிர்த்து
வழுவா மருத்துவ மாவன மாநரகக் குழிவாய்
விழுவா ரவர்தம்மை வீழ்ப்பன மீட்பன மிக்கவர்போ
டழுவார்க் கழுதங்கள் காண்க வையாற னடித்தலமே" நாவு 92:5

"ஓதிய ஞானமு ஞானப்பொருளு மொலிசிறந்த
வேதியர் வேதமும் வேள்வியுமாவன விண்ணும் மண்ணும்
சோதியுஞ் செஞ்சுடர் ஞாயிறு மொப்பன தூமதியோ
டாதியு மந்தமுமானவையாற னடித்தலமே" நாவு 93:17

"திருந்தலார் புரந் தீயெழச் செறுவன விறலின் கணடியாரைப்
பரிந்து காப்பன பத்தியில் வருவன மத்தமாம் பிணிநோய்க்கு
மருந்து மாவன மந்திரமாவன வலஞ்சுழியிடமாக
இருந்த நாயக னிமையவரேத்திய இணையடித்தலந்தானே"

ஞான 242:3

எனப் புகழப்படுவன வல்லது இகழப்படாதன இறைவன் திருவடியாக லின் "பழிப்பினின் பாதம்" என்றார்.

பழந் தொழும்பு எய்தி என்றது அணுக்கன் தொண்டராக இருந்த போது தமக்குள்ள பழைய திருவடித் தொண்டினை ஆட்கொண்டபோது அடைந்து என்றவாறு. விழ என்றது நீங்காதிருத்தற் கேதுவாகிய விதி யின்மையால் அது நீங்கிப் போக என்றவாறு. பழித்தல் - இகழ்தல். விழித்திருத்தல் - செய்வதொன்றறியாது திகைத்து விழித்துக் கொண் டிருத்தல்.

வெண்மணி - முத்து. பணிலம் - சங்கு. நந்து, சுத்தி. நாகு பணிலம்... சங்கே (பிங் 8:324) என வருதலுங் காண்க. சங்கு முத்துடைத்தாதல் "வளைஞரல் இலங்கு நீர் முத்தமொடு வார்துகி ரெடுக்கும்" (பதிற் 30:6-7) என்பதனாலுமறிக.

மந்தாரம் ஆகுபெயராய் திருமுடிக்கண் தரித்த மந்தார மலர்மாலையை உணர்த்தியது. இறைவன் மந்தார மலர்மாலை தரித்தமை "மந்தாரத்திற் றூரம் பயின் றுமந் தம் முரல் வண் டதும்புங் கொழுந்தே னவிர் சடை" (நீத் 36), "தென்னன் பெருந்துறையான் மந்தார மாலையே பாடுதுங் காண்" (அம்மானை 15) என அடிகள் அருளியமையானுங் காண்க. மந்தாகினி - கங்கை. வெண்மணிப் பணிலம் கங்கைக்கு இயற்கையடை யெனவும் மந்தாரம் அடியார்களால் இறைவன் திருமுடிக்கட் சூட்டப் பட்டனவாகலின் செயற்கை அடையெனவும் கொள்க. நுந்துதல் - தள்ளு தல்; அலைத்தல். மந்தாகினி நீரில் என இயையும். பந்தம் - அணை. ஈண்டு இறைவனது சடை முடியாகிய அணையை உணர்த்தியது. தழீஇ என்பது எதுகை நோக்கித் தழி என நின்றது. தழீஇ - தழுவி; சேர்ந்து. சிறை - வரம்பு. கலம் என்றது ஈண்டுத் தோணியை. பிறையைக் கலம் என்றது ஒரு கலைத் திங்கள் தோணி போன்ற தோற்ற முடைமையின். "வியன் கங்கை பொங்கி வருநீர் மடுவுள் மலைச்சிறு தோணி வடிவின் வெள்ளைக் குருநீர் மதிபொதியுஞ் சடை" (நீத் 26) என வந்தமை காண்க.

கங்கை வெள்ளம் இறைவன் பேரருட் பெருக்கையும் சங்கு சிவ ஞானத்தையும் மந்தார மலர் பத்தியையும் பிறை பக்குவமுள்ள உயிரையும் புலப்படுத்துவனவாகும்.

தாரவன் - கொன்றைத் தாரையுடையவன். "தாருறு கொன்றையன்" (கோவை 176) எனவும், "தாருடைக் கொன்றையந் தலைவர்" (ஞான 272 : 9) எனவும் வருவன காண்க. கலம் பிறை தார் சேர்தருமவன் என மாறிக் கூட்டி தோணி போன்ற பிறைச் சந்திரன் முடிமாலையாகப் பொருந்தப் பெற்றவன் என உரைப்பாருமுளர்.

இதன் கண், பாதப் பழந் தொழும் பெய்தி விழ பழித்து விழித் திருந்தேனை விடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப் பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 47.

152. தாரகை போலுந் தலைத்தலை மாலை தழலரப் பூண்
வீரவென் றன்னை விடுதிகண் டாய்விடி லென்னை மிக்கார்
ஆரடி யானென்னி னுத்தர கோசமங் கைக்கரசின்
சீரடி யாரடி யானென்று நின்னைச் சிரிப்பிப்பனே.

ப-ரை: தாரகை போலும் தலை தலை மாலை - விண் மீன்கள் போன்ற வெண்டலைகளை தலைக்கண் அணியும் மாலையாகவும், தழல் அர பூண் வீர - தீப்போலும் நஞ்சினையுடைய பாம்புகளை அணிகலங்களாகவு முடைய அளவிலாற்றலுடையவனே, என் தன்னை விடுதி கண்டாய் - என்னைக் கை விடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். விடில் - என்னைக் கைவிடில், யான் ஆதரவின்றி அலைந்து வருந்தித் திரியும் போது என்னைக் கண்டு இரங்கி, மிக்கார் என்னை ஆர் அடியான் என்னின் - உயர்ந்த பெரியோர் என்னைப் பார்த்து நீ யாருடைய அடியவன் என்று வினவு வாராயின், உத்தரகோச மங்கைக்கு அரசின் சீர் அடியார் அடியான் என்று - திருவுத்தர கோசமங்கையில் எழுந்தருளியிருக்கும் இறைவனது மெய்யடியார்க்கு அடியவனாயுள்ளேன் என்று கூறி, நின்னை சிரிப்பிப்பன் - நின்னை அவர்கள் பரிகசிக்கும்படி செய்வேன்.

தலைகளைத் தலைமாலையாகவும், பாம்புகளை அணிகலங்களாகவு முடைய வீர, என்னைக் கை விடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். கைவிடின் ஆதரவின்றி அலையும் போது என்னைக் கண்டு இரங்கி மிக்கார் என்னை ஆரடியான் என்று வினவுவராயின் உத்தரகோசமங்கைக்கு அரசின் சீரடியார் அடியானென்று கூறி நின்னை அவர்கள் பரிகசிக்கும்படி செய் வேன் என்பதாம்.

தாரகை போலும் தலை - விண்மீன்கள் போலும் ஒளியையுடைய வெண்டலை யோடுகள். "ஒளி வெண்டலை மாலை" (தே. ஞான 31 : 2) என வருதலும் காண்க.

"அணிதலை மாலையை நிறைமதித் திரளெனப்
புடை புடை யொதுங்கி யரவுவாய் பிளப்ப" 55 : 8-9.

என்பர் கல்லாடர். ஒளியையுடைய தலைக்கு நிறைமதியை உவமை கூறுவர். இவை திருமால் பிரமன் முதலிய தேவத்தலைவர்களின் தலையோடுகளாகும். "வீதலுற்றார் தலைமாலையன் தில்லைமிக்கோன்" (309) எனத் திருக்கோவையாரில் அடிகள் அருளியமையுங் காண்க. உலகமெல்லாம் ஒடுங்கும் பேரூழிமுடிவில் இவற்றையெல்லாம் மாலையாகக் கோத்து இறைவன் தலையில் அணிந்திருத்தலின் தலைத்தலை மாலை என்றார்.

"கங்கை தங்கு சடைமாடிலங்கு தலைமாலையோடு" ஞான 220 : 4.

"தலைமாலை தலைக்கணிந்து" நாவு 9 : 1.

"தலைக்குத் தலைமாலை அணிந்த தென்னே" சுந் 4 : 1.

எனத் தேவாரத்தும் வருவன காண்க.

தழல் அர - தீ போலும் நஞ்சையுடைய பாம்பு. "அனல்வா யரவும்", "கனல் வா யரா" (நாவு 111 : 2; 120 : 9) எனத் தேவாரத்தும் வருவன காண்க. அரா - அர எனக் குறுகி நின்றது. அரப்பூண் - பாம்பு அணி. "பாம்பலங்காரப் பரன்" (11), "கொண்டு தானணியுங்கலம் பணி கொண்டு" (54), "பாப்பணியோன்" (196) என்றார் திருக்கோவையாரிலும். தலைமாலையும் அரப்பூணும் இறைவன் அழிவின்மையும் அளவில் ஆற்றலுமுடையான் என்பதை உணர்த்துவனவாகும்.

விடின் என்ற ஆற்றலால் நீ கைவிடின் யான் ஆதரவின்றி அலைந்து வருந்தித் திரிவேன் எனச் சில சொற்கள் வருவித்துரைக்கப்பட்டது. விடின் நின்னைச் சிரிப்பிப்பன் என இயையும். மிக்கார் - அறிவொழுக்கங்களால் உயர்ந்த பெரியோர். அவர் என்னை ஆரடியான் என வினவுதல் என் ஆதரவற்ற நிலைமை பற்றியாகும்.

உத்தர கோசமங்கைக்கரசின் சீரடியார்க்கு அடியான் என்க.

"சிலம்பணி கொண்ட செஞ்சீறடி பங்கன் றன்சீரடியார்
குலம்பணி கொள்ள வெனைக் கொடுத் தோன்" (54)

எனத் திருக்கோவையாரில் வருதலுங் காண்க. சீரடியார் - மெய்யடியார். ஈண்டு இறைவனுடன் போந்த அணுக்கன் தொண்டர்களை.

நின்னைச் சிரிப்பித்தல் - எனது நிலையினைக்கண்டு உத்தரகோசமங்கைக்கரசின் சீரடியார் தகுதியில்லாத இவனை ஏன் அடிமை கொண்டனர்? இவர் ஏன் கைவிட்டனர் எனப் பரிகசித்துக் கூறும்படி செய்தல். "உழை தரு நோக்கியர்" (நீத் 46) என்னும் திருப்பாட்டில் பழிப்பினை அறைவன் என்ற அடிகள் இத்திருப்பாட்டில் தாம் பழித்தலன்றி மிக்கா

ரும் நின்னைப் பழிக்கும்படி செய்வேன் எனக் கூறுகின்றனர். இதுவும் இறைவனுக்கு நகைச்சுவையை உண்டாக்கித் தாம் விரும்பிய பேற்றைப் பெறும் வேணவாவாகும்.

இதன் கண், என்னை விடுதி கண்டாய் விடின் சிரிப்பிப்பன் என்ப தனுல் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலப்படுதல் காண்க. 48.

153. சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத் தொழும்பையு மீசற்கென்று
விரிப்பிப்ப னென்னை விடுதிகண் டாய்விடின் வெங்கரியின்
உரிப்பிச்சன் றோலுடைப் பிச்சனஞ் சூண்பிச்ச னூர்ச் சுடுகாட்
டெரிப்பிச்ச னென்னையு மாளுடைப் பிச்சனென் றேசுவனே.

ப-ரை: சீறும் பிழைப்பை சிரிப்பிப்பன் - நீ வெகுண்டு ஒறுக்கத்தக்க எனது குற்றத்தினை நீ சிரித்துப் பொறுத்துக்கொள்ளுமாறு செய்வேன், தொழும்பையும் ஈசற்கு என்று விரிப்பிப்பன் - எனது தொண்டினையும் இறைவனுகிய நினக்கே உரியது என்று கூறி அதனை எங்கும் பரவும்படி செய்வேன், என்னை விடுதி கண்டாய் - என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும், விடின் - என்னைக் கைவிட்டால், வெம் கரியின் உரிபிச்சன் - கொடிய கயாசுரன் என்னும் யானையின் தோலை மேற் போர்த்த பித்தன், தோல் உடை பிச்சன் - புலித் தோலை உடை யாகக் கொண்ட பித்தன், நஞ்சு ஊண் பிச்சன் - ஆலகாலம் என்னும் நஞ்சை உண்ட பித்தன், ஊர் சுடு காட்டு எரி பிச்சன் - ஊர்க்குப் பொதுவாகிய சுடுகாட்டுத் தீயில் திருக்கரத்தில் எரி தாங்கி ஆடும் பித்தன், என்னையும் ஆளுடைய பிச்சன் - ஒன்றும் போதா நாயேனையும் ஆட் கொண்டருளிய பித்தன்; என்று ஏசுவன் - என்று இப்படியெல்லாம் கூறி இகழ்ந்துரைப்பேன்.

நீ வெகுண்டு ஒறுக்கத்தக்க எனது பிழைப்பை நீ சிரித்துப் பொறுக்கு மாறு செய்வேன்; எனது தொழும்பையும் இறைவனுகிய நினக்கே உரியது என்று கூறி அதனை எங்கும் பரவும்படி செய்வேன். என்னைக் கைவிடு கின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்; என்னைக் கைவிடில் வெங்கரியின் உரிப்பிச்சன்; புலித்தோலை உடையாகவுடைய பிச்சன்; நஞ்சு உண் பிச்சன்; ஊர்ச் சுடுகாட்டு எரிப் பிரிச்சன் என்னையும் ஆளுடைப் பிச்சன் என்று கூறி இகழ்ந்துரைப்பேன் என்பதாம்.

சீறும் பிழைப்பு - வெகுண்டு தண்டித்தற்குரிய பெருங் குற்றம். இறைவன் தம்மைக் கைவிட்டமைக்கு தான் செய்த பெருங் குற்றம் உளதாதல் வேண்டுமெனக் கற்பித்துச் "சீறும் பிழைப்பை" என்றார். தொழும்பையும் என்பதில் அடிமைத் தன்மையையே யன்றித் தொண் டினையும் என உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. ஈசற்கு எனப்

படர்க்கையிற் கூறினும் ஈசனாகிய நினக்கு என முன்னிலைப் பொருளில் வந்தது. விரிப்பித்தல் - சிலருக்குக் கூறி அவர் வாயிலாகப் பிறர் அறியும் படி செய்தல் என்றது எங்கும் பரவச் செய்தல் என்றவாறு. இதன் பயன் நின் அடியவனாகிய யான் சிறுமையடைதல் நின் புகழுக்கு ஏற்ற மாமோ? ஆகாது. ஆதலில் அருள் செய்ய வேண்டுமென்பது குறிப்பாகும்.

பித்தர் உடையும் ஊணும் உறைவிடமும் செயலும் மற்றைய மக்க ளினும் வேறுபட்டிருப்பாராதலின் அம்முறையில் யானைத் தோற் போர்வை யும், புலித்தோல் உடையும், நஞ்சு உணவும், சுடுகாட்டிடமும், எரி ஏந்தியாகும் செயலும் ஒன்றும் போதா நாயேனை ஆட்கொள்ளும் செய லும் பித்தர் இயல்பென வைத்து ஏசுவேன் என்றனர். இங்ஙனம் ஏசினும் கரியின் உரிபோர்த்தலும், புலித்தோல் உடுத்தலும், நஞ்சுண்டலும், ஊர்ச் சுடுகாட்டு எரியாடுதலும், என்னையும் ஆட்கொள்ளுதலும் ஆகிய இவை யாவும் இறைவனது வரம்பிலாற்றலையும் என்றுமுள்ள தன்மையையும் பேரருளுடைமையையும் விளக்குவனவாதலால் இது பழிப்பது போலப் புகழ்தலாகும். இறைவனது வீடு பேற்றினை விரும்பிய அடிகள் இறை வனைப் பலவகையிற் புகழ்ந்தும், பழிப்பது போலப் புகழ்ந்தும் வேண்டுவ ராயினர்.

இதன் கண், சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பை எனவும் தொழும்பை யும் ஈசற்கென்று விரிப்பிப்பன் விடுதி கண்டாய் எனவும் வருவனவற்றால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 49.

154. ஏசினும் யானுன்னை யேத்தினும் என்பிழைக் கேகுழைந்து
வேசறு வேனை விடுதிகண் டாய்செம் பவள வெற்பிற்
றேசுடை யாயென்னை யாளுடை யாய்சிற் றுயிர்க்கிரங்கிக்
காய்சின வாலமுண் டாயமு துண்ணாக் கடையவனே.

ப-ரை: செம்பவள வெற்பின் தேசு உடையாய் - செந்நிற முடைய பவளமலை போன்ற ஒளி பொருந்திய திருமேனியை யுடையவனே, என்னை ஆளுடையாய் - என்னை ஆளாகவுடையவனே, சிறு உயிர்க்கு இரங்கி - சகலவர்க் கத்துட்பட்ட சிறுமையுடைய திருமால் பிரமன் இந்திரன் முதலிய எல்லா உயிர்களுக்கும் இரங்கியருளி, காய் சின ஆலம் உண்டாய் - சுடும் வெம்மை யையுடைய ஆலகால விடத்தை உண்டு அவ்வுயிர்களைப் பாதுகாத்தவனே, கடையவன் அமுது உண்ண - கீழ்மையுடையவனாகிய யான் நின் திருவருள் அமுதத்தினை உண்ணும் வண்ணம், யான் உன்னை ஏசினும் ஏத்தினும் - யான் உன்னை பழித்தாலும் புகழ்ந்தாலும், என் பிழைக்கே குழைந்து வேசறுவேனை - என்னுடைய குற்றத்தின் பொருட்டு மனம் உருகி வருந்துவேனை, விடுதி கண்டாய் - கைவிடுகின்றனையோ? கைவிடாதொழி தல் வேண்டும்.

பவளமலை போன்ற ஒளிபொருந்திய திருமேனியையுடையவனே, என்னை ஆளாகவுடையவனே, சிற்றுயிர்க்கு இரங்கி யருளி, ஆலகால விடத்தையுண்டு அவ்வுயிர்களைப் பாதுகாத்தவனே. கீழ்மையுடையவனாகிய யான் நின் திருவருள் அமுதத்தினை உண்ணும் வண்ணம் யான் உன்னை ஏசினும் ஏத்தினும் என்பிழையின் பொருட்டு மனமுருகி வருந்துவேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்

ஏசுதல் - பழித்தல்; இகழுதல் எனினுமாம். ஏத்துதல் - புகழ்தல் உயர்த்திக் கூறல். குழைதல் என்ற வினையினாலும் வேசறுதலானும் அவற்றுக்கு எழுவாகிய மனம் என்பது வருவிக்கப்பட்டது. "பூலித்து அகங் குழைந்து" (பொன்னூசல் 8) என வருதலும் காண்க. வேசறு தல் - வருந்துதல்.

இறைவன் செம்பவளமலை போன்ற ஒளிபொருந்திய திருமேனியை யுடையனாகலின் "செம்பவள வெற்பின் தேசுடையாய்" என்றார்.

"செம்பவளத் திருமேனி ... செல்வனும்" ஞான 270 : 5.

"பவள வண்ணப் பரிசாந் திருமேனி" ஞான 27 : 5.

"செம்பவள எரிபோன் மேனிப் பிரான்" நாவு 9 : 3

"செம்பவளத் திரள் போல்வான் காண்" நாவு 237 : 4.

"செம்பவளத் திருமேனிச் சிவனே" நாவு 311 : 6.

எனத் தேவாரத்தும்,

"கொழும் பவள நிறவரை மேனியன்" (260)

"பவளச் செவ்வி யாயின வீசன்" (282)

எனத் திருக்கோவையாரினும் வருவன காண்க. இறைவன் ஞானசாரி யனாய் அடிகளை ஆட்கொண்டருள எழுந்தருளியபோது ஒளிமிக்க செந் நிறத் திருமேனியனாய்க் காட்சியளித்தானாகலின் "பவள வெற்பின் தேசு டையாய் எனையாளுடையாய்" என்றார்.

"எந்தம ராமிவ னென்றிங் கென்னையு மாட்கொண்டருளும்
செந்தழல் போற்றிரு மேனித் தேவர்பிரான்" குயிற் 10.

"செந்தழல் புரை திருமேனியுங் காட்டி ... வந் தாண்டாய்"
பள்ளி 8.

"திகழா நின்ற திருமேனி காட்டி என்னைப் பணிகொண்டாய்"
குழைத் 10.

என அடிகள் பிறுண்டும் அருளியவாறு காண்க. தேசு - ஒளி. "தேசுடை விளக்கே" (பிடித் 7) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க ஆளுடை

யாய் - என்னை ஆளாகவுடையவனே. "நமையாளுடையான்", "நாயேனை ஆளுடையான்" (தசாங் 2; 9). "எனை ஆளுடை நாயகன்", "என்னை முனாளுடையீசன்" (திருப்படை 2; 6) என அடிகள் பிறண்டும் அருளி யமை காண்க.

சிற்றுயிர் என்றது விஞ்ஞானகலர் பிரளயாகலர் அல்லாத சகல வர்க்கத்து உயிர்களைக் குறித்தது. திருமால் முதலிய தேவர்கள் யாவரும் மற்றையோரும் சகலவர்க்கத்தினரேயாவர். காய்சின ஆலம் - சுடும் வெம் மையையுடைய ஆலாலம். காய்சினம் என்பதற்கு சுடும் வெம்மை என் பது பொருளாதல், "காய் சினம் தவிராது" (புற 59 - 5) என்பதற்கு "சுடுகின்ற வெம்மை ஒழியாது" என அதன் உரைகாரர் உரைத்தமையா னும் அறியப்படும். "மண்டி மலையை எடுத்து மத்தாக்கி யவ்வாசுகி யைத், தண்டி யமரர் கடைந்த கடல் விடம்" (நாவு 93 : 10) சுடும் வெம்மைத்தாக எழுந்தமை.

"அண்டவர்கள் கடல் கடைய அதனுட் டோன்றி
யதிர்ந் தெழுந்த வாலாலம் வேலைஞாலம்,
எண்டிசையுஞ் சுடுகின்ற வாற்றைக் கண்டு" நாவு 296 : 8.

"திருநெடுமால் நிறத்தை யடுவான் விசும்பு சுடுவான்
எழுந்த விசை போய்ப் பெருகிட" நாவு 14 : 1.

என வருவன காண்க. தேவர்கள் நஞ்சை அஞ்சி நும் சரணம் என்ன இறைவன் அவர்க்கிரங்கி அந்நஞ்சையுண்டு அவர்களைக் காத்தமையின் சிற்றுயிர்க் கிரங்கிக் காய்சின ஆலமுண்டாய் என்றார்

"வடங்கெழு மலைமத்தாக வானவர் அசுரரோடு
கடைந்திட வெழுந்த நஞ்சங் கண்டு பஃறேவரஞ்சி
அடைந்து நுஞ்சரண மென்ன வருள் பெரிதுடையராகித்
தடங் கட னஞ்ச முண்டார் சாய்க்காடு மேவினாரே" நாவு 65 : 2.

எனத் தேவாரத்து வருதலுங் காண்க.

கடையவன் - கீழ்மை யுடையவனாகிய யான் என்னும் பொருட்டு தன்மை ஒருமைப் பெயர்.

"கடையவனேனைக் கருணையினாற் கலந் தாண்டு கொண்ட
விடையவனே" நீத் 1.

"நாயிற் கடைப்பட்ட நம்மை யிம்மை ஆட்கொண்ட
வண்ணங்கள் பாடி" பொற் 8.

"நாயிற் கடைப்பட்ட நம்மையு மோர் பொருட்படுத்து" பூவல்லி 3.

"கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை" கண்டபத் 4.

என அடிகள் தம்மைக் கடைப்பட்டவனாகக் கூறுமாறுங் காண்க.

அமுது - திருவருளமுது.

"அருளமுதம் புரியாயேல் வருந்துவன்" சத 13.

"புயங்கன் அருளமுதம் ஆரப்பருகி" யாத்திரை 9.

"நின் அருளாரமு தூட்ட" நீத் 5.

"உன் அருளா ரமுதத்தை வாரிக்கொண்டு விழுங்குகின்றேன் விக்கினேன்" அடைக் 10.

"அருளா ரமுதப் பெருங்கடல் வாய் அடியாரெல்லாம் புக்கழுந்த" பிரார்த்த 3.

என அடிகள் பிறண்டு அருளை அமுதம் என அருளியமை காண்க. உண்ண வென்னும் செயவெனெச்சம் விடுதி கண்டாய் என்பதன் ஆற்றலால் வருவிக்கப்படும். கைவிடாதொழிதல் வேண்டும் எனனும் முற்று வினை யுடன் முடியும்.

இவ்விறுதித் திருப்பாட்டின் இறுதியிலுள்ள கடையவனே என்பது கடையவனேனைக் கருணையினால் கலந்தாண்டு என்னும் முதற் திருப்பாட்டின் முதற்கண் அமைந்த இந்நீத்தல் விண்ணப்பம் அந்தாதியாக அமைந்திருத்தல் காண்க.

இதன் கண், என் பிழைக்கே குழைந்து வேசறுவேனை விடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடா தொழிதல் வேண்டும் என்பதும் புலப்படுதல் காண்க. 50.

# பாட்டு முதற் குறிப்பு அகராதி

[ எண் — பாட்டு எண் ]


| | |
|---|---|
| அடர்புல னால்நிற் | 142 |
| அடர்கரி போலைம் | 136 |
| அடியேன் அல்லேலன் | 87 |
| அண்டப் பகுதியின் | 3 |
| அப்பனேயெனக் | 102 |
| அரியானே யாவர்க்கும் | 22 |
| அரைசே யறியாச் | 141 |
| அழுகேன் நின்பால் | 92 |
| அளவ றுப்பதற் | 39 |
| அறிவ னேயமு | 54 |
| அறிவி லாத | 36 |
| ஆடுகின் றிலை | 35 |
| ஆமா றுன் றிருவடிக்கே | 18 |
| ஆயனான் மறையவனும் | 27 |
| ஆனைவெம் போரிற் | 125 |
| இருகை யானையை | 45 |
| இருதலைக் கொள்ளி | 113 |
| இருந்தென்னை ஆண்டு | 122 |
| இருப்பு நெஞ்ச | 84 |
| இல்லை நின்கழற் | 98 |
| இழித்தனன் என்னை | 70 |
| ஈச னேநீ | 82 |
| ஈச னேயென் | 55 |
| உடைய நாதனே | 101 |
| உடையா னேநின் | 60 |
| உண்டொர் ஒண்பொருள் | 46 |
| உத்தம னத்த | 7 |
| உலவாக் காலந் | 58 |
| உழிதரு காலும் | 12 |
| உழைதரு நோக்கியர் | 150 |
| உள்ளன வேநிற்க | 128 |
| எந்தை யாயெம் | 51 |
| எம்பிரான் போற்றி | 71 |
| எய்த லாவ | 81 |
| எறும்பிடை நாங்கூ | 129 |
| என்னைஅப் பாஅஞ்சல் | 120 |
| ஏசினும் யானுன்னை | 154 |
| ஏனை யாவரு | 42 |
| ஐய நின்ன | 77 |
| ஒண்மைய னேதிரு | 126 |
| ஒருவனே போற்றி | 72 |
| ஓய்வி லாதன | 43 |
| கடலினுள் நாய்நக்கி | 117 |
| கடவுளே போற்றி | 68 |
| கடையவ னேனைக் | 105 |
| கட்ட றுத்தெனை | 53 |
| கண்ட து செய்து | 137 |
| கதியடி யேற்குன் | 146 |
| களிவந்த சிந்தையொ | 119 |
| காண லாம்பர | 48 |
| காணுமாறு | 88 |
| காருறு கண்ணியர் | 107 |
| கிற்ற வாமனமே | 38 |
| குதுகுதுப் பின்றிநின் | 138 |
| குலங்களைந் தாய்களைந் | 133 |
| கேட்டாரு மறியாதான் | 32 |
| கொம்பரில் லாக்கொடி | 124 |
| கொழுமணி யேர்நகை | 131 |
| கொள்ளுங் கில்லெனை | 50 |
| கொள்ளேர் பிளவக | 106 |
| கொள்ளேன் புரந்தரன் | 6 |
| சங்கரா போற்றி | 69 |
| சச்சைய னேமிக்க | 135 |
| சாவமுன் னாள்தக்கன் | 8 |
| சிந்தனைநின் றனக்காக்கி | 30 |
| சிந்தை செய்கை | 83 |
| சிரிப்பிப்பன் சீறும் | 153 |
| செய்வ தறியாச் | 56 |
| செல்வம் நல்குரவு | 52 |
| செழிகின்ற தீப்புகு | 109 |
| தரிக்கிலேன் காய | 65 |
| தவமே புரிந்திலன் | 9 |
| தனித்துணை நீநிற்க | 143 |
| தனியனேன் பெரும்பிறவி | 31 |
| தன்மை பிறரால் | 63 |
| தாரகை போலுந் | 152 |
| தாராய் உடையாய் | 91 |
| தில்லை மூதூர் | 2 |

தீர்க்கின்ற வாறென் 112
தீர்ந்த அன்பாய 73
தேவர்கோ வறியாத 34
தேனைப் பாலைக் 62
நமச்சிவாய வாஅழ்க 1
நாடகத்தால் உன்னடியார் 15
நான்முகன் முதலா 4
நினைப்ப தாக 80
நெடுந்தகை நீயென்னை 116
பணிவார் பிணிதீர்த் 93
பரந்துபல் லாய்மல 10
பரம்பர னேநின் 139
பரவுவா ரிமையோர்கள் 21
பவனெம் பிரான்பணி 13
பழிப்பினின் பாதப் 151
பாட வேண்டும்நான் 104
பாடிற்றி லேன்பணி 149
புகவே தகேனுனக் 14
புகுவ தாவதும் 40
புகுவேன் எனதே 64
புணர்ப்ப தொக்க 75
புலன்கள் திகைப்பிக்க 132
புறமே போந்தோம் 90
பெருநீ ரறச்சிறு 130
பெற்றது கொண்டு 127
பேசப் பட்டே 86
பேசிற்றாம் ஈசனே 28
பொதும்புறு தீப்போற் 140
பொய்யவ னேனைப் 111
பொருத்தம் இன்மையேன் 97
பொருளே தமியேன் 121
பொலிகின்ற நின்றாள் 114
போகம் வேண்டி 76
போரே றேநின் 57
போற்றியிப் புவனம் 74
போற்றியென் போலும் 67
போற்றி யென்றும் 49
போற்றியோ நமச்சிவாய 66
மடங்கவென் வல்வினைக் 123
மத்துறு தண்டயி 134
மறுத்தனன் யானுன் 110
மன்னவ னேயொன்று 147
மன்ன வெம்பிரான் 103
மாறி நின்றெனைக் 37
மாறி லாதமாக் 95
மாறுபட் டஞ்சென்னை 115
மானேர் நோக்கி யுடையாள் 89
மானேர் நோக்கி யுமையாள் 59
முடித்த வாறும் 61
முதலைச் செவ் வாய்ச்சி 145
முழுதயில் வேற்கண் 148
முழுவதுங் கண்ட 11
மெய்தா னரும்பி 5
மேலை வானவ 47
மையி லங்குநற் 96
யானேதும் பிறப்பஞ்சேன் 16
யானே பொய்யென் 94
வணங்கும் நின்னை 79
வண்ணந்தான் சேயதன்று 29
வருந்துவனின் மலர்ப்பாதம் 17
வலைத்தலை மானன்ன 144
வளர்கின்ற நின்கரு 108
வாழ்கின்றாய் வாழாத 24
வாழ்த்துவதும் வானவர்கள் 20
வான நாடரும் 99
வானாகி மண்ணாகி 19
விச்ச தின்றியே 100
விச்சுக் கேடு 85
விச்சை தானிதுவொப்ப 33
வினையிலே கிடந்தேனைப் 26
வினையென் போலுடை 41
வெள்ளத்துள் நாவற்றி 118
வெள்ளந்தாழ் விரிசடையாய் 25
வேண்டும் நின்க 78
வேனில் வேள்கணை 44
வேனில்வேள் மலர்க்க 23

# அரும்பத முதலியவற்றின் ஆராய்ச்சி அகராதி

[ எண் — பக்க எண் ]


அங்கணாளன் 326
அச்சந்தீர்த் தாட்கொண்டான் 244
அஞ்சொல் நல்லார் 453
அட்டமாசித்தி 48
அடிநாயேனை 256
அடியவர்க்கெளியான் 258
அடியார் அடியார் 249
அடியார் பெயராத
பெருமையனே 425
அடைந்தவர்க்கருளும் அப்பா 165
அண்டப் பகுதி 79
அண்ணாமலை எம் அண்ணா 163
அணுவே 154
அந்தமும் ஆதியும் அகன்றோன் 90
அநேகன் 5, 87, 234
அப்பா அஞ்சல் 407
அப்பால் நின்ற 245
அம்பலத்தாடு நின்கழல் 379
அமுது 480
அயில் வேற்கண்ணியர் 464
அருணமலை 65, 157
அருமையில் எளிய அழகே 157
அருவமு முருவமுமானாய் 174
அருவரைச் சந்தின்
வான்சிறைகட்டி 99
அருள்நனி சுரக்கும் அமுது 92
அருளமுதம் புரியாயேல் 211
அவயவம் கோற்றேன் 114
அவாவெள்ளக் கள்வனேனை 232
அழிவிலா ஆனந்தவாரி 159
அளப்பருந் தன்மை 79
அளவறுப்பதற் கரியவன் 258
அறம் பாவம் என்னும்
அருங் கயிற்றால் 18
அறுவகைச் சமயம் 83
அறைகூவி ஆட்கொண்டருளி 113
அனைத்துலகும் ஆய 334
ஆதிமூர்த்திகள் 64
ஆதியும் அந்தமுமாயினாய் 373
ஆயன் நான் மறையவன் 229
ஆராத வின்பம் 7
ஆரூர் 342
ஆளுடைப் பாதம் 316
ஆற்றங்கரை மரமாய்
வேருறுவேனை 387
ஆறு கோடி மாயா சக்திகள் 139
ஆனந்தனே 374
ஆனைவெம்போரிற்
குறுந்தூறென் 417
இகபரம் 409
இடைமருது 52
இந்திரசாலம் 43
இரண்டுமிலித் தனியனேற்கே 237
இருகையானை 273
இருதலைக் கொள்ளியின்
உள்ளெறும்பொத்து 396
இரும்பின் பாவையனைய நான் 228
இரும்புலன்புலர இசைந்தனை 179
இருவினை மாமரம் வேர்
பறித்து 98
இலங்குசுடர் ஈசா 172
இழிதரு காலம் 201
இன்பமும் துன்பமும்
இல்லானே 22
இன்பவூர்தி 65
இன்னிசை வீணையில்
இசைந்தோன் 87
இன்னிதாயாண்டு 367
இன்னுழை கதிரின்
துன்னணுப் புரைய 80
இனையனு னென்றுன்னை
யறிவித்து 282
ஈங்கோய் மலை 164
ஈறிலாத நீ 359

உண்ணக் கிற்பன் 274
உண்மையுமாயின்மையுமாய் 214
உத்தரகோசம் 64
உத்தரகோச மங்கை 383
உமையொடு காளிக்கருளி 71
உய்தலாவது உன்கண்ணன்றி 335
உயிர் ஓயாதே கெடுவேன் 267
உரித்து அஞ்சுவித்தாய் 414
உரையுணர் விறந்த ஒருவன் 157
உலவாக் காலந் தவமெய்தி 295
உழிதரு கால் 201
உள்ளம் வெள்கி விண்டிலேன் 339
உள்ளேன் பிறதெய்வம் 189
ஊராமிலேக்கக் குருட்டா
மிலேத்து 353
ஊனெலாம் நின்றுருகப்
புகுந்தாண்டான் 222
எட்டினேடு இரண்டும்
அறியேனே 287
எண்ணில் பல்குணம் 34
எண்ணிறந்து 10
எம்பந்த மாக்கரை
பொருதலேத்து இடித்து 98
எவ்வெவர் எப்பெருந் தன்மை 65
எள்ளும் எண்ணெயும் போல 282
எளியை யாகி 359
எறும்பிடை நாங் கூழெனப்
புலனரிப் புண்டலந்த 425
என் பெருங் கருணேயாளனே 372
என்னே ஆண்டு பூண
நோக்கினுய் 325
என்னேக் கழுமணியே 430
எனைத்தெனைத்த தெப்புறத்த
தெந்தை பாதம் 334
ஏனக் குருளேக்கருளி 167
ஏனத்தொல் எயிறு
அணிந்தோன் 85
ஐம்புலன்கள் காண்கிலா 334
ஐம்புலன் மலர 129
ஐம்புலப் பந்தனே வாளரவு 95
ஐவாயரவம் 450
ஐயாறு தனிற் சைவனுகியும் 55
ஒருவன் 319
ஒருவனென்னும் ஒருவன் 89
ஒலி தரு கயிலே 72
ஒழிவற நிறைந்த ஒருவன் 181
ஒளிக்குஞ் சோரனேக்
கண்டனம் 112
ஒளித்தாய்க்குப் பச்சூன்
வீடிற்றிலேன் 467
ஓர் கோலம் 277
ஓராதார் உள்ளத்து 22
கூட்டறுத் தெனேயாண்டு 286
கடம்பூர் தன்னில் இடம்
இருந்தும் 55
கடவுள் 311
கடையவன் 476
கண்ணுரக் காணல் 349
கண்ணுரமுதக் கடலே 163
கரந்த கள்ளமும் 49
கருவார் சோதி 45
கல்லாய் 11
கல்வி 34
கலாபேதத்த கடுவிடம் 142
கழற்கணே கலந்த அன்பர் 329
கழுக்குன்று 56
கழுமலம் 55
கழுநீர் மாலேக் கடவுள் 62
களங்கொளக் கருத அருளாய் 169
கற்று மனமெனக் கதறியும்
பதறியும் 145
கறந்தபால் கன்னலொடு 17
கன்னுருரித்த கனியே 150
காண்பரிய பேரொளியே 25
காணலாம் பரமே 278
காதலணுகி 61
கிழவோன் 83
குடநாடு 39

குழைத்த சொன்மாலை 183
குற்றாலத்துக் குறியாய் 56
குறியே 154
கூர்த்த நயனக் கொள்ளை 136
கூரிருட் கூத்தொடு குனிப்போன் 103
கூறுடை மங்கை 39
கேட்டாரு மறியாதான் 241
கொடிறும் பேதையும் கொண்டது விடாது 143
கோகழி 4, 5
சடை மன்னவனே 461
சடையாய் விடையாய் 225
சர்ச்சையன் 440
சரதம் 141
சிந்தனைக்கரிய சிவமே 177
சிவகதியே 459
சிவன் 266
சிறியேன் பிழை பொறுக்கும் கோனே 349
சீரார் திருவையாறு 162
சுடர் முடியனே 375
செம்பவள வெற்பின் தேசுடையாய் 478
செய்வதொன்றும் அறியேனே 290
செல்வம் என்னும் அல்லல் 137
செல்வன் 45
செழுஞ்சுடரே 389
சேவார் கொடிச்சிவனே 149
சைவா 154
சொற்கழிந்தவனே 462, 463
சொற்பதங் கடந்த தொல்லோன் 88, 106
சொன்ன ஆகமம் 36
சோத்தம் 465
தண்ணீர்ப்பந்தர் வைத்து 46
தமியேன் புகலிடமே 408
தயாபரன் 58
தர்ப்பணம் 40
தரிக்கிலேன் காய வாழ்க்கை 306
தழலது கண்ட மெழுகது போல உருகி 143
தன்மை பிறரால் அறியாத தலைவா 303
தன்னேரில்லோன் 85
தாரகை போலும் தலைத்தலை மாலை 474
திண்சிலையேந்தி 54
திண்வலை ஆக்கையின் துயர் 456
திணியார் மூங்கிலனையேன் 355
திரைசேர் மடந்தை மணந்த புயங்கா 452
தில்லை நிருத்தனே 307
தில்லையுட் கூத்தனே 28
தினையின் பாகமும் பிறிவது 263
துரியமுமிறந்த சுடரே 174, 175
துன்னிருளே 23
தூண்டுசோதி 42
தூவண மேனி 44
தெரிவரிதாகிய தெளிவே 175
தென்னுடைய சிவனே 166
தேனைப்பாலைக் கன்னலின் தெளியை 301
தேனையும் மலர்க்கொன்றை 208
தொடர்வரியாய் 454
தோணிவடிவின் மதி 427
தொல்விடம் 137
தொழும்பாளர் எய்ப்பினில் வைப்பே 375
நச்சரவாட்டிய நம்பன் 105
நச்சுமாமரமாயினுங் கொலார் 370
நஞ்ச மமுதாய் அருந்தினனே 412
நடம்நவில் 70
நமச்சிவாய 4
நலமலர் 210
நலமலிதில்லை 66
நள்ளிருளில் நட்டம் 28
நன்னெறி காட்டி 269

நாட்கத்தால் உன் அடியார் 206
நாணமில்லா நாயினேன் 305
நாதப்பெரும்பறை 60
நாமார்க்கும் குடியல்லோம் 248
நாயினுக்குத் தவிசிட்டு 242
நினைதொறும் நினைதொறும் ஆற்றேன் 86
நீக்கமும் நிலையும் 81
நீடெழில் தோன்றிவாளொளி மிளிர 95, 96
நீள்கழல்கள் 19, 20
நீற்றுக்கோடி 59
நீற்றேன் 86
நெஞ்சங் கல்லாம் கண்ணிணையும் மரமாம் 226
நெறியே 155
நோக்கியர் நோக்கின் வலை 457
பட்டமங்கையில் பாங்காய் இருந்து 47
பட்டி மண்டபம் 286
பதஞ்சலிக்கு அருளிய பரம நாடகம் 69
பதைத்துருகும் பாழ்நெஞ்சே 222
பந்தனை அறுப்பானை 252
பரம்பரஞ் சோதிப்பரனே 183
பரமாதிசயமாக 144
பரமானந்தப் பழங்கடலதுவே 94
பருகியும் ஆரேன் 119
பழிப்பினின் பாதம் 472, 473
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே 21
பாதச்சிலம்பொலி காட்டிய பண்பும் 45
பார் இரும் பாலகன் ஆனபரிசும் 50
பாவநாசன் 377, 378
பிச்செமை ஏற்றிய பெரியோன் 105
பிழைத்தவை பொறுக்கை பெரியவர் கடமை 316
பிறர்க்கரிதாம் தொன்மை 419
பிறவி சாராமே 27
பிறவிப் பௌவம் 240
புகுந்தாண்டுகொண்டு 252
புகுவதாவதும் போதரவில்லதும் 260
புரம் எரித்தாய் 398, 399
புலன்கள் திகைப்பிக்க 433
புலன் தீக்கதுவ மத்துறு தண்டயிரிற்கலங்கி 438
புலிமுலை புல்வாய்க்கருளி 178
புழுக்கூடு 380
புறம்பய மதனி லறம்பலவருளி 56
பெருநீரறச் சிறுமீன் துவண்டாங்கு 428
பொல்லாமணியே 204
பொன்மேனி நெடுந்தகையே 400
பொன்னே திகழுந்திருமேனி 303
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே 25
போக்குவாய் 16
மணியே 296
மதியின் ஒன்றைக் கலைத்தலையாய் 457
மதுவெள்ளமே 404
மந்திரமாமலை 58
மயங்குகின்றேன் 310
மரகதக்குவா அல்மாமணிப் பிறக்கம் 109
மருந்தினனே பிறவிப்பிணிப் பட்டு 412
மலமாக்குரம்பை 296
மழக்கையிலங்கு பொற் கிண்ணம் 362
மறையோர் கோலநெறி 171
மன்னிய திருவருண்மலையே 157
மனத்து ஊறுமட்டு 400
மாஏட்டு ஆகமம் 37
மாசற்றசோதி மலர்ந்த மலர்ச்சுடரே 21

நாப்பேரூழி 81
மாறுபட்டு அஞ்செனை வஞ்சிப்ப 400
மானிடன் 470
மின்னொளி திசைதிசை விரிய 95
மீண்டு வாராவழி 62, 63
முதலைச் செவ்வாய்ச்சியர்
வேட்கை 458
முந்நீர் நஞ்சு அமுது செய்தாய் 431
மும்மலம் 61
முழுவதும் படைப்போன் 82
முன்னோன் 84
மூர்த்தி 247
மூவேழ் சுற்றம் 156
மெய்க்காட்டிட்டு 50
மெய்ச்சுடருக்கெல்லாம் ஒளிவந்த
கழல் 406
மெய்தரு வேதியனாகி 147
மெய்ம்முழுதுங் கம்பித் தழு
மடியார் 429
மெய்யர் மெய்யனே 380
மையல் துணிப்பாய் 182
யாவர்க்கும் அரியானே 219
யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே 23
வஞ்சனேன் நின்னது அல்லது 328
வலைத்தலை மானன்ன நோக்கியர் 456
வாக்கு உன் மணி வார்த்தைக்
காக்கி 236
வாங்கிட வேண்டும் 320
வார்ந்தநஞ்சயின்று வானோர்க்
கமுதம்ஈவள்ளல் 321
வாழ்முதலே 455
வாழாத நெஞ்சமே 223
வாழைப்பழத்தின் மணங்கனி
வித்து 447
வானத் தவரவர் ஏறு 317
விச்சதின்றியே விளைவு செய்கு
வாய் 370
வித்தக வேடங் காட்டிய இயல்
பும் 44
வியன் கங்கை 426
விருத்தனே 306
விருந்தினனாகி 47
விரையார் கழல் 186
விற்றெலாமிக ஆள்வதற்
குரியவன் 256
வெண்டலை 438
வெருநீர்மையேனை 428
வெய்ய கூற்றொடுங்க உறுங்
கடிப்போது 423
வெய்யாய் தணியாய் 13
வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே 25
வெள்ளந் திசை திசை
தெவிட்ட 96
வேலை நஞ்சுண் மழைதரு
கண்டன் 469

# இவ்வுரையில் காட்டிய மேற்கோள் நூற்பெயர்கள்

1. அகநானூறு
2. உண்மை விளக்கம்
3. ஐங்குறுநூறு
4. கடவுள் வாழ்த்து
5. கந்தபுராணம்
6. கம்பராமயணம்
7. கல்லாடம்
8. கலித்தொகை
9. காஞ்சிப்புராணம்
10. குமர குருபரசுவாமிகள் பிரபந்தத் திரட்டு
11. குறிஞ்சிப்பாட்டு
12. குறுந்தொகை
13. கோயில் திருப்பண்ணியார் விருத்தம்
14. கோயில் நான்மணிமாலை
15. கோயிற் புராணம்
16. சிதம்பரச் செய்யுட்கோவை
17. சித்தாந்த சாஸ்திரம்
18. சிதம்பர மும்மணிக்கோவை
19. சிலப்பதிகாரம்
20. சிவஞானசித்தியார்
21. சிவஞானபாடியம்
22. சிவஞான போதம்
23. சிவதருமோத்தரம்
24. சிவபெருமான் திருவந்தாதி
25. சிவரகசிய காண்டம்
26. சிறுபாணாற்றுப்படை
27. சீவக சிந்தாமணி
28. சுந்தரர் தேவாரம்
29. ஞானமிர்தம்
30. தாயுமானவர் பாடல்
31. திருக்களிற்றுப்படியார்
32. திருக்காளத்தி புராணம்
33. திருக்குற்றலத்தலபுராணம்
34. திருக்குறள்
35. திருக்கைலாய ஞானவுலா
36. திருக்கோவையார்
37. திருஞானசம்பந்தர் தேவாரம்
38. திருநாவுக்கரசு தேவாரம்
39. திருமந்திரம்
40. திருமுருகாற்றுப்படை
41. திருவாசகம்
42. திவ்வியப்பிரபந்தம்
43. திவாகரம்
44. திருவாஞ்சியத்தலபுராணம்
45. திருவாதவூரடிகள் புராணம்
46. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்
47. திருவிடைமருதூர் மும்மணிக் கோவை
48. தேவாரம்
49. தொல்காப்பியம்
50. நம்பிதிருவிளையாடற்புராணம்
51. நாலடியார்
52. நெடுநல்வாடை
53. பட்டினத்தார் பாடல்
54. பண்டாரமும்மணிக்கோவை
55. பதிற்றுப்பத்து
56. பதினோராந்திருமுறை
57. பரஞ்சோதி திருவிளையாடற் புராணம்
58. பரிபாடல்
59. பாரதம்
60. பிங்கலந்தை
61. பிரபுலிங்கலீலை
62. புறப்பொருள் வெண்பாமாலை
63. புறநானூறு
64. பெரியபுராணம்
65. பெருங்கதை
66. பெரும்பாணாற்றுப்படை
67. பொருநராற்றுப்படை
68. பொன்வண்ணத்தந்தாதி
69. போற்றிப்பஃறொடை
70. மணிமேகலை
71. மதுரைக் கலம்பகம்
72. மதுரைக்காஞ்சி
73. மலைபடுகடாம்
74. முல்லைப்பாட்டு பிறவுமாம்

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 6 | 6 | எண்க | என்க |
| 9 | 7 | முற்பிறப்பிள் | முற்பிறப்பிற் |
| 15 | 37 | ஆககுவாய் | ஆக்குவாய் |
| 17 | 19 | மறையும்படு | மறையும்படி |
| 27 | 11 | பிறவிசாரமே | பிறவிசாராமே |
| 27 | 19 | சிறுமணைபோறலின் | சிறுமணைபோதலின் |
| 43 | 11 | இந்திசாலம் | இந்திரசாலம் |
| 43 | 16 | இந்திசால:ம் | இந்திரசாலம் |
| 61 | 35 | காதனுகி | காதலனுகி |
| 71 | 21 | தேற்றுவித்து | தோற்றுவித்து |
| 79 | 14 | நன்கு | நான்கு |
| 80 | 7 | தெகை | தொகை |
| 80 | 23 | பிரமகளின் | பிரமர்களின் |
| 80 | 37 | ஊழக்கலமும் | ஊழிக்காலமும் |
| 81 | 22 | பெருள் | பொருள் |
| 81 | 37 | உணத்தியது | உணர்த்தியது |
| 83 | 17 | சேதி | சோதி |
| 86 | 7 | நுண்ணிவாய | நுண்ணியவாய |
| 86 | 23 | யழலருவாய் | யழலுருவாய் |
| 89 | தலையங்கம் | திருவண்டற்பகுதி | திருவண்டப்பகுதி |
| 101 | ,, | ,, | ,, |
| 121 | ,, | ,, | ,, |
| 187 | தலையங்கம் | போற்றித்திருவகவல் | திருச்சதகம் |
| 189 | ,, | ,, | ,, |
| 191 | ,, | ,, | ,, |
| 269 | 8 | நன்னெறியாட்டியமை | நன்னெறி காட்டியமை |
| 287 | 16 | பொருளகும் | பொருளாகும் |
| 287 | 36 | கொள்ளப்ப | கொள்ளப்படு |
| 384 | 16 | வீழுத்தொடின்கண் | விழுத்தொண்டின்கண் |
| 425 | 27 | றும்பிடை | எறும்பிடை |

ஏ.குமார்
எண் :
மாதிரவேடு